D
1211,31 N79
N81·35;1
122159

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது
சட்டமன்றப் பேரவையின் ஐந்தாவது கூட்டத்தொடர்

(1979 நவம்பர் 2, 3, 5, 6, 7 ஆம் நாட்கள்)

(தொகுதி XXXV எண்கள் 1 முதல் 5 வரை)

©
தமிழ் நாடு அரசு
1981

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை—600 009.
விலை ரூ. 1½

N81·35;1

122159

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்.

---

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடர்.

---

1979 நவம்பர் 2, 3, 5, 6, 7 ஆம் நாட்கள்.
(தொகுதி 35—எண்கள் 1 முதல் 5 வரை)

---

உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் அமைச்சர்களின் பேரவைச் செயலர்களும் | i–iii |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | vii |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட) | viii–xvi |
| அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி) | 315—391<br>456—505<br>519—569 |
| **அரசினர் சட்ட முன்வடிவுகள்—** | |
| ஆந்திரா நிலவரி விதிப்பு (தாப்படுத்துதல்) ரத்து சட்ட முன்வடிவு, 1979 | 205 |
| இந்திய மீனளம் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 519 |
| இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 | 135—140,<br>141,<br>795—799 |


D IIA-263—1

| | பக்கங்கள் |
|---|---|
| **அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.** | |
| ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 | 455 |
| காவல் சட்டங்கள் (திருத்தமும் செல் திறனாக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979 | 454 |
| | 727—784 |
| குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு, 1979 | 314 |
| | 784—795 |
| கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 517 |
| கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 313 |
| கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 517 |
| கேளிக்கை வரி உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 315, 795 |
| சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 726 |
| சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 151—164 |
| சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1979 | 164—170 |
| சென்னை மாநகரக் குத்தகைதாரர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 217—233 |
| சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1979 | 233—236 |
| தமிழ்நாடு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 | 315 |





| | பக்கங்கள் |
|---|---|
| **அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.** | |
| தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 454 |
| திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்த சட்ட முன்வடிவு, 1979 | 141, 799—803 |
| நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 518—519 |
| நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979 | 141—150 |
| நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 205—217 |
| பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு—நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 192—204 |
| பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 180—187 |
| புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 187—192 |
| பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 455 |
| பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 518 |
| மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 | 455 |
| **அரசினர் தீர்மானங்கள்—** | |
| பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை | 506—508 |
| விதி 22-ஐத் தளர்த்தல் | 508 |

பக்கங்கள்

**அறிக்கை அளித்தல்—**

துணை வினா ஒன்றுக்கு அளித்த விடைக்கு திருத்த அறிக்கை — 440

மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை — 454

**அறிவிப்புகள்—**

அலுவல் ஆய்வுக் குழு கூட்டம் — 440

காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்திறனாக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979 — 727

கேளிக்கை வரி உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 314

நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 518

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது — 506

பேரவை அலுவல் — 505—506, 777—778

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 518

**உரிமைப் பிரச்சினைகள்—**

சென்னை தொலைகாட்சி நிலையத்தின் மீது — 717—719

போலீஸ் கமிஷனர் மீது — 713—717

வானொலி நிலையத்தின் மீது — 710—713

**ஒழுங்குப் பிரச்சினைகள்—**

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வது — 311—314

சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கு அவகாசம் கொடுக்கப் பெறுவது — 150—151



பக்கங்கள்

**கவன ஈர்ப்புகள்—**

காவேரிப்பட்டினம் தொகுதியில் உள்ள விவசாயிகள், பட்டா பெற்றும் அவதிக்குள்ளாவது — 441—443

கூடலூரிலும், உதகமண்டலத்திலும் ஏற்பட்டுள்ள கடுமையான விறகுத் தட்டுப்பாடு — 723—726

நுகர்பொருள் வாணிபக் கழகம், அரசு அறிவித்துள்ள விலையில், நெல் கொள்முதல் செய்வது — 719—723

மழையின்மையால் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளிடம் கடன் வசூல் நிறுத்த வேண்டிய அவசியம் — 133—135

முல்லைப் பெரியாறு அணைக்கட்டுக்கு ஆபத்து — 444—454

**தகவல் கோரல்—**

அசெம்பிளி அலுவலர்களுக்கு 'பாஸ்' வழங்குவது — 708—710

'இந்தியா டுடே' பத்திரிகை மீது கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை — 709

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் — 310—311

உறுப்பினர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொள்வது — 436—437

உறுப்பினர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொள்ளாதது — 136—14C

உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகள் தள்ளுபடி — 709

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்வது — 439—440

'நீதியின் குரல்' பத்திரிகை சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெறாதது — 437—438

பேரவை அலுவல் — 509

பேரவை அலுவல் சிறிது நேரம் ஒத்திவைப்பு—உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் பதவி ஏற்பு — 438—439

| | பக்கங்கள் |
|---|---|
| தகவல் கோரல்—தொடர்ச்சி. | |
| போரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | |
| | 232—233, |
| | 391—392 |
| | 516, |
| | 570—571. |
| | 804—805 |
| வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | |
| | 1—34, |
| | 269—310, |
| | 393—435, |
| | 573—618 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | |
| | 35—132, |
| | 619—708 |



## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை ( Index ) பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன : துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப் பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தி) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தி.) என்று போடுவது ஒத்தி வைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும். எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் “ சட்ட முன்வடிவு ” என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள் வாரியங்கள் மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், ‘ குழு(க்கள்) ’, ‘ மன்றம்(கள்) ’, ‘ மாநகராட்சி (கள்) ’ ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள் கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

போரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் “ தலைவர் ” என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| அ. | : | அறிக்கை |
| அறிவி. | : | அறிவிப்பு |

அ.வி. : அரைமணி நேர விவாதம்
கு.வி. : குறுகிய கால விவாதம்
பொ.வி. : பொது விவாதம்
ஆ.உ. : ஆளுநர் உரை
உ.பி. : உரிமைப் பிரச்சினை
ஒ.பி. : ஒழுங்குப் பிரச்சினை
க.ஈ. : கவன ஈர்ப்பு
க.ஈ.அ. : கவன ஈர்ப்பு அறிக்கை
ச.அ.நி. : சட்ட முன்வடிவின் அறிமுக நிலை
ச.ஆ.நி. : சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை -இந்நிலையில்,

(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம்.

(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்.

(3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்.

(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கான தீர்மானம்.

(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.

ச.பிரி.ஆ. : சட்ட முன்வடிவு—பிரிவுவாரியாக ஆய்தல்.
ச.பே. : சட்டமன்றப் பேரவை
ச.மே. : சட்டமன்ற மேலவை
த.கோ. : தகவல் கோரல்
த.வி. : தன்னிலை விளக்கம்
தீ. : தீர்மானம்
உ.தீ. : உரிமைத் தீர்மானம்
ஒ.தீ. : ஒத்திவைப்புத் தீர்மானம்
த.தீ. : தனித் தீர்மானம்
து.மா.கோ. : துணை மானியக் கோரிக்கை
மி.மா.கோ. : மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை
பே.அ. : பேரவையின் அலுவல்

## உள்ளடக்கம்.

2-11-1979


| | | பக்கங்கள். |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் அமைச்சர்களின் பேரவைச் செயலர்களும் .. .. | i—iii |
| (ii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. | vii |
| (iii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட) . .. | viii—xvi |
| 1. | வினாக்கள்—விடைகள்— | |
| | (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 1—34 |
| | (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. | 35—132 |
| 2. | கவன ஈர்ப்பு— | |
| | மழையின்மையால் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளிடம் கடன் வசூல் நிறுத்த வேண்டிய அவசியம் குறித்து .. .. | 133—135 |
| 3. | அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| | (அ) இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித்துறைகள்) திருத்த சட்ட முன்வடிவு 1979 | 135—140, 141 |
| | (ஆ) திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்த சட்டமுன்வடிவு, 1979. | 141 |
| | (இ) நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979. .. | 141—150 |
| | (ஈ) சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1979. .. | 151—164 |
| | (உ) சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1979. .. .. | 164—179 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| (ஊ) | பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979. | 180—187 |
| (எ) | புயல், வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 .. | 187—192 |
| (ஏ) | பயிரிடு குத்தகைதாரர்கள் பாது காப்பு-நியாயவாரம் செலுத்துதல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1979. | 192—204 |
| (ஐ) | ஆந்திரா நிலவரி விதிப்பு (தரப் படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு, 1979. .. .. | 205 |
| (ஒ) | நிலச்சீர்திருத்தங்கள் (நிலஉச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979. .. | 205—217 |
| (ஓ) | சென்னை மாநகரக் குத்தகைதாரர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979. | 217—223 |
| (ஔ) | சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979. .. .. | 223—231 |
| 4. | தகவல் கோரல்— | |
| | உறுப்பினர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சனை எடுத்துக் கொள்ளாதது குறித்து .. .. .. | 136—140 |
| 5. | ஒழுங்குப் பிரச்னை— | |
| | சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கு போதிய அவகாசம் கொடுக்கப் பெறுவது குறித்து. .. .. | 150—151 |
| 6. | பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 232—233 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர் :

### திரு. பிரபுதாஸ் பட்வாரி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்): பொது. பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு இலஞ்ச ஒழிப்பு, பெருந்தொழில்கள், சுரங்கம், கனிவளம்,

2. திரு. கி. மனோகரன் : (நிதி அமைச்சர்): நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப் பணி (கட்டிடங்கள்), மற்றும் பொதுப் பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

3. திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்): மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கூட்டுறவும், ஆவணப் பதிவுத் துறையும்.

5. திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்): மக்கள் தொகைக் கணக்கு, வருவாய், வணிகவரிகள், ஆயத்துறை, சீட்டு நிதிபற்றி சட்டம் இயற்றல் கடன் கொடுத்தல்பற்றி சட்டம் இயற்றல்

6. திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்): உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைவாசிக் கட்டுப்பாடு. அரிசன நலம், எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகித கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

7. திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்): செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, சின்கோனா உட்பட வனங்கள். மது அனுமதிச்சீட்டு வழங்கலி.

8. திரு. க. நாராயணசாமி முதலியார் (சட்ட அமைச்சர்): சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு.

9. திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) : தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராம தானம்.

11. திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்): தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்): போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

13. திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர்): வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மை பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது), வேளாண்மை பொறியியல்.

14. திரு. கா. இராசா முகமது (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) : கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், வஃபு.

15. திரு. ஆர். சௌந்திரராஜன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்): மக்கள் நல்வாழ்வுத் துறை.

16. செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்): மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம், நெடுஞ்சாலைகள்.

17. திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் (கைத்தறி நெசவுத் துறை அமைச்சர்) : கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்குதல் நீங்கலாக மது விலக்கு.

18. திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பதவி விலகல் 2–2–1980 அன்று ஏற்கப் பெற்றது.



## அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்.

1. திரு. சு. ம. துரைராஜ் : முதலமைச்சரின் பேரவைச் செயலர்.
2. திரு. எம். வின்சென்ட் : நிதிஅமைச்சரின் பேரவைச் செயலர்.
3. திரு. ஆனூர் ஜெகதீசன் : கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
4. திரு. பி. முசிறி புத்தன் : வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
5. திரு. ஜுசரி வேலன்: செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.
6. திரு. எம். ஏ. ஜெயவேலு : சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர்.
7. திரு. ஆ. வெள்ளைச்சாமி : கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர்.
8. திரு. ப. கோ. கிட்டு : போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவை செயலர்.
9. திரு. இரா. அருணாசலம் : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu.*

*Thiru* ***PRABHUDAS PATWARI.***

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)— Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prevention of Corruption, Large Scale Industries, Mines, and Minerals.

2. HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)— Finance, Planning, Legislature, and Public Works (Buildings) and Establishment matters relating to Public Works Department.

3. HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Electricity*)— Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASWAMI (*Minister for Co-operation*)— Co-operation, Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (*Minister for Revenue*)— Revenue, Commercial Taxes Excise and Census. Legislation on Money Lending, Legislation on Chits.

6. HON. THIRU G. R. EDMUND (*Minister for Food*)—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control. Harijan welfare, Stationery & Printing, Government, Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour.

7. HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Hindu Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grand of Liquor Permit.

8. HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, and Registration of Companies.

9. HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Education including Technical Education, Official Language and Employment and Training.

10. HON. THIRU K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Municipal Administration, Community Development, Panchayats, Panchayats Unions, Rural Indebtedness, Bhoodan and Gramdan.



11. HON. THIRU S. RAGAVANANDAM (*Minister for Labour*)— Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board, Town Planning, and Accommoda tion Control.

12. HON. THIRU V. PONNAIYAN (*Minister for Transport*)— Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Textiles and Ports.

13. HON. THIRU P. KOLANDAIVELU (*Minister for Agriculture and Irrigation*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service, Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

14. HON. THIRU K. RAJA MOHAMMED (*Minister for Rural Industries*)— Rural Industries including village cottage and small Industries, Milk and Dairy Development and Wakfs.

15. HON. THIRU THIRUCHI R. SOUNDARARAJAN (*Minister for Health*)— Health.

16. HON. SELVI P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)— Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar Homes, Orphanages, Indians- Overseas. Refugees and Evacuees, Correctional Administration.

17. HON. THIRUMATHI SUBBULAKSHMI JAGADEESAN (*Minister for Handlooms*)— Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor Permit.

18. HON. THIRU P. SOUNDARA PANDIAN Resignation accepted on 2-2-80.

## PARLIAMENTARY SECRETARIES TO THE CABINET MINISTERS.

1. THIRU S. M. DURAIRAJ—Parliament Secretary to Chief Minister.

2. THIRU M. VINCENT—Parliamentary Secretary to Minister for Finanee.

3. THIRU ANNOOR JAGADEESAN—Parliamentary Secretary to Minister for Co-operation.

4. THIRU P. MUSIRIPUTHAN—Parliamentary Secretary to Minister for Revenue.

5. THIRU ISARI VELAN—Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.

6. THIRU M. A. JAYAVELU—Parliamentary Secretary to Minister for Law.

7. THIRU A. VELLAISAMY—Parliamentary Secretary to Minister for Education.

8. THIRU P. G. KITTU—Parliamentary Secretary to Minister for Transport.

9. THIRU R. ARUNACHALAM—Parliamentary Secretary to Minister for Health.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. முனு ஆதி.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி. எல்.

### * மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பி. எம். பத்மனாபன் நம்பியார், பி.ஏ.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (எஸ்டேட் அலுவலர்)

### தலைமை நிருபர்.

திரு. மா. சந்திரசேகரன்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

---

* அன்று அறிவிக்கப்பெற்றது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட)

| | தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எம். .. | அரூர் (செ.வ.). |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே.எம். | ஆலந்தூர். |
| 3 | அப்துல் லத்தீப், திரு. கி. .. | கடலூர். |
| 4 | அப்புனு கவுண்டர், திரு. கா. | பென்னகரம். |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 7 | அய்யாச்சாமி, திரு. ரா. .. | தாராபுரம் (செ. வ.). |
| 8 | அர்ச்சுனன், திரு. வீ. .. | ஆரணி. |
| 9 | அரங்கசாமி, திரு. க. .. | குன்னூர் (செ.வ.). |
| 10 | அரங்கநாதன், திரு. அ. க. | வேலூர். |
| 11 | அரங்கநாதன், திரு. மு. .. | திருவல்லிக்கேணி, சென்னை. |
| 12 | அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | கோயம்புத்தூர் (மேற்கு). |
| 13 | அருணாசலம், திரு. இரா. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | நாமக்கல் (செ.வ.). |
| 14 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 15 | அன்பழகன், திரு. க. .. | புரசைவாக்கம், சென்னை. |
| 16 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி. |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 18 | ஆண்டித்தேவர், திரு. எஸ். .. | உசிலம்பட்டி. |
| 19 | ஆதிசுவாமி, திரு. இரா. .. | குளச்சல். |
| 20 | ஆறுமுகம், திரு. இல. .. | திருநாவலூர். |
| 21 | ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பர்கூர். |
| 22 | ஆறுமுகம், திரு. சி. .. .. | மதுராந்தகம். |
| 23 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 24 | ஆறுமுகம், திரு. சேலம் மு. .. | சேலம்-2. |
| 25 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 26 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி. |
| 27 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி. |
| 28 | இராதா, திரு. எஸ். ஆர். | கும்பகோணம். |
| 29 | இராமச்சந்திர ரெட்டி, திரு. எஸ். | திண்டிவனம். |



| | தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|---|
| 30 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்). | அருப்புக்கோட்டை. |
| 31 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். ஆர். | சாத்தூர். |
| 32 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 33 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி. |
| 34 | இராமசாமி, திரு. எஸ். வி. | பெரம்பலூர் (செ.வ.). |
| 35 | இராமசாமி, திரு. எஸ். ஜே. | சோளிங்கர். |
| 36 | இராமசாமி, திரு. கே. என். கே. | கோபிசெட்டிபாளையம். |
| 37 | இராமசாமி, திரு. கொ. .. | சிவகாசி. |
| 38 | இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 39 | இராமசாமி, திரு. து. .. | வெள்ளக்கோவில். |
| 40 | இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 41 | இராஜாராம் நாயுடு, திரு. ரெ. இரா. | தல்லி. |
| 42 | இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம். |
| 43 | இளங்கோவன், திரு. கோ. .. | திருவையாறு. |
| 44 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. டி. | அம்பாசமுத்திரம். |
| 45 | உக்கிரபாண்டியன், திரு. க. | பரமக்குடி. |
| 46 | உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 47 | உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 48 | உமாநாத், திரு. ரா. .. | நாகப்பட்டினம். |
| 49 | உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. | ஆற்காடு. |
| 50 | எட்மண்ட், மாண்புமிகு, திரு. க. உரொ. (அமைச்சர்). | திருநெல்வேலி. |
| 51 | எத்திராஜ், திரு. கி. .. | அச்சரப்பாக்கம் (செ வ) |
| 52 | ஏகாம்பர ரெட்டி, திரு. .. | பள்ளிப்பட்டு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 53 | ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை. |
| 54 | கண்ணன், திரு. ம. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 55 | கணேசன், திரு. இ. .. .. | எடப்பாடி. |
| 56 | கணேசன், திரு. எஸ்... .. | பூம்புகார். |
| 57 | கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 58 | கந்தசாமி, திரு. கே. .. | ஆண்டிப்பட்டி. |
| 59 | கபாலி, திரு. டி. கே. | மயிலாப்பூர், சென்னை. |
| 60 | கரியமாணிக்கம் அம்பலம். திரு. கரு. ராம. | திருவாடானை |
| 61 | கருணாநிதி, திரு, மு. .. | அண்ணா நகர், சென்னை. |
| 62 | கருணாநிதி, திரு, தாழை. மு. | திருவாரூர், (செ.வ.) |
| 63 | கருணாமூர்த்தி, திரு. வெ. .. | ஜெயங்கொண்டான். |
| 64 | கருப்பசாமி பாண்டியன் திரு. வீ. | ஆலங்குளம். |
| 65 | கலியமூர்த்தி, திரு. துரை. .. | சிதம்பரம். |
| 66 | காத்தமுத்து, திரு. கி. பெ. | தொட்டியம். |
| 67 | காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்). | திருப்பரங்குன்றம். |
| 68 | காளியப்பன், திரு. இரா. .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 69 | காளியப்பன், திரு. பொ. .. | காரைக்குடி. |
| 70 | கிட்டப்பா, திரு. என். .. | மாயூரம். |
| 71 | கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | பல்லடம். |
| 72 | கிருஷ்ணன், திரு. செ. .. | கன்னியாகுமரி. |
| 73 | கிருஷ்ணன், திரு. நா. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 74 | கிருஷ்ணன், திரு. பி. .. | விழுப்புரம். |
| 75 | கிருஷ்ணன், திரு. பி. எம். .. | பாலக்கோடு. |
| 76 | கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| 77 | குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 78 | குருசாமி, திரு. ப. .. .. | ஆண்டியூர் (செ.வ.) |
| 79 | குழந்தைவேலு, மாண்புமிகு, ப. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 80 | கோதண்டராமன், திரு. வி. கே. | குடியாத்தம். |
| 81 | கோபாலன், திரு. போ. .. | உதகமண்டலம். |
| 82 | கோவிந்தராசன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம். |
| 83 | கோவிந்தன், புலவர், கா. | செய்யாறு. |
| 84 | கோவேந்தன், திரு. மு. ரெ. | பேராவூரணி. |
| 85 | சங்கரய்யா, திரு. என். .. | மதுரை கிழக்கு. |
| 86 | சண்முகம், திரு. ஆர். .. | திருத்தணி. |
| 87 | சண்முகம், திரு. கா. ந. .. | லால்குடி. |
| 88 | சண்முகம், திரு. கூத்தக்குடி ச. | திருப்பத்தூர். |
| 89 | சண்முகம், திரு. ப. உ. .. | திருவண்ணாமலை. |
| 90 | சதாசிவம், திரு. செ. .. | அரவக்குறிச்சி. |
| 91 | சந்திரசேகரன், திரு. ஆர். .. | கம்பம். |
| 92 | சந்திரன், திரு. ப. .. ... | பெரணமல்லூர். |
| 93 | சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. | தியாகராயநகர், சென்னை. |
| 94 | சமரசம், டாக்டர், கே. .. | காவேரிப்பட்டினம். |
| 95 | சரஸ்வதி, மாண்புமிகு செல்வி. பி. டி. (அமைச்சர்). | திருமங்கலம். |
| 96 | சவுந்திரராஜன், திரு. ரெ. வீ. | பாபநாசம். |
| 97 | சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | ஆயிரம் விளக்கு, சென்னை. |
| 98 | சாது செல்வராஜ், திரு. கோ. | ஸ்ரீவைகுண்டம். |
| 99 | சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ.வ.). |
| 100 | சிகாமணி, திரு. பொ. .. | திருவொற்றியூர். |
| 101 | சிவசாமி, திரு. செ. .. .. | இளையாங்குடி. |
| 102 | சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர். |
| 103 | சின்னசாமி, திரு. வ. .. | சேந்தமங்கலம், (-ஆ.வா.) |
| 104 | சின்னசாமி, திரு. வி. கோ. | பவானிசாகர் |
| 105 | சின்னையா, திரு. வீ. .. | குளத்தூர் (செ.வ.) |
| 106 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி. |
| 107 | சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ. | குளித்தலை. |
| 108 | சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர். |
| 109 | சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 110 | சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 111 | சுந்தர்ராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 112 | சுப்பிரமணியம், திரு. ஆ. சி. | கடலாடி. |
| 113 | சுப்பிரமணியம், திரு. கே. ஜே. | போளூர். |
| 114 | சுப்பிரமணியம், திரு. டி. .. | ஆண்டிமடம். |
| 115 | சுப்பிரமணியம், திரு. பாக்கூர் சு. | உத்திரமேரூர். |
| 116 | சுப்பிரமணியன், திரு. ஓ. .. | சிவகங்கை. |
| 117 | சுப்பிரமணியன், திரு. மா. | சின்னசேலம். |
| 118 | சுப்பிரமணியன், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.). |
| 119 | சுப்ரவேலு, திரு. கா. .. | சீர்காழி (செ.வ.) |
| 120 | சுப்பு, திரு. க. .. .. | வில்லிவாக்கம். |
| 121 | சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | மொடக்குறிச்சி. |
| 122 | சுப்பையா, திரு. ச. .. | சங்கரநயினார்கோவில், (செ.வ.) |
| 123 | .. | பத்மநாபபுரம். |
| 124 | செங்கோட்டையன், திரு. கு. அ. | சத்தியமங்கலம். |
| 125 | செங்கோடன், திரு. கா. .. | கபிலமலை. |
| 126 | செல்லப்பா, திரு. அ. .. | வலங்கைமான், (செ.வ.) |
| 127 | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம், சென்னை. |
| 128 | செல்வராஜ், திரு. சீனி. .. | சமயநல்லூர். (செ. வ) |
| 129 | செல்வராஜ், திரு. மு. .. | குறிஞ்சிப்பாடி. |
| 130 | சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர், (செ.வ.) |
| 131 | சோமசுந்தரம், திரு. ஒ. ப. | பொள்ளாச்சி. |
| 132 | சௌந்தரபாண்டியன், திரு. வ. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 133 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 | சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். (அமைச்சர்). | ஸ்ரீரங்கம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 135 | சௌந்திரராஜன், திரு. மு. ரா. | பவானி. |
| 136 | தங்கவேல், திரு. ர. சு. .. | வால்பாறை (செ.வ.) |
| 137 | தங்கவேலு கவுண்டர், திரு. போ. | மேலமலையனூர். |
| 138 | தண்டபாணி, திரு. ரா. க. சு. | காங்கேயம். |
| 139 | தமிழரசன், திரு. இ. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 140 | தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி. |
| 141 | தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ. வ.). |
| 142 | தனுஷ்கோடி, திரு. கோ. | ராஜபாளையம் (செ. வ.). |
| 143 | தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 144 | திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத் தலைவர்). | அறந்தாங்கி. |
| 145 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 146 | துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா). | திருவோணம். |
| 147 | துரைசாமி, திரு. ப. .. | ராசிபுரம். |
| 148 | துரை முத்துசாமி, திரு. .. | சங்கரபுரம். |
| 149 | துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 | துரைராஜ், திரு. சு. ம. .. முதலமைச்சரின் பேரவைச் செயலர். | பொன்னேரி (செ. வ.). |
| 151 | துலுக்காணம், திரு. வ. .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.). |
| 152 | தைலப்பன், திரு. டி. எம். .. | ஒரத்தநாடு. |
| 153 | நடராசன், திரு. ஆர். .. | பேரூர். |
| 154 | நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 155 | நல்லதம்பி, திரு. தீ. சு. .. | பார்க்டவுன், சென்னை. |
| 156 | நாச்சிமுத்து, திரு. க. .. | பொங்கலூர். |
| 157 | நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி. | மேட்டூர். |
| 158 | நாராயணன், திரு. ரா. .. | தாரமங்கலம். |
| 159 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|---|
| 160 | பண்ணை சேதுராம், திரு. கே. | பெரியகுளம். |
| 161 | பரமசிவம், திரு. மொ. | வானூர் (செ. வ.). |
| 162 | பரமசிவன், திரு. ஏ. எம். | மேலூர். |
| 163 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 164 | பழனிசாமி, திரு. சொ. நா. | அவினாசி. |
| 165 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 | பழனியப்பன், திரு. அ. ப. .. | ஒட்டன்சத்திரம். |
| 167 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.) |
| 168 | பாக்கியதாஸ், திரு. டி... | விளவங்கோடு |
| 169 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 170 | பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 171 | பாலகுரு, திரு. வெ. .. | சோழவந்தான். |
| 172 | பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர், சென்னை. |
| 173 | பாலாஜி, திரு. க. .. | காஞ்சீபுரம். |
| 174 | பானுச்சாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 175 | புருஷோத்தமன், திரு. ஜ. | சைதாப்பேட்டை-1, சென்னை. |
| 176 | புஷ்பராஜு, திரு. த. .. | ஆலங்குடி. |
| 177 | பெரியசாமி, திரு. டி.பி.எம். | மதுரை மேற்கு. |
| 178 | பெரியசாமி, திரு. மொ. .. | மங்களூர் (செ.வ.). |
| 179 | பெரியசாமி, திரு. ரா. .. | உப்பிலியாபுரம். |
| 180 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.). |
| 181 | பெருமாள் திரு. ரா. கு. .. | விளாத்திகுளம். |
| 182 | பொன்னுசாமி, டாக்டர், ஏ. | பெருந்துறை. |
| 183 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 184 | பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்). | திருச்செங்கோடு. |
| 185 | மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர். |
| 186 | மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ. வ.). |
| 187 | மணிமுடி, திரு. எஸ். .. | எழும்பூர், சென்னை (செ. வ.). |
| 188 | மருதாசலம், திரு. க. .. | தொண்டாமுத்தூர். |
| 189 | மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்) | பாளையங்கோட்டை. |
| 190 | மாணிக்கம், திரு. சி. | திருச்சிராப்பள்ளி-1. |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|---|
| 191 | மார்க்கபந்து, திரு. ரா. .. | அணைக்கட்டு. |
| 192 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் | (நியமன உறுப்பினர்). |
| 193 | மாரிமுத்து திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 194 | மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 195 | முசிரிபுத்தன், திரு. பி. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | முசிறி. |
| 196 | முத்துசாமி, திரு. பா. கா. சி. | தர்மபுரி. |
| 197 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 198 | முத்துசாமி கரையாளர், திரு. சு. | தென்காசி. |
| 199 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 200 | முத்தையா, திரு. கே. கே. | மருங்காபுரி. |
| 201 | முருகேசன், திரு. கூ. ச. | திருவரம்பூர். |
| 202 | முனிரத்தினம், திரு. இரா .. | கும்மிடிபூண்டி. |
| 203 | முனு ஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்). | தாம்பரம். |
| 204 | முனுசாமி, திரு. பொ. .. | வந்தவாசி (செ.வ.). |
| 205 | யூசுப், திரு. யா. சை. மு. | ராதாபுரம். |
| 206 | ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம், சென்னை. |
| 207 | ரகுராமன், திரு. வி. .. | புவனகிரி. |
| 208 | ரகோத்தமன், திரு. கோ. | முகையூர். |
| 209 | ரசாக், திரு. எம். எம். ஏ. .. | கடையநல்லூர். |
| 210 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 211 | ராமதாஸ், திரு. பி. | போடிநாயக்கனூர். |
| 212 | ராமநாதன், திரு. சி. .. | விருத்தாசலம். |
| 213 | ராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் கோவில் (செ. வ.). |
| 214 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான், திரு. | புதுக்கோட்டை. |
| 215 | ராஜு, திரு. செ. மெ. .. | தலைவாசல். (செ.வ.). |
| 216 | ராஜு, திரு. வி. கே. .. | அரக்கோணம், (செ.வ.). |
| 217 | லட்சுமிநாராயணன், திரு. என். | மதுரை மத்திய தொகுதி |
| 218 | லத்தீப், திரு. எம். ஏ. ... | வாணியம்பாடி. |

| தொடர்எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| (1) | | (2) |
| 219 | வடிவேல், திரு. கு. .. | கரூர். |
| 220 | வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல். |
| 221 | வரதராஜன், திரு. சௌ. வே. | சேலம்-1. |
| 222 | வாசன், திரு. சீ. மு. .. | வேடசந்தூர். |
| 223 | வின்சென்ட், திரு. எம். (அமைச்சரின் பேரவைச் செயலர்). | நாகர்கோவில். |
| 224 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |
| 225 | வெங்கிடுசாமி என்கின்ற வெங்கிடு, திரு. ரா. | சிங்காநல்லூர். |
| 226 | வெள்ளைச்சாமி, திரு. ஆ. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | ஆத்தூர். |
| 227 | வேங்கா கவுண்டர், திரு. பி. | வீரபாண்டி. |
| 228 | வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு. |
| 229 | வேலுச்சாமி, திரு. ஓ. சோ. | ஒட்டப்பிடாரம் (செ. வ.). |
| 230 | ஜநகீசன், திரு. ஆனூர் பு.கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | செங்கல்பட்டு. |
| 231 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 232 | ஜெபமணி, திரு. ர. .. | சாத்தான்குளம். |
| 233 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 234 | ஜெயவேலு, திரு. எம். ஏ. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | காட்பாடி. |
| 235 | ஜேம்ஸ், திரு. ஜே. .. .. | திருவட்டாறு. |

## பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள்—

1. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.
2. திரு. எஸ். டி. சோமசுந்தரம்.
3. திரு. ஆர். எம். வீரப்பன்.
4. திரு. கே. நாராயணசாமி முதலியார்.
5. திரு. எஸ். இராகவானந்தம்.
6. திரு. கே. இராஜா முகமது.

தலைமை வழக்கறிஞர்—

திரு. வி. பி. இராமன்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடர்.

1978 நவம்பர் 2, 3, 5, 6, 7 ஆம் நாட்கள்.

(தொகுதி 35—எண்கள் 1 முதல் 5 வரை)

## அ


| | பக்கங்கள் |
|---|---|
| **அகதிகள்—** | |
| **இலங்கை—** | |
| விவரங்கள் | 610—617 |
| வேலை வாய்ப்பு | 106—107 |
| பர்மா, திருவண்ணாமலையில் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் விவரம் | 673 |
| **அங்காடிகள்—** | |
| இராதாபுரம் தொகுதி, சிறப்பங்காடிகள் அமைத்தல் | 679 |
| ஒன்றியங்கள், மினி சூப்பர் மார்க்கெட் அமைத்தல் | 129 |
| கோவை சிந்தாமணி அங்காடி | 103—104 |
| சென்னை, மினி சூப்பர் மார்க்கெட்டுகள் | 129 |
| **அச்சகம்—** | |
| சென்னை அரசு அச்சக ஊழியர்கள் | 86 |
| **அண்ணாமலை, திரு. எம்.—** | |
| அரிசனங்கள், ஊத்தங்கரை வட்டம், இலவச வீட்டு மனைகள் | 706 |

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.


**அண்ணாமலை, திரு. எம்.—தொடர்ச்சி.**

| | |
|---|---|
| ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், தர்மபுரி மாவட்டம் | 706 |
| சிறு உழவர் மேம்பாடு திட்டம், தர்மபுரி மாவட்டம் | 705 |
| சுப்பிரமணிய சிவா, நினைவாலயம் அமைத்தல் | 586 |
| பட்டு உற்பத்தி, தர்மபுரி மாவட்டம் | 55 |
| பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1979 | 183—184 |
| புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 185 |

**அப்துல் லத்தீப், திரு. கி.—**

| | |
|---|---|
| தாரிஞ்சாபுரம் ஒன்றியம், இனாம் காரியந்தல் அரிசனக் காலனி குடி நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல் | 39—40 |

**அம்பிகாபதி, திரு. மு.—**

| | |
|---|---|
| அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் | 477 |
| உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகள், தள்ளுபடி (த.கோ.) | 709 |
| கால்நடை மருத்துவக் கல்லூரிகள் | 124 |
| காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979 | 749—751 |
| கிராம கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் விவரம் | 660 |
| சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 157—158 |
| சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1979 | 168—169 |
| தஞ்சாவூர் மாவட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் | 123 |


பக்கங்கள்

அ—தொடர்ச்சி.


**அம்பிகாபதி, திரு. மு.—தொடர்ச்சி**

| | |
|---|---|
| தஞ்சை மாவட்டம், உப்பளங்கள் | 125 |
| தஞ்சை மாவட்டம், குறுவைப் பயிர் | 25 |
| தஞ்சை மாவட்டம், தீப்பெட்டி தொழிற்சாலைகள் | 123 |
| தமிழ் ஆசிரியர்கள், வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவானவர்கள் | 660 |
| நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979 | 142—143 |
| பாமணி ஆறு (மன்னார்குடி), கரைகள் பலப்படுத்துதல் | 665 |
| பெருவிடமருதூர், கோட்டூர் பஞ்சாயத்து ஒன்றியம், சாலை மேம்பாடு | 106 |
| பேரவை அலுவல் (த.கோ.) | 509 |
| மக்காச்சோளம், பயிரிடல் | 123 |
| மருந்தாக்கியல் பட்டயப்படிப்பு, மருந்து விற்பனையாளர்களின் பிள்ளைகளுக்கு இட ஒதுக்கம் | 434 |
| மன்னார்குடி, அரிசனங்கள், நில ஆர்ஜிதம் | 105 |
| மன்னார்குடி தாலூகா, மின் இணைப்பு | 27 |
| மன்னார்குடி, பரவாக்கோட்டை கிராமம், பிற்பட்ட மாணவர்கள் விடுதி | 106 |
| மன்னார்குடி ஸ்ரீ ராஜ கோபாலசுவாமி கலைக் கல்லூரி, புதிய கட்டிடம் கட்டுதல் | 622 |
| வடுவூர் பகுதி, தஞ்சை மாவட்டம், சுற்றுலா மையமாக்குதல் | 121 |

**அமிர்தராஜ், திரு. இரா.—**

| | |
|---|---|
| சேரிவிளை அரிசனங்கள், மயான வசதி | 77 |
| திருச்செந்தூர் பதனீரிலிருந்து துணைப் பொருட்கள் தயாரிப்பு | 86 |
| முதியோர் உதவித் தொகை, மனுக்கள் | 680—681 |
| நெல்லை மாவட்டம், சடையனேரி கண்மாய், பாசன வசதி | 86 |

**பக்கங்கள்**

அ—தொடர்ச்சி.

**அய்யாசாமி, திரு. கா.—**

தாராபுரம் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்தல் 432—433

**அரங்கசாமி, திரு. க.—**

உதகை, கக்குச்சி குடிநீர்த் திட்டம்

ஆதனூர் மடம், ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளியாக மாற்றுதல் 631

641

**அரங்கநாதன், திரு. சென்னை மு.—**

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 492, 493

குடிசை மாற்று வாரியம், புதிய குடியிருப்புகள்

குடிநீர் வழங்குதல்—வடிகால் வாரியம், தலைமை அலுவலக கட்டிடம் 11

சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979

222—224, 229—230,

திரை அரங்குகளில் பணியாற்றும் தொழிலாளர்கள், படிகள் வழங்குதல்

422—425

**அரங்கநாயகம், திரு. செ.—**

ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 455—456

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 726

**அரிசன நலம்—** 455

ஆனந்தல் [illegible]

காலனி, தெரு விளக்குகள்

ஆணைமேலகரம் பஞ்சாயத்து குடியிருப்பு குடிநீர் வசதி 118—11[illegible]

[illegible]

**பக்கங்கள்**

அ—தொடர்ச்சி.

**அரிசன நலம்—தொடர்ச்சி.**

இனாம் காரியந்தல் காலனி, நீர்தேக்கத் தொட்டி அமைத்தல் 39—40

எலத்தூர் அரிசன காலனி மாற்று இடம் 96

கடலாடி ஊராட்சி, குடி தண்ணீர் தட்டுப்பாடு 671—672

சேரிவிளை, திருச்செந்தூர் தொகுதி, மயான வசதி 77

தண்டராம்பட்டு அரிசனக் காலனிகள், மின்வசதி 98

தண்டராம்பட்டு தொகுதி, சாலை வசதி 121

திருமணம், மானியம் 74

நந்திமங்கலம் காலனி, தெரு மின் விளக்குகள் 665

நலத்துறைப் பள்ளிகள், கல்வித்துறைக்கு ஒப்படைத்தல் 425—428

மன்னார்குடி, நில ஆர்ஜிதம் 105

மாணவர் விடுதிகள்—

குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் கட்ட ஆணையிடப் பட்டவை 658—659

சமையல்காரர்கள், சம்பள உயர்வு 429—431

பொம்பூர் தொகுதி 678—679

மீனாட்சிபுரம் அரிசனப் பகுதி, மதுக்கரை ஒன்றியம், சுடுகாடு 97

வீட்டு வசதி—

அவினாசி தொகுதி 43

உளுந்தூர்பேட்டை, முடியனூர் 42

ஊத்தங்கரை வட்டம், இலவச வீட்டு மனைகள், வழங்கல் 706

அ—தொடர்ச்சி.

**அரிசன நலன்—வீட்டு வசதி—தொடர்ச்சி.**

வீட்டுமனை—தொடர்ச்சி.

ஒக்கிலிபாளையம் மதுக்கரை ஒன்றியம் வீட்டுமனை 90

கண்மைநாயக்கனூர், மதுக்கரை ஒன்றியம் வீட்டுமனை 89

சொழுந்தன்பட்டு, தண்டராம்பட்டு, அரிசனங்களுக்கு வீடுகள் 42

குறிச்சி பேரூராட்சி, செங்கப்ப நகர் 88—89

குறிச்சி பேரூராட்சி, வண்ணாரப்பேட்டை, பட்டா வழங்கல் 87

குனியமுத்தூர், கோவை மாவட்டம், அரிசனங்கள் வீட்டு மனை 90—91

தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், மகமாய்த் திருமணி, அரிசனங்கள் வீட்டுவசதி 40

பர்கூர் தொகுதி, அரிசனங்களுக்கு வீட்டு வசதி 43

பேரூர் ஒன்றியம் வேடப்பட்டி அரிசனங்கள் வீட்டு மனை

அரிசனங்கள், வீட்டுமனை, மதுக்கரை 90

வட ஆண்டாப்பட்டு 118

**அலுவலகங்கள்—**

சிறுபாக்கம், சார்பதிவாளர் அலுவலகம் 663

திருநெல்வேலி, தொழில்வணிக ஆணை இயக்குநர் அலுவலகம், புதிய கட்டிடம் 75

தென் ஆற்காடு மாவட்டம், வேளாண்மை பொறியியல் அலுவலகம், பாறை உடைக்கும் கருவிகள் 132

பொதுப் பணித் துறை, பிரித்தல் 272—273

**அழகர்சாமி, திரு. சே.—**

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 [illegible]



அ—தொடர்ச்சி.

**அன்பழகன் திரு. க—**

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 373—374, 379, 482, 523. 527, 530, 531, 568

உரிமைப் பிரச்னை எடுத்துக் கொள்ளாதது குறித்து, (த. கோ.) 137,138,139

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வது (ஒ.பி) 312

காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்டமுன்வடிவு, 1979 775

நாட்டறம்பள்ளி, மின்வாரிய பிரிவு அலுவலகங்கள் 394—395

வட ஆற்காடு மாவட்டம், மண்டல நாயனகுண்டா, புது ஏரி 126

வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி, விவசாயிகளுக்குக் கடன் 127

ஆ

**ஆசிரியர்கள்—**

ஆலங்காயம் வேலைவாய்ப்பு அலுவலகம், பதிவு செய்து கொண்டோர் விவரம் 661

தமிழ், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவானவைகள் 660

**ஆண்டி அம்பலம் திரு. மெ—**

உப்பளக் கூட்டுறவுச் சங்கங்கள், வழங்கப்பெற்ற தொகை 109

கொல்லிமலை. மூலிகை பண்ணைகள், ஆண்டு வருமானம் 668

சிறுவிவசாயிகள் 1978-79-ல் இணறு வெட்ட கூட்டுறவுத்துறை மூலம் அளிக்கப்பட்ட தொகை 666

சின்கோனா உற்பத்தி, செலவு 130

பட்டுப்புழு வளர்ப்பு, பயிற்சி 107

பட்டுப்புழு வளர்ப்பு, மூசுக்கொட்டை செடிகள் 108

பக்கங்கள்

## ஆ—தொடர்ச்சி.

ஆண்டி அம்பலம், திரு. மெ.—தொடர்ச்சி.

மரங்கள் வளர்ப்பு, கடற்கரைப் பகுதிகள் 687
மருதாநதி தேக்கம், மதுரை மாவட்டம், மீன் உற்பத்தி 109
வன இலாகா, மரங்கள் விற்பனை 49
வீரப்புலி சேமக்காடு (கன்னியாகுமரி மாவட்டம்) மூலிகைப் பண்ணை, ஆண்டு வருமானம் 668
ஸ்ரீரங்கம் கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியம் 666

ஆலயங்கள்—

சூரியனார், திருவிடைமருதூர் மேம்பாட்டுத் திட்டம் 639
தங்கும் விடுதி உள்ளவை 625—626
திருவண்ணாமலைக் கோட்டம் ஆலய பணிகளுக்கு நிதி 68
பழனி வழிகாட்டிகளுக்கு அடையாள கார்டு 641
புதுப்பிக்க மானியம் 620

ஆலைகள்—

கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, சாலை நிதி 96
சர்க்கரை ஆலைகள், ஊக்குவிப்பு
திருவள்ளூர் திருத்தணிக்கிடையில் சர்க்கரை ஆலை 48

ஆறுகள்—

ஆற்று நீர், கடலில் கலப்பு 71
கீழ்மணலூர் கிராமம், தடுப்புச் சுவர், பாலாறு 72
மன்னார்குடி, பாமணி ஆறு, கரைகள் பலப்படுத்துதல் 665

ஆறுமுகம், திரு. எச். ஜி.—

சாமல்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் 416—419
தர்மபுரி மாவட்டம், வேப்பம்பட்டியருகில் பாசன வரி 71
பர்கூர் தொகுதி, அரிசனங்களுக்கு வீட்டு வசதி 43
வாட்டனப்பள்ளி, கிருஷ்ணகிரி தாலுக்கா, காவல் நிலையம் 71
விவசாயம், கிருஷ்ணகிரி அணையிலிருந்து தண்ணீர் 71



பக்கங்கள்

## ஆ—தொடர்ச்சி.

ஆறுமுகம் சேலம் திரு. மு—

குறைவழுத்த மின்பளு பயனீட்டாளர்கள், ஒப்பந்தத்திற்கு அதிகப்படியாக உபயோகிக்கும் மின்சுமை 395—398
'டான்சி' தொழிற்சாலைகள். தேக்கப்பட்டுள்ள உபரி பொருட்கள் 707
தகாகுப்பம், எலி ஒழிப்புத் திட்டம் 701
தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகள் நிறுவனம், சேமிப்புக் கிடங்குகள் பற்றிய விவரம் 705
தமிழ்நாடு சேமிப்பு கிடங்குகள் நிறுவனம், லாரிகள் விவரம் 702
தேசியமயமாக்கப்பெற்ற வங்கிகள், மோட்டார் வாகனங்களுக் கான வரியை வசூலித்தல் 131
பாரிசவாயு வியாதி, ஆராய்ச்சி 622—623
பேரவை அலுவல் குறித்து (த. கோ.) 509
யுனானி மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு 699

ஆறுமுகம், திரு. த.— 578

அரசு அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள்
வைப்பூர், தூத்தூர்—அரியலூர் தொகுதி இணைப்புச் சாலை கள் 101

## இ

இயற்கைச் சீற்றங்கள்—

பட்டுக்கோட்டை, பேராவூரணிப் பகுதிகள், மழை, நிவாரணப் பணிகள் 80—81
மாங்கரைப்பள்ளம், வெள்ளப்பாதிப்பைத் தடுத்தல் 638—639

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

இராகவானந்தம், திரு. எஸ்.—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 482. 483, 484, 486, 487

இராசமாணிக்கம், திரு. இரெ.—

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்வது (த.கோ.) 439

நுகர்பொருள் வாணிபக் கழகம், அரசு அறிவிப்புப்படி நெல் கொள்முதல் செய்யாததும், விவசாயிகளிடையே பதட்ட நிலையும் (க.ஈ) 719

இராதா, திரு. எஸ். ஆர்.—

காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979 755, 756, 757, 758, 759, 760, 761

சென்னை, நகைக் கடைகள் சோதனை 79

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது குறித்து நடவடிக்கை (தி) 507

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 358—391, 456—505, 510—515, 519—569

சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1979 177,178

சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 317, [illegible]



பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—தொடர்ச்சி.

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன் வடிவு, 1979 212,213,214, 215

பேரவை அலுவல் (த. கோ.) 509

இராமச்சந்திரன், செஞ்சி திரு. ந.—

திருவான்மியூர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், கட்டிடம் கட்டுதல் 645

இராமசாமி, திரு. எஸ். வி.—

அரும்பாவூர் சித்திரவேலைத் தொழிற்கூடம் 679—680

குரும்பலூர் பஞ்சாயத்து, இரண்டாகப் பிரித்தல் 682

பெரம்பலூர் தொகுதி, அரிசன மாணவ விடுதிகள் 678

வேப்பன்தட்டை, புதுகுளம் 682

இராமசாமி, திரு. எஸ். ஜே.—

அரக்கோணம் இரும்பு எஃகு உருக்குத் தொழிற்சாலை, பில்லட் உருக்கு வார்ப்பட உற்பத்தி 37

கயிறு உற்பத்தி, தொழிற்சாலைகளுக்குக் கடன் 35

கூட்டுறவு நூற்பாலைகள், பருத்தி நூல் உற்பத்தி 37

கூட்டுறவு விவசாய நாணயச் சங்கங்கள், வழங்கப்பெற்ற கடன் 637

சென்னையில் புதிய கட்டிடங்கள், அனுமதி 35

இராமசாமி, திரு. த.—

இராமநாதபுரம் மாவட்டம், புறம்போக்கு நிலங்கள், விவசாயிகளுக்கு ஒதுக்கீடு 5

இராமலிங்கம், திரு. செ.—

சந்திரசேகரபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை, பணியாளர்கள் 636

சூரியனார் கோவில், மேம்பாட்டுத் திட்டம் 639

பக்கங்கள்

**இ—தொடர்ச்சி.**

இராமலிங்கம், திரு. செ.—தொடர்ச்சி.

தஞ்சாவூர், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 120

தஞ்சை மாவட்டம், முசுக்கொட்டை செடி சாகுபடி 63

திருப்பனந்தாள் மருத்துவ மனை, பெண் டாக்டர் நியமனம் 675

வட ஆற்காடு மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளில், வேலை நாட்கள் 288

இளங்கோவன், திரு. கோ.—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், எண்ணிக்கை 497

நடுக்காவேரி காவல் நிலையம் இடமாற்றம் 53

நூல்கள், மொழிபெயர்ப்புக் குழு அமைப்பு 409—414

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 179—181

விதவைகள் மறுமணம், அரசு உதவி 696

**ஈ.**

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—

அம்பாசமுத்திரம், தீப்பெட்டித் தொழிற்சாலை 132

ஆய்க்குடி, உயர்நிலைப் பள்ளி, தளவாடச் சாமான்கள் 645

தாராபுரம் கூட்டுறவுச் சங்கம் செயற்குழு உறுப்பினர்கள் மீது நடவடிக்கை 574

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 208

பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 196

விக்கிரமசிங்கபுரம் மில் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டக சூரியனார் கோவில், மேம்பாட்டுத் திட்டம் 639





பக்கங்கள்

**உ.**

உச்சி, திரு. கே.—

கூடலூர் அரசு மருத்துவமனை, படுக்கை வசதி 670

கூடலூர், ஜென்மி பூமி ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வரும் நிலங்கள் 74

கூடலூரிலும் உதகமண்டலத்திலும் ஏற்பட்டுள்ள கடுமையான விறகுத் தட்டுப்பாடு (க.ஈ.) 723

தேவர்சோலை, நீலகிரி மாவட்டம், உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் 111

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 187, 190

முதுமலை ஸ்ரீ மதுரை பஞ்சாயத்துக்கள், வன விலங்குகளால் விவசாயம் பாதிப்பு 584

உணவு தானியங்கள்—

அரசின் கையிருப்பிலுள்ள அரிசி 398—408

சிதம்பரம் வட்டம், நெல் கொள்முதல் நிலையங்கள் 643

நெல் கொள்முதல், நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்யாததும், விவசாயிகளிடையே பதட்ட நிலையும் (க.ஈ.) 719—723

உத்திராபதி, திரு. பொ.—

கோட்டூர், தஞ்சை மாவட்டம், மருத்துவமனை ஏற்படுத்துதல் 603

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 181—182

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 188—189

பக்கங்கள்

உ—தொடர்ச்சி.


உப்பளங்கள்—

சால்ட் கார்ப்பரேஷன் 54

தஞ்சை மாவட்டம் 125

உமாநாத், திரு. ரா.—

அசெம்பிளி அலுவலர்களுக்கு 'பாஸ்' வழங்கல் (த.கோ.) 709—710

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 368, 369, 370, 467, 483—484

சிவில், கிரிமினல் வழக்குகள் பைசல் 625

வக்ப் போர்டு நிர்வாகம், விசாரணை 305

உரிமைப் பிரச்சினைகள்—

பார்க்க—தலைவர்.

உள்ளாட்சிகள்—

கிராமப் பஞ்சாயத்துக்கள், விளக்குகள் பராமரிப்பு 291—296

குரும்பலூர் பஞ்சாயத்து, இரண்டாகப் பிரித்தல் 682

தர்மபுரி மாவட்டம், ஊராட்சிகள் பேரூராட்சிகளாக மாற்றம் 100

வானூர் ஒன்றியம், பிரித்தமைத்தல் 291


எ.


எட்மண்ட், திரு. க. உரோ.—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 564

இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979 519

நுகர்பொருள் வாணிபக் கழகம், அரசு அறிவிப்புப்படி நெல் கொள்முதல் செய்யாததும், விவசாயிகளிடையே பதட்ட நிலையும் (க.ஈ.அ.) [illegible]




பக்கங்கள்

ஏ.


ஏடுகள்—

பேரவைமுன் வைக்கப்பெற்றவை 230—231, 391—392எ, 516, 570—571, 804—805


ஒ.


ஓய்வூதியம்—

முதியோர், திருச்செந்தூர் வட்டம், மனுக்கள் 680—681


க.


கட்டடங்கள்—

அரசு அலுவலகங்கள் 578—582

ஊராட்சி, பேரூராட்சி அலுவலகங்கள், அரசுதவி 685

சென்னையில் புதிய கட்டடங்கள் அனுமதி 35

திருவான்மியூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் 645

கடன்கள்—

கயிறு உற்பத்தித் தொழிற்சாலைகள் 35—36

தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு வட்டி விகிதம் 307—310

பொற்கொல்லர், பாக்கிகள் 48

கணேசன், திரு. எஸ்.—

கோயில்கள், புதுப்பிக்க மானியம் 620

திருவள்ளூர்-திருத்தணிக்கு இடையில் சர்க்கரை ஆலை 48

நுகர்பொருள் வினியோக அலுவலர், மதுக்கரை, கோளத்திற்கு அரிசி கடத்தல் 618

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கணேசன், திரு. எஸ்.—தொடர்ச்சி.

புறக்காவல் நிலையங்கள், எண்ணிக்கை 39

பொதுப்பணித் துறையினைப் பிரித்தமைத்தல் 272

ரூபாய் நோட்டு, இரட்டிப்பு மோசடி, கைது செய்யப் பெற்றோர் 42

கதர்—

திருவண்ணாமலை, அம்பர் ராட்டைக்கு வந்த மனுக்கள் 676—677

மதுரை, விற்பனை நிலையங்கள் 697

கந்தசாமி, திரு. கே.—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 322—358,

கருணாநிதி, திரு. மு.—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 322—358, 377—381, 382—385, 386, 390—391, 478, 481—482, 487, 488, 513, 522, 523, 524, 525, 526, 529, 532, 542, 547, 549—550, 557—558, 560, 562, 563, 565, 566

பேரவை அலுவல் (த.கோ.) 509



பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கருணாமூர்த்தி, திரு. வெ.—

அரிசன மாணவர் விடுதிகள், சமையல்காரர்களது சம்பள உயர்வு 429—431

உடையார்பாளையம், காகிதத் தொழிற்சாலை 68

கல்லூரிகள்—

தாராபுரம். கால்நடை மருத்துவக் கல்லூரிகள் அமைத்தல் 432—433

மதுரை கலைக் கல்லூரிகள் நிறுவுதல் 414—415

மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபாலசுவாமி கலைக் கல்லூரி புதிய கட்டிடம் கட்டுதல் 622

கலியமூர்த்தி, திரு. துரை.— 72

ஆற்று நீர், கடலில் கலப்பு 125

காட்டுமன்னார்கோயில், நகரபாடி ஏரி 72

சிதம்பரம்—தீ விபத்து 77

பால் பதனிடும் நிலையம் 51, 678

மருத்துவமனை. மருத்துவர்கள்

சிதம்பரம் வட்டம்— 125

சின்ன பாண்டியன் ஏரி 643

நெல் கொள்முதல் நிலையங்கள் 126

விளாகம் கால்நடை மருத்துவமனை, கட்டிடம்

திருமுட்டம்— 659

மருந்தகம் 95

விரைவு வண்டி [illegible]

தென்னார்க்காடு மாவட்டம்— 639

கடலில் சேரும் நீர் 111

பெருமாள் ஏரி. கொள்ளளவு

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கலியமூர்த்தி, திரு. துரை—தொடர்ச்சி

தென்னாற்காடு மாவட்டம்—தொடர்ச்சி.

பெருமாள் ஏரி, வடிமுனை மாற்றம் 110

பரங்கிப்பேட்டை ஒன்றியம், ஆரம்பப் பள்ளிகளுக்கு கட்டிடம் 634

வீராணம் ஏரி, லால்பேட்டை வாய்க்கால் புனரமைப்பு 111

கவன ஈர்ப்புகள்—

இராமநாதபுரம் மாவட்டம், மழையின்மை, விவசாயிகள் பாதிப்பு, கடன் வசூலை நிறுத்தி வைத்தல் 133—135

காவேரிப்பட்டினம், முருக்கல், நத்தம் பகுதி அரிசன மக்களுக்கு பட்டா 441—444

கூனூரிலும், உதகமண்டலத்திலும் ஏற்பட்டுள்ள கடுமையான விறகுத் தட்டுப்பாடு 723—726

நுகர்பொருள் வாணிபக் கழகம், அரசு அறிவிப்புப்படி நெல் கொள்முதல் செய்யாததும், விவசாயிகளிடையே பதட்ட நிலை 719—723

முல்லைப் பெரியாறு அணை (தேக்கடி), அபாய நிலைமை 444—453

கனிப் பொருள்கள்—

மாக்னசைட் 56

காடுகள்—

சத்தியமங்கலம் வனச் சரகம், சந்தன மரம் ஏலம் 11—14

வன இலாகா, மரங்கள் விற்பனை 40—41

கால்நடைகள்—

ஈச்சங்கோட்டை, உயரின வளர்ச்சிப் பண்ணை. மத்திய அரசு உதவி 690

கடலாடி தொகுதி, ஆட்டுப் பண்ணை 31

கந்தேகவுண்டன் சாவடி, மருந்தகம் 86



பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கால்நடை—

194

மருத்துவம், கல்லூரிகள்

சிதம்பரம் வட்டம், விளாகம் கால்நடை மருத்துவமனை கட்டிடம் 126

116

சென்னை, கால்நடை மருத்துவமனைகள்

617

தரமணி, திடீர் இறப்பு

432—433

தாராபுரம், மருத்துவக் கல்லூரி அமைத்தல்

127

திருப்பத்தூர். மருந்தகங்கள்

113

பசுக்கள், ஜெர்சி இனம், இறக்குமதி

வட ஆற்காடு—

85

கால்நடைப் பட்டிகள் 94

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கால்நடை மருந்தகங்கள்

81

தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்

காவல், துறை—

கிருஷ்ணகிரி பழையபேட்டையில் நகர துணை காவல் நிலையம் அமைத்தல் 41

சென்னை, கட்டுப்பாட்டு அறை, போக்குவரத்து காவல் துணை ஆணையர் அலுவலகம் 51—52

58

தஞ்சை மாவட்டம், நடுக்காவேரி இடமாற்றம்

திருச்சி. காவலர்(கள்) தற்காலிக வேலை நீக்கம்

34

திருப்புவனம், சரகம் பிரித்தல்

54—55

பணிபுரிவோர் 39

ஊர்க் காவல் நிலையங்கள், எண்ணிக்கை

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

காவல்துறை—தொடர்ச்சி.
- பெண் அதிகாரிகள் பயிற்சி காலத்தில் திருமணத்திற்குத் தடை — 362
- பேரளம், காவல் நிலையம், பதிவு செய்யப்பட்ட வழக்குகளை மாயவரம் நீதிமன்ற எல்லைக்குக் கொண்டு வருதல் — 590
- வரட்டனப்பள்ளி காவல்நிலையம் — 71

காளிமுத்து, திரு. கா.—
- சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 232, 227—229

கிட்டப்பா, திரு. என்.—
- ஆணை மேலகரம் அரிசனக் குடியிருப்பு, குடிநீர் வசதி — 52
- இரத்த தானம் செய்வோர், சான்றிதழ் வழங்கல் — 634
- கள்ள நோட்டு அச்சடிப்பு, கைதானோர் — 47
- கூட்டுறவு வங்கிகள், சிறுதொழில்கள் வளர்ச்சிக்குக் கடன் — 54
- கோவில்கள், தங்கும் விடுதி உள்ளவை — 635
- சர்க்கரை ஆலைகள், ஊக்குவிப்பு — 47
- சிக்கரி ஆராய்ச்சி — 46
- சிறப்பு மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் — 53
- சென்னை—
  - கட்டுப்பாட்டு அறை, போக்குவரத்து காவல் துணை ஆணையர் அலுவலகம் — 51
  - கடற்கரை, அசுத்தம் செய்வோர் மீது நடவடிக்கை — 45
  - காலணி வடிவமைப்பு மீள் பார்வை வகுப்பு — 626
  - கொலை வழக்குகள் — 44



பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கிட்டப்பா, திரு. என்.—தொடர்ச்சி.
- தஞ்சை, மட்பாண்ட தொழிலாளருக்கு நிலம் — 644, 645
- தஞ்சை மாவட்டம், தேவாம்பாள்பட்டினம் விதைப்பண்ணை — 78
- தியாகிகளுக்கு உதவித் தொகை — 32
- திருவள்ளூர், காசநோய் மருத்துவமனை நிறுவுதல் — 624
- தீண்டாமைக் குற்றங்கள், கைதானவர்கள் — 619
- தொழில் நுட்ப வல்லுநர்களுக்கான கடன்களுக்கு வட்டி விகிதம் — 307
- நகர்ப்புற நிலவரி, விதிவிலக்கு — 50
- நியாய விலைக் கடைகள் — 627
- நீலங்கரை, பனிக்கட்டி குளிர்பதன நிலையம் — 707
- பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகள், தானியங்கிக் கதவுகள் — 59
- புகைவண்டி நிலையங்கள், திருட்டுகள் — 45
- பெண்களைக் கேலி செய்தல், வழக்குகள் — 50
- பெண் காவல் அதிகாரிகள், பயிற்சிக் காலத்தில் திருமணத்திற்குத் தடை — 362
- பொற்கொல்லர், கடன் பாக்கிகள் — 48
- மாக்னசைட் — 56
- மாயூரம்—
  - அரசினர் பொது மருத்துவமனை—
    - செவிலியர்கள் — 647
    - பல் டாக்டர் நியமனம் — 648
    - மருந்துகளுக்காக செலவான தொகை — 647
    - வெளிநோயாளிகள் — 646

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

இட்டப்பா, திரு. என்.—தொடர்ச்சி.

உரிமம் வழங்கப்பட்ட ஆட்டோ-ரிக்ஷாக்கள் 643

ஓய்வு இல்லம், மாயூரம் 81

நகராட்சிப் பள்ளிகள், மாயூரம் 76

ரூபாய் நோட்டு இரட்டிப்பு மோசடி, கைது செய்யப் பெற்றோர் 42

வட்ட மருத்துவமனைகள், எலும்பு முறிவுப் பிரிவுகள் 648

வேளாண்மை பல்கலைக் கழகம். இணைக்கப்பட்ட நிறுவனங்கள் 700

ஸ்ரீபெரும்புதூர் அருகில் நிகழ்ந்த பேருந்து விபத்து 86

கிடங்குகள்—

தமிழ்நாடு சேமிப்பு கிடங்குகள் நிறுவனம்—
சேமிப்பு கிடங்குகள் 703—705

லாரிகள் விவரம் 702

கிராம அதிகாரிகள்—

கையாடல், கைது 81

பிடாகம் கிராம மணியம், புகார் 279

கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—

கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 517

கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1979 313

கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன் வடிவு, 1979 517

கிருஷ்ணன், திரு. செ.—

கன்னியாகுமரி மாவட்டம், ரப்பர் தொழிற்சாலை 10



பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கிருஷ்ணன், திரு. ரா.—

இந்துசமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 796. 797

திருநெல்வேலி, தொழில் வணிகத் துறை இயக்குநர் அலுவலகம், புதிய கட்டிடம் 75

திருநெல்வேலி மாவட்டம். மலைப்பயிர்த் தோட்டங்கள் 49

பூமிதான இயக்கம், நிலங்கள் 640

மருத்துவமனைகள், அக்குபங்சர் அறுவை முறை 606

மாஞ்சோலை எஸ்டேட் குரூப், தொழிலாளர்கள் 49

குடிநீர்—

கக்குச்சி 631

கல்பட்டு ஊராட்சி 14

கிராமங்கள் 15—19

குட்டிக் கவுண்டன்பதி கிராமம் 668

சிறுமுகை பஞ்சாயத்து 19—20

செட்டிகுளம்—லெவிஞ்சிபுரம் 297—298

சைதை அரசுப் பண்ணை 649

திருப்புவனம் பேரூராட்சி 15

நஞ்சேகவுண்டன்புதூர், கிணறுகள் 117

மம்சாபுரம் பேரூராட்சி 82—83

மம்சாபுரம் பொதுக்கிணறு, குறவர்கள் நீர் எடுக்க மறுப்பு 621—622

வியாசர்பாடி 594—597

குடும்பநலம்—

துறை அச்சகம் 650

பிரச்சாரம், மத்திய அரசு உதவி 649—650

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

**குழந்தைவேலு, திரு. ப.—**

முல்லைப் பெரியாறு (தேக்கடி) அணை, அபாய நிலைமை (க.ஈ.அ.) 444—453

**குழுக்கள்—மதிப்பீடு—**

கால்நடை வளர்ப்புத்துறை பற்றிய அறிக்கை, அளித்தல் 454

**கூட்டுறவு—**

உப்பள சங்கங்கள், வழங்கப் பெற்ற தொகை 109

இராமநாதபுரம் மாவட்டம், கடன்கள் 82

கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை, சாலை நிதி 96

கிராமக் கடன் சங்கங்கள் 660

கீழ்நாச்சிப்பட்டு, விவசாயக் கூட்டுறவு நாணயச் சங்கம் 278—279

சங்கங்களின் கணக்குகள், தணிக்கைக்கு தனி அமைப்பு ஏற்படுத்துதல் 575—578

சந்திரசேகரபுரம், பண்டகசாலை பணியாளர்கள் 636

சிறு விவசாயிகள், 1978-79ல் கிணறு வெட்ட அளிக்கப் பட்ட தொகை 666—667

தர்மபுரி மாவட்டம், ஆடு வளர்ப்போர் சங்கங்கள் 706

தாராசுரம் கூட்டுறவுச் சங்கம், செயற் குழு உறுப்பினர் சிலர் மீது நடவடிக்கை 574—575

தஞ்சாவூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் 120—121

திருவண்ணாமலை, பால் கூட்டுறவுச் சங்கங்கள் 100

நூற்பாலைகள், பருத்தி நூல் உற்பத்தி 97

புளியம்பட்டி விஜயேஸ்வரி பஞ்சாலை கூட்டுறவுப் பண்டக சாலை 110

மகளிர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் 88



பக்கங்கள்

க—தொடர்ச்சி.

**கூட்டுறவு—தொடர்ச்சி.**

மதுரை ஒலகலப்பாடி இறைவை நீர்ப்பாசனம் கூட்டுறவுச் 119
சங்கம் 54

வங்கிகள், சிறு தொழில்கள் வளர்ச்சிக்குக் கடன்

வட ஆற்காடு மாவட்ட விநியோக, விற்பனை சங்கம், பழச் 691
சாறு தயாரிக்கும் நிலையம்

விக்கிரமசிங்கபுரம் மில் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டக 275—278
சாலை தேர்தல் 637—638

விவசாய நாணயச் சங்கங்கள், வழங்கப்பெற்ற கடன்கள்

வெங்காபுரம், வட ஆற்காடு மாவட்டம், மாடுகள் வாங்கக் 68
கடன் 127

வேலூர் மத்தியக் கூட்டுறவு வங்கி, விவசாயிகளுக்கு கடன் 686

ஸ்ரீரங்கம் பால் வழங்கு ஒன்றியம்

**கோதண்டராமன், திரு. வி. கே.—**

குதிரைப் பந்தயம் பந்தயத் தொகை பெறும் முகவர் நிறு 790—791
வனங்களை ஒழித்தல் சட்ட முன்வடிவு, 1979

சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு 158—159,
1979 162

சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்தச்) சட்ட 167—168
முன்வடிவு, 1979

சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) 220
சட்ட முன்வடிவு, 1979 620—621

பி ஆண்டு சி வகுப்புக் கைதிகள், வழங்கப் பெறும் உணவு 594

வியாசர்பாடி குடிநீர் குழாய்கள்

**கோபாலன், திரு. போ.—** 599

கோத்தகிரி புதிய பேருந்து நிலையம் 631

ஆனேரி, மஞ்சூர் மருத்துவ நிலையங்கள் 25

நீலகிரியில் கற்பூரத் தைலத் தொழிற்சாலை

பக்கங்கள்


க—தொடர்ச்சி.

**கோவிந்தராசன், திரு. சி.—**

காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979 — 741, 745—748, 767

நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979 — 141—142

**கோவில்கள்—பார்க்க ஆலயங்கள்**

**கோவேந்தன் திரு. எம். ஆர்.—**

குத்தகை உரிமை பதிவு, மனுக்கள் — 583

பட்டுக்கோட்டை, பேராவூரணிப் பகுதிகள், வெள்ள நிவாரணப் பணிகள் — 80

பட்டுக்கோட்டை மற்றும் தஞ்சை வட்டங்கள், வணிக வரி — 79

ச

**சங்கரய்யா, திரு. என்.—**

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் — 374—375, 466—467, 472, 474, 476—477, 487, 488, 569




பக்கங்கள்


ச—தொடர்ச்சி.

**சட்டம்-ஒழுங்கு—**

எடைக்குறைவு, பதிவான வழக்குகள் — 693

கள்ளநோட்டுகள் அச்சடிப்பு, கைதானோர் — 47

சென்னை, கொலை வழக்குகள் — 45

சென்னை நகைக் கடைகள் சோதனை — 79

திருவண்ணாமலை, அடகுக் கடைக்காரர் தலைமறைவு — 590—591

நுகர்பொருள் விநியோக அலுவலர், கடத்தல் — 618

புகைவண்டி நிலையங்கள், திருட்டுகள் — 45—46

பெண்களைக் கேலி செய்தல், வழக்குகள் — 50

ரூபாய் நோட்டு இரட்டிப்பு மோசடி, கைது செய்யப் பெற்றோர் — 42

**சட்ட முன்வடிவுகள்—**

ஆந்திரா நிலவரி விதிப்பு (முறைப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு, 1979

ச.ஆ.நி. — 204

ச.பிரி.ஆ.நி.

நிறைவேற்றுதல் — 204

இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979

ச.அ.நி. — 519

இந்துசமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

ச.அ.நி. — 135

ச.ஆ.நி. — 795—798

ச.பிரி.ஆ.நி. — 798

நிறைவேற்றுதல் — 799

| | பக்கங்கள் |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| **சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.** | |
| **ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்)** திருத்த சட்ட முன்வடிவு, 1979 | |
| **ச.ஆ.நி.** | 455—456 |
| காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு 1979 | |
| ஆளுநர் செய்தி | 727 |
| **ச.அ.நி.** | 454 |
| **ச.ஆ.நி.** | 727—784 |
| ச.பிரி.ஆ. | 784 |
| நிறைவேற்றுதல் | 784 |
| குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு, 1979 | |
| ச.அ.நி. | 314 |
| ச.ஆ.நி. | 785—794 |
| ச.பிரி.ஆ.நி. | 794 |
| நிறைவேற்றுதல் | 794—795 |
| கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 : | |
| ச.அ.நி. | 517 |
| கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு 1979 : | |
| **ச.அ.நி.** | 313 |
| **கூட்டுறவு** சங்கங்கள் (நான்காவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 : | |
| **ச.அ.நி.** | 51[illegible] |





| | பக்கங்கள் |
|---|---|
| ச—தொடர்ச்சி. | |
| **சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.** | |
| கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979—தொடர்ச்சி. | |
| **ச.அ.நி.** | 315 |
| **ச.ஆ.நி.** | 795 |
| ச.பிரி.ஆ. | 795 |
| நிறைவேற்றுதல் | 795 |
| சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை—காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 : | |
| ச.அ.நி. | 726 |
| சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 : | |
| ச.ஆ.நி. | 150—151 |
| ச.பிரி.ஆ. | 162—163 |
| நிறைவேற்றுதல் | 163 |
| சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1979 : | |
| ச.ஆ.நி. | 163 |
| ச.பிரி.ஆ. | 178 |
| நிறைவேற்றுதல் | 178 |
| சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 : | |
| **ச.ஆ.நி.** | 216 |
| **ச.பிரி.ஆ.** | 221 |
| **நிறைவேற்றுதல்** | 222 |
| **சென்னை மாநகராட்சி** (இரண்டாவது திருத்த) **சட்ட முன்வடிவு, 1979 :** | |
| **ச.ஆ.நி.** | 222 |

பக்கங்கள்

## ச—தொடர்ச்சி.

சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979—தொடர்ச்சி.
- ச.பிரி.ஆ. 230
- நிறைவேற்றுதல் 230

தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.அ.நி. 454

திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 :
- ச.அ.நி. 140
- ச.ஆ.நி. 799—803
- நிறைவேற்றல் 803

நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.அ.நி. 518—519

நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.ஆ.நி. 140
- ச.பிரி.ஆ. 148—149
- நிறைவேற்றுதல் 149

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 :
- ச.ஆ.நி. 204
- ச.பிரி.ஆ. 215—216
- நிறைவேற்றுதல் 216

பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.ஆ.நி. 191
- ச.பிரி.ஆ. 202—203
- நிறைவேற்றுதல் 203



பக்கங்கள்

## ச—தொடர்ச்சி.

சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.ஆ.நி. 179
- ச.பிரி.ஆ. 186
- நிறைவேற்றுதல் 186

பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.அ.நி. 315

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 :
- ச.ஆ.நி. 186
- ச.பிரி.ஆ. 191
- நிறைவேற்றுதல் 191

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.அ.நி. 455

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.அ.நி. 518

மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 :
- ச.அ.நி. 455

சண்முகம், திரு. இரா—
- பெண்கள் உயர்நிலைப் பள்ளி கட்டிடம், திருத்தணி 96

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சண்முகம், திரு. கூத்தகுடி ச.—

இராமநாதபுரம் மாவட்டம், கூட்டுறவுக், கடன் 82

இராமநாதபுரம் மாவட்டம், மழையின்மை, விவசாயிகள் பாதிப்பு, கடன் வசூலை நிறுத்தி வைத்தல் (க.ஈ.) 133, 134

கடன், கூட்டுறவு வங்கி, இராமநாதபுரம் மாவட்டம் 82

குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு, 1979 789—790

794

குளத்தூர்பட்டி-சிங்கம்புணரி, பேருந்து 299

சிங்கம்புணரி என்பீல்டு தொழிற்சாலை, வேலை நிறுத்தம் 269

சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 161

சந்திரன், திரு. ப.—

அணைக்கட்டுத் தொகுதி, கோயில் மலையனூர் அணைத் திட்டம் 32

சுங்குவார்சத்திரம், பொது கழிப்பிடம் கட்டுதல் 686

டி.வி. புத்தூர் ஆரம்பப் பள்ளி, புதிய கட்டிடம் 686

தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், மகமாய்த் திருமணி, அரிசனங்கள் வீட்டு வசதி 40

வேலூர் காசநோய் மருத்துவமனை, இரத்த வங்கி. ஆபரேஷன் தியேட்டர் வசதி 29

சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ.—

சென்னை மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள், சிற்றுண்டி அறைகள் 130

சமரசம், டாக்டர் கே.—

ஈழகம் ஏரி, கால்வாய் 120

காவேரிப்பட்டினம் தென்பெண்ணை ஆற்றிலிருந்து பாசன வசதி 431—432





பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சமரசம், டாக்டர் கே.—தொடர்ச்சி.

காவேரிப்பட்டினம் முருக்கல் நத்தம் பகுதி அரிசன மக்களுக்கு பட்டா அளிக்க இயலாதவாறு வன இலாகாவினர் நடவடிக்கை (க.ஈ.) 441—444

கிருஷ்ணகிரி வட்டம், இரண்டாகப் பிரித்தல் 582

தர்மபுரி மாவட்டம் ஊராட்சிகள், பேரூராட்சிகளாக மாற்றம் 100

சமூக நலம்—

கோவை மாவட்டம்—

முதியோர் ஓய்வூதியம் 60

விதவைகள் உதவித் தொகை 61

தலைமைச் செயலகம், உடல் ஊனமுற்றோருக்கு கெசடட் பதவிகள் 44

திருவில்லிபுத்தூர், டோபிக்கானா 83

மம்சாபுரம், டோபிக்கானா 651

முகவை மாவட்டம் முடமானவர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள் அளித்தல் 70

வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர், குழந்தைகள் காப்பகங்கள் 73—74

விதவையை மறுமணம் செய்துகொண்டோர், அரசு உதவிப் பணம் வழங்கல் 696

சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—

உரிமைப் பிரச்னை எடுத்துக்கொள்வது குறித்து (த.கோ.) 436

உரிமைப் பிரச்னை எடுத்துக்கொள்ளாதது குறித்து (த.கோ.) 137

சென்னை காவலர் குடியிருப்பு, பின்கட்டணச் சலுகை 617

சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1979 177

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.


சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே.—தொடர்ச்சி.

தாமணி கிராமம் கால்நடைகள், திடீர் இறப்பு 617

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 212—213

சாலைகள்—

அன்னப்பன்பேட்டை-காம்பை, சீர்படுத்தல் 98

ஊகூர்-சிவநாதபுரம் குருமலை சாலை 55

கருந்துவாம்பாடி-பெரிய கிளாம்பாடி, கப்பி போடுதல் 67

கரூர் பழுது பார்த்தல் 107

திருப்பத்தூர் ஊராட்சி, குரிசிலாப்பட்டு-ஜோல்ல கவுண்டனூர் 97

பெருவிடமருதூர், கோட்டூர் ஒன்றியம், சாலை மேம்பாடு 106

மதுக்கரை ஒன்றியம், ஒக்கிலிபாளையம்-மதுமச்சம்பட்டி பாதை செப்பனிடல் 89

மதுக்கரை ஒன்றியம், செப்பனிடல் 694

வைப்பூர், தூத்தூர்—அரியலூர் தொகுதி, இணைப்புச் சாலைகள் 101

சிகாமணி, திரு. பொ.—

கொல்லம்-தூத்துக்குடி, விரைவுப் பேருந்துகள், அதிகரிப்பு 20

சிவசாமி, திரு. செ.—

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 209, 211
211




பக்கங்கள்

ச—தொடர்ச்சி.


சிவசாமி, திரு. செ.—தொடர்ச்சி.

பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு-நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 196—197

வைகை அணைக்கட்டுப் பகுதி காட்டிலாகா பயிற்சி நிலையம், உதவித் தொகை 287

சிறைச்சாலைகள்—

கோவை மைதானம், அரசு அலுவலகக் கட்டிடம் கட்டுதல் 663

பி அண்டு சி வகுப்பு கைதிகள், வழங்கப் பெறும் உணவு 621

சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.—

குளித்தலை, தீயணைப்பு நிலையம் 75

சில்கோனா—

உற்பத்திச் செலவு 180

சின்னசாமி, திரு. வ.—

குட்டைகள், ஏரிகள், சேந்தமங்கலம் 92

சேலம் மாவட்டம்—சந்தனக் கட்டைகள் 658

மலை சாதியினர், வேலை வாய்ப்பு 657

சின்னராசு, திரு. க. இரா.—

கிருஷ்ணகிரி பழைய பேட்டையில் நகர துணை காவல் நிலையம் 41

சுந்தரம், திரு. ப.—

ஆலங்காயம் வேலை வாய்ப்பு அலுவலகம், பதிவு செய்து கொண்ட ஆசிரியர்கள் 681

கொரட்டி கிராமம், பள்ளிக் கட்டிடம் 681

681

திருப்பத்தூர்— 681

ஆட்டோ ரிக்ஷாக்கள் 96, 127

கால்நடை மருந்தகங்கள்

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.


**சுந்தரம், திரு. ப.—தொடர்ச்சி.**

குரிசிலாப்பட்டு-ஜோல்ல கவுண்டனூர், பாதை 97

குழந்தைகள் காப்பகங்கள் 73

தங்கும் விடுதி, விஸ்தரிப்பு 101

தந்தை பெரியார் போக்குவரத்து கழகம், கிளை அலுவலகம் 600

மது அனுமதி, மனுக்கள் 100

வட ஆற்காடு மாவட்டம், மீட்டூர்-விளாங்குப்பம். பாம்பாறு பாலம் 94

வெங்காபுரம், மாடுகள் வாங்கக் கடன் 98

**சுந்தரராஜ், திரு. நா.—**

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 497—498, 504, 510

காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979 738—741

குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு, 1979 787—788

**சுப்பிரமணியம், திரு. ஆர். சி.—**

கடலாடி தொகுதி, ஆட்டுப் பண்ணை 81

**சுப்பிரமணியம், திரு. கே. ஜே.—**

வடாற்காடு மாவட்டம், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் 81

**சுப்பிரமணியன், சின்னசேலம் திரு. மா.—**

இலங்கைத் தமிழர்கள், தாயகம் திரும்பல் 610—617

உளுந்தூர்பேட்டை, முடியனூர் கிராம அரிசனங்களுக்கு வீடுகள் [illegible]

ஒன்றியங்கள், மினி சூப்பர் மார்க்கெட் [illegible]




பக்கங்கள்

ச—தொடர்ச்சி.


**சுப்பிரமணியன், திரு. சின்னசேலம் மா.—தொடர்ச்சி.**

கள்ளக்குறிச்சி-தியாகதுருகம், பேருந்து வசதி 94

சென்னை, மினி சூப்பர் மார்க்கெட்டுகள் 129

தலைமைச் செயலகத்தில் உடல் ஊனமுற்றோருக்கு கெசடட் பதவிகள் 44

நாகலூர், சிறிய தியணைப்பு நிலையம் அமைத்தல் 685

நூலகங்கள், விவரம் 684

மகளிர் கூட்டுறவு பண்டகசாலைகள் 83

வேலை நிதித் திட்டத்தின்கீழ் பணிபுரிவோர் 273—274

**சுப்பிரமணியன், திரு. வ. மு.—**

திருப்புவனம் காவல் நிலைய சாகம், பிரித்தல் 34

திருப்புவனம் பேரூராட்சி, குடிநீர் வசதி 15

மதிப்பீட்டுக் குழு, கால்நடை வளர்ப்புத் துறைபற்றிய அறிக்கை அளித்தல் 454

**சுப்பு, திரு. க.—**

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 463—464, 469, 473—474, 476, 477, 478, 484—485, 487, 488, 502, 503, 518, 528

பெரும்பான்மைப் பிரச்னை, எடுத்துக் கொள்ளாதது குறித்து (த.கோ.) 136, 138,

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுப்பு திரு. க.—தொடர்ச்சி.

சட்ட முன்வடிவுகள்—

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 — 795, 796

காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979 — 727, 728—731, 732—733, 734, 735, 736—737, 738, 744, 745, 781, 782, 783—784

குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு, 1979 — 784—785, 785—787, 789

சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 151—152, 153, 160, [illegible]

சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 172—173, 173—174, 177, 178,

சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 216—217, 217—218, 219,





பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979 — 143—145, 148

பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 192—193

திருச்சி விற்பனைக் குழுச் செயலாளர் மீது குற்றச் சாட்டுகள் — 272

'நீதியின் குரல்' பத்திரிகை சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெறாதது குறித்து (த.நோ.) — 437—438

வானொலி நிலையத்தின் மீது (உ.பி.) — 711—713

சுவாமிதாஸ், திரு. அ.—

கன்னியாகுமரி மாவட்டம், ரப்பர் தொழிற்சாலை — 10

சுற்றுலா—

நெல்லை-குமரி தேசிய நெடுஞ்சாலை, சுற்றுலா விடுதிகள் — 128

மருதமலை, சுற்றுலா மையமாக்குதல் — 683

வடுவூர் பகுதி, தஞ்சை மாவட்டம் — 121

செங்கோடன், திரு. கா.—

கோழி வளர்ப்புத் தொழில் மின்கட்டணச் சலுகை — 668

சென்னை சட்டக் கல்லூரி நூலகம், புதிய கட்டிடம் கட்டுதல் — 594

செல்லப்பா, திரு. அ.—

தஞ்சை, அன்னப்பன்பேட்டை—காம்பை, சாலையைச் சீர் படுத்தல் — 98

தஞ்சை, சோழன் பணிமனை, பேருந்துகளுக்கான இட வசதி — 64

பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 200

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

**செல்வராஜ், திரு. சி.—**

என். எஸ். கே. நகர், மதுரை, நியாய விலைக் கடை — 693

சமயநல்லூர் தொகுதி—

புதுப்பட்டி தொழுநோய் மருத்துவ மனை — 93

மனைப்பட்டா வழங்கல் — 698

விளாங்குடி உள்கடை, அண்ணா நகர், குடியிருப்போருக்கு மனைப் பட்டா — 699

மதுரை, அண்ணா நகர் பகுதியில் கழிவுநீர் அகற்று வசதிகள் — 297

வைகை அணைக் கால்'வாய்கள், சிமெண்ட் சிலாப்புகள் பதித்தல் — 103

**சேதுராம், திரு. பண்ணை கே.—**

'நீதியின் குரல்' பத்திரிகை சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெறாதது (த. கோ.) — 437—438

முல்லைப் பெரியாறு (தேக்கடி) அணை, அபாய நிலைமை (க.ஈ.) — 452

**சோமசுந்தரம், திரு. எஸ். டி.—**

ஆந்திரா நிலவரி விதிப்பு (தாப்படுத்துதல்) ரத்துச் சட்ட. முன்வடிவு, 1979 — 804

குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு, 1979 — 314. 785, 791—794, 794—795

கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 795



பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

**சோமசுந்தரம், திரு. எஸ். டி.—தொடர்ச்சி.**

சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 216, 218, 219, 220—221

நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 518, 519

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 204, 210—211, 212, 213, 214—215,

பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 191, 200—201

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 179, 184—185, 186

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைகாரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 186, 189—190, 191

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—தொடர்ச்சி.

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1979 — 518

சௌந்திரராசன், திரு. கே.—

திருச்சி, குடிசைப் பகுதிகள், மாற்றம் — 93

த

தகவல் கோரல்—

அசெம்பிளி அலுவலர்களுக்கு "பாஸ்" வழங்கல் — 709

'இந்தியா டுடே' பத்திரிகை மீது கொடுத்த உரிமைப் பிரச்சினை — 709

உரிமைப் பிரச்சினை, எடுத்துக் கொள்ளாதது — 138—139

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் — 310—311, 709

பேரவை அலுவல் — 509—510

தமிழரசன், திரு. இ.—

ஏலகிரி-ஜவ்வாது மலைப் பகுதியில் சந்தன தொழிற்சாலை — 283—284

பேரணாம்பட்டு, தோல் பொருள் தொழிற்சாலை — 63

மருத்துவக் கல்வி, அரிசனங்களுக்கு இட ஒதுக்கீடு — 62

தலைவர்—

அறிவிப்புகள்—

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது — 506

பேரவையின் அலுவல் — 505, 777—778



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

உரிமைப் பிரச்சினைகள்—

தொலைக் காட்சி நிலையத்தின் மீது—

பேரவை நிகழ்ச்சிகள் சம்பந்தமான செய்திகளை சென்னை தொலைக்காட்சி நிலையம் பாரபட்சமாக வெளியிடுவது உரிமை மீறிய செயலாகும் என 7—11—1979 அன்று ஓர் உறுப்பினர் உரிமைப்பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

இப்பிரச்சினை குறித்து தொலைக்காட்சி இயக்குநரிடமிருந்து வந்துள்ள விளக்கத்தையும், உறுப்பினர் கூறியதையும் ஆய்ந்து பிறகு தீர்ப்புக் கூறுவதாகத் தலைவர் குறிப்புரைத்தார். * — 742

போலீஸ் கமிஷனர் மீது—

பேரவை நடந்து கொண்டிருக்கும்போது அரசின் கொள்கை குறித்த ஓர் அறிவிப்பை போலீஸ் கமிஷனர் பத்திரிகைகளுக்கு அளித்துள்ளது பேரவை உரிமையை மீறிய செயலாகும் என ஓர் உறுப்பினர் 7—11—1979-இல் உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். பேரவை முன்னவர் விளக்கம் அளித்தார். தலைவர் தமது தீர்ப்பைப் பின்னர் வழங்குவதாகக் குறிப்புரைத்தார். — 717

(* 9—11—1979 அன்று தீர்ப்பு வழங்கப் பெற்றது)

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

வானொலி நிலையத்தின் மீது—

வானொலியில் பேரவை நிகழ்ச்சிகள் ஒலி பரப்பப் படுவதில் சில நிகழ்ச்சிகள் விடப்பட்டுள்ளது அவை உரிமை மீறிய செயலாகும் என 7—11—1979-ல் ஓர் உறுப்பினர் உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

" மாண்புமிகு உறுப்பினர் கூறியதையும் வானொலி நிலையத்தார் அளித்துள்ள விளக்கத்தையும் ஆய்ந்து என் தீர்ப்பைப் பின்னர் வழங்குகிறேன் " * எனத் தலைவர் குறிப்புரைத்தார் 713

ஒழுங்கு முறை—

அடுத்த மூலக் கேள்விக்குப் போய்விட்ட பிறகு, முதல் மூலக் கேள்வியில் துணை வினா கேட்க அனுமதிக்க முடியாது (து.வி.) 618

அமைச்சர் பதிலளித்துக் கொண்டிருக்கும்போது உறுப் பினர்கள் இடையில் குறுக்கிடாது கடைசியில் விளக்கம் கேட்பது நல்லது (வி.) 779

உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசுதல் கூடாது உட்கார்ந்து கொண்டு பேசினால் பதிவாகாது (வி.வி.) 595

உறுப்பினர்கள் 41, 42 விதிகளின்கீழ் கொடுத்த தீர்மானங் களின் நிலை பற்றி அறையிலே வந்து கேட்க வேண்டுமே தவிர அவையிலே கேட்கக் கூடாது (தீ.) 716

* 9—11—1979 அன்று தீர்ப்பு அளிக்கப் பெற்றது.



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்கு முறைகள்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினையை அனுமதிக்க வேண்டியது பேரவைத் தலைவரே தவிர, இன்னொரு உறுப்பினர் சுட்டிக்காட்டுவதன் பேரில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப ஓர் உறுப்பினருக்கு அனுமதி தரப்படுவ தில்லை. 770

பேரவைத் தலைவரை மிரட்டி நேரம் வாங்க முடியாது. பேரவைத் தலைவரிடம் மரியாதையுடன் பேசுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும் 770

ஒழுங்குப் பிரச்சினை—

ஒழுங்குப் பிரச்சினை என்று கூறி ஏற்கனவே சொன்ன கருத்துக்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. 757

கோப்புகளைப் பார்வையிடல்—

குறிப்பிட்ட கோப்பிலிருந்து முதலமைச்சர் படித்த நேரத்தில் கோப்பைப் பார்க்க வேண்டுமென்று கேட்காது பின்னர் அதைப் பார்க்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இப் போதுதான் அந்தக் கோரிக்கை பேரவைத் தலை வருடைய கவனத்திற்கு வந்திருக்கிறது (வி.) 663—564

சட்ட முன்வடிவு—

சட்ட முன்வடிவின் மீது கருத்தறிவிக்க ஒவ்வொரு உறுப் பினருக்கும் உரிமை இருக்கிறது என்றாலும் நேரத்தைக் கருதி கட்சிக்கு ஒருவர் சுருக்கமாகக் கருத்துக்களைக் கூறி சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றுவது மரபாக இருந்து வருகிறது. உறுப்பினர்கள் அந்த வகையில் ஒத்துழைக்க வேண்டும் (ச.மு.) 159

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

**தகவல் கோரல்—**

**உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை என்னவாயிற்று என்று கேட்கலாமே தவிர. உடனே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவது கூடாது** 436—438

உறுப்பினர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளாதது குறித்து தகவல் கோரி கேள்வி நேரம் முடிந்தவுடனே பிரச்சினையை எழுப்பியிருக்க வேண்டுமே தவிர, கேள்வி நேரம் முடிந்து கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் பெற்று முடிந்த பிறகு எழுப்புதல் கூடாது (உ.பி.) 136—140

**நடைமுறை—**

எல்லா நேரத்திலும் எல்லா அமைச்சர்களும் அவையில் இருந்துதான் ஆகவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. எந்த அமைச்சரும் இன்னொரு அமைச்சரின் பெயரிலுள்ள சட்ட முன்வடிவை முன் மொழியலாம் 738

கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீதான அறிக்கை நீண்டதாக இருப்பின் அது அவை மேஜை மீது வைக்கப்பெற்று அதன் பேரில் விளக்கங்கள் கேட்கும் முறை ஏற்கனவே கடைப்பிடிக்கப் பெற்றிருக்கிறது என்றும், அந்த முறை தொடர்ந்து கடைப்பிடிக்கப் பெறலாம் என்றும் தலைவர் கூறினார் (க.ஈ.) 444—453

**பேசும் முறை—**

பேரவைத் தலைவரின் அனுமதி இல்லாமல் எழுந்து பேசுதல் கூடாது. (வி) 868

**விவாதம்—**

அவையில் விவாதத்திலுள்ள பொருளையொட்டிப் பேச வேண்டும் 760





பக்கங்கள்

த—தொடர்ச்சி.

**தலைவர்—தொடர்ச்சி.**

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

**விவாதம்—தொடர்ச்சி.**

உறுப்பினர் கண்ணியத்தோடு பேசவேண்டும் 775

சட்ட முன்வடிவின் வரம்புக்கு உட்பட்டு உறுப்பினர்கள் கருத்தறிவிக்க வேண்டும் 747, 748, 749, 753

**வினாக்கள்-விடைகள்—**

கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது (து.வி.) 596

தகவல்களைப் பெறுகின்ற வகையில் கேள்விகள் அமைய வேண்டுமே தவிர அரசைப் பயமுறுத்துவதாக இருத்தல் கூடாது (து.வி.) 24

மூலக் கேள்வியை ஒட்டியதாக இருத்தல் வேண்டும். (து.வி.) 580, 593

**வினாக்கள் விடைகளுக்கென தனியாக நாட்களை ஒதுக்கி பதில்கள் வரப்பெற்ற வினாக்கள் முழுவதையும் எடுத்துக் கொள்ளும் முறை கிடையாது எனவும், எடுத்துக் கொள்ளப்பெற்ற வினாக்கள் தவிர மற்றவை அச்சடித்து அனுப்பி வைக்கப்பெறும் எனவும் தலைவர் குறிப்புரைத்தார்.** 311

**தனசேகரன், திரு. ந.—**

**அரசு கையிருப்பிலுள்ள அரிசி.** 398—408

**சால்ட் கார்ப்பரேஷன்.** 54

**தாமரைக்கனி, திரு. இரா.—**

**அரிசன நலத் துறைப்பள்ளிகள், கல்வித் துறைக்கு ஒப்படைத்தல்** 425—428

**திருத்தங்கல் நாராயண பெருமாள் கோவில், நிலங்கள்.** 641

**திருவில்லிபுத்தூர்—**

**உச்சவரம்பின்கீழ் எடுக்கப்பட்ட நிலம்** 69

**டோபிகானா.** 83

**வீட்டு மனைகள்.** 69

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தாமரைக்கனி, திரு. இரா.—தொடர்ச்சி.

படிக்காசுவைத்தான் பட்டி, குயவர்களுக்கு தொழிற்கூடத்திற்கு நிலம். 650

பிளவக்கல் அணை, திட்டச் செலவு. 61

மம்சாபுரம்—

குடிநீர் வசதி. 82

டோபிகானா கட்டுதல். 651

பொதுக்கிணறு, குறவர் தண்ணீர் எடுக்க மறுப்பு. 621

மதுரை பால்வள நிறுவனம். பாலித்தீன் பைகள் வாங்கிய விவரம். 642

முகவை மாவட்டம், முடமானவர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள் அளித்தல். 70

விவசாய வருமான வரி. 59

தியாகிகள்—

உதவித் தொகை. 32—34

திருவேங்கடம், திரு. பெ. சு.—

ஆனந்தல் அரிசன காலனி, தெருவிளக்குகள். 116

இனாம் காரியந்தல் அரிசன காலனி, நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல் 39

ஈச்சங்கோட்டை, உயரின கால்நடை வளர்ச்சிப் பண்ணை, மத்திய அரசு உதவி. 690

அரிசன காலனி, மாற்று இடம், ஏலத்தூர். 96

ஏலகிரி, சவ்வாது மலை வளர்ச்சித் திட்டம். 84

கடலாடி ஊராட்சி—

அரிசன காலனி குடி தண்ணீர் தட்டுப்பாடு. 671

கடலாடி ஊராட்சி, தெரு விளக்குகள் 86



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

திருவேங்கடம், திரு. பெ. சு.—தொடர்ச்சி.

கருந்துவாம்பாடி—பெரிய இளாம்பாடி சாலை, கப்பி போடுதல். 67

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை, சாலை நிதி 96

திருவண்ணாமலை—

அடகுக் கடைக்காரர்கள். 590

மருத்துவ மனை, நாய்க்கடி மருந்து இல்லாமை. 593

போளூர் நிலவள வங்கி, கடன் கட்டாத விவசாயிகளின் நிலத்தை ஏலம் எடுப்பது. 671

மண்ணெண்ணெய் தமிழ் நாட்டுக்கு அதிக ஒதுக்கீடு 692

மின் வாரியம், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் பெற்றுள்ள கடன் 2

வட ஆண்டாப்பட்டு அரிசனங்கள், வீட்டுமனை. 118

வட ஆற்காடு மாவட்டம்—உயர்நிலைப்பள்ளி கட்டிடங்கள் பழுது பார்த்தல். 73

வட ஆற்காடு மாவட்டம், கால்நடைப் பட்டிகள். 85

வட ஆற்காடு மாவட்டம், சலவை, முடி திருத்தும் தொழிலாளர்கள், தொழிற் கருவி வழங்கல் 691

வட ஆற்காடு மாவட்டம், புதிய மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் வழக்குகள் தொடரப்பட்டோர் விவரம் 636

வட ஆற்காடு மாவட்ட விநியோக விற்பனை சங்கம், பழச் சாறு தயாரிக்கும் நிலையம். 691

த—தொடர்ச்சி.


திருவேங்கடம், திரு. பெ. சு.—தொடர்ச்சி.

விவசாயம், புதிய மின் இணைப்பு. 65

ஜவ்வாது மலைப் பகுதி, தொழிற் பயிற்சி பள்ளி ஆரம்பித்தல். 613

திரைப்படங்கள்—

பரிசு பெற்றவை, 1978-79, விவரம். 678

தீண்டாமை—

ஒழிப்பு, பதிவு செய்யப்பட்ட வழக்குகள். 698

குற்றங்கள், கைதானவர் விவரம். 619—620

தீயணைப்பு—

குளித்தலையில் நிலையம் அமைத்தல். 75

நாகலூர், சிறிய நிலையம், அமைத்தல். 685

தீர்மானங்கள்—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம். 315—391, 456—515, 519

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை. 506—508

விதி 22-ஐத் தளர்த்தல். 508

துரை முத்துசாமி, திரு—

எமனேரி, பாசனப் பகுதி, வரி உயர்வு. 672

கல்வராயன் மலைப்பகுதி, மின்சாரம். 119

சங்கராபுரம் அரசினர் பொது மருத்துவ மனை, படுக்கை வசதி. 67[illegible]






த—தொடர்ச்சி.


துரைமுத்துசாமி, திரு.—தொடர்ச்சி.

தென் ஆற்காடு மாவட்டம், பாறை உடைக்கும் கருவிகள். 132

உயர்நிலைப் பள்ளி கட்டிடம், பெண்ணாடம். 52

துரைமுருகன், திரு.—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 493, 494, 504, 550, 551, 552, 504, 508

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித்துறைகள்) திருத்த சட்ட முன்வடிவு, 1979. 797, 798

காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979. 741—742, 756, 758, 766, 770, 771—772, 773, 774, 775, 776

சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1979. 164—166, 168, 176

திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு, 1979. 799—801, 802—803

துலுக்காணம், திரு. வ.—

ஏரிகள், சீரமைப்புப் பணி. 65

பிடாகம் கிராம மணியம் மீது புகார். 279

விருத்தாசலம் வட்டம், நல்லூர் மாணவர் விடுதி. 67

**பக்கங்கள்**

**த—தொடர்ச்சி.**

**தொல்பொருள்—**

திருவண்ணாமலை, ஆராய்ச்சி. 591—594

**தொழிலாளர்கள்—**

செயற்கை வைரத் தொழிலாளர்கள், குறைந்த அளவு ஊதியம். 419—422

திரை அரங்குகளில் பணியாற்றுவோர், படிகள் வழங்குதல். 422—425

மட்பாண்ட தொழிலாளர்கள், குடியிருப்பு மனை நிலம் 644

வட ஆற்காடு மாவட்டம்—

சலவை, முடிதிருத்தும் தொழிலாளர்கள் தொழிற் கருவி வழங்கல் 691—692

மண்பாண்டம் செய்கிறவர்களுக்கு தொழிற் கருவிகள் வழங்கல் 677

**தொழிற்சாலைகள்—**

அம்பாசமுத்திரம் தீப்பெட்டித் தொழிற்சாலை 132

அரக்கோணம் இரும்பு எஃகு உருக்குத் தொழிற்சாலை, பில்லட் உருக்கு வார்ப்பட உற்பத்தி. 37—38

உடையார்பாளையம் பகுதி, காகிதத் தொழிற்சாலை 68

ஏலகிரி சந்தன மலைப் பகுதியில் சந்தனத் தொழிற்சாலை. 283—287

கன்னியாகுமரி மாவட்டம், ரப்பர் தொழிற்சாலை. 10

சிங்கம்புணரி என்பீல்டு தொழிற்சாலை . 269—271

சேலம், சந்தனத் தொழிற்சாலை நிறுவுதல். 658

டான்சி, தேக்கப்பட்டுள்ள உபரிப் பொருட்கள் விவரம். 707—708

தஞ்சை மாவட்டம் தீப்பெட்டி தொழிற்சாலை 123





**பக்கங்கள்**

**த—தொடர்ச்சி.**

**தொழிற்சாலைகள்—தொடர்ச்சி.**

திருச்செந்தூர், பதனீரிலிருந்து துணைப் பொருட்கள் தயாரிப்பு. 86—87

நீலகிரியில் கற்பூர தைலம் தொழிற்சாலை 25—27

போணாம்பட்டு தோல் பொருள் தொழிற்சாலை. 63

வட ஆற்காடு மாவட்டம், நீலகிரி தைலம் தயாரித்தல், துவங்க திட்டம். 689

**தொழிற் பயிற்சி நிலையங்கள்—**

அரசினர், டி. வி. வசதி.

தப்பலூரில் ஏற்படுத்துதல்.

சிவகாசி அச்சுக் கலை பிரிவுகள் துவக்கல். 696

சென்னை, முதல்வர் பதவி. 120

தாம்பரத்தில் ஏற்படுத்துதல்.

திருவான்மியூர், மாணவர் விடுதி கட்டுதல்

திருவான்மியூர், முதல்வர் பதவி. [illegible]

மகளிர் கட்டிடம் கட்டுதல்.

மகளிர், விவரம்.

மேட்டூர் அணை, எலக்டிரானிக்ஸ் பிரிவு தொடக்கம் குறித்து. 674

விருதுநகர், தீப்பெட்டி தொழில் பயிற்சி கற்றுக் கொடுத்தல். 674—675

**ந.**

**நடராசன், திரு. ஆ.—**

கந்தேகவுண்டன் சாவடி, கால்நடை மருந்தகக் கட்டிடம். 88

குட்டிக் கவுண்டன்பதி கிராமம், குடிநீர் விநியோகம் 662

குடும்பப்பாளையம் உயர்நிலைப் பள்ளி, பொது மக்கள் செலுத்திய தொகை. 604

நதொடர்ச்சி.

நடராசன், திரு. ஆ.—தொடர்ச்சி.

குறிச்சி பேரூராட்சி அரிசனங்கள், பட்டா வழங்கல். 87, 88

குறிச்சி பேரூராட்சி, கணேசபுரம், புறம்போக்கு நிலம் 91

குனியமுத்தூர் பேரூராட்சி—

அரிசனங்களுக்கு வீட்டுமனை 90

குளத்துப்பாளையம் கிராம விவசாயிகள் 76

பீடித் தொழிலாளர்கள், வீட்டுவசதி 597

கொமரபாளையம் கிராமம், வீட்டுமனைப்பட்டா 76

கோவை மாவட்டம்—

கோவை பொதுப்பணித் துறை சுற்றுலா மாளிகை, தொலைபேசிச் செலவு 61

முதியோர் ஓய்வூதியம் 60

விதவைகள் உதவித் தொகை 61

சிறநாயக்கண் பாளையம், கிருஷ்ணம்பதி ஏரி பள்ளம், தடுப்பு நடவடிக்கை 657

சிறநாயக்கன்பாளையம், தாய்-சேய் நல விடுதிக் கட்டிடம், பழுது 64

நடராசன், திரு. ஆ.—

செட்டிபாளையம் நியூடவுன், ஆரம்பப்பள்ளி துவக்கல் 662

புளியம்பட்டி, விஜயேஸ்வரி பஞ்சாலை கூட்டுறவு பண்டக சாலை 110

பேரூர் ஒன்றியம் அரிசனங்கள் வீட்டு மனை 89





நதொடர்ச்சி

நடராசன், திரு. ஆ.—

மதுக்கரை ஒன்றியம்—

அரிசனங்கள், வீட்டு மனை 89, 90

ஒக்கிலிபாளையம்-மனுமச்சம்பட்டி பாதை, செப்பனிடல் 89

கண்மைநாயக்கனூர் அரிசனங்கள், வீட்டுமனை 89

"கல்வெர்ட்" உடைப்பு 102

சாலை செப்பனிடும் திட்டம் 694

மீனாட்சிபுரம் அரிசனப் பகுதி, சுடுகாடு 92

நல்லதம்பி, திரு. ஈ. சு.—

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது குறித்து நடவடிக்கை (தீ) 508

நல்வாழ்வு—

சென்னை கடற்கரை, அசுத்தம் செய்வோர் மீது நடவடிக்கை 45

தகரக் குப்பம், எலியொழிப்பு 701—702

மதுரை அண்ணா நகர்ப் பகுதி, கழிவு நீரகற்றல் 237

மேட்டுபாளையம், பொதுக் கழிப்பிடங்கள் 76

நாராயணசாமி, திரு. கே.—

காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979 454, 727—728, 733, 734, 735, 778—779, 780—781, 782, 784

நாராயணசாமி, திரு. கே.—

சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 150—151.

153

159—160

160—161

162

சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 168, 173

174—177

தமிழ்நாடு பரிசுச் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 215

நியாய விலைக் கடைகள்—

மதுரை என். எஸ். கே. நகர் 693

மாவட்டவாரியாக விவரம் 627—629

நிலங்கள்—

இராமநாதபுரம் மாவட்டம், புறம்போக்கு, விவசாயிகளுக்கு ஒதுக்கீடு 5—7

உப்பளம், விவரங்கள் 57—58

காவேரிப்பட்டினம், முருக்கல்நத்தம் பகுதி அரிசன மக்களுக்கு பட்டா (க.ஈ.) 441—444

குறிச்சி பேரூராட்சி, கணேசபுரம், புறம்போக்கு 51

கூடலூர், ஜென்மி பூமி ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வருபவை 74

கொமரபாளையம் கிராமம், வீட்டுமனைப்பட்டா 76—77

சமயநல்லூர் தொகுதி, மனைப்பட்டா 690









நிலங்கள்—தொடர்ச்சி.

சமயநல்லூர் தொகுதி—விளாங்குடி உள்கடை அண்ணா நகர் குடியிருப்போருக்கு மனைப் பட்டா வழங்கல் 692

செங்கம், திருவண்ணாமலை, மனைப் பட்டாக்கள் 688—689

தஞ்சை மண்பாண்டத் தொழிலாளர்கள், ஒதுக்கப்பெற்றவை 645

திருத்தங்கல், நாராயணப் பெருமாள் கோயில் 641—642

திருவில்லிப்புத்தூர் தொகுதி, உச்சவரம்பின்கீழ் எடுக்கப் பட்ட நிலம் 69

பவானிசாகர், தரிசு 104

பூமிதான இயக்கம், இடைத்தவை 640

மணிமுத்தாறு நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் எடுக்கப் பெற்றவை 302—304

மதுரை மாவட்டம் சாப்டூரில் உள்ள தோப்புகள், நில உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு 7—9

நினைவாலயம்—.

சுப்பிரமண்ய சிவாவிற்கு 586—589

நீதிமன்றங்கள்—

சிறப்பு மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் 53

சென்னை மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள், சிற்றுண்டி அறைகள் 130

வழக்குகள், பைசலாகாமல் உள்ளவை 625

[illegible] பக்கங்கள்

நீ—தொடர்ச்சி.


நீர்ப்பாசனம்—

ஆண்டியப்பனூர், பாலாற்றின் குறுக்கே அணை 53

ஏரிகள் சீரமைப்புப் பணி 65—66

கல்நாட்டுப்புசார் கிராமம், புதிய ஏரி கட்டுதல் 695

கலவரப்பள்ளி (கடவரஹல்லி) அணைக்கட்டு, ஈழம் ஏரி 120

காட்டுமன்னார்கோயில், நகரபாடி ஏரி 125

காவேரிப்பட்டினம் தென்பெண்ணை ஆற்றிலிருந்து பாசன வசதி 431—432

கிருஷ்ணகிரி அணையிலிருந்து தண்ணீர் 71

கோயில்மலையனூர் அணைத்திட்டம் 22—25

சாணார்ப்பட்டிப் பகுதி 602

சிதம்பரம் வட்டம், சின்ன பாண்டியன் ஏரி 125—126

சிரநாயக்கன்பாளையம், கிருஷ்ணாம்பதி ஏரி பள்ளம், தடுப்பு நடவடிக்கை 77

சேந்தமங்கலம், குட்டைகள், ஏரிகள் 92—93

சேலம் மாவட்டம்—

ஆத்தூர் தொகுதி, சீலியப்பட்டிபுதூர் ஏரி 114—115

கந்தசாமிபுதூர் ஏரி 113

கல்பகனூர், 'ஆனைவாரி' ஏரி 114

கல்பகனூர், வசிஷ்ட நதி குறுக்கே அணை 115

ராமநாய்க்கன்பாளையம் ஏரி 114

தர்மபுரி மாவட்டம், வேப்பம்பட்டியருகில் பாசன ஏரி 71

தென்னாற்காடு மாவட்டம்—

கடலில் சேரும் நீர் 639—640

பெருமாள் ஏரி 110, 111




பக்கங்கள்

நீ—தொடர்ச்சி.


நீர்ப்பாசனம்—தொடர்ச்சி.

தேனி தொகுதி, இளை வாய்க்கால் திட்டம் 573

நெல்லை மாவட்டம், சடையனேரி கண்மாய் பாசன வசதி 86

திருச்செந்தூர் தாலுக்கா, பள்ளிப்பத்து கிராமம் நெ.மா. 104

நெல்லை மாவட்டம், துலுக்கர்பட்டி 128

பார்க்க—ஆறுகள்.

பிளைக்கல் அணை, திட்டச் செலவு 61—62

பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், பாசன வசதி 602

பெத்தல காட்டூர் ஏரி, நிதி ஒதுக்கீடு 304—305

பெரியகுளம் ஏரி, உக்கடம், தூர் எடுத்தல் 687

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 486,549,567

உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொள்வது குறித்து (த.கோ) 436,437

சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் மீது (உ.பி) 717—719

முல்லைப் பெரியாறு அணைக்கட்டு (தேக்கடி), அபாய நிலைமை (க. ஈ.). 444—453

லால்பேட்டை வாய்க்கால், புனரமைப்பு 111

வட ஆற்காடு மாவட்டம், மண்டலநயனகுண்டா புது ஏரி 126—127

விழுப்புரம் வட்டம், கல்பட்டு ஏரி, பாசன வசதி. 101—102

விளாத்திகுளம் தொகுதி—

நீர்ப்பாசனக் குளங்கள். 112

புதிய கால்வாய் அமைப்பு. 112

வேப்பன்தட்டை, புதுகுளம் கட்ட கோரிக்கை 682—683

வேப்பூர் ஊராட்சி ஒன்றியம், புதிய ஏரி அமைத்தல் 26

வைகை துணைக் கால்வாய்கள், சிமெண்ட் சிலாப்புகள் பதித்தல் 103

பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

**நூல்கள்—**

மொழிபெயர்ப்பு, குழு அமைப்பு. 409—414

**நூலகங்கள்—**

இராஜாஜி நினைவு, இண்டி, மதிப்பீடு. 688

சட்டக் கல்லூரி, புதிய கட்டிடம் கட்டுதல். 594

விவரம் 664—686

**நோய்கள்—**

காலரா, சென்னை நகரில் பாதிக்கப்பட்டவர்கள் 638

**ப.**

**பட்டு உற்பத்தி—**

தர்மபுரி மாவட்டம். 55

பட்டுப்புழு வளர்ப்பு, பயிற்சி 107

பட்டுப்புழு வளர்ப்பு, முசுக்கொட்டை செடிகள் 108

**பண்ணை(கள்)—**

மூலிகை, கொல்லி மலை, மதுரைப் பல்கலைக் கழக வளைவு, ஆண்டு வருமானம், விவரம். 668

மூலிகை, வீரப்புலி சேமக்காடு (கன்னியாகுமரி மாவட்டம்), ஆண்டு வருமானம். 668

**பயணிகள் விடுதிகள்—**

கோவை பொதுப் பணித் துறை சுற்றுலா மாளிகை, தொலை பேசி செலவு 61

மாயூரம் ஓய்வு இல்லம். 61

**பரமசிவம், திரு. மொ.—**

வாலூர் ஒன்றியம்—

அரிசன சிறு விவசாயிகள், வழங்கப்பட்ட உரம் 694

பிரித்தமைத்தல் [illegible]





பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

**பல்கலைக் கழகம்—**

வேளாண்மை, இணைக்கப்பட்ட நிறுவனங்கள். 700

**பழனிசாமி, திரு. சு.—**

சிறுமுகை பஞ்சாயத்து, குடிநீர் பாதிப்பு. 19—20

மேட்டுப்பாளையம், நகராட்சிப் பள்ளிகள், சொந்தக் கட்டிடங்கள் 75

மேட்டுப்பாளையம், பொதுக் கழிப்பிடங்கள் 76

**பழனிச்சாமி திரு. செ. ந.—**

அவினாசி தொகுதி, அரிசனங்களுக்கு வீட்டு வசதி. 43

கையாடல், கிராம அதிகாரிகள் கைது. 81

**பழனிமுத்து, திரு. சி.—**

சேலம் மாவட்டம்—

ஆத்தூர் தொகுதி, சிலியப்பட்டிபுதூர் ஏரி 114

கந்தசாமிபுதூர் ஏரி 115

கல்பகனூர் 'ஆனைவாரி' ஏரி 114

கல்பகனூர் வசிஷ்ட நதி அணை 115

ராமநாயக்கன்பாளையம் ஏரி 114

பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், பாசன வசதி 602

**பழனிவேல், திரு. என்.—**

அரிசனங்களுக்குத் திருமணம், மானியம். 74

ஊராட்சி, பேரூராட்சி அலுவலகக் கட்டிடங்கள் சொந்தமாகக் கட்ட அரசுதவி. 685

கூட்டுறவுச் சங்கங்கள், கணக்குகள் தணிக்கைக்கு தனி அமைப்பு ஏற்படுத்துதல். 575

ப—தொடர்ச்சி.


பழனிவேல், திரு. என்.—தொடர்ச்சி.

பழனி—

அரசினர் மருத்துவ மனை, குழந்தைகள் பிரிவிற்கு தனி மருத்துவர். 635

அரசினர் மருத்துவ மனை, படுக்கைகள். 675

கோவில், வழிகாட்டிகளுக்கு அடையாள கார்டு 641

வட்டம், ஆயக்குடியில் உயர்நிலைப் பள்ளி துவங்குதல் 680

மதுரை மாவட்டம், கதர் விற்பனை நிலையங்கள். 697

பள்ளிகளும், கல்லூரிகளும்—

ஆசிரியர் பயிற்சி பள்ளிகள், தனியார், அரசு பள்ளிகள், விவரம். 697

ஆயக்குடி உயர்நிலைப்பள்ளி. 645—646, 680

குரும்பப்பாளையம் உயர்நிலைப்பள்ளி, பொதுமக்கள் செலுத்திய தொகை. 694—695

கொரட்டி கிராமம், பள்ளிக் கட்டிடம். 681

கோவை, திருச்சி சட்டக் கல்லூரிகள். சேர்க்க இருக்கும் மாணவர்கள் எண்ணிக்கை. 695

சாமக்குளம் யூனியன், வசதிகள். 117

சாமல்பட்டி உயர்நிலைப் பள்ளி கட்டிடம். 416—419

செட்டிபாளையம் ஆரம்பப் பள்ளி, நியூ டவுனில் அவக்கல் 662

டி. வி. புத்தூர் ஆரம்பப் பள்ளி, புதிய கட்டிடம். 686

தனியார் பள்ளிகளது வரன்முறை. 289—290

திருத்தணி பெண்கள் உயர்நிலைப்பள்ளி கட்டிடம் 95






ப—தொடர்ச்சி.


பள்ளிகளும், கல்லூரிகளும்—தொடர்ச்சி.

திருவண்ணாமலை வட்டம், உயர்நிலைப்பள்ளி கட்டிடம், சு. வானவட்டி. 119

நாதார்மடம், குன்னூர், ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றுதல். 641

நீலகிரி, தேவர்சோலை உயர்நிலைப்பள்ளி, கட்டடம். 111

பரங்கிப்பேட்டை ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள் கட்டிடம் இல்லாமை. 631

பவானி வட்டம், ஊமாரெட்டியூர் நடுநிலைப்பள்ளி கட்டிட வசதி. 83—84

பெண்ணாடம் உயர்நிலைப்பள்ளி கட்டிடம். 92

மதிய உணவு மானியம், தலைமை ஆசிரியர் விடுப்பில் இருக்கும்போது உதவி ஆசிரியருக்கு மானியம் மறுக்கப்படுவது குறித்து. 630—631

மாயூரம் நகராட்சிப் பள்ளிகள். 78

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பள்ளிகளும், கல்லூரிகளும்—தொடர்சி.

மேட்டுப்பாளையம் நகராட்சிப் பள்ளிகள், சொந்தக் கட்டிடங்கள். 75

வட ஆற்காடு மாவட்டம்—

உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள், பழுது பார்த்தல். 73

உயர்நிலைப்பள்ளிகளில் வேலை நாட்கள். 288

முதுநிலைச் சீர்திருத்தப் பள்ளிகள். 131

வைகை அணைக்கட்டுப் பகுதி. காட்டிலாகா பயிற்சிப் பள்ளி, உதவித் தொகை. 287

ஜவ்வாது மலைப் பகுதி, தொழிற் பயிற்சி பள்ளி

பாண்டியன், திரு. பி. எச்.—

உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி பதவி ஏற்பு குறித்து (த.கோ.). 438

காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979. 734

பால் வளம்—

சிதம்பரம் பால் பதனிடும் நிலையம். 77

தென்னாற்காடு மாவட்டம், மங்களூரில் பால் குளிர் ஊட்டும் நிலையம். 27—28

மதுரை பால்வள நிறுவனம், பாலித்தீன் பைகள் வாங்கிய விவரம். 642—643

பாலங்கள்—

புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி யூனியன். [illegible]



பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பாலங்கள்—தொடர்ச்சி.

மதுக்கரை ஒன்றியம், "கல்வெர்ட்" உடைப்பு. 102, 103

வட ஆற்காடு மாவட்டம், மிட்டூர்-விளாங்குப்பம், பாம்பு ஆறு பாலம் 94

புத்தகங்கள்—

பதிவு செய்யப்பட்டவை. 113

புருஷோத்தமன், திரு. து.—

குடும்ப நலப் பிரச்சாரம், மத்திய அரசு உதவி. 649

குழந்தைகள் நலத்திட்டம், மத்திய அரசின் மானியம் 683

சென்னை—

அரசு அச்சக ஊழியர்கள். 86

இராஜாஜி நினைவு நூலகம், மதிப்பீடு. 688

கால்நடை மருத்துவ மனைகள். 116

காலரா நோய், பாதிக்கப்பட்டவர்கள் விவரம் 638

சைதை, அரசு பண்ணை, குடி-தண்ணீர் வழங்கல். 649

தண்டையார்பேட்டை தொத்து நோய் மருத்துவ மனை, வேறிடத்திற்கு மாற்றுதல். 603

புத்தகங்கள், பதிவு செய்யப்பட்டவை. 113

மாநில குடும்ப நலத்துறை அச்சகம், நடைபெறும் விவரம். 650

புஷ்பராஜு, திரு. த.—

பாலம்—

புதுக்கோட்டை மாவட்டம் காம்பகுடி யூனியன் 52

கிராம பஞ்சாயத்துக்களில் விளக்குகள் பராமரிப்பு. 291

புதுக்கோட்டை, வல்லத்திராக்கோட்டை பழப்பண்ணை, இலங்கை அகதிகளுக்கு வேலைவாய்ப்பு. 106

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

**பெரியசாமி, திரு. மொ.—**

சிறுபாக்கம் கிராமம், பத்திரப் பதிவாளர் அலுவலகம். 669

தென்னார்க்காடு மாவட்டம் மங்களூரில் பால் குளிர் ஊட்டும் நிலையம். 27

நந்திமங்கலம் அரிசன காலனி, தெரு விளக்குகள். 669

**பெருமாள், திரு. என்.—**

திருச்சி மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியம், புதிய ஏரி அமைத்தல். 25

**பெருமாள், திரு. ரா. கு.—**

திருச்சி, கோவை சட்டக் கல்லூரிகள், மாணவர்கள் எண்ணிக்கை. 695

தொழிற் பயிற்சி நிலையங்கள்—

கப்பலூரில் ஏற்படுத்துதல். 65

சிவகாசி, அச்சுக்கலை பிரிவுகள் துவக்கல். 696

சென்னை, முதல்வர் பதவி 120

டி. வி. வசதி. 654

தாம்பரத்தில் ஏற்படுத்துதல். 652

திருவான்மியூர்—

மாணவர் விடுதி கட்டுதல். 654

முதல்வர் பதவி. 653

மகளிர், கட்டிடம் கட்டுதல். 653

மகளிர், விவரம் 653

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

**பெருமாள், திரு. ரா. கு.—தொடர்ச்சி.**

மேட்டூர் அணை, எலக்ட்ரானிக்ஸ் பிரிவு துவக்கம் குறித்து 674

விருதுநகர், தீப்பெட்டி தொழிற்பயிற்சி கற்றுக் கொடுத்தல். 674

பவானி வட்டம், ஊமாரெட்டியூர் நடுநிலைப்பள்ளி, கட்டிட வசதி. 83

மாணவர் விடுதி, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வானொலி வசதி. 651

விளாத்திகுளம் தொகுதி—

ஆற்றங்கரை அணை, குளங்கள், புதிய கால்வாய் அமைப்பு 112

நீர்ப்பாசனக் குளங்கள். 112

மருத்துவ மனை, பெண் மருத்துவ அதிகாரி. 670

**பொன்னுசாமி, டாக்டர் ஏ.—**

**பொன்னுரங்கம், திரு. ப.—**

பெருந்துறை காச நோய் மருத்துவ மனை, நிதி பற்றாக் குறை 433—434

இலங்கைத் தமிழர்கள், தாயகம் திரும்பல் 610—611

**பொன்னையன், திரு. சி.—**

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 562

**போக்குவரத்து—**

ஆட்டோ ரிக்ஷாக்கள்—

உரிமம் வழங்கப்பட்டவை 643—644

திருப்பத்தூர் 661—662

கரூர்-திருச்சி-சென்னை, விரைவுப் பேருந்து 22

கள்ளக்குறிச்சி-தஞ்சாவூர், பேருந்து வசதி 94

குளத்தூர்பட்டி-சிங்கம்புனரி பேருந்து 299—300

கொல்லம்-தூத்துக்குடி விரைவுப் பேருந்துகள் அதிகரிப்பு 20—22

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

**போக்குவரத்து—தொடர்ச்சி.**

கோத்தகிரி, பேருந்து நிலையம் 599—600

கோவை, போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் சிக்னல்கள் 117—118

சாத்தான்குளம் வழியாக விரைவுப் பேருந்து 300—302

சுங்குவார்சத்திரம், பொதுக் கழிப்பிடம் கட்டுதல் 686

தஞ்சை, சோழன் பணிமனை, பேருந்துகளுக்கான இடவசதி 64

தந்தை பெரியார் கழகம், திருப்பத்தூர் கிளை அலுவலகம் 600—601

திருமுட்டம், விரைவு வண்டி 95

பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகள், தானியங்கிக் கதவுகள் 59

லாரிகள், மஞ்சவர்ணம் பூச கட்டாய உத்திரவு 665

ம

**மண்ணெண்ணெய்—**

தமிழ்நாட்டுக்கு அதிக ஒதுக்கீடு 692

**மணிமாறன், திரு. மா.—**

எடைக் குறைவு. பதிவுசெய்த வழக்குகள் 693

திரைப்படங்கள், பரிசு பெற்றவை, 1978-79 678

நாகை பொது மருத்துவமனை, ஜெனரேட்டர் பொருத்தும் திட்டம் 434—435

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 205—207

பசுக்கள், ஜெர்சி இனம், இறக்குமதி 113

பேரளம், காவல் நிலையம், பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 590



பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

**மதுவிலக்கு—**

பெர்மிட்ஸ், மனுக்கள் 100—101

வட ஆற்காடு மாவட்டம், வழக்குகள் 636—637

**மரம்—**

வளர்ப்பு, கடற்கரைப் பகுதிகள் 687—688

**மருத்துவம்—**

இரத்த தானம் செய்வோர், சான்றிதழ் வழங்கல் 634—635

குழந்தைகள் நலத் திட்டம், ஒருங்கிணைந்தது, மத்திய அரசின் மானியம் 683—684

சிதம்பரம், காவிரிக்கரைப் பகுதி, மூலிகைச் செடிகள் வளர்ப்பு 664

மருத்துவக் கல்வி, அரிசனங்களுக்கு இட ஒதுக்கீடு 62

மருந்தாக்கியல் பட்டப்படிப்பு, மருந்து விற்பனையாளர்கள் பிள்ளைகளுக்கு இட ஒதுக்கம் 434

யுனானி மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு 699—700

**மருத்துவமனைகள்—**

அக்குபங்சர் அறுவை முறை 606—610

அசரிப்பள்ளம் காசநோய் மருத்துவமனை, நோயாளிகள் 630

கடலூர், படுக்கை வசதி 670

கோட்டூர் வட்டாரம் 603

கோவை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மூளை நரம்பியல் பிரிவு 28—29

சங்கராபுரம், படுக்கைகள், அதிகரிக்கும் விவரம் 672

சிதம்பரம், டாக்டர்கள் 51, 678

சிறுநாயக்கன்பாளையம், தாய்-சேய் நல விடுதிக் கட்டிடம், பழுது 64—65

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

மருத்துவமனைகள்—தொடர்ச்சி.

தண்டையார்பேட்டை தொத்துநோய் மருத்துவமனை, வேறிடத்திற்கு மாற்றுதல் 603—606

திருப்பனந்தாள், பெண் டாக்டர் நியமனம் 675

திருமுட்டம். டாக்டர் இல்லாமை 659

திருவண்ணாமலை, நாய்க்கடி மருந்து இல்லாமை 633—634

திருவள்ளூர் காசநோய் மருத்துவமனை நிறுவுதல் 624

தானேரி, மஞ்சூர் மருத்துவ நிலையங்கள் 632

தேனிமலை, திருவண்ணாமலை, மார்பு மருத்துவமனைகள் படுக்கை விவரம் 662

நாகை, ஜெனரேட்டர் பொருத்தும் திட்டம் 434—435

பழனி—

குழந்தைகள் பிரிவுக்கு தனி மருத்துவர் 635

படுக்கை விவரம் 675—676

பாரிச வாயு வியாதி. ஆராய்ச்சி 622—623

பிரிடா மேனியர், மருத்துவர் நியமனம் 621

பெருந்துறை, காசநோய் மருத்துவமனை, நிதிபற்றாக்குறை 433—434

புதுப்பட்டி, தொழுநோய் மருத்துவமனை 93

மாயூரம்—பணிபுரியும் செவிலியர்கள் 647

மாயூரம்—

பணிபுரியும் செவிலியர்கள் 647

பல் டாக்டர் நியமனம் 648

மருந்துகளுக்காக செலவான தொகை 647

வெளிநோயாளிகள் [illegible]



பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

மருத்துவமனைகள்—தொடர்ச்சி.

வட்ட மருத்துவமனைகள், எலும்பு முறிவுப் பிரிவுகள் 648

விளாத்திகுளம், பெண் மருத்துவ அதிகாரி 670

வேலூர், காசநோய் மருத்துவமனை, இரத்த வங்கி, ஆபரேஷன் தியேட்டர் வசதி 29—30

மருதாசலம், திரு. க.—

கோவை, சிந்தாமணி அங்காடி 103

கோவை, மத்திய சிறைச்சாலை மைதானம், அரசு அலுவலகக் கட்டிடம் கட்டுதல் 663

பவானிசாகர், தரிசு நிலங்கள் 104

மருதமலை, சுற்றுலா மையமாக்குதல் 683

மலைப் பகுதிகள்—

ஏலகிரி, ஜவ்வாது மலை வளர்ச்சித் திட்டம், வட ஆற்காடு மாவட்டம் 84

மனோகரன், திரு. இ.—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 565, 568, 569

நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979 140, 146—148, 149

பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 203

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப் பெற்றது குறித்து நடவடிக்கை (நி.) 506, 507

பேரவை அலுவல் (அறிவி.) 505—506

பேரவை அலுவல் (த.கோ.) 510

ம—தொடர்ச்சி.

மனோகரன், திரு. கி.—தொடர்ச்சி.

போலீஸ் கமிஷனர் மீது (உ.பி.) 716—717

விதி 22-ஐத் தளர்த்தல் (தி.) 508

வேலை நிதி ஊழியர்கள் சம்பள விகிதம், துணை வினா (எண் 186) விடை திருத்தம் (அ.) 440

மா.

மாணிக்கம், திரு. சி.—

அரிசன மாணவர் விடுதிகள்—குடியரசுத் தலைவர் ஆட்சியில் கட்டப்பட்டவை 658—659

செயற்கை வைரத் தொழிலாளர்கள், குறைந்த அளவு ஊதியம் 419—422

திருச்சி மாவட்டம்—

காவலர்கள், தாற்காலிக வேலை நீக்கம் 623

காவிரிக்கரைப் பகுதி, சித்த மூலிகைச் செடிகள் வளர்ப்பு 664

மார்க்கபந்து, திரு. ரா.—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 574

ஊசூர்-சிவநாதபுரம் குருமலை சாலை 55

காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979 751—754

கீழ்மணவூர் கிராமம், தடுப்புச் சுவர், பாலாறு 72

கோயில் மலையனூர் அணைத் திட்டம் 22

சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 156—157

சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 169—170

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 209—210

பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 194—196







ம—தொடர்ச்சி.

மாரிமுத்து, திரு. ஏ. ஆர்—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 315—322

ஆண்டியப்பனூர், பாலாற்றின் குறுக்கே அணை 52

சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 153

சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 167

நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979 140—144

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 207—208, 213, 214

பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 193—194

பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 182—188

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 187

[illegible] ஏரி நிதி ஒதுக்கீடு 804

மாவட்ட நிர்வாகம்— 532—533

திருநெல்வேலி மாவட்டம், இரண்டாகப் பிரித்தல் 280—283

பெரியார் மாவட்டம், விவரங்கள் 93

வட ஆற்காடு, கிராமச் சாவடிகள்

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

மின்சாரம்—

கடலாடி ஊராட்சி—தெரு விளக்குகள் 84

கல்வராயன் மலைப்பகுதி 119

குறைவழுத்த மின்பளு பயனீட்டாளர்கள், ஒப்பந்தத்திற்கு அதிகப்படியாக உபயோகிக்கும் மின்சுமை 395—398

கோழிவளர்ப்பு—கட்டணச் சலுகை 668—669

சென்னை, காவலர் குடியிருப்புகள்—கட்டணச் சலுகை 617—618

திருவண்ணாமலை, செங்கம், விவசாயம் மின் இணைப்பு 99

மன்னார்குடி, தாலுகா மின் இணைப்பு 277

மின்வாரியம்—

ஆலந்தூர்—மின்சார ஊழியர்கள் விபத்து 1

எல்.ஐ.சி. நிறுவனத்திடமிருந்து பெற்ற கடன் 3—5

நாட்டறம்பள்ளித் தொகுதியில் பிரிவு அலுவலகங்கள் 394—395

விவசாயம், புதிய மின் இணைப்பு 66

மீனவம்—

மருதாநதி திட்டம், மதுரை மாவட்டம் மின் உற்பத்தி

மூக்கன்கள், எல விவரங்கள் 408—409

முசிறிப்புத்தன், திரு. பி.—

இராமநாதபுரம் மாவட்டம், மழையின்மை, விவசாயிகள் பாதிப்பு, கடன் வசூலை நிறுத்தி வைத்தல் (கு.எ.) 133, 135

முத்துசாமி, திரு. க—

பெரியார் மாவட்டம் 280



பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

முத்துசாமி கவுண்டர், திரு. க—

மணிமுத்தாறு நீர் தேக்கத் திட்டத்தின்கீழ் எடுக்கப் பெற்ற நிலங்கள் 302

முத்தையா திரு. இரா—

உப்பள நிலங்கள், விவரங்கள் 47

மதுரை மாவட்டம் சாப்டூரில் உள்ள தோப்புகள் நில உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு 7

முருகேசன் திரு. கு. ச—

மதிய உணவு மானியம், தலைமை ஆசிரியர் விடுப்பில் இருக்கும்போது மற்ற ஆசிரியருக்கு மானியம் மறுக்கப் படுவது குறித்து 630

ய

யூசப் திரு. யா. சை. மு—

இராதாபுரம் தொகுதியில் அரசு சிறப்பு வகுப்பு அமைத்தல் —விஸ்தரிப்பு 670

சொக்கநாதம்—வெளிஞ்சிபுரம் குடிநீர் வழங்கு திட்டம் 397—398

பாவைக்காரப்பட்டி, நெல்லை மாவட்டம், பாசன குளம் 136

காத்தான்குடியில் எடுக்கப்பட்ட முத்துக்கள், எடை விவரங்கள் 408—409

நெல்லை-குமரி தேசிய நெடுஞ்சாலை, சாலை விதிகள் 120

ர

ரகுமான்கான், திரு. அ—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 486, 540, 567

பணிநீக்கப் பிரச்சினை எடுக்கக் கோரியது குறித்து (ந.கோ.) 436, 437

சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் மீது (உ.பி.) 717—719

பக்கங்கள்

ர—தொடர்ச்சி.


ரகுமான்கான், திரு. அ.—தொடர்ச்சி.

சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 225—227, 229

போலீஸ் கமிஷனர் மீது (உ.பி.) — 713—717

ரகோத்தமன், திரு. வே.—

கல்பட்டு ஊராட்சி, குடிநீர் வசதி — 14

கல்பட்டு ஏரி, பாசன வசதி — 101

ரமணி, திரு. கு.—

காவல்துறை பணிபுரிவோர் — 54

கோவை நகரம், உக்கடத்திலுள்ள பெரியகுளம் ஏரி தூர் எடுத்தல் — 687

சத்தியமங்கலம் வனச் சரகம், சந்தன மரம் ஏலம் — 11

லட்சுமிநாராயணன், திரு. என்.—

மதுரை நகரில் கலைக் கல்லூரிகள் நிறுவ அனுமதி கோரி மனுக்கள் — 411—415


ல


லத்திப், திரு. எம். ஏ.—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் — 534, 531

'இந்தியா டுடே' பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை (த.கோ.) — 709

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாதது குறித்து (ஒ.பி.) — 813—815

காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979 — 761—763, 769, 770, 779—780




பக்கங்கள்

ல—தொடர்ச்சி.


லத்திப், திரு. எம். ஏ.—தொடர்ச்சி.

சட்ட முன்வடிவு, பேசுவதற்கு போதிய அவகாசம் (ஒ.பி.) — 149

சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 154—156, 161—162,

சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 170—172

சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 224—225

பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 197, 198, 199—200

போலை அலுவல் (த.கோ.) — 510

முல்லை பெரியாறு (தேக்கடி) அணை, அபாய நிலைமை (க.ஈ.) — 444—453


வ


வக்ப் போர்டு—

நிர்வாகம் விசாரணை — 305—307

வடிவேல், திரு. கு.—

கரூர், சாலைகள் பழுது பார்த்தல் — 107

கரூர்-திருச்சி-சென்னை, விரைவுப் பேருந்து — 22

லாரிகள், மஞ்சு வர்ணம் பூச கட்டாய உத்தரவு — 665

வரதராஜன், திரு. என்.—

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் — 512

கிராமங்கள், குடிநீர் வசதி — 15

| | பக்கங்கள் |
|---|---|
| **வ—தொடர்ச்சி.** | |
| **வரதராஜன், திரு. என்.—தொடர்ச்சி.** | |
| பரமக்குடி கோட்டத்தில் மராமத்துப் பணிகள் | 393—394 |
| மதுரை மாவட்டம், சிறுமலை, பயிர்கள் சேதம் | 57 |
| **வரிகள்—** | |
| தேசிய மயமாக்கப்பெற்ற வங்கிகள், மோட்டார் வாகனங்களுக்கான வரியை வசூலித்தல் | 131 |
| நகர்ப்புற நிலவரி, விதிவிலக்கு | 50 |
| நிலங்கள், விவசாய வருமான வரி | 59—60 |
| பட்டுக்கோட்டை மற்றும் தஞ்சை வட்டங்கள் வணிக வரி | 79—80 |
| **வாரியங்கள்—** | |
| குடிநீர் வழங்குதல்—வடிகால் வாரியம், கட்டிடம் | |
| சென்னை, குடிசை மாற்று வாரியம் கட்டின புதிய குடியிருப்புகள் | |
| **விடுதிகள்—** | |
| மன்னார்குடி, பாவாக்கோட்டை கிராமம், பிற்பட்ட மாணவர்கள், விடுதி | 106 |
| விருத்தாசலம் வட்டம், நல்லூர், மாணவர் விடுதி | 67 |
| **விபத்துக்கள்—** | |
| சிதம்பரம், தீ விபத்து | 72—73 |
| ஸ்ரீபெரும்புதூர் அருகில், பேருந்து விபத்து | 56 |
| **விறகு—** | |
| குன்னூர், உதகமண்டலம், தட்டுப்பாடு (க.ஈ.) | 723—726 |
| **வி.** | |
| **விஜயராகவன், திரு. பொ.—** | |
| ஆலந்தூர் மின்சார ஊழியர்கள் விபத்து | 1 |
| **சாணார்ப்பட்டிப்பகுதி**, பாலாறு அணைத் திட்டம் | [illegible] |





| | பக்கங்கள் |
|---|---|
| **வி—தொடர்ச்சி.** | |
| **விஜயராகவன், திரு. பொ.—தொடர்ச்சி.** | |
| தீண்டாமை ஒழிப்பு, பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 698 |
| பள்ளிப்பத்து கிராமம், பெட்டைக்குளம் பாசனம் | 104 |
| **வீட்டு வசதி—** | |
| குனியமுத்தூர், பீடித் தொழிலாளர்கள் | 597—599 |
| **வீட்டு மனை—** | |
| தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், வீட்டுமனை, பட்டா | 124—125 |
| திருச்சி, குடிசைமாற்றுத் திட்டம் | 93 |
| திருவில்லிபுத்தூர் தொகுதி, வீட்டுமனை | 69 |
| **வீ.** | |
| **வீரப்பன், திரு. ஆர். எம்.—** | |
| காவேரிப்பட்டினம், முருக்கல் நத்தம் பகுதி அரிசன மக்களுக்கு பட்டா (க.ஈ.அ.) | 441—444 |
| குன்னூரிலும் உதகமண்டலத்திலும் ஏற்பட்டுள்ள கடுமையான விறகுத் தட்டுப்பாடு (க.ஈ.அ.) | 723—726 |
| சட்ட முன்வடிவுகள்— | |
| இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 135, 797—798, 799 |
| காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979 | 732, 733, 737, 738, 744 |
| தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்தம்) சட்ட முன்வடிவு, 1979 | 454 |
| திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 | 140, 801—802 |

பக்கங்கள்

வீ—தொடர்ச்சி.

வீரப்பன், திரு. ஆர். எம்.—தொடர்ச்சி.

மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 ... 455

வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு திரு. ரா.—

கோவை—

போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் சிக்னல்கள் ... 117

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மூளை நரம்பியல் பிரிவு ... 28

சர்க்கார் சாமக்குளம் யூனியன் பள்ளிகள், வசதிகள் ... 117

நஞ்சே கவுண்டன்புதூர், சிங்காநல்லூர் தொகுதி, குடிநீர் கிணறுகள் ... 117

மாங்கரைப்பள்ளம், வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்பது ... 638

வேணுகோபால், திரு. த.—

கல்நாட்டுப் புதூர் கிராமம், புதிய ஏரி கட்டுதல் ... 695

கீழ்நாச்சிப்பட்டுப் பகுதியில் விவசாய கூட்டுறவு நாணயச் சங்கம் ... 278

சு.வானவட்டி உயர்நிலைப்பள்ளி, கட்டடம் ... 119

தண்டராம்பட்டு ஒன்றியம், அரிசனக் காலனிகள்—

சாலை வசதி ... 121

மின் வசதி ... 98

வீட்டு வசதி ... 42, 124

திருவண்ணாமலை—

அம்பர் ராட்டை வழங்கல், வந்த மனுக்கள் ... 676

ஆலயங்களுக்கு நிதி ... 68

தாசில்தார் அலுவலகம், குத்தகை வழக்குகள் முடிவாகாதவை விவரம் ... 677



பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வேணுகோபால், திரு. த.—தொடர்ச்சி.

திருவண்ணாமலை மலை சுற்றும் சாலைப் பகுதி—

தொல் பொருள் ஆய்வு ... 591—592

பர்மா அகதிகள், கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் விவரம் ... 673

பால் கூட்டுறவு சங்கங்கள் ... 100

திருவண்ணாமலை, செங்கம் வட்டங்கள், நிலப்பட்டா வழங்கல் ... 688, 690

திருவண்ணாமலை, செங்கம், விவசாயத்திற்கு மின் இணைப்பு ... 99

தேனி மலை, திருவண்ணாமலை மார்பு மருத்துவமனை படுக்கை விவரம் ... 662

மதுரை ஒலகலப்பாடி இறவை நீர்ப்பாசனம், கூட்டுறவுச் சங்கம் ... 119

வட ஆற்காடு மாவட்டம்—

நீலகிரி தைலத் தொழிற்சாலையமைத்தல் ... 689

மண்பாண்ட தொழில் செய்கிறவர்கள், தொழிற் கருவிகள் வழங்கல் ... 677

முதுநிலைச் சீர்திருத்தப் பள்ளிகள் ... 131

வேலை வாய்ப்பு அலுவலகங்கள், பதிவு செய்துள்ளோர் விவரம் ... 673

வேலுசாமி, திரு. ஓ. சோ.—

தனியார் பள்ளிகளது வரன்முறை ... 289

வேலை வாய்ப்பு—

வடாற்காடு மாவட்டம் அலுவலகங்களில் பதிவு செய்துள்ளோர் விவரம் ... 673—674

வேலை நிதித் திட்டத்தின் கீழ் பணிபுரிவோர் ... 273—275

| | பக்கங்கள் |
|---|---|
| **—தொடர்ச்சி.** | |
| **வேளாண்மை—** | |
| இராமநாதபுரம் மாவட்டம், மழையின்மை, விவசாயிகள் பாதிப்பு, கடன் வசூலை நிறுத்தி வைத்தல் (க.ஈ.) | 133—135 |
| எமநேரி பாசனப் பகுதி, வரி உயர்வு | 672—673 |
| குத்தகை உரிமை பதிவு, மனுக்களின் எண்ணிக்கை | 583—584 |
| குனியமுத்தூர் பேரூராட்சி, குளத்துப்பாளையம் கிராமம், புறம்போக்கு நிலம், விவசாயிகள் வெளியேற்றுதல் | 76 |
| சிக்கரி ஆராய்ச்சி | 46 |
| தஞ்சாவூர் மாவட்டம்— | |
| சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் | 122 |
| குறுவைப் பயிர் | 95 |
| மூசுக்கொட்டை செடி சாகுபடி | 63—64 |
| தர்மபுரி மாவட்டம்— | |
| சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் | 705 |
| திருச்சி விற்பனைக் குழுச் செயலாளர் மீது குற்றச் சாட்டுகள் | 272 |
| திருநெல்வேலி மாவட்டம், மலைப் பயிர்கள் | 49 |
| திருவண்ணாமலை, செங்கம் வட்டங்கள், நிலப்பட்டா வழங்கல் | 690 |
| திருவண்ணாமலை, தாசில்தார் அலுவலகம் குத்தகை வழக்குகள் முடிவாகாதவை | 677 |
| போளூர் நிலவள வங்கி, கடன் கட்டாத விவசாயிகளின் நிலத்தை ஏலம் எடுப்பது குறித்து | 671 |

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

**வேளாண்மை—தொடர்ச்சி.**

மக்காச் சோளம், பயிரிடுதல் 123

மதுரை மாவட்டம், சிறுமலை, சேதம் 57

முதுமலை, ஸ்ரீமதுரை பஞ்சாயத்துக்கள், வனவிலங்குகளால் பாதிப்பு 584—586

வானூர் ஒன்றிய அரிசன சிறு விவசாயிகள், வழங்கப்பட்ட உரம் 664

ஜ

**ஜான் வின்சென்ட், திரு. எம்.—**

பிரிடா மேனியர் மருத்துவமனை, மருத்துவர் நியமனம் 621

**ஜெபமணி, திரு. ச.—**

சாத்தான்குளம் வழியாக விரைவுப் பேருந்து 300

**ஜெயராமன், திரு. பே.—**

தேனீத் தொகுதி, இளைவாய்க்கால் திட்டம் 573

**ஜேம்ஸ், திரு. ஜே.—**

கன்னியாகுமரி மாவட்டம், ரப்பர் தொழிற்சாலை 10

அசரிப்பள்ளம், காசநோய் மருத்துவமனை, நோயாளிகள் 630

காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979 776—777

சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 153—154

சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 172

முல்லைப் பெரியாறு (தேக்கடி) அணை, அபாய நிலைமை (க.ஈ.) 453

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

## வெள்ளிக்கிழமை, 1979, நவம்பர் 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## (1) வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மின்துறை ஊழியர்களுக்கு விபத்துத் தடுப்பு நடவடிக்கைகள்

*வினா எண். 61—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 ஆகஸ்ட் 31-ம் தேதி மின்சார அதிர்ச்சி காரணமாக சென்னை ஆலந்தூரில் வேலை செய்து கொண்டிருந்த மின்சார ஊழியர்கள் விபத்துக்குள்ளாகி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனரா?

(ஆ) தொடர்ந்து இதுபோன்று நடைபெறும் விபத்துக்களை தடுக்க இலாகா என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஒரு ஊழியர் விபத்துக்குள்ளானார். தகுந்த சிகிச்சைகள் சென்னை பொது மருத்துவமனையில் கொடுத்தும், அவர் 26—3—1979 அன்று காலமானார்.

(ஆ) மின்சார ஓட்டத்தை, முன்னறிவிப்பு செய்தபின், நிறுத்திவிட்டு, குறைகளைச் சீர்படுத்தவேண்டுமென்று ஊழியர்களுக்கு வாரியத்தால் அறிவுரை கூறப்பட்டுள்ளது.

**திரு. கே. பண்ணை சேதுராம்:** தலைவர் அவர்களே, மின்சார விபத்துக்கள் ஏற்படுகிற நேரத்தில் மின்சார ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் மின்சார வாரியம் உதவித் தொகை அளித்து வருகிறது. அப்படி கொடுக்கப்படுகிற, உதவித் தொகையில் மத்திய அரசின் பங்கு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மத்திய அரசு ஏதும் உதவுவது இல்லை.

**திரு. செ. சிவசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார விபத்தின் காரணமாக இறந்துவிடுகிறவரின் மனைவிக்கு ஏதேனும் வேலை கொடுக்க வாய்ப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, பணிக் காலத்தில் விபத்தில் இறந்துவிட்டால், அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை தரவேண்டும் என்று மின்சார வாரியம் முடிவு எடுத்துள்ளது.

### ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் மின்வாரியம் பெற்றுள்ள கடன்.

***வினா எண். 62—திரு. பெ. க. திருவேங்கடம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்வாரியம் 1978–79-ல் எல்.ஐ.சி. நிறுவனத்திடம் கடன் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) எந்தப் பணிக்காக வாங்கப்பட்டது?

(ஈ) எவ்வளவு வட்டி?

(உ) எத்தனை ஆண்டில் திரும்ப செலுத்த வேண்டும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஆம்.

(ஆ) & (இ) தூத்துக்குடி அனல் மின் திட்டம், சுருளியாறு திட்டம் மற்றும் மின் வினியோகம் அனுப்புதல் திட்டங்களுக்காக எட்டு கோடி ரூபாய் கடன் பெறப்பட்டுள்ளது.

(ஈ) 11 சதவீதம்.

(உ) 15 ஆண்டுகளில் திரும்பச் செலுத்த வேண்டும்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, எல்.ஐ.சி.யிடமிருந்து அல்லாமல், அரசாங்கத்தின் வேறு ஏதாவது நிதி ஸ்தாபனங்களிடமிருந்து மின் வாரியம் ஏதேனும் கடன் தொகை பெற்றுள்ளதா? அப்படியானால், எந்தெந்த ஸ்தாபனங்களிடமிருந்து என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அரசாங்கத்திடமிருந்து கடன் பெறுகிறது. அதேபோல் வெளி மார்க்கட்டிலிருந்து கடன் பெறுகிறது. எல்.ஐ.சி.யிடமிருந்து கடன் பெறுகிறது. Kural Electrification Corporation யிடமிருந்து கடன் பெறுகிறது. பாங்குகளிடமிருந்து கடன் பெறுகிறது. ஹட்கோவிடமிருந்தும் கடன் பெற்று இருக்கிறது.

1979 நவம்பர் 2]

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவர் அவர்களே, கூடுமானவரையில் எல்லா இடங்களில் இருந்து கடன் பெற்று தொடங்கப்பட்டிருக்கிற திட்டமான தூத்துக்குடி அனல் மின் திட்டம், எண்ணூர் அனல் மின் திட்டம் ஆகியவற்றின் உற்பத்தித் திறன் திட்டமிடப்பட்டுள்ள உற்பத்தித் திறனை விடக் குறைவாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. கே. சி. பந்த் அவர்கள் அரசுக்குக் கடிதம் எழுதி இருக்கிறார் என்று செய்தி வந்து இருக்கிறது. அதன் அடிப்படையில் அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் திட்டம் இப்போதுதான் தொடங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அது ஓரளவிற்கு நிலைநிறுத்தம் Stabilisation இன்னும் ஆறு மாத காலம் ஆகும். ஒரு வருஷம்கூட ஆகலாம்.

எண்ணூர் அனல் மின்திட்டத்தைப் பொறுத்தவரையில், அது தன்னுடைய உற்பத்தித் திறன் அளவிற்கு குறைந்துதான் பணியாற்றுகிறது. எண்ணூர் அனல் மின் திட்டம் மட்டுமல்ல, இந்தியாவின் பல அனல் மின் திட்டங்கள் அப்படிதான் செயல்படுகின்றன. அதற்கு பெரும்பாலும் ஒரு காரணம், அந்த மின் திட்டங்களில் பயன்படுத்தப்படுகிற கொதிகலன்களைத் தாக்கூடியது மத்திய அரசாங்கத்தின் நிறுவனம் பி.எச்.இ.எல். Bhart- Heavy, Electricals Limited ஒன்றுதான். அங்கேயிருந்துதான் மின்சார வாரியத்திற்குத் தேவையான கொதிகலன்களை அனைத்து மாநிலங்களும் வாங்க வேண்டியுள்ளது. அதுவும் வளர்ந்து வருகிற நிறுவனம். போதிய தொழில் நுட்பம் வளராத காரணத்தால் இந்தப் பிரச்னை ஏற்படுகிறது. ஆகவே, தமிழகம் மட்டும் இதற்கு விதிவிலக்கு அல்ல. இந்தியா முழுமையும்தான் இந்நிலை. மத்திய அமைச்சர் திரு. கே. சி. பந்த் அவர்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்க இயலாது.

**திரு. க. சுப்பு:** ஒரு எக்ஸ்பிளனேஷன் [redacted]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பு அவர்கள் உட்கார வேண்டும். இந்தப் பழக்கம் தவறு.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம்:** தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் திட்டம் எப்போது உற்பத்தியைத் தொடங்கும்? ஏன் இவ்வளவு கால தாமதம்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** முதல் யூனிட் ஏற்கனவே தொடங்கப்பட்டு, நடைமுறையில் உள்ளது. இரண்டாவது, மூன்றாவது யூனிட்டுகள் படிப்படியாக முடிக்கப்படும்.

[1979 நவம்பர் 2

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே, மின்சார வாரியம் இதுவரை மொத்தமாகப் பெற்றுள்ள கடன் எவ்வளவு? அசட் எவ்வளவு? என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் அந்த விவரத்தை தர இயலும்.

**திரு. க. மருதாசலம்:** தலைவரவர்களே, தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது? அதற்கு அரசாங்கத்தினுடைய மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, எல்.ஐ.சி. கடன் வாங்கியதைப்பற்றியது கேள்வி. தூத்துக்குடி அனல் மின் திட்டத்தைப்பற்றிக் கேட்டால், அதுபற்றி தற்போது தகவல் இல்லை.

**திரு. க. சுப்பு:** சார், பாயின்ட் ஆப் ஆர்டர். ரிலவன்ட் கேள்வியைக் கேட்டால்கூட பதில் இல்லை என்கிறார். சம்பந்தப்பட்ட கேள்விக்கு அவர் பதில் சொல்லலாம் இல்லையா? அதற்கு . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அப்புறம் கேளுங்கள். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். இப்போது உட்காருங்கள்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** தலைவரவர்களே, தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தென் மாவட்டங்கள் முழுவதற்கும் போதும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அது மூடப்பட்டிருக்கிறது; ஷட்டௌனுக்கு ஆறு மாதம் ஆகிறது என்று சொல்கிறார்கள். அதைத் துரிதப்படுத்த வெளிநாட்டிலிருந்து உதவி பெற ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மீண்டும் நான் சொல்கிறேன். இது மின்சார வாரியத்தினுடைய நிதிநிலையைப் பொறுத்து எங்கெங்கிருந்து கடன் வாங்குகிறார்கள் என்ற கேள்வி. தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்தைப்பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அதற்கு தனியாகக் கேள்வி போட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறபடி, வெளிநாட்டிலிருந்து எந்தத் தொழில் நுட்ப உதவியும் பெறுவதாக இல்லை.



1979 நவம்பர் 2]

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், எல்.ஐ.சி.யிடமிருந்து 8 கோடி ரூபாய் ,11 சதவீதம் வட்டிக்கு வாங்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். தொழில் அபிவிருத்தி என்ற பெயரால் 4 சதவீதம் வட்டிக்கு கடன் கொடுக்கப்படுகிறது. அப்பேர்ப்பட்ட தொழிலுக்கு மின்சாரம் கொடுக்கக்கூடிய இந்த அமைப்புக்கு அந்த அளவுக்கு குறைந்த வட்டிக்கு ஏன் கடன் வாங்கவில்லை? குறைந்த வட்டிக்கு வாங்க முயற்சி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, ஆங்கிலத்திலே சொல்வார்கள். Beggars are not chasses என்று சொல்வார்கள். இந்த வட்டிக்குத்தான் கொடுக்கிறார்கள். வேண்டுமென்றால் வாங்கிக் கொள்ளலாம்; இல்லை என்றால் இந்த வட்டி கொடுக்கக்கூடிய வேறு யாருக்காவது கொடுப்பார்கள்.

## திருப்புல்லாணி-தொண்டி பகுதியிலுள்ள புறம்போக்கு நிலங்கள்

***வினா எண். 63.—திரு. த. இராமசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணியிலிருந்து தொண்டி வரையிலுள்ள சாலையின் கீழ்ப்புறம் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களை நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு கொடுக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, திருப்புல்லாணியிலிருந்து தொண்டி வரையிலுள்ள சாலையின் கிழ்ப்புறம் உள்ள அரசு நிலங்களை யாருக்கும் ஒதுக்கீடு செய்யவில்லை. காரணம் சேது சமுத்திரம் திட்டங்களுக்காக அந்த நிலம் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. சிவசாமி:** தலைவரவர்களே, இது என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டது. இந்தப் பகுதியிலே அதிகமாக புறம்போக்கு நிலம் உள்ளது. இந்த நிலங்களை, மதிப்பிற்குரிய வருவாய்த் துறை அமைச்சரவர்கள், யார் வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் வளைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே, இந்தப் பகுதியிலே எந்த அளவுக்கு, எப்படி நிலம் கொடுக்கப்படும் என்பதைச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, திருப்புல்லாணியிலிருந்து தொண்டிக்கு செல்லும் சாலைக்குக் கிழக்குப் பக்கத்தில் இருக்கிற நிலம் எல்லாம் சேதுசமுத்திரத் திட்டங்களுக்காக வைக்கப்பட்டிருப்பதால் யாருக்கும் கொடுக்கக் கூடாது என்று அரசு முன்னையேலே

ஆணை போட்டிருக்கிறது. ஆனால் 20 அம்சத் திட்டக் காலத்தில் சிலருக்கு கொடுத்திருக்கிறார்கள். கொடுக்கும்போது, தேவைப்படுகிறபோது எந்தவிதமான நஷ்டயீடும் இல்லாமல் அரசு எடுத்துக்கொள்ளும் என்று நிபந்தனை போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. க. முத்துசாமி :** தலைவரவர்களே, இந்த நிலங்களை யாருக்கும் கொடுப்பதற்கில்லை என்று சொன்னால், சேதுசமுத்திரத் திட்டம் ஏன் காலதாமதமாகிறது என்பதைத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, சேது சமுத்திரத் திட்டம், சேலம் இரும்பாலைத் திட்டம் இவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் ஒரு எழுச்சி நாள் கொண்டாடப்பட்டது என்பதும், அதன் பிறகு இவை எல்லாம் மத்திய பேரரசினால் எடுத்துக்கொள்ளப்பட இருந்தது என்பதும், பின்னர் சேலம் இரும்பாலைத் திட்டம் மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதும் அனைவருக்கும் தெரியும். இது இந்த வினாவிற்கு சம்பந்தப்படவில்லை என்றாலும் உறுப்பினர்கள் கேட்கிறார்கள், தெரிந்த விவரங்களைச் சொல்கிறேன்.

(முற்பகல் 9-10)

அதற்குப் பிறகு, 1968-ல் இந்திய பேரரசு இதற்காக ரூ. 37.5 கோடி ஒதுக்கியது. அதற்குப் பிறகு காலதாமதமாகிக்கொண்டே இருந்தது. அதற்குப் பிறகு அரசு கேட்கிறபோது 1976-ல் ரூபாய் 65.50 கோடி இதற்காக ஒதுக்கியது. ஆனால் இதுவரை அத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இன்று இந்த அரசு இது நிறைவேற்றப்படவேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. அப்படிச் செய்வதால் மேல்நாடுகளில் இருந்து வருகிற வர்த்தகக் கப்பல்கள் பம்பாயிலிருந்து கிளம்புமானால் நாகப்பட்டணத்திற்கு வருவதற்கு ஏதுவாக இருக்கும் தூத்துக்குடி வழியாக. இப்படி வராமல் போனால் 350 மைல்கள் இப்போது அதிகமாகப் போக வேண்டியிருக்கிறது. இப்படிப் போனால் அந்த 350 மைல்கள் குறையும். தூத்துக்குடி துறைமுகம் விருத்தியாகும். பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி விரிவாகும். அன்னியச் செலாவணி நமக்குக் கிடைக்கும். ஒரு ஆண்டுக்கு ஏறக்குறைய 232 லட்சம் ரூபாய் இதில் லாபம் கிடைக்கும். இந்த அரசு இதைப் போராடிப்பெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வி, நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு நிலங்களைக் கொடுக்கும் உத்தேசம் உள்ளதா என்பது.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நான் சொல்லும்போது சொன்னேன், மூலக்கேள்விக்கு சம்பந்தம் இல்லாவிட்டாலும் உறுப்பினர்கள் விவரங்கள் கேட்கிறபோது, மக்களுக்கு தேவைப்பட்ட விவரங்கள் என்று தெரிவித்திருக்கிறேன்.

## சாப்டூரில் உள்ள தோப்புகள்

*** வினா எண். 64—திரு. இரா. முத்தையா :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உச்சவரம்புச் சட்டத்தில் தோப்புகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது ?

(இ) மதுரை மாவட்டம், சாப்டூரில் நில உச்சவரம்பை மீறி ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் பழைய ஜமீன்தாரிடம் தோப்பு என்ற கணக்கில் உள்ளதா ?

(ஈ) இதில் முறைகேடு ஏதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) ஆம்.

(ஆ) 1—7—1959-ல், அல்லது அதற்கு முன்பும் தோப்பாக இருந்த நிலங்களுக்கு நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அவை தோப்பாக தொடர்ந்து இருக்கும் வரையில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(இ) 394.51 ஏக்கர்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

(ஈ) எந்தெந்த நிலங்கள் தற்சமயம் தோப்பாக பராமரிக்கப்படவில்லையோ அவைகள் மறு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நடவடிக்கையில் உள்ளன. மற்றும் மேற்படி நிலங்களில் விவசாயத்திற்கு இலாயக்கான நிலங்களைப் பார்வையிட்டு அவைகளின் விதிவிலக்கை ஏன் ரத்து செய்யக் கூடாது என்று நில உடைமையாளர்களுக்கு தாக்கீது அனுப்பப்பட்டு விசாரணையில் உள்ளது.

**திரு. இரா. முத்தையா :** இந்தத் தோப்புக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது, அந்த நிலங்கள் தோப்பு என்ற தன்மையில்லாமல் பொட்டல் தரிசுகளாக இருப்பதும், விளை நிலங்களாக இருப்பதும் தோப்பு என்ற கணக்கில் பலயிடங்களில் தவறுதல்கள் இருந்து

கொண்டுவந்திருக்கின்றன. ஆகவே அதைப் பற்றியெல்லாம் கண்டுபிடித்து அரசு இந்த உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் மிச்ச நிலங்கள் என்றெடுக்கிற நிலையில் ஏதாவது திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** 1959 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தொடர்ந்து தோப்பாக இருந்தால் அதற்கு விதிவிலக்கு உண்டு. தோப்பாக இல்லாமல் ஏதாவது மாற்றினால் உடனே உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் அதை அரசு எடுத்துக்கொள்ளும்.

**திரு. க. சுப்பு:** ஒரு ஒழுங்குப் பிரச்சினை. 'இன் அட்மிஸிபிலிட்டி ஆப் தி கொஸ்டின்' பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். நில உச்சவரம்புச் சட்டத்தில் தோப்புகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டதா என்பது கேள்வி. அது சட்ட சம்பந்தப்பட்ட கேள்வி. சட்ட சம்பந்தப்பட்டவைபற்றி கேள்வி கேட்பது என்பது 'இன் அட்மிஸிபிள்'. சில பேர்களுக்கு 'இன் அட்மிஸிபிள்' கேள்விகளுக்குள் போக தாங்கள் அனுமதிக்கிறீர்கள். சில பேர்களை அனுமதிப்பதில்லை. நான் கேள்வி கேட்டால் 'இன்அட்மிஸிபிள்' என்று சொல்கிறீர்கள். ஆளுக்குத் தக்கபடி அனுமதிக்கிறீர்கள் என்று . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் அனுமதித்ததே தவறு என்று சொல்வது சரியல்ல. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** சட்டம் நடைமுறையில் இருக்கிறதா என்று கேட்டதற்கு 'ஆம்' என்று சொல்லியிருக்கிறேன். சட்டம் நடைமுறையிலே இருக்கிறது, விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பு அவர்கள் ஏதாவது ஒரு பிரச்னையை எழுப்ப வேண்டும் என்றே துடித்துக் கொண்டிருக்கிறார்கள். நேரம் காலம் பார்த்துக் கேட்க வேண்டும். திரு. பழனிவேல்.

**திரு. என். பழனிவேல்:** இந்த சாப்டூர் ஜமீந்தாருக்கு உள்ள தோப்புகளுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது எவ்வளவு ஏக்கர்கள்? என்னென்ன மரங்கள் அந்தத் தோப்புகளில் இருக்கின்றன? திரு. முத்தையா அவர்கள், தோப்பு இல்லாத இடங்களும் இருப்பதுபோல் கூறினார்கள். ஆகவே அங்கு என்னென்ன மரங்கள் இருக்கின்றன, எவ்வளவு ஏக்கர்கள் உள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற போது சாப்டூர் ஜமீனைப் பற்றி சொல்லவில்லை. இருந்தாலும் சாப்டூர் ஜமீன்தாருக்கு 4,440.54 ஏக்கர் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது இப்பொழுது கொடுக்கப்பட்டது அல்ல, 1955-ம் வருஷத்திலிருந்து தோப்பாக கணக்கில் காட்டப்பட்டிருக்கிறது. நில உச்சவரம்பு சட்டத்தின் அடிப்படையில் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்த ஜமீனைப்பற்றி சில மனுக்கள் வந்திருக்கின்றன. சில காடுகளில் சில மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன என்று. அதைப்பற்றி அரசு ஆராய்ந்து தோப்புகள் இல்லாத நிலங்களை உச்சவரம்புச் சட்டத்தின்படி அரசு எடுத்துக் கொள்ளும்.

**திரு. என். பெருமாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசு புறம்போக்கு நிலங்களை முன்பு இருந்த அரசில் இருந்தவர்கள் தங்கள் பெயரிலும், உறவினர், தங்கள் மனைவி மக்கள் பெயரிலும் பட்டா எழுதி வைத்துக் கொண்டுள்ளனர். அப்படிப்பட்ட நிலங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் முள் வேலிகள் வளர்த்துக் கொண்டு, தோப்பு என்று காட்டியிருக்கிறார்கள். அவைகளை உடனடியாக அரசு எடுத்து ஏழைகளுக்கு பகிர்ந்து அளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கில் எடுத்துக் கொண்டிருந்தாலும் சரி, அவைகளை எல்லாம் அரசு எடுத்து நிலம் அற்றவர்களுக்கு கொடுக்கப்படும்.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம்:** தலைவர் அவர்களே, சாப்டூர் ஜமீன்தாருக்கு தோப்பாக 4 ஆயிரத்துக்கு அதிகமான நிலங்கள் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. 1955 ஆம் ஆண்டு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தோப்புக்கு என்று இத்தனை ஏக்கர் விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று முறை செய்து அதனை குறைத்து, இன்னும் அதிகமான நிலங்களை அரசு எடுக்கலாம், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** 1955-லிருந்து அவர்களுக்கு கொடுக்கப்பட்டது என்று சொல்லவில்லை, 1955-லிருந்து தோப்பாக இருந்து வருகிறது என்றுதான் சொன்னேன். அதற்குப்பிறகு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தோப்புக்கு எவ்வளவு என்று வரையறை எல்லாம் இப்பொழுது முன்கூட்டியே உங்களுக்குச் சொல்ல முடியாது.

*Rubber Factory under Western Ghats Development Scheme.*

*Q.—No. 65 Thiru J. JAMES, Thiru A. SWAMIDHAS, Thiru C. KRISHNAN : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :

(a) whether there is a proposal for starting a rubber factory under the Western Ghats Schemes in Kanyakumari district ;

(*b*) the investment proposal for this scheme ;

(*c*) whether the Central Government has any share in this scheme ; and

(*d*) the employment scope of this scheme ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரப்பர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை. எனினும் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் (1) அரசு ரப்பர் தோட்டத்தின் மேற்குப் பகுதியிலுள்ள ஐந்து ரப்பர் தோட்டங்களுக்காக மைலார் பகுதியில் ஒரு கிரம்ப் ரப்பர் தயாரிக்கும் தொழிற்சாலையும் (2) பெருஞ்சாணி பகுதியில் ஒரு ஷீட் ரப்பர் தொழிற்சாலையும் நிறுவத் திட்டமிடப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) இந்த இரு திட்டங்களின் மதிப்பீடு முறையே ரூ. 35,00 இலட்சமும், ரூ. 21.00 இலட்சமும் ஆகும்.

(இ) இத்திட்டத்தில் மத்திய அரசின் பங்கு ஏதுமில்லை.

(ஈ) இத் தொழிற்சாலைகளின் மூலம் மொத்தம் சுமார் 150 தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெறுவர்.

**திரு. செ. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இரண்டு இடங்களில் ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 நவம்பர் 2]

**சத்தியமங்கலம் வனச் சரகத்தில் சந்தன மரங்கள் ஏலம்**

***வினா எண். 66**—திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் வனச் சரகம் மலைகளில் சந்தன மரம் இவ்வருடம் ஏலம் விட்ட தொகை மிகவும் குறைவென்று அரசுக்கு செய்தி வந்துள்ளதா?

(ஆ) ஏலத்தில் மொத்தம் இவ்வருடம் கிடைத்துள்ள தொகை என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) இல்லை.

(ஆ) ரூபாய் 384.10 இலட்சம்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் வனச்சரகத்தில் ஏராளமான சந்தன மரங்கள் இருக்கின்றன. இந்த மரங்களை வருஷா வருஷம் குறைந்த விலைக்கு ஏலத்திற்கு விடப்படுகின்றன என்றும் சில அதிகாரிகளின் தவறான போக்கினால்தான் இந்த நிலை ஏற்பட்டு வருகிறது என்றும் தெரியவருகிறது. இதில் உண்மை உண்டா? அரசு இதை கண் காணிப்பதற்கு சரியான முறையில், அதிகப்படியான தொகையில் அந்த மரங்களை ஏலம் விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சந்தன மரங்களை ஏலத்தில் விடுவதில் இரண்டு ஆண்டுகளாக என்ன நடை பெறுகின்றன என்பது எனக்குத் தெரியும். அதற்கு முன்பு என்ன நடை பெற்றது என்பதை என்னால் சொல்ல முடியாது. இரண்டு ஆண்டுகளாக அதிகாரிகளோ அல்லது வேறு யாருமோ இவ்வாறு செய்வதாக எனக்கு எந்தவிதமான தகவலும் இல்லை. அதற்கு அடிப்படை ஆதாரங்களும் இல்லை. ஆனால் சந்தன மரங்களின் விலைகளில் ஏற்றத்தாழ்வு இருப் பதற்கு காரணம் இண்டர்நேஷனல் மார்க்கெட்டில், உலக சந்தையிலே வாங்கு பவர்கள் நிர்ணயிக்கிற விலையைப் பொறுத்துத்தான், இங்கே இருப்பவர்கள் விலை கொடுத்து வாங்குகிறார்கள். இதனால்தான் விலைகளில் ஏற்ற இறக்கம் ஏற்படுகிறது.

**திரு. துரை கோவிந்தராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்களை, நல்ல தரமான சந்தன மரங்களை வெளிநாடுகளுக்கு அனுப்புகிற ஒரு நிலைமைக்கு மத்திய அரசு ஏதாவது தடை விதித்திருக்கிறதா ? அல்லது மத்திய அரசின் அனுமதி பெற்றுத்தான் சந்தன மரங்களை வெளி நாடுகளுக்கு அனுப்ப வேண்டும் என்ற நிலை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கேட்ட கேள்வியிலேயே ஒரு பகுதியாக இந்த கேள்வியும் அமைந்து இருக்கிறது. நான் விலைகளிலே ஏற்ற இறக்கம் எப்படி ஏற்படுகிறது என்று தெரிவித்தேன். கடந்த ஆண்டிலே ஏன் மாநில அரசுக்கு வருவாய் குறைந்தது என்பதற்கு முக்கிய காரணம், மத்திய அரசு திடீரென்று சில முக்கியமான சந்தன மரங்களுக்கு, உயர்ந்த ரக மரங்களுக்கு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று தடை போட்டதுதான். சில உயர்ந்த ரக சந்தனக் கட்டைகளை ஏற்றுமதி செய்யக் கூடாது என்ற நிலைமையை ஏற்படுத்தி விட்டார்கள்.

இந்தியாவிலேயே நல்ல சந்தன மரங்கள் விளைகின்ற காடுகள் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெறுகிறது. நாம்தான் அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறோம், வருடம் ஒன்றுக்கு 1,500 டன் சந்தன மரங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு நமக்கு இருக்கிறது. அதில் 700, 800, சில நேரங்களில் 1,000 டன் வரை விலைக்குப் போகிறது. இப்போது டன் ஒன்றுக்கு ரூ. 7,000 அளவுக்கு விலைக்குப் போகின்ற உயர்ந்த சந்தன கட்டைகளை ஏற்றுமதி செய்யக் கூடாது என்று நமக்கு தெரியாமலேயே மத்திய அரசு தடை விதித்திருக்கிறது. இதன் காரணமாக ஏறத்தாழ மூன்று கோடி ரூபாய் வருமானம் நமக்கு குறைந்திருக்கிறது. இதைப்பற்றி மத்திய சர்க்காரின் வணிகத் துறைக்கு எழுதினோம். அவர்கள் இது தங்களிடத்தில் இல்லை என்றும், விவசாயத் துறை அமைச்சருக்கு எழுதவேண்டும் என்று தெரிவித்தார்கள். அதன்படி அவர்களுக்கும் எழுதியிருக்கிறோம். அடுத்த டிசம்பர் ஏலத்திற்குள் மத்திய அரசு இந்தத் தடையை நீக்கிவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

(முற்பகல் 9-20)

**திரு. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு :** தலைவர் அவர்களே, சத்திய மங்கலம் வனசரகத்தில் சென்ற ஆண்டு சந்தன மரங்களின் உற்பத்தி எவ்வளவு டன் ? அதே மாதிரி முன்பு உற்பத்தி எவ்வளவு டன் ? இந்த ஆண்டு எவ்வளவு டன்? தற்போது உற்பத்தி கூடுதலாகியிருக்கிறதா ? அல்லது குறைந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, சந்தன மரங்களை உற்பத்தி என்கின்ற அளவில் கணக்கிடுவதில்லை. விற்பனைக்கு என்று எடுக்கின்ற—அதாவது டெட் ட்ரீஸ்—தானாகவே காய்ந்து விழுகின்ற சந்தன மரங்களை பொறுக்கி எடுத்து விற்பனை செய்து வருகிறோம். திருப்பத்தூர் பகுதி, சேலம் பகுதி, சத்தியமங்கலம் பகுதி இவைகளில் எல்லாம் இருந்து ஆண்டு ஒன்றுக்கு 1,500 டன் சேகரிக்கப்படுகிறது என்பது தான் இருக்கின்ற தகவல்.

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் பகுதியில் விலையுயர்ந்த சந்தன மரங்கள் கிடைக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். மாநில அளவில் அதிகமான சந்தன மரங்கள் இங்கே கிடைக்கிறது. ஆகவே அங்கே ஒரு சந்தனத் தொழிற்சாலை அரசின் சார்பில் அமைக்கும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சந்தனமரத்தின் ஏலத்தைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிற்சாலைப்பற்றி கேட்கிறார்கள். இருந்தாலும் இருக்கின்ற விவரங்களை சொல்லுகிறேன். சந்தன எண்ணெய் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்பது அரசின் திட்டம். மத்திய அரசின் குறுக்கீடுகள் இருந்த காரணத்தால் ஓராண்டு தள்ளிப் போய்விட்டது. ஆகவே இதை குடிசைத் தொழிலாக அதாவது 10, 15 லட்சம் ரூபாய் செலவில் சந்தன எண்ணெய் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று அரசு திட்டமிட்டிருக்கிறது. முதல் தொழிற்சாலை திருப்பத்தூர் பகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. சந்தன மரங்கள் கிடைக்கின்ற மற்ற பகுதிகளிலும் இதுபோன்ற தொழிற் சாலைகளை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, இந்த சந்தன மரங்கள் திருட்டுப் போவது சம்பந்தமாக இதே அவையில் முன்பு நான் விவரங்களோடு விஷயங்களை தெரிவித்திருக்கிறேன். திருட்டு அதிகமாக இருந்து கொண்டிருப்பதின் காரணமாக சர்க்காருக்கு வருமானம் குறைகிறது. அத்துடன் இப்போது சந்தன மரங்களின் மூலம் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசு முடிவு எடுத்திருப்பதால், நமது காடுகளிலுள்ள சகல சந்தன மரங்களுக்கும் நம்பர் போட்டு அவற்றை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

[1979 நவம்பர் 2

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதன் தொடர்பாக ஒரு அடிப்படைக் கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். சந்தன மரம் மட்டுமல்ல, வனத் துறையிலுள்ள எல்லா மரங்களும் விலை மதிப்புள்ள செல்வங்கள். இந்த வனச் செல்வங்கள் அனைத்தையும் பாதுகாக்க வேண்டும். இந்தத் துறை வியாபாரத்துறையின் அடிப்படையில், வருமானம் அடிப்படையில் இந்தத் துறை இதுவரை கருதிவரப்படவில்லை. ஒதுக்கப்பட்ட துறையாகவே கருதப்பட்டு, குறைந்த பணியாளர்கள் உள்ள ஒரு துறையாகவே இருந்து வந்திருக்கிறது. இருக்கின்ற மரங்களை பாதுகாக்க முயற்சி எடுக்கவேண்டும் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள், இப்போதுள்ள நிலைமையில் சந்தனத்திருட்டு நடைபெறாமல் பாதுகாக்க குறைந்தஅளவு 150, 200 அதிகாரிகளை போட்டாகவேண்டும். அதற்கும் மேலாக கேரளா, கர்நாடக மாநில எல்லைப்பகுதிகளில் உள்ளே தள்ளியிருக்கின்ற பகுதிகளில் இருக்கின்ற மரங்களை எல்லாம் பாதுகாத்தாக வேண்டும். உள்ளே நுழைய முடியாத அளவுக்கு அடர்ந்த காடுகளில் ஏராளமான விலை மதிப்புள்ள சந்தனமரங்கள் இருக்கின்றன. வெளிமாநிலங்களில் உள்ள இதையே தொழிலாக வைத்திருக்கின்ற பலர் இந்தக் காடுகளில் நுழைந்து விடுகிறார்கள். ஆகவே இதை பாதுகாத்துக் கொள்வதற்காக அதிகமான பணியாளர்கள், அலுவலர்கள் வேண்டும் என்று நிதித்துறையிடம் அனுமதி தருமாறு கேட்டிருக்கிறோம். பாதுகாப்பாளர்களை இன்னும் அதிகமாக இந்த ஆண்டு போடவேண்டியிருக்கிறது. இந்தக் கோரிக்கையை நிதித்துறை பரிவோடு கவனித்துக்கொண்டிருக்கிறது. இதற்கான முடிவு ஏற்பட்டவுடன் அதிகமான அலுவலர்களை போட்டு, இந்த வனச்செல்வங்களை பாதுகாப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### கல்பட்டு ஊராட்சியில் மேல்நிலை குடிநீர்த்தொட்டி அமைத்தல்

*** வினா எண். 67—திரு. கோ. ரகோத்தமன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியம் கல்பட்டு ஊராட்சி மன்றத்தில் குடிநீர் வழங்க மேல்நிலைத் தொட்டி கட்டி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு திட்டம் தீட்டியுள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது அமுல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) திட்டம் ஏதும் இல்லை.

(ஆ). கேள்விக்கு இடமில்லை.



1979 நவம்பர் 2]

### திருப்புவனம் பேரூராட்சியில் குடிநீர்க் குழாய்கள்

*** வினா எண். 68—திரு. வ. மு. சுப்பிரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்புவனம் பேரூராட்சியில் குடிநீர் பற்றாக்குறையை நீக்க குழாய்களை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** திட்டம் ஏதும் இல்லை.

**திரு. ஓ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புவனம் பேரூராட்சியில் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது. அருப்புக்கோட்டை வைகை ஆற்றிலிருந்து இராட்சச பம்பு மூலமாக தண்ணீர் இறைக்கின்ற காரணத்தினால், திருப்புவனத்திலுள்ள குழாய்கள் வற்றிப்போய் விடுகின்றன. அதற்கு மாற்று நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இது மூல கேள்விக்கு தொடர்பற்றது.

**செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புவனம் வைகைக் கரையில் இருப்பதனால், திருப்புவனத்தில் தண்ணீர் இல்லாத ஒரு அபாய நிலைமை இருக்கிறது. இதேமாதிரி திருப்புவனத்திற்கும் தண்ணீர் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

### கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

*** வினா எண். 69—திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையுள்ள 6 மாத காலத்தில் புதிய குடிநீர்க் குழாய் இணைப்பின் மூலம் எத்தனை கிராமங்களுக்கு வசதி செய்யப்பட்டது, மாவட்ட வாரியாக?

(ஆ) இன்னும் எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வசதிகள் செய்யப்பட வேண்டியுள்ளது?

[1979 நவம்பர் 2

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) விபரங்கள் பின் வருமாறு :—

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர் | மொத்த குடியிருப்புகள் |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | 27 |
| 2. | வடாற்காடு | 163 |
| 3. | தென்னாற்காடு | 83 |
| 4. | சேலம் | 116 |
| 5. | கோவை | 59 |
| 6. | திருச்சி | 122 |
| 7. | தஞ்சை | 30 |
| 8. | மதுரை | 217 |
| 9. | இராமநாதபுரம் | 131 |
| 10. | திருநெல்வேலி | 46 |
| 11. | தருமபுரி | 83 |
| 12. | புதுக்கோட்டை | 104 |
| 13. | கன்னியாகுமரி | 13 |
| | மொத்தம் — | 1194 |

(ஆ) இவை குடியிருப்புகள் பிரிவு 1, 2-ல் அடங்கும். இன்னும் 2,520 பிரிவு-I குடியிருப்புகளுக்கும், 1,706 பிரிவு-II குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி செய்ய வேண்டியுள்ளது. இவைகளுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் குடிநீர் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. சி. கோவிந்தராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பிரிவு I, II ஆகியவைகளில் பல கிராமங்கள் வைக்கப்பட்டுள்ளன என்று சொன்னார்கள். ஆனால், குடிநீர் வசதியில்லாத ஏராளமான பின் தங்கிய கிராமங்கள் இருக்கின்றன. இவைகளை 5 அல்லது 6-ஆவது பிரிவிலே வைக்கப்பட்டுள்ளதால், இந்த மாதிரியான கிராமங்களுக்கு குடிநீர் வசதி

செய்து கொடுக்க முடியவில்லை. குடிநீர் வசதி செய்து கொடுப்பது முதற் கடமை என்று அரசு அறிவித்திருந்த போதிலும், இப்படிப்பட்ட நிலைமைகள் சில பிற்பட்ட கிராமங்களிலே இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட குடி தண்ணீர் வசதி இல்லாத கிராமங்களை பிரிவு 1, 2-லே சேர்க்க முடியாமற் போனாலும், பிரிவு 3-லே போட்டு, உடனடியாக குடிநீர் வசதிக்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, பிரிவு 1, 2 தவிர, பிரிவு 3 என்பதை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப் பட இருக்கிறது. பிரிவு 3 என்பது, குடிநீருக்கான ஆதாரங்கள் இருந் தாலும், அதாவது வற்றாத தன்மை நிலையிலுள்ள குடியிருப்புகளுக்கு அதாவது ஒரு ஆண்டில் 8 அல்லது 9 மாதங்களுக்கு தண்ணீர் இருக்கும்; 3 மாதங்களுக்கு தண்ணீர் இருக்காது. ஆனால், பிரிவு 6 என்பது எப்போதும் அந்தப் பகுதியில் போதுமான தண்ணீர் இருக்கும். ஆனால், இது சில இடங் களில் தவறாகக் கணிக்கப்படுகிறது. உண்மை தகவல் வந்த பிறகு பிரிவு 3-ல் போட்டு, இந்த ஆண்டே தண்ணீர் வசதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிப்பட்ட தகவல்கள் தருவார்களானால், அதைப் பரிசிலனை செய்து, 3 ஆவது பிரிவில் இணைத்து, இந்த ஆண்டிலே அதற்கான வேலை செய்யப்படும்.

**திரு. வ. மு. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, முது களத்தூர், கடலாடி திட்டத்தின் கீழ் வாகைக்குளம், தேகனேரி திட்டங்கள் கூட தேக்க நிலையில் உள்ளது. அது எப்போது செயல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் கனம் அமைச்சர் அவர்கள் கூறியதைப் பத்திரிகையிலே பார்த்தேன். தமிழ் நாட்டில் எல்லாக் கிராமங்களிலும் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு முடிந்து விட்டது என்று பத்திரிகையில் படித்தேன். இப்போது இன்னும் பாக்கி இருக்கிறது என்று ஆன்சர் பண்ணினார். இது என்னவென்று கிளாரிபை பண்ணினால் பரவாயில்லை.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பார்க்கக்கூடாத பத்திரிகைகளைப் பார்த்திருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். என்னுடைய பேச்சிலேயே 31—3—1980 என்று பாதுகாப்பாகச் சொல்லியிருக்கிறேன். இப்போதுகூட 'எதிர்பார்க்கப்படுகிறது' என்றுதான் சொல்லியிருக்கிறேன்.
I have been abundantly cautions.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம் :** அமைச்சர் அவர்கள் வரிசைப்படுத்திச் சொல்லுகிறபோது 1, 2 பிரிவில் இருக்க வேண்டிய கிராமங்கள் 6 ஆவது பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தகவல் கொடுத்தால் அவற்றை மாற்றி 1, 2 பிரிவுக்கு மாற்றி குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இப்படி தவறுதலாக 1, 2, 3-ல் இருக்க வேண்டியவை 5, 6 பிரிவில் இருந்தால் அதைத் திருத்தியமைக்க பொதுவாக அரசு பரிசீலித்து மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்குமா?

**Hon. Thiru S. RAGHAVANANDAM :** The healthy suggestion will be considered.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம் :** அமைச்சர் அவர்கள் சொன்னது புரியவில்லை. தமிழிலே சொல்லச், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆரோக்கியமான ஆலோசனை பரிசீலனை செய்யப்படும்.

**திரு. ரா. கு. பெருமாள் :** ஆறு மாத காலத்திற்குள்ளாக 1,194 கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுத்ததற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நெல்லை மாவட்டத்தில் 46 பகுதிகளுக்குக் குடிதண்ணீர் கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய விளாத்திக்குளம் பகுதியில் 13 கிராமங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நடுவில் ஒரு கிலோ மீட்டர், இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் 50 கிராமங்கள் இருக்கின்றன. அவை எல்லாம் காடகிரி 5, 6-ல் வருகின்றன, அந்தக் கிராமங்களின் வழியிலுள்ள பகுதிகளுக்கும் தண்ணீர் கொடுக்கும் வகையில் அவற்றை 1, 2, 3 காடகிரிக்கு மாற்ற உத்தரவிடப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** எந்தக் காரியத்தைச் செய்தாலும் 'ஆன், எ ஃபேஸ்டு ப்ரோகிராம்' தான் செய்ய வேண்டும். முதலில் இது, அடுத்தது இது, அடுத்தது இது என்று திட்டமிட்டு அரசு செய்கிறது.

அப்படி தண்ணீர் கொடுப்பதற்கு ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அதில் ஏதாவது தவறு நடந்திருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் நிச்சயமாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே பதில் சொல்லும்போது பார்க்கக்கூடாத பத்திரிகைகளைப் பார்த்து விட்டார்கள் என்று பதில் சொன்னார்கள். அந்தப் பத்திரிகைகள் எவை என்று அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும்.

### சிறுமுகைப் பகுதி நிலத்தடி நீர்.

*** வினா எண். 70—திரு. சு. பழனிசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் நீர்த்தேக்கத்தின் காரணமாக சிறுமுகை பஞ்சாயத்திலுள்ள பகுதிகளில் குடிநீர் கெட்டு சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் நிலையினை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) அவ்வாறான நிலை எதுவும் இல்லை.

(ஆ) இருந்தபோதிலும் தக்க சோதனைகள் நடத்தி அரசுக்கு கருத்து தெரிவிக்கும்படி மாவட்ட சுகாதார அதிகாரிக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது.

**திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு :** சிறுமுகையில் இருக்கக்கூடிய ரயான் தொழிற்சாலை கழிவு நீர் காரணமாக அந்தப் பகுதியில் குடிதண்ணீர் கெடுவதற்கு வாய்ப்பு இருப்பது அரசுக்குத் தெரியுமா ? சிறுமுகையில் குடி தண்ணீர்க் கஷ்டம் ஏராளமாக இருக்கிறது. அங்கு தண்ணீர் விஸ்தரிப்புக்காக பைப்கள் எல்லாம் போடப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் பூர்த்தி செய்யப் படாமல் இருக்கிறது. காலம் கடத்திக் கொண்டு போவதற்கான காரணம் என்ன ? எப்போது பூர்த்தி செய்யப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** முதல் கேள்விக்கு அப்படித் தகவல் இல்லை. இரண்டாவது கேள்விக்கு—27 லட்சம் ரூபாய் செலவில் சிறுமுகைக்குக் குடிதண்ணீர் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. இத்திட்ட வேலைகளில் சிறுமுகைக்கு நீர் கொண்டுசெல்லும் குழாய் பவானி ஆற்றின் குறுக்கே பதிக்க வேண்டிய பகுதி நீங்கலாக அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. பவானி ஆற்றுப் பாலம் கட்டுமானப் பணி பெருவழித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அது முடிவுற்றதும் சிறுமுகைக்கு நீர் கொண்டுசெல்லும் குழாய் பதிக்கும் பணி விரைந்து முடிக்கப்படும்.

### கொல்லம்-தூத்துக்குடி விரைவுப் பேருந்துகள்

*** வினா எண். 71—திரு. பொ. சிகாமணி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கேரள மாநிலத்திலுள்ள கொல்லத்திற்கும் தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடிக்கும் இடையே ஓடிக்கொண்டிருக்கும் விரைவுப் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஆம்.

**திரு. பொ. சிகாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உடனடியாக பஸ்கள் விடப்படும் என்று சொன்னதை நன்றியோடு வரவேற்கிறேன். எத்தனை எண்ணிக்கையில் பஸ்கள் விடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, வினாவில் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா என்று கேட்கப்பட்டுள்ளது. முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 16 வழித் தடங்களில் பேருந்துகள் விடப்படவேண்டுமென்ற அடிப்படையில் கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. அனுமதி பெறப்பட்டு இருக்கிறது. துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே ஓடுகின்ற இண்டர்-ஸ்டேட் பஸ்களின் எண்ணிக்கை கேரள மாநிலத்திலே ஓடுகின்ற தமிழ்நாட்டு பஸ்களைவிட அதிகமாக தமிழ்நாட்டிலே ஓடுகின்ற கேரள மாநில பஸ்களின் எண்ணிக்கை இருக்கிறது; குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லை ஓரப் பகுதிகளிலே தமிழ்



நாட்டு பஸ்களில் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஆகவே ஏற்கனவே ஏற்பட்டிருக்கிற ஏற்பாடுகளை மறுபரிசீலனை செய்து அதிகமான தமிழ் நாட்டு பஸ்களை கேரள மாநிலத்திலே விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற குறைபாடு கடந்த காலத்திலே ஏற்பட்ட குறைபாடு. அதை களைவதற்காக தமிழ்நாட்டிலே எத்தனை மைல்களுக்கு கேரள மாநில பஸ்கள் ஓடுகின்றனவோ அதைப்போல் கேரள மாநிலத்திலேயும் தமிழ்நாட்டு பஸ்கள் ஓடவேண்டுமென்ற முறையிலே பேச்சுவார்த்தை நடந்து உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் 16 வழித்தடங்களில் பஸ்களை விட இருக்கிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** சென்னையிலிருந்து திருவனந்தபுரத்திற்கு இப்போது ஏ.சி.பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் டெல்லி சர்க்காரிலிருந்து விடப்படுகிற கொல்லம் எக்ஸ்பிரஸ். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாட்டில் எத்தனையோ வழித் தடங்கள் இருக்கின்றன. எல்லாவற்றைப்பற்றியும் இதிலே கேட்க முடியாது. உட்காருங்கள்.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம் :** தலைவர் அவர்களே, கேரள அரசோடு ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். அந்த 16 வழித்தடங்கள் என்ன என்ன என்று சொன்னால் அந்த அந்த வழித் தடங்கள் உருவாவதில் உறுப்பினர்கள் யோசனை சொல்ல வசதியாக இருக்கும், ஆகவே அதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, அந்த 16 வழித்தடங்கள் பற்றிய தகவல் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் கன்னியாகுமரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் மதுரை மாவட்டம் கோவை மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் கேரள அரசு பேருந்துகள் ஒட்டுமொத்தமாக 45 வழித்தடங்களில் விடப்படவேண்டுமென்று ஏற்கனவே கோரினோம். அந்த அடிப்படையில் 16 வழித்தடங்களுக்கு இப்போது உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. மேலும் முயற்சி செய்யலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திருவனந்தபுரம் செல்கின்ற எக்ஸ்பிரஸ் விருதுநகர் வழியாகச் செல்கிறது. அதைப்போலவே ஏ.சி. பஸ்ஸும் சிவகாசி ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜபாளையம் வழியாக விடுவதற்கு ஆலோசிக்கப்படுமா ?

[1979 நவம்பர் 2

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஏற்கனவே சட்டமன்றத்திலே கூறியிருக்கிறேன். இன்னும் 8 ஏ. சி. (சினிமாக் காட்சிகள் காட்டப்படும்) பஸ்கள் விடப்பட இருக்கின்றன. அதிலே ஒரு பேருந்து இந்த வழித்தடத்திலே செல்ல இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கரூர்—சென்னை விரைவுப் பேருந்துப்பணி.**

*** வினா எண். 72—திரு. கு. வடிவேல் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து திருச்சி வழியாக சென்னைக்கு ஒரு விரைவுப் பேருந்து விடும் உத்தேசம் அரசிடம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் எப்போதிலிருந்து விடப்படும் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, கரூரிலிருந்து திருச்சி வழியாக சென்னைக்கு பேருந்துவிடும் உத்தேசம் இல்லை என்று கூறினார்கள். பழனியிலிருந்து சென்னைக்கு குளு குளு பஸ் விடுவதாக சென்ற மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே பத்திரிகையிலே வந்தது. இதுவரையிலே வரவில்லை. என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** குளு குளு ஏ. சி. பஸ்கள் கட்டுவதற்கு குறைந்தது 4 மாதங்கள் தேவைப்படுகிறது. அடுத்த மாதத்திலே வேலை முடிந்துவிடும். அடுத்த மாதத்திலே அந்தப் பேருந்து விடப்படும்.

**கோயில் மலையனூர் அணைத் திட்டம்.**

**வினா எண். 73—திரு. ரா. மார்க்கபந்து, திரு. ப. சந்திரன் :** மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அணைக்கட்டுத் தொகுதியில் மேலரசம்பட்டுக்கு அருகில் கோயில் மலையனூர் அணைக் கட்டுத் திட்டம் கட்ட முடிவு செய்யப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறதா ?

(ஆ) ஆமெனில் பணி எப்போது மேற்கொள்ளப்படும் ?



1979 நவம்பர் 2]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ & (ஆ) இத்திட்டத்தைப்பற்றி இறுதியான முடிவு செய்யப்படவில்லை. திட்டம் பற்றிய முதல்நிலை அறிக்கை ஆய்வு செய்யப்பட்டது. பாலாறு வடிநிலப்பரப்பில், தற்போதைய நிலைமையில் உபரிநீர் குறிப்பிடத்தக்க அளவு 75 சதவிதம் நம்பும் அளவில் இல்லை எனத் தெரிய வருவதால் இன்னும் சில ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நீர் அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதன்பிறகுதான் இத்திட்டம் பற்றி முடிவு செய்ய இயலும்.

(முற்பகல் 9-40)

**திரு. ரா. மார்க்கபந்து :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணைக்கட்டு பகுதியில் ஏற்கனவே இரண்டு அமைச்சர்கள், வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும் பின்தாரத் துறை அமைச்சரவர்களும் அந்த இடத்தைப் பார்வையிட்டார்கள். அவர்களிடத்தில் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், it is an economically viable unit, என்றும், Cost-benefit ratio -இல் இலாபகரமான இடம் என்றும் சொல்லி, இரண்டு இடங்களிலும் Stability position எடுத்து விட்டோம், சாதகமாக இருக்கிறது என்று அமைச்சர்களிடத்தில் நேரடியாகச் சொன்னார்கள். அப்படிச் சொன்னதற்குப் பிறகு இப்படிப்பட்ட தவறான தகவலை அமைச்சருக்குக் கொடுத்திருக்கிறார்களே, அது நியாயம் தானா. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்; அது கேள்வியாக இருக்கட்டும்.

**திரு. ரா. மார்க்கபந்து :** தயவு செய்து நான் கேட்டுக்கொள்கிறேன், எங்களுடைய வடார்க்காடு மாவட்டத்திலே ஏற்கனவே இருக்கின்ற நான்கு திட்டங்கள்; அதாவது (1) செண்பகத்தோப்பு திட்டம்; (2) புல்லூர்; (3) மோர்வானா; (4) மேலரசம்பட்டு திட்டம் ஆகிய இந்த நான்கு திட்டங்களைக் கைவிடும் அளவிற்கு அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது; வடார்க்காடு மாவட்டத்திற்கு ஓரவஞ்சனை காட்டப்படுகிறது. அங்கே ஒன்றிரண்டு அணைக்கட்டாவது கட்ட வேண்டும். இல்லையென்று சொன்னால் நான் தெரிவித்துக்கொள்கிறேன், எங்களுடைய வடார்க்காடு மாவட்டத்திலே இருக்கின்ற அனைத்து எம்.எல். ஏக்களும் ஒருநாள் சட்டமன்றத்திலே மறியல் நடத்தக்கூட நாங்கள் தயாராக இருக்கிறோம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து கேள்வி எண் 74 . . .

**திரு. ரா. மார்க்கபந்து :** நான் கேட்டதற்குப் பதில் இல்லையே

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் கேட்கிற கேள்வி அல்ல அது. தயவு செய்து உட்கார வேண்டும். கேள்வி நேரத்திலே தகவலைக் கேட்க வேண்டும். ஆனால் நீங்கள் அரசாங்கத்தைப் பயமுறுத்தும் வகையில் கேட்கிறீர்கள். மேலும் தகவல் வேண்டுமென்றால் கேட்கலாமே தவிர, கேள்வி நேரத்தில் பயமுறுத்துகிறீர்கள். வேண்டுமானால் அந்தக் கோரிக்கை வருகின்றபொழுது பேசுங்கள். இது கேள்வி நேரம்.

**திரு. ரா. மார்க்கபந்து** : அமைச்சரிடத்தில் தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தயவு செய்து கேள்வியாகக் கேட்க வேண்டும். (குறுக்கீடு) அதற்கு இங்கே வந்து ஏன் அழுத்துக் கொள்ள வேண்டும். கேள்வி நேரத்தை வீணாக்குவதை நான் எப்படி அனுமதிப்பது?

**திரு. ரா. மார்க்கபந்து** : தவறான தகவலைச் சொல்லி இருக்கிறார்களே.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் மிகவும் சூடாகக் காணப்படுகிறார்கள். காலை நேரத்திலே இவ்வளவு சூடாக இருக்கக் கூடாது என்று உண்மையிலேயே நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வடார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான்கு திட்டங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். இதைவிட இன்னும் பல திட்டங்கள் வடார்க்காடு மாவட்டத்திலே இருக்கின்றன. அவைகள் அவரால் சொல்லப்படாமல் விடுபட்டுப் போய் இருக்கின்றன. ராஜாத்தோப்பு, ராவுத்தர் பள்ளம் பற்றி அவர்கள் சொல்லவில்லை. இருந்தாலும் வடார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், benefit-cost ratio அதாவது பயன்-செலவு கருதி சில திட்டங்களை எடுக்க வேண்டுமென்று ஆய்வுப்பணிகள் நடந்து வருகின்றன. எனவே, அவசரப்பட வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, சில திட்டங்களை இந்த அரசு கண்டிப்பாகச் செயல்படுத்தும் என்ற உறுதியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : தலைவரவர்களே. . .

**திரு. துரை முருகன்** : தலைவரவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது அணைக்கட்டுத் தொகுதி பற்றிய கேள்வி. வடார்க்காடு மாவட்டத்தில் உள்ளவர்களைக் கேட்கத் தூண்டியிருக்கிறது.





**திரு. துரை முருகன்** : நான் கேள்வி கேட்பதற்காக அங்கேயிருந்து ஓடி வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஏன் ஓடி வருகிறீர்கள், நிதானமாக வருவதுதானே. இது அணைக்கட்டு தொகுதி பற்றியது; அணைக்கட்டு வேலூர் அருகில் இருக்கிறது, எனவே உறுப்பினர் துரை முருகன் அவர்கள் உட்கார வேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : தலைவரவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் குடியாத்தம் தொகுதி. எனவே, நீங்கள் உட்காருங்கள்.

### வேப்பூர் ஒன்றியத்தில் புதிய ஏரி அமைப்பு.

* **வினா எண் 74—திரு. என். பெருமாள்** : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், வரகூர் தொகுதியைச் சேர்ந்த வேப்பூர் ஊராட்சி ஒன்றியம் ஆயக்குடிக்கும் ஆரூருக்கும் இடையில் கட்டவிருக்கும் ஏரியின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு

(ஆ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

(இ) இதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** :

(அ) உத்தேசத் திட்டத்தின் தற்போதைய மதிப்பீட்டுத் தொகை சுமார் ரூ. 6.15 லட்சம்.

(ஆ) திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

(இ) சுமார் 235.25 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி மூலம் நன்செய் நிலங்களாக மாற்றப்படும்.

### நீலகிரியில் கற்பூர தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை.

* **வினா எண் 75—திரு. போ. கோபாலன்** : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் கற்பூர தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்துவது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

[1979 நவம்பர் 2

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : சில்கோனாத் துறை சுமார் 5 மெட்ரிக் டன் கற்பூரத் தைலத்தை தயார் செய்கிறது. மேலும் 50-க்கும் மேற்பட்ட குடிசைத் தொழில்கள் மூலமும் சுமார் 5 டன் தைலம் தயாரித்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு பொது மக்களின் வருடாந்திரத் தேவைக்குப் போதுமான அளவு தைலம் தயார் செய்யப்பட்டு வருவதால் மேலும் ஒரு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கற்பூரம் தயாரிக்கும் இலை இப்பொழுது போதுமான அளவு இருக்கிறதா? போதவில்லையென்றால் அதை அதிகரிப்பதற்கு அரசு என்ன முயற்சிகள் எடுத்திருக்கிறது என்பதை அறியவிரும்புவதோடு, அங்கு தயாரிக்கும் கற்பூர தைலத்தினுடைய ஆண்டு வருமானம் எவ்வளவு என அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கற்பூர தைலம் தயாரிப்பதற்கான மூலப்பொருளான குங்குலி இலைகள் நமக்குப் போதுமான அளவு கிடைக்கிறது. கூடுதலாக அந்தத் தைலம் தேவைப்படுவது இப்பொழுது இல்லையென்றுதான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு வருமானம் என்பதற்கு நீண்ட பட்டியல் இருக்கிறது. ஆகவே, சுருக்கமாகச் சொல்கிறேன், 1977-78-ல் ரூ. 2,08,348-க்கு நாம் தைலம் உற்பத்தி செய்திருக்கிறோம்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் குடிசைத் தொழிலாக இந்தத் தொழில் நடப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் ஏற்கனவே, இந்தச் சட்டமன்றத்தில் கேட்டுள்ளேன். நவீன முறையில் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்பேட்டை அங்கு அமைக்க அரசு முன் வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நடுவட்டத்தில் ஏற்கனவே ஒரு நவீனத் தொழிற்சாலை இருந்து வருகிறது. குங்குலி இலைகளைக் கொண்டு தைலம் தயாரித்தல், 'சால்வன்ட் எக்ஸ்ட்ராக்ஷன் பிளான்ட்' இரண்டு இடத்திலே இருக்கிறது. கூடுதலாகத் தேவையானால் அரசு பரிசீலிக்கும். தற்போதுதான் தேவையில்லையென்று நான் தெரிவித்திருக்கிறேன்.



1979 நவம்பர் 2]

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உள்ளதைப் போல், கொடைக்கானலில் இம் மாதிரி தொழிற்சாலைகள் ஏதேனும் தற்பொழுது செயலில் உள்ளதா? அப்படி இருந்தால் அதற்கு அரசு என்ன என்ன உதவிகள் செய்து வருகிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : நீலகிரி மாவட்டத்தைப் போல், கொடைக்கானலில் 50-க்கு மேற்பட்ட குடிசைத் தொழில்கள் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 4,000 கிலோ அளவுக்கு மேலே அங்கே தைலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இப்பொழுது கொடைக்கானலிலே குங்குலியத்திலிருந்து தைலம் உற்பத்தி செய்வதைப் போல், ஜெரேனியத்திலிருந்து ஆயில் உற்பத்தி செய்யலாம் என்று புதிய திட்டங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, கற்பூரத் தைலத்தைவிட அதிகமான அன்னியச் செலாவணி ஈட்டித் தரக் கூடிய சுக்குனாரி தைலத்திற்குத் தேவையான மூலிகைப் புல் என்னுடைய தொகுதியில் கிடைக்கிறது. அதனைக் கொண்டு சுக்குனாரி தைலம் தயாரிக்கும் உத்தேசம் உண்டா, அங்கு ஆரம்பிக்கப்பட்டால், அதற்குத் தேவையான அத்தனை சாதனங்களையும் கொடுக்கமுடியும் என்ற உத்தரவாதத்தைத் தெரிவித்து, எனது தொகுதியில் கிடைக்கக்கூடிய மூலிகையைக் கொண்டு சுக்குனாரி தைலம் தயாரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, மூலக் கேள்வி கற்பூர தைலத்தைப் பற்றியது. அது மலைப்பகுதியில் கிடைக்கும் மூலப் பொருளை வைத்து தயாரிக்கக்கூடிய தைலம். தரைப் பகுதியில் கிடைக்கும் மூலப்பொருளை வைத்து தயாரிக்கக்கூடியதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி தயாரிக்க ஏதாவது வாய்ப்பிருக்குமானால் நிச்சயமாக பரிசிலனை செய்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மங்களூர் தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம்

* வினா எண். 76—திரு. மொ. பெரியசாமி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் உள்ள கிராமங்களில் பால் உற்பத்தி அதிகமாக உள்ளதால் பால் குளிர் ஊட்டும் நிலையம் அமைக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

(ஆ) ஆமெனில் அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. மொ. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மங்களூர் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே பால் உற்பத்தி சங்கங்கள் அதிகமிருக்கிற காரணத்தால், பால் திட்டத்திற்காக பால் உற்பத்தியாளர்கள் நிறைய இருக்கிற காரணத்தால், அங்கு பால் குளிர் ஊட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, மங்களூர் தொகுதி விருத்தாசலம் தாலுகாவிலே இருக்கிறது. ஏற்கனவே, கள்ளக்குறிச்சி தாலுகாவில் இருக்கக்கூடிய சின்னசேலம் என்ற ஊரில் 12,000 லிட்டர் பாலை பதப்படுத்தக்கூடிய அளவுக்கு, குளிரூட்டக்கூடிய அளவுக்கு ஒரு நிலையத்தை நாம் நடத்தி வருகிறோம். அதற்குத் தேவையான பாலை தயார் செய்து கொடுக்கவே மிகவும் சிரமமாக இருக்கிறது. பாலினுடைய உற்பத்தி அளவு கூடும்போது நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. இ. தமிழரசன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் வேறு எந்த எந்த ஊர்களிலே இதுபோன்ற பால் குளிர் ஊட்டும் நிலையங்கள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது . . . (மணியடிக்கப்பெற்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அடுத்த வினாவை எடுத்துக்கொண்டார்.)

### கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூளை நரம்பியல் பிரிவு.

* வினா எண் 77.—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தலைக்காயம் பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தனிப்பிரிவு (Neuro-Surgery ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அங்கு ஒரு Neuro-Surgeon நியமிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) ஆம்.

(ஆ) அங்கு புதிதாக தலைக்காயப் பிரிவு ஆரம்பித்து 27—7—1979-ல் உத்திரவிடப்பட்டுள்ளது.



(முற்பகல் 9-50)

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, கோவை மருத்துவமனையில் நரம்பியல் பிரிவை அமுலாக்குவதற்கு சமீபத்தில் உத்தரவு போட்டதை வரவேற்கிறேன். ஆனால், அந்தப் பிரிவை எவ்வளவு சீக்கிரம் அமலுக்குக் கொண்டுவர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அமல்படுத்துவதற்கு இந்த அரசு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, அரசு ஆணை எண் 1315, சுகாதாரம், நாள் 27—7—1979-ல் உத்தரவு போடப்பட்டுள்ளது. விரைவில் அமுல்படுத்தப்படும்.

### வேலூர் காசநோய் மருத்துவமனை

* வினா எண். 78—திரு. ப. சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் உள்ள காசநோய் மருத்துவமனையில் ( T. B. Sanatorium ) இரத்த வங்கியும், ஆபரேஷன் தியேட்டரும் இல்லாதிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) ஆம்.

(ஆ) 7 கி.மீ. தொலைவில் உள்ள வேலூரிலுள்ள தலைமையிட மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையமும், அறுவை அரங்கமும் உள்ளதால் அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளை உடனே இம் மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக இடமாற்றம் செய்யப்படுகிறது. எனவே வட ஆற்காடு மாவட்டம் வேலூரிலுள்ள காசநோய் மருத்துவமனைக்குத் தனியாக இரத்த வங்கியும் ஆபரேஷன் தியேட்டரும் தேவையில்லை என மருத்துவம் மற்றும் குடும்பநல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. இரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, ஆபரேஷன் தியேட்டர் பற்றிப் பரவாயில்லை. பிளட் பாங்க் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற காரணத்தால் அதையாவது ஏற்படுத்திக் கொடுக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிலே ஒன்றும் சிரமம் இருக்காது. இங்கே இருக்கிற ஒரு பிராஞ்சை அங்கே மாற்ற வேண்டியதுதான். நோயாளிகளின் சிரமங்களைப் போக்கு வதற்கு பிளட் பேங்க் நிறுவ அரசு முயற்சிகள் எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர வர்களே, குருதி சேமிப்பு வங்கி அருகாமையில் உள்ள வேலூரிலே இருப் பதாலும், நோயாளிகள் உடனடியாக அங்கு செல்வதற்கு பேருந்து வசதி இருப்பதாலும் அதை வைத்து நோயாளிகளுக்கு நல்ல முறையில் சிகிச்சை செய்யப்படுகிறது.

திரு. இ. தமிழரசன்: தலைவரவர்களே, வேலூர்—பெண்ணாத்தூரில் உள்ள காசநோய் மருத்துவமனையில் இதுவரையில் எத்தனை சிறிய, பெரிய அளவிலான அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டிருக்கின்றன?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர வர்களே, 1—4—1978 முதல் 31—3—1979 முடிய எடுத்த கணக்குகளின் அடிப்படையில் பெண்ணாத்தூரில் உள்ள காச நோய் சிகிச்சைப் பிரிவிற்கு வந்த 2 பெரிய அறுவை சிகிச்சைகள் பக்கத்திலுள்ள வேலூரிலே உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும், 30 சிறிய அறிவைச் சிகிச்சை களும், 10 புற நோயாளிகளுக்கான அறுவை சிகிச்சைகளும் பொண மல்லூர் காச நோய் சிகிச்சை நிலையத்திலும் செய்யப்பட்டன.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், வட ஆற்காடு மாவட்டத்திலே பீடித் தொழிலாளர்களும், டானரி தொழிலாளர்களும் அதிக அளவிலே இருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் அதிகமாக டி.பி. வந்து தொல்லை கொடுக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இந்தத் தொழிலாளர்களுக்குத் தேவையான அளவிற்குப் படுக்கை வசதி மருத்துவ மனையில் இல்லாத காரணத்தால் கிட்டத்தட்ட 600 பேர்களுக்கு மேல் ரிசர்வ் செய்து விட்டு, அதில் பலருக்கு அவர்கள் இறந்த பிறகு இடம் இருப்பதாகத் தகவல் வருகிறதே. இதைப் போக்குவதற்கு உடனடியாக 100 படுக்கைகளை இந்த மருத்துவமனையிலே அமைக்க வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கூடத் தீர்மானம் போடப் பட்டுள்ளது. இதன்மேல் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர வர்களே, இது பற்றிக் கவனிக்கப்படும்.



### வட ஆற்காடு மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்.

* வினா எண். 79—திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தை வட ஆற்காடு மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### செல்வனூர் காட்டுப் பகுதியில் ஆட்டுப்பண்ணை.

* வினா எண். 80—திரு. ஆர். சி. சுப்பிரமணியம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலாடி தொகுதி செல்வனூர் காடுகளில் உலக வங்கி உதவியோடு ஆட்டுப் பண்ணையமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: உலக வங்கியின் நிதியுதவியுடன் ஆடுவளர்ப்புத் திட்டம் செயல்படுத்த ரூ. 47.50 கோடிக்கு திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் நிதியுதவி கோர மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இறுதியான பதில் மத்திய அரசினிட மிருந்து பெறப்படவில்லை. அதில் உத்தேசிக்கப்பட்டுள்ள பல்வேறு இடங்களில் 5,000 ஏக்கர் பரப்பில் அயலின ஆடு வளர்ப்புப் பண்ணை நிறுவுதலும் ஒன்று. ஒப்புதல் பெறாத நிலையிலும் இடத்தேர்வுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்தாலோசிக்கப்பட்டனர். கடலாடி தொகுதி செல்வனூர் பகுதியிலும் நிலம் இருப்பதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் குறிப்பிட்டுள்ளார். இடத்தேர்வு குறித்து கால் நடை பராமரிப்பு இயக்குநரின் கருத்து கோரப்பட்டுள்ளது.

**குமரி மாவட்டத்தைத் தமிழகத்தோடு இணைக்கப்போரிட்ட தியாகிகளுக்கு உதவித் தொகை.**

* **வினா எண். 80-அ—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தை தாய்த்தமிழகத்தோடு இணைக்க அறப் போரிலீடுபட்ட தியாகிகளுக்கு உதவித் தொகையினை மீண்டும் வழங்கிடும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் வழங்கப்பட உள்ளது ?

**திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசிலனையில் உள்ளது.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு அரசு 75 ரூபாய் வழங்கிவந்ததை ரூ. 100-ஆக உயர்த்துவதாக அறிவித்து இருந்தது. அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டுவிட்டதா ?

**திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** தலைவர் அவர்களே, நாட்டு விடுதலை வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் ஓய்வூதியத்தின் அடிப்படையில் இந்தி எதிர்ப்பு மற்றும் எல்லை இணைப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு தண்டனை பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 75 அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு 19—4—1974 முதல் செயற்படுத்தியது. சென்னையைச் சேர்ந்த திரு. தளவாய் என்பவர் இத்திட்டத்தை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டமையால், அவர் டில்லி உச்ச நீதிமன்றத்திலும் முறையீடு செய்தார். உச்ச நீதிமன்றம், அந்த முறையீட்டின் மீதான தனது தீர்ப்பில் அரசு வகுத்துள்ள இந்த ஓய்வூதியத் திட்டம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது என்று தீர்ப்பு கூறிவிட்டது. அந்தத் தீர்ப்பிற்கிணங்க இந்த ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யப்பட்டு விட்டது. மேற்குறித்த தீர்ப்பு முக்கியமாக இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களுக்கு அளிக்கப்பட்ட ஓய்வூதியத்தைப் பற்றியே கூறப்பட்டிருந்தாலும் எல்லை இணைப்புப் போராட்ட வீரர்களுக்கும் சேர்த்து ஒரே திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வகுக்கப்பட்டிருந்தமையாலும், அந்த ஓய்வூதியத் திட்டமே முரணானது என்று கூறப்பட்டமையால், எல்லை இணைப்புப் போராட்ட





வீரர்களுக்கு அளிக்கப்பட்ட ஓய்வூதியமும் சேர்த்து நிறுத்தப்பட்டு விட்டது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 31—1—1976 முடிய கீழ் குறித்தபடி 1,548 பேர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 1. இந்தி எதிர்ப்புப் போராட்டம் | 1,471 பேர். |
| 2. எல்லை இணைப்புப் போராட்டம் | 64 பேர். |
| 3. கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டம் | 9 பேர். |
| 4. தேவிகுளம் பீர்மேடு இணைப்புப் போராட்டம் | 4 பேர். |
| மொத்தம் | 1,548 பேர். |

மொழியைப் பொறுத்தமட்டில் இருமொழித்திட்டம் அதாவது தமிழ் ஆட்சி மொழியாகவும், ஆங்கிலம் தொடர்பு மொழியாகவும் இருப்பதே அரசின் கொள்கையாகும். தேசிய மொழிகளில் ஒன்றான தமிழ் மொழிக்காகவும் அதன் மேம்பாட்டிற்காகவும் குறிப்பிடத்தக்க வகையில் தொண்டாற்றிய அனைவருக்கும் அதிலும் குறிப்பாக தாய்மொழி மீது கொண்ட பற்றின் காரணமாக போராடி தண்டனை அனுபவித்தவர்களுக்கும், கன்னியாகுமரி, திருத்தணி ஆகிய இடங்களில் உள்ள தமிழ் பேசும் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்கப் போராடியவர்களையும் சேர்த்து அவர்களின் குடும்பங்களுக்கும் உதவித் தொகை அளிக்க ஏற்றதொரு திட்டத்தை ஒரு சட்டம் இயற்றி அதன் வாயிலாக செயல்படுத்துவது என்று முடிவு செய்து அவ்வகையில் ஒரு சட்டமுன்வடிவு உருவாக்கப்பட்டு வருகிறது. விரைவில் சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு அது சமர்ப்பிக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, ஏற்கனவே இந்த மாமன்றத்தில் எல்லைப் போராட்ட தியாகிகளுக்கு உதவித் தொகை அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரையிலும் அது கொடுக்கப்படவில்லை. இப்போது மாண்புமிகு முதலமைச்சரின் பார்லிமென்டரி செயலாளர் அவர்கள் கொடுக்கப்படும் என்று கூறினார்கள். எப்போது கொடுக்கப்படும், எப்போது அந்தச் சட்டமுன்வடிவு இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்பதை அறிவிப்பார்களா ? அதோடு, ஏற்கனவே கொடுக்கப்பட்டு, நிறுத்தப்பட்ட அந்த இடைக்காலத்திற்கும் சேர்த்து, இனிமேல் தருகிறபோதாவது சேர்த்து கொடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர் அவர்கள் கூறுவார்களா ?

**திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** தலைவர் அவர்களே, இதைப்பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. செல்லப்பா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அளித்துவரும் உதவித்தொகை ரூபாய் 75 என்று அளிப்பதை ரூபாய் 100 என்று கொடுக்க முன்வருவதாக அறிவித்தது. அதற்கான அரசாணையை விரைவில் அறிவிக்க முன் வருமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜேம்ஸ் அவர்கள் இதே கேள்வியைத்தான் கேட்டார்கள். அதற்கு பதில் அளித்தாகிவிட்டது.

### திருப்புவனம் காவல் சரகம்

***வினா எண். 80-ஆ—திரு. வ. மு. சுப்பிரமணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதியில் திருப்புவனம் காவல் நிலைய சரகத்தினை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** இல்லை.

(முற்பகல் 10-00)

**திரு. வ. மு. சுப்பிரமணியன் :** தலைவரவர்களே, இந்த திருப்புவனம் காவல் பரப்பு மிகவும் அதிகமாக இருக்கிறது. பரப்பு மிகவும் அதிகமாக இருப்பதால் ஆங்காங்கே நடைபெறுகின்ற சில நிகழ்ச்சிகளை காவல் துறையினர் சென்று விசாரிப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. அவர்கள் போவதற்கு சாலை வசதியும் சரியாக இல்லை. புகார் கொடுப்பதற்காக மக்கள் வர வேண்டுமென்றால் பல மைல் நடந்து வரவேண்டும். மேலும் பரப்பு அதிகமாக இருப்பதால் காவல் துறையினர் திறமையாகச் செயலாற்ற முடியவில்லை. ஆகவே, அதை இரண்டாகப் பிரிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** தலைவரவர்களே, இராமநாதபுரம் (கிழக்கு) காவல் மாவட்டம் மானாமதுரைத் தொகுதியிலுள்ள திருப்புவனம் காவல் நிலைய சரகம் பிரிக்க அவசியமில்லாத அளவில் (காம்பாக்ட்) உள்ளது. பலாத்காரத்துடன் நடந்த சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள் ஏதும் கடந்த ஐந்து ஆண்டுகளில் திருப்புவனம் காவல் நிலையத்தில் அறிவிக்கப்படவில்லை. ஒரு ஆண்டில் இந்திய பீனல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, மற்றொரு காவல் நிலையம் திறக்க வேண்டிய அளவுக்கு அதிகமாக இல்லை. ஆகவே, திருப்புவனம் காவல் நிலைய சரகத்தை இரண்டாகப் பிரிக்கும் அவசியமேதும் தற்பொழுது இல்லை.





### ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்.

### சென்னையில் புதிய கட்டிடங்கள் கட்ட அனுமதிகோரி வரப்பெற்ற மனுக்கள்.

வினா 301—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் 1975 முதல் இன்றுவரை புதிய கட்டடங்கள் கட்ட (வரைபடங்கள் வரைந்து) அனுமதி கோரி வரப்பட்ட மனுக்கள் எத்தனை ? டிவிஷன் வாரியாக

(ஆ) அவைகளுள் கட்டடங்கள் கட்டப்படுவதற்கான மனுக்கள் எத்தனை அனுமதிக்கப்பட்டன ? எத்தனை நிராகரிக்கப்பட்டது ?

(இ) அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டடங்களின் உரிமையாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ? டிவிஷன் வாரியாக ?

(ஈ) இந்த முறையினை எளிதாக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—*விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### கயிறு உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பெற்ற கடன்.

வினா 302—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு இராமத்தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975 முதல் இன்றுவரை தமிழகத்தில் கயிறு உற்பத்தித் தொழிற்சாலைகளுக்காக வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு ? மாவட்ட வாரியாக ?

(ஆ) அதில் இதுவரை திரும்பி வந்த தொகை எவ்வளவு ?

---

*234ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

விடை — (அ) மற்றும் (ஆ) 1975 ஆம் ஆண்டு முதல் 1979 ஜூன் திங்கள் வரை கயிறு உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட கடன்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) மாநில தொழில் நிதியுதவிச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள்.

| மாவட்டத்தின் பெயர். | வழங்கப் பட்ட தொகை. | திரும்பப் பெறப்பட்ட தொகை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| தஞ்சாவூர் .. .. .. | 9.17 | 3.99 |
| புதுக்கோட்டை .. .. .. | 1.00 | 0.169 |
| தர்மபுரி .. .. .. | 0.73 | 0.211 |
| மதுரை .. .. .. | 0.98 | 0.225 |
| சேலம் .. .. .. | 0.87 | .. |
| இராமநாதபுரம் .. .. | 0.975 | 0.354 |
| தென்னாற்காடு .. .. .. | 0.245 | 0.106 |
| கோயம்புத்தூர் .. .. .. | 0.25 | 0.307 |

(2) தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வழங்கிய கடன்கள்.

| மாவட்டத்தின் பெயர். | வழங்கப் பட்ட தொகை. | திருப்பிச் செலுத்தப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. கன்னியாகுமரி .. .. | 21.50 | 13.58 |
| 2. திருநெல்வேலி .. .. .. | 4.87 | 2.65 |
| 3. திருச்சிராப்பள்ளி .. .. | 1.00 | 0.68 |
| 4. மதுரை .. .. .. | 1.00 | 0.08 |
| 5. சேலம் .. .. .. | 1.30 | 0.10 |
| 6. கோயம்புத்தூர் .. .. | 1.83 | 1.00 |
| 7. தஞ்சாவூர் .. .. .. | 1.00 | 0.83 |
| 8. இராமநாதபுரம் .. .. | 4 01 | 1.95 |
| 9. தர்மபுரி .. .. .. | 0.53 | 0.01 |



## கூட்டுறவு நூற்பாலைகளில் பருத்தி நூல் உற்பத்தி.

வினா 303—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 முதல் 1977 மார்ச் முடிய, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியான பருத்தி நூல் எத்தனை பேல்கள், நெம்பர் வாரியாக ?

(ஆ) 1975 முதல் 1977 வரை எந்தெந்த நெம்பர் நூல்கள் என்ன விலையில் விற்கப்பட்டன ?

(இ) மொத்தம் விற்பனையானது எவ்வளவு ?

(ஈ) எந்தெந்த மில்கள், என்னென்ன விலைகளில் பருத்தி கொள்முதல் செய்தன ?

விடை—(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) : *விவரமான அறிக்கை சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

## அரக்கோணம் எஃகு ஆலை.

வினா 304—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 முதல் இன்றுவரை அரக்கோணம் இரும்பு, எஃகு உருக்கு தொழிற்சாலையில் உற்பத்தியான பில்லட் உருக்கு வார்ப்படம் முறையே எத்தனை டன்கள் ?

(ஆ) இன்றுவரை இந்தக் கம்பெனிக்கு இலாபம் அல்லது நஷ்டம் எவ்வளவு ?

(இ) நஷ்டம் ஏற்பட்டிருந்தால், இதைத் தவிர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

---

*242ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

விடை—(அ) அரக்கோணத்திலுள்ள தமிழ்நாடு எஃகு ஆலை அதன் வர்த்தக உற்பத்தி தொடங்கிய ஆண்டான 1972–73 முதல் 1978–79 வரை உற்பத்தி செய்துள்ள உருக்குப் பாளங்கள், வார்ப்படங்கள் இவற்றின் அளவு பின்வருமாறு :—

| ஆண்டு. | உருக்குப் பாளங்கள். | வார்ப் படங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (உற்பத்தி டன்களில்.) | |
| 1972–73 .. .. .. | 8,130 | 107 |
| 1973–74 .. .. .. | 17,646 | 152 |
| 1974–75 .. .. .. | 19,952 | 261 |
| * 1975–76 .. .. .. | 12,055 | 217 |
| 1976–77 .. .. .. | 28,592 | 356 |
| 1977–78 .. .. .. | 23,078 | 449 |
| 1978–79 .. .. .. | 25,644 | 656 |
| 1979–80 .. .. .. (வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டின்படி). | 34,500 | 1,500 |

(ஆ) 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை இவ்வாலை அடைந்துள்ள மொத்த குவிந்த இழப்பு ரூ. 376 இலட்சங்கள். 1978–79-ல் எதிர்பார்க்கப்படும் இழப்பு ரூ. 59.16 இலட்சங்கள்.

(இ) உருக்குப் பாளங்களின் உற்பத்தியைப் பெருக்கவும், அதிக இலாபம் தரக்கூடிய சிறப்பு உருக்குப் பாளங்களை உற்பத்தி செய்து விற்கவும் அதிக உற்பத்திக்கேற்ப போதிய கழிவு இரும்புப் பொருள்கள் கிடைக்கும் வகையில், கழிவு இரும்புப் பொருள் களை இறக்குமதி செய்யவும், உற்பத்திச் செலவைக் குறைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இம்முயற்சிகளினால் 1979–80-ல் இந்த ஆலையில் நட்டம் குறையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

*1—12—1975 முதல் 2—5—1976 வரை.





## தமிழ்நாட்டில் உள்ள புறக்காவல் நிலையங்கள்.

வினா 305—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள போலீஸ் அவுட் போஸ்டுகளின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) அதை ஸ்டேஷன்களாக மாற்றும் சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

விடை—(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 185 புறக்காவல் நிலையங்கள் (போலீஸ் அவுட் போஸ்டுகள்) உள்ளன.

(ஆ) மற்றும் (இ) சென்னை மாநகரம், தலைமைச் செயலக ஊழியர் குடியிருப்பிலுள்ள ஜீ. 5 புறக் காவல் நிலையத்தை, காவல் நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரி சீலனையில் உள்ளது.

## இனாம் காரியந்தல் அரிசனக் காலனியில் நீர் தேக்கத் தொட்டி. அமைத்தல்.

வினா 306—திரு பெ. சு. திருவேங்கடம், திரு. கே. அப்துல் லத்தீப் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம் இனாம் காரியந்தல் அரிசன காலனியில் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி கட்டப்பட்டு முடிவு பெறாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் ,அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(இ) வேலை எப்போது முடிவடையும்?

விடை—வடாற்காடு மாவட்டம், துரிஞ்சாபுரம், இனாம் காரியந்தல் அரிசனக் குடியிருப்பில் ஒரு தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி அரிசன நலத்துறையால் ரூ. 7,500 மதிப்பீட்டில் கட்ட லேபர் காண்ட்ராக்ட் சொசைட்டியிடம் 1967 68-ல் ஒப்படைக்கப்பட்டு, இவ்வேலை கடக்கால் (தரைமட்டம்) வரை வேலை செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டு சிமென்ட் கிடைக்

காத காரணத்தாலும், ஒப்பந்தப்படி வேலையை முடிக்காததாலும் மேற்கண்ட வேலை 1970–71-ல் ரத்து செய்யப்பட்டு விட்டது என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். மேலும் இவ்வேலைக்கு ஒரு மோட்டார் மட்டும் வாங்கப்பட்டு அது ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் உள்ளது. இவ்வேலையை எடுத்துச் செய்ய தற்போது கூடியுள்ள விலைவாசிகளின்படி திருத்திய மதிப்பீடாக ரூ. 10,000 ஊராட்சி ஒன்றியம் அனுமதி அளித்து பின்னர், ஒன்றியத்தின் நிதிநிலை சரியில்லாத காரணத்தால் இவ்வேலை முடிக்கப்படவில்லை. இன்னும் மூன்று மாத காலத்தில் இவ்வேலையை முடிக்க அரிசன நல நிதியிலிருந்து ரூ. 8,500 கோரப்பட்டுள்ளது. உதவி கோட்டப் பொறியாளரின் மதிப்பீடு பெறப்பட்டபின் இது பற்றிய முடிவெடுக்கப்படும். இந்தக் கால தாமதத்திற்கு பொறுப்பாளர்களின் மீது நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சியாளர் கேட்கப்பட்டுள்ளார்.

## மகமாய்த் திருமணி அரிசனங்களுக்கு வீடுகள்.

வினா 307—திரு. ப. சந்திரன்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு, தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மகமாய்த் திருமணி அரிசன காலனி மக்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

விடை—"வட ஆற்காடு மாவட்டம், தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மகமாய்த் திருமணி அரிசன காலனி மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் இப்போது இல்லை".

## வன இலாகா மூலம் விற்பனை செய்யப்பெற்ற மர வகைகள்.

வினா 308—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் அரசு வன இலாகா மூலம் 1975–76, 1977-ம் வருடங்களில் எனனென்ன வகையான மரங்கள் விற்பனை செய்யப்பட்டன ?

(ஆ) அதன் மூலம் கிடைத்த வருமானம் என்ன ?





விடை—(அ) தமிழ்நாட்டில் அரசு வன இலாகா மூலம் 1975–76, 1976–77-ம் வருடங்களில் கீழ்க்கண்ட வகையான மரங்கள் விற்பனை செய்யப்பட்டன :—

1. தூக்க மரம்
2. தேக்கு மரம்.
3. வெண்தேக்கு
4. பிள்ளை மருது
5. அய்னி
6. வேங்கை
7. கொங்கு
8. கரிமருது அல்லது தெம்பா
9. இதர மரங்கள்.
10. தேக்கு கம்புகள்
11. தடசு
12. சந்தன மரம்

(ஆ) இதன் மூலம் 1975–76-ம் ஆண்டில் கிடைத்த வருமானம் ரூ. 2,91,14,648.80;

1976–77-ம் ஆண்டில் வருமானம் ரூ. 7,49,91,390.26

## பழையப் பேட்டையில் துணைக் காவல் நிலையம்

வினா 309—திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டத்தில் கிருட்டிணகிரி நகரத்தில் பழைய பேட்டையில் நகர துணை காவல் நிலையம் ஒன்று அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—இல்லை.

## முடியனூர் கிராம அரிசனங்களுக்கு வீடுகள்.

வினா 310—திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதியிலுள்ள முடியனூர் கிராமத்தில் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரமென்ன ?

விடை—(அ) உளுந்தூர்பேட்டை தொகுதியில் முடியனூர் கிராமத்தில் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு ஆணை பிறப்பிக்கவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

## கொமுன்தம்பட்டு அரிசனங்களுக்கு வீடுகள்.

வினா 311—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் கொமுன்தம்பட்டு அரிசன காலனியில் தற்போது வீடு கட்டி கொடுப்பதற்கு அரசு மதிப்பீடுகள் தயார் செய்து வேலை நிறுத்தப்பட்டுள்ளதா ?

விடை —தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் கொமுன்தம்பட்டு அரிசன காலனியில் வீடு கட்டிக் கொடுப்பதற்கு தற்போது திட்டம் ஏதும் இல்லை.

## ரூபாய் நோட்டு இரட்டிப்பு வழக்கில் கைது செய்யப்பெற்றோர்.

வினா 312—திரு. எஸ். கணேசன், திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ம் ஆண்டு முடிய ரூபாய் நோட்டுக்களை இரட்டித்து தருவதாகக் கூறி மோசடி செய்ததற்காக எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

(ஆ) அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை —(அ) & (ஆ) 1–4–1977 முதல் 30–6–1978 முடிய உள்ள காலத்திற்கான விவரங்கள் இணைப்பில்* தரப்பட்டுள்ளன.

---

*262 பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப் பெற்றுள்ளது.





## பர்கூர் தொகுதி அரிசனங்களுக்கு வீடுகள்.

வினா 313—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பர்கூர் தொகுதியில் உள்ள அரிசன மக்களுக்கு இந்த ஆண்டு எந்தெந்த கிராமங்களில் வீடுகள் கட்டிதர அரசு உத்தேசித்துள்ளதா?

விடை—தர்மபுரி மாவட்டம், பர்கூர் தொகுதியில் தொகரப்பள்ளி கிராமத்தில் உள்ள அரிசன மக்களுக்கு 1977–78-ல் 22 வீடுகளும், 1978–79-ல் மேலும் 22 வீடுகளும் கட்டித்தர அரசு உத்திரவிட்டுள்ளது.

## அவினாசி தொகுதி அரிசனங்களுக்கு வீடுகள்.

வினா 314—திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978–79ஆம் ஆண்டில் அவினாசி தொகுதியில் எந்தெந்த கிராமங்களில் அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

விடை —1978–79ஆம் ஆண்டில் அவினாசி தொகுதியில் அரிசனங்களுக்கு வீடுகள் கட்ட உத்தேசம் ஏதும் இல்லை.

வந்தார். அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பலனாக புகைவண்டி நிலையங்களைப் பொறுத்தமட்டில் திருட்டுகளின் எண்ணிக்கை சற்றே கூடியிருந்தபோதிலும், பொதுவாக ரயில்வே திருட்டுகளின் எண்ணிக்கை குறைந்தே உள்ளது.

(ஆ)

| ஆண்டு. | புகைவண்டி நிலையங்களில் நடந்த திருட்டுகளின் எண்ணிக்கை. | ரயில்வேயில் (புகை வண்டி நிலையங்கள் உட்பட) நடந்த மொத்தத் திருட்டுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1975 .. .. .. | 169 | 514 |
| 1976 .. .. .. | 165 | 500 |
| 1977 .. .. .. | 181 | 513 |
| 1978 (தகவலுக்காக) .. .. | 204 | 487 |

## *Research in Chicory Plantations.*

*Q.* 319.—THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) Whether any research into the Chicory Plantations in this State are being undertaken ; and

(*b*) If so, the details thereof.

விடை:—(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர், கொடைக்கானல், உதகமண்டலம் ஆகிய மூன்று இடங்களில் சிக்கரி பற்றிய ஆராய்ச்சித் திட்டம் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. சிக்கரி பயிருக்கான புதிய வித்துக்களைக் கண்டு பிடித்தல் மண்வளப்பாங்கு போன்ற ஆராய்ச்சிகள் கோயம்புத்தூரிலும், பயனுள்ள சிக்கரி விதைகளைப் பெருக்குதல் போன்ற பல்வேறு பிரச்சனைகளைப் பற்றிய ஆராய்ச்சி ஏற்காடு, உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய மலைப் பகுதிகளிலும் நடைபெற்று வருகிறது. ஆராய்ச்சி அண்மையில் தான் துவக்கப்பட்டுள்ளதால் அவைகளின் முடிவுகளைக் கண்டறிய மேலும் ஓராண்டு காலமாகலாம்.





## கள்ள நோட்டு அச்சடிப்பு சம்பந்தமாக கைதானோர்.

வினா 320—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ள நோட்டுகளையும் அவைகளை அச்சிடும் சாதனங்களையும் வைத்திருந்ததற்காக 1978ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் தேதி 3 பேர் கைது செய்யப்பட்டார்களா?

(ஆ) ஆம் எனில், அரசு அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

## தமிழகத்தில் உள்ள சிறிய சர்க்கரை ஆலைகள்.

வினா 321—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள சிறிய சர்க்கரை ஆலைகள் எத்தனை ?

(ஆ) அவைகளை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை யாவை ?

விடை—(அ), (ஆ) : சர்க்கரை ஆலைகளைப் பெரியவை, சிறியவை எனப் பிரிப்பதற்கு ஆதாரப் பூர்வமான அளவுகள் ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. பொதுவாக நாள் ஒன்றுக்கு 400 டன்களுக்குக் குறைவாக அரவைத் திறன் உள்ள ஆலைகள் சிறிய ஆலைகள் என்று கருதப்படலாம். இந்த அளவில் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த, நாளொன்றிற்கு 400 டன் அரவைத் திறன் கொண்ட தனியார் துறையில் உள்ள பாலார் சர்க்கரை ஆலை ஒன்றுதான் சிறிய சர்க்கரை ஆலை எனக் கருதப்படலாம். பல வருடங்களுக்கு முன் நிறுவப்பட்ட இந்த ஆலை தற்போது இயங்கவில்லை. ஒன்றிற்கு ஒன்று, திறனில் பொருந்தாத

பலதரப்பட்ட இயந்திரங்களைக் கொண்ட, இந்த ஆலையை பெரும் அளவில் செலவு செய்து, புதிதாக பல இயந்திரங்களை நிறுவினாலன்றி, லாபகரமாக இயங்குவது இயலாது.

## பொற்கொல்லர் மறுவாழ்வுக்கு வழங்கப்பெற்ற கடன்கள்.

வினா 322—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொற்கொல்லர் கடன் பாக்கிகளை வஜா செய்திட மத்திய அரசுக்கு மாநில அரசு அண்மையில் சிபாரிசு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—(அ), (ஆ): மைய அரசு பொற்கொல்லர்களின மறுவாழ்விற்காக அளிக்கப்பெற்ற கடன்களில் நிலுவையிலுள்ள தொகையை ஒரு பொது ஆணையின் மூலம் மாநில அரசுகள்/யூனியன் பிரதேசங்கள் தள்ளுபடி செய்யலாம் என்றும், மைய அரசு அதன் பங்கிற்கு மாநில அரசுகளுக்கு இந்த நோக்கத்திற்காக அளிக்கப்பெற்ற கடன்களின் நிலுவையை தள்ளுபடி செய்யும் என்றும் 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அறிவித்தது. இதன் மீது மைய அரசிடம் சில விளக்கங்கள் கேட்கப்பட்டு, அண்மையில் பெறப்பட்டன. இதுபற்றிய ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும்.

## திருவள்ளூர்—திருத்தணிப் பகுதியில் புதிய சர்க்கரை ஆலை.

வினா 323—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவள்ளூர்—திருத்தணிக்கும் இடையே கூட்டுறவுத் துறை மூலம் ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



## திருநெல்வேலி மாவட்டத்தில் மலைப் பயிர்த் தோட்டங்கள்.

வினா 324—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தேயிலை, காபி, ஏலம் போன்ற மலைப்பயிர்கள் உள்ள எஸ்டேட்டுகள் யாவை ?

(ஆ) அவைகள் ஒவ்வொன்றின் பரப்பளவு எவ்வளவு ?

(இ) அவைகளில் பணியாற்றும் நிரந்தர தொழிலாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை— (அ), (ஆ) & (இ) * விபரங்கள் இணைப்பில் காண்க.

வினா 325—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் மாஞ்சோலை எஸ்டேட் குரூப் (மாஞ்சோலை, நாலுமுக்கு, காக்காச்சி, வரத்தி, குதிரை வெட்டி) பகுதியில் தேயிலை, காபி, ஏலம் போன்ற பயிர்கள் எத்தனை ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யப்படுகிறது ?

(ஆ) அதில் பணியாற்றும் மொத்தம் நிரந்தர தொழிலாளர் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—(அ) & (ஆ) திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலை எஸ்டேட் தேயிலை, காபி மற்றும் ஏலம் பயிராகும் பரப்பளவும், நிரந்தர தொழிலாளர்கள் எண்ணிக்கையும் பின்வருமாறு :—

| பயிரின் பெயர். | பயிராகும் பரப்பளவு (ஹெக்டரில்). | நிரந்தர தொழிலாளர்கள் எண்ணிக்கை. | | மொத்தம். |
|---|---|---|---|---|
| | | ஆண். | பெண். | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| தேயிலை .. .. | 268 | 234 | 917 | 1,151 |
| காப்பி .. .. | 5 | .. | .. | .. |
| ஏலக்காய் .. .. | 30 | .. | — | .. |
| வேறு பயிர்கள் .. | 1,151 | .. | .. | .. |

* 266 ம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

### Exemption under Urban Land Tax Act.

*Q.* 326—THIRU N. KITTAPPA: Will the Honourable the Minister for Revenue be pleased to State—

(*a*) Whether the power to provide exemptions from the Urban Land Tax has been delegated to the Revenue Board ; and

(*b*) If so, the details thereof?

Ans.(*a*) Yes.

(*b*) In exercise of the powers conferred by Section 37 of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966), the Government have delegated the powers exercisable by them under section 27 of the said Act, to the Board of Revenue (Urban Land Ceiling and Urban Land Tax) in respect of the following:—

(i) Lands owned by all religious charitable and Philanthropic institutions under the control of the Hindu Religious and Charitable Endowment Department, Wakf Board, Arch Dioceses and the Church of South India.

(ii) Lands owned by educational institutions, which are recognised by the State Government or by any University in India.

(iii) Lands held by the educational institutions recognised by the Central Government or by the Central Board of Secondary Education, New Delhi.

### *Cases of eve-teasing in Madras.*

*Q.*327.—THIRU N. KITTAPPA: Will the Honourable the Chief Minister be pleased to state—

(*a*) Whether eve-teasing in Madras is on the increase during the last one year ; and

(*b*) If so, the number of cases of eve-teasing detected during the last three calendar years ?

Ans. (அ) ஆம்.

(ஆ)

| வருடம். | | | பதிவு செய்த வழக்குகளின் எண்ணிக்கை. | தண்டனை அளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 1976.. | .. | .. | 405 | 348 |
| 1977.. | .. | .. | 361 | 350 |
| 1978.. | .. | .. | 466 | 432 |
| | | | 1,232 | 1,130 |



### சிதம்பரம் மருத்துவ மனையில் உள்ள மருத்துவர்கள்

வினா 328— திரு. துரை. கலியமூர்த்தி—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசு மருத்துவமனையில் தற்போது எத்தனை டாக்டர்கள் உள்ளார்கள் ?

(ஆ) டாக்டர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் ஏதும் உண்டா ?

விடை - (அ) சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட டாக்டர்கள் பதவிகள் 3. இந்த மூன்று பதவிகளிலும் டாக்டர்கள் பணியாற்றி வருகின்றனர். இது தவிர 26—10—1978 முதல் ஒரு டாக்டர் ஒதுக்குப் பணியிடத்தில் (Reserve Duty) பணியாற்றி வருகிறார்.

(ஆ) ஆம். மேற்கூறிய மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட டாக்டர்களின் பதவிகளை உயர்த்துவதற்கான கருத்துரு ஒன்று மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

### *Traffic Control Room in Madras City.*

*Q.* 329—THIRU N. KITTAPPA: Will the Honourable the Chief Minister be pleased to state—

(*a*) Whether a 'Control Room' is to be set up in the Office of the Deputy Commissioner of Police, Traffic in Madras City ; and

(*b*) If so, the details thereof ?

Ans. (*a*) Yes.

(*b*) The Traffic Control Room is now functioning with a strength of 1 Reserve Inspector, 2 Reserve Sub-Inspectors and 6 Grade I Police Constables. The Traffic Control Room is being utilised for the following purposes:—

(i) By contacting any of the 52 Traffic Officers provided with two way radio communication on a separate frequency known as Traffic Channel, it is made possible to give these officers instructions on regulation of traffic, clearance of a traffic jam, attending to calls from the public regarding accidents and obstruction and also assisting the public for getting taxis, auto-rickshaws.

(ii) The Traffic Control Room helps and facilitates free movement of every important persons.

(iii) The Traffic Control Room helps to divert traffic away from the roads where big processions are taken.

(iv) Three new telephones have also been recently installed for the public to directly contact the Control Room for communicating accidents, traffic jam, etc. This telephone has a fancy number 29393 with hunting facility and wide publicity is being given to the public regarding this telephone number in the Police Exhibition and by Cinema slides.

Public can report to the Traffic Control Room about traffic obstruction and accidents or ask for assistance in securing taxi/Auto-rickshaws.

### ஆணை மேலகரம் அரிசனக் குடியிருப்புக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம்.

வினா 330— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம் மாயூரம் ஒன்றியம் ஆணை மேலகரம் பஞ்சாயத்தில் உள்ள அரிசனக் குடியிருப்புக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கக் கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை யாவை?

விடை (அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் மாயூரம் ஊராட்சி ஒன்றியம் ஆணை மேலகரம் ஊராட்சியைச் சேர்ந்த கீழ்மல்லியம் அரிசனக் குடியிருப்பில் ஏற்கனவே ஒரு ஆழ் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு 27-6-78 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும் அங்கு ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம் ஊரக வளர்ச்சித்துறையால் விரைவில் நிறைவேற்றப் படும்.

### உளவயல் வாய்க்காலின் குறுக்கே பாலம்.

வினா 331— திரு. த. புஸ்பராஜு: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடி யூனியன் அங்கம் விடுதி அரிசனக் காலனிக்குப் பக்கத்தில் உள்ள வாய்க் காலின் (சி. எம். பி.) குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



விடை (அ) மற்றும் (ஆ) இல்லை. ஆனால் சம்பந்தப்பட்ட ஊராட்சியோ அல்லது ஒன்றியமோ உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள இடத்தில் சிறு பாலம் (culvert) அமைப்பதற்கு ஆகும் செலவை ஏற்க முன்வந்தால் அதை வைப்புத் தொகை வேலையாகப் (Deposit works) பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்படும்.

### தஞ்சை நடுக்காவேரி காவல் நிலையம் இடமாற்றம்.

வினா 332— திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம் நடுக் காவேரியில், அமைந்துள்ள காவல் நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணங்கள் யாவை?

விடை— (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Special District Munsif Courts.*

Q. 333— THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Law be pleased to state the details of places where Special District Munsif Courts were set up during the calendar year, 1978?

Ans: No Special District Munsif's Courts were constituted during 1978.

### ஆண்டியப்பனூரில் பாலாற்றின் குறுக்கே அணை.

வினா 334— திரு ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஆண்டியப்பனூர் வழியாக ஓடும் பாலாற்றின் குறுக்கே அணைகட்டுவதற்காக திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—(அ) இல்லை.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம் ஆண்டியப்பனூர் கிராமம் அருகில் ஆண்டியப்பனூர் ஓடை, கோட்டாறு ஆகிய இரண்டும் கலக்குமிடத்தில் ஒரு நீர்த் தேக்கம் கட்டுவதற்கான திட்டம் ஆய்வுக்குப் பின் 1975-ல் கைவிடப்பட்டது. ஆயினும் இந்த திட்டம் மீண்டும் பொதுப்பணித்துறையினால் மறு ஆய்வு செய்யப் பட்டு வருகிறது.

[1979 நவம்பர் 2

**சிறு தொழில்களுக்கு கடன் வழங்கும் கூட்டுறவு வங்கிகள்.**

வினா 335— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிறு தொழில் வளர்ச்சிக்கு தமிழ்நாட்டில் கடன் வழங்கி வரும் கூட்டுறவு வங்கிகள் எத்தனை?

(ஆ) அதனை விரிவு படுத்த அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை யாவை?

விடை (அ) 67 கூட்டுறவு நகர வங்கிகள்.

(ஆ) சிறு தொழில் வளர்ச்சிக்கு அதிக அளவு கடன் வழங்க வேண்டுமென்று வங்கிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 1970–71 முதல் 1977–78 வரை 53 நகர வங்கிகளில் அரசு 20·21 லட்ச ரூபாய் பங்குமுதலீடு செய்துள்ளது. நகர கூட்டுறவு வங்கிகளுக்கு இக்கடன்கள் சம்பந்தமான தொழில் நுட்ப உதவி வழங்க 6 மத்திய கூட்டுறவு வங்கிகளில் தொழில் மற்றும் வணிகத்துறையிலிருந்து அலுவலர்களை கொண்டத் தொழில் நுட்பப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

**வாலிநோக்கம்—மாரியூர் தமிழ்நாட்டு சால்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்டில் உற்பத்தியாகும் உப்பு.**

வினா 336— திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வாலிநோக்கம் —மாரியூர் தமிழ்நாடு சால்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்டில் 1977–78-ம் ஆண்டு உற்பத்தியான உப்பு மொத்த டன் எவ்வளவு ?

(ஆ) விற்கப்பட்ட மொத்த உப்பின் தொகை எவ்வளவு?

விடை (அ) 9,900 டன்கள்.

(ஆ) ரூ. 4.42 இலட்சம்.

**தமிழக காவல் துறையில் பணிபுரிவோர்.**

வினா 337— திரு. கு. ரமணா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

தற்போது தமிழக போலீஸ் படையில் உள்ள தாழ்த்தப்பட்டோர், முஸ்லீம்கள், மலைஜாதியினர்கள் விகிதாசாரம் என்ன?



1979 நவம்பர் 2]

விடை— தற்போது தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரியும் தாழ்த்தப்பட்டோர், முஸ்லீம்கள், மலை ஜாதியினர்கள் விகிதாசாரம் :

| | | |
|---|---|---|
| தாழ்த்தப்பட்டோர் | .. | 18.1 % |
| முஸ்லீம்கள் | .. | 5.3 % |
| மலைசாதியினர்கள் | .. | 0.2 % |

**ஊசூர்—சிவநாதபுரம் குருமலைச் சாலை.**

வினா 338—திரு. ஆர். மார்க்கபந்து: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் அணைக்கட்டு தொகுதி ஊசூரிலிருந்து சிவநாதபுரம் குருமலை வரைக்கும் உள்ள மலைஜாதி மக்கள் அரிசன மக்கள் வாழும் பகுதிகளுக்கு தனியார் நிலங்களை ஆர்ஜிதம் செய்து ரோடு போடும் திட்டம் ஏதேனும் உண்டா?

விடை — மலைஜாதி மக்கள், அரிசன மக்கள் நன்மைக்காக தனிப்பட்டவகையில் ஊசூரிலிருந்து சிவநாதபுரம் குருமலை வரைக்கும்அரிசன நல நிதியிலிருந்து ரோடு போடும் கருத்துரு ஏதுமில்லை. சம்பந்தப்பட்ட ஊராட்சியிலுள்ள கிராம மக்கள் நலனுக்காக ஊராட்சி நிதியிலிருந்து ரோடு அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

**தர்மபுரி மாவட்டத்தில் பட்டு உற்பத்தி**

வினா 3 9—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79-ல் தர்மபுரி மாவட்டத்தில் பட்டு உற்பத்தி தீவிர திட்டக் குறியளவு எவ்வளவு?

(ஆ) இத்திட்டத்தினை ஊக்குவிக்கும் செயல் திட்டம் உள்ளதா?

விடை—(அ) 1978–79–ல் தர்மபுரி மாவட்டத்தில் பட்டு உற்பத்தி செயல் திட்டக் குறியீடு:—

(1) பரப்பளவு........500 ஏக்கராக்கள்.

(2) நிதி இலக்கு........ ரூ. 10.61 இலட்சங்கள்.

(ஆ) ஆம். 1979–80-ம் ஆண்டுக்கு தர்மபுரி மாவட்டம் உட்பட இம்மாநிலம் முழுவதற்குமாக பட்டுப்புழு வளர்ப்பு சம்பந்தமாக ரூ. 12.09 லட்சம் செலவில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த அண்மையில் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

## Magnesite Mining.

Q. 340 —THIRU N. KITTAPPA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) Whether the State Government has proposed to take up the Magnesite Mining in this State ; and

(b) If so, the details thereof ?

விடை—(அ) அண்டு (ஆ): திருவாளர்கள் சேலம் மாக்னசைட் நிறுவனத்திற்கு சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாத்தையங்கார்பட்டி கிராமத்தில் 578.92 ஏக்கர் நிலப்பரப்பில் மாக்னசைட் கனிப்பொருள் தோண்டுவதற்குக் கொடுக்கப்பட்டச் சுரங்கக் குத்தகைக்காலம் முடிந்த பின் அச்சுரங்கக் குத்தகைப் பகுதிகள் அரசு கனிப்பொருட்கள் வெட்டி எடுக்க ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளன. அப்பகுதிகளில் அரசின் சார்பாக "ரெய்சிங் காண்ட்ராக்டர்" என்ற முறையில் மாக்னசைட் கனிப்பொருள் வெட்டி எடுக்க "தமிழ்நாடு மாக்னசைட்" என்ற புதிய அரசு நிறுவனம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 6—2—1979 முதல் சுரங்க வேலை தொடங்கியுள்ளது.

## Bus accident near Sriperumbudur.

Q. 341 —THIRU N. KITTAPPA : Will the Hon. the Chief Minister be pleased to state ;—

(a) Whether a number of persons were killed in a bus accident near Sriperumbudur about the 17th December 1978 ; and

(b) If so, the details thereof ?

விடை—(அ) அண்டு (ஆ): 16-12-1978 அன்று ஸ்ரீபெரும்புதூருக்கு அருகில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் 8 பேர் இறந்து விட்டனர். அவர்களில் நால்வர் விபத்து நடந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மற்ற நால்வர் சென்னை அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பிறகு உயிரிழந்தனர், மற்றும் காயமடைந்த 42 பேர்கள் சென்னை அரசினர் மருத்துவ மனையிலும், ஸ்ரீபெரும்புதூர் அரசினர் மருத்துவமனையிலும் உட்பிரிவு நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். இதன் காரணமாக வழக்கு ஒன்று ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் இருந்து வருகிறது.





## மழையினால் பயிர்களுக்குச் சேதம்

வினா 342—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அருகிலுள்ள சிறுமலையில் சமீபத்தில் பெய்த பெருமழையினால் விளைந்த சேதம் எவ்வளவு ?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

விடை—(அ) மதுரை மாவட்டம் திண்டுக்கல் அருகில் உள்ள சிறு மலைப் பகுதியில் நவம்பர் 1978-ல் பெய்த மழையினால் கீழ்க்கண்ட பயிர்கள் பாதிக்கப்பட்டன :

| வரிசை எண். | பயிர் விபரம். | பாதிக்கப்பட்ட அளவு. |
|---|---|---|
| 1 | வாழை .. .. | 64.59 ஏக்கர்கள் (முழுச்சேதம்)<br>1,435.41 ஏக்கர்கள் (பாதியளவு சேதம்.) |
| 2 | எலுமிச்சை | 2,800 ஏக்கர்கள் (பகுதி சேதம்) |

(ஆ) மேற்படி பெருமழையினால் பாதிக்கப்பட்ட வாழைப் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 என்ற அடிப்படையில் சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைக்காரர்களுக்கு ரூ. 6,459 (ரூபாய் ஆறாயிரத்து நானூற்று ஐம்பத்து ஒன்பது) மானியமாக இம்மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 48 ஆகும். கடந்த டிசம்பர் மாதத்தில் பெய்த பெருமழையினால் இம்மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க சேதம் ஏதும் ஏற்படவில்லை. எலுமிச்சை மரங்களின் கிளைகள் ஒடிந்தும், பழங்கள் மழையினால் உதிர்ந்தும் சேதம் ஏற்பட்டன. இப்பழ மரங்களில் முழுஅளவு சேதம் குறிப்பிடத்தக்க அளவு இல்லை.

## அரசுக்குச் சொந்தமான உப்பள நிலங்கள்

வினா 343 — திரு. இரா. முத்தையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் அரசிற்கு சொந்தமான உப்பள நிலங்களின் பரப்பு எவ்வளவு ? மாவட்ட வாரியாக ?

(ஆ) அதில் எவ்வளவு நிலங்கள் குத்தகையில் உள்ளன ? அதிலிருந்து ஆண்டு வருமானம் எவ்வளவு ?

(இ) தரிசாக உள்ள அரசு நிலங்களை உப்பளமாக பயன் படுத்த ஏதாவது அரசிடம் திட்டம் உண்டா ?

விடை—(அ) அண்டு (ஆ).

| மாவட்டத்தின் பெயர். | அரசுக்குச் சொந்தமான உப்பள நிலங்களின் பரப்பு. | குத்தகை நிலத்தின் பரப்பு. | ஆண்டு வருமானம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ஏ.செ. | ஏ.செ. | ரூ.பை. |
| 1. தென் ஆற்காடு | 1,125.07 | 1,098.77 | 5,679.95 |
| 2. தஞ்சாவூர் | 35,538.38 | 16,954.98 | 2,00,308.00 |
| 3. இராமநாதபுரம் | 6,251.33 | 5,867.22 | 49,849.20 |
| 4. கன்னியாகுமரி | 982.03 | 821.47 —500 | 24,644.25 |
| 5. திருநெல்வேலி | 2,181.76 | 574.58 | 1,06,214.00 |
| 6. செங்கல்பட்டு | 6,960.27 | 3,947.69 | 336.00* (30—6—77 முடிய) |

* மாருதி கிரிஸ்டல் உப்பு கம்பெனிக்கு குத்தகை அளித்துள்ள 3,611.69 ஏக்கருக்கு குத்தகை வரி நிர்ணயம் செய்யவில்லை.

(இ) தரிசாக உள்ள அரசு நிலங்களை உப்பளமாகப் பயன்படுத்த தென் ஆற்காடு, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் திட்டம் ஏதும் இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் தரிசு நிலங்களை உப்பளமாகப் பயன்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் விளாத்திகுளம் வட்டம், வைப்பார் கிராமத்தில் 150 ஏக்கர் நிலத்தில் கூட்டுறவு முறையில் 30 இலங்கை பர்மா அகதிகளுக்காக ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 2,419.78 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை முறையே மாருதி கிருஷ்டல் சால்ட் கம்பெனிக்கு (M/s. Marthi Crystal Salt Company Limited) கூடுதல் நிலம் குத்தகைக்கு வழங்கும் பொருட்டும் மற்றும் செய்யூர் கூட்டுறவு உப்பு உற்பத்தி விநியோகஸ்தர்கள் சங்கத்திற்கு, சில தனி நபர்களுக்கும் குத்தகை புதுப்பித்தலும் பரிசீலனையில் உள்ளது. மேலும் பக்கிங்காம் கால்வாயின் இருமருங்கிலும் உள்ள அரசுக்குச் சொந்தமான நிலங்களைப் பயன்படுத்தி உப்பு உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அறிக்கை அனுப்புமாறு தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு அரசு உத்திரவிட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் வடக்காடு, மரவக்காடு என்ற கிராமங்களில் 5,400 ஏக்கர் பரப்புள்ள காட்டிலாகா நிலங்களில் ஒரு உப்பு தொழிற்சாலை அமைக்குமாறு தமிழ்நாடு உப்பு உற்பத்தி நிறுவனத்திற்கு அரசு உத்திரவிட்டுள்ளது.



## Automatic doors for P.T.C. buses.

Q. 344 —Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) Whether automatic flush doors are to be fixed to buses operated by the Pallavan Transports in Madras City ; and

(b) If so, the details thereof ?

Ans.—(a) Yes.

(b) It has been decided to provide automatic doors to the buses now under construction and to be constructed at the Pallavan Transport Corporation Workshop at Chromepet. Presently the Corporation has finalised a design for the doors and has fabricated an automatic door. This has to be tested extensively in operation on line and the performance watched. In the meantime, the Corporation has taken up the procurement of doors from the leading manufacturers.

## விவசாய வருமான வரிக்குட்பட்ட நிலங்கள்

வினா 345—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976—77 ஆண்டில் விவசாய வருமான வரிக்குட்பட்ட நஞ்சை நிலங்கள், புஞ்சை நிலங்கள், மலைத்தோட்ட நிலங்கள் முறையே எத்தனை ஏக்கர்கள் ?

(ஆ) மேற்படி ஆண்டில் விதிக்கப்பெற்ற விவசாய வருமான வரி எவ்வளவு ?

(இ) அந்த ஆண்டில் 1976-77-க்கும் அதற்கு முந்திய ஆண்டுகளில் பாக்கி தொகைகளும் வசூலிக்கப்பட்டது எவ்வளவு ?

(ஈ) 1976—77 ஆண்டில் வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது எவ்வளவு ?

(உ) 1976—77 ஆண்டில் விவசாய வருமான வரி நிர்வாக செலவு எவ்வளவு ?

விடை—

| | ஏக்கர். |
|---|---|
| (அ) (1) நஞ்சை நிலங்கள் .. .. | 6,09,738·41 |
| (2) புஞ்சை நிலங்கள் .. | 13,57,963·52 |
| (3) மலைத்தோட்ட நிலங்கள்.. | 1,64,045·85 |

(ஆ) ரூ. 3,02,16,327.55.

(இ) 1976-77 ஆண்டில் கேட்பில் வசூல் ரூ. 2,07,19,448.45.
1976-77 ஆண்டில் முந்திய ஆண்டுகளின் பாக்கியில் வசூல் ரூ. 45,04,112.54.

(ஈ) ரூ. 1,26,04,863.55

(உ) ரூ. 36,79,000.

## கோவை மாவட்டத்தில் ஓய்வூதியம் கோரும் விண்ணப்பங்கள்.

வினா 346—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு நிதியமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1978 ஆம் ஆண்டில் முதியோர் ஓய்வூதியம் கேட்டு மொத்தம் எத்தனை பேர் விண்ணப்பம் செய்து கொண்டனர் ?

(ஆ) மொத்தம் எத்தனை பேருக்கு முதியோர் ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டது ?

விடை—மதிப்பிற்குரிய உறுப்பினர் கேட்கும் தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | வரப்பெற்ற விண்ணப்பங்கள். | முதியோர் ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டவர்கள். | | |
|---|---|---|---|---|
| | | ஆண்கள். | பெண்கள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| முதியோர் ஓய்வூதியம் | 1,127 | 196 | 277 | 473 |
| உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியம். | 326 | 79 | 41 | 120 |
| விதவைகள் ஓய்வூதியம் | [illegible] | .. | [illegible] | [illegible] |





## கோவை பொதுப்பணித்துறை சுற்றுலா மாளிகையின் தொலைபேசிச் செலவு.

வினா 347—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1978 ஜனவரி முதல் இன்றுவரை கோவை பொதுப்பணித் துறை சுற்றுலா மாளிகையில் ஏற்பட்ட தொலைபேசிச் செலவு எவ்வளவு ?

விடை—1978 ஜனவரி முதல் இறுதிவரை (23—2—1979) கோவை பொதுப்பணித்துறை சுற்றுலா மாளிகையில் ஏற்பட்ட தொலைபேசிச் செலவு ரூ. 50,817.70 ஆகும்.

## கோவை மாவட்டத்தில் விதவைகள் உதவித்தொகைக்கான விண்ணப்பங்கள்.

வினா 348—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மாவட்டத்தில் விதவைகள் உதவித் தொகை கேட்டு 1978 ஜனவரி முதல் இன்றுவரை விண்ணப்பித்தது எவ்வளவு பேர் ?

(ஆ) எவ்வளவு பேருக்கு உதவித்தொகை தரப்பட்டுள்ளது ?

விடை—(அ) 1978-ம் ஆண்டு சனவரித் திங்களிலிருந்து 1979-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரை விதவைகள் உதவித் தொகை கோரி விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை 682.

(ஆ) 205 பேருக்கு உதவித்தொகை ஒப்பளிக்கப்பட்டது.

## பிளவக்கல் அணை திட்டப் பணிக்கான செலவு.

வினா 349—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதியில் பிளவக்கல் அணை திட்டப்பணிக்கு ஆன செலவு எவ்வளவு ?

(ஆ) அதன் மூலம் இப்பொழுது எத்தனை ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கப்படுகிறது ?

(இ) அந்த திட்டத்தைப் புதுப்பிக்க அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா ?

[1979 நவம்பர் 2

விடை—(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பிளவக்கல் நீர்த்தேக்கத் திட்டத்திற்கு மார்ச் 1979-ல் கிடைக்கப்பெற்ற அறிக்கையின் படி ஆன மொத்த செலவு ரூ. 212·56 இலட்சங்கள்.

(ஆ) இத்திட்டத்தின் மூலம் பாசன வசதி பெறும் நிலங்கள் பற்றிய விபரங்கள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன:—

1977–78-ம் ஆண்டு தண்ணீர் கீழே குறிப்பிட்டவாறு வழங்கப்பட்டது :—

| | | ஏக்கர் |
|---|---|---|
| கண்மாய்கள் மூலம் முதல் சாகுபடிக்கு .. | .. | 6,783.68 |
| கண்மாய்கள் மூலம் இரண்டாம் சாகுபடிக்கு | .. | 1,948.97 |
| 1978–79-ம் ஆண்டு— | | |
| இத்திட்டத்தின்கீழ் 23 கண்மாய்கள் மூலம் முதல் சாகுபடியில் பலனடைந்த நிலம். | | 5,734·10 |

(இ) இத்திட்டம் சமீப காலத்தில்தான் முடிக்கப்பட்டமை யால் இத்திட்டத்தைப் புதுப்பிக்க அவசியம் ஏதும் இல்லை.

## மருத்துவக் கல்விக்கு அரிசன மாணவர்களுக்கு ஒதுக்கப் பெற்ற இடங்கள்.

வினா 350—திரு. இ. தமிழரசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1978-79-இல் மருத்துவ கல்விக்கான தேர்வில் அரிசன மாணவர்களுக்கு ஒதுக்கப்பெற்ற 18 சதவிகிதம் முழுவ தும் சேர்க்கப்பட்டுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேர்கள் ?

(இ) தகுதி அடிப்படையில் எத்தனை அரிசன மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் ?

விடை—(அ) ஆம்.

(ஆ) 177 மாணவர்கள்.

(இ) மேற்கண்ட 177 மாணவர்களைத் தவிர தகுதி அடிப் படையில் (Merit basis) பொது இடங்களில் (General pool) ஐந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



1979 நவம்பர் 2]

## பேரணாம்பட்டு பகுதியில் தோல் பொருள் தொழில்.

வினா 351—திரு. இ. தமிழரசன் : மாண்புமிகு கிராமத் தொழில்துறைஅமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வடாற்காடு மாவட்டம், பேரணாம்பட்டு வட்டாரத்தில் தோலை மையமாக வைத்து துணை பொருட்கள் செய்யும் சிறு தொழிற்சாலைகளை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—இது பற்றிய திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

## தஞ்சை மாவட்டத்தில் முசுக்கொட்டைச் செடி சாகுபடி.

வினா 352—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1978–79 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் முசுக் கொட்டை செடி (Sericulture) சாகுபடி செய்யப்பட்டுள்ள பரப்பளவு எவ்வளவு ?

(ஆ) மானியத் தொகையில் விதைச் செடிகள் (பதியம்) வழங்கப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், ஏக்கர் ஒன்றுக்கு வழங்கப்படும் மானியம் எவ்வளவு ?

விடை—(அ) 1978–79 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் முசுக்கொட்டை செடிகள் 200 ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) விதைக் குச்சிகளை மான்யமாக அளிக்க மத்தியப் பட்டு வாரியத்திலிருந்து ஆணை தாமதமாகக் கிடைத்ததால், விதைக் குச்சிகளை மான்யமாகக் கொடுக்க இயலவில்லை.

(இ) போக்குவரத்துக்கான சிலவு, மானியத் தொகையில் ஈடுசெய்யப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்திலிருந்து தஞ்சை மாவட்டத்திற்கு விதைக் குச்சிகள் கொண்டு சென்று விநியோ கிக்க லாரி போக்குவரத்து (வாடகையாக) கட்டணம் அதிக பட்சம் ஒரு ஏக்கருக்கு ரூ. 200 ஆக செலவிடப்பட்டது. இந்த ஆண்டில் மொத்தமாக லாரி போக்குவரத்து வாடகையாக ரூ. 28,132 முழுமையும் மான்யமாக தீவிரப் பட்டு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டுள்ளது. மற்றும் தீவிரப் பட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு பட்டுக்கூடு அங்காடி கும்பகோணத் தில் திறக்கப்பட்டுள்ளது. மற்றும் வங்கிகளின் கடன் உதவி மூலமாக 59 விவசாயிகளுக்கு புழு வளர்ப்பு சாதனங்களும் மற்றும்

[1979 நவம்பர் 2

புழு வளர்ப்பு அறை கட்டுவதற்கும் ரூ. 25,110 மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை, சுமார் 14,000 நோயற்ற பட்டு முட்டை தொகுதிகள் கொடுக்கப்பட்டு 3,000 கிலோவுக்கு மேல் பட்டுக்கூடுகள் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

## தஞ்சையில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

வினா 353—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறைஅமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா : —

(அ) தஞ்சையிலுள்ள சோழன் பணிமனையில் இரவில் பேருந்துகள் நிற்பதற்கு போதுமான இடவசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் இதற்கென இன்னொரு பணிமனை கட்ட நடவடிக்கை எடுக்கப்பெற்றுள்ளதா ?

விடை—(அ) ஆம்.

(ஆ) தஞ்சை புறநகர்ப் பகுதியில் மேலவேலி கிராமத்தில் சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு இரண்டாவது பணிமனைக் கட்டிடம் கட்டும் வேலை 30–9–79-ல் முடிவடையும். அதுவரை இரண்டாவது யூனிட்டில் உள்ள பேருந்துகள் முதல் யூனிட்டில் நிறுத்தப்படுகின்றன. அங்கு போதிய இடவசதியிருக்கிறது.

## சிரநாய்க்கன் பாளையம் தாய் சேய்நல விடுதிக் கட்டிடம்.

வினா 354—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பேரூர் ஒன்றியம் தெலுங்குப்பாளையம் பேரூராட்சி சிரநாய்க்கன்பாளையத்தில் கட்டிய தாய்-சேய் நல விடுதிக் கட்டிடம் பழுதடைந்ததை அரசு அறியுமா ?

(ஆ) கட்டிட மதிப்பு என்ன ?

(இ) எந்த ஆண்டு கட்டப்பட்டது ?

(ஈ) உடைய காரணம் யாது ?

(உ) எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



1979 நவம்பர் 2]

விடை—(அ) அறியும்.

(ஆ) ரூ. 16,500.

(இ) 1971 ஆம் ஆண்டு.

(ஈ) களிமண் பூமியில் கட்டப்பட்டதால் கடைகால் சற்று இறங்கியுள்ளது. 1978 ஆம் வருட மழையின்போது கட்டடத்தின் சுவர் மேலும் பழுதடைந்துள்ளது.

(உ) கட்டிடத்தைச் சீர்படுத்த வெள்ள நிவாரணப் பணியில் வேலை சேர்க்கப்பட்டு சீக்கிரம் சீர்திருத்தப்படும்.

## விவசாயத்திற்கு புதிய மின் இணைப்பு கொடுக்கப் பெற்ற பம்பு செட்டுகள்.

வினா 355—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் 1977–78, 1978–79-ம் ஆண்டுகளில் விவசாயத்திற்கு புதிய மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை பம்பு செட்டுகள் ?

(இ) எத்தனை பேர் இணைப்பு கேட்டவர்கள் ?

விடை—(அ) ஆம்.

(ஆ) 61,668.

(இ) 1,34,796 பேர்.

## வெள்ளத்தால் பழுதடைந்த ஏரிகள் சீரமைப்புப் பணி.

வினா 356—திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உளுந்தூர்பேட்டை யூனியன், தியாகதுருகம் யூனியன், தல்லூர் யூனியன் ஆகிய பகுதிகளில் உள்ள ஏரிகளில் 1977–78 வெள்ளத்தில் பழுதடைந்த ஏரிகள் எத்தனை ?

(ஆ) பொதுப்பணித்துறை மூலம் வேலை செய்ய எத்தனை ஏரிகளுக்கு அறிக்கை வந்துள்ளது ?

(இ) எத்தனை ஏரிகள் வேலை செய்ய அனுமதி அளித்துள்ளது ?

[1979 நவம்பர் 2

விடை—(அ) நவம்பர் 1977 வெள்ளத்தில் சேதமடைந்த ஏரிகள்— (1) உளுந்தூர்பேட்டை யூனியன் : 4 (நான்கு).

1. அங்கனூர் ஏரி.
2. அரளி ஏரி.
3. புல்லூர் ஏரி.
4. மழவராயனூர் பெரிய ஏரி.

(2) தியாகதுருகம் யூனியன் : எந்த ஏரியும் சேதமடையவில்லை.

(3) நல்லூர் யூனியன் : 4 (நான்கு).

1. கீரனூர் ஏரி.
2. தீவலூர் ஏரி.
3. மன்னப்பாடி ஏரி.
4. நகர் ஏரி.

நவம்பர் 1978 வெள்ளத்தில் சேதமடைந்த ஏரிகள் விவரம்.—

(1) உளுந்தூர்பேட்டை ஒன்றியம் : எந்த ஏரியும் சேதமடையவில்லை.

(2) தியாகதுருகம் ஒன்றியம் : எந்த ஏரியும் சேதம் டையவில்லை.

(3) நல்லூர் ஒன்றியம் : ஒன்று மட்டும் மன்னம்பாடி ஏரியின் மதகு மட்டும் பழுதடைந்தது.

(ஆ) 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்த எட்டு ஏரிகளும் பொதுப்பணித்துறையைச் சார்ந்தவை. இவை எல்லாவற்றிற்கும் வெள்ளச் சேத அறிக்கை கிடைக்கப் பெற்றது. 1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் சம்மந்தமாக மேற்குறிப்பிட்ட மன்னம்பாடி ஏரி மட்டும் மராமத்து செய்வது பற்றி அறிக்கை வந்தது.

(இ) 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் சேத முற்று எல்லா ஏரிகளிலும் வெள்ள நிவாரண வேலைகள் செய்து முடிக்கப்பட்டன.

1978–ம் ஆண்டு நவம்பர் வெள்ளத்தில் பழுதடைந்த மன்ன்ம்பாடி ஏரி, மதகு மராமத்து செய்வது பற்றி வந்த அறிக்கை பேரில் மராமத்து வேலை, வரும் பாசனப் பருவத்துக்கு முன் செய்து முடிக்கப்படும்.



1979 நவம்பர் 2]

## கருந்துவாம்பாடி—பெரிய கிளாம்பாடி சாலை.

வினா 357—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :—

(அ) கடலூர் சித்தூர் சாலையிலிருந்து கருந்துவாம்பாடி, காட்டுப்புத்தூர்: உதிரம்பூண்டி, பெரிய கிளாம்பாடி வழியாக அகரம் சிப்பந்தி காஞ்சி சாலையை இணைக்கும் சாலையை கப்பி சாலையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீடு ?

(இ) எப்போது வேலை துவங்கப்படும் ?

விடை—(அ), (ஆ) அண்டு (இ)—இல்லை.

## நல்லூர் கிராம மாணவர் விடுதியிலுள்ள மாணவர்கள்.

வினா 358—திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) விருத்தாசலம் வட்டம், நல்லூர் கிராமத்தில் உள்ள மாணவர் தங்கும் விடுதியில் எத்தனை மாணவர்கள் தங்கி உள்ளார்கள் ?

(ஆ) தங்கும் விடுதியில் சேருவதற்கு எத்தனை மாணவர்கள் தகுதி படைத்தவர்கள் ? தகுதி பெற்ற எல்லா மாணவர்களும் சேர்ந்துக் கொள்ள அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—(அ) 30 மாணவர்கள்.

(ஆ) 30 மாணவர்கள் மட்டும் தங்கியிருக்க ஆணை உள்ளது மேலும் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சில விடுதிகளில் ஒப்பளிப்பு எண்ணிக்கைக்குத் தக்கவாறு மாணவர்கள் சேராமல் காலியிடங்கள் இருந்தால், அவ்வாறு காலியாக உள்ள இடங்களை தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள தேவையான பிற இடங்களுக்கு மாற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து அவ்விடுதிக்கு அதிகமான தகுதி உள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள்வந்து ஒப்பளிப்பு எண்ணிக்கையான 30-க்கு மேல் சேர்க்க முடியாத காரணத்தால் தள்ளுபடி செய்யக்கூடிய நிலை ஏற்பட்டால் அவ்விடுதியில் ஒப்பளிப்பு எண்ணிக்கை 30-லிருந்து அதிகமாக உயர்த்த கருத்துக்கள் வந்தால், அரசு பரிசீலித்து தக்க ஆணைகள் வழங்கும்.

[1979 நவம்பர் 2

## திருவண்ணாமலைக் கோட்டத்தில் ஆலயப் பணிகளுக்கான நிதி.

வினா 359—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவண்ணாமலை வட்டம் அறநிலையத்துறை, ஆய்வாளர் தக்கார் பதவி வகிக்கும் ஆலயங்களில் நிதி வசதி உள்ள ஆலயங்களில் இருந்து நிதி இல்லாத ஆலயங்களுக்கு பணம் செலவழிக்க நடவடிக்கை எடுத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை ஆலயங்களுக்கு அவ்வாறு செலவழிக்கப்பட்டுள்ளது ?

விடை—(அ) அண்டு (ஆ) திருவண்ணாமலை கோட்ட ஆய்வர், தக்கார் என்ற முறையில் தனது பொறுப்பில் உள்ள ஆலயங்களில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது அத்தியாவசியமான செலவுகளுக்காக பணவசதியுள்ள ஆலயங்களிலிருந்து கடனாகப் பெற்று, நான்கு ஆலயங்களுக்கு கடனாகக் கொடுத்துள்ளார்.

## உடையார்பாளையம் பகுதியில் காகிதத் தொழிற்சாலை.

வினா 360—திரு. வெ. கருணாமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தொழில் வளத்தில் மிகவும் பிற்பட்டுள்ள திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் பகுதியில் காகித தொழிற்சாலை ஒன்றை துவக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் பகுதியில் காகிதத் தொழிற்சாலை துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், திருச்சி மாவட்டம் மகேந்திர மங்கலம் என்னும் இடத்தில் கையால் காகிதம் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தினால் ஏற்கனவே நிறுவப்பட்டிருக்கிறது.



1979 நவம்பர் 2]

## திருவில்லிப்புத்தூர் தொகுதியில் வீட்டுமனை கோரி வரப்பெற்ற மனுக்கள்.

வினா 361—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிப்புத்தூர் தொகுதியில் இருந்து 1976 ஏப்ரல் முதல் 1978 டிசம்பர் முடிய வீட்டு மனை கோரி வந்த மனுக்கள் எத்தனை ?

(ஆ) எத்தனை பேர்களுக்கு வீட்டு மனை வழங்கப்பட்டது?

(இ) வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கும் மனுக்கள் எத்தனை ?

விடை—(அ) 507.

(ஆ) 355.

(இ) 27.

## திருவில்லிப்புத்தூர் தொகுதியில் உச்சவரம்பின் கீழ் எடுக்கப்பெற்ற நிலங்கள்.

வினா 362—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1976-78 ஆம் ஆண்டில் உச்சவரம்பின் கீழ் திருவில்லிப்புத்தூர் தொகுதியில் எடுக்கப்பட்ட நிலம் எவ்வளவு ?

(ஆ) யார் யாரிடமிருந்து எவ்வளவு நிலம் எடுக்கப்பட்டது?

(இ) அதில் நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் எத்தனை ஏக்கர் ?

விடை—(அ) 1976 ஆம் ஆண்டில் 113·14 ஏக்கர். 1977-78 ஆம் ஆண்டில் ஒன்றுமில்லை.

(ஆ) 6—5—1976 அன்று எட்டயபுரம் முன்னாள் ஜமீன்தாரிடமிருந்து 65·02 ஏக்கர் உபரி நிலங்களும், 10—4—1976 அன்று திருவாலி அய்யனார் நாடாரிடமிருந்து 48.12 ஏக்கர் உபரி நிலங்களும் எடுக்கப்பட்டன.

(இ) மேலே குறிப்பிட்ட 113·14 ஏக்கர் உபரி நிலங்களில் 70·65 ஏக்கர் நிலங்கள் 1976 ஆம் ஆண்டிலும், 42·49 ஏக்கர் நிலங்கள் 1978 ஆம் ஆண்டிலும் மொத்தம் 150 நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இவை தவிர 1976-க்கு முன்னர் அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்ட 31·49 ஏக்கர் நிலங்களும் 1978 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன.

[1979 நவம்பர் 2

முகவை மாவட்டத்தில் மூன்று சக்கர சைக்கிள் கோரும் விண்ணப்பங்கள்.

வினா 363—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1978-79-ஆம் ஆண்டில் முகவை மாவட்டத்தில் மூன்று சக்கர சைக்கிள் வண்டிக்கு, முடமானவர்கள் எத்தனை பேர் மனுச் செய்துள்ளனர் ?

(ஆ) அவர்களில் எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டது?

(இ) தொகுதி வாரியாக.

விடை—(அ) 120 பேர் மனுச் செய்துள்ளனர்.

(ஆ) 50 பேருக்குக் கொடுக்கப்பட்டது.

(இ)

| சட்டமன்றப் பேரவைத் தொகுதியின் பெயர். | முச்சக்கர வண்டிக்கு மனுச் செய்தவர்களின் எண்ணிக்கை. | முச்சக்கர வண்டி வழங்கப்பட்டோரின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| திருப்பத்தூர் .. .. | 2 | .. |
| சிவகங்கை .. .. .. | 9 | 3 |
| கடலாடி .. .. .. | 3 | 1 |
| ராஜபாளையம் .. .. | 4 | 2 |
| சிவகாசி .. .. .. | 8 | 2 |
| திருவில்லிப்புத்தூர் .. .. | 7 | 4 |
| மானாமதுரை .. .. | 12 | 6 |
| பரமகுடி .. .. .. | 5 | 4 |
| விருதுநகர் .. .. .. | 10 | 3 |
| ராமநாதபுரம் .. .. | 10 | 5 |
| சாத்தூர் .. .. .. | 4 | 1 |
| அருப்புக்கோட்டை .. .. | 19 | 9 |
| காரைக்குடி .. .. .. | 2 | 1 |
| முதுகுளத்தூர் .. .. .. | 17 | 6 |
| திருவாடானை .. .. | 7 | 3 |
| இளையாங்குடி .. .. | 1 | .. |
| | 120 | 50 |



1979 நவம்பர் 2]

வெள்ளம்பள்ளி ஏரிக்கு கிருஷ்ணகிரி அணையிலிருந்து தண்ணீர்.

வினா 364—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம் ஓரப்பம் ஊராட்சி வெள்ளம்பள்ளி ஏரிக்கு கிருஷ்ணகிரி அணையிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன ?

விடை—(அ) அத்தகையத் திட்டம் ஏதும் தற்பொழுது பரிசீலனையில்இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வரட்டனப்பள்ளி கிராமத்தில் காவல் நிலையம்.

வினா 365—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தாலூக்கா, வரட்டனப் பள்ளி கிராமத்தில் காவல் நிலையம் ஒன்று அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும்?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேப்பம்பட்டியருகில் பாசன ஏரி அமைக்கும் திட்டம்.

வினா 366—திரு. எச்.ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி அருகில் பாசன ஏரி ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விபரம் யாது ?

விடை—(அ) & (ஆ) : தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி கிராமத்தின் அருகில் ஓடும் வரட்டாற்றின் குறுக்கே ஏரி அமைப்பதற்கு ரூ. 8.6 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தினால் 176 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கீழ்மணலூர் கிராமத்தில் பாலாற்றுக்குத் தடுப்புச் சுவர்.

வினா 367—திரு. ரா. மார்க்கபந்து: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், அணைக்கட்டு தொகுதி கீழ்மணலூர் கிராமத்தை பாலாறு வேகமாக அரித்துக் கொண்டு வருவதை தடுக்கும் வகையில் தடுப்புச் சுவர் கட்ட நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—கீழ்மணலூர் கிராம எல்லையில் பாலாற்றின் வலது கரையில் 4 அல்லது 5 அடி உயரம் கரைகள் உள்ளன. அவற்றின் அகலம் ஏறத்தாழ 20 அடி. ஆற்றின் கரைகள் அரிக்கப்படுவதாக ஆய்வுக்குப் பிறகு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டும் கரை அரிப்பு ஏற்படாமல் இருக்கும் பொருட்டு 1,000 அடி நீளத்திற்கு சரிவுக்கல் பொருத்தப்பட வேண்டும். சரிவுக்கல் பொருத்துவதற்கான திட்ட மதிப்பீடு தல அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## வெள்ளாறு, பரவனாறு, கொள்ளிடம் வடிகால்களிலிருந்து கடலில் வடியும் நீர் அளவு.

வினா 368—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வெள்ளாறு, பரவனாறு, கொள்ளிடம் ஆகிய மூன்று வடிகாலில் மட்டும் எத்தனை சதவிகித தண்ணீர் கடலில் வடிகிறது?

விடை—வெள்ளாற்றில் 20 சதவிகிதம் நீர் கடலில் கலக்கிறது. பரவனாறு என்பது கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள பெருமாள் ஏரியின் உபரி நீராகும். இதில், உபரி நீர் ஓட்டம்பற்றிய விவரங்கள் இல்லை. கொள்ளிடம் காவிரியின் ஒரு பகுதியாகும். காவிரி நீர் அனைத்தும் முழுமையாக பயன்படுத்தப்பட்டு விடுவதால், உபரியாகும் நீர் அநேகமாக இல்லை என்றே சொல்லலாம்.

## சிதம்பரம் பேருந்து நிலையம் அருகே தீ விபத்து.

வினா 369—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 10—1—1979 ல் சிதம்பரம் பேருந்து நிலையம் அருகில் 50 கடைகளுக்கு மேலாக தீக்கு இரையானது உண்மையா?

(ஆ) ஆம் எனில், தீயணைப்பு வண்டி அழைக்கப்பட்டு தீயணைக்கப்பட்டதா?



விடை—(அ) மற்றும் (ஆ): 10—1—1979 அன்று மாலை சுமார் 3-30 மணி அளவில் சிதம்பரம் பேருந்து நிலையம் அருகில் தீவிபத்து ஏற்பட்டது. அத் தீவிபத்தில் 46 தங்குமிடங்களுடன் கூடிய கூரைவேய்ந்த கடைகள் அழிந்தன. செய்தி அறிந்தவுடன் சிதம்பரம் தீயணைப்புப் படையினர் தீவிபத்து ஏற்பட்ட இடத்திற்கு தீயணைப்பு வண்டிகளுடன் விரைந்து சென்று அத் தீயை அணைத்து விட்டனர்.

## வட ஆற்காடு மாவட்டத்தில் புயல், மழை நிவாரணத் திட்டத்தின் கீழ் பழுதுபார்க்கப்பெற்ற பள்ளிக் கட்டிடங்கள்.

வினா 370—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1977-78 ல் புயல், மழை நிவாரணத் திட்டத்தின்கீழ் பழுது பார்க்க எடுத்துக் கொள்ளப்பட்ட அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கட்டிடங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் மதிப்பீடு என்ன?

(இ) முடிவுற்றவை எத்தனை?

விடை—(அ) 1977-78 ல்-பதினெட்டு அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கட்டிடங்கள் புயல், மழை நிவாரணத் திட்டத்தின்கீழ் பழுதுபார்க்க வட ஆற்காடு மாவட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

(ஆ) அவற்றின் மதிப்பீடு ரூ. 5,37,000.

(இ) பதினெட்டு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்களிலும் பழுது பார்க்கும் வேலை முடிக்கப்பட்டுவிட்டது.

## திருப்பத்தூர் ஒன்றியத்தில் உள்ள குழந்தைகள் காப்பகங்கள்.

வினா 371—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் குழந்தைகள் காப்பகங்கள் எத்தனை இடங்களில் உள்ளன?

(ஆ) மேலும் எத்தனை குழந்தைகள் காப்பகம் ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளது?

(இ) அதில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு தரும் மாத சம்பளம் எவ்வளவு?

விடை—(அ) 62 இடங்கள் உள்ளன.

| | |
|---|---|
| ஊரக வளர்ச்சித்துறை .. | 57 |
| சமூக நலத்துறை .. .. | 5 |
| மொத்தம் .. | 62 |

(ஆ) திட்டம் ஏதும் இல்லை.

(இ) பிரதி மாதம் ரூ. 90.

## கூடலூர் தாலுக்காவில் ஜென்மி பூமி ஒழிப்புச் சட்டத்தின் கீழ்வரும் நிலங்கள்.

வினா 372—திரு. கே. உச்சி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மி பூமி ஒழிப்பு சட்டத்தின் கீழ் வரும் கூடலூர் தாலூக்காவிலுள்ள மொத்த பூமி எத்தனை ஏக்கர்?

(ஆ) இதில் அன்னிய மூலதன கம்பெனிகள் எத்தனை ?

(இ) அவர்கள் தனித்தனியாக வைத்துள்ள தோட்டங்களின் மதிப்பு எத்தனை ஏக்கர் ?

விடை —(அ) 80,087.84 ஏக்கர்கள்.

(ஆ) அன்னிய கம்பெனிகள் மூன்று. அவை (1) கோவாப்பரேடிவ் வோல்சேல் எஸ்டேட், மேங்கோ ரேஞ்ச், நெல்லி பாளையம் கிராமம். (2) மலையாளம் ப்ளாண்டேஷன் லிமிடெட், (3) டீ எஸ்டேட்ஸ் இந்தியா (பிரைவேட்) லிமிடெட்.

(இ) இவைகள் முறையே 2,073.88 ஏக்கர், 1,993.90 ஏக்கர் மற்றும் 7,045.90 ஏக்கர் நிலங்களை வைத்திருக்கின்றன.

## அரிசனங்களுக்குத் திருமண மான்யம்.

வினா 373—திரு. எஸ். பழனிவேல் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழை அரிசனங்களின் திருமணங்களுக்கு அரசு மானியத் தொகை ஏதேனும் வழங்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழாது.



## குளித்தலையில் தீயணைப்பு நிலையம்.

வினா 374—திரு. போ. எ. சீனிவாச ரெட்டியார் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட்டத் தலைமையிடமான குளித்தலையில் தீயணைப்பு நிலையம் நிறுவிடும் உத்தேசம் உண்டா ?

விடை— இல்லை.

## திருநெல்வேலியில் தொழில் வணிகத்துறை இயக்குநர் அலுவலகக் கட்டிடம்.

வினா 375— திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி பேட்டையில் தொழில் வணிக துணை இயக்குநர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டிடும் உத்தேசம் உள்ளதா —

(ஆ) ஆமெனில் எப்போது கட்டப்படும் ?

விடை—(அ) மற்றும் (ஆ) : திருநெல்வேலி மாவட்டத்தில் 1-7-1978 முதல் மாவட்டத்தொழில் மையம் இயங்கி வருவதால் இம்மாவட்டத்தில் தொழில் வணிக துணை இயக்குநர் அலுவலகம் தனியாக செயல்படுவது இல்லை. மாவட்டத் தொழில் மையம் ஒரு இணை இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது. மற்றும், ஏழு மேலாளர்கள் மையத்தில் பணி புரிகின்றார்கள். மாவட்டத் தொழில் மையத்திற்கான புதிய கட்டிடம் பாளையங்கோட்டை நெடுஞ்சாலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மாளிகைக்கு அருகில் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டிடம் 30—9—1979-க்குள் கட்டி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மேட்டுப்பாளையம் நகராட்சிப் பள்ளிகளுக்கு சொந்தக் கட்டிடம்.

வினா 376—திரு. சு. பழனிச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வாடகை கட்டிடத்திலுள்ள பள்ளிகளுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

விடை— இல்லை.

[1979 நவம்பர் 2

## மேட்டுப்பாளையம் நகரில் பொதுக் கழிப்பிட வசதி.

வினா 377—திரு. சு. பழனிச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் உண்டா ?

விடை— நகராட்சி எல்லைக்குள் ஏற்கெனவே 22 கழிப்பிடங்கள் உள்ளன. மேலும் மூன்று கட்டுவதற்கு நகராட்சி திட்டமிட்டுள்ளது.

## குளத்துப்பாளையம் புறம்போக்குகளில் குடியிருக்கும் விவசாயிகள்.

வினா 378—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சா தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குனியமுத்தூர் பேரூராட்சி, குளத்துப்பாளையம் கிராமத்தில் க.ச. 181-ல் குடியிருந்த விவசாயிகள் அகற்றப்பட்டார்களா ?

(ஆ) ஆமெனில் எவ்வளவு பேர்கள் ?

(இ) நட்ட ஈட்டுத் தொகை ஏதேனும் வழங்கப்பட்டதா ?

விடை— (அ) குளத்துப்பாளையம் கிராமம் புல எண். 181/3 கால்பாதை புறம்போக்கில் ஆக்ரமணங்கள் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## கொமாரபாளையம் கிராம குடிசைவாழ் மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள்.

வினா 379— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், கொமாரபாளையம் கிராமம், க.ச. எண். 233 புறம்போக்கில் குடிசை போட்டுள்ள ஏழை மக்கள் வீட்டு மனைப் பட்டா கோரியுள்ளார்களா ?

(ஆ) எவ்வளவு குடும்பங்கள் வாழ்கின்றன ?



1979 நவம்பர் 2]

விடை— (அ) மற்றும் (ஆ): கோவை மாவட்டம், கொமாரபாளையம் கிராமம், 2.99 ஏக்கர் விஸ்தீரணமுள்ள க.ச. எண். 233-ல் 0.02 ஏக்கர் வாய்க்கால் புறம்போக்காகவும், 0.03 ஏக்கர் வாரி புறம்போக்காகவும், மீதமுள்ள 2.94 ஏக்கர் பட்டா பூமியாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்புறம்போக்கில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை, யாரும் குடிசைகள் போடவும் இல்லை. ஆகவே வீட்டு மனைப் பட்டாக்கள் கோரி மனுக்கள் ஏதுமில்லை.

## சேரிவிளை அரிசனக் குடியிருப்புக்கு மயான வசதி.

வினா 380 திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்செந்தூர் தொகுதி பள்ளிப்பத்து ஊராட்சி, சேரிவிளை அரிசன மக்களுக்காக மயான இடத்திற்கு நிலம் ஆர்சிதம் செய்ய அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நில ஆர்சிதம் செய்து கொடுக்கப்படும் ?

விடை—(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், சேரிவிளை அரிசன மக்களுக்கு மயான வசதி செய்து தர ஒரு செயற்குறிப்பு அம்மாவட்ட ஆட்சியரிடம் பரிசீலனையில் உள்ளது. மாவட்ட ஆட்சியரிடமிருந்து, பிரிவு 4(1) முன் மொழிவு அரசுக்குக் கிடைத்தபின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

## சிதம்பரம் வட்டத்தில் பால் பதனிடும் நிலையம்.

வினா 381— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிதம்பரம் வட்டத்தில் பால் பதனிடும் நிலையம் உள்ளதா ?

(ஆ) அந்நிலையம் தற்போது செயல்படுகிறதா ?

விடை —(அ) ஆம்.

(ஆ) பால் உற்பத்தி குறைவு காரணமாக இந்நிலையம் தற்போது செயல்படாமல் உள்ளது.

## திருத்துறைப்பூண்டி தீவாம்பாள் பட்டிணம் அரசினர் விதைப் பண்ணை.

வினா 382—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி தீவாம்பாள் பட்டினம் அரசினர் விதைப் பண்ணையில் மேலாளர் அவர்களைப் பற்றி அவ்வூர் கிராமவாசிகள் 30—6—78-ல் புகார்மனு ஏதேனும் தந்துள்ளார்களா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் யாது?

(இ) அரசு அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை யாது?

விடை —(அ), (ஆ) மற்றும் (இ) ; * ஒரு விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## மாயூரம் நகராட்சி துவக்கப்பள்ளிகள்.

வினா 383—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாயூரம் நகராட்சியினரால் நடத்தப்படும் துவக்கப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அவைகளில் எத்தனை பள்ளிக்கு சொந்தக் கட்டிடங்கள் இருக்கின்றன. ?

(இ) அவைகள் எவை ? எவை ?

விடை —(அ) 16.

(ஆ) 7 பள்ளிகளுக்கும் ஒரு கிளைப் பள்ளிக்கும்.

(இ) 1. ஔவையார் நகராட்சி தொடக்கப்பள்ளி
2. பட்டமங்கலத் தெரு நகராட்சி தொடக்கப்பள்ளி
3. திருவிழந்தூர் நகராட்சி தொடக்கப்பள்ளி.
4. சேந்தங்குடி நகராட்சி தொடக்கப்பள்ளி.
5. சின்ன எரகாளித்தெரு நகராட்சி தொடக்கப்பள்ளி.
6. சித்தக்காடு நகராட்சி தொடக்கப்பள்ளி.
7. பெரிய எரகாளித்தெரு நகராட்சி தொடக்கப்பள்ளி.
8. கவிஞர் வேதநாயகம் நகராட்சி தொடக்கப்பள்ளியின் இளைப்பள்ளி மட்டும்

---

257ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



## சென்னையிலுள்ள நகைக்கடைகளில் வணிகவரி அதிகாரிகள் சோதனை.

வினா 384—திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் சென்னை மாநகரில் வணிகவரி அதிகாரிகளால் பவுன், வெள்ளி, ரத்தினங்கள் முதலியன வியாபாரம் செய்யும் பெரிய வியாபார நிறுவனங்கள் (நகைக் கடைகளை) திடீர் சோதனை செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், சோதனை செய்யப்பட்ட வியாபார நிறுவனங்களின் பெயர்கள், விவரங்கள் என்ன ?

(இ) அதிகாரிகளால் சோதனை மூலம் வெளிக் கொணரப்பட்ட பொருட்கள் எவை எவை ?

(ஈ) அவைகளின் மதிப்பு என்ன?

(உ) அதனால் அரசுக்குக் கிடைத்த வரி, அபராதம் எவ்வளவு ?

(ஊ) தவறு செய்த நிறுவனங்களின் மீது அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை.—(அ) இல்லை.

(ஆ), (இ), (ஈ), (உ), (ஊ) } வினாவிற்கு இடமில்லை.

## பட்டுக்கோட்டை, தஞ்சை வட்டங்களில் வணிசவரி பாக்கி.

வினா 385—திரு. மு. ரெ. கோவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, தஞ்சை வட்டங்களில் உள்ள வியாபார நிறுவனங்களிலிருந்து அரசிற்குத் தோராயமாக ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வணிகவரி கிடைக்கின்றது ?

(ஆ) 1978 ஆம் ஆண்டு முடிய வசூலிக்கப்படாமல் பாக்கி உள்ள வணிக வரி எவ்வளவு ?

(இ) உடனடியாக பாக்கியை வசூல் செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

விடை—(அ) (1) தஞ்சை வட்டம்—ரூ. 70.62 இலட்சங்கள்.

(2) பட்டுக்கோட்டை வட்டம்— ரூ. 24.11 இலட்சங்கள்.

(ஆ) 1978 ஆம் ஆண்டு முடிய உள்ள வணிக வரி பாக்கி ரூ. 20·99 இலட்சங்கள்.

(இ) இந்த வரி பாக்கியில் தேங்காய் உரிமம் விடல், தள்ளுபடி செய்ய வேண்டிய இனங்கள் ஆகியவைகள் தவிர மீதமுள்ள இனங்கள் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் கண்டுள்ளபடி நில வருவாய் மீட்புச் சட்டம், நீதிமன்ற நடவடிக்கை, நேரடி வசூல் ஆகியவைகள் மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

## மழையினால் பாதிக்கப்பெற்ற பட்டுக்கோட்டை, பேராவூரணிப் பகுதிகளில் நிவாரணப் பணிகள்.

வினா 386—திரு. மு. ரெ. கோவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்வு கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாட்டில் 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பெய்த கடும் மழையின் காரணமாகப் பாதிக்கப்பட்ட பட்டுக்கோட்டை, பேராவூரணி வட்டத்தில் உள்ளவர்களுக்கு என்ன நிவாரணம் அளிக்கப்பட்டது—

(ஆ) எத்தனை பேர்களுக்கு அளிக்கப்பட்டது ?

(இ) அரசுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு சேதம் உண்டா ?

(ஈ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—(அ) மற்றும் (ஆ) வெள்ளத்தினால் வீடுகள் இழந்தோருக்கும் மற்றும் சேதமடைந்தோருக்கும் உதவித் தொகை, அரிசி மற்றும் புடவை வேட்டிகள் நிவாரணமாக அளிக்கப்பட்ட விவரங்களாவன:

| | பட்டுக்கோட்டை வட்டம். | | பேராவூரணி வட்டம். | |
|---|---|---|---|---|
| | உதவி பெற்றவர் எண்ணிக்கை. | நிவாரணம். | உதவி பெற்றவர் எண்ணிக்கை. | நிவாரணம். |
| பணம் .. | 299 | ரூ. 18,150 | 154 | ரூ. 9,550 |
| அரிசி .. | 3,027 | 151.35 குவிண்டால். | 1,694 | 83.95 குவிண்டால் |
| புடவை, வேட்டி | 299 | 299 ஜோடிகள். | 154 | 154 ஜோடிகள். |





(இ) & (ஈ) ஆம். சேதங்களின் விவரங்களாவன :

(1) ஆறுகளில் 11 இடங்களில் உடைப்பும், 16 இடங்களில் கரை அரிப்பும் ஏற்பட்டன.

(2) குளங்களில் 4 இடங்களில் உடைப்பும், 4 இடங்களில் கரை அரிப்பும் ஏற்பட்டன.

(3) அரசு கட்டிடங்கள் சேதம் மதிப்பு ரூ. 14,000.

(4) 8 நகராட்சி சாலைகள், 56 ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் 45 ஊரகச் சாலைகள் பழுதடைந்தன.

## வரிப்பணத்தை கையாடியதாக கைது செய்யப்பெற்ற கிராம அதிகாரிகள்.

வினா 387—திரு. செ. ந. பழனிசாமி.—மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கடந்த ஆண்டு (1978-79) வரிப்பணத்தை கையாடியதாக எத்தனை கிராம அதிகாரிகள் கைது செய்யப்பட்டார்கள் ?

(ஆ) அதன் விபரம் என்ன ?

விடை—(அ)& (ஆ) கடந்த ஆண்டு, அதாவது 1978-79-ல் வரிப்பணத்தை கையாடியதற்காக தென்னாற்காடு மாவட்டத்தில் 10 கிராம அதிகாரிகளும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 5 கிராம அதிகாரிகளும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு கிராம அதிகாரியும் கைது செய்யப்பட்டனர்.

## மாயூரத்தில் உள்ள பொதுப்பணித்துறை பயணிகள் விடுதி.

வினா 388—திரு. என். கிட்டப்பா.—மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாயூரம் நகரில் பொதுப்பணித் துறையின் சார்பில் காவிரி இல்லம் என்ற பயணிகள் விடுதி ஒன்று இயங்கி வருகின்றதா ?

(ஆ) ஆமெனில், 1978-79-ஆம் ஆண்டில் அதன் பராமரிப்பு செலவு எவ்வளவு ?

விடை—(அ) ஆம்.

(ஆ) இவ்வில்லத்திற்கு 1978-79ஆம் ஆண்டுக்கான பராமரிப்புச் செலவு ரூ. 7,510 ஆகும்.

## இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு வங்கி கிளைகள்.

வினா 389—திரு. கூத்தக்குடி ச. சண்முகம், திரு செ. சிவசாமி:—மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை கூட்டுறவு வங்கி கிளைகள் உள்ளன ?

(ஆ) விவசாயிகளுக்கு ஓராண்டிற்கு கொடுக்கும் மொத்தக் கடன் தொகை எவ்வளவு ?

(இ) பெரும்பாலான நிலவள வங்கிகள் கடன் கொடுக்கும் தகுதியை இழந்திருக்கிறது என்பது உண்மையா ?

(ஈ) ஆம் எனில், இந்நிலையைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—(அ) 30 கிளைகள் உள்ளன.

(ஆ) 1977-78ஆம் ஆண்டில் ரூ. 844.69 இலட்சம் அளவுக்கு குறுகிய கால மற்றும் நடுத்தர கால விவசாய கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1978-79ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகள் மூலமாக 320.36 இலட்சம் ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு குறுகியகால மற்றும் நடுத்தரகால விவசாய கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) அம்மாநிலத்தில் உள்ள 17 நிலவள வங்கிகளில் 8 வங்கிகள் கடன் வழங்கும் தகுதியை இழந்துள்ளன.

(ஈ) இந்திய ரிசர்வ் வங்கி குறிப்பிட்டுள்ளபடி, கடன் வழங்கும் தகுதியை இழந்த பிரதம நிலவள வங்கிகள், ஒரு கடனின் முதல் தவணையை முன் ஆண்டில் வழங்கியிருந்தால், பாக்கித் தவணைகளைத் தொடர்ந்து வழங்கலாம். ஆனால் புதுக்கடன்களை வழங்க முடியாது. மேலும் தகுதியை இழந்துள்ள வங்கிகள் இயங்கும் பகுதிகளில், சிறு நீர்ப்பாசன திட்டங்களுக்காக வணிக வங்கிகள் கடன் வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளன. மேலும், அப்பகுதிகளில் அபிவிருத்திக் கடன் தேவைப்படும் விவசாயிகளும் வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறலாம்.

## மம்சாபுரம் பேரூராட்சிப் பகுதி குடிநீர்த் திட்டம்.

வினா 390—திரு. இரா. தாமரைக்கனி.—மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி மம்சாபுரம் பேரூராட்சி பகுதிக்கு குடிநீர்த் திட்டம் ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டதா

(ஆ) ஆம் எனில், தற்போது அத்திட்டத்தின் நிலை என்ன





விடை—(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## திருவில்லிப்புத்தூரில் டோபிகானா அமைத்தல்.

வினா 391—திரு. இரா. தாமரைக்கனி.—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவில்லிப்புத்தூர் நகரில் டோபிகானா கட்டுவதற்கு அரசு செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் என்ன நிலையில் உள்ளது ?

விடை—(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## தமிழ்நாட்டில் இயங்கிவரும் மகளிர் கூட்டுறவு பண்டகசாலைகள்.

வினா 392—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்.—மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் எத்தனை மகளிர் கூட்டுறவு பண்டகசாலைகள் இயங்கிவருகின்றன ?

(ஆ) புதிய மகளிர் கூட்டுறவு பண்டகசாலை ஏற்படுத்தும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 19 மகளிர் பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன.

(ஆ) புதிய மகளிர் கூட்டுறவு பண்டகசாலை ஏற்படுத்த கருத்துக்கள் ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

## ஊமா ரெட்டியூர் நடுநிலைப் பள்ளிக்கட்டிடம்.

வினா 393—திரு. ரா. கு. பெருமாள்.—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பவானி வட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், ஊமாரெட்டியூர் நடுநிலைப்பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டிட வசதி உண்டா ?

(ஆ) இல்லையென்றால், புதிய கட்டிடம் கட்ட அரசு திட்டம் உண்டா ?

(இ) தற்போதுள்ள கட்டிடங்களைப் பழுது பார்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—(அ) இல்லை.

(ஆ) ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) பழுதுபார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கடலாடி ஊராட்சி தெரு விளக்குகள்.

வினா 394—திரு பெ. சு. திருவேங்கடம்.—மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதியில் உள்ள கடலாடி ஊராட்சியின் இரவு பத்து மணி வரை ஒவ்வொரு நாளும் தெரு விளக்குகள், வீட்டு விளக்குகள் சரியாக எரியாததால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது பற்றி அரசுக்கு புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## ஏலகிரி, சவ்வாது மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்திற்கு மத்திய அரசு உதவி.

வினா 395—திரு: பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79-ல் வட ஆற்காடு மாவட்டத்தில் ஏலகிரி, சவ்வாது மலை வளர்ச்சி திட்டத்துக்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) அத்தொகை எந்த வகையில் வளர்ச்சிக்கென செலவிடப்படுகிறது ?

(இ) எத்தனை கிராமங்கள் பயனடைந்துள்ளன ?

விடை—(அ) ஒன்றுமில்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விகளுக்கு இடமில்லை.



## வடாற்காடு மாவட்டத்தில் கிராம அதிகாரிகள் நிர்வாகத்தின்கீழ் உள்ள கால்நடைப் பட்டிகள்.

வினா 396—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் கிராம அதிகாரிகளின் நிர்வாகத்தில் கால்நடைகள் அடைத்து வைக்கும் பட்டிகள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், உபயோகத்தில் உள்ளவைகள் எத்தனை?

(இ) பழுதடைந்துள்ளவைகள் எத்தனை?

(ஈ) ஆண்டுக்கு அபராதம் எவ்வளவு வசூலாகியது?

விடை—(அ) ஆம். 502 கால்நடைப் பட்டிகள்.

(ஆ) 116

(இ) 386

(ஈ) ரூ. 19,800 (சராசரி வருட வருமானம்)

## வடாற்காடு மாவட்டத்திலுள்ள கிராமச் சாவடிகள்

வினா 397—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் கிராமச் சாவடிகள் (வருவாய்த் துறைக்குச் சொந்தமானது) எத்தனை உள்ளன?

(ஆ) உபயோகத்தில் உள்ளவை எத்தனை?

(இ) பழுதடைந்துள்ளவை எத்தனை?

(ஈ) பழுதுபார்க்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—(அ) 259 கிராமச் சாவடிகள் உள்ளன.

(ஆ) 84 சாவடிகள்.

(இ) 175 சாவடிகள்.

(ஈ) 1979–80 ஆம் ஆண்டுகளுக்கான பகுதி திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள கிராமச் சாவடிகள் மற்றும் கால்நடைப் பட்டிகள் கட்டுவதற்கும், பழுதடைந்துள்ளவற்றை பழுதுபார்ப்பதற்கும் ரூபாய் 2.5 இலட்சத்துக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த மொத்தத் தொகையை மாவட்டங்களுக்கு தேவைக்கேற்ப பிரித்துக் கொடுப்பதற்கு வருவாய் வாரியத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## சென்னை அரசு அச்சக ஊழியர்கள்

வினா 398—திரு து. புருஷோத்தமன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் உள்ள அரசு அச்சகத்தில் தற்போது எத்தனை பேர்கள் வேலை செய்கின்றனர்?

(ஆ) நடப்பு ஆண்டில் எத்தனை பேர் புதிதாக வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்?

விடை—(அ) ஜூன் 1979 நிலவரப்படி, சென்னையில் இயங்குகின்ற அரசு அச்சகங்களில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை 4,319.

(ஆ) 1979 ஆம் ஆண்டில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டவர் 47 பேர்கள்.

## சடையனேரி கண்மாயிலிருந்து இருபோக விளைச்சலுக்குத் தண்ணீர் விடல்.

வினா 399—திரு இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், சடையனேரி கண்மாயில் இருபோக விளைச்சலுக்கு தண்ணீர் விடுவதற்கு அரசிடம் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்த முறை எப்போது முதல் செயல் படுத்தப்படும்?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## திருச்செந்தூரில் பதனீரிலிருந்து துணைப் பொருட்கள் தயாரிக்கும் ஆலை.

வினா 400—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு கிராம கைத்தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலுக்காவில் அதிகமான பதநீர் இறக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அந்தப் பகுதியில் பதனீரிலிருந்து சீனி, கற்கண்டு, சாக்லேட்ஸ் போன்ற பொருட்கள் தயார் செய்யும் ஆலை நிறுவும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில் அது எப்போது அமைக்கப்படும்?



விடை—(அ) ஆம். திருச்செந்தூர் வட்டத்தில் ஏராளமான பனை மரங்களிலிருந்து இனிப்புச்சத்து கூடுதலான பதனீர் கிடைக்கிறது.

(ஆ) மற்றும் (இ) தமிழ்நாடு மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையம், திருச்செந்தூரில் தேசிய பனங்கற்கண்டு பயிற்சி ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவி இங்கு கிடைக்கும் பதநீரிலிருந்து நவீன முறையில் பனங்கற்கண்டு தயாரித்து வருகிறது. மேலும் இப்பகுதியில் உள்ள கற்கண்டு உற்பத்தியாளர்களுக்கு கற்கண்டு படிகத் தொட்டிகளை குறைந்த வாடகைக்குக் கொடுத்து கற்கண்டு உற்பத்தியை ஊக்குவிக்கிறது. ஆண்டுதோறும் சுமார் ரூ. 12,000 முதல் ரூ. 13,000 வரை மதிப்புள்ள ஒரு டன் கற்கண்டு இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் மாநில இணையம், மாதவரத்திலுள்ள குமரப்பாபுரம் பனை பண்ணையில் பனஞ்சீனி சாக்லேட் முதலியன செய்து வருகிறது.

## குறிச்சி, வண்ணாரப்பேட்டை அரிசன மக்களுக்கு மனைப்பட்டா வழங்கல்.

வினா 401—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிச்சி பேரூராட்சி, வண்ணாரப்பேட்டை அரிசன. மக்கள் குடியிருக்கும் புறம்போக்கு இடத்திற்கு பட்டா வழங்கக் கோரியுள்ளனரா?

(ஆ) ஆமெனில், அந்த இடம் அளவு செய்யப்பட்டதா?

விடை—(அ) மற்றும் (ஆ) குறிச்சி கிராமம், வண்ணாரப்பேட்டை அரிசன மக்கள் குடியிருக்கும் புறம்போக்கு இடத்திற்கு பட்டா வழங்கக் கோரியுள்ளனர். பட்டா வழங்கக் கோரியுள்ள க. ச. எண். 466/3 விஸ்தீரணம் 0.23 ஏக்கர் போத்தனூர் நகர பஞ்சாயத்திற்கு பொதுக் கழிப்பிடம் கட்டுவதற்காக பராதீனம் செய்யப்பட்டது. அதனைப் பேரூராட்சி பயன்படுத்தாததால் அந்நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ள அரிசன மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்காக பராதீனத்தை ரத்து செய்து நத்தமாக மாற்றவும் முன் மொழிகள் பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## கந்தேகவுண்டன் சாவடியில் கால்நடை மருந்தகக் கட்டிடம்.

வினா 402—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுக்கரை ஒன்றியம் கந்தேகவுண்டன் சாவடியில் கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்டப்படுகிறதா?

(ஆ) ஆமெனில், அதன் மதிப்பீடு என்ன ?

(இ) வேலை எப்போது துவங்கியது?

விடை—(அ) மதுக்கரை ஒன்றியம் கந்தேகவுண்டன் சாவடியில் கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்டுவதற்கான செயற் குறிப்பு ஏதுமில்லை. ஆனால், கந்தேகவுண்டன்சாவடிக்கு அருகாமையில் உள்ள எட்டிமடையில் கால்நடை மருந்தக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மின்சார இணைப்பு வேலை விரைவில் முடியும்.

(ஆ) ரூ. 55,000.

(இ) டிசம்பர், 1978.

## கோவை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

வினா 403—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் ஒன்றியம் வேடப்பட்டி அரிசனங்கள் வீட்டு மனை கேட்டு விண்ணப்பித்துள்ளனரா?

(ஆ) அதன் மீது மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் ஒன்றியம் வேடப்பட்டி கிராமம் நி. அ. எண். 362/1-ல் 2·50 ஏக்கர் நிலம் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டு 52 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

வினா 404—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிச்சி பேரூராட்சி செங்குப்பநகர் அரிசனங்கள் வீட்டு மனை கோரி விண்ணப்பித்துள்ளனரா?

(ஆ) அரசு எடுத்த நடவடிக்கை யாது?



விடை—(அ) கோயம்புத்தூர் மாவட்டம் குறிச்சி கிராமத்தில் செங்குப்ப நகர் என்னும் பெயரில அப்படி ஓர் இடம் ஏதுமில்லை என்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

(ஆ) இருப்பினும் குறிச்சி கிராமத்தில் திரு. செங்குப்ப கோனார் என்பவருக்குச் சொந்தமான பட்டா க. எண். 103/1—ல் வசிக்கும் அரிசனங்கள் வீட்டுமனை கோரி விண்ணப்பித்துள்ளனர் என்றும், கோவை அரிசன நல தனி வட்டாட்சியர் மேற்படி கிராமத்தில் வீட்டுமனை வழங்குவது சம்பந்தமாக முன் மொழிவுகள் தயார் செய்து வருகிறார் என்றும், விரைவில் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், மாவட்ட ஆட்சியர் குறிப்பிட்டுள்ளார்.

வினா எண் 405—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுக்கரை ஒன்றியம் கண்மைநாயக்கனூர் அரிசன மக்களுக்கு வீட்டுமனை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது வழங்கப்படும் ?

விடை—(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

## ஒக்கிலிபாளையம்-மலுமச்சம்பட்டி பாதை

வினா எண் 406—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுக்கரை ஒன்றியம் ஒக்கிலிபாளையம்—மலுமச்சம்பட்டி பாதை செப்பனிட ஊராட்சி ஒன்றியம் நிதி ஒதுக்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1979 நவம்பர் 2

வினா எண் 407—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுக்கரை ஒன்றியம், ஒத்தக்கால் மண்டபம், பேரூராட்சி ஒக்கிலிபாளையம் அரிசன மக்கள் வீட்டுமனை கேட்டு விண்ணப்பம் அனுப்பி உள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

வினா எண் 408—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுக்கரை ஒன்றியம், மதுக்கரை கிராமத்தில் அரிசன மக்கள் வீட்டுமனை கேட்டு விண்ணப்பித்தார்களா ?

(ஆ) ஆம் எனில் எப்போது விண்ணப்பம் அனுப்பினார்கள்?

(இ) அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—(அ) ஆம்.

(ஆ) 1967-ல் விண்ணப்பித்துள்ளார்கள்.

(இ) மதுக்கரை கடைவீதி அரிசன மக்கள் 72 குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்க க.ச. 189-ல் 4.00 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கான பிரிவு 4(1) அறிவிக்கை பிரசுரிக்கப்பட்டு 5-ஏ. விசாரணை அரிசன நலத் தனித்தாசில்தாரால் முடிக்கப்பட்டுள்ளது. மேல்நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது. இதே ஊரில் மாரப்ப கவுண்டர் மட்டச்சாளைப் பகுதியில் வாழும் 133 அரிசன குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்க க.ச. எண் 45411, 2, 3-ல் 7.39 ஏக்கர் நிலம் கையகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வினா எண் 409—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், குனியமுத்தூர் அரிசன மக்கள் வீட்டுமனை கேட்டு விண்ணப்பம் செய்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?



1979 நவம்பர் 2]

விடை—(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டம், குனியமுத்தூர் கிராம அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்க கீழ்க்கண்ட நிலங்களில் அதனதன் எதிரே குறிப்பிட்டுள்ள அளவில் நில ஆர்சித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

| நி.அ.எண். (1) | பரப்பு. (2) ஏக்கர். | பயன்பெறும் அரிசனங்களின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 203-1, 204, 205 மற்றும் 206. .. — | 4.57 | 113 |
| 673-1, 674-1 .. — | 2.87 | 63 |
| 185-2, 186-2 .. — | 5.49 | 128 |

## குறிச்சி பேரூராட்சி, கணேசபுரம் பகுதி புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போர்.

வினா எண் 410—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், குறிச்சி பேரூராட்சி, கணேசபுரம் பகுதியில் புறம்போக்கு நிலத்தில் எவ்வளவு பேர் குடியிருக்கிறார்கள்?

(ஆ) அவர்கள் பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ளனரா?

விடை—(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், கோவை வட்டம், குறிச்சி பேரூராட்சி, கணேசபுரம் பகுதியில் உள்ள க.ச. எண் 587/7, 588/8, 598/7, 598/10 ஆகிய நான்கு நத்தம் புறம்போக்குகளிலும் தற்போது 210 பேர்கள் ஆக்கிரமிப்பு செய்து குடியிருக்கிறார்கள். ஆக்கிரமிப்புதாரர்கள் பட்டா கேட்டு விண்ணப்பித்திருந்தனர். மேற்குறிப்பிட்ட நான்கு புறம்போக்குகளும் வாரிப் புறம்போக்குகளாக இருந்தன. இதனை நத்தமாக மாற்றம் செய்து, ஏழைகளான 42 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா இலவசமாக வழங்கப்பட்டது. ஏனையோர் நிலக்கிரயம் கட்ட முன்வராததால் அவர்களுக்கு இதுவரை பட்டா வழங்க இயலாத நிலையில் உள்ளது.

மீனாட்சிபுரம் அரிசனப் பகுதிக்கு சுடுகாடு.

வினா எண் 411—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்குக்கு விடையளிப்பாரா :—

மதுக்கரை ஒன்றியம், மீனாட்சிபுரம் அரிசனப் பகுதிக்கு சுடுகாடு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் உண்டா?

விடை—மதுக்கரை ஒன்றியம் மீனாட்சிபுரம் அரிசன மக்களிடமிருந்து கோரிக்கை ஏதும் இது சம்பந்தமாக வரவில்லை. ஆகையால் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

பெண்ணாடம் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி கட்டிடம்.

வினா எண் 412—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தென்னாற்காடு மாவட்டம் பெண்ணாடம் அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆமெனில் அதன் விபரமென்ன?

விடை—அ & ஆ வரைபடமும், திட்ட மதிப்பீடும் கடலூர் முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. அவை கிடைத்தவுடன் நிதி நிலைமையைப் பொறுத்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

சேந்தமங்கலம் தொகுதியில் குட்டைகள், ஏரிகள் அமைப்புத் திட்டம்.

வினா எண் 413—திரு. வ. சின்னசாமி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேந்தமங்கலம் தொகுதியில் 1978–79-ல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட குட்டைகள், ஏரிகள் அமைப்புத் திட்டங்கள் எத்தனை?

(ஆ) தள்ளுபடி செய்யப்பட்ட ஏரிகள் குட்டைகள் எத்தனை?

(இ) அவைகள் யாவை?



விடை—

(அ) ஆறு.

(ஆ) ஒன்று.

(இ) கைவிடப்பட்ட திட்டத்தின் பெயர் "சேலம் மாவட்டம், நாமக்கல் தாலுக்கா, புலவக்கால் ஓடை (ராஜகவுண்டனார்) யின் குறுக்கே குட்டை அமைத்தல்".

திருச்சியில் குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கும் திட்டம்.

வினா எண் 414—திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சியில் உள்ளகுடிசைப் பகுதிகளை மாற்றி அமைக்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) பணிகள் எப்பொழுது முடிவு பெறும்?

விடை—(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) குடிசைப் பகுதிகள் அகற்றுதல்/மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ் திருச்சியில், கல்மந்தை, பிச்சான்குளம் ஆகிய பகுதிகளில் இதுவரை 455 குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன. திருச்சி, வண்ணாரப்பேட்டையில் ரூ. 19.14 இலட்சம் செலவில், 192 குடியிருப்புகள் கட்டுவதற்கான ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டத்திற்குத் தேவையான நிலங்களை வருவாய் வாரியம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைத்த பின்னர் குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

புதுப்பட்டி தொழுநோய் மருத்துவமனை.

வினா எண் 415—திரு. சீ. செல்வராஜ்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சமயநல்லூர் தொகுதியிலுள்ள புதுப்பட்டியில் இருக்கும் 'தொழுநோய்' மருத்துவமனையில் போதுமான அளவிற்கு படுக்கை வசதிகள் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—(அ) மற்றும் (ஆ) போதுமான அளவில் வசதிகள் இருப்பதால் அரசின் நடவடிக்கை தேவையில்லை.

[1979 நவம்பர் 2

## கள்ளக்குறிச்சி-தஞ்சாவூர் பேருந்துப் பணி.

**வினா எண் 416**—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்துகீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கள்ளக்குறிச்சியிலிருந்து கும்பகோணம் வழியாக தஞ்சாவூருக்கு (L.S.S.) பேருந்து விடும் திட்டம் ஏதேனும் உண்டா ?.

விடை—இல்லை.

## பாம்பு ஆற்றின் குறுக்கே தரைப்பாலம்.

**வினா எண் 417**— திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் நாச்சாரகுப்பம் ஊராட்சியில் மீட்டூருக்கும் விளாங்குப்பத்திற்கும் பாம்பு ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்ட வேண்டுமென்ற ஊராட்சியின் தீர்மானம் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆமெனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—(அ) ஆம்.

(ஆ) மதிப்பீடு தயார் செய்து செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## திருப்பத்தூர் ஒன்றியப் பகுதியில் கால்நடை மருந்தகங்கள்.

**வினா எண் 418**—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் எத்தனை இடங்களில் கால்நடை மருந்தகங்கள் உள்ளன ?

(ஆ) அவைகளுள் எத்தனைக்குச் சொந்தக் கட்டிடங்கள் உள்ளன ?

விடை—(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் திருப்பத்தூர், ஜோலார்பேட்டை ஆகிய இரு இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்படுகின்றன.

(ஆ) திருப்பத்தூரிலுள்ள கால்நடை மருந்தகம் அரசு கட்டிடத்திலும், ஜோலார்பேட்டை கால்நடை மருந்தகம் வாடகை கட்டிடத்திலும் செயல்படுகின்றன.



1979 நவம்பர் 2]

## தஞ்சை மாவட்டத்தில் குறுவை பயிரிடப்பெற்ற நிலப் பரப்பளவு.

**வினா 419**— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?—

(அ) 1977-78-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் குறுவை பயிரிட்ட பரப்பளவு எவ்வளவு ?

(ஆ) 1976-77 ஆம் ஆண்டு குறுவை பயிரிட்ட பரப்பளவு எவ்வளவு ?

விடை 420 — (அ) 3·92 இலட்சம் ஏக்கர்கள்.

(ஆ) 2·89 இலட்சம் ஏக்கர்கள்.

## திருத்தணி பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

**வினா 420**—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி பேரூராட்சியில் உள்ள பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன் மதிப்பீடு என்ன ?

விடை— (அ) மற்றும் (ஆ) திருத்தணி அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளிக்கு ரூ. 7.425 இலட்சத்தில் கட்டிடம் கட்ட அனுமதிக்கப்பட்டு வேலை நடந்து கொண்டிருக்கிறது.

## திருமுட்டம் வழியாக விரைவுப் பேருந்துப் பணி.

**வினா 421** — திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம்-ஜெயங்கொண்டம் வழியாகச் செல்லும் விரைவு வண்டி திருமுட்டம் வழியாக விட ஏற்பாடு செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை— தற்போது பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவுபிரிவு) சென்னையிலிருந்து விருத்தாசலம், செயங்கொண்டம், திருமுட்டம் வழியாக தூத்துக்குடிக்கும், கும்பகோணத்திற்கும் பேருந்துகளை இயக்கிக்கொண்டு இருக்கின்றது. திருமுட்டம் ஒரு கட்டண அளவு ( Fare Stage) ஆகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## எலத்தூர் அரிசன மக்களுக்கு மாற்று இடவசதி.

வினா 422 — திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) கலசபாக்கம் ஒன்றியம் எலத்தூர் அரிசன காலனி சேயாற்றின் கரையில் அமைந்திருப்பதால் மழை காலங்களில் மக்கள் மிகவும் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மாற்று இடம் வாங்கி கொடுக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

விடை— (அ) தெரியும்.

(ஆ) எலத்தூர் அரிசன காலனி மக்கள் 2-7-1979 அன்று விசாரணையின்போது வேறு இடத்தில் குடிபுகுவதற்கு விரும்பவில்லை எனவும் மாற்று இடம் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளனர். எனினும், எலத்தூர் அணைக்கட்டிலிருந்து காலனிவரை ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் 12 அடி உயரமுள்ள சிமென்டினால் கருங்கல் கட்டடம் ( Revetment ) கட்ட கோருகின்றனர். மேலும், அவரவர்கள் குடிசை வீட்டிற்கு பதிலாக தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கவும் கேட்டுள்ளனர். ஆற்றங் கரையில் கருங்கல் கட்டிடம் கட்ட திருவண்ணாமலை பொதுப் பணித்துறை செயற் பொறியாளரையும், வீடுகள் கட்டிக் கொடுக்க வேலூர் தமிழ்நாடு அரிசன நல வீட்டு வசதி வளர்ச்சிக் கழக செயற் பொறியாளரையும் கேட்கப்பட்டுள்ளது.

## கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைப்பகுதியில் சாலைப் பணிகள்.

வினா 423— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சாலை நிதி (ரோடு செஸ்) ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) இதுவரை எவ்வளவு நிதி சேர்ந்துள்ளது?

(இ) செலவழித்து போடப்பட்ட சாலைகள் எவை?

(ஈ) மீதியுள்ள தொகை எவ்வளவு?

விடை — *அவையின்முன் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

---

*259-ம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது

## மன்னார்குடி தாலூகாவில் மின் இணைப்பு கொடுக்கப் பெறவேண்டிய கிராமங்கள்.

வினா 424— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தாலூகாவில் மின் இணைப்பு கொடுக்கவேண்டிய கிராமங்கள் தற்போது எத்தனை உள்ளன ?

(ஆ) அரிசன மக்கள் வாழும் பகுதிகள் இணைப்புகள் கொடுக்கவேண்டிய மீதம் உள்ளதா ?

விடை—(அ) எதுவும் இல்லை.

(ஆ) ஆம். புதிதாகத் தோன்றியுள்ள ஐந்து அரிசன குடியிருப்புகளுக்குத்தான் மின் இணைப்பு வழங்க வேண்டியுள்ளது.

## குரிசிலாப்பட்டு-ஜோல்ல கவுண்டனூர் பாதை அமைப்பு

வினா 425— திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குரிசிலாப்பட்டுக்கும் ஜோல்ல கவுண்டனூருக்கும் ஒரு புதிய பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், எப்போது இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

வெங்காபுரம் பால் கூட்டுறவு சங்கம் மூலம் சிறுவிவசாயிகளுக்கு மாடுகள் வாங்க கடன்.

வினா 426—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் கந்திலி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வெங்காபுரம் என்னுமிடத்தில் உள்ள பால் கூட்டுறவு சங்கத்தின் மூலம் சிறு விவசாயிகளுக்கு மாடு வாங்க 1979ஆம் ஆண்டு கடன் வழங்கப்பட்டதா?

(ஆ) ஆமெனில், எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

விடை—(அ) ஆம்.

(ஆ) 56 (ஐம்பத்தாறு) நபர்களுக்கு வழங்கப்பட்டது. கடனாக ரூ. 1,40,000—ம், மானியமாக ரூ. 46,232—ம் வழங்கப்பட்டுள்ளது.

அன்னப்பன்பேட்டை—கரம்பை சாலை மேம்பாடு.

வினா—427 திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த அன்னப்பன்பேட்டை பஞ்சாயத்து, அன்னப்பன்பேட்டையிலிருந்து கரம்பை வரை சாலையைச் சீர்படுத்த அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உண்டா?

விடை—அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றிய உபரிப் பொது நிதியிலிருந்து ரூ. 75,000 செலவில் இச் சாலையைச் சீர்திருத்தும் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தக்காரரிடம் இவ்வேலையை முடிக்க ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

தண்டராம்பட்டு ஒன்றியத்தில் மின் விளக்குகள் அமைக்கப் பெறாத அரிசனக் குடியிருப்புகள்.

வினா428—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் மின்சார விளக்குகள் அமைக்கப்படாத அரிசனக் காலனிகள் எத்தனை?





விடை—வட ஆற்காடு மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்க்கண்ட 10 (பத்து) அரிசனக் குடியிருப்புகளில் தெரு மின்சார விளக்குகள் அமைக்கப்படவில்லை.

| வரிசை எண்ணும் ஊராட்சியின் பெயரும். | கிராமத்தின் பெயர். | அரிசன குடியிருப்பின் பெயர். |
|---|---|---|
| 1 கம்பட்டு .. | கம்பட்டு .. | அரிசன குடியிருப்பு. |
| 2 தொண்டமனூர் | தொண்டமனூர் | அரிசன குடியிருப்பு |
| 3 சாதுகுப்பம் .. | அந்தோணியபுரம் | அரிசன குடியிருப்பு. |
| 4 கோட்டையூர் | வழவச்சனூர் .. | அரிசன குடியிருப்பு. |
| 5 பெருந்துரைப்பட்டு. | பெருந்துரைப் பட்டு. | அருந்ததியர் குடியிருப்பு. |
| 6 ராதாபுரம் .. | ராதாபுரம் .. | புதிதாக ஏற்பட்ட அரிசன குடியிருப்பு. |
| 7 சேர்ப்பப்பட்டு.. | சேர்ப்பப்பட்டு .. | புதிதாக ஏற்பட்ட அரிசன குடியிருப்பு. |
| 8 இரண்யந்தபுரம் | இரண்யந்தபுரம் | அரிசன குடியிருப்பு. |
| 9 கண்ணக்காந்தல் | மோட்டூர் .. | அரிசன குடியிருப்பு. |
| 10 கீழ்வணக்கம்பாடி | தேநூர்பாளையம் | அரிசன குடியிருப்பு. |

திருவண்ணாமலை, செங்கம் வட்டங்களில் விவசாயத்திற்கு கொடுக்கப்பெற்ற மின் இணைப்புகள்.

வினா 429—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) 1978–79-ல் திருவண்ணாமலை, செங்கம் இரண்டு தாலுக்காக்களிலும் விவசாயத்திற்கு மின் இணைப்பு தருவதற்கு 90 நாள் கெடுவில் நோட்டீஸ் கொடுக்கப்பட்ட நபர்கள் எத்தனை?

(ஆ) 90 நாள் கெடுவுக்குப்பின் மின் இணைப்பு எத்தனை நபர்களுக்கு கொடுக்கப்பட்டது.

விடை—(அ) 8,567.

(ஆ) 31—5—1979 வரை 1,258 பம்பு செட்டுகள்.

திருவண்ணாமலை ஒன்றியத்திலுள்ள பால் வழங்கு சங்கங்கள்.

வினா 430—திரு. க. வேணுகோபால் : மாண்புமிகு கிராமத் தொழிற்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்குவிடைஅளிப்பாரா—

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் எத்தனை ?

விடை—பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் மொத்தம் 17 சங்கங்கள் ஆகும்.

தர்மபுரி மாவட்டத்தில் பேரூராட்சியாக மாற்ற தகுதி பெற்றுள்ள ஊராட்சிகள்.

வினா 431— டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஊராட்சிகளுள் பேரூராட்சியாக மாற்ற எத்தனை ஊராட்சிகள் தகுதி பெற்றிருக்கின்றன ?

(ஆ) எப்போது முதல் அவை பேரூராட்சியாக உயர்த்தப்படும் ?

விடை— (அ) நான்கு.

(ஆ) ஊராட்சி தேர்தல் முடிவடைந்த பின் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மது அருந்த அனுமதி கோரி வந்த மனுக்கள்.

வினா 432—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறைஅமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-79-ல் தமிழ்நாட்டில் மது அருந்துவதற்காக அனுமதி கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை ?

(ஆ) அந்த மனுக்களின் பேரில் அனுமதிஅளிக்கப்பட்டவை எத்தனை ?

விடை—

(அ) 31—7—1979 வரை 26,389 மனுக்கள் வந்தன.

(ஆ) 4,378 உரிமங்கள் வழங்கப்பட்டன.

\22159

## திருப்பத்தூர் பொதுப் பணித்துறை பயணியர் விடுதி

வினா 433— **திரு. ப. சுந்தரம்** : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் பொதுப் பணித்துறையின் பொறுப்பிலுள்ள தங்கும் விடுதியை விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் ?

V211, 3) (879

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை. 881-35-3)

## வைப்பூர், தூத்தூர் இணைப்புச் சாலைகள்.

வினா 434— **திரு. ந. ஆறுமுகம்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதியில் உள்ள திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வைப்பூர், தூத்தூர் ஆகிய ஊர்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் உத்தேசம் உண்டா ?

விடை— அரியலூர் தொகுதியிலுள்ள திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த, தூத்தூர், வைப்பூர் ஆகிய கிராமங்களுக்கு ஏலாக்குறிச்சியிலிருந்து கிலோ மீட்டர் 0/0—15/6 தூரத்திற்கு இணைப்புச் சாலைகள் திட்டத்தில் 1971–72 ஆம் ஆண்டு சாலை போட்டு முடிக்கப்பட்டது.

## கல்பட்டு ஏரிமூலம் பாசனம் பெறும் நிலங்கள்.

வினா 435— **திரு. கோ. ஏசோக்கமன்** : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், கல்பட்டு ஏரியின் மூலம் எத்தனை ஏக்கர்களுக்கு பாசனம் அளிக்கப்படுகிறது?

(ஆ) மேற்படி கல்பட்டு பொதுப்பணித்துறை ஏரி பல்லாண்டு காலமாக மராமத்து செய்யாதது அரசுக்குத் தெரியுமா?

(இ) மராமத்து செய்ய அரசு திட்டம் தீட்டியுள்ளதா ?

விடை— (அ) 731 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இதன்மூலம் இருபோக சாகுபடி நடக்கிறது.

(ஆ) இந்த ஏரி பொதுவாக நல்ல நிலைமையில் உள்ளது. இந்த ஏரிக்கு

1973–74-ல் ரூ. 14,059 செலவிலும்

1974–75-ல் ரூ. 14,120 செலவிலும்

1975–76-ல் ரூ. 12,158 செலவிலும்

மராமத்துப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

(இ) நடப்பு ஆண்டில், மதகு மற்றும் கலிங்கல் மராமத்துப் பணிகளுக்கு ரூ. 9,000-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஏரியில் தண்ணீர் வடிந்தவுடன், மராமத்து வேலை மேற்கொள்ளப்படும்.

## மதுக்கரை ஒன்றியத்தில் பழுதுபட்டுள்ள சிறு பாலங்கள்.

வினா 436— திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுக்கரை ஒன்றியம், மதுக்கரை கிராமத்திலிருந்து ஈச்சனாரி செல்லும் வழியிலுள்ள "கல்வெர்ட்" உடைந்து உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது உடைந்தது?

(இ) எந்த திட்டத்தில் கட்டப்பட்டது?

(ஈ) மீண்டும் கட்டும் செயற்குறிப்பு உண்டா?

விடை—(அ) ஆம்.

(ஆ) 1978-ம் ஆண்டின் இறுதியில் பெய்த மழையால்.

(இ) நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையினரால் 1977–78-ம் ஆண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தில் கட்டப்பட்டது.

(ஈ) 1979–80-ம் ஆண்டில் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் பேரூர் ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் எடுத்து செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



வினா 437—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுக்கரை ஒன்றியம் போடிபாளையம் கிராமத்தில் இருந்து மாச்சேகவுண்டன்பாளையம் செல்லும் பாதையிலுள்ள "கல்வெர்ட்" உடைந்துள்ளதா?

(ஆ) எப்போது கட்டப்பட்டது?

(இ) இதனை பழுதுபார்க்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

விடை— (அ) இல்லை. ஆனால் பழுது ஏற்பட்டுள்ளது.

(ஆ) இப்பாலம் முன்னால் மாவட்டக் கழக (District Board) காலத்தில் கட்டப்பட்டது.

(இ) மேற்படி சிறுபாலத்தின் வழியாக [illegible] நெடுஞ்சாலைத் துறையினரால் பைபாஸ் (bye pass) ரோடு போடத் திட்டமிடப்பட்டுத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## வைகைத் துணைக் கால்வாய்க்கரைகளுக்கு சிமெண்ட் சிலாப்புகள் பதிக்கும் திட்டம்.

வினா 438— திரு. சீ. செல்வராஜ் மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விரகனூர் அணையிலிருந்து பிரிந்து செல்லும் வைகை துணைக் கால்வாய்களின் கரையோரங்களில் சிமெண்ட் சிலாப்புகள் பதிக்கும் திட்டம் ஏதேனுமுண்டா?

விடை— வைகை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் விரகனூர் மதகு அணையிலிருந்து பிரிந்து செல்லும் இரண்டு துணைக் கால்வாய்களின் கரையோரங்களிலும் சிமெண்ட் சிலாப்புகள் பதிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

## கோவை சிந்தாமணி அங்காடி.

வினா 439— திரு. க. மருதாசலம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை சிந்தாமணி அங்காடி சென்ற ஆண்டு லாபம் எவ்வளவு?

(ஆ) எவ்வளவு கிளைகள் லாபத்தில் நடைபெறுகிறது?

விடை—(அ) 1977–78-ம் ஆண்டு கோவை சிந்தாமணி சிறப்பங்காடி நட்டத்தில் இயங்கியது.

(ஆ) மொத்தம் 11 கிளைகளில் ஒன்பது கிளைகள் லாபத்தில் நடைபெற்றன.

### பவானிசாகர் பகுதிகளில் வன இலாகாவிற்குச் சொந்தமான தரிசு நிலங்கள்.

வினா 440—திரு. க. மருதாசலம் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பவானிசாகர் பகுதியில் வன இலாகாவிற்குச் சொந்தமான சுமார் 10,000 ஏக்கர் தரிசு நிலம் தரிசாக இருப்பது உண்மையா ?

(ஆ) இதனை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

விடை—(அ) பவானிசாகர் பகுதிகளில் வன இலாகாவிற்குச் சொந்தமான எந்தவித தரிசு நிலங்களும் இல்லை. பயனுள்ள காடுகள் தான் உள்ளன.

(ஆ) வினா எழவில்லை.

### பள்ளிப்பத்து கிராமத்தில் பெட்டைக்குளத்தை பாசனத்திற்குப் பயன்படுத்துதல்.

வினா 441– திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் தாலுக்கா, பள்ளிப்பத்து கிராமத்திலுள்ள பெட்டைக்குளத்தை பாசனத்துக்குப் பயன்படுத்துமளவிற்கு மாற்றுகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆமெனில், அதற்காக என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்படும் ?

விடை—(அ) பெட்டைக்குளத்திற்கு தண்ணீர் கிடைக்கும்படி செய்து அதன் மூலம் பாசன வசதிகள் செய்ய பல மாற்றுத் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இத்திட்டங்கள் தொழில்நுட்ப ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் சாத்தியமில்லாமல் இருந்ததால் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



### மன்னார்குடி தாலுக்காவில் அரிசன மக்களுக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள்

வினா எண் 442—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1978–79-ல் மன்னார்குடி தாலுக்காவில் அரிசன மக்களுக்காக எத்தனை இடங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அதன் விபரம் என்ன ?

விடை—(அ) 1978–79-ல் மன்னார்குடி வட்டத்தில் அரிசன மக்களுக்காக பத்து இடங்களில் நில உரிமை பெறல் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அதன் விபரமாவது :—

| வரிசை எண்ணும் கிராமத்தின் பெயரும்: | உரிமை பெற்ற பரப்பளவு. | பயனடைவோர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ஏக்கர். | குடும்பங்கள். |
| 1. சேகரை .. .. | 0·91 | 17 |
| 2. கைலாசநாதன்கோவில் .. | 2·07 | 36 |
| 3. திருப்பாளக்குடி .. .. | 0·79 | 14 |
| 4. பண்டிதக்குடி .. . | 1·14 | 19 |
| 5. நெடுவாக்கோட்டை .. | 1·13 | 30 |
| 6. பைங்காடுநாடு .. .. | 5·83 | 94 |
| 7. கர்ணாவூர் .. .. | 1·40 | 22 |
| 8. நல்லூர் .. .. .. | 2·00 | 26 |
| 9. சுந்தரக்கோட்டை .. | 2·06 | 33 |
| 10. மூணாம்சேத்தி .. .. | 2·48 | 43 |
| மொத்தம் .. | 20·41 | 334 |

## பரவாக்கோட்டை கிராமத்தில் பிற்பட்ட மாணவர் விடுதி.

வினா எண் 443— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மன்னார்குடி தாலுக்கா, பரவாக்கோட்டை கிராமத்தில் பிற்பட்ட மாணவர்கட்கு விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடைமன்னார்குடி வட்டம், பரவாக்கோட்டை கிராமத்தில் பிற்பட்ட மாணவர்கட்கு விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

## பெருவிடமருதூர் கிராமச்சாலை.

வினா எண் 444— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கோட்டூர் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சார்ந்த பெருவிடமருதூர் (மண்ணுக்குமுண்டான் பஞ்சாயத்து) கிராமத்திற்கு கர்ணாவூர் முக்கத்திலிருந்து செல்லும் சாலையை மேம்பாடு செய்ய நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

விடை — ஆம்.

## வல்லத்திராக்கோட்டை அரசு பழப்பண்ணையில் இலங்கை அகதிகளுக்கு வேலை வாய்ப்பு.

வினா எண் 445— திரு. த. புஸ்பராஜ் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டை மாவட்டம், வல்லத்திராக்கோட்டை அரசு பழப் பண்ணையில் வேலை வாய்ப்பு கொடுப்பதில் இலங்கையிலிருந்து அகதிகளாகத் தாயகம் திரும்பியவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு இதுவரை வேலை கொடுக்கப்பட்டுள்ளது ?



விடை — (அ) ஆம்.

(ஆ) சராசரி ஒரு வாரத்தில் கீழ்க்கண்ட பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம். | ஆண்கள். | பெண்கள். | சிறுவர். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1977–78 .. | 33 | 14 | 8 | 55 |
| 1978–79 .. | 31 | 46 | 15 | 92 |
| 1979–80 .. | 25 | 43 | 11 | 79 |

## கரூர் நகராட்சி சாலைகளைப் பழுது பார்த்தல்.

வினா எண் 446— திரு. கு. வடிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கரூர் நகராட்சியிலுள்ள சாலைகள் அனைத்தும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆமெனில், அவைகள் எப்போது சீரமைக்கப்படும்.

விடை —(அ) ஆம்.

(ஆ) நகராட்சியால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## பட்டுப்புழு வளர்ப்பு திட்டத்தின கீழ் உழவர்களுக்கு பயிற்சி.

வினா எண் 447— திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்ற ஆண்டு பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் எத்தனை உழவர்களுக்கு எத்தனை மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது ?

விடை—சென்ற ஆண்டு (1978-79-ல்) தமிழ்நாட்டில் 3,39 விவசாயிகளுக்குப் பட்டு வளர்ப்பில் மூன்று மாதக் காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. அதற்கு முன் ஆண்டு (1977-78ல்) 492 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதுடன் மொத்தம் இதுவரை தமிழ்நாட்டில் 3,883 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## முசுக்கொட்டை செடிகள் பயிரிடல்.

வினா எண்: 448 : திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979-80-ல் எந்தெந்த மாவட்டங்களில் பட்டுப்புழு வளர்க்க, புதிதாக முசுக்கொட்டை செடிகள் பயிரிட அரசு உத்தேசித்துள்ளது.

(ஆ) அவற்றின் பரப்பளவு எவ்வளவு ?

விடை— (அ) மற்றும் (ஆ) 1979-80-ல் கீழ்க்கண்ட மாவட்டங்களில் பட்டுப்புழு வளர்க்க, புதிதாக முசுக்கொட்டை செடிகள் பயிரிட அரசு உத்தேசித்துள்ளது:

| | | ஏக்கர். |
|---|---|---|
| 1 | தர்மபுரி .. .. .. | 900 |
| 2 | சேலம் .. .. .. | 1,000 |
| 3 | கோயம்புத்தூர் .. .. | 1,150 |
| 4 | வட ஆற்காடு .. .. | 920 |
| 5 | தென்னாற்காடு .. .. | 500 |
| 6 | செங்கல்பட்டு .. .. | 230 |
| 7 | திருச்சிராப்பள்ளி .. .. | 400 |
| 8 | தஞ்சாவூர் .. .. .. | 1,000 |
| 9 | மதுரை .. .. .. | 800 |
| 10 | இராமநாதபுரம் .. .. | 200 |
| 11 | திருநெல்வேலி .. .. | 750 |
| 12 | புதுக்கோட்டை .. .. | 150 |
| | மொத்தம் | 8,000 |



## உப்பளக் கூட்டுறவு சங்கங்களுக்குவழங்கப்பெற்ற தொகை.

வினா எண் 449— திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் உப்பளக் கூட்டுறவு சங்கங்களுக்கு 1978-79-ல் எவ்வளவு தொகை எத்தனை கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது?

(ஆ) மேற்படி சங்கங்கள் நல்ல முறையில் இயங்குகின்றனவா ?

(இ) மேற்படி சங்கங்கள் நல்ல முறையில் இயங்க இரசாயன பொறியியல் வல்லுநர்கள் கொண்ட குழு அமைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

விடை— (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

(இ) இல்லை.

## மருதாநதி தேக்கத்தில் செயற்கைமுறையில் மீன் அபிவிருத்தி

வினா எண் 450— திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் மருதாநதி தேக்கத்தில் செயற்கை முறை மீன், மீன் குஞ்சுகள் உற்பத்திக்காக 1979-80 ஆம் ஆண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது ?

(ஆ) திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

விடை(அ) மருதாநதி நீர்த்தேக்கம் மீன்வள அபிவிருத்திக்காக மீன்துறையால் 1978-79 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்தேக்கத்தில் மீன் குஞ்சு உற்பத்திக்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

(ஆ) மருதாநதி நீர்த் தேக்கத்தில் செயற்கை முறையில் மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் (தூண்டுதல் இனப் பெருக்க நிலையம்) அமைக்கும் அவசியம் ஏற்படவில்லை.

[1979 நவம்பர் 2

## புளியம்பட்டி விஜயேஸ்வரி பஞ்சாலைத் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலை.

வினா எண் 145— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி அருகே புளியம்பட்டி விஜயேஸ்வரி டெக்ஸ்டெயில்ஸ்-ல் கூட்டுறவு பண்டகசாலை துவங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்பட்டது ?

(இ) மாத விற்பனை எவ்வளவு ஆகிறது ?

(ஈ) நிர்வாகிகள் யார் யார் ?

விடை— (அ) இல்லை. இக்கூட்டுறவு பண்டகசாலை அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டது.

(ஆ) முதல் (ஈ) இவ்வினாக்களுக்கு இடம் இல்லை.

## பெருமாள் ஏரி வடிமுனை

வினா எண் 452— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பெருமாள் ஏரியின் வடிமுனையை மாற்றி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) பெருமாள் ஏரியிலிருந்து வடிகால் தண்ணீர் பரவனாற்றில் எத்தனை அடி மட்டத்தின்கீழ் விழுகிறது ?

விடை (அ) வெள்ளக் காலங்களில் வரும் அதிகப்படியான வெள்ள நீரை வடியவைக்க பெருமாள் ஏரியின் இடது கோடியில் கூடுதலாக ஒரு வடிகால் அமைக்க ஒரு திட்டம் ஆய்வில் உள்ளது. தற்போது வலது கோடியில் ஒரு வடிகால் உள்ளது.

(ஆ) பெருமாள் ஏரியின் வடிகால் தண்ணீர் பரவனாற்றில் 6·5 அடி மட்டத்திலிருந்து விழுகிறது.



1979 நவம்பர் 2]

## பெருமாள் ஏரியின் கொள்ளளவு

வினா எண் 453 திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பெருமாள் ஏரியின் கொள்ளளவு எவ்வளவு ?

(ஆ) எத்தனை அடி ஆழம் தண்ணீர் தேங்கும் ?

விடை (அ) 574-48 மி. கன அடி.

(ஆ) 11·56 அடி உயரத்திற்கு தண்ணீர் தேங்கும்.

## தேவர் சோலை அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்

வினா எண்— 454 திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கடலூர் தொகுதி, தேவர் சோலையிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிட வசதி கோரி மனுக்கள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

விடை — (அ) மற்றும் (ஆ)— இல்லை.

## லால்பேட்டை வாய்க்கால் புனரமைப்புத் திட்டம்

வினா 455— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிதம்பரம் வட்டம், வீராணம் ஏரியின் பாசனத்தில் லால்பேட்டை வாய்க்கால் புனரமைப்புத் திட்டம் 1978–79-ல் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) இதுவரை எவ்வளவு செலவு செய்யப்பட்டது ?

விடை— (அ) வீராணம் ஏரியின் பாசனத்தில் உள்ள லால்பேட்டை மற்றும் வெள்ளியக்குடி வாய்க்காலை புனரமைப்பு செய்ய 1978–79-ல் ரூ. 3 இலட்சம் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1979-ம் ஆண்டு மே மாதம் முடிய செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 4.35 இலட்சம் ஆகும்.

## ஆற்றங்கரை அணையிலிருந்து தத்தநேரி மேல்மாந்தை பாசனக் குளங்களுக்கு புதிய கால்வாய்.

வினா எண் 456 திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) விளாத்திகுளம் தொகுதியிலுள்ள ஆற்றங்கரை அணையிலிருந்து தத்தநேரி மேல்மாந்தை நீர்ப்பாசனக் குளங்களுக்கு புதிய கால்வாய் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்ட மதிப்பீடு எவ்வளவு? எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை : (அ) ஆம்.

(ஆ) ரூ. 2,46,000-க்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியாளரின் இசைவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் பொருளாதார ரீதியில் பயன்தரத்தக்கதா என்பது பற்றி ஆராய்ந்து அரசு ஒப்புதல் பெற்ற பின்னர் வேலை துவங்கப்படும்.

## விளாத்திகுளம் தொகுதியில் நீர்ப்பாசனக் குளங்கள் அமைக்கும் திட்டம்.

வினா எண் 457 —திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லை மாவட்டம், விளாத்தி குளம் தொகுதியில் புதிய சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த கிராமங்களில் அமைக்கப்படும்?

விடை — (அ) ஆம்.

(ஆ) விளாத்திகுளம் தொகுதியில் 6 புதிய நீர்ப்பாசனக் குளங்கள் அமைக்க திட்டங்கள் ஆய்வில் உள்ளன. அவைகளின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) பூதலாபுரம் அருகே புதிய கண்மாய் அமைத்தல்.
(2) வேடப்பட்டி அருகே புதிய கண்மாய் அமைத்தல்.
(3) மாவிலபட்டி அருகே புதிய குளம் அமைத்தல்.
(4) காடல்குடி அருகே புதிய குளம் அமைத்தல்.
(5) டி: புதுப்பட்டி அருகே புதிய குளம் அமைத்தல்.
(6) குமாரசக்களாபுரம் அருகே புதிய குளம் அமைத்தல்.



## தமிழ்நாட்டில் இறக்குமதி செய்யப்பெற்ற ஜெர்சி இனப் பசுக்கள்.

வினா 458 — திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு 1978–79-ல் ஜெர்சி இனப் பசுக்கள் மொத்தம் எத்தனை இறக்குமதி செய்யப்பட்டது ?

(ஆ) அவைகள் எங்கு பராமரிக்கப்படுகிறது ?

விடை : (அ) 1978–79-ல் தமிழ்நாட்டிற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து மொத்தம் 150 ஜெர்சி இனப் பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

(ஆ) அவைகள் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டை உயரின கால்நடைப் பெருக்கப் பண்ணையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## பதிவு செய்யப்பெற்ற நூல்கள்.

வினா 459 — திரு. து. புருஷோத்தமன் . மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தமிழக அரசின் புத்தகப் பதிவாளர் (Registrar of Books) மூலம் 1978–79-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட நூல்கள் எத்தனை ?

(ஆ) அவை எந்தெந்த மொழிகளில் ?

விடை (அ) தமிழக அரசின் புத்தகப் பதிவாளர் மூலம் 1978–79-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட நூல்களின் மொத்த எண்ணிக்கை 1911.

(ஆ) 1978–79-ம் ஆண்டில் மொழிவாரியாக பதிவு செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| ஆங்கிலம் | 205 |
| தமிழ் | 1,700 |
| இந்தி | 3 |
| மலையாளம் | 1 |
| தெலுங்கு | [illegible] |
| சமஸ்கிருதம் | 1 |

## சேலம் மாவட்டத்தில் ஏரிகள் அமைக்கும் திட்டம்.

வினா 460 :—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் அருகிலுள்ள ராமநாய்க்கன்பாளையத்தில் மலை அடிவாரத்தில் ஒரு ஏரி கட்ட ஆய்வு நடத்தப்பட்டு பல ஆண்டுகளாகியும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆமெனில் வேலையைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை (அ) இத் திட்டத்திற்கான மதிப்பீடு தயாரிக்கும் வேலை இன்னும் முடிவடையவில்லை. விரைவில் முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மதிப்பீடு அரசுக்கு கிடைத்தவுடன் அதனை முறைப்படி ஆராய்ந்து திட்டம் ஏற்புடையதாயிருப்பின் அதற்கு அரசு ஒப்புதல் வழங்கும்.

வினா 461 —திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம். ஆத்தூர் தொகுதியிலுள்ள கல்பக ஊருக்கு அருகிலுள்ள மலை அடிவாரத்தில் 'ஆனைவாரி' என்ற இடத்தில் ஏரிக் கட்ட ஆய்வு நடத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில் வேலை நடைபெற நடவடிக்கை எந்த அளவிலுள்ளது ?

விடை (அ) ஆம்.

(ஆ) ரூ. 2·26 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப் பட்டு தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது. மதிப்பீடு அரசுக்கு கிடைத்தவுடன் அதனை முறைப்படி ஆராய்ந்து திட்டம், ஏற்பு டையதாயிருப்பின் அதற்கு ஒப்புதல் வழங்கப்படும்.

வினா 462—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலுள்ள சிலியப்பட்டி புதூருக்கு அருகில் ஏரி ஒன்று கட்டுவதற்கு ஆய்வு நடத்தி பல ஆண்டுகளாகியும் வேலைத் துவக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?



விடை (அ)&(ஆ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு தல அதிகாரி களால் தயாரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு அரசுக்கு கிடைத்த வுடன் அதனை முறைப்படி ஆராய்ந்து, திட்டம் ஏற்புடையதா யிருப்பின் அதற்கு அரசு ஒப்புதல் வழங்கும்.

வினா 463—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலுள்ள கந்த சாமிபுதூர் என்ற ஊரில் ஏரி கட்ட ஆய்வு நடத்தி பல ஆண்டு களாகியும் வேலை நடைபெறவில்லை என்பது உண்மையா?

(ஆ) அதற்கான காரணம் யாது?

விடை (அ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு தல அதிகாரி களால் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

(ஆ) மதிப்பீடு அரசுக்கு கிடைத்தவுடன் அதனை முறைப் படி ஆராய்ந்து திட்டம் ஏற்புடையதாயிருப்பின் அதற்கு அரசு ஒப்புதல் வழங்கும்.

## கல்பகனூருக்கு அருகில் வசிஷ்ட நதியின் குறுக்கே அணை.

வினா 464 —திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலுள்ள கல்பக னூருக்கு அருகில் வசிஷ்ட நதியில் ஒரு அணைக் கட்டுவதைப்பற்றி பல ஆண்டுகளாக ஆய்வு நடத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) வேலையைத் துவக்க துரித நடவடிக்கை எடுக்கப் படுமா ?

விடை (அ) & (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் கல்பகனூருக்கு அருகில் வசிஷ்ட நதியில் ஓர் அணை கட்டுவதற் கான சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. ஆய்வின் முடிவைப் பொறுத்து, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

## சென்னையிலுள்ள கால்நடை மருத்துவ மனைகள்.

**வினா 465**—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகருக்கு கால்நடைகளுக்கான மருத்துவ மனைகள் எத்தனை, எங்கெங்கு உள்ளன?

(ஆ) அவற்றில் நாள்தோறும் சராசரி எத்தனை கால்நடைகளுக்கு சிகிச்சை செய்யப்படுகிறது?

விடை (அ) அண்ட் (ஆ) (i) கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம், சென்னை நகரில் கீழ்க்கண்ட இடங்களில் கால்நடைகளுக்கு சிகிச்சை செய்யப்படுகிறது :—

| கால்நடை மருந்தகம், (1) | நாளொன்றுக்கு. (2) |
|---|---|
| 1. இராயபுரம் .. .. | 115 |
| 2. கால்நடை பிரதம மருத்துவமனை, சைதாப்பேட்டை. | 120 |

(ii) சென்னை மாநகராட்சியின் கீழ்க்கண்ட இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்படுகின்றன :—

| கால்நடை மருந்தகம். (1) | நாளொன்றுக்கு. (2) |
|---|---|
| மைலாப்பூர் .. .. | 48 |
| புதுப்பேட்டை .. .. | 27 |
| பேசின்பாலம் .. .. | 35 |
| பெரம்பூர் .. .. | 39 |
| கோடம்பாக்கம் .. .. | 42 |

(iii) தமிழ்நாடு பல்கலைக் கழகத்தின்கீழ் செயல்படும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள மருந்தகம்—382.

(iv) பிராணிவதைத் தடுப்புச் சங்கத்தால் நடத்தப்படும் கால்நடை மருந்தகம், வேப்பேரி—2.

(v) "புளூ கிராஸ் ஆப் இந்தியா"—வால் இரு கால்நடை மருந்தகங்கள் கீழ்க்கண்ட இடங்களில் நடத்தப்படுகின்றன :–

| | |
|---|---|
| கால்நடை மருந்தகம், அடையார் .. | 15 |
| கால்நடை மருந்தகம், தியாகராயநகர் .. | |



## சர்க்கார் சாமக்குளம் ஒன்றியப் பள்ளிகள்.

**வினா 466**—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, சர்க்கார் சாமக்குளம் யூனியனில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை என்ன?

(ஆ) இப் பள்ளிகளில் குடிதண்ணீர் வசதி, கழிப்பிட வசதிகள் உள்ள பள்ளிகள் எவ்வளவு?

விடை (அ) 38.

(ஆ) குடிதண்ணீர் வசதி 8 பள்ளிகளிலும், கழிப்பிட வசதி ஒரு பள்ளியிலும் உள்ளது.

## நஞ்சேகவுண்டன்புதூர் குடிநீர் கிணற்றுக்கு மோட்டார் அமைத்தல்.

**வினா 467**—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, சின்னவாடம்பட்டி நகர பஞ்சாயத்து நஞ்சேகவுண்டன்புதூர் கிராமத்தில் குடிதண்ணீருக்காக அமைக்கப்பட்ட போர்வெல் கிணற்றுக்கு மோட்டார் அமைக்காமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மோட்டார் அமைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை —(அ) தெரியும்.

(ஆ) மேற்காணும் துளை குழாய்க்கிணற்றில் மோட்டாரை அமைக்க ஊராட்சி ஒன்றியப் பொது உபரி நிதியிலிருந்து ரூ. 11,500 செலவு செய்யக் கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரை செய்துள்ளார். ஊரக வளர்ச்சி இயக்குநர் அங்கீகாரம் பெற்றதும் மின் மோட்டார் அமைக்கப்படும்.

## போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சிக்னல்கள்.

**வினா 468**—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த அமைக்கப்பட்ட சிக்னல்கள் முறையாக பயன்படுத்தாமல் நிறுத்தி வைத்திருக்க காரணம் என்ன?

(ஆ) இந்த சிக்னல்கள் அமைக்க ஏற்பட்ட செலவு என்ன?

விடை (அ) கோவை நகரில் 17 சிக்னல்கள் உள்ளன. அவற்றில் 10 சிக்னல்கள் நன்கு இயங்குகின்றன. மீதியுள்ள ஏழு சிக்னல்களில் இரண்டு பேருந்துகளினால் ஏற்பட்ட விபத்தினால் பழுதடைந்து விட்டன. பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஒன்று சென்னை இந்தியன் டெலிபோன் இண்டஸ்டிரீஸ் என்ற ஸ்தாபனத்திடம் மாற்று சிக்னல்களை நிர்மாணிக்க கோரப்பட்டுள்ளது. மற்றொன்று தண்ணீர்குழாய்கள் போடுவதற்கென பள்ளங்கள் வெட்டப்பட்டு இருப்பதினால் உபயோகிக்க முடியவில்லை. மற்றுமொன்று பெருத்த மழையினாலும், காற்றினாலும் உறுப்புகள் பழுதடைந்து விட்டன. இதர இரண்டு சிக்னல்கள் மின்சாரக் கோளாறுகளினால் சரிவர வேலை செய்யவில்லை.

(ஆ) ரூபாய் 7,87,347.

## வட ஆண்டாப்பட்டு அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்.

வினா 469 — திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம் வட ஆண்டாப்பட்டு அரிசன மக்கள் வீட்டுமனைக்காக அருகில் உள்ள அரசுக்கு சொந்தமான நிலத்தை அண்மையில் கேட்டுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை (அ) ஆம். வடஆண்டாப்பட்டு அரிசனங்கள் 36மனைகளுக்கு ச.எ. 8/1—2.39 ஏக்கர் தீர்வை ஏற்படாத தரிசு நிலத்திலும், ச.எ. 9/2—2·13 ஏக்கர் தோப்பு புறம்போக்கு நிலத்திலும் கேட்டு மனு செய்துள்ளனர்.

(ஆ) போளூர் அரிசன நல தனி தாசில்தார் மேற்குறிப்பிட்டுள்ள நிலங்களை அரிசன காலனி புறம்போக்காக மாற்ற திருவண்ணாமலை தாசில்தாரை கேட்டுள்ளார்.

## ஆனந்தல் அரிசன காலனியில் உள்ள தெருவிளக்குகள்.

வினா 470— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம், ஆனந்தல் அரிசன காலனியில் அமைக்கப்பட்டுள்ள தெருவிளக்குகள் நீண்ட நாட்களாக எரியாமலே இருந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?





விடை—(அ) மற்றும் (ஆ) எழுப்பப்பட்ட சட்டமன்றப் பேரவைத் துறை வினா மூலம் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. தற்போது அனைத்து விளக்குகளும் எரிகின்றன.

## கல்வராயன் மலைப் பகுதியில் மின்சாரம் வழங்கப்பெற்ற ஊர்கள்.

வினா 471 —திரு. 'துரை முத்துசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்வராயன் மலைப்பகுதிக்கு எத்தனை ஊர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது ?

(ஆ) அதன் விபரம் என்ன ?

விடை— (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலையில் உள்ள புதுபாலப்பட்டு என்ற கிராமத்தில் 20 சாதாரண 40 வாட்ஸ் விளக்குகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

## சு. வானவட்டி கிராம அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்:

வினா 472 :—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை வட்டம், சு. வானவட்டி கிராமத்தில் இயங்கி வரும் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அரசாங்கக் கட்டிடம் உள்ளதா ?

விடை—இல்லை. அந்தப் பள்ளி தனியார் கட்டிடத்தில், வாடகை இல்லாமல் இயங்கி வருகிறது.

## மதுரை ஒலகலப்பாடி கிராம இறவை நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கம்.

வினா 473 —திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், குலஞ்சனூர் ஊராட்சியின் மதுரை ஒலகலப்பாடி கிராமத்தில் இறவைநீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கம் செயல்படுகிறதா ?

விடை—இல்லை.

[1979 நவம்பர் 2

### சென்னையிலுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் முதல்வர் பதவிகள்.

வினா 474 – திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திலும், வண்ணாரப்பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திலும் முதல்வர் பதவி சென்ற நான்கு மாதங்களாக காலியாக இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல்வர் பதவி நிரப்பப்படும் ?

விடை—(அ) ஆம்.

(ஆ) 11—5—1979, 14—5—1979 ஆகிய தினங்களில் நிரப்பப்பட்டன.

### ஈழகம் ஏரிக்கான வரத்துக் கால்வாய்.

வினா 475 – டாக்டர் கே. சமரசம், திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டத்தில் கலவரப்பள்ளி (கடவரஹல்லி) அணைக்கட்டிலிருந்து ஈழகம் ஏரிக்கு வருகின்ற கால்வாயினை மாற்றி அமைக்கின்ற திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அது எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—(அ) இல்லை. ஏனெனில், தற்பொழுது கால்வாய் செல்கின்ற வழியே சிறந்தது ஆகும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### தஞ்சை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்.

வினா 476 – திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு 1977-78 ஆம் ஆண்டில் உற்பத்தியாளர்களால் கொண்டுவரப்பட்ட பருத்தி, மணிலா எவ்வளவு ?

(ஆ) இதன்மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?



1979 நவம்பர் 2]

விடை—(அ) மணிலா .. 3,835 641 மெட்ரிக் டன்கள்.

பருத்தி .. இல்லை.

(ஆ) மணிலா .. ரூ. 2,29,442-20

பருத்தி .. இல்லை.

### தண்டராம்பட்டு தொகுதியில் அரிசன நலத் துறையால் அமைக்கப்பெற்ற சாலைகள்.

வினா 477 – திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978-79-ல் தண்டராம்பட்டு தொகுதியில், அரிசன நலத்துறையால் கிராம சாலைகள், இடுகாடு செல்லும் பாதைகள் எத்தனை அமைத்து தரப்பட்டுள்ளது ?

விடை—வட ஆற்காடு மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியில் 1978-79 ஆம் ஆண்டில் அரிசன நலத்துறை மூலமாக கிராம சாலைகள், இடுகாட்டுக்கு செல்லும் பாதைகள் எதுவும் அமைக்கப்படவில்லை. எனினும், தண்டராம்பட்டு புதிய அரிசனக்காலனியில் நடப்பாண்டில் இரண்டு சிறு பாலங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### வடுவூர் பகுதியை சுற்றுலா மையமாக்குதல்.

வினா 478 – திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் உள்ள வடுவூர் பகுதியை சுற்றுலா இடமாக அறிவிக்கவும், அங்குள்ள வடுவூர் ஏரியில் படகு விடப்படவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—இல்லை.

[1979 நவம்பர் 2

## தஞ்சை மாவட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்

வினா 479—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் எந்தெந்த ஒன்றியங்களில் செயலாக்கப் படுகிறது ?

(ஆ) இத்திட்டத்திற்கு மத்திய அரசின் உதவி உண்டா?

விடை—(அ) சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட 16 ஒன்றியங்களில் செயலாக்கப் படுகிறது :—

1. தஞ்சாவூர்.
2. பூதலூர்.
3. ஒரத்தநாடு.
4. திருவோணம்.
5. பட்டுக்கோட்டை.
6. மதுக்கூர்.
7. சேது பாவா சத்திரம்.
8. பேராவூரணி.
9. மன்னார்குடி.
10. நீடாமங்கலம்.
11. கொடவாசல்.
12. கொரடாச்சேரி.
13. திருவாரூர்.
14. கீவளூர்.
15. மாயூரம்.
16. குத்தாலம்.

(ஆ) 1978-79 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி முழு அளவில் அளித்தது. ஆனால் 1979-80, ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ஏற்படும் செலவினை மத்திய அரசு 50 சதவீதமும் மாநில அரசு 50 சதவீதமும் பொறுப்பு ஏற்கும்.



1979 நவம்பர் 2]

## மக்காச்சோள வகைகள் பயிரிடல்.

வினா 480—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மக்காச்சோளம் எத்தனை ஏக்கர்களில் பயிரிடப்படுகிறது ?

(ஆ) எத்தகைய ரகங்கள் பயிரிடப்படுகிறது?

விடை—(அ) 19,400 ஹெக்டேர்.

(ஆ) தக்கான், கங்கா 5, மற்றும் கோவில்பட்டி ஒன்று ஆகிய மூன்று ரகங்கள் பயிரிடப்படுகின்றன.

## தஞ்சை மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள்.

வினா 481—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில் விபரம் என்ன ?

(இ) எந்த ஒன்றியத்தில் அதிகம் துவக்கப்பட்டுள்ளது ?

விடை—(அ) தஞ்சை மாவட்டத்தில் 92 சிறு தீப்பெட்டி தொழிற்சாலைகள் துவங்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ) பல்வேறு ஒன்றியங்களில் துவக்கப் பட்டுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு :—

| பஞ்சாயத்து யூனியன். (1) | சிறிய தீப்பெட்டி தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. தஞ்சாவூர் .. .. | 20 |
| 2. பாபநாசம் .. .. | 2 |
| 3. அம்மாபேட்டை .. .. | 1 |
| 4. ஒரத்தநாடு .. .. | 9 |
| 5. செம்பனார்கோயில் .. | 11 |
| 6. குத்தாலம் .. .. | 13 |
| 7. திருப்பனந்தாள் .. .. | 2 |
| 8. மன்னார்குடி .. .. | 24 |
| 9. கோட்டூர் .. .. | 2 |
| 10. கொரடாச்சேரி .. .. | 1 |
| 11. திருத்துறைப்பூண்டி .. .. | 6 |
| 12. நீடாமங்கலம் .. .. | 1 |
| மொத்தம் | 92 |

## காலநடை மருத்துவக் கல்லூரி.

வினா 482—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—.

(அ) தமிழ்நாட்டில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகள் எத்தனை ?

(ஆ) 1975–76, 1977–78ஆம் ஆண்டுகளில் முறையே, பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை என்ன ?

விடை—(அ) ஒன்று. (சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.)

(ஆ) 1975–76, 1977–78ஆம் ஆண்டுகளில் முறையே பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை பின் வருமாறு :—

| வருடம். | பயின்ற மாணவர்கள். | | |
|---|---|---|---|
| | பி.வி.எஸ். | எம்.வி.எஸ்.ஸி. | பி.எச்.டி. |
| (1) | (2) | (3) | (4) |
| 1975–76 .. .. | 815 | 55 | .. |
| 1976–77 .. .. | 810 | 52 | .. |
| 1977–78 .. .. | 756 | 69 | 15 |

## தண்டராம்பட்டு ஒன்றியத்தில் வீட்டுமனைப் பட்டா கோரி வந்த மனுக்கள்.

வினா 483—திரு. த. வேணுகோபால் ; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78ஆம் ஆண்டு செங்கம் தாலுக்கா, தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் இருந்து வீட்டு மனைப்பட்டா கோரி வந்த மனுக்கள் எத்தனை ?

(ஆ) அவற்றுள் எத்தனை நபருக்கு பட்டா வழங்கப் பட்டது ?



விடை—(அ) & (ஆ) : 1977-78ஆம் ஆண்டுகளில் செங்கம் தாலுக்கா தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் வீட்டுமனை கோரி வந்துள்ள மனுக்களின் விபரமும், அவைகளில் பட்டா வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும், தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கையும் கீழே, கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1977 | 1978 |
|---|---|---|
| வீட்டுமனை கோரி வந்த மனுக்கள் .. .. | 86 | 119 |
| வீட்டுமனைப் பட்டா வழங்கப் பெற்ற நபர்கள் | 2 | 3 |
| தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் .. .. | 84 | 4 |
| நிலுவையிலுள்ள மனுக்கள் .. .. .. .. | | 112 |

## தஞ்சை மாவட்டத்திலுள்ள உப்பளங்களின் பரப்பளவு.

வினா—484 திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் கடற்கரை ஓரமாக உள்ள பகுதிகளில் உப்பளங்களின் பரப்பளவு எவ்வளவு ?

விடை— தஞ்சை மாவட்டத்திலுள்ள உப்பளங்களின் பரப்பளவு 35,538·38 ஏக்கர் ஆகும்.

## நகரபாடி ஏரி சீரமைப்புப் பணி.

வினா 485— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோயில் வட்டம் நகரபாடி ஏரியை அகலப் படுத்தி ஆழப்படுத்த அரசு செயற் குறிப்பு உள்ளதா?

விடை— இல்லை.

## சின்னபாண்டியன் ஏரியினை மேம்படுத்தும் திட்டம்.

வினா 486—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு ளாண்மை—பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட ராவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டம், சின்ன பாண்டியன் ஏரியை அகலப் த்தி, ஆழப்படுத்த அரசு செயற் குறிப்பு உள்ளதா?

விடை — காட்டுமன்னார்கோயில் வட்டம், பாண்டியன் ஏரியை மேம்படுத்தும் திட்டம், தலைமை பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

## விளாகம் கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டிடம்.

வினா 487— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிதம்பரம் வட்டம், விளாகம் கால்நடை மருத்துவ மனைக்கு சொந்தக் கட்டிடம் உள்ளதா?

(ஆ) கட்டிடம் கட்ட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—(அ) சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் விளாகம் கிராமத்தில், கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தால் கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டித் தரப்பட்டது. இக்கட்டிடத்தின் சுவர்களில், நீண்ட கால உபயோகத்தின் காரணமாகவும், வெட்ப தட்ப நிலை மாற்றத்தின் காரணமாகவும் பெரிய அளவில் வெடிப்புகள் ஏற்பட்டு, கால்நடை மருந்தகம் தொடர்ந்து அக்கட்டிடத்தில் செயல்பட முடியாத நிலையில், கால்நடை மருந்தகம் உடனடியாக அந்த கிராமத்தில் மாத வாடகை ரூ. 50க்கு வேறொரு கட்டிடத்திற்கு 1974ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ஆம் நாள் முதல் மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) பழுதுபட்ட கால்நடை மருந்தக கட்டிடத்தினை பழுது நீக்கம் செய்வது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## நயனகுண்டா பகுதியில் ஏரி அமைக்கும் திட்டம்.

வினா 488—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம் கந்திலி ஊராட்சி ஒன்றியம் மண்டல நயனகுண்டா பகுதியில் புதிய ஏரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?





விடை :—இந்த திட்டம் மிகவும் சிக்கனமற்ற திட்டமாக உள்ளது. மேலும் இதைச் செயல்படுத்த தேவைப்படும் 44 ஏக்கர் நிலங்களில் அரிசனங்களும் முன்னாள் கள் இறக்கியவர்களும் 1940 ஆம் ஆண்டிலிருந்து ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். அவர்களை அகற்ற மாற்று நிலம் அவர்கட்கு கொடுக்கப்பட வேண்டியுள்ளது. இக்காரணங்களால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

## வட ஆற்காடு மாவட்ட விவசாயிகளுக்கு மத்திய கூட்டுறவு வங்கிமூலம் வழங்கப்பெற்ற கடன்கள்.

வினா 489 — திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1978–79 ஆம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்ட விவசாயிகளுக்கு வேலூர் மத்திய கூட்டுறவு வங்கிமூலம் வழங்கிய கடன் தொகை எவ்வளவு?

விடை—1978-79 ஆம் நிதியாண்டில் வட ஆற்காடு மத்திய கூட்டுறவு வங்கி அம்மாவட்ட விவசாயிகளுக்கு ரூபாய் 7,03·89 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது.

## திருப்பத்தூர் ஒன்றியத்தில் உள்ள கால்நடை மருந்தகங்கள்.

வினா 490 — திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் எத்தனை இடங்களில் கால்நடை மருந்தகங்கள் உள்ளன?

(ஆ) அதில் கால்நடை ஆய்வாளர்கள் இல்லாத இடம் எத்தனை.

விடை : (அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் திருப்பத்தூர், சோலார்பேட்டை ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்கள் உள்ளன.

(ஆ) ஒன்றுமில்லை.

[1979 நவம்பர் 2

நெல்லை—குமரி நெடுஞ்சாலையில் சுற்றுலா விடுதிகள்.

வினா 491—திரு. யா. சை. மூ. யூசுப்: மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979 ஆம் ஆண்டு நெல்லைக்கும் குமரிக்கும் இடையே உள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 7–ல் எந்தெந்த ஊர்களில் சுற்றுலா விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அத்தகு விடுதிகளில் மின் வசதி பொருத்தப் பட்டுள்ளதா?

விடை—(அ) மற்றும் (ஆ): இல்லை.

துலுக்கர்பட்டியில் பாசனக் குளம் அமைத்தல்.

வினா 492—திரு. யா. சை. மூ. யூசுப்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், இராதாபுரம் தொகுதியிலுள்ள ஆணைக்குளம் ஊராட்சிக்குட்பட்ட துலுக்கர்பட்டியில் பாசனத் திற்கு குளம் அமைக்க கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா

(ஆ) ஆம் எனில், அதன் மேல் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன.

விடை—(அ) மற்றும் (ஆ) நெல்லை மாவட்டம் ஆணைக் குளம் கிராமம் துலுக்கர்பட்டியில் ஆணைக்குளம் காலின் நேர்முக ஆயக்கட்டுகளுக்கு பாசனத்தை உறுதி செய்யும் வகையில் ஒரு புதிய கண்மாய் அமைப்பதற்கான திட்டம் முன்னோடி ஆய்வில் உள்ளது.



1979 நவம்பர் 2]

சென்னையில் மினி சூப்பர் மார்க்கெட்டுகள்.

வினா 493—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் தற்பொழுது எத்தனை மினி சூப்பர் மார்க்கெட்டுகள் இயங்கி வருகின்றன?

(ஆ) அவைகள் இலாபத்தில் இயங்கி வருகிறதா?

(இ) ஆம் எனில் 1978–79 இல் அவை ஈட்டிய இலாபம் எவ்வளவு?

விடை — (அ) 15.

(ஆ) 1978–79 ஆம் ஆண்டில் ஒன்றை தவிர மற்றவைகள் லாபத்தில் இயங்கின.

(இ) ரூ. 2·28 இலட்சம்.

ஒன்றியங்களில் மினி சூப்பர் மார்க்கெட்டுகள்.

வினா 494—திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு மினி சூப்பர் மார்க்கெட் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரி சீலனையில் உள்ளதா?

விடை—தற்போது ஏதும் இல்லை.

## சின்கோனா உற்பத்திக்குச் செலவிடப்பெற்ற தொகை.

வினா 495— திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு செய்தி-அற நிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78, 1978–79 ஆம் ஆண்டுகளில் சின்கோனா உற்பத்திக்கு எவ்வளவு தொகை செலவிடப்பட்டிருக்கிறது?

(ஆ) ஆண்டு தோறும் அரசுக்கு இதனால் இலாபமா ? நஷ்டமா ?

(இ) விவரம் அளிக்கப்படுமா ?

விடை—(அ) 1977-78ம்—ஆண்டில் ரூ. 50.86 இலட்சங்களும். 1978–79-ம் ஆண்டில் ரூ. 59.14 இலட்சங்களும் செலவிடப்பட்டிருக்கின்றன.

(ஆ) மற்றும் (இ) வருவாய் 1977–78-ம் ஆண்டில் ரூ.18.10 இலட்சங்களையும், 1979–80-ம் ஆண்டில் ரூ.18 இலட்சங்களையும் நிகர வருவாயாக ஈட்டியுள்ளது.

## Tiffin rooms for Staff and Advocates in Metropolitan Magistrate Courts at Madras

Qn. 496— Thiru R. E. CHANDRAN JAYAPAL: Will the Hon. the Minister for Law be pleased to state whether the Government have any proposal to construct tiffin rooms for the court staff and advocates separately in the courts of the Metropolitan Magistrates at Saidapet, Egmore and George Town?

Ans. There is no proposal at present pending either with the High Court, Madras or with the Government for constructing tiffin rooms for the court staff and advocates separately in the courts of the Metropolitan Magistrates at Saidapet, Egmore and George Town except in the case of Chief Metropolitan Magistrate's Court, Egmore. The High Court has sent proposals for construction of a separate tiffin room and a cycle-stand for the staff of that court at an estimated cost for Rs. 39,700. This proposal is under consideration of the Government.



## வடாற்காடு மாவட்டத்திலுள்ள முது நிலைச் சீர்திருத்தப் பள்ளிகள்.

வினா 497— திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசினர் சீர்திருத்த முது நிலைப் பள்ளி, வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை உள்ளன ?

விடை—வட ஆற்காடு மாவட்டத்தில் முது நிலை சீர்திருத்தப் பள்ளி ஏதும் இல்லை.

## Collection of Motor Vehicles Tax through Nationalised Banks.

Qn. 498—Thiru Salem M. ARUMUGAM : Will the Hon. the Minister for transport be plased to state —

(a) Whether the Nationalised Banks have been authorised to receive Motor Vehicles Taxation. amount from Vehicle owners in this State; and

(b) if so, the details thereof ?

Ans. —(a) Yes.

(b) With a view to have more tax receiving points, Government have authorised the Indian Overseas Bank and Indian Bank to collect Motor Vehicles tax in respect of non-transport vehicles like Cars, Motor-cycles and Scooters in the State. The above scheme was first introduced with effect from 1-7-78 through 37 branches of Indian Overseas Bank in Madras City. After watching the working of the scheme, it was further extended to District headquarters and other important towns in the State from 1-4-1979. and 1-7-1979. At present 289 branches of Indian Overseas Bank and Indian Bank collect the Motor Vehicles tax in respect of non-transport vehicles.

## அம்பாசமுத்திரம் வட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலை.

வினா 499—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கிராமத்தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் தீப்பெட்டி தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட உள்ளதா?

(ஆ) ஆமெனில், எந்த இடத்தில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(இ) எந்த துறையின் கீழ்அமைக்கப்படும்?

விடை— (அ) இல்லை.

(ஆ) அண்ட் (இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## தென்னாற்காடு மாவட்டத்தில் பாறை உடைக்கும் கருவிகள்

வினா 500— திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள வேளாண்மை பொறியியல் அலுவலகத்தில் எத்தனை பாறை உடைக்கும் கருவிகள் உள்ளன?

(ஆ) அவை எம்முறையில் இயங்குகின்றன?

(இ) அவை விவசாயிகளுக்கு எந்தெந்த நடைமுறைகளின் கீழ் வாடகைக்கு விடப்படுகின்றன?

விடை— * விவர அறிக்கை அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு — ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

*[260-ம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

## 2. கவன ஈர்ப்பு.

**மழையின்மையால் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்ட விவசாயி களிடம் கடன் வசூல் நிறுத்த வேண்டிய அவசியம் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம் :** தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் போதிய மழையின்மையால் பாதிப்புக்கு உள்ளாகி உள்ள நிலையில் அரசின் கடன்கள் வசூல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டிய அவசர நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வறட்சி, புயல், வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரண நடவடிக்கையாக நிலவரிகள் தள்ளுபடி, கடன் ஒத்திவைத்தல் போன்ற சலுகைகளை அவ்வப்போது அரசு அளித்து வருகிறது. 1385, 1386 பசலிகளுக்குப் பின் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. 1977 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அரசு அணாவாரியாக சான்றிதழ் அளிக்கும் அடிப்படையில் 37 பைசாவும் அதற்குக் குறைவாக விளைந்த நிலங்களுக்கு வரிகளைத் தள்ளுபடி செய்தும், அரசுக் கடன்களை ஒத்திப் போட்டும் சலுகைகளை அளித்தது.

2. இராமநாதபுரம் மாவட்டத்தில் (1388-ம் பசலி ஆண்டில்) 1978 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் வாரத்தில் வறட்சி நிலை நிலவி வருவதாக அம் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து முன் அறிக்கை கிடைத்தது. இதன்பின் நிலைமை நீடிப்பதாக மேலும் ஜனவரி 1979-ல் விவரமாக அறிக்கை கொடுத்தார். இந்த மாவட்டத்தின் நிலைமையை நேரில் கண்டறிய வருவாய் வாரியத்தின் உறுப்பினர், பிப்ரவரி 1979-ல் சிவகாசி, இராமநாதபுரம் வட்டங்களில் உள்ள கிராமங்கள் சிலவற்றை சுற்றிப் பார்த்து அறிக்கை கொடுத்தார். புயல், வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தினால் பயிர் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு எந்த அடிப்படையில் சலுகைகள் வழங்கப் படுகின்றனவோ அதே அடிப்படையில் வறட்சியால் பயிர் பாதிக்கப்பட்ட இடங்களுக்கும் சலுகை அளிப்பதே சீரான முறையாகும் எனக் கருதி வாரியத்தின் பரிந்துரைகளை ஏற்று கீழ்க்கண்டவாறு உத்திரவிடப் பட்டது :—

(1) 1388-ம் பசலி ஆண்டில் ஒரு வயலில் 37 பைசாவும் (50 சதவீதம்) அதற்கு குறைவாகவும் விளைந்தால் நிலவரியும் உள்ளூர் வரியும் தள்ளுபடி செய்வது ;

(2) 37 பைசாவும் அதற்கு குறைவாகவும் விளைந்த நிலங்களுக்கு கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர் தீர்வை, தனித் தீர்வை, தனித் தண்ணீர் தீர்வை, பணப் பயிர்களுக்கான தீர்வை ஆகியவற்றை தள்ளுபடி செய்வது ;

(3) 37 பைசாவும் அதற்கு குறைவாக விளைந்த புஞ்சை நிலங்களுக்கு உள்ளூர் வரி தள்ளுபடி செய்வது ;

(4) ஊராட்சி ஒன்றியங்களை இம்மாதிரியான நிலங்களுக்கு உள்ளூர் செஸ் மேல்வரி விதிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்வது ;

(5) உள்ளூர் மேல்வரி இழப்புக்கு ஈடாக மானியம் முன்பசலிகளில் பின்பற்றிய முறைப்படி அளிப்பது ;

(6) ஓர் உழவனுக்கு சொந்தமான நிலங்களில் 50 சத விதத்திற்கு மேற்பட்ட நிலங்களில் நிலவரி தள்ளுபடி பெறுவதற்கு தகுதி பெற்றிருந்தால் நிலுவை வரி உள்ளூர் வரி பாக்கிகள் அரசுக் கடன்கள் ஆகியவற்றின் வசூலை அடுத்த பசலிக்கு ஒத்திப் போடுவது.

3. இந்த ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் மழையில்லாமையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் ஏதுமில்லை. அவ்வாறு தகவல் கிடைத்தால் மாவட்ட ஆட்சியரையும், வருவாய் வாரியத்தையும் கலந்து கொண்டு தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பல விவரங்களை நான் விவரமாகச் சொல்லியிருக்கிறேன். கடன் வசூலில் ஜப்தி நடவடிக்கை இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் நடைமுறை வேறாக இருக்கிறது. திருவாடானை தாலுகாவில் கூட்டுறவுச் சங்க கடனை வசூல் செய்வதில் கடுமையாக நடந்துகொள்கிறார்கள். விவசாயிகளின் வீட்டுப் பூட்டை உடைத்து, சங்கத் தலைவரும் கூடவே இருந்து, ஜப்தி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்காக ஆதாரங்களை கூட்டுறவுத்துறை அமைச்சரிடம் நேரடியாகவே கொடுத்திருக்கிறேன். போலீசாரும் எஃவ்.ஐ.ஆர். போட்டிருப்பதாக ரிகார்டு இருக்கிறது. அதைப்போல இளையான்குடி வட்டாரத்திலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாகம்மாள் என்ற பெண்ணும் வேறு சில பெண்களும் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. புல்லங்குடி கிராமத்திலும் ஜப்தி நடவடிக்கை எடுப்பதாக தந்தி கொடுத்திருக்கிறார்கள்,



கடன் வசூல் என்பது, அரசும், அரசைச் சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களும் வழங்கிய கடன் வசூல் செய்வதில்தான் இப்படிப்பட்ட ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுபோன்ற எல்லா விவரங்களையும் என்னுடைய கவன ஈர்ப்பில் தெரிவித்திருக்கிறேன். அமைச்சரின் செயலர் அதுபற்றி எந்தவிதமான விளக்கமும் கொடுக்கவில்லை. மழை இல்லை என்று சொன்னால் அதுபற்றி அரசாங்கத்திற்கு தகவல் இல்லை என்று சொல்கிறார்கள் ; ஆச்சரியமாக இருக்கிறது. நேற்றும் இன்றும்தான் மழை பெய்திருக்கிறது. அதற்கு முன்னால் மழை இல்லை. விதை வாங்கக்கூட காசில்லாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஜப்தி நடவடிக்கைகளை ஒத்திவைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

திரு. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய புகார் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

### (அ) இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன் வடிவினை' பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது. அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[1979 நவம்பர் 2

## 4. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளாதது குறித்து.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்து முடிந்து விட்டது, வேறு அலுவலுக்குச் சென்றாகிவிட்டது, பேசாமல் உட்காருங்கள். . . .

**திரு. க. சுப்பு :** கவன ஈர்ப்புத் தீர்மானம் முடிந்ததும் நீங்கள் என்னைக் கூப்பிடுவீர்கள் என்று நினைத்திருந்தேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் மன்றத்திலே கேள்வி நேரம் முடிந்ததும் உரிமை மீறல் பிரச்னையைத்தான் முதன் முதலாக எழுப்பியிருக்க வேண்டும், நான் கவன ஈர்ப்புத் தீர்மானமும் எடுத்துக்கொண்டு, இன்னொரு அலுவலுக்கும் சென்று விட்டேன். . .

**திரு. க. சுப்பு :** நீங்கள் கவன ஈர்ப்பு முடிந்தவுடன் என்னை கேட்பீர்கள் என்று நினைத்தேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் கேட்பதாக இல்லை; நீங்கள் என்னைக் கட்டாயப்படுத்த முடியாது.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், அமைச்சரும் படித்துக் கொண்டே இருக்கிறார், நீங்களும் அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்கள், இது சரியல்ல, சட்டமன்றமே நடக்க முடியாமல் போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படி எல்லாம் திரு. சுப்பு அவர்கள் பேசக்கூடாது. சட்டசபை நடக்காது என்று சொல்வதை வாபஸ் வாங்க வேண்டும்

**திரு. க. சுப்பு :** சரி வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். என்னை பேச அனுமதிக்க வேண்டும், போன தடவை என்ன சொன்னீர்கள்? அடுத்த மீட்டிங்கில் எடுக்கிறேன் என்று சொன்னீர்கள்.



1979 நவம்பர் 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதெல்லாம் முடியாது, நான் அதை எடுக்கவே இல்லை, உட்காருங்கள்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்கள் ஒன்று சொல்ல அனுமதிக்க வேண்டும். சபை நடைமுறைப்படி அடுத்த பிரச்னைகளைப் பற்றி நீங்கள் தான் அறிவிக்க வேண்டும், நீங்கள் அறிவிக்காமல், அவர் எழுப்பவில்லை என்று சொல்கிறீர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து திரு. சாதிக்பாட்சா அவர்கள் பேரவைத் தலைவர் அதை அனுமதிக்கிறாரா இல்லையா என்பதைப் பார்த்துவிட்டுப் பேச வேண்டும். நான் அதை இன்று எடுப்பதாக இல்லை. அதனால் நான் அடுத்த அலுவலை எடுத்துக் கொண்டேன். திரு. சுப்பு அவர்கள் தான் நான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்பு எழுப்பியிருக்க வேண்டும். கேள்வி நேரம் முடிந்தவுடன் எழுப்ப வேண்டிய பிரச்னை அது. . . . .

* **திரு. க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு உதவி செய்வதற்காகச் சொல்கிறேன். நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்த உடனேயே தான், இதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்ல முடியுமே தவிர, நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள் என்பது எங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்களும் சொல்லவில்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எப்படிச் சொல்ல முடியும்? கேள்வி நேரம் முடிந்தது என்று அறிவித்த பிறகு, உரிமைப் பிரச்னையை கொடுத்தவர்கள் என்னவாயிற்று என்று கேட்க வேண்டும். அப்படிக் கேட்கிற முறை கையாளப்படுகிறது. நான் அடுத்த அலுவலுக்குச் சென்று விட்டேன். நான் அந்தப் பிரச்னையை இன்றைக்கு எடுப்பதாக இல்லை.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அவையிலே அதற்கான நேரம் கிடையாது. கேள்வி நேரம் முடிந்ததும், தாங்கள் இயல்பாக அதன் தொடர்பாக கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு சென்று விட்டீர்கள். பிறகுதான் தெரிந்தது எங்களுக்கே அது கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று, நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளப் போவதாகக் கூடிச் சொல்லவில்லை. அந்தப் பிரச்னை முடிந்தவுடன் எழுப்பலாம் என்று திரு. சுப்பு அவர்களும் இருந்து விட்டார். அந்தப் பிரச்னை அவ்வளவு முக்கியமானது அல்ல என்று நீங்கள் நினைக்கலாம். அது வேறு என்றாலும் உரிமைப் பிரச்சினையைக் கொடுத்துள்ள உறுப்பினர் அதைப் பற்றி இப்பொழுது கேட்கிறார்.

[1979 நவம்பர் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரம் முடிந்தவுடன், தாம் கொடுத்தப் பிரச்னை என்னவாயிற்று என்று கேட்டிருக்க வேண்டும். அதை அவர்தான் எழுப்பியிருக்க வேண்டும். கேள்வி நேரம் முடிந்த பிறகு, நான் வேறு அலுவலுக்குப் போன பிறகு, இப்போது உரிமை பிரச்னை எழுப்ப அனுமதிப்பதற்கு விதிகளில் எங்கே இருக்கிறது என்று சொல்லுங்கள் ஏற்றுக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன்:** கேள்வி நேரம் முடிந்த பிறகு நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு இயல்பாகச் சென்று விட்டீர்கள். சென்றதற்குப் பிறகுதான் எங்களுக்கே தெரியும் அது கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று. கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டிருப்பதாக நீங்கள் சொல்லக்கூட இல்லை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எனக்கு வழிகாட்ட வேண்டுமே தவிர இப்படிப் பேசக் கூடாது. கேள்வி நேரம் முடிந்த பிறகு முதலில் எடுத்துக்கொள்ள வேண்டியது உரிமை மீறல் பிரச்னை தான். ஆனால், அவர் கொடுத்த உரிமை மீறல் பிரச்னையை எடுத்துக் கொள்வது பற்றி நான் இன்னும் முடிவெடுக்கவில்லை அதைப் பற்றி என் அறைக்கு வந்து என்னவாயிற்று என்று கேட்டிருக்கலாம், அல்லது இங்கேயே கூட நான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்னதாகக் கேட்டிருக்கலாம், இன்னொரு அலுவலுக்குச் சென்று விட்ட பிறகு இப்போது எழுப்ப முடியாது. திரு. சுப்பு, அவையில் பேசுகிறபோது,

(முற்பகல் 10-10)

முறையோடு பேச வேண்டும். "முடியாது", "நடக்காது", என்றெல்லாம் அவர் சொன்னால் அதற்கெல்லாம் அஞ்சுபவன் அல்ல நான். இந்த ஆசனத்திற்கு நான் மரியாதை தந்தாக வேண்டும். ஒன்றை வலியுறுத்துவது என்றால் முறையோடு வலியுறுத்துங்கள். விதிகளைக் காட்டி வலியுறுத்துங்கள். என்னைப் பயமுறுத்தாதீர்கள். திரு. சுப்புவின் போக்கு அப்படித்தானிருக்கிறது. இந்த அவை நடக்காது என்று சொன்னால் என்ன அர்த்தம்? அவர் ஒருவருக்கு மட்டும் தான் இந்த அவையா?

**திரு. க. சுப்பு:** சபாநாயகர், சபாநாயகராக நடந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கா சொல்லித் தருகிறீர்கள்? என்னிடம் கற்றுக்கொள்ள வேண்டும்.



1979 நவம்பர் 2]

**திரு. க. அன்பழகன்:** இது தனிப்பட்ட பேச்சு வார்த்தைகளால் வந்து விட்டதே தவிர வேறு விதமாகக் கருதிக் கொள்ளக் கூடாது. ஒரு உரிமைப் பிரச்னை தங்களிடம் ஏற்கனவே எழுதித் தரப்பட்டிருக்கிறது. அதை எடுத்துக் கொள்வதற்கும், அல்லது எடுத்துக் கொள்ளாமல் இருப்பதற்கும் தங்களுக்கு முழு உரிமை உண்டு. தாங்கள் எடுத்துக் கொள்வதற்கு மறுத்தால் அதைக் கண்டிப்பதற்கு என்னென்ன நியாயம் கூற வேண்டுமோ, அதைச் செய்வது எங்கள் உரிமை. அதற்கிடையில் தாங்கள் கேள்வி நேரம் முடிந்தவுடன் இயல்பாக உரிமைப் பிரச்னையை எடுத்துக் கொண்டிருந்தால் அதை அறிவித்திருப்பீர்கள். அதை அறிவிக்காமல் அடுத்த பிரச்னைக்குப் போய்விட்ட காரணத்தால் அந்தப் பிரச்னை முடிந்தவுடன் திரு. சுப்பு தம் பிரச்னையை எழுப்புகிறார். மேலும் சேம்பரில் கேட்டாகிவிட்டது. நேரில் பேசப்பட்டு விட்டது. தாங்கள் இல்லை என்று சொல்லவில்லை. அப்பிரச்னை தங்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அவர் அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் பரிசிலனையில் வைத்திருக்கிறேன் என்றால் அது இன்றைக்கே என்று பொருள் அல்ல.

**திரு. க. அன்பழகன்:** இன்றைக்கில்லாவிட்டாலும் நாளைக்குக் காலை எடுத்துக் கொள்வதாகச் சொல்லுங்கள். அல்லது என்றைக்கு எடுத்துக் கொள்ள இருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். இல்லை என்றால், நாங்கள் இந்த அவையில் இருக்கத் தயாராயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என் கடமையைச் செய்கிறேன், தாங்கள் பேசுகிறபோது முறையோடு, விதிகள்படி இதைப் பற்றிப் பேசுகிறீர்கள். மற்றவர்கள் பேசுகிறபோது, மதித்தொழுக வேண்டும், இந்த அவை நடக்காது என்றெல்லாம் சொல்வது சரியல்ல.

**திரு. க. அன்பழகன்:** அதற்கு வருத்தம் தெரிவிக்கிறேன். நாங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த அவை நடக்கும். நாங்கள் இருந்துதான் தீர வேண்டும் என்ற கட்டாயம் இந்த அவையில் உள்ளவர்களுக்கு இல்லை என்பது எனக்குத் தெரியும். தயவுசெய்து தாங்கள் அந்தப் பிரச்னையை நாளைய தினம் கேள்வி நேரம் முடிந்தவுடன் எடுத்துக்கொள்வதாக இருந்தால் அப்படி அறிவியுங்கள். அப்படி அறிவிக்க மறுப்பதால் இந்தப் பிரச்னையை தாங்கள் வேண்டுமென்றே தள்ளி வைக்கிற காரணத்தினால் நாங்கள் இந்த அவையிலிருந்து வெளியேறுகிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.)

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி. [1979 நவம்பர் 2

(ஆ) திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்த சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,

'தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1979) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

என்று மொழிகிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 21 கோடி ரூபாய் தொகையை பெற்றுக் கொள்வதற்கு இங்கே நிதி ஒதுக்கல் மசோதாவை கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அவை நிச்சயமாக 21 கோடி ரூபாயை அனுமதித்துக் கொடுக்கத்தான் போகிறது. அவர்களே சொல்லி இருக்கிறார்கள், இப்படி அனுமதித்துக் கொடுக்கப்படும் நிதியில் ஒரு பைசா கூட தவறாக, ஒழுங்கு கேடாக செலவழிக்கப்படமாட்டாது என்பதை உறுதியாக கூறியிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன், பட்ஜெட் தயாரிக்கின்ற போது, அதிகமான செலவைக் காட்டி பற்றாக் குறையும் காண்பித்து, வரியும் போடாமல் இருந்து விட்டு, இவ்வளவு பற்றாக்குறை இருக்கிறது. இருந்தும் வரிகளைப் போடாமல் இந்த பட்ஜெட்டை தயாரித்து இருக்கிறோம் என்று சொல்வது, இது ஒரு கட்சிக்கு என்று மட்டுமல்ல, எல்லா கட்சிகளுக்குமே பொருந்தும். அடுத்த ஆண்டு கணக்கைப் பார்த்தால் செலவு குறைந்து இருக்கிறது. 1977-78 ஆம் ஆண்டு அக்கௌன்டன்ட்-ஜெனரலின் அறிக்கை வந்தபோது, அதைபார்க்கின்ற நேரத்தில் அந்த ஆண்டு சபையில் அனுமதித்த சார்ஜ்டு ஐட்டம் அல்ல,





வோட்டட் ஐயிட்டங்களிலே கூட 86 கோடி ரூபாய் அளவுக்கு செலவழிக்கப் படாமலே விடப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் எதற்காக இந்த அனுமதியைப் பெறவேண்டும் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை ? ஆகவே நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருவது எப்படியாவது இப்படி அனுமதிக்கப்படுகின்ற தொகை முழுவதையும் செலவழித்து அதற்குரிய திட்டங்களை நிறைவேற்றி வைக்க வேண்டும், இப்படிப்பட்ட காரியங்களில் நிதி அமைச்சர் அவர்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

* திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத்தில், 20 கோடி 93 ஆயிரம் ரூபாய்க்கான துணை மான்யம் கோரப் பட்டிருக்கிறது. ஆனால் எவ்வளவு தான் நிதி ஒதுக்கிக்கொண்டு போனாலும் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத்தில் நமது நிதி அமைச்சர் அவர்கள் மிகுந்த பெருமையோடு கூறினார்கள், விலை வாசி குறைந்து கொண்டு வருகிறது, மேலும் நிலைமையை சீர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம் என்றும் சொன்னார். இதற்கு மத்திய அரசும் மாநில அரசும் தான் காரணம் என்று சொன்னாலும் அன்றைக்கு மாநில அரசு சார்பில் விலை குறைந்திருப்பதற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். அதே போன்று இப்போது விலைவாசி ஏறியிருப்ப தற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு விலைவாசி குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். அது அவர்களுடைய கடமை என்று கருதுகிறேன்.

இன்றைக்கு விலைவாசி ஏறுவதற்கு முக்கிய காரணம், பொது விநியோகம் —பப்ளிக் டிஸ்ட்ரிப்யூஷன்—சரியாக இல்லை. முறையாக நடைபெறவில்லை. இருக்கின்ற நியாயவிலைக் கடைகளில் பருப்புப் பயிறு போன்ற பொருட்கள் இல்லை, எடிபிள் ஆயில் போன்றவை இருப்பதில்லை, ஸ்டாண்டர்டு துணிகள் —ஏழை மக்கள் பயன்படுத்தக்கூடிய துணி ரகங்கள்—இருப்பதில்லை. இவைகள் எல்லாம் மக்களுக்கு கிடைக்காத நிலை தான் இருந்து கொண்டிருக் கிறது. மண்ணெண்ணெயும் சீராக கிடைப்பதில்லை. இதில் கள்ளமார்க்கெட் தான் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்ற ஒரு பயங்கரமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமைகளை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து நியாயவிலைக் கடைகளில் எல்லாம் எல்லா சாமான்களும் கிடைப்ப தற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இச்சமயத்தில் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, ஏராளமான ஹைஸ்கூல்களிலும், ஹையர் செக்கன்டரி ஸ்கூல்களிலும் ஆசிரியர்களின் பதவிகள் நிரப்பப்படவில்லை. இந்த இடங்களில் எல்லாம் ஆசிரியர்களை போடுங்கள். சில வகுப்புகளில் ஆசிரியர்கள் இல்லாமல் இருப்பதின் காரணமாக தேர்வு கூட நடைபெறாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது . . . மேலும் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதையெல்லாம் இப்போது பேசிக் கொண்டு இருக்க வேண்டாம். நிதி ஒதுக்கீட்டிலுள்ள குறைபாடுகளை மட்டும் குறிப்பிட்டுவிட்டு முடித்துவிட்டால் நல்லது. இதையெல்லாம் விவரமாக சப்ளிமென்டரி பட்ஜெட் விவாதத்தில் பேசியாகிவிட்டது.

**திரு. சி. கோவிந்தராசன் :** ஒதுக்கீடு செய்வதில் இதற்கும் நிதி இருப்பதால் நான் இதைக் குறிப்பிட்டேன். ஆசிரியர்கள் இல்லாத இடங்களில் எல்லாம் ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என்றும், விலைவாசி ஏற்றத்தைக் குறைப்பதற்கு பொது விநியோகத்தை சீராக்கவேண்டும் என்றும், இதற்குரிய நடவடிக்கைகளை துரிதமாக எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்திக்கூறிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(திரு. எம். எ. லத்தீப் எழுந்தார் . .)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சப்ளிமென்டரி பட்ஜெட் விவாதத்தில் பேசினவர்கள் இதில் பேசவேண்டியதில்லை, தயவு செய்து உட்காருங்கள்.

**திரு. துரை முருகன் :** அப்படியானால் அதில் பேசாதவர்கள் எல்லாம் இதில் பேசலாமா ? . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதில் கூட நியாயம் உண்டு. இப்போது போதும், தயவு செய்து உட்காருங்கள்.

(முற்பகல் 10-20)

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த கோரிக்கையை அவையில் வைத்திருக்கிறார்கள். மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராஜன் அவர்கள் இன்றைக்கு விலைவாசி ஏறியிருக்கின்ற விவரங்களைச் சொன்னார்கள். குறிப்பாக நாம் எவ்வளவுதான் கட்டுப்படுத்த நினைத்தாலும், இன்றைக்கு விலைவாசி கடுமையாக ஏறியிருக்கிறது. உதாரணமாக, சிமெண்டு விலை கடுமையாக ஏறியிருக்கிறது. அரசாங்கம் நேற்று

விவரம் அறிவித்தபோதுகூட சிமெண்ட் மூட்டை ரூ. 25 சில்லறை என்று அறிவித்தார்கள். இப்படி சிமெண்ட் விலை மட்டுமல்ல, மற்றப் பொருள்களின் விலையும் ஏறிக்கொண்டே போகின்றது. இப்போது சிமெண்ட் கிடைப்பதில்லை. இதனால் சென்னை மாநகரத்தில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாது, கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. எனவே. இப்படிப்பட்ட மானியங்களைக் கோருகின்றபோது, விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய நிலைமை ஏற்படவில்லை என்று சொன்னால், என்.ஜி.ஓ.க்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் குடும்பம் நடத்த முடியாத ஒரு கடுமையான நெருக்கடி ஏற்படுகின்றது. எனவே, விலைவாசியை கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு இப்படிப்பட்ட கோரிக்கைகளை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே கொண்டு வருவது மிகவும் நல்லது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக, ஒரு மாநில அரசு நஷ்டம் வரும்படியான காரியத்தை செய்யக்கூடாது. அப்படி வருவதாக இருந்தால், அது அரசாங்கத்திற்கு தெரிந்திருக்க வேண்டும். ஏற்கெனவே ஒரு போராட்டம் நடந்து வந்தது. மின்சார வாரியத்திலே உள்ள தொழிலாளர்களிடையே ஒரு போராட்டம் நடந்தது. இதனால் அரசுக்கு 110 கோடி நஷ்டம் என்று அறிவித்திருக்கிறது. இந்தப் போராட்டம் 60 நாட்களுக்கு மேல் நடந்தது; இதனால் 110 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதைத் தீர்த்துவைக்க இந்த மாநில அரசு துரித நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அதைப்போல, இன்று சேஷசாயி தொழிலாளர் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அதனால் உற்பத்தி தடைபடுகிறது; இதனால் நஷ்டம் ஏற்படுகின்றது. அதேபோல்தான திருச்சியிலே காவேரி என்ஜினியரிங் ஒர்க்ஸ் தொழிலாளர் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இதுவும் 60 நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. எதையெடுத்தாலும் 60 நாட்களுக்கு மேல். இதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுகின்றது. இதனால் நமக்கு நஷ்டம் ஏற்படுகிறதே, பதில் சொல்லும்போது பார்க்கக்கூடாத பத்திரிகைகளைப் பார்த்து இதிலே துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை புரிந்து அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில்லை.

(திரு. க. சுப்பு) [1979 நவம்பர் 2

முதல் அமைச்சர் அவர்களுக்கு மத்திய அரசாங்கத்திலே நல்ல செல்வாக்கு இருந்தது என்று சொன்னாலும்கூட, நிதி ஒதுக்கீடு செய்வதிலே அதிகமாக நிதியை நமக்கு ஒதுக்கவில்லை என்று கூறப்படுகிறது. பீகார் உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு 3000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்றும், நம்முடைய மாநிலத்திற்கு 400 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகின்றது. இப்படிப்பட்ட தவறுகளை இந்த அரசாங்கம் எடுத்துக்காட்டத் தவறியிருக்கின்றது.

இன்னும் இப்படிப்பட்ட தவறுகள் அதிகம் நடந்திருக்கின்றது. இப்போது கொண்டு வந்திருக்கின்ற இந்த அப்ரோப்ரியேஷன் பில்லிலே மெயினாக இருப்பது பெரியார் மாவட்டத்திலே சில கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும் என்பதற்காகத்தான். அங்கே நான் போய்ப் பார்த்தேன். மாவட்ட காவல் துறை அதிகாரி அங்கே இன்னும் ஒரு டிராவலர்ஸ் பங்களாவிலே தான் தங்கியிருக்கிறார்; கலெக்டர் ஒரு டென்டிலே தங்கியிருக்கிறார். கோர்ட்டு, சப்-கோர்ட்டுகள் எல்லாம் ஒரு பாழடைந்த கட்டிடத்திலே இருக்கின்றது. இதெல்லாம் அரசாங்கத்தின் தொடர்புடைய கட்டிடங்கள். இங்கே அதிகாரிகள் போதுமான கட்டிட வசதிகள் இல்லாமல் வேலை செய்கிறார்கள். பெரியார் மாவட்டம் ஏற்படுத்தியது பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், இந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான இடங்களைக்கூட இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அவசர அவசரமாக முடிவெடுக்கப்பட்டதால், அதிகாரிகள் போதிய கட்டிட வசதி இல்லாமல் வெளியே உட்கார்ந்துகொண்டு வேலை செய்கிறார்கள். அதேபோல், அருப்புக்கோட்டையிலே ஆர்.டி.ஓ. ஆபீசுக்கு இப்போது கட்டிடம் இல்லாத ஒரு பரிதாபகரமான நிலைமை இருக்கிறது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மொத்தத்திலே நிதி ஒதுக்கீடு பற்றியது இது. அதைப்பற்றிச் சொல்லுங்கள். ஒவ்வொரு இடத்திலும் கட்டிடம் இல்லை என்றே சொல்லிக்கொண்டு போனால், அது பட்ஜெட் பேச்சு மாதிரி ஆகிவிடும். எல்லோரும் சொல்வது போல், 2, 3 நிமிஷங்களில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. க. சுப்பு:** ரோடு போடுவதற்காக பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், நம்முடைய போக்குவரத்து அமைச்சர் ஒரு பெரிய சீரியஸ் இர்ரெகுலாரிடிஸ் செய்திருக்கிறார். மத்திய சர்க்காருக்கு செல்ல வேண்டிய சர்சார்ஜ் பணத்திலே இருந்து 6½ கோடி ரூபாய் பணத்தை எப்படியோ எடுத்து, அதை சில போக்குவரத்து கார்ப்பரேஷன்களுக்கு

போனஸ் தொகையாக கொடுப்பதற்கு பயன்படுத்தியிருக்கிறார்கள். இதிலே இந்த பல்லவன் போக்குவரத்துக் கழகத்தை டிஸ்கிரிமினேஷனாக விட்டிருக்கிறார்கள். அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள், பல்லவன் போக்குவரத்து மெட்ரோபாலிடன் பஸ் லாபத்திலே ஓடுகின்றது என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லிவிட்டு, இந்தத் தொழிலாளர்களுக்கு போனஸ் தொகை மறுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், இந்த 6½ கோடி ரூபாய் பணம் ரோடுகள் போடுவதற்காகத்தான் பயன்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டு, ரோடுகள் அப்படியே இருக்கின்றன. அதற்குப் பதிலாக இந்தப் பணம் ஸ்டிரைக்குகள் பண்ணத் தூண்டுவதற்கு, ஊக்கப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இன்னும், இதேபோல் அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் பெரியார் மாவட்டத்திற்கும், தன் மாவட்டத்திற்கும் இடையே ஒரு டிஸ்கிரிமினேஷன் செய்திருக்கிறார். பேருந்துகள் ஓடுவதற்கு கிலோ மீட்டருக்கு 5 பைசா என்றிருக்கிறது. இது அண்ணா போக்குவரத்து, சோழன் போக்குவரத்து, சேரன் போக்குவரத்து எல்லாவற்றிலும் இருக்கிறது. ஆனால், சேலம் மாவட்டத்திற்கு மட்டும் ரூபாய் 2.70-க்கு பதில் ரூபாய் 1.50 என்றிருக்கிறது. இதிலே தன் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்புவுக்கு அப்ரோப்ரியேஷன் பில்லில் என்ன பேசவேண்டுமென்பது தெரியும். உறுப்பினர் அவர்கள் சப்ளிமென்டரி பட்ஜட்டில் பேசுவது போல் பேசுவது சரியல்ல. ஆகவே, உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. க. சுப்பு:** பல விஷயங்கள் இருக்கின்றன. சினிமா பான் ... கொட்டகைகளுக்கு சேல்ஸ் டாக்சில் சலுகைகள். பஸ் டிரான்ஸ்போ... மத்தி ...டிபார்ட்டில் சலுகைகள் கொடுத்ததில் டிஸ்க்ரிமினேஷன் இருக்கிறது. சட்டப் ...லங்படி 5 பைசா வசூலிக்க வேண்டும். ஆனால் அவருடைய மாவட்டத்திற்கு ... மட்டும் சலுகை. எங்கள் மாவட்டத்திற்கு அந்தச் சலுகையைச் செய்ய...க் கூடாதா? இந்த அரசாங்கம் சட்டத்தை மீறி மார்டாரை ப்ராஞ்ச் மா...ம்சேனஜராக இருந்தவரை சோழன் போக்குவரத்து மானேஜிங் டைரக்டராக ...லி, போட்டிருக்கிறார்கள். இவ்வளவு மோசமாகப் பணிகள் நடக்கும்போது ...பா அதற்கெல்லாம் பணம் கொடுக்க வேண்டுமா? ஆகவே, இது அப்ரோப் ...சு பிரியேஷன் அல்ல. மிஸ்அப்ரோப்ரியேஷன் என்று சொல்லி முடித்துக்கொள் ...ளுகிறேன்.

(பேரவைத் தலைவர்) [1979 நவம்பர் 2

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நேர சொற்பொழிவு தேவையில்லை. எவ்வளவு நேரம் கொடுத்தாலும் பேசுவதற்குத் தகுதி வாய்ந்த பேச்சாளர்கள் திரு. சுப்பு அவர்களைப் போல் ஏராளமாக இந்த அவையில் இருக்கிறார்கள்.

கடைசியாக எழுப்பப்பட்ட இரண்டு பிரச்சினைகளுக்கு மட்டும் பதில் சொல்லி துணை மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி வேண்டுகிறேன்.

திரு. மாரிமுத்து அவர்கள் இங்கே பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். செலவழிக்கப்பட வேண்டிய தொகை செலவழிக்கப்படாமல் திருப்பிக் கொடுத்து விட்டதாக அக்கவுண்டன்ட் ஜெனரல் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்குரிய ஒரு விளக்கத்தை மட்டும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

1977—78 ஆம் ஆண்டு மருத்துவத் துறையில் செயல்படுத்தவிருந்த சென்னை மருத்துவக் கல்லூரியை மேம்படுத்தும் திட்டம் நிறைவேறாததால் நிதி ஒதுக்கம் திருப்பித் தரப்பட்டதும் குறிப்பிடப்பட்டது. டில்லியிலுள்ள அகில இந்திய மருத்துவக் கழகம்All India Institute of Medical Scitnce சண்டிகரிலுள்ள மருத்துவக் கல்வி மேல் படிப்பு கல்லூரி Post Graduate Institute ) இரண்டிலும் உள்ள அமைப்புகளையும் சிறப்புத் துறைகளையும் ஆராய்ந்து இத்திட்டத்தைச் செயல்படுத்த உள்ளோம். உயர் கல்வி நிறுவனமாக சென்னை மருத்துவக் கல்லூரியை மாற்றி அமைப்பதால் ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு செயல்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே, இத் திட்டத்தை செயல்படுத்த தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்குப் பிறகு இன்னும் சில தொகைகள் செலவழிக்கப்படாமல் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அந்தப் பிரச்சினை எழுப்பப் படாமலே அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.



1979 நவம்பர் 2] (திரு. கி. மனோகரன்)

கிருஷ்ணா பெண்ணாறு திட்டம் மேற்கொள்ளப்படாததால் ரூ. 50 இலட்சம் பயன்படுத்தப்படாமல் திருப்பப்பட்டது. இந்தத் தொகை முதலில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கிருஷ்ணா பெண்ணாறு திட்ட ஆய்வு மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டதாகும். ஆனால் இத்திட்டம் வாரியத்திடம் ஒப்படைக்கப்படவில்லை. கிருஷ்ணாவிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்காக ஆய்வு மேற்கொள்ள பொதுப்பணித் துறை (நிலத்தடி நீர்) தலைமைப் பொறியாளர் கீழ் தனி அலுவலர்கள் ஆந்திர மாநிலத்திலும், அதே சமயம் பணி மேற்கொள்ள அலுவலர்கள் புதிதாக அமர்த்தப்பட்டுள்ளார்கள். இப்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, செலவு பொதுப்பணித்துறை கணக்கில் காட்டப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி, கணக்குத் தலைப்புகளில் மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக சில இனங்களுக்கு ஆன செலவு, பொதுச் சுகாதாரத் தலைப்பில் செலவிடப்பட்டது. இது இவ்வாறு செலவு குறைந்ததற்கு ஆன காரணங்களில் ஒன்றாகும். பொதுச் சுகாதாரத் தலைப்பில் முதலில் ஒதுக்கப்பட்டதற்குக் கூடுதலாக சுமார் 1 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது அவையின் ஒப்புதலுடன் செலவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதிகமாக மத்திய அரசிடம் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருப்பதாகச் சொல்லுகிற இந்த மாநில சர்க்கார் அதிகமான பணத்தை அவர்களிடமிருந்து பெறவில்லையென்றும், உத்திரப்பிரதேசத்திற்குக் கொடுத்த தொகை அல்லது பீகார் மாநிலம் பெற்ற அளவு தொகையை இந்தத் தமிழக மாநிலம் பெறவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே வைத்தார்கள். நான் அதற்கு விளக்கத்தை திரு. சுப்பு அவர்களுக்கு ஒரு நிமிஷ நேரத்திற்குள் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுக்குத் தெரியும்—சென்ட்ரலி ஸபான்சர்டு ஸ்கீம்ஸ், அதே போல் சென்ட்ரல் பிராஜக்ட் இவைகளுக்காக மத்திய சர்க்கார் செய்து கொண்டிருந்த அந்தப் பணியினைப் பெருமளவுக்குக் குறுக்கச் சொல்லி அதற்காகச் செலவழிக்கும் தொகையை மாநிலங்களுக்கு வழங்குங்கள்

(முற்பகல் 10-30)

என்றோம். சென்ட்ரலி-ஸ்பான்சர்டு ஸ்கீம்ஸ் குறைக்கப்பட வேண்டுமென்று நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலிலும், பிளானிங் கமிஷனிலும் கிடைக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்திப் போராடி, அப்படிப் போராடியதன் விளைவாக பல திட்டங்களை மத்திய அரசு கைவிட்டு, அதன் காரணமாக இரண்டாயிரம் கோடி ரூபாய் கிடைத்து, அதை மாநிலங்கள் முழுவதற்கும்

(திரு. கி. மனோகரன்) [1979 நவம்பர் 2

பிரித்துத் தருகின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்தது எந்த ஆட்சி என்றால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை நான் மன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன்.

அதற்குப் பிறகு ஏற்கனவே மத்திய சர்க்கார் எந்த பார்முலாவை பயன் படுத்தியது என்றால் காட்கில் பார்முலா. அதைப் பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொள்ளாத சூழ்நிலை வந்ததற்குப் பிறகு அந்த பார்முலாவை விட்டு விட்டு ஐ. ஏ. டி. பி. பார்முலா உருவாக்கப்பட்டது. Income adjusted to total population. அதன்படி தனி நபர் வருமானத்தையும் மக்கள் தொகையையும் கணக்கிலே கொண்டு தருகின்ற பார்முலாக உருவாக்கப்பட்டது. அதன் மூலமாக நமக்கு கிடைத்தது 150 கோடி ரூபாய். ஆனால் காட்கில் பார்முலாவை. அந்த அடிப்படையை நாம் ஏற்றுக்கொண்டிருப்போமானால், நமக்கு 131 கோடி ரூபாய் தான் கிடைத்திருக்கும். அந்த அடிப்படையில் நாம் பெறவேண்டிய தொகையில் நாம் அதிகமாகப் பெற்றிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டு கருத்துரை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைக் கூறி . . .

திரு. க. சுப்பு : நான் வாதாடி வாங்கவில்லை என்று சொல்லவில்லை. நிதியமைச்சர் வாதாடினார். மறுக்கவில்லை. அவர் வாதாடினார், வாங்கினார், எனக்கும் தெரியும். ஆனால், முதலமைச்சர் உத்திரபிரதேசத்தை விட நமக்கு கம்மியாகப் போய்விட்டது என்று சேம்பர் ஆப் காமர்ஸ் கூட்டத்திலே சொல்லியிருக்கிறார். ஒருவேளை அவருக்குத் தெரியாமல் சொன்னாரோ என்னவோ தெரியாது. சென்ட்ரலி-ஸ்பான்சர்டு ஸ்கீம்களை குறைப்பதற்காக வாதாடி நிதியை வாங்கிய பெருமை நிதியமைச்சருக்கு இருக்கலாம். ஆனால், முதலமைச்சருக்கு அதைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திரு. சுப்பு வக்கணை பேசுவதில் வல்லவர் என்பது எனக்குத் தெரியும். திருப்பியும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த அளவிற்கு நமக்குத் தொகை கிடைக்கவில்லை என்ற மன வேதனையைத்தான் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்களே தவிர இந்த பார்முலா அடிப்படையிலே நாம் அதிகமாகப் பெற்று இருக்கிறோம் என்பதைத் தெரிவித்து, இந்தக் கருத்துத் தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருத்து என்பதையும் நான் இந்த மன்றத்திற்குக் கூறி இந்த அளவிற்கு கருத்துக்களைச் சொல்லி நான் அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 59/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.'



1979 நவம்பர் 2]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, அட்டவணை, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 59/1979)' நிறைவேற்றப் பெறவேண்டும். வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

5. ஒழுங்குப் பிரச்சினை.

சட்ட முன்வடிவின்மீது பேசுவதற்குப் போதிய அவகாசம் கொடுக்கப் பெறுவது குறித்து.

* திரு. எம். ஏ. லத்தீப் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இப்போது நாம் பல்வேறு சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம். பொதுவாக சட்ட முன்வடிவுகளை மீதான விவாதத்தில் கலந்துகொள்ளுகின்ற உறுப்பினர்கள் கையைத் தூக்கினால் அவர்கள் பேசுவதற்கு அழைக்கப் படுவார்கள் என்ற நிலைமை இருந்தது. ஆனால் சமீபத்தில் கைதூக்கினால் போதாது, யார் யார் பேசுகிறார்கள் என்று எழுதிக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிற முறை சரியல்ல. அதனால்தான் கையைத் தூக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் தாங்களாகவே அப்படிக் கருதிக்கொண்டிருக்கிறீர்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. ஏற்கனவே சப்ளிமென்டரியிலே பேசிவிட்டதால் இதிலே அதிகமாக வேண்டாம் என்று தான் சொன்னேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : இரண்டாவதாக இந்தச் சட்ட முன்வடிவுகள் நீதி மன்றத்தின் ஆய்வுக்குப் போகும்பொழுது மேலும் விளக்கங்கள் தேவைப் பட்டால் சட்டமன்ற விவாத நடவடிக்கைகளைக் கொண்டுதான் அவர்கள் விளக்கம் பெற்றுக்கொள்கிறார்கள். பல சட்டங்கள் போதிய விவாதம் இல்லாமலேயே நிறைவேற்றப்படுகின்றன என்ற ஒரு குற்றச்சாட்டை நாம் ஏற்றுக

(எம். ஏ. லத்தீப்) [1979 நவம்பர் 2

கொள்ளக்கூடிய நிலையிலே இருக்கிறோம். ஆகவே, சட்டங்களை இயற்றும் நேரத்தில், விருப்பமுள்ள உறுப்பினர்கள் பேசுவதற்குப் போதிய வாய்ப்புக் கொடுத்து நிறைவேற்றுவதுதான் முறையாக இருக்கும். நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவில் பேச விரும்பினேன். நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவாயிற்றே, எனவே பேச வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஆனால், நீங்கள் நேரத்தை உத்தேசித்து என்னைக் கேட்டுக் கொண்டதால் உட்கார்ந்து விட்டேன். இந்தச் சட்ட முன்வடிவுகளின் மீதாவது விவாதத்திற்குப் போதிய வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. லத்தீப் அவர்களுக்கு இருக்கின்ற உணர்வைப்போல் 235 உறுப்பினர்களுக்கும் இருப்பதை நானும் உணர்கிறேன். ஆனால் இப்படி சட்ட முன்வடிவுகளை எடுத்துக்கொள்ளும்பொழுது நம்முடைய அவையிலே பாரம்பரியமாக ஏற்றுக்கொண்டிருப்பது, அந்தந்தக் கட்சிக்கு ஒருவர், சுமார் இரண்டு மூன்று நிமிடங்களில் கருத்துக்களைக் கூறி நிறைவேற்றுவது என்பதாகும். ஒரேயொரு சட்ட முன்வடிவை வைத்துக்கொண்டு இன்றைக்கெல்லாம் பேசலாம். ஆனால் நடைமுறையிலே பார்த்தால் அவ்வாறு செய்வது எல்லாவற்றையும் முடிக்க முடியாது என்பதால் விரும்பினால் அதைப்பற்றி ஒவ்வொரு கட்சியிலேயும் உள்ளவர்கள் தங்கள் கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்ல வாய்ப்பளிக்கப்படுகிறது அல்லது கையைத் தூக்கினால் அழைப்போம். எனவேதான் நான் அதிலே மட்டும் கேட்டுக்கொண்டேனே தவிர, கூடவே கூடாது என்று சொல்லவில்லை. ஏற்கனவே பேசி விட்டீர்கள், நேரம் இல்லை என்பதற்காகத்தான் சொன்னேன். இப்பொழுது திரு. சுப்பு அவர்கள் பேசினார்கள், அதை நான் அனுமதித்தேன். திரு. லத்தீப் அவர்கள் அவையின் நேரத்தைக் கருதி நான் சொன்னதை ஏற்றுக்கொண்டு ஒத்துழைப்புக் கொடுத்தார்கள், அதற்கு நன்றி.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஈ) சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு 1979.

**THE HON. THIRU K. NARAYANASWAMY :** Mr. Speaker, Sir, I beg to move that the Madras City Police (Amendment) Bill, 1979 * (L.A. Bill No. 43 of 1979) be taken into consideration.

Under Section 77 of the Madras City Police Act, 1888 (Tamil Nadu Act III of 1888), the Commissioner of Police is empowered to levy such fee not exceeding twenty rupees as may from time to

* 1979 அக்டோபர் 27 ஆம் தேதி யிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.



1979 நவம்பர் 2] (Thiru K. Narayanaswamy)

time be fixed by the State Government for every licence or permission granted under the said Act. It is considered that the prevailing rates of fees levied by the Commissioner of Police under the said section for the above purpose are very low, taking into consideration the increase in the cost of services rendered in granting such licences and permissions. Compared to the rates of fees obtaining in the cities of Bombay and Calcutta the rates of fees levied by the Commissioner of Police, Madras under the Tamil Nadu Act are also very low. It has, therefore, been considered necessary to enhance the maximum levy of fee from twenty rupees to seventy-five rupees by suitably amending the said Section 77 of the Madras City Police Act, 1888 (Tamil Nadu Act III of 1888).

The Bill seeks to achieve the above object.

Sir, I commend the motion for the acceptance of the House.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, நகரக் காவல் துறை ஆணையருக்கு அதிகாரம்—அபராதம் விதிக்க அல்ல, உரிமம் வழங்கத்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

ஆனால் 1975 ஆம் ஆண்டிலேயே நாம் உயர்த்தி விட்டோம். இரண்டு ரூபாய் என்று இருந்த கட்டணத்தை இருபது ரூபாய் என்று 1975 ஆம் ஆண்டிலேயே உயர்த்திவிட்டோம். அப்பொழுது காரணங்கள் சொல்லப்படவில்லை. அப்பொழுது பெட்ரோமாக்ஸ் லைட்டுக்குக்கூட கொண்டு வரப்பட்டது. அப்பொழுதே எதிர்க் கட்சியினர் கண்டித்தார்கள். அதற்கும் மீறி இரண்டு ரூபாய் என்பது இருபது ரூபாயாக ஆக்கப்பட்டது. அதையே இப்பொழுது குறைக்க வேண்டுமென்பது எங்கள் விருப்பம். காரணம் என்னவென்றால் சிறு சிறு லைசென்ஸ் எடுக்கக்கூட 20 ரூபாய் கட்டணம் கொடுக்க முடியாது என்பதால் இப்பொழுதே 20 ரூபாய் என்று இருக்கிறது. 1975-லேயே இரண்டு ரூபாயை இருபது ரூபாய் என்று, பத்து மடங்கு அதிகரித்திருக்கிறோம். 1979-லேயும் 20 ரூபாய் என்பதை 75 ரூபாயாக ஆக்க வேண்டுமென்ற முறையிலே முயற்சியை இந்தச் சர்க்கார் கொண்டு வருகிறது, அது வருந்தத்தக்கது.

கல்கத்தாவிலும், பம்பாயிலும் ரொம்ப அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே தமிழ்நாட்டிலேயும் அதிகமாக்க வேண்டுமென்று காரண காரிய நோக்கத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது. அதுவே தவறு;

பம்பாயிலும், கல்கத்தாவிலும் எப்படி இருக்கிறது என்று நாங்கள் பார்த்துக் கொண்டா இருக்கப் போகிறோம் என்ற தைரியம். ஏற்கனவே 20 ரூபாய் இருப்பதே அதிகம் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது அதை அதிகமாக்கினால் என்ன மரியாதை இருக்கும்? ஏற்கனவே இல்லை. இப்பொழுது உயர்த்தினால், என்ன அர்த்தம்? காரண காரிய நோக்கத்திலே, 20 ரூபாய் என்பதை அதிகமாக்குவதற்குச் சொல்லப்படுகின்ற காரணம், பம்பாயிலும் கல்கத்தாவிலும் அப்படியிருக்கிறது என்று. ஆனால் அது உண்மையா? அது உண்மையாக இருந்தால் ஒத்துக்கொள்ளலாம். கல்கத்தாவிலே 20 ரூபாய், 10 ரூபாய், இதற்குமேல் கிடையாது. கல்கத்தாவில் டீ ஷாப்பாக இருக்கட்டும் மியூசிக்காக இருக்கட்டும், எல்லா பப்ளிக் ரிசார்ட்டுக்கும் பத்து ரூபாய் மிஞ்சிப் போனால் 20 ரூபாய் என்று பலயிடங்களில் இருக்கிறது. அதேமாதிரி பம்பாயிலே 15 ரூபாய் 20 ரூபாய் 25 ரூபாய்தான் இருக்கிறது. ஆகவே நீங்கள் சொல்லுகின்ற காரணம், ஏற்கனவே சொல்ல வேண்டிய காரணம், 1975 ஆம் ஆண்டிலே சொல்ல வேண்டிய காரணம், 2 ரூபாயை 20 ரூபாயாக ஆக்கிய பொழுது சொல்லப்பட்டிருக்க வேண்டிய காரணம் இது. அப்பொழுது எழுதியிருப்பதைக் கொண்டு வந்து இப்பொழுது இங்கே வாசிக்கிறீர்களா?

(முற்பகல் 10-40)

அன்றைக்கு வாசிக்கவேண்டியதை இன்றைக்கு வாசித்தால் அது சரியாக இருக்காது.

இன்றைக்கு கல்கத்தாவிலும் பம்பாயிலும் இருக்கும் கட்டணத் தொகை ரூபாய் 20-க்கு கீழே தான் இருக்கிறது. ஆகவே இந்தச் சர்க்கார் ரூ. 74 என்று உடனே உயர்த்துவது, டீ கடைக்காரன், சின்ன, சின்ன கடைக்காரன் இவர்களுக்கெல்லாம் தொல்லை கொடுக்கும். ஏற்கனவே மாமூல் அதிகமாக இருக்கிறது. நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். மாமூல் பெருகியிருக்கிறதென்று.

ஆகவே, 2-ஐ 20 ஆக்கி, இப்பொழுது 20-ஐ, 75 ஆக்குவது, சர்வீஸ் கொடுப்பதற்கு என்று ஆக்குவது சரியல்ல. சர்வீஸ் ஒன்றும் கொடுப்பதில்லை, ஆனால் பணம் வசூல் செய்வதில் விரைவு நடவடிக்கை எடுக்கிறீர்கள். பம்பாயில் வசூலிக்கப்படுகிறது, கல்கத்தாவில் வசூலிக்கப்படுகிறது என்று சொல்கிறீர்கள். பம்பாயில் வசூலிக்கப்படுகிறதா? ஆகவே, அப்படி காரணம் சொல்லப்படுவது தவறு. அப்படி சொல்லும்காரணத்தை பிரின்ட் செய்து கொடுத்திருக்கிறீர்கள். அவ்வளவு தைரியம் வந்தாயிற்று. ஆகவே, அதற்கு ஒரு விளக்கம் சொல்ல வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.



யுடைய சர்வீஸ்

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா மூலம் ரூ. 20 லைசன்ஸ் கட்டணத்தை, ரூ. 75 ஆக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது மைக் லைசன்ஸ் சம்பந்தப்பட்டது என்று நான் கருதுகிறேன். அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டம் நடத்துவது என்றாலும் நாம் லைசன்ஸ் வாங்க வேண்டியிருக்கிறது. ரூ. 500 செலவு செய்து ஒரு சேரியிலே திருமணம் செய்தாலும் கூட, அவர்கள் மைக் வைக்க லைசன்ஸ் வாங்க வேண்டியிருக்கிறது. அம்மாதிரி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு மைக் வைப்பதற்கு லைசன்ஸ் ஃபீஸ் கொடுக்கப்படுகிறது. அதை ரூ.75 என்று வைத்தால் எவ்வளவு சிரமம் ஏற்படும் என்பதை அரசு யோசிக்க வேண்டும். இந்தக் கட்டண உயர்வால், பெரிய கடைக்காரர்களுக்குச் சிரமம் இல்லாமல் இருக்கலாம். சிறு கடை வைத்திருக்கிறவர்களுக்கு, அல்லது திருமணம் செய்கிறவர்களுக்கு, அல்லது அரசியல் கட்சி பொதுக் கூட்டம் நடத்துகிறவர்களுக்கு ரூ. 20-க்கு பதிலாக ரூ. 75 என்று வசூல் செய்வது சரியல்ல. உதாரணமாக, ஒரு சேரியிலே ஒருவர் ரூ. 500, ரூ. 600 செலவு செய்து திருமணம் செய்வார். (குறுக்கீடு) பொதுக் கூட்டம், மற்றும் நான் குறிப்பிட்டதற்கெல்லாம் விளக்கம் சொல்ல வேண்டுமென்று நான் கேட்கிறேன். அரசியல் பொதுக் கூட்டம் நடத்துவதற்கும் ரூ. 75 கட்ட வேண்டுமென்று சொன்னால் அது நியாயம் அல்ல. ஆகவே, இதுமாதிரி இருப்பதற்கெல்லாம் விலக்களிப்பு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Before further discussion continues on this Bill I want to make it clear that the amendment is not for fixation of Rs. 75 in every case. But it is stated therein as "not exceeding Rs. 75 as may from time to time by the State Government".

திரு. க. சுப்பு: ரூ. 75-க்கு மேலே போடக் கூடாது என்றால், ரூ. 75 போடுவீர்களே நீங்கள். . .

THE HON. THIRU K. NARAYANASWAMY: From time to time.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவரவர்களே, இந்த மசோதா கொண்டு வருவதற்கு மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் கூறியிருக்கிற காரணத்தைப் பார்க்கும்போது கல்கத்தா, பம்பாய் ஆகிய நகரங்களில் ஏற்கனவே இருக்கிற லைசன்ஸ் கட்டணத்தை ஒப்பிட்டுப் பார்க்கின்ற

(திரு. ஜே. ஜேம்ஸ்) 1979 நவம்பர் 2

பொழுது, சென்னை நகரத்தில் இருக்கின்ற ரூபாய் 20 மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, அதனை ரூபாய் 75 வரையிலும் உயர்த்துவது என்ற காரணத்தைச் சொல்லி, இந்த மசோதாவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். வேறு ஏதாவது காரணம் சொல்லியிருந்தால் உண்மையிலே அது ஏற்றுக்கொள்வதாக இருக்கலாம். ஆனால், பம்பாய், கல்கத்தா நகரங்களில் இருக்கிறதென்றால், பம்பாய், கல்கத்தா நகரங்களுக்கும் சென்னை நகரத்திற்கும் இருக்கிற வித்தியாசத்தை இந்த அரசு நன்றாக உணர்ந்திருக்கும் என்று நினைக்கிறேன். பம்பாயில் பிசினஸ் மூலமாகக் கிடைக்கும் வருவாய், கல்கத்தாவில், தொழில் நடத்துகிறவர்களுடைய வருவாய், பொதுவாக அந்த நகரங்களில் வசிக்கின்ற மக்களுடைய நிதிநிலையைப் பார்க்கின்றபொழுது, எந்தக் காரணத்தைக் கொண்டும் அதைச் சென்னை நகரத்தோடு ஒப்பிட முடியாது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆக, எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த மசோதாவை நிச்சயமாக இங்கே கொண்டு வந்திருக்கத் தேவையில்லையென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், படித்த இளைஞர்களுக்கு அரசில் வேலை கொடுக்க வழியில்லாமல் இருக்கிறோம். அவர்களை, சிறுசிறு தொழில் செய்யுங்கள், வியாபாரம் செய்யுங்கள் என்று அந்தத் திசை நோக்கி நாம் அனுப்பிக் கொண்டே இருக்கிறோம். அவர்களுக்கெல்லாம் லைசன்ஸ் இல்லையென்று வைத்தால்தான் தொழில்களை நடத்த வாய்ப்பிருக்கும். ஆனால், அவர்களுக்கெல்லாம் லைசன்ஸ் ஃபீசைக் கட்டுவது நிச்சயமாக, அந்த நோக்கம் ஈடேற வழிவகுக்காது, அது அவர்களுக்கு ஆதரவாக இராது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு லைசென்ஸ் எடுக்க வேண்டுமென்று சொன்னால் எந்த அளவுக்கு மாமூல் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு அறியுமானால்—அறிந்துதான் இருக்குமென்று நினைக்கிறேன். மாமூல் கொடுத்து அதற்கு மேல் லைசென்ஸ் கட்டணமும் கொடுக்கிற போது இவ்வளவு உயர்ந்த லைசென்ஸ் கட்டணத்தைக் கொடுக்க முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த மசோதா தேவையில்லாதது என்பதை நான் முதலில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ரூ. 20 என்று இருப்பதை ரூ. 75 ஆக உயர்த்தி இருப்பது என்று சொல்வது ரூ. 75 வரையில் என்பது தானே தவிர ரூ. 75 தான் வசூலிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை என்ற ஒரு விளக்கத்தை நமது மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே ரூ. 2 லிருந்து ரூ. 20 ஆக உயர்த்தியபோது,



1979 நவம்பர் 2] (திரு. எம். ஏ. லத்தீப்)

அமல்படுத்தியபோது எப்படிப் பயன்படுத்தப்பட்டது என்பதிலிருந்துதான் இந்தத் திருத்தச் சட்டத்தை எப்படி நீங்கள் பயன்படுத்தப் போகிறீர்கள் என்பதை கணிக்க முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த சட்டத்திலே ரூ. 20 வரையிலும் வசூல் செய்யலாம் என்று திருத்தச் சட்டம் கொண்டுவந்தபோது பல்வேறு வகையான உரிமங்களுக்கு லைசென்ஸுகளுக்கு ரூ. 20 கட்டணமாக வசூலித்தார்களா, அல்லது ரூ. 2க்கு மேல் ரூ. 20 வரையிலும் வசூலித்தார்களா என்றவிவரங்களைப் பார்த்துத் தான் ரூ. 75 எப்படி வசூலிக்கப்படும் என்பதை வரையறுக்கப் போகிறார்கள். ஏற்கனவே ரூ. 2 லிருந்து ரூ. 20 வரை என்று ஒரு திருததத்தைக் கொண்டு வந்தபோது ஒவ்வொரு லைசென்ஸுக்கும் ரூபாய் 20 வசூல் செய்திருக்கிற போது, இப்போது ரூபாய் 75 வசூல் செய்வதிலிருந்து உங்களை தடை செய்ய முடியுமா?

ரூ. 75 "டிஸ் ப்ரபோர்ஷனேட்" ஆக இருக்கிறது. இதைக் குறைக்க வேண்டும். குறைத்து இந்த சட்டத்திலேயே இடம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, எந்த எந்த வகையான லைசென்ஸுகள் என்று வரையறுக்கப் படவில்லை. All licences என்று ஒட்டு மொத்தமாகப் போடப்பட்டுள்ளது. போலீஸ் கமிஷனர் அவர்கள், களுக்கு என்று வரையறுக்கப்படவில்லை. போரன்ட் ஆக்டிலே கூட எந்தெந்த லைசென்ஸு எந்தெந்த லைசென்ஸுகளுக்கு கொடுக்க வேண்டுமென்று எது எது எந்தெந்த நேரத்தில் எந்தெந்த லைசென்ஸுகளுக்கு கொடுக்க வேண்டுமென்று வரையறுக்க வேண்டும். லைசென்ஸுகள் இடத்திற்கு இடம், காரியத்திற்கு காரியம், பொருளுக்குப் பொருள் மாறுபடும். கமிஷனர் தன்னிச்சையாக கட்டணத்தை முடிவு செய்யும் இச்சட்டத்தைக் கொண்டு வருவது ஆர்பிட்ரேஷன்ஸுக்கு இடம் கொடுக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, இந்த திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கான ஒரு காரணத்தை நீங்கள் சொல்கிறீர்கள்

"It is considered that the prevailing rates of fees levied by the Commissioner of Police under the said section for the above purpose are very low taking into consideration the increase in the cost of services".

என்று சொல்கிறீர்கள். யார் சர்வீஸ் செய்கிறார்கள்? போலீஸ் துறையுடைய சர்விஸ் Concet of Quid pro quo காரஸ்பாண்டிங்சர்வீஸுக்கு காரஸ்பாண்டிங் சர்வீஸுக்கு காரஸ்பாண்டிங் காஸ்ட் கொடுக்க வேண்டுமென்று காரஸ்பாண்டிங் காஸ்ட் கொடுக்க வேண்டுமென்று Quid Pro Quc அடிப

படையிலே சொல்கிறார்கள். மக்களுடைய நன்மைக்காக, மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற வகையில் இரு ஒரு வெல்பேர் சர்வீஸ் ஆக, பப்ளிக் சர்வீஸாக இருக்கவேண்டும். போலீஸ் டிபார்ட்மென்ட் வியாபார அடிப்படையிலே சர்வீஸ் காஸ்ட் காஸ்பாண்டிங்காக இருக்கவேண்டுமென்று சொல்வது பப்ளிக் சர்வீஸ் என்ற கான்செப்டிற்கே விரோதமானது. மிகவும் கண்டிக்கத் தக்கது.

போலீஸ் துறைக்கு, சர்க்கார் பொதுப் பணத்திலிருந்து மானியம் வழங்குகிறது. அப்படி இருக்கையில் காஸ்பாண்டிங் காஸ்ட் வேண்டுமென்று கேட்பது அவையையே அவமதிக்கக் கூடிய முறையிலே இருக்கிறது. போலீஸ் துறையையே, நீங்களே கேலி செய்கிற முறையிலே அமைந்திருக்கிறது. இந்த நோக்கமே கண்டிக்கத் தக்கது. எனவே இதைத் திருத்திக் கொண்டு வர வேண்டும். அல்லது உடனடியாக வாபஸ் பெறவேண்டும். இத்தகைய சட்டத்தை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள், முன்னால் நீதிபதியாக இருந்தவர், கொண்டு வந்திருக்கிறார். இது அவர்களுடைய மனசாட்சிக்கே விரோதமானது. ஆகவே இந்தச் சட்டத்தை எதிர்க்கிறேன்.

(முற்பகல் 10-50)

* திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மெட்ராஸ சிட்டி போலீஸ் ஆக்ட் என்பது சென்னையைப் பொறுத்தமட்டிலும் என்று இல்லை. எல்லா முனிசிபாலிட்டிகளுக்கும் இந்தச் சட்டம் அமலாக்கப் படஇருக்கிறது. தேவையான காலங்களில் அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டு, எந்தெந்த இடத்தில் இந்தச் சட்டத்தை அமல் செய்யவேண்டும் என்று சொன்னாலும், அந்த இடங்களில் அது அமலாக்கப்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் உள்ள நிலைமைகளை அனுசரித்து இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது என்பது சரியல்ல என்பது என்னுடைய கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போன்ட் ஆக்டிலே முதலில் 2 ரூபாய் என்று இருந்தது. பின்னால், அது 20 ரூபாய் என்று மாற்றப்பட்டது. எந்தெந்த லைசென்சுகளுக்கு எவ்வளவு பீஸ் என்பதை அவ்வப்போது விரும்புகிற வகையில் நிர்ணயிக்கலாம் என்று சட்டத்தில் இருக்கிறது. இது அந்த அதிகாரிகளுக்கு 'ஆர்பிட்ரரி டிசிஷன்' எடுப்பதற்கு வாய்ப்பு அளிப்பதாக இருக்கிறது. அதே நேரத்தில், பம்பாய், கல்கத்தாவிலும் இருக்கிற நிலையை அனுசரித்து தமிழ் நாட்டிற்கு என்று கொண்டுவருவது சரியல்ல. இந்த மெட்ராஸ சிட்டி போலீஸ் ஆக்ட் படி,



எங்கே நடத்தப்படும் பொதுக்காரியங்களாக இருந்தாலும் அதற்கு குறிப்பாக போலீசார் அனுமதி வேண்டும். போலீசார் பொதுக்கூட்டங்கள், ப்ரொசஷன், டிமான்ஸ்டிரேஷன் போன்ற சாதாரண நிலைமைகளுக்கு எல்லாம் கூட லைசென்சு வழங்குவதற்காக ரூ. 2 பெறுகிறார்கள். அந்த நிலைமை தற்போது உள்ளது. அப்படி ஏற்கனவே ரூ. 2 என்று சிறுசிறு காரியங்களுக்கு என வாங்கப்படுவது கூட தற்போது ரூ. 20 என்கிற அளவில் உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, முனிசிபல் லிமிட்டில் கடைகளை வைப்பதற்கு, முனிசிபல் அதிகாரிகள் லைசென்சு வழங்குகிறார்கள். அதற்கு அவர்கள் பீஸ் பெறுகிறார்கள். அப்படி அவர்களிடம் பீஸ் கட்டி லைசென்சு பெற்றவுடன், மீண்டும் அவர்கள் போலீசார் அனுமதி வாங்கவேண்டும் என்று சொன்னால், அதற்கு அவர்கள் மீண்டும் ரூ. 20 கட்ட வேண்டும் என்பது சரியல்ல. மக்கள் மத்தியில் இது ஒரு பெருத்த கலவரத்தை ஏற்படுத்தும். ஆகவே, இந்த முறையில் கம்பாரேடிவ் காரணம் காட்டுவது சரியல்ல. ஆகவே ஏற்கெனவே இருந்த ரூபாய் 20 என்பதோடு நிறுத்திக் கொள்வது சாலச்சிறந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 20 என்று இருப்பதை ரூ. 75 ஆக மாற்றுவதற்கான முறையில் இன்றைக்கு சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதற்கான காரண காரியங்கள், நோக்கங்கள் ஆகியவற்றில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியது போல், பம்பாய், கல்கத்தா ஆகிய மாநிலங்களில் வாங்கப்படும் கட்டண விகிதங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது தமிழ் நாடு சட்டத்தின் படி, இப்போது சென்னை காவல் துறை ஆணையர் விதிக்கிற கட்டணம் குறைவு என்று கூறப்பட்டிருக்கிறது.

பம்பாயில், கல்கத்தாவில் இருக்கிறது என்பது அல்ல பிரச்னை. பம்பாயில், கல்கத்தாவில் இருக்கிறது என்றுமுன் உதாரணம் காட்டினால், வேறு சில விஷயங்களிலும் சில சர்க்கார் அங்கேயுள்ளதை முன் உதாரணமாக எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறதா? அங்கே எல்லாம், மது விலக்கு என்கிற சட்டம் இடையாது. அந்த நிலைமையை முன் உதாரணமாகக் காட்டி, மாநில அரசு மது விலக்கை ரத்து செய்கிறோம் என்று சொல்லத் தயாரா? பம்பாயில் கட்டணம் அதிகமாக இருக்கிறது, நாங்களும் அதிகம் செய்கிறோம் என்று சொல்வது சரியல்ல.

ரூ. 75 செலுத்தி லைசென்சு பெறவேண்டும் என்று சொன்னால், சாதாரண திருமண விழாக்களுக்குக் கூட இவ்வாறு தொகை கட்டி லைசென்சு பெற வேண்டும் என்று போலீசார் நிர்ப்பந்திக்கிற நிலைமை ஏற்படும். முன்பு, ரூ. 2

என்று இருந்தது. பிறகு அதை ரூ. 20 என்று உயர்த்தப்பட்டது. தற்போது அது ரூ. 75 என்று மாறி இருக்கிறது. இப்படி சட்டம் கொண்டு வருவது சரியல்ல. முன்பு இருந்த கட்டணத்தை மாற்றியமைக்க பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் இருக்கிறது என்று முன் உதாரணமாகக் காட்டுவது முறையல்ல என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்தச் சட்டம் வெள்ளைக்காரன் ஆட்சி இருந்த காலத்தில் கொண்டு வரப்பட்டது. அதற்காக வேண்டி இப்போது கொண்டு வரவேண்டாம் என்று சொல்லவில்லை. அதிலே எது எது நமக்குத் தேவையோ அந்த அடிப்படையில் கொண்டு வரவேண்டும். எதை நீக்கவேண்டுமோ அதை நீக்க யோசனை பண்ணவேண்டும்.

நான் சொல்லவிரும்புவது, முதலில் ரூ. 2 லைசென்சு பெறுவதற்கு பீசாகக் கட்டவேண்டும் என்று இருந்தது. அதை ரூ. 20 என்று பிறகு உயர்த்தினார்கள். தற்போது அதை ரூ. 75 என்று உயர்த்தி சட்டம் கொண்டு வந்து இருக்கிறீர்கள். இதில் 'ஈட்டிங் அவுஸ்' ஹோட்டல், லாட்ஜ்' என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஹோட்டல், லாட்ச் என்பது புரிந்து கொள்ளத் தக்கவகையில் உள்ளது. ஈட்டிங் அவுஸ் என்பது புரிந்து கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு வீடும் ஈட்டிங் அவுஸ் தான். என்.ஜி.ஓக்கள் உட்கார்ந்து சாப்பிடுகிற இடம் கூட ஈட்டிங் அவுஸதான். ஆகவே, இந்த ஈட்டிங் அவுஸ் என்பதற்குச் சரியான விளக்கம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, டேவர்ன் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். டேவர்ன் என்றால் என்ன? உணவும், புட்டியும் அங்கே கொடுக்கப்படும். மதுவிலக்கு இங்கே அமலாகிக்கொண்டு இருக்கிறபோது அப்படி ஒரு இடம் இருக்கலாமா? டேவர்ன் என்ற பெயரால் உணவும், புட்டியும் கொடுக்கலாம் என்றால், அங்கே 10 புட்டிக்கு அனுமதி வாங்கிவிட்டு, 1000 புட்டி வியாபாரம் நடத்தப்படும். இதற்கு பெயர் மதுவிலக்கா? ஆகையால் இதை சிந்திக்க வேண்டும். ஏற்கெனவே நீதிபதியாக இருந்த நம்முடைய அமைச்சர் இதை சிந்திக்க வேண்டும். இது அவசியம்தானா? இது தொலைக்கப்பட வேண்டாமா?

கச்சேரி, உடற்பயிற்சி இவைகளுக்கு எல்லாம் வேறு போட்டிருக்கிறார்கள். பொதுக் கூட்டங்கள் நடத்த-அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள், மற்ற பிற ஸ்தாபனங்கள் கூட்டங்கள் நடத்துகிறார்கள். இந்தக் கூட்டங்களுக்கு எல்லாம் நினைத்தபோது அனுமதி வழங்கலாம், நினைத்த போது இல்லை என்று சொல்லிவிடக்கூடிய சூழ்நிலை எல்லாம் இதிலே இருக்கிறது. ஓட்டல், சாதாரண டீ கடை, திருமண காரியங்கள் இவைகளுக்கெல்லாம் அவசியம் இல்லை. பெரிய, பெரிய ஓட்டல், லாட்ச், டேவர்ன் இவைகளுக்கு இருக்கலாம். வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள். மற்றவைகளுக்கு இது அவசியம் இல்லை. ஆகவே, அவசியம் இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்குகிற இந்த மசோதாவை தூக்கி எறிந்துவிட்டு, எதற்கு அவசியம் என்று கருதப்படுகிறதோ அதற்கு மட்டும் இப்படிப்பட்டச் சட்டத்தைக் கொண்டுவந்தால் போதும் என்பதை இந்த நேரத்தில் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து, இந்த பொருட்காட்சி நடத்துகிற இடங்களில் ஆபாச நடனம் கூடாது. அதற்கு ஒரு குறிப்பிட்ட தொகை வாங்கி. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது அடுத்த சட்டத்தைப் பற்றியது. அந்தச் சட்டம் வரும்போது அதைப்பற்றி பேசலாம். தயவுசெய்து உட்காருங்கள்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Speaker, I am obliged to the varied types of criticims that have been levelled against this Bill. I must submit to this House that the amount of licence fee is not fixed at Rs. 75|- As I intervened in the debate earlier I made it clear that it is stated as "such fees not exceeding Rs. 75|- as may from time to time be fixed by the State Government". Under this Act there must be by-laws for levying and collecting the necessary fees, for instance, for tea shops; eating houses, lodging house and hotels, gymnasiums, music, permanent place of public resort, temporary public resort places and other types of public resort including exhibition, etc., etc., Therefore when the by-laws are framed and sent for the approval of the Government the criticisms of the Hon'ble Members will be borne in mind and the varying rates will be fixed according to the economic conditions prevailing in the City of Madras as compared where higher rates even amounting to Rs. 90|- are levied. While with the conditions prevailing in the cities of Bombay and Calcutta I am greatful for the suggestions given from various angles from which the bill has been criticised, the amending bill has been criticised. I must say that various criticisms of the Hon'ble Members will be borne in mind in fixing the new rates and the licence fees for various types of premises which require licence under the Tamil Nadu City Police Act, 1888.

[Thiru K. Narayanaswamy] [1979 நவம்பர் 2

I must answer one main criticism relating to licence fee. It has been held by the Supreme Court that there must be some kind of quid pro quo — quid pro quo in the sense that the licence premises was subject to inspection and therefore, licence fee must be commensurate with what is called, the service that has got to be defrayed by the State Exchequer. It cannot be elevated to the rank of a tax. A licence fee is only a licence fee and it must be kept as low as possible. It is only to defray the inspection charges or the visiting charges; or supervising charges.

(முற்பகல் 11—00)

Therefore the licence fee is always designed to be low for the purpose of defraying the cost of services rendered for inspection of the premises which are licensed. Tax is a very much higher thing and as you all know it can be very nearly, I use the word very carefully, expropriatory. Both the concepts legally are quite different from each other and there is no difficulty in varying the essential elements of licence fee, when the actual by-laws are being amended by levying the relevant fees in the City of Madras.

*திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, நான் கேட்ட விளக்கமே வேறு, அமைச்சர் வேறு ஏதோ காரண காரியங்களைச் சொல்கிறார்கள். கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் ஒரே மாதிரியாக அபராதம் விதிக்கப்படுவதாக சொல்கிறார்கள், அதுதான் இல்லை. அங்கே பல இடங்களில் பல விதமாக 10, 20 என்று விதிக்கப்பட்டிருக்கிறது. . .*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் பேசியதற்குப் பிறகு ஏதாவது சந்தேகம் வேண்டுமானால் கேட்கலாம். மேற்கொண்டு அதன் மீது பேசிக் கொண்டே போகக் கூடாது. . . .*

*திரு. க. சுப்பு: அதுதான், நான் சந்தேகம் தான் கேட்கிறேன். இந்த ஹவுசுக்குச் சொல்கிற மாதிரி கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் எவ்வளவு அபராத தொகை வசூல் பண்ணுகிறார்கள் என்று தயவுசெய்து சொல்ல வேண்டும்.*

THE HON. THIRU K. NARAYANASWAMY: In Bombay, in some cases the fee goes upto Rs 90 for periods exceeding 6 months but not exceeding one year. That is for country spirit shops. In Bombay for some places of public entertainment where is is open for all 24 hours, it goes to Rs. 60 per annum. Different hours are fixed. For eating house, the licence fee levied is Rs. 20 per year in Calcutta. For coffee house also it is Rs. 20 per year.



1979 நவம்பர் 2] (Thiru K. Narayanaswamy)

Fees for each kind of music (vocal or instrumental) in licensed premises is Rs. 1 per day in some cases and Rs. 5 in some other cases. There are varying rates.

*திரு. க. சுப்பு: ரேட்ஸ் பூராவும் இவ்வளவு என்று சொன்னால் நல்லது, அங்கே டீஷாப் 10 ரூபாய், உணவுக் கடை 10 ரூபாய் என்று பல விதங்களில் இருக்கிறது, நீங்கள் மொத்தமாக 75 ரூபாய் என்று சொல்கிறீர்கள் . . .*

THE HON. THIRU K. NARAYANASWAMY: That is exactly what I have said. Please understand me properly. I said 'not exceeding Rs. 75. It is a simple English we have to bear that in mind. If the hon. Member wants to pervert English language, if the hon. Member wants to distort and pervert English language, he can go on unendingly. I said 'not exceeding Rs. 75'. Rs. 75 will be the maximum in exceptional cases, not in all cases.

*(திரு. லத்தீப், திரு. கூத்தகுடி ச. சண்முகம், திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு கட்சியில் இருந்தும் ஒவ்வொருவர் பேசியிருக்கிறார்கள். அமைச்சர் பேசியதற்குப் பிறகு . . .*

*திரு. கூத்தகுடி ச. சண்முகம்: நான் அதன்மீது பேசப் போவது இல்லை, எல்லா எதிர்க் கட்சிகளும் சேர்ந்து பில் பாஸ் செய்தால்தான் நன்றாக இருக்கும். இது ஒன்றும் அப்படி குடி முழுகிப் போகிற பில் இல்லை, எல்லோரும் சேர்ந்து பாஸ் பண்ணும் ஒரு நடைமுறை வரவேண்டும் என்றுதான் சொல்கிறேன் . . .*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் பேசியதற்குப் பிறகு அதில் ஏதாவது சந்தேகம் இருந்தால் கேட்கலாமே தவிர, இப்படி ஒவ்வொருவரும் திரும்ப திரும்ப பேசிக் கொண்டேயிருந்தால் எப்படி 16 பில்களை முடிப்பது?*

THIRU M. A. LATHEEF: The Hon. Minister referred to the legal opinion expressed by their Lordships of the Supreme Court about the concept of "quid pro quo". In that case as I understand it, the concept of "quid pro quo" was explained and interpreted by their Lordships about licence granted for a commercial and business purposes wherein the license gets tangible and

*9179 நவம்பர் 2* [Thiru M. A. Lathief]

material benefit by way of income but with regard to "social purpose" for which the licences are granted, wherein the licensees do not get any benefit other than service, the social purpose, Their Lordships have said that there may not be the concept of 'quid pro quo". There should not be any fee for issuee of such licence. That is I think, the option of the Lordships of the Supreme Court.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஐயா, அமைச்சர் அவர்கள் பேசும் போது ஈட்டிங் ஹவுஸ் என்று சொன்னார்கள், ஈட்டிங் ஹவுஸ் என்றால் என்ன? லாட்ஜ் என்றால் புரிகிறது, ஹோட்டல் என்றால் புரிகிறது ஆனால் ஈட்டிங் ஹவுஸ் என்று வருகிறபோது, மது விலக்கு இருக்கக்கூடிய இந்த நேரத்திலே, விஸ்கி ஷாப், பீர் ஷாப் போன்ற இடங்களில் மது வகைகளோடு சாப்பிடும் உணவுப் பண்டங்கள் சிலவற்றை விற்பனை செய்வார்களே அதைத்தான் ஈட்டிங் ஹவுஸ் என்று சொல்கிறாரோ என்றால், மது விலக்கு என்று ஒன்று எதற்கு? அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I have nothing to submit to the House so far as prohibition is concerned. But so far as 'eating house' is concerned, it will be a house where people go and eat on payment of certain fees levied by the man who runs the 'eating house'.

The hon. Member Thiru M. A. Latheef made some subtle nuisance in respect of licence fees. I would submit that where 'social purpose' deems to be the dominating element in respect of any particular institution where there ought to be given a licence, that 'social purpose' will be borne in mind in fixing the rate of licence fee.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras City Police (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 43 of 1979) be taken into consideration.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.



*1979 நவம்பர் 2]*

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, I move—

"That the Madras City Police (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 43 of 1979) be pleased."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## (2) THE MADRAS CITY POLICE (SECOND AMENDMENT) BILL, 1979.

(L.A. Bill No. 51 of 1979)

THE HON. THIRU K. NARAYANASWAMY, Sir, I beg to move—

"That the Madras City Police (Second Amendment) Bill, 1979 * (Legislative Assembly Bill No. 51 of 1979) be taken into consideration."

Instances of obscene dances in the exhibitions conducted in the City of Madras have been brought to the notice of the Government. Such dances are in violation of the specific conditions of the licences granted under Section 34 of the Madras City Police Act, 1888 (Tamil Nadu Act III of 1888). For effective enforcement of the conditions of licence it is proposed to amend Section 34 of the Madras City Police Act for requiring persons other than a local authority applying for licences to conduct exhibitions to furnish security deposits as prescribed by the Commissioner of Police for the observance of the conditions of the licences which will be forfeited to the Government in the event of breach or non-observance of the conditions of the licences. It is also proposed to amend Section 76 of the said Act so as to enable the Commissioner of Police to suspend the licences then and there for violation of the conditions of licences pending action against the holder of the licences.

The Bill seeks to achieve the above objects.

Sir, I commend the motion for the acceptance of the House.

---

* 1979 அக்டோபர் 30 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

*திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் பெயரால் வந்திருக்கிற இந்த மசோதாவை நமது சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதன்மீது நான் என் கருத்துக்களைக் கூற விழைகிறேன். மிக வேகமாக இந்த அவையில் கண்டனத் தீர்மானங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் திடீரென்று ஒரு நாள் இடைவெளி விழுந்து இன்றைக்கு மசோதாக்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். மீண்டும் நாளைக் காலை கண்டனத் தீர்மானங்கள்பற்றிய விவாதம் நடக்க இருக்கிறது. சினிமாவில் நாம் வேகமாகக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டு வருகிறபோது திடீரென்று இன்டர்வல் வரும். அப்போது விளம்பரங்கள் போடுவார்கள். பட்டுப் புடவை எடுக்க வேண்டுமா, சாரதாஸ் என்று விளம்பரம் வரும். பிறகு படம் தொடர்ந்து நடக்கும். அதேபோல் கண்டனத் தீர்மானங்களின் பேரில் நடக்கக்கூடிய விவாதத்திற்கு இடைவெளியாக இந்த பில்கள் வந்து இருக்கின்றன. இப்போது சென்னையில் இருக்கிற போலீஸ் சட்டத்திற்கு திருத்தம் வந்திருக்கிறது. என்ன திருத்தம்? ஒரு பொருட்காட்சி சென்னையில் நடைபெறுகிறது என்றால் அந்தப் பொருட்காட்சிக்கு லைசென்ஸ் வழங்குகிறது செக்ஷன் 34. அவற்றை ஸஸ்பென்ட் செய்யவோ அல்லது கான்ஸெல் செய்யவோ செக்ஷன் 74-க்கு அதிகாரம் இருக்கிறது. இதற்கிடையில் ஒரு சிறிய திருத்தம். என்ன திருத்தம்? அந்தப் பொருட்காட்சியில் ஆபாசம் நடைபெற்றால் அந்த இடத்திலேயே ஏற்கனவே கொடுக்கப் பட்ட அனுமதியை ரத்து செய்ய அதிகாரம் இருக்கிறது என்று ஒரு திருத்தம். அப்படி நிகழாவண்ணம் இருப்பதற்கு லைசென்ஸ் கொடுக்கிறபோதே அவர்களிடம் டெப்பாஸிட் வாங்கிக் கொள்வது என்ற முடிவுக்கு வந்திருக்கிறது சர்க்கார்.

(முற்பகல் 11-10)

நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்படிப்பட்ட ஒரு பொருட்காட்சியில் ஆபாசம் நடைபெறுகிறது என்று கருதிக்கொள்வோம். ஆபாசம் எப்படியெல்லாம் இருக்கும், ஆபாசம் என்றால் என்ன என்பதைப்பற்றியெல்லாம் நமது செய்தித் துறை அமைச்சர் அவர்கள் முன்பே, ஆபாசம் என்பது எது, என்பதைப்பற்றி சொல்லி இந்த சபையில் அது சம்பந்தமாக ஒரு விவாதமே நடந்தது. ஆகவே அப்படிப்பட்ட ஆபாசம் நடைபெற்றால், அந்தக் காட்சியினுடைய உரிமையை ரத்துசெய்கின்ற அதிகாரம் கொடுப்பதுதான் இந்தத் திருத்தச் சட்டம். இதற்கு என்ன சொல்லப்பட்டிருக்கிறது. எக்ஸிபிஷன் ஆரம்பிக்குமுன் இதற்காக டெப்பாசிட் கட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. டெப்பாசிட் யாரிடத்தில் எவ்வளவு கட்ட வேண்டும் என்பதோ,

யார் இதை நிர்ணயிப்பது என்கின்ற விவரம் சட்டத்தில் விளக்கமாக இல்லை. டெப்பாசிட் கட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மசோதாவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது ? . . .

" to deposit with the Commissioner in cash or in Government promissory notes such sum, as may be prescribed, as security for the due observance of the conditions of the licence."

'சச் ஸம்' என்றால் எவ்வளவு? இதை அறுதியிட்டு சொல்லியிருக்க வேண்டும். இதற்கான டிஸ்க்ரஷன் பவர் கமிஷனரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'சச் ஸம்' என்றால், ஒருவருக்கு இவ்வளவு, இன்னொருவருக்கு இவ்வளவு என்று தங்கள் இஷ்டத்திற்கு தகுந்தபடி இந்த தொகையை சொல்ல மாட்டார் என்பது எப்படி நிச்சயம்? கொஞ்ச நேரத்திற்கு முன்னால் நமது மாண்புமிகு மார்க்கபந்து அவர்கள் சொன்னார்கள், இப்படிப்பட்ட டிஸ்க்ரீஷன் பவரை அதிகாரிகளிடத்தில் கொடுத்தால் நிச்சயமாக ஆர்பிட்டரிதான் ஏற்படும். இது இல்லாமல் இருப்பதுதான் நல்லது என்ற கருத்தை தெரிவித்தார்கள். ஆனால் இங்கே அந்த பவரை அதிகாரியிடம்தான் கொடுத்திருக்கிறார்கள்.

டெப்பாசிட் எவ்வளவு கட்ட வேண்டும் என்பதை அவர்தான் நிர்ணயிக்க வேண்டும், அதில் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு நிச்சயமாக வரும். வேண்டியவர்கள் என்றால் கொஞ்சம் பணம் கட்டினால் போதும், வேண்டாதவர்கள் என்றால் அதிகமாக பணத்தை கட்ட சொல்வார்கள். வேண்டாதவர்கள் இருந்தால் இந்தத் தொழிலின் பக்கத்திலேயே வரவொட்டாமல் அவர்களை துரத்திவிட முடியும். ஒருவன் 25 ஆயிரம் செலவில் ஒரு எக்ஸிபிஷனை நடத்துகிறான் என்று வைத்துக்கொண்டால், அவனிடம்—இவர்களுக்கு வேண்டாதவர்களாக இருந்தால்—அவனிடம் 10 ஆயிரம் டெப்பாசிட். கட்ட வேண்டும் என்று உத்தரவிடுவார். அவன் 10 ஆயிரம் ரூபாய்க்கு எங்கே போவான் ? தொழிலையே விட்டுவிட்டு போகவேண்டியதுதான் வரும். ஆகவே அரசியலில் தங்களுக்கு வேண்டாதவர்கள் இந்தத் தொழிலில் வாாமல் தடுப்பதற்காக உள்நோக்கம் கொண்டுதான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ என்று நான் ஐயப்படுகிறேன். கமிஷனரிடத்தில் இந்த பவரைக் கொடுத்துவிட்டு, தொழில் நடத்துகின்றவர்கள் அதிகாரிகளிடத்தில் போகும்போது—எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி—தங்களுக்கு வேண்டியவர்களாக இருந்தால், அதிகாரிகளை கூப்பிட்டு, உங்களிடம் லைசென்ஸுக்காக வருகிறான், டெப்பாசிட் கட்டுவதற்கு ரூபாய் 5,000 மட்டும் போடுங்கள் என்று சொல்வார்கள். வேண்டாதவர்கள் இருந்தால், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் போடுங்கள், 7,000 ரூபாய் போடுங்கள் என்று அமைச்சரவை

யிலிருந்தோ அல்லது ஆளும்கட்சியிலுள்ள எம்.பி.-க்களோ அல்லது எம்.எல்.ஏ.-க்களோ அல்லது ஆளும் கட்சியிலுள்ள பிரமுகர்களோ அல்லது மாவீரர்களோ போலீஸ் இலாகாவுக்கு, கமிஷனருக்கு சொல்லுவார்கள். இப்படி போலீஸ் இலாகாவை டிமாரலைஸ் செய்கின்ற அளவில், ஏற்கனவே டிமாரலைஸ் செய்து வைத்திருக்கிறார்கள். இப்போதும் இன்னும் கூடுதலாக ஆக்குவதற்குத்தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, டெப்பாசிட் எவ்வளவு என்பதை சொல்வதற்கு, எத்தனை சதவீதம் டெப்பாசிட் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கலாம். அப்படி சொல்லாமல் டிஸ்க்ரீஷன் பவர் என்று எப்படி கொடுக்கலாம். மொத்தமாக செலவு செய்கின்ற தொகையில் இரண்டு முதல் மூன்று சதவீதம் டெப்பாசிட் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கலாம். அப்படியும் சொல்லாமல் 'சச்லம்' என்று சொல்லிவிட்டால், 'சச்சிதானந்தம்' தான் இது என்று வேண்டியவர்களுக்கு ஒரு தொகையையும் வேண்டாதவர்களுக்கு ஒரு தொகையையும் டெப்பாசிட் கட்டவேண்டும் என்று நிர்ணயிப்பார்கள், இப்படிப்பட்ட அரசியல் உள்நோக்கத்தோடுதான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதுதான் என் குற்றச்சாட்டு. ஆளும் கட்சிக்காரர்கள் தங்கள் ஆட்களுக்கு அனுகூலமாக காரியங்களை செய்து கொள்வதற்கும், அதே நேரத்தில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த வேண்டாதவர்கள் இந்த தொழிலை நடத்தினால், அதை தடுப்பதற்கும் வேண்டிய முயற்சிகளை செய்கின்ற அளவில், அரசியல் உள் நோக்கத்தோடு இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, ஆபாசம்கூட எது என்பதை அந்த அதிகாரிதான் நிர்ணயிக்க வேண்டும். உடனடியாகவே, 'அட் எ டைம்' பார்த்துவிட்டு அங்கேயே 'தென் அன்ட் தேர்' அங்கேயே பார்த்து முடிவு செய்வார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது எப்படி முடியும் என்று தெரியவில்லை. அதிலும் குறிப்பிட்ட அதிகாரி சற்று வயதான அதிகாரியாக இருந்தால், இது ஆபாசம் என்று சொல்லக்கூடும், இளைஞராக இருந்தால் இது ஆபாசம் இல்லை, பாவமில்லை, இதை அனுமதிக்கலாம் என்று சொல்லக்கூடும். ஆக இப்படியாக இது ஒரு அரசியல் உள்நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இத் திருத்தச் சட்டம் தேவையற்றது, முறையற்றது. ஆகவே அமைச்சரவை தங்களுடைய ஆட்களுக்கு எக்ஸிபிஷன் நடத்திக் கொள்வதற்கு வாய்ப்பு அளிப்பதற்காகவே கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த திருத்தச் சட்டத்தை நமது முதலமைச்சர் அவர்கள்—முதலமைச்சர் அவர்கள் சார்பாக இங்கே கொண்டு வந்திருக்கின்ற—நமது முன்னாள் நீதிபதி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தை வாபஸ் பெற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன். வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.



**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவிலே மதிப்பிற்குரிய திரு. துரை முருகன் சொன்னதுபோல் எவ்வளவு தொகை டிபாசிட் செய்ய வேண்டும் என்று இதிலே குறிப்பிடப்படவில்லை. இது ஒரு குறைபாடு என்று கருதுகிறேன். அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. எனவே, ரூல்சிலே சேர்த்துச் சொல்லலாம். இருந்தாலும்கூட, ஆக்டிலே ஸ்பெசிபிக்காக சொல்லி விடுவது ரொம்ப நல்லதென்று நான் கருதுகின்றேன். இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலே, மதராஸ் சிட்டிக்கு மட்டும் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. கிராமங்களிலே, இன்னும் நகரங்கள் அல்லாத பகுதிகளிலே இம்மாதிரியான ஷோ என்ற பேரிலே, பல பேர்கள் ரொம்ப ஆபாசமாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். இதேபோல் இன்னும் சில இடங்களிலே சூதாட்டம் போன்றவைகளும் நடத்திக் கொண்டு வருகிறார்கள். இதுபற்றி போலீசிலே சொன்னாலும்கூட, அவர்கள் போதிய நடவடிக்கை எடுப்பதில்லை. எப்படியோ, யார் சிபார்சின் பேரிலே தொடர்ந்து நடந்துகொண்டுதான் வருகின்றன. ஆகவே, இம்மாதிரியான ஒரு ஆபாசமான ஷோக்கள், சூதாட்டங்கள் நடக்காத அளவுக்கு இந்தச் சட்டத்தை நாம் செய்தாக வேண்டும். இதை இந்த அரசு கவனத்திலே கொள்ளவேண்டும்.

அடுத்து, எக்சிபிஷன் என்று சொல்லும்போது, அதை நடத்துகின்றவர்கள் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் நடத்தலாம், அரசியல் கட்சியைச் சேராதவர்களும் நடத்தலாம், நடத்துகிறார்கள். இதிலே எந்தவிதமான பாகுபாடும் இல்லை. ஆனால், லைசென்ஸ் கொடுக்கும்போது, இதிலே அரசியல் கண்ணோட்டம் இருக்கக் கூடாது. அந்த நோக்கம் இல்லாமல் இதை அமுலாக்க வேண்டும். எனவே, அந்த நோக்கம் இல்லாமல் இதனை அமுல் நடத்துவதற்கு அரசு உதவி செய்ய வேண்டும், ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் அமைகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த திருத்தச் சட்டத்தினுடைய கோரிக்கைகளை நான் வரவேற்கிறேன். ஆனால், உண்மையிலேயே இந்த ஆபாசம் ஒழிக்கப்பட வேண்டும் என்கின்ற நோக்கம், கண்ணோட்டம் இந்த அரசுக்கு இருக்குமானால், எவ்வளவு செக்யூரிட்டி டிபாசிட்டு வாங்க வேண்டும் என்பது திட்டவட்டமாக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் ரூபாய் 10,000 என்றிருக்க வேண்டும். அதற்கு மேலே எவ்வளவு இருந்தாலும் சரி. குறைந்தபட்சம் ரூபாய் 10,000 என்று இருக்க வேண்டும். ஒரு லட்சம் என்று போட்டாலும் கட்டத் தயாராக இருப்பார்கள். ஒரு மாதத்திற்கு அனுமதி வாங்கி, 20 நாட்களுக்கு நடத்திவிட்டு, அதற்குப் பிறகு 21 ஆம் நாள் ரத்து செய்துவிட்டுப் போய்விட்டதாகச் சொல்வார்கள். எனவே, இந்த செக்யூரிடி டிபாசிட் ரூபாய் 10,000 என்பதை வாங்குவதோடு மட்டும் விடக் கூடாது.

அதைப்பற்றி யாரும் கவலைப்பட மாட்டார்கள். யாராவது தவறு செய்தால், இந்த குறிப்பிட்ட தொகை மட்டும் திருப்பித் தரப்படாது என்று திட்டவட்டமாகச் சொன்னால் மட்டும் போதாது. அந்த செக்யூரிடி டிபாசிட்டோடு மட்டுமல்லாமல், குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் கடுங்காவல் தண்டனை என்றும் சொல்ல வேண்டும். அப்படி ஆறு மாதங்கள் கடுங்காவல் தண்டனை என்று சொன்னால்தான், பயந்து நடப்பார்களே ஒழிய, வெறும் செக்யூரிடி என்று சொன்னால், அதைப் பறிமுதல் செய்ய முடியுமே தவிர, வேறு ஒன்றும் உங்களால் செய்ய முடியாது. எனவே, திட்டவட்டமாக, உண்மையிலேயே ஆபாசம் ஒழியக்கூடிய கண்ணோட்டம் இருக்கக்கூடிய இந்த அரசு, அதையும் செய்ய வேண்டும், கொண்டு வரவேண்டும் என்று சொல்லி நான் அமர்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் தேவையற்றது என்று நான் எதிர்க்கிறேன். காரணம், முன்னாள் ஆபாசம் என்று தெரிந்தால், இதைக் காட்டி ரத்து செய்யலாம் என்றிருக்கிறது. இப்போது செக்யூரிடி டிபாசிட் கட்ட வேண்டும். ஆபாசம் என்று தெரிந்தால், இந்த செக்யூரிடி டிபாசிட் பறிமுதல் செய்யப்படும். இதன் உள் நோக்கம் என்ன ? தவிர, எவ்வளவு செக்யூரிடி டிபாசிட் என்பதை கமிஷனர் நிர்ணயம் செய்வார். அந்த அதிகாரமும் அதிகாரிக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி கொடுக்கக் கூடாது.

மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் சொன்னது மாதிரி, எது ஆபாசம். இந்த ஆபாசம் என்பதை யார் நிர்ணயிப்பது ?. சில அதிகாரிகளுக்கு சில விஷயங்கள் பிடிக்கும். அவர் ஆபாசம் இல்லை என்று சொல்வார். சிலருக்கு பிடிக்காது ; அது ஆபாசம் என்பார்கள். மவுண்ட் ரோடிலே ஹேமமாலினியின் டான்ஸ் போஸ்டர் இருக்கிறது. அது ஆபாசம் இல்லையா ? அது போடப்பட்டுத்தான், படம் ஓடிக்கொண்டிருக்கிறது. அது ஆபாசம் இல்லையா? எது ஆபாசம் ?

(முற்பகல் 11-20)

**திரு. துரை முருகன் :** சபையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசலாமா? ஹேமமாலினி அல்ல; ஜெயமாலினி.

**திரு. மு. அம்பிகாபதி :** எனவே, இது ஒரு சிக்கலான சட்டம். ஆபாசம் தடுக்கப்பட வேண்டும், தவிர்க்கப்பட வேண்டும். லைசென்சை ரத்து செய்து, டெபாசிட்டைப் பறிமுதல் செய்வது, அதற்கான அதிகாரத்தை அதிகாரியின் கையில் கொடுப்பது என்பது எல்லாம் முறையானதாக இருக்க முடியாது. அது வேறுபல விளைவுகளை ஏற்படுத்தும். மேலும் கடுமையான ஊழலை இந்தச் சட்டத்தின் மூலம் திறந்து விடுவதாகிவிடும். ப்ரொஹிபிஷனில் பிறத்,

இருப்பது மாதிரி அடிமட்டத்திலிருந்து மேல்மட்டம் வரையிலும் ஊழலுக்கு வழி வகுத்துவிடும். கிராமங்களில் சிறு நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அரிச்சந்திரன் மயான காண்டத்தில் தாலி இருக்கிறதா என்று கேட்பான், தாலி இருக்கிறது என்று காட்டி பதில் சொல்லுவாள்—இது ஆபாசம் என்று சொல்லி போலீஸ் பிடித்துக் கொள்ளலாம். நான் நாடகம் நடிப்பது உண்டு. ஆனால் ஆபாச நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்து கொண்டதில்லை.

அரசாங்கம் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ப்ரொஹிபிஷன் சட்டம் எப்படி ஊழலுக்கு வித்திட்டதோ அதே போன்று இந்தச் சட்டமும் நிலைமைகளை உருவாக்கும். சாதாரண நடனமாடிப் பிழைக்கிற ஏழை எளிய மக்கள் பாதிப்புக்குள்ளாக இந்தச் சட்டம் வகை செய்யும் என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கான காரணம் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்சிலே சொல்லப் பட்டிருக்கிறது

"subject to the condition that no obscene dances are conducted in the licenced premises."

என்ற காரணத்திற்காக சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட வார்த்தையைச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

It will give a precise meaning.

ஆகையால் இந்தச் சட்டத் திருத்தத்திலே அந்த வார்த்தைகளை சேர்த்துக கொள்ள வேண்டும்.

டிஸ்க்ரீஷனரி பவர் என்பது போலீஸ் அதிகாரிகளிடத்தில் கொடுக்கப் பட்டிருக்கிறது. அது பல ஆபத்தான விளைவுகளுக்கு இடம் கொடுத்து விடும். செக்ஷன் 34(3)

"Where there is breach or non-observance of the conditions of the licence granted under sub-section (1), the Commissioner may forfeit the security so deposited to the Government." என்று இருக்கிறது.

That can be subjected to the summary decision of a Magistrate.

என்ற முறையில் அந்தத் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும்.

செக்ஷன் 34(4)-ல்

" The forfeiture of the deposit shall not be a bar for proceeding against the holder of the licence under the provisions of Sections 76" என்று இருக்கிறது. it will be a double jeopardy அதற்கும் திருத்தம் செய்ய வேண்டும்—

This can be decided by a summary procedure by a Magistrate என்ற திருத்தத்தைச் செய்யவேண்டும்.

Obscene dances are prohibited. என்ற திருத்தத்தையும் சட்ட விதியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தை வரவேற்கிறேன். ஆபாசத்தை ஒழிக்க வேண்டுமென்று கருதுவதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஆபாசம் என்பது இந்த மாதிரியான பொருட்காட்சிகளில் மாத்திரந்தான் இடம் பெறுகிற ஒன்றா என்று அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொருட்காட்சி என்று நடக்கும்போது பல மக்கள் கூடலாம்; அவர்கள் அதைப் பார்ப்பதன் மூலம் ஒழுக்கக் கேடுகள் ஏற்படலாம். ஆனால் இன்றைக்கு சினிமா என்ற பெயரில் நடைபெறுகிற, சினிமா கொட்டகைகளுக்கு உள்ளே மட்டுமல்லாமல் கொட்டகைக்கு வெளியே நிரந்தரமான எக்சிபிஷன்களை போஸ்டர்கள் மூலமாக வீதிகளில் வைத்திருக்கிறார்கள். இவை ஒழுங்கீனங்களை வளர்க்க இடம் தருகின்றன. அதைத் தடுக்க இந்த அரசு இன்று என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இதைத் தடுக்க அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்குமானால் அதை நாம் பாராட்டியிருக்கலாம். சினிமாத் துறையின் மூலம் ஆப்சீன் என்று சொல்லக்கூடிய ஆபாசக் காட்சிகள் மட்டுமல்லாமல் சமுதாயத்தில் ஒழுங்கீனங்களை வளர்க்கக்கூடிய—எப்படித் திருடுவது? எப்படிக் கொள்ளையடிப்பது? எப்படி தகாத காரியங்களைச் செய்வது?—என்ற காட்சிகளையெல்லாம் அங்கே முறையாகக் காட்டுகிறார்கள். அதை இளைய சமுதாயம் பார்க்கிறது, அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பது என்னுடைய கேள்வி. இதனால் ஊழல் வளரும் என்று இங்கே சொல்லப்பட்டது. அதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். காரணம் இங்கே சொல்லியிருப்பது.



" require any person, other than a local authority, applying for such licence or the holder of such licence, as the case may be, to deposit with the Commissioner in cash or in Government promissory notes "

என்பதுதான். டெபாசிட் செய்யும்பொழுது, பல்வேறு விதமான போங்கள் இருக்கும். என்ன அமவுண்ட் நிர்ணயிக்கப்படுகிறது என்று பேசும்போதும் அல்லது டெபாசிட் கேஷை வாபஸ் பெறக்கூடிய நேரத்திலேயும் போங்கள் நடைபெறும். சில சமயங்களிலே பிராமஸரி நோட்டே காணாமல் போய் விடும். எப்படி எப்படி காரியங்கள் நடைபெறும் என்பது எங்களுக்குத் தெரியும். இது புதிய ஊழலுக்கு வழிவகுப்பதாக இருக்கிறது. இவைகளைத் தடுப்பதற்கு கடுமையான தண்டனையைக் கொடுக்கின்ற முறையிலே சட்டம் கொண்டுவந்தால் சரியாக இருக்கும். ஏற்கெனவே 34, 75-வது விதிகளிலே லைசென்ஸை கேன்சல் செய்வதற்கு உரிமை இருக்கிறது. இந்தச் சட்டத்திலே கேன்ஸல் செய்து பொருட்காட்சியை நிறுத்துவதோடு, பொருட்காட்சியை யார் நடத்துகிறார்களோ அவர்களையும் யார் ஆபாச நடனமாடுகிறார்களோ அவர்களையும் ஆபாசமாக ஆடிய நடனக்காரர் அல்லது நடனக்காரியைக் கொண்டு ஏற்பாடு செய்பவர்களையும் சட்டப்படி தண்டிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். அந்த முறையில் ஆறு மாதம் சிறை தண்டனை அல்லது பைன் அல்லது இரண்டும் என்ற முறையிலே சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். மற்ற சட்டங்களிலே இருப்பதைப்போல், இம்ப்ரிஸன்மெண்ட் அல்லது பைன் அல்லது போத் என்ற முறையிலே போடவேண்டும்.

எவ்வளவு தொகை என்று நிர்ணயிக்கிற அதிகாரம் கமிஷனருக்கு உண்டு என்று சொல்வது முறையானதல்ல. சம்பந்தப்பட்டவர்களுக்கு எல்லாம் தண்டனை கொடுக்கக்கூடிய முறையிலே மாற்றியமைத்து சினிமா போஸ்டர்களுக்கும் சினிமா காட்சிகளுக்கும் இதைக் கொண்டு வரவேண்டும். include cinema also என்ற முறையிலே அதையும் சேர்த்துக் கொண்டு வந்தால் லாபகரமாக இருக்கும். ஆனால் ஏனோ தெரியவில்லை அரசு சினிமாத் துறையை விட்டுவிட்டது. நீங்கள் அறிந்து இருக்கலாம். அந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு

Do not discriminate between these theatres and the exhtbitions in your own interests.

என்ற முறையிலே கொண்டுவரவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

I do not want to go into the details. It is left to the obvious interpretation of the Hon. Minister and the Hon. Ministers, whatever it may be.
ஆகவே, சினிமாவை சேருங்கள். சேர்க்கவில்லையென்றால், உங்களுக்கு உள்நோக்கம் இருக்கிறது என்று அர்த்தம்.

Piece-meal legislatton with ulterior motives will not serve the purpose. This is only a political Bill. This should be condemned.
நல்ல வகையிலே கொண்டுவாருங்கள் என்று சொல்லி அமைகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் கொண்டுவந்திருக்கின்ற மசோதாவை வரவேற்று சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இந்த நாட்டிலே ஒழுக்கக் கேடுகளை அகற்றுவதற்காக ஆபாச நடனங்கள் போன்றவை அனுமதிக்கப்பெற்று நடப்பதை தடுக்கவேண்டுமென்றும் அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டுமென்றும் நல்ல நோக்கத்தோடு இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். நாட்டிலே இருக்கின்ற தீய சக்திகளில் இதுவும் ஒன்று என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அதைப்போல் பல வேறு தீய சக்திகள் இருக்கின்றன. இளைஞர்களைக் கெடுக்கின்ற, சமுதாயத்திலே மக்களைக் கெடுக்கின்ற தீயசக்திகள் சினிமாவிலே இருக்கின்றன. அம்மாதிரியானவை பொருட்காட்சிகளிலேயும் இருக்கின்றன. பொருட்காட்சிகளிலே இருக்கின்ற நடனங்களை ஒழிக்க சட்டம் கொண்டு வரப்படுவதைபோன்று, சினிமாவிலே அப்படிப்பட்டவை ஒழிக்கப்பட வேண்டும்.

(முற்பகல் 11-30)

அதை ஒழித்தால்தான் இளம் தலைமுறையினர் நல்லமுறையில் வாழவும், நாடு சீரடையவும் வழியாக இருக்கும் என்பதை இந்த அரசு உணர வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு கொண்டு வர வேண்டும்; அப்படிக் கொண்டு வந்தால் இந்த அரசை நாடே பாராட்டும் என்று கூறி இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவில் ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், இது திரைப்படத் துறைக்குப் பொருந்தாது. 1955 ஆக்ட், சினிமா ரெகுலேஷன் ஆக்ட்படி இது பொருந்தாது என்று





சொல்லப்படுகிறது, ஆகவே அது இதில் வராது. ஆபாச நடனங்களை ஒழிப்பதைப்பற்றிச் சொல்லப்படுகிறது; அவைகளை ஒழிப்பதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் இன்றைக்குப் பார்த்தால் இதில் ஆபாச நடனம் என்ற வார்த்தையையும் சொல்லி, மேலும் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசனில்,

?" for ecective enforcement of the licences granted under Section 34 of the Act "

என்று இருக்கிறது, அதாவது செக்ஷன் 34 ஆப் தி ஆக்டில் என்னென்ன லைசன்ஸ் கொடுக்கப்படுகிறதோ அதுவும் இந்தச் சட்டத்தில் கொண்டு வரப்படுகிறது. செக்ஷன் 34 ஆப் தி ஆக்டில் என்னென்ன வருகிறது என்றால்

" no enclosed place or building having an area of 500 sq.feet or upwards shall be used for public entertainment or resort without a licence from the Commissioner "

500 சதுர அடியில் எந்த என்குளோஷர் இருந்தாலும், அது ஆபாச நடனம் மட்டுமல்ல, பொதுமக்கள் கூடக்கூடிய பொதுக் கூட்டங்கள் போட்டாலும், அரசியல் கூட்டமாக இருந்தாலும் என்குளோஷரில் போடக்கூடியவை இதில் வந்துவிடும். எஃபக்டிவ் இம்ப்ளிமெண்டேஷன் என்ற முறையில் உள்ளது. எமர்ஜென்சி நேரத்தில் இப்படி வந்தது, பெரியார் திடலிலே கூட்டம் போட்டாலும் அதையும் போலீஸ் கமிஷனர் இந்தச் சட்டத்தில் தடுத்தார்கள். எனவே, அதுவும் இதிலே வராது என்று சொல்லவில்லை. அப்சீன் டான்சஸ், எக்சிபிஷன் என்று மட்டுமாவது போட்டிருக்க வேண்டும்.

**THE HON. THIRU K. NARAYANASWAMY:** I will answer mediately I request the hon. Member to concentrate on the phrase 'for public entertainment'. It is not for public meetings.

**திரு. க. சுப்பு:** பப்ளிக் ரிசார்ட் என்றால் அதுவும் வருகிறது. பப்ளிக் என்டர்டெயின்மெண்ட் அல்லது ரிசார்ட் என்று இரண்டும் வருகிறது.

—public resorting to a particular place for any other purpose.
அப்சீன் டான்சஸ் மட்டும்தான் என்று சொன்னால் ஒத்துக்கொள்கிறேன்

லைசென்லை வயலேட் செய்கின்றபொழுது கமிஷனர், லைசென்லை சஸ்பெண்டு செய்யலாம் என்று இருக்கிறது. எந்தக் காரணமும் காட்டாமல் செய்யலாம் என்று இருக்கிறது. எந்தக் காரணமும் காட்டாமல் அவரே காரணத்தை எழுதிக்கொள்ளலாம். " Reasons to be recorded " என்றால்

without showing any cause, without assigning any reason, he can cancel the licence and forfeit the depostt,

டெபாசிட்டைப் பொறுத்தவரையில், அமவுண்ட், டிஸ்கிரிஷனுக்கு விடப்பட்டிருக்கிறது. இது ஆப்சீன் டான்சுக்கு மட்டுமா என்பதை அமைச்சரவர்கள் இப்பொழுதாவது சொல்ல வேண்டும். மற்றப் பொதுக்கூட்டங்களுக்கு, அரசியல் கூட்டங்களுக்கு இது அப்ளை ஆகாது என்றால் அதைச் சொல்ல வேண்டும். ஏனென்றால், செக்ஷன் 34 ஆப் தி ஆக்ட் என்று வருகிறது.

அதிகாரத்தை நாம் கமிஷனரிடத்தில் கொடுத்திருக்கிறோம். ஏற்கனவே அவருக்கு இருந்த ஜுடிஷியல் பவரை எடுத்தாகிவிட்டது. அதற்குப் பின்னணி உண்டு. அதையெல்லாம் சொல்ல இப்பொழுது நான் விரும்பவில்லை. அவர் கையிலிருந்து அதிகாரத்தை ஏன் எடுக்க வேண்டும், ஏன் இப்பொழுது கொடுக்கப்படுகிறது? அவர் ஒரு இன்டிபென்டெண்ட் அதாரிட்டி அல்ல. அது பொலிடிகல் அப்பாயிண்ட்மெண்ட் ஆகிவிட்டது. அது கோர்ட்டு வரைக்கும் போயாகிவிட்டது, ஓவர் லுக் செய்து விட்டார்கள் என்று டி.ஐ.ஜி. கோர்ட்டுக்குப் போய் ஆகிவிட்டது, ஐ.ஜி. ரிசைன் செய்து விட்டார். எனவே, இப்பொழுது தமிழகத்திலே இருக்கின்ற பின்னணியைப் பார்க்க வேண்டும்.

—More or less political appointment. Commissioner's appointment is a political appointment. It has been established.

அவருக்கு இப்படிப்பட்ட ஒரு அதிகாரத்தைக் கொடுப்பது என்றால் கமிஷனர்,

unrestricted powers of demanding any deposit of any amount

கவர்ன்மெண்டுக்கு மீறி எந்தக் கமிஷனரும் நடக்க முடியாது. இந்த நிலையில்

Commissioner will have to act according to the direction of the Government

இருந்தால் அடிப்படை உரிமை பாதிக்கப்படும்.

It is against the concept of fundamental rights.

இது ஏதோ உள்நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறதோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. இந்த draconian law வை விட மோசமானது. எனவே, இதைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Speaker, Sir, I am bound to express my greatful thanks to most of the speakers who have generally welcomed this measure, particularly the object of this measure in curbing the evil of obscenity which is so frequently seen and shown in exhibitions. I think, barring



one speaker, the hon. Member Thiru Suppu, I take it for granted that all the other hon. Members have welcomed this measure. In fact some of the hon. Members who are wedded to a life of simplicity and austerity probably and who see this evil in all its glaring features, have even recommended the imposition of six month's rigorous imprisonment for those who offend the conditions of the licence by resorting to the exhibition of these unseemly, pruriout, exciting sights inside the exhibition.

There is one assumption made by the hon. Member Thiru Suppu that the Commissioner can demand any type of deposit any amount of deposit with him by any applicant for licence. I want to emphasize these words 'such sum, as may be prescribed'. It means that it is bound to be prescribed under the Act, because the Act contains, what is called the Rule-making power. It is not as though the Commissioner has got power to say, when 'X' comes, "you pay Rs. 1 lakh as security'; when 'B' comes, 'you pay 1½ lakhs; and when C comes, 'you pay only Rs. 10,000' such a discretion will not be vested in any Commissioner, whatever. Therefore, there is the safeguard as may be prescribed'. So, any criticism on the basis of that assumption is totally misplaced.

So far as obscenity is concerned, there is bound to be some amount of what may be called, sober judgment that is to be exercised by the Commissioner What may be obscene to one, may not be obscene to another. But there are certain cases where obscenity is so patent, so apparent, that it is not at all in dispute. There are certain cases where they are not obscene. There is, what is called, a ground of, may I say, twilight area, where opinions may differ. But such cases are bound to be very very rare. And when such cases come, perhaps the man who contends that it is not obscene may have his other remedies. That is a different matter. But, by and large, any Commissioner will take action in cases where there has been obscene exhibition, undoubtedly on all hands acknowledged to be so true and so patent and apparent.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

There was another criticism by the hon. Member Thiru Suppu about this security deposit. I would like to bring this to his notice. I think the previous Chief Minister was agreeable to amend both these Acts—Madras City Police Act of 1888 and Tamil Nadu Places of Public Resort Act of 1888.

(Thiru K. Narayanaswamy) [1979 நவம்பர் 2

(முற்பகல் 11-40)

It was suggested then that the following amount may be collected:

| | | |
|---|---|---|
| Madras Corporation<br>Madurai Corporation | .. | Rs. 10,000 as security deposit. |
| Special Grade Municipalities | .. | Rs. 8,000 ,, |
| Selection Grade Municipalities | .. | Rs. 6,000 ,, |
| 1st Grade Municipalities | .. | Rs. 5,000 ,, |
| 2nd Grade Municipalities | .. | Rs. 4,000 ,, |
| 3rd Grade Muncipalities | .. | Rs. 3,000 ,, |
| Town Panchayats and Village Panchayat..s | | Rs. 2,500 ,, |

When it was about to be legislated, but by reason of the imposition of the Presidential rule, this legislation was not undertaken at that time.

I must express my greatful thanks to Thiru Kothandaraman, the Marxist Member of this House, for his may I say, reformist zeal, for his healthy dislike for this obscenity. I am really grateful to you, Sir, for this Member for expressing a desire for bringing in suitable legislation for imposing even six months rigorous imprisonment for those who violate the conditions in such a manner or to persons who resort to exhibitionism of obscenity in places of entertainments. And that was the same note that was sounded by the hon. Member Thiru Latheef and few other Members. It would be an invidious distinction for me to go on mentioning the names. But I am grateful to all the hon. Members for their wholesome agreement on the principle and approach that has been embodied in this piece of legislation. I am really grateful to the support given to me so encouragingly, so unfinchingly and so generously for the measure that is now before this House.

**திரு. துரை முருகன் :** தலைவரவர்களே, "சச் சம்" என்பது எவ்வளவு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டெபினிஷன் கொடுக்காமல் விட்டு விட்டார்கள்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I think I have made myself very clear. Thiru Durai Murugan is a lawyer of some note and repute. I hope he will remember the provision made in this



1979 நவம்பர் 2] [Thiru K. Narayanaswamy]

Bill. I shall read the provision: "The Commissioner may, at the time of grant of a licence under sub-section (1) or at any time during the currency of any such licence, require any person, other than a local authority, applying for such licence or the holder of such licence, as the case may be, to deposit with the Commissioner in cash or in Government promissory notes such sum, as may be prescribed — that may be prescribed under the rule making powers of the Act — as security for the due observance of the conditions of the licence." It will not be varying from man to man.

THIRU S. J. SADIQ PASHA : The hon. Member, Thiru Suppu raised a point in regard to the powers given to the Commissioner of Police to cancel licence, even without giving an opportunity to explain. This is against natural justice and law. I hope the Hon. Minister will explain the position.

THE HON. THIRU K. NARAYANASWAMY: That is the law that has been thought of. Any Commissioner is bound — I suppose — to hear the representations of the affected party. But the issue of Show Cause Notice shall not be legally binding on the Commissioner.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, ஒரே ஒரு விளக்கம் தேவை. "அப்ஸீனிட்டி" யைத் தடுப்பதைப் பற்றி யாருக்கும் ஆட்சேபம் இல்லையென்று சொன்னார்கள். "எக்ஸிபிஷன்" "அப்ஸீனிட்டி" என்பவற்றிற்கு மாத்திரமே இது வரும் "அவுட் பப்ளிக் ரிசார்ட்" என்ற பெயரிலே பொதுக் கூட்டங்களுக்கு இது பொருந்தாது என்ற ஒரு உறுதி மொழி "அஷ்யூரன்ஸ்" வேண்டும். பொதுக் கூட்டங்களுக்கு இச்சட்டத்திலிருந்து விலக்களிக்க வேண்டும்.

It should not be taken for granted for each and everything.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிற நோக்கம் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். பொருட்காட்சிகளில் மட்டும் தான் இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு தடைப்படுத்த வேண்டும். மற்ற இடங்களில் பொது மக்கள் பார்க்கலாமென்று கோரிக்கையை யாரும் சொல்ல மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். தவறுகள் எங்கே நடந்தாலும் தடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் வேண்டும்.

**திரு. க. சுப்பு :** செக்ஷன் 34-ல் இருக்கக் கூடியது எந்த லைசென்ஸாக இருந்தாலும், அதை எபெக்டிவ் ஆக என்போர்ஸ் செய்ய இந்தச் சட்ட திருத்தம் அப்ளை ஆகுமென்று சொல்லி இருக்கிறார்கள். 500 சதுர அடிக்கு உட்பட்ட இடத்தில் நடைபெறும் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று சொல்லி இருக்கிறார்கள்.

வெறும், எக்ஸிபிஷன், அப்ஸீனிட்டி டான்ஸ் இவற்றைத் தடுப்பதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. பப்ளிக் ரிசார்ட் பூராவுக்கும் இது அப்ளை பண்ணுவது எப்படிச் சரியாகும். நாங்கள் எதிர்க் கட்சிக்காரர்கள் ஒரு மியூசிக் போடுகிறோம். பார்ட்டி நடத்துகிறோம். அப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு இதை அப்ளை ஆகாது என்று அஷ்யூரன்ஸ் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மிகப் பொறுப்பு வாய்ந்தவர்கள்; விவரம் தெரிந்தவர்கள். ஆகவே இப்படிப்பட்டவைகளை அவர்கள் பொதுக்கூட்ட மேடைகளில் அனுமதிக்க மாட்டார்களென்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி, “1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, I move that—

'The Madras City Police (Second Amendment) Bill, 1979 (L.A. Bill No. 51 of 1979) be passed.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.



## (ஊ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாது காத்தல்) (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே,

“1979 ஆம் ஆண்டு தமிழ் நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.”

என்று மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகிறது.

**திரு. கோ. இளங்கோவன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவினை மன்ற உறுப்பினர்கள் யாரும் எதிர்க்க மாட்டார்கள். எதிர்க்க மாட்டார்கள் என்ற காரணத்தாலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் மனநிறைவு பெறுகிறார்கள், மன மகிழ்ச்சிகொள்கிறார்கள் என்று எண்ணிக்கொள்ளக் கூடாது. சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் இதே போன்று ஒரு திருத்தச் சட்டமுன்வடிவு இங்கே நிறைவேற்றப்பட்டது. அதிலே மன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லியிருப்பார்கள். இப்போது கூட, இதிலே கருத்துக்களைச் சற்று கூட்டியும், குறைத்தும் சொல்லவேண்டிய அளவிற்கு உறுப்பினர்கள் ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், ஏழை குத்தகைதாரர்களின் அவல நிலை இன்னும் அப்படியே இருக்கிறது என்றுதான் தெரிகிறது. எனவே, குத்தகைதாரர்களின் நித்தம் நித்தம் செத்து, பிழைத்துக்கொண்டு இருக்கும் நிலைமையை மாற்ற நிரந்தர பரிகாரம் காண அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உழவனுக்கு நிலம் என்ற கோஷம் பேரறிஞர் அண்ணா காலத்திலேயே எழுப்பப்பட்ட கோஷம். எனவே, அதனை நிறைவேற்றுவதற்கு அரசு முன் வரவேண்டும். அப்படி முன்வருகிற நேரத்தில், நில உடைமையாளர்கள் கூட மகிழ்ச்சி அடைவார்கள் என்று நான் இந்த நேரத்தில் என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* 1979, அக்டோபர் 29 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. கோ. இளங்கோவன்] [1979 நவம்பர் 2

அதற்குக் காரணம், நில உடைமையாளர்களுக்கும், குத்தகைதாரர் களுக்கும் இடையே இருக்கும் சச்சரவு நாளுக்கு நாள் நீடித்துக்கொண்டு இருப்பதை விட்டு, ஒரு முடிவினைப் பெறுவது நல்லது என்பது தான்.

சென்ற ஆண்டு கூட ஒரு உறுப்பினர் கருத்து தெரிவிக்கிறபோது, நில உடைமையாளர்களில் ஏழை விதவைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதேனும் பரிகாரத்தை இந்த அரசு காண வேண்டாமா என்று கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலை மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஒப்புதலோடு இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 'ஏழை விதவைகளைப் பற்றி அரசு யோசித்து வருகிறது' என்ற பதிலை குறிப்பிட்டார்கள். அது பற்றி அரசு யோசித்து வருகிறது' என்ற பதிலை அமைச்சர் அவர்கள் தந்தார்கள்.

அவர் சொல்லி ஏறத்தாழ ஓராண்டு காலத்திற்குமேலாகிறது. எனவே, அரசு எத்தனை ஆண்டுகாலம் யோசித்துக்கொண்டு இருக்கும், எப்போது நல்லதொரு முடிவுக்கு வரும் என்று தெரியவில்லை. அது மட்டுமல்ல, சென்ற ஆண்டு பேசிய மன்ற உறுப்பினர்கள் கூட ஒரு கருத்தைத் தெரி வித்து இருக்கிறார்கள்.

கோயில் நிலத்திற்கு, மடங்களுக்குச் சொந்தமாக உள்ள நிலங்களுக்கு இந்தச் சட்டத்தில் இருந்து விதிவிலக்கு உண்டா இல்லையா என்பது தெளி வாக்கப்படவேண்டும். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று பெரியவர்கள் சொல்லிவிட்டுச் சென்றதால், எல்லா இடங்களிலும் கோவில் இருக்கிறது. குறிப்பாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஊர்தோறும் கோவில் இருக்கிறது. பெரிய பெரிய ஆலயங்கள் இருக்கின்றன. நம்முடைய பெரியவர்கள் எங்கே நம்முடைய பேரப்பிள்ளைகள் இந்தச் சொத்துக்களை அழித்து விடுமோ என்று கருதி, அவர்கள் தங்கள் சொத்துக் களை எல்லாம் கோயில்களுக்கு எழுதிவைத்து விட்டுப்போய்விட்டார்கள்.

அந்த நிலங்களிலே பல்வேறு விவசாயத் தொழிலாளிகள், விவசாயிகள் பயிர் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு இந்தச் சட்டத்தில் இருந்து விதிவிலக்கு என்றால், நிச்சயமாக அவர்கள் பாதிக்கப்படுவார்கள். சென்ற ஆண்டு பாதிக்கப்பட்டார்கள், அதற்கு முதல் ஆண்டு பாதிக்கப்பட்டார்கள். இந்த் ஆண்டு பாதிக்கப்படுகிறார்கள். இந்த நேரத்தில் ஏதோ ஒரு 6 மாத காலத்திற்கு நிலத்தை விட்டு வெளியேற்றாமல் இருக்கிற வகையில் வழிவகை களைச் செய்கிறோம் என்றால், அது அவர்களுக்குச் செய்கிற உதவியா என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.



1979 நவம்பர் 2] [திரு. கோ. இளங்கோவன்]

தமிழ்நாடு விவசாயிகள், குறிப்பாக குத்தகைதாரர்கள் இன்று கூட்டுறவுக் கடனை தள்ளுபடி செய்யவேண்டும், அல்லது வட்டியைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று நாள்தோறும் குரல் கொடுத்துக் கொண்டு இருக் கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் கூட 8-ம் தேதி அவர்கள் மாநாடு கூட்ட இருக்கிறார்கள் என்று தெரிகிறது. எனவே இதைக் கருத்தில் கொண்டு, ஏதேனும் ஒரு நிரந்தர நிவாரணத்தை அளிக்கிற வகையில் சட்டத்தை இந்த மன்றத்தில் நிறைவேற்றினால், நல்லது, அத்தகைய சூழ்நிலை உருவாக்கப் படவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் பேச்சை முடித்துக்கொள் கிறேன். வணக்கம். நன்றி.

**திரு. பொ. உத்திராபதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நமது வரு வாய்த் துறை அமைச்சர் அவர்கள் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவ தனின்றும் பாதுகாக்கவேண்டும் என்ற அடிப்படையில் ஒரு மசோதாவை இங்கே கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்த மசோதாவின் பேரில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழகத்தில் 1976-ம் ஆண்டு ஆளுநர் அவர்கள் குத்தகைதாரர்களைப் பாதுகாத்தல் என்ற பெயரால் ஒரு சட்டம் கொண்டு வந்து ஒத்தி வைத்தார்கள். அதிலிருந்து இந்த 4 ஆண்டுகாலமாக குறிப்பாக இந்த ஆட்சி வந்த காலத்தில் இருந்து 6 மாதம், 6 மாதம் என்று ஒத்தி வைத்து வருகிறார்கள். இப்போது வரு கின்ற இந்தச் சட்டம் 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ந் தேதிவரையில்

(முற்பகல் 11-50)

குத்தகைப் பாக்கியை ஒத்திவைக்கிறது. நாடாளுமன்றத் தேர்தல் 3-ந் தேதியும், 6-ந் தேதியும் தமிழ்நாட்டில் நடக்கப்போகிறது. இப்படி தேர்த லுக்குத் தேர்தல் ஒத்தி வைப்பது என்பது விவசாயிகளுக்கு மேலும் மேலும் பளுவை சுமத்துகிறது. விவசாயிகள் என்று சொல்லும்போது, இலட்சக் கணக்கான வழக்குகள் இன்றைக்கு கோர்ட்டில் தயாராக இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் கூட ரெவின்யூ கோர்ட் எல்லாம் திறந்து, மீண்டும் வழக்கு வரக்கூடிய அபாயம் இருக்கிறது.

இன்றைக்கு குத்தகை விவசாயிகள் குத்தகையை அளிக்க வேண்டும், கூட்டுறவுக் கடனை கட்ட வேண்டும்; இல்லை என்றால் ஜப்தி என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இது வருவாய்த் துறை அமைச்சருக்கும் தெரியும். இந்த நிலைமைகளை எல்லாம் பார்த்துவிட்டுத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1384-ம் பசலியில், ஒரு ஆண்டு குத்தகைப் பாக்கியை கட்டி

[திரு. பொ. உத்திராபதி] [1979 நவம்பர் 2

விட்டால் அதற்கு முந்திய குத்தகைப் பாக்கி முழுவதும் தள்ளுபடி என்று சொன்னார்கள். அந்தச் சட்டம் வந்ததனால் 81, 82, 83 ஆகிய 3 ஆண்டு குத்தகைப் பாக்கி தள்ளுபடி செய்யப்பட்டு, விவசாயிகள் பலன் அடைந்தார்கள். ஆனால், அதைவிட முற்போக்கான ஆட்சி, புரட்சிகரமான ஆட்சி என்று சொல்லக்கூடிய இந்த ஆட்சி—அவர்கள் ஓராண்டு என்று சொன்னார்கள், அதைக்கூட சொல்லாமல்—விவசாயிகளைப் பாதிக்கின்ற குத்தகைப் பாக்கி முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உண்மையிலேயே குத்தகை விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு அந்த நிலங்களை எல்லாம் சொந்தமாக்க வேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த மசோதா குத்தகைதாரர்களை குத்தகைப் பாக்கிக்காக வெளியேற்றக் கூடாது என்ற முறையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தமாதிரி அடிக்கடி, வருஷாவருஷம், எப்போதும் செய்துகொண்டிருக்கிறோம். இதற்கு எப்போதுதான் முடிவு என்று தெரியவில்லை. ஒன்று குத்தகை உண்டு என்று சொல்ல வேண்டும்; இல்லை என்றால் குத்தகை இல்லை என்று சொல்லிவிட வேண்டும். இந்தச் சட்டத்தின் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்சில்

"Till permanent rent relief measures to the cultivating tenants are worked out in regard to the payment of the arrears of rent."

என்று இருக்கிறது. இதை எத்தனை நாளைக்கு எழுதி, எழுதி கணக்கும் போட்டுக் கொண்டிருக்கப் போகிறீர்கள் என்று தெரியவில்லை.

நிலச் சொந்தக்காரர் ஒருவர் இருக்கிறார்; குத்தகைதாரர் ஒருவர் இருக்கிறார். இந்த நிலச் சொந்தக்காரர், குத்தகைதாரர் என்பதை எடுத்துவிடுங்கள். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முற்போக்கான கொள்கையை அமல் செய்யுங்கள். அப்படிச் செய்து விட்டால்கூட பாவாயில்லை. குத்தகைதாரர்களுக்கே நிலத்தைச் சொந்தமாக்கிவிடுங்கள். இல்லை என்றால் குத்தகையை கொடு என்று சொல்லுங்கள்; அல்லது கொடுக்க வேண்டாம் என்று சொல்லுங்கள். இரண்டுங்கெட்டான் நிலை நீடிக்க வேண்டாம். பாக்கியை தள்ளிக்கொண்டே போனால், விவசாயிகளால் பின்னால் மொத்தமாகக் கொடுக்க முடியாது. ஆண்டுதோறும் வரக் கூடிய வருமானத்தை வைத்துக்கொண்டு, அந்த வருஷத்திற்கு குத்தகை கட்ட முடியாமல், வாழ்க்கை நடத்த முடியாமல் கஷ்டப்படும்போது முன் பாக்கியை எப்படி செலுத்தப்போகிறார்கள்? இந்தச் சாக்கை வைத்து, நிலத்தைவிட்டு வெளியேற்றிவிடுவார்கள்.



1979 நவம்பர் 2] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

குத்தகைப் பாக்கியைத் தள்ளி வைத்துக்கொண்டே போவதினால் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கிற நிலச் சொந்தக்காரர்களும் குத்தகைப் பாக்கி வராமல் திண்டாடுகிறார்கள்; குத்தகைதாரர்களும் குத்தகை செலுத்த முடியாமல் திண்டாடுகிறார்கள். இப்படி நிலச் சொந்தக்காரர்களும், குத்தகைதாரர்களும் திண்டாடுகிற வேலை எல்லாம் வேண்டாம். குத்தகை வரும், வரும் என்று நிலச் சொந்தக்காரர்கள் எதிர்பார்த்து, கஷ்டப்படுகிறார்கள். குத்தகை செலுத்த முடியாமல் குத்தகைதாரர்கள் கஷ்டப்படுகிறார்கள். குத்தகை நிலத்தை குத்தகைதாரர்களுக்கு சொந்தமாக்கிவிடுங்கள் சொந்தமாக்கிவிட்டு, நிலச் சொந்தக்காரர்களுக்கு 'காம்பன்சேஷன்' கொடுத்துவிட்டால், அவர்கள் ஏதாவது மாற்று ஏற்பாடு செய்து கொள்வார்கள்.

இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை நீடித்துக்கொண்டிருக்கக் கூடாது. நிலச் சொந்தக்காரர்கள், குத்தகைதாரர்கள் என்ற பிரச்சனைக்கு ஒரு முடிவு கட்டிவிடுங்கள். அதற்கான நடவடிக்கைகளை சீக்கிரம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். அண்ணாமலை:** தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல் இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவின் மீது, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். 1980 ஜனவரி 15 ஆம் தேதி வரை நீடிக்கப்படும், இந்த சட்ட முன்வடிவு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று என்றாலும், இன்றைக்கு பெரும் அளவுக்கு குத்தகை சாகுபடி விவசாயிகள் பதிவு செய்யப்படவில்லை என்பது தான் எங்களுடைய கருத்து.

அதற்கு காரணம், ஒன்று பெரும்பாலான பகுதிகளில் இருக்கும் குத்தகை விவசாயிகள் பதிவு செய்ய மனு கொடுத்தாலும், அந்த மனுக்கள் வருடக்கணக்கில் அப்படியே விசாரணைக்கு எடுக்கப்படாமல் காலம் கடத்தி அலைக்கழித்து பதிவு செய்யப்படாமல் இருக்கின்றன. அதனால் மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. ஓரளவு விழிப்புணர்ச்சி உள்ள இடத்திலும் இந்நிலை. சங்கம், ஸ்தாபனங்கள் அற்ற பல பகுதிகளில் நிலச் சொந்தக்காரர்கள், அந்த விவசாயிகளை பல்வேறு வகையில் அச்சுறுத்தி, பயமுறுத்தி வைத்திருக்கிறார்கள். நிலச்சுவான்தாரர்களின் விருப்பத்திற்கு அதிகாரிகளும், குறிப்பாக சில

ரெவின்யூ அதிகாரிகள், ஒத்துழைக்கும் விதத்தில் அந்த நிலச் சொந்தக்காரர்கள் போடும் பல்வேறு பொய் வழக்குகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுக்கடித்தும் இதர தொல்லைகளுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிற விவசாயிகள் பயமுற்று பதிவு செய்து கொள்வதில்லை.

இந்த நிலையோடு, ஏற்கெனவே கடந்த காலங்களில் ஒவ்வொரு தாலுக்காவிலும் ஸ்பெஷல் தாசில்தார் என்று போட்டு பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது கைவிடப்பட்டு தற்போது தாசில்தாரே பதிவு செய்யும் வேலை உள்ளதால் ரெவின்யூ வேலைகளே அதிகமாக உள்ள நிலையும் பதிவு வேலைக்கு தடையாகும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, ஸ்பெஷல் தாசில்தாரைப் போட்டு, தாலுக்காவாரியாக எல்லா குத்தகைவார விவசாயிகளும் முழுமையாகப் பதிவு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதோடு பதிவு செய்யும் பொறுப்பை தற்போது விவசாயிகளே நிரூபிக்க வேண்டுமென்பதை கைவிட்டு குத்தகை வார உரிமையை நிரூபிக்கும் பொறுப்பை நிலச் சொந்தக்காரர்களிடம் விட வேண்டும். இல்லாவிட்டால் எத்தனை ஆண்டுகள் பதிவு செய்தாலும் முழுமையாக பதிவுக்குக் கொண்டு வருவது சாத்தியம் அல்ல; குறிக்கோளை அடையவும் முடியாது, அதனால் விவசாயிகள் பதிவு செய்து கொள்ளவேண்டிய நிலச் சொந்தக்காரர்களுக்கு மாற்றவேண்டும் என்று கோரி, பரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன் வடிவை எல்லா உறுப்பினர்களும் வரவேற்று இருக்கிறார்கள் என்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். வரவேற்கிற போது, குத்தகைதாரர்களை வெளியே அனுப்பக்கூடாது என்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை. எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். வெளியே அனுப்பாமல் தள்ளிக்கொண்டே போனால் அவர்களுக்கு குத்தகை அதிகமாகிக் கொண்டே இருக்கும் என்று ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி குத்தகை தொகை அதிகமாகிக் கொண்டே போகாது. பழைய பசலிக்குத்தான் வசூல் செய்யக் கூடாது என்று போட்டிருக்கிறோம். இந்த ஆண்டும், இதற்கு முந்தைய ஆண்டுக்குமான பசலிக்கெல்லாம் இருக்கக்கூடிய குத்தகைத் தொகையை கொடுக்க வேண்டும், வசூல் செய்து கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் திரு. அண்ணாமலை அவர்கள் சொல்கிறபோது விவசாயிகள் சரியாக பதிவு செய்துக் கொள்ளப்படுவதில்லை என்று சொன்னார்கள். விவசாயிகள் சரியாக பதிவு செய்து கொள்ளப்பட வேண்டும் என்பதிலே, எல்லோருக்கும் எந்த அளவுக்கு அக்கறை இருக்கிறதோ அதைவிடக் குறைவாக இந்த அரசுக்கு இல்லை என்பதை மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். எந்தெந்த இடங்களில் யார் யார் குத்தகை பதிவு செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பல்வேறு நேரங்களில் இந்த அவையிலும் சொல்லியிருக்கிறேன், வெளியிலும் சொல்லியிருக்கிறேன். அது மட்டுமல்ல, இன்னொரு விஷயத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன், நானாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த அமைச்சராக இருந்தாலும் சரி, மாவட்டங்களுக்கு வரும்போது, இன்னின்னாருக்கு குத்தகை பதிவு செய்யப்படவில்லை, வருவாய்த் துறை அதிகாரிகள் பதிவு செய்வதில் ஒத்துழைக்கவில்லை என்று சொன்னால், உடனடியாக அதே இடத்தில் கேட்டு அதற்கான வழி வகைகளை செய்யத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அதுமட்டுமல்ல, பலயிடங்களிலுள்ள தனி வருவாய் வட்ட அதிகாரிகளை எல்லாம் எடுத்து விட்டாகிவிட்டது என்று சொன்னார்கள். அப்படியல்ல, குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் ஒரு குறிப்பிட்ட நிலங்கள். குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் வளர்ந்து கொண்டே போகாது. ஆனால் இந்த சர்க்காரும் சரி அல்லது இதற்கு முன்னால் இருந்த சர்க்காரும் சரி தனி வருவாய் அதிகாரிகளைப் போட்டு வைத்திருக்கிறார்கள். எங்கே அதிகமாக விடுபட்டிருக்கிறதோ, எங்கே குத்தகை மனுக்கள் அதிகமாக வந்திருக்கிறதோ அங்கு மட்டும் தனி வருவாய் வட்ட அதிகாரிகள் இருக்கிறார்கள். எங்கே மனுக்கள் வரவில்லையோ அங்கே நீக்கப்பட்டிருக்கிறது. நீக்கப்பட்டிருக்கிறது என்றால் நிரந்தரமாக நீக்கப்படவில்லை. உறுப்பினர்கள் இந்தந்த வட்டங்களில் நிறைய பேர்கள் இருக்கிறார்கள் குத்தகை பதிவு செய்யவேண்டும் என்று மனுக்கள் கொடுத்தால் உடனடியாக—இதற்காக இங்கே கூட வரவேண்டியதில்லை—தனி அதிகாரிகள் போட்டு பரிசீலனை செய்ய தயாராயிருக்கிறோம். ஆக, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1979 நவம்பர் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :—

"1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 47/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, தெரிந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே,

"1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1979) நிறைவேற்றப் பெறவேண்டும்."

என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**(எ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு 1979.**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 46/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்." என்று மொழிகிறேன்.

---

*1979 அக்டோபர் 27ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது



1979 நவம்பர் 2]

**திரு. கே. உச்சி:** தலைவர் அவர்களே, இந்த புயல், வெள்ள நிவாரணம் பற்றிய சட்ட முன்வடிவுபற்றி என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். புயலாலும், வெள்ளத்தாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குத்தகைக்காரர்களுக்கு ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் அளவிற்கு நிவாரணம் அளிக்கப்பட்டது. ஆனால் கடுமையாக பாதிக்கப்பட்ட நீலகிரி போன்ற பகுதிகளில் இந்த குத்தகைக்குப் பயிரிடுவோருக்கு ஆயிரம் ரூபாய் நாளதுவரை கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் நீலகிரியைப் பொறுத்து பரவலாக உள்ளன. ஆகவே தயவுசெய்து அந்தக் குத்தகைக்காரர்களுக்கு இந்த நிவாரணம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் மந்தாடா போன்ற பகுதிகள் பல கடுமையாகப் பாதிக்கப்பட்டு உயிர்ச்சேதம் கூட ஏற்பட்டு, தற்காலிக நிவாரணம் கொடுத்தும் எந்தவிதப் பயனும் இல்லை. ஆகவே அந்தப் பகுதிகளில் 2½ ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை உள்ள நிலச்சொந்தக்காரர்களுக்கு முழுமையாக கடன்களைரத்து செய்ய வேண்டும் அல்லது அவற்றை நீண்டகாலக்கடனாகக் கொடுக்க அனுமதிக்கவேண்டும். ஆயிரம் ரூபாய் ஒரு சிலருக்குக் கொடுத்திருக்கிறார்கள், பல பேர்களுக்கு கிடைக்கவில்லை ஆறுமாதங்களாகியும். ஆகவே நிவாரணம் எல்லோருக்கும் முறைப்படி கிடைக்க வழிவகை காண வேண்டும். ஆயிரம் ரூபாய் கிடைக்காதவர்கள் பற்றிய குறிப்புகளை எடுத்து அவர்களுக்கு உடனடியாகக் கிடைக்க வழிவகைசெய்ய வேண்டும். விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கூட கொடுக்கலாம் என்று சொன்னாலும் அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அரசு அனுமதிக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அரசு இதில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பாதுகாப்பு. வெள்ளமும் புயலும் வந்து போய்விட்டது, ஒன்றும் விளையவில்லை, எல்லாம் அழிந்து போய் விட்டது. அழிந்து போனதற்கு பாதுகாப்பு என்ன வேண்டியிருக்கிறது, என்ன கணக்கு வேண்டியிருக்கிறது ஒரேயடியாக ரைட் ஆப் செய்ய வேண்டும். விளைந்தது, கொடுக்க முடியவில்லை அல்லது சாப்பிட்டு விட்டான் என்று சொன்னால், அல்லது கொடுக்க சக்தியில்லை என்றால் கணக்கெடுக்கலாம், தள்ளி வைக்கலாம். இதில் தள்ளி வைக்க என்ன இருக்கிறது. சரியாக விளையவில்லை என்றால் நில வரி ரத்து செய்கிறோம். ஆனால் இதில் தள்ளி வைப்பதற்கு என்ன இருக்கிறது? இதை முழுமையாக தள்ளிவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். அண்ணாமலை :** தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக-நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவின் மீது மார்க்கிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின சார்பாக சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். 1980 ஆம் ஆண்டு ஜனவரி 15-ம் தேதி வரை குத்தகை பாக்கியை ஒத்திவைப்பதற்காக இச்சட்டம் கொண்டு வந்ததை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் வரவேற்கிறது. அதே நேரத்தில் இது ஒரு தற்காலிக நிவாரணமாக இனியும் நீடிக்காமல் நிரந்தர நிவாரணம் அளிக்கவேண்டும் என்பதோடு அதற்கான எதார்த்த உண்மைகளையும் இந்த சந்தர்ப்பத்தில் அரசின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த குத்தகை பாக்கி 1977 முதற் கொண்டு நான்கு ஆண்டுகளின் பாக்கிதான் பெரும்பாலும் நிலுவையாக உள்ளது. இந்த நான்காண்டுகளில் தான் இயற்கை பாதகமாக ஏற்பட்ட, தமிழ்நாட்டில் ஏற்பட்ட வறட்சி, புயல், வெள்ளச் சேதமாகும். இதன் காரணமாக குத்தகை பாக்கியை செலுத்தமுடியாத நிலைமை ஏற்பட்டது. அத்துடன் 60—40 வார அடிப்படையில் வாரம் செலுத்த முடியாமல் குத்தகை பாக்கி ஏற்பட்டது. இந்த நிலைமையை அரசும் உணருகிறது என்று நாங்கள் கருது கிறோம். எடுத்துக்காட்டாக கடந்த சட்டமன்றத் தொடரில் 75—25 வார அடிப்படையில் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதிலிருந்தும் உணரமுடியுமென்பதால் நிவாரணம் அளிக்கும் வகையில் நான்கு ஆண்டுகளாக ஏற்பட்ட நிலைமைகளையும் உணர்ந்து, 60—40 வார அடிப்படையில் ஏற்பட்ட பாக்கியையும் உணர்ந்து, அத்துடன் புயல் வெள்ளச்சேதம் இவைகளின் பாதிப்பால் ஏற்பட்ட பாக்கியாகும் என்பதையும், இவைகளிலுள்ள எதார்த்த நிலைமைகளையும் கணக்கில் கொண்டு, தற்காலிகமாக ஒத்திவைப்பதோடு நின்று விடாமல், நிரந்தரமாக இந்த நான்கு ஆண்டு குத்தகைபாக்கி செலுத்துவதை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, 1979-ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் கொடுப்பதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்களில் ஏற்பட்ட பாக்கி, நிலங்களின் மீது அளிக்கப்படவேண்டிய குத்தகை பாக்கி இவைகள் எல்லாம் பரிசீலனையில் இருப்பதாக சொல்லப் பட்டிருக்கிறது. எதை எடுத்தாலும் உடனடியாக எடுத்து பரிசீலனை செய்து அதற்கு தீர்வு காண்பது என்பது கடந்த இரண்டரை ஆண்டுகளாக இந்த அரசு எந்த பிரச்னையிலும் தீர்வு கண்டதாக தெரியவில்லை. புயல்

பிரச்னையும், வெள்ளச் சேதப் பிரச்சினையும் யாருக்கும் தெரியாத பிரச்னை அல்ல. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் நாகைப்பகுதி, திருத்துறைப்பூண்டி பகுதி, மன்னார்குடி பகுதி இந்த இடங்களுக்கெல்லாம் வராத மந்திரிகள் பாக்கியில்லை. அவ்வளவு மந்திரிகளும் வந்து பார்த்திருக்கிறார்கள். விவசாயம் என்றாலும் சரி, மின்சாரம் என்றாலும் சரி, பாக்கியை ஒத்தி வைக்கவேண்டும். ஒத்தி வைக்கவேண்டும் என்ற மசோதாக்கள் தான் இந்த சபையில் வருகிறது, இது மிகவும் வருந்தப்படவேண்டிய விஷயமாக இருக்கிறது.

ஆகவே உடனடியாக இப்படிப்பட்ட குத்தகைப் பாக்கியை எல்லாம் உடனடியாக பரிசீலனை செய்து, மேலும் தள்ளி வைக்கின்ற முயற்சிகளை மேற்கொள்ளாமல் குத்தகை விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற வகையில், குத்தகைபாக்கிகளை எல்லாம் தள்ளுபடி செய்யவேண்டும், அதற்குத் தகுந்த முறையில் அமைச்சர் அவர்கள் அறிவிப்பை அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்றிருக்கிறார்கள். அதற்காக மகிழ்ச்சி. ஆனால் இப்படி தள்ளிவைக்கக் கூடாது, இதை நிரந்தரமாக ஆக்கவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உத்திராபதி அவர்கள் பரிசீலிப்பது, பரிசீலிப்பது என்று காலங்கடத்தக்கூடாது, உடனடியாக பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆர அமர பரிசீலனை செய்து முடிவு எடுத்தால்தான் நல்ல முடிவாக இருக்கும் என்பதால்தான் இதை தீவிரமாக பரிசீலிக்கின்றோம் விரைவில் இதன் மீது நல்ல முடிவு நாம் எல்லாம் எதிர் பார்க்கின்ற நல்லதொரு முடிவு வரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உச்சிகவுடர் அவர்கள் சொல்லும்போது, இங்கே கொண்டு வந்திருப்பது, குத்தகை பாக்கியை தற்காலிகமாக தள்ளி வைப்பதற்கான சட்டம். ஆனால் அவர்கள் புயலால், வெள்ளத்தால், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்பதைச் சொன்னார்கள். அந்த நோத்தில் எல்லா இடங்களிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டது. அப்படி நிவாரணம் பெற்றவர்கள் மகிழ்ச்சியாக இருந்து கொண்டிருக்கிறார்கள் இப்போது 7, 8 மாதங்கள் கழித்து இந்தப் பிரச்சினையைப்பற்றி அங்கங்கே

இருக்கின்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் சொல்லாமல் இருந்துவிட்டு இப்போது மிகவும் கஷ்டப்பட்டு, சட்டசபை எப்போது கூடும். அப்போது ஏதாவது பில் வரும் அப்போது இதைப்பற்றியெல்லாம் சொல்லலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே உறுப்பினர் அவர்கள் இப்போது குறிப்பிட்டதற்கும் குத்தகை பாக்கியை ரத்து செய்வதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அதேபோல் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு முழுமையாக தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள் ஆனால் நான் ஒன்றைச் சொல்கிறேன். இன்றைக்கு வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்படுகிறார்கள். அங்கே இதனால் முழுமையாக பாதிக்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள், முழுமையாக பாதிக்கப்படாதவர்களும் இருக்கிறார்கள். இன்றைக்கு சட்டத்திலே என்ன இருக்கிறது என்றால், இயற்கையின் சீற்றத்தால், வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்டால், அதனால் எவ்வளவு வெள்ளாமை பாதிக்கப்பட்டது என்பதை உடனடியாகத் தெரிவித்து, எவ்வளவு கண்டுமுதல் இருக்கின்றது என்பதைப் பார்த்து, அந்த கண்டுமுதலின் விகிதாசாரத்திலே விதிக்கப்பட வேண்டும் என்கின்ற விதி முறை இருக்கின்றது. ஆனால், அந்த விதிமுறையைப் பயன்படுத்தாத காரணத்தினால், அப்பாவியாக இருக்கின்ற விவசாயிகளுக்கு, குத்தகைதாரர்களுக்கு இவைகள் எல்லாம் தெரியாமல் இருக்கின்ற காரணத்தினால், சும்மா இருந்து விடுகிறார்கள். இப்படி சும்மா இருந்துவிடுகின்ற காரணத்தினால், அரசு அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கருதி, விரைவில் இதற்கு நிரந்தரமான ஒரு முடிவுகாண அரசின் பரிசீலனையில் இருப்பதோடு மட்டுமல்ல, விரைவில் அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் 5, 6 மாதங்களாகியும் கிடைக்கவில்லை. இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களிடம் பலமுறை கேட்டும், அவர்கள் அரசு அனுமதி அளிக்கவில்லை என்று பதில் அளித்தார்களே ஒழிய, அரசிடம் கேட்டு முயற்சி செய்கிறேன் என்று சொல்லவில்லை. எனவே, இதுவரை கிடைக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3, 4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1979)" நிறைவேற்றப் பெறவேண்டும் என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## (ஏ) பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு—நியாயவாரம் செலுத்துதல் (திருத்த) சட்டமுன்வடிவு 1979.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

---

* 1978, அக்டோபர் 27 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.

[1979 நவம்பர் 2

**திரு. க. சுப்பு:** போவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், இதிலே பாதுகாப்பு கொடுக்கக்கூடிய அம்சம் ஒன்றுமில்லை. தனிப்பட்டவர்கள் நிலத்திலும் சாகுபடி செய்ய முடியும், நியாயம் வாரம் செலுத்த வேண்டும் என்ற சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நியாயமற்ற முறையிலே வெளியேற்றினால், அவர்களை பாதுகாப்பதற்கு சட்டம் இருக்கிறது. இது தனி மனிதனுக்குப் பொருந்தும் என்று சொல்லும்போது, பொதுத் துறைக்கு ஏன் இது பொருந்தக் கூடாது என்று எனக்கு புரியவில்லை. இப்போது வரவர, தனியார் துறைகளைக் காட்டிலும் பொது நிறுவனங்கள் வளர்ந்துகொண்டு வருவதைப் பார்க்கிறோம். இது பொது நிறுவனங்களுக்கு பொருந்தாது என்று சொல்வது சரியல்ல. இப்போது பொது நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் என்ற பெயரிலே பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை, உதாரணத்திற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்ற தனிப்பட்ட பல்கலைக்கழகங்கள் இதேமாதிரி ஊரையே, ஊரிலுள்ள முக்கால் பங்கு வீடுகளை சுற்றி வளைத்து வைத்திருக்கிறார்கள். இதேமாதிரி பல்கலைக்கழகம் என்ற பெயரிலே ஆயிரக்கணக்கான ஏக்கர்களை வளைத்துப் போட்டுக்கொண்டு, ஊழல்கள் செய்ய இடமிருக்கிறது. அவைகளுக்கு இந்தச் சட்டம் பொருந்ாது என்று சொன்னால் என்ன நியாயம்? தனிப்பட்டவர்களுக்கு நியாயமான வாரம் வாங்கலாம் என்று இருக்கும்போது, பொது நிறுவனங்களுக்கு வாங்குவதில் ஏன் விதிவிலக்கு அளிக்கவேண்டும்? பல்கலைக்கழகங்கள், இப்படிப்பட்ட பொது நிறுவனங்கள், சொந்தமாக அவர்கள் குத்தகை எடுத்து, இந்தமாதிரி காலி நிலங்களைப் பயிரிடலாம். விவசாயிகளுக்கு நியாய வாரம் செலுத்த வேண்டியதில்லை என்ற முறையில் ஏன் இந்தச் சட்டம் வருகின்றது? தனி மனிதனுக்கு கொடுக்கும்போது, ஏன் இந்த பொது நிறுவனங்களுக்கு கொடுக்கக் கூடாதா?

சென்னைப் பல்கலைக்கழகத்தினர், கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒரு எலக்ட்ரிக் கம்பெனிக்கு கான்ட்ராக்ட் விட்டிருக்கிறார்கள். எலக்ட்ரிக் கம்பெனிக்காரனுக்கு பில்டிங் காண்டிராக்ட் விடுகிறார்கள். அவனுக்கு பில்டிங் எக்ஸ்பீரியன்ஸ் கிடையாது. அடானமஸ் பாடி—யூனிவர்சிடி. அவர்களைக் கேட்க முடியாது. காண்டிராக்ட் வேலை தெரியாதவர்களுக்கு காண்டிராக்ட் விடுகிறார்கள்.

பல்லாயிரக்கணக்கான நிலத்தில் பாடுபடுகின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு அதைப் பொது துறையில் இருக்கக்கூடிய நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் போன்றவை கொடுக்கவேண்டியதில்லை என்று சட்டம் கொண்டு

வந்திருக்கிறார்கள். வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஏராளமான நிலத்தை வளைத்துப் போட்டிருக்கிறார்கள். சோஷலிச சமுதாயத்தைக் கொண்டு வரப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டு போதுத் துறை நிறுவனங்களுக்கு விதிவிலக்கு கொடுப்பது ரொம்ப மோசம். தலைப்பைப் பார்க்கும் போது பாதுகாப்புக் கொடுப்பது மாதிரி தெரிந்தது. ஆனால் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு என்று சொல்லுகிறார்கள். தூங்குகிறவன் தொடையில் கயிறு திரிப்பது மாதிரி இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட இந்த விதிவிலக்கு தேவையற்றது. நேச்சுரல் ஜஸ்டிசுக்கு விரோதமானது. அரசாங்க கான்செப்டுக்கு முரணானது. இது அமைச்சருக்குத் தெரியாமல் இருக்காது. இது ரொம்பப் பேரைப் பாதிக்கும், ஆகவே, இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நீதி மன்றத் தீர்ப்பு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே சட்ட மன்றத்தில் அப்படி உயர்நீதி மன்றத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டும்போது அதை அச்சடித்துக் கொடுங்கள், தீர்ப்பு என்ன என்றே தெரியவில்லை என்று சொன்னேன். அப்போது அமைச்சரிடம் அந்தத் தீர்ப்பின் விவரத்தைச் சொல்லும்படி கேட்டேன். ஆனால் சொல்லவில்லை. இப்போதும் தீர்ப்பைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்புக்கும் இந்தச் சட்டத்திற்கும் சம்பந்தம் என்ன? அந்தத் தீர்ப்பும் இந்த அடிப்படையில் இருப்பதாகத் தெரியவில்லை. இதை அரசாங்கம் கொண்டு வந்திருப்பது வருந்தத்தக்கது. ஆகவே, இதைத் திரும்பப் பெற்றுக் கொள்வதுதான் மரியாதையாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, இங்கு கொண்டு வந்திருக்கிற மசோதா நியாயமானது அல்ல என்பது என்னுடைய வாதம். இந்த மாநில அரசுக்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, மத்திய அரசுக்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, கார்ப்பரேஷன்ஸ், யூனிவர்சிடி இவைகளுக்குச் சொந்தமானதாக இருந்தாலும் சரி, நியாய வாரம் என்பது கட்டுப்படுத்தாது. இது முன்னாலேயே இருக்கிறது. ஸ்பெசிபிக்காக பண்ணுவதற்காக கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

இது சாகுபடி நிலத்தைப் பற்றியது. நிலம் அவர்களுக்குத் தேவையில்லாதபோது சாகுபடிக்குக் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கிற நிலத்திற்கு நியாய வாரம் கொடுக்க வேண்டுமென்று சொல்லுவதில் என்ன தவறு இருக்கிறது? எப்போது வேண்டுமானாலும் அவர்களை வெளியேற்றலாம்

என்ற அதிகாரத்தை வைத்துக் கொள்ளலாம். பி. டபிள்யூ. டி. நிலத்தை தரிசாக இருக்கும்போது சாகுபடிக்குக் கொடுக்கிறார்கள். அதற்கு ஃபேர் ரெண்ட் கொடுக்க வேண்டுமென்று சொல்வதில் தவறு இல்லை. ஆனால் எந்த நேரத்திலும் அந்த நிலம் அவர்களுக்குத் தேவைப்பட்டால் அதை எடுத்துக் கொள்ளத் தடை இருக்கக்கூடாது என்ற பாதுகாப்பு மாத்திரம் அரசாங்கத்திற்கு இருந்தால் போதுமானது. மத்திய சர்க்காராக இருந்தாலும், மாநில சர்க்காராக இருந்தாலும், கார்ப்பரேஷன்களாக இருந்தாலும், யூனிவர்சிடியாக இருந்தாலும் தங்களுக்குத் தேவையில்லாதபோது நிலத்தை சாகுபடிக்குக் கொடுக்கிறார்கள். அந்த நிலம் தங்களுக்கு மீண்டும் தேவை என்று சொல்லுகிறபோது அவர்களை எவிக்ட் பண்ணும் அதிகாரத்தை வைத்துக் கொள்ளட்டும். ஃபேர் ரெண்ட் கொடுக்க வேண்டுமென்று இருப்பதை கட்டுப்படுத்தக் கூடாது.

பி. டபிள்யூ. டி. நிலத்தை வருஷா வருஷம் ஏலம் போடுகிறார்கள். வசதியானவர்கள்தான் அதை எடுக்க முடிகிறது. உண்மையான சாகுபடிதாரர்கள் அதைப் பெற்று சாகுபடி பண்ண முடியாத நிலைமை இருக்கிறது. குத்தகைக்கு நிலம் விடப்பட்டால், நியாய வாரந்தான் பிக்ஸ் பண்ண வேண்டும். ஆகவே, இந்த மசோதா மிகவும் தவறானது என்ற முறையில் இதை எதிர்க்கிறேன்.

(பிற்பகல் 12-20)

**திரு. ரா. மார்க்கபந்து :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவிலே மூன்று தரப்பினருக்கு மட்டும் Company or Corporation owned or controlled by State Government or University constituted under law என்பதற்கு மட்டும் இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே இதை அரசாங்கம் கொண்டு வந்து இருக்கிறது. சென்ற கூட்டத் தொடர்களிலே பல முறைகள் தொடர்ச்சியாக நாங்கள் இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு வருகிறோம்.

செக்ஷன் 4-ஏ-இல் சொந்தமாகப் பயிரிடக்கூடியவர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலத்திலிருந்து பாதியை எடுத்துக்கொள்ள உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அது இப்போது நீக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இராணுவத்திலே பணியாற்றுகிறவர்கள் திரும்பி வந்து—தங்கள் சொத்துக்களை நிலங்களை ஏற்கெனவே குத்தகைக்கு விட்டு இருந்தால்—அதைக் கேட்கிறபோது சொந்தமாக அவர்கள் பயிரிடுவதற்கு வாய்ப்புக் கொடுக்கிற வகையில் 2, 3 ஏக்கர் அவர்களுக்கு கொடுப்பதற்கு ஏற்ற முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதே மாதிரி அரசாங்கப் பணியிலே இருக்கின்றவர்கள் தாங்கள் ஓய்வு பெற்றுத் திரும்பியவுடன், தாங்கள் ஏற்கெனவே குத்தகைக்கு விட்டிருக்கின்ற நிலத்தில் அவர்கள் சொந்தமாக உழுவதற்கு ஏற்ற வகையில், 2, 3 ஏக்கர் கொடுப்பதற்கு ஏற்ற வகையிலே விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விதவைகளைப் பொறுத்தவரையிலும்கூட, அவர்களுடைய கணவன்மார்கள் இருந்தபோது குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலும் கணவன் இறந்த பிறகு, விதவைப் பெண் தான் சொந்தமாக அந்த நிலத்தை பயிரிட விரும்பினால் அவர்களுக்கு அந்த நிலத்தைக் கொடுக்கக்கூடிய முறையிலே விதி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் கூட ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஏற்கெனவே எக்ஸெப்ஷன் கொடுக்கப்பட்டிருப்பதைப்போன்று கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில் செக்ஷன் 19-இல் கிளாஸ் 3-இல் சப்செக்ஷன் (ii) க்குப் பிறகு 'லேண்ட்ஸ் ஓண்டு பை டெம்பிள்ஸ்' என்று சேர்க்க வேண்டுமென்று திருத்தம் கொடுத்து இருக்கிறேன். கோயில் நிலங்கள் ஒரு சிலருடைய அனுபவ பாத்தியதையில் இருக்கக்கூடாது. கோயில்களிலே இன்றைக்கு அவர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. அரசாங்கத்திலிருந்தும் பணம் கொடுக்கவில்லை, கன்சாலிடேட்டட் பண்டிலிருந்தும் பணம் கொடுக்கப்படவில்லை. ஆறு மாதம், 1 வருடம் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்ற வகையிலே கோயில் நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும்.

அதே நேரத்திலே சொந்தமாகப் பயிரிடக்கூடிய சிறு விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 2, 3 ஏக்கர் கொடுக்கின்ற முறையில் விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குத்தகை பதிவு செய்வதற்கு அவர்கள் தாசில்தாரிடம் ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் போக வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு சேப்டியூல புரவிஷன்ஸ் கொண்டு வரப்பட வேண்டும். டெனன்ட்ஸ்க்கு

புரட்டக்ஷன் கொடுக்கின்ற முறையிலே டெனன்சி ரிக்கார்ட்ஸ் ஆக்ட் என்ற ஒரு சட்டம் வந்திருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழே பதிவு செய்வதற்கு வேண்டிய பாதுகாப்புகளை செய்யவேண்டும். அதையும் செய்தாக வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகை பாதுகாப்பு பற்றிய இந்தச் சட்டத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கருத்துக்களைச் சொல்வதற்கு நான் நிற்கிறேன். இந்த திருத்தமானது ஏழை எளியவர்களைப் பாதிக்கக் கூடிய முறையிலே இருப்பதால் எங்கள் கட்சியின் சார்பிலே இதை எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக, மத்திய அரசு, மாநில அரசு, பல்கலைக் கழகம், உள்ளாட்சித் துறை என்று பலவிதமாகச் சொல்லி விதிவிலக்குக் கொடுக்கப்படுவதன் காரணமாக அரசுத் துறை, தனியார் என இரண்டு விதமாக விவசாயிகளைப் பிரிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிக் கொண்டு வருவது சரியாக இருக்காது. மத்திய அரசு, மாநில அரசு நிலங்கள் வைத்திருக்கிற விவசாயிகளுக்குச் சட்டம் பொருந்தாது என்று சொல்வது சரியல்ல. முன்னுதாரணமாக இருக்கவேண்டிய அரசே இப்படி விதிவிலக்கு கொண்டு வருவது சரியல்ல. ஆகவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்தத் திருத்தத்தை நான் பலமாக எதிர்க்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தையும், தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) சட்டத்தையும் மேலும் திருத்துவதற்குரிய சட்ட முன்வடிவு என்று தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கடைசியிலே சொல்லப்பட்டிருப்பது, 'உள்ளாட்சி அதிகார மன்றம் அல்லது மத்திய அரசு அல்லது ஒரு மாநில அரசுக்கு சொந்தமான அல்லது அவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கம்பெனி அல்லது கழகத்திற்குச் சொந்தமான அல்லது குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களுக்கும், ஒரு சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான அல்லது குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களுக்கும், மேற்சொன்ன சட்டங்களின் விதித் துறைகளிலிருந்து விலக்களிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. முகத்தைக் காட்டி விட்டு, வாலைக் காட்டுவதைப்போல இருக்கிறது. முன்னால் சொல்லும்பொழுது பாதுகாப்பு கொடுப்போம் என்று சொல்லிவிட்டு, பின்னாலே விதி விலக்கு

அளிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. குத்தகைதாரர்களிடமிருந்து பிடுங்கப்படுகிறது என்று சொல்வதற்குப் பதிலாக பாதுகாப்பு என்று சொல்லப் பட்டிருக்கிறது. அரசே சாதாரண விவசாய மக்களை ஏமாற்றுவதைப் போல இருக்கிறது. எனவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறோம் என்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, ஏற்கெனவே இங்கே அவையிலே சுட்டிக்காட்டியிருப்பதைப்போல இந்தத் திருத்தச் சட்டம் தனியார் நிலம், சர்க்கார் மற்றும் சர்க்கார் சார்புடைய நிலம் என்று இரண்டு வகையிலே பாகு பாடு செய்கிறது. சமுதாயம் ஒரு நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. அந்தச் சமூக நீதியை ஏற்படுத்தும் வகையில் சட்டம் இயற்றப்படும்போது தனியார் நிலம், சர்க்கார் நிலம் என்று பிரித்துப் பார்க்காமல், குறிப்பாகத் தனியாரை விடச் சர்க்காருக்கும், சர்க்கார் சார்புடைய பொது நிறுவனங்களுக்கும்தான் சமூக நீதியை நாட்டில் முழுமையாக நிலை நாட்ட வேண்டிய பொறுப்பு அதிகம் என்ற உணர்வில் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் இந்தச் சட்டத்தைப் பார்க்கின்ற பொழுது தனியாருக்கு அந்தப் பொறுப்பு, அதிகமாகச் சுமத்தப்பட்டிருக்கிறதே தவிர, சர்க்காருக்கும், சர்க்கார் சார்புடைய பொது நிறுவனங்களுக்கும் அந்தப் பொறுப்பே இல்லாமல் செய்திருப்பது சமூக நீதியை ஏற்படுத்த சர்க்காரோ அல்லது பொது நிறுவனங் களோ பொறுப்பு ஏற்றுக்கொள்ளவில்லை என்ற ஒப்புதல் அளிக்கும் வகையில் இந்தத் திருத்தம் அமைந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்

சமூகம் வளர்கிறது என்றால் அது பௌதிக முறையில் ஏற்படும் வளர்ச்சி மட்டுமல்ல, பௌதிக முறையில் ஏற்படும் வளர்ச்சியோடு, ஆத்மீக வளர்ச்சியும் ஏற்பட்டால்தான் அந்தச் சமுதாயம் உண்மையாக வளர்கிறது என்று பொருள். நம் நாட்டைப் பொறுத்தவரையில் நாம் பௌதிகத்தில் மட்டும் நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் மட்டும் அல்ல, . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள், கம்யூனிஸ்ட் தோழர்கள் சொன்னதைப்போல எதிர்க்கிறோம் அல்லது ஆதரிக்கிறோம் என்று சொல்லி அதற்கான கருத்துக்களை மட்டும் சொல்லுங் கள், விளக்கம் சொல்வது என்றால் நிறையப் பேசலாம். ஆனால் இப்பொழுது பௌதீகம், ஆத்மீகம் ஆகியவை இந்தச் சட்டத்தில் தேவை

இல்லை. எதிர்க்கிறோம், அல்லது ஆதரிக்கிறோம், அதற்கான காரணங்கள், அவ்வளவுதான் இந்த மசோதாவில் சொல்லலாமே தவிர, அதிக விளக்கங்கள் தேவையில்லை. தயவு செய்து சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : திரு. மார்க்கபந்து அவர்கள் திருத்தத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரே இவ்வளவு பேசவில்லை. நீங்கள் சீக்கிரம் முடியுங்கள்.

THIRU M. A. LATHEEF : When he has given an amendment and it is laid on the table, it becomes property of the House and I am entitled to talk on that.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் எல்லாச் சட்ட முன்வடிவுகளையும் நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் இப்படிச் சொல்கிறார்களா? உறுப்பினரவர்கள் சீக்கிரமாகச் சொல்லி முடிக்க வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் இதிலேதான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதோ ஒன்றில் பேசினால்கூட அறை கென்று நேரம் வரையறுத்து வைத்திருக்கிறேன். நிமிஷங்களைக் குறித்து வைத்திருக்கிறேன். எனவே, இரண்டு மூன்று நிமிஷங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆகவே, கோயில் நிலங்கள், வணிக ஸ்தலங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகிய சமுதாய நோக்கத்தோடு செயல்படுகின்ற, பொது மக்களால் நடத்தப்படும் நிறுவனங்களுக்கு இதிலே பாதுகாப்பு, விதிவிலக்கு இல்லாமல் இருப்பது மெத்த வேதனையைத் தருகின்றது. ஏற்கெனவே கோயில்களுக்கு 13 97 கோடி ரூபாய் பாக்கி என்று நான் சொல்லவில்லை, நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு சொல்லியிருக்கிறார்கள்; ஏறக்குறைய கோடி ரூபாய் பாக்கி வரவேண்டியிருக்கிறது. பல கோயில்கள் சரியாக நிர்வாகம் செய்யப்பட முடியாமல் அழிந்து கொண்டிருக்கின்றன.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப் அவர்கள் பேசுவது சரி தானா? சட்ட முன்வடிவைப் பற்றிக் கருத்துக்களைச் சொல்லச் சொன்னால், இந்த விளக்கங்களையெல்லாம் சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கெல்லாம் சொல்லலாம்; எந்த உறுப்பினரும் இதைச் சொல்லவில்லை, எனவே, இதைத் தாங்கள் எதிர்க்கிறேன், அல்லது ஆதரிக்கிறேன். அதற்கு உங்கள் கருத்து என்ன, இதை மட்டும் சொல்ல வேண்டும். ஒரு சட்ட முன்வடிவின் மீது பேசுகின்ற முறை அல்ல இது.

THIRU M. A. LATHEEF : I want to have my say on Thiru Margabandhu's amendment which has been laid on the table. I am entitled to have my say on that. This is not division time and I am entitled to speak now on that. But I am not allowed.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களும் இந்த அவையின் நேரத்தைக் கணக்கிட்டு, அதற்கேற்றவாறு பேசுகிறார்கள்; ஆனால் திரு. லத்தீப் அவர்கள் அப்படிப் பேசுவது இல்லை; நானும் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்; உறுப்பினரவர்கள் பேசிக்கொண்டே போகிறார்கள்.

THIRU M. A. LATHEEF : I have explained my position. I must be permitted to have my say.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதாவிலுள்ளதைப் பற்றி பேசுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆகையால், இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கபந்து அவர்கள் கொடுத்திருக்கின்ற இந்தத் திருத்தம் நியாயமானது. ஆகவே, அவைகளுக்கு விதிவிலக்கு தரும் வகையில் சர்க்கார் துறையாக இருந்தாலும் சரி, இவ்வளவு நிலம் என்று பாகுபாடு செய்து, தேவையான நிலத்தை பல்கலைக் கழகமோ, மத்திய அரசாங்கமோ, மாநில அரசோ வைத்துக் கொள்ளட்டும்.

(பிற்பகல் 12.30)

தேவைக்கு அதிகமாக இருக்குமானால், அதற்கு முழுமையாக விதிவிலக்கு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவையான அளவுக்கு வைத்துக் கொள்ளுங்கள், தேவையான அதிகாரத்தையும் வைத்துக் கொள்ளுங்கள். அந்த நேரத்தில் கோயில்களும், வணக்கஸ்தலங்களும் சரியாகச் செயல்பட, எந்த

நோக்கத்திற்காகச் செயல்படுகின்றனவோ, அவைகளுக்கும் வழிவகை செய்ய, தேவையான விதிவிலக்கு அளித்து நிறைவேற்றுங்கள் என்றுதான் சொல்கிறேனே தவிர, அதனுடைய லீகல் இம்ப்ளிகேஷன்ஸ் பற்றி சொல்ல வில்லை. ஏனென்றால், நீங்கள் அனுமதிக்கவில்லை, அனுமதிக்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆகவே இதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

திரு. அ. செல்லப்பா : குத்தகைதாரர்களுக்கு நியாயமான வாரம் கொடுப்பதுதான் எந்த ஒரு அரசின் கொள்கையாக இருக்க முடியும். ஆனால், இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக, மத்திய, மாநில கல்வி நிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்களுக்கு தனிப்பட்ட சலுகையை இந்த அரசு அளித்திருப்பது உண்மையிலே விவசாயிகளுக்கு வேதனை தரக்கூடிய ஒன்றாகும். அந்த நிறுவனங்களின் நிலங்களில் சாகுபடி செய்கின்ற உழைக்கும் வர்க்கத்தினர், தன்னுடைய உழைப்பை நிலத்திலே சிந்தி, தன்னுடைய ரத்தத்தை நிலத்திலே சிந்தி சாகுபடி செய்கின்ற நேரத்தில், கடந்த இரண்டு ஆண்டு காலமாகக் கடுமையான வெள்ளம், புயல் போன்ற துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்ட அந்த நேரத்தில், பயிரிடும் விவசாயிகள் படுகின்ற தொல்லைகள், துன்பங்கள் ஏராள மாக இருந்தன. ஆனால், சட்டத் திருத்தத்தின் மூலமாக, அரசு அறிவித் திருக்கிற இந்தத் திருத்தத்தின் வாயிலாக, அந்த விவசாயிகள் எந்தவிதப் பயனும் அடையவில்லை. இந்த அரசு ஏன் அந்த விவசாயிகளைப் புறக கணிக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, இந்தச் சட்டத்திருத்தத்தை நான் கடுமையாக எதிர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை அரசு கொண்டு வந்ததன் நோக்கம், இந்தச் சட்டம் இன்றைக்கு கொண்டு வரப்படவில்லை என்பதும் இதற்கு முன்னாலே இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டது என்பதும் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் பலருக்குத் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். இந்தச் சட்டம் எப்பொழுது கொண்டு வரப்பட்டதென்றால், இங்கே, 18—3—1975-லே இந்தச் சட்டமன்றத்திலே இந்தச் சட்டம் முன்மொழியப்பட்டிருக்கிறது. அதை யார் முன்மொழிந்தார்கள் என்பது இங்கே எல்லோருக்கும் தெரியும். ஆனால், அதற்குப் பிறகு இன்றைக்கு வந்திருக்கிறது. அப்போதிருந்த அரசு இது தேவை என்று நன்றாக அறிந்து, ஏறக்குறைய 10 ஆண்டுகள், 8 ஆண்டுகள் அமைச்சர்களாக இருந்தவர்களெல்லாம் யோசித்துக் கொண்டு வரப்பட்டது தான் இது. இடையிலே அந்தச் சட்டத்தை இயற்ற முடியாமல், நிலைமை கள் ஏற்பட்டது உங்களுக்குத் தெரியும். ஆகையினாலே, இப்பொழுது இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்





கொள்கிறேன். ஆனால், இதிலே குத்தகைதாரர்களைப் பாதுகாக்க வேண்டும், அவர்கள் கஷ்டப்படுகிறார்கள், அவர்களுக்கு எப்படிச் செய்ய வேண்டும் என்றெல்லாம் செல்லப்பா அவர்கள் சொன்னார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் செல்லப்பா அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், எந்தக் குத்தகைதாரருக்கும் கொடுக்கப்படுகிற குத்தகை விகிதாச்சாரம் பாதிக்கப் படாது. ஆனால் நிலத்தை வெள்ளாமைக்கு விடுகிறபொழுது, இன்றைக் கிருக்கிற சட்டப்படி யாராக இருந்தாலும் குத்தகை உண்டு. தனியாரா, பொது வானவரா என்று நினைக்கிறபொழுது நான் இந்த அவையிலே சொல்கிறேன், அரசு என்பது தனியார் அல்ல—சமுதாயப் பிரதிநிதிதான் அரசு. அரசு இயற்றுகிற சட்டங்கள் எல்லாம் சமுதாயத்திற்காக என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அரசு எடுத்துக்கொள்கிறது என்றால், அமைச்சர் கள் எடுத்துக் கொள்வதில்லை. அது சமுதாயத்திற்காக எடுத்துக் கொள்ளப் படுகிறது. நிலம் ஆராய்ச்சிப் பணிக்காக எடுத்துக் கொள்ளப்படும். அந்த நிலத்தைக் கொண்டு நல்ல விதைகளைக் கண்டு பிடிக்க முடியும். நிலம் விதைப் பண்ணைகளுக்காக எடுத்துக்கொள்ளப்படும். பெரிய நிலச்சுவான்தார்களுக்கு இருக்கும் நிலத்தை வாங்கித்தான் இக்காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது சமுதாயத்திலே நிலமற்றவர்களுக்கு, ஏழை எளியவர்களுக்குத்தான் இந்த அரசுப் பண்ணைகளிலும், விதைப் பண்ணைகளிலும் உதவி செய்யப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் காரணத்தால்தான் அரசு எடுத்துக்கொள்வது, அரசு சார்புடைய நிறுவனங்கள் எடுத்துக்கொள்வது தனியார் அல்ல; ஆனால் எடுத்துக் கொள்வது தனியாரிடத்திலேயிருந்து. அதை எடுத்து சமுதாயத்திற்குப் பயன்படுத்துகிறோம். அதைப் பார்க்கிற பொழுது அரசு தனி நிறுவனம் அல்ல. அரசு எடுத்துக் கொள்கிறது, சமுதாயத்திற்காக. அரசு தனியாரிடத்திலே இருந்து எடுத்துக் கொள்கிறார் கள். எடுத்துக் கொள்கிறபோது பாதுகாப்பாக எடுத்துக் கொள்கிறோம் என்பதை யோசித்துப் பார்ப்பார்களானால் அனைத்து உறுப்பினர்களும் இதை வரவேற்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு சொல்கிறபோது அமைச்சர் இந்தச் சட்டத்தைப் பற்றித் தெரிந்துகொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மிக்க மகிழ்ச்சி, தெரிந்துகொண்டு வந்திருக்கிறேன் என்று சொன்னதற்கு. திருப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறபோது, மரியாதையாக திருப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள், இல்லாவிட்டால் "மரியாதை" கெட்டுவிடும் என்று சொல்ல வில்லை. அதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். இப்பொழுது நல்லபடியாக சொல்லியிருக்கிறார்கள்.

நீதிமன்றத்தில் வழக்குகள் என்பது இப்பொழுது இருக்கிற ஒன்றல்ல. 1968 லேயே கோர்ட்டிற்குப் போய் இருக்கிறார்கள். அப்பொழுது நீதி மன்றம் அரசுக்கு சாதகமாகத் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. வேறு ஒரு தரம் நீதி மன்றத்திற்குப் போகிறபோது, 6—9—1968-ல் உயர்நீதி மன்றத்திலே போகிற போது அரசுக்குச் சாதகமாக, அரசு நிலங்களை எடுத்துக் கொள்ளலாமென்று தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 6—1—1969லே அரசுக்குப் பாதகமாகத் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். இரண்டையும் பார்க்கின்றபோது, நீதிமன்றங்களிலே சில நேரத்திலே சாதகமாகவும், சில நேரத்திலே பாதகமாகவும் இருக்கிறதென்பதை பார்க்கிறபோது அரசு நிறுவனங்கள் எடுத்துக் கொள்ளும் நிலம், சமுதாய நலனுக்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆகையினால், எவ்வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்று திட்டவட்டமாகக் கொண்டுவரப்படுகிறது. முதலிலே இருந்த அரசு கொண்டுவர நினைத்த ஒரு சட்டத்தை எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் கொண்டுவர வேண்டுமென்றுதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று கூறிக்கொண்டு இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

## Clause-2.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—பிரிவு 2 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெறவேண்டும்.

**திரு. ரா. மார்க்கபந்து :** நான் என் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In Clause 2, in the proposed section 8 *add*, the following sub-section at the end.

"(iv) lands owned by Temples."

திருத்தம் வழி மொழியப் பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரா. மார்க்கபந்து அவர்கள் தன் திருத்தத்தை வலியுறுத்துகின்றாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ரா. மார்க்கபந்து :** I am pressing my amendment.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றதாக அறிவிக்கப் பெற்றது.

**திரு. ரா. மார்க்கபந்து :** I want division, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் டிவிஷனை வற்புறுத்துகிறீர்களா ?

**திரு. ரா. மார்க்கபந்து :** தலைவரவர்களே, நான் ஒன்று தெரிவித்துக் கொள்கிறேன். அரசுத் தரப்பிலே அந்தத் திருத்தத்தைப் பரிசீலிக்கிறோம் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்தால் அதை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. மனோகரன் :** பிரச்சினைகளைப் பரிசீலிப்பதற்காகத்தான் இந்த அரசு இருக்கிறது.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, "தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1979)" நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

[1979 நவம்பர் 2

(பிற்பகல் 12-40)

**(ஐ) ஆந்திரா நிலவரி விதிப்பு (தாப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு, 1979 (45/1979).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தாப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே,

"ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தாப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1979) நிறைவேற்றப் பெற வேண்டும்" என மொழிகிறேன்.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**(ஒ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு † (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

* 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 27 ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

† 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1979 நவம்பர் 2]

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவினை இந்த மன்றத்தின் ஆய்வுக்கு கொண்டு வந்து இருக்கிறார்கள். அதன் மீது நான் சார்ந்து இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னாலே ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள். என்னிடத்தில் யாரும் சொல்வது இல்லை. ஆங்காங்குள்ள அரசு அலுவலாளர்களிடத்திலும் சொல்வது இல்லை. ஆனால் சட்டமன்றம் நடைபெறுகிற நேரத்தில் கூக்குரல் போடுகிறார்கள், என்னிடத்தில் சொல்லி யிருந்தால், நான் தீர்த்து இருப்பேன் என்று சொன்னார்கள். பல்வேறு குறை களை அவரிடத்திலும் சொல்லியிருக்கிறேன். அலுவலர்களிடத்திலும் சொல்லி யிருக்கிறேன். இதுவரையில் அவற்றிற்கான திருத்தங்கள் கொண்டு வரப்பட வில்லை.

இன்றைக்கு கொண்டு வரப்பட்டிருக்கும் திருத்தம் நிலத்தைக் கொடுப்ப தற்காகக் கொண்டு வரப்பட்ட திருத்தம். இருக்கிற அளவைக் குறைத்து, அதிகமான பேர்களுக்குக் கொடுக்க அரசு முன் வந்து இருப்பது பாராட்டக் கூடிய கருத்து தான். கொடுக்கப் போகிற நிலத்தை எங்கே இருந்து எடுக்கப் போகிறீர்கள்? அல்லது, நிலங்கள் குடியிருக்கின்றவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று கூறுகிற பல்வேறு அரசுத் தரப்பில் கொடுக்கிற வாக்குறுதி போல் இதுவும் ஆகிவிடுமா என்று தெரியவில்லை.

இன்றைக்கு நிலங்கள் மடாதிபதிகளிடத்தில் மாட்டிக்கொண்டு இருக்கிறது. அதை மீட்பதற்கு இந்த அரசு என்ன திட்டங்களை வைத்துக் கொண்டு இருக்கிறது? அதைப் பெற்று எப்படி கொடுக்கப் போகிறீர்கள்? இன்றைக்கு நீங்கள் $1\frac{1}{2}$ ஏக்கர் என்று ஆக்கியிருக்கிறீர்கள். அதை ஏழை எளியவர் களுக்கு எப்படி கொடுக்கப்போகிறீர்கள்? ஏற்கெனவே கொடுக்கப்பட்ட நிலங்களைக் கூட ஏழை எளிய மக்கள் பயன்படுத்த முடியாமல் இருக்கிறார் கள் என்பதையும் மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலம் எடுக்கிற நடவடிக்கைகளில் பல்வேறு தவறுகள் ஏற்பட்டு இருக் கின்றன. குறிப்பாக, சிலவற்றைச் சொல்கிறேன். உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் நிலம் எடுக்கிறீர்கள். அப்படி எடுக்கிற நிலம் அரசுக்குத் தேவைப் படுகிறது. பள்ளி, மருத்துவ மனை, அரசு அலுவலகங்கள் ஆகியவை கட்டி

வதற்கு எடுத்துக்கொள்கிற நேரத்தில், அந்த நிலம் உச்சவரம்பு நிலம், நமக்குக் கிடைக்கும் என்று அந்த இடத்தில் உழுது கொண்டிருக்கிற விவசாயி எண்ணிக் கொண்டிருந்தவன், ஏமாற்றம் அடைகிறான். அவனுக்கு அந்த மாதிரி நேரத்தில் காம்பன்சேஷன் கிடைப்பது இல்லை. முதலாளிகளுக்கு காம்பன் சேஷன் கொடுக்க வேண்டியதில்லை, அரசின் ஆணை வருகிறது. இதற்குப் பரிகாரம் என்ன ? அமைச்சர் இன்று சொல்லாவிட்டாலும் எதிர்காலத்தில் இதை கவனிப்பார்கள் என்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு உச்சவரம்பு நிலம் எடுத்து வினியோகம் செய்கிறார்கள். அந்த வினியோகம் செய்கிற நேரத்தில் ஏற்படுகிற கோளாறு பற்றி அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

முன்னாலே ஒரு திருத்தம் கொண்டு வருகிற நேரத்தில், சொன்னார்கள், உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்த காரணத்தால் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறேன் என்று சொன்னார்கள். உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புப்படி உள் குத்தகையும் செல்லுபடியாகும் என்று சொல்லிவிட்டு, நீங்கள் அறிவிக்கும் உச்சவரம்பு சட்டத்தின்கீழ் அரசு அலுவலாளர்கள் எத்தவிதமான பதிவும் இல்லாமலேயே, ஆர்.டி.ஓ. தாசில்தார் என்டிரி இல்லாமலேயே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்ட முன்வடிவின் மீது தற்போது விவாதம் நடக்கிறது. அதன் மீது சுருக்கமாகக் கருத்து சொல்ல வேண்டும்.

**திரு. மா. மணிமாறன் :** அப்படி அந்த உயர்நீதி மன்றத்திலே செல்லுபடி ஆகும் என்று தீர்ப்பு கொடுத்த பின்னால் நிலத்தின் மதிப்பு குறைந்துவிட்ட படியால், இன்றைக்கு முதலாளிகள் எல்லாம் பினாமி முறையிலே நிலங்களை பிரித்து எழுதி வைத்திருக்கிறார்கள். இவர்தான் இந்த நிலத்தில் குத்தகைப் பயிர் செய்தார் என்று சொல்லி, ஏ. ஓ. ஆபீசரிடம், ஒரு சர்டிபிகேட் வாங்கி, அதன் மூலம் அவர்களுக்கு வேண்டிய ஒருவர் குத்தகைதாரர் ஆக்கப்பட்டு, மிச்ச நிலம் என்று சொல்லப்படுகின்ற உச்ச நிலம் அவர்களுக்கு அளிக்கப்படு கிறது. அதனால் உண்மையாக கிடைக்க வேண்டியவர்களுக்கு நிலம் கிடைக்கவில்லை.

ஏற்கெனவே 96,000 ஏக்கர் நிலம் மிச்ச நிலம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அதிலே 11,000 அரிசனங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வந்ததுதான் இதற்குக் காரணம் என்று சொல்கிறீர்கள். இது சம்பந்தமாக சுமார் ஒன்றரை ஆண்டு காலமாக மாண்புமிகு அமைச்சரிடம் வாதிட்டிருக்கிறேன் தனிப்பட்ட முறையிலே கூட.





ஆனால், இந்த அரசு ஆதி திராவிட மக்களை ஏமாற்றுகின்ற காரணத்தையே ஒரு காரணமாகக் கொண்டிருக்கின்ற காரணத்தால் நீங்களும் அதிலே மாட்டிக் கொண்டீர்கள். நீங்கள் ஒரு காலத்திலே கறுப்புச் சட்டையணிந்து, கழகத் திலே பணியாற்றியவர்கள் ; மதுரைவீரனைப் பார்த்து ஆட்சிக்கு வந்தவர் களல்ல. அரசியல்வாதிகளாக இருப்பவர்கள், ஆதி திராவிட மக்களை ஏமாற்றிக்கொண்டிருப்பதைத் தடுப்பதற்கு, உடனடியாக சட்டத்திலே ஒரு அமென்ட்மென்ட் செய்தாக வேண்டும். அப்படியானால்தான் அவர்களை பாதுகாக்க முடியும். இல்லாவிட்டால் சட்டத்திலே இடம் இருக்குமே தவிர அதுவே சமாதானமாகாது.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். பணம் கொடுப்பதிலே கூட பல்வேறு கோளாறுகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் இல்லை; முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. மா. மணிமாறன் :** 4 ஆண்டு காலமாக விளையவில்லை என்றால் கூட, பாக்கியை வசூல் செய்யலாம் என்று சொல்லும்போது, குத்தகை விவசாயி வெளியேற்றப்படலாம். இப்போது கோர்ட்டுக்குப் போக முடியாமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட இன்னல்களுடன் குத்தகை சாகுபடி செய்கின்றவர்களுக்கு யாருக்காவது உச்சவரம்பு நிலத்தை எடுத்து கொடுத்திருக்கிறார்கள் என்றால் அவர்களையும் நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைவிட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை மறைமுகமாக வெளியேற்ற முயற்சி செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். . . (மணியடிக்கப்பட்டு, திரு. ஏ. ஆர். மாரிமுத்து அழைக்கப்பட்டார்).

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த மசோதாவிலே 'ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்சிலே' இதுவரையில் மாக்சிமம் 5 ஸ்டாண்டர்டு ஏக்கரா நிலம் கொடுத்து வந்திருக்கிறோம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதில்,

Clause 3 sub-clause (1)

In Clause 3 for the expression ' three standard acres ' the expression " three acres of dry land and 1½ acres of wet land."

என்று இருக்கிறது. 5 ஏக்கர் என்று இருக்கும்போது இங்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். ஏதாவது தவறு இருக்கிறதா என்பதை நீங்கள் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்த சீலிங் ஆக்டில் புதிதாக அசைன்மென்ட் செய்து கொடுக்கும் நிலத்தின் அளவை குறைத்துக் கொடுப்பதாக தெரிகிறது. அதிகமான பேர்களுக்கு கொடுக்கலாம் என்பதால் அப்படிச் செய்திருக்கிறீர்கள்; அதில் ஆட்சேபம் இல்லை. ஆனால் இதற்கு முன்னால் அமுல்படுத்திய சட்டம் என்றைக்கு நடைமுறைக்கு வந்ததோ அந்த தேதியிலிருந்தே இந்தச் சட்டமும் அமுலுக்கு வரும் என்று இருக்கிறது. அப்படியானால் இதற்கு முன்னால் அசைன்மென்ட் வாங்கி, அதற்காக தொகை கட்டிக்கொண்டு வருகிறவர்கள் நிலை என்ன? சர்ப்பிளஸ் லான்ட் கொடுக்கப்பட்டு, அதற்காக பணம் கட்டி, அதை அனுபவித்து வருகிறவர்களிடமிருந்து திருப்பி எடுக்கிறோம் என்பது சிரமமான ஒரு காரியமாகும். ஆகையால் அதைப்பற்றி யோசிக்க வேண்டும். இனிமேல் அமுல்படுத்துவதில் சிரமம் இருக்காது. இதற்கு முன்னால் பணம் கொடுத்து அனுபவித்து வருகிறவர்களிடமிருந்து எடுப்பது சிரமமாக இருக்காதா என்பதை ஆராயவேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின்மீது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்திலே குத்தகை ஏக்கர்களை குறைத்திருப்பதாகச் சொல்கிறார்கள், அதற்கு கொடுக்கப்பட்ட விளக்கம், அதிகப்படியான ஜனங்களுக்கு பரவலாக பிரித்துக் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். நல்ல காரியம்தான். அதே நேரத்தில் பல இடங்களில், பல்வேறு நபர்களிடம் பினாமி பெயரில் ஆயிரக்கணக்கான நிலங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் அரசாங்கம் சர்வ கட்சி ஒத்துழைப்போடு கண்டு பிடித்து எடுத்துக் கொண்டு, இன்னும் அதிகமான விவசாய தொழிலாளர்களுக்கு, சர்வகட்சி சார்பில் மக்கள் குழு அமைத்து அதன் மேற்பார்வையில் நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு எல்லாம் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்லி, இந்தச் சட்டத்தை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட்டு கட்சியினர் ஆதரிக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொண்டு அமைகிறேன், வணக்கம்.





திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்ச நஞ்சம் இருக்கிற நிலங்களைக்கூட எடுக்கக்கூடிய ஆபத்தான நிலைமை இந்தச் சட்டத்தினால் ஏற்பட்டிருக்கிறது என்பது என்னுடைய கருத்து. 5 ஏக்கர் நிலம் வைத்திருந்தால், இந்தச் சட்டத்தினால் அது 1½ ஏக்கர் என்ற முறையில் குறைக்கப்பட்டுள்ளது, பாக்கியுள்ளதையும் எடுத்துக் கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே உள்ள குத்தகையையும் பாதிக் கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை நம் கிராமங்களுக்கு ஏற்பட்டால், இந்தச் சட்டம் நம் கிராமங்களில் அமுலுக்கு நிறைவேற்றப்பட்டால், மிகப் பயங்கரமான சூழ்நிலைகள், போராட்டங்கள், சச்சரவுகள், அடிதடி சண்டைகள் ஏற்படக்கூடும். அதைவிட பினாமி நிலங்கள் வைத்திருப்பவர்களிடமிருந்து, அந்நிலங்களை அரசு கைப்பற்றி, அப்படிக் கைப்பற்றிய நிலங்களை வேண்டுமானால் 1½ ஏக்கர் என்ற வரையறையில் பகிர்ந்தளிக்கும் முறையில் கொண்டு வந்தால் நிச்சயமாக பல சங்கடங்களும், சூழ்நிலைகளும் வராமல் தவிர்க்க முடியும். இதையும் கூடுதலாக ஆராய்ந்து இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன் வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வரப்பட்டதன் நோக்கம், மிகப் பரவலாக எல்லோருக்கும் நிலங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நோக்கம் மிக நல்ல நோக்கம். ஆனால் அதிகமான நிலங்கள், சர்பிளஸ் லேண்ட்ஸ் எங்கே எடுக்கப்பட்டிருக்கிறது? எனக்குத் தெரிந்த வரையில் அப்படி அதிகமாக வைத்திருந்தாலும், அதை வேறு பெயர்களில் சொந்தக்காரர்கள், மனைவி மக்களின் பெயரிலும், பினாமி பெயர்களிலும் பகிர்ந்து கொடுத்து மாற்றி எழுதி வைத்து விடுகிறார்கள். சட்ட வரம்புக்குள் வரும்படி செய்து விடுகிறார்கள்.

ஆனால் அடிக்கடி இந்த அரசாங்கத்தினுடைய சார்பில் இதுபோன்ற அறிவிப்புகள், பினாமி நிலங்கள் எடுக்கப்படுகின்றன என்று அறிக்கை வருகிறது. விளம்பரப்படுத்தப்படுகிறது. ஆனால் இதுவரையிலும் அப்படி ஏதாவது எடுத்திருக்கிறார்களா என்பது தெரியவில்லை. ஆகையினால் உடனடியாக யார் யாரிடம் பினாமி நிலங்கள் இருக்கின்றனவோ அவைகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டு, அவர்கள் எவ்வளவு பெரிய ஆட்களாக இருந்

(திரு. ரா. மார்க்கபந்து[ [2979 நவம்பர் 2

தாலும், எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, பினாமி நிலங்களை வைத்திருந்தால் அதை இந்த அரசாங்கம் must exercise its iron hand to take out the surplus lands and dis tribute them to the unpro vided cultivators. என்கிற முறையிலே செயலாற்ற வேண்டும் என்ற எங்களுடைய கோரிக்கையைஅவைமுன் வைத்து முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன் வடிவைக் கொண்டு வந்த வரைக்கும் சிலர் அதை வரவேற்றி ருக்கிறார்கள். சிலர் அதிலே இருக்கிற உள் கருத்தை சரியாகத் தெரிந்துக் கொள்ளாததினாலே அதை எதிர்த்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

நில உச்ச வரம்புச் சட்டத்தின் படி இன்றைக்கு கொடுக்கப்படுகிற நிலங் கள் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் ஆகும். 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரைக்கும் கொடுக்கலாம் என்றால் சாதாரண ஏக்கர்கள் என்கிறபோது 18 லிருந்து 20 ஏக்கர்கள் வரை வருகிறது. நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். முழுவதுமாக மற்றவர்களுக்கு நிலத்தை கொடுக்கிறபோது 20 ஏக்கர் கொடுப்பது சரிதானா என்று எண்ணிப் பார்த்தால், இந்தச் சட்டத்தை எல்லோரும் வரவேற்பீர்கள் என்று எண்ணுகிறேன். நான் உங்களுக்குச் சரியாக சொல்ல வேண்டுமானால், இன்றைக்குத் தமிழ்நாட்டில் எத்தனை விவசாயிகள் இருக்கிறார்கள் என்றால் 50 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இந்த 50 லட்சம் பேர்கள் எவ்வளவு நிலத்தை பயிரிடுகிறார் கள் என்றால் 1,86,37,000 ஏக்கர் நிலத்தை பயிர் செய்கிறார்கள். யார் யார் எவ்வளவு நிலங்களை வைத்திருக்கிறார்கள் என்று பார்த்தால், இந்த 50 லட்சம் பேர்களில் 32,54,000 பேர்கள் எவ்வளவு நிலம் வைத்திருக் கிறார்கள் என்றால் 42,63,000 ஏக்கர்கள்தான் வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு ஏறக்குறைய ஒன்றரை ஏக்கருக்கு மேல் யாரும் வைத்துக்கொண்டிருக்கவில்லை என்பது உங்களுக்கும் தெரியும். ஆகவே குறைத்துக் கொண்டு வருவதை ஆதரிப்பார்கள் என்று கருதுகிறேன். இன்று நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்கிறபோது ஐந்து ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்று சொன்னால் அது 18 ஏக்கர், 20 ஏக்கர் என்று வருகிறது. அடுத்து நன்செய் என்றால் எவ்வளவு புன்செய் என்றால் எவ்வளவு? நன்செய் என்றால் 1½ ஏக்கர், புன்செய் என்றால் 3 ஏக்கர் என்று கொடுக்கப்படுகிறது. நன்செய்யும் வைத்திருந்தால், புன்செய்யும் வைத்திருந்தால் எப்படிக் கொடுப்பது? நன்



1979 நவம்பர் 2] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

செய்யாக இருந்தால் ஒரு ஏக்கரை இரண்டு ஏக்கர் புன்செய்யாக வைத்துக் கொண்டு இன்று கொடுக்க இருக்கிறோம் என்று உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் இன்று பினாமி நிலங்கள் பற்றிச் சொன்னார்கள். பினாமி நிலங்கள் என்பது இன்று ஏற்பட்டதல்ல. பினாமி என்பதே கண்டு பிடிக்க முடியாமல் மறைப்பதற்கு வேண்டிய எல்லாவிதமான பாதுகாப்பும் தேடிக் கொண்டு வைத்திருக்கிறார்கள் என்று அர்த்தம். அப்படி வைத்திருப்பதை, பாதுகாப்பாக வைத்திருப்பதைக் கண்டு பிடிப்பது என்றால் அதற்கு எவ்வளவு நிரம்பட நாமெல்லாம் பாடுபடவேண்டும் என்று உங்களுக்கு நன்கு தெரியும். இந்த அரசு, தனக்கு இருக்கிற திறமையை பூராவும் பயன்படுத்தி, இருக்கிற சட்டத்தையும் பயன்படுத்தி பினாமி நிலங்களையெல்லாம் எடுக்கவும், அவை களை ஒழிப்பதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்) கட்சியை சார்ந்த உறுப்பினர் திரு. சொரணம் அவர்கள் இதை மனமார வரவேற்கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் வெளிப்படையாக வரவேற்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. சிவசாமி அவர்கள் பேசுகிறபோது இதை ஆதரிப்பதிலும் அவருக்கு சில தயக்கம், எதிர்ப்பதிலும் சில தயக்கம் அவர்களுக்கு இருந்தது. அந்தத் தயக்கமே வேண்டியதில்லை. உங்கள் மனதில் படுவதை தெளிவாகச் சொல்லிவிடுங்கள். சந்தேகம் இருந்தால் என் னிடம் வந்து பேசுங்கள். இன்றிருக்கிற நிலச்சொந்தக்காரர்கள் பெரும் பாலோர் ஒரு ஏக்கர், ஒன்றரை ஏக்கர் என்றுதான் வைத்துக்கொண்டிருக் கிறார்கள். அப்படியிருக்கிறபோது எடுக்கப்படுகிற நிலங்களை மட்டும் ஏன் அவர்களுக்கெல்லாம் பதினெட்டு ஏக்கர், இருபது ஏக்கர் என்று கொடுக்க வேண்டும்? அவைகளை குறைத்துக் கொடுக்கவேண்டும். அப்படியானால் தான் அதிகம் பேர்களுக்கு குறிப்பாக ஆதி திராவிட மக்கள் அதிகம் பேர் களுக்கு நிலம் கிடைக்கும் என்பதால்தான் இதைச்சொல்கிறோம் என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி:** ஏற்கனவே உழைத்துக் கொண்டிருக்கிற நிலத்தைக் குறைக்கக் கூடாது என்றுதான் சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** உழைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு குறைக்கக் கூடாது என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. நூற்றுக் கணக்கில் ஏக்கர்கள் வைத்துக் கொண்டிருப்பதை குறைக்கக் கூடாதா? 50 ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பதைக் குறைக்கக் கூடாதா? 20 ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருப்பதைக் குறைக்கக் கூடாதா? இதில் கருத்து மாறுபாடு இருக்கிறது. அந்தந்தக் கட்சிக்கு ஏற்றவாறு 15 ஸ்டான்டர்ட் ஏக்கர், 20 ஸ்டான்டர்ட ஏக்கர், 50 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று சொல்வார்கள். 20 ஏக்கர் வைத்துக் கொண்டிருந்தால் என்ன செய்வது என்பதுதான் கேள்வி.

**திரு. செ. சிவசாமி:** சாதாரண நிலம் ஐந்து ஏக்கர் வைத்திருப்பவர்கள் கூட—இந்தச் சட்டத்தின் மூலம் 1½ ஏக்கர் என்று மாற்றக்கூடிய நிலை இருக்கிறது, அந்தமாதிரி நிலையில் விவசாயிகள் பெரிய அளவில் பாதிக்கப்பட இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும்படி இந்தச் சட்டத்தை பரிசீலனை செய்யவேண்டும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சிவசாமி அவர்களுக்கு ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நீண்ட காலமாக பினாமி என்ற பெயரால் வெவ்வேறு தனிப்பட்ட விவசாயிகள் பேரில் வைத்துக் கொண்டு ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு சொந்தக்காரர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்து எல்லோருடைய மத்தியிலும் இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் அதைப் பயன்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டம்.

**திரு. செ. சிவசாமி:** அப்படிப்பட்டவர்களிடமிருந்து எடுப்பதில் எந்த விதமான ஆட்சேபனையும் கிடையாது.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பினாமி நிலங்களை எடுப்பதுபற்றி ஆட்சேபனையில்லை. இங்குள்ள பிரச்சினை என்னவென்றால், ஏற்கனவே சர்ப்ளஸ் நிலங்களை எடுத்து அஸைன் செய்யப்பட்ட பிறகு அவர்கள் அதை அனுபவித்து வருகிறபோது இப்போது வருகிற குறைந்தபட்ச அளவு காரணமாக ஏற்கனவே ஐந்து ஸ்டான்டர்ட் ஏக்கர் கொடுக்கலாம் என்று கொடுக்கப்பட்டு, சாதாரண விவசாயிகள், ஏழைகள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அதை அனுபவிக்கும்போது, அனு





பவித்து வரும்போது, இப்போது அவர்களுக்கு குறைந்த அளவு என்று கொண்டுவரும்போது அதுவும் எடுத்துக்கொள்ளப்படுமா என்ற கேள்வியைத் தான் திரு. மாரிமுத்து அவர்கள் எழுப்பினார்கள். அதற்குத்தான் விளக்கம் கேட்கிறோம்.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல கருத்தை நிறைவேற்றி வைப்பதற்காகத்தான் இச்சட்டம் கொண்டு வரப்படுகிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சந்தேகப் படுவதைப்போல் நிலத்தை எடுத்துக்கொள்வதற்காக அல்ல.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இது ஆக்டாக ஆகிவிட்டால், அதை நாம் அமுலாக்கியாக வேண்டும். இதில் முக்கியமாக பினாமி என்று வைத்துக் கொண்டு, பலபேர்களின் பெயரில் நிலத்தை எடுத்து வைத்துக்கொண்டு ஒருவரே அனுபவித்துக்கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட நிலத்தை எடுக்க வேண்டும் என்று சொல்வதில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை. இதில் முக்கியமாக ஒரு விவசாயி மூன்று ஏக்கர் என்று வைத்திருந்தால், அல்லது அதற்கு குறைவாக இருந்தால், அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும் என்ற அளவில், அவர்களிடமிருந்து இப்போது குறைக்கப்பட்டுள்ளது போன்று ஒன்றரை ஏக்கர் என்று நிர்ணயித்துவிட்டால், அந்த விவசாயி வைத்திருக்கும் பாக்கியுள்ள ஒன்றரை ஏக்கர் பாதிக்கப்படுமா என்பது தான் இப்போது தெரிந்துகொள்ள வேண்டியது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** இந்தச் சட்டத்தில் எந்த இடத்திலும் 'ரெட்ராஸ்பெக்டீவ் எஃபக்ட்' என்று சொல்லவில்லை. அவ்வாறு இருக்கக்கூடாது என்றுதான் பலர் கருத்து தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதையும் நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது சட்டத்தில் "ரெட்ராஸ்பெக்டீவ் எஃபக்ட்" என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை. . .

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இதில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

"as subsequently modified, shall have effect as if, in subsection (2) of section 94.— "

என்றிருக்கிறது. முந்திய ஆண்டில் சொல்லப்பட்டிருப்பது அப்படியேதான் இருக்கிறது. ஆகவே அதைத்தான் நாம் எடுத்துக்கொள்ள முடியும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** : மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்களுடைய கருத்தோடு நான் அதிகமாக மாறுபடவில்லை. எப்போதிலிருந்து என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்பதை அமைச்சர் அவர்களே சொல்லுகிறார்கள்; இந்தச் சட்டம் கொண்டு வந்ததற்கு அடிப் படையான காரணம், முந்தைய சட்டத்தை உபயோகித்து எப்படியெல்லாம் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டதின் பின்னால்தான்; அவரை ஏமாற்றி சொத்துக்களை பிரித்து வைத்து அனு பவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. அதற்கு ஒரு மாற்று கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து** : அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் தற்போது ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருப்பதை மூன்று ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைக்கப்போவதாக சொன்னார்கள், மேலும் இதற்காக கொடுக்கப்பட்டிருக்கும் அமென்ட்மென்டில், . .

'(i) in clause (a), fo: the expressi. n three standard acres, the leresscn ''three acres of dry land or one and a half acres of we and had been submitted.''

என்றிருக்கிறது. முன்னால் ஐந்து எக்கர் என்றுதான் இருந்தது. சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால் முன்னாலே மூன்று ஏக்கர் இருந்தது போல் இருக்கிறது. அப்படியிருப்பது உண்மையா? இந்த அமென்ட்மென் டில் சொல்லியிருப்பதைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது. இதை ரெக்டிஃபை பண்ணிக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : தலைவர் அவர்களே, உச்ச வரம்புச் சட்டத்தின்படி யாரிடமிருந்து நிலம் எடுக்கப்படுகிறதோ, அவர் களுக்கு முன்னுரிமை இருக்கிறது. மூன்று ஏக்கரும் அதற்கும் குறைவாக இருந்தால் அவர்களுக்கு கொடுக்கலாம். அதில் ஐந்து ஏக்கர் வரை கொடுக்கலாம் என்றிருந்தது. ஒருவரிடம் பத்து ஸ்டாண்டர்ட் எக்கர் இருந்து அவரிடமிருந்து ஆறு ஏக்கர் எடுத்துவிட்டால், நான்கு ஏக்கர் மீதியிருந்தால் கொடுக்க வேண்டியதில்லை. அதேபோன்று 9 ஏக்கர் இருந்து அதில் 6 ஏக்கர் எடுத்துவிட்டு, மீதி 3 ஏக்கர் இருந்தால் அப்போதும் கொடுக்கவேண்டியதில்லை. மூன்று ஏக்கர்களுக்கும் குறைவாக இருந்தால், அவர்களிடமிருந்து எடுக்காமல் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பதுதான் நோக்கம். அப்படி





கொடுப்பதில் அவர்களிடம் மூன்று ஏக்கர்களுக்கும் குறைவாக இருந்தால் அப்படியே கொடுத்துவிடவேண்டும் என்றிருக்கிறது. மூன்று ஏக்கர் என்று இல்லாமல் இருந்தால், அவர்களுக்கு நஞ்சையாக இருந்தால் ஒன்றரை ஏக்கரும் புஞ்சையாக இருந்தால் 3 ஏக்கரும் கொடுக்கவேண்டும். அதில் ஒரு ஏக்கர் நஞ்சை என்பதை இரண்டு ஏக்கர் புஞ்சை என்று ஏற்றுக்கொள்ளப் படும் என்று இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி** : நமது முதலமைச்சர் அவர்கள் ஒரு உறுதியான கருத்தை சொன்னார்கள். தொடர்ந்து பல சட்டங்கள் வந்தும், பினாமி பெயரால், அதிகமாக நிலங்களை பலர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை மாற்றவேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று சொன்னார்கள். அது நல்ல கருத்துத்தான். இப்படி பினாமி நிலங்களை வைத்துக்கொண்டிருப்பவர்களை கண்டுபிடிக்க இப் போதுள்ள அதிகாரிகளின் மூலமாக முடியாது என்பது தெரிந்த உண்மை. ஆகவே கேரளாவிலும், மேற்கு வங்காளத்திலும் செய்திருப்பது போல். அதிகாரம் கொண்ட மக்கள் கமிட்டி ஆங்காங்கே அமைத்து, அங்கங்குள்ள உண்மையான விவசாயிகள் யார் என்பதை கண்டுபிடித்து, பினாமியாக யார் நிலம் வைத்திருக்கிறார்கள் என்பதையும் கண்டுபிடித்து அதை எடுத்து உண்மையான விவசாயிகளுக்கு வழங்க முடியும். இந்த முறையில் இதை சீரான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்**: பேரவைத் தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் இங்கு குறிப்பிட்ட இந்தக் கருத்தை நான் மனதிலே பதிய வைத்துக்கொள்கிறேன். எந்த அளவுக்கு குழுக்கள் அமைக்க முடியுமோ அதை இந்த அரசு நிச்சயமாக செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி:—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை) சட்ட முன்வடிவு எண் 48/1979" ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

[1979 நவம்பர் 2

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை) சட்ட முன்வடிவு எண் 48/1979 " நிறைவேற்றப் பெறவேண்டும் என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

### (ஒ) சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே,

" 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1979)" ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, இதிலே குத்தகை என்ற வார்த்தையைப் பார்த்து குழப்பம் வந்துவிட்டது. இதிலே பயிரிடுவோர்கள் எங்கே வந்துவிட்டார்கள் என்று பார்த்தேன். உண்மையிலே, சிடி டெனன்ட்ஸ் புரொடெக்ஷன் ஆக்ட் அதாவது நகரத்திலே இருக்கக்கூடிய வாடகை கொடுக்கக்கூடியவர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் போடப்பட்டிருக்கிறது. அடுத்தவர் நிலத்திலே, வீடு கட்டிக் கொண்டோ, குடிசை கட்டிக்கொண்டோ இருந்தால், அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்து, வீட்டைச் சொந்தமாக்குவது என்ற விதிமுறை இருக்கிறது. அவர்களை வெளியேற்ற முடியாது என்று சொல்லி, பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் ஏற்கெனவே ஜி. ஓ. போட்டு, அதன் ஆயுள் எக்ஸ்டென்ட் பண்ணப்பட்டிருக்கிறது. டவுன் ஷிப்பிலுள்ள ரெசிடென்சியல் பில்டிங்ஸ், நான்-ரெசிடென்சியல் பில்டிங்ஸ் இருந்தாலும்கூட, அவைகள் பற்றியும் சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

---

* 1979, அக்டோபர் 29 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.



1979 நவம்பர் 2] [திரு. க. சுப்பு]

டவுன்ஷிப் என்பது எது, எதை டவுன்ஷிப்பாக ஆக்க வேண்டும் என்ற கொள்கை கிடையாது. சிறப்பாக இயங்கக்கூடிய பஞ்சாயத்தாக இருந்தாலும், அது நகர பஞ்சாயத்தாக இருந்தாலும், தங்கள் கன்ட்ரோலில், தங்கள் கட்சிக் கன்ட்ரோலில் இல்லையென்றால், உடனே கலைத்து விடுவது என்ற நிலைமையில் இருக்கிறார்கள் . . . . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சட்டப் பேரவை தலைவர் அவர்களே, இப்படி மாறுபாடாகப் பேசுவது நியாயந்தானா என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். அதற்குப் பதில் சொல்ல வந்தால், விவாதம் நீடிக்கும் ; வேலை நடக்காது.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, குறை கூறுவதற்காகத் தான் இருக்கிறோம். தப்பான வேலையை, தப்பு என்று சொல்கிறோம் . . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் நன்றி கூறுகிறேன். தப்பான வேலை என்று சொன்னதற்காக மிக்க நன்றி.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே, ரெட் ஹில்ஸ் அதாவது செங்குன்றத்தில் பல பஞ்சாயத்துக்களில் காங்கிரஸ்காரர்களும், தி. மு. க. வினரும் இருந்தார்கள். அதிலே கண்ணை உறுத்திற்று. அப்படி உறுத்த வேண்டியதுதான், உடனே அதை கலைத்துவிடுகின்ற ஜனநாயக நடவடிக்கையை பின்பற்றி இருக்கிறார்கள்.

தேவையில்லாத இடத்திலே எல்லாம் டவுன்ஷிப்பை அமைத்து விடுகிறார்கள். திருவேற்காடை டவுன்ஷிப்பாக ஆக்கிவிட்டார்கள். அது பஞ்சாயத்தாக இருந்தது. அதை டவுன்ஷிப்பாக ஆக்கினார்களே, அந்த பஞ்சாயத்து போர்டுத் தலைவரையாவது அதிலே போட்டார்களா ? இல்லை. ஊர் பேர் தெரியாத ஒருவரை அதிலே போட்டிருக்கிறார்கள். அவர் கையிலே அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அது நான்-எக்ஸிஸ்டென்டாக இருக்கிறது.

அதேபோல், அம்பத்தூர் டவுன்ஷிப்பாக்கப்பட்டது. அங்குள்ள லைவ் சேர்மனிடத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் யாரையாவது போடுவது பற்றி சிந்தித்தார்களா ? இல்லை மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒருவரை போட்டிருக்

கிறார்கள். அவர் கொடியேற்று விழாவிற்கு எங்களைக் கூப்பிடக்கூடிய நிலைமை. சர்க்கார் இந்த நடைமுறைகளை யெல்லாம் ஏற்றுக்கொள்வ தில்லை.

இப்போது, முதல் அமைச்சர் அவர்கள் பசும்பொன்னிற்கு டவுன்ஷிப் கமிட்டி போடுவதாக சொல்லியிருக்கிறார்கள். உலகத்திலே நெருந்து வருகின்ற. . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் சுப்பு அவர்கள் சிரிக்காமல் இருந்த மன்றத்தைச் சிரிக்கவைக்க முயற்சித்ததற்காக நன்றி. சுற்றலா இடமாக ஆக்கப்படும். டவுன்ஷிப்பாக மாற்றுவதற்கு முறையிருக்கிறது என்று கருதுகிறேன்.

**திரு. க. சுப்பு:** தலைவர் அவர்களே, குற்றாலத்தை டவுன்ஷிப்பாக ஆக்கினார்கள்; அதேபோல் 'திருவேற்காட்டை ஆக்கினார்கள். எங்கே எல்லாம் கோயில்கள் இருக்கிறதோ, எங்கே எல்லாம் சுற்றுலாப் பயணிகள் வருவார்களோ, அங்கே யெல்லாம் டவுன்ஷிப்பை ஏற்படுத்தி, இன்கம் ஏற்படுத்துவதிலே நம் அமைச்சர் வீரப்பன் அவர்கள் எக்ஸ்பர்ட். . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் வீரப்பன் நல்ல திறமைசாலி என்று ஒப்புக்கொண்டதற்காக நண்பர் சுப்பு அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். ஆனால், டவுன்ஷிப் என்பதற்கு இவ்வளவு ஜனத்தொகை இருக்கவேண்டும் என்றெல்லாம் கணக்கு இருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும்.

(பிற்பகல் 1-10)

**திரு. க. சுப்பு:** டவுன்ஷிப் என்று கிராமங்களையும் சேர்த்து ஆக்குகிறார்கள். கோயில் இருக்கிற இடங்களை டவுன்ஷிப் என்று ஆக்குகிறார்கள். பசும்பொன்னை சுற்றுலா ஸ்தலம் என்று சொல்லி டவுன்ஷிப் ஆக்குகிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** டவுன்ஷிப் பற்றி இங்கே சட்டம் வரவில்லை. எதை வேண்டுமானாலும் பேசுவது என்றால் அவற்றையெல்லாம் மேடையிலே சென்று பேசவேண்டும். இங்கே சட்டத்தைப் பற்றிப் பேசினால் நல்லது.

**திரு. க. சுப்பு:** சட்டம் உங்கள் அளவுக்கு எனக்குத் தெரியாது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** நான் சட்டம் படிக்காதவன் என்பது உங்களுக்குத் தெரியும்.





**திரு. க. சுப்பு:** உண்மைதான். . .

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** நான் சொன்ன பிறகுதான் உண்மை தெரிந்தது என்பதற்காக நன்றி.

**திரு. க. சுப்பு:** சட்டம் தெரியவில்லை என்றாலும் நான் அவர்களிடம் மரியாதை வைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே நேரத்தை நீட்டிக் கொண்டிருக்காமல் சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் முடிப்பதற்கு என்னுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** ரோடு ரோலர் மாதிரி போய்க் கொண்டிருக்கிறது. வரிசையாக சட்ட முன்வடிவுகளை விட்டுக் கொண்டே இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக வேகமாகப் பேசக்கூடியவர் சுருக்கமாகக் கருத்துக்களை கூறவேண்டும்.

**திரு. க. சுப்பு:** சட்டத் திருத்தத்தின் ப்ரொடெக்ஷன் டவுன்ஷிப்புகளுக்கும் எக்ஸ்டென்ட் பண்ணப்பட்டிருக்கிறது. நான்-ரெசிடென்ஷியல் ஏரியாவுக்கும் எக்ஸ்டென்ட் பண்ணப்பட்டிருக்கிறது. ரெசிடென்டாக இருந்தால் டெனன்ட், நான்-ரெசிடென்ஷியல் ஏரியாவில் என்ன?—

Non-Residential buildings also wtll come under this Act.

குடியிருந்தால் டெனன்ட், குடியில்லாமல் டெனன்ட் எப்படி இருக்க முடியும்? ஒரு ஜி.ஓ. போட்டு போகாத ஊருக்கு வழி காட்டுவது போல் இருக்கிறது. ஜி.ஓ. போட்டு செல்லாத காரணத்தால் இப்போது சட்டமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஜி.ஓ. போட்டு செல்லவில்லை என்றால் அதைச் சட்டமாகக் கொண்டு வந்தால் செல்லுமா? முக்கியமான பிரச்சினை— இதிலே சாதாரண மக்கள் பாதிக்கப்படுவார்கள். பசும்பொன்னில் ஒருவன் வீட்டை ஏதோ ஆபீசுக்கு வாடகைக் கொடுத்திருந்தால், அரசாங்க ஆபீசுக்குக் கொடுத்திருந்தால் அந்த வீட்டை திருப்பி வாங்க முடியாது. இவ்வளவு அக்கிரமமான சட்டத்தைக் கொண்டு வரவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன். இதனுடைய பூர்வாங்க குறிக்கோள் தொழிற்சாலைகளாக மாற்றி கட்டிடங்களைக் கட்டுவதற்காக குத்தகைக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய பிரச்சினை. டவுன்ஷிப்புக்கும் இது நீட்டிக்கப்படுகிறது. ஏற்கனவே உள்ள அம்பத்தூர், கத்திவாக்கம், ஆவடி போன்ற பகுதிகளும் இதிலே சேர வேண்டுமென்பதற்காகத்தான் இது கொண்டு வரப்படுகிறது என்று நினைக்கிறேன். 3-வது பிரிவு 'ஏ'-ல் சென்னை மாநகர குத்தகைதாரர்கள் பாது காப்புத் திருத்தச் சட்டம் தமிழ்நாடு அரசிதழில் வெளியிட்ட நாளுக்கு முன்னதாக உள்ளவற்றுக்குப் பொருந்தும் என்று இருக்கிறது.

பலவிதமான சூழ்நிலையில் சில தவறான முறைகளில் எல்லாம் பல நடக்கின்றன. இன்றைக்கு இருக்கக்கூடிய டவுன்ஷிப்பில் சர்க்காரால் நியமிக்கப் படக்கூடிய அவர்கள் அதிலே பிரியம் போல் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆகவேதான் டவுன்ஷிப்பை இதிலே சேர்ப்பதாக இருந்தால் மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒரு குழு அதிலே இருக்க வேண்டும். அதன் மூலமாக இது வருவது நல்லதாக இருக்க முடியும். நகரசபைகளுக்குக் கூட தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு கிடையாது. கமிட்டி வந்ததற்குப் பிறகு இது நடைமுறைக்கு வரவேண்டுமே தவிர அதிகாரிகளாக நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு ஒப்பந்தம் செய்யக்கூடிய அளவுக்கு இருக்கக் கூடாது.

டவுன்ஷிப்களைச் சேர்க்கக்கூடிய அதே நேரத்தில் டவுன் பஞ்சாயத்துக் களையும் சேர்ப்பது நல்லது. டவுன் பஞ்சாயத்துக்களில் இதுபோன்ற தொழிற்சாலைகள் வரக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆகவே, டவுன் ஷிப்போடு டவுன் பஞ்சாயத்துக்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவை தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் புதிதாகக் கொண்டுவரப்படவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இங்கே பேசுகின்றபொழுது—அவர்கள் இங்கே வரவேண்டுமென்பதற் காகத்தான் எடுத்தவுடனே அவர் பெயரைச் சொன்னேன் வேறு ஒன்றும் இல்லை—இங்கே அவரும் மற்றவர்களும் சொல்லி இருக்கிறார்கள்.

இந்தச் சட்டம் புதிதாகக் கொண்டுவரப்படவில்லை. 1921 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அப்படிக் கொண்டுவரப்பட்டபோது சில நகராட்சி கள் அதிலே சேர்க்கப்பட்டன. பின்னாலே படிப்படியாக 1955 ஆம் ஆண்டிலே



சட்டம் கொண்டுவரப்பட்டு அப்போது சில நகரங்கள் சேர்க்கப்பட்டன. 1960 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட சட்டத்திலே சேலம், திருச்சி, கோயம் புத்தூர், மதுரை நகராட்சிகளிலே உள்ள குடியிருப்புகளுக்கும் விஸ்தரிக்கின்ற முறையிலே ஏற்பாடு செய்யப்பட்டது. 31—5—1975 ஆம் நாளிட்ட அரசு ஆணை 1285 இல் எல்லா நகராட்சிகளிலும் உள்ள குடியிருப்புகள் அல்லாத பிற மனைகளுக்கும் இந்தச் சட்டம் விஸ்தரிக்கப்பட்டு நடைமுறையில் இருக் கிறது. 1975 இல் சட்டம் கொண்டுவரப்பட்டது. 10—12—1973 ஆம் ஆண்டிலே இந்தச் சட்டம் நகரங்கள் அல்லாத நகரியங்களுக்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அன்றைக்கே டவுன்ஷிப்புக்கும் கொண்டுவரப்பட்டிருக் கிறது. ஆகவே முன்பு இருந்த அரசு கொண்டுவந்திருக்கிறது. சில இடங் களிலே சில சட்ட சிக்கல்கள் இருந்தன, குடியிருப்பு இல்லாத இடங்களிலே இந்தச் சட்டம் செல்லுமா செல்லாதா என்ற சந்தேகத்தைப் போக்குகிற வகையிலே இந்தச் சட்டம் அவைகளுக்கும் செல்லும் என்று கொண்டுவரப் பட்டிருக்கிறது. இது தான் விளக்கம். திரு. சுப்பு அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அப்படிக் கொண்டுவரப்பட்டபோது அவர் எங்கே இருந்தார் என்று தெரியும்.

திரு. க. சுப்பு: 1922 இல் அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப் போது இரண்டு பேரும் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 1975 இல் கொண்டுவரப் பட்டது 1973 இல் டவுன்ஷிப்புக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது, அப்போது நானும் இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது. சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, '1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1979) சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ஔ) சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.**

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, "1979ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்' என்று மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. சுப்பு இருக்கையில் இல்லை.

***திரு. மு. அரங்கநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியினுடைய திருத்த சட்டமுன்வடிவு இங்கே சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தில் 4 ஆண்டுகள் 6 மாதம் என்று இருக்கிறது. ஏற்கெனவே 1973 ஆம் ஆண்டு மாநகராட்சி கலைக்கப்பட்டதற்குப் பின்னால் ஏறத்தாழ 6 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. 6 ஆண்டுகளில் ஏறத்தாழ 4 சிறப்பு அலுவலர்கள் மாநகராட்சியினுடைய நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்கள். என்னதான் சிறப்பு அலுவலர்களைப் போட்டுப் பணியாற்றினாலும் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாதபோது உண்மையாகவே குறைகளைக் களைவதற்கு இயலாது என்பதை ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலே ஏற்கனவே 4 ஆண்டுகள் 6 மாதம் என்று இருப்பதை, இப்போது ஒரு ஆண்டு கூட்டி 5 ஆண்டுகள் 6 மாதம் என்று ஆக்கி சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள். நான் இதை வன்மையாகக்

(பிற்பகல் 1-20)

கண்டிருக்கிறேன். அந்தக் காரணத்தினால் இன்றைக்குச் சென்னை நகரத்தில் சீர்கேடுகள் மிகவும் நலிந்து கிடக்கின்றன என்பதை மிகத்தாழ்மை

*1979, அக்டோபர் 30 ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



யோடு தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை நகரத்தினுடைய அபிவிருத்திப் பணிகள் இன்றைக்கு அபிவிருத்தி அடையவில்லை. மாநகராட்சியினுடைய வருவாய் 1973 ஆம் ஆண்டுக்குப் பிறகு கூடியிருக்கிறது; ஆனால் அந்த அளவிற்கு இந்த ஆறாண்டுக் காலத்தில் சென்னை மாநகரத்தின் நிர்வாகப் பணிகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் அபிவிருத்தி இல்லை என்பதைத் திட்டவட்டமாக நான் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இதற்கென்று தனியாக ஒரு குழு அமைப்பீர்களேயானால் அதிலே இதை நான் நிரூபித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே சென்னை மாநகராட்சியின் இணைப்பிலே இருந்து குடிநீர் வடிகால் வாரியத்தைப் பிரித்த பிறகு சென்னை மாநகரம் இன்னும் சீரழிந்து இருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரையில், இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் பத்து இலட்சம் ரூபாய் எந்த அபிவிருத்திப் பணிகளுக்கும் செலவிடப்படாமல் பாழாக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சாட்ட விரும்புகிறேன். அதற்கும் ஒரு விசாரணைக் குழு அமைத்தால் இதையும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர்கள் வருகிறார்கள், வெளிநாட்டிலிருந்து முக்கியப் பிரதிநிதிகள் வருகிறார்கள் என்றால், மெயின் ரோட்டை மட்டும் செப்பனிட்டு அவர்களுக்குக் காட்டி விடுகிறார்கள். ஆனால் உள்பகுதிகளிலே சென்று பார்த்தால் சாக்கடைத் தண்ணீர் ஓடுகிறது, ரோடு வசதி சரியாக இல்லை, நடைபாதை சரியாக இல்லை. இதையெல்லாம் உள்பகுதிக்குள் சென்று பார்க்க வேண்டும். சில அமைச்சர்கள்கூட அங்கே சென்று பார்க்கிறார்கள். இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் அப்படிப் பார்க்கின்றார்களே தவிர அபிவிருத்திப் பணிகள் செய்யப்படவில்லை. இன்றைக்கு இப்படிப்பட்ட சீர்கேடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், உடனடியாகத் தேர்தலை வைக்க வேண்டுமென்று பலமுறை இந்த அவையில் தெரிவித்தபோது விரைவிலே வைத்து விடுவோம் என்று அமைச்சரவர்கள் சொல்லி, எல்லா அதிகாரிகளும் தயாராக இருக்கிறார்கள். தேர்தலை வைக்க ரெடியாக இருக்கிறோம் என்று இந்த அவையிலேயே சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லி வந்த கால கட்டத்திலே, மதுரை மாநகராட்சிக்கு மட்டும் உடனடியாகத் தேர்தலை நடத்திவிட்டீர்கள்; ஆனால் ஏன் சென்னையில் தேர்தலை நடத்தப் பயப்படுகிறீர்கள்? ஏன் இந்த அச்சம்? இதனால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இரவிலே சென்னை நகரத்தைச் சுற்றிப் பாருங்கள். விளக்குகள் சரியாக எரிவது இல்லை.

அந்த அளவிற்குச் சீர் கேடு அடைந்திருக்கிறது. அதைப் பற்றிக் கேட்கக் கூட நாதி இல்லை. நேற்றைக்குப் பெய்த பெருமழையின் காரணமாக எனது தொகுதியிலுள்ள மாயாண்டிக் காலனியில் மாநகராட்சியின் மின்சாரம் லீக்கேஜ் ஆகி ஒரு ஆடுகூட இறந்துவிட்டது. இன்றைக்குக் காலையிலே ஆணையாளருக்குத் தகவல் கொடுத்தேன். அதற்குப்பின் மின் துண்டிப்பு செய்யப்பட்டிருக்கிறது; அந்த அளவிற்கு நிர்வாகம் சீர்கேடு அடைந்திருக்கிறது.

இந்த நிலையில் மேலும் ஓராண்டு என்றால் உங்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்கிறதா? ஏன் மாநகராட்சித் தேர்தலைச் சந்திக்கப் பயப்படுகிறீர்கள்? பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவதை ஒட்டி அதோடு இணைத்து இந்தத் தேர்தலையும் வையுங்களேன், அதற்கு வாய்ப்பு இருக்கிறதே. தேர்தலை வைத்தால் சென்னை மாநகராட்சிக்கு யார் வேண்டுமானாலும் வந்துவிட்டுப் போகட்டும், அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. எனவே, இந்த நிலையிலே நீங்கள் இன்னமும் பின்தங்கி பின்தங்கி இந்தத் தேர்தலைத் தள்ளிப் போடுவது சரியல்ல, தனி அதிகாரிகளுக்கு அதிகாரங்களைக் கொடுத்து, 'ஏக் தீன் கா சுல்தான்' என்ற அந்த நிலையிலே இருப்பதால் மிகவும் சீர்கெட்டிருக்கிறது. அங்கே மக்கள் பிரதிநிதிகள் செல்வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யுங்கள். அதில் காலதாமதம் செய்து ஐந்தாண்டுகள் ஆறு மாதங்கள் என்று ஆக்குவதை வன்மையாகக் கண்டித்து அமர்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, ஏற்கனவே கூறப்பட்ட சட்டத்தில் வரையறுக்கப்பட்ட காலக்கெடுவை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து தருவதற்கான இந்தத் திருத்தச் சட்டம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒரு சட்டம் அல்ல என்பதை இந்த நேத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வரையறுக்கப்பட்ட காலக்கெடுவை நீட்டிப்பதற்காகக் கூறப்படும் காரண காரியங்கள் என்னவென்றால், (1) சென்னை மாநகராட்சியினுடைய எல்லைகளை விரிவு படுத்த இருக்கிறீர்கள், அதற்கான வரையறைகளை நிர்ணயிக்க வேண்டும் என்பது; (2) புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பகுதிகளிலே கணக்கெடுப்புகள் நடத்தப்பட வேண்டும், அதற்காகக் காலம் தேவை என்று சொல்கிறீர்கள். எத்தனையோ தடவைகள் கணக்குகள் எடுத்து, இப்பொழுது பாராளுமன்றத் தேர்தலுக்குக் கணக்கெடுத்து வரையறைகள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே தேர்தலை வைக்க வேண்டுமென்றால் அதற்கு இவைகளெல்லாம் காரணமாக அமைந்து விட முடியாது.



மேலும், இன்றைக்குச் சென்னை மாநகரத்தில் சிவிக் அமெனிட்டிகளைப் பார்த்தால் புரியும். பல்புகள் இல்லை; ரோடுகள் சரியாக இல்லை; சுகாதார வசதிகள் இல்லை; சானிடேஷன் வசதி இல்லை. இதற்குக்காரணம் நிர்வாகச் சீர்கேடு மட்டும் அல்ல; நிதிப்பற்றாக்குறையும் காரணம் என்று சொல்லப்படுகிறது. புதிதாக, பஞ்சாயத்துக்களாக இருக்கின்ற சில பகுதிகளையும் சென்னை மாநகராட்சியுடன் சேர்ப்பதால் அந்தப் பகுதிகளும் வளர்ச்சியடையும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் உண்மையிலேயே இருக்கின்ற காரணம் என்னவென்றால், சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே இருக்கும் வாக்காளர்களோடு, புதிதாகச் சேருகின்ற ரூரல் ஏரியா வாக்காளர்களின் ஆதரவு அதிகமாக இருக்கிறது, எனவே, வேறொரு இடத்தில் இருக்கும் ஆதரவை நியூட்ரலைஸ் செய்ய வேண்டுமென்பதற்காகச் சேர்ப்பதால் மாநகராட்சிக்கு நிதிப்பளு அதிகமாகின்றது. ஏற்கனவே சென்னை மாநகராட்சியில் கிடைத்துக்கொண்டிருக்கும் வசதிகள் கிடைக்கவில்லை. மேலும் சில பகுதிகளை இணைப்பதன் வாயிலாக என்ன நன்மையை நகராட்சியும் புதிதாக இணைக்கப்படுகிற பகுதியும் பெறப் போகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஆகையினால், இந்த அரசு நிர்வாகத்தையும், நாட்டினுடைய நன்மையையும், மக்களுடைய நன்மையையும் உத்தேசித்துப் பார்க்காமல், தனக்கு, தன்னுடைய கட்சிக்கு என்ன அதிலே ஆதாயம் என்பதை மட்டும் கணக்கிலே வைத்து காரியங்களைச் செய்கிறது. அத்தகைய காரியங்களில் ஒன்றுதான் இந்த ஓராண்டு நீடித்துத் தருகிற இந்த வேலையும் என்பதையும் தெரிவித்து, ஜனநாயகத்திற்கு சாவு மணி அடித்துக் கொண்டிருக்கிறது இந்த ஆட்சி, ஒவ்வொரு தடவையும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன் வாயிலாக மிகப் பெரிய போராபத்தை அளிக்கிறது; மக்கள் இதைக் கடுமையாக எதிர்ப்பார்கள் என்று சொல்லி, இதைக் கடுமையாக எதிர்த்து அமர்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அரசின் சார்பாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமானது மாநகராட்சித் தேர்தலை மீண்டும் ஒரு ஆண்டிற்கு தள்ளி வைக்க வகை செய்கிறது. இந்த அவையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இதுபோன்ற மசோதாக்கள் வந்திருக்கின்றன. நமது மரியாதைக்கும் மதிப்புக்கும் உரிய முதல்வர் அன்றைக்குச் சொல்லுகின்றபொழுது, மாநகராட்சி மன்றத் தேர்தலை தள்ளி வைப்பதற்கான காரணம் வேறொன்றும் அல்ல, மஸ்டர் ரோல் வழக்கு இருக்கிறது, அது முடிகிறபொழுது நாம் அந்தத் தேர்தலை நடத்துவோம் என்று சொன்னார். அது ஒரு காரணம். நல்லவேளை, மஸ்டர்

ரோல் வழக்கு இப்பொழுது முடிந்துவிட்டது. அதற்குப் பிறகு அப்பீல்
இருக்கிறது, அது முடிந்தபிறகு பார்க்கலாம் என்று சொல்லவில்லை, அதற்
காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் முதல்வர் அவர்கள் அன்று
சொன்ன காரணம் சரியா என்றால் இல்லை. காரணம், நாடாளுமன்ற
உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஆகியோர் பேரில் ஷா கமிஷன்,
சர்க்காரியா கமிஷன், ரெட்டி கமிஷன் அறிக்கைகள் உள்ளன. அந்த
வழக்குகள் முடிந்தபிறகுதான் தேர்தல் என்று நாடாளுமன்றத் தேர்தலை
யாரும் ஒத்தி வைக்கவில்லை. ஆகவே, நாடாளுமன்றத் தேர்தலை
ஒத்தி வைக்காதபோது, முதல்வர் அன்றைக்குச் சொன்ன காரணம்
தவறானது. மஸ்டர் ரோல் வழக்கு முடியட்டும் என்று சொன்னார்.

இப்பொழுது உள்ளாட்சித் துறை அமைச்சர் ஒரு காரணம் சொல்
கிறார். வாக்காளர் பட்டியல் திருத்தப்பட வேண்டியிருக்கிறது, 21
வயதுக்கு மேற்பட்டவர்களை அந்தப் பட்டியலிலே இணைக்க வேண்டியிருக்
கிறது என்று சொன்னார். அது நமது லத்தீப் அவர்கள் சொன்னதுபோல்
சரியான காரணம் அல்ல; அப்படி ஒத்துக் கொண்டாலும் அந்த வேலையைக்
கூடச் சரியாகச் செய்யவில்லை. என்னுடைய சேப்பாக்கம் தொகுதியிலே 21
வயதடைந்தவர்கள், பட்டியலிலே பெயரைச் சேர்க்கக் கோரியிருக்கிறார்கள்,
ஆனால் சேர்க்கவில்லை. அதற்கு ஆதாரம் இருக்கிறது. ஏற்கனவே, 50,000
பேர்கள், வடசென்னையிலே, இராயபுரம் பகுதியிலே விடப்பட்டிருக்கிறார்கள்,
ஆக, அந்தக் காரணம் சரியல்ல. ஆக, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்
துறை அமைச்சரவர்கள் ஏதோ புரட்சித் தலைவர் சினிமா படம் விரைவில்
வருகிறது என்பதைப் போல், தேர்தல் வருகிறது என்று சொல்கிறார்.
ஆகவே, தேர்தலை நீடிக்கச் சொல்கிற காரணம் சரியாக இல்லை என்
பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, அதிகாரி என்று சொல்லும்போது, அதிகாரிகள், கல்லானாலும்
புருஷன் என்பதைப் போலவே கருதிக் கொண்டிருக்கிற காரணத்தாலே,
அவர்களைப் பொறுத்தவரையிலே அவர்களுடைய நிலைமை என்னவென்றால்,
மக்களுடைய பிரதிநிதிகளாக இல்லை. ஆகையினாலே, அதிகாரிகள்
மக்களுடைய பிரச்னைகளை, மக்கள் பிரதிநிதிகள் கவனிப்பதைப் போல்,
கவனிக்க முடியாது. இங்கே என்னுடைய நண்பர் அரங்கநாதன்
அவர்கள் சொன்னதைப் போல், முன்னாள் ஜனாதிபதி கிரி அவர்கள்
சொன்னதைப் போல், சென்னை மாநகரம், மா நரகமாக இருக்கிறது. குறிப்
பாக, என்னுடைய தொகுதியில் அயிஸ் நகரம் போல், கிரவுன்ட்லாக்





தோட்டம், சர்வன்ட் குவார்ட்டர்ஸ், கொய்யா தோப்பு போன்ற பகுதிகளில்
குழாய் இல்லை, பாதைகள் சரியாக இல்லை, விளக்குகள் சரியாக இல்லை,
கழிப்பிடங்கள் சரியாக இல்லை, என்னதான் அதிகாரிகளை அழைத்துக்
காட்டினாலும் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை. இதே சட்டமன்றத்திலே
அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தும் நடவடிக்கை எடுக்க
வில்லை. என்னுடைய தொகுதியில் அருமை சட்டமன்ற உறுப்பினர் முசிறிப்
புத்தன் அவர்கள் வாழ்கிறார்கள். அங்கு ஆளுங்கட்சிக்காரர்கள் கூட்டத்தில்
சொல்லிருக்கிறார்கள், நீங்கள் ரகுமான்கானை சட்டமன்றத்திற்கு அனுப்பிய
தால்தான் இன்றைக்கு இந்த நிலைமை என்று சொன்னார்கள். நான் அங்கே
யும் பதில் சென்னேன், இங்கேயும் சொல்கிறேன். நான் மருமகளைப் போல்
இருக்கிறேன், நமது முதல்வர் மாமியாரைப் போல் இருக்கிறார். எவ்வளவு
தான் கெட்டிக்காரத்தனமாகச் சமையல் செய்தாலும், கொடுமைக்கார மாமி
யாரிடத்திலே சிக்கிக் கொண்ட மருமகளைப்போல் நான் இருக்கிற காரணத்
தால் வேண்டுமென்றே திட்டமிட்டு அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை
யென்று சொன்னேன். ஆகவே, இந்தத் தேர்தலைத் தள்ளி வைப்பது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு இன்னும்
சிறிது நேரம் கூட்ட நேரத்தை நீட்டிக்கிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே மாநகராட்சிக்கு
ஏன் தேர்தல் நடத்தவில்லை என்பதை மட்டுமே பேச்சினுடைய கருப்
பொருளாகக் கொண்டு இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களு
டைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அரங்கநாதன் அவர்கள் அபிவிருத்திப் பணிகளே
நடைபெறவில்லை என்கின்ற வகையிலே அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்
களை ஏற்றுக் கொள்வதற்கில்லை. நிச்சயமாக அவர்களுடைய நல்ல
ஆலோசனைகளை எல்லாம் அவ்வப்போது கேட்டு, அபிவிருத்திப் பணிகளை
சென்னை மாநகரத்திலே சிறப்பாக நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை
நான் தன்னடக்கத்தோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப், பக்கத்திலே இருக்கிற சில
மாட்சிகளை சேர்த்துக் கொண்டீர்கள். அப்படிச் சேர்த்ததற்குக் காரணம்
அங்கே உங்களுக்குச் செல்வாக்கு இருக்கிறது. அதனாலேதான் சேர்த்துக்
கொண்டீர்கள் என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் பையு

(திரு. கா. காளிமுத்து) [1979 நவம்பர் 2

அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வில்லிவாக்கம் கூட சென்னை மாநகராட்சி
யுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. நகரத்தன்மை வாய்ந்த பகுதிகளை நகரத்
தோடு சேர்க்கவேண்டும் என்ற அறிவார்ந்த இலக்கணத்திற்கு உட்பட்டுத்
தான் இணைக்கப்பட்டதே தவிர செல்வாக்கை அளவுகோலாக வைத்து
அவைகளை நாங்கள் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
தேர்தலைத் தள்ளிப் போடுவதற்குக் காரணம் அச்சத்தின் காரணமாக அல்ல;
மக்களைச் சந்திப்பதற்கு மருட்சி கொண்டல்ல; மாண்புமிகு ரகுமான்கான்
அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். "என்னுடைய பகுதியிலே கூட பல
வாக்காளர்கள் சேர்க்கப் படவில்லை" என்று. இப்படிப் பட்ட குறைபாடுகள்
முழுமையாக களையப்படவேண்டுமென்று இந்த அரசு கருதுகிறது. அது
தான் மெய்யான ஜனநாயகமாக இருக்குமென்று இந்த அரசு கருதுகிறது.
ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் போன்றவர்கள் இருக்கிற
பகுதிகளிலேயே வாக்காளர்கள் விடுபட்டுப் போய், அவர்களெல்லாம் வாக்களிக்க
முடியாத நிலைமை ஏற்படுவது நிச்சயமாக மாநகராட்சிக்கு நல்ல உறுப்பினர்
கள் தேர்ந்து எடுக்கப்படுவதற்குத் தடையாக இருக்கக் கூடும்.

அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றவேண்டும் என்கின்ற வகையில் அந்த
குறைபாடுகளைக் களைய வேண்டுமென்கின்ற வகையில் நம்முடைய மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் மிகச் சிரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லி
எந்த வகையிலும் தவறான ஓட்டுக்கள் விழாத அளவிற்கு, எந்த நேரத்திலும்
கள்ள ஓட்டு விழாத அளவிற்கு நிலைமைகள் சீர்திருத்தப்படுவதுடன்
மற்றைய சில மாநிலங்களிலே தேர்தல் முறையிலே பின்பற்றப்படுகின்ற சீர்
திருத்தப்பட்ட புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அட்டைகளை தருவதன்
மூலம் அதனை மிகத் தெளிவாக சீர்படுத்த முடியும், கள்ள ஓட்டுக்கள் விழு
வதைத் தடுக்க முடியும், அதன் மூலமாக திரு. ரகுமான்கான் போன்ற, ஜன
நாயகத் தன்மை பற்றி எடுத்து விளம்பும் நல்ல உறுப்பினர்கள் கருத்துக்கு
மாறுபடாத நிலைமை ஏற்படவேண்டுமென்ற வகையிலேதான் அதனை அரசு
ஆய்ந்து கொண்டிருக்கிறது. அந்த வகையிலேதான் திட்டங்களைத் தீட்டிக்
கொண்டு வருகிறோம்.

ஆகவே திரு. ரகுமான்கான் போன்றவர்கள் மாமியார், மருமகள் என்கின்ற
வகையில் இதைப் பாகுபடுத்திப் பார்க்காமல் மாமியாரும் ஒரு வீட்டு மரு
மகளேதான் என்பதையும் அவர்களுடைய உணர்வுக்கு நான் எடுத்துச்
சொல்லி, ஆகவே அந்தப் பாகுபாடு இந்த அரசுக்கு கிடையாது; அந்த வேறு
பாடு இந்த அரசுக்கு கிடையாது.



1979 நவம்பர் 2] (திரு. கா. காளிமுத்து)

சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் இங்கே சட்டமன்றத்
திலே தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் யார், யார் என்கின்ற வகையில் எல்லாம்
கணக்குப் பார்க்காமல் மாநகராட்சியினுடைய அபிவிருத்திப் பணிகள்,
வளர்ச்சிப் பணிகள் சிறப்பாக நடைபெறவேண்டும் என்கின்ற வகையில்தான்
சிறப்பான வகையிலே நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

நாடாளுமன்றத் தேர்தல் இப்பொழுது எந்த காரணத்தினாலேதான்
தேர்தலைத் தள்ளிப் போடவேண்டுமென்கின்ற அளவிற்கு சூழ்நிலை இருக்
கின்றது. நாடாளுமன்றத்தைக் கலைக்கச் சொன்னது நான் அல்ல என்பதை
நண்பர் ரகுமான்கான் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே தேர்தலை நாம் எவ்வளவு சீக்கிரம் நடத்த வேண்டுமென்று
விரும்புகிறோமோ அவ்வளவு சீக்கிரத்திலே நடத்த முடியாத அளவிற்குச்
சூழ்நிலைகள் தடை விதித்துள்ளனவே தவிர இந்த அரசு அதற்குத் தடைக்
கல்லாக இல்லை. நல்ல நல்ல வாக்காளர் பட்டியல், முழுமையான வாக்காளர்
பட்டியல், குறைபாடுகள் இல்லாத வாக்காளர் பட்டியல், நல்ல மாநகராட்சி
மன்றத்தை உருவாக்குகிற வகையில் ஒரு வாக்காளர் பட்டியலைத் தயாரித்து
தேர்தலை நடத்த இந்த அரசு எண்ணியுள்ளது என்பதைத் தெரிவித்து இந்த
சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, உங்கள்
மூலமாக அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.
தேர்தலை ஒத்தி வைத்ததற்குக் காரணம் வாக்காளர் பட்டியல் சரியாக, முறை
யாக, செம்மையாக தயார் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அப்படி
யானால், மதுரை மாநகராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றது. அவருடைய
கணக்கின்படி முறையான பட்டியலா அது என்று கேட்டால், எங்கள் கட்சி
யைச் சார்ந்த பழனிவேல் ராஜன் அவர்கள் பெயர் அதில் விடப்பட்டு இருக்
கிறது. உள்நோக்கத்தோடு அங்கே விடப்பட்டு இருக்கிறது. ஆகவே அது
ஒரு காரணமாகச் சொல்வது சரியா என்று தெரியவில்லை.

**திரு. மு. அரங்கநாதன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது
அபிவிருத்திப் பணிகள் செய்யப்படவில்லை என்று அரங்கநாதன் சொன்னார்
கள் என்று குறிப்பிட்டார்கள். நான், அபிவிருத்திப் பணிகள் என்று சொல்ல
வில்லை, அபிவிருத்திப் பணிகளை, நெடுஞ்சாலைகள், பெருஞ்சாலைகள்

போன்றவற்றில் செய்கிறார்கள். மக்கள் வாழ்கிற நெருக்கமாக உள்ள சிறுசிறு தெருக்களில் சீர் கெட்டுப் போய் இருப்பதை கவனிப்பாரற்ற நிலையில் இருக்கிறது. மக்கள் வாழ்கிற பகுதியில் அம்மாதிரிப் பணிகள் செய்யப்படவில்லை என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, 1979ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1979)" சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும் என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.37 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

175. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சிப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 17—7—1979 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண் 1074-ல் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்) (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 ( ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.



### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 22. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1979).

* 23. 1979 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு—நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1979).

* 24. ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1979).

* 25. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின்கீழ உள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1979).

** 26. 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழ் உள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1979).

** 27. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்டத்தின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1979).

** 28. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1979).

** 29. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1979).

*** 30. உடுக்குறியிடாத வினா-விடைகள் (1 முதல் 300 வரை).

---

* 30-10-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

** 31-10-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

*** 31-10-1979 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.

## இணைப்பு I

[35-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 301 க்கான விடையைக் காண்க.]

சென்னை மாநகரில் 1—1—1975 முதல் 30—9—77 வரை புதிய கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரி வரப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கையும் அவைகளுள் அனுமதிக்கப்பட்டவை, நிராகரிக்கப்பட்டவை, மேலும் அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிட உரிமையாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை :—

உடுக்குறியிடாத வினா எண் 2606 (அ), (ஆ), (இ):—

| புகாரின் எண். | 1-1-1975 முதல் 30-9-1977 வரை புதிய கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரி வரப்பெற்ற மனுக்கள். | கட்டம் 2-ல் கண்டுள்ளவற்றில் | | அனுமதியில்லாமல் கட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட கட்டிட உரிமையாளர்களின் மொத்த எண்ணிக்கை. | கட்டம் 5-ல் கண்டுள்ளவற்றி | |
|---|---|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்டவை. | நிராகரிக்கப்பட்டவை. | | அபராதம் விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | அபராதம் இல்லாமல் விடப்பட்டவர்களின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | 18 | 12 | 6 | 138 | 130 | 8 |
| 2 | 27 | 24 | 3 | 77 | 77 | .. |
| 3 | 34 | 29 | 5 | 96 | 88 | 8 |
| 4 | 38 | 35 | 3 | 57 | 54 | 3 |
| 5 | 25 | 21 | 4 | 51 | 51 | .. |
| 6 | 20 | 17 | 3 | 47 | 47 | .. |
| 7 | 24 | 22 | 2 | 28 | 23 | 5 |
| 8 | 30 | 27 | 3 | 31 | 18 | 13 |
| 9 | 22 | 20 | 2 | 36 | 36 | .. |
| 10 | 16 | 14 | 2 | 71 | 71 | .. |
| 11 | 36 | 34 | 2 | 18 | 18 | .. |
| 12 | 33 | 29 | 4 | 15 | 15 | .. |
| 13 | 23 | 20 | 3 | 25 | 25 | .. |
| 14 | 25 | 23 | 2 | 17 | 17 | .. |
| 15 | 27 | 27 | .. | 27 | 27 | .. |
| 16 | 21 | 19 | 2 | 1 | 1 | .. |
| 17 | 24 | 20 | 4 | 5 | 5 | .. |
| 18 | 39 | 34 | 5 | 2 | 2 | .. |
| 19 | 32 | 27 | 5 | 9 | 9 | .. |
| 20 | 34 | 27 | 7 | 17 | 17 | .. |
| 21 | 29 | 18 | 11 | 20 | 20 | .. |
| 22 | 25 | 19 | 6 | 48 | 48 | .. |
| 23 | 27 | 24 | 3 | 27 | 27 | .. |
| 24 | 15 | 11 | 4 | 105 | 105 | .. |
| 25 | 27 | 20 | 7 | 14 | 14 | .. |
| 26 | 9 | 5 | 4 | 35 | 35 | .. |
| 27 | 8 | 8 | 0 | 50 | 50 | .. |
| 28 | 39 | 36 | 3 | 18 | 18 | .. |
| 29 | 23 | 21 | 2 | 17 | 17 | |

| பகுதியின் எண். | 1-1-1975 முதல் 30-9-1977 வரை புதிய கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரி வரப் பெற்ற மனுக்கள் | கட்டம் 2-ல் கண்டுள்ளவற்றில் அனுமதிக்கப் பட்டவை. | கட்டம் 2-ல் கண்டுள்ளவற்றில் நிராகரிக்கப் பட்டவை. | அனுமதியில்லாமல் கட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட கட்டிட உரிமையாளர்களின் மொத்த எண்ணிக்கை. | கட்டம் 5-ல் கண்டுள்ளவற்றில் அபராதம் விதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை. | கட்டம் 5-ல் கண்டுள்ளவற்றில் அபராதம் இல்லாமல் விடப்பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 30 | 25 | 25 | 0 | 5 | 5 | .. |
| 31 | 15 | 12 | 3 | 14 | 14 | .. |
| 32 | 29 | 27 | 2 | 30 | 30 | .. |
| 33 | 27 | 26 | 1 | 10 | 10 | .. |
| 34 | 25 | 24 | 1 | 17 | 17 | .. |
| 35 | 21 | 18 | 3 | 7 | 7 | .. |
| 36 | 17 | 15 | 2 | 17 | 17 | .. |
| 37 | 18 | 16 | 2 | 2 | 2 | .. |
| 38 | 27 | 22 | 5 | 19 | 19 | .. |
| 39 | 22 | 20 | 2 | 4 | 4 | .. |
| 40 | 35 | 24 | 11 | 3 | 3 | .. |
| 41 | 84 | 74 | 10 | 57 | 57 | .. |
| 42 | 67 | 54 | 13 | 82 | 82 | .. |
| 43 | 46 | 29 | 17 | 68 | 68 | .. |
| 44 | 26 | 20 | 6 | 14 | 14 | .. |
| 45 | 24 | 18 | 6 | 53 | 53 | .. |
| 46 | 20 | 19 | 1 | 92 | 92 | .. |
| 47 | 24 | 19 | 5 | 6 | 6 | .. |
| 48 | 14 | 14 | 0 | 2 | 2 | .. |
| 49 | 30 | 25 | 5 | 45 | 45 | .. |
| 50 | 14 | 12 | 2 | 7 | 7 | .. |
| 51 | 48 | 38 | 10 | 50 | 32 | 18 |
| 52 | 153 | 128 | 25 | 18 | 9 | 9 |
| 53 | 45 | 36 | 9 | 107 | 65 | 42 |
| 54 | 15 | 12 | 3 | 25 | 25 | 2 |
| 55 | 39 | 29 | 10 | 71 | 67 | 4 |
| 56 | 36 | 24 | 2 | 168 | 168 | 67 |
| 57 | 43 | 29 | 14 | 111 | 104 | 7 |
| 58 | 12 | 8 | 4 | 98 | 85 | 13 |
| 59 | 22 | 17 | 5 | 20 | 20 | .. |
| 60 | 34 | 29 | 5 | 24 | 14 | 10 |
| 61 | 534 | 495 | 39 | 24 | 24 | .. |
| 62 | 55 | 44 | 11 | 38 | 37 | 1 |
| 63 | 80 | 67 | 13 | 77 | 69 | 8 |
| 64 | 155 | 131 | 24 | 20 | 20 | .. |
| 65 | 42 | 36 | 6 | 11 | 8 | 3 |
| 66 | 36 | 29 | 7 | 16 | 13 | 3 |

| பகுதிகள் எண். | 1-1-1975 முதல் 30-9-1977 வரை புதிய கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரி வரப்பெற்ற மனுக்கள். | கட்டம் 2-ல் கண்டுள்ளவற்றில் அனுமதிக்கப் பட்டவை. | கட்டம் 2-ல் கண்டுள்ளவற்றில் நிராகரிக்கப் பட்டவை. | அனுமதியில்லாமல் கட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட கட்டிட உரிமையாளர்களின் மொத்த எண்ணிக்கை. | கட்டம் 5-ல் கண்டுள்ளவற்றில் அபராதம் விதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை, | கட்டம் 5-ல் கண்டுள்ளவற்றில் அபராதம் இல்லாமல் விடப்பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 67 | 32 | 27 | 5 | 14 | 10 | 4 |
| 68 | 69 | 64 | 5 | 8 | 8 | .. |
| 69 | 34 | 31 | 3 | 16 | 16 | .. |
| 70 | 21 | 18 | 3 | 6 | 6 | .. |
| 71 | 71 | 68 | 3 | 84 | 84 | .. |
| 72 | 57 | 47 | 10 | 124 | 124 | .. |
| 73 | 36 | 34 | 2 | 37 | 37 | .. |
| 74 | 41 | 38 | 3 | 67 | 67 | .. |
| 75 | 47 | 41 | 6 | 96 | 96 | .. |
| 76 | 26 | 24 | 2 | 52 | 52 | .. |
| 77 | 38 | 31 | 7 | 79 | 79 | .. |
| 78 | 32 | 31 | 1 | 46 | 46 | .. |
| 79 | 37 | 33 | 4 | 48 | 48 | .. |
| 80 | 29 | 23 | 6 | 63 | 63 | .. |
| 81 | 27 | 26 | 1 | 31 | 28 | 3 |
| 82 | 28 | 26 | 2 | 17 | 16 | 1 |
| 83 | 30 | 28 | 2 | 17 | 15 | 2 |
| 84 | 55 | 51 | 4 | 38 | 38 | .. |
| 85 | 42 | 36 | 6 | 18 | 18 | .. |
| 86 | 37 | 35 | 2 | 62 | 61 | 1 |
| 87 | 35 | 27 | 8 | 28 | 28 | .. |
| 88 | 33 | 31 | 2 | 80 | 74 | 6 |
| 89 | 38 | 32 | 6 | 47 | 39 | 8 |
| 90 | 13 | 12 | 1 | 63 | 57 | 6 |
| 91 | 66 | 61 | 5 | 95 | 95 | .. |
| 92 | 28 | 25 | 3 | 31 | 31 | .. |
| 93 | 33 | 33 | .. | 39 | 39 | .. |
| 94 | 47 | 43 | 4 | 38 | 38 | .. |
| 95 | 73 | 68 | 5 | 42 | 42 | .. |
| 96 | 56 | 47 | 9 | 54 | 54 | .. |
| 97 | 122 | 107 | 15 | 69 | 69 | .. |
| 98 | 122 | 110 | 12 | 46 | 46 | .. |
| 99 | 106 | 89 | 17 | 41 | 41 | .. |
| 100 | 412 | 349 | 63 | 56 | 56 | .. |
| 101 | 88 | 73 | 15 | 97 | 97 | .. |
| 102 | 67 | 60 | 7 | 84 | 84 | .. |
| 103 | 64 | 53 | 11 | 133 | 129 | 4 |

| [illegible] | 1-1-1975 முதல் 30-9-1977 வரை புதிய கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரி வரப் பெற்ற மனுக்கள். | கட்டம் 2-ல் கண்டுள்ளவற்றில் அனுமதிக்கப் பட்டவை. | நிராகரிக்கப் பட்டவை. | அனுமதியில்லாமல் கட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட கட்டிட உரிமை யாளர்களின் மொத்த எண்ணிக்கை. | கட்டம் 2-ல் கண்டு அபராதம் விதிக்கப் பட்டவர் களின் எண்ணிக்கை. | அபராதம் இல்லாமல் விடப்பட்ட வர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 104 | 82 | 72 | 10 | 71 | 57 | 14 |
| 105 | 99 | 84 | 15 | 84 | 84 | .. |
| 106 | 52 | 42 | 10 | 133 | 133 | .. |
| 107 | 57 | 49 | 8 | 113 | 113 | .. |
| 108 | 46 | 39 | 7 | 99 | 99 | .. |
| 109 | 58 | 49 | 9 | 76 | 76 | .. |
| 110 | 83 | 68 | 15 | 78 | 78 | .. |
| 111 | 157 | 106 | 51 | 37 | 37 | .. |
| 112 | 57 | 47 | 10 | 116 | 116 | .. |
| 113 | 58 | 50 | 8 | 34 | 34 | .. |
| 114 | 115 | 90 | 25 | 44 | 44 | .. |
| 115 | 309 | 273 | 36 | 41 | 41 | .. |
| 116 | 98 | 80 | 18 | 42 | 42 | .. |
| 117 | 53 | 38 | 15 | 71 | 71 | .. |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 118 | 66 | 51 | 15 | 94 | 94 | .. |
| 119 | 90 | 76 | 14 | 20 | 20 | .. |
| 120 | 78 | 69 | 9 | 86 | 86 | .. |

(ஈ) 1-8-1977 முதல் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தனது அலுவலக உதவி நகரமைப்பு அலுவலர் ஒருவரைத் திட்ட அனுமதி வழங்குவதில் மாநகராட்சிக்கு உதவி செய்வதற்காகவும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யவும் சென்னை மாநகராட்சிக்கு உதவ அனுப்பி உள்ளது. எனவே முறையான விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு, தவறான விண்ணப்பங்கள் ஆரம்ப நிலையிலேயே உடனடியாகத் திருப்பி அனுப்பப்படுகின்றன. இவ்வாறு ஏற்கப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பங்களுக்கு அனுமதி ஆணை ஒரு மாதத்திற்குள் வழங்கப்படுகின்றது.

மேலும் திட்ட அனுமதி மற்றும் கட்டட உரிமம் இவைகளை வழங்கும் பணி பரவலாக்கப்பட்டு, வட்டார அலுவலகங்கள் மூலமாக 1-2-79 முதல் உரிமம் வழங்கப்படுகின்றது.

## இணைப்பு II.

[37-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 303-க்கான விடையைக் காண்க.]

விடை.—

(அ)
(ஆ) } விவரமான அறிக்கை சட்டமன்றப் பேரவையில் வைக்கப்
(இ) } பட்டுள்ளது.
(ஈ)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படும் விவர அறிக்கை.

(திரு. எஸ். ஜே. இராமசாமி, எம்.எல்.ஏ., அவர்களது வினா எண் 2779—க்கான விடையைக் காண்க.)

(அ) 1972 முதல் 1977 மார்ச் முடிய தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகளில் உற்பத்தியான பருத்தி நூல்கள்.—

(பேல்களில்.)

| வரிசை எண்ணும், நூல் நெம்பரும். | 1972. | 1973. | 1974. | 1975. | 1976. | 1977 (மார்ச் முடிய). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. 20 .. .. .. | 8,000 | 5,117 | 4,056 | 5,873 | 4,657 | 810 |
| 2. 24 .. .. .. | .. | .. | .. | 100 | .. | .. |
| 3. 26 .. .. .. | 3,426 | 3,677 | 5,030 | 4,106 | 3,611 | 1,241 |
| 4. 40 .. .. .. | 2,507 | 10,058 | 10.445 | 12,944 | 17,983 | 4,298 |
| 5. 60 கார்டெட் .. | 7,300 | 5,614 | 6,525 | 7,887 | 9,590 | 1,912 |
| 6. 60 கோம்புடு .. .. | 4,398 | 2,676 | 4,128 | 2,143 | 5,547 | 2,044 |
| 7. 80 கார்டெட் .. .. | 2,472 | 1,545 | 2,396 | 2,530 | 1,612 | 1,063 |
| 8. 80 கோம்புடு .. .. | 1,110 | 1,286 | 2,020 | 2,502 | 1,163 | 1,157 |
| 9. 100 கார்டெட் .. .. | 1,582 | 1,255 | 750 | 1,553 | 1,339 | 250 |
| 10. 100 கோம்புடு .. .. | 1,700 | 2,685 | 1,881 | 2,308 | 1,680 | 555 |
| 11. 120 கோம்புடு .. .. | .. | .. | .. | .. | 92 | 23 |
| 12. 120 கோம்புடு .. .. | .. | .. | 11 | 10 | 60 | 32 |
| 13. 2/17 .. .. | 10,639 | 9,624 | 9,408 | 10,056 | 14,092 | 2,951 |
| 14. 2/30 .. .. | .. | .. | 826 | 380 | 303 | 71 |
| 15. 2/40 .. .. .. | 454 | 191 | 529 | 1,494 | 1,038 | 31 |
| 16. 2/60 கார்டெட் .. .. | 1,149 | 1,202 | 910 | 892 | 1,807 | 601 |
| 17. 2/60 கோம்புடு .. .. | 110 | .. | .. | .. | .. | .. |
| கோன் நூல்.— | | | | | | |
| 10 .. .. .. | .. | .. | .. | .. | 955 | 197 |
| 20 .. .. .. | 46 | 933 | 1,576 | 3,967 | 2,855 | 109 |
| 30 .. .. .. | 10 | .. | 231 | 292 | 155 | 156 |
| 40 .. .. .. | 1,296 | 808 | 1,027 | 947 | 1,961 | 822 |
| 44 .. .. .. | 27 | .. | .. | .. | 155 | 120 |
| 07 .. .. | .. | .. | .. | .. | | 414 |
| 45 .. .. | .. | .. | .. | .. | | .. |

| வரிசைஎண்ணும், நூல் நெம்பரும். (1) | 1972. (2) | 1973. (3) | 1974. (4) | 1975 (5) | 1976 (6) | 1977. (7) |
|---|---|---|---|---|---|---|
| கோம்புடு.— | | | | | | |
| 60 | 1,322 | 1,662 | 1,237 | 1,022 | 2,333 | 2,627 |
| 80 | 172 | 62 | 271 | 141 | 439 | 412 |
| 100 | 5 | .. | 8 | .. | 44 | 13 |
| 120 | .. | .. | .. | .. | 5 | .. |
| 34 | 4,195 | 2,491 | 5,844 | 5,398 | 7,646 | 4,000 |
| 38&39 | .. | .. | .. | 18 | .. | .. |
| 70 | .. | .. | .. | .. | 163 | .. |
| 2/80 கார்பெட் | 343 | 402 | 232 | 320 | 175 | 88 |
| 2/80 கோம்புடு | 46 | .. | .. | .. | 4 | .. |
| 2/100 கார்பெட் | 23 | 29 | .. | 7 | 38 | .. |
| 2/100 கோம்புடு | 239 | 252 | 40 | 23 | 130 | .. |
| 25 | 1,317 | 2,149 | 2,448 | 2,464 | 2,290 | 517 |
| டி.எச்.சி.ஆர்.— | | | | | | |
| 31 | 161 | .. | .. | .. | .. | .. |
| 2/64 | 38 | .. | .. | .. | .. | .. |
| 2/80 | 25 | .. | .. | .. | .. | .. |
| 2/30 | .. | .. | .. | .. | 18 | .. |
| டெரிகாட்டன் | | | | | | |
| 2/80 | .. | .. | .. | .. | .. | .. |
| ஸ்டேபிள்பைபர்.— | | | | | | |
| 20 | 859 | 323 | 296 | .. | 228 | 65 |
| 31 | 2,848 | 802 | 1,569 | 308 | 117 | 29 |
| 36 | 1,710 | 1,513 | 830 | 816 | 693 | 32 |
| 2/34 | .. | .. | .. | .. | 4 | .. |
| 2/40 | .. | .. | .. | .. | .. | 4 |
| ஹோசியரி.— | | | | | | |
| 20 | .. | .. | .. | 21 | 88 | .. |
| 38 | .. | .. | .. | .. | 7 | .. |
| 20 ஹைடிவிஸ்ட் | .. | | .. | | 66 | .. |
| தையல் நூல்.— | | | | | | |
| 2/30 | .. | .. | | | 46 | 5 |
| 2/40 | .. | .. | .. | | 66 | 13 |
| 2/60 | .. | | | | 11 | .. |
| 3/55 | .. | .. | | | .. | 1 |
| 3/60 | .. | | | | 27 | 13 |
| 2/30 பி.எச். | .. | | | | 7 | .. |

(ஆ) 1975 முதல் 1977 வரை நூல்கள் விற்பனை செய்யப்பட்ட சராசரி விலை விபரங்கள் (நூல் நெம்பர் வாரியாக) :

| நூல் நெம்பர். (1) | 1975 (2) | 1976 (3) | 1977 (4) |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 20 | 51·43 | 58·79 | 69·24 |
| 26 | 56·74 | 62·37 | 85·40 |
| 36 | 59·00 | 46·07 | 56·66 |
| 40 | 66·46 | 78·63 | 98·61 |
| 60 கார்டெட் | 84·53 | 91·53 | 117·58 |
| 60 கோம்புடு | 107·72 | 112·40 | 128·87 |
| 80 கார்டெட் | 128·44 | 127·80 | 129·91 |
| 80 கோம்புடு | 129.15 | 181.57 | 163.33 |
| 100 கார்டெட் | 185·78 | 193·25 | 205·63 |
| 100 கோம்புடு | 208·36 | 222·94 | 205·87 |
| 120 | 274·39 | 283·00 | 291·00 |
| 2/80 | 136·90 | 143·00 | 151·45 |
| 2/100 | 185·00 | 191·50 | 204·00 |
| 2/17 | 61·81 | 70·70 | 96·95 |
| 2/30 | .. | 77·09 | .. |
| 2/40 | 74·55 | 88·85 | 105·48 |
| 2/60 | 86·61 | 113·73 | 128·15 |
| கோன் நூல்கள். | | | |
| 40 | .. | 87·90 | 106·10 |
| 44 கார்டெட் | .. | 85·85 | .. |
| 60 கார்டெட் | 94·20 | 80·35 | 120·22 |
| 60 கோம்புடு | 120·00 | 119·00 | .. |
| 80 கார்டெட் | .. | 115·00 | .. |
| 100 கோம்புடு | .. | .. | 190·00 |

(இ) 1975 முதல் 1977 வரை மொத்தம் ரூ. 4,221·00 இலட்சம் மதிப்புள்ள 231·02 இலட்சம் கிலோகிராம் நூல்கள் விற்பனையாகியுள்ளன.

**கூட்டுறவு நூற்பாலைகளில் 1972 முதல் 1977 வரை பருத்தி கொள்முதல் விபரம்.**

| கூட்டுறவு நூற்பு ஆலைகள். | நூல் நிர். | 1972 அளவு இ.இ. (லட்சக் கிலோ). | 1972 மதிப்பு (ரூபாய் லட்சக் கணக்கில்). | 1972 சராசரி விலை (ஒரு கிலோவுக்கு). | 1973 அளவு இ.இ. (லட்சக் கிலோ). | 1973 மதிப்பு (ரூபாய் லட்சக் கணக்கில்). | 1973 சராசரி விலை (ஒரு கிலோவுக்கு). |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| கோவை .. .. | 20s | 11·87 | 57·70 | 18·24 | .. | .. | .. |
| மதுரை .. .. | 20s | 1·91 | 8·68 | 19·25 | 5·61 | 14·38 | 25·94 |
| திருச்சி .. .. | 20s | 8·83 | 43·62 | 13·56 | 3·15 | 24·59 | 27·75 |
| சௌத் இந்தியா .. .. | 20s | 2·67 | 12·70 | 16·89 | 2·53 | 18·88 | 26·54 |
| கலப்பு .. .. / கன்னியாகுமரி .. .. | 20s / 20s | 11·44 | 62·56 | 19·41 | 9·23 | 61·74 | 23·75 |
| தென்னிந்தியா .. .. | 40 | 2·67 | 12·70 | 16·89 | 2·53 | 19·88 | 26·54 |
| தென்னாற்காடு (மாவட்டம்). | 40 | 2·41 | 17·06 | 25·75 | 1·13 | 10·89 | 33·43 |
| கன்னியாகுமரி .. .. | 40 | 2·78 | 19·10 | 24·43 | 1·37 | 11·91 | 30·87 |
| திருச்செந்தூர் .. .. | 40 | 2·85 | 19·28 | 24·02 | 3·05 | 30·88 | 35·97 |
| தஞ்சை (மாவட்டம்) .. | 40 | .. | .. | .. | .. | .. | .. |
| கோவை (மாவட்டம்) .. | 40 | 3·38 | 20·15 | 26·51 | 1·95 | 9·25 | 26·50 |
| மதுரை (மாவட்டம்) .. | 40 | 3·78 | 6·71 | 17·76 | 1·09 | 3·05 | 28·00 |
| வட ஆற்காடு (மாவட்டம்) .. | 40 | 3·08 | 22·20 | 26·01 | 1·51 | 12·49 | 29·98 |
| திருச்சி (மாவட்டம்) .. | 40 | 6·47 | 38·48 | 21·14 | 6·59 | 47·95 | 25·86 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் .. .. | 40 | 4·10 | 57·28 | 24·03 | 3·08 | 47·69 | 27·20 |
| தென்னிந்தியா .. .. | 40 | 4·45 | 27·34 | 25·77 | 4·55 | 42·57 | 33·28 |
| காஞ்சிபுரம் .. .. | 40 | 2·17 | 16·65 | 32·02 | 1·40 2·23 | 9·44 | 25·74 |
| சேலம் .. .. | 40 | 1·60 | 14·61 | 33·00 | 1·22 | 20·51 | 29·00 |
| வட ஆற்காடு (மாவட்டம்) .. | 60s | 3·03 | 27·54 | 33·21 | 1·22 | 12·63 | 37·87 |
| தென்னாற்காடு (மாவட்டம்). | ,, | 1·66 | 15·07 | 31·28 | 0·69 | 7·91 | 39·33 |
| தஞ்சை (மாவட்டம்) .. | ,, | 2·32 | 19·23 | 32·15 | 0·94 | 12·02 | 45·30 |
| திருச்செந்தூர் .. .. | ,, | 1·99 | 18·11 | 32·30 | 2·88 | 36·43 | 44·93 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் .. .. | ,, | 1·63 | 35·82 | 31·26 | 0·92 | 15·61 | 32·56 |
| தென்னிந்தியா .. .. | ,, | 1·45 | 13·25 | 32·48 | 1·52 | 11·57 | 50·60 |
| காஞ்சிபுரம் .. .. | ,, | 1·61 | 14·97 | 45.92 | 0·62 | 5·08 | 34·90 |
| சேலம் .. .. .. | ,, | 2·38 | 21·47 | 32·00 | 1·22 | 11·17 | 31·00 |
| தென்னாற்காடு (மாவட்டம்). | 80s | 0·68 | 7·55 | 31·41 | 0·15 | 2·68 | 45·84 |
| தஞ்சை (மாவட்டம்) .. | ,, | 0·92 | 8·50 | 32·75 | 1·61 | 15·79 | 39·81 |
| தென்னிந்தியா .. .. | ,, | 2·01 | 20·42 | 36·10 | .. | .. | .. |
| சேலம் .. .. | ,, | 0·37 | 4·85 | 48·10 | 0.45 | 7·04 | 59·00 |
| திருச்செந்தூர் .. .. | ,, | 0·75 | 7·21 | 34·18 | 0·74 | 11·41 | 54·18 |
| ஸ்ரீவில்லிப்புத்தூர் .. .. | ,, | 0·01 | 0·30 | 35·00 | .. | .. | .. |
| தென்னாற்காடு (மாவட்டம்). | 100 | 0·04 | 5·53 | 40·21 | 1·57 | 22·54 | 38·26 |
| தஞ்சை (மாவட்டம்) .. | ,, | 2·72 | 37·30 | 53·25 | 1·14 | 18·92 | 39·86 |
| தென்னிந்தியா .. .. | ,, | 0·34 | 5·57 | 58·02 | 1·06 | 19·79 | 44·14 |

கூட்டுறவு நூற்பாலைகளில் 1972 முதல் 1977 வரை பருத்தி கொள்முதல் விபரம்.

| கூட்டுறவு நூற்பு ஆலைகள். | நூல் நிர். | 1972 அளவு (கி. கி. லட்சத்தில்). | 1972 மதிப்பு (ரூபாய் லட்சத்தில்). | 1972 சராசரி விலை (ஒரு கேண்டிக்கு). | 1973 அளவு (கி. கி. லட்சத்தில்). | 1973 மதிப்பு (ரூபாய் லட்சத்தில்). | 1973 சராசரி விலை (ஒரு கேண்டிக்கு). |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| சேலம் .. .. .. | ,, | .. | .. | .. | .. | .. | .. |
| ஸ்ரீவில்லிப்புத்தூர் .. .. | ,, | 0·07 | 1·57 | 1·40 | 0·49 | 13·28 | 42·48 |
| திருச்செந்தூர் .. .. | 36s | .. | .. | .. | .. | .. | .. |
| மதுரை .. .. | ,, | .. | .. | .. | .. | .. | .. |
| திருச்செந்தூர் .. .. | ,, | 0·35 | 1·92 | 1,920 | 2·05 | 17·91 | 3,092 |
| கலப்பு 80s&100s— | | | | | | | |
| வட ஆற்காடு (மாவட்டம்). | | 2·17 | 24·66 | 3,960 | 0·21 | 2·84 | 5,876 |
| தென்னிந்தியா .. .. | | .. | .. | .. | .. | .. | .. |
| காஞ்சிபுரம் .. .. | | ·90 | 9·86 | 4,875 | 2·55 | 23·23 | 6,721 |



கூட்டுறவு நூற்பாலைகளில் 1972 முதல் 1977 வரை பருத்தி கொள்முதல் விபரம்.

| கூட்டுறவு நூற்பு ஆலைகள். | நூல் நிர். | 1974 அளவு (கி. கி. லட்சத்தில்). | 1974 மதிப்பு (ரூபாய் லட்சத்தில்). | 1974 சராசரி விலை (ஒரு கேண்டிக்கு). | 1975 அளவு (கி. கி. லட்சத்தில்). | 1975 மதிப்பு (ரூபாய் லட்சத்தில்). | 1975 சராசரி விலை (ஒரு கேண்டிக்கு). |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| கோவை .. .. | 20s | .. | .. | .. | .. | .. | .. |
| மதுரை .. .. | 20s | .. | .. | .. | .. | .. | .. |
| திருச்சி .. .. | 20s | 4·47 | 37·60 | 29·89 | 7·24 | 56·34 | 27·64 |
| சௌத் இந்தியா .. .. | 20s | 3·55 | 30·79 | 30·79 | 3·21 | 24·45 | 27·09 |
| கன்னியாகுமரி .. .. | 20s | 8·20 | 69·95 | 30·26 | 9·91 | 75·10 | 26·92 |
| தென்னிந்தியா .. .. | 40 | 3·55 | 30·79 | 30·79 | 3·21 | 24·45 | 27·09 |
| தென்னாற்காடு (மாவட்டம்) | 40 | 1·01 | 7·27 | 40·22 | 7·67 | 15·92 | 32·57 |
| கன்னியாகுமரி (மாவட்டம்) | 40 | 2·14 | 21·06 | 36·59 | 3·30 | 29·31 | 31·54 |
| திருச்செந்தூர் .. .. | 40 | 1·71 | 20·36 | 42·30 | 2·10 | 20·16 | 34·10 |
| தஞ்சை (மாவட்டம்) .. | 40 | .. | .. | .. | .. | .. | .. |
| கோவை (மாவட்டம்) .. | 40 | 2·56 | 6·00 | 39·50 | 0·79 | 15·31 | 30·25 |
| மதுரை (மாவட்டம்) .. | 40 | 1·87 | 3·75 | 32·83 | 2·03 | 62·30 | 30·69 |
| வட ஆற்காடு (மாவட்டம்). | 40 | 1·19 | 13·47 | 40·23 | 2·36 | 22·05 | 32·69 |

கூட்டுறவு நூற்பாலைகளில் 1972 முதல் 1977 வரை பருத்தி கொள்முதல் விபரம்.

| கூட்டுறவு நூற்பு ஆலைகள். | நூல் நிர். | 1972 அளவு கி. கி. (இலட்சத்தில்). | 1972 மதிப்பு ரூபாய் (இலட்சத்தில்). | 1972 சராசரி விலை (ஒரு கேண்டிக்கு). | 1975 அளவு கி. கி. (இலட்சத்தில்). | 1975 மதிப்பு ரூபாய் (இலட்சத்தில்). | 1975 சராசரி விலை (ஒரு கேண்டிக்கு). |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (9) | (10) | (11 | (12) | (13) | (14) |
| திருச்சி (மாவட்டம்) .. | 40 | 7·82 | 69·04 | 31·41 | 5·70 | 49·78 | 29·80 |
| ஸ்ரீவில்லிப்புத்தூர் .. | 40 | 3·08 | 53·96 | 37·72 | 2·87 | 45·66 | 32·87 |
| தென்னிந்தியா .. .. | 40 | 1·31 | 12·98 | 35·22 | 3·23 | 37·49 | 31·28 |
| காஞ்சிபுரம் .. .. | 40 | 0·95 | 10·70 | 40·38 | 1·27 | 11·39 | 41·71 |
| சேலம் .. .. | 40 | 2·83 | 28·09 | 35·09 | 4·41 | 31·01 | 35·75 |
| வட ஆற்காடு (மாவட்டம்) .. | 60s | 3·15 | 43·96 | 4,855 | 2·42 | 26·90 | 3,797 |
| தென்னாற்காடு (மாவட்டம்) | ,, | 0·58 | 14·46 | 4,819 | 0·92 | 9·26 | 3,850 |
| தஞ்சை (மாவட்டம்) .. | ,, | 2·48 | 34·58 | 4,944 | 1·58 | 22·76 | 4,560 |
| திருச்செந்தூர் .. .. | ,, | 0·87 | 12·07 | 4,896 | 0·86 | 10·16 | 4,163 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் .. .. | ,, | 2·21 | 54·96 | 4,781 | 1·37 | 28·52 | 4,141 |
| தென்னிந்தியா .. .. | ,, | 1·18 | 16·02 | 4,806 | 2·00 | 26·07 | 3,138 |
| காஞ்சிபுரம் .. .. | ,, | 0·68 | 8·81 | 4,260 | 0·32 | 3·33 | 4,645 |
| சேலம் .. .. | ,, | 2·33 | 32·07 | 4,900 | 0·16 | 2·32 | 5,242 |
| தென்னாற்காடு (மாவட்டம்). | 80s | 0·79 | 16·64 | 6,500 | 0·85 | 11·57 | 4,810 |
| தஞ்சை (மாவட்டம்) .. | ,, | .. | .. | .. | 0·85 | 12·75 | 5,770 |
| தென்னிந்தியா .. .. | ,, | 0·15 | 2·96 | 6,520 | 0·59 | 8·72 | 5,294 |
| சேலம் .. .. .. | ,, | 0·53 | 9·08 | 6,520 | 0·74 | 11·79 | 6,607 |
| திருச்செந்தூர் .. .. | ,, | 0·14 | 2·67 | 6,673 | 0·34 | 5·75 | 5,322 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் .. .. | ,, | .. | .. | .. | 0·12 | 3·71 | 7,600 |
| தென்னாற்காடு (மாவட்டம்). | 100s | 0·45 | 17·01 | 7,190 | 0·25 | 4·31 | 6,060 |
| தஞ்சை (மாவட்டம்) .. | ,, | 1·06 | 31·71 | 8,940 | 0.75 | 14·73 | 7,213 |
| தென்னிந்தியா .. .. | ,, | 0·45 | 18.92 | 8,464 | 0·13 | 2·55 | 7,038 |
| சேலம் .. .. .. | ,, | 0·14 | 3·00 | 7,726 | 0·42 | 10·87 | 9,337 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் .. .. | ,, | 0·02 | 0·77 | 6,586 | 0·30 | 16·02 | 9,030 |
| திருச்செந்தூர் .. .. | ,, | .. | .. | .. | 0·52 | 14·68 | 9,950 |
| மதுரை .. .. | ,, | — | .. | .. | .. | .. | .. |
| திருச்செந்தூர் .. .. | 36s | 1·01 | 9·99 | 3,507 | 3·62 | 31·87 | 3,126 |
| கலப்பு 80s—100s— | | | | | | | |
| வட ஆற்காடு (மாவட்டம்) | | 0·74 | 15·21 | 7,614 | 2·49 | 34·44 | 6,680 |
| தென்னிந்தியா .. | .. | .. | .. | .. | 0·54 | 11·10 | 7,333 |
| காஞ்சிபுரம் .. | .. | 0·25 | 8·69 | 7,225 | 1·19 | 23·91 | 7,556 |

**கூட்டுறவு நூற்பு ஆலைகளில் 1972 முதல் 1977 வரை பருத்தி கொள்முதல் விபரம்—தொடர்ச்சி**

| கூட்டுறவு நூற்பு ஆலைகள். | நூல் நிர். | 1976 அளவு (இலட்சம் கி. கி.) | 1976 மதிப்பு (இலட்சம் ரூபாய்) | 1976 சராசரி விலை (ஒரு கேண்டிக்கு) | 1977 அளவு (இலட்சம் கி. கி.) | 1977 மதிப்பு (இலட்சம் ரூபாய்) | 1977 சராசரி விலை (ஒரு கேண்டிக்கு) |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) |
| கோவை .. .. | 20s | .. | .. | .. | .. | .. | .. |
| மதுரை .. .. | 20s | .. | .. | .. | .. | .. | .. |
| திருச்சி .. .. | 20s | 9·42 | 82·74 | 31·22 | 2·59 | 30·02 | 43·36 |
| சௌத் இந்தியா .. .. | 20s | 3·73 | 40·82 | 38·84 | .. | .. | .. |
| கன்னியாகுமரி .. .. | 26s | 10·34 | 97·25 | 33·39 | 3·80 | 43·82 | 40·96 |
| தென்னிந்தியா .. .. | 40s | 3·73 | 40·82 | 38·84 | .. | .. | .. |
| தென்னாற்காடு (மாவட்டம்). | 40s | 2·30 | 22·36 | 33·30 | 2·22 | 25·53 | 51·00 |
| கன்னியாகுமரி .. .. | 40s | 3·52 | 39·05 | 39·40 | 0·83 | 11·28 | 48·54 |
| திருச்செந்தூர் .. .. | 40s | 3·62 | 42·52 | 41·76 | 4·67 | 64·55 | 49·06 |
| தஞ்சை (மாவட்டம்) .. | 40s | .. | .. | .. | 1·50 | 21·94 | 52·17 |
| கோவை (மாவட்டம்) .. | 40s | 2·56 | 28·05 | 35·25 | 1·82 | 34·90 | 42·18 |
| மதுரை (மாவட்டம்) .. | 40s | 4·68 | 52·00 | 26·55 | .. | .. | .. |
| வட ஆற்காடு (மாவட்டம்) .. | 40s | 3·71 | 43·21 | 40·21 | 1·61 | 22·81 | 48·26 |
| திருச்சி (மாவட்டம்) .. | 40s | 5·35 | 62·38 | 41·48 | 1·34 | 18·54 | 49·14 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் .. .. | 40s | 3·82 | 78·34 | 40·28 | 1·47 | 45·89 | 50·86 |
| தென்னிந்தியா .. .. | 40s | 4·10 | 54·84 | 42·45 | .. | .. | .. |
| காஞ்சிபுரம் .. .. | 40s | 3·95 | 45·23 | 42·28 | 1·59 | 24·60 | 50·00 |
| சேலம் .. .. | 40s | 2·60 | 27·61 | 38·50 | 1·97 | 33·81 | 51·18 |
| வட ஆற்காடு (மாவட்டம்). | 60s | 3·86 | 55·28 | 49·08 | 1·21 | 22·32 | 50·16 |
| தென்னாற்காடு (மாவட்டம்). | 60s | 2·28 | 29·67 | 46·55 | 1·46 | 24·18 | 42·90 |
| தஞ்சை (மாவட்டம்) .. | ,, | 4·63 | 61·32 | 47·01 | 3·22 | 49·02 | 43·98 |
| திருச்செந்தூர் .. .. | ,, | 3·48 | 54·96 | 56·11 | 2·97 | 48·08 | 58·14 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் .. .. | ,, | 1·58 | 40·03 | 53·94 | 0·20 | 5·99 | 57·72 |
| தென்னிந்தியா .. .. | ,, | 2·85 | 45·24 | 53·09 | .. | .. | .. |
| காஞ்சிபுரம் .. .. | ,, | 1·16 | 16·65 | 46·00 | 0·64 | 11·49 | 52·50 |
| சேலம் .. .. | ,, | 2·90 | 39·26 | 44·10 | 3·06 | 56·52 | 56·40 |
| தென்னாற்காடு (மாவட்டம்). | 80s | 0·42 | 6·17 | 51·25 | 0·51 | 9·49 | 65·45 |
| தஞ்சை (மாவட்டம்) .. | ,, | 0·07 | 0·92 | 53·45 | .. | .. | .. |
| தென்னிந்தியா .. .. | ,, | 0·77 | 2·36 | 60·10 | .. | .. | .. |
| சேலம் .. .. .. | ,, | 1·27 | 21·52 | 57·14 | 1·66 | 31·55 | 65·14 |
| திருச்செந்தூர் .. .. | ,, | 0.79 | 14·82 | 66·59 | 2·02 | 39·11 | 67·80 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் .. .. | ,, | 0·18 | 6·31 | 65·18 | 0·15 | 5·36 | 67·71 |
| தென்னாற்காடு (மாவட்டம்). | 100s | 1·03 | 3·09 | 76·93 | .. | .. | .. |
| தஞ்சை (மாவட்டம்) .. | ,, | 0·80 | 16·18 | 75·25 | 0·47 | 11·64 | 80·90 |
| தென்னிந்தியா .. .. | ,, | 0·29 | 7·95 | 96·49 | .. | .. | .. |
| சேலம் .. .. | ,, | 1·28 | 22·85 | 73·65 | 0·31 | 7·72 | 89·47 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் .. .. | ,, | 0·22 | 8·25 | 75·90 | 0·13 | 0·55 | 87·42 |

கூட்டுறவு நூற்பு ஆலைகளில் 1972 முதல் 1977 வரை பருத்தி கொள்முதல் விவரம்—தொடர்ச்சி

| கூட்டுறவு நூற்பு ஆலைகள். | நூல் திர். | 1976 அளவு கி. கி. (இலட்சத்தில்). | 1976 மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). | 1976 சராசரி விலை (ஒரு கேண்டிக்கு). | 1977 அளவு கி. கி. (இலட்சத்தில்). | 1977 மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). | 1977 சராசரி விலை (ஒரு கேண்டிக்கு). |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) |
| திருச்செந்தூர் .. .. | ,, | .. | .. | .. | 0·59 | 14·10 | 83·73 |
| மதுரை .. .. .. | ,, | .. | .. | .. | 0·02 | 1·80 | 90·00 |
| திருச்செந்தூர் .. .. | 36s | .. | .. | .. | .. | .. | .. |
| கலப்பு 80s & 100s— | | | | | | | |
| வட ஆற்காடு (மாவட்டம்) | | 1·04 | 20·94 | 69·23 | 0·68 | 14·32 | 79·37 |
| தென்னிந்தியா .. .. | | 0·45 | 10·17 | 79·52 | .. | .. | .. |
| காஞ்சிபுரம் .. .. | | 0·74 | 12·71 | 77·50 | 0·18 | 3·32 | 74·50 |



## இணைப்பு III

(78-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 382-க்கான விடையைக் காண்க.)

### விவர அறிக்கை.

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி, தீவாம்பாள்பட்டிணம் அரசு விதைப் பண்ணை மேலாளர் திரு. சொக்கப்பா அவர்களைப் பற்றி அவ்வூர் கிராமவாசிகளிடமிருந்து 30—6—1978-ல் புகார் மனு ஏதும் அரசுக்கு வரவில்லை. ஆனால், தீவாம்பாள்பட்டிண கிராமவாசிகளிடமிருந்து பண்ணை மேலாளர் திரு. சொக்கப்பா மீது சில குற்றச்சாட்டுகள் கூறி 25—10—1978 அன்று புகார் மனு ஒன்று வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு வந்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் சேவியக்காட்டைச் சார்ந்த திரு. சே. வி. சு. பாலனிடமிருந்து 18—3—1979-ம் தேதியிட்ட மனு ஒன்று திரு. சொக்கப்பா மீது சில புகார்கள் கூறி அரசுக்கு வந்துள்ளது. 25—10—1978 மற்றும் 18—3—1979 அன்று பெறப்பட்ட மனுக்களில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் யாவும் ஒரே மாதிரியானவை.

(ஆ) 25—10—1978 அன்று வேளாண்மை இயக்குநர் அலுவலகத்திற்கு வந்துள்ள புகார் மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் விவரம் பின்வருமாறு :—

(1) பண்ணைக்குச் சொந்தமான பனை மரங்களை மட்டையோடு ஏலம் விடாமல் மரங்களை மட்டும் ஏலம் விட்டு, பின்பு பனை மட்டைகளைத் தனக்கு வேண்டியவர்களுக்கு ஏலம் விட்டார். இதனால் பண்ணைக்கு நஷ்டம் ஏற்பட்டது.

(2) பண்ணையிலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள தன் சொந்த பண்ணைக்கு வேண்டிய உரம், பூச்சி மருந்து, போன்றவைகளை அரசு பண்ணையிலிருந்து கடத்திச் சென்று பயன்படுத்தினார்.

(3) பண்ணைத் தொழிலாளர்களுக்கு வேலை செய்த ஒரு மாதம் கழித்துக் கூலி கொடுத்தார்.

(4) பண்ணைக்குச் சொந்தமான 8 வண்டி எருவை விலைக்கு விற்றார்.

(5) தன் பண்ணை மாடுகளை அரசு பண்ணையில் வைத்துக் கொண்டு அரசு பண்ணையில் உள்ள மாட்டுத் தீவனத்தை உபயோகப்படுத்தினார்.

(6) புயலால் விழுந்த, பண்ணைக்குச் சொந்தமான மரங்களை ஏலம் விட்டு, ஏலம் எடுத்தவர்களுக்குக் கொடுக்காமல் தன் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தினார்.

(7) பண்ணையாட்களை தன் வீட்டு வேலைக்குப் பயன்படுத்திக் கொண்டார்.

(இ) மேல் கூறப்பட்டுள்ள புகார்களின் மீது தஞ்சாவூர் திட்ட அலுவலர் விசாரணை நடத்தினார். பண்ணையில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு உடனடியாகக் கூலி கொடுக்காதது, பண்ணையின் மாட்டுத் தீவனங்களை தன் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தியது, பண்ணையின் பெண் கூலியாட்களைத் தன் வீட்டு வேலைகளுக்கு வைத்துக் கொண்டது ஆகிய குற்றச்சாட்டுக்கள் மட்டும் நிரூபிக்கப்பட்டுள்ளன. மற்ற குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை. பண்ணை மேலாளர் பண்ணையை விட்டு மாற்றப்பட்டுள்ளார். அம்மேலாளரின் மேல் தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி தஞ்சாவூர் திட்ட இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.





## இணைப்பு IV

( 6 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 423-க்கான விடையைக் காண்க.)

(அ) சர்க்கரை ஆலைகளிடமிருந்து வசூலிக்கப்படும் கரும்பு மேல்வரி நிதியில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் சாலைகள் அமைக்க, பராமரிக்க அரசே நிதி ஒதுக்கீடு செய்கிறது.

(ஆ) கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் இதுவரை ரூ. 29.84 இலட்சம் செலவு செய்து சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

| (இ) | சாலையின் பெயர். | நீளம் (கி.மீ. |
| --- | --- | --- |
| 1. | மணலூர்பேட்டை—தாங்கல் ஜம்பை ரோடு. | 4·39 |
| 2. | தியாகதுர்க்கம்—சங்கராபுரம் சாலை (கி.மீ. 0/07–5) முதல் பகுதி. | 7·50 |
| 3. | தியாகதுர்க்கம்—சங்கராபுரம் சாலை (கி.மீ. 7/6–19/0) இரண்டாம் பகுதி. | 11·50 |
| 4. | தியாகதுர்க்கம்—சங்கராபுரம் சாலை (கி.மீ. 19/026/8) மூன்றாம் பகுதி. | 7·80 |
| 5. | கி.மீ. 14/2 மெய்யூர்-வானாபுரம் ஜம்பை ரோடு (வழி) எடக்கல்-மேலந்தள். | 11·905 |
| 6. | வானாபுரம்—தலையாம்பள்ளம் ரோடுகி.மீ. 00/05–/5 (மேம்பாடு வேலை நடந்து கொண்டிருக்கிறது). | 5·500 |

(ஈ) ஒவ்வொரு ஆண்டிற்கும் அரசு ஒதுக்கீடு செய்யும் தொகை அந்தந்த நிதி ஆண்டிற்குள் சாலை அமைக்கும் திட்டத்திற்கு செலவு செய்யப்படுவதால் உபரியாக நிதியை மீத்து வைக்கப்படுவதில்லை.

## இணைப்பு

(132ம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினா எண். 500-க்கான விடையைக் காண்க.)

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள வேளாண்மை பொறியியல் அலுவலகத்தில் '14' பாறை உடைக்கும் கருவிகள் உள்ளன. இவைகளில் '5' விழுப்புரத்திலும், '8' விருத்தாசலத்திலும், '1' கடலூரிலும் உதவி செயற் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அலுவலகங்களில் உள்ளன.

(ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பாறை உடைக்கும் கருவிகள் அனைத்தும் விவசாயிகளுக்கு, வாடகைத் திட்டத்தின் கீழ் வாடகைக்கு விடப்படுகின்றன. இயந்திரம் தேவைப்படும் விவசாயி, உதவி செயற் பொறியாளருக்கு மனு செய்துகொண்டு ரூ. 10-ஐ ஆய்வு கட்டணமாக முன் பணம் செலுத்த வேண்டும். இந்த விவசாயியின் பெயர் முன் உரிமை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு உரிய இளநிலைப் பொறியாளருக்கு/உதவி பொறியாளருக்கு இந்த விவசாயியின் நிலத்தினையும், கிணற்றையும், பார்வையிட ஆணை வழங்கப்படும். இளநிலைப் பொறியாளர்/உதவி பொறியாளர் வேளாண்மை செய்யும் நிலத்தினையும் கிணற்றையும் பார்வையிட்டு இயந்திரம் வழங்குவதற்கு பரிந்துரை செய்வார். இயந்திரம் வழங்குவதற்கு பரிந்துரை செய்தபின், வாடகை விவரம் அனைத்தும் விவசாயிக்கு தெரிவிக்கப்பட்டு முன்பணம் கட்டுவதற்கு தகவல் தரப்படுகிறது. மேலும் வெடி மருந்து வழங்குவதற்கும் உரிய படிவங்கள் கொடுக்கப்பட்டு, வெடி மருந்து தேவையினை கணக்கிட்டு அதனை மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்க்கு உரிமம் வழங்க பரிந்துரை செய்து அனுப்பப்படும். மேற்கண்ட தகவலைப் பெற்றுக் கொண்ட விவசாயி முன்பணமாக வைப்புத் தொகையாக ரூபாய் 100-ம், ரூ. 200 (ஐந்து நாட்கள் வாடகையாக) ம் அலுவலகத்தில் செலுத்தி கருவியினை எடுத்து தம் நிலத்தில் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுவார்.

வெடி மருந்திற்கான உரிமம் பெற்று பாறை வெடி. கருவியினை மனுதாரரின் வேலை இடத்திற்கு எடுத்துச் சென்ற உடன், அக்கிணற்றிற்கு தேவைப்படும் வெடி மருந்து இத்துறை வெடி மருந்து கிடங்கிலிருந்து அதற்கான கிரயத்தை வசூலித்துக்கொண்டு கொடுக்கப்படும். ஒவ்வொரு தடவையும் அதற்கு முன் கொடுக்கப்பட்டுள்ள வெடி மருந்தினை உபயோகப் படுத்தியதை அறிந்துதான் கொடுக்கப்படுகிறது.





(இ) பாறை வெடி கருவிகள் கீழ்க்கண்ட நடைமுறைகளின்படி விடப் படுகின்றன:—

1. ரூபாய் 10 ஆய்வுக் கட்டணமாக முன்பணம் கட்டியவுடன், விவசாயியின் கிணற்றினை பார்வை செய்து, கருவி வேலை செய்வதற்கு ஏற்றவாறு இருப்பின், வெடி மருந்து வழங்க உரிய படிவங்கள் வழங்கப்பட்டு, வெடி மருந்து தேவையினை மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்க்கு பரிந் துரை செய்து அனுப்பப்படுகிறது. மேலும் விவசாயிக்கு வைப்புத் தொகை ரூபாய் 100-ம் வாடகைத் தொகை ரூ. 200 (ஐந்து நாட்களுக்கு) கட்டவும் தகவல் தரப்படுகிறது. இத்தொகையினை கட்டிய பிறகு, முன் உரிமை பதிவேட்டில் கருவி ஒதுக்கீடு செய்ய பதிவு செய்யப்படுகிறது. கருவிகள் முன் உரிமை பதிவேட்டின்படியும் நில அருகாமையினைப் பொருத்தும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

2. கருவியை எடுத்துச் செல்வதும், தொடர்ந்து செயல் படுத்துவதும் விவசாயியின் முழு பொறுப்பு.

3. கருவி விவசாயியின் பொறுப்பில் இருக்கும்போது, பாதுகாப்பு கொடுப்பதும் சிறந்த முறையில் பேண வழி வகை செய்வதும் அவர் பொறுப் பாகும்.

4. கருவியினை இயக்கத் தேவையான இயந்திர நுகர்பொருள் மசகு எண்ணை நீங்கலாக அனைத்தையும் வாடகைக்கு எடுத்துக் கொள்ளுபவர் கொடுக்க வேண்டும்.

5. கருவியினைத் தொடர்ந்து செயல்பட விவசாயி வேலை கொடுக் காமல் இருப்பாராயின் தண்டத் தொகையாக ரூபாய் 10 (நாள் வாடகையில் 25 விழுக்காடு) நாள் வாடகையுடன் சேர்த்து ரூபாய் 50 செலுத்துவதற்கு உரியவராவர்.

6. தம் நிலத்தில் வேலை முடிந்தவுடன் கருவியினை உதவி செயற் பொறியாளர்க்கு திரும்ப கொண்டு வந்து விடுதலும் அவர் பொறுப்பாகும்.

## இணைப்பு VI.

[......42ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 312க்கான விடையைக் காண்க.]

| வரிசை எண்ணும், மாவட்டமும். | 1977–78-ல் கண்டு பிடிக்கப்பட்ட ரூபாய் நோட்டு இரட்டிப்பு வழக்குகளின் எண்ணிக்கை. | கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. | கைது செய்யப்பட்டவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம். | தண்டனை வழங்கப்பட்டவை (வழக்குகள்.) | விடுதலை செய்யப்பட்டவை (வழக்குகள்.) | நிலுவையிலுள்ள வழக்குகளின் தற்போதைய நிலை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 சென்னை மாநகரம். | 2 | 8 | வழக்குகள் நீதி மன்றத்தில் தொடரப்பட்டன. | .. | இசைந்து தீர்க்கப்பட்டவை 1. | நிலுவையில் உள்ள வழக்கு தலைமறைவாக உள்ள சில குற்றவாளிகள் சம்பந்தப்பட்டதாகும். இதே வழக்கில் கைது செய்யப்பட்ட பிற குற்றவாளிகள் மீது விசாரணை முடிந்து ஒரு நபருக்கு தண்டனையும், இருவருக்கு விடுதலையும் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது. |
| 2 திருச்சி .. | 6 | 18 | ஷ்டி | | விடுதலை செய்யப்பட்டவை 2. இசைந்து தீர்க்கப்பட்டவை 1. | இரண்டு வழக்குகள் நீதி மன்ற விசாரணையில் உள்ளன. |
| 3 தஞ்சாவூர் (மேற்கு). | 1 | 2 | ஷ்டி | | விடுதலை செய்யப்பட்டவை 1. | .... |
| 4 வட ஆற்காடு | 2 | 7 | ஷ்டி | | ஷ்டி | ஒரு வழக்கு நீதி மன்ற விசாரணையில் உள்ளது. |
| 5 தஞ்சாவூர் (கிழக்கு). | 4 | 8 | இரண்டு வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன. இரண்டு வழக்குகள் நீதி மன்றத்தில் தொடரப்பட்டன. | | .... | இரண்டு வழக்குகள் நீதி மன்ற விசாரணையில் உள்ளன. |

| எண்ணும் மாவட்டமும் வரிசை | 1977—78 ல் கண்டுபிடிக்கப்பட்ட ரூபாய் நோட்டு இரட்டிப்பு வழக்குகளின் எண்ணிக்கை. | கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. | கைது செய்யப்பட்டவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம். | தண்டனை (வழங்கப்பட்டவை (வழக்குகள்). | விடுதலை செய்யப்பட்டவை (வழக்குகள்). | நிலுவையிலுள்ள கு போகைய நிலை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 6 மதுரை (தெற்கு). | 2 | 1 | ஒரு வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. ஒருவழக்கு நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ளது. | .. | .... | ஒரு வழக்கு நீதி மன்ற விசாரணையில் உள்ளது. |
| 7 தென்னாற்காடு | 2 | 7 | இரண்டு வழக்குகள் நீதி மன்றத்தில் போடப்பட்டுள்ளன. | .. | விடுதலை செய்யப்பட்டவை 1. | ஷை |
| 8 கோயமுத்தூர் (ஊரகம்). | 4 | 12 | வழக்குகள் நீதி மன்றத்தில் தொடரப்பட்டன. | .. | விடுதலை செய்யப்பட்டவை 1. இசைந்து தீர்க்கப்பட்டவை 1. நீக்கப்பட்டவை 1 | ஷை |
| 9 இராமநாதபுரம் (மேற்கு). | 1 | 6 | ஒரு வழக்கு நீதி மன்றத்தில் போடப்பட்டது. | .. | விடுதலை செய்யப்பட்டவை 1. | .... |
| 10 கோயமுத்தூர் (நகரம்) | 4 | 16 | இரண்டு வழக்குகள் நீதி மன்றத்தில் போடப்பட்டுள்ளன. இரண்டு வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன. | | குற்றம் துலக்கப் படாதவை 1. | ஒரு வழக்கு நீதி மன்ற விசாரணையில் உள்ளது. |
| 11 மதுரை (வடக்கு). | 4 | 29 | நான்கு வழக்குகள் நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ளன. | | விடுதலை செய்யப்பட்டவை 1. | மூன்று வழக்குகள் நீதி மன்ற விசாரணையில் உள்ளன. |

## இணைப்பு VII.

[..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 324-க்கான விடையைக் காண்க.]

| வரிசை எண்ணும், எஸ்டேட்டுகளின் பெயர் விவரமும். | பரப்பளவு (ஹெக்டரில்.) தேயிலை. | காப்பி. (2) | ஏலக்காய். | வேலை செய்யும் நிரந்தரப் பணியாளர்கள். |
|---|---|---|---|---|
| (1) | (அ) | (ஆ) | (இ) | (3) |
| **I. தேயிலை, காப்பி மற்றும் ஏலக்காய் எஸ்டேட்டுகள்—** | | | | |
| 1. கட்டலாமலை எஸ்டேட், பாபநாசம் பிராஜெக்ட். | .. | 89.03 | 44.52 | 38 |
| 2. மாஞ்சோலை எஸ்டேட், மாஞ்சோலை போஸ்ட். | 268.00 | 5.00 | 30.00 | 633 |
| 3. மணிமுத்தார் எஸ்டேட், நாலுமுக்கு போஸ்ட். | 475.00 | 40.00 | 20.00 | 835 |
| 4. தேக்கு மலை எஸ்டேட், நாலுமுக்கு போஸ்ட். | .. | 28.04 | .. | 8 |
| **II. ஏலக்காய் எஸ்டேட்டுகள்—** | | | | |
| 1. வடகரை 38-வது பிளாக், ஏலக்காய் எஸ்டேட், தென்காசி தாலுக்கா. | .. | .. | 8.80 | 31 |
| 2. பிரேயிஸ் எஸ்டேட், அட்சம் புதூர், தென்காசி வட்டம். | .. | .. | 84.90 | 11 |
| 3. சிவசைலம எஸ்டேட், பிளாக் 1 | .. | .. | 20.40 | 13 |
| 4. சிவசைலம் எஸ்டேட், பிளாக் 2 | .. | .. | 16.32 | 7 |
| 5. சிவசைலம் எஸ்டேட், பிளாக் 3 | .. | .. | 16.32 | 11 |
| 6. ஜயநாத்து எஸ்டேட், அட்சம் புதூர். | .. | .. | 45.18 | 3 |
| 7. மினி எஸ்டேட், குற்றாலம் | .. | .. | 12.12 | 4 |
| 8. ஜவி எஸ்டேட், குற்றாலம் .. | .. | .. | 16.32 | 3 |
| 9. ஆர். சுந்தரவேல் எஸ்டேட், பாபநாசம் பிராஜெக்ட். | .. | .. | 16.00 | 16 |
| 10. எம்.வி. எஸ். இரத்தினவேல் எஸ்டேட், பாபநாசம் பிராஜெக்ட். | .. | .. | 12.00 | [illegible] |
| 11. ஆர். முருகவேல் எஸ்டேட், பாபநாசம் பிராஜெக்ட். | .. | .. | 12.00 | [illegible] |
| 12. ஆர். ஷண்முகவேல் எஸ்டேட், பாபநாசம் பிராஜெக்ட். | .. | .. | 12.00 | 10 |
| 13. லட்சுமி விலாஸ் எஸ்டேட், சிவசைலம், ஏலக்காய் எஸ்டேட். | .. | .. | 8.16 | 15 |

## உள்ளடக்கம்

**3—11—1979**


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 269—310

2. தகவல் கோரல்—
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து .. .. .. .. 310—311

3. ஒழுங்குப் பிரச்னை—
ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வது குறித்து .. .. 211—313

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—
(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 .. 313
(ஆ) குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு, 1979 .. .. 314
(இ) கேளிக்கை வரி உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 .. 315
(ஈ) தமிழ்நாடு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 .. .. 315

5. அறிவிப்பு—
கேளிக்கை வரி உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவு 1979 .. 314

6. அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் விவாதம் (தொடர்ச்சி)— 315—322
திரு. ஆர். மாரிமுத்து 322—358
திரு. மு. கருணாநிதி 358—391
மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 391—392A

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சனிக்கிழமை, 1979 நவம்பர் 3-ம் நாள்

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சிங்கம்புனரியிலுள்ள 'என்பீல்டு' தொழிலாளர்கள்

* குறுகிய கால வினா எண் 1 — திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சிங்கம்புனரியிலுள்ள 'என்பீல்டு' தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர், வேலைக்கு மறுபடியும் எடுத்துக்கொள்ளப்பெறவும் 8.33 சதவிகிதம் போனஸ் பெறவும் அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 27-9-79 லிருந்து போனஸ் மற்றும் சில கோரிக்கைகளை வலியுறுத்தும் மூகமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

(ஆ) இராமநாதபுரம் தொழிலாளர் துறை அலுவலர் இருதரப்பாரோடும் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். அப்பேச்சு வார்த்தைகள் பயன் அளிக்காததால் தற்போது மதுரை தொழிலாளர் நல துணை ஆணையரே பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் ; தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் போன்ற பின் தங்கிய மாவட்டத்தில் நடக்கிற தொழிற்சாலை நிர்வாகிகள் வேண்டும் என்றே ஆட்களை வேலை நீக்கம் செய்து, அதுவும் தொழிற்சங்கச் செயலாளரை நீக்கியும், மேலும் 70-க்கு அதிகமான தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து, அதன் மூலம் வேலை நிறுத்தத்தை உருவாக்கி விட்டனர். போன ஆண்டு நஷ்டம் ஏற்பட்டபோதே கூட போனஸ் கொடுத்த நிர்வாகம் இப்பொழுது, பேலன்ஸ் ஷீட் போட்டு லாபம் வந்த பிறகும் கூட போனஸ் கொடுக்காமல் இருப்பதோடு

தொழிலாளர்களையும் பழி வாங்கக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கின்றன, அதை தடுத்து நிறுத்த அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை நான் மதுரை சென்றிருந்த போது அந்த தொழிலாளர்கள் என்னைக் கண்டு பேசினார்கள். நான் அதோடு நில்லாமல் டி. சி. எல். அலுவலகத்திற்கும் அவர்களை வரச் சொல்லி அரை மணி நேரம் பேசினேன். அதற்குப் பின்னால், சென்னைக்கு வந்த பிறகு, இங்கேதான் மானேஜிங் டைரக்டர் தொழில் அதிபர் இருக்கிறார். அவரையும் அழைத்து அதைப் பற்றி பேசினேன். சமரசமான முடிவு காண வேண்டும் என்ற நோக்கத்தோடு பேசினேன். அதில் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் சொன்னது போல தொழிற்சங்கச் செயலாளர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். டிஸ்மிஸ் செய்யப்படவில்லை. அவரை வேலை நீக்கம் செய்யப்படக்கூடாது என்ற உறுதி மொழியோடு யாரையும் பழி வாங்கக் கூடாது என்று உறுதி மொழியும் வாங்கியிருக்கிறேன். அதை அவர் எந்த அளவு காப்பாற்றுவார் என்பது வேறு. மேலும் பேச்சு வார்த்தை நடத்தலாமென்றால் அவர் வெளிநாடு சென்றிருக்கிறார் என்று தகவல் வந்திருக்கிறது. இதுதான் தற்போது இருக்கக்கூடிய நிலவரம்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தீபாவளி சமயத்தில் தமிழகம் முழுவதும் போனஸ் கொடுக்கப்பட்டபோது, போன வருஷம் நஷ்டம் ஏற்பட்ட காலத்தில் கூட $8\frac{1}{3}$ சதவீதம் போனஸ் கொடுத்த இந்த நிர்வாகம், எந்தக் காரணங்கள் இருந்திருந்த போதிலும் தீபாவளி சமயத்தில் போனஸ் கொடுக்காமல் இருந்தது தொழிலாளர்களைப் பழி வாங்கக் கூடிய ஒரு கொடூரமான நடவடிக்கை என்று கணக்கில் எடுத்துப் பார்த்து, அதுவும் இந்த என்பீல்டு நிறுவனத்தார் மிகப் பெரிய நிறுவனத்தைக் கொண்ட முதலாளி, அவர்களை வழிக்குக் கொண்டு வர அரசு தலையிட்டு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே. நான் முன்பே சொன்னேன் திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் கேட்ட கேள்விக்கே அதை விடையாகச் சொன்னேன். அமைச்சர் நேரிடையாகத் தலையிடுகிறார் என்றால், அரசாங்கம் நேரிடையாகத் தலையிடுவது போலத்தான். டி. சி. எல். அலுவலகத்திற்கே நானே சென்று பேசியிருக்கிறேன். டி. சி. எல். தலையிட்டாலும், வேறு எந்த லேபர் ஆபிசர் தலையிட்டிருந்தாலும் கூட அரசே தலையிடுவது போலத்தான்.



நான் மதுரை சென்றிருந்தபோது தொழிலாளர்களையும் சந்தித்துப் பேசினேன். சென்னையில் மேனேஜிங் டைரக்டரையும் சந்தித்துப் பேசினேன். முதலாளிகளின் மீது சிலவற்றைத் திணிக்க தனி அதிகாரங்களைப் பெறக்கூடிய முறையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்து முயன்று வருகிறது. மாண்புமிகு ரமணி போன்றவர்களின் ஒத்துழைப்பின் பேரில் அரசு மேலும் அதிகாரங்களை முதலாளிகள் மீது திணிக்க பெற முடியும் என்று நம்புகிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்தப் போராட்டம் புதிய முனைக்குத் திரும்பியிருக்கிறது. தொழிலாளர்கள் விவசாயிகள் முதலானோர் அரசுக்கு நேரிடையாக வந்து முறையீடு செய்து மறியல் செய்யப்போவதாக தகவல் வந்திருக்கிறது. அதனால் அரசு உடனடியாக விரைவில் ஏதாவது செய்ய முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் அதிபர் வெளிநாடுகளுக்கு சென்றிருக்கிறார் என்று சொல்கிறார்கள். அவர் வந்தவுடன் நானே நேரில் சென்று உடனடியாக பேச்சு வார்த்தை நடத்தி இதற்கு ஒரு முடிவு எடுக்க முயல்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை சுமுகமாக முடிவதற்கு அமைச்சர் எடுத்த முயற்சிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிற அதே நேரத்தில், வெளி நாடு சென்றிருக்கும் தொழில் அதிபருக்காக காத்திருக்காமல், அங்கே இருக்கக்கூடிய மேனேஜ்மெண்ட்டைப் பார்த்து ஒரு முடிவு எடுக்க அரசாங்கம் நேரிடையாக தலையிடுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னேன். நானே நேரிடையாகத் தலையிட்டிருக்கிறேன், அமைச்சர் தலையிடுகிறார் என்றால் அது அரசாங்கம் தலையிடுவது போலத்தான் என்று. மேனேஜிங் டைரக்டர் இல்லாமல் மற்றவர்கள் இதில் முடிவு எடுக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இன்னும் 2, 3 தினங்களுக்குள் வரவேண்டிய தொழில் அதிபர் வெளி நாட்டிலிருந்து வந்தவுடன், நான் இன்றே போன் செய்து அவர் வந்து விட்டாரா என்று கூடத் தெரிந்து கொண்டு, வந்தவுடன் அவரை அழைத்துப் பேசுகிறேன். எவ்வளவு விரைவாக அழைத்துப் பேச முடியுமோ அவ்வளவு விரைவாக அழைத்துப் பேசி முடிவு எடுக்கிறேன்.

[1979 நவம்பர் 3

### திருச்சி விற்பனைக்குழுச் செயலாளர் மீதான குற்றச்சாட்டுகள்

*குறுகிய கால வினா—எண் 2 திரு. க. சுப்பு: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சி மார்க்கட் கமிட்டியில் செயலாளராக இருக்கும் திரு. எம். பாலசுப்பிரமணியம் என்பவர் மீது பல்வேறு குற்றச் சாட்டுகளைக் கூறி புகார் மனு ஒன்று அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) திருச்சி விற்பனைக் குழுச் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியம் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் வேளாண்மை விற்பனை இயக்குநர் மூலம் விசாரித்து அறியப் பட்டது, இயக்குநர் அறிக்கையின்படி குற்றச்சாட்டுகள் உண்மைக்கு புறம்பானவை என்றும் ஆதாரமற்றவை என்றும் தெரியவருகிறது.

### பொதுப் பணித் துறையினைப் பிரித்தமைத்தல்

* வினா எண் 81—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலப் பொதுப்பணித்துறையை இரண்டாகப் பிரிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) மற்றும் (ஆ) : இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : மாநிலத்திலுள்ள பொதுப் பணித் துறையை இரண்டாகப் பிரிக்க அரசு உத்தேசித்துள்ளதாக அமைச்சரின் பேரவைச் செயலர் அறிவித்தார். அதை எந்த வகையில் பிரிக்க உத்தேசித்துள்ளார்கள்? அதுகுறித்த விவரங்களை அரசு அறிவிக்க இயலுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : கட்டடப் பிரிவு, பாசனப் பிரிவு என்று இரண்டாகப்பிரிக்க அரசு உத்தேசித்துள்ளது.



1979 நவம்பர் 3]

திரு. ஆர். மணிமாறன் : இதுவரையில் என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன? இப்படிப்பட்ட பிரிக்கிற நிலை எப்போது இறுதிக் கட்டத்தை எட்டிப்பிடிக்கும் என்று அறிய விரும்புகிறேன்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : 1973-ம் ஆண்டு நிர்வாகச் சீர்திருத்தக் குழுவால் பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவு, பாசனப் பிரிவு என்று இரண்டாகப் பிரிக்கப்படவேண்டும் என்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால் அது அரசாணை ஆக்கப்படாமலிருந்தது. 10–11–1978ல் அரசாங்கம் தலைமைச் செயலாளர் தலைமையில் செயலர் குழு ஒன்றை நிறுவியது. அந்த செயலர் குழுவிடம் அரசு ஒரு அறிக்கையை கேட்டது. செயலர் குழுவும் அரசுக்கு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. தற்போது அமைச்சரவையின் முடிவு எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : மாநிலப் பொதுப் பணித் துறையை இரண்டாகப் பிரிப்பதானால் நிர்வாகச் செலவு அதிக மாகும் என்பதை அரசு உணருமா? அப்படிப் பிரிப்பதன் உள் நோக்கம் என்னவென்று அறிய விரும்புகிறேன்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : ஆக்கப் பணிகளைத் துரிதப்படுத்தவும், தேவையற்றச் செலவு களைத் தடுக்கவும் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்தவர்களாக விளங்கும் அதிகாரிகளின் கீழ் அந்தந்தப் பிரிவு ஆக்கப் பணிகளுக் காக பணிக்கப்படுகிறபோது மேலும் திறன்பட பணிகள் நடக்கும் என்ற நல்லெண்ணத்தில்தான் பிரிக்கப்பட உத்தேசித்துள்ளது.

திரு. க. மருதாசலம் : மாநிலப் பொதுப் பணித் துறையை இரண்டாகப் பிரிப்பதுபோல் மாவட்டத்தில் இருக்கிற பொதுப் பணித் துறைகளையும் இரண்டாகப் பிரித்தால் அங்கு வேலைகள் செவ்வனே நடைபெறுவதற்கு உதவியாகயிருக்குமே. அதையும் பிரிக்க உத்தேசமுண்டா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பிரிப்பது மாவட்டங்களின் நலனையும் கருதித்தான்.

### வேலை நிதித் திட்டத்தின்கீழ் பணிபுரிந்து வருவோர்.

* வினா எண் 82—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பொதுப் பணித் துறையில் "Work charged" என்ற பெயரில் உள்ள அரசாங்க ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை தற்பொழுது என்ன?

(ஆ) இவர்களது வேலை நிலைமைகளை அபிவிருத்தி செய்ய அரசு மேற்கொண்ட முயற்சிகள் என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ;

(அ) மொத்தம் 10,564 ஊழியர்கள்.

(ஆ) 10,449 ஊழியர்கள் மாநில சேவையாக்கப்பட்டவர்கள். மாநில சேவையாக்கப்படாத மீத 115 ஊழியர்களின் பணியை அரசு ஊழியர் பணிக்கு கொணர்வது பற்றிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாநில சேவையாக்கப்பட்டவர்கள் என்றால் நிரந்தரமாக்கப்பட்டவர்கள் என்றால், அவர்கள் தற்சமயம் வாங்குகிற சம்பளம் எவ்வளவு? அவர்கள் வேலைக்குச் சேரும்போது எந்தளவில் வாங்கிக் கொண்டிருந்தார்கள்? மீதுள்ள 115 பேர்கள் எப்போது நிரந்தரமாக்கப்படயிருக்கிறார்கள்? காலதாமதத்திற்கான காரணம் என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : சேவையாக்கப்பட்டவர்கள், 1977-ம்ஆண்டு 9,771 பேரும், 1978ம் ஆண்டு 651 பேரும், 1979-ம் ஆண்டு 27 பேரும் ஆக 10,449 பேர்கள் அரசு பணியாளர்களாக்கப்பட்டனர். மீதியுள்ள 115 பணியாளர்கள் அரசு பணியாளர்களாக்க 115 இடங்கள் ஏற்படுத்துவது பற்றிய செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. 115 சேவையாக்கப்படாத ஊழியர்களை அரசு பணியாளர்களாக்க 115 இடங்கள் ஏற்படுத்துவதிலும், சில பணியாளர்கள் ஐந்து ஆண்டுக்காலம் பணி முடிவடையாததாலும், மொத்தமாக அத்தனை பேரையும் அரசுப் பணியாளர்களாக்கிட வேண்டும் என்றும் வொர்க் சார்ஜ்ட் என்ற பெயரில் ஊழியர்கள் பொதுப் பணித் துறையில் இருக்கக்கூடாது என்று துறை விரும்புவதாலும் காலதாமதமில்லாமல் அவர்களை அரசுப் பணியாளர்களாக்க பணிகள் நடக்கின்றன.

[முற்பகல் 9-10]

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த வொர்க் சார்ஜ்ட் ஊழியர்கள் லிஸ்ட் தயார் செய்கிறபோது ஐந்து ஆண்டுகள், பத்து ஆண்டுகள் பணி செய்தவர்கள் எல்லாம் பலர் விடுபட்டுப் போயிருக்கிறார்கள் என்று அலுவலர்களே குறிப்புகள் எழுதியிருக்கிறார்கள். ஆகவே இவ்விதம் விடுபட்டுப் போனவர்களை இந்த லிஸ்டில் ஏற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : ஆதாரத்தோடு இதை குறிப்பிட்டு காட்டுவார்களேயானால் அவர்களும் சேர்க்கப்படுவார்கள்.





திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக வேலை செய்கின்றவர்கள் எத்தனை பேர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள்? இப்படிப்பட்டவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று முன்பு சொல்லப்பட்டது. ஆகவே இவர்களை எல்லாம் அரசு நிரந்தரமாக்கப்படுவதற்காக ஏற்பாடுகளை துரிதமாக செய்யுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, 115 பேர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களையும் நிரந்தரமாக்குவதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் முன்னாலேயே சொல்லி விட்டேன்.

திரு. என். பழனிவேல் : பொதுப் பணித் துறையில் பணி செய்கின்றவர்கள் யாராவது இறந்துவிட்டால் அவர்களுக்கு ஆண் வாரிசுகள் இல்லாமல் போகிறது பலருக்கு. அப்படிப்பட்டவர்களின் மனைவிகளுக்கு—அந்த விதவைகளுக்கு பொதுப் பணித் துறையில் வேலை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா;

திரு. எம். வின்சென்ட், (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை.

## மில் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் விக்கிரமசிங்கபுரம்

*வினா எண்.83— திரு. பி. ஈஸ்வர்மூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள மில் தொழிலாளர்கள் கூட்டுறவுப் பண்டகசாலைக்கு உடனடியாக தேர்தல் நடத்துமாறு அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள ஹார்வி மில்ஸ் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைக்கு உடனடியாக தேர்தல் நடத்துமாறு மேற்படி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஒரு கோரிக்கை கொடுத்திருந்தார்.

(ஆ) இது விஷயத்தை ஆராய்ந்து பார்த்ததில், நிர்வாகக் குழு கலைக்கப்படுவதற்குக் காரணமாக இருந்த குறைகள் மற்றும் சீர்கேடுகளை முழுமையாக களைய தனி அலுவலர் பதவி இன்னும் சிறிது காலம் நீடிக்கப்பட வேண்டுமென்று தெரிய வந்ததால், தேர்தலை தற்பொழுது நடத்த உத்தேசமில்லை.

<u>திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்</u>: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுப் பண்டக சாலையைப் பொறுத்தமட்டில், இந்த பண்டகசாலை நிர்வாகம் கலைக்கப்பட்டு 2¼ ஆண்டுகள் ஆகிறது. சென்ற மார்ச் மாத பட்ஜெட் கூட்டத்தில் நான் இதைப்பற்றி சுட்டிக்காட்டிய போது சீக்கிரமாக இங்கு தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை அமைச்சர் அவர்கள் தந்தார்கள். ஆனால் டிப்பார்ட்மென்டில் இருக்கக்கூடியவர்கள் அவர்களுக்கு இருக்கக்கூடிய பல்வேறு பிரச்னைகளில் பலவற்றை அட்ஜெஸ்ட் செய்து கொள்வதற்காக தேர்தலை நடத்துவதற்கு காலத்தை நீட்டிக்கொண்டே போகிறார்கள். இந்த இரண்டேகால் ஆண்டு காலத்திற்குள் குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்திருக்கலாம். ஆகவே அரசாங்கமே இதில் நேரிடையாக தலையிட்டு உடனடியாக தேர்தலை நடத்த முன்வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u>: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் கடுமையான 11 குறைபாடுகள் இருந்ததின் காரணமாகத்தான் இந்த சங்கம் தனி அலுவலரின் பொறுப்பில் விடப்பட்டது. மிக துரிதமாக இந்தக் குறைகளை எல்லாம் களையவேண்டும் என்ற எண்ணத்தோடு அரசு விரைந்து மிக கவனத்தோடு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

<u>திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்</u>: பேரவைத் தலைவர் அவர்களே, மந்திரி அவர்களுக்கு தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அங்கே சில குறைபாடுகள் இருக்கலாம். இருந்தாலும் நிர்வாகத்தைக் கலைக்கக்கூடிய அளவிற்கு கடும் குற்றச்சாட்டுகள் எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை. இப்போது கூறப்பட்டிருக்கும் குறைபாடுகள் அடிப்படையில் கலைத்தது சரியானதுதானா என்பதைப்பற்றி விசாரணை செய்வதற்கு அரசாங்கம் ஒரு நீதிபதியை நியமிக்க முன்வருமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u>: தலைவர் அவர்களே, நான் இந்தச் சங்கத்தில் கடுமையான குற்றச் சாட்டுகள் இருக்கின்றன என்று கூறினேன். அந்த 11 குற்றச்





சாட்டுகளில் குறிப்பிடப்பட்டிருப்பதில் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது ஏறத்தாழ 7 லட்சம் ருபாய் அளவுக்கு அங்கேயுள்ள பை-லாவைய்யும் மீறி அப்போதிருந்த நிர்வாகிகள் கடன் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இதனுடைய பொதுப்பணத்தை பை-லாவை மீறி கடன் கொடுத்திருப்பதை எல்லாம் பார்த்த பின்னால் தான், நல்லபடியாக இதனுடைய நிர்வாகத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்ற பொது நோக்கத்தோடு, நல்ல நோக்கத்தோடு, இந்த நிர்வாகம் கலைக்கப்பட்டு, இபபோது தனி அலுவலரின் கீழ் சீரமைக்கப் பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி</u>: பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஏதாவது தவறுகள் இருக்கின்றன என்ற காரணத்தைக் காட்டி நிர்வாக சபையைக் கலைத்துவிட்டு, தனி அதிகாரிகளைப் போடுகிறார்கள். அப்படி தனி அதிகாரி போட்டு ஆறு மாத காலத்திற்குள் குறைகளை எல்லாம் களைந்துவிட்டு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபையை அமைக்கவேண்டும். அதுதான் முறையாக இருக்கும். நிர்வாக சபையைக் காட்டிலும் தனி அதிகாரிகளின் ஆட்சியில் தவறுகள் அதிகமாக நடக்கிறது என்பதை நாம் அனுபவத்தில் பார்த்து வருகிறோம். ஆகவே இப்படி கலைக்கப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்களில் எல்லாம் ஆறு மாதத்திற்குள் தேர்ந்தெடுக்கப் பட்ட போர்டை போட வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரிசாமி அவர்களின் உணர்வை முழு மனதோடு அரசு ஏற்கிறது. அந்த அடிப்படையில்தான் வரயிருக்கின்ற புதிய கூட்டுறவு சட்டத்தில் இப்படிப்பட்ட விதிகளையெல்லாம் நிர்ணயிக்க வேண்டுமென்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக் கின்றது என்பதை இந்த மன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. மு. அம்பிகாபதி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் அவசரமாக தமிழகத்தில் கூட்டுறவு சொசைடிகளில் அட்வைசரி கமிட்டிகள் நியமிக்கப்பட்டு இருக்கின்றதா? அதிலே பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் இந்த முயற்சி எடுக்கப்படவில்லை. சென்ற நிதிநிலை அறிக்கையின்போது இதே மாமன்றத்தில் வாக்குறுதி எடுத்ததன் தொடர்பாக, தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் உறுப்பினர் அழகிரிசாமி அவர்கள் மூலக்கேள்வியைவிட்டுத் தேர்தல் பற்றிக் கேட்டார்கள். திரு அம்பிகாபதி அவர்கள் அதற்கும் மேலே ஒரு படி சென்று விட்டார்கள். இது சரியல்ல, துணைக் கேள்வி, மூலக்கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டும்.

## கீழ்நாச்சிப்பட்டுப் பகுதியில் விவசாயக் கூட்டுறவுச் சங்கம்.

* வினா எண். 84—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டம், சோ. கீழ்நாச்சிப்பட்டு மதுரா அரசம்பட்டு கிராமத்தில் விவசாய கூட்டுறவு நாணயச் சங்கம் திறக்க வேண்டுமென்று மனு அரசாங்கத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) கீழ்நாச்சிப்பட்டு கிராமத்தில் ஏற்கனவே செயல்பட்டு வந்த கூட்டுறவு விவசாய கடன் சங்கத்தின் நடவடிக்கைகளை முடிவுகட்ட 1970-ல் உத்தரவிடப்பட்டு, அச்சங்கம் கலைப்பிலுள்ளது. அச்சங்கத்தின் விவகார எல்லையிலுள்ள கிராமங்கள் திருவண்ணாமலை கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தின் எல்லையுடன் இணைக்கப்பட்டு அச்சங்கம் சம்பந்தப் பட்ட கிராமங்களுக்கு நல்லமுறையில் சேவை செய்து வருவதால் புதிய சங்கம் அமைக்கவேண்டிய அவசியமில்லையென தீர்மானிக்கப்பட்டது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசம்பட்டு கிராமத்தில் ஏற்கனவே விவசாய கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டு, மீண்டும் அது கலைக்கப் பட்டு, தற்போது திருவண்ணாமலை சங்கத்தோடு இணைக்கப் பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். விவசாயிகளின் நன்மையைக் கருதி, அங்கே கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது. அந்த கூட்டுறவு சங்கத்திற்கு அங்கே நிரந்தரமாக ஒரு உர கோடவுன் இருக்கின்றது. அப்பேர்ப் பட்ட கோடவுனை வீணாக்காமல், விவசாயிகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு, அரசம்பட்டு கிராமத்தில் விவசாய கூட்டுறவு சங்கத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சங்கம் பொருளாதார ரீதியில் தன்னிறைவு இல்லாத காரணத்தினால்தான் கலைக்கப்பட்டது. இந்தச் சங்கம் கலைக்கப்பட்டதற்குப் பிறகு, அது திருவண்ணாமலை கூட்டுறவு சங்கத்தோடு இணைக்கப் பட்டு, அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு பயிர்க் கடன் போன்ற கடன்களை கொடுத்து உதவி செய்வதற்கு இதனை திருவண்ணாமலை கூட்டுறவு சங்கத்தோடு இணைத்து, அவர்களுடைய நலன் பேணி பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாச்சிப்பட்டு கிராமத்திற்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே மேல்நிலைத் தேக்கத் தண்ணீர் தொட்டியைத் திறக்க வந்திருந்தபோது, இந்த விவசாய கூட்டுறவு சங்கத்தை நான் நிறுவுகிறேன் என்று வாக்குறுதி அளித்தார்களே, அது எந்த நிலையில் உள்ளது? அது என்ன ஆயிற்று? என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியின் போது அவர்கள் இந்த கோரிக்கையை வைத்திருக்கலாம். அதை இந்த அரசு பரிசீலனை செய்யும் என்று சொல்லியிருப்பேனே தவிர, செய்து முடிப்பேன் என்று உறுதிமொழி அளித்திருக்க மாட்டேன் என்பதை உங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

## பிடாகம் கிராம மணியம்.

* வினா எண். 85—திரு. வ. துலுக்கானம் : மாண்மிபுகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி எலவானுசூர் கோட்டை (பிடாகம்) கிராம மணியம் பேரில் அரசுக்கு புகார் மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : உளுந்தூர் பேட்டை தொகுதி எலவானுசூர் கோட்டை கிராம மணியம் பேரில் குற்றம் சாட்டப்பட்டு அதை விசாரணை செய்த பிறகு அவருக்கு 20 ரூபாய் அபராதம் போடப்பட்டது.

[1979 நவம்பர் 3

(முற்பகல் 9-20.)

பெரியார் மாவட்டம்.

* வினா எண். 86—திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;—

(அ) புதிதாக உருவாக இருக்கும் பெரியார் மாவட்டத்தின் பரப்பு, மக்கள் தொகை எவ்வளவு?

(ஆ) பெரியார் மாவட்டம் உருவாக்கப்படுவதினால் அரசிற்கு நிரந்தரமான செலவினங்கள் என்ன?

(இ) எத்தனை பேருக்கு புதிதாக வேலைவாய்ப்பு கிடைக்கும் நிலை உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இன்றைக்கு கோவை மாவட்டத்தை கோவை மாவட்டம் பெரியார் மாவட்டம் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்ட பிறகு பெரியார் மாவட்டத்தின் பரப்பளவு 8,170 சதுர கிலோ மீட்டர்கள், மக்கள் தொகை சுமார் 20 இலட்சம். கோவை மாவட்டத்தினுடைய மக்கள் தொகை சுமார் 26 இலட்சம்.

திரு. எஸ். முத்துசாமி : பெரியார் மாவட்டத்தின் பரப்பளவில் எவ்வளவு பரப்பளவு தண்ணீர் பாயாத பின்தங்கிய நிலமாக இருக்கிறது. அப்படி அதிகமாக இருக்கிற காரணத்தால் அதை பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; தனிக் கேள்வி போடவும்.

திரு. க. மருதாசலம் : புதிதாக பெரியார் மாவட்டம் என்று பிரித்திருக்கிறார்களே தவிர அரசாங்க அலுவலகங்கள் கட்டப்படவில்லை. அதற்கு அரசு என்ன முயற்சி எடுத்து வருகிறது? அந்த அலுவலகங்கள் எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : புதிய மாவட்டங்களாகப் பிரித்தாலும் சரி, புதிய கோட்டங்களைப் பிரித்தாலும் சரி, புதிய வட்டங்களைப் பிரித்தாலும் சரி, இந்த அரசு எல்லாவற்றுக்கும் சேர்ந்தார்போல் ஒரே ஆர்டராக ஜி.ஓ. போட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன்னால் எந்த அரசும் இந்த மாதிரி ஆர்டர் போடவில்லை. இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பெரியார் மாவட்டத்திற்காக மொத்தமாக நான்கு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொடரும் செலவு 37 இலட்சம் ரூபாய்; தொடராச் செலவு 3.65 கோடி ரூபாய். அலுவலகக் கட்டிடங்கள்



1979 நவம்பர் 3]

கட்டுவதற்காக 3½ கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதோடு 175 வீடுகள் கட்டுவதற்கும் அரசு அனுமதி கொடுத்து வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. கு. ரமணி : அமைச்சர் அவர்கள் மூலக் கேள்வியில் இரண்டுக்குப் பதில் கொடுத்தார்கள். மூன்றாவது கேள்வியான எத்தனைப் பேருக்குப் புதிதாக வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பதற்குப் பதில் சொல்லவில்லை. அதற்குப் பதில் என்ன? அதோடு கோவை மாவட்டம் ஒன்றாக இருந்தபோது இருந்த உத்தியோகஸ்தர்களில் கோவையிலிருந்து எவ்வளவு பேர்கள் பெரியார் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாவட்டம் புதிதாகப் பிரிந்தால் எவ்வளவோ அலுவலகங்கள் புதிதாக ஏற்பட இருக்கின்றன. அப்படி ஏற்படுகிற அலுவலகங்கள் பற்றி முழுமையாக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. யார் யாரை அவற்றுக்கு நியமித்திருக்கிறார்கள் என்ற விவரம் பின்னால் அறிவிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : புதிய மாவட்டங்கள் பிரிக்கப்படும் போது எந்தெந்த அடிப்படையில் புதிய மாவட்டங்கள் பிரிக்கப்படுகின்றன? மேலும் புதிதாக ஏதேனும் மாவட்டங்கள் பிரிக்கப்பட இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் கேட்கிற கேள்வியிலிருந்து அவர்கள் புதிய மாவட்டங்களாகப் பிரிப்பதில் அதிகமாகக் கவனம் செலுத்துகிறார்கள் என்பது தெரிகிறது. புதிய மாவட்டங்களாகப் பிரிப்பதைவிட புதிய வட்டங்கள், புதிய பிர்க்காக்கள், பெரிய கிராமங்களை சிறு சிறு கிராமங்களாக ஆக்க வேண்டுமென்று எண்ணினால் மிக உதவியாக இருக்கும். இந்த அரசின் கொள்கை மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் பெரிய வட்டங்களைப் பிரிக்க வேண்டும், பிர்க்காக்களைப் பிரிக்க வேண்டும், பெரிய கிராமங்களைப் பிரிக்க வேண்டும், பெரிய கோட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. அதை எப்படிப் பிரித்தாலும் அங்கே இருக்கிற மக்கள் தொகையை கணக்கில் வைத்துக் கொண்டு, கிராமங்களின் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு, அங்கே இருக்கிற நிலப்பரப்பை வைத்துக் கொண்டு, அந்த இடத்தில் அங்கே இருக்கிற வருவாயை வைத்துக் கொண்டு, அந்த இடத்தில் இருக்கக்கூடிய மக்களின் ஒப்புதலைப் பெற்று எப்படி செய்ய வேண்டுமென்று ஆராய்ந்து இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசிற்கு அதிகமான செலவுகள் ஏற்பட்டாலும் தந்தை பெரியார் பெயரால் வழங்கப்படும் இந்த பெரியார் மாவட்டத்தில் அலுவலகங்கள் அங்கே உள்ள ஒரு பரந்த இடத்தின், நகரத்திற்கு ஒதுக்குப்புறமான இடத்திலே எல்லா அலுவலகங்களும் ஒரே இடத்தில் இருக்கும்படியாக மற்ற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வந்து பார்க்கும்படியான வகையில் புதிய விதத்தில் நல்லமுறையில் அமைக்கப்படுமா? அங்கே புதிதாக நிறையப் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க இருக்கிறது என்று சொன்னார்கள். வேறு மாவட்டங்களிலிருந்து மாற்றுதல் செய்து அந்த இடத்திலே உள்ள வேலைகளை நிரப்பாமல் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கே வேலை வாய்ப்புக்களைக் கொடுப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, எல்லாம் நகரத்தைவிட்டு தூரத்தில் போகவேண்டுமென்று எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே உள்ள மக்களின் போக்குவரத்து வசதியை கணக்கிலே எடுத்துக் கொண்டாகவேண்டும். அங்கே 7 மாடிக் கட்டிடம் அமைக்க இருக்கிறோம். இன்றையதினம் தமிழகத்திலே வேறு எந்த மாவட்டத்திலேயும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு 7 மாடிக் கட்டடம் இல்லை, அங்கேதான் முதன் முதலாக அமைய இருக்கிறது. ஆகவே அது புதுமையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேறு யாருக்குமே அங்கே வேலை கொடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். தமிழ்நாடு எல்லாம் ஒன்றாக இருக்கிறது என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. திருப்பூர் ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட தந்தை பெரியார் மாவட்டத்தில் கிராமப்புறங்களை உள்ளடக்கிய பகுதிகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே தொழில் வளம் அதிகமாக இல்லாத நிலைமை இருப்பதால் அந்த மாவட்டம் தொழில் துறையைப் பொறுத்தவரையிலே பின்தங்கிய மாவட்டம் என்று அறிவிக்க அரசு முன்வருமா? தாராபுரம் தாலுகாவையாவது பின்தங்கிய தாலுகா என்று அறிவிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, பின்தங்கிய மாவட்டம், முன்தங்கிய மாவட்டம் என்று ஒரு அரசு நினைத்த உடனேயே அறிவிக்க முடியாது. ஆனால் இந்தியத் துணைக் கண்டம் விடுதலை அடைந்த பிறகு மத்திய அரசு எல்லா மாநிலங்களுக்கும் தாக்கீது அனுப்பி எந்த எந்த மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்கள் எந்த எந்த





மாவட்டங்கள் முன்னேறிய மாவட்டங்கள் என்று கேட்டார்கள். அப்போது சில மாவட்டங்களை பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவித்தார்கள். தொழில் துறையிலே மட்டுமல்ல, பொருளாதார அடிப்படையிலேயும் பின்தங்கியிருக்கவேண்டும் என்பதை மனத்திலே கொண்டு பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவித்தார்கள். இப்போது சிலவற்றை பின்தங்கியவை என்று நாம் சிபாரிசு செய்தால் அவர்கள் ஏற்றுக்கொள்வது இல்லை. இருந்தாலும் பொருளாதார அடிப்படையிலும், தொழில் துறையிலும் பின்தங்கியவை எவை என்பதை ஆராய்ந்து அரசு சிபாரிசு செய்ய எண்ணிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. ராமசாமி : தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் என்பது சமீபத்திலே கோவை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட மாவட்டம். கோவை மாவட்டத்தை தொழில் துறையிலே பின்தங்கிய மாவட்டம் என்று அறிவிக்க முடியாத நிலைமை இருந்தது. காரணம் கோவை மாவட்டத்தில் நூற்பாலைகளும் தொழிற்சாலைகளும் இருப்பதால் அறிவிக்க முடியவில்லை. ஆனால் பெரியார் மாவட்டத்திலே எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லை. சக்தி சுகர்ஸ் என்ற ஒரு தொழிற்சாலைதான் இருக்கிறது. ஆகவே தொழிற் துறையிலே பின்தங்கிய மாவட்டமாக— தர்மபுரி மாவட்டத்தை அறிவித்து இருப்பதுபோல்—அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன் பின்தங்கிய மாவட்டம் என்பது தொழில் துறையிலே மட்டுமல்ல, பொருளாதார ரீதியிலேயும் அது பின்தங்கியதா என்று பார்க்கப் படுகிறது. தொழில் துறையிலே பின்தங்கிய மாவட்டம் என்றால், முதலிலே பின்தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கப்பட வேண்டியது தஞ்சை மாவட்டம்தான். ஆனால் பொருளாதாரத் துறையிலேயும் பார்க்கிறார்கள். பெரியார் மாவட்டம் மட்டுமல்ல, தமிழகத்திலே எந்த எந்த மாவட்டங்கள் பொருளாதார ரீதியிலே பின்னாலே தள்ளப்பட்டிருக்கின்றன அவைகளுக்கு எந்தவிதமான உதவிகளைச் செய்யலாம் என்பதை ஆராய்ந்து சிபாரிசு செய்வதற்கு அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

## ஏலகிரி—ஜவ்வாது மலைப் பகுதிகளில் சந்தனத் தொழிற்சாலை.

* வினா எண். 87— திரு. இ. தமிழரசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வடாற்காடு மாவட்டம் ஏலகிரி-ஜவ்வாது மலைகளில் கிடைக்கின்ற சந்தன மரங்களை பயன்படுத்தி துணை பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

[1979 நவம்பர் 3

(ஆ) எந்த இடத்தில் அமைக்கப்பெறும்?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) தமிழக காடுகளிலிருந்து உற்பத்தியாகும் சந்தனக் கட்டைகளில் ஒரு பகுதியைக் கொண்டு சிறு தொழில் பிரிவில் 5 அல்லது 6 சந்தன எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகள் நிறுவ முறையான நடவடிக்கைகளை அரசு மேற் கொண்டுள்ளது.

(ஆ) இத்தொழிற் சாலைகளை எந்த இடங்களில் அமைக்கலாம் என்பது பற்றி அரசு கூடிய விரைவில் முடி வெடுக்கும்.

திரு. இ. தமிழரசன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் எவ்வளவு மதிப்புள்ள சந்தனம் இன்றைக்குக் கிடைக்கிறது? ஏலகிரி ஜவ்வாது மலைப் பகுதியிலே எவ்வளவு மதிப்புள்ள சந்தனம் கிடைக்கிறது? ஏலகிரி ஜவ்வாது மலைப் பகுதியிலே கிடைக்கிற சந்தனத்தை திருப்பத்தூரிலே உள்ள சந்தனக் கிடங்கிற்குக் கொண்டு செல்வதென்றால் தொலை தூரத்திலே அது இருக்கிறது. ஆகவே இந்தத் தொழிற் சாலையை அந்தப் பகுதிக்கு அருகிலே உள்ள வாணியம்பாடி பகுதியிலே அமைப்பதற்கு அரசு முன்வருமா? மேலும் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அந்தத் தொழிற்சாலையிலே பணி புரியும் முறையிலே அந்தத் தொழிற்சாலையை வாணியம்பாடிப் பகுதியிலே அமைப்பதற்கு அரசு முன்வருமா?

[முற்பகல் 9-30]

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் வருஷம் ஒன்றுக்குச் சுமார் 1,500 டன் சந்தன மரம் கிடைக்கிறது: அதிலே ஏலகிரி மலைப் பகுதியிலே எவ்வளவு சந்தனக் கட்டைகள் கிடைக் கின்றன என்பதற்குத் தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஆரம்பத்திலே கேட்ட கேள்விக்கு தொழிற் சாலையை எந்த இடத்திலே அமைக்கலாம் என்பது பற்றி அரசு கூடிய விரைவில் முடிவெடுக்கும் என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய ஆலோசனையை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, ஜவ்வாது மலையில் நிறைய சந்தனக் கட்டைகள் இருக்கின்றன. எந்த இடத்தில் தொழிற்சாலை. அமைக்கலாம் என்று அரசாங்கம் ஆலோசிக்கும் என்று அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அந்த ஆலையை அமைக்கும்பொழுது



1979 நவம்பர் 3]

ஜவ்வாது மலைப் பகுதியில் உள்ள எந்தத் தொகுதியில் வந்தாலும் அந்த மலைப் பகுதியிலேயே அமைக்க வேண்டுமென்பது மலைவாழ் மக்களின் கோரிக்கை. அதை அரசு கருத்திற் கொண்டு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, அவசியம் பரிசீலிக்கப்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டம் ஏலகிரி ஜவ்வாது மலைகளில் கிடைக் கின்ற சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அங்கே ஏற்படுத்தப் போவதாக அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் சொன் னார்கள். தர்மபுரி மாவட்டத்தில் அதிகமாக சந்தனக் கட்டைகள் கிடைக்கின்றன. எனவே, தர்மபுரி மாவட்டத்தில் ஒரு சந்தனத் தொழிற்சாலை அமைக்க அமைச்சரவர்கள் ஏற்பாடு செய் வார்களா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கனவே சொன் னேன், வடார்க்காடு மாவட்டம் ஏலகிரி ஜவ்வாது மலைகளைப் பற்றிய கேள்வி என்று சொன்னேன். நீங்கள் தர்மபுரி மாவட்டத்தைப் பற்றிக் கேட்கிறீர்கள்.

திரு. வீ. அர்ச்சுனன்: பேரவைத் தலைவரவர்களே, வடார்க் காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலை போளூர் தாலுக்காவில் அமைந்துள்ளது. அந்த ஜவ்வாது மலையில் ஏறக்குறைய பல ஆயிரக்கணக்கான டன் சந்தனக் கட்டைகள் இறக்குமதி செய்யப் படுகின்றன. அங்கே கள்ளக்கடத்தல்காரர்கள் கொண்டு செல்லும் சந்தனக் கட்டைகளைக் கண்டுபிடிக்கும்பொழுது, அந்த சந்தனக் கட்டைகளை அரசு எந்த முறையில் விற்பனை செய் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, சந்தன மர விலை ஏற்றம், வெளி நாடுகளில் சந்தன மர எண்ணெய்க்கு உள்ள கிராக்கி முதலிய காரணங்களால் தமிழக வனங்களிலிருந்து சந்தன மரங்கள் வெளி மாநிலங்களுக்குக் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டு வந்தன. இதைத் தவிர்க்கவும், சந்தன மரம், சந்தன எண்ணெய் இவற்றின் விலைகளைச் சீர்படுத்தவும், தமிழ்நாட்டில் கிடைக்கப்பெறும் மொத்த சந்தனக் கட்டைகளையும் உபயோகித்து வடார்க்காடு மாவட்டத்தில் பெரிய அளவில் சந்தன எண்ணெய் தொழிற்

கூடம் நிறுவ தீர்மானித்து இதுபற்றி விவர அறிக்கை தயார் செய்து அனுப்புமாறு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தைப் பணித்து அரசு 1978—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, இந்தச் ச்ந்தனத் தைலத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதாக 1978-ஆம் வருஷ பட்ஜெட் கூட்டத்திலேயே சொல்லப்பட்டு ஒன்றரை வருஷ காலம் ஆகிறது. இதுவரையிலே ஏன் ஆரம்பிக்கப்படவில்லை? அதற்கான காரணம் என்ன? உடனடியாக ஆரம்பிக்கக்கூடிய அளவிற்கு உத்தேசம் உண்டா? அல்லது மோடி மஸ்தான் கீரிப் பிள்ளைக்கும் நாகப்பாம்புக்கும் சண்டை விடுகிறேன் பார், சண்டை விடுகிறேன் பார் என்று சொல்லுகின்ற கதையாக முடியுமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய அளவில் சந்தன எண்ணெய் தொழிற்கூடம் நிறுவத் தீர்மானித்து இதுபற்றி விவர அறிக்கை தயாா செய்து அனுப்புமாறு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தைப் பணித்து அரசு 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஆணை பிறப்பித்திருந்தாலும்கூட, மத்திய அரசின் கொள்கைப்படி, இன்றியமையாத எண்ணெய்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் சிறு தொழில் பிரிவில் அமைக்கப்பட வேண்டும். சந்தன எண்ணெய் இன்றியமையாத எண்ணெய்களில் ஒன்றென வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே, மத்திய அரசின் கொள்கைக்கேற்ப, தமிழக வனங்களிலிருந்து உற்பத்தியாகும் சந்தனக் கட்டைகளில் ஒரு பகுதியைக் கொண்டு, தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம், சிறிய அளவில் 5 முதல் 6 சந்தன எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை இம்மாநிலத்தில் தகுந்த இடங்களில் நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, ஏலகிரி ஜவ்வாது மலைப்பகுதிகளின் மையமாக திருப்பத்தூர் பகுதி இருக்கிறது. திருப்பத்தூர் பகுதி நிறைய சந்தன மரம் கிடைக் கின்ற பகுதி, போக்குவரத்து வசதி, தண்ணீர் வசதி, இட வசதி ஆகிய அனைத்தும் உள்ள ஒரு இடமாக அது அமைந்திருப்பதால் திருப்பத்தூர் பகுதியில் அந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு,கே.ஜே. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டம் போளூர் தாலுக்காவில் நிறைய சந்தனக் கட்டைகள் உற்பத்தியாகின்றன. அந்த



உற்பத்தியைப் பயன்படுத்தும் வகையில், என்னுடைய தொகுதியில் எந்தத் தொழிற்சாலையும் இல்லாத காரணத்தால் அந்தத் தொழிற்சாலையை அங்கே நிறுவ வேண்டுமென்று எடுத்துக் கூறி, அமைச்சரவர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, நிலை அறிந்து உறுப்பினர் அவர்களது கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

## வைகை அணைக்கட்டுப் புகுதியில் உள்ள காட்டிலாகா பயிற்சி நிலையம்.

* வினா எண் 88—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர்-கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வைகை அணைக்கட்டுப் பகுதியில் உள்ள காட்டிலாகா பயிற்சி நிலையத்தில் படித்து வருபவர்களுக்கு விசேஷமாக உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்படுகிறதா?

(ஆ) முதல் மதிப்பெண் எடுத்தவர்களுக்குக் கொடுத்து வந்த பரிசு ஏன் நிறுத்தப்பட்டது?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) இல்லை.

(ஆ) முதல் மதிப்பெண் பெறும் பயிற்சியாளருக்குப் பதக்கம் வழங்கும் முறை இன்னும் நீடிக்கிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி கொடுத்து கிட்டத்தட்ட ஓராண்டுக்காலம் ஆகிறது. இவ்வளவு வேகமாக வந்ததற்காக நன்றி கூறுகிறேன். வைகை அணைக்கட்டுப் பகுதியிலே உள்ள டிரெயினிங் சென்டரிலே கொடுக்கக்கூடிய அந்த டிரெயினிங் காட்டிலாகா சம்பந்தப்பட்ட வர்களுக்கு—ஏற்கனவே வேலையில் உள்ளவர்களுக்குத்தான் டிரெயினிங் கொடுக்கப்படுகிறது. வேலையில் உள்ள காலத்திலே டிரெயினிங்குக்கு வரக் கூடியவர்களுக்கு டி. ஏ. கூடக் கொடுப்ப தில்லை என்று கேள்விப்படுகிறோம். டிரெயினிங் சென்டரிலே, படுக்கை இன்னும் மற்ற வசதிகளை இந்த அரசு செய்து கொடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, அப்படி பயிற்சி அளிக்கப்படுகிறவர் களுக்கு சுற்றுலாவிற்கு நேரடிக் கல்வி கற்கும் நிமித்தம் அழைத்துச் செல்லப்படும்போது பிரயாணப்படி அளிக்கப்படுகிறது

## வடாற்காடு மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளில் வேலை நாட்கள்.

* வினா எண் 89—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் ஆண்டு வேலை நாட்கள் 200 என்று இருக்கும்பொழுது வடாற்காடு மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கு மட்டும் 210 என்றுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனை மாற்றி அமைக்கும்படி முதன்மை கல்வி அலுவலருக்கு பரிந்துரை செய்யும் உத்தேசம் உள்ளதா ?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் வேலை நாட்கள் ஆண்டுக்கு குறைந்த பட்சம் 200 நாட்கள் இருக்க வேண்டுமென்பதுதான் நடைமுறை விதிகளே தவிர 200 நாட்கள்தான் என்பது சரியல்ல.

எதிர் பாராத சூழ்நிலைகளால் பள்ளிகளுக்கு விடுமுறை வேண்டியிருப்பின் வேலை நாட்கள் 200-க்கும் குறைவாக இருந்து விடக்கூடாது என்று, முன்னேற்பாடாக, வட ஆற்காடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் 1978-79-ம் கல்வி ஆண்டில் 200 நாட்களுக்கு அதிகமாக வேலை நாட்கள் இருக்கும்படியாக விடுமுறைப் பட்டியல் தயாரித்து பள்ளிகளுக்கு அனுப்பியுள்ளார். 1978—79-ல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு நாட்கள் நீங்கலாக வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் 203 வேலை நாட்களே இருந்தன.

(ஆ) மேலே கண்ட விவரத்தின் அடிப்படையில் இது எழவில்லை.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே, விடுமுறைகள் மாநிலம் முழுவதும் ஒரே அடிப்படையில் தானிருக்க வேண்டும். அப்படியிருக்கும்போது ஒரு மாவட்டத்திற்கு மட்டும் விடுமுறைகள் ஏன் அப்படியிருக்கின்றன என்பதுதான் கேள்வி. அதற்கு அமைச்சரின் செயலர் பதில் சொல்லவில்லை.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத்தலைவரவர்களே, அந்தந்த மாவட்டத்தில் ஏற்படுகின்ற தவிர்க்கமுடியாத காரணங்களாலே சில நேரங்களிலே வேலை நாட்கள் குறையும்படியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் அப்படிப்பட்ட சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காக விடுமுறை நாட்களைக் குறைத்து வேலை நாட்களை அதிகரித்து அறிவித்திருக்கிறார்கள். அந்தந்த மாவட்ட நிலைமைகளைக் குறித்து இது அறிவிக்கப்படுகிறது.





## தனியார் பள்ளிகளது வரன்முறை.

*வினா எண் 90 திரு. ஒ. சோ. வேலுசாமி ; மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு. எம்.டி. பால் அவர்கள் அளித்திருந்த அறிக்கையினை பரிசீலனை செய்து கல்விச் சட்டங்களை மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரங்கள் என்ன?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) மற்றும் (ஆ) திரு. எம். டி. பால் அவர்கள் அளித்துள்ள பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார்ப் பள்ளிகள் வரன்முறைச் சட்டம், 1973 மற்றும் அதன் கீழ் தமிழ்நாடு தனியார்ப் பள்ளிகள் வரன்முறை விதிகள் 1974 ஆகியவை இயற்றப்பட்டு இம்மாநிலத்தில் 1-12-74 முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. ஒ.சோ. வேலுச்சாமி : பேரவைத் தலைவரவர்களே, பெரும்பாலான தனி நபர் பள்ளிகளும் கமிட்டி பள்ளிகளும் லிமிடெட் கம்பெனிகளைப் போலவும் ஜாதி ஸ்தாபனங்களாக நடத்தப்பட்டு வருகிறது. இப்பொழுது 1974 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்குப் பிற்பாடும் அதே குறைபாடுகளும் ஒழுங்கீடும் தனியார் பள்ளிகளிலே இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, அதைக்களைய இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, டாக்டர் எம். டி. பால் அவர்கள் 1971-ல் அளித்த அறிக்கையில் காணப்பெற்ற பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார்ப் பள்ளிகள் வரன்முறைச் சட்டம், 1973 மற்றும் தமிழ்நாடு தனியார்ப் பள்ளிகள் வரன்முறை விதிகள், 1974 ஆகியவை இயற்றப்பட்டன. அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, சட்டம் இயற்றிய பிறகும் தனியார் பள்ளிகளில் குறிப்பாக மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன்களில், பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு சட்டப்படியான உரிமைகள் கூட மறுக்கப்படுகிறது. குறிப்பாக, இப்போதுள்ள படி ஃபன்டமென்ட்டல் ரைட்ஸ் கூட மறுக்கமுடியாது. ஆனால், சி, எஸ். ஐ. என்று சொல்லக் கூடிய சர்ச் ஆஃப் சௌத் இந்தியா போன்ற இன்ஸ்டிடியூஷன்கள் நடத்துகின்ற பள்ளிகளில்

[திரு. ரா. உமாநாத்] [1979 நவம்பர் 3

ஆசிரியர்களைச் சேர்க்கிறபொழுது நான் கோர்ட்டுக்குப் போக மாட்டேன், எந்தத் தாவா வந்தாலும் என்ற அன்டர்டேக்கிங் வாங்கிய பிறகுதான் சேர்க்கிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி என்றால் இது கன்டம்ட் ஆஃப் கோர்ட் அல்லவா? கன்டம்ப்ட் ஆஃப் கான்ஸ்டிடுயூஷன் அல்லவா? ஆகவே, ஆசிரியர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் வேறு சட்டங்கள் ஏதாவது கொண்டுவர உத்தேசம் உண்டா?

(முற்பகல் 9-40)

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மேற்சொன்ன சட்டத்தினையும் அதன் விதிகளையும் எதிர்த்து 1300க்கும் மேற்பட்ட ரிட் மனுக்கள் தனியார்ப் பள்ளி நிர்வாகத்தினரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் 1975-ம் ஆண்டில் தொடுக்கப்பட்டன. இதனை விசாரித்த உயர்நீதி மன்றம் 17-12-1975 நாளிட்ட தீர்ப்பில் மேற்சொன்ன சட்டத்தின் பெரும்பான்மையான பிரிவுகள், மொழி மற்றும் மத அடிப்படையிலான சிறுபான்மையினருக்கு அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 30 (1)-ல் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு முரணாக உள்ளது என்று கூறி அப்பிரிவுகள் சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளுக்குப் பொருந்தாது என்று கூறியுள்ளது.

இச்சட்டத்தையும் அதன் விதிகளையும் சிறுபான்மையினர் பள்ளிகள். சிறுபான்மையினர் அல்லாதார் பள்ளிகள் என்ற பாகுபாடு இன்றி அனைத்துத் தனியார் பள்ளிகளிலும் அமுல் செய்யவும், சிறுபான்மையினர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கட்கு உரிய பணி பாதுகாப்பு வழங்கவும்—சிறுபான்மையினர் பள்ளி நிர்வாகங்களை உரிய முறையில் கட்டுப்படுத்தவும் மேற்சொன்ன சென்னை உயர்நீதி மன்ற 17-12-75 நாளிட்ட தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய உச்ச நீதி மன்றத்தில் தனி முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கொண்டு மேல் முறையீடுகள் உச்ச நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, நான் 5 கேள்விகளாக கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து கேள்வி நேரத்தில் எழுந்து நின்று என்னைக் கேள்வி கேட்கக் கூடாது. நீங்கள் கையைத் தூக்குங்கள் என்று நான் சொல்லவில்லை,



1979 நவம்பர் 3]

வானூர் ஒன்றியத்தைப் பிரித்தமைத்தல்.

*வினா எண் 91—திரு. மொ. பரமசிவம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம் வானூர் ஒன்றியத்தை வானூர் கிளியனூர் என இரண்டு ஒன்றியங்களாக பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மொ. பரமசிவம் : தலைவரவர்களே, வானூர் ஒன்றியத்தில் 64 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. எனவே இரண்டாகப் பிரித்து கிளியனூரைத் தனி ஒன்றியமாக அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பி வைத்தால் பரிசீலிக்கலாம்.

கிராம பஞ்சாயத்துக்களில் விளக்குகள் பராமரிப்பு.

*வினா எண் 92—திரு. த. புஷ்பராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

கிராம பஞ்சாயத்துக்களில் தெரு விளக்குகளை சரியாக பராமரிக்க 10 கிராம பஞ்சாயத்துக்களுக்கு ஒரு லைன்மேன் நியமிக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. த. புஷ்பராஜ் : தலைவரவர்களே, தமிழகத்திலே கிராம பஞ்சாயத்துக்களில் தெருவிளக்குகள் எரிவதே இல்லை. அரசு தரும் ஊக்கப் பணத்தைப் பயன்படுத்தியும்கூட விளக்குகளை சரியாக எரிய வைக்க முடிவதில்லை. பஞ்சாயத்துக்களை கலைத்த இந்த சூழ்நிலையில் தெருவிளக்குகள் எரியவில்லை. தெருவிளக்குகளை எரிய வைப்பதற்கு என்ன மாற்றுத் திட்டம் அரசு வைத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

[1979 நவம்பர் 3

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> தலைவரவர்களே, ஏற்கனவே 21—3—1979-ம் நாள் மின்சக்தி ஆலோசனைக் குழு பரிந்துரைத்ததின் பேரில் அரசு சில முடிவுகள் எடுத்திருக்கிறது. இதற்குப் பிறகும் புகார்கள் வந்தால் அரசு பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது.

<u>திரு. க. சுப்பு :</u> தலைவரவர்களே, இப்பொழுது ஊராட்சி மன்றங்களிலே மற்றத் துறைகளிலே செயல்முறைகள் சரியாக இருக்கிறதா என்று கண்காணிப்பதற்கு ''எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்கள்'' போடப்பட்டிருப்பதுபோல மின்விளக்குகள் எரிகிறதா என்று கண்காணிப்பதற்கு ஒரு அதிகாரியைப் போட வேண்டும் என்று பஞ்சாயத்துத் தலைவர்களுடை மாநாட்டிலேய ஆலோசனை சொல்லப்பட்டது. அந்த ஆலோசனையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> தலைவரவர்களே, அந்த ஆலோசனையை அரசு ஏற்றுக் கொண்டு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

<u>திரு. செ. சின்னசாமி:</u> தலைவரவர்களே, அப்படி அரசு ஆலோசனை இருக்கும் போது அப்படி நியமிக்கப்படுகிறவர்களை தெருவிளக்குகள் எரிகிறதா இல்லையா என்பதை, காவல் துறையிலே நைட் டியூட்டி போடுவது போல, இரவு நேரத்திலே சென்று பார்த்து, எரியாத விளக்குகளை உடனடியாக எரிய வைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அரசு அறிவிக்குமா?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> விளக்கு எரிகிறதா என்று பார்க்க இரவிலேதான் நிச்சயமாக அதிகாரிகள் நிச்சயமாகப் போவார்கள்.

<u>திரு. சொ. ந. பழனிசாமி:</u> பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களிலே மின் விளக்குகளைப் பழுதுபார்ப்பதற்கு ஒரு லைன்மேன் மற்றும் ஹெல்பர் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆணையர் அவர்களின் கீழ் பணியாற்றும் வகையில் அரசு நியமிக்குமா?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> ஏற்கனவே குறிப்பிட்டேன், அரசின் ஆய்வில் இருக்கிறது.

<u>திரு. சி. ராமநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களில் ஒழுங்காகத் தெருவிளக்குகள் எரிய வேண்டுமானால், நல்ல பல்புகள் போடவேண்டும். தற்போது அடிக்கடி பல்புகள் பீசாகி விடுகின்றன. அவற்றை



979 நவம்பர் 3] [திரு. சி. ராமநாதன்]

அடிக்கடி மாற்ற வேண்டியிருக்கிறது. அவ்வாறு அடிக்கடி
மாற்றவேண்டும் என்றால் பஞ்சாயத்துக்களுக்கு வருகின்ற
வருவாய் அனைத்தும் அதற்குச் செலவாகிவிடும்போல் இருக்கிறது.
தை அரசு அறியுமா? அடிக்கடி பல்புகள் பீசாவதைத் தடுக்கும்
கையில் நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ;</u> நோய் எல்லோருக்கும்
ரிகிறது. மருந்து எது என்பதிலே தான் பிரச்னை.

<u>திரு. ப. சந்திரன் :</u> தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்
களில் தெருவிளக்குகளுக்குப் போடுவதற்கான பல்புகளை
ஒட்டுமொத்தமாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சூப்பர்
மார்க்கெட்டில் இருந்து வாங்கவேண்டும் என்று அரசு ஆணை
பிட்டு இருக்கிறது. ஆனால், எல்லா பஞ்சாயத்துக்களுக்கும்
தேவையான அளவிற்கு ஒட்டுமொத்தமாக பல்புகளை அந்த
சூப்பர் மார்க்கெட்டில் விநியோகிக்க முடிவதில்லை. அதன்
காரணமாகத்தான் பல்வேறு கிராமங்களில் மின்சார பல்புகள்
உடனடியாக மாற்ற முடிவதில்லை. இந்தக் குறை அரசுக்குத்
தெரியுமா? அதற்கு மாற்றுத் திட்டம் அரசின் பரிசீலனையில்
உள்ளதா?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> தலைவர் அவர்களே,
அப்படி ஒரு நிலைமை இருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவர்
அந்த விதியைத் தளர்த்தி உரிய ஏற்பாட்டினைச் செய்யலாம்.

<u>திரு. கே. பண்ணை சேதுராமன் :</u> தலைவர் அவர்களே,
பஞ்சாயத்துக்களிலும், நகரசபைகளிலும், தெருவிளக்குகள்
அதிகமாக எரிவது இல்லை. அதுபற்றி புகார் கொடுக்கிற
நேரத்தில் மின்சார வாரியத்திடம் சென்று அணுகவேண்டும்
என்று சொல்கிறார்கள். ஏற்கனவே, பஞ்சாயத்து ஒன்றியங்களில்
கல்வி விஸ்தரிப்பு அதிகாரி, விவசாய விஸ்தரிப்பு அதிகாரி,
விஸ்தரிப்பு பொறியாளர்கள் என்று இருக்கிறார்கள். அதைப்
போலவே, மின்சாரத்திற்கும் ஒரு தனிப் பொறியாளரை நியமித்து
அந்தக் குறைகளைப் போக்க அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> பதில் சொல்லப்பட்டு
விட்டது.

<u>திரு. ரா. கிருஷ்ணன் :</u> தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி
களில் போடுகின்ற அந்த பல்புகளையெல்லாம் குறிப்பிட்ட சூப்பர்
மார்க்கெட்டில் வாங்கவேண்டும் என்று உத்தரவு இருக்கிறது.
அப்படி சூப்பர் மார்க்கெட்டில் வாங்குகிறபோது, அங்கே
டெண்டர் கோருகின்றவர்களிடத்தில்தான் பல்புகள் வாங்கு
கிறார்கள். அவர்கள் லாப நோக்கத்தோடு டெண்டர்கள் கோரி, குறைந்த
தரமான பல்புகளை வாங்கும் ஒரு ஏற்பாட்டினை
இந்த அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; அது பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பஞ்சாயத்துக்களிலே போடப்படுகின்ற பல்புகள் 230 வோல்ட் தாங்கும் வகையில் தான் உள்ளது என்றும், 250 வோல்ட் தாங்கும் பல்புகளைப் போட்டால் அடிக்கடி அவை பீசாகாது என்றும் சொல்லப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? அந்த வகையில் 250 வோல்ட் பல்புகளை வழங்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மின் துறையின் ஆலோசனை பெற்று அதை அரசு பரிசீலிக்கும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மின்வாரியத்தின் ஆலோசனை பெற்று செய்யப்படும் என்று சொன்னார்கள். மின்சார வாரிய ஆலோசனைக் குழுவில் 250 வோல்ட் பல்புகள் போடவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, எல்லா கிராமங்களிலும் மின் விளக்குகள் ஒழுங்காக எரியும் உத்தரவாதம் இருந்தால்தான், தேர்தல் நேரங்களில் கிராமங்களுக்குச் செல்கிறபோது விளக்குகள் எரியவில்லையே என்கிற குறை சொல்வதை தவிர்க்கமுடியும். ஆகவே, அரசு அதைச் சீக்கிரம் செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; தலைவர் அவர்களே, ஆலோசனைக் குழுவின் ஆலோசனை ஏற்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்கிறபோது, இந்த மின் விளக்குகள் சரியாக எரியவைப்பதற்கு சில முறைகள் இருக்கின்றன. அதன்படி செய்யலாம் என்று சொன்னார்கள். அது என்ன முறை, என்ன மாதிரி செய்வது என்று உத்தேசித்து இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மின்துறை விரிவாக்க அலுவலர்கள் என்ற பதவியை ஒன்றியங் களில் கொண்டு வரலாமா என்று அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, இப்போது கிராமங்களில் எரிந்து வருகின்ற மின்விளக்குகள் இரண்டு நாளைக்கு ஒரு முறை பீசாகிவிடுகின்றன. ஆகவே, அவைகளை மாற்றி, ஒரே சீராக ட்யூப் லைட்டாகப் போடுவதற்கு அரசு



முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கின்ற பகுதியிலும் விளக்கு எரியாமல் இருப்பதையும் சீர்திருத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் மருதாசலம் கிராமப் பஞ்சாயத்துக்களில் தெருவிளக்குகள் குறித்த மூலக் கேள்வியையொட்டிக் கேட்க வேண்டும்; இதில் பேரவைத் தலைவரது குடியிருப்புப் பகுதி விளக்குகள் வராது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; தலைவர் அவர்களே, அது ஊராட்சிகளின் வருவாய் பொறுத்து முடிவு செய்யவேண்டிய விஷயம் மற்றவைகள் நமக்குச் சம்பந்தம் இல்லை.

[முற்பகல் 9-50]

திரு. மு. ஜான் வின்செண்ட் : தலைவரவர்களே, மூலக் கேள்வி 10 ஊராட்சிகளுக்கு ஒரு லைன்மேன் என்று கேட்கப் பட்டிருக்கிறது. ஆனால் தெருவிளக்குகள் சரியாக எரியாததற்கு காரணம் ஆங்காங்கே இருக்கிற தனி அதிகாரிகள் பல்புகள் வாங்கிக் கொடுக்கவில்லையா அல்லது கொடுக்கப்பட்ட பல்புகளை லைன்மென் போடவில்லையா? இதுபற்றி புகார் ஏதாவது வந்திருக்கிறதா? இதற்கென்று தனி செக்ஷன் அமைத்து, தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, தெருவிளக்குகளைப் பராமரிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; தலைவரவர்களே, தெருவிளக்குகள் சரியாக எரியவில்லை என்று புகார் வந்திருக் கிறது. அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. காரணம் எதுவாக இருந்தாலும் எரிய வைக்க வேண்டுமென்பது தான் அரசின் விருப்பம்.

திரு. து. புருஷோத்தமன் ; தலைவரவர்களே, கிராமப் பஞ்சாயத்து தெருவிளக்குகள் சரியாக எரியவில்லை என்பது பற்றிய கேள்வியை கேட்க ஒட்டுமொத்தமாக எழுந்திருக் கிறார்கள். இதன் காரணமாக தெருவிளக்குகள் சரியாக எரிய வில்லை என்று தெரிகிறது. என்னுடைய தொகுதியில் சைதாப் பேட்டைகூட விளக்குகள் எரியாமல் ஒரு கிராமமாகத்தான் இருக்கிறது. விளக்குகளை எரிய வைக்க எதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, சைதாப்பேட்டை கிராமம் என்பது புதிய தகவல்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, இந்த தெரு விளக்குகளைப் பொறுத்த மட்டில் ஒரு யூனிஃபார்ம் டிபெக்ட் என்னவென்றால், இரண்டு நாட்களுக்குமேல் எரியவில்லை.

எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட குறைபாடு இருக்கிறது. அதற்குக் காரணம் தயாரிக்கின்ற இடத்தில் தப்பு இருக்கிறதா? அப்படி இருந்தால் அரசாங்கமே தரமான பல்புகளைத் தயாரிக்கும் உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மார்க்கபந்து இதற்கு மார்க்கம் என்னவென்று சொன்னால் அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. என். பழனிவேல் ; தலைவரவர்களே, பொதுவாக கிராமப் பஞ்சாயத்துக்களின நிர்வாகம் சரியாக இல்லை; தெரு விளக்குகள் சரியாக எரியவில்லை; இதைப்போக்க அரசாங்கம் ஏதோ முடிவு செய்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த முடிவை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்பார்களா? தெரு விளக்குகள் உரிய முறையில் இல்லாமல், கம்பத்தின் உச்சியில்தான் மாட்டப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு ஷேடுகள் இல்லை. இதை எல்லாம் சீர்செய்ய அங்கே இருக்கிற அதிகாரிகள் தேவையான பொருட்களை வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; தலைவரவர்களே, குறைபாடுகள் அனைத்தையும் அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, தெரு விளக்கு எரியவில்லை என்பது பெரும்பாலான குறை. போட்ட பல்புகளும் ஒரு வாரம் நீடிப்பதில்லை. எரியாததற்கான காரணம் பல்பு கோளாறினாலா அல்லது மின்சாரத்தினாலா அல்லது முறைகேட்டினாலா என்பது அறியப்பட்டதா இனியாவது அறியமுற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே. காரணம் ஒன்றல்ல; பல. அதனால்தான் அரசு விரிவாக்க அலுவலர் ஒருவரை நியமிக்கலாமா என்பதுபற்றி பரிசீலனை செய்து வருகிறது.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை தெருவிளக்குகள் தற்போது இருக்கின்றன? அவைகளில் எத்தனை எரியவில்லை? எத்தனை எரிகின்றன என்ற விவரத்தை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தனியாக அக்கறை எடுத்து, தனிக் கேள்வி போட்டால் நிச்சயமாகபதில் சொல்லலாம்.



## மதுரை அண்ணா நகர் பகுதியில் கழிவுநீர் அகற்று வசதிகள்.

*வினா எண். 93—திரு. சீ. செல்வராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: —

(அ) மதுரை அண்ணா நகர் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தில் கட்டப்பட்டுள்ள பகுதிகளில் கழிவுநீர் சாக்கடை அமைக்கப்படாததால் கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) : மதுரை அண்ணா நகர் பகுதியில் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள பகுதிகளில் கழிவுநீர் சாக்கடை அமைக்கப்பட்டுள்ளது. எனவே கழிவு நீர் தேங்குவதற்கு இடமில்லை.

திரு. சீ. செல்வராஜ் : தலைவரவர்களே, மதுரை அண்ணா நகர் பகுதி மதுரையில் முக்கியமான ஒரு பகுதியாகும். அந்தப் பகுதி வைகை ஆற்றங்கரையில் குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்டது. அங்கே அடிக்கடி இந்தக் குறை ஏற்படுகிறது. பொதுமக்களிடமிருந்து புகார் வந்துகொண்டிருக்கிறது. அமைச்சரவர்கள் மேலும் அதை சீர்படுத்தி, அந்தப் பகுதி குறையை தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

(பதில் இல்லை)

## செட்டிக்குளம்—லெவிஞ்சிபுரம் குடிநீர்வழங்கு திட்டம்.

*வினா எண். 94—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் இராதாபுரம் தொகுதியில் செட்டிகுளம் லெவிஞ்சிபுரம் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ள கிராமங்கள் யாவை?

(ஆ) செட்டிக்குளத்தில் திட்ட ஆய்வு மேற்கொண்டு லெவிஞ்சிபுரத்தில் திட்ட ஆய்வு மேற்கொள்ளாதது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில் அதற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) 1. லெவிஞ்சிபுரம்
2. கண்ணன்குளம்
3. குட்டபுளி
4. செட்டிகுளம்
5. புதுமனை
6. ஸ்ரீரெங்க நாராயணபுரம்
7. பெருமணல்

(ஆ) ஆய்வுப் பணிகள் செட்டிக்குளம் மற்றும் லெவிஞ்சிபுரம் ஆகிய இரு ஊராட்சிகளிலும் இதர 5 சிற்றூர்களிலும் சேர்த்து தான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

(இ) கேள்விக்கிடமில்லை.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே தெரிவித்த பதிலில் இருந்து லெவிஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அத்தனை ஊர்களையும் சேர்த்துக்கொள்ளவில்லை ; ஒரு சில ஊர்கள் மட்டும் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. கடந்த 12 ஆண்டு காலமாக அங்கே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. அதற்கு ஒவ்வொரு முறையும் ஒரு காரணம் கூறப்படுகிறது. இதற்காக ஒரு இலட்சம் ரூபாய்க்கு பொருட்கள் வாங்கப்பட்டு, இது வரையில் அந்த ரூபாய்க்கு வட்டி கொடுக்க ஊராட்சிகள் வற்புறுத்தப்பட்டு இப்போது அதற்கு வட்டி கொடுக்கமுடியாமல் இருக்கிறது. இப்போது கிராமப்புற குடிநீர்த் திட்டத்தில் சேர்த்து இருக்கிறோம் என்பதால், அத்தனை ஊர்களுக்கும் சுத்தமான தண்ணீர் தேவை இருக்கிறது என்பதால், உடனடியாகத் திட்டத்தை மேற்கொள்ளவும், விடுபட்டுப்போன லெவிஞ்சிபுரம் ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த அத்தனை கிராமங்களையும் சேர்த்துக்கொள்ளவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, லெவிஞ்சிபுரம் ஊராட்சியில் உள்ள லெவிஞ்சிபுரம், கண்ணன் குளம், குட்டபுளி ஆகிய ஊர்களும், செட்டிகுளம் ஊராட்சியில் உள்ள செட்டிகுளம், புதுமனை, ஸ்ரீரெங்கநாராயணபுரம், பெருமணல் ஆக மொத்தம் 7 ஊர்களில் உள்ள 11,928 பொது மக்கள் பயன் அடையக் கூடிய வகையில் ஏற்கெனவேஇத்திட்டத்தை நிறைவேற்ற ஆய்வு நடைபெறுகிறது. இந்த திட்டத்தை செயல்படுத்திய பிறகு ஏதாவது சிரமம் இருக்குமேயானால் அதை மறு பரிசீலனை செய்யலாம்.



குளத்தூர்பட்டி—சிங்கம்புணரி பேருந்துப்பணி.

* வினா எண். 95—திரு. ச. சண்முகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், குளத்தூர் பட்டியிலிருந்து பிரான்மலை வழியாக சிங்கம்புணரி வழி ஓடிக்கொண்டிருந்த பேருந்து நிறுத்தப்பட்டதா?

(ஆ) ஆமெனில் மீண்டும் அவ்வழித்தடத்தில் பேருந்து விடப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :— (அ) ஆம்.

(ஆ) மீண்டும் 21-5-79 முதல் மேற்படி வழித் தடத்தில் பேருந்து விடப்பட்டுள்ளது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைக் கேட்டு ஒரு ஆண்டுக்குப் பிறகு இப்பொழுது தான் விடை வந்திருக்கிறது. அதற்குள் அங்கே பஸ்ஸே விடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்த வழித்தடத்திலிருந்து மாறுபட்டிருக்கிறது. கள்ளம்பட்டி, சிறுகாடு, மன்றம்பட்டி ஆகிய ஊர்களின் வழியாக போக வேண்டிய இந்த வழித்தடம் இப்பொழுது வேறு ஊர்களின் வழியாகப் போகிறது. இந்த வழித்தடத்திலும் பஸ் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அன்—சர்வ்ட் ஏரியாககளுக்கும் விடப்பட வேண்டும், அவைகளையும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு பஸ் விடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய வழித்தடங்களைப் பற்றியும் எழுதி கொடுப்பார்களேயானால், அவைகளிலும் பஸ்ஸை விடுவதற்கு பரிசீலனை செய்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிவசாமி அவர்களும் திரு. கூத்தகுடி சண்முகம் அவர்களும் தாங்கள் வினா கேட்டு 1 வருடத்திற்கு மேலாகிறது என்றும், இப்போதுதான் அவற்றிற்கு விடை வருகிறது என்றும் குறிப்பிட்டார்கள். திரு. சிவசாமி அவர்கள் 17-2-79லே கொடுத்திருக்கிறார்கள். திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் 3-3-79லே தந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு பேரவை இப்போது தான் கூட்டப்பட்டிருக்கிறது. ஆகவே கால தாமதம் என்று சொன்னதை ஏற்றுக்கொள்ள முடியாது.

[1979 நவம்பர் 3

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, நீங்கள் கூறியபடியே 7 மாதங்கள் ஆகிவிட்டன. அதற்கு முன்னாலேயே நான் கேள்வி எழுதிக் கொடுத்திருக்கிறேன். அங்கேயும் பஸ்ஸை அதற்குள் ஓட விட்டு விட்டார்கள். பிரச்னை என்னவென்றால் 1 வருஷத்திற்கும் 7 மாதத்திற்கும் அதிகமாக வித்தியாசம் கிடையாது என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எழுதிக் கொடுத்த பிறகு இப்பொழுதுதான் மீண்டும் சட்ட சபை கூடுகிறது. கேள்வி நேரத்திலும் முதல் முதலாக எடுத்துக் கொண்டாகி விட்டது.

## சாத்தான்குளம் வழியாக விரைவுப் பேருந்துப் பணி.

* வினா எண் 96— திரு. ர. ஜெபமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் நாகர்கோவில் செல்லும் விரைவு வண்டிகளை சாத்தான்குளம் வழியாக விடும் குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் தொடங்கும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :— (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ர. ஜெபமணி : தலைவர் அவர்களே, சாத்தான்குளம் பகுதி பின்தங்கிய பகுதியாக இருப்பதினால், அதிக தூரம் செல்லும் பயணிகளுக்கு வசதியாக இருக்கவும் நாகர்கோவில் செல்லும் விரைவு வண்டிகளை சாத்தான்குளம் வழியாக விடப்படுமா என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் நெடுந்தூரப் பயணிகளின் குறையைத் தீர்ப்பதற்கு ஏதாவது பாஸ்ட் பாசஞ்சர் பஸ்ஸாவது விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஓடுகிற பேருந்துகள் எல்லாமே விரைவுப் பேருந்துகள். திருநெல்வேலியிலிருந்து நாங்குநேரி, வள்ளியூர் வழியாகச் செல்கின்றன. நாசரத், சாத்தான்குளம் வழியாகப் போகிறபோது மேற்கொண்டு 25 மைல் அதிகமாகச் செல்கிற நிலைமை ஏற்படும் என்று கருதப்பட்டது. வேண்டுமானால் ஓரிரு பேருந்துகளை இந்த வழியாக, முக்கியமாக சாத்தான்குளம் வழி



1979 நவம்பர் 3]

யாக ஓட விட்டு தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்று கருதுகிறேன். நான் ஃபாஸ்ட் லிமிடெட் பஸ் என்று சொல்லக் கூடிய பேருந்துகளை விட நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறேன். இதில் கூட ஓரிரு பஸ்களை சாத்தான்குளம், நாசரத், ஆழ்வார் திருநகரி ஆகிய இடங்களின் வழியாகச் செல்லக்கூடிய பேருந்துகளை விட நடவடிக்கை எடுக்கிறேன்.

[முற்பகல் 10.00]

திரு. மு. ஜான் வின்செண்ட் : நாகர்கோவிலில் இருந்து சென்னைக்கு வரும் விரைவு வண்டிகள் மூன்றடைப்பு பகுதி வழியாக வருகிறது. அமைச்சர் அவர்கள் 22 மைல்கள் அதிகமாக சுற்ற வேண்டியிருக்கிறது என்று கூறினார்கள். வள்ளியூர், சாத்தான்குளம், முலைக்காரப்பட்டி வழி வரும்போது 15 மைல்கள்தான் வரும். அந்தப் பகுதிகளில் கல்லூரிகள், தொழிற்சாலைகள் இருப்பதால் அந்தப் பகுதிகள் வழி, சாத்தான்குளம் வழி விரைவுப் பேருந்துகளை விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சாத்தான்குளம் வழி விரைவுப்பேருந்து விடவேண்டும் என்று சொன்னார்கள். அந்த எண்ணத்தை எதிர்க்கவில்லை. சாத்தான்குளம் வரும்போது நாஸரத் செல்லாமலிருக்க முடியாது. அது முக்கியமான இடம். அங்கு செல்லும்போது 22 மைல் தூரமாகிறது. இரண்டையும் இணைக்குமளவிற்கு இரு பேருந்துகள் விட இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப் : திசையன்விளை முக்கியமான பகுதி என்பதால், நாகர்கோவிலிலிருந்து பல்வேறு ஊர்களுக்கு செல்கிற பேருந்துகளை திசையன்விளை வழி செல்ல திசையன்விளையையும் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் நெல்லைக்குச் சென்றிருந்தபோது உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே இந்தக் கோரிக்கையை விட்டிருக்கிறார்கள். அதைப் பரிசீலித்து வருகிறோம். விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நா. சுந்தரராஜ் : சென்னையிலிருந்து புதுக்கோட்டைக்கு 25ம் தேதி அன்று புதிய பேருந்து விடுவதாக அறிவித்தார்கள். அது இதுவரையில் விடவில்லையென்பது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஒரு நிகழ்ச்சியில் அங்கு நான் கலந்து கொள்கிறபோது அந்த பேருந்தை துவக்குவதாக இருந்தது. அந்தப் பேருந்து தயாரான நிலையில் இல்லை என்று நிர்வாகிகள் தெரிவித்தார்கள். சட்டப் பேரவைக் கூட்டம் முடிந்தவுடன் அது விடப்படும்.

## மணிமுத்தாறு நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பெற்ற நிலங்கள்.

* வினா எண். 97— திரு. சு. முத்துசாமி கரையாளர் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு நீர்த்தேக்கம் கட்டுவதற்காக பொது மக்களிடமிருந்து நஞ்சை, புஞ்சை நிலங்கள் எடுக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர்?

(இ) மேற்படி நிலங்களுக்குரிய பணம் பூராவும் கொடுக்கப் பட்டனவா?

(ஈ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; (அ) ஆம்.

(ஆ) 4,111.76 ஏக்கர்

(இ) & (ஈ) ; இதுவரை நில எடுப்புக்காக ஈட்டுத்தொகை ரூ. 19,29,466 பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இன்னும் 40.79 ஏக்கர் நிலங்களுக்கான ஈட்டுத்தொகை கொடுக்க வேண்டி இருக்கின்றது. இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. முத்துசாமி கரையாளர் : இந்த நீர்த்தேக்கத்திற்காக நிலங்கள் எடுத்து 20 ஆண்டுகளாகி விட்டன. எவ்வளவு பேர்களிடமிருந்து நிலங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன? எவ்வளவு பேர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; எவ்வளவு பேர்களுடைய நிலங்கள் என்ற விவரம் இப்போது என்னிடமில்லை. மொத்தத் தொகை எவ்வளவு என்ற விவரமும் இப்போது என்னிடமில்லை. எவ்வளவு ஏக்கர்கள் என்ற விவரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.



திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இன்னும் பலருக்கு பணம் கொடுக்காமலிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட பலருக்கு பணம் கொடுக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கது. குறிப்பாக கீழ்முகம் பஞ்சாயத்துத் தலைவர் அவரைச்சேர்ந்த நான்கு பேர்களும் தொடர்ந்து மனுக்கள் போட்டிருந்தும் இது வரை பணம் கொடுக்கப்படவில்லை. டி.டி.வி. கூட்டத்தில்கூட சொல்லப்பட்டிருக்கிறது. சீக்கிரமாக பணம் பட்டுவாடாச் செய்யப்படவேண்டும் என்று சொல்லி ஆறு மாதங்களாகி விட்டன. இன்னும் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. ஆகவே பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பல பேர்கள் என்று சொன்னார்கள். பல பேர்கள் அல்ல. 4,111 ஏக்கரில் 40 ஏக்கருக்கு மட்டுந்தான் இன்னும் பணம் கொடுக்கப்படவில்லை. ஆகவே ஒரு சிலருக்குத்தான் இன்னும் நிலுவை இருக்கிறது. அதற்குக் காரணம், வழக்குமன்றத்தில் வழக்குகள் பென்டிங்காக இருக்கின்றன. ஒரு சிலருக்கு பணம் பட்டுவாடா செய்வதில் சில காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம், அங்கிருக்கக்கூடிய நிலச் சுவாந்தார்கள், நிலத்தைக் கொடுத்தவர்கள் ஒரு சிலர் தங்களுக்குத்தான் கொடுக்கவேண்டும் என்று மனுக்கள் செய்திருப்பதால் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : மூலக்கேள்வி, மணிமுத்தாறு நீர்த்தேக்கம் கட்டுவதற்காக எடுக்கப்பட்ட நிலங்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டதா என்பதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பஞ்ச நிவாரண வேலைகள் நடைபெற்ற போது மணிமுத்தாறு கிளைக்கால்வாய்கள் வெட்ட தனியார்களின் புன்செய், பட்டா நிலங்களை எடுத்ததற்கு அவர்களுக்கு உரிய தொகை கொடுக்கப்படவில்லை. இது குறித்து புகார்கள் கொடுத்தும் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே தனியார்களின் பட்டா, புன்செய் நிலங்களுக்கு வெட்டப்பட்ட இடங்களுக்கான தொகையை உடனடியாகக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்துக்கள் இந்தக் கேள்வியில் இடம் பெறவில்லை. இருப்பினும் அது பரிசீலனை செய்யப்படும்.

திரு. என். பெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் ஒரு குளத்தைப்பற்றிக் கேட்டார்கள். அங்கு ஐந்தாறு சின்னஞ்சிறு கண்மாய்கள் மூலம் இப்போது நீர்ப் பாசனம் செய்யப்பட்டு வருகிறது. இதிலுள்ள விவசாயிகளுக்கு இன்னும் பணம் கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்த விவசாயி களுக்கு உடனடியாகப் பணம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அரசு முன் வரும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னபோது, சிலர் கோர்ட்டுக்குப் போயிருப்பதால் பணம் பட்டுவாடா செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். கீழ்முகம் என்ற இடத்தி லுள்ள பழைய பஞ்சாயத்து தலைவர் பாண்டித்தேவர் என்பவர் எந்தவிதமான கோர்ட்டுக்கும் போகவில்லை. பணம் பட்டுவாடா செய்யவேண்டும் என்று அரசுக்கு மாறி மாறி மனு செய்து கொண்டிருக்கிறார்கள். 20 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அவருக்குப் பணம் கொடுக்கவில்லை. ஆகவே, இந்தக் குறிப்பிட்ட குடும்பத்திற்குப் பணம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்படிப்பட்ட குறைகளை எழுதி என்னிடத்தில் நேரடியாகக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## பெத்தலகாட்டூர் பெரிய ஏரிக்கரைகள்

*வினா எண். 98—திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை மைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருத்தணி தாலுக்கா மன்னூர் பிர்க்காவில் பெத்தல காட்டூர் பெரிய ஏரியின் கரையை உயர்த்தி நீர்த்தேக்கம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தாலூகா மன்னூர் பிர்க்காவில் பெத்தலகாட்டூர் ஏரியின் மூலமாக ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குப் பாய்ச்சல் நடைபெறுகிறது. இந்த ஏரியின் கரையை உயர்த்தவேண்டும் என்றும் அத்துடன் கண்மாய்கள் எல்லாம் பழுது பார்க்க



வேண்டும் என்றும் அரசுக்கு நான் தெரிவித்திருக்கிறேன். அதற்கு இப்போது நிதி ஒதுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு வெகு சீக்கிரத்தில் நிதி ஒதுக்கம் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி தாலூகா பெத்தலகாட்டூர் ஏரி பெரிய ஏரியாக இருக்கிறது. இதன் மூலம் 1885 ஏக்கர் பாசனவசதி பெற்று வருகிறது. ஏரி நல்ல முறையில் இருக்கிறது, பழுதடையவில்லை. ஆகவேதான் இதற்கு நிதி எதுவும் ஒதுக்கம் செய்யவில்லை.

திரு. ஆர். சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிக்கரை பலப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் கண்மாய்கள் உடைபட்டு ஏரியில் வருகின்ற தண்ணீர், கண்மாய்கள் எல்லாம் பழுதுபட்டு இருப்பதால், தண்ணீர் எல்லாம் ஏரிக்கு வராமல் கழிந்துவிடுகிறது. ஆகவே, கண்மாய்களை எல்லாம் பழுது பார்த்து சீரமைக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : குறைபாடுகள் இருந்தால் அந்தக் குறைபாடுகள் நீக்கப்படும்.

## Enquiry into administration of Wakf Board.

*Q. No. 99—THIRU R. UMANATH : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(a) whether any enquiry into malpractices, mis-appropriation and fraudulant act committed by the wakf Board that was in existence prior to this Government took over has been made:

(b) if so, the findings thereof;

(c) the estimated loss sustained by the Board due to lapses of the Board; and

(d) the action taken by Government to recover the loss?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) இல்லை.

(ஆ)
(இ) } இக்கேள்விகளுக்கு இடமில்லை.
(ஈ)

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதே அவையில் முந்தைய கூட்டங்களில் இந்தப் பிரச்னை வந்தபோது, வக்போர்டு ஊழல்கள் சம்பந்தமாக விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே மூலக்கேள்வி இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னால் முதலில் இருந்த வாரியத்தின் மீது விசாரணை என்ன என்பது பற்றியதாகும். அதற்கும் முந்திய வாரியத்தின்மீதுதான் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதாவது வாரியங்கள் நான்கு கட்டமாக அமைக்கப்பட்டன. இந்த ஆட்சி வருவதற்கு முன்னால் நான்காவது வாரியம் அமைக்கப்பட்டது. நடவடிக்கை எடுப்பதற்கு விசாரணை நடந்து கொண்டிருப்பது 3-வது வாரியத்தின் மீது.

திரு. எம். ஏ. லத்தீப் : அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மூன்றாவது வாரியத்தின் தலைவர் யார், உறுப்பினர்கள் யார் யார் இருந்தார்கள்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: இந்த மூன்றாவது வாரியத்தின் தலைவராக டாக்டர் அம்ருத்தீன் அவர்கள்இருந்தார்கள். இவர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர். மேலும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஹீராபாய் போன்றவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். நான்காவது வாரியம் ஏற்பட்ட பிறகு மூன்றாவது வாரியத்தின் மீது புகார்கள் கொடுத்தார்கள். அதன் மீது புலன் விசாரணை செய்திருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, எமர்ஜென்ஸி காலத்தில் ஒரு ஸெல் இது பற்றி விசாரணை செய்து கொண்டிருந்தது என்று நான் அறிகிறேன். அந்த ஸெல் வக்போர்டு சேர்மென்-னையும், கமிட்டி மெம்பர்களையும் விசாரணை செய்யாமல் ரிப்போர்ட் சப்மிட் செய்ததாகத் தெரிகிறது. அது உண்மைதானா ? முன்னால் இருந்தவர்கள் தங்களின் நிலைமையை விளக்குவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என்று சொல்லியிருப்பதை அரசாங்கம் அறியுமா?

மாண்புமிகு திரு. கே, இராஜா முகமது: ஆளுநர் ஆட்சியின் போது, இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதன் மீது கொடுக்கப்பட்ட ரிப்போர்டிலிருந்து பல வழக்குகள் தொடுக்கப்பட்டன. திரும்பவும் இதிலுள்ள உறுப்பினர்கள் தேர்ந் எங்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை என்று சொன்னதற்குப் பிறகு, இப்போது அரசின் சார்பில் விழிப்புணர்ச்சி-லஞ்சஒழிப்புத் துறையின் மூலமாக ஒவ்வொரு உறுப்பினரின் கருத்துக்களையும் கேட்டு புலன் விசாரணை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பிறகு அரசு இதன் மீது நடவடிக்கை எடுக்கும்.



(முற்பகல் 10.10)

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, டாக்டர் அம்ருதீன் அவர்கள் தலைமையில் இயங்கிய இந்த மூன்றாவது வாரியத்தில், திருவாளர்கள் காஜா முகைதீன், எம். பி., அவர்களும் அப்துல் வஹாப், எம். எல். ஸி. அவர்களும் இடம் பெற்றிருந்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பில் அவர்களுடைய பெயர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்கிறேன்.

Interest on loans for technocrats.

*Q. No 100 : Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) whether Tamil Nadu Industrial Investment Corporation Limited has cut the interest rates for loans issued to technocrats in this State ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்.

(ஆ) 1-11-1978ல் இருந்து, அறிவிக்கப்பட்ட பின்தங்கிய மாவட்டங்களில் தொழில்களை அமைக்கும் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு அளிக்கும் நிதி உதவிக்கு வட்டி வீதம் 9½ சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, வங்கிகளில் கடன் வழங்குகின்ற முறையைப்போல, எளிமையான முறையிலே விரைவிலே கடன் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கடந்த இரண்டாண்டு காலமாக கடன் மனுக்களைப் பரிசீலனை செய்வதில், காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. அது மட்டுமல்லாமல், 10, 15 பக்கங்களில் பூர்த்தி செய்யவேண்டிய கடன் மனுவை மாற்றி, குறைந்த பக்கங்களில், எளிமையான முறையில் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 நவம்பர் 3

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நுட்ப வல்லுநர்கள் சொந்தமாக தொழில் பின்தங்கிய மாவட்டங்களில் ஆரம்பிப்பதற்கு உதவிசெய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லா மாவட்டங்களிலும் இந்த மாதிரி தொழிலை, ஒரேமாதிரியாகத் துவங்குவதற்கு உதவி செய்தால் நலமாக இருக்கும். இந்தக் கடனைப் பெறுவதில், இவர்களுக்கு ஈட்டுத் தொகை அல்லது சொத்து எதுவும் இல்லாமல், எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருந்து, தொழில் நுட்ப தேர்ச்சி பெற்ற வல்லுநர்களாக மட்டும் இருந்தால், இவர்களுக்கும் தொழில் ஆரம்பிப்பதற்கு ஜாமீன் எதுவும் இல்லாமல் கடன் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், இப்படிப் பட்ட தொழில் வல்லுநர்களுக்குப் பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் துவங்குவதாக இருந்தால் ஆண்டுக்கு 8% வட்டியும், மற்றப் பகுதிகளிலே துவங்குவதாக இருந்தால் ஆண்டுக்கு 9½% வட்டியும் என்று நான் ஏற்கனவே அறிவித்த நிபந்தனைப்படி கொடுத்து வருகிறார்கள். இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு வேறு சொத்து அல்லது பொருளாதார வசதி இல்லையென்றாலும்கூட, மார்ஜினல் மணி அசிஸ்டென்ட்ஸ் என்ற வகையிலே, இப்படிப் பட்ட தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும் தொழில் துவங்க இந்த அரசு உதவும் முறையை பின்பற்றி வருகின்றது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இந்த சிறு தொழில் அதாவது ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் துவங்குகின்றவர்களை ஊக்குவிக்கின்ற முறையில், இந்த வட்டி விகிதத்தை 8% என்பதை 6%ஆகக் குறைக்க ஏற்பாடு செய்யப் படுமா? அதேபோல், இந்தத் தொழிலைத் துவக்குகின்றவர்கள் ஒர்கிங் காபிடல் அதாவது நடைமுறைச் செலவுக்கு வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்குக் கடன் உதவி செய்ய இந்த அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இப்போது நாம் கொடுக்கின்ற இந்த 8 சதவிகிதம் வட்டி மற்ற இடங்களைக் காட்டிலும் குறைந்த வட்டி என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒர்கிங் காபிடல் அதாவது நடைமுறை மூலதனச் செலவிற்காக இதுவரை எந்தவிதமான உதவியும் செய்யப்படவில்லை. இந்த ஆண்டிலிருந்து சிறு தொழில்கள் துவங்குகின்றவர்களை ஊக்குவிப்பதற்காக ரூ. 25,000 ஒர்கிங் காபிடலாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.



1979 நவம்பர் 3]

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, பின்தங்கிய மாவட்டங்களில் தொழில்கள் துவங்குவதற்கு குறைந்த வட்டியில் உதவி செய்வதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புதுக்கோட்டை மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாகும். அங்கே துவக்குகின்ற தொழில்களை எல்லாம் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், அதுவும் குறிப்பாக பக்கத்திலுள்ள மாத்தூரைச் சேர்ந்தவர்கள் ஆரம்பிக்கின்றார்கள். அதனால், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு கிடைக்கின்றது. புதுக் கோட்டை பின்தங்கிய மாவட்டம். ஆகவே, 50 சதவிகிதம் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க அரசு உறுதி அளிக்குமா அல்லது உத்தரவு பிறப்பிக்குமா? இல்லாவிட்டால், அந்த பின்தங்கிய மாவட்டத் திற்கு முன்னேற்றம் இருக்காது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினரது கேள்வியின் மூலப் பொருள் புரிகின்றது. ஆனால் நீட்டிக் கொண்டே போகின்றார்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : அதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மூலக் கேள்வி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம இம்மாநிலத்தில் தொழிற் சாலைகள் அமைக்கும் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு அளிக்கும் கடன்களுக்கான வட்டி வீதங்களைக் குறைத்துள்ளதா என்பதற்கு 'ஆம்' என்ற பதிலைத் தந்தேன். புதுக்கோட்டையிலிருந்து மனுப்போட்டு யாருக்காவது கிடைக்கவில்லை என்றால் அது பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அப்படி மனுப் போட்டவர்களுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்க வகை செய்யப்படும்.

திரு. எம். அண்ணாமலை : பிற்பட்ட பகுதியில் தொழில் நடத்தக்கூடிய தொழில் வல்லுநர்களுக்கு ஒர்கிங் காபிடல் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் அதற்கு செக்யூரிடி—வேறு சொத்து காட்ட வேண்டுமென்று கோரப்படுகிறது. இதனால் வேறு சொத்தற்ற தொழில் திறன் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதைத் தவிர்த்து தொழில் நடத்தக்கூடிய தொழிற்சாலையையே ஈடாக வைத்து கடன் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இதுவரை மாநிலத்தில் எத்தனை தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது? நிதி உதவியின் அளவு என்ன? மாவட்ட வாரியாக விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும் ஒரு தகவலைச் சொல்லுகிறேன். தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு ஒப்பளிப்பு அளித்தது —1977ம் ஆண்டு கிட்டதட்ட 155 பேருக்கு 1 கோடி 41 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டில் 185 பேருக்கு 1 கோடி 76 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த மாவட்டம், யார் யார் என்ற விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெறாதது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பற்றிய விமர்சனத்தை 'சட்டமன்றத்தில் இன்று' என்று 'ஆல் இந்தியா ரேடியோ' ஒலிபரப்புகிறது. நேற்றைய தினம் நடந்த நிகழ்ச்சியை விமர்சனம் செய்யும்போது ஒரு சிலரைப் பாதிக்கக் கூடிய அளவுக்கு உண்மையைத் திரித்து, மறைத்து அறிவித்தது உரிமை மீறல் பிரச்சினை என்று அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அது இப்போது எடுத்துக் கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வானொலி நிலையத்திற்கு விளக்கம் கேட்டு எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் பதில் வந்தவுடன் அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. நா. சுந்தரராஜ் :** சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்க வருகிற விருந்தினர்களுக்கு இன்று பாஸ் வாங்குவது சிரமமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தினமும் அந்த நிலை ஏற்படுவது இல்லை. சில நாட்கள் ஏற்படும். இன்றைக்கு மட்டும் அந்தச் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. 235 உறுப்பினர்களிடம் இருந்து மட்டுமல்லாது வெளியே உள்ளவர்களிடம் இருந்தும் பார்வையாளர்கள் மாடத்திற்கு அனுமதி கோரி அதிகமாக,





விண்ணப்பம் வந்திருக்கிறது. நானும் அந்தத் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறேன். இன்று கூட்டம் அதிகமாக இருக்கிறது. எனவேதான் இன்றைக்கு ஒருவருக்கு ஒரு மணி நேரம் என்பதற்குப் பதிலாக அரை மணி நேரம் என்று குறைத்து, அனுமதிச் சீட்டுகள் வழங்க ஏற்பாடு செய்துள்ளேன். எல்லோருக்கும் கிடைக்கும்.

**திரு. நா, சுந்தரராஜ் :** அதற்கு காரணம் என்ன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது உங்களுக்குப் புரியவில்லை. இன்றைக்கு முக்கியமான நிகழ்ச்சி என்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

**திரு, செ. சிவசாமி :** ஏற்கனவே போட்ட கேள்விகளில் 500 கேள்விகளுக்குப் பதில்கள் தயாராக இருக்கின்றன என்று மதிப்பிற்குரிய தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்த 500 கேள்விகளுக்குப் பதில் கொடுக்கும் வகையில் ஒன்றிரண்டு நாட்கள் தனியாகக் கேள்வி பதிலுக்கே ஒதுக்கி கேள்விகளுக்குப் பதில் அளிக்க தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிப்பட்ட முறை கிடையாது. அவை நடக்கிற வரை கேள்விகள் இணைக்கப்பட்டு பதில் அளிக்கப்படும். மற்ற வினாக்களும் பதில்களும் அச்சிட்டு அனுப்பி வைக்கப்படும்.

## 3. ஒழுங்குப் பிரச்சனை

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பெரியார் மாவட்டம் ஈரோடு பள்ளிப்பாளையம் காகித ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதும் உண்ணாவிரதம் இருப்பதும் அதனால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்:

திரு. க. சுப்பு

திரு. கு. ரமணி

திரு. ரா. வெங்கிடு சாமி வெங்கிடு

திரு. சி. பழனிமுத்து

திரு. மு. அம்பிகாபதி

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## ஒழுங்குப் பிரச்சனை

*திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த அவையில் கண்டனத் தீர்மானம் தரப்பட்டு அதற்கான முடிவான பதில்கள் தரப்படுகிற நேரத்தில் பலவிதமான பிரச்சினைகளுக்கு முடிவு தெரிவிக்கப்படும் என்ற அடிப்படையில் இதற்கு முன்னால் இப்படிப்பட்ட தீர்மானம் தரப்படுகிறபோது தாங்கள் பெரும் பாலும் அந்தத் தீர்மானங்களுக்கு அவசியம் இல்லை, இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிவிடலாம் என்று தெரிவித் தீர்கள். அவைத் தலைவர் அவ்வாறு தெரிவிக்கிறபோது அதை ஏற்றுக் கொள்ள வேண்டிய கடமை பெரும்பாலோருக்கு

[முற்பகல் 10–20]

ஏற்படுகிறது. எல்லோருக்குமே கூட ஏற்படுகிறது. ஆனால் இன்றைய தினம் முதலமைச்சர் பதில் சொல்லப் போகிறார். பள்ளிபாளையம் ஆலையைப்பற்றி நானே முதன் முதலிலே பேசும்போது சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு பேசிய திரு. உமாநாத் போன்றவர்களும் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு முதலமைச்சர் பதில் சொல்ல இருக்கிறபோது, இன்றைய தினம் அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வது தங்களுடைய மேன்மையான கருத்தோட்டத்திற்குப் பொருந்தி வருகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுப்புகின்ற பிரச்சினை எனக்கும் தெரிகிறது. ஆனால் இதற்கு தனி முக்கியத்துவம் தரப்பட வேண்டுமென்றும் அது மிக அவசியமானது என்று சொன்னதாலேயும் அமைச்சர் அவர்களைக் கேட்டபொழுது பதில் தயாராக வைத்திருப்பதாகச் சொன்னதாலேயும், பல உறுப்பினர்கள் நாள் கடந்து விட்டது இதற்கு தனி கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று வற்புறுத் தியதாலும் தான் நான் அனுமதித்தேனே தவிர நீங்கள் சொல்கிற பிரச்சினையோடு பார்த்தால் இதை அனுமதிக்க வேண்டியு தில்லை. வேண்டுமானால் இதை நாளைக்கு எடுத்துக்கொள்ள லாம் என்றால் நான் அதற்கும் தயாராக இருக்கிறேன்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்டுக் கொள்வதற்கு இணங்க இப்பிரச்சினையை நாளை மறு நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நம்முடைய அண்டை மாநிலமான கேரள அரசு, மத்திய அரசு தொடர்பான பிரச்சினை பற்றி நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.



அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்வதாகத் தாங்கள் வாக்களித்திருக்கிறீர்கள். நேற்றைய தினம் வரவில்லை. நேற்றைய தினம் கேட்டதற்கு இன்றைக்கு எடுத்துக்கொள்ளப் படும் என்று சொன்னீர்கள். அது உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அமைச்சர் அவர்கள் இன்றைக்கே அறிக்கை தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். நேற்றுச் சொன்னீர்கள், இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர் களுடைய பிரச்சினை என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அமைச்சர் தயார் என்றால் நானும் எடுத்துக்கொள்ளத் தயார். ஆனால் என்னிடம் அந்த அறிக்கை வரவில்லை. அந்த அறிக்கை வராமல் அதை அவையில் எடுத்துக் கொள்ள எப்படி நான் அனுமதிக்க முடியும்? அமைச்சர் தயார் என்றால் இப்போது கூட எடுத்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் எடுத்துக் கொள்ளத் தயார்.

திரு. க. அன்பழகன் : நான் அதை ஒத்துக்கொள்ள மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அந்த முறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்கிறார்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, நான் இதை ஆட்சேபணை செய்கிறேன். ஏனென்றால் குதிரைப் பந்தய ஒழிப்புக்கென்று ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டு அந்தச் சட்டம் சுப்ரீம் கோர்ட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்டு கடந்த 4 ஆண்டுகளாக அப்படியே இருக்கிறது. குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் அமலுக்கு வந்தால் அந்தச் சட்டமே போதுமானது, எக்ஸிகியூடிவ் ஆர்டர் போர்ட்டு நிறைவேற்றிவிட முடியும். இந்தச் சட்டம் தேவையில்லை. ஒரு வேளை சுப்ரீம் கோர்ட் அரசாங்கத்திற்கு சாதகமாக தீர்ப்புச் சொல்லிவிட்டால் இந்தச் சட்டம் தேவையில்லை. அரசாங்கத்திற்கு எதிராகத் தீர்ப்புச் சொன்னாலும் இந்தச் சட்டம் தேவையில்லை. ஆகவே எந்த ரூபத்திலும் இந்தச் சட்டம் தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(5) அறிவிப்பு.

கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவு, 1979

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.





(4) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

இ. கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு கேளிக்கை பவ, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; பேரவைத் தலைவரவர்களே, சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஈ. தமிழ்நாடு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: தலைவர் அவர்களே, "1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன் வடிவை" பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: தலைவரவர்களே, சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(6) அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே என்றுமில்லாத அளவிற்குப் போலீசார் ஒரு வேலை நிறுத்தத்தைச் செய்திருக்கின்றனர். இதற்கு அடிப்படைக் காரணம், அரசு அந்த விஷயத்தில் சரியான முறையில் நடந்து கொள்ளாததுதான் என்பது என்னுடைய கருத்து. எத்தனையோ அரசு அலுவலர்களுக்கு வேண்டிய சங்கங்கள் இருந்தும், காவல் துறையைச் சார்ந்தவர்களுக்குச்

சங்கம் இல்லை என்ற குறை அவர்களிடத்தில் இருந்தது, அவர்களும் சங்கம் வைத்துக்கொள்ளலாம் என்று அரசு அனுமதித்ததை நான் ஏற்றுக்கொள்கிறேன், அனுமதித்திருப்பது சரிதான். இருந்தாலும்கூட, சங்கத்தை அனுமதித்த அரசு, அந்தச் சங்கத்தைத் தாங்களே அமைத்துக் கொள்ள விதிமுறைகளை வகுத்துக்கொடுத்து, அவர்களுக்குத் துணையாக இருந்து, அந்தச் சங்கத்தில் தங்களுக்கு ஏற்றவர்களை, தங்களுக்குத் தோதானவர்களைக் கொண்டு சங்கம் அமைத்துக் கொள்வதற்கு அனுமதித்து இருந்தால் இந்தப் போராட்டம் வந்திருக்க வேண்டிய அவசியம் கிடையாது; போராட்டமும் வந்திருக்காது. இதிலேயும் அரசின் தவறான போக்குதான்' ஒரு கட்டுப்பாட்டோடு இருக்க வேண்டிய காவல்துறை, கட்டுப்பாட்டோடு இருந்த காவல்துறை, அந்தக் கட்டுப்பாட்டை மீறி நடக்க வேண்டிய சூழ்நிலையை அரசே ஏற்படுத்தியது என்ற குற்றச்சாட்டை இங்கே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அரசினுடைய தவறு தான் காவல்துறையினுடைய ஸ்ட்ரைக்குக் காரணம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற பேரவைக் கூட்டத்தின்பொழுது, அதற்கு முன்னாலே கொண்டு வந்த ஸ்ட்ரைக் தடைச் சட்டம், —தொழிலாளர் வேலைநிறுத்தத் தடைச் சட்டம்— அதாவது ஆர்டினன்ஸ், அந்த அவசரச் சட்டத்தைச் சபையிலே நிறைவேற்றாமல் காலாவதி செய்து விடுவதாக அரசு உறுதி கூறியது. அப்படி உறுதி கூறியபிறகும் மறுமுறை இப்பொழுது ஒரு அவசரச் சடைத்தை—ஸ்ட்ரைக் தடை அவசரச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டிய காரணம் என்ன? அரசு தன்னுடைய வார்த்தையைக் காப்பாற்றாமல் மீறியிருக்கிறது என்ற குற்றச்சாட்டை தெரிவித்துக் கொள்கிறேன். அந்தஅவசரச் சட்டத்தை— ஸ்ட்ரைக் செய்வதற்கு உள்ள உரிமையைத் தடை செய்யும் சட்டத்தை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் பிரச்னையிலே அரசு சரியாக நடந்துகொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டைப் பல்வேறு உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். மதிப்பிற்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அதிகப்படியாக விவரமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

தொழிலாளர் பிரச்னையிலேயும் கூட அப்பொழுதைக்கப்பொழுது ஏற்படும் பிரச்னைகளைத் தீர்த்து தொழில்கள் சரியாக இயங்குவதற்கான நடவடிக்கைகளில் அரசு போதிய கவனம் செலுத்தவில்லை என்பது என்னுடைய கருத்து.

திருச்சியிலே காவேரி இன்ஜினீயரிங் தொழிற்சாலையில், இரண்டு மாத காலமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கோரிக்கைகள் பெரிய கோரிக்கைகள் அல்ல. மேனேஜ்மெண்டே



செய்து கொடுக்கக்கூடிய சாதாரணமாக செய்து கொடுக்கக் கூடிய கோரிக்கைகள்தான்.' ஆகவே, அரசு தலையிட்டு மேனேஜ்மெண்டுக்குச் சொல்லி அந்த ஸ்ட்ரைக்கை முடித்திருந்தால் இரண்டு மாத காலமாக ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

குரோம் லெதர் கம்பெனியில் 400 தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அங்கே தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது, தொழிற்சாலைக்குப் போகிறார்கள், ஆனால் அங்கே வேலை இல்லை, போய்ப் போய்த் திரும்பி வருகிறார்கள், இப்படிப் புதிய நடைமுறை அங்கே நடக்கிறது. சம்பளம் கிடைப்பதில்லை, வேலையும் கிடையாது. தொழிற்சாலையைத் திறந்து வைத்திருக்கிறார்கள், தினமும் போய்ப் போய்த் திரும்பி வந்துகொண்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 10.30.)

இந்த நிலையை நீடிக்காமல் அதைத் தவிர்க்கவேண்டும். அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்த அவையிலே பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர் ஆகியோருக்கும் அந்தத் தொழிலாளர்களின் சார்பிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான பேச்சு வார்த்தை நடந்து, அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான எந்த ஏற்பாடுகளும் இதுவரை செய்யப்படவில்லை.

திருச்சியிலே, கல்லக்குடியிலே மினி சிமெண்ட் பாக்டரியில் பணியாற்றும்அந்தத்தொழிலாளர்களுக்கு தொழிற்சங்க உரிமையே வழங்கப்படவில்லையென்று அரசுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் கவனித்து அவர்களுக்கு தொழிற்சங்க உரிமை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து கலைப்பு. தமிழ்நாட்டிலே உள்ள கிராமப் பஞ்சாயத்துக்களை எல்லாம் கலைத்தது சரியானது அல்ல. அடி மட்டத்தில் மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கான ஒரு அமைப்பாக பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. பஞ்சாயத்துக்கள்தான் சமுதாய முன்னேற்றத்திலே தீவிரமாகப் பங்கு கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில்தான் எல்லா மட்டத்திலும் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தப்பட்டன, பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டன. தற்செயலாக, முன்னாலே, பஞ்சாயத்து யூனியன்களைக் கலைத்ததுக்கூடச் சரியானதல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. சரி அதைத்தான் கலைத்துவிட்டார்கள். ஜனநாயகத்திற்கே அடிப்படையான பஞ்சாயத்துக்களிலாவது, கிராமப்புறங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருக்கிறார்கள் என்று நினைத்தால், அதையும் நீங்கள் கலைத்தீர்கள். அதைக் கலைத்ததற்கு என்ன காரணம் என்றே தெரியவில்லை.

அவசரச்சட்டத்தைப் பார்த்தால் ஊழல் நடந்திருக்கிறது. ஆகவே, கலைக்கிறோம் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஊழல் நடந்திருந்தால் அவர்கள் பேரிலே நடவடிக்கை எடுத்து வெளியிலே தள்ளலாம். ஆனால், பஞ்சாயத்துக்களிலே பொறுப்பிலே இருந்தவர்கள் 100—க்கு 100 ஊழல் புரிந்தார்கள் என்று சொல்லமுடியாது. ஆகவே, அரசுக்குச் சாதகமான நிலை ஏற்படும் என்று எண்ணிக் கலைத்ததாகத்தான் நான் கருதுகிறேன். அதனால் அரசுக்குச் சாதகம் ஏற்படாது. இப்பொழுது உடனடியாக தேர்தல் நடத்த வாய்ப்பிருந்து கலைத்திருந்தால் கூடப் பரவாயில்லை. நாடாளுமன்றத் தேர்தல் வந்துவிட்டது. அந்தத் தேர்தல் முடிவு எப்படி இருக்குமோ. அதன் விளைவாக உங்கள் எண்ணங்கள் மாறினாலும் மாறும் என்று நான் அச்சப் படுகிறேன். ஆகவே, கலைத்து விடுகிறார்கள், கலைத்தது பெரும் தவறு. இருப்பினும், பாராளுமன்றத் தேர்தல் முடிந்தவுடனே, இதற்கான தேர்தல் நடைபெறும் என்று முதலமைச்சரவர்கள் அறிவிக்கவேண்டும். தனக்குச் சாதகம் என்று அரசு கருதினால், அரசுக்குச் சாதகம் வரப்போவதில்லை, அந்த எண்ணமும் தவறு என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டிலே கல்வி நிலையங்கள் எங்கும் போராட்டங்கள். சென்ற ஆண்டு, சட்டக்கல்லூரியிலேயே 40 நாட்கள்தான் பாடம் நடந்திருக்கிறது. பாக்கி நாட்கள் மூடப் பட்டிருந்தது என்று மாணவர்கள் கூறுகிறார்கள். அண்ணாமலை யூனிவர்சிட்டியும் மூடப்பட்டிருக்கிறது. எஸ். ஐ. இ. டி. கல்லூரியில் ஸ்டிரைக்; ஆகவே மூடப்பட்டிருக்கிறது. அந்த மாணவர்களுடைய குறைகள் என்ன? தண்ணீர் வசதி இல்லை, போக்குவரத்து வசதி வேண்டும் போன்ற சிறுசிறு குறைபாடுகளுக்காகத்தான் ஸ்டிரைக்குகள் நடக்கின்றன. இந்தக் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வரவில்லையென்றால், பெற்றோர்கள் பணம் கொடுத்து, குழந்தைகளை கல்லூரிகளுக்கு அனுப்பி, அவர்கள் படிக்க முடியவில்லையென்றால், நாட்டினுடைய நிலைமை என்ன ஆகும் என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

அடுத்து, பாலிடெக்னிக் ஆசிரியர்கள் ஸ்டிரைக் பண்ணுகிறார்கள் —ஏதோ கோரிக்கைகள் சொல்கிறார்கள். சில பாலிடெக்னிக்கில் எக்சாமினேஷன் நடந்து கொண்டிருக்கிற நேரம். அங்கு ஆசிரியர்கள் போகாமல் கடைநிலை ஊழியர்களை வைத்து தேர்வு நடத்தி வருவதாகச் சொல்கிறார்கள். இது எவ்வளவு தூரம் சரியானது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்போதைக்கப்போது பிரச்னைகளைத் தீர்த்து. நடவடிக்கை எடுக்காததாலே, எந்த அளவு சமுதாயத்தை நாம் முன்னேற்றப் பாதையிலிருந்து தடுக்கிறோம் என்பதை அரசாங்கம் உணரவேண்டும்.





கடன் நிவாரணச் சட்டத்தைப் பற்றி திரு. சோ. அழகர்சாமி அவர்களும் இன்னும் சில உறுப்பினர்களும் தெளிவாகச் சொன்னார்கள். 1975—76—லேயிருந்து விவசாயிகளுக்கும் கடன் பட்டவர்களுக்கும் நிவாரணம் அளிப்பதற்காக பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. கோர்ட்டுகளுக்குச் சென்று கடன்களை வசூல் செய்ய முடியாது, தாவா சொல்ல முடியாது, நகைகளையெல்லாம் ஏலத்தில் போட முடியாது என்று அறிவிக்கப் பட்டிருந்தது. 1978—லே இந்த அரசே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அதன்மூலம், இதை ஒத்தி வைத்துக்கொண்டே போக முடியாது. ஏதாவது நிவாரணம் அளித்து, அதற்கு முடிவு காண வேண்டும்.

அந்த சட்டத்திலே என்ன கூறியிருக்கிறது என்றால் ரூ. 500 வரையில் கடன் வாங்கியவர்களுக்கு ரூ. 500-ம் அதற்குரிய வட்டியும் தள்ளுபடி செய்யப்படும். ரூ. 500-க்கு மேலும் ரூ. 5000-ம் வரை கடன் வாங்கியவர்களுக்கு பாதித்தொகை அசலும், வட்டியும் தள்ளுபடி செய்யப்படும். ரூ. 10,000 வரையிலும் கடன் வாங்கியவர்களுக்கு வட்டி மட்டும் தள்ளுபடி செய்யப்படும் என்றும், அசலைச் செலுத்த வேண்டுமென்றும் ரூ. 10,000—க்குமேலே கடன்வாங்கியவர்களுக்கு அசலும், வட்டியும் செலுத்த வேண்டுமென்றும் சட்டம் நிறைவேற்றப் பெற்றது.

அடுத்த 7—வது மாதம் 1979-இல் ஒரு சட்டம் வந்தது. அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் ஏற்கனவே கொடுத்தது தவறாகப் போய்விட்டது. ஆகவே இதையெல்லாம் ரத்து செய்துவிட்டு அசலைப் போல் $1\frac{1}{2}$ மடங்கு கொடுக்க வேண்டும் என்று சட்டம் போட்டீர்கள். ரூ. 100 வாங்கியிருந்தால் 150 கொடுக்க வேண்டும். ரூ. 50 ஏற்கனவே கொடுத்திருந்தால் இன்னும் ரூ. 100 கொடுத்தால்தான் கடன் தீரும். கடன் கொடுத்தவர்களுக்கு நிவாரணம் இந்த அரசு வழங்கியிருக்கிறது. கடன் வாங்கியிருப்பவருக்கு நிவாரணம் கிடையாது. ஆகவே முன்னாலே எடுத்த முடிவை நிறைவேற்றி இருக்க வேண்டும். ரூ. 500—க்கு மேல் பலபேர் கடன் வாங்கியிருப்பார்கள். கடன் கொடுத்தவர்கள் ஒன்றுக்கு இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என்று புரோ நோட் எழுதி வாங்கியிருப்பார்கள். ஆகவே அதிலேயே அதிகப்படி இலாபத்தை அவர்கள் அடைந்திருக்கிறார்கள் என்று நாம் சொல்லும்போது, அடுத்து வந்த சட்டத்திலும் இருக்கிற நிவாரணத்தையும் ரத்து செய்து புதிய சட்டத்தைக் கொண்டு வந்த பிறகு நிலைமை என்ன? தமிழ்நாட்டிலே கடன் கொடுத்தவர்கள் வழக்குகளை கோர்ட்டிலே கொண்டு போய் போட்டிருக்கிறார்கள். கடன் வாங்கியவர்கள், ஏழை மக்கள். இவர்களுக்கு இது எந்த அளவுக்கு சங்கடத்தை உண்டாக்கும். இந்த சூழ்நிலைக்கு ஏழை மக்களைக் கொண்டு வந்துவிட்டீர்கள் என்ற குற்றச் சாட்டை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

ஆகவே, எந்த நடவடிக்கையாக இருந்தாலும் ஒரு தெளிவான கண்ணோட்டம் இந்த அரசுக்கு கிடையாது என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

அடுத்து, தலைவரவர்களே, சர்வீஸ் கமிஷனில் தேர்வு வைத்து ஜூனியர் அஸிஸ்டென்ட் என்று 2,000 பேரைத் தேர்ந்தெடுத்தார்கள். 2 வருஷம் ஆகிறது. 2,000 பேருக்கு மேலே செலக்ஷன் செய்யப்பட்டும் ஒருவருக்கும் வேலை கொடுக்கவில்லை.

அடுத்து பப்ளிக் ஹெல்த் ஆபீஸர் செலக்ஷன் ஆகி 10 மாதம் ஆகிறது. அவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்கவில்லை. வேலை கொடுப்பதற்கு, வேலை காலி இல்லை என்றால் ஏன் செலக்ஷன் செய்து லிஸ்ட் வைத்திருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்து சென்னை நகரத்திலே 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய டாக்டர்கள் எல்லாம் வெளியிடங்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். பிறகு வேறு ஒரு உத்தரவில் அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். என்ன காரணம். முதலிலேயே விளைவுகளை உணர்ந்து அந்த உத்தரவைப் போட்டிருப்பார்களானால் இப்படி அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டிய துர்பாக்கிய நிலைமை அரசுக்கு ஏற்பட்டிருக்காது. ஆகவே அதிலேயும் தெளிவான போக்கைப் பார்க்க முடியவில்லை.

அடுத்து, குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, ஹைகோர்ட்டிலே இந்தச் சட்டம் சரியானது என்று சொல்லி, குதிரைப் பந்தய முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டிலே அப்பீல் செய்திருக்கிறார்கள். அந்த வழக்கை வேகமாக முடிவு செய்வதற்கு அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரியவில்லை. ரேஸ் கிளப் நிர்வாகிகளின் பேரிலே சென்னையிலே ஒரு கேஸ் போடப்பட்டிருக்கிறது. அது, அவர்கள் செய்த வேறு ஏதோ ஒரு குற்றத்திற்காக. இந்தக் கேஸைப் பயன்படுத்தி அந்த அப்பீலை வாபஸ் வாங்கி இருக்கவேண்டாமா. நம்மிடம் உள்ள ஆயுதத்தைப் பயன்படுத்தி அவர்களை வாபஸ் வாங்கச் செய்யாமல் ஏறக்குறைய $1\frac{1}{2}$ ஆண்டு காலமாக நடந்து வந்த வழக்கை, ரேஸ் கிளப் மீது உள்ள கேஸை வாபஸ் வாங்கியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசியபோது முதலமைச்சர் அவர்கள் பணக்காரர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பதை இந்த அரசு அனுமதிக்க முடியாது என்ற கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அங்கே யார் இருக்கிறார்களோ ரேஸ் கிளப்பை அவர்கள் தான் நடத்துகிறார்கள். இதை ஏன் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இருக்கக் கூடாது, இந்த அரசு.





ரேஸ் கிளப்பில் எவ்வளவு ரூபாய் அவர்கள் சம்பாதிக்கிறார்கள். ரேஸ் கிளப் செக்ரட்டரிக்கு சம்பளம் ரூ. $1\frac{1}{2}$லட்சம். அது தவிர ஒவ்வொரு குதிரை விற்பதற்கும் ரூ. 1,000 கிடைக்கிறது. அதை இன்னும் ரூ. $2\frac{1}{2}$ லட்சமாக ஆக்கப் போகிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் மீதான அப்பீலை வேகப்படுத்த உச்ச நீதிமன்றத்திலே நீதி பெறுவதற்கு அரசு முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.40)

கானாடுகாத்தான் நகரப் பஞ்சாயத்தை மூன்றாகப் பிரித்து இருக்கிறார்கள். அது இரண்டு ரெவின்யூ வில்லேஜை உள்ளடக்கியது. அதை இரண்டாகப் பிரித்தால் தவறு இல்லை. ஆனால், மூன்றாகப் பிரித்து இருக்கிறார்கள். ஒரு ரெவின்யூ வில்லேஜை ஒரு பஞ்சாயத்தாகவும், மற்றொரு ரெவின்யூ வில்லேஜில் 5 வார்ட் ஒரு பஞ்சாயத்தாகவும், இரண்டு வார்டுகளை ஒரு பஞ்சாயத்தாகவும் பிரித்து இருக்கிறார்கள். உயர்ந்த ஜாதி ஒரு பஞ்சாயத்தாகவும், தாழ்ந்த ஜாதி ஒரு பஞ்சாயத்தாகவும் இருக்கிறது. இரண்டு வார்டுகளை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு பஞ்சாயத்து இயங்கமுடியுமா? அதற்கு வரும் வருமானம் ரூ. 1,700 என்று தான் சொல்லப்படுகிறது. ஆகவே, இதை அரசு கவனத்தில் கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித்துறையில், கூவம் கால்வாய் சீரமைப்பில் வேலை செய்த என். எம். ஆர். தொழிலாளர்கள் 5 ஆண்டுகளுக்கு மேல் பணிசெய்து இருந்தும் நிரந்தரமாக்கப்படவில்லை என்று சென்ற ஆண்டு போராட்டம் நடத்தினார்கள். அரசு தரப்பில் அது பற்றி நல்ல முடிவு எடுப்போம் என்று சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டதால் அவர்கள் போராட்டத்தை நிறுத்திக்கொண்டார்கள். அவர்களுடைய கோரிக்கை மிகவும் நியாயமானது. அவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைந்து இருக்கிறார்கள். ஒரு 50/,60 பேர்கள் தான் இருப்பார்கள். ஆகவே, அவர்களுக்கு நல்ல முறையில் நிவாரணம் அளிக்க அவர்களை பர்மனென்ட் செய்ய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர்கள் ஒரு ஊர்வலத்தில் ஈடுபட்டு, இன்றைக்கு 400 பேர் அரெஸ்ட் செய்யப்பட்டு இருப்பதாகக் கூட தகவல் வந்து இருக்கிறது. அவர்களுடைய குறை என்னவெனில், தற்போது சிமென்ட் விலை ஏறிவிட்டது, இரும்பு விலை ஏறிவிட்டது, நியாயமான விலைக்கு சிமென்ட் கிடைக்கவில்லை, இரும்பு மரம் போன்றவைகளும் நியாயமான விலையில் கிடைக்கவில்லை, அதனால் கட்டிடம் கட்டும் பணிகள்

குறைந்து விட்டன. எங்களுக்கு வேலை இல்லை, ஆகவே, நியாயமான விலையில் சிமெண்ட், மரம், இரும்பு ஆகியவைகள் கிடைக்கச்செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும், எங்களுக்குத் தக்க வகையில் வேலை கிடைக்கச் செய்யவேண்டும், அவர்கள் செய்கிற தொழில் ஆபத்தான தொழில் என்றும், அப்படி வேலை செய்து கொண்டு இருக்கிறபோது இறந்து விட்டால், அதற்கு அரசாங்கம் உதவி கொடுக்கவேண்டும் என்றும் கோரி போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளையும் அரசு பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றுள்ள அரசின் போக்கு தெளிவில்லாத போக்காக இருக்கிறது. அப்படி தெளிவு இல்லாத காரணத்தால் தான் பல்வேறு சங்கடங்கள் தமிழ்நாட்டில் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை எடுத்துச்சொல்லி என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

*திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களால் முன்மொழியப்பட்டு, இந்த மன்றத்திலே உள்ள இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களாலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்களாலும் ஆதரிக்கப்பட்டு, இந்த மன்றத்திலுள்ள பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அது பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூறி இன்று விவாதத்தின் இறுதி நாளாக அமைந்துள்ள கண்டன தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நான் இந்தக் கண்டன தீர்மானத்தில் பல குற்றச்சாட்டுகளை இந்த அரசின் மீது நல்ல விளக்கத்தோடும், ஆதாரங்களோடும் எடுத்து வைப்பது எதிர்க்கட்சிக்குள்ள உரிமை, கடமை என்கிற அளவில் முன் வைக்கிறேன்.

1977–78–ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் (சுமார் அல்லது சரியாகச் சொல்லப் போனால் ரூ. 199 கோடியை சட்டச்சபையின் அங்கீகாரம் பெற்று இருந்தும் கூட செலவு செய்யப்பட வில்லை என்பதை Report of the Comptroller and Auditor General of India குறிப்பிட்டு இருப்பதை நான் இங்கே கோடிட்டு காட்டாமல் இருக்க இயலாது.

அதிலே எவ்வளவு முக்கியமான இனங்கள் செலவு செய்யப் படாமல், இன்றியமையாத இனங்கள் செலவு செய்யப்படாமல், ஒதுக்கப்பட்ட பணம் அப்படியே இருக்கிறது. 1977–78–ம் ஆண்டில் என்பதற்காக ஒரு சில எடுத்துக்காட்டுகளை மாத்திரம நான் முன் வைக்க விரும்புகிறேன்.





சேரிப் பகுதிகளை—அரிசன காலனிகளை—சீரமைப்பதற்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 1 கோடி ரூபாய். அதிலே ஒரு சல்லிக்காசு கூட செலவு செய்யப் படவில்லை என்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

கிருஷ்ணா தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவரும் திட்டத்தை ஆய்வு செய்ய ஒதுக்கப்பட்ட தொகை 50 இலட்சம் ரூபாயில் எதுவுமே செலவு செய்யப்படவில்லை என்பது வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதும் ஆகும்.

நீர்ப்பாசன வளர்ச்சிக்காக மூலதனச் செலவாக இந்த அவை அங்கீகரித்த தொகையான சுமார் 4 கோடியே 54 இலட்சம் ரூபாயில் செலவு செய்யப்படாத தொகை சுமார் 3 கோடியே 92 இலட்சம் ரூபாயாகும்.

சென்னையிலே முக்கியமான பிரச்சனையாக இருக்கின்ற குடிநீர்ப் பிரச்சனை—அதற்காக இந்த மாமன்றம் ஒதுக்கிய தொகை 1 கோடியே 84 இலட்சம் ரூபாய். ஆனால் செலவு செய்யப்படாத தொகை அந்த 1 கோடியே 84 இலட்சத்தில் 1 கோடியே 30 இலட்சம். அதாவது 71 சதவீதம் செலவு செய்யப்படவில்லை என்பது கண்டனத்திற்குரியது.

பின்தங்கிய சமுதாய மக்களுக்காக இந்த மாமன்றம் அங்கீகரித்த தொகை 6 கோடியே 42 இலட்சம் ரூபாயில் செலவு செய்யப்பட்டது 5 கோடியே 69 இலட்சம் தான். செலவு செய்யப்படாத தொகை 72.87 இலட்சம். பின்தங்கிய மக்களுக்கு இன்னும் அதிகமாக செலவு செய்யப்பட வேண்டும் என்கிற தேவை இருக்கும்போது, அதிலே 72 இலட்ச ரூபாயை செலவிடாமல் ஒதுக்கியது வருந்தத்தக்க ஒன்றாகும்.

பொதுச் சுகாதாரத்தில். ‘சானிட்டரி’, ‘வாட்டர் சப்ளை’ போன்ற மக்களுடைய அடிப்படைத் தேவைகளுக்காக மூலதன ஒதுக்கீடாக இந்த மாமன்றம் அங்கீகரித்த தொகை 73 இலட்சம். அதிலே செலவு செய்யப்பட்டது 6 இலட்சம் தான். ஆக, 90 சதவீதம் செலவு செய்யப்படவில்லை.

விவசாயத்திற்காக இந்த மாமன்றம் அங்கீகரித்த மூலதனச் செலவு 12 கோடியே 34 இலட்சம் ரூபாய். செலவு செய்த தொகை 1 கோடியே 92 இலட்சம் ரூபாய்தான். செலவு செய்யப் படாத தொகை 10 கோடியே 42 இலட்சம். அதாவது 84 சதவீதத்தை செலவு செய்யவில்லை.

கிராமப்புற சாலைகளும் பாலங்களும் அமைக்கப்பட்டு வருவதாக உறுப்பினர்கள் எல்லாம், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆளும் கட்சிக்கு ஆதரவானவர்கள் எல்லாம் பெருமை

[திரு. மு. கருணாநிதி] [1979 நவம்பர் 3

யோடு சொன்னார்கள். உண்மை என்னவென்று பார்த்தால் அதற்காக என்று இந்த மாமன்றம் அங்கீகரித்த தொகை 8 கோடி ரூபாய். அதிலே இன்னும் செலவு செய்யப்படாமல் இருப்பது, சுமார் 3 கோடி ரூபாய் என்பதை வருத்தத்தோடு நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு மாநிலமும் இந்திய அரசிடத்திலே திட்டத்திற்காக அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று கூக்குரல் போட்டு, போராடி, பிச்சை எடுக்கின்ற நிலைமைக்குக்கூட ஆளாகி, அவைகளைத் தங்களுடைய மாநிலத் திட்டங்களுக்காக செல விட்டு வருகிற இந்த நேரத்தில் இங்கே மாமன்றத்தினுடைய அனுமதி பெற்று, ஒதுக்கப்பட்ட தொகையை செலவழிக்கப் படாமல் வைத்திருப்பது மிக மிக வேடிக்கையானது, வேதனை அளிக்கக்கூடியது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆனால். இப்படிப்பட்டத் திட்டங்கள் அல்லது ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்களுடைய பராமரிப்புகள்-இவைகள் எதுவுமே நாட்டில் நடைபெறாமல், அதே நேரத்திலே இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற ஒரே ஒரு ஜனநாயக அமைப்பு இந்த சட்ட மன்றம்தான் என்கிற நிலை ஏற்பட்டு, மற்ற மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்ற எல்லா மன்றங்களும் நிறுவனங்களும் கலைக்கப்பட்டுவிட்ட ஒரு சூழ்நிலையை நாம் காண்கிறோம். அவைகளுக்கு எல்லாம் இப்போது அமைப் பாளர்களை நியமிப்பதைப்போல நியமனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஏதோ பெரிய பெரிய சட்டங்கள் எல்லாம், புரட்சிகரமான சட்டங்கள் எல்லாம் கூட்டுறவுத் துறையில் வருவதாக எடுத்துச் சொல்லப்பட்டு, ஆனால் மாமன்றம் கூடி இருக்கிற நேரத்திலேயே பத்திரிகையிலே பார்த்து நாம் சில செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம்.

இன்னின்னார், இன்னின்ன வங்கிகளுக்கு இன்னின்ன நிறு வனங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்ன எம்.எல்.ஏ. அல்லது இன்ன அமைப்பாளர் என்ற அளவுக்கு செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

நம்முடைய நண்பர் மாரிமுத்து அவர்கள் பேசும்போது ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டதைப் பற்றிச் சுட்டிக் காட்டினார்கள். ஊராட்சி மன்றங்கள் ஒன்றல்ல; இரண்டல்ல. ஏதோ மதுரை மாநகராட்சி மன்றத்தினுடைய ஆயுளை நீடிக்காமல் இருந்துவிடவில்லையா? சென்னை மாநகராட்சி மன்றத்தை கலைத்து விடவில்லையா என்று ஒன்றிரண்டு



1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

உதாரணங்களைக் காட்டி பேசிய ஆளும் கட்சியினுடைய அருமை நண்பர்களுக்கு எடுத்துக்காட்ட நான் கடமைபட்டிருப்பதெல்லாம் ஒன்றல்ல, இரண்டல்ல; 12,000 ஊராட்சி மன்றங்கள் ஒரே உத்தரவின் மூலம் கலைக்கப்பட்டிருக்கின்றன. இந்த உத்தரவில் ஏற்பட்டிருக்கிற சில முரண்பாடுகளை நான் இங்கே எடுத்துக் காட்டுவது என்னுடைய கடமையாகும்.

[முற்பகல் 10-50]

ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு செக் புஸ்தகங்களில் கையெழுத்துப் போடுகிற உரிமை உண்டு. முதலமைச்சர் அவர்களுக்கு கூட கிடையாது செக் புத்தகத்தில் கையெழுத்துப் போடும் உரிமை. வேறு எந்த அமைப்புகளிலோகூட அங்குள்ள தலைவர்களுக்கு செக் புத்தகத்தில் கையெழுத்துப் போடும் உரிமை கிடையாது. ஆனால் ஊராட்சி மன்றத் தலைவருக்கு உண்டு. ஊராட்சி ஒன்றியம் கலைக்கப்பட்ட பிறகு, ஒரு சிற்றூரில் 50 ரூபாய்க்கு ஏதாவது செலவிட வேண்டும் என்றால், அந்தக் செக்கை வழங்கக் கூடிய உரிமை, செக்கில் கையெழுத்து இடக்கூடிய உரிமை பிளாக் டெவலப்மெண்ட் ஆபிசருக்கு வருகிறது. ஒரு 50 ரூபாய்க்கு பல்ப் வாங்க வேண்டும், அல்லது அந்த ஊருக்கு வேறு ஏதாவது பொருள் வாங்க வேண்டும் என்றால், அந்த 50 ரூபாய்க்கான காசோலையில் பிளாக் டெவலப் மெண்ட் ஆபிசர்' கையெழுத்து இடவேண்டும். அதை தணிக்கை செய்வது யார் என்று பார்த்தால், நிர்வாகத்திலே எவ்வளவு முரண்பாடு என்று தெரிகிறது. அதை எக்ஸ்டென்ஷன் ஆபிசர் ஆப் பஞ்சாயத்து, இ.ஒ.பி.—என்று சொல்லப்படுபவர் தணிக்கை செய்கிறார். அவர் பிளாக் டெவலப்மெண்ட் ஆபிசருக்கு கீழே உள்ள ஒரு அதிகாரி. பிளாக் டெவலப்மெண்ட் ஆபிசர் கொடுத்த ஒரு காசோலையை, அதை அந்த வகைக்குச் செலவிடலாமா என்று தணிக்கை செய்பவர் அவர் கீழே உள்ள அதிகாரி ஒருவர். அந்த அளவுக்கு நிர்வாகம் சீர் குலைந்து இருக்கிறது. அதற்கு இது ஒரு சான்று ஆகும். ஜனநாயக அமைப்புகள் கலைக்கப் பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில் பெரிய திட்டங்களை நிறை வேற்றாவிட்டாலும், தேர்தல் நேரத்திலே ஆங்காங்கு புயல் வெள்ளம் துயர் துடைப்பு விழாக்களை நடத்தி புடவை, வேட்டி களை வழங்குகிற விழாக்களை நடத்திவிட்டால் மக்களின் மதிப்பை கவர்ந்து விடலாம் என்று இருக்கக்கூடிய முயற்சியில் இறங்குகிறார்களே தவிர எதுவும் உருப்படியாக செய்வதில்லை. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி இப்படி தேர்தல் ஸ்டண்டுகள் நடத்துகிறார். சமீபத்தில் மதுரை மாநகரில் நமது முதலமைச்சர் அவர்கள், திருப்பூர் குமரன் அவர்களுடைய துணைவியார் இராமாயி அவர்கள் அங்கே நடைபெறுகிற விழாவிற்கு வருகை தந்திருந்தபோதோ, அல்லது வரவழைக்கப் பட்டாரோ, அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை, அவர்களை மேடைக்கு அழைத்து அந்த விழாவிலேயே அவர்களுக்கு அரசின்

சார்பில் 10,000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தார், அது தவிர மாதந்தோறும் மானியமும் வழங்கப்படும் என்று திடீர் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்து விட்டார்....

உண்மை நிலை என்னவென்றால், திருப்பூரிலிருந்து, இதே இராமாயி அவர்களின் சார்பாக திரு. பி. இராமசாமி என்பவர் 3-7-78ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார். அதிலே அவர் ''காமராஜ் அவர்களின் சகோதரி அவர்களுக்கு பென்ஷன் கொடுப்பதுபோல, திருப்பூர் தியாகி கொடி காத்த குமரன் அவர்களின் துணைவியார் திருமதி கே. இராமாயி அவர்களுக்கும் மாதம் 500 ரூபாய் தந்து உதவ வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இது பற்றி தங்கள் அறிவிப்பை எங்களுக்குத் தர வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்''. இப்படி 3-7-78ல் ஒரு கடிதம் முதலமைச்சருக்கு வருகிறது. முதலமைச்சரின் பார்வைக்கு சென்றுதான் பொதுத் துறைக்கு, திரு.யு.எஸ் நடராஜன், ஐ. ஏ. எஸ், அரசு துணைச்செயலாளர் அவர்களுக்கு செல்கிறது. அங்கிருந்து ஒரு கடிதம் அந்த இராமசாமி அவர்களுக்குச் செல்கிறது, என்னவென்று, ''திருப்பூர் குமரன் அவர்களுடைய மனைவியார் ஏற்கெனவே மத்திய மாநில அரசுகளின் மானியங்களைப் பெற்று வருகிறார். அதை மேலும் உயர்த்தி கொடுப்பதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்''. இப்படி எழுதியது 1978ம் ஆண்டில் மத்திய—மாநில மானியத்தை ஏற்கெனவே பெற்று வருகிறார், அதை மேலும் உயர்த்தி கொடுப்பதற்கு இல்லை என்று 16-10-78லே கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டு, ஒரு ஆண்டுக்குப் பிறகு அதே இராமாயிக்கு 10 ஆயிரம் ரூபாய் மானியம் தருகிறோம் என்று அறிவிக்கிறார். அந்த மானியம் இன்னும் வழங்கப்படவில்லை, அது வேறு விஷயம், ஆனால் இது எப்படிப்பட்ட தேர்தல் ஸ்டண்ட் என்பது புரியும். சென்ற ஆண்டு இறுதியில் கண்டிப்பாக மறுத்துவிட்டு, இந்த ஆண்டு திடீர் என்று 10,000 ரூபாய் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும்..

நான் சில குற்றச்சாட்டுக்களை இங்கே வைப்பதாகச் சொன்னேன். அந்தக் குற்றச்சாட்டுகள் என்ன என்பதை, அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு முற்படுகிறேன்.

பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களில் சிலர் மருத்துவக் கல்லூரி தேர்வில் எந்தவிதமான தவறுகளும் இந்த ஆட்சியில் நடைபெறுவதேயில்லை என்று சத்தியம் செய்வதைப்போல் பேசினார்கள். ஆனால் மிகமிகப் பெரிய தவறுகள் மருத்துவக் கல்லூரி அட்மிஷன் விஷயமாகவும், அந்த அட்மிஷன் முறையிலே பட்டியல்களைத் தயாரித்து வெளியிடுவது விஷயமாகவும்



இன்றைக்கு நாட்டு மக்களுக்கு தெரிய வந்திருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசாங்கம் ஒரு ஜீ. ஓ. போட்டு மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய தேர்வுக்கான குழுவை நியமிக்கிறது. இந்த ஜீ.ஓ. வினுடைய 8-வது பிரிவு மிகத் தெளிவாகச் சொல்கிறது.

The Secretary, Co-ordination Committee should send to Government, addressed to the Secretary to Government. TamilNadu Health and Family Planning, in name cover, duly sealed, the list of selected, for approval of Government. before publication.

வெளியிடுவதற்கு முன்பு அந்தப் பட்டியலை கவர்ன்மென்ட் அப்ரூவலுக்கு, அரசாங்கத்தினுடைய ஒப்புதலுக்காக அனுப்ப வேண்டுமென்று தெளிவாக, அந்த ஜீ. ஓ. வின் 8-வது பிரிவு எடுத்துக் காட்டுகிறது. ஆனால் என்ன நடைபெற்றிருக்கிறது என்றால் இப்போது அவற்றை எந்த ஜீ.ஓ.வும் வெளியிடப்படாமல் 'கோ ஆர்டினேஷன் கமிட்டிச்', செயலாளரே தானாகவே அந்தப் பட்டியலை வெளியிட்டு இருக்கிறார். அரசாங்கத்தின் விதிப்படி செயலாளர் அந்தப் பட்டியலைப் பெற்று அதிலே ஒரு 'நோட்' எழுதி அனுப்புவார்கள். அதில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கையெழுத்து இட்டு முதல் அமைச்சருக்கு அனுப்ப வேண்டும். ஆனால் இந்த ஆண்டு அப்படி நடைபெற்றதா என்றால் நடைபெறவில்லை. செயலாளருடைய குறிப்பும் கிடையாது. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வெறும் கையெழுத்து மாத்திரம் அதிலே போட்டிருக்கிறார்கள். அதற்கு மேல், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் மார்க் வாங்கியவர்கள் பட்டியல் ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள். அதில் முதல் அமைச்சர் அவர்கள் டிக் பண்ணியிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பட்டியல் செப்டம்பர் 12-ம் தேதி வெளியாகிறது. மொத்தம் 1015 மாணவர்கள்தான் சேர்க்கப்படலாம் என்று அரசாங்கத்தினுடைய ஜீ.ஓ. கூறுகிறது. அப்படித்தான் ப்ராஸ்பெக்ட்ஸிலும் இருக்கிறது. 1015 மாணவர்கள்தான் சேர்க்கப்படலாம் என்று. ஆனால் திடீரென்று அந்த எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்குரிய அனுமதிகளைப்பெற வேண்டிய இடங்களில் உரிய நேரத்தில் பெற்றார்களா இல்லையா என்பது வேறு விவகாரம். ஆனால் நான் இங்கே ஒரு மிக முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். பட்டியல் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடத்தில் காட்டப்பட்டதாகவும், அவர் செப்டம்பர் 9-ம் தேதி அன்று அதிலே கையெழுத்து இட்டதாகவும் அதுபற்றி ஒரு பக்கம் விசாரணை நடைபெறுகிற இடத்தில் எடுத்துக்காட்டப்பட்டு விசாரித்தவர்கள் மேலும் சில விவரங்களைக் கேட்டதற்குப் பிறகு மறுநாள் அபிடவிட் தாக்கல் செய்கிற நேரத்தில் 9-ம் தேதிக்குப் பதிலாக 8-ம் தேதி என்று அதிலே குறிப்பிடப்பட்டு முதலில் கொடுக்கப்பட்ட அபிடவிட்டை விசாரித்தவர்கள்

[திரு. மு. கருணாநிதி] [1979 நவம்பர் 3

பார்க்கிற நேரத்தில் அதிலே 8-ம் தேதி என்று போடப்பட்டிருந்து அந்தத் தேதியை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரோ அல்லது செயலாளர்களோ அதை மாற்றி அந்தத் தேதியை 9-ம் தேதி என்று திருத்தியிருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய; ஆங்கிலத்தில் சொல்வதானால் 'ப்ராட்' என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். செப்டம்பர் 12-ம் தேதி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் யார் யார் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்கிற பட்டியல் வெளியாகி விடுகிறது. அதற்குப் பிறகு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவு போடுகிறார்கள். தமிழில் அந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது. தெரியுமா? செப்டம்பர் 12-ம் தேதி மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு 6-10-1979, அடுத்த மாதம் ஒரு உத்தரவு பிறக்கிறது. என்ன அந்த உத்தரவு. அந்த உத்தரவின்படி கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கு 6 இடங்கள். அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து வரும் தமிழ் மாணவர்களுக்கும், மாணவியருக்கும் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் 6 இடங்கள் விளையாட்டுச் சாதனைகளை ஏற்படுத்திய மாணவ மாணவியருக்கு மூன்று இடங்கள், ஆக, ஆறு ப்ளஸ் ஆறு ப்ளஸ் மூன்று 15 இடங்கள்.

(முற்பகல் 11-00)

1015 இடங்கள் என்று அறிவிக்கப்பட்டு, அதில் தேர்வு எழுதி அல்லது இன்டர்வியுக்கு மாணவர்கள் வந்து அந்த செலக்ஷன் கமிட்டியால் நிறைவு செய்யப்பட்டு அந்தப் பட்டியல் செப்டம்பர் மாதம் வெளியிட்ட பிறகு 12-9-79-ல் வெளியிட்ட பிறகு 6-10-79 அன்று ஒரு உத்தரவு வருகிறது. அந்த 6-10-79 உத்தரவில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் குறிப்பு எழுதுகிறார், முதலமைச்சரும் குறிப்பு எழுதுகிறார். அந்த உத்தரவு வருவதற்கு முன்பு இப்படிப்பட்ட ஒரு அருமையான கருத்தை அதாவது விளையாட்டுப் போட்டிகளில் நல்ல திறமையாக இருப்பவர்களுக்கு 3 இடங்கள், ஒதுக்க வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வாழும் தமிழ் மாணவர்களுக்கு ஆறு இடங்கள் ஒதுக்க வேண்டும், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் பிள்ளைகளுக்கு 6 இடங்கள் ஒதுக்க வேண்டும். இப்படி 15 இடங்கள் ஒதுக்க வேண்டும் என்கின்ற உத்தரவு அடுத்தமாதம் வெளிவருகிறது. இது சட்டத்திற்கு உட்பட்டதா, நியாயம் நெறிமுறைகளுக்கு ஏற்புடையதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த 15 பேர்களுக்கு இடம் உண்டு என்பதும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு இடம் உண்டு என்பதும், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் வீட்டுப் பிள்ளைகளுக்கு இடம் உண்டு என்பதும், விளையாட்டுகளில் சாதனைப் புரிந்தவர்களுக்கு இடம் உண்டு என்பதும், 1015 பேர்களுக்கு இடம் என்று அப்போது அறிவிக்கப்பட்ட கால கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்குமேயானால்,

விளம்பரப்படுத்தப்பட்டிருக்குமேயானால் இப்படிப்பட்டவர்களெல்லாம் அதில் போட்டியிடுவதற்கு அவர்களெல்லாம் வந்திருக்கக் கூடும்.

எனவே அது தடுக்கப்பட்டு 1,015 இடங்களும் பூர்த்தியான பிறகு முதலமைச்சர் இப்படிப்பட்ட உத்தரவை வெளியிடுகிறார். இப்படி சரித்திர பிரசித்தி வாய்ந்த மிக முக்கியமான கொள்கை குறிப்பு அடங்கிய இந்த பைலை ஜெயராமன் என்கின்ற பிரிவு அலுவலர். அவர்தான் இந்த பைலை அனுப்புகிறார். பிறகு சார்பு செயலாளர் தண்டாயுதபாணி 13-9-1979-ல் கையெழுத்திடுகிறார். பிறகு ராஜண்ணன், மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத்துறை துணை செயலாளர் கையெழுத்திடுகிறார். பிறகு முராரி செயலாளர் அவர் கையெழுத்திடுகிறார். 13-9-79—ல் கையெழுத்திடுகிறார். பிறகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 27-9-79-ல் கையெழுத்திடுகிறார். பிறகு எம்.ஜி.ஆர். 3-10-79-ல் கையெழுத்திடுகிறார். இப்படி பைலைப் பார்த்தால், 13-9-79-ல் இது ஆரம்பித்ததாக தெரிகிறது. என்னிடத்தில் இருப்பது இந்த பைலுடைய 'போட்டோ ஸ்டட்' காப்பி. முதலமைச்சரும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும், மற்ற இலாகாவில் உள்ளவர்களும் கையெழுத்திட்டுள்ள பைலின் போட்டோ ஸ்டட் காப்பி என்னிடத்தில் இருக்கிறது. ஜெயராமன் என்பவர் 13-10-79-ல் கையெழுத்து போட்டதை 13-9-79 என்று திருத்தி, 13-10-79 என்பது 13-9-79 ஆக திருத்தப்பட்ட பிறகு, 13-9-79, 27-9-79, 29-9-79, 3-10-79 என்றெல்லாம்' அந்த பைலில் வந்து, அதில் கீழே குத்தப்பட வேண்டிய முதலமைச்சருடைய அலுவலகத்தின் முத்திரை மேலே அதாவது பிரிவு அலுவலர் என்று சொல்லப்படுகிற அந்த இடத்தில் முதலமைச்சர் அலுவலகத்திலுள்ள முத்திரை குத்தப்பட்டு இப்படிப்பட்ட ஒரு பைல் வருகிறது. நான் கேட்பதெல்லாம், இதிலே 13—10—79 என்பது 13—9-79 என்று திருத்தப்பட வேண்டிய காரணம் என்ன? அதைப்போலவே பட்டியலில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் 9—ஆம் தேதி, செப்டம்பர் 9-ம் தேதி கையெழுத்திட்டதாக சொல்லப்பட்டு, பின்னால் விசாரணை மண்டபத்தில் 8-ம் தேதி என்று சொல்லிவிட்டு, பின்னால் 9 என்று திருத்தப்பட வேண்டிய காரணம் என்ன?

இவைகளுக்கு மேலாக 1,015 இடம் என்று மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு அட்மிஷன் என்று அறிவிக்கப்பட்ட கால கட்டத்தில் ஏன் இப்படிப்பட்ட, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுடைய குடும்பங்களிலுள்ள பிள்ளைகள், அமெரிக்க ஐக்கிய நாட்டு தமிழர்களுடைய பிள்ளைகள், விளையாட்டுகளில் சாதனைகள் ஏற்படுத்தியவர்கள் இவர்களெல்லாம் சேர்க்கப்படுவர் என்று அறிவிக்கப்படவில்லை? தமிழர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மாத்திரம்தான் இருக்கிறார்களா? இங்கிலாந்தில் இல்லையா? வேறு நாடுகளில்

கிடையாதா? ஆகவே இது அமெரிக்க ஐக்கிய நாட்டு தமிழர்களுக்கு அல்ல, இவைகள் எல்லாம் அமெரிக்க ஐக்கிய நாட்டு கோட்டாவா? அல்ல, அன்பர் மணியன்கோட்டாதான் என்று நாட்டில் எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (தி. மு. க. உறுப்பினர்கள் தரப்பிலிருந்து ஆரவாரம்......)

அடுத்தபடியாக, 8-6-79 அன்று தமிழக அரசு பொதுத் துறை ஒரு ரகசிய சுற்றறிக்கையை அரசாங்கத்தின் அனைத்து அலுவலகத்திற்கும் அனுப்பியிருக்கிறது. பொதுத் துறை என்பது அரசாங்கத்தில் மிகவும் ரகசியமான துறை. அந்தத்துறை இருக்கின்ற அறைக்கு பக்கத்தில் யாரையும் . அனுமதிக்க மாட்டார்கள்.

அந்தத்துறை அனுப்பியுள்ள ரகசிய அறிக்கை அதில் தலைமைச்செயலாளருக்காக மாதவன் நம்பியார் என்ற அதிகாரி கையெழுத்திட்டிருக்கிறார். அந்த அறிக்கையினுடைய நோக்கம் என்ன? தாத்பரியம் என்ன என்பதை நான் படித்துக்காட்ட விரும்புகிறேன்....

It has since been brought to the notice of Government that a middle-aged person with a beard and calling himself 'Palani Baba' is frequenting government offices and is seeking to achieve his ends by posing himself as a close friend of the authorities at righer levels. He is said to talk English and secretly tape-hecording conversation with officials.

All the officers now in the Address Entry are requested to forbid the entry of the said 'Palani Baba' into Government offices. The officers are also cautioned against having any contact with the individual, All the officers are requested to maintain a close and sharp vigil over his activities and send a report to Government if he comes to notice. The Heads of Department are requested to bring these instructions to the notice of subordinate offlcers also for information and guidance. ....என்று கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார். தமிழிலே சொல்ல வேண்டுமானால், பழனி பாபா என்று தன்னை அழைத்துக் கொள்ளக்கூடிய, தாடி வைத்த, நடுத்தர வயதுடைய ஒருவர், தான் மேலதிகாரிகளின் நண்பர் என்று கூறிக்கொண்டு, அரசு அலுவலகங்களிலே வந்து, தன்னுடைய காரியங்களை சாதித்துக் கொள்வதாக அரசுக்குத் தெரிய வருகிறது. அதிகாரிகளிடத்தில் ஆங்கிலத்திலே பேசி, இரகசியமாக பேச்சுவார்த்தைகளை டேப் செய்து, பதிவு செய்தவாகத் தெரிகிறது. அரசு

அலுவலங்களிலே பழனி பாபா என்று சொல்லப்படுபவர் உள்ளே வராமல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்த தனிப்பட்ட நபருடன் அதிகாரிகள் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்று அதிகாரிகள் எச்சரிக்கப்படுகிறார்கள். அனைத்து அதிகாரிகளின் கவனத்திற்கும் இதனை எச்சரிக்கையாக வைத்து, அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக் கொள்ளப்படுகிறது. துறைத் தலைவர்கள் தங்கள் கீழ் பணியாற்றும் சார்பு பணியாளர்களுக்கும், இதைப் பற்றி தகுந்த அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று இந்த சுற்றறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த சுற்றறிக்கையிலே சொல்லப்படுகின்ற, பெரிய அதிகாரிகளுடைய நண்பர் என்று கூறிக் கொள்கின்ற இந்த நபர் யார்? அவரைப் பற்றி இதே மாமன்றத்தில், கடந்த ஆண்டு என்று கருதுகின்றேன்—பாபா என்று பெயரைக் குறிப்பிட்டு, அவர் மூலம் 40 இலட்சம் ரூபாய் கைமாறிய கதையை நான் எடுத்துச் சொன்னேன். அப்போது அதற்கு எந்த விதமான பதிலையும் முதலமைச்சர் அவர்கள் இங்கே அளிக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி தனியாக சுற்றறிக்கை அனுப்பப்பட்ட பழனி பாபாவுடன் தொடர்புடைய அதிகாரிகள் யார் என்று இந்த அரசுக்குத் தெரியாதா? இதோ இந்த புகைப்படத்தில் நம்முடைய ஐ.ஜி. பரமகுரு, அவர் துணைவியார், அவருக்குப் பக்கத்திலே பழனி பாபா நிற்கிறார். எப்படி நிற்கிறார்? பரம குருவின் தோளில் கைபோட்டு நின்று கொண்டிருக்கிறார். ஏதோ பெஸ்டிவலில் அல்லது ஏதோ வரவேற்பு நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட படமென்று யாரும் கருதக் கூடாது. வீட்டிலே எடுக்கப்பட்ட படம். அதுவும், ஐ.ஜி. பரம குரு தோளிலே கையைப் போட்டுக் கொண்டு, பழனி பாபா பரவசத்தோடு இருக்கும் படம் இது.

ஐ.ஜி. மாத்திரமல்ல. சில முஸ்லீம் பிரமுகர்களை சந்திக்கின்ற போது, பழனி பாபாவுடன் இருப்பது யார் என்று பார்த்தால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ராஜா முகமது அவர்கள். பழனி பாபா அவர்களோடு அமைச்சர் நின்று கொண்டிருக்கிறார். இதுவும் எங்கேயோ விசேஷத்திலோ, வைபவத்திலோ எடுக்கப்பட்ட படம் அல்ல. சில முஸ்லீம் பிரமுகர்களோடு பழனி பாபா நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ராஜா முகமது அவர்களைச் சந்தித்து பேசிய நேரத்திலே எடுக்கப்பட்ட படம்.

அது மாத்திரமல்ல. இன்னொரு படம். நம்முடைய முதலமைச்சர் அமர்ந்திருக்கிறார். முதலமைச்சருக்கு நேராக பழனி பாபா எப்படி உட்கார்ந்திருக்கிறார், பார்க்க வேண்டும்.

பக்கத்திலே சரிசமானமாக உட்கார்ந்திருக்கிறார் என்று சொல்ல முடியாது. நம்முடைய முதலமைச்சர் மேலே பாய்ந்து விழுவது போல், அவருடைய உதடு வரையில் கையை நீட்டிப் பேசுகின்ற பாவனை இந்த படத்தில் அமைந்திருக்கின்ற காட்சி. இந்த பழனி பாபா எந்த அளவிற்கு இந்த அரசாங்கத்திலே ஆதாயங்களைப் பெற்றிருக்கிறார் என்பதற்கு பல ஆதாரங்களை என்னால் சொல்லமுடியும், வக் போர்டு சார்பாக அவர் ஒரு பெரிய பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். நம்முடைய அமைச்சர் பொன்னையன் அவர்களுக்கும், அவருக்கும் தொடர்பு உண்டு என்பதை இந்தக் கலர் படம், வண்ணப்படம் காட்டிக் கொண்டிருக்கிறது. ஒருவருக்கொருவர் அக்கேஷனலாக நடைபெற்ற சம்பவம் அல்ல. இந்த அரசினுடைய அதிகாரிகளிடத்தில் இந்த பழனி பாபாவுக்கு எவ்வளவு தொடர்பு இருக்கின்றது என்பதை நான் நம்முடைய கம்யூனிஸ்ட் தோழர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். நாங்களும், நீங்களும் சேர்ந்து தொழிலாளர்கள் வதைக்கப்படுகின்றார்கள் என்ற காரணத்திற்காக ஒரு பந்த் நடத்தினோம். அந்த பந்த் நடத்திய மறுநாள், பழனி பாபா நம்முடைய போக்குவரத்து அமைச்சர் பொன்னையன் அவர்களோடு பேசுகிறார். சர்க்காருடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசு அதிகாரிகளிடத்திலே பேசும் போதே, டேப் செய்யக் கூடியவர் பழனி பாபா அவர்களிடத்திலே ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11-10]

நம்முடைய ஹர்த்தால் நடைபெற்றது–வேலை நிறுத்தத்திற்கு கடைஅடைப்புக்கு மறுநாள் பழனி பாபா அமைச்சர் பொன்னையனோடு பேசுகிறார். படிக்கிறேன். கேளுங்கள். தேவைப்பட்டால் சபாநாயகரிடம் அந்த டேப் ரெக்கார்டைப் போட்டுக் காட்ட நான் தயாராக இருக்கிறேன்.

'ஹலோ'

பொன்னையன் ; எஸ்

பாபா சொல்கிறார் Can I speak to the Transport Minister?
பொன்னையன், பாபா, Good Morning. How are you?

பாபா ; Fine ரொம்ப நேரமாக ட்ரை மண்ணிக் கொண்டிருந்தேன. எங்கேஜ்டு ஆக இருந்தது.



பொன்னையன் : நேற்றெல்லாம் நம்ப கட்சித் தொண்டர்களை வீட்டுக்கு வரவழைத்து எல்லா 14 தொகுதி அமைப்பாளர்களையும் கஷ்டப்பட்டு இரண்டு நாளாக உழைத்தார்களே அவர்களுக்கு நன்றி சொல்ல ஒரு சின்ன பார்ட்டி கொடுத்து அனுப்ப மணி இரண்டே முக்கால் (என்ன பார்ட்டி தெரிகிறதா)

(பதினான்கு அமைப்பாளர்கள் கட்சித் தொண்டர்கள் அனைவருக்கும் பார்ட்டி கொடுக்கப்படுகிறது அமைச்சர் பொன்னையன் அவர்கள் வீட்டில்.)

பாபா : அப்படியா?

பொன்னையன் : அப்பறம் படுத்தது மணி 3 ஆச்சு. 3 மணிக்குப் படுத்ததால் ரொம்ப டயர்டு. டேக்கிங் ரெஸ்ட்.

பாபா : நான் தலைவரோடு மதுரையில் இருந்து விட்டு வந்தேன்.

(தலைவர் என்றால் முதலமைச்சர்.)

அப்புறம் முஸ்லிம் காலேஜ், லேடிஸ் காலேஜ்....

(பொன்னையன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வீரப் பிரதாபங்களைப் பேசுகிறார்.)

பொன்னையன் : Party candidates on one side have volunteered tremendously throughout the State, the Police as a second cadre. They did very particularly..

நான் சொல்லிவிட்டேன், தலைவரிடம். சிறப்பாக காவல் துறையினர் செய்திருக்கிறார்கள். கட்சிக்காரர்களும் செய்திருக்கிறார்கள்.

(என்ன செய்திருக்கிறார்கள்—கடை அடைப்பில் நம்மை அடித்தார்கள் அல்லவா? அது)

பாபா : ஒண்டர்ஃபுல்.

பொன்னையன் : ரியலி..

பாபா : மழை வந்ததுங்களா?

பொன்னையன் : இங்கு ஒன்றும் மழை இல்லை. The Police did wonderful work. ஆரம்பத்தில் நம்ம கட்சி ஆட்சிக்கு வந்ததும் போலீஸ் எல்லாம் இருந்தார்கள் பாருங்கள். கொஞ்சம் எனிமிகளாக—ஆன்டி அ. தி. மு. க. காரர்களாக.

பாபா : ஆமா.

பொன்னையன் : இப்போதெல்லாம் புரிந்து கொண்டார்கள் சீஃப் மினிஸ்டர் ஸ்ட்ரிக்டாக இருக்கிறார். ஸ்டெடியாக இருக்கிறார். நாலைந்து கருணாநிதிகள், கல்யாண சுந்தரங்கள் வெளியே பேசினால் கூட தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் முதலமைச்சர் பின்னால்தான் இருக்கிறார்கள். காலாகாலத்திற்கும் இருப்பார்கள் என்பதை போலீஸ்காரர்கள் புரிந்து கொண்டார்கள்.

பாபா ; அப்படியா ?

பொன்னையன் : ஒரு ஸ்டேட்மென்ட் வானொலியில் பேசினார் பாருங்கள். (சொல்லுகிறார் பொன்னையன்.)

(என்ன ஸ்டேட்மென்ட் தெரியுமா?)

(அதாவது ஸ்ட்ரைக் நடத்தக்கூடாது, பொது மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று முதலமைச்சர் பேசினாரே அந்த ஸ்டேட்மென்ட்.)

பந்த் உங்களுக்கெல்லாம் உண்மையிலேயே

பாபா : ரொம்ப எஃபக்டிவ் ஆக இருந்தது.

பொன்னையன் . ஆமாம். உண்மையிலேயே அது தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்ட கிளர்ச்சி, பயங்கரமானது. இந்த வெற்றிக்குக் காரணம், பந்த் உடைந்ததற்குக் காரணம் சி. எம்.—உடைய வானொலிப் பேச்சு (பொன்னையன் சொல்லுகிறார்.)

பாபா : ரொம்ப, அதுவும் நிறுத்தி நிதானமாக கிளியராக அடிச்சிட்டார்—(பாபா சொல்லுகிறார்.)

பொன்னையன் : எஃபக்டிவ் ஆக இருந்தது. எல்லா பேப்பரிலும் எடுத்து அருமையாகப் போட்டிருந்தார்கள். அதைப் படித்தவுடனே, தி. மு. க.வினுடைய, கலைஞருடைய உயிர் நாடியாக இருக்கிறவன் கூட, இப்படி ஒரு உள்ள உணர்வுடைய எம். ஜி.ஆரை எதிர்த்தா ஒரு பந்த் நடத்துவது என்று மாறி விடுவார்கள். அப்படி அருமையாக அமைந்திருந்தது. அதனால் 'பப்ளிக் ஓவர்வெல்மிங் சப்போர்ட்'. அதனால் போலீஸ்காரர்கள் ரொம்ப கோவாப்பரேட் பண்ணினாங்க.



பாபா : அப்படியா ?

பொன்னையன் : அதுவும் சிட்டியில் போலீஸ் ரொம்ப ட்ரமன்டஸ்லி ஒர்க்ட். பரமகுரு லத்தியை எடுத்து அடிங்கடா என்று உத்தரவு போட்டார்....

(திரு. உமாநாத் அவர்களே, பொன்னையன் சொல்லுகிறார்) அவர்கள் லத்தியை எடுத்து அடிங்கடா என்று உத்தரவு போட்டார். அடியுங்கள், நொறுக்குங்கள் என்று உத்தரவு போட்டார்.

——அவர் போட்ட அந்த ஸ்ட்ரிக்ட் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ன ஆயிற்று என்றால். அவர் இன்ஸ்பெக்டர், டி. எஸ். பி. ஏ. சி. டி. சி.—யை எல்லாம் மீட்டிங் போட்டு கூப்பிட்டு ஸ்ட்ரிக்டாகச் சொல்லி விட்டார். எனக்கு வேண்டியது இந்த பந்த் உடைக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்.

இப்படி பேச்சு வார்த்தை தொடர்ந்து கொண்டு போகிறது.

இந்த பாபாதான் எற்கனவே சென்னையில் 20-5-78 ஆம் தேதி பெரம்பூரிலுள்ள நசரத் சையத் ஹுசேன் ஷா கதிரி திம்மசாமி தர்கா என்ற பெரிய தர்காவையும் மசூதியையும் புதுப்பிக்க அமைக்கப்பட்ட கமிட்டியில் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் நான் இங்கே நினைவு படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1979 மே மாதம் தஞ்சை நாகை இடைத் தேர்தலுக்கு முன்பு இந்த பாபா மீது முதலமைச்சருக்குக் கோபம் ஏற்பட்டது. பாபா என்ன செய்தார் தெரியுமா?

சில ஜனதா கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களோடு தொடர்பு கொண்டு, தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, தன்னுடைய சமூகநல இயக்கத்தின் சார்பாக நடத்தப்படும் விழாவுக்கு ஒரு மத்திய அமைச்சரை. அழைக்க வேண்டுமென்று கேட்கிறார். இந்த டெலிபோன் செய்தி முதலமைச்சருக்குச் செல்லுகிறது. எனவே, 1979 மே 28ஆம் தேதி பாபாவை இல்லத்திற்கு அழைக்கிறார். டேப் செய்யப்பட்ட செய்திகளை எல்லாம் போட்டுக் காட்டி பாபாவைக் கடுமையாக எச்சரிக்கை செய்து அவரை வெளியேற்றுகிறார்.

ஆக, ஜனதா கட்சியினுடைய அமைச்சர் ஒருவரை அவர் அழைக்கிறார் என்ற காரணத்திற்காக பழனிபாபா கடுமையாக எச்சரிக்கப்பட்டு அனுப்பப்படுகிறார். அதனால்தான் இந்த

எச்சரிக்கைகள் எல்லாம். அதற்குப் பிறகு இந்த அறிக்கைகள் எல்லாம். இப்போது பழனிபாபா காரில் போனால்கூட சோடா பாட்டிலை எடுத்து அவர் மேல் அடிக்கிறார்கள், அவருடைய உயிருக்கு ஆபத்து. பழனிபாபா ஐ. ஜி.க்கும் மற்றும் சில முக்கியமான் பொறுப்பிலுள்ளவர்களுக்கும் தன்னுடைய உயிருக்கு ஆபத்து வருமானால் இந்த ஆட்சியாளர்கள்தான் பொறுப்பு; அதற்கு முதலமைச்சர் அவர்கள்தான் பொறுப்பு என்ற வகையில் கடிதங்களை அனுப்பியிருக்கிறார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய போலீஸ் இலகாவைப்பற்றி நடைபெறுகின்ற வேலை நிறுத்தத்தைப் பற்றியல்ல. அதைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களும் எதிர்க்கட்சிகளினுடைய தலைவர்களும் மிக நிரம்ப எடுத்துக் கூறியிருக்கிறார்கள். போலீஸ் இலாகா எந்த அளவிற்கு இன்றைக்கு ஒரு நிர்வாகச் சீர்கேடுடைய இலாகாவாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களை மாத்திரம் நான் சொல்ல விரும்புகிறேன்.

ஐ. ஜி. பதவியிலிருந்து ஏற்கெனவே எக்ஸ்டன்ஷனிலேயிருந்த மிஸ்டர் ஸ்டிரேசி அவர்கள் 31-5-1979, அதாவது மே மாதம் ஐ. ஜி. பதவியிலிருந்து ரிடையர் ஆகிறார், ஏற்கெனவே எக்ஸ்டன்ஷனில் இருந்நவர் மே மாதம் 31 ஆம் தேதி 1979ஆம் ஆண்டிலே ரிடையர் ஆகிறார். வயது விதிப்படி அவர் அந்தத் தேதியிலே ரிடையர் ஆக வேண்டும். ஆனால் தொடர்ந்து அவர் வேலை பார்க்கிறார். எந்த உத்திரவுப்படி என்றால், எந்த உத்திரவும் கிடையாது. பிறகு அக்டோபர் 12ஆம் தேதி இந்த அரசு ஒரு அவசரச் சட்டம் போடுகிறது. தமிழ்நாடு போலீஸ் சட்டத்திலே இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்று மாற்றுகிறார்கள்.

வேடிக்கை என்னவென்றால் அந்த அவசரச் சட்டத்திற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து ஜூன் ஒன்றாம் தேதியிலிருந்து அந்த அவசரச் சட்டம் அமலுக்கு வரும் என்று சொல்கிறார்கள். இது முறைதானா என்பதற்கு எனக்குப் பதில் வந்தாக வேண்டும். மே மாதம் ரிடையர் ஆகிற ஒருவர், அக்டோபர் 12ஆம் தேதி டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்ற ஒரு பதவிக்கு மாற்றப்படுகிறார், அவருக்காக ஒரு அவசரச் சட்டம் போடப்பட்டு ஜூன் மாதம் 1ஆம் தேதியிலிருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கப்படுகிறது என்றால் இந்த இடைக்காலத்தில்—இவர் மே மாதம் 31 ஆம் தேதி ரிடையர் ஆனபோதிலும் அக்டோபர் 31 ஆம் தேதி வரையிலும்—எந்தவிதமான உத்திரவும் இல்லாமல் அவரை பதவி



நீடிக்கச் செய்வது பிறகு ஒரு அவசர உத்திரவு மூலமாக ரெட்ராஸ்பெக்டிவ் கொடுத்து நீடிக்கச் செய்தது நியாயம்தானா? சட்டப்படி முறைதானா? இந்தக் கேள்விக்கு நான் பதில் வேண்டுகிறேன். இதை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன்.

இந்த உத்தரவுக்கு, கீழே உள்ள அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடாது என்பதற்காகவே பல ஐ.ஜீ. பதவிகள் வாரி வாரி வழங்கப்படுகின்றன. மக்கள் வரிப்பணம் இதற்காகப் பாழடிக்கப்படுகிறது. இப்படி ரிடையர் ஆன திரு. ஸ்டிரேஸி அவர்களுக்கு வேலை தரப்படுகிறது. இன்னும் ரிடையரான அவர் ஒரு புதிய பதவியிலே டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்கின்ற பதவியிலிலே அமர்ந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே தொடர்ந்து ஐ. ஜி. க்கு உரிய யூனிபாரத்தை அணிந்து கொண்டிருக்கிறார். இதற்கு சட்டம் இடம் தருகிறதா என்றால் இல்லை. இதற்கு நம்முடைய மத்திய அரசாங்கம் யூனிபார்ம் அணிவதைப்பற்றி சில விதிகளைத் தயாரித்து இருக்கிறது. அந்த விதிகள் என்னவென்றால் Government of India have decided that there is no objection to permission being granted by State Governments to Indian Police Service Officers to wear after retirement uniforms of the rank last held by them immediately before retirement on ceremonial occasions and police parades. அதாவது, விசேஷமான நிகழ்ச்சிகளுக்கும் போலீஸ் பெரேட் போன்றவைகளுக்கும் ரிடையர் ஆன போலீஸ் ஆபீஸர்களுக்கு, அவர்களுக்கு அத்தகைய போலீஸ் யூனிபார்ம் அணிவதற்கு மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க உத்திரவு வழங்க அப்ஜக்ஷன் கிடையாது என்று சொல்லப்படுகிறதே தவிர அவர்கள் சாதாரண நாட்களில் இந்த யூனிபாரத்தை அணியலாம் என்பதற்கு எந்தவிதமான விதியும் கிடையாது. ஆகவே விதிமுறைகளுக்கு மாறாக இன்றைக்கு யூனிபாரத்தோடு அந்தப் பதவியிலே இருந்துகொண்டிருக்கிறார். நான் இந்தக் கண்டனத் தீர்மானத்திலே வலியுறுத்திக் கூறுவதெல்லாம் 10 நாட்களுக்குள் அல்லது ஒரு வாரத்திற்குள்ளாக ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் அந்த யூனிபார்ம் இல்லாமல் அந்த போலீஸ் பணியை நடத்த வேண்டுமே அல்லாமல் யூனிபாரத்துடன் நடத்துவாரேயானல் யார் கோர்ட்டிற்குப் போனாலும் அவர் அந்த யூனிபாரத்தை கழற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே கோர்ட்டிற்குப் போக வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை நான் இந்த அவைக்கு முதலமைச்சருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பஸ் ஊழல். பஸ்களை தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கை படிப்படியாக பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு தொடர்ந்து நிறைவேறி வந்திருக்கிறது.

[திரு. மு. கருணாநிதி] [1979 நவம்பர் 3

(முற்பகல் 11-20)

அண்ணாவிற்குப் பிறகு கழக ஆட்சிக்காலத்தில் பெரிய நிறுவனங்களையெல்லாம், டி. வி. எஸ்., இராமன் அன்ட் இராமன், எஸ். ஆர். வி. எஸ்., பொள்ளாச்சி மகாலிங்கத்தினுடைய கம்பெனி போன்ற நிறுவனங்களையெல்லாம் அன்றைக்கு நாட்டுடைமையாக ஆக்கி அவைகளை அரசின் சார்பிலே போக்குவரத்துக் கழகங்களாக மாற்றிய பெருமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. அதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எல்லா பஸ்களையும் தேசீயமயமாக்கிவிட வேண்டும். பொருளாதாரப் பற்றாக்குறையின் காரணமாக எல்லாவற்றையும் உடனடியாகச் செய்ய முடியாது என்றாலும், மாவட்ட வாரியாக அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டுமென்ற முறையை வகுத்து, முதலாவதாக நீலகிரி மாவட்டத்திலே உள்ள வழித்தடங்களை, பஸ்களை நாட்டுடைமையாக்குவது என்று முடிவெடுத்து, செய்தோம். பிறகு பஸ் முதலாளிகள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதி மன்றத்திலே அவர்களுடைய வழக்கு எடுபடவில்லை. அரசுக்குச் சார்பாகத் தீர்ப்பு கிடைத்தது. பிறகு அவர்கள் இன்றைக்குச் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள்.

இதற்கிடையிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாற்றப்பட்டு, இங்கே கவர்னருடைய ஆட்சி நடைபெற்ற காலத்தில் கவர்னர் அவர்கள் ஒரு உத்தரவை பிறப்பிக்கிறார்; சுகாதியா கவர்னராக இருந்தபொழுது 1976 ஆம் ஆண்டு ஒரு உத்தரவைப் பிறப்பிக்கிறார். ஒருவர் மூன்று பேருந்துகள் வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. ஆனால் அந்த உத்தரவில் தெளிவற்ற நிலை இருந்தது. உதாரணமாக அந்தத் தேதி, அதாவது 1-11-76 என்ற அந்த உத்தரவு இடப்பட்ட தேதியானால் அந்த 1-11-76-க்குள் ஒருவர் ஐந்து அல்லது ஆறு பேருந்துகளுக்கு உரிமையாளராக இருந்தால் மீதமுள்ள பேருந்துகளை என்ன செய்வது? இந்தக் கேள்விக்குச் சரியான விடை கிடைக்கவில்லை. அவைகளை அரசாங்கமே எடுத்துக்கொண்டால் பிரச்னை தீர்ந்து விடும். ஆனால் அரசாங்கத்தினுடைய, கவர்னர் போட்ட அந்த உத்தரவில், கவர்னர் ஆட்சியிலே அதுகுறித்துத் தெளிவாக எதுவும் சொல்லப்படவில்லை. எனவே, மூன்று பேருந்துகளுக்குமேல் வைத்து இருந்தவர்கள் தங்களுடைய உறவினர்களுடைய பெயருக்கு மாற்ற அதிகாரிகளுடைய உதவியை நாடினார்கள். அரசாங்கம் எந்த உத்தரவைப் போட்டும் அப்பொழுது தடுக்கவில்லை. எனவே, ஒரு 'பினாமி' ஏற்பாட்டுக்கு அந்த உத்தரவு ஏற்பாடு செய்தது என்றுதான் கருதப்பட்டது.

அதற்குப் பிறகு அண்மையில் தஞ்சை, மதுரை மாநகராட்சித் தேர்தல் நேரத்தில் நம்முடைய பஸ் முதலாளிகள் நம்முடைய முதலமைச்சரை, போக்குவரத்துத் துறை அமைச்சரை,



1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

இவர்களையெல்லாம் அணுகி, இந்த மூன்று என்று இருப்பதை 5 பஸ்களாக ஆக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்து, ஏறத்தாழ 70 இலட்சம் ரூபாய் அதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்திலே நான் பகிரங்கமாகச் சாட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிக் கொடுக்கப்பட்ட அந்தப் பணத்திற்கு உடனடியாக உத்தரவு வழங்கப்படவில்லை என்றாலும், இப்பொழுது அண்மையிலே அந்த மூன்று பஸ்கள் என்பது ஐந்து பஸ்களாக ஆக்கப்படும் என்கின்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவிலேகூட, இப்பொழுதுள்ள பஸ் முதலாளிகள் ஏறத்தாழ 70 இலட்சம், பிறகு கடைசியாக 30 இலட்சம் என்று கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாயை அவர்களுக்குக் கொட்டித் தீர்த்து விட்டார்கள், கொடுத்து விட்டார்கள்.

என்றாலும்கூட, அவர்களுக்கு இன்னும் குறைபாடு நீங்கவில்லை. அவர்களுக்கிருக்கின்ற குறைபாடெல்லாம், ஏற்கனவே உள்ள தற்காலிக வழித்தடங்களில் போக்குவரத்துக் கழகங்கள் அப்ஜெக்ஷன்ஸ் செய்திருக்கின்றன, மற்றவர்களுக்குத் தரக்கூடாது என்று. அது மாத்திரம் அல்லாமல், அதேநேரத்தில் போக்குவரத்துக் கழகங்கள், நம்முடைய கட்டபொம்மன், பெரியார், அண்ணா, பல்லவன், சேர, சோழ, பாண்டியன் ஆகிய இத்தகைய போக்குவரத்துக் கழகங்களெல்லாம் அங்கே வழித்தடங்களுக்கு மனுச் செய்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது பஸ் முதலாளிகளினுடைய கோரிக்கை, நீங்கள் இந்த அப்ஜெக்ஷனை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும்; இந்த வழித்தடங்களுக்கு போட்டிருக்கின்ற மனுக்களை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று. அப்படியானால் மேலும் ஒரு கோடி ரூபாய் இதோ தயார் என்று வசூலித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்காகத்தான் இப்பொழுது என்ன ஏற்பாடு நடைபெறுகிறது என்றால். உதாரணமாக, பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ், சென்னையிலிருந்து திண்டிவனம். திருவண்ணாமலை, அரூர் வழியாகச் சேலம் போவதாக வைத்துக் கொள்வோம். அதற்கு இப்பொழுது செய்யப்படுகின்ற ஏற்பாடு தந்திரமான ஏற்பாடு என்னவென்றால், நாங்கள் சென்னையிலேயிருந்து சேலத்திற்கு எங்களுடைய போக்குவரத்துக் கழகத்தினுடைய பஸ்ஸை விட்டு விடுகிறோம். இடையிலே திருவண்ணாமலையிலேயிருந்து அரூர் வரை ஒருவருக்கும், திண்டிவனத்திலிருந்து திருவண்ணாமலை வரை இன்னொருவருக்கும் என்று கூறுபோட்டு, பங்கு போட்டு, ஆங்காங்கு அந்த பஸ் முதலாளிகளுக்குச் சலுகைகள் செய்கிறோம் என்று பேசப்பட்டு, அதற்குப் பெருந்தொகை இலஞ்சமாக வாங்குவதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. மு. கருணாநிதி] [1979 நவம்பர் 3

இன்னொரு உறுதியையும் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டிருப்பது, சுப்ரீம் கோர்ட்டிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே தேசிய மயமாக்க வேண்டுமென்று கொண்டுவரப்பட்ட திட்டத்தை எதிர்த்து முதலாளிகளால் போடப்பட்டிருக்கின்ற அந்த வழக்கில் வலியுறுத்துவது இல்லை என்ற அளவிற்கு நீங்கள் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இது தேசிய மயத்திட்டம் எந்த அளவிற்கு இன்றைக்கு செயல்படுகிறது என்பதற்குத் தக்க உதாரணம் ஆகும். ஏனென்றால், குதிரைப் பந்தயத்தைத் தேசிய மயமாக்கப்போவதாகச் சொன்ன நம்முடைய முதலமைச்சரவர்கள் இன்றைக்குக் குதிரைப்பந்தயம் எப்படிவளரலாம், எந்த வகையிலே வளம் பெறலாம், குதிரைப் பந்தயத்திலே இருக்கின்ற முதலாளிகள் வளம் பெறலாம் என்ற அளவிற்கு அவர்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தால் தேசிய மயமாகும் திட்டங்கள் எந்தக் கதிக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றன என்பதற்காகத்தான் இதை எடுத்துச் சொன்னேன்.

மின்சார இலாகாவிலே ஒன்று. தமிழ்நாடு மின்சார இலாகா எப்படி திறமையாகச் செயல்படவில்லையென்பதை இப்பொழுது காபந்து சர்க்கார்—கூட்டணி அரசிலே இருக்கிற மத்திய அரசினுடைய மின்துறை அமைச்சர் கே. சி. பந்த் அவர்கள் சமீபத்திலே மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

பொதுவாக, எவ்வளவு சதவீதம் வெட்டு என்று சொல்லாமல் இருப்பதில் நம்முடைய மின் துறை அமைச்சர் மிகத் திறமைசாலியாக இருக்கிறார் என்றாலும் அடிக்கடி மின் வெட்டால் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். திடீரென்று 1 மணி நேரம் கரன்ட் வராது. அந்த ஊரிலே கேட்டால்' 'இந்த ஊரிலே இப்படித்தான் சார்' என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு இன்றைக்கு விவசாயிகளும் மற்றவர்களும் கஷ்டப்படுகிற சூழ்நிலை இருக்கிறது.

அதே நேரத்தில், லோயர் மேட்டூரில் 'ஒரு மின் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. அதிலே மிகப் பெரிய ஊழலுக்கான வித்திடப்பட்டிருக்கிறது என்பதை இந்தக் கண்டனத் தீர்மானத்தில் சுட்டிக்காட்டுவது என்னுடைய பெருங் கடமையாகும்.

இந்த லோயர் மேட்டூர் மின் திட்டத்திற்காக உலகெங்கும் இருந்தும் 'குளோபல் டெண்டர்' கோரப்பட்டிருக்கிறது. அதிலே பல்வேறு நாடுகளுடைய, உலகப் பிரசித்திபெற்ற கம்பெனிகள் டென்டர் போட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு கம்பெனி கூட, கனடா நாட்டு கொலாபரேஷனோடு



1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

ஒரு டென்டரைப் போட்டிருக்கிறது. ஆனால் என்ன நடந்தது என்றால், குறைந்த டெண்டருக்குப் பதிலாக யார் மிக அதிக டெண்டர் போட்டிருக்கிறார்களோ, அவர்களைச் சிபாரிசு செய்து இப்பொழுது மத்திய அரசுக்கு அந்த டெண்டரை அனுப்பியிருக்கிறார்கள். ஒரு ஜப்பானிய கம்பெனி ஃப்யூஜி எலக்டிரிக்கல்ஸ் என்று அதற்குப் பெயர்; அவர்கள் 30 கோடி ரூபாய்க்கு டெண்டர் போட்டிருக்கிறார்கள். ஆனால், ஃப்ரெஞ்சு கம்பெனி, டென்டர் வரிசையிலே 10-வதாக இருக்கிறது 47 கோடி ரூபாய்க்கு டெண்டர் போட்டிருக்கிறது தமிழ்நாடு மின்சார வாரியம் யாருக்குப் பரிந்துரை செய்ய செய்ய வேண்டும்? 30 கோடி ரூபாய் போட்ட ஜப்பானிய கம்பெனிக்கு அல்லவா? செய்யவில்லை. அதற்கு மாறாக, 47 கோடி ரூபாய், 17 கோடி ரூபாய் அதிகமாக டெண்டர் போட்டிருக்கிற ஃப்ரெஞ்சு கம்பெனிக்கு சிபாரிசு செய்து பரிந் துரை செய்து அனுப்பியிருக்கிறது. அது, இரண்டாவது கட்டமாக, பொதுப் பணித்துறைக்கு அந்த ஃபைல் வருகிறது. அந்தத் துறை அதையே சிபாரிசு செய்து இப்பொழுது மத்திய அரசு மின் துறை இலாகாவிற்கு அனுப்பியிருக்கிறது. அண்மையிலே, நம்முடைய முதலமைச்சருடைய இதயத்திலே இடம் பெற்றிருக்கிற, பயணக் கட்டுரையிலே இடம் பெற்றிருக்கிற ஆசிரியர் ஒருவர் பாரிஸ் நாடு வரையிலும சென்று பயணக் கட்டுரை திடீரென்று எழுதியிருப்பதற்கான காரணமும் மர்மமும் இதிலே அடங்கியிருக்கிறது என்பதையும் நான் குற்றமாகச் சாட்ட விரும்புகிறேன். தமிழக அரசு வேண்டுமென்றே டெண்டர் தொகையை உயர்த்தி, பொதுமக்களுடைய வரிப் பணத்தை விரயம் செய்கிறது என்ற குற்றச்சாட்டையும் நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன், மத்திய அரசு இந்த டெண்டரை அங்கீகாரம் செய்யக் கூடாது. ஏனென்றால், 17 கோடி ரூபாய் அதிகமான ஒரு டெண்டர். அதை எப்படியாவது அங்கீகாரம் செய்ய வேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்திக் கொண்டு வருகிறது. மத்தியில் கூட்டணி அரசு இருக்கிறது என்ற காரணத்தால் அதற்கு அங்கீகாரம் செய்யக் கூடாது மத்திய அரசு என்று இந்த மாமன்றத்தின் சார்பாக நான் கேட்டுக் கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக ஒரு குற்றச்சாட்டோடு, ஒரு நீண்ட குற்றச் சாட்டோடு என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். கடந்த முறை நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் பொழுது நான் பேசும் பொழுது கப்பல்கள் வாங்குகிற பேரத்திலே பெரும் ஊழல்கள் நடைபெற இருந்தன என்பதை குறிப்பிட்டு $2\frac{1}{2}$ கோடி ரூபாயிலேயிருந்து 3 கோடி ரூபாய்அளவிற்கு கமிஷன் என்கிற பெயரால் லஞ்ச ஊழல் நடைபெற இருந்தது என்பதையும் தக்க நேரத்தில் திராவிட முன்னேற்றக்கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,

[திரு. மு. கருணாநிதி] [1979 நவம்பர் 3

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு நடத்த இருந்த ஊழல் அறிவிக்கப்பட்டதன் காரணமாக அந்தப் பேரம் நிறுத்தப்பட்டது என்பதையும் நான் சுட்டிக் காட்டினேன், பேரம் நிறுத்தப்பட்டாலும் கூட தி. மு. க., சி. பி. ஐ., சி. பி. எம். நாடாளுமன்ற உறுப்பினர் கள் கொடுத்த புகார் மீது மத்திய அரசு விசாரணைகளை தொடங்காமல் இல்லை, அந்த விசாரணைகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுதான் தமிழ்நாட்டிலே அரசியலை கூட குழப்பத்திலே ஆழ்த்தியிருக்கிறது என்பதற்கு மிக முக்கியமான காரணம். அவைகள், அந்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கிடையிலே, பல்கேரியாவிலேயிருந்து 3 கப்பல்களை வாங்கப் போவதாக தமிழ்நாடு அரசு தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

[முற்பகல் 11–30]

மேற்கு ஜெர்மனியிலே கப்பல்களை தமிழக அரசு வாங்கவும், இடைத்தரகர் மூலமாக ஊழல் நடத்தவும் திட்டமிடப்பட்டது. சேஷசாயி பேப்பர் மில்லினுடைய அதிபர், சிம்கோ மீட்டர் சேஷசாயி பேப்பர் மில்ஸ் (இரண்டும் தொழிலாளர்களுக்கு மிக அனுசரணையாக இருக்கிற ஒரு தொழில் அதிபரைக் கொண்ட இரண்டு ஸ்தாபனங்கள் என்பதை நானும் நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் அறிவார்கள்.) விஸ்வநாதன் மேற்கு ஜெர்மனியுடன் நடைபெற்றிருக்கிற கப்பல் பேரத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அப்பொழுது முதலமைச்சர் எந்தப் பதிலும் சொல்லாவிட்டாலும் கூட நான் குறிப்பிட்டதற்கான ஆதாரம் இங்கே என்னிடம் இருக்கிறது. அவைகளை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன் 27–10–78அன்று kind attention– என்று போட்டு சென்னை பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பொரேஷன் டெக்னிக்கல் மானேஜர் திரு. அனந்தராமனுக்கு ஒரு டெலக்ஸ் வருகிறது. எங்கே இருந்து வருகிறது. யார் கொடுத்த டெலக்ஸ் தெரியுமா? திரு. எஸ். கே. நடராசன் என்பவர் அந்த டெலக்ஸை பூம்புகார் கப்பல் கார்ப்பரேஷனுக்கு கொடுக்கிறார். யார் அந்த எஸ். கே. நடராஜன் அவர்தான் சிம்கோ மீட்டர்ஸ், சேஷசாயி பேப்பர் மில்ஸ், மேனேஜிங்டைரக்டர் விஸ்வநாதனின் செயலாளர். இப்பொழுது புரியுமென்று நம்புகிறேன், விஸ்வநாதனுக்கும் பழைய மேற்கு ஜெர்மனி கப்டல் வாங்குவதற்கும் உள்ள உறவு என்னவென்று. "The following message has been received from our collaborators Messrs. Blome and Vas, Humburg this morning", என்று இந்த செய்தியைக் கொடுத்து இருக்கிறார். இந்த செய்தியை ஏன் சேஷசாயி கம்பெனி விஸ்வநாதனின் செயலாளர் நடராஜனுக்கு அறிவிக்க வேண்டும்.



1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

The following message has been received from our collaborators Messrs. Blome and Vas Humburg this morning

புளோம் அண்ட் வாஸ் என்பவர்கள் அந்த காகிதக் கம்பெனியுடைய தொழிற்சாலையினுடைய கொலாபரேட்டர்ஸ். அவர்களிடம் கப்பல் வாங்குவதில் விஸ்வநாதனுக்கு என்ன அக்கறை. கப்பல் வாங்குவது தமிழக அரசினுடைய பூம்புகார் போக்குவரத்துக் கழகம். அதிலே விஸ்வநாதனுடைய செயலாளர் நடராஜனுக்கு இவ்வளவு அக்கறை வருவானேன். அவர் ஏன் பூம்புகார் கார்ப்பொரேஷனுக்கு இதைப் பற்றி எழுத வேண்டும் அவருக்கு வந்த டெலக்ஸ் செய்தி இதுபற்றிய ஆதாரம் நெம்பர் 1.

Next, Attention of Mr. Natarajan-Urgent 6—11—78

மறுபடியும் ப்ளோம் அண்ட் வாஸ் கம்பெனியிடம் இருந்து டெலக்ஸ் வருகிறது. ஹம்பர்க்கிருந்து வருகிறது.

After long discussion with S. V.

நீண்ட உரையாடல். யாரோடு. எஸ். விஸ்வநாதனோடு, அவர் நியூயார்க்கிலே இருக்கிறார். நியூயார்க்கிலே இருக்கிற விஸ்வநாதனுக்கு மேற்கு ஜெர்மனி கப்பல் கம்பெனி கொடுக்கிறது. நீண்ட விவாதம் நடக்கிறது. விஸ்வநாதன் நியூயார்க்கிலே இருக்கிற போது நம்முடைய முதலமைச்சர் அவர்களும் நியூயார்க்கிலே இருக்கிறார்கள். ப்ளும் அண்ட் வாஸ் கம்பெனி என்ன தெரிவிக்கிறார்கள் தெரியுமா

After long discussion with S. Viswanathan, New York I yesterday tried for hours to get through to Mr. Singh

மிஸ்டர் சிங் என்பவர் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பொரேஷனின் தலைவர்.

"Yesterday I tried for hours to get through to Mr. Singh, Poompuhar by telex and eventually sent a cable, but have not so for confirmation of that cable arrived. Can you check and inform please."

அங்கே அதைப் பார்த்து அந்த விஸ்வநாதன் பேசிய பிறகு பல முறை மிஸ்டர் சிங், சேர்மன் ஆப் தி பூம்புகார் கார்ப்பொரேஷன். அவரிடம் பேச முயற்சித்தோம். முடியவில்லை. எனவே டெலக்ஸ் மூலமாக செய்தி அனுப்பியிருக்கிறார்கள். உடனடியாக நீங்களாவது அவரோடு தொடர்பு கொண்டு அவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நடராஜனுக்கு ஹாம்பர்கிலிருந்து வருகிறது என்றால் விஸ்வநாதனுக்கும் இந்த மேற்கு ஜெர்மனி நாட்டு கப்பல் வாங்குவதாக இருந்த கப்பல் பேரத்திற்கும் எவ்வளவு தொடர்பு என்று நான் முன்பு சொன்ன குற்றச் சாட்டிற்கு இது ஆதாரம் இல்லையா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

[திரு. மு. கருணாநிதி] [1979 நவம்பர் 3

இதற்குப் பிறகு முதலமைச்சர் அன்றைக்கு சட்டமன்றத்திலே கூறியபடி பல்கேரியாவில் இருந்து கப்பல் வாங்க உத்தேசிக்கப் படுகிறது. அது ஒரு பெரிய வரலாறு பல்கேரியாவிலிருந்து கப்பல் வாங்குவதற்கான கடிதப் போக்குவரத்து 3—2—79 அன்று ஆரம்பம் ஆகிறது.

பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பொரேஷன் சேர்மன், எம். டி., எச். எம். சிங், போக்குவரத்துத் துறைச் செயலாளர் திரு. பாங்கோவுக்கு எழுதுகிறார்கள். அந்தக் கடிதத்திலே எழுதியிருக்கிறார். ''பல்கேரியாவிலிருந்து வாங்க வேண்டிய கப்பல் 10·5 மில்லியன் டால (ரூ. 8.40லட்சம்) ரிலிருந்து 10.75 மில்லியன் டாலர் (ரூ. 8.60லட்சம்) வரையிலே விலை கொடுக் கலாம் என்றும் சேர்மன் பேச்சு வார்த்தைகளை 10.5 மில்லியன் டாலரில் (ரூ. 8.40லட்சம்) இருந்து விலையைத் தொடங்கலாம்'' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு ஆதாரம் இருக்கிறது இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற 3வது ஆதாரத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

எச். எம். சிங். எழுதியுள்ள அவரது கடிதத்தில் சி. வி சுப்பிரமணியம் என்பவர் பெயர் குறிப்பிடப்பட்டு இருக்கிறது, சுப்பி, சுப்பி என்று செல்லமாக அழைக்கப்படுகின்ற அவர் எப்படி மத்தியில் பாலா, பாலா என்று செல்லமாக அழைக்கப்படும் பாலசுப்பிரமணியம் என்று ஒருவர் இருக்கிறாரோ- அதைப்போல் சுப்பி, சுப்பி என்று செல்லமாக அழைக்கப்படுகிற சுப்பிரமணியம் என்பவர் மெக்கனாஸ் அண்ட் மெக்கனீஸ் என்கிற ஷிப்பிங் ப்ரொக்கர்ஸ் கம்பெனியின் எக்சிகியூட்டிவ்வாக சில காலம் இருந்தவர். அது மாத்திரம் அல்ல. சென்னை நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் சாலையில் உள்ள சௌத் இந்தியா எக்ஸ்போர்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட்டுடன் தொடர்பு கொண்டவர். எல்லாவற்றையும் விட சித்ரா கிருஷ்ணசாமிக்கு அருமை நண்பர். இதிலிருந்து எல்லாம் புரிந்து கொள்ளலாம், இந்த சுப்பி என்கிற சுப்பிரமணியம் தான் பல்கேரியா கப்பல் தளத்தின் பிரதிநிதியாக இந்தப் பேச்சு வார்த்தைகளிலே உள்ளே நுழைகிறார். 5-2-79-ல் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் சென்னையில் இருந்து சி. வி. சுப்பிரமணியம் என்கிற சுப்பிக்கு ஒரு டெலக்ஸ அனுப்புகிறது. அந்த டெலக்சில் 10.75 மில்லியன் டாலருக்கு, அதாவது 8 கோடியே 60 லட்சம் ருபாய்க்கு கப்பல் ஒன்று வாங்கலாம் என்ற உறுதியான 'ஆபர்' கொடுக்கிறது. அதற்கான ஆதாரம், இதோ இந்த டெலக்ஸ்.

அதற்கடுத்தாற்போல், அந்தக் கப்பலின் விலை 11 மில்லியன் டாலர் என்று அயல் நாட்டு தரகர் கம்பெனி விளம்பரப்படுத் தியது. எங்களுக்கு 10.75 மில்லியன் டாலருக்குத் தருகிறோ என்று சொல்லிவிட்டு, 11 மில்லியன் டாலர் என்று விளம்பர



1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

படுத்தியிருக்கிறீர்களே, என்று சுப்பி என்கிற சுப்பிரமணியம் கேட்கிறார். உடனடியாக பல்கேரியாவில் இருந்து அந்தக் கம்பெனிகாரர்கள் பதில் தருகிறார்கள். நீங்கள் அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். நாங்கள் உங்களுக்குச் சொன்ன விலைக்குத் தருகிறோம். நாங்கள் விளம்பரம் வேறு நாட்டுக் காரர்களுக்கு செய்தாலும் கூட உங்களுக்குக் கொடுப்பது நாங்கள் சொன்ன அதே 10.75 மில்லியன் டாலருக்குத் தருகிறோம் என்று எழுதுகிற கடிதம் சுப்பிரமணியம் அவர்களால். சுப்பி என்கிற சுப்பிரமணியம் அவர்களால் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்கு 6-2-79-ல் தெரிவிக்கப்பட்டது. அதற்கான ஆதாரம் எண் 5.

பிறகு, 6-2-79 அன்று போக்குவரத்துத் துறை செயலாளர் பாங்கோ, ஐ. ஏ. எஸ்., அவர்கள் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்ப ரேஷன் சேர்மன் எச். எம். சிங் அவர்களுக்கு எழுதிய கடிதம். சுப்பி சம்பந்தப்பட்ட மெக்கானஸ் அண்ட் மெக்கனீஸ் கம்பெனி மூலம் 10.75 மில்லியன் டாலருக்கு அந்தக் கப்பலை வாங்கலாம் என்று அனுமதி தந்து கடிதம் எழுதுகிறார். இதோ அதற்கான ஆதாரம்.

அதே நாளில் சுப்பி சம்பந்தப்பட்ட அதே மெக்கனாஸ் அண்ட் மெக்கனீஸ் கம்பெனி 10.75 மில்லியன் டாலர் விலையை திடீரென்று 11.75 மில்லியன் டாலர் என்று அதாவது 9 கோடியே 40 லட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டு பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்கு அறிவிக்கிறது ஏன்? 10.75 மில்லியன் டாலருக்கு மேல் நீங்கள் வாங்கத் தேவை இல்லை, நாங்கள் 11 மில்லியன் டாலர் என்று அறிவித்து இருந்தாலும் 10.75 மில்லியன் டாலருக்குத் தருகிறோம் என்று அறுதியிட்டு, உறுதியிட்டு கூறிய அந்தக் கம்பெனி, திடீரென்று 11.75 மில்லியன் டாலர் என்று ஒரு கப்பலுக்கு விலை நிர்ணயிக்க வேண்டிய அவசியம் என்ன? இங்கே தான் சுப்பி, சித்ரா கிருஷ்ண சாமி அவர்களுடைய தந்திரங்கள். அவர்களுடைய மாய வலைகள் பின்னப்படுகின்றன. இந்த விலை உயர்வைப் பார்த்து வியப்படைந்த பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் சேர்மன் எச். எம். சிங், ஐ. ஏ. எஸ்., 7-ம் தேதி பாங்கோவிற்கு எழுதியுள்ள கடிதத்தில்....

In view of this, it is not clear why Messrs, Mckhinanz had quoted 11.75 milllon dollars for a gearless vessel..

ஒரு கியர்லெஸ் வெஸ்ஸல்லுக்கு 11.75 மில்லியன் டாலர் என்று ஏன் அந்தக் கம்பெனிகாரர்கள் விலையை உயர்த்தியிருக்கிறார்கள் என்று ஆச்சர்யப்படுகிறார்: அதே கம்பெனிகாரர்கள் ஏன் விலையை உயர்த்தினார்கள் என்று நானும் ஆச்சர்யப்படுகிறேன் நீங்களும் ஆச்சர்யப்படுகிறீர்கள். நம்மை விட திரு. எச். எம். சிங். ஆச்சயரிப்படுகிறாரா இல்லையா என்பதற்கு இந்தக்

கடிதத்தை நான் சான்றாக வைக்கிறேன். அவர் இதில் தன் ஆச்சரியத்தைத் தெரிவிக்கிறார். ஏன் அந்த விலைக்கு உயர்த்தினார்கள்?

7-2-79-க்கு அடுத்த நாள் 11.75 மில்லியன் டாலர் அதாவது 9 கோடியே 40 லட்சம் ரூபாய் என்பதை 13.5. மில்லியன் டாலர் அதாவது 10 கோடியே 80 லட்சம் ரூபாய் அளவிற்கு உயர்த்தி அந்தத் தகவலை அதே மெக்கானாஸ் அண்ட் மெக்கன்சி கம்பெனி எச். எம். சிங் அவர்களுக்கு டெலக்ஸ் அனுப்புகிறார்கள். இங்கே பாருங்கள் வேடிக்கையை. 10.75 மில்லியன் டாலருக்கு கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு அதை வாங்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டு பிறகு எக்காரணத்தை முன்னிட்டும் 11 மில்லியன் டாலராக மாறாது என்று உறுதி அளிக்கப்பட்டு பிறகு 11.75 மில்லியன் டாலராக அந்தக் கம்பெனிக்கு விலை பெருகி 3-வது நாள் 13.5 மில்லியன் டாலர் என்று அது மாறுகிறது என்றால் மாறுகின்ற காரணத்தால் விலையை உயர்த்திக் கேட்கின்ற காரணத்தால், அதிகமான கமிஷன் ஏறத்தாழ 4 கோடி ரூபாய்க்கு இடையில் உள்ளவர்கள் சுருட்டி தாங்களே எடுத்துக் கொண்டது போக முதலமைச்சருக்கும் பங்கு போட்டுக் கொடுக்க ஒரு பெரிய சதித் திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[முற்பகல் 11-40]

ஆனால் இதை எச். எம். சிங் ஏற்றுக் கொண்டாரா என்றால் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சில பாயிண்ட்களைக் குறிப்பிடுகிறார். என்னகுறிப்பிடுகிறார்? இந்த பூம்புகார் கார்ப்பரேஷன் சேர்மென் இதை எல்லாம் ஆராய்ச்சி செய்து, பிளஸ் பாயிண்ட் மைனஸ் பாயின்ட் இவைகளை எல்லாம் பல்கேரியா கப்பலோடு, ஏற்கெனவே ஜெர்மனியிலே விலை பேசிய கப்பலோடு ஒப்பிட்டு; 8-2-1979-ம் தேதிய கடிதத்திலே குறிப்பிடுகிறார்.

இந்த விலையை மத்திய அரசு ஒத்துக் கொள்ளாது. மேலும் ஏற்கெனவே நாம் மேற்கு ஜெர்மானியிலிருந்து வாங்கியிருந்த பால்டிகா டைப் கப்பலோடு ஒப்பிட்டு, அதனுடைய இயந்திரங்களும் மற்றவைகளும்—அவைகளை விட தரக் குறைவானவை என்று குறிப்பிட்டு, அந்த விலைக்கு வாங்கக் கூடாது என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

"In the light of the above, Government of India may not allow us to purchase the vessels at a higher price when we negotiated for the Baltika type vessels, particularly when the machinery in the engine room has distinct negative point when compared to the Baltica type vessels.'





இவ்வாறு எச். எம். சிங். பாங்கோ அவர்களுக்கு இதன் பின்னால் மறைந்து கிடக்கும் ஊழலை மிக நாசூக்காக வெளிப்படுத்திக் காட்டி இருக்கின்றார். அதற்கான ஆதாரம், அவர் எழுதிக் கொடுத்ததற்கான ஆதாரமாக இந்த 8-வது ஆதாரத்தை உங்கள் முன்னால் நான் வைக்கிறேன்.

இதற்குப் பின்னால் மார்ச் மாதம் கூடிய அமைச்சரவைக் கூட்டம். மார்ச் மாதத்திலே நம்முடைய காபினட் கூடுகிறது. அதிலே 13 மில்லியன் டாலருக்கு, 10 கோடியே 40 இலட்சம் ருபாய்க்கு கப்பலை வாங்கலாம் என்று இந்த அரசு முடிவு செய்கிறது. இப்படி காபினட் எடுத்து முடிவு உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்டால், பழைய சுப்பி வருகிறார். சுப்பி என்கிற சப்பிரமணியம் ஐரோப்பாவுக்கு டெலக்ஸ் கொடுக்கிறார். அதிலே சொல்கிறார். 'பல்கேரியா பேரத்தை தமிழ்நாடு அரசு அப்ரூவ் செய்து விட்டதை அறிவிக்க மகிழ்கிறேன் ஆக, தமிழ்நாடு அரசு அப்ரூவ் செய்து விட்டது சுப்பி என்கிற சுப்பிரமணியத்தால் பல்கேரியாவுக்கு உடனடியாகத் தெரிவிக்கப் படுகிறது.

'இது மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது'. ஏன் இருக்காது? 10 மில்லியனை 13 மில்லியனாக ஆக்குவது கஷ்டமான காரியமாக இருக்காதா?

It was a difficult task

அதற்கு கொஞ்சம் வருத்தமும் படுகிறார், பாருங்கள்

"It has b en approved only at 13 million U. S. dollars, but I have assur d them that with this approval and when Bango reaches Warna to sign contract Mr. P.

மிஸ்டர் பி என்பவர் அங்கே உள்ள ஒருவர்;—

will definitely reconsider the situation and consider increase points."

என்னய்யா வேடிக்கை? பாயின்ட்களை குறைப்பார் என்று எண்ணுகிறேன் என்று ஒரு இடைத் தரகர் சொல்வதற்குப் பதிலாக சொல்கிறார்.

Mr. P. will definitely reconsider the situation and consider increase points. I am still trying to get authority for 13.1 million dollars.

தமிழ்நாடு அரசு 13 மில்லியன் டாலருக்கு வாங்கலாம் என்று முடிவு எடுக்கிறது. ஆனால் இடைத்தரகராக இருக்கிற சுப்பி, நான் எப்படியும் 13.1 மில்லியன் டாலர் என்கிற விலைக்கு

அதைக் கொண்டு வருகிறேன் என்று அவர் குறிப்பிடுகிறார். குறிப்பிட்டு விட்டு, அதே டெலக்சிலே மேலும் குறிப்பிடுகிறார், பாங்கோ வந்த பிறகு கையொப்பமிடுகிற வைபவத்திற்கு. கையொப்பம் இடுகிற வைபவத்தை சுப்பிரமணியம் அந்த டெலக்சிலே 'சிக்னேச்சர் ஜெர்மனி, என்று குறிப்பிடுகிறார். எனக்காக மிஸ்டர் 'பி' காத்திருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கையொப்பம் இடுகிற விழா இருந்தாலும் இல்லாவிட்டாலும்,

ceremony or no ceremony-please try best for further points to saves my face.

இன்னும் பாயின்ட்களை உயர்த்தி, என்னைக் காப்பாற்றுங்கள்: என்னுடைய முகத்திலே கரியைப் பூசாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் அதிக விலை கொடுத்து. அதிக கமிஷன் பெறலாம் என்று வாக்களித்து விட்டேன். அதாவது என்னுடைய மானத்தைக் காப்பாற்ற இன்னும் கொஞ்சம் விலையை உயர்த்துங்கள் என்று சுப்பி அவருக்குத் தெரிவிக்கிறார்

அதைத் தொடர்ந்து மீண்டும் அனுப்பப்பட்ட டெலக்சில் சுப்பி உடனே புறப்பட்டு, 22 அன்று இரவு பல்கேரியாவுக்கு வருவதாகவும், மிஸ்டர் 'பி' என்பவர் யாருக்கும் தெரியாமல் அவரை சந்தித்து, ஒரு பிரைவேட் விவாதம், விமான நிலையத்திலோ, ஓட்டலிலோ நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறார். இது தமிழ்நாட்டிலிருந்து செல்லுகின்ற அதிகாரிகளுக்குத் தெரியாமல் நடக்க வேண்டும் என்பதுதான் அதற்கு அர்த்தம். அப்படிக் கொடுக்கப்பட்ட டெலக்சுக்கு ஆதாரம் நம்பர் 9.

அதே 20-3-1979-ல் சுப்பி மூலம் அனுப்பப்படுகிற இன்னொரு டெலக்சில் திடுக்கிடத்தக்க வாசகங்கள் அமைந்து உள்ளன. ஊழலின் பாணி மர்ம பாஷையில் இங்கே பேசப்படுகிறது.

That friends will not agree to doing certain adjustment basis future deals, etc.

அதாவது நண்பர்கள் எதிர்கால பேரங்களில் அட்ஜெஸ்ட் செய்ய ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அந்த நண்பர்கள் யார் தெரிகிறது அல்லவா? நான் முதலிலே சொன்ன அந்தக் குழு, கமிஷன் வாங்குகிற குழு. முதலமைச்சர் உள்ளிட்ட, சுப்பி குழு உள்ளிட்ட, சித்ரா கிருஷ்ணசாமி உள்ளிட்ட அந்தக் குழு.

That friends will not agree to doing certain adjustment basis ofture deals, etc.
என்று குறிப்பிடுகிறார்

Friends-they prefer to finalise everything- எவ்ரிதிங் என்றால் சம்திங் they prefer to finaltise everything now and once Mr. P. uenfirms to you the best





அதாவது இப்பொழுதே பேரம் முடிந்தாக வேண்டும் அடுத்தது டீம்ஹெட், டீம் ஹெட் என்றால் அதிகாரிகளுடைய குழு தலைவர் வருகிறார்.''

Team Head will be authorised by Tamil Nadu Government as an order to increase by .1, but Mr. P. must stick to it, not melt as he did last time.

அவர் கம்யூனிஸ்ட் நாட்டிலே இருப்பவர், அந்த பி. என்பவர். ஆக இப்படிப்பட்ட விஷயங்களுக்கு ஈடு கொடுக்கவோ அல்லது வளைந்துக் கொடுக்கவோ முடியாத ஒருவர். ஆனால் அவர் எங்கே வளைந்துக் கொடுத்து விடப்போகிறாரோ, விலையை குறைப்பதற்கு என்ற கவலை சுப்பிக்கு ஏற்படுகிறது. இதனால் சொல்கிறார்.

Team Head will be authorised by Tamil Nadu Government as an order to increased by .1, but Mr. P. must stick to i.—

.1 மில்லியன் டாலர் அதிக விலைக்கு மிஸ்டர் 'பி' பல்கேரிய கப்பல் அதிகாரி ஸ்டிரிக்டாக இருக்க வேண்டும். வளைந்து கொடுத்து விடக் கூடாது.

not melt as he did last time

அந்த பாயின்ட் 1 மில்லியன் டாலர் விலைக்கே தமிழ்நாடு அரசு உத்தரவு கொடுக்கும். ஆனால் 'பி' ஸ்டாண்டர்டாக, ஸ்டிரிக்டாக இருக்க வேண்டும். சென்ற முறை போல் மனம் இளகி விடக் கூடாது என்பதற்கான மொழி பெயர்ப்பு கடிதம் இது. அந்த டெலக்ஸுக்கான ஆதாரமாக இந்தக் கடிதத்தை 10 வதாக வைக்கிறேன்.

அதற்குப் பிறகு 13.1க்குப் பதிலாக 13.2 இருந்தாலும் கொடுக்கலாம் என்று முதலமைச்சர் பாங்கோவிற்கு இன்னொரு அனுமதி கொடுக்கிறார். 13.1 என்பது நிர்ணயிக்கப்பட்ட விலை. அந்த விலையை வைத்து விடலாம் என்று பேசி பிறகு 13.2 டாலர் கூட தரலாம் என்று பாங்கோவிற்கு அனுமதி கொடுக்கிறார். அதற்கு என்ன ஆதாரம். திரு. பாங்கோ உயிரோடு இல்லாவிட்டாலும் ஒரு டெலக்ஸ் சாட்சி சொல்கிறது.

''Please treat this strictly confidential and do not divulge to Mr. P. the fact that Tamil Nadu Government have authorised the Team Head to sign the contract, if necessary at 11.2 million dollars. But for the time being please play it cool with Mr. P. until I get an opportunity to talk to him. By any chance, if my arrival is delayed due to reasons beyoned control Mr.P. should continue to maintain the price is 13.2 and he should not sign contract till I see him- This is of profound importance. Please do not miss o this.',

[திரு. மு. கருணாநிதி] [1979 நவம்பர் 3

இந்த டெலக்ஸை 1 வது ஆதாரமாக வைக்கிறேன். இந்த டெலக்ஸ்படி எவ்ரிதிங் அதாவது சம்திங் முடிந்து விடுகிறது. 1 கோடி ரூபாய்க்கு பேசப்பட்டு முன் பணம் கொடுக்கப்பட்டு விடுகிறது.

இந்த நிலையில் தமிழ்நாடு அரசு அதிகாரிகளுடைய தூது குழு பல்கேரியா சென்று அடைகிறது. இந்த சம்பவங்கள் எதுவும் அவர்களுக்குத் தெரியாது. இடையிலே நடைபெற்ற பேரங்கள். சுப்பி, சித்ரா கிருஷ்ணசாமி குழு நடத்திய பேரங்கள் எல்லாம் தமிழகத்திலிருந்து சென்றிருக்கிற அதிகாரிகளுக்குத் தெரியாது. மிஸ்டர் 'பி' என்று சொல்லப்படுகிற மர்மமான பெயர், அந்த மிஸடர் 'பி' பல்கேரியா கப்பல் கம்பெனியில் கையெழுத்திடும் அதிகாரி. அவரோடு இவர்கள் பேசியிருக்கிறார்கள். ஏற்கெனவே மனம் இளக கூடியவர் என்று சுப்பியே சொல்லியிருக்கிறாரே, அவரோடு அதிகாரிகள் கலந்து பேசி இன்னும் கொஞ்சம் குறைக்கச் சொல்ல கேட்டிருக்கிறார்கள், என்றாலும் 3 கப்பல்களுக்கும் 39 மில்லியன் டாலர் என்ற அளவுக்குப் பேசி முடித்து ஒப்பந்தத்திலும் கையெழுத்து இடப்படுகிறது. அங்கேதான் புரட்சிகரமான ராமகிருஷ்ணன் வருகிறார். திரு. ராமகிருஷ்ணன் ஐ. ஏ. எஸ். அவர்கள் கையெழுத்து இடுகிறார். திரு, பாங்கோ சாட்சி கையெழுத்து இடுகிறார். திரு. அனந்தராமன் கையெழுத்து இடுகிறார். ஒப்பந்தம் 24–3–1979ல் கையெழுத்து ஆகிறது. ஒப்பந்தம் கையெழுத்தானதிற்கு 11-ஏ என்கிற இந்த கடிதத்தை ஆதாரமாக வைக்கிறேன்.

ஒப்பந்தம் கையெழுத்து ஆன பிறகு அதிகாரிகள் தங்கியிருந்த ஓட்டலிலேயே தான் சுப்பி கோஷ்டியாரும் தங்கியிருந்தார்கள். இந்த சுப்பி கோஷ்டியாருக்கு முன்பு அதிகாரிகள் அந்த ஒட்டலுக்குப் போகிறார்கள். ''எனி மெசேஜ்'' ஏதாவது செய்தி உண்டா என்று ஒட்டல் ரிசப்ஷனிஸ்டிடம் கேட்கிறார்கள். அந்த ரிசப்ஷனிஸ்டுக்கு ஆங்கிலம் தெரியாது. அங்கே இருந்த டெலக்ஸ்களை எல்லாம் எடுத்து, இவர்கள் எல்லோரும் ஒரே குழுவினர் தானே என்ற கருத்தில் அங்கே இருந்த அதிகாரிகளிடத்தில் டெலக்ஸ் மெசேஜ்களை கொடுக்கிறார். அவைகளைப் பார்த்ததும் அதிகாரிகள் அதிர்ச்சி அடைகிறார்கள். ஏனென்றால் அந்த டெலக்ஸ மெசேஜில் அவர்கள் நிர்ணயித்து முடித்திருக்கிற பேரங்களுக்கும், பேசப்பட்ட பேரங்களுக்கும், டெலக்ஸில் இருந்த விவரங்களுக்கும் பல்வேறு வேறுபாடுகள் இருந்தன. உடனே அவர்கள் பல்கேரிய கப்பல் கம்பெனி அதிகாரிகளிடத்தில் ஓடிச் சென்று விஷயங்களை விவரிக்கிறார்கள்.

[முற்பகல் 11.50]

இது ஜப்பான் நாட்டு விமான ஊழல்போல் ஆகிவிடக்கூடாது இது உலக பிரசித்தியாகிவிடும், நீங்கள் கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள். உங்களை சுப்பி



1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

கம்பெனியார் ஏமாற்றி இருக்கிறார்கள் என்ற உண்மையை நம் அதிகாரிகள் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கம்பெனியின் தலைமை அதிகாரி தமிழ்நாடு அதிகாரி ஒருவருக்கு மிஸ்டர் ராமகிருஷ்ணன் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்.

'Strictly private and confidential'

என்று எழுதுகிறார். எங்கே? அங்கே, இங்கல்ல. பல்கேரியாவில் அந்தக் கடிதம் எழுதப்படுகிறது. அதில் எழுதுகிறார் அந்த அதிகாரி திரு. ராமகிருஷ்ணன் ஐ. ஏ. எஸ். க்கு.

'The terms of our agreement with the broker are generally kept highly confidential. I thereupon request you to consider this letter as strictly private and confidential. We have separately issued another open letter which can be considered an addition to the Ship Building Contract signed by us on 24th March 1979.'

இப்படி இடைத்தரகர்களிடத்தில் செய்து கொள்ளக்கூடிய ஒப்பந்தங்களில் மிக உயர்மட்ட இரகசியங்கள் அடங்கியிருக்கக் கூடும். இருந்தால்கூட நாங்கள் 24ம் தேதி செய்து கொண்ட ஒப்பந்தத்தையொட்டி தொடர்பான ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள உங்களோடு முன்வருகிறோம். எனவே அதற்காக ஒரு ஓப்பன் லெட்டர் எழுதுகிறோம் என்று இந்த இரகசிய லெட்டரை எழுதுகிறார். அதற்கு இந்த ஆதாரம், இந்த இரகசிய லெட்டரைத் தொடர்ந்து ஓப்பன் லெட்டர் வருகிறது. அந்த ஓப்பன் லெட்டரில் — திரு. கே. எஸ்.. ராமகிருஷ்ணனுக்கு எழுதப்பட்டதுதான்—— கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடி ரூபாய் அளவிற்கு விலை குறைக்கப்படுகிறது. அது, குறைக்கப்பட்ட விலை என்றும் சொல்லலாம், அல்லது தவிர்க்கப்பட்ட கொள்ளை என்றும் கூறலாம். அந்த அளவிற்கு அதிகாரிகள் நேர்மையாக நடந்து கொண்டு அங்கிருந்த மேலதிகாரிகளிடம் பேசியதன் காரணமாக, இரகசிய லெட்டர் ஒன்றை எழுதிவிட்டு, இடைத்தரகர்கள் செய்துவிட்டார்கள் என்பதை கூறிவிட்டு ஓப்பன் லெட்டர் மூலமாக அந்த ஒப்பந்தத்திற்கு தொடர்பான ஒரு ஒப்பந்தத்தை செய்துகொண்டு அந்த ஒப்பந்தப்படி ஒன்றரைக் கோடி ரூபாய் குறைக்கப்படுகிறது. ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டு அதிகாரிகள் தமிழகத்திற்கு ஜாம் ஜாம் என்று திரும்புகிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் பாராட்டுவார் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பாராட்டுவார் இப்படி அதிக விலை கொடுக்காமல் வந்து விட்டோமே என்று. ஆனால் அவர்கள் பாராட்டப்படவில்லை. கண்டிக்கப்படுகிறார்கள். அந்தளவிற்கு அதிகாரிகள் கண்டிக்கப்படுகிறார்கள். ஒரு அதிகாரி இறந்து கூட போய் விடுகிறார். திரு. பாங்கோ இறந்துகூட போய் விடுகிறார். 10·75 மில்லியன் டாலரிலிருந்து—— —13 மில்லியன் ஒரு அதிகாரி மீது பைலே தூக்கி வீசப்படுகிறது.

டாலருக்கு ஒத்துக்கொண்ட அரசு அதை விட அதிகாரிகள் குறைந்து முயற்சித்து ஒரு முடிவு செய்து கொண்டு வந்த பிறகு, அரசாங்கத்தினிடம் அனுமதி கேட்ட பிறகு மத்திய அரசாங்கத்திற்கு 13 கோடி ரூபாய்க்கு அதை வாங்கவேண்டுமென்று அங்கீகாரம் கோரி கடிதம் எழுதப்பட்ட பிறகு 7-5-79 அன்று அமைச்சரவை மீண்டும் கூடி ஒரு முடிவு எடுக்கிறது· கப்பல்கள் வாங்கலாம் என்று ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுவிட்டும் வந்த பிறகு 7-5-79-ல் அமைச்சரவை கூடுகிறது. அந்தக் கப்பல்களை உடனே வாங்கி விட வேண்டும் என்றா முடிவு? இல்லை, இல்லவே இல்லை. டெல்லியிலுள்ள ஷிப்பிங் டெவலப்மென்ட் பண்ட் கமிட்டி இதற்கான அங்கீகாரம் வழங்குவதை ஒத்திபோடலாம் என்று பூம்புகார் கார்ப்பரேஷன் மூலம் தெரிவிக்கச் சொல்லி அமைச்சரவை முடிவு எடுக்கிறது. உடனடியாக அனுமதி கொடுத்து விடாதீர்கள் என்று——அனுமதி கேட்டு எழுதிய அரசு——டெல்லி ஷிப்பிங் டெவலப்மென்ட் பண்ட் கமிட்டிக்கு நீங்கள் இந்தக் கப்பல்கள் வாங்குவதற்கு உண்டான அங்கீகாரம் வழங்குவதை ஒத்திபோடலாம் என்று பூம்புகார் கார்ப்பரேஷன் மூலமாகத் தெரிவிக்கச் சொல்லி அமைச்சரவை முடிவு எடுக்கிறது. வேறு ஒரு கம்பெனி இதை விட குறைவான மனுவினை தந்திருப்பதாகவும் அதனால்தான் அங்கீகாரம் வழங்குவதை ஒத்திப்போடலாம் என்று காரணம் கூறப்படுகிறது. பூம்புகார் கார்ப்பரேஷன் டெல்லியில் உள்ள ஷிப்பிங் டெவலப்மென்ட் பண்ட் கமிட்டிக்கு அனுமதி வழங்குவதை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரி எழுதுகிறது. உண்மையில் அமைச்சரவை எடுத்த முடிவின்படி ஒரு 'ஆபர்' வேறு கம்டெனியிடமிருந்து வந்ததா? பல்கேரியா கப்பல்களை வாங்கத்தேவை இல்லை என்று அமைச்சரவை முடிவு எடுத்து இப்போது அனுமதி வழங்க வேண்டாம் என்று டெல்லியில் உள்ள அந்தக் கமிட்டிக்கு கடிதம் எழுதச் சொல்லி பூம்புகார் கார்ப்பரேஷன் மூலம் பரிந்துரை செய்தார்களா? வேறு ஒரு இன்னும் குறைந்த 'ஆபர்' ஒன்று வந்திருக்கிறது என்று சொன்னார்களே, அப்படிப்பட்ட 'ஆபர்' வந்ததா, இல்லை. வந்திருந்தாலும் அது பல்கேரியா கம்பெனி ஆபரை விட குறைந்ததா இல்லை. அதற்கு நான் பதில் சொல்லத் தேவையில்லை. மானேஜிங் டயரக்டர் திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ் அவர்களே பதில் சொல்லியிருக்கிறார்கள். இதன் மூலம்தான் மோசடியின் முழு விவரங்கள் தெளிவாகிறது. மெக்கனைஸ் ஆன்ட் மெக்கன்ஸி, பல்கேரியா கப்பல் கம்பெனி ப்ரோக்கர்ஸ், சித்ரா கிருஷ்ணசாமி,———சுப்பி அந்தப் பேரம் முடிகிற வரையில் அந்தக் கம்பெனியில் சீனியர் எக்ஸிக்யுட்டிவ்——ஆக பணியாற்றினார். தமிழ்நாடு அதிகாரிகளால் மேலும் ஒன்றரைக் கோடி ரூபாய் கொள்ளை தடுக்கப்பட்டதும் அந்தக் கம்பெனி பொறுப்பிலிருந்து சுப்பி விலகி விடுகிறார். நெப்ட்யூன் 'சார்ட்டேர்ஸ் (ப்ரைவேட்) லிமிடெட் என்ற புதிய கம்பனியைத் தொடங்குகிறார். 'ப்ளாட்லைன்ஸ்'—— ப்ளாட்லைன்ஸா



ப்ராட்லைன்ஸா' எனக்குத் தெரியாது. அந்தக் கம்பெனியோடு உறவு கொள்கிறார். அதுவும் அண்மையில் தொடங்கப்பட்ட புதிய கம்பெனி. 7-5-79 அன்று அமைச்சரவை கூட்டம் கூடி தீர்மானம் நிறைவேற்றியதல்லவா, அன்று காலை அதே சுப்பி என்ற சுப்பிரமணியத்தால் போலந்து நாட்டில் தயாராகும் கப்பல் பற்றி ஒரு 'ஆபர்' தரப்படுகிறது. 'ஆபர்' வந்ததும் வராததும் இராமகிருஷ்ணன் லேசுப்பட்டவர் அல்ல——வந்தவுடனே அந்த 'ஆபரை' பரிசீலிக்கிறார்.

பரிசீலனையில் தவறான தகவல் பல தரப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. அந்தப் பரிசீலனையின் படி சுப்பி சொல்லுகிற போலந்து கப்பல்களை வாங்கினால் ஆண்டுதோறும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஒன்றரை கோடி ரூபாய் நஷ்டம் வரும் என்று கண்டுபிடித்து ராமகிருஷ்ணனால் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி எப்படியோ சுப்பிக்கு தெரிந்து விடுகிறது. சித்ரா இருக்கிறாரே, தெரியாதா? சித்ரா மூலம் தெரிகிறது. சித்ரா கிருஷ்ணசாமி மூலம் தெரிந்தவுடன் அமைச்சரவை கூடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக இன்னொரு ஆஃபர் இதே சுப்பியால் தரப்படுகிறது. மாயமா? மந்திரமா? அமைச்சரவை கூடுவதற்கு முன்பு காலையில் ஒரு ஆஃபர். அந்த ஆஃபரை ஆராய்ச்சி செய்த ராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். இது சரியான தகவல்கள் அல்ல என்று தெரிவித்திருக்கிறார். இந்தச் செய்தி சுப்பிக்குத் தெரிகிறது. தெரிந்த உடனேயே அமைச்சரவை கூடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக இன்னொரு ஆஃபர் தரப்படுகிறது. பல்கேரியா கப்பலை விட அனுகூலமாக தயாரிக்கப்படுகிறது இந்த ஆஃபர். ஆனால் உண்மை நிலை என்ன? இது ஒரு போகஸ் ஆஃபர். இதை நான் சொல்லவில்லை. பூம்புகார் கார்ப்பரேஷன் மானேஜிங் டைரக்டர் ஐ. ஏ. எஸ்., அதிகாரி ராமகிருஷ்ணன் சொல்லுகிறார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடுகிறார்....

"I have no doubt whatsover in my mind that the offer regarding the Polish vessel from Messrs. Flaudlines is a bogus one" ..என்று போகஸ் என்று குறிப்படுகிறார். மேலும் மனம் நொந்து எழுதுகிறார்....

'Even though as the Managing Director of the Poompuhar Shipping Corporation, I am bound to send the message to the Shipping Development Fund Committee, as desired by the Cabinet. I would like this letter of mine to be on record as having been given before the unfortunate and irrevocable step was taken."

அவர் எழுதுகிறுர் பூம்புகார் கார்ப்பரேஷன் மானேஜிங் டைரக்டர் என்ற முறையில் நான் எஸ்.டி.எப்.ஸிக்கு. [S.D.F.C] டெல்லிக்கு அமைச்சரவையின் முடிவை தெரிவிக்க கடமைப்பட்டவனாக

இருந்தாலும் இந்தத் துர்பாக்கியமானதும், மாற்ற இயலாதது மான இந்த நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு இந்தக் கடிதத்தை பதிவு செய்ய விரும்புகிறேன். இது அப்போது தலைமைச் செயலாளராக இருந்த பணிக்கருக்கு எழுதப்பட்ட கடிதம்: 7ஆம் தேதி எழுதப்பட்ட கடிதம். இந்தக் கடிதத்திற்குப் பிறகு அரசாங்கம் தன்னுடைய மனதை மாற்றிக் கொள்வதாக இல்லை. பிறகு 9-ஆம் தேதி ஒரு கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்தில் சுப்பியால் சொல்லப்படுகின்ற கம்பெனிகள் அவ்வளவும் போகஸ் மோசடியானவை என்பதையெல்லாம் குறிப்பிட்டுவிட்டு அப்படிப் பட்ட போலந்து கப்பல்களே இருக்கின்றனவா என்கின்ற சந்தேகம் இருக்கிறது. அந்தக் கப்பலும் இல்லை. விற்பனை செய்கின்ற கம்பெனியும் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. அப்படியானால், அந்த போலந்து கப்பல்களை உள்ளே திணிப்பானேன்? அதற்கும். ராமகிருஷ்ணன், மானேஜிங் டைரக்டர் பூம்புகார் கார்ப்பரேஷன். எழுதுகிறார்....

'It is now clear that the offer of the Polish vessels was only an attempt to scuttle the bulgarian deal which had been entered in to in pursuance of the Cabinet decision.

மீண்டும் படிக்கிறேன்....

'It is now clear that the offer of the Polish Vessels was only an attempt to scuttle the bulgarian deal which had been entered into in pursuance of the Cabinet decision'.

அமைச்சரவை முடிவுப்படி. ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பல்கேரிய வ்யாபாரத்தை ஒழித்துக் கட்டவே போலந்து நாட்டுக் கப்பல் ஆஃபர் தரப்படுகிறது என்பதில் சந்தேகம் இல்லை என்று ராமகிருஷ்ணன் பணிக்கருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கான ஆதாரம், 13, 14, 15, 16, 17, ஆகிய கடிதங்கள். ராமகிருஷ்ணன் எழுதிய கடிதங்களை இங்கே வைத்திருக்கிறேன். அமைச்சரவையின் முடிவுப்படி பூம்புகார் கார்ப்பரேஷன் தந்திக்கு மத்திய அரசு என்ன செய்தது தெரியுமா? எதிலுமே துரிதமாக வேலை செய்யாத மத்திய அரசு இந்த விஷயத்தில் துரிதமாகச் செயல் பட்டது. அதில் பல்கேரியா கப்பலை வாங்கலாம், இவர்கள் வாங்க வேண்டாமென்று பூம்புகார் கார்ப்பரேஷன் மூலமாகத் தந்தி கொடுக்கிறார்கள். ஆனால், மத்திய அரசு பல்கேரியா கப்பலை வாங்கலாம் என்று பூம்புகார் கார்ப்பரேஷனுக்கு 8-5-79—ம் தேதியன்று அனுமதி கொடுத்திருக்கிறது. இந்த நிலையில் இவ்வளவு உண்மைகளையும் எடுத்துச் சொல்லி, இதில் போகஸ், ப்ராட் இவைகள் எல்லாம் நடைபெறுகின்றது. இந்த சுப்பி கோரிய திட்டங்களை எல்லாம் தள்ளிப்போட்டு, இத்த னையையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த ராமகிருஷ்ணனுத் க்கு தரப்படுகின்ற பரிசு என்ன தெரியுமா? மானேஜிங் டைரக்டர்



பதவியிலிருந்து மாற்றப்படுகிறார், நல்ல காரியங்களை செய்தார் என்று இந்த அரசு நம்பியிருந்தால் இவர் உண்மையை அமல் படுத்தினார் என்று இந்த அரசு கருதியிருந்தால், பதவி உயர்வு கொடுக்காவிட்டாலும், இதே பணியில் தொடர்ந்து அவர் இருப்பாரேயானால் நேர்மையான காரியங்களை செய்யமுடியும் என்று கருதி அவரை வைத்திருக்கவேண்டும். ஆனால் அவர் பதவியிலிருந்து மாற்றப்படுகிறார். வேறு பொறுப்பும் கொடுக்கப்படவில்லை. எதுவுமில்லாமல் நிற்கிறார். பிறகு அந்த அதிகாரிக்கு மத்திய அரசு வேலை கொடுப்பதாக செய்தி வருகிறது. டெல்லிக்குச் சென்றால் பல குட்டுகள் உடைந்து விடும் அல்லவா? எனவே அவருடைய சேவை தமிழ் நாட்டுக்குத் தேவை. அவருக்கு தவிர்க்க முடியாத பணி இங்கே இருக்கிறது. ஆகவே மத்திய அரசுக்கு அனுப்ப இயலாது என்று தமிழ்நாட்டில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த தவிர்க்க முடியாத பணி என்ன தெரியுமா? பெரிய பதவி, அடிஷனல் செக்ரட்டரி ஃபார் சோஷியல் வெல்பேர். பூம்புகார் கார்ப்பரேஷனுடைய மானேஜிங் டைரக்டராக இருந்தவருக்கு தவிர்க்க இயலாத பணி இங்கேயிருக்கிறது என்று சொல்லி, இப்போது தரப்பட்டிருக்கிற வேலை அடிஷனல் செக்ரட்டரி ஃபார் சோஷியல் வெல்பேர் என்ற வேலை. இன்னும் அந்த வேலையில் போய் சேராமல் இன்னும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல் ராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ், லீவில் இருந்து வருகிறார் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

[நண்பகல் 12—00]

இதற்கிடையில், பல்கேரியாவிலிருந்து பல கடிதங்கள் வருகின்றன. ஒவ்வொரு கடிதத்திலும், ஏன் இன்னும் வாங்கிக் கொள்ளவில்லை, கப்பல்கள் வந்திருக்கின்றன. ஒப்பந்தப்படி வாங்கிக் கொள்ளுங்கள் என்று பல கடிதங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. ஜனவரியிலே ஆரம்பித்த வியாபார பேரம், இன்னமும் கடிதப் போக்குவரத்திலேயே இருக்கிறதே ஒழிய கப்பல்கள் வாங்கவில்லை.

"14-5-79க்குள் முடிவு தெரியாவிட்டால், மேற்கொண்டு நடவடிக்கைக்கு எங்கள் அரசாங்கத்திடம் எல்லா தஸ்தாவேஜு களையும் தந்து விடுவோம்" என்று பல்கேரியா நிறுவனம் எழுது கிறார்கள். கம்யூனிஸ்ட் அரசாக இருக்கிற காரணத்தால், பல்கேரியா நிறுவனம் தமிழக அரசுக்கு இவ்வாறு எழுதுகிறார்கள். "14—5—79க்குள் முடிவு தெரியாவிட்டால், மேற்கொண்டு நட வடிக்கை எடுக்க அரசாங்கத்திடம் எல்லா தஸ்தாவேஜுகளையும் ஒப்படைத்து விடுவோம்" என்று பல்கேரியா நிறுவனம் எழுதிய பிறகு, 15-5—79 அன்று பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் பதில் அனுப்புகிறது. என்ன பதில்? 'எங்கள் அரசாங்கத்தின் தொடர்

புடைய அதிகாரி பாங்கோ காலமாகி விட்டார், அதனால் முன்னால் பரிசீலனை செய்ய முடியாமல் போய்விட்டது' என்று. பாங்கோ காலமாகிவிட்டார் என்பதற்கும், இந்த ஒப்பந்தத் திற்கும் என்ன சம்பந்தம்? ஏதோ ஜனாதிபதி இறந்து விட்டதைப் போல. கப்பலை வாங்காமற் போனதற்குக் காரணம், பாங்கோ காலமாகி விட்டார் என்றும், அதனால் உடனடியாக காரியம் செய்ய முடியவில்லை என்றும் அந்தக் கடிதத்திலே எழுது கிறார்கள்.

பல்கேரியா நிறுவனம் மீண்டும் டெலக்ஸ் கொடுக்கிறார்கள். 19-5-79ஆம் தேதிவரை ஒப்பந்தம் அமுலில் இருக்கிறது; அதற்குள் முதல் தவணையை கட்டி விடும்படி டெலக்ஸ் வருகிறது. அந்த நாளும் போய்விடுகிறது.

1979, மே 30ஆம் தேதி மீண்டும் ஒரு டெலக்ஸ் வருகிறது. ஒவ்வொரு கப்பலின் விலையிலும் 6% விலை உயர்த்துவோம், இதுவும் ஜூன் 6ஆம் தேதி வரை, அதற்குப் பிறகு மேலும் விலை உயரும் என்று தெரிவிக்கப்படுகின்றது. எவ்வளவு தெரி யுமா? 13.534 மில்லியன் டாலர். இதைப் பார்க்கவேண்டும்: 10.5லிருந்து 10.15ஆகி, பின்னால் இது 13.1, 13.2 என்றும், பிறகு மேலும் விலை உயருகிறது. அதிகாரிகளின் திறமையால் விலை குறைக்கப்பட்டது; ஆனால் இவர்கள் காலம் கடத்தியதன் காரணமாக 13.534 மில்லியன் டாலருக்கு போகின்ற நிலைமை உருவாக்கப்படுகின்றது.

13-6-79 அன்று மீண்டும் ஒரு டெலக்ஸ் வருகிறது. தாமதம் காரணமாக, எங்களுக்கு 5 லட்சம் நஷ்டம் ஏற்படு கிறது. இரு தரப்பிலும் இதற்காக பொதுப் பணத்தை செல வழித்து விட்டோம். நாங்கள் முதல் தடவையாக இந்தியாவோடு வியாபாரம் செய்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். இந்தியா, கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையே முதல் தடவையாக வியாபாரம் செய்யும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். இந்த பேரம் குறித்து இந்தியாவிலும், பல்கேரியாவிலும் பொதுமக்கள் அதிகம் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இதை டெலக்சிலே சொல்லுகிறார்கள். இந்த பேரம் குறித்து இந்தியாவிலும், பல் கேரியாவிலும் பொதுமக்கள் அதிகம் தெரிந்து வைத்திருக் கிறார்கள். மேலும், இதிலே ஒப்பந்தமாகிவிட்டது. ஒப்பந்த மாகிவிட்டது என்றால், இதிலே மத்திய அரசும், பல்கேரிய அரசும் ஒப்புக்கொண்டு விட்டது என்பதாகும். முதல் தவணையை 19-6-79க்குள் செலுத்துங்கள் என்கிறார்கள். அதற்கு ஆதாரம், இதோ இந்தக்கடிதம். ஆனால், நிலைமை என்ன? 26-10-79 தேதியில் டெல்லியிலிருந்து, பூம்புகார் கார்ப்பரேஷனுக்கு கடிதம் வருகிறது. அதிலே,



'There are some reports that the Bulgarian Ship order has run into difficulties owing to a price increase demanded by the Bulgarian Authorities. Could you kindly let us know by telex whether these reports are correct.

என்று டெல்லி, மத்திய அரசின் ஷிப்பிங் அண்டு டிரான்ஸ் போர்டு இலாகாவிலே இருந்து பூம்புகார் கார்ப்பரேஷனுக்கு இப்போது ஒரு டெலக்ஸ் வந்திருக்கிறது. ஆக, இந்தக் கப்பலை வாங்கியிருந்தால், இந்நேரம் அந்தக் கப்பல் இங்கே வந்திருக்க முடியும். ஆனால், வாங்காமல் இருந்ததற்கு என்ன காரணம்? 13.1, 13.2 என்றிருந்து, பிறகு அதனுடைய விலை 1½ கோடி குறைக்கப்பட்டு விட்டதன் காரணமாக, கொள்ளை தடுக்கப் பட்டது என்ற அந்த் அளவிலேதான் இந்தக் கப்பல் வாங்கப் படாமல், கடைசியிலே மத்திய அரசாங்கத்திடமிருந்து கடிதம் வருகின்ற அளவிற்கு வந்திருக்கிறது.

'There are some reports that the Bulgarian Ship order has rau into difficulties owing to a price increase demanced by the Bulgarian Authoratics. Could you kindly let us know by telex whether these reports are correct?

என்று கேட்கின்ற அளவிற்கு நிலைமை உருவாகியிருக்கின்றது. எனவே, இதுவரை இந்த கப்பல் வியாபாரத்தைச் செய்யாமல், இனிமேல் வாங்கப் போகிறோம் என்று சொன்னாலும்கூட, இந்த அக்டோபர் மாதம்வரை வாங்காமல் இருந்தது சரியல்ல.

அதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற நஷ்டம், வாடகைக் கப்பல்களில் நிலக்கரி கொண்டுவர பல்வேறு செலவுகள் இவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். தாங்கள் திட்டமிட்டபடி ஏறத்தாழ 4 கோடி ரூபாய் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய கமிஷன் — பச்சையாகச் சொல்ல வேண்டு மானால் லஞ்சம் — அது கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக இந்த அளவுக்கு இந்த கப்பல் பேரத்தில் இவ்வளவு விளை யாட்டுக்களை விளையாடி இருக்கிறார்கள். நான் முதலமைச் சரையும் சேர்த்துக் குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். விலையை உயர்த்தி கொள்ளையடிக்க சதி நடத்தப்பட்டது. அந்நியச் செலாவணி மீறல் என்கிற அளவுக்குக் கூட சட்டத்தை மீறுகிற முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. பல்கேரியாவில் இதற்குப் பெயர் — அட்ரஸ் கமிஷன் என்ற செல்லப் பெயரை வைத்திருக்கிறார்கள். பல்கேரியாவில் அட்ரஸ் கமிஷன் என்று வைத்திருக்கிறார்கள். இந்தியாவில் 22 மாநிலங்களில் இதுவரை நடைபெறாத மகா பெரிய ஊழல், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஊழல் — அந்த இணையற்ற ஊழலை நடத்திக் காட்டிய நம்முடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தான் என்னைப் பார்த்து 'ஊழலின் மொத்த உருவம்' என்று புதுக்கோட்டையில் பேசியதாக நான் கேள்விப்படுகிறேன். நாங்கள் இதை வாங்கு

கிறோம் என்று சொன்னாலும், அதே விலைக்கு வாங்கினாலும் இந்த நான்கு கோடி ரூபாய் கமிஷன் உங்களுக்குக் கிடைக்க இருக்கிறது. வாங்காவிட்டாலும் பெரிய செலவு. தேவையற்ற செலவு. நம்முடைய மக்கள் வரிப்பணத்தில் இருந்து ஆகியிருக்கிறது என்ற அந்தக் குற்றத்திலிருந்து நீங்கள் தப்ப முடியாது. ஆகவே, ஊழல், ஊழல் என்று எங்களைப் பார்த்துப் பேசுகிற நீங்கள் இன்றைக்கு கடைந்தெடுத்த, ஜமக்காளத்தில் வடிகட்டிய ஊழல் பேர்வழிகளாக இருக்கிறீர்கள் என்று இந்தக் கண்டனத் தீர்மானத்தில் எடுத்துக் கூறி அமர்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இந்த அமைச்சரவை மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து முதல் முதலில் உரையாற்றிய பேராசிரியர், அந்தக் கட்சியின் துணைத் தலைவர் அன்பழகனார் அவர்களுக்கு நான் முதலில் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம், அவர்கள் தொடக்கத்தில் பேசத் தொடங்கியபோதே, ஏன் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கக்கூடாது என்று கேட்டார்களானால், 'இந்த அமைச்சரவை நாங்கள் கூறுகிற கருத்துக்களைக் கவனித்து, அதைப் பரிசீலித்து திருந்தவும் திருத்திக் கொள்ளவும் நல்லதொரு வாய்ப்பைத் தரவேண்டுமென்ற நிலையில் இந்தப் பணியினை நான் தொடருகிறேன்' என்று சொல்வதுபோல் அந்தக் கருத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். முதலிலே அவர்களுக்கு அந்த நம்பிக்கையை வைத்திருப்பதற்காக நான் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் அவர்கள் ஒட்டுமொத்தமாக இங்கே பேசியவைகளைப் பற்றியெல்லாம் கவனிக்கிற நேரத்தில் மற்றவர்கள் தனித் தனியாகப் பல கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும் அவர்கள் பொதுப்படையாகப் பல பிரச்சினைகளை முன்வைத்து இங்கே தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்துள்ளார்கள். அதிலே நான் மிகமிக உன்னிப்பாகக் கவனித்த பிரச்சனைகள் மிகப் பல உண்டு. கவனித்து என்று சொல்லும்போது மாமன்றத்திற்கு வராமல் உடல் நலம் இல்லாமல் இருந்த நீ எப்படி கவனித்திருக்க முடியும் என்ற கேள்வி தொக்கி நிற்கிறது. பேராசிரியர் சிரிக்கிறார். நான் நோய்வாய்ப்பட்டிருந்தபோதும் தொலைபேசி மூலமாக தொடர்புகொண்டு இங்கு பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் கேட்டுக்கொண்டுதான் படுக்கையில் இருந்தபடி கவனித்தேன என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

[பிற்பகல் 12–10]

உடல் நலம் இல்லை என்கின்ற காரணத்தைப் பற்றியும் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன அந்தக்



கருத்துக்கள் நன்றாக உடல்நலம் இருக்கவேண்டுமென்ற ஆசை அவர்களுக்கு உண்டு என்பதையும் வெளிக்காட்டி, அதே நேரத்திலே ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள்.

இந்த ஆட்சியிலே இருக்கின்ற நாங்கள் சோர்வுற்று இருக்கிறோம், வேகமாக இல்லை, ஆத்திரப்படுகிறோம், மக்களைச் சந்திக்க அஞ்சுகிறோம் என்று வரிசையாக அடுக்கிக் கொண்டே அவர்கள் தங்கள் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி ஒப்பு நான் சொல்வது மிக அவசியம் என்று கருதுகிறேன். இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில் மக்களைச் சந்திக்கப் பயப்படுகிற அமைச்சரவை என்று உண்மையிலேயே பேராசிரியர் அவர்கள் உளமாரச் சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

வந்தவர்களோடு சரியாகப் பேசுவதில்லை என்ற குறையையும் இங்கே சொன்னார்கள். தவறுகள் சொல்ல வருகிறவர்கள், குறைகளை எடுத்துக்காட்ட வருகிறவர்களை சந்திக்க மறுக்கிறார்கள் என்றுகூட இங்கே சொன்னார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலே இயங்குகின்ற ஆற்றலை இழந்திருக்கிறது என்ற கருத்தையும் இங்கே சொன்னார்கள், அந்தக் கருத்துப்பட, குறிப்பாக நிதியமைச்சர் அவர்கள் இயங்க முடியாமல் இருக்கிறார்கள், அவர்கள் இயங்கவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட்டார்கள். இயக்கம் என்றாலே இயங்காமல் இருக்கமுடியாது. இந்த அளவுக்கு இங்கே குற்றங்களை எடுத்துச் சொல்லப்படுகிறபோது, அத்தகைய குற்றங்களை செய்வதற்காவது நாங்கள் இயங்கியிருக்கவேண்டும் என்பதையாவது பேராசிரியர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

ஆகவே இயங்குவதில் ஏதாவது குறை இருக்கிறது என்று சொல்லலாமே தவிர இயங்குகின்ற தன்மையை இழந்து விட்டதாகச் சொல்வது நியாயமில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இயக்கம் இயங்குகின்ற தன்மை இவைகளை நாங்கள் இழந்து விட்டோம் என்றால், இன்றையதினம் இந்தப் பகுதியிலே நாங்கள் இருக்க முடியாது, இந்த ஆட்சியிலே நாங்கள் இருந்திருக்க முடியாது என்பதை யாரும் மறக்க மாட்டார்கள், மறுக்கவும் மாட்டார்கள்.

அதிலே நான் குறிப்பிட விரும்புவது, இந்தக் கண்டனத் தீர்மானத்தின் வாயிலாகச் சொன்னவர்கள் என்னென்ன குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள் என்று ஒரு வகையிலே ஒரு பட்டியலை நான் படித்தால் பொருத்தமாக அமையும் என்று நான் கருதுகிறேன். வேலை நிறுத்தத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள், அரசின் தொழில் கொள்கையைப்பற்றிப் பேசியிருக்

கிறார்கள், வேலைநிறுத்தத் தடை அவசரச் சட்டத்தைப் பற்றிப் பேசியிருக்கின்றார்கள், பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்துப் பேசியிருக்கின்றார்கள், அரசின் அண்மை உத்தரவுகளைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள், காவல்துறையின் புதிய மாற்றங்களைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள், காவல்துறையின் போராட்டம், அதை அணுகிய முறையைப்பற்றியும் பேசியிருக்கிறார்கள், குற்றங்கள் அதிகரிப்பும் சட்டம் அமைதி சீர்குலைவும் என்பதுபற்றிப் பேசியிருக்கிறார்கள், ரத்து செய்யப்பட்ட பேருந்துகளைப் பற்றியெல்லாம் இங்கே குறைகூறியிருக்கிறார்கள், தனி நபருக்கு மூன்றாக இருந்த பேருந்துகளை ஐந்தாக உயர்த்தியது சம்பந்தமான குற்றச்சாட்டு சாட்டப்பட்டிருக்கிறது, விவசாயிகள் பிரச்னைகளைப் பற்றிப் பேசியிருக்கின்றார்கள். ஊராட்சி மன்றங்களைக் கலைத்ததைப்பற்றியும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஒதுக்கிடப்பட்ட செலவினங்கள் நிதி ஆண்டுக்குள் செலவழிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் சொல்லி இருக்கிறார்கள். இப்படி ஒட்டுமொத்தமாகப் பல பிரச்னைகளை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

அரசாங்க எந்திரம் சாமானியமானது அல்ல என்பதை பேராசிரியர் அவர்கள் இங்கே எடுத்துச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்த எந்திரம் ஒவ்வொரு நாளும் ஒழுங்காக இயங்கினால் தவிர பொதுமக்களுடைய நலனைப் பாதிக்கிற வகையில் மக்களின் குறைகள் கவனிக்கப்படாமல், முற்றுப் பெறாத நிலையில் அமைந்து விடும் என்பது ஆட்சியிலே உள்ளவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும் என்பதைப் பேராசிரியர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதை நான் முழு மனதோடு ஏற்றுக்கொள்கிறேன்.

ஒரு ஆட்சிலே இருக்கின்ற அமைச்சர்களானாலும் சரி, அதிகாரிகளானாலும் சரி, வேறு பணிகளிலே உள்ள அலுவலக அலுவலிலே ஈடுபட்டவர்களானாலும் சரி, தங்கள் பணியைச் சீராக, செம்மையாக, ஒழுங்காகச் செய்ய முடியாமற்போய் விட்டால் அது எத்தகைய விபரீதத்திற்குள்ளான நாடாக நாட்டை ஆக்கிவிடும் என்பதை இங்கே எடுத்துக் காட்டியதற்காக மட்டுமல்லாமல், இந்த மாமன்றத்திலே இருக்கின்ற அத்தனை பேரும் நன்கு புரிந்திருப்பதற்காகவும், அதை நன்றாகத் தெளிவாக விளக்கிச் சொல்லும் ஆற்றலோடு இருப்பதற்காகவும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாட்டின் நன்மை தீமைகள் ஆட்சியைப்பொறுத்து இருக்கின்றன என்பதை நாங்கள் உளமார, மனமார ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், ஆட்சியிலே இருக்கின்றவர்கள் கட்டளைகள் இடும்பொழுது, ஆணைகள் பிறப்பிக்கும்பொழுது, உத்தரவுகள் இடும்பொழுதெல்லாம் அவைகள் அப்படியே செயல்



படக்கூடிய நிலையில் ஒரு ஆட்சியிலே இருக்கின்ற பல்வேறு அங்கங்கள் ஒத்துழைத்தால்தான் அவைகள் வெற்றிபெற முடியும், சரியாகச் செயல்பட முடியும் என்பதில் இங்குள்ள யாருக்குமே மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படியாயின், இங்கே நான் மிகமிகத் தெளிவாகச் சொல்ல வேண்டிய ஒரு முக்கியமான கருத்து, ஆட்சிக்கு, ஆட்சியிலே இருப்பவர்களுடைய கருத்துக்குப் பாதகம் ஏற்படாத வகையில், அவர்கள் தீட்டுகின்ற திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில் அனைத்து அலுவலரும் ஒத்துழைப்பு தந்தாக வேண்டுமென்பது மிகப் பெரிய முக்கியமான கடமை என்பதை இங்கே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இதை நான் முதலாவதாக எடுத்துச் சொன்னதற்குக் காரணம், இதைச் சொல்லிவிட்டு, மற்றப் பிரச்னைகளுக்குப் பதில் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மிகத் தெளிவாகப் பல்வேறு புள்ளி விவரங்களைச் சொல்லி, நீதிமன்றத்தின் முன் வழக்குரைஞர் ஆதாரங்களை எடுத்துரைப்பதுபோல ஒன்று, இரண்டு என்று சொல்லி, 10, 15 என்று எண்ணி பிறகு கடைசியாக மொத்தமாக இந்தா எடுத்துக் கொள் என்று நான்கைந்து கடிதங்களைச் சேர்த்துப்போட்டுப் பேசி முடித்திருக்கின்ற நிலையில் நிச்சயமாக இவ்வளவு அக்கறை எடுத்து, புள்ளிவிவரங்களைச் சேர்த்து, இந்த நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற அக்கறையோடு அவர்கள் முயன்று கொண்டிருக்கின்ற இந்தப் பணிக்கு நான் நிச்சயமாக ஒத்துழைப்பு தந்தாக வேண்டும்.

[பிற்பகல் 12-20]

அது என்னுடைய மாபெரும் கடமை என்பதையும் நான் உணர்ந்திருக்கிறேன் என்று சொல்வதற்குக் காரணம் நான் மற்ற பிரச்னைகளைத் தொடங்கும்போது முக்கியமான பொறுப்பிலே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவருடைய பிரச்னைபற்றி எடுத்துக் கொள்ளவே இல்லையே என்று யாரும் கருதி விடக்கூடாது என்று நான் பின்னால் வருகிறேன் என்று சொல்லி, மற்ற பிரச்னைகளுக்குப் பதில் சொல்லி விட்டு டாக்டர் கலைஞர் அவர்கள் கடைசியிலே பேசியிருக்கிறார்கள், அதற்கு இறுதியாகப் பதில் பேசலாம் என்று நான் கருதுகிறேன்.

இந்த ஆட்சி தனது கடமையைச் செய்வதற்கு ஆட்சியிலே இருக்கிற செயலாளர்களானாலும் சரி, அல்லது இயக்குநர்களானாலும் சரி, வேறு பல அதிகாரிகளானாலும் சரி, அனைவரும் முழு ஒத்துழைப்பும் தருகின்றார்களா என்பதைப் பற்றி நான் பதில் சொல்வதற்கு முன்பாகவே முழு ஒத்துழைப்பு இந்த அரசுக்குக் கிடைக்கவில்லை—ஒரு சிலரிடமிருந்துதான்

கிடைக்கிறது என்பதற்கு ஆதாரங்களை, இங்கே எடுத்து வைத்தவைகளின் மூலமாகவே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு ஆட்சியினுடைய அமைப்பில், ஒரு இலாகாவில் நடைபெறுகின்ற கடிதப் போக்குவரத்துகள் தவறா, இல்லையா என்பது வேறு விஷயம். அதில் உண்மை இருக்கிறதா, இல்லையா என்பது வேறு விஷயம். அதற்கு எதிர்த் தரப்பிலே இருக்கிற ஆதாரங்களை எடுத்து வைக்கும்போது, தீர்மானிக்கப்பட வேண்டியது மக்களுக்கு உள்ள பொறுப்பு. ஆனாலும் எவ்வளவு பலவீனமான ஒரு இயந்திரத்தை வைத்துக்கொண்டு நாங்கள் இந்த ஆட்சியை நடத்துகின்றோம் என்பதை முதலில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எந்த அதிகாரியும் இப்படி, எல்லோரையும் நான் குறிப்பிடவில்லை, குறிப்பிடத்தக்க வகையில் ஒருசில அதிகாரிகள் என்கிற வகையில், எப்படி எங்களுக்கு எதிராகப் பணியாற்றுகின்றார்கள் என்பதை தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் புரிந்து கொள்வதற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் கூட ஒத்துழைப்பு தந்து எனக்கு நன்மை செய்திருக்கிறார்கள், வாய்ப்பு தந்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது நான் அவருக்கு மிகப்பெரிய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் தவறு செய்திருந்து, குற்றங்கள் புரிந்து. அதற்காக மறைத்து வைக்கப்பட வேண்டிய தஸ்தாவேஜுகள் என்கிற வகையிலே அந்தக் குறிப்புகள் எல்லாம் இருந்திருக்குமானால் அதை வெளிக் கொணர வேண்டியது எதிர்க்கட்சித் தலைவருடைய, எதிர்க் கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களுடைய மிகப் பெரிய கடமை என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், இவ்வளவு தெளிவாகக் கடிதப் போக்குவரத்துகள் அவ்வளவும் டெலக்ஸ் போன்றவைகள் எல்லாம் அழகாக, செம்மையாக எப்படி நிரபராதியையும் குற்றவாளி என்று நிரூபிக்க முடியுமோ, ஒரு தரப்பிலேயிருந்து பதில் கிடைப்பதற்கு முன்னால், நம்புவார்களோ அந்த வகையிலே எடுத்துக் காட்டுகின்ற அளவுக்கு இங்கே ஆதாரங்கள் தரப்பட்டிருக்கின்றன என்பதை நாங்கள் எண்ணிப் பார்க்கும் போது, இப்படிப்பட்ட ஆட்சியில் நாங்கள் ஆட்சியிலேயிருந்தாலும் கூட, ஆட்சியை நடத்துகின்றவர்களுக்கு இடையில் மிகப் பெரிய பொறுப்பை ஏற்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்த நிலையில் என்னுடைய கருத்தை நான் வெளியிட விரும்புகிறேன். என்ன இருந்தாலும் ஒரு ஆட்சியை நடத்துகின்றவர்களுக்கு, தங்களுக்குக் கீழே பணியாற்றுகின்றவர்கள் நேர்மை உள்ளவர்களாகவும், நாணயம் உள்ளவர்களாகவும் நீதியை எடுத்துச் சொல்லி பாராட்டுகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள் என்ற உத்தரவாதம் இருந்தால்தான் அந்த ஆட்சி தன்னுடைய எண்ணங்களைச் சரிவர செயல்படுத்த முடியும்.



இங்கே குறை கூறியவர்கள் ஒரு பிரச்சனையை மட்டும் சொல்லி இருந்தார்கள் என்றால் அதற்கு நேரடியாக பதில் சொல்லிவிட முடியும்.

நிர்வாக இயந்தரத்தைப் பொறுத்த வரையில் நான் மேலே குறிப்பிட்டுள்ளபடி எவ்வளவோ பிரச்சனைகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் வேலை நிறுத்தத்தைப் பற்றி பல குற்றச் சாட்டுகளை இங்கே சொல்லி இருக்கிறார்கள்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் காவேரி தொழிற்சாலை பற்றி பேசினார்கள், குரோம்பேட்டை தொழிற்சாலை பற்றியும் பேசினார்கள். எனக்கு தெரிந்த ஒருசில உண்மைகளை நான் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

அதற்குள்ள சொத்துக்கள் மதிப்பு ஏறக்குறைய 1¾, ஒன்றே முக்கால் கோடிக்கு மேலே இல்லை. அதற்குள்ள கடன் ரூ. 5 கோடி இதை ஒரு அரசு எடுத்து நடத்தமுடியுமா என்பதைப் பற்றி தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதோடு, இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு பெரிய சிக்கல், அவர்கள் இன்னமும் அந்த தொழிற்சாலையை மூடிவிட்டதாக அறிவிக்கவில்லை. அதை அவர்களே குறிப்பிட்டார்கள். ஆனால் தொழிலாளர்களுக்கு சம்பளம் இல்லை. கேட்டால், பணம் இல்லை, அரசு கொடுத்தால் நடத்துகிறோம், அதே சமயத்தில் வங்கிகளைக் கொண்டு கடன் கொடுத்தால் நடத்துகிறோம் என்றார்கள். நாங்கள் சொல்லிப் பார்த்தோம், வங்கிகள் கடன் கொடுத்து அவர்கள் அதிகாரிகளை வைத்து நடத்தச் சொல்லலாம் என்றால் அவர்கள் அதற்குத் தயாராக இல்லை.

மைய அரசிடம் சொல்லி அதை நடத்துவதற்கு ஏதாவது வழியுண்டா என்பதைப் பற்றி நாங்கள் சிந்தித்தோம். முயற்சிகள் செய்தோம். அவர்கள் இப்படிப்பட்ட சூழ்நிலையில அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம். இந்த சூழ்நிலையில் தான் நாங்கள் எங்களுடைய கடமையை ஆற்றவேண்டுமென்ற அந்த வகையிலே, சுழலிலே நாங்கள் சிக்கிக் கொண்டிருக்கிறோம். நல்ல எண்ணம் எங்களுக்கு இருந்தாலும் ஏறத்தாழ ரூபாய். 5 கோடி கடன் இருக்கிறது என்கிற நிலையில் ஏறக்குறைய ரூ. ஒன்றே முக்கால் கோடிக்கு மேல் சொத்து மதிப்பில்லாத ஒரு தொழிற்சாலையை அரசு எப்படி எடுத்து நடத்துவது என்பது ஒரு மிகப்பெரிய பிரச்சனை.

[திரு: எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 3

அந்தத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்க வேண்டுமா என்பதைப் பற்றி நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு ஏதாவது இடைக்கால நிவாரணமாவது அளித்து அவர்களுக்கு ஒரு சிறு நிம்மதியாவது ஏற்படுத்த மேற்கொண்டு என்ன செய்வது என்பதைப் பற்றி, எப்படி அதை நடத்துவது, அல்லது அதை விட்டுவிட்டு வேறு ஒரு தொழிற்சாலை திறக்கலாமா, அல்லது வேறு வேலைகள் அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கலாமா என்பதைப் பற்றி இந்த அரசு மிகுந்த அக்கறையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே குறிப்பாக அவசரகாலச் சட்டம் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) ஆளுநர் சட்டத்தைத்தான் சொல்கிறேன். அது அப்படித்தான் பேசும்போது கருத்து வேகமாக வருகிறது. ஏதோ தடைச் சட்டம், தடைச்சட்டம் என்று சொல்கிறார்கள். இதுவரையில் இந்த அரசைப் பொறுத்த வரையில் எந்தத் தொழில் தகராறுகளில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்று தடையை நாங்கள் பயன்படுத்தி இருக்கிறோம் என்று இந்த மன்றத்தைக் கேட்க விரும்புகிறேன். எந்த ஒரு தொழிற்சாலையிலும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதைத் தடை செய்து சட்டம் நாங்கள் வெளியிட்டது இல்லை. சட்டம் இருக்கிறது. நாங்கள் கொண்டு வந்தோம். அதைப் பயன்படுத்தவில்லை என்பதை தயவு செய்து இந்த மன்றத்திலே இருக்கிற அத்தனை பேரும் கொஞ்சம் கவனத்தோடு அதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அப்படியானால் எங்கள் எண்ணம் என்ன? எதற்காக இந்த தடை சட்டம் கொண்டு வந்தோம். எதற்குக் கொண்டு வந்தோம் என்றால் நான் முதலில் சொன்னேனே ஒரு ஆட்சி நடக்கவேண்டுமென்றால் அதன் கீழே உள்ள பணியாளர்கள், பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, சிறிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, சின்சியாரிட்டி, உண்மை, அது இருந்தாக வேண்டும்;

[பிற்பகல் 12.30]

அதே சமயத்தில் நேர்மை இருந்தாகவேண்டும். நாணயம் இருந்தாகவேண்டும். இவர்கள் நம்பிக்கையோடு அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும். இவர்கள் வேலை செய்ய மறுத்தார்கள் என்றால், நாங்கள் மக்களிடம், மக்கள் நன்மைக்காக செய்கிறோம் இன்னின்ன காரியங்கள் என்று உறுதி கொடுத்து இருக்கிறோமோ, அதை நிறைவேற்றுவதற்கு அந்த அதிகாரிகளைப் பயன்படுத்தமுடியுமா என்பதையும் இந்த மன்றத்தில் உள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.



1979 நவம்பர் 3] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அதைப்போலத்தான் தொழிலாளர்கள் பார்க்கவேண்டும். தொழிலாளர்கள் பார்க்கவில்லை. புதிய தொழிற்சாலைகள் தோற்றுவிக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டுகள் சொல்லப் பட்டன. இருக்கின்ற தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன, வேலை நிறுத்தம் செய்கிறார்கள், அவைகளில் வேலை நடத்த முடியவிலலை என்று அச்சுறுத்தல்போல் சூழ்நிலை இருக்குமானால் எப்படி புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு உள்ளவர்கள் வருவார்கள் என்பதைப் பற்றி நாம் கொஞ்சம் சிந்தித்தாகவேண்டும்.

நான் ஏதோ தொழிலதிபர்கள் மத்தியில் பேசியதாகவும் அந்தப் பேச்சின் விளைவாக இந்தச் சட்டம் கொண்டு வந்தோம் என்று ஒரு தொடர்பை ஏற்படுத்தி இங்கே சில நண்பர்கள் குறிப்பிட்டதாக நான் குறிப்பில் பார்த்தேன். நான் பெயரைக் குறிப்பிடாததால் அவரை மதிக்கவில்லை என்று கருதக் கூடாது. எந்தக் கருத்துக்கு யார் யார் சொந்தக்காரர்களாக இருக்கிறார்களோ அவர்களை முன்னிலைப்படுத்தித்தான் நான் பதில் சொல்கிறேன் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

ஒரு தொழிற்சாலை தொடங்கவேண்டுமானால், வருகின்ற தொழில் அதிபர்களுக்கு மின்சாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை; மூலப் பொருள்கள் தட்டுத் தடங்கல் இன்றி கிடைக்கும் என்ற உத்தரவாதம். இதற்கெல்லாம் மேலாக வேலை நிறுத்தம் போன்ற தொல்லைகளால் ஆரம்பிக்கப்படு கின்ற தொழிற் சாலைகள் முடங்கிவிடும் என்ற அச்சச் சூழ் நிலை இல்லாமை; இவைகளை இந்த அரசு கொடுத்தாக வேண்டியிருக்கிறது, நான் சொன்ன சொற்கள் சில சமயங்களில் பத்திரிகைகளில் செய்திகளாக வருகின்றபோது வேண்டுமென்றே அவர்கள் திருத்திப்போடுகிறார்களா அல்லது உண்மையை மறைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாவிட்டாலும் செய்தியாளர்கள் கொண்டுபோய் கொடுக்கின்ற அந்தத் தகவலை வைத்துக்கொண்டு வெளியிடுகிறார்களா என்று எனக்குத் தெரிய வில்லை என்றாலும், நான் என்ன பேசினேன் என்பதை இங்கே சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

தொழிற் சாலையில் பணியாற்றுகின்றவர்கள் தொழிற் சாலையை அழிப்பதற்கு முன் வந்தால், பிறகு அவர்கள் எங்கே போய் பணி செய்வார்கள் என்ற கேள்வியை இதே மன்றத்தில் நான் முன்பே கேட்டு இருக்கிறேன். ஆகவே தான், போராட்டம் என்பது இருக்கலாம். வேலை நிறுத்தம் இருக்கலாம். ஆனால், அவர்கள் மீண்டும் எங்கே போய் வேலை செய்ய வேண்டுமோ, வேலையைத் தேடிக்கொள்ள வேண்டுமோ அங்கேயுள்ள அந்த இயந்திரங்கள் பழுதாகி

விட்டால், அந்தத் தொழிற்சாலை மீண்டும் இயங்காமல் போய்
விடும். அதனால் பல சூழ்நிலைகள், பல கஷ்டங்கள் ஏற்படு
கின்றன என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

அதை நான் அங்கே சொல்கிறபோது தான், கூடுமான
வரையில் வேலை நிறுத்தங்கள் ஏற்படாமல் தடை செய்வதற்கும்,
அந்தத் தடை எந்தச் சட்டத்தாலும் அல்லாமல் இயற்கை
யாகவே தொழில் அதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்கும்
இடையே சுமுகமான சூழ்நிலையில் பேச்சுவார்த்தை நடத்து
வதன் மூலமாக அதை உருவாக்கச் செய்து, அதன் விளைவாக
தொழிலாளர்களுக்குத் தேவையானவைகளை கிடைக்கக்கூடிய
சூழ்நிலை உருவாக்குவதும், அதே நேரத்தில் தொழில் அதிபர்கள்
போடுகிற மூலதனத்திற்கு பாதுகாப்பு இருக்கிறது என்ற
நிலைமையும், தொழிலதிபர்களால், மற்றவர்களால் உருவாக்கப்
பட்டு இருக்கிற இயந்திரங்கள் பழுது அடையாது பாதுகாக்கப்
படும் என்ற ஒரு உறுதியான எண்ணத்தை,
நம்பிக்கையை அவர்களுக்குக் கொண்டுவருகிற வகையில் நாம்
நடத்திக் காட்டவேண்டிய நிலையில் இருக்கிறோம். இதைத்
தான் நான் அங்கே சொல்லிச் சொன்னேன். இப்போது
தொழிலாளர்கள் மாற்றம் ஆகியிருக்கிறார்கள். மாற்றம் ஆகிக்
கொண்டு இருக்கிறார்கள். தொழிற்சாலைகளில் தொழிலாளர்
கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படி நடந்து
கொள்கிற முறை பின்பற்றக் கூடிய சூழ்நிலை உருவாகிக்
கொண்டு வருகிறது. இந்த இரண்டாண்டு காலமாக நாங்கள்
எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக மிகப் பெரிய
மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது. அது உங்களுக்குத் தெரியும்.
நாங்கள் எப்படி நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வரு
கிறோம் என்பதும் தெரியும். ஆகவே, தைர்யமாக இங்கே
நீங்கள் மூலதனம் போட்டு, புதிய தொழில்களைத் தொடங்க
லாம் என்று நான் அன்று பேசினேன். ஆனால் இங்கே நண்பர்
கள் பேசும்போது நான் முதலாளிகளுக்கு சாதகமாகப் பேசியதா
தாகவும், அதன் விளைவாக முதலாளிகள் எங்களுக்கு ஏதோ
நன்மை செய்ய முன்வந்து விட்டது போலவும், அந்தக்
கருத்தைச் சொல்லா விட்டாலும் மற்றவர்கள் அப்படி சொல்லத்
தக்க வகையிலே சுட்டிக்காட்டாமல், ஆனால் சுட்டிக்காட்டு
வதைப்போல சிலேடையாக கூறியதாக நான் குறிப்பிலே
இருந்து பார்த்தேன்.

அவர்களுக்கு பணிவன்போடு சொல்கிறேன். தொழிலதிபர்
களை நாங்கள் இன்றையதினம் எதிரிகளாகக் கொண்டிருக்
கிறோமே தவிர நண்பர்களாக ஆக்கிக் கொள்ளவில்லை என்று
இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்வது என்னுடைய
மாபெரும் கடமை என்று கருதுகிறேன்.



இப்போது தொழிலதிபர்கள் எங்களுடன் சுமுகமாக
இருக்கிறார்கள்; தொழிலாளர்களுக்கு விரோதமாக நாங்கள்
மிகப் பெரிய சூழ்நிலையை ஏற்படுத்தி விடுகிறோம் என்று
தயவு செய்து யாரும் நம்ப வேண்டாம். யாராவது எங்களை
பயன்படுத்த வேண்டுமென்று எண்ணினால் கூட அவர்கள்
ஏமாந்து போவார்களே தவிர, நாங்கள் ஏமாந்து போக
மாட்டோம் என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக்
கொள்கிறேன்.

உடனே கேள்வி வரும். ஒரு தொழிற் சங்கத்துடன் ஒப்பந்
தம் நடக்கிறது. அது மைனாரிட்டி தொழிலாளர்கள் இருக்கிற
சங்கம். அந்தச் சங்கத்திலே ஒப்பந்தம் செய்துவிட்டு, மற்ற
பெரும்பான்மைத் தொழிலாளர்கள் அங்கத்தினராக இருக்கின்ற
சங்கத்தைச் கேட்காமல் நாங்கள் 12 (3) செட்டில்மென்ட்
போட்டுவிட்டோம்; ஆகவே, நீங்கள் மற்றவர்களை கேட்க
முடியாது; நீங்களும் வேலைக்கு வாருங்கள்; நாங்கள்
கதவடைப்பு செய்யவில்லை; கதவு திறக்கப்படும் என்று
அவர்கள் சொல்லிவிட்டார்கள்; மற்றவர்களை அச்சுறுத்தி
தனித் தனியாக கையெழுத்து வாங்கி, அங்கே அந்தப் பணியினை
செய்வதற்கு அவர்களை ஏவலாள் போல பயன்படுத்துகிறார்கள்
என்ற குற்றச்சாட்டைச் சொல்வார்கள். நீங்கள் சொல்லி
இருக்கிறீர்கள் இப்போது நடக்கிறதே, இன்னும் சில இடங்களில்
நடைபெற இருக்கிறதே என்று சுட்டிக்காட்டலாம்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை]

ஆனால் சட்டத்தை நாங்கள் மதிக்க வேண்டும்; மன
சாட்சியை நாங்கள் முன்னே வைத்து, எண்ணத்தை வெளியிட
வேண்டியிருக்கிறது. அந்த எண்ணத்தை செயலாக்க முயற்சிக்க
வேண்டியிருக்கிறது. சட்டத்தால் எங்கள் கைகளை, எதையும்
செய்ய முடியாது என்ற நிலையிலே கட்டிப்போட்டுவிட்ட
சூழ்நிலை உருவாக்கப்பட்டு, அதன் பிறகு நாங்கள் அந்தத்
தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவில்லை, அவர்கள்
வேலைக்குப் போக முடியாமல் நாங்கள் சூழ்நிலையைப் பயன்
படுத்திக்கொண்டு, வேறு சிலரை அங்கே உள்ளே அனுப்பி—
கூலிகளை, கண்காணிகளை என்று சொல்வார்களே, அப்படிப்
பட்டவர்களை வைத்து—வேலை நடத்த தொழிலதிபர்களுக்கு
உடந்தையாக இருக்கிறோமே என்று குற்றஞ்சாட்டப்படலாம்.
ஆனால் அவர்களுக்கே தெரியும்; சட்டம் எங்களுக்கு சாதகமாக
இல்லை என்பது.

அதற்காகத்தான் முன்னாலே ஒரு யோசனை சொன்னேன்.
அந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு இப்போதும் சொல்
கிறேன். மாமன்ற உறுப்பினர்கள் ஒத்துக்கொண்டீர்களானால்
எந்த நேரத்திலே எவ்வளவு விரைவாகக் கொண்டுவர முடியுமோ
அவ்வளவு விரைவில் கொண்டுவர முடியும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 3

அனைத்துக் கட்சித் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்றுபட்டு, பெரும்பான்மையான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் வேண்டாம் என்றால் வேண்டாம்; வேலை நிறுத்தம் வேண்டும் என்றால் வேண்டும் என்பதைப்போல ஒரு முடிவு எடுப்பதற்கு ஒத்துக்கொண்டு, அதைப்போலவே சம்பள உயர்வும் தொழிலாளர்களுக்கு வேண்டுமென்று கேட்கும்போது அதற்குரிய நிலையை உருவாக்குவதற்கும் அந்தச் சட்டத்தில் இடம் இருக்கிறது என்று ஆக்குவதற்கு ஒத்துக்கொண்டால் வெகு விரைவில் அடுத்த தொடர் கூட்டத்திலே அந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்காக இந்த அமைச்சரவை தயாராக இருக்கிறது என்பதை இங்கே இருக்கிற அத்தனை பேர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டம் கொண்டுவர இருக்கிறார்கள் என்கிறபோது 12 (3) ஒப்பந்தத்தைக் குறிப்பிட்டார்கள். பெருவாரியான தொழிலாளர்கள் ஒப்பந்தம் என்பது 12 (3) அடிப்படையிலே இருக்கலாம் என்று வைத்துக்கொண்டால் 'பாலட்' பிரதிநிதித்துவம் கொண்டச் சட்டம் என்பதாக ஒத்துக்கொள்வதாக இருந்தால் என்று சொன்னார்.

நான் முதலமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஒப்பந்தம் சம்பந்தமாக அடிப்படை பிரச்சனைகள் வரும்போது இந்தப் 'ப்ரொப்போசலை' வைத்தால், பெருவாரியான தொழிலாளர்கள் ஒத்துக்கொண்டால் அதாவது 51 சதவீதம் பேர் ஒத்துக்கொண்டால் அதைச் செயல்படுத்தும் வகையிலே சட்டம் கொண்டுவரும் ப்ரொப்போசல்தான் முதலில் வைக்கப்பட்டது. எங்கள் கட்சியின் சார்பிலே, நான் சார்ந்திருக்கின்ற சி.ஐ.டி.யு. சங்கத்தின் சார்பிலே அதை ஒத்துக்கொண்டேன். அதன் பிறகு வேலை நிறுத்தம் மெஜாரிட்டி, மைனாரிட்டி என்று வைக்கப்பட்டது. அப்படியானால் என்ன நேரிடும்? நெகோசியேஷன் வரும். ரெப்பிரசென்டேட்டிவ்ஸ் பேச்சுவார்த்தை நடத்தி, நிர்ணயிக்க வேண்டிவரும். அப்படியானால் ஒரு 'காம்பிரிஹென்சிவ் லேபர் லா' என்ற நிலைக்கு முதலமைச்சர் கொண்டு போகிறார். அதற்கு தனியாகப் பேச வேண்டும். அதன்பிறகு ஒப்பந்தச் சட்டம் கொண்டுவர வேண்டும். அதை ஒத்துக்கொள்கிறாரா? காம்பிரிஹென்சிவ் சட்டம் என்றால் எல்லா இன்ஸ்டிடியூஷன்களும் பேசி, கொண்டு வர வேண்டும். அதற்கு ஒப்புக்கொள்கிராறா?

[பிற்பகல் 12.40]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1979 நவம்பர் 3] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

என்னைச் சிக்க வைத்து விட்டதாக மட்டும் தயவுசெய்து கருதி விட வேண்டாம். நான் முன்பு சொன்னதையே தான் இப்போதும் சொல்கிறேன். தனியாகப் பேசும்போது என்ன சொன்னேனோ அதையே மனம் திறந்து சொல்கிறேன், வேலை நிறுத்தத்தை செய்வதற்கும் அனைத்து சங்கங்களுடைய ஒட்டு மொத்தமான தொழிலாளர்கள் ஒன்று கூடி 60, 70 சதவீதம் வாக்குகள் அங்கே எதற்கு அளிக்கிறார்களோ அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதேப்போல எந்தப் பிரச்னையானாலும் சரி, சம்பள உயர்விற்காகவோ, போனஸ் பிரச்னையானாலோ, எதுவாயினும் சரி, அவைகளைப் பற்றியும் முடிவு எடுப்பதற்கு இதே முறையைக் கையாள வேண்டும் என்று ஏற்பட்டால் அதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள் என்றால் அதைநாங்கள் சட்டமாகக் கொண்டுவருவதற்குத் தயாராக இருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத்: நீங்கள் சொல்வது ஒன்றிரண்டு விஷயங்களைப் பற்றி. நான் சொல்வது நெகோஷியேட்டிங் ஏஜன்சி என்று பல சங்கங்கள் இருக்கிறபோது ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எந்தச் சங்கம் வரவேண்டும், எந்தச் சங்கத்தில் பிரதிநிதித்துவம் வரவேண்டும். இன்னும் இப்படி பல்வேறு விஷயங்கள் அதன் தொடர்பாக இருக்கின்றன. முதல் அமைச்சர் அவர்கள் சொன்னது எல்லா அம்சங்களும் உள்ளடக்கி இருக்கக்கூடிய லேபர் சட்டம். முதலில் சொன்னது ஒப்பந்தங்களுக்கு பேலட் வைத்து 51 பெர்சண்ட் என்று வந்தால் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் ஏற்றுக் கொள்வீர்களா என்பதுதான் எங்கள் முன்னால் வைக்கப்பட்டது. அதை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். எங்களுடைய பல யூனிட்டுகளிலே இன்றைக்குக் கூட ஓட்டெடுப்பு ஸ்டிரைக் செய்யவேண்டும் என்றால் உண்டு. மெஜாரிட்டி வொர்க்கர்ஸ் ஸ்டிரைக் பண்ணுவதாக ஒப்புக்கொண்டால் தான் அது ஸ்டிரைக் என்பதே எங்களுடைய கருத்து. ஆனால் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று வரும்போது பல பிரச்னைகள் இருக்கின்றன. திடீர் என்று ஆலைக்குள்ளே முதலாளிகள் தொழிலாளிகளை வைத்து அடிக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால், அப்போது பேலட் கொடுத்து ஓட்டெடுத்துவிட்டு அப்புறம் தான் ஆக்ஷன் எடுக்க வேண்டும் என்று சும்மாயிருக்க முடியுமா? அங்கே எடுக்க வேண்டிய ஆக்ஷனை முதலில் எடுத்தாக வேண்டும். பல்வேறு பிரச்னைகள் இப்படி இந்தச் சட்டம் வந்தால் வரும். அதையெல்லாம் நினைக்காமல் சட்டம் கொண்டுவர முடியாது....

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, நம்முடைய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சித் தோழர் குறிப்பிடும் சட்டம் சென்டிரல் கவர்ன்மெண்டில் போடப்பட்டிருக்கிறது. அதை செலக்ட் கமிட்டிக்குக்கூட அனுப்பியிருக்கிறோம் என்று நினைக்கிறேன். அந்தச்

சட்டத்தை உமாநாத் அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்றால் முதலமைச்சர் அவர்கள் சட்டத்தை உடனே கொண்டுவந்து விடுவார். அது பூராவுமே இன்டஸ்டிரியல் ரிலேஷன்ஸ் பில்லாக இருக்கிறது. அந்த அபாயமான இலக்கை நோக்கி போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்,

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, தோழர் சுப்பு அவர்கள் நிலைமையை திசை திருப்ப முயல்கிறார். பார்லிமெண்டரி லெஜிஸ்லேஷன் என்று சொல்கிற மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற லெஜிஸ்லேஷன் அல்ல நான் சொல்வது. தொழிற் சங்கங்களின் ஒரிஜினல் யூனிட்ஸ்லிருந்து ஆல் இந்தியா யூனிட்ஸ்க்கு கம்பேர் பண்ணக் கூடாது. மத்திய அரசின் அந்த பில்லை, ஆண்ட்டிவொர்க்கிங் கிளாஸ் பில் என்று பேர் கொடுத்து அதுதான் லேப்ஸ் ஆகிவிட்டதே. தொழிற் சங்கங்களுடன் கலந்த பொதுவான காம்ப்ரஹன்சிவ் லெஜிஸ்லேஷன் என்றுதான் சொல்கிறேன். அதை அக்ரீமெண்ட் புரொபோசலோடு சேர்த்து இணைக்காதீர்கள் என்றுதான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும் வெவ்வேறு பிரச்னைகள் பற்றி கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய விளக்கம், என்னுடைய தெளிவான முடிவு என்னவென்றால் ஒரு போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். நீண்ட காலமாக கோரிக்கைகள் வைத்து வைத்து கவனிக்காமல் அலட்சியம் செய்து ஒரு தொழில் அதிபரை எதிர்த்து —ஒரு தொழில் அமைப்பில் இருக்கிறவர்கள் அந்த முடிவுக்கு வந்தே தீரவேண்டும் என்ற ஒரு சூழ்நிலை எழுமாயின் அப்படி ஒரு சங்கம் பெரும்பான்மையான உறுப்பினர்களுடைய எண்ணத்தை ஏற்று வேலை செய்யலாம் என்று முடிவு செய்கிறது, அல்லது வேலை நிறுத்தம் செய்யலாம் என்று முடிவு செய்கிறது. ஒரு சில சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்யலாம் என்று சொல்லலாம், ஒரு சில சங்கங்கள் வேலை நிறுத்தம் வேண்டாம் என்று சொல்லலாம். மற்றச் சங்கங்கள், ஒருசில சங்கங்கள் வேலைநிறுத்தம் வேண்டாம் என்கிறது, அல்லது வேண்டும் என்கிறது. ஆகவே இரண்டு சங்கங்களுக்கிடையே அல்லது ஒன்றிரண்டு மூன்று பிரிவு—ஒரு பக்கம் மூன்று சங்கங்கள், இந்தப் பக்கம் நான்கு சங்கங்கள், எப்படியும் வைத்துக் கொள்ளலாம், ஒன்றையொன்று எடுத்துக்கொண்டால், அங்கே பிரச்னைகள் மோதும்போது போராட்டம் எந்தக் கொள்கைக்காக, எந்த இலட்சியத்திற்காக நடைபெறுகிறதோ அது போய் தொழிலாளர்களிடையே போராட்டம் ஏற்படுகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். என்னுடைய ஆசை அந்த நிலைமை வரக்கூடாது. தொழிலாளர்கள் ஒரு



முடிவு எடுத்தால் அந்தத் தொழிலில், அந்த நிர்வாகத்தில் பணியாற்றுகிற அத்தனை பேர்களும் பெரும்பான்மையாக எடுக்கிற ஒரு முடிவை அந்தத் தொழிலாளர்கள் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் ஒருமித்த கருத்தோடு அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை எப்படி ஒன்றுபடுத்தி நடத்துவது என்பதில் ஆணையரை வைத்துக் கொண்டாலும் சரி அல்லது அதற்கு ஒரு குழு அமைக்கவேண்டும் என்று நீங்கள் யோசனை சொன்னாலும் சரி நான் முதலில் சொன்ன யோசனையை ஏற்றுக்கொண்டீர்கள் என்றால் அனைத்துக் கட்சித் தொழிற் சங்கத் தலைவர்களையும் அழைத்து அவர்களிடமே அந்த யோசனையைச் சொல்லி அவர்களுடைய யோசனைகளையும் கேட்டு சட்டபூர்வமாக எப்படி அதை நடைமுறைப்படுத்த முடியுமோ அதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராயிருக்கிறது என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் இன்னும்கூட ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தொழில் அதிபர்கள் எவ்வளவுதான் நல்லவர்கள் என்று நாம் எண்ணினாலும் கூட தொழிற் சங்கங்களை பிரித்து வைப்பதிலே அவர்கள் மிகச் சாமர்த்தியசாலிகளாக இருக்கிறார்கள் ஒரு சிலராவது என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். அதற்கு நாம் பலிக்கிடாக்கள் ஆகிறோம் என்பதையும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன். அதிலிருந்து விடுபட்டாக வேண்டும். அதற்குரிய வழிமுறைகளைக் கண்டு பிடித்தால்தான் தொழிலாளர்களுக்கு ஏற்படுகிற தொல்லைகளிலிருந்து அவர்களை விடுவிக்க முடியும் எந்தத் தொழிற் சங்கம் அதிகமாக லாபத்தைப் பெற்றுத்தரும் என்ற எண்ணத்தை உருவாக்கி வளர்க்கும் எண்ணத்திற்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்காமல் எல்லோரும் சேர்ந்து ஒரு நல்ல காரியத்திற்காக இந்தப் பணியைச் செய்கிறோம் என்ற எண்ணத்தோடு, அந்தத் தொண்டு மனப்பான்மையோடு செய்ய முடியும் என்றால் அதைவிட நமக்கு மகிழ்ச்சி தரக்கூடியது வேறு ஒன்றுமில்லை. தொழிலாளர் போராட்டம், தொழிலாளர் தடைச் சட்டம், தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற அந்த நிலைகள் எல்லாம் எங்கிருந்து எழுகிறது? காவல் துறையால் மட்டும் ஏற்படுத்தப்படுவதில்லை. ஒரு தொழிற்சாலை நடப்பதற்கு பாதுகாப்பு கொடுத்தால் அந்தத் தொழிலாளர் களின் உரிமையை பறிக்கிறது என்ற குற்றச்சாட்டு. தொழிலாளர் களுக்கிடையே பிளவுகள் ஏற்பட்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொள்கிறார்கள், கொலைகள் நடக்கின்றன, வன்முறையில் ஈடு படுகிறார்கள், ஆகவே தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வேண்டு மென்று அங்கே காவல்துறை உதவி செய்தால் வீட்டுக்குள்ளே நுழைந்து தாக்குகிறார்கள், ஒரு கட்சிக்காக பணியாற்றுகிறார்கள் இந்தத் தொழில் அதிபர் அவர்களை விலைக்கு வாங்கிவிட்டார் கள் அல்லது இந்த அரசு தொழிலாளர்களுக்கு விரோதமான அரசாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டுகளுக்கு பல பேர்கள் ஆளாகிறார்கள். இதில் ஒரு நல்ல நிலைமை ஏற்படவேண்டும் என்ற எண்ணத்தில் சொல்கிறேன். இந்த அவசர சட்டத்தை

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 3

இந்தத் தடைச் சட்டத்தைக் கொண்டு கொண்டுவந்திருக்கிறோமே இதுவரை அந்தத் தடைச் சட்டத்தை பயன்படுத்தியது கிடையாது. அந்தச் சட்டத்தை எதற்காகக் கொண்டு வந்தோம்? ஒரு பக்கம் தொழிலாளர்கள் போராட்டம், இன்னொரு பக்கம் காவல்துறையினர் போராட்டம் வருமோ வராதோ என்ற நிலை அதேபோல் என்.ஜி.ஓ.க்கள் போராட்டம். அதே சமயத்தில் இங்கே தலைமைச் செயலகத்தில் இருக்கிறவர்கள் போராட்டம், இப்படி இத்தனை பேர்களுடைய போராட்டம் ஏற்படுமானால் இந்தச் சட்ட மன்றமே நடந்திருக்க முடியாது. இப்போது அவர்கள் ஒத்துழைப்புத் தருகிறார்கள். இங்கே குறிப்புகள் வருகின்றன, நடைபெறுகின்றன. இப்போது இந்த அசெம்பளி நடந்துகொண்டிருக்கிறது. இதை நாம் காப்பாற்ற வேண்டாமா? இங்கே டாக்டர் கலைஞர் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள்,, தமிழகத்தில் இருக்கிற ஒரேயொரு ஜனநாயக அமைப்பு இப்போது சட்டமன்றம் ஒன்றுதான் என்று. அதையாவது நாம் காப்பாற்ற வேண்டாமா? அதற்காவது பாதுகாப்பு வேண்டாமா? அதை

(பிற்பகல் 12.50)

யாவது ஒழுங்காக நடத்தும்படி செய்வதற்கு ஆள் வேண்டாமா? இப்படிப்பட்ட நிலைமையை எண்ணிப் பார்த்தால், இதைப் போன்ற காரியங்களுக்காக யாரும் தங்களுடைய தொல்லைகள் குறைகள் இவைகள் இருந்தால் கூட இந்த அவசிய காரியங்கள் நடைபெறாமல் இருக்க, அதைத் தடுக்கக் கூடிய சூழ்நிலைக்கு ஆளாக்க யாராவது தூண்டிவ்ட்டாலும் சரி, அவர்கள் அந்த உணர்வுக்கு சொந்தக்காரர்களாக ஆகிவிட்டாலும் சரி, சூழ்நிலையால் அப்படிப்பட்டவர்கள் செயல் முறையால் இந்த அமைப்பைக் கூட தடுத்துவிடக் கூடாது, ஒழுங்குமுறையாக நடப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்கிற காரணத்திற்காகத் தான் இந்தத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டதே தவிர, தொழிலாளர்களுடைய போராட்டங்களை தடுக்கவேண்டும், தொழிலாளர்கள் போராட்டங்கள் நடத்தவே கூடாது. தொழிலாளர்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லக்கூடாது என்கிற நோக்கத்தால் அல்ல.

ஆர்டினன்ஸ் கொண்டு வந்தரல், அது எத்தனை மாதம் இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும் என்னை விட. புதிய திருத்தச் சட்டத்தை கொண்டுவராவிட்டால் அந்தச் சட்டம் தானாக ரத்தாகிவிடும். அது ஓரளவுக்கு எல்லோருக்கும் தெரியும். அதைவிட நாங்களே அந்தச் சட்டத்தை திரும்ப வாபஸ் வாங்கிக்கொள்வது என்பதும், ஒரு பெரிய காரியமல்ல. உங்களை எல்லாம் கேட்டுக்கொள்வது வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டாலன்றி அதிலும் இந்த நேரத்தில் இப்படிப்



1979 நவம்பர் 3] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

பட்ட போராட்டத்தை துவங்கி மறியல், வேலை நிறுத்தம் என்கிற காரியங்களில் ஈடுபடுவோம் என்றால், அரசவை நடக்காது. திட்டங்கள் நடைபெறாது. இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு என்ன செய்யவேண்டுமோ அது செய்ய முடியாமல் போய்விடும். ஆகவே ஓரளவுக்கு நேரம் காலம் அனுசரித்து இப்படிப்பட்ட போராட்டத்தை தொடங்குவது, அல்லது போராட்டத்தை நடத்துவோம் என்று சொல்வது என்ற எண்ணத்திற்கு அவர்கள் சொந்தக்காரர்களானால் இந்தச் சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியமே இல்லை. இதை இங்கேயிருக்கின்ற அத்தனை பேர்களும் ஒத்துக்கொள்வீர்கள் என்றால் இப்போதே நான் சொல்ல தயார், இந்தச் சட்டத்தை நான் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன் என்று நான் சொல்ல தயாராக இருக்கிறேன். அந்த உத்திரவாதம் எனக்கு வேண்டும்....

<u>திரு. க. அன்பழகன்</u>: தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் அவர்களுடைய உரிமையைக் கேட்டு போராட்டம் நடத்துவதை அடியோடு தடைசெய்யத் தக்க வகையில் கொண்டு வரப்பட்ட சட்டத்தை, அதுவும் அவசரச் சட்டத்தைக் கைவிட்டு விடத்தயார் என்று முதல்வர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அதைச் சொல்லுகிறபோது இது தானாக கூட லாப்ஸாகிவிடும். என்றும் வலியுறுத்தித்தான் நிறைவேற்ற வேண்டும் என்று நான் கட்டாயமாக கருத மாட்டேன் என்றும் எதிர்க்கட்சியில் உள்ள நீங்கள் எல்லாம் இப்படி வேலை நிறுத்தம் இல்லை என்று சொன்னால், அதற்குப் பின்னால் அப்படி உறுதிமொழி கொடுத்தால் அவசரச் சட்டத்தை கைவிட்டு விட்டு வருகிற சட்டத்தையும் விட்டுவிட தயார் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு உறுதிமொழியை நான் கேட்க விரும்புகிறேன. தொழிலாளர்கள் நடத்துகிற போராட்டங்கள் எல்லாம் எதிர்க்கட்சிகள் தூண்டிவிட்டு நடைபெறுகிற போராட்டமாக இருந்தால், எதிர்க்கட்சிகள் அப்படித் தூண்ட மாட்டோம் என்று மன திருப்திக்காகவாவது அப்படி ஒரு பதிலை சொல்லலாம். ஆனால் தொழிலாளர்கள் போராட்டம் தொடங்குவது எப்போது. அதற்குக் காரணமான வேண்டுகோளை வைக்கிற போது, கோரிக்கைகளை தருகிறபோது, அவைகளை உடனுக்குடன் கவனித்துச் செயல்படாமல் இருப்பதின் காரணமாக அழைத்து பேசவேண்டியவர்களை அழைத்துப் பேசாமல் இருப்பதின் காரணமாக — அப்படியும் தொழிற்சங்கத் தலைவர்களிடத்தில் பேசுகிறபோது, அந்தப் பேச்சில் கூட சந்தேகத்தை உண்டுபண்ணி ஐயப்பாடுகளை உண்டுபண்ணி அதிலே குழு பிரித்து இவ்விதம் மாறுபட்ட கருத்துக்களை உண்டாக்குவதின் காரணமாக தொழிற்சங்கங்கள் முறையோடு கேட்கிற கோரிக்கைகளை கூட, லேபர் டிபார்ட்மென்டிலுள்ள சில அதிகாரிகள் முதலாளிகளோடு சேர்ந்துகொண்டு கையெழுத்து வாங்குகிற முறையில் கட்டாயமாக செய்கின்ற அக்கிரமம்

காரணமாக தொழிற் சங்கங்கள் போராட்டம் நடக்கிறது. எனவே முதலமைச்சர் அவர்கள் எங்களிடத்தில், எதிர்க்கட்சிகளிடத்தில் கேட்கின்ற அந்த உறுதிமொழிகளை விட அவர்களுடைய அரசாங்கத்தினிடத்தில் உறுதிமொழி கேட்கவேண்டும். தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகின்ற நிலைமையை வளரவிடாமல், தடுக்கின்ற முறையில் நீங்கள் நடந்து கொள்வீர்களா என்று உறுதிமொழி கேட்டு— அதிகாரிகளிடத்தில் மட்டுமல்ல— சில அமைச்சர்களிடத்திலும் உறுதிமொழி கேட்டு முதலாளிகளுக்கு உடந்தையாக நிர்வாகிகளுக்கு துணையாக இன்னும் சொல்லப்போனால் தொழிலாளர்களுக்கு விரோதமாக எப்படிப்பட்ட ஒரு ஒப்பந்தத்தையும் நிறைவேற்றாதீர்கள். அப்படிப்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு காரணமாக இருக்காதீர்கள் என்று சொல்லி அந்த உறுதிமொழிகளை கேட்டுப்பெறுவார்களேயானால் தானாகவே இந்தப்போராட்டங்கள் தோன்றாது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அத்தியாவசிய சர்வீஸ்கள் தடைச் சட்டத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். அரசாங்கம் அதை வாபஸ் வாங்குவது பெரிய காரியம் அல்ல. அதை சட்டமாகக் கொண்டு வராமலேயே விட்டு விடலாம் என்று சொன்னார்கள். ஆனால் அதற்கு இம்மாதிரி சில நிலைமைகள் ஏற்படாததைப்பற்றி கட்சிகள் என்ன சொல்லுகிறது என்று கேட்கிறார்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியினர் சார்பில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் இதுவரை இந்தச் சட்டத்தை பயன்படுத்தவில்லை என்பதிலேயே அதனுடைய அர்த்தம் என்ன? அதை பயன்படுத்தக்கூடாது, அதைப் பயன்படுத்துவது சரியல்ல என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருப்பதினால் தான் அது பயன்படுத்தபடவில்லை. அப்படி பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற ஒரு சட்டத்தை மீண்டும் இன்றைக்கு சட்டமாக்குவதற்கு அரசாங்கம் எதற்காக முனைப்பாகச் செயல்படவேண்டும் என்று கேட்கிறேன். பிரச்னைகள் ஏற்படும்போது, தொழிலாளர்கள் வேலைநிறுத்தங்களில் ஈடுபடுகிறார்கள் என்று அரசுக்குத் தெரியும். ஆகவே ஏதோ ஒரு விபரீதமான ஒரு நிலைமை ஏற்படக்கூடிய நிலைமையைப் பற்றி குறிப்பிடுகிறார்கள் அப்படிப்பட்ட ஒரு விபரீதமான நிலைமை ஏற்படும்போது, எதிர்க்கட்சிகளிடத்தில் அவர்களை அழைத்துப் பேசுவதற்கு முன்வரும்போது, நாங்கள் வரமாட்டோம் என்று சொன்னோமா? விபரீதமான நிலைமைகள் ஏற்படும்போது அதை எப்படி சமாளிப்பது, என்று ஆலோசனை கலப்பதற்கு நாங்கள் வர மறுத்து இருக்கிறோமா? மறுத்திடவில்லை. மறுக்கவில்லை. அரசாங்கத்தோடு இப்படிப்பட்ட





பிரச்னைகள் வரும்போது, அவர்களோடு கலந்து பேசி, அவைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்பதில் நாங்கள் முயற்சி எடுத்திருக்கிறோம் என்பதை கடந்த இரண்டாண்டு கால சரித்திரம் எடுத்துக்காட்டும். தமிழ்நாட்டின் இன்றைய நிலைமையில், இந்த நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை லாப்ஸ் ஆகும்படி செய்யவேண்டும் அல்லது அரசாங்கமே வாபஸ் செய்வதாக அறிவித்தாலும், தமிழ் நாட்டிலுள்ள தொழிலாளர்களும், உழைப்பாளர்களும் பெருத்த மன நிறைவு அடைவார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேராசிரியர் அவர்களும், மாண்புமிகு சங்கரைய்யா அவர்களும் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் தூண்டிவிட்டால் அவர்களைப் போய்க் கேட்பதுதான் நியாயம். அந்தச் சூழ்நிலை உருவாக்காமல் அமைச்சர்கள் இருப்பார்களா என்ற உத்திரவாதத்தை அவர்கள் விளக்கமாகக் கேட்டார்கள். நான் சொல்ல விரும்புவதெல்லாம், அண்மையில் என்னென்ன நடந்துகொண்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

காவல் துறையினர் போராட்டத்தை துவங்கினார்கள். போராட்டத்தை துவங்கிய உடனேயே, இந்தப் போராட்டம் சரியா, இல்லையா என்பதைப் பற்றி அதிகாரிகள் பலரை வைத்து, அதைப்பற்றி நடவடிக்கை எடுப்பதற்காக முனைந்து நாட்டு மக்களுக்கு எப்படி பாதுகாப்பு கொடுப்பது, இதை எப்படி சமாளிப்பது என்கின்ற நிலையிலே இருக்கின்ற நேரத்தில், உண்ணாவிரதம் இருந்தகாவல் துறையினருக்கு மாலைஅணிவித்து, உங்களுக்கு நாங்கள் பாதுகாப்பு தருகிறோம், தொடர்ந்து வேலைநிறுத்தத்தை நடத்துங்கள் என்று சொல்கின்றவர்கள் இந்த நாட்டிலே இருப்பார்களானால், அவர்களிடம் நாங்கள் போய் கேட்காமல் உதவி செய்யாதீர்கள். ஒத்துழையுங்கள் என்று கேட்காமல், வேறு யாரை நாங்கள் போய் கேட்பது? அப்பேர்ப்பட்டவர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள், தமிழகத்திலே இருக்கிறார்கள். ஆகவேதான், பிரச்னைகள் வரும்போது, நாங்கள் இதைப்போன்ற வேண்டுகோளை விடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இங்கே நண்பர் சங்கரைய்யா அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டம் தேவைதானா என்பதை உள்ளிருத்தி, வேறுபல கருத்துக்கள் சொல்வதுபோல் சொல்லி லாப்ஸ் ஆகவிட்டாலும் சரி, வாபஸ் வாங்கினாலும் சரி,

அதைச் செய்யுங்கள் என்று சொல்வதுபோல் சொன்னார்கள், இதிலே எங்களுக்கு பிடிவாதம் இல்லை; கவுரவப் பிரச்னை கிடையாது. எங்களுக்கு எல்லோருடைய ஒத்துழைப்பும்தேவை; எல்லா அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் தேவை. வேறு எந்த மாற்றுக் கருத்துக்கள் இருந்தாலும், பொதுப் பிரச்னையில் எங்களுடன் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்பது எங்கள் ஆசை.

பல்லவன் டிரான்ஸ்போர்ட் போராட்டத்தின்போது, நாங்கள் சட்டத்தைக் கொண்டுவந்தோமே தவிர, மக்கள் மத்தியில் அறிவித்தோமே தவிர, அன்றைய தினமே அவர்களை அழைத்துப் பேசி, முடிவெடுத்து, காரியங்களை முடித்துக் கொண்டோமே தவிர, அவர்களுக்கு எவ்வளவு அரசால் கொடுக்க முடியுமோ அதைக் கொடுத்தோமே தவிர, நாங்கள் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை; இறுதிவரை பயன்படுத்தவில்லை. ஏதோ இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தங்களை எல்லாம் தடை செய்து கொண்டிருக்கின்றது என்கிற எண்ணத்தை நீங்கள் எப்படி கொண்டிருக்கின்றீர்கள்? இந்த எண்ணத்தை மக்கள் மத்தியிலே பலர் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையைத் தெரிந்து சொல்லுகிறார்களா, அலலது தெரியாமல் சொல்லுகிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு புள்ளிவிவரத்தைப் படித்தால், முன்னாலே இருந்த அரசும், இப்போது இருக்கின்ற அரசும் இந்தத் தொழிலாளர்கள் பிரச்னையிலே எப்படி செயல்பட்டன என்பதை இந்த நாடும், நீங்களும் தெரிந்துகொள்ளும் வகையில் ஒருசில புள்ளிவிவரங்களை படித்தாக வேண்டும். அதற்கு முன்பு ஒன்றைச் .சொல்ல விரும்புகிறேன்.

இந்த காவல்துறையின் போராட்டம்' இந்த அளவிற்கு இதைத் தொடங்கினார்கள். யார் யார் பெயரைப் பயன் படுத்தினார்கள்.அவரே இந்தப் போராட்டத்தை நான் விரும்ப வில்லை, இந்த வன்முறைகளை விரும்பவில்லை, இதை நான் ஏற்றுக்கொள்ளவும் இல்லை, ஆகவே என்னைப் பொறுத்த வரையில் எல்லோரும் வேலைக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று சொல்லியும், சில விஷமிகள் அவரது பெயரை இழுத்து, அந்தக் கருத்துக்குள்ளே புகுந்து விட்டார்கள் ஆகவே, இதற்கு நான் பொறுப்பல்ல என்று சொல்லி, வேலை நிறுத்தத்திலிருந்து பின்வாங்க வேண்டும், "வாபஸ் வாங்க வேண்டும் என்று சொன்ன பிறகு, இவ்வளவு நம்பிக்கை இந்த அரசின்மீது வைத்திருக்கின்ற ஒருவருக்கு, அச்சத்தை ஊட்டும் எண்ணம் நிச்சயமாக எங்களுக்கு இல்லை. இந்த அளவிலே இந்தச் சட்டத்தைத் திரும்பப்பெறுகிறோம். இந்தச் சட்டத்தை



இந்த அவையிலே கொண்டு வருவதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருத்தச் சட்டத்தையும் கொண்டு வருவதாக இல்லை.

(பிற்பகல் 1-00)

திரு. மு, கருணாநிதி : இந்த அவசரச் சட்டத்தைக் காலாவதி ஆக்கிவிடுகிறோம் அல்லது திரும்பப் பெறுகிறோம் என்று முதலமைச்சர் சொன்னதை வரவேற்கிற அதே நேரத்தில், அவரிடத்தில் ஒரு உறுதிமொழியைப் பெற விரும்புகிறேன். ஒருமுறை சட்டமன்றக் கூட்டத்தொடர் கலைப்புக்குப் பிறகு அவசரச் சட்டத்தைக் கொண்டு வருவது, இடைக்காலத்தில் அவசரச் சட்டத்தால் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்கள் மிரட்டப்படும் சூழ்நிலையை உருவாக்கி பிறகு சட்டமன்றம் கூடும்போது அதைக் காலாவதியாக்கிவிடுவது என்ற முறை கையாளப்படுகிறது. சென்ற முறை அவை முன்னவர் அவர்கள் இவ்வாறு கொண்டுவரப்படாது என்பதுபோன்ற உறுதிமொழியைக் கொடுத்து, இனிமேல் வரவே வராது, செத்துப் போய்விட்டது என்று குறிப்பிட்டார். சட்டமன்றம் முடிவுற்ற பின்பு மீண்டும் அவசரச் சட்டம் சொண்டு வரப்பட்டது. இப்போது கொடுக்கப்பட்ட இந்த உறுதிமொழி இந்தச் சட்ட மன்றத் தொடர் கூட்டம் முடிவுற்ற பிறகும் நிலைத்து நிற்குமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எப்படி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிற திறமைசாலி என்பதற்கு இதையும் ஒரு உதாரணமாக எடுத்துக்கொள்கிறேன். அவருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இரு கையும் சேர்ந்து கை தட்டினால்தான் ஒலி எழும்பும், அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்காமல் இருந்தால் அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வரவேண்டிய நிலைமை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். சட்டம் கொண்டு வந்தும் நாங்கள் அதைப் பயன்படுத்தவில்லை. பழிவாங்கும் நோக்கமோ, ஒரு கட்சியை அழித்துவிட வேண்டுமென்ற நோக்கமோ, ஒரு தொழிற்சங்கத்தை முடமாக்கவேண்டுமென்ற நோக்கமோ எங்களுக்கு இல்லை என்பதற்கு வேறு ஆதாரம் தேவையில்லை. ஒன்றை நான் சொல்வேன்—நான் உத்தரவாதம் கொடுக்கவேண்டுமென்று நீங்கள் விரும்புகிற அதே நேரத்தில், தயவு செய்து நீங்கள் தொழிற்சங்கத் தலைவர்கள் கோரிக்கை வெளியிட்ட உடனே "எங்கள் கட்சி இதை ஆதரிக்கும், இதற்கு பின்பலமாக இருக்கும் என்று சொல்லாமல், அவ்வாறு அவர்கள் செய்ய மாட்டார்கள் என்ற உத்தரவாதமும் அதிலே தொக்கி நிற்கிறது என்பதை ஒத்துக்கொண்டு அந்த வகையில் அந்தச் சட்டத்தைத் திரும்ப காரணம் இன்றி கொண்டுவர முயற்சிக்க மாட்டேன் என்று இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் தடை செய்த சங்கங்கள் எத்தனை எங்கள் ஆட்சியில், எங்கள் ஆட்சிக்கு முன்னால் மக்களால் தேர்ந்தெடுக்கபட்ட ஆட்சியில் தடைசெய்யப்பட்ட சங்கங்கள் எத்தனை என்பதுபற்றி ஒருசில புள்ளிவிவரங்களைச்சொல்ல விரும்புகிறேன்.

தடைச் சட்டம் கொண்டு வராமலேயே 1972-ல் மொத்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை 356; தடை செய்யப்பட்ட வேலை நிறுத்தங்கள் எண்ணிக்கை 7. சிம்கோ மீட்டர்ஸ், திருச்சி; இந்தியா மீட்டர்ஸ், சென்னை; சவுத் இந்தியா விஸ்கோஸ், சிறுமுகை; சிகார் பாக்டரீஸ் தம்மாப்பட்டி; மெட்ராஸ் வனஸ்பதி பிரைவேட் லிமிடெட் நெல்லிக்குப்பம்: மாடர்ன் பேக்கரிஸ், சென்னை; மைகோ பார்ம்ஸ் அண்டு, கெமிகல்ஸ் லிமிடெட், மேட்டூர்.

1973-ல் 314 வேலை நிறுத்தங்கள். தடைசெய்யப்பட்ட வேலை நிறுத்தங்கள் எண்ணிக்கை 4. மேலும் விவரங்களை இந்த மாதிரி படித்தால் நேரம் ஆகும் என்பதால் படிக்கவில்லை.

இந்திய பாதுகாப்பு விதியின்கீழ் தடைசெய்யப்பட்டது 4. சவுத் மெட்ராஸ் எலக்ட்ரிக் கார்ப்பரேஷன், திருச்சி—மத்திய பாதுகாப்பு விதி 1 (18)-ன்கீழ் தடைசெய்யப்பட்டது. மேட்டூர் கெமிகல்ஸ், மேட்டூர். 1974-ல் வேலை நிறுத்தங்கள் 316. தடை செய்யப்பட்டது 1. 1975-ல் வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் 244; தடை செய்யப்பட்டது 1; 1976-ல் வேலை நிறுத்தங்கள் 207 தடை செய்யப்பட்டது 1.

அத்தியாவசியப் பணிகள் பராமரிப்பு அவசரச் சட்டம் தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்கும் நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கும் விடப்பட்ட பின் நீதி மன்றத்தின் அல்லது நடுவர் மன்றத்தின் தீர்ப்பு கிடைக்கவும் தொழில் அமைதியை நிலைநாட்டுவதற்கும் மக்களுக்குவேண்டிய இன்றியமையாத பணிகள் நடைபெறுவதற்கும் தொழில் அதிபர்கள் தொழிலாளர்கள் அல்லது இரு சாராருக்கும் இடையே உள்ள நிலை, தொழிலாளர்களுக்கு பணம் கொடுப்பது உட்பட சில நிபந்தனைகள் கடைப்பிடிக்க ஆணை பிறப்பிக்கப்படுகிறது. அது சம்பந்தமான புள்ளி விவரங்கள் கீழே தரப்படுகின்றன. 1978-79 செப்டம்பர் வரை நடைபெற்ற மொத்த வேலை நிறுத்தங்கள் மற்ற கதவடைப்புகள் 328, தடை கிடையாது. தொழிலாளர் நடத்திய வேலை நிறுத்தங்கள் 225, தடை கிடையாது, எதுவாக இருந்தாலும் அரசுக்கு அதிலே பங்குண்டு . . . .

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் ஒரு விளக்கத்தை முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற விரும்புகிறேன். தொழிற் சங்கம் நடத்துகின்ற போராட்டத்தில்





வேலை நிறுத்தத்திற்குத் தடை என்பது முறை தவறான வேலை நிறுத்தம் என்று, தரவேண்டிய நோட்டீஸ் தராமலோ முன்னெச்சரிக்கை தராமலோ அல்லது எடுத்துக்கொள்ள வேண்டிய நாட்கள் இடையிலே எடுத்துக்கொள்ளாமலோ ஒரு வேலை நிறுத்தம் நடைபெற்றால் அப்போது அதற்கு அரசாங்கத்திலே அதிகாரிகள் அது முறையற்றது என்று தெரிவிக்கின்ற தடையைத் தெரிவிக்கிறார்கள். ஆனால் அந்த நாட்களில் அரசாங்கம் நேரடியாக விதித்த தடையில்லை. ஆனால், அந்த நாட்களில் என்ன என்ன தொழில்களில் வேலை நிறுத்தம் செய்வது தவறானது என்று நம்முடைய தடைச் சட்டம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தடைச் சட்டம் இருந்தது. இப்போது முடிந்துவிட்டது. சொல்லிவிட்டேன் ஆனால், இன்னொன்றைக் கூற விரும்புகிறேன். தவறான வழிமுறையைப் பின்பற்றி வேலை நிறுத்தம் செய்தது தவறு என்று சொல்கிற தடை, அது கூட எங்கள் ஆட்சியில் இல்லை. (ஆரவாரம்).

திரு. க. அன்பழகன் : இதிலிருந்து உங்கள் ஆட்சியிலே நடைபெற்ற வேலை நிறுத்தம் எல்லாம் முறைப்படி நடைபெற்ற வேலைநிறுத்தம் என்பதுதான் பெறப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேராசிரியர் அவர்கள் சொல்லலாம். ஆனால், நான் புள்ளிவிவரம் தரத் தயாராக இருக்கிறேன். காரணம் பல இடங்களில் முன் அறிவிப்பு இன்றி அண்மையில் கூட என். ஜி. ஓ. க்கள் நாங்கள் வேலை நிறுத்தம் செய்யப்போகிறோம் என்று நோட்டீஸ் கொடுக்காமல் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களைத் தடுத்து கைதுசெய்து பிறகு அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் செய்து அவர்களை அனுமதித்து இருக்கிறோம். இதிலிருந்து உண்மையை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள் என்று கருதுகிறேன்.

ஜனவரி 1979, 28—தொழிலாளர்கள் துறை அதிகாரிகள் தலையிட்டு தீர்த்துவைத்தவை 21; தானாகவே வேலை துவங்கியது 1; பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட்டவை 5; மூடப்பட்டது 1. சிக்மில்ஸ் என்ற அளவிலே.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சபைக்குத் தவறான ஒரு தகவலைத் தருகிறார்கள். என். ஜி. ஓ.-க்கள் மீது போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட்டதாகச் சொல்கிறார். சிவ இளங்கோ மீது போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட

வில்லை. இன்னும் பல வழக்குகள் திரும்பப் பெறப்படவில்லை. ஆகவே ஐ எம் ரெய்சிங் எ பிரிவிலேஜ் யகென்ஸ்ட் தி சீப் மினிஸ்டர்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஒட்டுமொத்த மாகச் சொல்லும்பொழுது கருத்துக்களைப் பிரித்துப் பேசுவது பழக்கம் இல்லை என்பது நம்முடைய நண்பருக்குத் தெரியும். பொதுவாகச் சொல்கிற கருத்துக்களை ஆள் ஒன்று என்று பிரித்துப் பார்க்கக் கூடாது. பொதுக் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் . . . .

திரு. அ. ரகுமான்கான் : ஐ எம் ரெய்ஸிங் எ பிரிவிலேஜ், ரூலிங் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யு சிட் டவுன்.

திரு. அ. ரகுமான்கான் : ரூலிங் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய மௌனமே தெரிவிக்கும். நீங்கள் எழுப்பியதில் ரூலிங் கொடுக்கிற அளவிற்கு ஒன்றும் இல்லை உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இந்த நேரத்தில் நான் தொழில் துறை பிரச்சினைகளைப்பற்றி இன்னும் பல சொல்லவேண்டி இருப்பினும் ஒன்றை இங்கே பதிலாகத் தரவேண்டியவனாக இருக்கிறேன். பல்வேறு பிரச்சினைகளை, குற்றச்சாட்டுகளை; கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதிலே கப்பல் ஊழல் 4 கோடி ரூபாய் என்று எல்லாப் புள்ளி விவரங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முதலிலே இதே மன்றத்தில் நாங்கள் கப்பல் வாங்குவதற்காக அதிகமான லஞ்சம் வாங்கினோம் என்ற குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. நான் அப்போதே எடுத்துச் சொன்னேன்.

[பிற்பகல் 1-10]

முதலில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட அந்தக் கப்பல் வாங்குவதற்கு இடையில் அவர்கள் சொன்னபடி தருவதற்கு இயலாது என்கிற நிலைமையும், அதிலே பல பிரச்னைகளும் ஏற்பட்டதன் விளைவாக, குறிப்பாக வாங்குபவர்கள்தான் கமிஷன் கொடுப்பது வழக்கமே தவிர, விற்பவர்கள் கொடுப்பது இல்லை என்கிற முறை நாட்டிலே



இருந்தாலும் விற்கின்ற—சாரி—வாங்குகிறவர்கள் கொடுக்க வேண்டுமென்றும், விற்பவர்கள் இல்லை என்றாலும், நாங்கள் கொடுக்க வேண்டுமென்று இருப்பதுபோக, அவர்கள் கொடுக்க வேண்டுமென்று பேச்சிலே வெளிப்படுகிறது என்று எண்ணி அது நிறுத்தப்பட்டு விட்டது என்பதை இந்த மன்றத்திலே நான் முன்பு சொல்லியிருக்கிறேன். அநதப் பிரச்னையைக் கலைஞர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்; முடிந்து போன ஒரு பிரச்னை. போன அசெம்பிளி கூட்டத்தொடரில் நான் சொல்லி அது முடிக்கப்பட்ட பிரச்னை. அடுத்து . . . . . .

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மேற்கு ஜெர்மனி கப்பல் ஹாம்பர்க்கிலிருந்து வாங்கப்பட்ட—வாங்கப் படுவதாக இருந்த கப்பலில் நடைபெற்ற ஊழலை திராவட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளினுடய பாராளுமன்ற உறுப் பினர்கள் மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டியதன் மூலமாகத் தவிர்க்கப்பட்டது என்று நான் இங்கே பேசியதாகக் குறிப் பிட்டேன். நான் சொல்ல வந்தது அந்த மேற்கு ஜெர்மனிக் கப்பல் வாங்குகிற விஷயத்தில் சிம்கோ அண்ட் சேஷசாயி பேப்பர் கம்பெனியினுடைய முதலாளி விஸ்வநாதனுக்கு என்ன தொடர்பு? ஏன் அந்தத் தொடர்பு இருந்தது என்பதைத்தான் முதலிலே சுட்டிக்காட்டினேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது என்ன தொடர்பு ஏன் தொடர்பு, என்பதைப் பற்றி நாங்கள் விசாரிக்க வேண்டுமே தவிர அதிலே அரசுக்கு என்ன சம்பந்தம் என்பது எனக்குத் தெரியவில்லை. என்னுடைய பிரச்னையெல்லாம் இந்தத் தமிழக அரசு யாரையாவது அப்படி ஒருவரை நியமித்து நீங்கள் இதற்காகப் பேசுங்கள் என்று, சொல்லுங்கள் என்று ஏற்பாடு செய்திருக்கிறதா? அதற்கு ஆதாரங்கள் இருக்கின்றனவா?

திரு. மு. கருணாநிதி : இதற்குத்தான் ஆதாரம் இருப்பதாகச் சொல்கிறேன். பூம்புகார் கார்ப்பரேஷனுக்கு விஸ்வநாதனுடைய செயலாளர் நடராஜன் டெலக்ஸ் மெசேஜ் அனுப்புகிறார். அதைப்போலவே நடராஜனுக்கும் பூம்புகார் கார்ப்பரேஷனி லிருந்து பதில் அனுப்பப்படுகிறது. பூம்புகார் கார்ப்பரேஷன் நடராஜனோடு தொடர்பு கொள்வானேன்? இதைப்போலவே, ஹாம்பர்க்கிலே இருக்கின்ற கம்பெனிக்காரர்கள் நடராஜனுக்குச் சொல்லி, நாங்கள் விஸ்வநாதனிடத்தில் பேசினோம். எச்.எம். சிங்கோடு தொடர்பு கொள்ள முடியவில்லை, அதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று அனுப்புவானேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, என் பக்கம் கருத்துக்களைச் சொன்னதற்காக எதிர்க்கட்சித் தலைவரர்வகளுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பிரச்னைகள் அரசுக்குச்சொந்தமான பிரச்னைகள் அல்ல என்று மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். அது தனி நிறுவனம். அது தவறு செய்தால் ஆட்களை மாற்றுவதற்கு அதிகாரம் இருக்கிறதே தவிர அவர்கள் செய்வதில் தலையிடுகின்ற அதிகாரம் இல்லை என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குத் தெரியும். அப்படியிருந்த காரணத்தால் தான் அதில் தவறுகள் ஏற்படுகின்றன என்று தெரியும்பொழுது ஆட்களை மாற்ற வேண்டியதாக இருக்கிறது. பின்னால் சொன்னார்கள். புள்ளி விவரங்களைச் சொன்னார்கள். ஒரு கோடி கை மாறியது என்ற முறையிலே குறிப்பிட்டார்கள். அங்கே எழுதி வைத்திருப்பார்கள். பிறகு சொன்னார்கள். 4 கோடி ரூபாய்க்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்று சொன்னார்கள். இப்பொழுது 4 கோடி ரூபாய் கொடுக்கப்பட இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் நான் இங்கே குறிப்பிடும்பொழுது விரிவாகச் சொல்லி நேரத்தை எடுத்துக்கொள்ளாவிட்டாலும் ஒன்றை நான் திரும்பத்திரும்பச் சொல்லியாக வேண்டும். பல்கேரியா அந்தக் கம்பெனியிடம், அதாவது அரசுக்குச் சொந்தமான கம்பெனி அது, அந்தக் கம்பெனியிலிருந்து இந்தத் தமிழக அரசு எந்த வகையிலேயாவது அங்கேயிருந்து சல்லிக்காசாவது வாங்குவதற்கு முயற்சியெடுத்து வாங்கியிருக்கிறது என்பதைச் சட்டபூர்வமாக நிருபித்துக் காண்பித்தால் நாங்கள் அத்தனை பேரும் இராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறோம்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே ..

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: நான் பேசி முடித்துவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி: நான் குறிப்பிடுவது, சுப்பிரமணியம், அவர் உங்களுடைய கேபினட் மீட்டிங் நடைபெற்ற அன்று போலந்து கம்பெனிக்காகச் செய்த சிபாரிசு, இவைகளைப்பற்றியெல்லாம் ஒரு கிரிமினல் ஆக்ஷன் எடுக்கத் தயாரா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அதற்குத் தயங்காது. இன்னொன்றும் சொல்கிறேன். என்னுடைய கோப்பு இப்பொழுது பரவியிருக்கிறது. அதிலே நான் ..

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே ....





மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. சி. ஆறுமுகம்: மரியாதையாக நடந்து கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அங்கேயிருக்கின்றவர் ஏன் ஆத்திரப்பட வேண்டும். இங்கே தலைவர்களுக்குள்ளே பேச்சு நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே கூர்ந்து கவனித்துக் கொண்டிருங்கள். அவர்கள் இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு அந்தப் பிரச்சினையை ஆராய்கிறார்கள். இருந்து கவனியுங்கள், சிரிப்பதும் அங்கேயிருந்து ஏதாவது ஒரு குரல் கொடுப்பதும் நல்லதல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சனையில் மிக ஆழமாக கவனம் செலுத்தித்தான் இதில் நாங்கள் ஈடுபட்டோம் என்பதை அழுத்தத் திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அவ்வப்போது விலையை உயர்த்த வேண்டுமென்கின்ற நிலைமை ஏற்பட்டபோதெல்லாம் அதிகாரிகளை அனுப்பி பேச வைத்து எப்படியும் கப்பல் வேண்டுமென்கிற நிலைமை ஏற்பட்ட பொழுது அமைச்சரவை கூடி வேண்டுமென்றால் அதிகப்படுத்தலாம் என்கிற அனுமதியை அவர்களுக்குக் கொடுத்தாலும் சென்ற அதிகாரி அதற்குக் குறைவாகவே அங்கே விலை பேசிவிட்டு வந்தார் என்பதையும் இங்கே நான் சொல்லியாக வேண்டும்.

அதோடு இங்கே வந்த பிறகு, பாங்கோ மறைந்த பிறகு சில பிரச்னைகள் என் காதுகளுக்கு வந்தன. இப்பொழுது படித்துக் காட்டினார்களே அதிலே சில கடிதங்கள், அங்கே போர்ட் மீட்டிங்கிலே கொடுக்கப்பட்டது என்பதும் எனக்குத் தெரிந்து, அந்தக் கடிதங்கள் போதிய அவகாசம் இல்லாத வகையில், எந்த நேரத்தில் அவை வந்தனவோ உடனடியாக அரசுக்குத் தகவல்தெரிவிக்கப்படவில்லையென்கிற காரணத்தினால்தான் அந்த நிறுவனத்தில் மானேஜிங் டைரக்டராக இருந்த இராமகிருஷ்ணன் அவர்களை மாற்றினோமே தவிர, எங்களுக்குச் சாதகமாக அவர் செய்யவில்லை என்பதற்காக அல்ல என்பதை இந்த அவையிலே சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லியாகவேண்டும் அந்தக் கோப்பிலே — கோப்பை பற்றி மற்றவர்கள் கேலியாகப் பேசலாம். ஆனால், கோப்புகள்தான் நமக்கு மிச்சமாக நிற்கின்றன, அந்தக் கோப்புகளில் நான் எழுதியிருப்பது, இனிமேல் எந்தக் காரணத்தை முன்னிட்டும் ப்ரோக்கரை வைத்து எந்தப் பணியிலும் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று எழுதிக் கொடுத்து, அதிகாரிகளை வைத்து, இப்பொழுது அரசுக்கு அரசு என்ற வகையிலே பேச்சுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதே தவிர, அதுவும் நேற்றைய இரவு 2 மணிக்கு 72 இலட்சம் ரூபாய் அதிகமாகத் தரவேண்டுமென்று அங்கேயிருந்து கேட்டு, நாங்கள் முடியாது என்று சொல்லி, சம்பந்தப்பட்ட போக்குவரத்துத் துறை அமைச்சருக்குச் சொல்லி, அதை 'கான்சல்' செய்தாலும் செய்யலாம், ஆனால் மேற்கொண்டு 72 இலட்சம் கொடுக்க முடியாது; காரணம் என்னவென்றால், விலைவாசி உயர்வுக்கு இடையிலேயே கிரேன்கள் வேண்டுமென்று நாம் கேட்டிருக்கின்றோம். இரண்டு விதமான கிரேன்கள் இருக்கின்றன. ஒன்று, மிக திடமான, உறுதியான கிரேன்கள். இதைத் தருவதாக ஒப்பந்தத்திலே எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், இதை மாற்றி ஜெர்மன் கம்பெனியைச் சேர்ந்தவர்கள் தர மறுக்கின்றார்கள். ஆகவே, நாங்கள் அதை மாற்றிச் செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்லும்போது 72 இலட்சம் ரூபாய் அதனால் அந்தக் கம்பெனி லாபம் பெறுகிறது. அது குறைக்கப்பட வேண்டும், அது அரசுக்கு தரப்பட வேண்டுமென்பது எங்களது கோரிக்கை. கொஞ்சம் சாதாரணமான நல்ல கிரேனைப் போட முடியவில்லை. இதைத் தான் தரமுடியுமென்றால் அந்தப் பணத்தை அரசாங்கத்திற்கு தர வேண்டும், அதைக் கணக்கிலே வரவு வைத்துக்கொள்ள நீங்கள் இணங்க வேண்டுமென்று சொல்லி, நேற்றைக்குத்தான் அங்கேயிருக்கிற அதிகாரிக்கு டெலக்ஸ் மூலமாக தகவல் தரப்பட்டிருக்கிறது —— இரவு 2½ மணிக்கு மேல் என்று கருதுகிறேன். ஆகவேதான், இந்த விஷயத்தில் நாங்கள் மீண்டும் சொல்லவிரும்புவது — — கப்பல் வாங்குகிறோமா, இல்லையா? இல்லை, நிறுத்திவிடுகிறீர்களா என்றெல்லாம் சொல்கிறார்கள் —— குற்றம்சாட்டிவிட்டார்கள் என்பதற்காக ஒரு நல்ல காரியத்தைச் செய்யாமல் விட்டுவிடுவது என்பது இந்த அரசினுடைய நோக்கம் அல்ல. அல்லது, குற்றம் சாட்டவில்லை, எப்படியாவது இது நடந்து போக வேண்டுமென்பதற்காக, தீமையாக இருந்தாலும் அதை நடத்துவது என்பதும் இந்த அரசினுடைய கொள்கை அல்ல. ஆகவே, நாங்கள் குறிப்பிடுவது பலகேரிய கப்பல் வாங்கப் பெற்றாலும் அது அந்த அரசினுடைய தொடர்போடு தெரிந்துதான் நடந்திருக்கிறது, அம்பாசிடர் முதற்கொண்டு தெரியும். அம்பாசிடர் வந்து சந்தித்துப்பேசுகிற அளவிற்கு நாம் வைத்திருக்கிறோமே தவிர, யாரும் ப்ரோக்கர்கள் வைத்து நடைபெறுவதில்லை. அப்படி நடந்தால் அதை ஏற்றுக்கொள்ளப் போவதும் இல்லை.





என்னுடைய கோப்பில் நான் இறுதியாக உத்தரவு போட்டிருக்கிறேன். நேரடியாக இதுபோன்ற வெளிநாட்டு தொடர்புள்ள எந்தக் காரியம் நடைபெறுவதாக இருந்தாலும் அரசுடனேயோ அல்லது அந்தக் கம்பெனியுடன் இந்த அரசிலே இருக்கிற அதிகாரிகள் தொடர்பு வைத்துக்கொள்ளலாமே தவிர, இடையிலே எந்த கம்பெனிகளும் புரோக்கர்கள் என்று வந்தால் அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டிருப்பதை நான் படித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன். ஆகவே, இந்தச் செய்திகள் முழுவதும் படித்துக் காண்பிக்கும்போது தொடர்பாகத் தெரியும், ஏதோ ஒன்றுக்கொன்று இணை இருப்பதைப் போல் சொல்ல முடியும். அதுவும் கலைஞர் அவர்களுக்கு இருக்கிற திறமையில் இடையிலே இடைச்செருகல்போல் அங்கங்கே பேசும்பொழுது 'இது எதற்காகத் தெரிகிறதா — இந்த லஞ்சத்திற்காக; இதைப் பேசுவது எதற்காக — அங்கே பணம் பெறுவதற்காக; இந்தப் புள்ளி விவரம் எதற்காக வருகிறது தெரியுமா, அந்தக் கடிதம் ஏன் போகிறது தெரியுமா — இதை இப்படிச் சுற்றி வளைத்து இப்படிக் கொண்டு வா பணத்தை என்று சொல்வதற்காக' என்று அவர் சொல்கிறார். ஒருவேளை ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வகையில் திறமை இருக்கலாம். ஆனால், எங்களுக்கு அந்தத் திறமையில்லையென்பதை நான் தயவுசெய்து சொல்கின்றேன்.

<u>திரு. மு. கருணாநிதி:</u> உங்கள் திறமை எல்லோருக்கும் தெரியும், வேஷம் போட்டுக்கொண்டு ஊரை ஏமாற்றிக்கொண்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். (கூச்சல் குழப்பம்) நான் சொல்ல விரும்புவது என்னவென்றால்,— தலைவரவர்களே, நான் கேட்பது, இராமகிருஷ்ணன் ஐ. ஏ. எஸ். அவர்கள் தவறான முறையில் நடந்து கொண்டார்கள். உரிய நேரத்தில் எங்களுக்குத் தரவேண்டிய தகவல்களைத் தரவில்லை. ஆகவே, அவரை மாற்றினோம் என்று முதலமைச்சர் சொன்னது முற்றிலும் உண்மைக்கு மாறான தகவல் என்ற தகவலை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

ஏனென்றால் 7-5-79 மாலை அமைச்சரவை கூடுகிறது. அன்று காலையிலே சுப்பி என்கிற சுப்பிரமணியன் போலந்து கப்பலுக்கு சிபாரிசு செய்து கடிதம் எழுதுகிறார். உடனடியாக அதைப் பரிசீலனை செய்து இராமகிருஷ்ணன் இதை தவறான தகவல்கள் எனவே அதை அந்தக் கப்பல்களை வாங்கக் கூடாது என்று பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பொரேஷனுக்கு அன்றைய எம். டி., திரு. இராமகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ். எச்சரித்தது தவறு என்று கருதுகிறீர்களா? அதைத் தொடர்ந்து மறுபடியும் இந்த சேதியைக் கேள்விப்பட்டவுடனே கேபினட் கூடுவதற்கு

அரை மணி நேரத்திற்கு முன்பாக மறுபடியும் அதே சுப்பி மற்றொரு ஆஃபரை தருகிறார். அந்த ஆஃபருக்கு உரிய கம்பெனி எதுவும் கிடையாது. இது சுத்த ஃப்ராடு, போகஸ் என்று உடனடியாக எச்சரிக்கை செய்தாரே இராமகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ். அது தவறு என்று கருதுகிறீர்களா? எந்தக் காரணத்திற்காக அவரை உடனடியாக மாறுதல் செய்தீர்கள்?

அதே நேரத்திலே இரண்டாவதாக நீங்கள் டெல்லியிலே உள்ள ஷிப்பிங் கார்ப்பெரேஷன் பண்ட் கமிட்டிக்கு எதற்கு இந்தக் கப்பலை வாங்கவேண்டாமென்று, அதற்கான அனுமதி கொடுக்க வேண்டாமென்று அவ்வளவு அவசரப் பட்டு நீங்கள் ஏன் தந்தி கொடுக்கிறீர்கள். அதையும் நீங்கள் விளக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஆத்திரப்படாமல் பேசவேண்டும். வார்த்தைகள் சூடாக இருக்கக் கூடாது. தாங்களே இப்படிப் பேசக்கூடாது. அப்படிப் பேசவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, முதலமைச்சர் சொல்லும்போது ஏதோ அந்தக் காரியத்திலே தலைசிறந்தவர் எதிர்க்கட்சித் தலைவர்தான் என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருமையாகப் பேசுவார்கள் நான் விளக்கம் பெறுவதற்காகக் கேட்கிறேன் என்றார்.

திரு. மு. கருணாநிதி: மரியாதையோடு சொல்லிக்கொள்கிறேன். அந்தக கருத்துலே அவர் சொல்லவில்லை. முதலிலே அந்த வாசகத்தை அவர் பயன்படுத்தினார். பிறகு சொன்னார், எதெதிலே யார் யாருக்குத் திறமை உண்டு என்று அந்தத் திறமை முழுவதும் இன்றைக்கு ஒரு சேரப்பெற்றிருப்பவர் நம்முடைய முதலமைச்சர்தான்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த உணர்ச்சி வளர்க்கப் படுகின்ற சூழ்நிலையை நான் உருவாக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்றை நான் சொல்லியாக வேண்டும். இந்தப் பிரச்சனைகள், அவர் கொடுத்த டெலக்ஸ் என்று சொல்வது எல்லாம் நேரடியாக எந்த அமைச்சருக்கோ அல்லது எனக்கோ அவர் தெரிவிக்கவில்லை. கூறவுமில்லை. போர்டு மீட்டிங்கில்தான் வைத்து இருக்கிறார்கள். அது முறைகேடு, எனக்குத் தகவல் கொடுத்திருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் அவர்களை அழைத்து விசாரித்தேன்.



இங்கே போகஸ், போகஸ் என்று சொல்லுகிற போலந்துக் கப்பலைப் பற்றி, குறைபாடுகளைப் பற்றி சொல்லும்போது அவர் என்னிடம் சொன்னார். அவர் சொன்னது; ஏதோ கையெழுத்து சரியாக இல்லை; கம்பெனியினுடைய பெயர், முத்திரைக் கூட இல்லை. இதை எப்படி நம்புவது. கேட்டு விட்டு, இன்னொரு புத்தகத்தை அப்பொழுதுதான் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறபோது அதிலே வந்த கவரிங் லெட்டர் போல, கவரிங் புக்லெட் வந்து இருந்தது. அச்சடிக்கப் பட்ட புத்தகமும் கடிதமும் இருந்தது. அதிலே எழுதப்பட்டு இருந்தது. நாங்கள் முன்னால் எழுதிய கடிதத்தில் எழுதி இருக்கிற எண்ணில் தவறு இருக்கிறது. திருத்தச் சொல்லி இருக்கிறோம். இந்த இந்தக் கப்பலுக்கு தேவையான இந்த உறுப்புகள் இவைகள் எல்லாம் அதிலே இருக்கிறது என்று, அந்த பிரின்ட் செய்த புத்தகத்தையும் கடிதத்தையும் காட்டினார். நான் கேட்டேன் நீங்கள் இந்த ஒரு கடிதத்தை மட்டும் படித்துவிட்டு இதை போகஸ் என்று எப்படி சொல்ல முடியும். இதையும் விவரமாகப் படித்திருக்க வேண்டும் அல்லவா? அங்கே இருக்கிற அதிகாரிகள் இன்னொரு புத்தகத்தை அனுப்பி, படங்களை அனுப்பி, அதிலே இன்னின்ன கருவிகள் என்பதைப் பற்றியெல்லாம் விவரம் தந்திருக்கிற முன்னால் நாங்கள் எழுதியிருந்த கடிதத்திலே இருக்கிற எண்ணிலே மாற்றம் இருக்கிறது, தவறு ஏதாவது உள்ளதா என்றெல்லாம் எழுதியிருக்கிறார்களே இதைப்பற்றியெல்லாம் ஏன் சொல்லவில்லை என்று கேட்டபோது பதிலே வரவில்லை. அவருடைய பேச்சை எல்லாம் இங்கே நாடாவில் யாரோ ஒரு பாபா பதிவு செய்திருப்பதாக சொன்னார்களே, அதைப் போல நானும் பதிவு செய்து வைத்திருக்கிறேன். அவரது பேச்சை மட்டுமல்ல; அதே போல இன்னொருவர், மேல் அதிகாரி அவரையும் வைத்து விசாரணை வைத்த பிறகுதான், இந்தக் கோப்பிலே, இந்தக் கருத்தை எழுதினேன். அப்போதுதான் அவரிடம் சொன்னேன். உங்களுக்குத் தெரிந்தவைகளை நீங்கள் உங்களுடைய இலாகா அமைச்சருக்கு தெரிவித்திருக்க வேண்டும். அந்தக் கடிதத்தை எங்கோ கொண்டுபோய் வைத்துக் கொண்டு அதை வெளிக்காட்டாமல் இப்படி செய்திருக்கிறீர்கள். நீங்கள் நடந்து கொண்ட முறை தவறு. ஒரு அதிகாரி அப்படி இருக்கக் கூடாது, என்று சொன்னாலும் அவர் மிகத் திறமையோடு செயல்படுகிறவர் என்கிற காரணத்தால் இவரைப் பதவியிலிருந்து இறக்க வேண்டுமென்றல்ல வேறு வழியிலே் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற காரண த்தால் வைத்துக் கொண்டோமே தவிர இவ்வளவு பெரிய பொறுப்பை தந்து ஒரு நாட்டுக்கு தீமை ஏற்படக் கூடிய ஒரு காரியத்தைச் செய்யக் கூடாது என்பதுதான் என் நோக்கம் என்பதை சொல்லி என்ன எழுதியிருக்கிறது என்பதைப் படித்துக் காட்டுகிறேன்.

''எவ்வளவு அவசரமாக கரி கொண்டு வரவேண்டும் என்று மின்சார வாரியமும், தொழில் அதிபர்களும் வற்புறுத்து கின்றார்களோ அதற்கு நேர்மாறாக தாமதமாகிக்கொண்டே போகிறது. நான் அமெரிக்காவிற்கு போகும் முன் அமைச்சர வையில் முடிவு செய்யப்பட்டும் இன்னமும் குழப்பம் என்ற நிலைமை இருக்குமானால், இதன் அடிப்படைக் காரணம் கண்டு பிடித்து நீக்கப்பட்டாகவேண்டும்.

ப்ரோக்கர் இன்றி பல்கேரிய அரசுடன் நேர்முகப் பேச்சு நடப்பதாகக் கூறியிருந்தும், இப்போது குழப்பம் என்று தகவல் வருவது குறிப்பிற்குரியதாக உள்ளது. திரு. எச். எம். மோகிந்தர் சிங் முதலில் வெளிநாடு சென்று ரஷ்யா தப்பல் வாங்க ஒப்பந்தம் செய்து வந்தார். உதிரி உறுப்புகள், எவ்வளவு தருவார்கள், பழுதானால் ஆட்கள் தருவார்களா என்று அவர்களிடம் உறுதி பெறாமல் வந்து விட்டார் என்று கூறப்பட்டது. இது போன்று இன்னும் சில காரணங்கள் கூறி அதை வேண்டாம் என்று கூறியதன் பேரிலும், திரு. மோகிந்தர் சிங் பேசினால் காலதாமதம் ஏற்படும் என்பதாலும், திரு. பாங்கோ அவர்கள் — மறைந்து விட்டார் அவரிடம் ஏற்பாடு செய்யச்சொல்லி, அமைச்சரவை 11·2 என்ற வகையில் பல்கேரிய கப்பலை அவர் 15 கேட்டதால் வாங்க அனுமதித்தது. அவர் 13-க்கே நேரில் பேசி முடித்து வந்தார். அதன் பிறகு அதைவிட குறைந்த விலையில் அதிக வசதியுடன் ரூபாய் முறையில் பெற்றுக் கொண்டு பல்கேரிய கப்பலின் விலையை விடக் குறைவாகத் தருவார்கள் என்ற காரணத்தால் அதை வாங்கலாம் என்று அமைச்சரவை முடிவு எடுத்தது. ஆனால் இப்போது மீண்டும் குழப்பம் என்றும், அப்படி கப்பல் கொடுக்க ஒரு கம்பெனி தயாராக உள்ளதா, இல்லையா என்றும் செய்தி குறிப்பிடுவது ஏன் என்று புரிந்து கொள்ள இயலவில்லை. எனவே தலைமைச் செயலாளரைக் கலந்து அவர் கருத்தை அறியலாம்.

திரு. ராமகிருஷ்ணன், திரு. எச். எம். சிங், அவர்கள் இருவரும் இந்தக் கப்பலைப் பற்றிய தொடர்புகளின் விவரங் களை இனி போக்குவரத்துத் துறை அமைச்சருக்குத் தெரிவிக்க வேண்டும். யாராவது ஆட்சியில் சட்டத்திற்குப் புறம்பாக நடந்து கொள்வார்கள் என்றால் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஒரு வாரியமாக இருப்பினும், அது எப்படி செயல்படுகிறது என்பதையும், இது போன்றவைகளில் உடனுக்குடன் உண்மைச் செய்திகளையும் அரசுக்குத் தெரிவிக்கவேண்டும். இப்போது பல்கேரியா கப்பல், போலந்து கப்பல் இவற்றின் நிலைமை என்ன? இவைகளைப்



பற்றிய கடிதப் போக்குவரத்துகள் யாவை என்பதை என்னி டத்தில் நேரில் காண்பித்து திரு. எச். எம். சிங், திரு. ராம கிருஷ்ணன் எனக்கு விளக்க வேண்டும். நாளைய தினம் பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரையில் தியாகராய நகரில் உள்ள என்னுடைய அலுவலகத்தில் சந்திக்கவேண்டும்.'' இது தான் நான் எழுதியது.

அதற்குப் பிறகு, திரு. எச். எம். சிங், திரு. சீனிவாசன், திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன் ஆகிய மூவரும், அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் முன்பாக விளக்கங்களையும், ஆதாரங்களையும் தனித்தனியாக அந்த பல்கேரிய கப்பல் வியாபாரத்தில் சில தவறுகள் நடக்க இருந்தன என்று கண்டறிந்து கொண்டேன். எனவே அது பற்றி சம்பந்தப்பட்டவர்களை விசாரிக்கவேண்டும். அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்ப தற்கு சில நாட்கள் தேவைப்படுகின்றன. எனவே அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் கோரிக்கைபடி ஒரு மாத தவணை கேட்டு எழுதுவது மிகவும் தேவையாகிறது. எனவே இது சம்பந்த மாக அந்தக் கப்பல் கம்பெனிக்கு இன்றே டெலக்ஸ் மூலமாக தெரிவிக்கவும். விரைவில் அமைச்சரவைக் கூட்டி இது சம்பந்த மாக ஆதாரங்களையும், கருத்துக்களையும் கூறி, அமைச்சரவை விரைவில் முடிவு எடுக்க ஆவன செய்யவேண்டும். இது அவசரமும், மிகவும் முக்கியத்துவமும் உள்ள விஷயமாகும். நம்முடைய கொள்கைக்கு நேர்மாறான கருத்துக்கள் இருப்ப தாக நான் உணர்வதால் விரைவில் சரியான முடிவு எடுத்து சம்பந்தப்படுபவர்களை நீக்கியாகவேண்டும். நடுவில் ப்ரோக் கர்கள் என்பதே அடியோடு நீக்கப்படவேண்டும். இது என்னு டைய உத்தரவு.'' (கைதட்டல்)

இதற்குமேல் ஒரு முதலமைச்சர் என்ன செய்ய முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இப்படி நாங்கள் நடவடிக்கை எடுத்து, தவறுகள் நேருகின்றன என்று பார்க்கிறபோது, நான் டெல்லிக்குப் போனபோது அம்பாசிடர் அவர்களை வரவழைத்து அவர்களிடத்தில் நேரில் பேசினேன். இதில் வேறு யாரும் குறுக்கிடக் கூடாது. இதிலே நேரடியாக அதிகாரிகளோடு தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண் டேன். இதற்கிடையில் எனக்கு ஒரு பிரச்னை வந்தது.

அவர்களால் இன்னின்ன ஸ்பேர் பார்ட்ஸ் கொடுப்பதாக எழுதி இருந்ததில், திடீரென்று சில குறைவுகள், அதிலே சில அட்ஜெஸ்ட்மென்ட் செய்து கொள்ளலாம் என்பது போல் ஒரு கடிதம் வந்ததாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் சந்தேகப்பட்டேன். இவ்வளவு அட்ஜெஸ்ட் செய்யலாம் என்றால் ப்ரோக்கர்களுக்கோ, முன்னால் பேசப்பட்டவர்களுக் கோ ஏதோ இதிலிருந்து போகிறது என்று பொருள். ஒரு....

20, அல்லது 30 லட்சம், 50 லட்சம் ஸ்பேர் பார்ட்ஸ் தருகிறேன் என்று சொல்கிறபோது, அதாவது 1½ கோடி ரூபாய் அளவிற்கு ஸ்பேர் பார்ட்ஸ் தருகிறேன் என்று சொல்கிறபோது அதிலே கொஞ்சம் கொடுக்கிறோம், இதைக் கொஞ்சம் மாற்றி முடித்துக் கொள்ளலாம் என்று சொன்னால் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. உடனடியாக அந்தக் கடிதத்தை மத்திய அரசுக்கு அனுப்பினேன். மத்திய அரசுக்கு அனுப்பி எனக்கு இப்படி சந்தேகம் இருக்கிறது. ஆகவே, உங்கள் அதிகாரிகளை வைத்து, இதை விசாரித்து இதை ஏற்றுக்கொள்வதா, கூடாதா, இதிலே உண்மையான தவறு என்ன என்று கண்டுபிடித்துத் தரவேண்டும். அதற்கு நான் கடிதம் எழுதினேன். அதற்குப் பிறகு அவர்கள் விசாரித்தார்கள். விசாரித்த பிறகு அவர்களே நேரடியாகப் பேசினார்கள். பல்கேரியா கப்பல்காரர்கள் தமிழகத்தில் இருந்து அல்ல, இந்தியாவிலிருந்து, ஒரு ஆண்டுக்குள் இத்தனை கோடி ரூபாய்க்கு ஏதாவது அதற்கு பதிலாக அவர்கள் சாமான்கள் வாங்கவேண்டும் என்று அவர்கள் கட்டளை போட்டார்கள்.

[பிற்பகல் 1-30]

அதை உடனே அவர்கள் மறுத்தார்கள். எங்களால் முடியாது: எங்களுக்குத் தேவையான பொருட்களை ஒப்பந்தம் செய்து முன்னாலே வாங்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி இருந்தால்தான் இதை நாங்கள் கவனிக்க முடியும் என்று மைய அரசு சொன்னது. உடனே அவர்கள் சொன்னார்கள், நாங்கள் வேண்டுமென்றால் இத்தனை கோடி ரூபாய்க்கு சாமான்கள் வாங்கிக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். இந்திய அரசு உடனே, இத்தனை கோடி ரூபாய்க்கு இன்னின்ன சாமான்களை இந்த ஆண்டுக்குள் வாங்குகிறோம் என்று எழுதித் தாருங்கள் என்று கேட்டது. அது எங்களால் முடியாது. வேண்டுமென்றால் இந்த ஆண்டுக்குள் என்று சொல்கிறோம்; அப்படி எழுதித் தருகிறோம் என்று சொன்னார்கள். அப்படி சொன்ன பிறகு ஒப்பந்தம் செய்து, அதன் பிறகுதான் அனுமதி எங்களுக்கு வந்தது. இதுதான் உண்மை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மணி ஒன்றரை ஆகிறது. இதோடு முடித்துக்கொள்ளலாமா?

<u>திரு. மு. கருணாநிதி:</u> தலைவரவர்களே, இனிமேல் இடைத்தரகர்கள் ஒழிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டார்கள். பல்கேரியாவுக்கு பிரிக்ஸ் ப்ரூக் என்ற ஏஜென்ட்களையும், பூம்புகாருக்கு மக்கினான்ஸ் மக்கன்சி ஏஜென்ட்களையும் இந்த காபினட்தான் அங்கீகாரம் செய்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் ஒன்றை நான் முதலமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன். இடைத்தரகர்களால்தான் தவறு ஏற்பட்டிருக்கிறது எனவே இடைத்தரகர்களே வேண்டாம் என்ற கருத்து



இப்போது முதலமைச்சர் சொன்ன கருத்தாகும். ஆனால் இந்த இடைத்தரகர்கள் செய்த தவறுகளைத்தான் இராமகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ். அவர்களும், சிங் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். அப்படிச் சுட்டிக் காட்டியதற்காக அவர்கள் வேலை மாற்றம் செய்யப்படுவானேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> அவர்கள் சுட்டிக் காட்டவும் இல்லை; அவர்கள் கடமையை சரிவர செய்யவும் இல்லை. அதுபற்றி எனக்குத் தகவல் கொடுக்கப்படாதது மாபெரும் குற்றம். அந்த இலாகா அமைச்சருக்கு தகவல் சொல்லியிருக்க வேண்டும். இந்த கடிதங்கள் இப்போது வந்து பேசுகின்றனவே, அதுபோல முன்பே பேசியிருந்தால், அந்த போர்டு மீட்டிங்கிற்குப் போவதற்கு முன்பே பேசியிருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இப்போது விவாதத்தை முடித்துவிடலாம். இப்படியே போய்க்கொண்டிருந்தால் எப்போது முடியும் என்று தெரியவில்லை. மீண்டும் எப்போது எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னால் நல்லது. நீங்கள் பேசி, அதற்குப் பின்னால் அவர்கள் பேச வேண்டும். இப்போதே ஒன்றரை மணி கடந்துவிட்டது. இன்னும் எவ்வளவு நேரம் ஆகும் என்று தெரியவில்லை.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> தலைவரவர்களே, இன்னும் 3 மணி நேரத்திற்குமேல் எனக்குத் தேவை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் திங்கட்கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

176. தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டம் செயலுக்குவரும் நாளினை நிர்ணயிப்பது குறித்தும், தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்துவது

குறித்த விதிகளை உருவாக்குவது தொடர்பாகவும் சமூகநலத் துறையின் 21-9 1979-ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண் 1628ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1978) 24 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

## ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*31. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 51/1979).

*32. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 52/1979).

*33. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1979).

*34. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 54/1979).

*35. 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சிமன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1979).

*36. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91—அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1979).



### பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

*37. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 57/1979).

*38. 1979-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 58/1979).

**39. உடுக்குறியிடாத வினா-விடை பட்டியல் (301 முதல் 500 வரை.)

---

* 1—11—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன

** 2—11—1979 அன்று பேரவை முன் வைக்கப்பெற்றன.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

## திங்கட்கிழமை 1979 நவம்பர் 5

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள் விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பரமக்குடி கோட்டத்தில் மராமத்துப் பணிகள்

* வினா எண் 101— திரு. என். வரதராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பரமக்குடி கோட்டத்தில் பொதுப்பணித்துறை மராமத்து வேலைகள் டெண்டர் விடப்படாமல் ஆஃபர் (Offer) முறையில் வேலைகள் செய்யப்படுகின்றனவா?

(ஆ) இவை மூலம் அரசுக்கு ஏற்படும் நன்மைகள் என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) பரமக்குடி கோட்டத்தில் பொதுப்பணித்துறை மராமத்து வேலைகளான செப்பனிடுதல் காலமுறை பராமரிப்பு, புதிய கட்டுமானப் பணிகள் முதலியன யாவும் ஒப்பந்தப்புள்ளி முறையி லேயே நிறைவேற்றப்படுகின்றன. ஆயினும் நெருக்கடி காலப் பணிகள்—அதாவது, புயல், வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகள் அரசு அளித்துள்ள சில விசேட அதிகாரங்களின் அடிப் படையில் "நியமனமுறை" மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இம்முறை வழக்கமான முறையாக எல்லா நேரங்களிலும் செயல் படுத்தப்படுவதில்லை.

(ஆ) விருப்பறிவுப்பு முறையில் நெருக்கடி காலங்களில் மராமத்து வேலைகளை துரிதமாகச் செயல்படுத்த அரசால் முடிகிறது. இதனால் உயிர், பொருள் மற்றும் பயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்படுகின்றன. மேலும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட ஆயக்கட்டுதாரர்களுக்கும் கிராம மக்களுக்கும் வேலை வாய்ப்பும், ஓரளவு ஊதியமும் பெற வகை செய்யப்படுகிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் மட்டும் அப்படி என்ன விசேஷம்? ஏன் அங்கு மட்டும் டெண்டர் இல்லாமல் ஆஃபர் முறையில் வேலைகள் கொடுக்கப்படுகின்றன? இதேபோல மற்ற இடங்களுக்கும் விடப் படுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு புயல் வெள்ளம் ஏற்பட்டாலும் அங்கெல்லாம் இந்த ஆஃபர் முறையில் விடப்படும்.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு என்னென்ன பணிகள் நியமன முறையில் ஒப்படைக்கப்படுகின்றன? அதற்கான காரணங்கள் என்ன என்று அறிவிக்க இயலுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, புயல் வெள்ளம் போன்ற இயற்கை உற்பாதங்களுக்கு ஆளாக்கப்படும் நேரங்களில், ரோடுகள், மருத்துவ மனைகள், பள்ளிக்கூடக் கட்டிடங்கள் போன்ற இடங்களில் ஏற்படும் சேதங்களுக்கு நிவாரணம் அளிக்க போர்க் கால அடிப்படையில் வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டும். எனவே இப்பணிகள் நியமன முறையில் நிறைவேற்றப்படுகின்றன. டெண்டர் கேட்டு வேலைகள் கொடுக்க வேண்டும் என்றால் குறைந்த பட்சம் ஒரு மாத காலத்திற்குப் பின்னால்தான் ஒப்பந்தக்காரர்களிடம் வேலையை ஒப்படைக்க முடியும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, புயல் வெள்ளக் காலத்திலே மிக அவசரமாக சில நடவடிக்கைகள் செய்ய வேண்டியிருக்கிறது. அது உண்மைதான். ஆனால் சில பாதிப்புகளுக்குச் செய்ய வேண்டிய வேலைகள், அதிகமாகச் செய்யப்பட வேண்டிய பின் வேலைகள் எல்லாம் ஒரு ஆண்டு கூட காலு நேரம் தேவைப்படுகிறது. அம்மாதிரியான வேலைகளுக்கு டெண்டர் கேட்டு அரசு வேலைகளை அளிக்குமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே அரசு அவ்வாறுதான் வேலைகளை அளிக்கிறது.

## நாட்டரம்பள்ளித் தொகுதியில் மின்வாரியப் பிரிவு அலுவலகங்கள்

* வினா எண் 102—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வட ஆற்காடு மாவட்டம், நாட்டரம்பள்ளித் தொகுதியைச் சேர்ந்த விஷமங்கலம், சுந்தரம்பள்ளி, கொரட்டி வெங்களாபுரம் ஆகிய ஊர்களில் தமிழ்நாடு மின்வாரியப் பிரிவு அலுவலகங்கள் திறக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளதா?

(ஆ) ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தால் இதுவரை ஏன் திறக்கப்படாமல் இருக்கிறது?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (ஆ) : திருப்பத்தூர் கிராமப்புறம் மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு தமிழ்நாடு மின்சாரப் பிரிவு அலுவலகங்களின் தலைமையகங்கள் முறையே சுந்தரம்பள்ளி, கொரட்டி மற்றும் விஷமங்கலம் ஆகிய ஊர்களுக்கு 6-6-79 முதல் மாற்றப்பட்டு இயங்கி வருகின்றன. வெங்களாபுரத்தில் ஏற்கெனவே ஒரு துணை மின் நிலையப் பிரிவு அலுவலகம் இயங்கி வருகிறது.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, மின் வாரியத்தில் வேலை செய்கிற ஊழியர்கள் ஒரு சில இடங்களில், அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிற வகையிலே பொதுமக்களிடம் நடந்து கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எத்தகைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. ஏதேனும் குறிப்பிட்ட புகார்கள் வருமேயானால் அதைப்பற்றி நிச்சயமாக மின் வாரியத்திற்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## Consumption of power by private partics.

*Q. No. 103—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Elecricity be pleased to state :

(a) whether any scheme cf voluntary disclosure of illegal power used by private parties has been introduced in this State and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) 28-4-79 முதல் அமலுக்கு வந்த இத் திட்டப்படி, குறைவழுத்த மின் பளு (LT Power-load consumers) பயனீட்டாளர்கள் ஒப்பந்தத்திற்கு அதிகப்படியாக உபயோகிக்கும் மின் சுமைகளை 31-7-79-க்குள் தாங்களாகவே அறிவித்தால் மின் வாரியம் அபராதமின்றி அவற்றை அங்கீகரிக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்டதற்கு அதிகமாகப் பயன்படுத்தப்படும் மின் இணைப்புப்படி இன்றைக்கு கோயம்புத்தூர், ஊட்டி போன்ற இடங்களில் மின்சாரம் அதிகமாக திருடப்பட்டு, பயன்படுத்தப்பட்டு அதன் காரணமாக 2 யானைகள் கூட இறந்தது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சில இடங்களில் தொழிற்சாலைகளை வைத்து நடத்துவோர், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட லோடை விட அதிகமான அளவு மோட்டார்கள், அல்லது மெஷின்கள் வைத்துக் கூட பயன்படுத்திக் கொண்டிருப்பார்களேயானால், அவற்றை அங்கீகாரம் செய்வதற்கு, எந்த அளவுக்கு அதிக அளவு மின்சாரம் பயன்படுத்துகிறார்கள் என்று அவர்கள் தாங்களாகவே முன் வந்து விவரங்கள் கொடுத்து அங்கீகாரம் பெறுவதைத்தான் வாலண்டரி டிஸ்குளோசர் ஸ்கீம் என்று ஏற்படுத்தியிருக்கிறோம். அதைப் பற்றித்தான் கேள்வி. அதனால் தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : கேள்வி, சட்டபுறம்பான மின்சக்தி குறித்து தாமே முன்வந்து தெரிவிப்பதற்கான திட்டம் பற்றியது. ஆகவே, சட்டவிரோதமாக அவர்கள் மின்சாரத்தை எடுப்பது குறித்துதான் கேள்வி. அந்த மாதிரி செய்வது பெரிய தொழில் அதிபர்களும், கிராமப்புப்புற நிலப்பிரபுக்களாக இருக்கிறவர்கள்தான் என்றிருக்கிறபோது அவர்கள் 'வாலண்டரி டிஸ்க்ளோஷர்' எப்படிச் செய்வார்கள், அவர்கள் டெலிபரேட்டாகச் செய்யும் போது. அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியவில்லை, அவர்களை ப்ராஸிக்யூட் செய்யமுடியவில்லை, அப்படி அந்த ப்ராஸிக்யூஷன் ஸ்கீம் பெயிலானதால் இப்போது இது வந்திருக்கிறதா அல்லது எந்தக் காரணத்தால் இந்த ஸ்கீம் வந்தது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; Any voluntary disclosure is like that. The Hon· Member, Thiru Umanath will agree to it.

ஆனால் இது எல். டி. இன்ஸ்ட்ரீஸ் மட்டும் பொறுத்தது. சிறு தொழில் நடக்கிற எல். டி. இன்டஸ்ரீஸ் மட்டும்தான். ஆகவே பெரும் தொழில் அதிபர்கள் இதில் வரவில்லை. சிறு தொழில்களுக்கு, அவர்கள் கூடுதலாக மின்சாரம் உபயோகிக்க வேண்டுமென்றாலோ அல்லது புதிதாக மின்சாரம் தேவை என்றால் உடனடியாகக்' கொடுப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லாமலிருந்தது. அந்தச் சூழ்நிலை காரணமாக சில இடங்களில் இதுபோல் தவறுகள் நேர்ந்தன. அந்தத் தவறுகளை எல்லாம் ஒவ்வொன்றாகக் கண்டுபிடித்து அபராதம் போட்டு நடவடிக்கைகள் எடுக்க சட்டத்தில் இடமிருந்தாலும்கூட தவறுகளின் அளவு அதிகமாகும்போது இதுபோல் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து ஏற்கனவே நடந்த தவறுகளை மன்னித்து விட்டு நடக்க இருக்கிற தவறுகளைத் தடுப்பதற்காகத்தான் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது.

திரு. கே. பண்ணை சேதுராம் : தனி நபர்களால் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்கு அரசுக்குச் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு ? எவ்வளவு பேர்கள் அவ்விதம் அரசுக்குப் பணம் செலுத்த வேண்டும் என அறிய விரும்புகிறேன்;



விவசாயிகள் எவ்வளவு பேர்கள், தொழிற்சாலை அதிபர்கள் எவ்வளவு பேர்கள் என்றும் அறிய விரும்புகிறேன். இதில் வேறு மாநிலத்தைச் சேர்ந்த தொழில் அதிபர்கள் யாராவது இருக்கிறார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆவல் எனக்குப் புரிகிறது. தனிக் கேள்வி போட்டால் முழு விவரங்கள் தர இயலும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : திருடுகளில் பலவிதம் உண்டு. நேரடியாக அந்த வொயரில் கம்பி போட்டு கரண்ட் இழுத்து திருடுவது ஒரு முறை. 50 எச். பி. மோட்டார் வைத்துக் கொண்டு 25 எச். பி. என்று போடுவதும் ஒரு திருட்டுத்தான். இந்தச் சூழ்நிலையில் திருடு என்று தெரிந்தால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்வது சரியா? ஆகவே இதுவும் திருடு என்ற அடிப்படையில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருடுகள் பலவிதம் உண்டு என்று சொல்கிற அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற நிபுணத்துவம் எனக்குக் கிடையாது. நான் அதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் இது, ஏற்கனவே வாங்கிய அனுமதிக்கு மேல் அந்த ஹார்ஸ் பவரைக் கூடுதலாகப் பயன்படுத்தினால் அதற்கு மட்டும்தான் இந்தத் திட்டம். நேரடியாக எடுத்து திருடுவது போன்ற திருடுகள் பற்றி தனியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. பாலன் : பி. அன்ட். ஸி. மில் அவர்களுக்குத் தேவையான மின்சக்தியை விட அதிகமாகத் தயாரிக்கிறார்களா? சர்க்கார் அனுமதி பெற்ற மெகாவாட்ஸை விட அதிகமாகத் தயாரிக்கிறார்களா அல்லது குறைவாக தயாரிக்கிறார்களா ? அப்படி அவர்கள் அதிகமாகத் தயாரித்தால் நகரின் மின் பற்றாக்குறையைத் தீர்க்க அது பயன்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போடட்டும்.

திரு. என். கிட்டப்பா : மாநிலத்தில் தனி நபர்களால் பயன்படுத்தப்படும் சட்டத்திற்குப் புறம்பான மின்சக்தி இருப்பதாகச் சில தனி நபர்கள் தாமாகவே முன்வந்து அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய முறையில் அறிவித்திருப்பவர்களுக்கு அரசு ஊக்கம் ஏதாவது அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நாம் அளிக்கிற ஊக்கமே அவர்கள் செய்த தவறுகளை மன்னிப்பதுதான்.

திரு. என். கிட்டப்பா : தனி நபர்கள் செய்கிற தவறுகளை வேறுசில தனி நபர்கள் சுட்டிக் காட்டும்போது சுட்டிக் காட்டும் நபர்கள் இருக்கிறார்களே அவர்களுக்கு ஏதாவது ஊக்கமளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; நிச்சயமாக அதைப் பரிசீலிக்கும்.

[1979 நவம்பர் 5

திரு. ஆர். மணிமாறன் : தவறுகளை உணர்ந்து தாமாகவே முன்வந்து அரசாங்கத்தினிடம் மனு போடுகிற அந்தப் புண்ணியவான்களின் பட்டியலை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படிப்பட்ட புண்ணியவான்கள் 4033 பேர்கள். அவர்களுடைய விவரங்கள் வேண்டுமானால் அதற்கு மிகப் பெரிய பட்டியல் தேவைப்படும். ஆனால் அவர்களை நாம் ஒதுக்க வேண்டியதில்லை. சில சூழ்நிலை காரணமாகக்கூட தொழில் நிறுவனங்களில் இத்தகைய தவறுகள் ஏற்படுவதுண்டு. ஆனால் அந்தச் சூழ்நிலைகளை மாற்றிக் கொண்டு அவர்கள் மீண்டும் அரசின் அனுமதியைப் பெற முன்வந்திருப்பதை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 104, 105 ஒத்திவைக்கப் பெறுகின்றன.

## அரசு கையிருப்பில் உள்ள அரிசி.

* வினா எண். 106—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அரசின் கையிருப்பில் நீண்ட நாட்களாக உள்ள அரசின் தரம் குறைந்துள்ளதாக கூறப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) & (ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கையிருப்பிலுள்ள அரிசி பொதுவாக தரமானதாகவே உள்ளது. தரம் கெடாமல் இருக்க மருந்து அடிப்பது போன்ற தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. 1977 ஆம் ஆண்டு இறுதியில் நம் கைவசம் இருந்த அரிசியின் கையிருப்பு மிகக் குறைந்தபோது பொது விநியோகத்தின் தேவைக்காக மத்தியத்தொகுப்பிலிருந்து அரிசியை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்திய உணவுக் கார்ப்பரேஷன் நிறுவனம் ஆந்திரப் பிரதேசத்தில் 1976 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் சேதம் அடைந்த நெல்லை தரப் பாகுபாடுகளை சற்றுத் தளர்த்தி வாங்கியிருந்தார்கள், அந்த நெல்லிலிருந்து கிடைத்த அரிசியை 70,000 டன்கள் அளவிற்கு நாம் எடுக்கவேண்டி வந்தது. இந்த அரிசி பார்வைக்கு நிறம் மங்கலாக இருந்ததால் நுகர்வோருக்கு ஏற்புடைமையுள்ளதாக இல்லை. பொது விநியோக முறையில் இந்த அரிசியை விற்பனை செய்யமுடியாமல் தேங்கி விட்டதால், இதை மத்தியத் தொகுப்பிற்கு திருப்பிக் கொடுக்க மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

---



1979 நவம்பர் 5]

[முற்பகல் 9-10]

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு விலை அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கை இருந்து கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் அரசின் கையிருப்பும் அதிகமாக உள்ளது என்றும் தெரிவித்தார்கள். ஆகவே கையிருப்பிலுள்ள அரிசியை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் இப்போது தேவைக்கு அதிகமாக அரிசி கையிருப்பு உள்ளது. அது மட்டுமல்ல, நாட்டில் விளைச்சல் உற்பத்தி அதிகமாக இருக்கின்ற சூழ்நிலையாலும் நம்மிடம் இருக்கின்ற அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது அரசின் கையிருப்பில் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசிடம் எவ்வளவு அரிசி இருக்கிறது என்று நான் சரியாகச் சொல்ல இயலாத நிலையில் இருக்கிறேன். ஆண்டு ஒன்றுக்கு 3 இலட்சத்திலிருந்து 4 லட்சம் டன் வரை அரிசி நமக்குத் தேவைப்படுகிறது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பொது விநியோகத்தின் மூலம் கொடுக்கப்படும் அரிசியின் அளவு குறைந்து வருகிறது. விளைச்சல் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும், பொது விநியோகத்தில் கொடுக்கப்பட வேண்டிய அரிசியின் அளவு குறைந்ததாலும், வழக்கமாக அரசினிடம் இருக்கவேண்டிய கையிருப்பின் அளவு மிகவும் அதிகமாக இருக்கிறது.

திரு. என் பெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, உழைப்புக்கு உணவு வழங்கும் திட்டத்திற்கு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலமாக அரிசி உழைப்பாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படி வழங்கப்பட்டு வரும் அரிசி கூடுமானவரை தரமான அரிசியாகக் கிடைப்பதில்லை. அதிலே நாற்றம் இருந்து வருகிறது. ஆகவே இதை சிவில் சப்ளை கார்ப்பரேஷனில் ரைஸ்மில் மூலமாக ரீபாலிஷ் செய்து கொடுப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, உழைப்புக்கு அரிசி என்கின்ற திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டு வரும் அரிசி தரமாகவே இருந்து வருகிறது என்ற தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போல் சில இடங்களில் இப்படிப்பட்ட தவறுகள் இருக்குமானால், அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதை மாற்றித் தருவதற்கான ஏற்பாடுகளை அரசு நிச்சயம் எடுக்கும்.

[1979 நவம்பர் 5

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அரசின் கையில் அரிசி ஏராளமாக இருப்பில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதைவிட மக்கள் வெளி மார்க்கெட்டில் குறைந்த விலையில் கிடைப்பதால் அரசின் அரிசியை வாங்குகின்ற நிலையில் இல்லை என்றும் குறிப்பிட்டார்கள். இந்த நிலையில் அரசின் கையில் இருக்கின்ற அரிசி கெட்டுப்போகாமல் தரம் குறைந்து போகாமல் இருப்பதற்கு முன்பாகவே கொஞ்சம் விலையைக் குறைத்து மக்களின் உபயோகத்திற்குக் கொடுக்கலாம் அல்லவா? அப்படிக் கொடுக்க முன்வந்தால் அரசுக்கு நல்ல பெயர் கிடைக்காதா என்பதையும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் ; தலைவர் அவர்களே, அரசுக்கு இப்போதே நல்ல பெயர்தான் இருக்கிறது. ஏறக்குறைய அரசு விற்பனை செய்கின்ற விலைகளில் வெளியில் அரிசி மக்களுக்குக் கிடைத்து வருகிறது. இப்போது அரசு நிர்ணயித்திருக்கின்ற விலையை இன்னும் குறைக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம், இதனால் அரசுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படும். இந்த நஷ்டத்தைத் தவிர்க்கின்ற வகையில்தான். இப்போது அரசின் கையிருப்பில் இருக்கும் அரிசியை நல்ல முறையில் பாதுகாப்பதற்கும், வெளியில் விற்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கையிருப்பில் இருப்பதாகச் சொல்லப்பட்ட அந்த அரிசி எப்போது கொள்முதல் செய்யப்பட்டது? கொள் முதல் செய்யப்பட்டபோது அதன் விலை என்ன? அந்த அரிசியைத் தனியார் வைத்திருக்கும் மில்லிலிருந்து கொள்முதல் செய்தார்களா அல்லது தஞ்சாவூரிலுள்ள மாடர்ன் மில்லிலிருந்து அரைத்து வைக்கப்பட்டுள்ள அரிசியா? நம்முடைய மாண்புமிகு ரமணி அவர்கள் சொன்னதுபோல், நஷ்டத்தைப் பாராமல் மக்களுக்கு லாபம் இருக்கக்கூடிய முறையில், விவசாயத் தொழிலாளிகளுக்கு யார் யார் என்று பதிவு செய்து, அவர்களுக்கு ஒரு கிலோ ஒரு ரூபாய் வீதம் இந்த அரிசியை விநியோகம் செய்து, அதிகமாக இருக்கக்கூடிய கையிருப்பைக் குறைத்து அரிசி கெட்டுப் போகாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் குறைந்த விலையில் மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ஒரு கேள்வியை எழுப்பியிருக்கின்றார்கள். விவசாய மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று எழுப்பியிருக்கின்றார்கள். அது இப்போதைக்குச் செய்ய முடியாத காரியம் என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்னும் பல புள்ளிவிவரங்களைக் கேள்வி மூலம் கேட்டிருக்கின்றார்கள். தனியாகக் கேள்வி போட்டால், அதற்கான புள்ளிவிவரங்களைச் சேகரித்துத் தரத் தயாராக இருக்கிறேன்.



1979 நவம்பர் 5]

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கு உணவு என்ற திட்டத்தின் கீழ் கொடுக்கப் படுகின்ற அரிசி தரமுள்ளதாக இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மாயவரம் பகுதியில் தரமில்லாத, புழுத்துப்போன அரிசியை அரசு, வேலைக்கு உணவு என்ற திட்டத்தின்கீழ் கொடுத்தார்கள். இதைப்பற்றி விசாரிக்க அதிகாரிகளை அனுப்புவார்களா? இனிமேல் அப்பேர்ப்பட்ட தரமில்லாத அரிசியைக் கொடுக்காமல், தரமுள்ள அரிசியைக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய தொகுதியில் தவறு நடந்திருக்குமே யானால், அதைச் சுட்டிக்காட்டி தமிழ்நாடு முழுவதும் தவறு நடைபெறுகிறது என்று சொல்வது நியாயமல்ல, ஒருவேளை அவர் தொகுதியில் அவருக்கு அக்கறை இருக்கின்ற காரணத்தினால், சில நேரங்களில் சில சந்தர்ப்பங்களில் தரமில்லாத அரிசி கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்வார் களானால், அதை எழுத்து மூலமாகக் கொடுத்தால், சம்பந்தப் பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன் வரும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமுள்ள அரிசி கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியில் அமுதம் அங்காடியிலேகூட மட்டரகமான, புழுத்துப் போன, புழுக்கள் இருக்கின்ற அரிசி விற்கப்படுவதினால், மக்கள் இந்த அமுதம் அங்காடியில் வாங்காமல், வெளியே தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை இருக்கின்றது. உடனடியாக, இந்த அமுதம் அங்காடியிலே நல்ல அரிசியைக் குறைந்த விலையில் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமுதம் அங்காடி நடத்தப்படுவது வேறு. நியாய விலைக்கடைகளின் மூலமாக ரேஷன் கார்டு காரர்களுக்கு அரிசி கொடுப்பது வேறு. ரேஷன் கார்டுகாரர்கள் கட்டாயமாக அங்கே கொடுக்கப்படும் அரிசியை வாங்கிச் சாப்பிட வேண்டும். ஆனால், அமுதம் அங்காடிகளில் மக்கள் விரும்பினால் வாங்கலாம், விரும்பாவிட்டால் வாங்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, அமுதம் அங்காடியில் தரமில்லாத அரிசி கொடுக்கப்படுகின்றது என்றால், மக்கள் அதை வாங்காமல் இருப்பது நல்லது. அரசு அதைத் திருப்பிப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, அரிசி மோசமாக வழங்கப்படுவதில்லை சில பகுதிகளிலே என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், நீலகிரி மாவட்டத்தில்

[1979 நவம்பர் 5

கூடலூர் பகுதியில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய பகுதிகளில் புழுத்துப்போன, கெட்டுப்போன அரிசி வழங்கப்படுகிறது. அதுவும் ரேஷன் கடைகளில் அங்கே தரமில்லாத அரிசி கொடுக்கப்படுகின்றது என்று நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே புழுத்துப் போன அரிசி கொடுக்கப்படுவதாக ஒரு குற்றச்சாட்டை எடுத்து இங்கே சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட புகார் வாங்கிச் சாப்பிடுகின்ற அந்த மக்களிடமிருந்து இது வரைக்கும் அரசுக்கு வரவில்லை.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். குறுவை நெல் வாங்குவதன் காரணமாக, அரிசி புழுத்துப் போகின்றது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆகவே கடந்த காலத்தில் இந்தக் குறுவை நெல்லை வாங்கியதன் காரணமாக இந்த அரிசி புழுத்துப் போனதா அல்லது அரிசியை அரைத்துக் கொடுத்தவர்களின் குற்றமா, அதிலே தவறு இருக்கிறதா? அப்படி புழுத்துப் போனதற்கான காரணம் என்ன? அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–20]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : குறுவை நெல்லை வாங்குவதில்லை என்பது அரசு எடுத்த முடிவு அல்ல. இதற்கு முந்திய அரசுகூட குறுவை நெல்லை வாங்குவதில்லை. இப்போது குறுவை அறுவடையின்போது தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ மூன்று கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள குறுவை நெல் வாங்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : கூட்டுறவு சிறப்பு அங்காடிகளில் தரம் உயர்ந்த அரிசியைக் குறைந்த விலைக்குக் கொடுத்து வருகிறார்கள். தனியார் அந்த விலைக்கு வியாபாரம் செய்தால் கட்டுப்படியாகாது. அரசாங்கம் இப்படிக் குறைந்த விலைக்கு தரமான அரிசியைக் கொடுத்து வந்தால் அரசாங்கமே திவாலாகி விடும். ஆகவே, அந்த அரிசியைக் கூடுதல் விலைக்கு விற்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : சில தரம் உயர்ந்த அரிசியை அதற்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலையை விடக் குறைத்து விற்பது என்ற முடிவை அரசு ஏற்கனவே எடுத்து செயல்படுத்தி வருகிறது. அதிலே எந்தவிதமான மாற்றத்தையும் செய்ய அரசுக்கு உத்தேசம் இல்லை.



1979 நவம்பர் 5]

திரு. மு. அம்பிகாபதி : நெல்லை இரண்டு முறை அவிப்பதன் காரணமாக—டபிள் பாயிலிங்—கலர் மாறுகிறது. ஆகையால் சிங்கிள் பாயிலிங்—ஒரு முறை அவித்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா? இரு முறை அவிப்பதன் காரணமாக ஈஸ்ட்மன் கலர், டெக்னிகலர், சினிமாஸ்கோப் கலர்களில் அரிசி கடைகளில் இருப்பதைத் தவிர்க்க, ஒருமுறை அவிக்கும் முறையை அரசு செயல்படுத்துமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஒருமுறை அவிப்பதைவிட இருமுறை அவித்தால்தான் அந்த அரிசி நீண்ட காலம் இருக்கும். நல்ல முறையில் விநியோகத்தை எப்போதும் சீராகச் செய்வதற்கு நீண்ட காலம் அரசு அரிசியைக் கையிருப்பில் வைத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. ஆகவே, டபிள் பாயிலிங்கை—இருமுறை அவித்தலை இப்போதைக்கு அரசு கைவிடுவதற்கில்லை.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முக்கியமாக அவையின் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்பதற்காகத் தங்களிடம் தெரிவிக்கிறேன். அமைச்சர் காளிமுத்து அவர்கள் கண் வலியோடு இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். 'மெட்ராஸ் ஐ' இருக்கும் இடத்தில் இருந்து 20 அடி தூரத்திற்குப் பரவும். நான் இருக்கிற தூரம் வரை பாதிக்கும், சபாநாயகர் ஒரு வேளை தப்பக்கூடும். அமைச்சர் அவர்கள் அந்த நோயை மற்றவர்களுக்குப் பரப்பாமல் இருக்க ஆணையிடக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சருக்கு அதிகமான வலி இருக்குமானால் அவர்களே...... (குறுக்கீடு) அமைச்சரைக் கட்டாயப்படுத்தி போகச் சொல்வதைவிட....

திரு. மு. அம்பிகாபதி : ரொம்பவும் வலி இருந்தால் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்க மாட்டார்கள். அப்படி வலி இல்லாததால் இங்கே இருக்கிறார். அவரைப் போகச் சொல்ல வேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : வலி பிரச்சினை அல்ல. 'மெட்ராஸ் ஐ' என்று இருந்தால் நிச்சயமாக எல்லோருக்கும் பரவும். 'தட் இஸ் டெபனிட்'. வலி இல்லையென்றாலும் அது இன்க்பெஷியஸ். அவருடைய பாதுகாப்புக்காகவும், மற்றவர்களுடைய பாதுகாப்புக்காகவும் அவர்கள் வித்ட்ரா பண்ணிக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் சொன்னவுடன் அதைத்தான் சூசகமாகச் சொன்னேன்.

திரு. கு. ரமணி : சபையின் சார்பில் நாங்களே அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறோம்.

[1979 நவம்பர் 5

திரு. கே. பண்ணை சேதுராம் : எதையும் தாங்கும் இதயம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் வரிசையில் இருக்கிற தலைவர்கள் ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறார்கள். எல்லோரும் இதிலே எழுந்து பேசுவது சரியல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மெட்ராஸ் ஐ வியாதி வந்திருப்பதால் அதிகமாகப் பாதிக்கப் படுவது நான். ஆகவே, அவருடைய பெயரால் இன்றைக்குக் கேள்விகள் இருந்தால் அவற்றைக்கூட தாங்கள் ஒத்திவைத்து விட்டு அவர்கள் எங்களுக்கெல்லாம் பாதுகாப்புத் தர வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். பிறருக்கும் பாதகம் ஏற்பட வேண்டாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கேள்விகளை முடித்து விட்டுப் போய்விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதே தொற்றிக் கொள்ளும் என்கிறார்கள். அதற்கு ஒரு வினாடி கூட தேவையில்லை. கேள்விகளை வேண்டுமானால் ஒத்திவைக்கலாம், அமைச்சர் தம் அறைக்குச் சென்று ஓய்வு எடுத்துக்கொண்டால் நல்லது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே' தங்கள் மூலமாக என்னை ஓய்வு எடுக்க அனுப்பிவைக்கும் உறுப்பினர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பக்கத்திலே இருக்கிறார்கள், அவர்களோடு பல விஷயங்களைப்பற்றி இந்த அவையிலே பேசவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்கும் வந்துவிடாத முறையிலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளச் செல்வது அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அவரை எதுவும் அணுகாது. (சிரிப்பு)

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : அமைச்சர் பதில் சொல்லும்போது அரிசி மிக நன்றாக இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் வேலைக்காக உணவுத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படுகிற அரிசியைத் தண்ணீரில் போட்டால் ஊறுவதில்லை, அதை சமையல் செய்யும்போது வேகவைப்பதற்கு



1979 நவம்பர் 5]

பல மணி நேரமாகியும் முடியவில்லை. இதையெல்லாம் பரிசீலனை செய்து அந்த அரிசியை வேறு எதற்காகவாவது மாற்றி விட்டு நல்ல அரிசியைக் கொடுக்க அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விகளுக்குப் பதில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். எந்த இடத்திலே தரக்குறைவான அரிசி கொடுக்கப்படுகிறது என்பதைச் சொல்வார்களானால் அங்கே அதை மாற்றிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியும். ஏதோ ஒரு இடத்திலே தரக்குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்பதற்காகத் தமிழகம் முழுவதும் கொடுக்கப்படுகிற அரிசியை மாற்றிக் கொடுப்பது என்பது முடியாத காரியம்.

திரு. வி. கொ. சின்னசாமி : தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலிருந்து கொடுக்கப்படுகிற அரிசியை எவ்வளவு நாட்களுக்கு வைத்து இருக்க வேண்டுமென்று ஏதாவது விதியிருக்கிறதா? அதிகப்படியான நாட்களுக்கு வைத்திருப்பதால் தான் கெட்டுப்போய் புழுக்கள் வந்துவிடுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? தெரியுமானால் குறிப்பிட்ட காலத்திற்கு மேற்பட்டு இருக்கின்ற அரிசியை ஏழைகளுக்கு அரசு தர்மமாகக் கொடுப்பதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : நெல்லாக இருந்தால் அதிக நாளைக்கு வைத்திருக்கலாம், இயற்கையிலேயே பாதுகாப்பு அதற்கு அமைந்திருக்கிறது. ஆனால் அரிசியாக்கியவுடன் கூடியவிரைவிலேயே அது கெட்டுப்போவதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது. இரண்டு ஆண்டுகாலமாகக் கொள் முதல் செய்த அரிசியில் விற்பனை குறைவாக இருப்பதால் தேக்கம் அதிகமாக ஏற்பட்டது. மத்திய சர்க்காரால் கொடுக்கப் பட்ட அரிசியின் தரம் குறைந்து இருப்பதாக ஏற்கனவே மத்திய சர்க்காருக்கு எழுதி இருக்கிறோம். மத்திய அரசு ஒப்புதல் தந்திருக்கிறது. தேவைக்கும் அதிகமாக இருப்பதை வெளி மாநிலங்களுக்கு அல்லது வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு இந்தத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. வ. துலுக்காணம் : தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்லும்போது எந்தக் குறிப்பிட்ட இடத்திலே அரிசி தரக்குறை வாக இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் உளுந்தூர்ப் பேட்டையில் போடப்படுகிற அரிசி சுத்த மோசமான புழுத்த அரிசியைக் கொடுக்கிறார்கள். இதனால் உணவுக்கு வேலை என்ற திட்டத்தின் கீழ் வேலை செய்கிறவர்கள் வேலை செய்ய மறுக்கிறார்கள். அதனால் வேலைகள் அந்த யூனியனிலே நடை பெறாமல் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்களா ?

[1979 நவம்பர் 5

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, ஒவ்வொருவருக்கும் இப்படியே பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாகச் சொல்லியிருக்கிறேன். எங்கெங்கே பழுதடைந்த அரிசி கொடுக்கப் படுகிறது என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக அதை மாற்றி தரமுள்ள அரிசியைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்திரவாதத்தை நான் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் ஆங்காங்கே உள்ள குறைபாடுகளை முதலில் எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்துவிட்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால் அதைப்பற்றி மட்டும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவது நல்லது. ஒவ்வொரு இடத்திலேயும் இருப்பதாகச் சொல்வது சரியல்ல.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தாங்கள் கூறிய அறிவுரையை ஏற்றுக் கொள்கிறேன். வடஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உணவுக்காக வேலை என்ற திட்டத்தின் கீழ் தரப்படுகிற அரிசி தரக்குறைவாக இருக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும், டி.டி.சி.யிலேயும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடத்திலேயும் சொல்லியாகி விட்டது. இதுவரையில் அந்த அரிசி மாற்றிக் கொடுக்கப்பட வில்லை. ஆகவே உடனடியாக மாற்றிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ரீதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற தவறைப்பற்றி இதுவரையில் அவ்வளவு பேர்களுடைய கவனத் திற்குக் கொண்டுவந்த உறுப்பினர் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருப்பாரேயானால் அதற்குரிய பரிகாரம் அப்போதே கிடைத்திருக்கும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படி ஒவ்வொரு பகுதியைப்பற்றியும் நான் கேள்வி கேட்கவில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக வழங்கப்படுகிற அரிசி தரக்குறைவாக இருக்கிறது என்று பல்வேறு தொகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் தெரிவிக்கிறார்கள். பல்வேறு உறுப்பினர் களிடமிருந்தும் ஒவ்வொரு தொகுதிவாரியாகக் கேட்பதை விட அமைச்சர் தாமாகவே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுடன் தொடர்பு கொண்டு இப்படித் தரக்குறைவாக எங்கெங்கே கொடுக்கப்படுகிறது என்று கேட்டறிந்து அங்கேயெல்லாம் அதைத் திரும்பப்பெற்றுக் கொண்டு நல்ல அரிசியைத் தருவதற்கு அவர்களே முன்வருவார்களா ?

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அவர்களுடைய ஆலோசனைக்கு அரசின் சார்பில் நன்றி



1979 நவம்பர் 5]

தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியாக அதிகாரிகளிடமிருந்து அதற்கான தகவல்களைச் சேகரித்து எங்கே தரக்குறைவாக அரிசி கொடுக்கப்படுகிறதோ அங்கே உடனடியாக அவற்றை மாற்றிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு நிச்சயமாகச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே, அரிசி கெட்டுப் போகாமல் இருப்பதற்காக ஒரு வகை மருந்து கலப்ப தாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அந்த மருந்தினால் ஏதேனும் தீமை ஏற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தகவல்கள் எதுவும் அரசினுடைய கவனத்திற்கு இதுவரையில் வரவில்லை.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவரவர்களே, அரிசி கையிருப்பில் அதிகமாக இருப்பதால் அதைப் பாதுகாக்க முடியாது என்பதால் அதை வெளிநாடுகளுக்கு அனுப்பலாமா என்று ஆலோசனை செய்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். நமக்குக் கிடைக்கும் தகவலின்படி நம்முடைய நாட்டில் வட மாநிலங்களில் கடுமையான வறட்சியும் இந்த ஆண்டு கடுமையான உணவுத் தட்டுப்பாடும் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய கையில் இருப்பதை, அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர் களுக்கு, கைத்தறித் துணிகளைக் கொடுப்பதைப்போல, ஓராண்டுத் தவணையில் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அரசு ஊழியர்களுக்குத் தேவையான அளவிற்குக் கையிருப்பிலே இருந்து ஓராண்டுக் காலத்திற்குக் கொடுப்பது என்பது, அவர்களிடத்திலும் இந்த அரிசி ஓராண்டுக் காலத்திற்குத் தேங்கிக் கிடக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தும். அவர்களிடம் போனதற்குப் பிறகும் கூட அரிசி கெட்டுப் போக வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இப்போதைக்கு உடனடியாக நமக்குத் தேவையானதை வைத்துக் கொண்டு 'ஃபார் கன்ஸம்ப்ஷன்', எவ்வளவு தேவையோ அதை வைத்துக்கொண்டு, உணவுக்கு எங்கே தேவைப்படுகிறதோ அங்கே உடனடியாக விற்று விடுவது என்ற முடிவை அரசு ஏற்றிருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் அரிசி அதிகமாகக் கையிருப்பில் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எந்த அளவிற்கு இருக்கிறது, எந்தெந்த மாவட்டங்களில் இருக்கிறது, . தனியார் கோடவுன்களில் இருக்கிறதா, அரசு கோடவுன்களிலே இருக்கிறதா, பாதுகாப்பாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 நவம்பர் 5

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு இருக்கிறது, எவ்வளவு இருக்கிறது, என்கின்ற விவரங்கள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. ஆனால் இருக்கின்ற கையிருப்பிலே உள்ளவை அரசுக்குச் சொந்தமான கிடங்குகளில் இருக்கிறது அல்லது அரசு வாடகைக்கு எடுத்து வைத்திருக்கின்ற தனியார் கிடங்குகளில் இருக்கிறது. அவ்வளவும் மிகவும் பத்திரமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு அந்தக் கவலை இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

## தூத்துக்குடியில் முத்துக்குளிப்ப.

*வினா எண். 107 திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தூத்துக்குடியில் முத்துக்குளிப்பு எடுக்கப்பட்ட முத்துக்கள் எப்போது கடைசியாக ஏலத்திற்கு விடப்பட்டது?

(ஆ) எத்தனை ஆண்டுகளுக்கொரு முறை ஏலம் விடப்படுகின்றது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) தூத்துக்குடி கடலில் எடுக்கப்பட்ட முத்து சிப்பிகள் கடைசியாக 1961 ஆம் ஆண்டில் ஏலம் விடப்பட்டன.

(ஆ) முத்துச்சிப்பிகள் குளிக்கப்பெற்று, கரைக்குக் கொண்டு வரப்பட்டதும் உடனுக்குடன் ஏலம் விடப்படும்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி கடற்கரையில் முத்துக் குளிப்பது என்பது தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலேயே மிகச் சிறந்த இடமாகும். இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ இந்த முத்துச் சிப்பிகள் ஏலத்தில் விடப்படும்பொழுது கார்ப்பரேஷன் மூலம் கொடுக்கப் போகிறார்களா அல்லது அரசுத் துறை மூலம் தனியாகக் கொடுக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டோ அல்லது அதற்கு முந்தைய ஆண்டோ அல்லது அதற்கு அடுத்த ஆண்டோ ஏலம் விடுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. காரணம் இப்பொழுது இருக்கின்ற சிப்பிகள் முத்துக்கள் முதிர்ச்சி பெறவில்லை என்பதை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. துரை கலியமூர்த்தி ; தலைவரவர்களே, இந்த முத்துச் சிப்பிகள் கடைசியாக 1961–ஆம் ஆண்டில் ஏலம் விடப்பட்டன என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அடுத்த கேள்விக்கு உடனுக்குடன் ஏலம் விடப்படுவதாகவும் சொன்னார்கள். அப்படியானால் அதற்குப் பிறகு ஏலம் விடப்படவில்லையா ? எவ்வளவு ஏலம் விடப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.



1979 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முத்து என்பது சிப்பியிலேயிருந்து எடுக்கப்படுவது. கடலிலே கிடைக்கும் சிப்பியெல்லாம், அது கிடைக்கின்ற நேரத்திலே ஏலம் விடப்படும்.1961 ஆம் ஆண்டுக்குப் பிறகு முத்துக் குளிப்பு தமிழகத்திலே நடைபெறவில்லை.

## நூல்கள் மொழிபெயர்ப்பு.

*வினா எண் 108 திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பிறமொழி நூல்களைத் தமிழாக்கம் செய்வதற்கும் சிறந்த நூல்களை பிறமொழியாக்கம் செய்வதற்கும் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் உறுப்பினர்கள் யாவர்?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்).

(அ) ஆம்.

(ஆ) திரு. எஸ். மகாராஜன், (ஆட்சிமொழி சட்ட சொல்லாக்க ஆணைக் குழுத்தலைவர்)— தலைவர்.

திரு. கே. எஸ். மகாதேவன், தமிழ் வளர்ச்சி இயக்குநர், உறுப்பினர்—செயலர்

## உறுப்பினர்கள்.

டாக்டர் எஸ். வி. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர்.

டாக்டர் சி, பாலசுப்பிரமணியன், தமிழ்த் துறைத் தலைவர், சென்னை பல்கலைக் கழகம்.

டாக்டர் சி. ஆர்; சர்மா, மண்டல செயலர், சாகித்ய அகடமி, சென்னை.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழுவிலே இருப்பவர்கள், வேறு பொறுப்புக்களிலே இருப்பதால் மொழியாக்க வேலை மெத்தனமாக நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. அது பற்றி அரசு அறியுமா? அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, மொழியாக்க வேலை குறித்த அரசாணைக்கு திருத்தம் செய்திருப்பதால் சிறிது தேக்கம் இருக்கிறது. அது விரைவிலே நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 நவம்பர் 5

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு அமைச்சரின் செயலர் அவர்கள் சொன்னதிலிருந்து எல்லா மொழிகளிலிருந்தும் வல்லுனர்கள் தேர்ந்தெடுத்திருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக, அராபிய மொழி, உருது மொழி, பாரசீக மொழி தெரிந்தவர்கள் அந்தக் குழுவிலே இடம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. பல்லாண்டு காலத்திற்கு முன்பு அரபு நாட்டுக்கும் இந்திய நாட்டுக்கும் தொடர்பு இருந்ததாகத் தெரிகிறது. எனவே, அந்த மொழி நூல்களை தமிழில் மொழி பெயர்ப்பதற்கும், தமிழிலே உள்ள நூல்களை, உருது, அராபியா, பாரசீக மொழிகளிலே மொழி பெயர்க்கவும் அந்த மொழி தெரிந்தவர்களை அரசு நியமிக்குமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை அரசின் கவனத்திலே எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: பேரவைத் தலைவரவர்களே, பிற மொழி நூல்களை தமிழாக்கம் செய்வதற்கும், தமிழிலே சிறந்த நூல்களைப் பிற மொழிகளிலே ஆக்கம் செய்யவும் குழு அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சரின் பேரவை செயலர் தெரிவித்துள்ளார்கள். அந்தக் குழு எப்பொழுது அமைக்கப்பட்டது? அந்தக் குழு அமைக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரையில், எந்தெந்த மொழி நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும், தமிழ் மொழி நூல்கள் பிறமொழி ஆக்கம் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் அறிவிக்க இயலுமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, இது குறித்து தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்க வாய்ப்பிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்; பேரவைத் தலைவரவர்களே, மொழி பெயர்ப்புத் துறையில் திருக்குறளை சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்கின்ற பொழுது, சமஸ்கிருத மூலத்திலிருந்து தமிழில் திருக்குறள் தோன்றியது போல் ஸ்ரீராம தேசிகர் அவர்கள் மொழி பெயர்த்திருப்பதாக, டாக்டர் அருணாசலம் குற்றம் சாட்டியிருக்கிறார், அதை அரசு அறியுமா? அப்படியென்றால், அதன்மீது நடவடிக்கை எடுக்குமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை, அப்படியிருந்தால், குறைகளைக் களைய அரசு நடவடிக்கை எடுக்கும்,



1979 நவம்பர் 5]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தமிழ் நூல்களை, பிறமொழியாக்கம் செய்வதற்கும் அந்தக் குழு நியமிக்கப்பட்டிருப்பதென கூறப்பட்டது. ஆக, அந்தக் குழுவில் இருக்கிற உறுப்பினர்களில் எத்தனை போர்களுக்கு பிற மொழிகள் தெரியும்? எந்த, எந்த மொழிகள் அவர்களுக்கு தெரியும்? என்பதை மாண்புமிகு அமைச்சரின் பேரவை செயலர் கூறுவார்களா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, அது குறித்த குறிப்பு கொடுக்கப்படவில்லை. தனியாக கேள்வி போட்டால் விவரமாக சேகரித்து அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, எக்காலத்தினராலும், எந்நாட்டினராலும், எந்த மதத்தினராலும் மறுக்க முடியாமல் இருக்கிற தத்துவங்கள் நிறைந்த படங்களின் பாடல்கள், அதிலும் புரட்சித் தலைவர் பாடிய பாடல்கள்—நாடோடி மன்னனில் உள்ள தூங்காதே தம்பி தூங்காதே போன்ற பாடல்கள்—எக்காலத்தினராலும், எந்நாட்டினராலும், எம்மதத்தினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகள். அப்படிப்பட்ட எக்காலத்தினராலும், எந்நாட்டினராலும், எம்மதத்தினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பாடல்களை எல்லாம் பிற மொழிகளில் மொழி பெயர்க்க வேண்டுமென அரசு அந்த குழுவிற்கு பரிந்துரை செய்ய உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, இப்பொழுது பண்ணை சேதுராம் அவர்கள் நாடோடி மன்னன் பாடல் பற்றி சொன்னார்கள். நாடோடி மன்னனில் பாடப் பெற்ற அந்தப் பாடலை யார் இயற்றியது, யாரால் பாடப்பட்டது என்பதை, பண்ணை சேதுராம் அவர்கள் அறிவிப்பார்களா?

திரு. டி. பி. எம். பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறமொழி நூல்களை தமிழ்படுத்தும் முயற்சிக்கு நன்றி தெரிவிக்கிற நேரத்தில், இன்றைய தினம் தமிழ்நாட்டில் ஏட்டுச் சுவடிகள் ஆயிரம் ஆயிரம் சில தனி நபர்களிடமும், தனியார் நிறுவனங்களிடமும் நிறைந்திருக்கின்றன. அந்த ஏட்டுச் சுவடிகளை, தமிழ் படுத்துவதற்கென ஏடு படிக்கத் தெரிந்தவர்கள் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தால் அந்த ஏடுகள் அரித்துப் போகப்பட்டு செயல்படாமல் இருக்கின்றன. அவைகளை புதுப்பித்து தமிழ் வடிவம் செய்வதற்கு அரசு முன் வருமா? அதற்கு ஏதேனும் நடவடிக்கைகள் இந்த அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 நவம்பர் 5

[முற்பகல் 9–40]

திரு. ஆ. வெள்ளைச்சாமி : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அது போன்ற பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. மேலும் உறுப்பினர் கருத்தை கவனத்தில் கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற மொழியைச் சேர்ந்த நூல்களை தமிழிலும் தமிழ் மொழி நூல்களைப் பிற மொழிகளிலும் வெளியிடும் சாகித்ய அகாடமி இதுவரை எத்தனை புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்கள்? அதனுடைய தலைவர் யார் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே நான முன்னமே தெரிவித்தேன். இது குறித்து தனி கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க வாய்ப்பிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, கடந்த 60 ஆண்டுக் காலமாக இந்த நாட்டிலே ஒரு புதிய தத்துவங்கள், சமுதாய அமைப்பையே மாற்றிக் கொண்டிருக்கிறது. அதிலே அண்டை நாடாக இருக்கும்படியான சீனநாட்டிலே விவசாய விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. ருஷ்ய நாட்டிலே பல்வேறு துறைகளிலே விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட பிற மொழி நூல்கள் நம்முடைய கலாசாரத்தையும் வளர்க்கவும், பரப்பவும் உதவியாக இருக்குமானால் அந்த மொழி நிபுணர்களை இந்தக் குழுவிலே சேர்க்க அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய நல்ல யோசனையை அரசு கருத்தில் கொண்டு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி ; தலைவரவர்களே, "தூங்காதே தம்பி தூங்காதே" காடு விளைஞ்சென்ன மச்சான் நமக்குக் கையும் காலும் தானே மிச்சம் என்ற "நாடோடி மன்னன்" படப்பாடலை எழுதிய திரு. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களது 50 வது பிறந்த நாள் விழா 20—3—80-ல் வருகிறது. அரசு விழாவாக அதை நடத்த தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.



1979 நவம்பர் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி, அவர்கள் கேட்ட கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இதைப் பற்றி வேறு வழியில் முயற்சி செய்தாலாவது பலன் அளிக்கும்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளிலிருந்து மொழியாக்க வேலை எந்த அளவுக்கு நமது தமிழகத்திலே தேவைப் படுகிறது என்று தெரிகிறது. எனவே முழு நேரமும் பணி செய்யக் கூடிய அளவுக்கு இந்தக் குழு திருத்தி அமைக்கப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ளவிரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையைக் கருத்தில் கொண்டு தேவையான அளவிற்கு அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பிறமொழி நூல்களைத் தமிழிலும், தமிழ் மொழி நூல்களைப் பிறமொழிகளிலும் மொழியாக்கம் செய்வதற்கு ஏற்பட்டுள்ள குழுவைப் பற்றி மாண்புமிகு அமைச்சரின் செயலர் அவர்கள் இங்கே கூறிய பொழுது அந்தக் குழு இதுவரையில் எந்த எந்த நூல்களை இப்படி மொழி பெயர்த்திருக்கிறது என்ற விவரம் தன்னிடம் இல்லையென்று கூறினார்கள். அது இல்லாவிட்டாலும் இந்தக் குழு எப்பொழுது அமைக்கப்பட்டது? இந்தக் குழு அமைக்கப் பட்ட நாளிலேயிருந்து இதுவரையில் மேற்கொண்டிருக்கிற செயல்கள் எவை எவை என்பதையாவது அறிவிக்க இயலுமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளிலும் பிறமொழி இலக்கியங்களைத் தமிழிலும் மொழி பெயர்க்க நீதிபதி திரு எஸ். மகராசன் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டுள்ளது. இக்குழு இதுவரை 6 முறை கூடி மொழி பெயர்க்க வேண்டிய நூல்களின் பட்டியலையும், மற்றும் கூர்ந்தாய்வாளர்கள் நியமனம் மற்றும் அவர்களுடைய ஊதியம் பற்றி நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, சாகா வரம் பெற்ற அண்ணா அவர்களின் அருஞ்சுவை இலக்கியங்கள், அமரர் ஜீவா அவர்களின் பாடல்கள் இவைகள் எல்லாம் மொழி பெயர்க்கப் பட்டுள்ளனவா. அப்படி இல்லாவிட்டால் அவைகளை மொழி பெயர்க்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா? புதுக் கவிதை உலகில் கொடி கட்டிப் பறக்கும் கவி நா. காமராசனின் கவிதைகள் மொழி பெயர்க்கப் படுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 நவம்பர் 5

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு நான் முன்பே பதில் அளித்திருக்கிறேன். எந்தெந்த நூல்கள் பிற மொழிகளிலே இருந்து தமிழிலே மொழி பெயர்க்கப் பட்டுள்ளன, அல்லது எந்தெந்த நூல்கள் தமிழிலே இருந்து பிற மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்ற குறிப்புக் களைப் பற்றி, தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்க முடியும். உறுப்பினர் அவர்களின் மேலான ஆலோசனையும் அரசின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, நாடோடி மன்னனிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாய்ப்பாட்டுப் பாடினார்களா: அல்லது வாயசைத்தார்களா?

[பதில் இல்லை.]

## மதுரை நகரில் கலைக் கல்லூரிகள்.

*வினா எண். 109 திரு. என். லட்சுமிநாராயணன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாநகரில் புதிதாக கலைக் கல்லூரிகள் நிறுவ அனுமதி கோரி மனுக்கள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை மனுக்கள் வந்துள்ளன?

(இ) அவற்றின் விவரம் யாது?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) ஒன்று.

(இ) இராணி மெய்யம்மை ஆச்சி (செட்டிநாடு) நினைவு அறக் கட்டளையிலிருந்து, புதிதாக 1979–80-ம் கல்வி ஆண்டில் ஒரு பெண்கள் கல்லூரி திறக்க மனு வந்துள்ளது. இது பரிசீலனையிலுள்ளது.

திரு. நா. லட்சுமிநாராயணன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி கல்லூரி நடத்த முன்வந்தால் அந்த மனு பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்றாண்டு காலமாக கல்லூரிகளை துவக்க அரசு அனுமதி அளிக்கவில்லை. 1979-80ம் ஆண்டில் பல மனுக்கள் புதிய கல்லூரிகளைத் துவக்க வந்துள்ளது. அதில் ஒன்றுதான் இராணி மெய்யம்மை ஆச்சி (செட்டிநாடு) நினைவு அறக்கட்டளையிலிருந்து ஒரு பெண்கள் கல்லூரி திறக்க



1979 நவம்பர் 5]

வந்துள்ள மனு என்று ஏற்கனவே குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல், மதுரை மாநகராட்சியிலிருந்து மனு வந்தால் அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கல்லூரிகள் அமைக்கவேண்டும் என்றால், அது பல்கலைக் கழகங்களுக்கு இடையே எவ்வளவு தூரத்திற்குள் அமைக்கப்பட வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றதா? அந்த நியதிகளைப் பின்பற்றி ஆரம்பிக்கிறபோது, சிதம்பரத்திற்கு அருகாமையில் உள்ள புரிமுஷ்ணம், சேத்தியாதோப்பு ஆகிய கிராமப்புறங்களில் ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்) தலைவர் அவர்களே, மூலக்கேள்வி மதுரை மாநகரில் புதிதாக கலைக் கல்லூரிகள் நிறுவ அனுமதி கோரி மனுக்கள் ஏதேனும் வந்துள்ளதா என்பதைப் பற்றியதாகும். உறுப்பினர் விரும்புகிற தகவல்களை அறிய தனியாகக் கேள்வி போட்டால், சேகரித்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கிற கலைக்கல்லூரிகளில் மாணவர்கள் சேருகிற நிலைமை குறைந்துள்ள காரணத்தால், புதிதாகக் கல்லூரிகளைத் துவக்க தனியாரிடமிருந்து கோரிக்கைகள் வருகிறபோது, அவர்களை தொழில் கல்லூரிகளை ஏற்படுத்துவதற்கு அரசு போதிய ஊக்கம் அளிக்கவும், உதவி செய்யவும் முன் வருமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச்செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற யோசனையை அரசு கருத்தில் கொண்டு ஏற்கனவே செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கலைக்கல்லூரிகளில் போதிய மாணவர்கள் சேருகிற வகையில் ஊக்கம் அளிக்க அரசிடம் நிரந்தரத் திட்டம் ஏதேனும் உள்ளதா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் விவரமாக தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

[1979 நவம்பர் 5

## சாமல்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்

*வினா எண். 110 திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம் சாமல்பட்டியில் அரசு உயர்நிலைப்பள்ளி கட்டிட வேலை ஆரம்பித்து நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் யாது?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) மற்றும் (ஆ)

இப்பள்ளிக்கான கட்டிட பணி பள்ளியின் கட்டிட குழுவினரால் செலவு ஏற்கப்பட்டு 1972ம் ஆண்டு துவங்கப்பட்டது. கட்டிடக்குழு தொடர்ந்து செலவழிக்க இயலாததால், பணி 1974-ம் ஆண்டு நிறுத்தப்பட்டது. புதிய கட்டிட குழு அமைக்கப்பட்டு வேலைகள் மீண்டும் 1979ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் துவங்கப்பட்டு நடந்துகொண்டிருக்கின்றன.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் கட்டிடங்களில் இருக்கிற இடநெருக்கடி காரணமாக கீத்துக்கொட்டகைகளைப் போட்டு பள்ளிகளை நடத்தும் நிலை இருக்கிறது. இதை அரசு கவனத்தில் கொண்டு போதிய கட்டிடங்களைக் கட்ட முன் வருமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவா அவர்களே, அரசின் நிதிநிலையை அனுசரித்து அப்படிப்பட்ட பிரச்னைகள் கவனத்தில் கொண்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இம்மாதிரி கட்டிடங்கள் புதிதாகக் கட்டப்படுகிறபோது, முன்னாலேயே அனுமதிக்கப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடங்கள் இதுவரையில் கட்டப்படாமல் இருக்கின்றனவே, அவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா? குறிப்பாக நான் அடிக்கடி கேட்டு வரும், மாயூரம் பகுதியில் உள்ள திருமங்கலம் அரசினர் உயர் நிலைப் பள்ளிக்கு கட்டிடங்கள் எப்போது கட்ட இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம் சாமல்பட்டியில் அரசு உயர் நிலைப்பள்ளி கட்டிட வேலை ஆரம்பித்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்து கேட்கப்பட்டிருக்கிறது. மாயூரம் பகுதியில் உள்ள



1979 நவம்பர் 5]

திருமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளி குறித்த விவரங்கள் தேவைப்படுமானால், தனியாகக் கேள்வி போட்டால் விவரமாக பதில் அளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9.50]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே பேரவைத் தலைவருக்குப் பதில் சொல்லுங்கள். கேள்வி ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியப் பள்ளியைப் பற்றியது, ஆகவே, அதற்கு மட்டும்தான் பதில் இருக்கும். மூலக் கேள்வியை ஒட்டிக் கேட்க வேண்டும்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு கண்வலி ஏற்பட்டு, அதனால் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் சோமசுந்தரம் அவர்களும் அதிக கண்வலியோடு இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொன்னால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோமசுந்தரம் அவர்களுக்கு கண்வலி இருக்குமானால் அவர்களும் போய் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கண்வலி உள்ளவர்கள் அவர்களாக வராமல் இருக்கு வேண்டுமே தவிர நீங்களாகத் துரத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறருக்குத் தொற்றக் கூடியது, பரவக் கூடியது. ஆகவே, மற்றவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். நானாகத் துரத்தவில்லை. மற்ற உறுப்பினர்கள் குறிப்பிடுவதால் சொல்கிறேன், நோய் உள்ளவர்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளட்டும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, போகிற போக்கை பார்த்தால் எல்லோருக்கும் கண்வலி வந்துவிடும்போல் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மூலக்கேள்வி சாமல்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்தைப் பற்றியது என்றாலும் மாண்புமிகு ஆளும்கட்சி கொறடா அவர்கள் அந்தக் கேள்வியை வேறு வகையிலே கூரைக் கட்டிடமாக இருப்பவை மாற்றியமைக்கப்படுமா என்று கேட்டார்கள். ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கு இருக்கிற உரிமையில் ஓரளவாவது எதிர்க் கட்சிக்கும் இருக்கும் என்பதால் கேட்டேன்.

[1979 நவம்பர் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதித்தது, பொதுநோக்கோடு சொன்னதால்தான். பொதுவாக உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் கூரை வீடுகளாக இருக்கின்றன; அதற்குப் பதிலாக அவை நல்ல கட்டடங்களாக அமைக்கப்படுமா என்று ஓட்டு மொத்தமாகக் கேட்டார்கள். ஆனால் நீங்கள் மாயூரத்திலே சுட்டிக்காட்டிக் கேட்கிறீர்கள். நீங்கள் கேட்பதற்கு தகவல் இருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. உங்களுடைய கேள்வி குறிப்பிட்ட இடத்தைப்பற்றியது.

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, மாயூரத்தைச் சேர்ந்த திருமங்கலம் பகுதியில் அரசு உயர்நிலைப் பள்ளி கூரைக் கட்டடத்தில் இருக்கிறது. அதை மாற்றி, அசல் கட்டடமாகக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, இதுகுறித்து முதலில் கொறடா அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளித்திருக்கிறேன். ஆகவே, அது இதற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு கொடுத்து உதவக் கூடிய பணத்தை எந்த அடிப்படையில் ஒதுக்குகிறார்கள்? குறிப்பாக, இத்தனை வருஷ காலம் உயர்நிலைப்பள்ளி நடைபெற்றால் அதற்கு என்று வரன்முறை ஏதாவது வைத்திருக்கிறார்களா? அல்லது எந்த வரன்முறையின் அடிப்படையிலே பணம் ஒதுக்கப்படுகிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்களிலே பள்ளிகளுக்கு நல்ல கல் கட்டடம் கட்டுவதற்கு அங்கே டெண்டர் விடும்போது, அது கட்டுப்படியாகவில்லை என்ற நிலையிலே இருக்கிறது; தமிழ்நாடு முழுவதும் அந்த நிலைதான் இருக்கும். ஆகையால் கான்ட்ராக்டர்கள் டெண்டர் கேட்பதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே, அதை திரும்பவும் பரிசீலனை செய்து, நல்லமுறையில் அவர்கள் எடுத்துக்காட்டக் கூடிய வகையில் தொகையை உயர்த்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனையை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1979 நவம்பர் 5]

திரு. பொ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேல் நிலை பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்ட பின், சில இடங்களில் சில பள்ளிகளை அரசே மேல் நிலைப் பள்ளிகளாக அறிவித்திருக்கின்றன. அப்படி அறிவிக்கப்பட்ட பள்ளிகளிலும் அங்கே படிக்கின்ற மாணவர்கள் ஆங்காங்கே தரையில் உட்கார்ந்துக் கொண்டு படிக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக ஃபர்னிசர் போன்ற வசதிகளை ஏற்படுத்தி தர அரசு ஏற்பாடு செய்வதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண்கள் 111, 112 இரண்டும் உள்ளாட்சி துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

## செயற்கை வைரத் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம்

*வினா எண் 113 திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயற்கை வைர தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு கூலி நிர்ணயம் செய்வது பற்றிய குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் விபரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) செயற்கை வைரத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்து அரசுக்கு ஆலோசனை கூற 16.5.79 அன்று தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசு ஆணை எண் 816-ல் ஓர் ஆலோசனைக் குழுவினை ஏற்படுத்தியுள்ளது. அந்தக்குழு அறிக்கை அனுப்பிய பிறகு அரசு அந்த அறிக்கையை ஆராய்ந்து மேல் நடவடிக்கை எடுக்கும்.

திரு. சி. மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே செயற்கை வைரம் வெட்டும் தொழிலாளர்கள் திருச்சி மாவட்டத்தில் குறிப்பாக என்னுடைய தொகுதியிலே தான் அதிகமாக இவ் வேலை செய்கிற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் காலை 7 மணிக்குப் போனால் இரவு 7 மணி வரைகூட வேலை செய்தும் அதற்கு கூலியாக ரூபாய் 5-க்கும் குறைவாகதான் ஊதியம் பெறுகிறார்கள். எனவே தொழிலாளர்

களின் நலனுக்காகவே பணி புரிந்த நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இந்த தொழிலாளர்களுக்கு சரியான கூலி கிடைக்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் இந்தக் குறைந்த பட்ச கூலியை நிர்ணயிப்பதற்கான குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த செயற்கை வைரத்தில் வேலை செய்யும்படியான தொழிலாளர்கள் தமிழகத்தில் ஏராளமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். இவர்களுக்கு இந்த குறைந்த பட்ச கூலியை நிர்ணயிப்பதற்கு, குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டத்தின்படி கூலியை நிர்ணயிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை இதுதான் முதல் நடவடிக்கையா அல்லது ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளனவா அப்படியானால் அதை திருத்தி அமைப்பதற்காக இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முறையாக இத்தொழிலில் குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதற்கு அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காகத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு துறையில் வேலை செய்கிறவர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் தனியார் துறையில் வேலை செய்கிறவர்களுக்கும் குறைந்த பட்ச அளவிலே கூலி நிர்ணயம் செய்ய அரசு ஏதாவது முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஷெட்யூலில் இணைக்கப்பட்டுள்ள எல்லாத் தொழில்களுக்கும் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது. என்னுடைய ஞாபகம் சரியாக இருந்தால், ஒரு மாநிலத்தில் ஆயிரமும், அதற்கு மேலும் ஒரு தொழிலில் ஈடுபட்டவர்கள் இருக்கின்ற தொழிலுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படும் என்று இருக்கிறது. 500க்கு மேல் இருந்தாலும் தடை இல்லை என்று, சட்டம் இருப்பதாக எனக்கு ஞாபகம். ஆக அந்த நிலையில் எந்தெந்த தொழில் என்றெல்லாம் பார்த்து அரசு ஒவ்வொன்றாக குறைந்த பட்ச ஊதியக் குழு அமைத்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையான வைரத்தை வாங்க முடியாத ஏழை எளியவர்கள் இந்த செயற்கை வைரத்தை வாங்குகிறார்கள்





ஆகையினால் தமிழகத்தில் இதுவரை செயற்கை வைரத் தொழிலில் எவ்வளவு பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அரசு அறிவிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்து தரப்படும்.

திரு. கே. சௌந்திரராசன்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் மட்டும் 1 லட்சத்திற்கு மேலான தொழிலாளர்கள் இந்த தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலுக்குத் தேவையான தளம் மேட்டுப்பாளையத்தில் உள்ள மிகப் பெரிய முதலாளியினால் அளிக்கப்பட்டிருக்கிறது. இவரும், இவரோடு இணைந்து ஒரு வடநாட்டு மார்வாரியும் ஒரு கம்பெனியை வைத்துக் கொண்டு கொள்ளை அடிக்கிறார்கள். அடிக்கடி விலையை ஏற்றுகிறார்கள். இதனால் பல்வேறு பிரச்னைகள் தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்றன. வேலை கிடைப்பதில்லை சரியாக அந்த தொழிலாளர்களுக்கு. இதைப் பற்றி அரசு அறியுமா? இதை தடுத்து நிறுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான நடவடிக்கை விரைந்து எடுக்க முன் வருவாரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல் இதுவரை எனக்கு அறிவிக்கப்படவில்லை. இப்பொழுது கிடைத்த தகவலை வைத்துக் கொண்டு வேண்டிய நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.00]

திரு. நா. சுந்தரராஜ்: புதுக்கோட்டை மாவட்டத்தில், செயற்கை வைரத் தொழிலாளர்கள் எல்லாம் 1976-ம் ஆண்டுக்கு முன்பாக கொத்தடிமைகளாக இருந்தார்கள். அவர்களை எல்லாம் இந்திரா காந்தி அவர்கள் கொண்டு வந்த இருபது அம்சத் திட்டத்தின் மூலம் கொத்தடிமை நிலையிலிருந்து நீக்கி புது வாழ்வு கொடுத்தார்கள், திரு. பால்ராஜ் அவர்களும், திரு. விஜய ரெகுநாத தொண்டைமான் அவர்களும். அவர்களுக்கு அந்த வாழ்வு நிரந்தரமாகக் கிடைக்க அரசு உத்தரவாதம் அளிக்குமா? அதோடு, இந்த கூலி உயர்வுச் சட்டத்தை உடனடியாக அமல் படுத்தி அவர்களுக்கு நல்ல கூலி கிடைக்க வேண்டிய வழிவகைகளை இந்த அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இதற்காக அமைக்கப்பட்டிருக்கிற குழுவின் பரிந்துரை வந்த பிறகு அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குழு இந்தத் தொழிலில் இருக்கிற பல்வேறு பிரச்னைகளை முறையாக ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை கொடுப்பதற்கு சிறிது காலம் ஏற்படும். ஆகவே இடைக்கால நிவாரணமாக இந்தக் குழுவின் அறிக்கை கிடைப்பதற்கு முன்பே இடைக்கால நிவாரணமாக அரசாங்கம் ஒரு முடிவு எடுத்து அதற்காக ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து போதிய கூலி நிர்ணயம் செய்ய வேண்டிய வழிவகைகளை இந்த அரசு ஏற்படுத்தித் தருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 1948-ம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தில் அதற்கு வாய்ப்பில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : இந்த செயற்கை வைரத் தொழிலினால் அரசுக்கு அதிகமான லாபம் உண்டா? அப்படி இல்லை என்றால் அந்தத் தொழிலை அரசுடைமையாக்க அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கேள்வி குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பது பற்றியது.

## திரை அரங்குகளில் பணியாற்றுவோருக்கு படிகள்.

*வினா எண்—114 திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தினசரி 4 காட்சிகள் காட்டப்படும் சென்னை நகர திரைப்பட அரங்குகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான படித்தொகையும் வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) 8 மணி நேர வேலை என்பது திரை அரங்கில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குப் பொருந்துமா?

(இ) ஆம் எனில் அந்த உரிமை வழங்க மறுக்கும் திரை அரங்கு உரிமையாளர்கள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தினசரி 4 காட்சிகள் காட்டப்படும் சென்னை நகர திரை அரங்குகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு படித்தொகைகள் (daily batta) வழங்கப்படுகின்றன.

(ஆ) 8 மணி நேர வேலை என்பது திரை அரங்குகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் பொருந்தும்.





(இ) வேலை நேரத்தைப் பொறுத்த அளவில் ஆய்வு செய்த சமயங்களில் எந்தவிதச் சட்ட மீறல்களும் காணப்படவில்லை. 8 மணி நேரத்திற்கு மேல் பணிபுரிய அனுமதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு மிகை நேர ஊதியம் வழங்கப்படுகிறது. மிகை நேர ஊதியம் வழங்காமல் வேலை வாங்குதல் போன்ற சட்டமீறல்கள் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்ள ஆய்வாளர்கள் திரை அரங்குகளில் திடீர் ஆய்வுகள் நடத்தி வருகின்றனர்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : சென்னை நகரில் தினசரி நான்கு காட்சிகள் நடைபெறுகிற தியேட்டர்களில் உள்ள தொழிலாளர்களுக்கு சரியான பாதுகாப்பு இல்லை என்பதை முதலாவதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல் எட்டுமணி நேர வேலை என்பது சென்னை நகரில் உள்ள எந்தத் தியேட்டரிலும் கைக்கொள்ளவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். 12 மணி நேரம், 14 மணி நேரம் வேலை செய்கிறார்கள். காலை 10-30 மணிக்கு வந்தால் ஏறத்தாழ இரவு 12-30 மணி வரை வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு இடையில் மூன்று மணி நேரம்தான் ஓய்வு கிடைக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் சென்னையில் உள்ள நிலைமையை விளக்குகிறார்களா அல்லது துணைக் கேள்வி போடுகிறார்களா?

திரு. சென்னை மு. அரங்கநாதன் : இதைச் சொன்னால் தான் துணைக் கேள்வி வரும். இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. பேட்டா என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏறத்தாழ 1 ரூபாயிலிருந்து ரூ. 2.50 வரை தியேட்டருக்குத் தகுந்தாற்போல் கொடுக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இதைப்போக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன? இரண்டாவதாக, இன்று சில குறிப்பிட்ட தியேட்டர்களில் மாதக்கணக்கில் வாடகைக்கு விட்டு விடுகிறார்கள். குறிப்பாக சொல்லப் போனால் அலங்கார், தேவி தியேட்டர்கள் போன்றவைகளை மாதம் ஒன்றுக்கு ரூ. 80,000-க்கு வாடகைக்கு விட்டு விட்டு அதிலிருக்கிற தொழிலாளர்களை கூலிகளைப் போல் விநியோகஸ்தர்கள் மூலம் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கக் கூடிய நிலையை உருவாக்கி சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள், இந்த நிலை அரசுக்குத் தெரியுமா?

திரு. சென்னை மு. அரங்கநாதன் : அடுத்தபடியாக, திரைப்படக் கொட்டகை உரிமையாளர்கள் அங்கிருக்கிற டீ ஸ்டால், சைக்கிள் ஸ்டான்ட் போன்றவற்றை பினாமி பெயரால் நடத்திக் கொண்டு அங்குள்ள தொழிலாளர்களைப் பழி வாங்குகிறார்கள். அதுவும் அரசுக்குத் தெரியுமா? இது குறித்து என்ன நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறது அரசு?

[1979 நவம்பர் 5

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கேள்வி வேலை நேரம், அதையொட்டிய படி, ஓவர்டைம் அலவன்ஸ் பொறுத்தது. சென்னையில் உள்ள திரையரங்குகளில் அப்படிக் கொடுப்பதில்லை அதிக நேரம் வேலை செய்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இதை மனதில் வைத்து அதற்கு வேண்டிய சர்ப்ரைஸ் செக்ஸ், திடீரென்று சோதனை செய்வதற்கு தீவிர மான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மற்றக் கேள்விகளுக்கு பதில் தேவை இல்லை என கருதுகிறேன், மூலக் கேள்விக்கு சம்பந்த மில்லையென்பதால்.

திரு. எம். அண்ணாமலை ; தலைவர் அவர்களே, திரை யரங்குகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு குறிப்பிட் டுள்ள வேலை நேரத்தை அமைச்சர் அவர்கள் அறிவித்நார்கள்' இது சென்னை மாநகரத்திற்கு மட்டும்தான் பொருந்துமா அல்லது மாநிலம் முழுவதிற்கும் பொருந்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, சினிமா தியேட்டர்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் ஷாப் அன்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்டின் கீழ் வருகிறார்கள். ஆகவே இது தமிழ்நாடு முழுவதும் பொருந்தும்.

திரு. நா. சுந்தரராஜ் ; தலைவர் அவர்களே, இப்போது டெவலப்பிங் நேஷனை ஏற்படுத்த முயற்சி செய்து கொண்டிருக் கிறோம். இன்றைக்கு பாதிப் பேர் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மக்களை இன்னும் சோம்பேறியாக்குகின்ற 10 மணி காட்சிகளை நிறுத்து வதற்கு அரசு நடவடிக்கைஎடுக்குமா? வீட்டில் கணவன்மார்களை ஏமாற்றிக்கொண்டு பெண்கள் சினிமா பார்க்கவந்து விடுகிறார்கள் ஆகவே இந்த பத்து மணி காட்சியை நிறுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

The Hon. Thiru S. RAGAVANANDAM : The hon. Member has dialled a wrong number.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இதையும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் பல தியேட்டர்கள் மாத்வாடகை 80 ஆயிரம் ரூபாய் அளவுக்கு விட்டுக்கொண்டு அதில் வேலை செய்யும் தொழிலாளர்களை தொழில் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொண்டு, தொழிலாளர்களையும் பழி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். தினக்கூலிகளைப்போல் அவர்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியென்றால் இந்த நிலைமையை அரசு தீவிரமாக பரிசீலித்து இப்படிப்பட்ட தொழிலாளர்களைப் பாதுகாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1979 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதிலுள்ள மூலக்கேள்வி நான் ஏற்கனவே சொன்னதைப்போல், வேலை நேரம், அதையொட்டிய ஓவர் டைம், பேட்டா கொடுப்பது இவைகளைப் பற்றியது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற எல்லாவற்றையும் மனதில் கொண்டு தக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

## நலத்துறைப் பள்ளிகள்

* வினா எண் 115—திரு. இரா. தாமரைக்கனி, திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அரிசன் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளை, கல்வித்துறைக்கு ஒப்படைத்து, அப்பள்ளிகளின்—நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தவும், கல்வித்தரத்தை உயர்த்தவும் அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) அரிசன நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளை கல்வித்துறைக்கு மாற்றும் உத்தேசம் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசனத்துறையால் நடத்தப்படுகின்ற பள்ளிகள் சரியான முறையில் இயங்குவது கிடையாது. கட்டிடங்கள் கிடையாது. கட்டிடங்கள் இருப்பதும் மாட்டுக்கொட்டகை போல் இருக்கிறது. மேலும் அங்கே பெஞ்சு போன்றவைகள் கிடையாது. ஆகவே இந்தப் பள்ளிகளை நல்ல முறையில் நடத்தவும், கல்வியின் தரத்தை உயர்த்தவும் அரசு உடனடியாக பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக மாவட்டக் கல்வி அலுவலர் ஒருவரையும், ஆய்வாளர்களையும் நியமிக்க பரிசீல்னை செய்து வருகிறோம். மேலும் பள்ளிக் கட்டிடங்கள் மாட்டுக்கொட்டகைப்போல் இருக்கின்றன என்று சொன்னார்கள். பல பள்ளிகளில் நிரந்தரக் கட்டிடம் கட்டப்பட்டு இருக்கிறது. மேலும் நிதிநிலைமையின் காரணமாக நிரந்தரமான கட்டிடங் களாக மாற்றுவதற்கு தற்போது சூழ்நிலை இல்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி வாசனையற்றிருந்த காலத்தில், தீண்டாமைக் கொடுமை கடுமையாக இருந்த நேரத்தில் அரிசனப் பள்ளிகள் தனியாக இருக்கவேண்டும் என்ற நிலை இருந்தது. இப்போது ஊரெல்லாம் பள்ளிகள் ஏற்பட்டிருக்

கின்ற இந்த நேரத்தில் தனியாகப் பள்ளிகள் தேவையா என்பதை அறிய விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று வீடுகள் கட்டிக் கொடுக்க நிதி வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே இந்தப் பணத்தை வீட்டுவசதி செய்து கொடுப்பதற்கு மாற்றிக் கொடுப்பது நல்லது தானே என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட நலத்துறையின் கீழ் நடைபெறுகின்ற பள்ளிகளை கல்வித்துறைக்கு மாற்றுவதற்கான கருத்துரு 1972-ம் ஆண்டு பரிசீலிக்கப்பட்டது. கல்வித்துறை, சட்டத்துறை போன்ற துறைகள் கலந்து பேசியதில் இதில் பல சிக்கல்கள் வரும் என்கின்ற காரணம் கூறப்பட்டதால், கல்வித்துறைக்கு மாற்றும் கருந்துரு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கு கொடுக்கும் நிதியை வீடுகட்டுவதற்கு மாற்றம் செய்வது பற்றிய பிரச்னை அல்ல.

திரு. சு. பாலன்: அவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அரிசன நல அதிகாரிகள் மாற்றப்பட்டு பல மாதங்களாகி விட்டன. இதுவரை அதற்குப் பதில் யாரையும் நியமிக்கவில்லை. இதனால், அரிசன நலப் பள்ளிகள், விடுதிகள் இவைகளிலுள்ள காரியங்களை எல்லாம் கவனிக்க முடியாத நிலை இருக்கிறது. மாற்றிய அதிகாரிக்குப் பதில் ஏன் இன்னும் வேறு அதிகாரி போடவில்லை? இந்தத் துறைக்கு வருவதற்கு அதிகாரிகள் அச்சப்படுகின்றனரா? என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தத் துறைக்கு வருவது பற்றி யாருக்கும் எந்தவிதமான அச்சமும் இல்லை. பள்ளிகளை நிர்வகிக்கின்ற நிலைமையைப் பொறுத்த வரையில், தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உள்ளாட்சித்துறை 4 சதவிகிதம், ரெவின்யூ துறை 7 சதவிகிதம், இந்தத் துறை 4 சதவிகிதம் என்கிற வகையில் பணிகள் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு அது இப்போது தீவிரமாக பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் இதற்கான ப்ரபோசல் இன்னும் வரவில்லை. அதுதான் காலதாமதத்திற்குக் காரணமே தவிர வேறு எதுவும் இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : அரிசன நலத்துறையில் நடத்தப்படுகின்ற பள்ளிகளிலுள்ள கல்வித்தரத்தை மாற்றுவதற்காக கல்வித்துறைக்கு மாற்ற வேண்டும் என்ற பிரச்னை சட்டப் பிரச்னையால் இதை நிறைவேற்றுவதற்கு சாத்தியம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இதை மாற்ற வேண்டும் என்று அவர் சொல்லுவதற்கு முக்கிய காரணம் இந்தத் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுதான். இப்போது செம்மையாக நடைபெறவில்லை. இதை போதிய அளவு மாற்றுவதற்கு நிதிப் பற்றாக்குறை காரணமாக இருக்கிறது என்று எடுத்துக் காட்டியிருக்கிறார் அமைச்சர் அவர்கள்



ஆகவே இந்தத் துறைக்கு முக்கியம் அளித்து அதிகமான நிதியை ஒதுக்குவதற்கு இந்த ஆண்டாவது உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும், நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் தேவையான கூடுதல் அலுவலர்களை நியமிப்பதற்கு இப்போது அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும் கொடுக்கின்ற நிதியை ஒழுங்காக செலவழித்து வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் நிதித் துறையைக் கேட்க வேண்டிய கேள்வி இது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே. அரிசன நலத் துறையைத் தனித் துறையாக ஆக்குகின்ற ஒரு ப்ரபோசல் ஏற்கனவே இருந்தது. அது எந்த நிலையில் இருக்கின்றது என்பதையும், இப்போது இந்தக் கல்வியைப் பொறுத்த வரையில் இந்த அரிசன நலத்துறையில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இந்தத் துறையிலிருந்து சம்பளம் வழங்கப்படுகின்றது என்பதை நான் உணர்வேன். அப்படி இருக்கும்போது கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு, 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையை மாற்றி, 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையில் இதை ஒழுங்குபடுத்துவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் ; தலைவர் அவர்களே, இந்தத் துறைக்கு நிரந்தரமான பணியாளர்களை நியமிப்பதற்காக, யார் யார் பணியாற்ற விரும்புகிறார்கள் என்பதற்குச் சம்மதம் கேட்டு, எல்லா மாவட்ட அலுவலகங்களுக்கும் அரசாங்கம் அறிக்கை அனுப்பி இருக்கிறது. யார் யார் விருப்பம் தெரிவிக்கின்றார்களோ, அவர்களை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் நியமிக்கவேண்டும் என்ற ஒரு யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். தற்போது கல்வித் துறையிலே எந்த அளவுக்கு இதிலே நிர்ணயித்திருக்கிறார்களோ, அதே முறையை இந்தத் துறை பின்பற்றி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, துரை முத்துசாமி, இப்போதுதான் இரண்டு உறுப்பினர்களுக்கு கண் வலி என்று ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொன்னேன். தங்களுக்கு கழுத்திலே காயம். வேகப்பட்டு கேட்காதீர்கள். கொஞ்சம் நிதானமாகக் கேளுங்கள்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரிசன நலத்துறையின் நிதி நிலைமையை பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த அரிசன

நலத் துறையும், இப்போது மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் துறையும் ஒன்றாக இருக்கின்ற காரணத்தினால் அப்பேர்ப் பட்ட நிலை இருக்கிறது. எனவே, இரண்டு துறைகளையும் தனித்தனியாக அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்? அடுத்து, இரண்டு தாலுகாக்களுக்கு ஒரு தாசில்தார் இருக்கின்ற காரணத்தினால், வேலைப் பளு அதிகமாக இருக்கின்றது. ஆகவே, ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு தனி அரிசன நல தாசில்தார் அமைக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களின மேம்பாட்டிற்காக மத்திய அரசாங்கம் உதவி செய்கின்றது. அது ஒரு தனித் திட்டம், அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத் திற்கும், அரிசன நலத் துறைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. நிதி சம்பந்தமும் இல்லை. அதற்கு தனியாக செலவழித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு இரண்டு வட்டத்திற்கும் ஒரு தனித் தாசில்தார் இருப்பது உண்மைதான். தற்போது, அரசாங்கம் ஒவ்வொரு வட்டத் திற்கும் ஒரு தாசில்தாரை நியமிக்க வேண்டுமென்று கருத்திலே கொண்டிருந்தாலும், அதற்கு அதிகமான நிதி தேவைப்படு கின்றது. தற்போது நிதி நிலைமை சரியாக இல்லாத காரணத் தினால், ஒரு வட்டத்திற்கு ஒரு தாசில்தார் நியமிக்கின்ற உத்தேசம் தற்போது இல்லை.

திரு. வி. கொ. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதைக்கேட்டாலும் நிதிப் பற்றாக்குறை நிதிப் பற்றாக்குறை என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் இங்கே இருக்கின்றார்கள். அவர்களுடைய கவனத்திலேயும் இது விழும் என்று கருதுகிறேன். ஆகவே, என்னைப் பொறுத்த வரையில் எல்லா அரிசன நலத் துறைப் பணிகளுக்கும் அதிகமான நிதியை இந்த ஆண்டு பட்ஜெட்டிலாவது அமைச்சர் அவர்கள் ஒதுக்க முன்வர வேண்டுமென்பதாகும். அரிசன நலப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், இன்னும் எத்தனைப் பள்ளிகள் தேவைப் படுகின்றது ? ஒட்டு மொத்தமாக தமிழகத்திற்கு எவ்வளவு பள்ளிகள் தேவை என்று பரிந்துரை வந்திருக்கின்றது ? இந்த ஆண்டிலாவது அதற்குப் போதுமான பள்ளிகளைத் திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இருக்கிற பள்ளிகளை ஒழுங்காகப் பாதுகாப்பதுதான் நல்லது. புதிதாகப் பள்ளிகளைத் திறந்து அவற்றையும் திறமையற்றதாகவோ ஒழுங்கற்றதாகவோ ஆக்குவது அவ்வளவு பொருத்தம் இல்லை யென்பது இந்தத் துறையின் கருத்தாகும். இருக்கிற பள்ளிகளை நல்ல முறையில் பராமரிக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.



## அரிசன மாணவர் விடுதிகளில் உள்ள சமையல்காரர்களது சம்பளம்

* வினா எண் 116—திரு. வே. கருணாமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) அரிசன மாணவர் விடுதியில் பணியாற்றும் சமையல் காரர்களுக்கு, வழங்கும் சம்பளத்தை உயர்த்தும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

(ஆ) தற்போது, எவ்வளவு சம்பளம் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :—

(அ) அரிசன மாணவர் விடுதியில் பணியாற்றும் சமையல் காரர்களுக்கு வழங்கும் சம்பளத்தை மேலும் உயர்த்தும் உத்தேசம் தற்போது அரசுக்கு இல்லை.

(ஆ) அரிசன மாணவர் விடுதியில் பணியாற்றும் சமையல் காரர்கள், தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ. 60/- (இலவச உணவுடன்) 10 மாதங்களுக்கும், ரூ. 80/- (இலவச உணவு இல்லாமல்) இரண்டு மாதத்திற்கும் பெறுகின்றனர். உதவி சமையல்காரர்கள் மாதம் ரூ. 55/- (இலவச உணவுடன்) 10 மாதங்களுக்கும், ரூ. 75/- (இலவச உணவு இல்லாமல்) இரண்டு மாதங்களுக்கும் பெறுகின்றனர்.

திரு. நா. பழனிவேல் : அரிசன மாணவர்கள் விடுதியில் தங்கிப் பயிலக்கூடிய மாணவர்களுக்குச் சமைத்துப் போடும் சமையல்காரர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம் கொடுக்கும் காரணத்தால் விடுதிக் காப்பாளர்கள் செய்யக்கூடிய ஊழல் களுக்கு அவர்களும் உடந்தையாக இருக்கிறார்கள் என்று அறிகிறேன். இதனால் அங்கு பயிலக்கூடிய மாணவர்களின் உணவு மிகவும் குறைந்து விடுகிறது. ஆகவே, அவர்களுக்கு ஒழுங்கான முறையில் எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுத்து அவர்களுக்கும் சாப்பிடுவதற்கான உணவை அந்த விடுதியில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அந்த விடுதிகளில் பணியாற்றக்கூடிய சமையல்காரர்களுக்குத் தற்போது உணவும் கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று தாழ்த்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் மூன்றாவது ஊதியக் குழுவுக்குப் பரிந்துரை செய்தார். குழு ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. இரா. ச. முனிரத்தினம் : அரிசன மாணவர்கள் விடுதியில் சமைக்கிற சமையல்காரர்கள் சில சில இடங்களில் வயதானவர்களாகவும், கண் தெரியாமலும் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் மாற்றி நல்லவர்களாகப் போட உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் கண் தெரியாதவர்களும், வயதானவர்களும் இருக்கிறார்கள் என்றால் மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி ஏற்கனவே சொன்ன புகார் பற்றி நினைக்கும்போது ஒரு விதத்தில் அவ்வாறு இருப்பதும் நல்லதுதான்.

திரு, க. சுப்ரவேலு : இந்த விடுதிகளிலே பணிபுரிகிற சமையல்காரர்களுக்கு 50 ரூபாய் 60 ரூபாய், என்ற அளவிலே தான் சம்பளம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், அரசுத் துறைகளில் எல்லாம் போராட்டங்கள் நடைபெற்று அவர்களுடைய ஊதியங்கள் உயர்த்தப்பட்டுள்ள இந்த நேரத்தில் மிகக் குறைந்த அளவுக்கு எண்ணிக்கையுள்ள 100 அல்லது 150 பேர்தான் அந்த வேலையில் இருப்பார்கள். இவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதன் மூலம் நிதி நிலையை அது பெருமளவு பாதித்துவிடாது. அவர்களும் வாழ வேண்டும், அவர்கள் பிள்ளைகளும் படிக்க வேண்டுமென்ற வகையில் அவர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : குறைகளைப் போக்க கவனம் செலுத்தி மூன்றாவது ஊதியக் குழுவுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. அந்தக் குழுவினர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தத் துறையைப் பொறுத்தவரை அவர்கள் மேல் பரிதாபம் இருக்கிறது, ஆனால் பணம் இல்லை.

திரு. பொ. உத்திராபதி : அரிசன மாணவர் விடுதியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் குறைந்த பணந்தான் கொடுக்கப்படுகிறது. மாணவர்கள் உயிரைப் பாதுகாக்கிற சமையல் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கும் மிகக் குறைந்த சம்பளந்தான் கொடுக்கப்படுகிறது. திருத்துறைப்பூண்டியிலும் அந்த நிலை இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். விலைவாசி இந்த அளவுக்கு ஏறியிருக்கும்போது அவர்கள் எப்படி 60 ரூபாயிலும், 75 ரூபாயிலும் வாழ முடியும்? அரிசன நலத் துறையில் நிதி இல்லை. பணப்பற்றாக்குறை என்று அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நிதியமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். தமிழகத்தில் ஒதுக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அரிசன மக்கள். அந்த மக்கள் முன்னேற நிதி இலாகா அரிசனத் துறைக்கு அதிகமான நிதி கொடுத்து அந்தச் சமையல்காரர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இருக்கிற நிலைமையைத்தான் நான் சொல்லுகிறேனே தவிர, இன்னும் கூடுதலாக சம்பளம் வழங்க வேண்டுமென்பதுதான் இந்தத் துறையின் கருத்தாகும். இதற்காகத்தான் மூன்றாவது ஊதியக் குழுவுக்குப் பரிந்துரை செய்தோம். அவர்கள் ஏற்றுக்கொள்ள



வில்லை. ஆகவேதான் அதிகச் சம்பளம் தர இயலவில்லை. அதிக நிதி கிடைக்கும் நேரத்தில் நிச்சயமாக இந்தத் துறை அனுதாபத்துடன் பரிசீலிக்கும்.

(முற்பகல் 10·20)

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, அந்த விடுதியிலே பணியாற்றுபவர்களுடைய கோரிக்கை நியாயமானது என்று துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. துறை பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால், ஊதியக் குழு அதை நிராகரித்துவிட்டிருக்கிறது. ஊதியக் குழு சொல்வதையெல்லாம் ஏற்றுகொள்ளவேண்டுமென்ற கட்டாயம் அரசுக்கு இல்லை. அதேபோன்று ஊதியக்குழு நிராகரித்துவிட்டதையெல்லாம் அரசும் நிராகரிக்கவேண்டும் என்பது அவசியமில்லை, அரசுக்கு நியாயமானது என்று தெரிந்தால் ஏற்றுக்கொள்ளலாம். அவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் கொடுப்பது நியாயமானது என்பதை துறை ஏற்றுக் கொள்கிறது. ஆனால், நிதிப் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள், அவர்களுக்கு நிதிப் பற்றாக்குறை, நிதியமைச்சருக்கு அதிகாரப் பற்றாக்குறை, முதலமைச்சருக்கு நேரப் பற்றாக் குறை இப்படியே பற்றாக்குறையாக ஒவ்வொன்றும் இருந்தால் நாட்டிலே என்ன நடவடிக்கையை அரசு எடுக்கமுடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். முதலமைச்சர் இருக்கிறார்கள், நிதியமைச்சர் இருக்கிறார்கள். அந்தத் துறையிலே பணியாற்றுகிறவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்று துறையே சிபாரிசு செய்திருக்கிறது, ஆனால் ஊதியக் குழு ஏற்றுக் கொள்ளவில்லையென்பதற்காக விட்டுவிடாமல், அமைச்சர்களுக்கு கூட்டுப் பொறுப்பு இருக்கிறது, அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

## காவேரிப்பட்டினம் தொகுதியில் பாசன வசதி.

*வினா எண். 117 டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் 'ரிவர் பம்பிங் ஸ்டேஷன்' மூலம் தென்பெண்ணை ஆற்றிலிருந்து பாசன வசதியுண்டாக்கும் செயல்திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (ஆ) வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேயபாட்டுத் திட்டத்தின்கீழ் (Drought Prone Areas Programme) ரூ. 6.09 இலட்சம் மதிப்பீடு கொண்ட தென்பெண்ணை ஆற்றில் இருந்து

பாசன வசதியுண்டாக்கும் இத்திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த மதிப்பீட்டுத் தொகையில் ரூ. 3 இலட்சத்தை அரசு ஏற்கும். மீதமுள்ள ரூ. 3.09 இலட்சம் கிருஷ்ணகிரியில் உள்ள நிலவள வங்கியிடமிருந்து கடனாக பெறப்படும்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப்பாசன வசதியை உண்டாக்கும் செயல் திட்டம் எப்போது உருவாக்கப்பட்டது? இதுவரையிலும் அதனுடைய செயல் திட்டத்தில் என்ன நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலே இதற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அது குண்டலப்பட்டு நீரேற்று கூட்டுறவு சங்கத்தின் மூலம் அமல் செய்யப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தாராபுரத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி.

*வினா எண். 118 திரு. ரா. அய்யாச்சாமி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் நகரத்தில் கால்நடை மருத்துவக்கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) இல்லை.
(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ரா. அய்யாச்சாமி: தாராபுரத்திலே ஒரு கல்லூரி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அந்தக் கல்லூரி கட்ட முடியவில்லையென்றாலும் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூலக் கேள்வியே கால்நடை மருத்துவக் கல்லூரி பற்றியதுதான்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவக்கல்லூரி எத்தனை இருக்கின்றன? அந்த இடத்திலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கேள்வி இல்லை.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, தாராபுரம் ஒரு பிற்பட்ட வறண்ட பகுதியாகையினால் அங்கே காங்கேயம் இனப்பசுக்களும் மேச்சேரி ஆடுகளும் சிறந்து விளங்குகின்ற





இடமாதலால் விவசாயக் கல்லூரி அங்கே அமைப்பது முக்கியம் எனபதை அரசு உணர்ந்து இனிமேலாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூலக்கேள்வி கால்நடை மருத்துவக் கல்லூரியைப் பற்றியது மாண்புமிகு உறுப்பினர் கேட்பது விவசாயக் கலலூரி பற்றியது. போதுமான அளவிற்கு விவசாயக் கல்லூரிகள் இருக்கின்றன. அதிலே தகுந்த மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## பெருந்துறை காசநோய் மருத்துவமனை.

*வினா எண். 119 டாக்டர் ஏ. பொன்னுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை காசநோய் மருத்துவமனை நிதி பற்றாக்குறையினால் சரிவர செயல்பட இயலாத நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) இந்நிலையம் ஆண்டுதோறும் ரூ. 4 லட்சம் பற்றாக் குறையால் நடத்தப்படுவதால் அரசு இந்நிலையத்திற்கு அளிக்கும் மானியத்தொகையான ரூ. 2.00 இலட்சத்திலிருந்து ரூ. 4.00 இலட்சங்களாக உயர்த்துவது பற்றி அரசு பரிசிலித்து வருகிறது.

டாக்டர் ஏ. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்யப்பட்டுப் படுக்கைகள் கொடுக்கமுடியாமல் நூற்றுக்கணக்கான நோயாளிகள் இங்கு இடம் கிடைக்குமா அல்லது அங்கு இடம் கிடைக்குமா என்று காத்துக்கொண்டிருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆலோசிக்குமா? உலகப் புகழ் பெற்ற அந்த மாபெரும் மருத்துவமனையை காச நோய் ஆராய்ச்சி நிலையமாக மாற்ற அரசு ஆலோசிக்குமா? நிதிநிலை இல்லாததால் பிணியாளர்கள், பணியாளர்கள் விகிதம் சரியில்லாததால் பிணியாளர்களுக்குச் சரியான பணி கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா? எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1965-ஆம் ஆண்டில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டு, 1971–72 ஆம் ஆண்டிலே ரூபாய்

ஒன்றரை இலட்சமாகச் சில கட்டுப்பாடுகளுடன் அதிகப்படுத்தப் பட்டுள்ளது. அதற்குப்பிறகு ரூபாய் ஒன்றரை இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அரசால் ஆண்டு தோறும் வழங்கப்படும் இந்தப் பராமரிப்புத் தொகையால் ஈடுகட்ட முடியவில்லை என்று இந்நிறுவனத்தின் நிர்வாகிகள் முறையீடு செய்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் வழங்கப் படுகின்ற பராமரிப்புத் தொகையை இரண்டு இலட்சத்திலிருந்து நான்கு இலட்சமாக வழங்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

## D. Pharmacy Course

*Q.No. 120 : Thiru M. AMBIGAPATHY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether seats in D. Pharmacy are reserved for the children of medical shop owners in the State who have an Association; and

(b) if so, the number of seats reserved in the State?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ;

(அ) ஆம். மருந்தாக்கியல் பட்டயப் படிப்பில் 20 இடங்கள் மருந்து விற்பனையாளர்களின் பிள்ளைகளுக்காக ஒதுக்கப்படுகின்றன.

திரு. மு. அம்பிகாபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்படுகின்ற இடங்கள் அவர்களுடைய பிள்ளை களுக்கு முறையாகக் கிடைக்கிறதா? அப்படி கிடைக்கவில்லை யென்றால் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்டவர் களுக்குத்தான் கிடைக்கின்றது என்று இருந்து வருகிறது. அப்படிக் கிடைக்கவில்லை என்று குறிப்பாக மாண்புமிகு உறுப்பின ரவர்கள் தெரியப்படுத்தினால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

## நாகை அரசினர் தலைமை மருத்துவமனைக்கு ஜெனரேட்டர்

*குறுகிய கால வினா எண். 3 திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகை பொது மருத்துவமனையில் வெள்ளம், புயல் காலங்களில் மின்சாரப் பாதிப்பை ஈடுசெய்ய 'ஜெனரேட்டர் பொருத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது பொருத்தப்படும்?



திரு. இரா, அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) ரூ. 2,42,000 மதிப்பீட்டில் ஜெனரேட்டர் ஒன்றை நாகப்பட்டிணம் அரசினர் தலைமை மருத்துவமனையில் பொருத்து வதற்கான செயற்குறிப்பை 1979-80 வருடத்திற்கான இரண்டாம் பகுதி திட்டமாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. கூடியவிரைவில் அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, பொதுப்பணித் துறை மருத்துவ வேலைகளைப் பார்ப்பதில் தாமதம் காட்டுகிறது. புயலும், வெள்ளமும் நெருங்கிக்கொண் டிருக்கிறது. எனவே, அரசு அக்கறை எடுத்து உடனடியாக அதைப் பொருத்த வேண்டும். அதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அது பற்றிய வரைபடமும், மதிப்பீடும் இயக்குநரிடத்தில் இருந்து பெறப்பட்டு விட்டது. நிதித் துறை சற்று மாறுதலுடன் அதை ஏற்றுக்கொண்டுள்ளது. அதை பரிசீலனை செய்து விரைவிலே தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இப்படியொரு ஜெனரேட்டர் இல்லாததால் 1977-ஆம் ஆண்டு புயலின்பொழுது ஏராளமான பேஷன்டுகள் பாதிக்கப்பட்டு, பல ஆபரேஷன்களும் பாதிக்கப்பட்டது என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரியும் ; அதிகாரிகளுக்கும் தெரியும். இரண்டு வருஷமாகியும் இப்பொழுது தான் அது ஏற்படுகிறது என்கிறபொழுது இரண்டு வருஷங்களாக நடவடிக்கை எடுக்காமல் இருக்கக் காரணம் என்ன? இந்தத் தாமதத்திற்கு என்ன காரணம்? அலட்சியப் போக்கா? இல்லா விட்டால், ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், விரைவில் விரைவில் என்று சொல்கிறார்கள், அரசாங்க மொழியில் விரைவில் என்றால் மூன்று வருஷம்கூட ஆகலாம். எனவே, ஒரு கால அளவை நிர்ணயித்து, ஸ்பெசிஃபிக்காக இத்தனை மாதங்களில் ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்வார்களா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்கு முன்பு 1979-80-ஆம் வருடத்திற்கான இரண்டாம் பகுதி திட்டமாக ஏற்கப் பட்டு, தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிக விரைவில் நிச்சயமாக அது நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உறையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்னை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி ; பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

திரு. கே. பண்ணை சேதுராம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்...

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ; பாயின்ட் ஆப் ஆர்டர் சார்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி எல்லோரும் ஒரே சமயத்தில் எழுந்திருக்கக் கூடாது. ஒவ்வொருவராக எழுந்து கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவரவர்களே, டெலிவிஷன் மீது உரிமைப்பிரச்னை கொடுத்திருக்கிறேன். 3-11-79-ஆம் தேதியன்று எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சில குற்றச்சாட்டுக்களைச் சுமத்திப் பேசினார்கள். அந்தக் குற்றச் சாட்டுக்களைப்பற்றி ஆங்கிலத்தில் ஒன்றுமே சொல்லவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதித்த பிறகு தான் கனம் உறுப்பினரவர்கள் அதைப் படிக்க வேண்டும். என்ன ஆயிற்று என்று கேட்கலாமே தவிர, அதைப் படிக்கக் கூடாது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்ன ஆயிற்று என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என் ஆய்விலே இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே மது விலக்கு சம்பந்தமாக போலீஸ் கமிஷனர் அறிவித்தது சம்பந்தமாக அவர் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிறேன். முதலமைச்சர் மீதும் ஒரு உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிறேன். அதை இப்பொழுது எடுத்துக் கொள்ள வேண்டும். காரணம் மூன்று நாட்களுக்கு முன்பே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் பிரச்னைகளைப் பற்றிச் சொல்லாமல், தாம் கொடுத்த உரிமைப் பிரச்னை என்ன ஆயிற்று என்றுதான் கேட்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் வழக்கறிஞர், அவர்கள் என்னோடு ஒத்துழைக்க வேண்டும். அவர் எடுத்துச் சொன்ன உரிமை மீறல் பிரச்னைகள் என்னுடைய ஆய்விலே இருக்கிறது.







[முற்பகல் 10-30]

திரு. அ. ரகுமான்கான்: ஆய்வில் இருக்கிறது என்று சொன்னீர்கள், சரி. நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னால் கூட போதும் ........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைச் சொல்ல முடியாது, ஆய்வில் இருக்கிறது என்றால் அதற்கு உயிர் இருக்கிறது என்று பொருள், உட்காருங்கள். அடுத்து, திரு. பண்ணை சேதுராம் ........

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, தமிழ் நாடு சட்டமன்றத்தில்........

திரு. அ. ரகுமான்கான்: இன்றே எடுத்துக்கொள்வதாக என்னிடத்தில் நேரிடையாகச் சொன்னீர்கள். உரிமைப் பிரச்னையைத் தள்ளிக் கொண்டே போனால் எப்படி? நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லுங்கள் .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னைக் கட்டாயப் படுத்த முடியாது, என்னைக் கட்டாயப்படுத்தக் கூடாது. ஆய்வில் இருக்கிறது. அமருங்கள்........

திரு. அ. ரகுமான்கான்: சட்டசபை முடிவதற்குள்ளாவது எடுத்துக் கொள்வீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைச் சொல்ல முடியாது, என்னுடைய ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள். திரு. கே. பண்ணை சேதுராம்.

### ஆ. 'நீதியின் குரல்' பத்திரிகை சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெறாதது குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம்: நம்முடைய சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய நூலகத்தில் எல்லா தினசரி பத்திரிகைகளும் வந்து கொண்டிருக்கின்றன. (திரு. அ. ரகுமான்கான் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்). இங்கே, அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சனம் செய்கிற பத்திரிகைகளும் .... (திரு. அ. ரகுமான்கான் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான் உங்களை உட்காரச் சொல்லுகிறேன். நீங்கள் பேசிக் கொண்டே இருந்தால், எப்படி? திரு. பண்ணை சேதுராம் பேசிக் கொண்டிருக்கிறார், நீங்கள் உட்காருங்கள். என் ஆய்விலே இருக்கிறது என்று நான் சொன்னவுடன் திரு. ரகுமான்கான் பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும், உட்கார வேண்டும். இல்லையென்றால். அது நல்லதல்ல. சட்ட விதிகளைப் படித்து விட்டு, பிறகு என்னிடம் பேசுங்கள்.

[1979 நவம்பர் 5

திரு. கே. பண்ணை சேதுராம்: நம்முடைய தமிழ் நாடு சட்டமன்றத்திற்குள்ளே இருக்கிற நூலகத்தில் எல்லா பத்திரிகைகளும் தினசரி பத்திரிகைகளும் சரியாக வந்து கொண்டிருக்கின்றன. இங்கே அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சிக்கிற. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எழுத்து மூலமாக, விதிகளைச் சுட்டிக்காட்டித் தந்திருக்கிறீர்களா? . . . .

திரு. கே. பண்ணை சேதுராம்: பாயின்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன், பாயின்ட் ஆஃப் ஆர்டர். அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சனம் செய்கின்ற முரசொலி, அலை ஓசை போன்ற பத்திரிகைகள் எல்லாம் சரியாகப் போடப்பட்டு, இங்கே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், அரசாங்கத்தினுடைய செயல்கள் அத்தனையையும் மக்களுக்கும் உறுப்பினர்களுக்கும் கொடுக்கின்ற 'நீதியின் குரல் சென்ற முறை உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த முறை அது நிறுத்தப்பட்டிருக்கிறது. எக்காரணம் என்பதை நான் சபாநாயகர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: இதே பத்திரிகை மீது ஏற்கனவே சட்டமன்றத்தில் பேசி, முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். அந்த அடிப்படையில் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். அதைப் பற்றி ஏன் அவர் கேள்வி கேட்கிறார் என்று புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் அவர்கள் என் அறையில் வந்து சந்தித்து அதைப்பற்றி விவாதிக்கக் கோருகிறேன்.

## இ. பேரவை அலுவல் சிறிது நேரம் ஒத்திவைப்பு—உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் பதவி ஏற்பு குறித்து.

திரு. பி. எச். பாண்டியன்: நாளைய தினம் நம்முடைய சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எம். எம். இஸ்மாயில் தலைமை நீதிபதியாக பதவியேற்க இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பிதழ்கள் வந்திருக்கின்றன. காலை 10.45 மணிக்கு அந்த வைபவம் இருக்கிற காரணத்தால், நாளைய தினம் சட்டசபை ஒத்தி வைக்கப்படுமா? இல்லாவிட்டால். . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன், இது அல்ல முறை. தாங்கள் பேரவைத் தலைவரை அணுகி, இந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே, மாண்புமிகு முதலமைச்சரையும் பேரவை முன்னவரையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரையும் அணுகி, அதற்கான



1979 நவம்பர் 5] [பி. எச், பாண்டியன்]

ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று எனக்கு எழுத்து மூலமாகத் தந்திருந்தால் அது முறை. இங்கே வந்து எழுப்புவது என்பது விதிகளின் படியும் ஏற்றுக் கொள்ளக் கூடாத ஒன்று.

## ஈ. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம்; பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பொருள்கள் குறித்து 41-வது விதியின் கீழ், பல தீர்மானங்களைத் தந்திருக்கிறோம். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறோம். நேற்றைய முதல் தினமே பேராசிரியர் சொல்லி, இன்றைய விவாதத்திற்குப் பிறகு அதைப்பற்றி யெல்லாம், நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது உங்களுடைய 41-வது விதியின்கீழ் கொடுக்கப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானம் என் கைக்கு வந்திருக்குமானால், இந்த அவையிலே வைத்திருப்பேன். வந்ததா, இல்லையா என்று என் அறையிலே வந்து கேட்டால், விளக்கமாகச் சொல்வேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்தவுடனே, சட்டசபையினுடைய இதர அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே பல்வேறு உறுப்பினர்கள் இங்கே ஒழுங்குப் பிரச்னைகள் எழுப்பியிருக்கிறார்கள். பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ற பெயராலே, விதிகளின் பிரகாரம், பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றாலே If any order of the proceedings goes wrong அவ்வளவுதான். நடைமுறைகளிலே ஏதாவது தவறுகள் ஏற்படுமேயானால் அப்பொழுது பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. நம்முடைய சட்டமன்ற விதி 83, கிளாஸ் (3)

"A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the congnizance of the Speaker"

என்று மிகத் தெளிவாக இருக்கிறது. கேள்வி நேரம் முடிந்த உடனே, நீங்கள் அடுத்த ஒரு பிரச்னைக்குப் போவதற்கு முன்னாலேயே நான் அதைக் கொடுத்திருக்கிறேன். இதைக் கொடுத்திருக்கிறேன், இதை ஏன் எடுக்கவில்லை யென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவது சட்டமன்றத்திலே சர்வ சாதாரணமான காரியமாக இருக்கிறது. ஆகவே, அதற்குத்தாங்கள் ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1979 நவம்பர் 5

திரு. க. சுப்பு : அவர் ரூல் கோட் செய்ததால் கூறுகிறேன். ஸ்பெஸிஃபிக்காக இருந்தால் 83 (3) விதியின்கீழ் எழுப்பலாம். ஸ்பெஸிஃபிக்காக இல்லையென்றால், ரூல் 242 அடிப்படையிலே, சபாநாயகராகிய நீங்கள் அனுமதி அளிக்கிறீர்கள். அவ்வளவு தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, சுப்பு, எனக்காக வாதாடுகிறார்கள், பரவாயில்லை. நான் என்னுடைய சொந்தக் காலிலேயே நின்று சமாளிக்கிறேன், அவர்கள் உட்கார வேண்டும்.

## (3) அறிக்கை அளித்தல்.

### அ. துணை வினா ஒன்றுக்கு அளித்த விடைக்கு திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 10-1-1978-ஆம் தேதி, யன்று, 186-ஆம் எண் வினாவின் கீழ், எழுப்பப் பெற்ற துணை வினாவிற்கு அளிக்கப் பெற்ற விடைக்கு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் திருத்த அறிக்கை ஒன்றை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, இப் பேரவையில் 10-1-78 அன்று வேலை நிதி ஊழியர்களின் சம்பள விகிதங்கள் திருத்தம் பற்றிய வினா ஒன்றிற்கு பதிலளிக்கையில் திரு. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் அவர்களின் துணைக் கேள்விககு, அரசு ஆணை எண். 1632, பொதுப்பணித் துறை, நாள் 26-10-77-ல் திருத்தப்பட்ட சம்பள விகிதங்கள் நில நீர்ப் பிரிவிலுள்ள எல்லா வேலை நிதி ஊழியர்களுக்கும் பயன் விளைவிக்கும் என்று அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர் களால் தெரிவிக்கப்பட்டது. நில நீர்ப் பிரிவிலுள்ள 18 வகை வேலை நிதி ஊழியர்களில், 11 வகையினருக்கு மட்டுமே மேற்கூறிய அரசு ஆணையில் சம்பள விகிதங்கள் திருத்தப் பட்டுள்ளது என்பதுதான் சரியான நிலைமை என்று இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது, நிலநீர்ப் பிரிவிலுள்ள ஏனைய ஏழு பிரிவினருக்கு சம்பள விகிதங்களை திருததுவது குறித்து அரசு பரிசிலனை செய்து வருகிறது.

## (4) அறிவிப்புகள்.

### (அ) அலுவல் ஆய்வுக் குழு கூட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 3-11-79 அன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழு இன்று காலை 10-30 மணிக்கு கூடுமென்று நான் அறிவித்திருந்தேன். அதை நான் இப்பொழுது ஒத்தி வைத்துள்ளேன் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1979 நவம்பர் 5]

## (5) கவன ஈர்ப்புகள்

### (அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் உள்ள விவசாயிகள், பட்டா பெற்றும், அவதிக்குளளாவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை குறித்து கவனக்ஈர்ப்பு. டாக்டர் கே. சமரசம்.

திரு. க. சுப்பு : அதுதான் டேபிலில் வைத்தாகி விட்டதே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதன் மேல் துணைக் கேள்விகள் ஏதாவது இருந்தால் உறுப்பினர் கேட்கலாம். எனவே.. .. .. .. ..

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, கவன ஈர்ப்பு உறுப்பினர் வாசிப்பார். சம்பந்தப்பட்ட தீர்மானத்தை இப்போதுதான் அறிக்க அமைச்சர்கள் பதில் அளிப்பார்கள். வைத்தாகி விட்டதே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை வாசிப்பார். சம்பந்தப்பட்ட அமைச்சர் அதற்கான அறிக்கை அவையின் மேஜை மேல் வைக்கப் பெற்றுள்ளது என்று சொல்வார். பிறகு உறுப்பினர் துணைக் கேள்வி இருந்தால் கேட்கலாம். அதற்கு அமைச்சர் பதில் சொல்வார்.

திரு. சி ஆறுமுகம்: அது முறையல்ல.

திரு. மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, இதேபோல கேள்விகளுக்கு அறிக்கை டேபிலில் வைக்கிறார்கள். ஆனால் அதற்கு துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படுவதில்லையே.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, கேள்விகளைப் பொறுத்தவரையில் ஸ்டார்ட்டு, அன்-ஸ்டார்ட்டு என்று இருக்கிறது. ரூல் 41-ன் கீழ் எந்தவிதமான பாகுபாடும் இல்லை. ரூல் 41-ன் கீழ் எந்த உறுப்பினர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறாரோ அந்த உறுப்பினர் வாசிப்பதற்கு உரிமை உண்டு. சம்பந்தப்பட்ட அமைச்சர் இது குறித்து பதில் அறிக்கை அவையிலே வைக்கப் பெற்றுள்ளது என பதில் அளிக்க உரிமை உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்ட பிறகு உறுப்பினர்களுக்கு சில சந்தேகங்கள் கேட்க வாய்ப்பு உண்டு.

திரு. மு. அரங்கநாதன்: ஆளும் கட்சி நினைத்தால் எல்லாவற்றிற்குமே வாய்ப்பு உண்டு என்று எனக்குத் தெரியும். ஆனால் அறிக்கையை டேபிளிலே வைத்த பின்னாலும் .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வைத்தாலும் உண்டு.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, ''காவேரிப்பட்டினம் தொகுதி முருக்கல் நத்தம் பகுதி அரிசன மக்களுக்கு பட்டா 1976-ல் வழங்கியும் அதை அவர்கள் அனுபவிக்க இயலாதவாறு வன இலாகாவினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து'' மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இதற்கான அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப் பெற்றுள்ளது.

அறிக்கை.

கவன ஈர்ப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 1379.57 ஏக்கர் பரப்புள்ளதும், ஊர்க்கணக்குகளில் 'காடுபுறம்போக்கு' என வகுக்கப்பட்டதுமான நிலம், கிருஷ்ணகிரி தாலுக்காவில் அகரம் கிராமத்தில் சர்வே எண் 472/2 கொண்ட நிலமாகும்.

மரமொடுகு, முருக்கல் நத்தம், பொச்சிப்பட்டி மற்றும் ஆலப்பட்டி கிராமங்களைச் சேர்ந்த 67 அரிசனங்கள் மேற்கொண்ட முறையீட்டின் பேரில், அந்த நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யாலாமென கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அந்த அரிசனங்களை அனுமதித்ததுடன், அந்த நிலங்களை அளக்கவும், ஒவ்வொரு அரிசனக் குடும்பமும் தலா மூன்று ஏக்கருக்கு மேற்படாமல் விவசாயம் செய்து அனுபவிப்பதற்கும், 1976 மே மாதம் ஆணை பிறப்பித்தார்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அரிசனங்கள், காட்டு நிலத்திலேயே குடிசைகளைப் போட்டுக் கொண்டுள்ளதாகவும், அவர்களுக்குப் பட்டா எதுவும் வழங்கப்படவில்லை எனவும் தர்மபுரி மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார்.

வறட்சி நிவாரணப்பணித் திட்டத்தின் கீழ், இப்பகுதியில் 1976-77 முதல் 3 ஆண்டுகளுக்கு காடுகள் வளர்க்கும் திட்டம் செயற்படுத்தப்பட உள்ளதாகவும், உயர்ந்த மலைச்சரிவுகள் உள்ளபடியால் இப்பகுதி காட்டுப் பகுதியாகவே தக்க வைத்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியம் எனவும், ஓசூர் வனக் கோட்ட அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு தெரிவித்ததோடு இப்பகுதியில் ஆக்கிரமிப்பு செய்வதற்கு வட்டாட்சியர் அனுமதி அளித்தது தவறு எனக்குறிப்பிட்டு, வட்டாட்சியரின்





ஆணையைத் திரும்பப் பெறுமாறும் கோரியிருந்தார். ஓசூர் வனக்கோட்ட அலுவலரின் முறையீட்டின் பேரில் 6-4-76 அன்றே அரசினால் 1882இன் தமிழ்நாடு காடுகள் சட்டத்தின் பிரிவு 4-ன் கீழ் அறிவிப்பு செய்யப்பட்டுள்ள மேற்குறியிடப் பட்டுள்ள வன நிலங்களை அரிசனங்களால் ஆக்கிரமிப்புச் செய்வதற்கு அனுமதியளித்த கிருஷ்ணகிரி வட்டாட்சியரின் ஆணையை ரத்து செய்ய ஓசூர் வருவாய்க் கோட்ட அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டதாகவும், அவ்வாறே 13-12-76 அன்று அவ்வாணை ரத்து செய்யப்பட்டது என்றும் தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலர் அறிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மூன்றாம் பகுதி வனத்தீர்வை அலுவலர் (Forest Settlement Officer) குடிசைகள் போட்டு ஆக்கிரமித்துக் கொண்டு இருந்தவர்களின் உரிமைகளைக் குறித்து விசாரணை செய்த பின்னர், அவர்களது உரிமைகளை நிராகரித்தார். அந்த நிலம் இப்போது வனத்துறையின் பொறுப்பில் உள்ளதுடன், 1976-77 ஆம் ஆண்டில் வனத்துறையால் செடிகள் நடப்பட்டன எனவும், தற்போது இப்பகுதியில் செடிகள் நடும் வேலை நடைபெறவில்லை என மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார். இப்பகுதி தமிழ்நாடு காடுகள் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டிருந்தாலும், நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ள அரிசனங்களின் ஏழ்மை நிலையையும், அவர்கள் வெகுநாட்களாக அந்நிலத்தில் வாழ்ந்து வருவதையும் கருத்தில் கொண்டு, அப்பகுதியை காப்புக் காட்டுப் பகுதியிலிருந்து நீக்கி, அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கலாம் என தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலர் பரிந்துரை செய்துள்ளார்.

தேசிய வனக் கோட்பாட்டின்படி, ஒரு நாட்டு நிலத்தின் மூன்றில் ஒரு பகுதி வனப்பகுதியாக இருத்தல் வேண்டும். ஆனால் நம் மாநிலத்தில், தற்போதுள்ள வனப் பகுதி சுமார் 17 சதவிகிதம் தான். ஆகையினால், இருக்கின்ற வன நிலங்களை வனமல்லாத காரியங்களுக்கு ஒதுக்கக் கூடாது என்பது அரசின் பொதுவான கொள்கையாகும். ஆயினும், தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலரின் பரிந்துரையைப் பரிசீலித்து, நீண்ட காலமாக அந்த அரிசனங்கள் அப்பகுதியில் விவசாயம் செய்து வந்திருப்பார்களேயானால், அந்நிலத்தை அவர்களுக்கு ஒதுக்கித் தரவோ அல்லது குத்தகைக்கு விடவோ இயலுமா என்பது பற்றி வனத்துறைத் தலைவரைத் கலந்து அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வைத்திருக்கக்கூடிய இந்த அறிக்கை மீது மேலும் இருக்கக்கூடிய சந்தேகத்தைப் பற்றித்தான் சொல்லுகிறேன் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கே காவிரிப்பட்டினம் தொகுதி முருக்கல் நத்தம் பகுதி அரிசன மக்களுக்குப் பட்டா செய்து கொடுத்திருக்கிறோம். அவர்கள் அதை அனுபவம் செய்வதற்கு முன்னாலே, வேறு

[திரு. டாக்டர் கே. சமரசம்] [1979 நவம்பர் 5

சமூகத்தைச் சேந்தவர்கள் தடுத்து, கோர்ட்டிற்கு சென்று அங்கே அபராதம் கட்டியிருக்கிறார்கள். அது பட்டா தருவதற்கு தகுதி இல்லாத நிலம் என்று அரசு சொல்லி இருக்கிறது. அவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு நிலமாவது கொடுக்க வேண்டுமென்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவரவர்களே, அந்த நிலம் ஒதுக்கப்பட்ட காட்டுப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதியாகும். மலைச் சரிவில் உள்ள காட்டுப் பகுதியில், அந்தக் காட்டுப் பகுதி, 1976—77-ம் ஆண்டு வறட்சி தடுப்புப் பகுதி என்று அறிவிக்கப்பட்டு, அந்தத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு செடிகள் நடப்பட்டிருக்கிறது. என்றாலும், நீண்ட காலமாக அதிலே, 6,7 வருஷத்திற்கும் மேலே, அவர்கள் குடிசைகளைப் போட்டுக் கொண்டு இருக்கின்றார்கள் என்கின்ற தகவல் வருவாய்த்துறையின் மூலமாகக் கிடைத்து இருக்கிறது. அது நியாயமா, நீண்ட காலமாக இருக்கிறார்களா? அவர்களை அனுமதிப்பதன் மூலமாக காடுகளுடைய ஆராய்ச்சிக்குத் தடை இருக்காதா என்று வனத்துறை ஆராய்ச்சி செய்து பதில் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு, ஏழை மக்கள், வனத்துறைக்குப் பாதகம் இல்லாமல் வன ஆராய்ச்சிக்குப் பாதகம் இல்லாமல் அந்தப் பகுதிகளிலே குடி இருக்க வேண்டும்; விவசாயம் செய்ய வேண்டும். குத்தகையோ அல்லது பட்டா செய்வதற்கோ மத்திய அரசும், மாநில அரசும் காட்டு நிலங்களைத் தனியாருக்கு பட்டா செய்யக் கூடாது என்ற திட்டத்தின்கீழ், அதற்கு இடையூறு இல்லாமல் அந்த வகையிலும் அந்த ஏழை மக்களின் பிரச்சனைகள் கவனிக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10—40]

## (ஆ) முல்லைப் பெரியாறு அணைக்கட்டுக்கு ஆபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து இரண்டாவது. 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம்.

அதற்கு முன்னாலே நான் விதிகளைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். விதி 41 (1)—லே

"41 (1) A Member may, after questions and with the previous permission of the Speaker, call the attention of a Minister to any matter of urgent public importance and the Minister may then make a brief statement on the matter or ask for time to make a statement later,



1979 நவம்பர் 5] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

(2) There shall be no debate on such statement at the time it is made. But the Speaker may at his discretion permit one or two questions by the same member by way of elucidation''.

என்று போடப்பட்டு இருக்கிறது. ப்ரீப் ஸ்டேட்ட்மெண்டாக இல்லாமல் இருந்தால், அதை அவைமுன் வைத்த பிறகு ஓரிரு கேள்விகளைப் போடலாம். அதைத்தான் சொன்னேன். அவர் முதலில் பிரச்னையை எழுப்பி, அதற்கு அமைச்சர் பதில் சொல்லி, திருப்பி அவர் விளக்கம் கேட்பதைவிட நேரடியாக அவர் ஓரிரு கேள்விகளைப் போடலாம் என்று சொன்னேன். அடுத்து, திருவாளர் எம். ஏ. லத்தீப்

THIRU M. A. LATHEEF: The Minister has to make a statement on the floor of the House, with details. Of course, it has been placed on the Table of the House. But it has not been read out in the House as per rules.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸ்டேட்மெண்ட் ப்ரீப்பாக இல்லாமல் இருந்தால், பேரவைத் தலைவர் அதை அவை முன் வைக்கலாம் என்று சொல்லலாம்.

திரு. எம். ஏ. லத்தீப்: எனக்குத் தெரிந்த வரையில், அப்படி 41-வது விதியின் கீழ் அறிக்கை வைத்ததாகத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பேரவை விதி 41-ன் கீழ் தீர்மானம் கொடுக்கிற உறுப்பினர்கள் அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை முதலில் படிப்பது வழக்கம். அதற்குப் பிறகு பதில் அளிக்கிற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்று அந்த அறிக்கையைப் படிக்கலாம், இல்லையென்றால், அறிக்கை அவையில் வைக்கப்பட்டுள்ளது என்று சொல்லிவிடலாம். அதுதான் இதுவரையில் நாம் கடைபிடித்துக் கொண்டு வருகிற முறை. அதிலே போய் நாம் மேலும் மேலும் குழப்பத்தை வளர்க்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் மூலக் கேள்விகளுக்கும், துணைக் கேள்விகளுக்கும் நீண்ட பதில் சொல்கிறபோது நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். நீண்ட அறிக்கைகளாக இருந்தால், அவை முன் வைத்து விடுங்கள். நேரத்தை வீணாக்காதீர்கள் என்று. அந்த அடிப்படையில் அறிக்கைகள் பெரிதாக இருக்கும் சூழ்நிலை இருக்குமானால், அவைகள் அவைமுன் அச்சடிக்கப்பட்டு வைக்கப்படுகின்றன. இதன் காரணமாக நேரம் சேமிக்கப்படும் என்பதால் அந்த முறை கையாளப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீண்ட விளக்க அறிக்கையாக இருக்குமானால், நேரத்தை நாம் சேமிப்பதற்கு அப்படிச் செய்யலாம் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் எனக்குத் தெரிந்த வரையில், இதுவரையில் விதி 41-ன் கீழ் ஒரு அறிக்கை எழுதி, அதைப் படிக்காமல் இந்த அவையில் மேற்கொண்டு விளக்கம் கேட்கப் பட்டது என்பது இல்லை. தாங்கள் இன்று சொல்வது ஒரு புதிய முறைதான். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தவறான தகவல் தருகிறார்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொறுப்பேற்றுக்கொண்டு இருக்கிற சுற்றுலா துறை சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் பற்றிய பிரச்னை இங்கே எழுப்பப்பட்டபோது, அது நீண்ட அறிக்கையாக இருந்ததால், அதை விவரமாகப் படிப்பதற்கு நேரம் ஆகும் என்று தெரிவித்து, அதை உறுப்பினர்கள் அனைவரும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணி அச்சடித்து—அச்சடித்துக் கொடுத்தால் அதை எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் கவனமாக வைத்துக் கொள்வார்கள் என்ற காரணத்தால்—அவைமுன் வைத்து, நானே அதற்குப் பிறகு பதிலும் அளித்து இருக்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே. அவையில் அறிக்கை வைப்பதில் தவறு இல்லை என்று கருது கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முதலில் அந்த பிரச்னைக்குரிய தீர்மானம் படிக்க வேண்டும், அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் சபையில் அறிக்கை வைத்து இருப்பதாகச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லப்பட்டால் தான் அது நடவடிக்கைக் குறிப்பில் பதிவாகும். இல்லாவிட்டால் பதி வாகாது என்று கருதுகிறேன். அஜெண்டாவிலேயே அச்சடிக்கப் பட்டு, அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அப்போதும் சபை நடவடிக்கைக் குறிப்பில் ஏறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர் சொல்லியது போல், உறுப்பினர் எழுந்து அவர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படிக்க வேண்டும். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள், நான் அவை முன் அறிக்கை வைத்து இருக்கிறேன் என்று சொல்ல வேண்டும். அப்போது அவைகள் இரண்டும் நடவடிக்கைக் குறிப்பில் பதிவாகி விடும். இதுதான் முறை.

அறிக்கை மேசைமீது வைப்பது இல்லை என்று சொல்லக் கூடாது. அது மரபு இல்லை என்றும் சொல்லக் கூடாது. எத்தனை முறை இந்த மாதிரியான முறை பின்பற்றப்பட்டு இருக்கிறது என்பதற்கான குறிப்புகளை கொண்டு வரச் சொல்லி





யிருக்கிறேன். அது குறித்து திரு. லத்தீப் அவர்களுக்குப் பின்னாலே சொல்கிறேன். இப்போது, திரு. எம். ஏ. லத்தீப், திரு. கே. பண்ணை சேதுராமன், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, 41-வது விதியின் கீழ் கேரள எல்லையில் தமிழ்நாடு அரசின் நிர்வாகத்தில் உள்ள முல்லைப் பெரியாறு அணைக்கட்டு (தேக்கடி அணைக்கட்டு) பேரழிவை ஏற்படுத்தும் அபாய நிலைமையில் இருப்பது குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குள் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன்னால் வைக்கப்பட்டிருக் கிறது.

## அறிக்கை

பெரியாறு அணை 1885ஆம் ஆண்டிலிருந்து 1895 ஆம் ஆண்டு அவரையிலான காலத்தில் கட்டப்பட்டது. அணையின் வெளிப் புறத்தில் ஈரமும், நீர்க் கசிவும் காணப்பட்டதால் 1932 ஆம் ஆண்டு அணையில் கான்கீரீட் கலவையை அதிக அழுத்தத்தில் செலுத்தும் நடவடிக்கை (Grouting) மேற்கொள்ளப்பட்டது.

இந்த அணையை மேலும் வலுப்படுத்துவது குறித்து தமிழ்நாடு கேரள மாநிலப் பொறியாளர்கள் கலந்தாலோசித்தனர். 1961-65-ல் தமிழ்நாடு பொதுப்பணித் துறை இரண்டாவது தடவை யாக இந்த அணையில் பரவலாக அதிக அழுத்தக் கான்கிரீட் கலவை செலுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டது. இதனால் நீர்க்கசிவு நின்றது.

மத்திய நீர் ஆணைக் குழு (Central water Commission) இயக்குநரும் தமிழ்நாடு, கேரள மாநிலத் தலைமைப் பொறி யாளர்களும் கூட்டாக இங்கு வந்து 10-4:64 அன்று இந்த அணையைப் பார்வையிட்டனர். அவர்கள்—

(1) அணையில் கான்கிரீட் கலவையை அதிக அழுத்தத்தில் செலுத்தும் (Grouting) நடவடிக்கையால் நல்ல பலன் கிடைத் துள்ளது.

(2) நீர்த்தேக்கத்தில் அதிக நீர்மட்ட அளவை (Maximum water level) 152 அடியில், அதாவது முழு நீர்மட்ட அளவில் (Full reservoir level) வைத்துக்கொள்ளலாம்.

(3) உபரி நீர் போக்கியில் உள்ள மதகுகளை அவசர காலங் களில் விரைவில் திறப்பதற்கு வசதியாக அவற்றை மின்சாரத் தான் இயக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

(4) செய்திகளையும், உத்தரவுகளையும் விரைந்து அனுப்பு வதற்காக அணை அமைந்துள்ள இடத்தில் கம்பியில்லாத் தந்திச் சாதனங்களை நிறுவலாம் என்று தெரிவித்தனர்.

வெள்ள நீர்ப் போக்கி மதகுகளை மின் சாதனங்களைக் கொண்டு இயக்க வேண்டி அணைக்கட்டிற்கு உயரழுத்த மின் கம்பித் தொடர்புகளை அமைத்துக் கொடுக்கும்படி 1968 ஆம் ஆண்டிலிருந்தே கேரள அரசைக் கேட்டுக்கொண்டோம். ஆனால் இது பற்றி கேரள அரசுக்குப் பல தடவை நினைவூட்டிய போதிலும் இதுவரை உயரழுத்த மின்சக்தி கிடைக்கவில்லை. இது பற்றி கேரள அரசுக்கு தொடர்ந்து எழுதப்பட்டு வருகிறது. கம்பியில்லாத் தந்திச் சாதனங்கள் ஏற்கெனவே பொருத்தப் பட்டுள்ளன.

அணையின் உட்பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளையும் அடித்தளப் பாறை மாதிரிகளையும் சோதனை செய்ததில் அணைக்கட்டிலுள்ள கற்களும் அடித்தளப் பாறையும் கெட்டி யானவை என்பது தெரிய வந்தது.

நவீன நுட்ப செயல்முறைகளைப் பயன்படுத்தி அணைக் கட்டுப் பகுதியின் ஸ்திரத் தன்மை குறித்து ஆய்வு செய்யப் பட்டது. அணைக்கட்டின் முகப்பில் நீர் மட்டம் 145 அடிக்கு மேலே உயரும் போது நீரழுத்தத்தால் அணையின் ஒரு பகுதியில் விறைப்பு ஏற்படுவது (Tensile Stress) தெரிய வந்தது. ஆகவே முன்னெச்சரிக்கையாக, நீர்மட்டத்தை 145 அடிக்கு மேல் உயர்த்த வேண்டியதில்லை என்று 1976-ல் முடிவு செய்யப் பட்டது. இந்த முன்னெச்சரிக்கை ஏற்பாடு இப்போதும் பின்பற்றப்பட்டு வருகிறது.

மத்திய நீர் ஆணைக்குழு அதிகாரிகளும் தமிழ்நாடு, கேரள மாநில அதிகாரிகளும், கூட்டாகச் சேர்ந்து மீண்டும் இங்கு வந்து 20-8-76 அன்று அணையைப் பார்வையிட்டனர். அணைக்குக் கீழே மிகவும் குறைந்த அளவில் நீர்க்கசிவு ஏற்படுவதையும், 1964 அக்டோபர் திங்களில் முடிவுற்ற கான்கிரீட் கலவையை அதிக அழுத்தத்தில் அணையினுள் செலுத்தும் பணி (Grouting) மிக நல்ல பலனை அளித்துள்ளது என்றும் குழு குறிப்பிட்டது. ஆயினும் 145 அடிக்கு மேல் நீரைத் தேக்கி வைக்கும்பொழுது அணையில் ஓரளவுக்கு விறைப்பு ஏற்படுவது (Tensile stress) தெரியவந்ததால், தமிழ்நாடு பொதுப்பணித்துறை ஏற்கெனவே முடிவு செய்ததுபோல் 145 அடி அளவிலேயே, நீர்மட்டத்தைத் தொடர்ந்து வைத்து வரலாமென அவர்கள் கருதினர்.

இந்த அணையின் வடிவமைப்பு, வரைப்படங்களை மத்திய நீர் ஆணைக் குழுவின் அணைப் பாதுகாப்புப் பிரிவிற்கு அனுப்பி வைத்து அந்த வடிவமைப்பில் சீரமைப்பு எதுவும் செய்ய வேண்டுமாயின் அது பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்படி கேட்கப் பட்டது. 1978 மே திங்களில் மத்திய நீர் ஆணைக் குழு உறுப் பினர் (வடிவமைப்புகள்) தமிழ்நாடு, கேரளத் தலைமைப் பொறி யாளர்களுடன் இந்த அணைக்கட்டைப் பார்வையிட்டார். அணையின் இப்போதைய நிலைமைப் பற்றி கவலை கொள்ள வேண்டியதில்லை என்று அவர் கருதினார். அணைக்கட்டில்



மேற்கொண்டும் சீரமைப்பு எதுவும் செய்ய வேண்டுமா என்பது பற்றி மத்திய நீர் ஆணைக்குழுவுடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

மத்திய நீர் ஆணைக் குழு தெரிவிக்கும் ஆலோசனையின்படி அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க அரசு விரைந்து செயலாற்றும்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இது தொடர் பாக..........

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். நானும் இதுகுறித்து ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) இட் இஸ் நான்-அனௌன்ஸ்ட்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அறிவித்திருக்கிறேன்.

திரு. எம்.ஏ. லத்தீப்: தலைவரவர்களே, முல்லைப் பெரியாறு அணைக்கட்டு........

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். மூன்று பேர்களுடைய பெயர்களையும் படித்ததாகச் சொன்னீர்கள்: ஆனால் இங்கே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கை யில் ஒருவருடைய பெயர்தான் குறிப்பிடப்பட்டிருப்பதாக அறிகிறேன். அறிக்கை என்றால் முழுமையாக இருக்க வேண்டும். இந்த அறிக்கையிலே டாக்டர் சமரசம் பெயர் மட்டும்தான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மிகுந்த அவசரமாக இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அது முதல் கவன ஈர்ப்புத் தீர்மானம்; என்னுடைய துறை சம்பந்தமானது. அதைக் கொடுத்தது டாக்டர் சமரசம் மட்டுமே தான். அவருடைய பெயர் தெளிவாகச் சொல்லப்பட்டு, பதில் அறிக்கை அவையிலே வைக்கப்பட்டது. இப்போது இரண்டாவது கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது, அது பாசனத் துறை சம்பந்தப்பட்டது, விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இது இரண்டாவது கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பதால், இது இரண்டாந்தர மாகத் தள்ளப்பட்டு, இதிலே யாருடைய பெயரும் இடம் பெறவில்லை. மூன்று பேர்களுடைய பெயர்களும் விடப்பட்டிருக் கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: கவன ஈர்ப்புத் தீர்மானத்தை யார் கொண்டு வந்தார் என்று பெயர் சொல்லப்பட்டு, அதை நீங்களும் படித்துப் பார்த்திருப்பீர்கள்.

பதில் அளிக்கும்போது அத்தனை உறுப்பினர்களின் பெயர் களையும் சொல்லி, பதில் சொல்வதில்லை. நாங்கள் பதில் அளிக்கும்போது மாண்புமிகு தலைவர்வர்களே என்றுதான் பதில் தருவோம்.

திரு. மு. கருணாநிதி : நான் மிக அவசரப்படுவதாகச் சொன்னார்கள். யார் அவசரப்படுகிறார்கள், ஆத்திரப்படு கிறார்கள் என்ற ஆராய்ச்சிக்குள் நான் புகவில்லை. ஆனால் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே உறுப்பினர் பெயர் குறிப்பிடப்பட்டு,, இன்னொரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே உறுப்பினர்கள் பெயர்கள் குறிப்பிடப்படாததற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிட்டிருக்க வேண்டும்; ஆனால் குறிப்பிடப்படவில்லை. அதிலே தவறு இருக்கிறது; திருத்திக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த அணைக் கட்டு மிகவும் பழுதடைந்திருப்பதாகவும், மிகவும் பழமை பெற்றுவிட்டதாகவும், ஏதோ வெடிப்பு ஏற்பட்டு, குஜராத் மாநிலத்தில் மூர்வியிலே ஏற்பட்டதைப் போன்று இங்கும் ஏற்பட்டு, குறிப்பாக கோட்டயம் புகுதி மக்களுக்குப் பேரபாயம் ஏற்படும் என்று கூறப்பட்டு, அங்கே இருக்கிற மக்கள் மத்திய அரசுக்கு ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதன்மேல் மாண்புமிகு இந்திய பிரதம அமைச்சர் சரண்சிங் அவர்கள் இந்த விண்ணப்பத்தை மத்திய வாட்டர் கமிஷனுக்கு அனுப்பி, நடவடிக்கை மேற்கொள்ளவும் செய்திருப்பதாக பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் லத்தீப் அவர்கள் சுருக்கமாகக் கேள்வி போடுங்கள்.

(முற்பகல் 10.50)

திரு. எம். ஏ. லத்தீப் : கேரளத்தினுடைய முதல் அமைச்சர் அவர்கள் கூட அதைப பற்றி தன்னுடைய பெரும் கவலையை வெளியிட்டிருக்கிறார்கள். மேலும் 145 அடிக்கு மேல் தண்ணீர் தேங்கக் கூடாது என்ற உத்தரவை மாநில அரசுக்கு மத்திய அரசு குறிப்பிட்டிருப்ப தாகவும் தெரிகிறது. ஆகையினால், அணையே உடைந்து விடக் கூடிய அபாயம் இருப்பதினால், தமிழகத்திற்கும் கிடைக்கக்கூடிய தண்ணீர் கிடைக்காமல் போய் விடக் கூடிய நிலைமையும் இருப்பதினால், அது குறித்து தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணியடித்து, அத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள், பதில் அளிக்கட்டும்....

திரு. எம். ஏ. லத்தீப் : நான் கேட்க எண்ணியதை கேட்டு முடித்துவிடுகிறேன்....,





மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து மன்னிக்க வேண்டும், நான் சொல்வதையும் நீங்கள் கேட்பதில்லை, சுருக்கமாக எதுவும் துணைக் கேள்விகள் கேட்பதில்லை....

திரு. எம். ஏ. லத்தீப் : இப்படி நான் பேசும்போதெல்லாம் மணியடித்துக் கொண்டிருந்தால் எப்படி ? எப்படி கேள்வி கேட்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தெரிந்துதான் கேட்கி றீர்கள், அதனாலதான் நானும் சொல்கிறேன் ஒவ்வொன்றாக பதில் முடியட்டும்....

திரு. எம். ஏ. லத்தீப் : நான் எப்படி கேள்விகள் கேட்டாலும் நீங்கள் மணியடித்து விடுகிறீர்கள், இதுவே இங்கு வழக்கமாகப் போய்விட்டது, நீங்கள் என்னைப் பேச விடுவதேயில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப் அவர்கள் மன்னிக்க வேண்டும், நீங்கள் ஒத்துழைத்தால் என்னைவிட நன்றி செலுத்துபவன் வேறு யாரும் இருக்க முடியாது. துணைக் கேள்வி கேட்க வேண்டும் என்றால், இப்படியா ஒன்று, இரண்டு, மூன்று என்று அடுக்கிக் கொண்டே போவார்கள்?....

திரு. எம். ஏ. லத்தீப் ; நான் கேட்க வேண்டியதை தான் கேட்கிறேன், நான் கேட்பது மட்டும் தான் தெரிகிறதா ? இங்கே வேறு யாருமே கேட்பதில்லையா? ஏன் என்னை மட்டும் கேட்கிறீர்கள் ?....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஆற்றல் அதிகம் உள்ளவர் என்பதால்தான் உங்களைக் கேட்கிறேன்....

திரு. எம். ஏ. லத்தீப் : இந்த மாதிரி நடந்துக் ,கொண் டிருந்தால் நாம் இந்த அவையிலேயே செயல்பட முடியாது. ஆகையினால் கேரள மக்களுக்கு இன்றைக்கு இதைப்பற்றி பெரிதும் கலவரமும், பீதியும் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய கவலையையும் பயத்தையும் போக்கும் வகையில், பிரச்னையில் தீர்வு காணும் வகையில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? அறிக்கை கொடுத்திருந்தாலும் அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு விவரங்களைத் தெரிவிக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முல்லைப் பெரியாறு அணைக்கட்டைப் பொறுத்த வரையில் 1885-லிருந்து 1895—வது ஆண்டுகளுக் கிடையில் கட்டப்பட்ட ஒரு அணையாகும். அதனுடைய உயர் மட்ட தண்ணீர் அளவு 152 அடி என்று வைத்துக் கொள்ளலாம்

என்று ஏற்கெனவே சி. டபிள்யூ. சி. மத்திய நீர் ஆணைக் குழுவின் உத்தரவின் அடிப்படையில் 152 அடி என்று வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. அதற்குப் பின்னால் ஒரு பகுதியில் பிளவு ஏற்பட்டதன் காரணமாக 1976-லே 145 அடிக்கு உயர் மட்ட அளவாக நீர் அளவு வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டு 145 அடிக்கும் குறைவாகத்தான் இன்றைக்கும் நீர் மட்டம் இருந்து வருகிறது. இப்பொழுது இந்த ஆண்டிலே இருக்கக் கூடிய நீர் மட்ட அளவு 136 அடிதான். மேலும் கேரள முதல்வர் அவர்களும் கேரள கவர்னர் அவர்களும் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலும், என்னிடத்திலும் தொடர்பு கொண்டு சந்தித்து இது பற்றிப்பேசினார்கள். அவர்களுக்கு உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகள் மத்திய நீர் ஆணைக்குழுவிற்குத் தெரிவிக்கப் பட்டு, இன்றைக்கு டெல்லியில் இதுபற்றி ஒரு கூட்டம் நடைபெறவிருக்கிறது. அதற்காக நமது பொதுப்பணித் துறையில் உள்ள பொறியாளர்கள் சென்றிருக்கின்றனர் அந்தக் கூட்டத்திலே கலந்து கொள்வதற்காக. அங்கு அவர்கள் என்ன ஆணை இடுகிறார்களோ அந்த ஆணைப்படி கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கம் இப்போதுள்ள நிலவரத்தைத் தவிர்ப்பதற்குக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் இப்போதுள்ள நீர் மட்ட அளவு 136 அடிதான். 'அந்த அணைக்கு எந்தவித அபாயமும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே! கேரள மாநிலத்தின் எல்லையில், தமிழ்நாடு அரசால் நிர்வகிக்கப் பட்டு வரும் இந்த அணைக்கட்டு கட்டிமுடிக்கப்பட்டு 82 ஆண்டுகள் ஆகிறது. இது உடையும் தறுவாயில் இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே கூட குடகனாறு அணை உடைபட்ட நேரத்தில் ஏராளமான உயிர் சேதமும் பொருள் சேதமும் ஏற்பட்டதை அனைவரும் அறிவோம். வந்தபின் காப்பதைவிட வருமுன் காக்க வேண்டும். இதனால் மத்திய அரசின் நீர் ஆணைக்குழுவிற்கு நம்முடைய அரசு, அவர்களை இந்த அணையைப் பார்வையிட்டு அறிக்கை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளதா? அவர்களை இதுபற்றி ஏதும் ஆலோசனை கேட்டீர்களா என்றும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இதுபற்றி இங்கே நான் ஏற்கெனவே விளக்கமாகப்பதில் சொல்லியிருக்கிறேன். அதற்கு மேல் எந்தவித பதிலும் தேவையில்லை என்று நினைக்கிறேன். நான் இங்கே இருக்கக்கூடிய பத்திரிகையாளர்களிடமும் கேட்டுக் கொள்கிறேன். ஏதோ கேரளத்திற்குப் பெரிதும் அபாயம் ஏற்பட்டுவிட்டது போல செய்தி போடுகிறார்கள். நான் ஒன்று சொல்லிக் கொள்கிறேன். கேரளத்தில் எந்தவித அபாயமும் இல்லை. தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும். தயவு செய்து நான் கொடுத்துள்ள இந்த அறிக்கையை வெளியிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிற விவர அறிக்கையில் இந்த அணை பற்றியுள்ள விவரங்கள் இருக்கின்றனவே தவிர, அணை இன்றையதினம் உள்ள நிலை பற்றிய விவரங்கள் இல்லை. இன்றையதினம் அந்த அணையின் இரண்டு பகுதிகளிலும் க்ராக்ஸ் ஏற்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல. இந்த அணைக்கு 50 ஆண்டுகள்தான் ஸேப்டி பீரியேட். இப்போது 84 ஆண்டு களாகி விட்டன. அந்த அணையில் க்ராக்ஸ் ஏற்பட்டிருப்பதால் உடைப்பு ஏற்படும் போது அடிவாரத்திலுள்ள இடுக்கி ரிசர்வாயரில் அதிகம் வெள்ளம் பெருகி, வெள்ளப்பெருக்கெடுத்து கீழ் உள்ள கோட்டயம், எர்ணாகுளம், இடுக்கி போன்ற மூன்று மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு பேராபத்து ஏற்படும் என்று அங்குள்ள மக்கள் எண்ணுகிறார்கள். ஆகவே அதில் அதிகக் கவனம் செலுத்தி அங்குள்ள மக்களின் பயத்தைப் போக்கு வதற்கு அரசு தீவிர முயற்சிகளை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல்— அணையின் இருபகுதி களில் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுவார்கள். அப்படி இல்லை. ஒரு பக்கத்தில் மட்டும் விரைப்பு ஏற்படுகிறது. அதுவும் 145 அடிக்கு மேல் தண்ணீர், நீர் மட்ட அளவு இருக்கும்போது அந்த விரைப்பு ஏற்படுகிறது. ஆகவே, இப்போதுள்ள நிலையில், 136 அடிதான். ஆகவே அப்படிப் பட்ட விரைப்பு எந்தப் பகுதியிலும் ஏற்படவில்லை. 1932-ல் இருந்து அந்த அணையில் கசிவு நீர் வந்து கொண்டுதானிருக் கிறது. அதனால் எந்தவிதமான ஆபத்தும் இல்லை. ட்ரௌடிங், கண்ணட்டிங்க் போன்றவை செய்யப்பட்டிருக்கிறது. அணை நல்லபடி, பழுதடையாமல் இருந்து கொண்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் எண்ணுவதுபோல், அந்த அணையை ஏதோ ஐம்பது ஆண்டுகளுக்கு மட்டும்தான் வைத்துக் கொள்ள லாம் என்ற நிபந்தனை இருந்ததுபோல் அவர்கள் சொல் கிறார்கள். அப்படிப்பட்ட நிபந்தனை இல்லை, இன்றையதினம் வரை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப் அவர்கள் இதற்கு முன்னால் இந்த அவையில் அப்படிப்பட்ட அறிக்கைகள் வைப்பதில்லை என்று சொன்னார்கள். 28-4-1979-ல் திரு. உமாநாத் அவர்கள் இந்த அவையில் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் எழுப்பியபோது அதற்கு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், இதுபற்றிய விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட் டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். இது போன்ற மரபு தொடர்ந்து வருகிறதே தவிர புதிதாக ஒன்றுமில்லை.

## (3) அறிக்கை அளித்தல் (தொடர்ச்சி).

### ஆ. மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல்

திரு. வ. மு. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, "கால்நடை வளர்ப்புத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் அறிக்கையை (ஒன்பதாவது அறிக்கை) அளிக்கிறேன்."

## (6) அரசினர் சட்ட முன்வடிவுகள்:

### அ. காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்திறனாக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979.

THE HON'BLE THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker Sir, I beg leave to introduce the bill The Tamil Nadu Police Laws (Amendment and Validation) Bill, 1979.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

THE HON'BLE THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker Sir, I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

### (ஆ) தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.



### (இ) மலை வாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

### (ஈ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, "1979ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 11-00]

### (உ) ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை" பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

செய்யவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன. புதிய ஆலைகளில் 5,37,700 கதிர்களும், விரிவாக்கத்தின் மூலம் 6,28,468 கதிர்களும் நிறுவப்படும். இதனால், 22,600 பேர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு கிடைக்க வழி செய்யப்பட்டு இருக்கின்றன. இதை நான் குறிப்பிடும்போது, இன்னொன்றையும் நான் சொல்லியாக வேண்டும்.

சில மாவட்டங்களில் சில தொழில்கள் அதிகமாக நிறுவப்பட்டு இருக்கின்றன. அங்கே முன்னதாகவே அப்பேர்ப்பட்ட தொழிற்சாலைகள் உருவாகியதன் விளைவாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கின்றது. ஆனால் குறிப்பிட்ட ஒரே மாவட்டத்தில் அல்லது ஒன்றிரண்டு மாவட்டங்களில் அப்பேர்ப்பட்ட தொழிற்சாலைகள் நிறுவப்படும் என்கிற நிலையை மாற்றி, பிற்பட்ட பகுதிகளுக்கு, முன்னேறாத பகுதிகளுக்கு உதவ வேண்டுமென்கிற வகையில், அப்படிப்பட்ட பகுதிகளைத் தேர்ந்தெடுத்து ஆங்காங்கே புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு இந்த அரசு முனைந்து, அதனைச் செயலாக்கம் கொண்டு வரும் திட்டத்தை உருவாக்கி, செயல்பட முனைந்திருக்கிறது. அந்த வகையில்தான் உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும், விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும், அதற்கான புள்ளிவிவரங்களையும் நான் சொல்ல விரும்புகின்றேன்.

கோயம்புத்தூரில் புதிய ஆலைகள் 5; விரிவாக்கம் செய்யப்பட்டது 12; ஆக மொத்தம் 17. சேலத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டது 3; புதிய ஆலைகள் இல்லை; ஆகமொத்தம் 3. தர்மபுரியில் விரிவாக்கம் இல்லை; புதிய ஆலைகள் 2; ஆக மொத்தம் 2. இராமநாதபுரத்தில் விரிவாக்கம் 3; புதிய ஆலைகள் 4; ஆக மொத்தம் 7. அங்கே விரிவாக்கம் இப்போது போதுமான அளவிற்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. 79-80 ஆம் ஆண்டுகளில், கோயம்புத்தூரில் விரிவாக்கம் 11; புதிதாக 1; மொத்தம் 12. சேலத்தில் இல்லை. தர்மபுரியில் விரிவாக்கம் இல்லை; ஆனால் புதியதாக ஆலைகள் 6; மொத்தம் 6. இராமநாதபுரத்தில் விரிவாக்கம் இல்லை; புதிய ஆலைகள் 4; மொத்தம் 4. இதே போல் கதிர்களின் எண்ணிக்கையை விரிவாயியதன் மூலம் 2,8υ,000 கதிர்கள் கோயம்புத்தூரில். புதிய ஆலைகளின் மூலம் 1,25,200 கதிர்கள். சேலத்தில் விரிவாக்கியதன் மூலம் 61,652 கதிர்கள்; புதிய ஆலைகள் இல்லை·

[முற்பகல் 11-10]

அதுபோல் தர்மபுரியில் விரிவாக்கம் இல்லை. ஆனால் புதிய ஆலைகளின் மூலம் 50,000 கதிர்கள் இயங்குகின்றன. இராமநாதபுரத்தில் விரிவாக்கம் 81,260; புதிய ஆலைகள் லட்சம் கதிர்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மொத்தம் கதிர்கள் 4,05,280.

சேலத்தில் 61,652; தர்மபுரியில் 50,000; இராமநாதபுரத்தில் 1,81,260 கதிர்கள்.





வேலை வாய்ப்பு-விரிவாக்கத்தின் காரணமாக 3,804 பேர்களுக்குக் கோவையில். கோவையில் புதிய ஆலைகளின் மூலமாக 2,767 பேர்களுக்கு வேலை. மொத்தம் 6,571 பேர்களுக்கு புதிதாக வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

சேலத்தில் புதிய ஆலைகளில் விரிவாக்கத்தின் மூலம் வேலை வாய்ப்பு 1,134 பேர்களுக்கு. தர்மபுரியில் புதிய ஆலைகளின் மூலம் 925 பேர்களுக்கு வேலை. இராமநாதபுரத்தில் 1,334 பேர்களுக்கு விரிவாக்கத்தின் மூலம் வேலை; புதிய ஆலைகள் மூலம் 1,852 பேர்களுக்கு வேலை. ஆக மொத்தம் 3,186 பேர்களுக்கு வேலை. ஆக ஒட்டுமொத்தமாக 11,816 பேர்களுக்கு வேலை கிடைக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் 1979-80ல் விரிவாக்கத்தின் மூலம் கோவை மாவட்டத்தில் 2,35,476 கதிர்கள். புதிய ஆலைகள் 25,000.

முன்னே சொன்னது கதிர்கள்-இப்போது சொல்வது வேலை வாய்ப்பு. விரிவாக்கத்தின் மூலம் 4,246 பேர்களுக்கு வேலை வாய்ப்பு. புதிய ஆலைகள் மூலம் 603 பேர்களுக்கு வேலை. மொத்தம் 5,849 பேர்களுக்கு வேலை.

சேலம் இல்லை. தர்மபுரி மாவட்டத்தில் 1,37,000 கதிர்கள் புதிய ஆலைகள் மூலமாக.

அதனால் 2,981 பேர்களுக்கு புதிய ஆலைகள் மூலமாக வேலை வாய்ப்பு. இராமநாதபுரத்தில் புதிய ஆலைகளின் மூலம் 2,523 பேர்களுக்கு வேலை வாய்ப்பு.

ஆக, 1979-80 ஆம் ஆண்டில் விரிவாக்கத்தின் மூலம் 4,649 பேர்களுக்கு வேலை; புதிய ஆலைகளின் மூலம் 6,104 பேர்களுக்கு வேலை; ஆக மொத்தம் 10,753 பேர்களுக்கு வேலை. இரண்டையும் கூட்டினால் இந்த ஆண்டு 22,569 பேர்களுக்கு புதிதாக தொழிற்சாலைகள் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்க நாங்கள் எங்கள் கடமையைச் செய்திருக்கிறோம்.

புதிய தொழில்கள் ஆரம்பிக்கவில்லை, நீங்கள் எதுவும் செய்யவில்லை என்று சொல்வதனால்தான் இந்தக் குறிப்புகளைப் படிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன்.

எத்தனை பேர்களுக்கு கோவை, சேலம், தர்மபுரி, மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் புதிய கதிர்கள் விரிவாக்கம் மூலம் புதிய ஆலைகள் மூலம் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். புதிய உரிமங்கள் வழங்கியதன் விவரங்கள், புதிய ஆலைகளின் விரிவாக்கம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 5

ஆஷார் டெக்ஸ்டைல்ஸ், கோவை; வசந்தா மில்ஸ்; ராணி மில்ஸ்; எஸ். ஆர். வி. மில்ஸ்; ராஜேஷ் மில்ஸ்; ஜி. டி. கே. இண்டஸ்ட்ரீஸ்; லட்சுமி ஸ்பின்னிங் மில்ஸ்; கார்த்திகேயா ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், சிவசுப்பிரமணியன் டெக்ஸ்டைல்ஸ், கோவை. கிருஷ்ணா மில்ஸ், பொள்ளாச்சி; ஹம்ஸவேணி ஸ்பின்னர்ஸ், கோயம்புத்தூர்; ராமகிருஷ்ணா ஸ்பின்னர்ஸ் அன்ட் வீவிங் மில்ஸ்; குப்புசாமி சாரிடி டிரஸ்ட்; பழனி ஆண்டவர் ஸ்பின்னர்ஸ்; திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ்: இப்படி நாங்கள் கதிர்கள் கொடுத்தது பற்றி வரிசைக் கிரமமாக சொல்கிறேன். 23,932; 24,180; 63,000; 25,000; 25,000; 24,232; 25,680; 15,120; 23,272; 24,264; 23,400; 25,000; 25,000; 25,000; 25,200: ஆக வேலைவாய்ப்பு என்ற விகிதத்தில் தொடக்கத்திலிருந்து 292, 297, 632, 300, 300, 297, 119, 221, 632, 315, 89, 310, 467, 600, 600.

இன்னும், ஸ்ரீ வீ. சௌந்திரராஜன் ராமலட்சுமி ஸ்பின்னிங் அன்ட் வீவிங் மில்ஸ், அது கோவை. அதிலே புதிய ஆலை. பல்லடம் கோயம்புத்தூர் இடங்களில் 25,000, 25,000 கதிர்கள் வேலைவாய்ப்பு, 600, 500.

சேலம் மாவட்டம் கந்தசாமி வீவிங் பாக்டரி, மல்லூர் சித்தேச்வரா ஸ்பின்னிங் அன்ட் வீவிங் மில்ஸ், சேலம் டெக்ஸ்டைல்ஸ் இந்த மூன்று அமைப்புகளுக்கும் நாங்கள் உரிமம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ததன் விளைவாக குமாரபாளையம், ராசிபுரம், ஆத்தூர் ஆகிய மூன்று இடங்களிலும் 22,582; 22,800; 16,200: அதில் வேலை வாய்ப்பு பெறுகிறவர்கள் 347; 538; 249.

அதுபோக; தர்மபுரி மாவட்டத்தில் பாலாஜி ஸ்பின்னர்ஸ்; கோயம்புத்தூர், ஓ. எம். எஸ். பி. எல். எம். மெய்யப்பன், பொள்ளாச்சி, புதிய ஆலைகள். தர்மபுரியிலே அந்த இரண்டு இடங்களில் 25,000, 25,000 தறிகள் கொண்ட ஆலைகள். அதில் 610, 315 பேர்களுக்கு வேலை.

ஸ்ரீ சண்முகா பிலிம்ஸ், ஜானகிராம்ஸ் பின்னர்ஸ் லிமிட்டெட், பாரதி காட்டன் மில்ஸ், அருப்புக்கோட்டை, ஸ்ரீதேவி விலாஸ், எம். மெய்யப்பன், பொள்ளாச்சி வீரராகவா டெக்ஸ்டைல்ஸ், வள்ளி காட்டன் டிரேடர்ஸ், இது அத்தனையும் இராமநாதபுரம் மாவட்டம். அதிலே 25,000; 37,620; 18,640; 25,000; 25,000; 25,000 ஆக 6,98,192 கதிர்கள். வேலை வாய்ப்பு 636; 326; 322; 236; 215; 315; 486; ஆக 11,816 பேர்கள் புதிய வேலை வாய்ப்புக்களைப் பெற்றார்கள்.

அது போக, மேலும் எங்களுடைய திட்டங்களின் விளைவா இன்னும் பல பேர்களுக்கு, பின்தங்கிய மாவட்டங்களுக்கு வந்து அங்கே ஆலைகள் நிறுவ வருகிறவர்களுக்கு. நாங்கள்



1979 நவம்பர் 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

உரிமம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில் துறையில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள், என்ன செய்தீர்கள் என்று கேட்கிறவர்களுக்கு ஓரளவிற்கு இந்தப் புள்ளிவிவரங்கள் நாங்கள் எங்களால் முடிந்த கடமைகளைச் செய்திருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக இங்கே அளிக்கப்படுகின்றது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதோடு எத்தனை வேலைவாய்ப்புகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதற்கும் இந்தக் புள்ளிவிவரங்கள் ஆதரவாக இருக்கும் என்பதைச் சொல்வதில் நான் மிகமகிழ்ச்சி அடைகிறேன்.

இன்னொன்று தீப்பெட்டித் தொழிற்சாலை. இங்கே சில நண்பர்கள் கேட்டார்கள். தீப்பெட்டித் தொழிற்சாலையை இராமநாதபுரம் மாவட்டத்தைத் தவிர வேறு மாவட்டங்களுக்குக் கொடுக்கப் போவதில்லை என்று முதலமைச்சர் பேசியதாக பத்திரிகையிலே செய்தி வந்தது, அது உண்மைதானா? அப்படியானால் இப்போது கொடுக்கப்பட்டு இருப்பது என்ன ஆகும் என்றெல்லாம் கேட்டார்கள். ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். எந்த எந்த மாவட்டங்களிலே என்ன என்ன தொழில்களை நடத்துவதற்கு மூலப் பொருட்களும் வாய்ப்பும் இருக்கின்றதோ அதற்கேற்ப அந்தந்த மாவட்டங்களிலே அந்தப் பணிகளுக்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பது இந்த அரசினுடைய நோக்கம் ஆகும்.

(முற்பகல் 11-20)

ஏதோ பெரிய தொழிற்சாலைகளைக் கொண்டு வர வேண்டுமென்கிற ஒரே நோக்கத்தோடு, எப்பொழுது வருவார்கள் என்று காத்திருந்து எங்கள் பணிகளைச் செய்யாமல், முடங்காமல், நாங்கள் யார் யாருக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று கருதுகிறோமோ, நம்புகிறோமோ யார் ஒழுங்காக அந்தப் பணிகளை செய்ய முன் வருகிறார்களோ அவர்களை, பின்தங்கிய மாவட்டம் என்று சொல்லப்படுவதற்கு உதாரணமாக இருக்கின்ற இராமநாதபுரம் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் முன்னுரிமை கொடுத்து அங்கே அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்கலாம். அங்கே நீங்கள் அந்தத் தொழிற்சாலையை அண்மையில் தொடங்குவது என்றால் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று சொல்ல முன்வந்தது எங்களுடைய எண்ணம் இந்த நாட்டில், நான் முதலிலேயே குறிப்பிட்டதைப் போல எந்தந்த மாவட்டங்களில் இந்தத் தொழிலைச் செய்ய உடனடியாக வாய்ப்பு இருக்கிறதோ அதை அங்கே நிறைய ஏற்பாடு செய்வதற்கு வாய்ப்புத் தந்து, அங்கேயுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்பதாகும். அந்த வகையில் இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 5

தர்மபுரியில் ஒன்று, பொம்மிடியில் ஒன்று, மதுரை மாவட்டத்தில் பெரியகுளத்தில் ஒன்று, இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடி, விருதுநகர், அருப்புக்கோட்டை, சிவகாசி, தஞ்சை மாவட்டம் மாயவரம், திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டான், முசிறி, ஆண்டிமடம், தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி இராமநாதபுரம் மாவட்டம் சின்னக்காமன்பட்டி, இராமலிங்கபுரம், நெல்லை மாவட்டம் எட்டயபுரம், கோவில்பட்டி, மேற்கண்ட ஆறு சங்கங்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதை நாங்கள் தடை செய்யப் போவது இல்லை. இதை அனுமதிக்காமல் ஒதுக்கித் தள்ளப் போவது இல்லை.

ஆனால், அதே நேரத்திலே, இதைத் தவிர கதர் கமிஷன் 1—4—79 முதல் 30—9—79 வரை உள்ள காலத்தில் 758 அலகுகள், குடிசைத் தொழிலாக நிறுவ அனுமதி வழங்கி உள்ளது, அவற்றின் விவரங்கள் பின்வருமாறு :-

இராமநாதபுரம், அலகுகளின் எண்ணிக்கை 392. நெல்லை 257, மதுரை 30. தர்மபுரி 5, வடார்க்காடு 59, கோயம்புத்தூர் 11 சென்னை 4. அலகு ஒன்றுக்கு 20 பேர் என்ற அடிப்படையில் இந்த 758 அலகுகளில் 15,160 பேர் வேலை பெறுவார்கள்.

திரு. சுப்பு அவர்கள், கூட்டுறவு அமைச்சர் அவர்கள் பெரியார் மாவட்டத்தில் ரூபாய் 11 இலட்சம் செலவில் தீப்பெட்டித் தொழிற்சாலை தொடங்கப்படும் என்று கூறியதாகவும், இது முதலமைச்சரின் அறிவிப்புக்கு எதிராக இருக்கிறது என்றும் கூறியுள்ளார்கள். பெரியார் மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலை நிறுவும் அலகுகள் இந்தத் துறையின் குறிப்புகளில் எதுவும் கிடையாது என்று அந்த நண்பர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் இராமநாதபுரம் மாவட்டத்தில் அண்மையில் சுற்றுப் பயணம் சென்றபொழுது அங்கேயிருக்கின்ற மக்கள் என்னிடம் கோரிக்கை விடுத்ததன் விளைவாகவும், மற்ற மாவட்டங்களில் வேறு தொழில்கள் செய்வதற்கான வாய்ப்புகளை, நாங்கள் பெரிய தொழிற்சாலைகளை உருவாக்கிக் கொண்டு இருப்பதன் விளைவாகவும், உடனடியாக இராமநாதபுரம் மாவட்டம் போன்ற இடங்களில் உள்ளவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க வேண்டுமென்ற நிலையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இனிமேல் கொடுக்கப்படும் என்ற கருத்தோடும் அந்த எண்ணத்தை வெளியிட்டேன் என்பதை இந்த மாமன்றத்தில் சொல்கிறேன். அதைச் செய்து அதனால் அங்கே இலட்சக் கணக்கான மக்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள் என்றால், வேறு வசதியில்லாத, வாய்ப்பில்லாத நிலையில் இருக்கின்ற அந்த மக்களுக்கு இது மாபெரும் உதவியாக இருக்கும் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்,



1979 நவம்பர் 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

1–7-77 முதல் இவ்வரசு மைய அரசுக்கு பெரும் தொழில் நிறுவ பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை : சென்னை 21, செங்கல்பட்டு 25, வடார்க்காடு 15, தென்னார்க்காடு 3, தர்மபுரி 17, சேலம் 2, கோயம்புத்தூர் 6, நீலகிரி 2, தஞ்சாவூர் 1, திருச்சிராப்பள்ளி 4, மதுரை 1, இராமநாதபுரம் 4, புதுக்கோட்டை 1, திருநெல்வேலி இல்லை, கன்னியாகுமரி இல்லை, பெரியார் மாவட்டம் 1, ஆக 106 தொழில் நிலையங்களைத் தொடங்க மத்திய அரசுக்கு நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம். அந்த சிபாரிசு செய்யப்பட்டவைகளின், அந்த கம்பெனிகளின் பெயர்களை நான் குறிப்பிட்டு நேரத்தை வீணாக்குவது என்று மற்றவர்கள் கருதினால், அதை நான் நிறுத்திக் கொண்டு செலவு எவ்வளவு என்பதை இங்கே குறிப்பிட்டு, வேலை வாய்ப்பு எவ்வளவு என்பதை இங்கே நான் குறிப்பிட வேண்டியது என்னுடைய கடமையாகும். 40 இலட்சம், 16 இலட்சம், 92.42 இலட்சம், 55 இலட்சம், 21 இலட்சம், 11 இலட்சம், 29 இலட்சம், 50 இலட்சம், 10 இலட்சம்: ஆக, அது போலவே 69 பேர்களுக்கு, 24 பேர்களுக்கு, 150 நபர்களுக்கு, 500 நபர்களுக்கு, 54 நபர்களுக்கு, 7 நபர்களுக்கு, 15 நபர்களுக்கு, 57 நபர்களுக்கு, 71 நபர்களுக்கு என்று வேலை வாய்ப்பும், அதோடு தொடர்ந்து மற்றும் நாங்கள் சிபாரிசு செய்ததன் விளைவாக, 300 பேர்களுக்கு ஒரு இடத்தில், இன்னொரு இடத்தில் 105 தொடர்ந்து 67, 59, 178, 695, 10, 32, 106, 33, 35, 76, 90, 240, 118, 936, 500, 50, 98, 30, 155, 250, 1355, 30, 185; அது போலத் தொடர்ந்து 52, 174, 935, 339, 90, 68, 72, 48, 76, 58, 97, 250, 112, 110, 500, 112, 99, 50, 144, 195, 3,500, 178, 660, 43, 77, 400, 72, 150, 50, 250, 611, 160, 155 இவை 2,350, 434, 300— இத்தனை பேர்களுக்கு இந்த சிபாரிசுகளின் மூலம் அந்தத் தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசிலிருந்து உரிமம் வழங்கப்பட்டவுடன் தொழில் தொடங்கும்போது இந்த வேலைகள் கிடைக்கும் என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள விழைகின்றேன்.

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்கும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்கும் முரண்பாடு இருக்கிற காரணத்தால் விளக்கம் கேட்டேன். முதலமைச்சர அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் பேசும் பொழுது, தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இனி அமைக்க, இராமநாதபுரம் மாவட்டத்தைத் தவிர வேறு எந்த மாவட்டத்திற்கும் அனுமதி அளிப்பதில்லையென்று முடிவு செய்திருக்கிறோம் என்று அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசிய அதே சந்தர்ப்பத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியார் மாவட்டத்தில், ஈரோட்டில் பேசும்பொழுது, ஈரோட்டிலே தொடங்குவதற்கு ரூ. 11 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று

[திரு க. சுப்பு] [1979 நவம்பர் 5

சொன்னார்கள். அவர் இருக்கும்போதுதான் நானும் சொன்னேன். ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள் என்று சொன்னேன். அவர் சொல்லவில்லை. இப்பொழுது கூட முன்னுரிமை வழங்குவதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, தொழில் தொடங்குவதற்கு தொழில் உரிமங்கள் வழங்கப்படுகின்றனவே தவிர, தொழில்கள் ஆக்சவலாகத் தொடங்கப்படவில்லை. நிறையப் பேருக்கு 'ரா மெட்டீரியல்ஸ்' கிடைக்கவில்லை. சும்மா லைசன்ஸ் கொடுக்கிறார்கள். கலெக்டர் ஆஃபீசில் ஆளுக்கு ரூ. 300 வாங்கிக் கொண்டு கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட முறைகள் இருக்கின்றனவே தவிர, தொழில்கள் தொடங்கப்படவில்லையென்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழில்கள் தொடங்கப்படவில்லையென்கிற குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். எத்தனையோ பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதை முன்னாலே நான் படித்துக் காண்பித்தேன். அண்மையிலே கூட தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு நான் சென்றபொழுது, எத்தனையோ தாய்மார்கள் அங்கே தீப்பெட்டித் தொழிற்சாலையிலே பணியாற்றுவதற்கு கற்றுக் கொண்டு, பணியாற்றியதை நான் பார்த்து, அங்கே தொடங்கி வைத்து விட்டு, அதற்கு வேண்டிய வாய்ப்புகளை ஏற்படுத்தி விட்டு வந்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். பத்திரிகைகளிலே வார்த்தைகள் தவறாகப் போடப்பட்டு விட்டால் அதற்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது என்பதை இங்கே திரும்பவும் சொல்ல விரும்புகிறேன், தொழிற்சாலைகளுக்கு எந்தெந்த வகையிலே வாய்ப்புக்கள் தர வேண்டுமென்று விரும்புகிறோமோ அதற்கு நானே கையெழுத்திட்டு விட்டு நானே கொடுக்கப் போவதில்லையென்று எப்படி சொல்ல முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் அதைச் சொன்னதற்குக் காரணம் என்ன என்பதை இங்கே விளக்க வேண்டும். அங்கே உள்ள மக்கள், தாய்மார்கள் எங்களுக்கு இதைத்தவிர வேறு வழியில்லை. வேறு தொழில் இல்லை, மானம் பார்த்த பூமியாக இது இருக்கிறது, இவைகளை யெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்; ஆகவே, தீப்பெட்டித் தொழிற்சாலையை இந்த மாவட்டத்தில் தொடங்குவதற்கு மேலும் நீங்கள் வாய்ப்பைத் தந்து மற்றவர்களுக்கு வேறு வாய்ப்புத் தருகின்ற காரணத்தால் எங்களுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்று சொன்னதன் விளைவாக இனிமேல் கொடுக்கப்படுகிற அனுமதி, முதல் சலுகையாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் என்று வைத்துக் கொள்ளலாமா என்று நாங்கள்



1979 நவம்பர் 5] [திரு. எம்.ஜீ. இராமச்சந்திரன்]

யோசிக்கின்றோம் என்ற வார்த்தையை நான் பயன்படுத்தியிருக்கிறேன். அதை சுப்பு அவர்கள், மாண்புமிகு நண்பர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள், நம்புவார்கள் என்று நான் கருதுகின்றேன்.

[முற்பகல் 11-30]

மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் தொழில் துறை பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் அன்றே குறிப்பிட்டேன், மேலெழுந்தவாரியாக. அதை கொஞ்சம் தெளிவுபடுத்தலாம், தெளிவாகச் சொல்வது நல்லது என்று நான் கருதுகிறேன். தோல் பதனிடவும், தோலை உற்பத்தி செய்யவும் துவக்கப்பட்ட திருவாளர்கள் குரோம்லெதர் கம்பெனி என்னும் நிறுவனம் தற்போது நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. தொழிற்சாலை மூடப்படவோ, கதவடைப்பு செய்யப்படவோ இல்லை. தொழிலாளர்கள் வழக்கம்போல வேலைக்குச் செல்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஒரு வேலையும் தரப்படவில்லை. மேலும், ஊதியம் சுமார் 11 மாதங்களாக வழங்கப்படவில்லை என்றும் சுமார் 1000 பேர் வேலை செய்து வந்தனர் என்றும் குறிப்பிட்டு தன்னுடைய வேதனையைச் சொன்னார்கள். அதற்கு நான் நேற்றைய முன் தினமே பதில் சொல்லி இருக்கிறேன் என்றாலும் இன்னும் கொஞ்சம் தெளிவாக நான் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா-க்கு இந்த நிறுவனம் ரூ. 1 கோடியே 40 இலட்சம் பாக்கி தரவேண்டிய நிலையில் அவ்வங்கி இந்நிறுவனம் கோரிய ரூ. 60 லட்சம் கடனை பொறுப்புறுதி இன்றி அளிக்கத் தயங்குகிறது. எனவே நிறுவனத்தின் தலைவர் நாகப்பச் செட்டியார் கடனுக்கு பொறுப்புறுதி வேண்டி அரசை அணுகினார். தமிழ்நாடு தொழில் துறை மேற்படி கோரிக்கையுடன் மத்திய தோல் ஆராய்ச்சிக் குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிர்வாக சீரமைப்பு மற்றும் நிர்வாகத்தில் பங்கேற்றல், கடனோ அல்லது உத்தரவாதமோ அளிப்பதற்கான வாக்குறுதி குறித்து ஆராய்ந்தது.

மையத் தோல் ஆராய்ச்சி நிறுவனம் இந்த ஆலை மறுபடியும் இலாபகரமாக இயங்கமுடியும் என்று கூறியிருந்தாலும் அதற்கு விதித்துள்ள நிபந்தனைகள் மிகக் கடுமையானவை.

தற்போதுள்ள தொழில் முனைவரை நீக்கி, ஆலையின் உயர் பதவிகளில் தொழில் வல்லுநர்களை நியமித்து, தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, ஆலையின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி இழந்துவிட்ட ஏற்றுமதி செய்யும் வாய்ப்பினை திரும்பப் பெறும் வகையில் விற்பனைத் தொகையை விரிவு செய்வது மூலம் சுமார் ரூ. 1 கோடி வரையிலும் நடைமுறை மூலதனங்களுக்கு கொடுத்தால்தான் இந்த நிறுவனம் இலாபகரமாக நடைபெறும் என்று தெரிவித்துள்ளது. இந்த நிபந்தனைகளில் எவையேனும் முழுமையாக நிறைவேற்றப்பட

வில்லை என்றால் ஆலை நட்டத்தில்தான் இயங்கும்; எனவே நிர்வாகத்தில் அரசு பொறுப்பேற்பதோ, அதை விடுவிப்பு நிறுவனம் என்று அறிவிக்கவோ முடியாது என்று தெரிவித்து விட்டு இந்த நிறுவனத்திற்கு அதிக அளவில் கடன் கொடுத்திருந்த வங்கியே இந்த நிறுவனத்தை ஏற்று நடத்தலாம் என்று சம்பந்தப்பட்டவர்களுக்கு அரசு அறிவித்தது.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் வங்கியின் நிறுவனம் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிற்சாலை அதிபர்கள் இவர்களுடன் 30—4-79 அன்று இந்த நிறுவனத்தைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி பேச்சு நடத்தினார், அரசுச் செயலாளர், நிதித்துறை, தொழிலாளர் நலத் துறை, தொழில் துறை ஆகியோருடன் 3-9-79 அன்று பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இத் தொழிற்சாலையை மீண்டும் இயங்கச் செய்ய நிறுவனத்தின் நிர்வாகமோ, வங்கியோ எந்த வகையிலும் தியாகம் செய்ய முன்வரவில்லை. அரசே இதை ஏற்று நடத்தலாம், நாட்டுடமை ஆக்கலாம். ஆனால் சொத்துக்களின் மதிப்பு 196 இலட்சம், கடன்களை விட (ரூ. 5 கோடி) மிகவும் குறைவாக இருப்பதால், கடன்கள் கொடுத்துள்ள வங்கிகளுக்கு இதனால் பெறும் இழப்பு ஏற்படும். எனவே வங்கி மைய நிதியமைச்சகத்தின் மூலம் நிச்சயமாக எதிர்க்கும்.

முன்பு சக்தி பைப்ஸ் போன்ற நிறுவனங்களை நாட்டுடமையாக்க தமிழக அரசு மைய அரசுக்கு திட்டங்கள் அனுப்பிய போது அதற்கு மைய அரசு ஒப்புதல் கொடுக்காததற்கு வங்கிகளின் எதிர்ப்பும் ஒரு காரணம் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

அடுத்து ஆலையை மீண்டும் இயங்கச் செய்ய தொழில் அபிவிருத்தி மற்றும் கட்டுப்பாடு சட்டம் 1951-ன் கீழ் நடவடிக்கை எடுக்கலாம். இந்த ஆலை முறையாக மூடப்படவில்லை என்றாலும் கடந்த சுமார் 1 வருட காலமாக இயங்காமல் இருப்பதால் மேற்கண்ட சட்டத்தில் 18 பிரிவின் கீழ் இந்த ஆலையை, 90 நாட்களுக்கு மேல் இயங்காமல் இருக்கிறதென்று சுட்டிக் காட்டி இந்த ஆலையின் நிர்வாகப் பொறுப்பை மைய அரசே எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற செயற்குறிப்புக்கு நான் ஆணையிட்டு மைய அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பப் பட்டிருக்கிறது,

இந் நிறுவனத்திலிருக்கிற தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது நிவாரணம் கொடுக்க முடியுமா என்று சொன்னதை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை சொல்லிக் கொள்ள விழைகின்றேன்.

ஆகவே, சட்டங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு....

திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, க்ரோம் லெதர் கம்பெனி பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி கூறக்



கடமைப்பட்டு இருக்கிறேன். இப்போது அவர்கள் குறிப்பிட்டபடி, மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்து, அவர்கள் அதை ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில் அந்தத் தொழிற்சாலையை காபசரயாக நடத்திக்கொடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தோடு ஆனாலும் சரி, மாநில அரசாங்கத்தோடு ஆனாலும் சரி, தயாராக இருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஏற்கனவே அரசாங்கத்திற்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை இயங்குவது என்பதில் அந்தத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு என்பது முக்கியமாக அடங்கி இருக்கிறது. அதோடு அந்தத் தொழிற்சாலை இயங்க வேண்டும் என்பதும் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் அந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியில் இருந்து அந்தத் தொழிலாளர்களுக்கு உதவி செய்யப்படும் என்கிற அறிவிப்பை இப்போதே வெளியிட்டால், கடந்த 16 மாத காலமாக ஊதியம் இன்றி அவதிப்பட்டுக் கொண்டு இருக்கும் அந்தத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதுபோல் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : கனம் முதலமைச்சர் அவர்கள் அன்று காவிரி ஸ்ட்ரக்சுரல்ஸ், திருச்சி பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை நடத்துவதற்கு வேறு முறையில் நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது குறித்து முயற்சி எடுப்பதாகக் கூறினார்கள். பி.எச். இ.எல். நிறுவனம் இப்படிப்பட்ட ஒரு இன்ஜினீரிங் யூனிட்டுகளை எடுத்து நடத்தியிருக்கிறார்கள். ஆகவே, அந்த பி.எச். இ.எல். நிறுவனம் இதை ஏற்று நடத்துவதற்கு வேண்டிய முயற்சியில் கனம் முதலமைச்சர் அவர்கள் இறங்கி, அந்தத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் கொடுக்க ஏதாவது செய்வார்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளர்கள் பிரச்னையில் சட்டத்திற்கு இணங்க எந்த அளவிற்கு எங்களால் காரியங்கள் ஆற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ, அவை அத்தனையும் நாங்கள் பின்பற்றுகிறோம் என்று சொல்கிற நேரத்தில், இந்த விஷயத்தில் காவிரி ஸ்ட்ரக்சுரல்ஸ் சம்பந்தப்பட்ட பிரச்னைகளையும் உள்ளடக்கி இந்த அரசு தன்னாலான பணியைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சம்பந்தப்பட்டவர்களை அழைத்து இதற்காக தொழிலாளர் நலத் துறை அமைச்சரையும், மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களையும் அதிபர்களையும் அழைத்து, இதைப் பற்றிப் பேசி முடிவு எடுப்பதற்கான முயற்சியில் நாங்கள் ஏற்பாடு செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 5

இங்கே எதிர்க் கட்சித் தலைவர்களில் ஒருவரான மாரிமுத்து அவர்கள் நூல் விலை ஏறிவிட்டது என்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதற்கு ஒரு சில விளக்கங்களை நான் சொல்ல வேண்டியது என் கடமையாக இருப்பதால் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இந்த ஆண்டு மே மாதத்திற்குப் பின் கைத்தறி நெசவாளர்கள் உபயோகிக்கும் சிட்ட நூல் விலை 12% முதல் 27% வரை உயர்ந்தது. உதாரணமாக 20-ம் நெம்பர் நூல் விலை மே மாதம் ரூ.70, ரூ.76 என்று இருந்தது. ஆகஸ்டில் 79 ரூ. 86 ரூ. என்று உயர்ந்தது. 100–ம் நெம்பர் நூல் விலை ரூ.247–ல் இருந்து 333-345 என்று உயர்ந்தது. அதோடு, மே, ஜுன் மாதங்களில் தமிழ் நாட்டிலுள்ள நூற்பாலைகளில் 55 நாட்கள் வேலைநிறுத்தம் இருந்ததால் நூல் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் வழங்க மாநில அரசு தென்னிந்திய பஞ்சாலைக் கழகத்துடன் கலந்து பேசி, ஆகஸ்ட் 1979 மார்க்கெட் விலையில் 5 % குறைவாக 3674 பேல் நூலைப் பெற்று, கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு செப்டம்பர் மாதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் பின், மாநில அரசின் வேண்டுகோளின்படி மத்திய அரசு தலையீட்டில் 60-ம் நெம்பர் கீழுள்ள நூல்களை செப்டம்பர் முதல் வார விலையில் 10% குறைவாகவும், நூற்பாலைகளிலிருந்து ஒதுக்கீடு செய்து விநியோகம் செய்யும் திட்டம் 1-10-79 முதல் அமலில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் தென்னிந்திய நூற்பாலைக் கழகம் மற்றும் தேசீய பஞ்சாலைக் கழகம் ஆகியவற்றிலிருந்து 5,241 பேல் நூல்களைப் பெற்று தனியார்த்துறை நெசவாளர் சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நூல் ஒதுக்கீடு டிசம்பர் மாதம் வரையில் செய்யப்படும். தமிழ்நாட்டில் இயங்கும் 12 கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் 7,000 பேல் நூல்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாய விலையில் வழங்கப்படுகின்றன. எனவே, கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூல் நியாய விலையில் விநியோகிக்கத் தக்க ஏற்பாடுகள் நடைமுறையில் உள்ளன,

[முற்பகல் 11-40]

கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை பாதுகாப்பு, கூலி போன்றவற்றில் சட்டப் பாதுகாப்பு அளிப்பதற்கு என்று ஒரு சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டு, அது சட்டமன்றத்தின் கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. இக்குழு கைத்தறி தொழில் சம்பந்தப்பட்ட பல ஸ்தாபனங்கள், நபர்கள் அவர்களுடைய கருத்துக்களைப் பெற்று வருகிறது. எனவே, நெசவாளர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்கும் வகையில் இந்த மசோதா சட்டமாக்கப்படவுள்ளது.

தொழில் துறையில் 14 கோடி ரூபாய் பஞ்சுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது; பஞ்சு வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது



1979 நவம்பர் 5]

திரு. க. சுப்பு : துணைத் தலைவரவர்களே, இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் ஒதுக்கீடு செய்வது பற்றி ஒரு விளககம் கேட்க விரும்புகிறேன். அருப்புக் கோட்டையில் ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கிற இரண்டு சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நூல் நிறுத்தப்பட்டு, புதிதாக நெசவு செய்யாமல் 'ப்ராசசிங்' செய்கிறவர்களுக்கு, சாயம் போடுதல் போன்ற ப்ராசசிங் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு நூல் வழங்கப்படுகிறது. அந்த இரண்டு சங்கங்கள்–அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், அருப்புக்கோட்டை இந்திராகாந்தி ஆர்ட் சில்க் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்–இந்த இரண்டு சங்கங்களுக்கும் கொடுக்கப்பட்டதை நிறுத்திவிட்டு, இப்போது புதிதாக (பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசப்பெற்றது) ஆளும்கட்சிக்காரர்களால் ஆரம்பிக்கப்பட்ட ப்ராசசிங் சங்கத்திற்கு நூல் வழங்கப்படுவதாகப் புகார் வந்திருக்கிறது. இதிலே அரசாங்கத்தின் நிலை என்ன என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். கிட்டப்பா : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். அங்கே . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அங்கே என்ன நடந்தது என்பதைப் பார்க்கச் சொல்லியிருக்கிறேன்: பின்னர் தெரிவிக்கிறேன்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரின் கவனம் வேறு பிரச்சனையில் இருப்பது போல் தெரிவதால் சொல்கிறேன். கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு நூல் ஒதுக்குகிறார்கள். அப்படி ஒதுக்கும்போது, ஏற்கெனவே நூல் வழங்கப்பட்டு வந்த சில சங்கங்கள் ஒதுக்கப்பட்டு விட்டன. அதுபற்றி புகார் வந்திருக்கிறது. அந்தச் சங்கங்களிலே தறி இருக்கிறதா என்று செக் செய்யப்பட்டது; செக் செய்யப்பட்டும் இன்னும் நூல் வழங்கவில்லை. ஆனால புதிதாக ஆரம்பித்த சங்கத்தில் தறி இருக்கிறதா என்று செக் பண்ணாமலேயே நூல் கொடுக்கப் பட்டிருக்கிறது. அருப்புக்கோட்டை ஆர்ட் சில்க் ப்ராசசிங் அசோசியேஷன் என்பது அதன் பெயர். அங்கே சாயத் தொழிலாளர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகமாக நூல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆர்டரில் கூறப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். தறி இருப்பவர்களுக்கு நூல் வழங்கவில்லை; ஆனால் தறி இல்லாதவர்களுக்கு நூல் வழங்கப்படுகிறது. அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், அருப்புக்கோட்டை இந்திராகாந்தி ஆர்ட் சில்க் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டு வந்த நூல் நிறுத்தப்பட்டுவிட்டது என்று புகார் வந்திருக்கிறது. ஆனால் அரசாங்கம் அந்த புகாரைப் பற்றி கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, முதலமைச்சர் அதற்கு பதிலளிப்பாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. விரைவிலே அதை விசாரித்து, எந்தக் காரணத்தினால் அப்படி மாற்றப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து, காரணமின்றி வேறு தனிப்பட்ட சூழ்நிலைகளால் அல்லது அரசியல் நோக்கத்தால் அந்த நிகழ்ச்சி நடந்து இருக்குமானால் இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் திரு. சுப்பு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் செயல்படும் பஞ்சாலைகளுக்கு பஞ்சு வாங்குவதற்காக தமிழ்நாடு அரசு தொகை ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை; அதுபற்றிய செயற்குறிப்பும் இல்லை. ஆனால் 12 கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் நடத்தும் இரண்டு தனியார் நூற்பாலைகளுக்கும் போதுமான பஞ்சுகளை நியாயவிலையில் வாங்க, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின்கீழ் ஒரு குழு 1-8-1977 முதல் செயல்பட்டு வருகிறது. இந்தக் குழுவில் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகச் செயல் இயக்குநர், கோயம்புத்தூரில் உள்ள மூன்று கூட்டுறவு நூற்பாலை நிர்வாக இயக்குநர்கள், ஃபாக்டரி மானேஜர் ஒருவர் இருக்கிறார்கள். இந்தக் குழு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் மற்றும் மகாராஷ்டிரம், குஜராத் கூட்டுறவு விற்பனை ஸ்தாபனங்களுக்கும் முதலிடம் கொடுத்து பஞ்சு வாங்குகிறது. இந்தக்குழு ஆரம்பித்தது முதல், 31-8-1979 வரை வாங்கிய பஞ்சு விவரம் வருமாறு :— பஞ்சு பேல்களில்.

1977 ஆம் ஆண்டு 28,436. 1978 ஆம் ஆண்டு 89,266. 1979 ஆம் ஆண்டு, 31-8-1979 வரையில 48,238.

ஆக 1977 ஆம் ஆண்டு 660.46 இலட்சமும், அடுத்து 1,963 இலட்சமும், அடுத்து 1,007 இலட்சமும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் ''கூட்டுறவுத் துறை நிர்வாகம் என்பது பெரிய மோசடி. இதில் தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் நிர்வாக இயக்குநராக பணி புரிய அரசு ஒத்துக் கொண்டிருக்கிறது. சேஷசாயி பேப்பர் நிறுவனம் அதுமாதிரி ஒன்று. அரசு இயக்குநர் இதில் இருக்கிறார் இந்த நிறுவனம் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய நலன்களுக்கு குந்தகம் விளைவித்து வருகிறது. தொழிலாளர்களின் பிரச்னைகளுக்கு வேறு சுமூகமான முடிவு காண வேண்டும் என்று ''கூறியிருக்கிறார். அதோடு ''ஸ்பிக் நிறுவனம் 60 கோடி முதலீட்டில் ஏற்படுத்தப்பட்ட நிறுவனம். இதில் பெரும் பங்கு மாநில அரசைச் சேர்ந்தது. ஸ்பிக் நிர்வாக இயக்குநர் தனியார்





துறையைச் சேர்ந்தவர். அதோடு அல்லாமல் அவர் பதவிக் காலம் 10 ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது '' என்று கூறியிருக்கிறார்.

இது கூட்டுறவுத் துறை நிறுவனம் அல்ல. இது ஒரு தனியார் நிறுவனம். இதில் டி.ஐ.ஐ.சி. ஆரம்பத்தில் 1 கோடி ரூபாய் பங்கு மூலதனமாகப் போட்டுள்ளது. அந்த நிறுவனத்திற்கு போனஸ் பங்குத் தொகையாக ரூபாய் 50 லட்சம் என்று கணக்கில் வந்தது. ஆக டி.ஐ.ஐ.சி.யின் மொத்த முதலீடு 1.50 கோடி ஆகும். இதில் இயக்குநர்களாக டி.ஐ.ஐ.சி-யின் சார்பில் திரு. பிரபாகர் அவர்கள் இருக்கிறார்கள். அரசின் சார்பில் தொழில் துறை செயலர் திரு. கீதா கிருஷ்ணன் அவர்களும், வனம் மற்றும் மீனளத் துறைச் செயலாளர் திரு. திருமால் அவர்களும் இயக்குநர்களாக இருக்கிறார்கள். தொழிலாளர்களின் பிரச்னைகளுக்குத் தொழிலாளர்கள் நலச் சட்டப்படி உயர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இன்னொன்று, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், "டிட்கோ"வின் உதவியுடன் இரசாயன உரங்களுற்பத்திக்காக தொழில் முனைவர் திரு. எம்.ஏ. சிதம்பரம் அவர்களின் ஒத்துழைப்பில் ஸ்பிக் நிறுவனம் நிறுவப்பட்டது. இதன் மொத்த முதலீடு 150 கோடி ரூபாய் ஆகும். இதில் டிட்கோ 440 லட்சம் பங்குமூலதனமாகவும், தொழில் முனைவர் திரு. எம்.ஏ. சிதம்பரம் அவர்களின் பங்கு மூலதனம் 309 லட்சம் ரூபாய். மீதம் உள்ளவை ஏனைய நிதி நிறுவனங்கள், வங்கிகள், பொது மக்களிடம் இருந்தும் வசூல் செய்யப்பட்டவை. ஸ்பிக் நிறுவனத்தின் தலைவர் திரு, எம். ஏ. சிதம்பரம் அவர்கள், அரசின் பங்கு மூலதனம் அதிகமாக இருப்பதினால் அரசின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான திரு. வெங்கிடரமணன், ஐ.ஏ.எஸ். அவர்களைத் தலைமை நிர்வாகியாக நியமித்து 1977 முதல் மூன்றாண்டுகளாக அரசின் சார்பில் அவர் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல் ஸ்பிக் இயக்குநர் தனியார் துறையைச் சேர்ந்தவர் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் கூட்டுறவுத் துறையே பெரிய மோசடி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசுத் தரப்பில்—டிட்கோ, 26 சதவீதம் பங்கு மூலதனம் இருந்தால், தொழில் முனைவரின் தரப்பிலும 25 சதவீதம் பங்கு மூலதனம் போடுகிறார்கள். அவர்களுக்குச் சம அளவில் இயக்குநர்களும் இருக்கிறார்கள். நிர்வாக இயக்குநர் தனியார் தரப்பிலும் நியமிக்கப்படலாம். நிர்வாகக் கண்காணிப்புத் தலைவர் டிட்கோவிலிருந்து, அரசின் தரப்பிலிருந்து நியமிக்கப்படுகிறார். கூட்டுறவுத்துறை நிறுவனங்களின் நிர்வாகத்தில் டிட்கோ இப்படி படிப்படியாக ஈடுபட்டு, தற்போது ஃபிராபிட் வழங்குவதில், நிர்வாகத்தில் பதவிகளை ஏற்படுத்துவதில், நியமனங்கள் செய்வதில், இயக்குநர்களை நியமிப்பதில் டிட்கோவின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஈடுபட்டு, இக் கூட்டுறவு நிறுவனங்கள் நல்ல முறையில் நடக்க உதவி செய்கிறார்கள்.

மேலும் டிட்கோவின் தலைவரும், நிர்வாக இயக்குநரும், மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களும் அடிக்கடி கூடி நிர்வாக சம்பந்தமாகப் பேசி முடிவுஎடுக்கிறார்கள், அடிக்கடி இந்நிறுவனங்களுக்குச் சென்று பார்வையிடுகிறார்கள். இந்நிறுவனங்கள் செயல்படுவது பற்றி அரசுக்கு மூன்றுமாதத்திற்குள் அறிக்கை அனுப்புகிறார்கள், இவ்வாறு இந்நிறுவனங்கள் குறைபாடுகள் இல்லாமல், அப்படி ஏதாவது தடை இருந்தால் அவைகளைக் கவனமாகத் தடுக்கவும், தவறுகள் இல்லாமல் நடத்தவும் டிட்கோ ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.50]

திரு. என். சங்கரய்யா : சேஷசாயி பேப்பர் நிறுவனத்தில் அரசாங்கத்தின் சார்பில் சில டயரக்டர்கள் அந்த டயரக்டர்கள் குழுவில் இருக்கிறார்கள். ஆகவே அது தனிப்பட்டவர்கள் கம்பெனியாக ஆக்கப்பட்டாலும் அதன் கொள்கையைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் பங்கு மிகவும் அதிகமாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினேன். ஸ்பிக்கை பொறுத்தவரையில் முதலில் ஒப்பந்தம்போடப்பட்டபோது அதில் மானேஜிங் டயரக்டராக திரு. எம். ஏ. சிதம்பரத்திற்குத்தான் அதிகாரம் அளிக்கப்பட்டது. இங்கே நிதிச் செயலாளராக இருந்தவர் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் அறிவேன். அதைத்தான் முதல்வர் அவர்களும் குறிப்பிட்டார்கள். நான் இப்போது கேட்க விரும்புவது என்னவென்றால், இந்த ஸ்பிக் நிறுவனத்தில் தனியார் துறையினுடைய பங்குஎன்ன, நிர்வாகத்தில் அவர்களுடைய பங்கு என்ன? அந்த நிறுவனத்தை நடத்திச்செல்வதில் அவர்களுக்கு இருக்கக்கூடிய சக்தி என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இப்போதுதான் புள்ளி விவரங்களை யெல்லாம் குறிப்பிட்டேன். மீண்டும் அந்தப் புள்ளிவிவரங்களைத் திரும்பச் சொல்ல வேண்டும் என்று விரும்ப மாட்டார்கள் என்று கருதுகிறேன். என்ன இருந்தாலும் இந்த அரசு மக்கள் வரிப் பணத்தைப் பொறுத்து தனியார்களிடம் அதை ஒப்படைத்து மக்களுடைய நன்மைகளைப் புறக்கணிக்கும் என்ற சந்தேகத்திற்கு நீங்கள் ஆளாக வேண்டாம் என்பதை மட்டும் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். தவறுகள் அப்படி நடக்குமானால் அதற்கு மாற்று கண்டு பிடிக்க இந்த அரசு நிச்சயமாகத் தயங்காது.

திரு. என். சங்கரய்யா : திரு. எம். ஏ. சிதம்பரம் அவர்களுக்கு அந்த நிர்வாகத்தில் இப்போது என்ன பங்கு இருக்கிறது அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அவர்கள் அந்த நிறுவனத்தின் தலைவராக இருக்கிறாரே தவிர அவர் எவ்வளவு பணம் போட்டிருக்கிறார் என்ற குறிப்பு இப்போது





என்னிடம் இல்லை. என்றாலும் டிட்கோ போன்ற நிறுவனங்களில் பொது மக்களுடைய பணம் நிறைய இருக்கிறது என்பதை மட்டும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல முடியும். நண்பர் திரு. சுப்பு அவர்கள் ஒரு பிரச்னையை இங்கே கிளப்பிச் சொல்லியிருக்கிறார்கள். விசுவநாதன் அவர்கள் சேஷசாயி பேப்பர் நிறுவனத்துடன் சம்பந்தப்பட்டவர். அங்கே அவர் தொழிலாளர்களுக்கு எதிர்ப்பாளர் என்று நிரூபித்துள்ளார்கள், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலைத் தலைவராக அவரை நியமித்தது தவறு என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். இதிலே நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். அதை விளக்கமாகச் சொல்வதை விட குறிப்பு இருக்கிறது, அதை விரைவாகச் சொல்லி முடிப்பது நல்லது என்று கருதி இதைப் படிக்கிறேன். கரும்புச் சக்கையிலிருந்து செய்தித்தாள் காகிதம் தயாரிக்கும் திட்டத்திற்கான திட்டம் பற்றிய அறிக்கையை சேஷசாயி நிறுவனத்தார் தான் முதலில் தயாரித்து அரசுக்கு அளித்தனர். இந்த நிறுவனத்திற்கு காகித உற்பத்தியில் நல்ல அனுபவம் உள்ளதோடு கரும்புச் சக்கையிலிருந்து எழுதும் தாள் உற்பத்தி செய்வதற்கான தொழில் முறையும் நன்கு தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். விசுவநாதன் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகிதஆலை நிறுவனத்தின் தலைவராகவும், தொழிலாளர்கள் மற்றும் வேலை வாய்ப்புத்துறை செயலாளர் திரு ஸி. இராமச்சந்திரன் அவர்கள் பகுதிநேரச்செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே அரசாங்கத்தினுடைய கண்காணிப்பு இருக்கிறது அதில். இப்போது அந்தச் செயலாளர் அமெரிக்காவிற்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் போய் அங்கு பார்த்து எந்தெந்த கம்பெனிகள் சரியாக இயந்திரங்களைத் தர முடியும் என்பதைச் சீர்தூக்கிப் பார்த்து அந்தக் கம்பெனிகள் நல்லமுறையில் தங்களுடைய கடமைகளைச் செய்வார்களா அது பயன் உள்ளதா என்பதைத் தெரிந்து கொண்டு வந்து இங்கு அமைச்சர்களுக்கும் அமைச்சர் அவைக்கும் தெரிவித்து அதை அதிகாரிகளுக்கும் தெரிவித்து அதை யோசித்து பரிசீலித்து அதற்குப் பிறகுதான் இந்த அரசு ஒரு முடிவிற்கு வருமே தவிர விசுவநாதன் அவர்கள் அங்கிருந்து இதைத்தான் செய்ய வேண்டும், இந்தக் கம்பெனிக்குக் கொடுக்கலாம் என்று சொன்னால் அதை அப்படியே ஏற்றுக்கொள்ள இந்த அரசு தயாராயில்லை என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. க சுப்பு : தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட காவேரி என்ஜினியரிங் வொர்க்ஸ் சம்பந்தமாக தொழிலாளர்களை அழைத்துப் பேசுவதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனால், பேசியாவது பார்ப்பார். ஆனால் இந்த சேஷசாயி கம்பெனியை பொறுத்த வரையில் அங்கு பிரச்னைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. அரசாங்கம் அதில் தலையிட்டு தீர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். அந்த சேஷசாயி கம்பெனி தனியார் ஆலையாக இருந்தாலும்

அரசாங்கத்திலிருந்து ஒன்றரை கோடி ரூபாய் போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். மொத்தமே ரூபாய் ஐந்து கோடி இருபத்தைந்து லட்சம் தான். அது தவிர யூகாலிப்டஸ், மூங்கில், கருவேல மரங்கள் இவற்றை குறைந்த விலையில் வெட்டிக் கொள்ளச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்றரை கோடி ரூபாய் போட்டிருக்கும்போது பாதுகாப்பு வேண்டாமா? கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த விசுவநாதன் ஒரு பெரிய டெக்னோக்ராட் அல்ல, அவர் ஒரு வக்கீல்தான். அவரை மானேஜிங் டயரக்டராகப் போட்டிருக்கிறார்கள், நிறைய ரூபாய் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். 120 கோடி ரூபாய் போட்டு ஒரு ஆலை தொடங்கும்போது அதே விசுவநாதனை--தனியார் ஆலை அல்ல, பொது ஆலை--அவர் ஆன்டி லேபர் பாலிஸி வைத்துக்கொண்டிருக்கிறார். காண்ட்ராக்ட் லேபரை ஒழிக்க முடியவில்லை. தொழிலாளர்களுக்கு விரோதமாக அவர் செயல்படுகிறார். 650 பேர்கள் ஜெயிலில் இருக்கிறார்கள். 70 நாட்கள் ஆகின்றன போராட்டம் தொடங்கி. இங்கே ஏதாவது டெக்னிக்கல் டிபிகல்டீஸைக் காட்டி அவர்களை மேலும் சிரமத்திற்கு உள்ளாக்குகிறார்கள். உங்களுக்கு செல்வாக்கு இல்லாமலா இருக்கிறது? அந்தப் பிரச்னை பற்றிப் பேசும்போது இதயக்கனியில் சொன்னதாக தொழிலாளர்கள் சொன்னார்கள். தொழிலாளர் நல அமைச்சரும் இருந்தார்கள். அமெரிக்காவில் நீங்கள் ஒன்றாக இருந்திருக்கிறீர்கள். இவ்வளவு நெருக்கமாக இருக்கக்கூடிய விசுவநாதனோடு சொல்லி இந்த தொழிற்சாலையை திறந்து வைத்து தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வதற்கு வழி வகுக்கக் கூடாதா? முடியாதா? மனம் இல்லையா? என்பது தான் என்னுடைய கேள்வி.

திரு. என். சங்கரைய்யா : துணைத் தலைவர் அவர்களே, சேஷசாயி சம்பந்தமான மற்றும் பல பிரச்னைகள் வருவதால்-ஏற்கனவே இதில் 71 நாட்களாகிவிட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தொழிற்சங்கத் தலைவர்கள் சந்தித்து, இதில் தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். சமீபத்தில் கூட இதுபற்றி பேசப்பட்டிருக்கிறது. ஆகவே இதன் தொடர்பாக வரும்போது, இந்தப் பிரச்னையில் தலையிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் சார்பில் சுமுகமான ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்பற்றி தங்களுடைய தெளிவை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, முதலில் மாண்புமிகு சுப்பு அவர்களுடைய கருத்துக்கு நான் பதில் சொல்லியாக வேண்டும். அவருக்கே உரித்தான பாணியில் எப்போதும் பேசுகின்ற வழியில் இப்போதும் பேசினார்கள். இதயக்கனி என்றார், என்னுடனேயே





இருக்கின்றவர் என்றார், நெருங்கிய நண்பர் என்றார், இதையெல்லாம் சொல்லிவிட்டுத்தான் இவைகளை சொல்லவேண்டும் என்று விரும்பினால் எனக்கு ஆட்சேபணையில்லை. இன்னும் அதிகமாக சொல்லட்டும், அதற்காக நான் வருத்தப்படப் போவதில்லை. ஆனால் அமெரிக்காவில் என் கூடவே இருந்தார் என்பது தவறு மெக்ஸிக்கோவுக்கு என்னை அழைத்துச் செல்வதற்காக அங்கே வந்தார். மெக்ஸிக்கோவில் தயாரிக்கப்பட இருக்கின்ற அந்த இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்ற விதம், காகித ஆலை சரிவர இயங்குகிறதா என்பதை நானே நேரில் பார்த்துவிட்டுத் தான் அப்புறம் சொல்ல முடியும் என்கின்ற நிலைமை, அதற்காக நான் அழைக்கப் பட்டேன், அவர் ஏற்கனவே தெரிந்திருக்கின்ற காரணத்தால் அவர்கள் சார்பாக அழைக்கப்பட்டேன். சென்றேன், பார்த்தேன். பார்த்த பிறகு, சொன்னேன், காகிதத்தை உற்பத்தி செய்து நமக்கு தந்து அது பயன்படும் என்று தெரிந்து கொண்ட பிறகு தான் ஒப்பந்தம் செய்ய முடியுமே தவிர அதற்கு முன்னால் ஒப்பந்தம் செய்ய முடியாது என்று சொல்லி வந்துவிட்டேன், என்பதை இங்கே குறிப்பிடுவதிலிருந்து நட்பு வேறு, அரசினுடைய பொறுப்பு வேறு என்பதை மாண்புமிகு சுப்பு அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

நட்பாக இருக்கின்றவர்கள் நண்பர்களாக இருப்பதில் தவறு இல்லை. ஆனால் தவறு செய்கின்றவர்களுக்கு உடந்தையாக இருக்கும்போது தான் குற்றச்சாட்டுகள் வரும். அதில் அப்படிப்பட்ட தவறான காரியங்களுக்கு உடந்தையாக இருக்கவில்லை, இருக்கப்போவதும் இல்லை என்பதை நண்பர் சுப்பு அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

700-க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப்பற்றி நான் 12(3) செட்டில்மென்ட் என்று ஒரு வரி எவ்வளவோ தொல்லைகளை உருவாக்குகிறது என்பதை நேற்றைய முன்தினம் நான் குறிப்பிட்டு காட்டினேன். அப்படி ஒரு சங்கம் ஒப்பந்தம் செய்து பட்டியலில் காண்பித்து இருப்பதாக, மெஜாரிட்டி சங்கங்கள், பெரும்பான்மையான சங்கங்கள் கையெழுத்திட்டிருப்பதாக அங்கே அடையாளம் இருந்து, ஆதாரம் இருந்து, அதைப்பற்றி எதுவும் செய்ய முடியாது என்று விவரம் தெரிந்த தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டு விட்டு பிறகு அந்த ஒப்பந்தம் சரியான சூழ்நிலையில் கையெழுத்து இடப்பட்டதா என்கின்ற கேள்விக்கு கடைசியில் வந்து நின்று அதைப்பற்றி நான் அன்றைக்கே அட்வகேட் ஜெனரலுக்கு எழுதிக் கேட்கிறேன் என்று சொல்லி, அவருக்கு எழுதி, இந்த செக்ஷன்களின் கீழ் கையெழுதது இட்ட பிறகு நடவடிக்கை எடுக்க வேறு வழியில்லை என்று எனக்கு அறிக்கை தந்திருக்கிறார்கள் என்பதை நண்பர்களுக்கு தனியாக சந்திக்கும்போது சொல்லியிருக்கிறேன். இந்த நிலையில் இந்த அரசு இப்போது எதுவும் செய்வதற்கு வழியில்லை. இந்த ஒப்பந்தத்தை எப்படி மாற்றுவது? இந்த

ஒப்பந்தம் நடைபெறாமல் செய்வதற்கு என்ன பாதுகாப்பை தேடுவது என்பதைப்பற்றி நேற்று முன்தினம் கருத்தை வெளியிட்டேன். அது வழக்குமன்றத்திற்கு வழக்கு போயிருக்கிறது. வழக்குமன்றத்தில் இருக்கும்போது, நான் யாரை கூப்பிட்டு எப்படி பேச முடியும் என்பதை சட்டம் தெரிந்த சுப்பு அவர்கள் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

ஆகவே சட்டத்திற்கு புறம்பாக நடக்காத முறையில் இன்றைய சூழ்நிலையில் — நண்பர்கள் மாண்புமிகு சங்கரய்யா அவர்கள், உமாநாத் அவர்கள், கூத்தகுடி சண்முகம் அவர்கள் போன்றவர்கள் எல்லாம், அவர்களுடைய தலைவர்களாக இருக்கின்ற ராமமூர்த்தி, பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் எல்லாம் என்னை சந்தித்துப் பேசிய பிறகு இதற்காக அந்த அதிபரை அழைத்து இதைப் பற்றி பேசுவதற்கு சட்டபூர்வமாக இடமில்லாவிட்டாலும், மனிதாபிமானத்தோடு ஏதாவது செய்தாக வேண்டும், நியாயப்படி நடந்து கொள்ள வேண்டும், என்று சொல்லுகிற அளவுக்கு நான் முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்பது தெரியும். அதையே நான் சொல்லிக் கொள்கிறேன். நான் அந்த முயற்சியை விட்டுவிடவில்லை என்பதையும் இங்கே சொல்லி அதற்காக முயற்சிக்கின்றேன் என்பதையும் கூறி, ஆனால் சட்டத்தை மீண்டும் நீங்கள் இதில் ஒரு மாற்றுவழி கண்டு பிடித்தாலொழிய இந்தச் சிக்கல்களை யாரும் பயன் படுத்திக் கொள்ள முடிகிறது என்பதை கவனத்தில் வைத்து ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, இந்த 12 (3) செட்டில்மெண்டிலே, ரெப்ரசென்டேடிவ் காரக்டரைப் பார்க்காமல், எண்ணிக்கையைப் பார்க்கிறார்கள். அப்படி எண்ணிக்கையைப் பார்க்கும் போது அங்கே 18 சங்கங்கள் இருக்கின்றன. இங்கேகூட 9 கட்சிகள் இருக்கின்றன. அண்ணா தி. மு. க., தி.மு.க., காங்கிரஸ் கட்சிகளை விட்டுவிட்டு, மற்ற கட்சிகளை மெஜாரிட்டி என்று சொல்லிவிட முடியுமா? அவர்களிடத்திலே ஆட்சியை ஒப்படைத்து விட முடியுமா? எனவே, ரெப்ரசென்டேடிவ் காரக்டரைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது 18சங்கங்கள் இருந்தாலும், அதிகமான தொழிலாளர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். அவ்வளவுதான். இந்த சட்டத்தை மீற வேண்டும் என்று சொல்லவில்லை; அதிகாரிகள் இச்சட்டத்தை நியாயமாகப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருப்பது போல், முதலமைச்சர் அவர்கள் இதிலே முயற்சி எடுத்துக்



கொள்வார்களானால், இந்தப் பிரச்னையிலே நல்ல தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த முயற்சியை அவர்கள் சீக்கிரத்திலே எடுத்து, வெற்றிகரமாக முடிப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, சுப்பு அவர்கள் கூறியதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை; ஆனால் மறைமுகமாக நாங்கள் சின்ன கட்சி என்று ஏளனமாகச் சொல்வதுபோல் இருக்கிறது. அவர்கள் கட்சிகூட தனியாக ஆட்சி நடத்த முடியாது என்பதை நான் அவருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, நான் பாலிடிக்ஸுக்குள் போகவில்லை. ரெப்ரசென்டேடிவ் காரக்டரைப் பற்றிச் சொன்னேனே தவிர, 18 சங்கங்கள் இருப்பதைப் பற்றிச் சொன்னேனே தவிர, வேறு அல்ல. அதிலே தொழிலாளர்கள் மீது சட்ட விரோதமாக போடப்பட்டது என்பதைத்தான் சொன்னேன். இதிலே சங்கங்களின் எண்ணிக்கையைப் பார்க்கக் கூடாது; தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பார்க்க வேண்டுமென்றுதான் சொன்னேன். உங்கள் கட்சிகளும் அண்ணா தி.மு.கவோடு, முதலமைச்சர் அவர்களோடு சேர்ந்திருக்க வேண்டும், ஆட்சி நடத்த வேண்டும் என்று சொன்னால் அதிலே ஆட்சேபணை இல்லை. எனவே, உதாசீனப்படுத்துவதற்காகச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுப்பு அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்......

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள்; அதனால் மெஜாரிட்டி இல்லை என்று சொல்லி விட முடியுமா? காரணம், எந்தச் சூழ்நிலையில் அந்த ஒப்பந்தம் நடந்தது? அதிலே கையெழுத்திடாதவர்களின் தனிப்பட்ட கோரிக்கைகள் என்ன? சில பேர்கள் வேலை நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார்கள். சிலர் சில பிரச்னைகளுக்காக சிறையிலே போடப்பட்டிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில் சில சங்கங்கள் அதிலே கையெழுத்து போடவில்லை. ஊதிய உயர்வு என்று சொல்லப்பட்டு, அதனால் கையெழுத்து போடவில்லை. எனவே, கையெழுத்து போட்டவர்கள் எல்லாம் மைனாரிட்டி என்றோ, போடாதவர்கள் எல்லாம் மெஜாரிட்டி என்றோ சுப்பு அவர்கள் சொல்லிவிட முடியாது என்பதை நான் ஏ. ஐ. டி. யு. சி. சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, கையெழுத்தும் போட்டிருக்கிறார்கள்; போராட்டத்திலும் கலந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, யாருக்கு மெஜாரிட்டி இருக்கின்றது என்பதை வெரிபை செய்து முதல்அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். அப்போது அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பாளையம் தொழிற்சாலை சம்பந்தமாக நடைபெற்றிருக்கின்ற நிகழ்ச்சியிலே சில விளக்கங்களை நான் முதல் அமைச்சர் அவர்களிடம் எதிர்பார்க்கிறேன். இந்த பேப்பர் தொழிற்சாலையிலே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கூறியதுபோல். பெரும்பான்மையான சங்கங்கள் என்பதைவிட பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்ட சங்கம் என்ற அடிப்படையிலேதான் நாம் எடுத்துப் பார்க்க வேண்டும். அந்த வகையிலே அம்பிகாபதி அவர்கள் குறிப்பிட்டார்கள், ஏ.ஐ.டி.யு.சி. அதை ஒப்புக்கொள்ளவில்லை என்று. ஏ.ஐ.டி.யு.சி.யில் அதிக உறுப்பினர்கள் இல்லை; இருக்கின்ற ஒருசிலர் கையெழுத்துப் போட்டார்கள். அப்படி போட்டதே தவறு என்று அவர்கள்மீது ஏ.ஐ.டி.யு.சி. நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அதை பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள் என்பது நண்பர் அம்பிகாபதிக்கு ஒருவேளை தெரியாமல் இருக்கலாம். ஆனால், உண்மையிலேயே 12(3) செட்டில்மெண்ட் போடும்போது, பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்ட சங்கங்களை அங்கீகரிப்பதாகப் போடப்படுவதில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, முதல் அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலித்து, சட்டம் சட்டம் என்று சொல்லிக்கொண்டு, சட்டத்தை கையில் வைத்துக்கொண்டு, இம்மாதிரியான கொடுமைகள் செய்கின்ற இந்த தொழில் அதிபர்களை அழைத்துப் பேசி, அவர்களை எச்சரித்து, தொழிலாளர்களுக்கு விரோதமாக நடந்து கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, 76 நாட்களாக நடைபெற்ற இந்த போராட்டத்திற்கு ஒரு நல்ல முடிவு எடுக்கவேண்டும் என்று நான் தாழ்மையுடன், மிக்க பணிவன்போடு அல்ல, அப்படி ஏற்படுத்தாவிட்டால் நாட்டிலே விபரீதமான விளைவுகள் ஏற்படும் என்ற எச்சரிக்கையோடு நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்ற தலைப்பில் இங்கு பல பேர் பேசியிருக்கிறார்கள். சட்டத்தை மதிக்காதவர்கள், ஒழுங்குக்குக் கட்டுப்படாதவர்கள், சட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்ப்பவர்கள் இந்த நாட்டினுடைய ஜனநாயக முறைப்படி வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுக்கு மதிப்புத் தராமல் அதை அலட்சியப்படுத்துவதன் மூலம் நாட்டிலே ஒரு அராஜக உணர்ச்சியை ஏற்படுத்திவிடுவதற்குக்கூட காரணமாக அமைந்து விடுகிறார்கள் என்பதை குறிப்பிடும்போது யாரும் தவறாகக் கருதமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.



ஒப்பந்தம் என்று வரும்போது ஏதாவது ஒரு ஷரத்தை, விதியைக் குறிப்பிட்டு எழுதிய பிறகு அந்த விதியைக் குறிப்பிட்டு எழுதியது தவறாக இருக்கிறது, அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று சொன்னால் பிறகு அந்த விதி வேண்டாம், இருக்கவேண்டாமென்பதற்கு முதலில் நடவடிக்கையில் ஈடுபட்டு அதை ஒழித்துவிட்டு பிறகு அதற்குக் கீழ்ப்படியமாட்டோம், தேவையில்லை என்று சொன்னால் நியாயமாக இருக்கும்.

ஆனால் வெவ்வேறு பிரச்சினைகளில் 12 (3) என்ற விதிக்கு முக்கியத்துவம் கொடுத்து இதுவரை பிரச்சினைகளைச் சந்தித்துத் தொழிலாளர்கள் போராடினாலும் அதற்கு மதிப்பு கொடுக்க வேண்டிய முறைகளை வழக்கத்தில் வைத்துக் கொண்டு அதுவும் வழக்கு மன்றத்திற்கு போன பிரச்சினையைப் பற்றி எடுத்துக் கொள்ள முடியாத நிலை இருந்தும் கூட, வழக்கு மன்ற தீர்ப்பு வரும் வரையில் சட்டம் என்று பார்க்காமல் இதற்கு ஏதாவது வழி காணவேண்டும், அழைத்துப் பேசி முடிவு காணவேண்டும், அச்சுறுத்தியாவது நிறைவேற்ற வேண்டுமென்று பல ஆண்டுகள் முதலமைச்சராக இருந்த எனது நண்பர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்வது எனக்குத் திகைப்பையே உண்டாக்குகிறது.

அதோடு இன்னொன்றும் சொன்னார்-பணிவோடு அல்ல; அன்போடு அல்ல; எச்சரிக்கை செய்கிறேன் என்றார். எச்சரிப்பது நல்லது, தேவைதான். எச்சரிப்பதற்கு நண்பர்கள் தேவை. தவறான வகையில், அதுவும் ஆட்சியில் இருப்பவர்கள் செயல்படும்போது, இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படும் என்று எச்சரிப்பவர்களை நண்பர்களாகத்தான் சொல்வேனே தவிர, எதிரிகளாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் எச்சரிப்பது என்பது அதற்குரிய முக்கியத்துவத்தையே அடியோடு இழக்க வேண்டி வந்துவிடுகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதிலே எச்சரிக்கை தேவையில்லை. உணராதவர்களுக்கு, நல்ல காரியங்கள் செய்கிற எண்ணமே இல்லாதவர்களுக்குச் சொல்ல வேண்டிய வார்த்தைதான் எச்சரிக்கையே தவிர—நாங்கள் அதற்காக முயற்சிக்கிறோம். அந்த அதிபரை அழைத்துப் பேசுகிறோம் என்று சொன்ன பிறகும் 'அப்படிச் செய்யாவிட்டால், எச்சரிக்கிறேன், பின் விளைவுகள் ஏற்படும்' என்று சொல்வது உண்மையில் எங்கள் நல்லெண்ணத்திற்கு உதவி செய்வதாக இல்லையென்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனாலும் இன்னமும் சொல்லுகிறேன்— இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு சுப்பு அவர்கள் ஒரு மாபெரும் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக இத்தனை சங்கங்களில், பெரும்பான்மையானசங்கங்கள் கையெழுத்திட்டிருக்கின்றன என்பதைப் பார்ப்பதைவிட, அந்தச்

சங்கங்களில் எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்து மதித்தாக வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படித்தான் இருக்க வேண்டும். எல்லாச் சங்கங்களும் சேர்ந்து நேற்று முன்தினம் சொன்னதுபோல் ஒன்றுபட்ட ஒரு முடிவை எடுக்கும்போது அந்த முடிவு பெரும்பான்மையால் எடுக்கப்பட்ட முடிவு, அதைஏற்றுக்கொள்ளாத சிறுபான்மையை வைத்து மீண்டும் அந்த ஒப்பந்தத்தை அல்லது அவர்கள் கருத்தை மதிக்காமல் இருக்கிறார்கள் என்றால் நிலைமை வேறு.

இப்போது 12(3) செட்டில்மெண்டில் யாராவது கையெழுத்து போட்டுவிட்டால் உடனடியாக ஏற்றுத் தீரவேண்டிய கட்டாயம் இருப்பது போன்று, நிர்ப்பந்தம் இருப்பது போன்ற நிலைமை இருக்கிறது. 12(3) விதியை மாற்றினாலன்றி அரசுக்கும் சரி, வேறு யாருக்கும் சரி, சட்டத்தை மீறவேண்டிய நிலைமைதான் வருமே தவிர, நியாயப்படி அதைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு கிடைப்பதில்லை என்பதை எல்லோரும் அறிவார்கள். இதற்கு என்ன வழி என்று முன்தினம் சொல்லியிருக்கிறார்கள். விரைவில் ஒரு முடிவு ஏற்படுத்த ஒத்துழைத்து, ஒரு வழி கண்டு பிடிப்போம். அதற்கிடையில் நேற்று முன்தினம் சொன்னது போல் 11 மாதங்களாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் சரி, 7 மாதங்களாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் சரி, 55 நாட்களாகக் கஷ்டபபட்டுக் கொண்டிருந்தாலும் சரி, அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று சொன்னால், அது மனிதாபிமானப் பிரச்சினை, அதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்பதிலே நான் மனிதாபிமானத்தோடு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றால் அதற்குக் காரணம் உண்டு.

நீங்கள் இந்தச் சட்டத்தைத் தூக்கியெறிந்துவிட்டு அந்த விதியைப் பற்றிக் கவலைப்படாமல், ஒப்பந்தங்கள் செய்ததைப் பற்றிக் கவலைப்படாமல் ''நீங்கள் இதிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதிலும் அரசு ஒரு தொழில் அதிபரை அழைத்து அச்சுறுத்த வேண்டும்'' என்று சொல்வது அது நியாயமாக எனக்குத் தெரியவில்லை.

[பிற்பகல் 12-10]

அறிவுரை கூறவேண்டும் என்று சொல்லியிருந்தால் அது பொருத்தமாக இருந்திருக்கும். அச்சுறுத்துவது என்பது இரண்டு வகையில் இருக்கும். சட்டத்திற்கு முரணாக நடக்கிற யாராவது தொழிலதிபர்கள் இருந்தால் நீங்கள் இதை மீறி நடப்பீர்களாயின் உங்கள் தொழிற்சாலையை நாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டி வரும் என்று சொல்வது அச்சுறுத்தலாக இருக்கலாம். இன்னொரு அச்சுறுத்தல் நாங்கள் எதையும் சொல்வோம், நாங்கள் கேட்டாக வேண்டும், இல்லாவிட்டால் இப்படி





உங்களைப் பழிவாங்குவோம் இப்படிச் செய்வோம் என்ற அச்சுறுத்தல் ஆகும். இந்த அரசு இப்படிச் செய்யும் என்று யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

*திரு. மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, கோவை ஆலைத் தொழிலாளர்கள் ஒரு வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருந்தபோது நான் முதல்வர் பொறுப்பிலே இருந்த நேரத்திலே தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் தொழிலதிபர் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசி, தொழிலதிபர்கள் இணங்கி வராத கட்டத்தில் அச்சுறுத்தல் என்று குறிப்பிட்டேனே, அதற்கு ஏற்ப, இதற்கு இணங்கி வராவிட்டால் உங்களுடைய தொழில்கள் அனைத்தும் தேசிய மயமாக்கப்படுவதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கூறியதற்குப் பிறகு அவர்கள் இறங்கிவந்து தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை, கோரிக்கைகளை அவர்கள் அன்றைக்கு ஏற்றுக்கொண்டதை நான் முதல்வர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, 1974 இல் நடைபெற்ற அதே சேஷசாயி பிரச்சினை பற்றி மாண்புமிகு முதல்வர் எழுதியுள்ள ஒன்று, குறிப்பு இருக்கிறது. அதைப் படித்துக் காண்பிக்க விரும்புகிறேன்.

'All the above demands are covered by these settlement under Section 12(3) of the Industrial Disputes Act, 1947. Order dated 1-9-1974.

Clause 14 of the settlement sufficiently provides that the Union will not raise any demand which will involve financial commitments or of a general nature and refrain from making such demands during the currency of the settlement. There is, therefore, no case for adjudication on this issue.' என்று இதிலே எழுதியிருக்கிறார்கள். இதே சேஷசாயி பிரச்சினை சம்பந்தமாக வழங்கிய அவர்களுடைய தீர்ப்பாகும் உங்களுடைய கருத்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது தீர்ப்பு அல்ல. கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மறுபடியும் தொழிலாளர்கள் பிரச்சினை முற்றுகின்ற நேரத்திலே அவர்களை அழைத்துவைத்துப் பேசி முடிவுகள் எடுக்கப்படுகின்றன. எத்தனையோ 12(3) செட்டில்மெண்ட்கள் மீண்டும் மாற்றப் படுகின்றன. முதலமைச்சர் எடுத்துச் சொல்வதுபோல் வழக்கு மன்றங்களிலே சென்ற பிறகு கூட பல விவகாரங்களிலே அரசாங்கம் தலையிட்டு அவைகளை உடனடியாக மீண்டும் பரிசீலனை செய்து, தொழிலாளர்கள் சார்பாக மீண்டும் பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் அந்த மாதிரித்தான் நடப்போம் என்று சொல்லவில்லை, தொழிலாளர்கள்

தொழிற்சங்கங்கள் கேட்டதன்பேரில் திராவிட முன்னேறக் கழக ஆட்சிக்காலத்திலே எத்தனையோ 12(3) செட்டில்மெண்ட்கள் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு மாற்றப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : கடைசியாக எழுதப்பட்டிருக்கிறது.

'The Government do not consider it necessary to refer any of the above demands for adjudcation for the reasons sated therein.' என்று கொடுத்திருக்கிறார்கள். ஆகவே முன்னால் சொன்னதை ஏற்றுக்கொள்ளாதீர்கள். நாங்கள் சொல்வது அப்படித்தான் இருக்கும், அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளாதீர்கள் என்றால்....

*திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, 12(3) செட்டில்மெண்ட் புனிதமானது. அது காப்பாற்றப்பட வேண்டும் என்பது சட்ட அடிப்படையில் கொள்ளக்கூடிய கருத்து. ஆனால் அதே 12(3) செட்டில்மெண்ட் பெரும் பாலோராலே ஒப்புக்கொள்ளப்படாத நிலைமை இருக்கிறது என்று உண்மையாகத் தெரியுமேயானால் இந்த அரசாங்கம் தலையிட்டு எந்த அளவிற்குத் தொழிலாளர் உரிமை காப்பாற்றப் படவேண்டுமோ அதைக் காப்பாற்றுவது அரசாங்கத்தினுடைய கடமை. பள்ளிபாளையத்தில் நடைபெற்ற போராட்டம் 12(3) செட்டில்மெண்ட் பல்வேறு தந்திரங்களை கையாண்டு ஏற்கச் செய்யப்பட்டதாக இங்கே தொழிலாளர்கள் பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள் வருத்தத்தோடும் வேதனையோடும் எடுத்துச் சொன்னார்கள். பல கட்சிகளைச் சார்ந்தவர்கள், திரு உமாநாத் கட்சியைச் சாந்தவர்கள், திரு அம்பிகாபதி கட்சியைச் சார்ந்தவர்கள் அத்தனை பேர்களும் சேர்ந்து அங்கே போராட்டம் நடத்துகிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னையில் நான் தெரிவித்துக்கொள்வது, 12(3) செட்டில்மெண்ட் சட்டப்படி நியாயம் என்று சொல்வதாக இருந்தாலும்கூட, இங்கே போடப் பட்ட 12(3) செட்டில்மெண்ட் தொழிலாளர் போராட்டத்தை ஒடுக்குவதற்காக, உடைப்பதற்காகப் போடப்பட்ட ஒப்பந்தம் என்றுதான் தொழிலாளர்கள் சொல்கிறார்கள். அந்தக் குறையை அவர்கள் சொல்கிறபொழுது, இந்த 12(3) செட்டில் மெண்ட்டைப் புனிதமானது என்று இங்கே காப்பாற்றப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை முதலமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, அதுசம்பந்த மான ஒரு பிரச்னை........

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, கோயம்புத்தூர் டி.சி.எல்., டெப்டி கமிஷனர் ஃபார் லேபர் கன்சிலியேஷன் நடத்தினார்கள். அந்த கன்சிலியேஷனின்





விளைவாக 11 சங்கங்கள் கையெழுத்துப் போட்டிருக்கின்றன. 2,130 தொழிலாளர்கள் உள்ள அந்தத் தொழிற்சாலையில் 1,628 என்று கருதுகிறேன், தொழிலாளர்கள் பிரதிநிதிகள் உள்ள தொழிற்சங்கங்கள் 11 கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதாவது 76 சதவீதம் யூனியன் ரெப்ரசண்டிங் ஆல் தி ஓர்க்கர்ஸ் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். பஞ்சாலைத் தொழிலாளர் களின் சங்கத்தின் தலைவர் பெரியவர் ஏ. சுப்பிரமணியம், எச்.எம்.எஸ்., கையெழுந்திட்டிருக்கிறார், ஏ.ஐ.டி.யூ.சி. கையெழுத்திட்டிருக்கிறார்கள், மற்ற ஒன்பது சங்கங்களும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அங்கே 76% பிரதிநிதித்துவம் உள்ள தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்கள் கையெழுத்திட்டிருக் கிறார்கள். அந்தத்தொழிற்சங்கங்கள் செய்திருக்கும் "வேலிட் செட்டில்மெண்ட்" இது. இன்னும் சொல்லப்போனால், கேரளா ஹைகோர்ட்டு தீர்ப்பைப்பற்றிக் கூடச் சொல்லியிருக் கிறேன். எல்லா ஹைகோர்ட் தீர்ப்புகளும் என்ன சொல்கிறது என்றால், 'If the Labour Officer is satisfied that it is fair and reasonable settlement.' என்றுதான் இருக்கிறது. தொழிலாளர் களுடைய எண்ணிக்கை எவ்வளவு இருக்க வேண்டுமென்று பார்க்க வேண்டுமென்று இல்லை. ஆனால் புரட்சித் தலைவர்களின் எண்ணம் 60 பர்சண்டாவது ஏற்றுக்கொண்டால் ஒழிய ஒப்பந்தம் போடுவது சரியல்ல என்பதுதான். அதை அதிகாரிகளுக்கும் சொல்லியிருப்பதன் காரணமாக, 76 சதவீதமுள்ள சங்கங்களின் பிரதிநிதிகள் கையெழுந்துப் போட்டிருக்கிறார்கள். அதை மாற்றியமைக்க வேண்டுமென்றால் 11 சங்கங்களின் தலைவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் தலைவர் திரு. ஏ. சுப்பிர மணியம் அவர்கள் திரு. மாரிமுத்து அவர்களுக்கு நீண்ட கடிதம் எழுதியிருக்கிறார்கள். நேரடியாகவும் பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த ஒப்பந்தம் மாற்றப்பட்டால், கையெழுத்திட்ட 11 சங்கங்களும், நாங்கள் விஷயம் தெரியாத வர்களா என்று கேட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். மாற்றுவது என்றால் 11 சங்கங்களும் ஒத்துழைக்க வேண்டும், முதலாளிகள் ஒத்துழைக்க வேண்டுமென்பது சட்ட நிலைமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவரவர்களே, சட்ட நிலைமை எப்படியிருந்தாலும், கனம் முதலமைச்சரவர்கள் தானே முன் வந்து, அந்தத் தொழில் அதிபர்களைப் பார்த்து, அந்தப் பிரச்னையில் தீர்வு காண்கிறேன் என்று சொன்ன வாக்குறுதியை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இப்பொழுது கனம் தொழிலாளர் நல அமைச்சரவர்கள் சொன்னதை நாங்கள் பலமாக 'ரெஃப்பூட்' செய்கிறோம்.

1,600 பேர் கொண்ட சங்கம் என்று டி.சி.எல் தீர்ப்புச் சொன்னதாகச் சொன்னார்கள். அப்படியென்றால் ஸ்ட்ரைக் நடக்கிறதே, 1,600 பேர்கள் என்றால் எங்கே போனார்கள்?

வேலைக்குத்தானே போய் இருக்க வேண்டும். ஆனால் ஒரு பகுதியினர் ஜெயிலிலே இருக்கிறார்கள். ஒரு பகுதியினர் ஸ்ட்ரைக்கில் இருக்கிறார்கள். இத்தகைய நிலையில் டி.சி.எல். எடுத்த முடிவு தப்பு. கனம் அமைச்சரவர்கள் ஜஸ்டிஃபை செய்யப் பார்ப்பது சரியல்ல. பெருவாரியான தொழிலாளர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடியவர்கள் அல்ல, கையெழுத்துப் போட்டது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்; எனவே அதை மறுதளிக்கிறேன். ஆன்ால், முதலமைச்சரவர்கள் எப்படிப் பிரச்னை இருந்தாலும் செட்டில் செய்ய நிச்சயமாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்வதை வரவேற்கிறேன், அவர்கள் எடுப்பார்கள் என்று நம்புகிறேன், எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கைது செய்யப்பட்டவர்களை விரைவில் விடுதலை செய்ய வேண்டுமென்ற முறையிலே அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு மே மாதம் இதே சேஷசாயி பேப்பர் போர்டில் தொழிலாளர்கள் இடைக்கால நிவாரணம் வேண்டுமென்று போராடியபொழுது, இதற்கு முன்னால் முதலமைச்சரவர்கள் படித்தார்களே, அந்தக் கடிதம், 5-11-74 இல் கனம் முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் காலத்தில் வந்தது 12 (3) செட்டில்மெண்ட் இருக்கின்ற காரணத்தால் ஒன்றும் செய்ய முடியாது என்று. இப்பொழுதாவது சில தொழிலாளர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் 1,007 பேரோ, 1,006 பேரோ உள்ளே இருக்கிறார்கள். 55 நாட்கள் தானும், மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்களும் நடத்தினோம். 55 நாட்கள் ஒரு தொழிலாளர் கூட உள்ளே போகாமல் நாங்கள் போராடினோம். ஆனால் அதற்கு என்ன பதில் வந்தது கலைஞர் காலத்தில்,

"All the demands are covered by 12 (3) settlement. Therefore, there is no justification for reference'

என்று வந்தது. ஒன்றும் செய்ய இயலாதென் அமைச்சர் நேரில் கூறியவுடன் நாங்கள் என்ன செய்தோம் என்றால், சட்டமும் இப்படிச் சொல்கிறது, இங்கே 55 நாட்கள்போராட்டம் நடத்தியிருக்கிறோம், இனிமேல் தொடர்ந்து போராடுவது சட்டத்திற்குப் புறம்பானது மட்டும் அல்ல, இது நியாயமானது ஆகாது என்று தெரிகிறது. அரசு ஒப்பந்தத்திற்குள் நுழைய முடியாது என்று சொல்லிவிட்டது. இந்த சூழ்நிலையில் உள்ளே போவது நல்லது என்று நானும் திரு. ரமணி அவர்களும், திரு. கோவிந்தராசன் அவர்களும் முடிவெடுத்து உள்ளே போகச் சொன்னோம், அந்தத் தைரியம் எங்களுக்கு இருந்தது.

(பிற்பகல் 12·20)

திரு, க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரவர்கள் அதை வாசித்துக் காட்டினார்கள். அது எல்லா செட்டில்மென்டிலும் போடக்கூடியது. எல்லா செட்டில்



மென்டிலும் போடக் கூடிய கிளாஸ் அது. எல்லாம் கவர் ஆகிப் போய்விட்டது அதில்; ஆனால், அவர் மிஸ்லீட் செய்கிறார், பரவாயில்லை.

THE HON. THIRU S. RAMACHANDRAN : This is a G.O. passed by the Government in the year 1974.

திரு. க. சுப்பு : During the currency of the settlement no fresh demand will be raised relatingk to economic problem. அதைத்தான் அவர் வாசித்துக் காட்டினார். அது எல்லாவற்றிலும் போடுவது என்று சொன்னேன், அவ்வளவுதான். 'கரன்ஸி ஆஃப் தி செட்டில்மென்ட்' இருக்கும்போது, இனிமேல் புதிதாக, ஃப்ரெஷ் டிமான்டஸ் வைக்கக் கூடாது என்பது எல்லா செட்டில்மென்டிலும் போடக் கூடிய கிளாஸ். அதை விடுங்கள், எப்படியிருந்தாலும் சரி. நம்முடைய தொழிலாளர் நல்த்துறை அமைச்சரவர்கள் 54 நாள் போராட்டம் நடத்தி அவருடைய காலத்திலே வெற்றி அடையமுடியாத போது இனிமேல் மற்றவர்கள் தலைமையில் வெற்றி அடைய விடுவது அவருக்கு அழகல்ல; ஆகவே அவர் அந்த முயற்சியிலே ஈடுபடுகிறார். நான் அதைப்பற்றி தவறாகச் சொல்லவில்லை.

இன்னொன்று, முதலமைச்சர் சொன்ன வாக்குறுதியை வைத்து, வாக்குறுதியாக நாங்கள் எடுத்துக்கொள்கிறோம். நீங்கள் அப்படி கொடுக்கவில்லையென்றாலும் நம்முடைய தோழர் உமாநாத் அவர்கள் சொன்னார்கள், இதிலே முதலமைச்சர் தலையிட்டு, அங்கே தீர்த்து வைக்கிறேன் சுமுகமாக என்று சொல்கிறார்கள். அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏற்கனவே, நம்முடைய முதலமைச்சர் அவர்களை, நம்முடைய ரமணி அவர்களும், நல்லசிவம் அவர்களும் தனியாக சந்தித்துப் பேசி. ஏதோ ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகக் கூட நான் கேள்விப்பட்டேன். அப்படிப்பட்ட முடிவிற்கு வருவது நல்லதுதான், தவறாகச் சொல்லமாட்டோம். அப்படி ஒரு பிரச்னையை நீங்கள் முடித்து வைப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், நான் கேட்கவிரும்புவது, நீங்கள் தலையிட்டு பிரச்னையைத் தீர்த்து வைக்கும் வரை அந்தத் தொழிலாளர்கள் 700 பேர் சிறையிலே தான் இருக்க வேண்டுமா ? போராட்டம் தொடர்ந்து நடக்க வேண்டுமா ? நீங்கள் அவர்களையெல்லாம் விடுதலை செய்து போராட்டத்தை வாபஸ் வாங்கி எல்லோரும் வேலைக்கு போங்கள், நான் பார்த்துக் கொள்கிறேன் என்ற உறுதிமொழியையாவது கொடுக்க முடியாதா ? அப்படி நீங்கள் கொடுத்தால்கூட பரவாயில்லையென்ற அடிப்படையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த 12 (3) செட்டில்மென்ட் சம்பந்தமாக ஒரு சிறு விளக்கம்......

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, வந்திருக்கிற பிரச்னையைப்பற்றி, யாரும் 12 (3) ஒப்பந்தத்தைப் பற்றி என்ன கருத்து சொல்கிறார்கள் என்று விவாதிப்பதற்கு பதிலாக, ஏற்கனவே முன்னால் முதல்வர் சொன்னார், ஆகவே நாங்களும் சொல்கிறோம் என்ற நிலையிலிருந்து முதலமைச்சருடைய கடைசி வாக்குறுதி மாறுபட்டிருக்கிற பொழுது எல்லா பெருவாரியான தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கும்பொழுது அதைப் பரிசீலனை செய்ய வேண்டுவது அவசியம் என்று வந்து பிறகு இதிலே வேறு விதமான வாதங்களுக்குச் சென்று கொண்டிருப்பது வேண்டாம். அந்த வாக்குறுதிப்படி உடனே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். யார் முன்னால் பேசினார் என்பதிலே 'எக்ஸ்யோசிங் கேம்பெய்ன்' வேண்டாமென்று மாத்திரம் சொல்லி, பிரச்னையை உடனே இப்பொழுது முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 12 (3) செட்டில்மென்ட் பற்றி இங்கே சொன்னார்கள். இதே அரசு 12 (3) செட்டில்மென்ட் காரணமாகத்தான் சிம்கோ மீட்டர்ஸ் விவகாரத்திலே நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால், அதே 12 (3) செட்டில்மென்ட் மறுபரிசீலனை செய்யப்பட்டு, அந்த சிம்கோ மீட்டர்ஸ் ஊழியர்களுடைய பிரச்னை தீர்க்கப்பட்டது. இந்த அரசே, எந்த அரசு 12 (3) செட்டில்மென்ட் போட்டாகிவிட்டது என்று சொல்லிக்கொண்டிருந்ததோ, அதே அரசு, அந்த 12 (3) செட்டில்மென்ட் விவகாரத்தை மறு பரிசீலனை செய்திருக்கும்போது, இதை ஏன் செய்யக் கூடாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஐ.என்.டி.யு.சிக்கும் அந்தத் தொழில் அதிபருக்கும் ஏற்பட்ட 16-4-1978 அல்லது 17-4-78 அன்று என்று நினைக்கிறேன். அந்த ஒப்பந்தத்தில்

Permanent strength of the workers will be reviewed from time to time.

எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அவர்கள் இருவரும் உட்கார்ந்து பர்மனென்ட் ஸ்ட்ரெங்த் பற்றிப் பேசலாம் என்று ஒரு கிளாஸ் அதிலே இருக்கிறது. அதை வைத்துத்தான் அவர்கள் இருவருமே பேசி ஒப்பந்தம் செய்தார்கள். ஒப்பந்தம் செய்தவர்கள், அதே முதலாளியும், அதே ஐ.என்.டி.யு.சி. தொழிற் சங்கமும் செய்திருக்கிறார்கள்; அதை ஆதரித்து, அந்த ஒப்பந்தத்தை உடைக்கக் கூடாது என்று ஐ.என்.டி.யு.சியைச் சேர்ந்தவர்கள், திரு. மாரிமுத்து போன்றவர்கள், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கேயும், மேலவையில் திரு. ராமமூர்த்தி அவர்களும் பேசியிருக்கிறார்கள். அதைப் பாராட்டியிருக்கிறோம்.



அது நியாயமான நிலை. நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு. கலைஞர் எடுத்தது தவறான நிலை என்று சொல்லவில்லை, சரியான நிலைதான் எடுத்தார். அப்பொழுது போராட்டம் நடத்தினார்கள், வெற்றிபெற முடியவில்லை.

திரு. மு. கருணாநிதி : தொழிலாளர் நல அமைச்சர் சில நேரங்களில் முதலமைச்சரை திசை திருப்பி விடுகிறார்கள் என்பதற்கு இப்பொழுதும் உதாரணம் இருக்கிறது, அப்பொழுதும் உதாரணம் இருந்திருக்கிறது, அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 12 (3) செட்டில்மென்ட் எப்படியிருந்தாலும் நான் மனிதாபிமான அடிப்படையில் அழைத்துப் பேசுகிறேன் என்று முதல்வர் அவர்கள் சொன்னதற்குப் பின்னாலே, தொடர்ந்து அதே சப்ஜக்டிலே விவாதம் தேவையில்லை என்று நான் உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டு, மற்றவைகளைப் பேச அழைக்கிறேன்.

திரு. க. சுப்பு : விவாதம் அல்ல. விடுதலை செய்துவிட்டு வேலைக்குப் போங்கள் என்று......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரே சப்ஜக்டிலே தான் பேசுகிறீர்கள். திருப்பி, திருப்பிப் பேசுவதென்றால், பூராவும் அதையேதான் சொல்கிறீர்கள். யார் பேசினாலும், அந்தக் கருத்தைத் தான் சொல்கிறார்கள்.

திரு. க. சுப்பு : வேண்டிய பதில் கிடைக்கவில்லை, அதனால் சொல்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : அதற்குப் பதில் சொல்வதற்கு முன்னாலே, மாண்புமிகு சுப்பு அவர்கள் சொன்னார்கள், ஏதோ நல்லசிவம் அவர்களும், ரமணி அவர்களும் முதலமைச்சரைத் தனியாகச் சந்தித்து, ஏதோ முடிவு செய்து விட்டதாக சொன்னார்கள். ரமணி அவர்கள் சி.ஐ.டி.யு.வினுடைய தலைவர், நல்லசிவம் அவர்கள் சி.ஐ.டி.யு.வினுடைய செயலாளர். அந்த முறையிலே இந்த மாநிலத்திலே உள்ள தொழிலாளர்களுடைய பிரச்னைகளைப் பற்றி, முதலமைச்சரிடத்திலே பேசுவது அவர்களுடைய கடமை என்ற முறையிலே பேசியிருக்கிறார்கள். அதைப் பரிசீலிப்பதாக முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவ்வளவுதான் நடந்தது; அதிலே ஏதோ ஒரு உள்நோக்கம் இருப்பதாக மாண்புமிகு சுப்பு அவர்கள் கூறுவது, அவருடைய அரசியலுக்கு அது பயன்படலாமே தவிர, யதார்த்தத்திற்கு புறம்பானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 நவம்பர் 5

திரு. க. சுப்பு : துணைத் தலைவரவர்களே, நான் உள் நோக்கத்தோடு சொல்லவில்லை. அங்கே சேஷசாயி போராட்டத் திலே கூட்டு கமிட்டியைப் போட்டு, போராட்டம் நடத்தி பேசிக் கொண்டிருக்கிறோம். எங்களை விட்டுவிட்டு இவர்கள் மாத்திரம் தனியாகப் போய் முதலமைச்சரைச் சந்தித்து அவர்கள் மாத்திரம் போராட்டத்திலே முடிவு எடுத்தார்கள் என்ற உண்மையை மாத்திரம் சுட்டிக்காட்டினேன். அது அவர்களுடைய பண்பாட் டைக் குறிக்கிறது என்று குறிப்பிட்டேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, அது மாகாண சங்கம். இதற்கு முன்னாலே நீங்கள் எத்தனையோ தரம் முதலமைச்சரை சந்தித்து எத்தனையோ பிரச்சனைகள் பற்றி கூட்டுப் போராட்டம் நடக்கிறபோது பேசியிருக்கிறீர்கள். ஆகவே, இதைப்பற்றி இன்றைக்கு நீங்கள் பேசுவதிலேதான் அரசியல் நோக்கம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. க. சுப்பு : எந்தப் பிரச்சனையிலே கூட்டுப் போராட் டக் குழுவுக்குத் தெரியாமல் நான் முதலமைச்சரிடத்திலே பேசியிருக்கிறேன் என்று சொல்லுங்கள். இப்பொழுது சொல்லச் சொல்லுங்கள், கூட்டுப் போராட்டக் கமிட்டிக்குத் தெரியாமல் எந்தப் பிரச்னையை முதலமைச்சரிடத்திலே பேசி இருக்கிறோம். ஆனால் அப்படி உங்களைச் சொல்லமுடியும் ஆயிரம். ஆனால் வேண்டாம், பெரிய மனுஷன்.

திரு. என். சங்கரய்யா : சொல்லுங்கள். சொல்லமுடியாது உங்களால், அரசியலுக்காக வேண்டுமானால் சொல்லலாமே தவிர சி.ஐ.டி.யூ.வைப் பொறுத்த வரை, மார்க்ஸிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் எந்த நிலையையிலும் உழைப்பாளர் நலன்களைப் பாதுகாப்போம் என்பதைத்தான் மீண்டும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, தொழிலாளர் பிரச்சனைகளில் தொழிலாளர்களுக்காகப் போராடுகின்றவர் களுக்கு இடையிலே பிளவு ஏற்பட்டுவிட வேண்டாமென்று நான் மிகுந்த பணிவன்போடு சுப்பு அவர்களையும் சங்கரய்யா அவர்களையும் மற்ற கட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர் பிரச்சனைகளில் ஒன்றாக இருந்து போராட வேண்டிய காலகட்டத்தில் அவர்களுக்குள்ளே பிளவு ஏற்படுவது நல்லதல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, வேறு ஏதோ ஒரு நிறுவனத்தைப் பற்றிப் பேசி அதில் 12 (3) செட்டில்மென்டை மாற்றி அமைத்துக் கொண்டோம் என்று இங்கே சொல்கிறார்கள். 12 (3



1979 நவம்பர் 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

செட்டில் மென்டைப் போட்டவர்கள் முன் வந்து இதை நாங்கள் மாற்றிக் கொள்கிறோம் என்று சொன்னால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அவர்கள் ஒத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் ஒத்துக் கொள்ள வில்லை என்பது தான் பிரச்சனை. அவர்கள் ஒத்துக் கொண்டால் எங்களுக்கு என்ன அதிலே வேதனை. முன்பு நடந்ததும் அப்படித்தான். இதை நாம் புரிந்து கொண்டோம் என்றால் இதில் யாரும் யாருக்காகவும் வேண்டுமென்றோ வேண்டாம் என்ற கருத் தோடோ பேசவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நாம் எல்லோரும் புரிந்து கொள்ள முடியும்.

இப்பொழுதும் கூட நான் பணிவோடு சொல்லிகொள்வது இதை அரசியல் ஆக்காமல் தொழிலாளர் பிரச்சனை என்கிற நிலைமையோடு அதை வைத்துக் கொண்டு தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்கிற ஒரே நோக்கத்தோடு நாம் அனைவரும் உட்கார்ந்து அதிபரையும் அழைத்துப் பேசி ஏதாவது ஒரு முடிவுக்கு வர முடியுமானால் அதை விட நமக்கு மகிழ்ச்சி தரக்கூடியது வேறு எதுவும் இருக்க முடியாது.

நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நண்பர் நல்லசிவம் அவர்களும், ரமணி அவர்களும் என்னை வந்து சந்தித்தார்கள் என்றால் எத்தனையோ பிரச்சனைகளைப் பற்றி அவர்கள் பேசி இருக்கிறார்கள். இதைப்பற்றி அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதெல்லாம் குழுவினது கோரிக்கையை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது மட்டும் அல்லாமல் குழுவின ரையும் அழைத்துப் பேசி ஆகவேண்டும். அதிபரையும் உடன் அழைத்துப் பேசியாக வேண்டும் என்று தான் அவர்கள் வற்புறுத்தி இருக்கிறார்களே தவிர, குழுவிற்கு அப்புறம் தன்னந்தனியாக தன்னைத் தனிமைப்படுத்திவைத்துக் கொண்டு அவர்கள் தங்களுக்கு ஏதோ லாபம் என்கிற வகையிலோ தாங்கள் என்னி டம் பேசி ஒரு நன்மையை மற்றவர்களுக்கு செய்து கொடுக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்று விட்டார்கள் என்கிற புகழைப் பெறவோ அவர்கள் முயலவில்லை என்பதை இங்கே இந்த மன்றத்திற்குச் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, நண்பர் சுப்பு அப்படிக் கருத வேண்டிய அவசியமும் இல்லை. அப்படிப்பட்ட நிலைமை நடைபெறவும் இல்லை. அவர்களுக்கு நான் அப்படிப் பட்ட வாக்குறுதி தரவும் இல்லை. முயற்சிக்கிறேன் என்று சொல்லி இருக்கிறேன்;

12 (3) செட்டில்மென்ட் போட்டார்கள். போட்டவர்கள் அதை விலக்கிக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பது என்னுடைய நிலைமை. அதை அவர்கள் ஏற்றுக் கொண்டால் பிரச்சனை சுலபமாகி விடும். அதற்கு நாம் அனைவரும் சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்து, கைது செய்து
விட்டு விடுவது, கைது செய்து விட்டு விடுவது என்று
இருக்கிறது. ஒரு 20, 30 நாட்கள் என்று வைத்துக்
கொள்ளுங்கள், பிறகு மீண்டும் போராட்டம் நடத்துவது
கைது செய்வது, விட்டு விடுவது இப்படியே நடந்து
கொண்டிருந்த பிறகு, மீண்டும் சில—நான் இங்கே வேண்டு
மென்றுதான் மறைக்கிறேன், சொல்லாமல் இருக்கிறேன்—அசம்
பாவிதம் என்ற பெயரிலே வைத்துக் கொண்டாலும் சரி,
ஏதாவது விபரீதங்கள் ஆபத்துக்கள் என்றாலும் சரி—அவைகள்
எல்லாம் நடக்கின்ற ஒரு நிலைமை உருவாகி அதற்குப் பிறகும்
வன்முறையிலே ஈடுபட்டு விடுவார்கள் என்கின்ற சூழ்நிலையும்
உருவாகி சில சேதங்கள் உருவாகும் என்றால் அவர்களை கைது
செய்வதைத் தவிர ஒரு அரசுக்கு வேறு வழி இருக்காது.

எடுத்த உடனே கைது செய்து இந்த அரசு சிறைச்சாலையில்
வைத்து விடாது, என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். கைது
செய்து விட்டுவிடப்பட்டவர்கள் பலர். எத்தனை முறை கைது
செய்யப்பட்டவர்கள் எல்லாம் விடுதலை செய்யப்பட்டிருக்
கிறார்கள். ஆனால், வேறு வழி இன்றி இறுதியிலேதான் கைது
செய்யக்கூடிய நிலைமை உருவாகி இருக்கிறது. ஆகவே,
தொடக்க காலத்திலிருந்து கைது செய்து சிறையிலே வைத்திருக்
கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிற அளவுக்கு ஒரு கருத்தை
வெளிப்படுத்தாமல், ஒரு வார காலமாக அல்லது 5, 6 நாட்க
ளாக இந்த நிலைமைக்கு வரவேண்டிய அவசியம் வந்திருக்கிறது
என்பதை நீங்கள் மனதில் கொண்டு அந்த நிலைமையை மாற்று
வதற்கு நாம் உழைக்க வேண்டுமென்று அனைவரையும் நான்
பணிவோடு வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30.]

'அடுத்தபடியாக, இங்கே ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்
துறையைப் பற்றி பேசியிருக்கிறார்கள். எத்தனை ஆண்டுகள்
தேர்தல் நடைபெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி,
இருந்தவர்களையும் பதவியில் இருந்து நீக்கி வீட்டிற்கு அனுப்பி
விட்டார்கள் என்பதையும் சொல்லி, மக்களுக்கும் அரசுக்கும்
இடையிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பு
இருந்ததை இல்லாததாக்கி, அதன் விளைவாக தொடர்புகளே
இல்லாது செய்து, ஜனநாயகம் இல்லாமல் செய்து விட்டார்கள்
என்ற குறைபாடுகளை பல்வேறு கோணத்தில் இருந்து பல்வேறு
உறுப்பினர்கள் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அந்தக்
குறைபாடுகள் பல்வேறு வகைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

இதிலே ஒரு குற்றச்சாட்டிலே சொன்னது, 12,300 ஊராட்சி
மன்றங்கள் இருக்கிறபோது ஏதோ ஒன்றிரண்டு ஊராட்சி
மன்றங்களில் உள்ளவர்கள் தவறுதலாக நடந்து விட்டார்கள்
என்பதற்காக அத்தனையையும் கலைப்பது எப்படி நியாயம் என்று
மாண்புமிகு சுப்பு அவர்கள் குறிப்பிட்டுக் கேட்டார்கள். மற்ற





நண்பர்களும் இங்கே அதைப் பற்றிப் பேசி இருக்கிறார்கள்.
நான் ஒரு விளக்கத்தைத் தரவேண்டியது பொறுப்பு என்று
எண்ணுகிறேன். நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்கள் என்று
நம்புகிறேன்.

ஊராட்சி மன்றத் தேர்தல்கள் கடைசியாக 1970-ம் ஆண்டில்
தான் நடைபெற்றது. இப்போது 1979-ம் ஆண்டு நடக்கிறது.
அதற்கு முன் 1965-ம் ஆண்டில் ஊராட்சி மன்றத் தேர்தல்
நடைபெற்றது. 1975-ல் நடைபெறவேண்டிய ஊராட்சி மன்றத்
தேர்தல்கள் வறட்சி, பற்றாக்குறை, இயற்கையின் சீற்றம்
மற்றும் இதர நிர்வாக காரணங்களுக்காக நடத்த முடியாமல்
தள்ளி வைக்கப்பட்டு வந்தது. ஊராட்சிகளின் தலைவர்கள்
மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆண்டுக்கு ஆண்டு
நீட்டிக்கப்பட்டு வந்தது.

ஊராட்சி ஒன்றியங்கள் குடியரசுத் தலைவர் ஆட்சி
காலத்தில் கலைக்கப்பட்டன. 1976 முதல் 1979 வரையில்
ஊராட்சிகளின் சீர்கேடான நிர்வாகத்தைப் பற்றி பல நூற்றுக்
கணக்கான முறையீடுகள் பொது மக்களிடமிருந்து வந்துள்ளன.
1979 ஜூலை வரையில் 42 ஊராட்சிகள் கலைக்கப்பட்டன.
1977-க்கு முன் 35 கலைக்கப்பட்டன. 1977 முதல் 1979
வரையில் 7 கலைக்கப்பட்டன. எனினும், பெரும்பான்மையான
ஊராட்சிகளில் ஜாதி வேற்றுமைகள் காரணமாக மனக் கசப்பும்,
நிர்வாக சீர்குலைவும் மலிந்தவிட்டதாக பொதுமக்கள் குறை
கூறி வந்தனர். நாடாளுமன்றத் தேர்தல் இடையே குறுக்கிட்ட
தன் காரணமாக ஊராட்சித் தேர்தல்கள் நடத்துவது ஒத்தி
வைக்க வேண்டியதாயிற்று. ஊராட்சித் தேர்தல் நடைபெறும்
வரையில் ஊராட்சிகளின் நிர்வாகத்தை மேற்கொண்டு நடத்த
தனி அலுவலர்கள் நியமிப்பது என்று கருதி அரசு முடிவு
எடுத்தது. ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள்
பதவிக்காலத்தை முடித்துவிட அரசு முடிவு செய்து, அரசு
அவசர சட்டம் பிறப்பித்தது. இன்னும் பல காரணங்கள்
உண்டு. அவற்றை பின்னால் நான் சொல்கிறேன்.

1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னை மாநகராட்சி
உறுப்பினர்கள் தேர்தல் கடைசியாக நடைபெற்றது. அவர்களின்
பதவிக்காலம் 30-11-73 அன்று முடிவு அடைந்தது. சென்னையை
150 இடங்களாக பிரிக்கும் பணியை முடித்து. சென்னை
மாநகராட்சித் தேர்தல் நடத்த 1-12-73 முதல் ஒரு தனி
அதிகாரி நியமிக்கப்பட்டார். அவரது பதவிக்காலம் அவ்வப்
போது நீட்டிக்கப்பட்டு தற்போது 31-5-1980 வரையில் நீட்டிக்
கப்பட்டுள்ளது. இந்த நீட்டிக்கப்படத் தொடங்கிய நாள்
1-12-73-ம் நாள் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் மனதில்
பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 5

சென்னைக்கு அருகிலுள்ள 12 ஊராட்சிகளை சென்னை மாநகராட்சியுடன் இணைத்து, அதை 150 வட்டங்களாகப் பிரித்து, 21-5-1979 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டது. 1-1-1979 அன்று 21 வயது அடைந்தவர்களுடைய பெயர்களைக் கொண்டு புதிய வாக்காளர் பட்டியல் வட சென்னை நாடாளு மன்ற இடைத் தேர்தலுக்காக தயாரிக்கப்பட்டது. இதையே வடசென்னை நாடாளுமன்ற தொகுதி அடங்கிய புதிய மாநக ராட்சி மன்ற இடங்களின் அடிப்படை வாக்காளர் பட்டியலாக வும், மற்ற 108 வட்டங்களுக்கு நடைபெற இருக்கும் நாடாளு மன்றத் தேர்தலுக்காகத் தயாரிக்கப்பட்டுவரும் வாக்காளர் பட்டியலை அடிப்படை வாக்காளர் பட்டியலாகவும் ஏற்றுக் கொண்டு, நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் சென்னை மாநகராட்சி மன்ற வாக்காளர் பட்டியல் தனியாகத் தயாரிக்கப் பட்டு, புதிய பட்டியல் தயாரிக்கப்பட்டவுடன் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் தேதி முடிவு செய்யப்படும்.

*<u>திரு: சென்னை மு. அரங்கநாதன்</u> : துணைத் தலைவரவர் களே, சென்னை மாநகராட்சியைப் பற்றி முதல்வர் அவர்கள் குறிப்பிடும் போது 150 வட்டங்களாகப் பிரிக்கின்ற பிரச்சி னையைச் சொன்னார்கள். 1972-73-ம் ஆண்டிலேயே, இப்போது வருவதாகச் சொல்லப்படுகிற 12,13 பஞ்சாயத்து களை இணைப்பதற்கு முன்னாலேயே, 150 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, எல்லா வேலைகளும் முடிவடைந்துவிட்டன என்ற விவரம் இந்த அவைக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது ஏற்கெனவே இருக்கிற சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இன்றைக்கும் குடிதண்ணீர் வசதி சரியாகச் செய்யப்படாமல் இருக்கிறது; சாக்கடை வசதி முழுமைப் பெறாமல் இருக்கிறது. சென்னைமாநகரில் இருக்கிற வட்டங்களிலே இன்னும் வேலைகள் எல்லாம் முழுமையாக நடைபெறாமல் இருக்கும் போது, செங்கற் பட்டு மாவட்டத்திலே இருக்கிற 13 பஞ்சாயத்து களைக் கொண்டுவந்து இதிலே இணைப்பது என்ன நியாயம் என்று அப்போதே நான் சுட்டிக் காட்டினேன். அதைப் போலவே....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : சுருக்கமாகச் சொல்லுங்கள்; நேரத்தை வீணாக்காதீர்கள்.

<u>திரு. சென்னை மு. அரங்கநாதன்</u> : முதல்வர் அவர்களுக்கு அதையெல்லாம் சொன்னால்தான் புரிந்துகொள்ள வசதியாக இருக்கும் என்பதால் சொல்கிறேனே தவிர நேரத்தை வீணாக்கு வதற்காக சொல்லவில்லை. நீங்கள் இப்படி இடையிலே குறுக்கிடுவதனால்தான் நேரம் வீணாகிறதே தவிர என்னால் நேரம் வீணாகவில்லை; சொல்வதைத் தடுக்காதீர்கள்.



1979 நவம்பர் 5]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : விவரமாகச் சொல்லவேண்டும் என்பதற்காக நீங்கள் நினைத்ததை எல்லாம் பேசிக் கொண்டிருக்க முடியாது. சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

<u>திரு. சென்னை மு. அரங்கநாதன்</u> : நினைத்ததை எல்லாம் பேசுவதற்கு இங்கே வரவில்லை. விவரத்திற்காகத்தான் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். நீங்கள் குறுக்கிடாமல் இருந்தால் இதற்குள்ளாகவே நான் முடித்திருப்பேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : அதை அளவோடு சொல்ல வேண்டும்.

<u>திரு. சென்னை. மு. அரங்கநாதன்</u> : நான் பேசும்போது நீங்கள் இடையே குறுக்கிட்டதால் நேரம் வீணாகிறது. குறுக்கிடாமல் இருந்தால் இதற்குள் முடித்திருப்பேன்.

150 வட்டங்களோடு இந்த 13 பஞ்சாயத்துகளைக் கொண்டு வந்து இணைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே இருக்கின்ற பகுதிகளுக்கே வேலைகள் சரியாக முடிவடையாமல் இருக்கும் போது, மேலும் புதிதாக வருகின்ற பகுதிகளுக்கு எப்படி வசதி செய்து கொடுக்கப் போகிறீர்கள்? அது மட்டும் அல்லாமல் அவர்களுக்கு வரிச்சுமை கூடுகிறது. இதற்கு முன்னால் இதே மன்றத்தில் நான்கு முறை தேர்தல் கண்டிப்பாக வரும், தேர்தல் கண்டிப்பாக வரும் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் சொன்னார். வாக்காளர் பட்டியல் தயாராகிவிட்டது; அதிகாரிகள் தயாராக இருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படிச் சொல்லியும் இதுநாள் வரையில் முடிவான நிலையை அறிவிக்கவில்லை. அதனால் சென்னை மாநகர் மேலும் சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

<u>திரு. துரை முருகன்</u> : துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கத்திற்காகச் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துகளைக் கலைப்பது பற்றிச் சொன்னார்கள். அதற்கு பல்வேறு காரணங்களில் தலையாயக் காரணம் ஜாதி வெறி தலையிட்டது என்று சொன்னார்கள். பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : இதோடு முடிந்துவிடவில்லை; இன்னும் இருக்கிறது: பின்னால் சொல் கிறேன் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

<u>திரு. துரை முருகன்</u> : இந்தப் பஞ்சாயத்துத் தலைவர் களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலே அவர்களுடைய பணிகளைச் செம்மை

யாக நிறைவேற்றி வந்திருக்கிறார்கள். அதன் பிறகு ஜனாதிபதி ஆட்சியிலும் செம்மையாக பணியாற்றியிருக்கிறார்கள். அதன் பின்னால் ஜனதா ஆட்சிக் காலத்திலும், கிட்டத்தட்ட 3 ஆண்டு காலம் செம்மையாகப் பணியாற்றியிருக்கிறார்கள் : நீங்கள் வந்த பிறகும் அவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். முதலமைச்சர் சொன்னமாதிரி ஒன்றிரண்டு பஞ்சாயத்துகளில் ஜாதி வெறி இருந்திருக்கலாம். இல்லை என்று சொல்ல வில்லை ; அது தவிர்க்க முடியாதது. ஆனால் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டமாதிரி எல்லாப் பஞ்சாயத்துகளையும் அடித்துவிட்டீர்கள். எல்லாப் பஞ்சாயத்துக்கள் தலையிலும் அடித்து, எல்லாவற்றையும் கலைத்து இருக்கிறீர்கள்.

அரசாங்கத்திற்கு கலைக்கும் அதிகாரம் இருக்கிறது. ஆனால் கலைக்கும்போது நீங்கள் ஒன்றை செய்திருக்கலாம். இனிமேலும் உங்களுக்கு பணியாற்றுகின்ற தொல்லை இல்லை ; நீங்கள் இதுவரை செய்த பணிக்கு எங்களுடைய பாராட்டு, நன்றி என்று சொல்லி. அவர்களுக்கு நன்றி தெரிவித்து கலைத்திருந்தால் நியாயமாக இருக்கும். ஆனால் ஒன்றுமே சொல்லாமல் ஓட்டு மொத்தமாக கலைத்தது அவர்களுக்கு நன்றி தெரிவிக்காதது மட்டுமல்ல. இதுதானா நீங்கள் அவர்களுக்குச் செய்யும் கைமாறு ? இது சரிதானா ? இது நியாயம்தானா ? அதுபற்றி தனியாக 'பில்' வரும் ; சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் சொல்வார். இருந்தாலும் முதலமைச்சர் என்ற முறையில் உங்களிடமிருந்து நேரிடையாகப் பதிலை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்—உடன் பிறப்பு—என்று பேசக் கூடாது. இங்கே உறுப்பினர் அவர்கள் வெகு

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வேகமாக நல்ல அழகாக, குற்றம் சுமத்துகிற வகையில், வார்த்தைகளைச் சொன்னார்கள். தயவு செய்யுமா ? நியாயமா

[பிற்பகல் 12.40]

என்று கேட்கும் வார்த்தையில் கனிவு இருந்தது. ஆனால் பிட்டுக்கு மண் சுமந்த கதை போல ஒரு அடி கொடுத்து எல்லோருக்கும் அடி கொடுத்து விட்டீர்களே நியாயம்தானா என்று கேட்கும்போது, அநியாயம் செய்வது நியாயமா ? என்ற கேள்வி தொக்கி நிற்கும் வகையிலே அவர்கள் சொன்னார்கள் என்பதை புரிந்துக் கொண்டேன்.

ஆனால் ஒன்றை இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும் எடுத்ததற்கெல்லாம் உதாரணமா என்கிறீர்களா ? அதுவும் தேவைதான். மதுரை நகராட்சியாக இருந்தபோது கடைசியாக 26—4—69-ல் தேர்தல் நடைபெற்றது. 30-5-69-ல் நகராட்சித் தேர்தல் நடைபெற்றது. 1-5-71-ல் மதுரை மாநகராட்சியாக மாற்றப்பட்டது. மாநகராட்சித் தலைவர் மேயராகி அவருடைய





பதவி காலம் 13-5-74 வரை இருந்தது. பின் 1-11-74 வரை அது நீட்டிக்கப்பட்டது. அதற்குப் பின் அது நீட்டிக்கப்பட வில்லை. மாநகராட்சித் தனி அதிகாரி அன்று முதல் நியமிக்கப்பட்டு மாநகராட்சி அருகில் உள்ள 13 ஊராட்சிகளையும் இணைத்து வார்டுகளை அமைத்த பிறகு தேர்தல் நடத்தும் வரை அவர் பதவிகாலம் ஒவ்வொரு ஆண்டும் நீட்டிக்கப்பட்டு ஜூலை 78-ல் மாநகராட்சித் தேர்தல் நடத்தப்பட்டது. புதிய மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதிலே யாருக்காவது அடி விழுந்து அதனால் எல்லோருக்கும் அடி விழவில்லை. நாங்கள் இந்த 13 பக்கத்தில் இருக்கின்ற ஒன்றியங்களையோ அலலது ஊராட்சிகளையோ சேர்த்து அதை நீட்டித்தோமானால் பிட்டுக்கு மண் சுமந்த கதை நினைவிற்கு வருகிறது.

இன்னொன்றையும் நான் குறிப்பிட வேண்டும். இங்கே நிர்வாக சீர்கேட்டிற்காக 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 154-ன் கீழ் 45 ஊராட்சிகள் கலைக்கப்பட்டன. இதற்கு முன் 1976 ஜனவரி திங்களிலிருந்து 1976 ஜூன் முடிய 761 புகார்கள் வந்திருக்கின்றன. இந்த அரசு பதவிக்கு வந்ததிலிருந்து இதுவரை ஆயிரத்திற்கு மேல் இந்த அரசுக்கு புகார்கள் வந்திருக்கின்றன. இப்படிப்பட்ட புகார்களின் எண்ணிக்கை ஏறிக்கொண்டே போகின்றன. தவிர சுற்றுப் பயணத்தில் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் ஊராட்சித் தலைவர்களைப் பற்றி குறை கூறுகிறார்கள். சில ஊராட்சிகளின் தலைவர்கள் விதிமுறைகளைக் கூட எதையும் அனுசரிக்காமல் ஊராட்சியின் நிதியை விரயம் செய்தார்கள். சம்பந்தப்பட்ட கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் அவர்களுக்குத் தண்டச் சான்றிதழ்கள் பிறப்பித்து ஊராட்சிகளுக்குச் சேர வேண்டிய பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இந்த தண்டச் சான்றிதழ்கள் மீது அரசுக்கு வந்துள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை 64 ஆகும். தவிர அதிகாரத்தை தவறாகப் பயன் படுத்தியதற்காகவும் மற்ற குற்றச்சாட்டுகளுக்காகவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல ஊராட்சி தலைவர்கள் மீது நடவடிக்கை எடுத்து பதவி நீக்கம் செய்துள்ளார்கள். இது மட்டும் அல்ல இது சம்பந்தமாக அரசுக்கு 51 மேல் முறையீடுகளும் வந்துள்ளன.

எனவே மக்களிடம் இருந்து நேரில் கேட்டறிந்த பிறகும், புகார்களை விசாரித்த பிறகும் ஊராட்சிகளின் நிர்வாகத்தில் சீர் கேடுகள் மலிந்துள்ளன என்பது தெளிவாயிற்று. இந்த நிலைமையை நீட்டித்து அனுமதிக்க எந்த ஒரு மக்களாட்சியும் விரும்பாது. எனவே இந்த நிலைமைகளுக்கு பரிகாரம் காண வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் அவைகள் கலைக்கப் பட்டன. அது மட்டும் அல்ல. நான் முன்பே குறிப்பிட்டவாறு பேச வேண்டியவை இன்னும் சில குறிப்புகள் இருக்கின்றன. ஊராட்சிகளின் தெரு விளக்குகள் எரிவதற்காக வேண்டிய மின் சாதனங்கள் வாங்குவது குறித்து அரசு ஆணை எண் 68.

நாள் 20-1-75-ல் மாநில அளவில் ஒரு கணிப்பும் செய்து, அதன் பிரகாரம் ஊரக வளர்ச்சி இயக்குநர், ஊராட்சிகளுக்கு தேவையான பல்புகள் மற்றும் மின் சாதனங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகளைப் பெற்று, பின் விலையை நிர்ணயம் செய்த பின் நிர்ணயப் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிப்பார் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

அந்த நிர்ணயப் பட்டியலை மாவட்ட ஆட்சியாளர்களுக்குத் தெரிவிப்பார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த முறைக்கு அரசாணை எண். 434 ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை 22-3-78 ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கிடையில் அவசரக் காலத்தில் தேவைப்படும் மிக அத்தியாவசியமான மின் சாதனங்களுக்கு அவற்றை சூப்பர் மார்கெட்டிலிருந்து வாங்க அரசாணை எண்.. 632 ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை 30-6-78-ல் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட அரசாங்க ஆணைகளோடு, ஊராட்சி ஒன்றியங்கள் மின் சாதனங்கள் கிடைக்காத சில சமயங்களில் தேவையான சாதனங்களை உடனடியாக கூட்டுறவு அங்காடிகளிலிருந்தும், குடிமைப் பொருள் விநியோகக் கழகக் கடைகளில் இருந்தும் வாங்கிக் கொள்வதற்கு வகை செய்ய அரசாணை எண். 604. ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை 14-6-79 வெளியிடப்பட்டுள்ளது. இது தவிர மின் விளக்குகளை செவ்வனே பராமரிக்க ஊக்குவிக்கும் வகையில் சட்டமன்ற மின்சக்தி ஆலோசனைக் குழு பரிந்துரைத்தபடி பழுதுபட்ட மின் விளக்குகளை சரிசெய்யும் மின்வாரிய ஊழியர்களுக்கு குமிழ் விளக்காக இருந்தால் 50 பைசாவும், குழல் விளக்காக இருந்தால் ஒரு ரூபாயும் அளிக்க வகை செய்யும் பொருட்டு அரசாணை பொதுப் பணித்துறை அரசாணை எண். 505, 21-3-79 ஆணையிடப்பட்டிருக்கிறது. 1979-ம் ஆண்டு டெண்டர்கள் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் மூலம் மின்சார சாதனங்கள் வாங்கப்படுகின்றன. இங்கே நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன்.

நேற்று முன் தினம் பேசிய நண்பர்கள் சிலர் பேச்சோடு பேச்சாகப் பேசுவது போல் எங்கே நீங்கள் ஆர்டர் கொடுக்கிறீர்கள், யாருக்கு கொடுக்கவேண்டுமென்கிறீர்கள், எங்கு வாங்க வேண்டுமென்கிறீர்களோ அங்கு வாங்கிக்கொள்ளுங்கள், செய்து கொள்ளுங்கள் என்று ஒட்டுமொத்தமாக குற்றச்சாட்டுகளைக் கலந்து பேசிய நண்பர்களுக்கு நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டெண்டர்கள் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் மூலம் மின் சாதனங்கள் வாங்கப்படுகின்றன. செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த குன்றத்தூர் ஒன்றியத்திலுள்ள ஆதனூர் ஹரிஜனக் காலனியில் மாடபாக்கம் ரெட்டிச் சாலை அமைப்பதற்காக ரூ. 15,000 மதிப்பீட்டில் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் ஒரு சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு 80 மூட்டை அரிசி இந்த வேலைக்காக விநியோகம் செய்யப்பட்டது. சாலை ஆய்வாளரும் ஊர் நல





ஊழியரும் அந்த வேலையாட்களுக்கு ஊதியம் தரும் பணிக்கு பொறுப்பாக்கப்பட்டார்கள். ஆதனூர் ஊராட்சித் தலைவர் அந்த 80 மூட்டையில் 60 மூட்டைகள் தான் வேலையாட்களுக்கு விநியோகம் செய்தார்கள். 22-8-79-ம் நாள் இரவு 10 மணிக்கு ஏழு மூட்டை அரிசியை தன் ஆட்கள் மூலம் தாம்பரத்திற்கு அனுப்பிவிட்டார்கள். கிராம மக்கள் புகார் செய்ததன்பேரில் தாம்பரம் போலீஸார் அந்த ஏழு மூட்டை அரிசியையும் 23-8-79-ல் கைப்பற்றி ஆதனூர் ஊராட்சித் தலைவரை அன்றே கைது செய்துள்ளார்கள். அவர் பிறகு ஜாமீனில் விடுதலை செய்யப் பட்டார். மீதமுள்ள 13 மூட்டை அரிசியை பஞ்சாயத்து தலைவரிடமிருந்து ஒன்றிய ஆணையர் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப் பட்ட கோட்ட வளர்ச்சி அலுவலரையும், உதவிக் கோட்ட பொறியாளரையும் நடைபெறும் வேலையைப் பார்வையிட்டு தனக்கு ஒரு விரிவான அறிக்கையை அனுப்புமாறு கேட்டுள்ளார் கள். சம்பந்தப்பட்ட சாலை ஆய்வாளர் மீதும் ஊர் நல அலுவலர் மீதும் மேற்காணப்பட்ட குறைபாடுகளுக்கு தகுந்த ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் குன்றத்தூர் ஒன்றிய ஆணையருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் கள். இதுபோன்ற முறைகேடுகளும் உள்ளன.

நான் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். உணவுக்கு வேலை என்ற திட்டத்தில் நாங்கள் அதிகக் கவனம் செலுத்த விரும்பி அதிலே அக்கறை காட்டுகிறோம். அதற்காக நாங்கள் மைய அரசிடம் போராடி கோதுமைதான் தருவோம் என்று இருந்ததை ஏற்றுக்கொள்ள மறுத்து அரிசிதான் தரவேண்டும் என்று நம்முடைய தேவையை எடுத்துச் சொல்லி அவர்கள் அதற்கு ஒப்புக்கொண்டு அரிசி தரத் தொடங்குவதற்கு உரிய நேரத்தில் அவர்கள் தரத் தொடங்கியவுடனே அந்த வேலைகளை தொடங்கினோம். அந்த வேலைகள் தூர் எடுப்பது, சாலைகள் அமைப்பது, குளங்கள் வெட்டுவது, கால்வாய்களைச் சுத்தப் படுத்துவது சீராக்குவது இதுபோன்ற அந்தந்தக் கிராமங்களுக்குத் தேவையான வேலைகளைச் செய்வதற்கு அவர்கள் பயன்படுத்தப் பட்டார்கள். நாங்கள் எவ்வளவு பேர்களுக்கு இந்த உழைப் பிற்கு உணவு திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு தந்திருக்கிறோம் என்று சொல்ல வேண்டியது எனது நீங்காத கடமை என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 12.50)

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேலைக்கு உணவுத் திட்டத்தைப்பற்றி சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக இந்தத் திட்டத்தின் கீழ் வேலைகள் காண்டிராக்டர் கள் மூலம் தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எந்த கிராமத்திலும் மக்களால் எந்த வேலையும் நடைபெறுவதில்லை.

காண்டிராக்டர் மூலம் வேலை கொடுக்கப்பட்டு அவர்கள் வேலை கொடுத்து, வேலை வாங்கி, அதற்காக, அரசிடமிருந்து அரிசியை வாங்கிக் கொண்டு, அந்த அரிசியை கடையில் கொண்டுபோய் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றி மக்களே நேரடியாக இந்த வேலைகளில் ஈடுபடுகின்ற அளவில் இந்தத் திட்டத்தை அமல் நடத்துவதற்கு வேண்டிய முயற்சி களை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதுவரையில் இப்படிப்பட்ட செய்தி வரவில்லை. இப்போது செய்தி வந்திருக்கிறது. எந்த ஊரில் இந்தவிதமாக நடைபெற்று வருகிறது என்பதை குறிப்பிட்டு தெரிவித்தால், இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்டங்களுடைய பட்டியலைப் படிக்கிறேன்.

மாவட்டங்கள்—

செங்கற்பட்டு—பயன்பெற்றவர்கள்—88096
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்—2088
முடிக்கப்பட்ட வேலைகள்—1243
முடிக்கப்பட்டுள்ள வேலையின் மதிப்பு—28.35 லட்சம் ரூபாய்.
வழங்கப்பட்ட அரிசி, மெட்ரிக் டன்னில்—1719
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ, லட்சத்தில்—27.51 லட்சம்.
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள்—4.17 லட்சம்.

வட ஆற்காடு—

பயன்பெற்றவர்கள்—30,005 பேர்கள்.
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்—1498
முடிக்கப்பட்ட வேலைகள்—238
முடிந்துள்ள வேலைகளின் மதிப்பு—33 லட்சம்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு மெட்ரிக் டன்னில்—1825
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு லட்சத்தில்—29.20
உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள—2.14 லட்சம்.

தென்னார்க்காடு—

பயன்பெற்றவர்கள் 61,198 பேர்கள்
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்—1700
முடிக்கப்பட்ட வேலைகள்—913
முடிந்துள்ள வேலைகளின் மதிப்பு—23,90,000 ரூபாய்
வழங்கப்ட்ட்ட அரிசியின் அளவு மெட்ரிக் டன்னில்—1269
இதன் மதிப்பு—19.3 லட்சம் ரூபாய்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள்—3.68 லட்சம்



சேலம் மாவட்டம்—

பயன்பெற்றவர்கள்—39,309 பேர்கள்
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்—2,558
முடிக்கப்பட்ட வேலைகள்—502
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு—24.16 இலட்சம் ரூபாய்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு—மெட்ரிக் டன்—1321
அதன் மதிப்பு 19.81 லட்சம் ரூபாய்
உழைப்பின் நாட்கள்—3.71 லட்சம்.

தர்மபுரி—

பயன் பெற்றவர்கள் 2,11,455 பேர்கள்
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள் 2,688
முடிக்கப்பட்ட வேலைகள்—1,903
முடிந்துள்ள வேலைகளின் மதிப்பு—21,57,000 ரூபாய்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு—1136 மெட்ரிக் டன்
இதன் மதிப்பு—29.52 லட்சம் ரூபாய்
மனித உழைப்பு நாட்கள்—3.82 லட்சம்.

கோயம்புத்தூர்—

பயன்பெற்றவர்கள்—10,564 பேர்கள்
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்—1,345
முடிக்கப்பட்ட வேலைகள் 105
இந்த வேலைகளின் மதிப்பு—9.52 லட்சம் ரூபாய்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு—299 மெட்ரிக் டன்
இந்த அரிசியின் மதிப்பு—4.49 லட்சம் ரூபாய்
மனித உழைப்பு நாட்கள் 1.50—லட்சம்.

நீலகிரி மாவட்டம்—

பயன்பெற்றவர்கள்—1,791 பேர்கள்
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்—674
முடிக்கப்பட்ட வேலைகள்—116
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு—1.35 இலட்சம்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு—143 மெட்ரிக் டன்
இதன் மதிப்பு—ரூ. 2.27 இலட்சம்.
உழைப்பின் நாட்கள்—0.13 இலட்சம்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 5

திருச்சிராப்பள்ளி —

பயன்பெற்றவர்கள்— 3,01,675 பேர்கள்
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்— 5,711
முடிக்கப்பட்ட வேலைகள்— 4,112
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு— 69.74 இலட்சம்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு— 4,318 மெட்ரிக் டன்
இதன் மதிப்பு— ரூ. 69.8 இலட்சம்
மனித உழைப்பின் நாட்கள்— 12.36 இலட்சம்.

மதுரை —

பயன்பெற்றவர்கள்— 71,416 பேர்கள்
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்— 4,272
முடிக்கப்பட்ட வேலைகள்— 1,721
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு— 70 இலட்சம்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு— 3,900 மெட்ரிக் டன்
இதன் மதிப்பு— ரூ. 59.50 இலட்சம்
மனித உழைப்பின் நாட்கள்— 8.73 இலட்சம்.

புதுக்கோட்டை —

பயன்பெற்றவர்கள்— 65,713 பேர்கள்
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்— 989
முடிக்கப்பட்ட வேலைகள்— 384
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு— 12.68 இலட்சம்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு— 800 மெட்ரிக் டன்
மனித உழைப்பின் நாட்கள்— 2.14 இலட்சம்

இராமநாதபுரம் —

பயன்பெற்றவர்கள்— 1,44,748 பேர்கள்
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்— 3,587
முடிக்கப்பட்ட வேலைகள்— 1,043
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு— 48.15 இலட்சம்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு— 3,210 மெட்ரிக் டன்
இதன் மதிப்பு— ரூ. 48.15 இலட்சம்
மனித உழைப்பின் நாட்கள்— 8.45 இலட்சம்.



1979 நவம்பர் 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

பெரியார் மாவட்டம் —

பயன்பெற்றவர்கள்— 7,349
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்— 625
முடிக்கப்பட்ட வேலைகள்— 307
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு— 6.44 இலட்சம்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு— 160 மெட்ரிக் டன்
இதன் மதிப்பு— ரூ. 2.40 இலட்சம்
மனித உழைப்பின் நாட்கள்— 38,000

தஞ்சாவூர் —

பயன்பெற்றவர்கள்— 2,88,000 பேர்கள்
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்— 5,343
முடிக்கப்பட்ட வேலைகள்— 4,210
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு— 88.28 இலட்சம்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு— 5,346 மெட்ரிக் டன்
இதன் மதிப்பு— ரூ. 80.19 இலட்சம்
மனித உழைப்பின் நாட்கள்— 14.39 இலட்சம்.

திருநெல்வேலி—

பயன்பெற்றவர்கள்— 15,500 பேர்கள்
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள் 3,585
முடிக்கப்பட்ட வேலைகள்— 553
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு— 47.98 இலட்சம்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு— 2,615 மெட்ரிக் டன்
இதன் மதிப்பு— ரூ. 39.22 இலட்சம்
மனித உழைப்பின் நாட்கள்— 7.28 இலட்சம்.

கன்னியாகுமரி —

பயன்பெற்றவர்கள்— 7,718 பேர்கள்
எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள்— 870
முடிக்கப்பட்ட வேலைகள்— 462
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு— ரூ. 9.78 இலட்சம்
வழங்கப்பட்ட அரிசியின் அளவு— 269 மெட்ரிக் டன்
இதன் மதிப்பு— ரூ. 3.86 இலட்சம்
மனித உழைப்பின் நாட்கள் 99,000

[பிற்பகல் 1—00]

இதை நான் சொல்லும்போது மொத்தம் 13,49,532 பேர்களுக்கு வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுபோக எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் 37,973; முடிந்திருக்கும் வேலைகள் 17,242; முடித்துவிடும் வேலைகளின் மொத்த மதிப்பு 492.90 லட்சம் ரூபாய்; மெட்ரிக் டன் 283·30; லட்சத்தில் 433.93; ஆட்களின் உழைப்பு 73.88 நாட்கள்.

இதை நான் இங்கே சொல்வதற்கு முக்கிய காரணம்' இந்த அரசு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு என்ன செய்து கொண்டிருக்கிறது; எதுவுமே செய்யவில்லை, முதலில் லட்சம் பேர்களுக்கு என்றார்கள் . . . .

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள் பற்றியும், முடிந்த வேலைகள் பற்றியும் முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள் பூராவும் முடியுமா? பல இடங்களில் இன்னும் வேலைக்கு அரிசி போகாமல் தேங்கி நிற்கிறது. அதைப்பற்றி என்ன சொல்கிறார்கள்?

திரு. க. சுப்பு : முதலமைச்சர் அவர்கள் நீண்ட பட்டியலைப் படித்தார்கள். ரொம்ப நேரமாகப் படிக்கிறார்கள். வேறு யாராவது படிக்கலாம். சரி. இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத் திட்டம் . . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சுப்பு அவர்கள் பேசுவதில் மரியாதை உண்டு; ஆனால் இப்படி அவமானகரமாகப் பேசுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. வேறு யாராவது படிப்பது என்றால் முதலமைச்சர் பதில் சொல்வதற்கு இங்கு இருக்கவேண்டிய தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பிரச்சினையைப் பற்றிச் சொல்லும்போது இடையில் வேறு வார்த்தைகளைச் சொல்லுவது உறுப்பினர் சுப்புவின் சுபாவமாகப் போய்விட்டது. இதை மாற்றிக்கொள்ளக் கூடாதா?

திரு. க. சுப்பு : பட்டியல் படிக்கிறார், கஷ்டப்பட்டு படிக்கிறாரே என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இவர்கள் தான் பேரவைக்கு வெளியே சென்று, இவர்கள் எந்தப் பணியைச் செய்தார்கள். எந்தக் காரியத்தைச் செய்தார்கள். புள்ளி விவரங்கள் தர முடிந்ததா, கேட்டால் எதுவும் சொல்லாமலே என்று பேசுவதில் மாண்புமிகு சுப்பு அவர்கள் முக்கியமானவர் என்பதை நான் நன்கு அறிவேன். ஆகவே, அவர்கள்தான் முழுமையாகக் கேட்க வேண்டும்.





திரு. க. சுப்பு : தப்பாக நினைத்துக் கொள்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் முக்கியமான குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் பதில் சொல்லவேண்டும். நீண்ட பட்டியலைப் படித்தால் கஷ்டமாக இருக்குமே என்பதற்காகச் சொன்னேன் . . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : கஷ்டப்படுவது என்பதை ஏற்றுக்கொண்டுதான் இந்தப் பணிக்கு வந்திருக்கிறோம். இங்கே வரவில்லையே என்று கவலைப்படுபவர்களும், பதில் சொல்வதைக் கேட்பவர்களும் கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டும்.

திரு. க. சுப்பு : எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் கூட படியுங்கள். சங்கடப்பட வேண்டாம் என்றுதான் சொன்னேன்..

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மீண்டும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பட்டியலை குறிப்பாக பாடம் செய்து ஒப்பிக்க முடியாது. பார்த்துத்தான் சொல்ல முடியும்.

திரு. க. சுப்பு : இந்த அரசாங்கத்தின் மீது சில குற்றச் சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள், கண்டனங்களைச் சொல்லியிருக்கிறார்கள் - மத்திய அரசாங்கத் திட்டங்களைத்தான் இவ்வளவு நேரம் முதலமைச்சர் அவர்கள் வாசித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மத்திய அரசு, மாநில அரசு என்பதல்ல. இந்த மாநில அரசு செய்துள்ள வேலைகள் இவை. இந்த வேலைகளை நிறைவேற்றுவது எங்களுடைய கடமை. அதை ஒழுங்காக, செம்மையாகச் செய்து வருகிறோம். ஒதுக்கப்பட்ட பணத்தை செலவழிக்காமல் பணத்தை திருப்பியனுப்புகிறார்கள் என்று கேட்கிற உரிமை உங்களுக்கு இருக்கும்போது கொடுக்கிற பணத்தையும், நெல்லையும், அரிசியையும் பயன்படுத்திக் கொள்கிறோம் என்று சொல்லும்போது அது எங்கள் வேலை இல்லை என்று கருதக்கூடாது.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் தெரிந்து கொள்ள விரும்புவது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் பேசலாம் என்று எழுந்திருப்பது சரியல்ல. ஒரு வரையறை இருக்கவேண்டும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : நான் கேட்ட கேள்விக்கு பதில் வருவதற்கு முன்னால் இடையில் பலர் எழுந்திருக்கிறார்கள். நான் கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடாது என்று நினைக்கிறார்களா? இப்படிக் குறுக்கிட்டால் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல முடியாது

நிலையை உருவாகிவிடும். எத்தனை வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு எத்தனை முடியவில்லை. அரிசி கொடுக்கப் படுகிறது என்றால் பல பேர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருக்கிறதே என்பதற்கு விவரத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன். இதற்குப் பதில் அளித்த பிறகு மற்றவற்றுக்குப் போகலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, எடுத்துக்கொண்ட திட்டங்கள் எவ்வளவு என்பதைச் சொல்லி இருக்கிறேன். வேலை செய்த மனித உழைப்பினுடைய நாட்கள் எவ்வளவு என்பதை இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். கொடுக்கப்பட்ட அரிசியினுடைய அளவு எவ்வளவு என்பதைச் சொல்லியிருக்கிறேன். அதற்குரிய விலை மதிப்பு எத்தனை லட்சம் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறேன். அதிலே இருக்கின்ற உண்மை வேலை தொடர்கிறது. நாங்கள் எடுத்துக்கொண்ட வேலைகள் தொடர்கிற வரையில் அந்த வேலை நடந்துகொண்டே இருக்கும். அவர்களுக்கு வேலை இருந்துகொண்டே இருக்கும். அந்த வேலைகள் முடிந்த பிறகு இன்னொரு வேலைக்கு அனுப்பப்படும் பொழுது, அவர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது அந்த வேலைக்குரிய அதே மாதிரியான நிலைமையை அந்த நேரத்திலே அங்கே ஏற்படுத்துவோம். ஆக வேலை நடந்து கொடுக்காமல் இல்லை. வேலை நடந்திருக்கிறது. திட்டம் போட்ட அளவுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தினுடைய இறுதி கட்டத்திற்கு இன்னும் வரவில்லை, மீதி இருக்கிறது என்று பொருள்.

திரு. துரை முருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடத்திலே கேட்டுக்கொளவது, மணி இப்போதே 1-05 ஆகிறது. இன்னும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன, பேராசிரியர் வேறு பேச வேண்டியிருக்கிறது. இன்றைக்குள் முடியுமா? நாளைக்கும் இது தொடருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எதிர்க்கட்சித் தலைவரும் முன்வரிசையிலே உள்ள கட்சித் தலைவர்களும் ஆளுங்கட்சியின் சார்பாக பேரவை முன்னவரும் சேர்ந்து பேசி முடிவு எடுக்கவேண்டிய ஒன்று. திரு. துரைமுருகன் அவசரப் பட்டு இதை எழுப்பவேண்டிய அவசியம் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இப்போது புள்ளி விவரங்களை இங்கே படித்தார்கள். நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். இந்தப் புள்ளி விவரங் களை நாங்கள் ஏற்றுக் கொள்வதைவிட முதலமைச்சர் அவர்களே ஒரு தனி கமிஷனைப் போட்டு இந்த வேலைகள் ஒழுங்காக நடைபெற்றிருக்கிறதா? அதிலே என்ன என்ன குறைகள் ஏற்படுகின்றன என்பதை தெரிந்துகொள்ள முதலமைச்சர் அவர்களே நடவடிக்கை எடுப்பார்களா?



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதற்காக மணவாளன தலைமையில் குழு இருக் கிறது. அதற்கு உடன் வேலை செய்ய வேண்டிய பொறுப்பை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரிடம் ஒப்படைத்திருக்கிறோம். அது உள்ளாட்சித் துறை செயலாளர் மூலமாகச் செயல்பட நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

## (4) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

## (ஆ) பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அலுவல்கள் குறித்து மேற்கொண்டு எனக்கு ஒரு முடிவு தெரிவதற்காகக் கூறுகிறேன். இன்றைக்கு இந்த விவாதம் முடியவில்லையென்றால் நாளைக்கு இதை எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கும். முதல் அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது கட்சித் தலைவர்கள், அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்திற்கு வர முடியாது போகலாம் என்றுதான் இன்று காலை கூடுவதாக இருந்த அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தையும் தள்ளி வைத்தேன். விவாதம் தொடர்ந்து நடைபெறுவதால் அலுவல் ஆய்வுக் குழுவை கூட்டுகின்ற வாய்ப்பு இல்லை, எனவே இந்த அவையிலேயே அது பற்றி ஒரு முடிவு எடுப்பது நல்லது. இன்றைக்கு இந்த விவாதம் முடியவில்லையென்றால் நாளைக்கும் இதனை எடுத்துக் கொள்வது என்றும், நாளை எடுத்துக் கொள்வதாக உள்ள அலுவல்கள் 7, 8 ஆம் தேதிகளில் எடுத்துக் கொள்வது என முடிவு செய்யலாமா என்பதை அவை முடிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : யோசனை என்ற பெயரால் தங்களது கவனத்திற்கு நான் வைக்க விரும்புகிறேன். நாளை உங்களுக்குத் தெரியும். நீதிபதி இஸ்மாயில் பிரதம நீதிபதியாக பதவி ஏற்கின்ற விழாவில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருக்கிற காரணத்தால் அந்த விழா 11 மணிக்கு நடைபெறுவதால் அந்த விழாவிலே பங்குபெற்றதற்குப் பிறகு 11.30 மணிக்கு திருப்பி அவை கூடி இந்த விவாதத்தைத் தொடங்குவது நியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஒன்னரை மணிக்குள் முடித்து விடலாம். நாளைக்கு, அவை ஏற்றுக்கொண்டால், கேள்வி நேரத்தைக்கூட தவிர்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 9 என்று இல்லாமல் 10 மணிக்கு அவை கூடுகிற போது எல்லாம் நாம் கேள்வி நேரத்தை தவிர்ப்பது உண்டு. 11.30 மணிக்குக் கூடி 1.30 மணி வரை நடப்பது என்றால் இரண்டு மணி நேரத்திலே விவாதத்தைத் தொடர்ந்து முடித்துவிடலாம். பிறகு 7, 8 ஆம் தேதிகளில் இன்றைக்கும் நாளைக்கும் இருந்த அலுவல்களை முடித்துவிடலாம், அதாவது சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றி விடலாம் என்பது என்னுடைய சொந்தக் கருத்து. ஆகவே அன்று $1\frac{1}{2}$ மணிக்கு முடித்துவிட வேண்டும் என்பது இந்த அவையினுடைய முடிவு என்று கருதுகிறேன்.

திரு. க. சுப்பு : சட்ட முன்வடிவுகளுக்கு அதிக நேரம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு அலுவல் ஆய்வுக்குழுவை கூட்ட முடியாத நிலைமை இருந்ததால் கூட்ட முடியவில்லை. 7-ம் தேதி சட்ட முடிவுகளை எடுத்துக்கொள்கிற போது தேவையிருந்தால் அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தைக் கூட்டுகிறேன். அதிலே முடிவு எடுக்கத் தயார். ஆகவே நாளை காலை 11.30 மணிக்கு சபை கூடும். நாளைக்குக் கேள்வி நேரம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–10]

## (இ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று (5–11–1979) பகல் சுமார் 11-40 மணிக்கு பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை திரு. பெரியகருப்பன் அவர்கள் மகன் திரு. ஆறுமுகம் என்று சொல்லிக்கொள்பவர் பேரவையில் வீசியுள்ளார். அவர் தற்போது பேரவைக் காவலரின் (சார்ஜன்டின்) காவலில் இருக்கிறார். அவரது செய்கை அவை உரிமை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் ர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

## (8) அரசினர் தீர்மானங்கள்.

## (அ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, உங்களது அனுமதியோடு கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

‘‘இன்று (5-11-1979) பகல் சுமார் 11-40 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள, இராமநாதபுரம் மாவட்டம், தேவகோட்டை வட்டம், சண்முகநாதபுரம் அஞ்சல், மேலசெம்பன்மாறி கிராமத்தில் இருக்கும் திரு. பெரியகருப்பன் அவர்கள் மகன் திரு. ஆறுமுகம் என்று சொல்லிக்கொள்ளும் நபர், பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் ஏழு நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவரவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஏழு நாட்கள் என்பது கொஞ்சம் அதிகம் என்று குறிப்பிடுகிறார்கள். எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை குறைப்பதற்கு. ஆனால் இவை தொடர்கதைகளானால் என்னவாகும் என்பதைத் தயவு செய்து நினைவிலே வைத்துக் கொண்டு, உங்கள் ஆசைப்படி மூன்று நாட்கள் என்று குறைத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். ஆகவே ‘‘அவர் ஏழு நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது’’ என்பதற்குப் பதிலாக, ‘‘அவர் மூன்று நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்படவேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது’’ என்று மாற்றி மொழிகிறேன்.

திரு எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் அதற்கு மாறுபட்டுச் சொல்வதாக நினைக்கவேண்டாம். ஆனாலே, இதேபோல் பல தடவைகள் நடக்கின்றன, 3 நாட்கள், இரண்டு நாட்கள், ஒரு நாள் என்று போட்டால் அடிக்கடி துண்டுப் பிரசுரங்கள் வீசுவார்கள். அதனால் குழப்பம் ஏற்படுகிறது. எம். எல். ஏ. யார் என்று பார்க்காமல் கையெழுத்துப் போடும் நிலைமையெல்லாம் இருக்கிறது. இதை நன்றாகப் பரிசீலிக்காவிட்டால் ..

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இப்படிப்பட்ட நிலைமைகள் இனிமேல் நடைபெறுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று அனைத்துக் கட்சித்தலைவர்களும் உறுதி அளித்திருக்கிறார்கள். மீறி அப்படி நடக்குமானால் ஏழு நாட்கள் தவிர்க்க முடியாதது ஆகும். அதற்குமேலே தொடர்ந்தால், மாதக்கணக்கிலேகூடப் போகும்.

திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவரவர்களே, எனக்கு ஒரு சந்தேகம். இப்படிப்பட்ட குற்றம் புரியக்கூடிய அளவிற்கு அந்த துண்டு நோட்டீஸில் என்ன இருந்தது என்பதைப் பேரவைக்கு அறிவிக்கமுடியுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:— ''இன்று (5-11-1979) பகல் சுமார் 11-40 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள, இராமநாதபுரம் மாவட்டம், தேவகோட்டை வட்டம், சண்முகநாதபுரம் அஞ்சல், மேலசெம்பன்மாறி கிராமத்தில் இருக்கும் திரு. பெரியகருப்பன் அவர்கள் மகன் திரு. ஆறுமுகம் என்று சொல்லிக்கொள்ளும் நபர், பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் மூன்று நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பெற வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

### (ஆ) விதி 22-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் நாளைய தினம் கேள்வி நேரத்தை தளர்த்துவதற்கான தீர்மானத்தை மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் ''வினாக்கள்-விடைகள்'' என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ நாளை (6-11-79) அன்று தளர்த்தி அந்நேரத்தை வேறு அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.





### (2) தகவல் கோரல்.

### (2) பேரவை அலுவல் குறித்து.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவை நீங்கள் அடிக்கடி கூட்டி, எங்களையெல்லாம் அழைத்துப் பேசுவது, இங்கே நடைபெற வேண்டிய அலுவல்களுக்கு, அவரவர்களுக்கு உள்ள நிகழ்ச்சிகளையொட்டித்தான், நீங்கள் இந்த நிகழ்ச்சி நிரலை வகுக்கின்றீர்கள். ஆனால் எதிர்பாராதவிதமாக தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் எப்படியோ இந்த நிகழ்ச்சி நிரல் முறைப்படி நடக்கவில்லை. நான் பல முறை சுட்டிக்காட்டியிருக்கின்றேன். அவ்வாறே, இந்த முறையும் ஆகிவிட்டது. இந்தக் கண்டனத்தீர்மானத்தின்மீது நடைபெறுகின்ற விவாதம் நாளைக்காவது நிச்சயமாக முடிவுற்று விடும் என்கின்ற உறுதியிருந்தால் பரவாயில்லை: தங்கள் மூலமாக அறிந்துசொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால், வெவ்வேறு தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகளுக்கு நாங்கள் செல்லவேண்டியிருக்கிறது. அவைகளையொட்டித்தான் ஏற்கனவே நாம் நிகழ்ச்சி நிரலை வகுத்தோம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: குறுக்கீடுகள் இல்லையென்றால் நிச்சயமாக நாளையே முடிவுறும் என்று நான் நினைக்கிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, நான் என்ன சொல்ல விரும்பினேனோ, அதைத்தான் நண்பர் ஆறுமுகம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக, எப்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகின்ற வரையில் நான் எவ்வளவு அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தேனோ, அதுபோல் நான் பேசிமுடிக்கின்ற வரையில் குறுக்கிடாமல் இருந்து அதற்குப் பிறகு பேராசிரியர் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும், இவ்வளவுநாள் நீட்டிக்கொண்டு போயிருக்காது. நாளைய தினம் அந்த மாதிரி இல்லாமலிருந்தால் நிச்சயமாக முடிந்துவிடும். இல்லையென்றால், ஒரு மணி நேரம் நீட்டியாவது நாளைக்கு முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகின்றேன்.

திரு. மு. அம்பிகாபதி; பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடு என்பது வேறு, விளக்கங்கள் என்பது வேறு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து சில விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறோம், நாங்கள் குறுக்கிட விரும்பவில்லை. எல்லாவற்றையும் குறுக்கீடு என்ற வகையில் நாம் கருதிவிடக்கூடாது.

[1979 நவம்பர் \5

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u>' பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிட்டுத்தான் விளக்கத்தைப் பெற முடியும்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்:</u> தலைவரவர்களே, நாளைய தினம் ராஜ பவனத்திற்கு நாம் பிரதம நீதிபதியாக பதவி ஏற்கின்ற அந்த வைபவத்திற்குச் செல்ல வேண்டுமென்று இங்கே அறிவித் திருக்கிறீர்கள். நாமெல்லாம் செல்வதற்கு ஏதாவது ஏற்பாடாகி யிருக்கிறதா என்பதை சபையிலே அறிவித்து விட்டால் நாம் எங்கேயிருந்து செல்லவேண்டும், எப்படி எங்களை அழைத்துச் செல்லப் போகிறீர்கள் என்ற விவரத்தை சபைக்கு அறிவித்து விட்டால் எங்களுக்கு சவுகரியமாக இருக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு முதல மைச்சர் அனுமதியோடு போக்குவரத்துத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன், தங்கும் விடுதியிலேயிருந்து உறுப்பினர்கள் கவர்னர் இல்லத்திற்கு செல்வதற்கு பஸ்களை ஏற்பாடு செய் தால் நலம் என்று கருதுகிறேன். பிறகு, அங்கேயிருந்து இங்கே சட்டமன்றத்திற்கு வருவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். கவர்னர் இல்லத்திற்குச் சென்று, பதவி பிரமாண நிகழ்ச்சியை முடித்துவிட்டு, மறுபடியும் இங்கே வரும் வரை பஸ்களை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## (7) அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

<u>திரு. நா. சுந்தரராஜ்:</u> தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கத்தைக் கேட்டுக்கொண்டிருக் கிறேன். அதிலே ஊராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கான காரணங்களை முதலமைச்சர் அவர்கள் சரியாக விளக்கவேண்டும். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் இப்பொழுது ஊராட்சிமன்றங்கள் கலைக்கப்பட்ட பிறகு அங்கே தனி அலுவலர்கள் நிர்வாகம் செய்கின்றார்கள். ' இதுவரை அலுவலர்கள் இருந்த இடத்திலே, கூட்டுறவு வங்கிகளிலே, கோயில்களிலே எல்லாம் இப்பொழுது உங்கள் கட்சிக்காரர் களையே அங்கே ஆலோசனை குழுக்களுக்கு நியமனம் செய்திருக் கிறீர்கள். அதுபோல் இந்த ஊராட்சி மன்றங்களிலும் நீங்கள் உங்கள் கட்சிக்காரர்களை இந்த ஆலோசனை குழுக்களில் நியமனம் செய்ய ஏதாவது திட்டம் வைத்திருக்கிறீர்களா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> பேரவைத் தலைவரவர்களே, எங்கள் கட்சிக்காரர்கள், மாற்றுக் கட்சிக் காரர்கள் என்று நாங்கள் பார்த்து, யாரையும் நியமிப்பதில்லை.



1979 நவம்பர் 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

யார், யார் அங்கே தயாராக தகுதி உடையவர்களாக மற்றவர் களால் சொல்லப்படுகிறார்களோ, அவர்களை நியமித்திருக் கிறோம். இன்னொன்றையும் நான் குறிப்பிடுவதற்கு நினைவு படுத்தியதற்கு நண்பர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தலில் ஒருசில மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று நான் கருதுகிறேன். 1. தாழ்த்தப் பட்டவர்கள் தலைவர்களாக வருவதற்கு உரிமையாக, அவர் களுக்கு வாய்ப்பு இல்லை. ஆகவே தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று இத்தனை தொகுதிகள் என்று ஒதுக்கி வைக்க வேண்டு மென்பது என்னுடைய எண்ணமாகும். (பலத்த கைத்தட்டல்). அது மட்டுமல்லாமல், தாய்க்குலத்திற்கு என்றும் இத்தனை சதவீத இடங்கள் என்று ஒதுக்கி வைக்கவேண்டுமென்பது என்னுடைய விருப்பமாகும் (பலத்த கைத்தட்டல்). 100—க்கு 18 என்ற சதவீதத்தை நாம் கைக்கொள்கிற காரணத்தால், அந்த 18 என்ற விகிதத்தை எந்த அளவிற்கு இந்த 12,300 தொகுதி களிலும் வருகிறதோ, அதிலும், நகரசபைகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் எல்லாம், தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று தலைமை பதவி ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க, நான் சட்டமும் கொண்டுவர தயாராக இருக்கிறேன். அது போலவே 20 சதவீதத்தினை தாய்மார் களுக்கு ஒதுக்கி வைக்கவேண்டுமென்பது என்னுடைய விருப்பம் என்பதை இங்கே சொல்லி, அதையும் நிறைவேற்றி விரைவிலே ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள், இவைகளுக்கெல்லாம் தேர்தல் நடத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

இது போன்ற பல காரணங்கள் உள்ளன என்பது மட்டு மல்லாமல், முன்பு இதே மன்றத்திலே பேசியதைப் போல், வாக்காளர்களுடைய படங்களைக் கொடுத்து, அந்தப் படங் களையும் வைத்து, வாக்குகள் அளிக்கக்கூடிய நிலைமைகளை உருவாக்குவதற்கும் நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக் கிறோம்.

[பிற்பகல் 1-20]

நாடாளுமன்றத் தேர்தல் போன்றவைகளிலே அதைக் கொண்டு வந்தோம் என்றால் மைய அரசு குறிப்பிடத்தக்க அளவுக்கு, குறிப்பிட்ட சதவீதம் பணம் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்களுக்கு எல்லாம் அவர்கள் தருவதாக இல்லை. ஆகவே அப்படித் தராமல் இருந்தாலும் கூட ஓர் நல்ல காரியத்தை நடத்துவதற்கு, கள்ள ஓட்டுப் போடுகின்றவர்கள், மறைந் தவர்கள் பெயரைப் பயன்படுத்தி ஓட்டுப் போடுகின்றவர்கள், இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நடைபெறாமல் இருக்கக் கூடிய அளவிற்கு புகைப்படங்களைக் கொடுத்து, அந்தப் புகைப் படங்களை அடையாளமாகக் காட்டி, அவர்கள் வாக்களிக்க

வேண்டுமென்கிற அளவிற்கு அதைப் பயன்படுத்தலாம் என்று நினைக்கிறோம். வேறு சில மாநிலங்களில் அது வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறதென்ற தகவல் வந்திருக்கிறது. ஆகவே அதை செய்வதன் மூலம் நல்ல பலன் தரும் என்று நான் நினைக்கிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, மிகச் சரியான ஒரு நல்ல கருத்தை முதலமைச்சர் அவர்கள் ஊராட்சி மன்றங்களில் ஊராட்சித் தலைவர்கள் பதவி ஒதுக்கீடு பற்றி சொன்னார்கள். நான் இன்னொன்றையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சமீபத்தில் பல மாநிலங்களில், குறிப்பாக கேரளம், மேற்கு வங்காளம் மற்றும் வேறு சில மாநிலங்களில் கூட 18 வயது உள்ளவர்களுக்கு ஓட்டுரிமை அளித்திருக்கின்றன. அப்படிப்பட்ட உரிமை தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கும் அளிப்பதற்கு அரசு இந்த வாய்ப்பை உபயோகப்படுத்திக் கொள்ள முன்வருமா என்று முதலமைச்சர் அவர்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதையும் நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். எந்த அளவுக்கு விவரம் தெரிந்தவர்கள் வாக்களிக்க முடியுமோ அத்தனை மக்களுக்கும் வாக்குரிமை அளிப்பதற்கு நாம் சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட வயது வரம்புள்ள வாக்காளர்கள் வாக்குப் போடுவதிலேயே குழப்பம் இருக்கிறதை நடைமுறையிலே நாம் காண்கிற போது ''மெச்சூரிட்டி ஆப் அண்டர்ஸ்டாண்டிங்'' என்ற நிலையில் அறிந்து கொள்ள, நன்மை, தீமை என்று புரிந்து கொள்ள முடியாத ''டென்ட்டர்'' ஏஜிலே இளம் வயதிலே வாக்குரிமை கொடுப்பது அவசியம்தானா, முறையானதுதானா என்ற விபரத்தை

What is the legal cr moral necessity?

What is maturity of mind?

என்ற நிலைமையையும் மாண்புமிகு முதல்வரவர்கள் அதை சட்டமாக்குவதற்குள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே
* * *

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்; பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. ஆறுமுகம் சொன்ன கருத்தை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே முதல்வர் அவர்கள் இந்த ஊராட்சி மன்ற பிரச்சினையை முடித்துவிட்டு அடுத்த பிரச்சினைக்குச் செல்வதற்கு முன்னாலே நான் எழுப்பிய ஒரு சந்தேகத்திற்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் ஆறுமுகம் பேசியவைகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன். பத்திரிகைகளிலும் வெளியிடக் கூடாது என்று உத்தரவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் அன்று பேசும்போது ஒன்றை குறிப்பிட்டேன். ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் இப்பொழுது இல்லாத காரணத்தால் 40 அல்லது 30 பஞ்சாயத்துக்களுக்குக் காசோலைகள் வழங்கி செலவுக்கான வகை தொகைகளை செய்கின்ற அந்தப் பொறுப்பை பி. டி. ஓ. எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர் செய்கின்ற செலவு செய்தது சரிதானா என்று பார்க்கிற பொறுப்பு, தணிக்கை செய்கின்ற பொறுப்பு, ஈ.ஓ.பி. E. O. P. என்கின்ற கீழே உள்ள அதிகாரியிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அது சரியான நிர்வாகத்திற்கு எடுத்துக் காட்டாக இருக்க முடியாது. அதைத் திருத்திக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அது திருத்தப்படும். அதோடு ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில் இந்த 18 வயது என்பது மிக நல்ல யோசனை என்பதை நான் இங்கே மீண்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். காரணம் 18 வயது இளைஞர்கள் மிக மிக அக்கறையாக இப்பொழுது அரசியலை கவனிக் கவனிக்கிறார்கள். ஒவ்வொரு தலைவரையும் கவனிக்கிறார்கள்

திரு: க: சுப்பு: தலைவரவர்களே, உன்னிப்பாக கவனிப்பது 16 வயதிலேயே தொடங்கி விட்டது, அப்படி ஆக்கிவிட்டால் என்ன.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு நண்பர் சுப்பு அவர்கள் தன்னுடைய கரலாற்றை எடுத்துக் காட்டியதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மகிழ்ச்சி. ஆனால் 18 வயது என்பது மிக மிக தேவை என்பதை எல்லோரும் மகிழ்ச்சியோடு ஆமோதிக்கும் நிலையிலே இதைப் பற்றி விரைவாக பரிசீலித்து ஒரு முடிவு வரும் என்பதும், நாடாளுமன்ற தேர்தல் முடிந்த உடனேயே

விரைவில் என்பதற்கு எத்தனை மாதம், எத்தனை ஆண்டுகள் என்று ஒரு கணக்கு இல்லாமல் இருக்கிறது ஒரு எல்லை கிடையாது, என்ற வகையில் பேசினார்கள். நான், மனமுவந்து, மன நிம்மதியோடு சொல்கிறேன் ஏப்ரல் மாதத்திற்குள் என்று நீங்கள் வைத்துக் கொள்ளலாம். நமது பட்ஜெட் செஷன் முடிந்த உடனே ஒரு இரண்டு மாத காலத்திற்குள் இந்தத் தேர்தல் நடை பெறும் அளவிற்கு நாங்கள் முயற்சிப்போம் என்பதை நாங்கள் இங்கே சொல்லிக் கொள்கிறோம்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, தாழ்த்தப் பட்ட சமுதாயத்திற்கும், பெண்களுக்கும் தொகுதிகள் ஒதுக்கீடு செய்வதற்கான ஒரு திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வரவேற்கிறேன். ஆனால். அதே நேரத்தில் தொகுதிகள் ஒதுக்கீடு செய்வதில் சில அடிப்படையிலே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சட்டமன்றத் திற்கும், பாராளுமன்றத்திற்கும், தொகுதிகள் ஒதுக்கப்படுகிற போது, டீ லிமிடேஷன் கமிஷன் வைத்து, எந்தெந்தத் தொகுதி களை ஒதுக்கீடு செய்யவேண்டும் என்பதற்காக உள்ள சில தார தர்மயங்கள்' சில காரணகாரியங்கள் ஆகியவற்றின் அடிப்படை களை வைத்து செய்கிறார்கள். அந்த வகையிலே இந்த ஊராட்சி ஒன்றியங்கள் தொகுதிகளை ஒதுக்கீடு செய்யப்படும்போது, அந்த வகையில் ஆய்வு செய்வதற்காக டீ லிமிடேஷன் கமிஷன் போன்ற ஒரு கமிஷனை அமைத்து, அந்த அடிப்படையில் தொகுதிகள் ஒதுக்கீடு செய்வதற்கு, இந்த அரசு சட்டத்தை இயற்றுவதற்கு முன்பு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, பஞ்சாயத்துத் தேர்தல்களைப் பொறுத்தவரையில் கிராமத்திலே இருக்கிற மக்களின் அபிப்பிராயத்தின்படி அங்கே ஓட்டுக்களைப் போடு கிறார்கள். ஆகவே, அந்தப் பஞ்சாயத்துக்களிலே இப்படிப் பட்ட ஒதுக்கீடுகள் செய்வது சரியாக வருமா அல்லது பஞ்சாயத்து ஒன்றியங்களின் அளவிலே ஒதுக்கீடு செய்வது சரியாக வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படியே குறுக்கீடுகள் இருக்குமானால், நாளைக்குக் கூட இந்த விவாதம் முடியுமா என்பது எனக்குக் கூட சந்தேகமாக இருக்கிறது. நிமிடத்திற்கு நிமிடம் குறுக்கிட்டால் எப்படி சபையை நடத்த முடியும்? தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் சொல்வதை எல்லாம் கேட்டு விட்டு, முக்கியமானவற்றில் தேவையானால் குறுக்கிடுங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இருவர் சொன்ன தையும் நாங்கள் மனதில் வைத்துக்கொள்கிறோம். ஆனால், உத்தரவாதம் தர முடியாது. ஆனால், அலட்சியப்படுத்த மாட்டோம் என்பதை மாத்திரம் சொல்லிக்கொள்கிறேன்.





இங்கே நான் ஒன்றைக் குறிப்பிடவேண்டும். வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தைப் பற்றி சிலர் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். 1961 ஆம் ஆண்டு தமிழ் நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கிழக்குப் பகுதியின் வட்டங் களான, நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயவரம், சீர்காழி ஆகியவற்றில் அமலில் உள்ளது. அந்தச்சட்டத்தின்படி அங்கேயுள்ள வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு நியாய ஊதியம் தமிழக அரசால் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அந்த நியாய ஊதியம் பணமாகவோ, தானிய மாகவோ கொடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நியாய ஊதியம் முழுவதும் பணமாகக் கொடுக்கப்படும்போது அக்டோபர் முதல் நாள் முதல் மே மாதம் 31-ம் நாள் வரையில் ஒரு விகித மாகவும், ஜூன் மாதம் முதல் நாள் முதல் செப்டம்பர் மாதம் 30-ம்நாள் வரையில் கூடுதல் விகிதமாகவும் குறிப்பிட்ட பணிகளுக்கு ஏற்ப நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஜூன் முதல் செப்டம்பர் வரையில் பணமாகக் கொடுக்கப் படும் ஊதியம் அதிகப்படுத்தப்படுவதன் காரணம் அறுவடை முடிந்த கடைகளில் உணவு தானியங்கள் விலை சற்று கூடுதலாக இருக்கும் என்பது தான்.

இந்தப் பாகுபாடு இல்லாமல் ஆண்டு முழுவதும் ஒரு பணிக்கு ஒரே விகிதத்தில் நியாய ஊதியம் நிர்ணயிக்கவேண்டும் என கோரிக்கைகள் அரசுக்கு வந்து உள்ளன. இவற்றையெல்லாம் பரிசீலித்து அரசு அந்தக் கோரிக்கைகளை ஏற்க முடிவு செய்துள்ளது.

அதன்படி அக்டோபர் முதல் நாள் முதல் மே மாதம் 31-ம் தேதி முடிய உள்ள காலத்திற்கும்மீதம்,உள்ள காலத்தில் வழங்கப் படும் கூடுதல் ஊதியத்தையே நிர்ணயிப்பது என அரசு முடிவு எடுத் துள்ளது. ஆகவே, அக்டோபர் முதல் நாள் முதல் மே மாதம் 31-ம் தேதி வரையில், நியாய ஊதியம் சில பணிகளுக்கு ஒரு தினத்திற்கு ரூ. 6·60 என்று இருப்பதை, ரூ. 7·20 என்றும், வேறு சில பணிகளுக்கு இப்போது ஒரு தினத்திற்கு ரூ. 5 என்று இருப்பதை ரூ. 5·60 என்றும், சிறுவர்களுக்கு இப்போது ஒரு தினத்திற்கு ரூ. 3·60 என்று இருப்பதை ரூ. 4 என்றும் உயர்த்தப்படும். இவ்வாறு உயர்த்தப்பட்ட ஊதிய விகிதங்கள் இன்று முதல் அமலுக்கு வரும் (கைதட்டல்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று, நாளை (6-11-79) காலை 11-30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1·30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## (9) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

177. சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை–காமராஜ் பல்கலைக் கழகங்களின் 1979-ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் செயலுக்கு வரும் நாளினை நிர்ணயிப்பது தொடர்பாக கல்வித் துறையின் 23–7–1979–ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 1305-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1923–ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/1923) 50 (2)-வது பிரிவு மற்றும் மதுரைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1965) 58(2)-வது பிரிவு ஆகியவற்றின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

178. மோட்டார் வண்டிகளில் வழித்தடம் குறித்து (ப்ளு பிரிண்டை) வரைபடத்தை பார்வைக்கு வைப்பது தொடர்பாக தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 28–6–1979. ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 1595-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939–ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1939) 133 (3)-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

179. பயணிப் பேருந்துகளில் நின்றுகொண்டு செல்லும் பயணிகளை ஏற்றிச் செல்வது தொடர்பாக தமிழ்நாடு 1940–ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின்....1979-ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண்.1412-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1930–ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1939) 133 (3)–வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

40. கால்நடை வளர்ப்புத் துறைபற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை (ஆறாவது பேரவை) ஒன்பதாவது அறிக்கை).

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1979 நவம்பர் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 11.30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு :- ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :. இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இச்சட்ட முன்வடிவு அறிமுகம்செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

2. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

1. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(இ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1979.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு. 1979

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

1. அரசினர் சட்ட முன்வடிவுகள். (தொடர்ச்சி).

(ஈ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சட்ட முனவடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(உ) இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. க. உ. ரொ. எட்மண்ட் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தொடர்ந்து நடைபெறுகின்ற கண்டனத் தீர்மானத்திலே பதில் கூறுகின்ற நிகழ்ச்சியின் தொடர்பாக இன்று சில கருத்துக்களை எடுத்துக் கூற நான் விரும்புகிறேன்.

முறைப்படி என்னுடைய பேச்சு முடிந்த பிறகு பேராசிரியர் அவர்கள், தாம் சொல்ல விரும்பும் கருத்தை எடுத்துக் கூறவும், அதற்கு நான் பதில் கூற வேண்டிய அவசியம் இருந்தால் நான் எடுத்துக் கூறவும் என்கிற நிலையில் இன்றையதினம் விவாதம் தொடரும் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் முதலில் விலைவாசியைப் பற்றி ஒன்றிரண்டு குறிப்புகளை இங்கே தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் பேசியபோது விலையைக் கட்டுப்படுத்த நியாய விலைக்கடைகளை திறந்திருக்கிறார்கள் என்றாலும், புகார்கள் வருகின்றன என்பதையும் கூறி, தேவையான பொருட்கள் அங்கே இல்லை

என்று புகார் வருகிறது, எடை சரியாக இல்லை என்று சொல்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு ஒட்டுமொத்தமாக ஒரு சிறிய பதிலாக நான் தெரிவிக்க விரும்புவது, மாநிலம் முழுவதும் வருவாய் கிராமம் ஒவ்வொன்றிலும் நியாய விலைக் கடைகள் அமைப்பது என்றும், இந்தக் கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருட்களோடு, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், புளி, மிளகாய் போன்ற இன்றியமையாத பொருட்களையும் மக்கள் வாங்க வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கையாகும். இத் திட்டம் பின்வருமாறு செயல்படுத்தப்படுகிறது.

ஏற்கெனவே இயங்கிவரும் நியாய விலைக் கடைகளை மற்ற அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் நியாய விலைக் கடைகளாக மாற்றி அமைத்தல்; அந்தந்த கிராமங்களிலேயே நியாயவிலைக் கடைகள் இல்லாத கிராமங்களில் புதிய கடைகளை படிப்படியாகத் திறந்து வைத்தல்; முதற்கட்டமாக ஏற்கெனவே இயங்கி வந்து கொண்டிருக்கும் சுமார் 5,200 கடைகள் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டமாக மாநிலம் முழுவதும் புதிய கடைகள் திறக்கும் பணி பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கூட்டுறவுத் துறை பணி நிலையங்களை, நெல்லை, தஞ்சாவூர், தர்மபுரி, தென்னார்க்காடு போன்ற மாவட்டங்களில் 3,899 கடைகளையும், மற்ற மாவட்டங்களில் என்று குறிப்பிடும்போது 6,819 கடைகளையும், ஆக மொத்தம் 10,718 கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

நியாய விலைக்கடைகளில் எல்லாப் பொருட்களும் எடைப்படி தான் விநியோகிக்கப்படுகின்றன. எடைக் கற்கள் எடை அளவைத்துறை அலுவலர்களால் அவ்வப்போது பரிசீலனை செய்யப்பட்டு கால முறைப்படி முத்திரையிடப்படுகின்றன. பொது விநியோக முறையில் பொருட்களின் எடை துல்லியமாக இருக்கவும், எடையின் அளவைத் துறையின் விதிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்கவும், அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. மக்களுக்கு குன்றாது சப்ளை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நடத்தும் கடைகள் இடத்திற்கேற்ப வேலை நேரங்களை மாற்றியமைத்துள்ளது. தற்போது ஸ்டாண்டர்டு துணியை மட்டும் தான் கூட்டுறவு அமைப்புகள் விநியோகித்து வருகின்றன. அவைகள் இந்திய அரசாங்கத்திலிருந்து மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு தனியாக ஒதுக்கீடு செய்ய மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்திய அரசின் பதிலை எதிர் நோக்கியிருக்கிறோம்.





அடுத்து உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் 'விலைவாசிகள் ஏறிக் கொண்டே போகிறது. பருப்பு வகைகளின் விலைகள் கிலோ 6 ரூபாய் 7 ரூபாய் என்று விலை ஏறிக்கொண்டே போகிறது என்றும் சொல்லியிருக்கிறார். 'அது பற்றி நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டே வருகிறேன். விளைகின்ற போது வாங்கி வைத்துக் கொண்டு விலை ஏற்றத்தின் போது விநியோகிக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி கவனிக்கவே இல்லை' என்ற குற்றச்சாட்டை சுமத்துகிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

பருப்புகளைப் பொறுத்தவரையில் கடலைப் பருப்பு, துவரம் பருப்பு போன்றவைகள் கிலோ ஒன்றுக்கு 3 முதல் 5.40 ரூபாய் வரையிலானவிலைக்குள் கட்டுக்கடங்கியிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் எப்பொழுதுமே, பருப்பு வகைகள் உற்பத்தியாவது, தமிழகத்தின் தேவைக்கு மிகவும் குறைவான அளவேயாகும். தன்னுடைய தேவைக்குத் தமிழகம் வட மாநிலங்களை நம்பியே உள்ளது. உற்பத்தியாகும் மாநிலங்களிலேயே தற்போது பருப்பின் விலை அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தினால் தமிழகத்திலும் அவற்றின் விலைகள் முந்தைய ஆண்டை விட உயர்ந்து காணப்படுகிறது. தமிழகத்தின் தேவைக்கு, விநியோகம் செய்யும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்தமாக முழுவதையுமே வாங்கி விநியோகிப்பது என்பது இயலாது. அப்படி மொத்தமாக எல்லா வியாபாரிகளின் வர்த்தகத்தையும் எடுத்து நடத்துவது என்றால் கோடிக் கணக்கில் மூலதனம் தேவை. அவர்களுக்கும் வேலை போகும். நியாயமாக வியாபாரம் நடத்துபவர்களுக்கு நஷ்டம் ஏற்படுத்தவோ, அவர்களுக்கு அந்த வேலையை இல்லாமல் செய்யவோ விருப்பவில்லை. அது சாத்தியமும் இல்லை. இருப்பினும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சுமார் 2,000 டன் பருப்புகளை வடமாநிலங்களிலிருந்து வாங்கி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகம் செய்து வருகிறது.

தேசிய நுகர்வோர் கூட்டுறவு நிறுவனமும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் வட மாநிலங்களிலிருந்து பருப்பை வாங்கி கூட்டுறவு அங்காடிகள் மூலமாக விற்பனை செய்கின்றன. இந்த ஏற்பாட்டினால் விரைவில் விலைகள் சீராக இருக்கும் என்பது மட்டுமல்லாமல், இன்னமும் குறைப்பதற்கான முயற்சியை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதோடு இப்படிப்பட்ட பருப்பு வகைகளை எந்த அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்ய முடியுமோ அந்த வகைகளில் நாங்கள் கவனத்தைச் செலுத்தி முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

அடுத்து, மருத்துவக் கல்லூரி பற்றி இங்கே பேசப்பட்டது. வழக்கு மன்றத்தில் இருக்கிற ஒரு பிரச்னையைப் பற்றி சட்ட மன்றத்தில் பேசக் கூடாது என்று இருந்தும், நாம் அந்த மரபைக் கடைபிடிப்பது முறை என்று தெரிந்திருந்தாலும் அதைப் பற்றி பிரச்னை இங்கே எழுந்தது. இருந்தாலும் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அந்த முடிவு தெரிகிற வரையில் அதைப் பற்றி இப்போது கருத்துக் கூறுவது முறையல்ல என்பதால் அந்த விளக்கங்களைச் சொல்ல முடிந்தாலும் அதை நான் இங்கே சொல்ல முடியாமல் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. மு. கருணாநிதி: மருத்துவக் கல்லூரி விவகாரம் நீதி மன்றத்தில் இருப்பதால் பதில் அளிக்க இயலவில்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நீதி மன்றத்தில் இருப்பது வேறு விவகாரம். 1015 பேர்களில் ஒருவர் செலக்ஷன் ஆகவில்லை என்பது பற்றிய விவகாரம் அது. நான் எழுப்பியது என்னவென்றால், செப்டம்பர் மாதம் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் வெளியிட்ட பிறகு அக்டோபர் மாதம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள தமிழர்களது குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 6 இடங்கள், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் வீட்டுப் பிள்ளைகளுக்கு 6 இடங்கள், விளையாட்டுச் சாதனைகள் புரிந்தவர்களுக்கு 3 இடங்கள் என்று புதிதாக ஒரு உத்தரவு போடப்பட்டு 15 பேர்கள் எடுக்கப் பட்டார்கள். அது எந்த வகையில் முறையானது என்ற பிரச்னையைத்தான் இங்கே எழுப்பினேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் அமெரிக்கா சென்றபோது என்னிடம் அங்கு வாழ்ந்து வருகிற தமிழக மக்கள் எங்களுடைய பிள்ளைகள் தமிழகத்தில் வந்து படிப்பதற்கு வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டபோது அந்த நிலைமையை நீங்கள் விரும்புவீர்கள் என்றால் தமிழக அரசு நிச்சயமாக ஒத்துழைக்கும் என்று நான் பகிரங்கமாக சொல்லிவிட்டு இங்கே வந்திருக்கிறேன், அந்த வகையில் இங்கே—எனக்கு வேண்டுகோள் விடப்பட்டு என்ற முறையில் அல்ல—மனுக்கள் அனுப்பியபோது அவற்றைப் பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பதிவு எண். 154—லிடியா ராஜேந்திரன், பெல்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.





பதிவு எண். 367—செல்வி உமா ஐயாத்துரை, 26, 5-வது மெயின் ரோடு, ஆர்.ஏ. புரம், சென்னை.

பத்மினி ராஜேந்திரன், 10, தெற்கு மாதா சர்ச் ரோடு, ராயபுரம்.

செல்வி சுப்புலட்சுமி பிள்ளை

கல்யாணி நாகராஜன்.

இவர்கள்தான் அவர்கள் என்பதைக் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: உலகம் முழுவதும் தமிழர்கள் பரவிக் கிடக்கிறார்கள். ஆனால அமெரிக்காவில் இருக்கிற அமெரிக்க ஐக்கிய நாட்டு தமிழர்களுக்கு மாத்திரம் இப்படிப்பட்ட ஒரு தனிச் சலுகை என்று அறிவித்திருப்பது முறையானதல்ல என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டு. அப்படி அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தால் 1015 பேர்கள் என்று அறிவிக்கப் படுகிற நேரத்தில் அப்போது வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்குமானால் அதற்கு பலரும் போட்டி போடுவதற்கு வாய்ப்புக்கூறுகள் இருந்திருக்கும், இப்போது அந்த வாய்ப்புக்கூறுகள் வேண்டுமென்றே அடைக்கப்பட்டு விட்டதாகத்தான் நான் கருதுகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அவரவர்கள் கருத்து அவரவர்களுக்குச் சொந்தமானது என்றாலும் உண்மையை விளக்க வேண்டும் என்ற வகையில் இங்கே கேட்டார்கள். கேட்டால் தருகிறேன் என்று சொன்னேன். அவர்கள் கேட்டார்கள். தேர்ந்தெடுக்கப்படுவதல்ல. அமைச்சர்களுக்கு குறிப்பாக, முதல் அமைச்சர் அவர்களுக்கு அதிக இடம் ஒதுக்கலாம் என்ற உரிமை இருக்கிறது. அந்த வகையில் அது முறையானதுதான். அடுத்தபடியாக இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

*திரு. க. அன்பழகன்: முதல் அமைச்சர் அவர்களுக்கு ஐந்து இடங்கள் அல்ல, பத்து இடங்கள் கூட ஒதுக்குவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. காபினெட்டுக்கு அந்த உரிமை உண்டு. ஆனால் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக ப்ராஸ்பெக்டஸ் வெளியிடுகிற காலத்தில் மொத்த எண்ணிக்கையைத் தீர்மானிக்கும்போது 1015 என்பதை 1030 என்று எண்ணிக்கையைப் பெருக்கி தீர்மானித்து ப்ராஸ்பெக்டஸ் வெளியிட்டதற்குப் பின்னால்தான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமே தவிர முதல் அமைச்சருக்கு உரிமை உண்டு என்ற காரணத்திற்காக ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னால் முடிந்திருக்க வேண்டிய காரியம் அக்டோபரில் தொடங்குவது என்பது 'ப்ரொஸீஜரில் ராங்' நடைமுறை தவறு என்று சொல்லப்படுகிற அந்த வகையில் அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> தலைவர் அவர்களே, எந்தெந்த வகையில் நேரத்தில் அவர்கள் வந்து நம்மை அணுகுகிறார்களோ, அந்தெந்த வகையில் நேரத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். அந்த விண்ணப்பங்களில் நேரம் காலம் குறிப்பிட்டு அவற்றையும் தேர்தல் குழுவிற்கு அனுப்புவது வழக்கமில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்வேன். மிஸோரம் சீப் மினிஸ்டர் ஒரு வாரத்திற்கு முன்பு என்னைச் சந்தித்தார்கள். என்னோடு விருந்துண்ண வந்திருந்தபோது அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அங்கு மருத்துவ நிபுணர்கள் இல்லை, நாங்கள் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். இரண்டு மருத்துவர்களுக்கு அனுமதி தேவை, அனுமதி வழங்கவேண்டும் என்றார்கள். நான் உடனே அதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னேன். உடனே அவர்கள் வடநாட்டு பகுதிகளில் இருக்கின்ற மிஸோரம் பகுதியிலுள்ள மக்களுக்கு மட்டும் ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். அதேபோல் மொரொஷிஸ் தீவிலிருந்து வந்து கேட்கின்றார்கள். அதேபோல் காஷ்மீரத்திலிருந்து ஒன்று என்று இருந்தால் அதை 2, 3 என்று ஆக்க வேண்டும் என்று கேட்கின்றார்கள். கல்வி கற்றுத் தெரிந்து செல்ல வேண்டும். அங்கு தெரிந்து கொள்ளவேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு உதவி செய்கின்ற முகத்தான் இப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்கின்ற நேரத்தில் விரும்புகின்ற இப்படிப்பட்ட நல்ல காரியத்திற்கு உதவி செய்கின்றோமே தவிர, இதில் லாப நஷ்டத்தைக் கணக்குப் பார்த்து, அதில் எப்படி வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று பார்த்து இந்த அரசு செய்வதில்லை என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விழைகிறேன். (குறுக்கீடு) குறுக்கீடுவதில் எனக்கு ஆட்சேபணையில்லை, நான் பதிலளிக்கும் நேரம் அதிகமானால் என்னைக் குறை கூறவேண்டாம்.

<u>திரு. மு. கருணாநிதி:</u> தலைவர் அவர்களே, ஆறு பேரை அமெரிக்க ஐக்கிய நாட்டு தமிழர்கள் என்று எடுக்கிற நேரத்தில் எவ்வளவு விண்ணப்பங்கள் கோரப்பட்டன? அப்படி வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு? அந்த விண்ணப்பங்களிலிருந்து தான் இந்த ஆறு பேர்களும் செலக்ட் செய்யப்பட்டார்களா?

<u>மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்:</u> விண்ணப்பங்கள் கோரப்படவில்லை. வந்த விண்ணப்பங்களை வைத்துத்தான் இடம் ஒதுக்கப்பட்டது.



<u>திரு. மு. கருணாநிதி:</u> வந்த விண்ணப்பங்கள் எவ்வளவு? ஆறே விண்ணப்பங்கள்தான் வந்ததா?

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> எனக்குத் தெரிந்த அளவில் குறிப்பு இருக்கின்ற அளவில் அது அவ்வளவு தான் என்று கருதுகிறேன்.

மேலும் இம் மாநிலத்தில் மொத்தம் எட்டு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. முதன்முதலாக அந்த கல்லூரிகள் 1125 மாணவர்களைச் சேர்ப்பதற்கு சித்தமாக இருந்தது. அதற்கு இந்திய மருத்துவக் கழகமும், சென்னை மற்றும் மதுரை பல்கலைக் கழகமும் இசைவு அளித்துள்ளது. ஆயினும் மருத்துவர்களிடையே நிலவும் வேலைவாய்ப்பின்மையையும், ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் பயிற்சி அளிப்பதற்கான வசதிகளையும் கருத்திற்கொண்டு கல்லூரியில் சேர்க்கும் இடத்தை அறிவார்ந்த முறையில், கொணரும் பொருட்டு, சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1125 லிருந்து 1015 ஆக மாநில அரசு 1971ஆம் ஆண்டு குறைத்தது. அந்த மரபுபடி 1979 ஆண்டு வரை ஆண்டுதோறும் 1015 மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டார்கள். பல்வேறு தரப்பிலிருந்து வந்த மனுக்களின் அடிப்படையிலும், சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையையும் கருத்திற்கொண்டு கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கு ஐந்து இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கான உத்தரவு 13-9-79ம் நாள் செய்தித்தாளில் வெளியிடுவதற்கு முன்பாகவே பிறப்பிக்கப்பட்டது.

சமுதாயச் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக 1978ஆம் ஆண்டு விதவைகளுக்கு என்று ஆறு இடங்களும், ஊனமுற்றவர்களுக்கு 3 இடங்களும் ஒதுக்கப்பட்டன. ராணுவத்திடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் வந்த எண்ணற்ற மனுக்களைக் கருத்திற்கொண்டு மீண்டும் முன்னாள் ராணுவத்தினரின் குழந்தைகளுக்கும், இறந்துவிட்ட ராணுவத்தினரின் குழந்தைகளுக்கும் தற்பொழுது பணிபுரியும் ராணுவத்தினரின் குழந்தைகளுக்கும் முறையே இரண்டு வீதம் மொத்தம் ஆறு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பொதுமரபான கோட்டாவின் கீழ் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பணிபுரியும் தமிழ் இனத்தவர்களுக்கு 6 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதைப்போலவே விளையாட்டு வீரர்களுக்கு பொதுமரபு கோட்டாவின் கீழ் 3 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பணிபுரியும் தமிழர்களின் குழந்தைகளுக்கும் ஒதுக்கப்பட்ட இடங்கள் ஏற்கனவேயுள்ள இந்த 1015 இடங்களுக்கு அப்பாற்பட்டவை. இந்த ஒதுக்கீட்டினால் தமிழ்நாட்டு

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 6

மாணவர்கள் போட்டியிடக்கூடிய 985 இடங்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படடமாட்டா. கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டு தமிழக வம்சா வழியினருக்கும் சிறந்த விளையாட்டு வீர்ர்களுக்கும் ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு இந்திய மருத்துவ கழகத்தின் ஒப்புதலையே பெற வில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்து சரியானது அல்ல என்பதை நான் சொல்லி (குறுக்கீடு) சொல்லவில்லை என்றால் எனக்கு மகிழ்ச்சி.

திரு. மு. கருணாநிதி : பெறவில்லை என்று நான் சொன்னதாகக் சொல்வது தவறு. நான் குறிப்பிடுவதெல்லாம், குறிப்பிட்ட 15 இடங்கள் ஒதுக்குவதற்காக இந்தக் காரியம் செய்யப்பட்டது. அறிவிக்கப்பட்டப்படி விண்ணப்பங்கள் பெறாமலேயே வேண்டியவர்களுக்கு 15 இடங்கள் தரப்பட்டிருக்கின்றன என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டு.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் அமெரிக்காவில் பேசிய கருத்துக்கள் அப்போதே விளம்பரப்படுத்தப்பட்டு இருக்கின்றன. பத்திரிகையிலும் வெளிவந்திருக்கிறது. இது புதிய செய்தி அல்ல என்பதும், பலரும் அதனை அறிந்திருக்கிறார்கள் என்பதும் நாமறிந்த உண்மை. மேலே சொல்லியுள்ள 1,015 இடங்கள் எல்லையைத் தாண்டியவர்களுக்கு இடங்கள் அளிப்பதற்கு, எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு. அமெரிக்க ஐக்கியநாடுகளிலுள்ள தமிழ் இனவம்சா வழியினருக்கு 6 இடங்கள் ஒதுக்கப்பட்டன மற்றும் இடங்கள் ஒதுக்கப்பட்டன அதை நான் சொன்னேன். அதைப்போலவே மொரேஷியாவிலுள்ள தமிழ் வம்சா வழியின மாணவர்களுக்கு எட்டு, ஸ்ரீலங்கா, தென் ஆப்பிரிக்கா, மற்றும் பீஜி போன்ற வெளி நாடுகளில் வாழ்கின்ற தமிழ் வம்சா வழியினருக்காக 4. இந்த அடிப்படையில் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள தமிழ் வம்சா வழியினருக்குச் செய்யப்பட்ட இட ஒதுக்கீட்டில் எந்தவித தவறும் இல்லை. தமிழ் மக்கள் பெருவாரியாக வாழும் நாடுகளிலுள்ள தமிழ் இன மாணவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வந்தால், அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.50]

1979 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட இடங்கள் 1015. மத்திய அரசு நியமனங்கள் 9. ஜம்மு அண்டு காஷ்மீர் மாணவர்கள் 2. நேபாளம் 2. தமிழ் நாட்டைச் சேர்ந்த மலேஷிய மாணவர்கள் 8. ஸ்ரீலங்கா, பர்மா 5. வெளிநாடுகளில் இருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், ஸ்ரீலங்கா, தென் ஆப்பிரிக்கா, பிஜி 4. 985 இடங்கள் இதிலே விஞ்ஞான பட்டதாரிகளுக்கு 10 விழுக்காடு. மீதி 886 இடங்கள் புகுமுக வகுப்பு மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. விதவைகள் 10 . . . . . .



1979 நவம்பர் 6]

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இட ஒதுக்கீடு, இட ஒதுக்கீடு என்ற அந்த அடிப்படையிலே இந்த 15 இடங்களையும் இட ஒதுக்கீடு என்று குறிப்பிடுகிறார்கள். இட ஒதுக்கீடு என்பது மொத்த இடங்களில் அதிகப்படுத்தி ஒதுக்குகின்றபோது தான் இட ஒதுக்கீடு ஆகும். ஆனால், அதிகப்படுத்தாமல் முன் கூட்டியே பிராஸ்பெக்டசில் 1,015 இடங்கட்கு விண்ணப்பம் போடலாம் என்று குறிப்பிடப் படுகிறது. அப்போது இது பிராஸ்பெக்டசில இடம் பெறவில்லை. எனவே, எவ்வளவு நியாயம் இருக்கிறது என்று முதல் அமைச்சர் அவர்கள் கருதினாலும், சட்டப்படி இதிலே ஒரு பிரச்சனை என்னவென்றால், அங்கே மாணவர்கள் சேர்க்கப்படுகின்றபோது அறிவிக்கப்படாமல், மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அறிவிக்கப்பட்டு, தனியாக விண்ணப்பங்கள் முதல் அமைச்சர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு, சேர்க்கப்பட்டிருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமை முதல் அமைச்சர் அவர்கள் கூற்றிலே ஏற்படுகிறது. அவர்கள் இந்த அதிகாரம் பெற்றவர்கள். ஆனாலும், இந்த அதிகாரத்தை முறைப்படி பயன் படுத்தி அவர்களை எடுத்திருக்க வேண்டும். ஆனால், முதலமைச்சர் அவர்கள் சட்ட அடிப்படையில் தம் அதிகாரத்தைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. சட்டத்தின் அடிப்படையில் என்றால், அவர்கள் பிராஸ்பெக்டசின் மூலம் முன்கூட்டியே ஜீ. ஓ.-வின் மூலம் அறிவித்திருக்க வேண்டும். அதனால், உண்மையிலேயே சட்டம் மீறப்பட்டிருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் இதிலே மீறப்படவில்லை. எப்படி எப்படி இந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்று கருதுகிறார்களோ அந்த வகையில் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் செய்யப்பட்டிருக்கின்றது என்பதை மீண்டும் நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பணியை செய்கின்ற அதிகாரிகள் அந்தந்த நிலைமைகளை எடுத்துக் கூறி, இவைகளுக்கெல்லாம் இடம் ஒதுக்க வேண்டும் என்று சொல்லும்போது, அதற்காக இடம் ஒதுக்கி இருக்கிறோம். இதைச் சொல்லும்போது, எத்தனை இடங்கள் அதற்காக ஒதுக்கப்படுகின்றதோ, அதற்கான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்து தான் கொடுக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே எத்தகைய சட்டமும் மீறப்படவில்லை.

விதவைகள் 10 ; உடல் ஊனமுற்றவர்களுக்கு 3 ; இராணுவத்திலே பணிபுரிந்து இறந்தவர்களுடைய குழந்தைகளுக்கு 6 ; கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கு 6; சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு 3 ; தமிழ் நாட்டைச் சேர்ந்த அமெரிக்காவில் இருப்பவர்களுக்கு 6 ; இது தான் நிலை.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூடுமான வரையில் குறுக்கிடாமல் இருப்பது நல்லது. முதல் வரிசையிலே உள்ள எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், துணைத் தலைவர் அவர்களும் கேள்வியை எழுப்பினார்கள். எனவே, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்தை நான் முதலிலேயே தெரிவித்து விட்டேன். மேலும் குற்றச்சாட்டுகள் பற்றி சில விவரங்கள் கேட்க விரும்பினால் பேராசிரியர் மூலமாக கேட்க வாய்ப்புண்டு. நான் பேசி முடித்த பிறகு, அதைக் கேட்கட்டும். இப்படி நீட்டித்துக் கொண்டே பேசிக்கொண்டே போகின்ற நிலையை உருவாக்க வேண்டாம். என்னுடைய பதிலைக் கேட்டுக் கொண்டு, அதிலே எவைகளைப் பற்றியெல்லாம் திரும்பக் கேட்கலாம் என்று விரும்புகிறார்களோ, அவைகளைக்குறித்து வைத்துக்கொண்டு பேராசிரியர் மூலமாகக் கேட்கலாம் என்று சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடன் பேசி முடிவெடுத்திருக்கிறார்கள். திரு. க. சுப்பு உட்கார வேண்டும்.

திரு. க. சுப்பு : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை சொல்லவில்லை ; பேராசிரியர் அவர்கள் சொன்னதைச் சொல்லவில்லை. ஒரே ஒரு சின்ன விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள், இந்த நாட்டிலே மிகுந்த படித்தவர்கள் வெளி நாடுகளுக்குச் செல்லுகின்றார்கள். அதனால் 'பிரெயின் டிரெயின்' ஏற்படுகிறது. எல்லோரும் அங்கே படித்துவிட்டு இங்கே பணியாற்ற வேண்டும் என்ற கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு அமெரிக்காவில் இருக்கக்கூடியவர்களுக்கு ஒதுக்குவது என்ற இந்த கொள்கை முரணானது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படித் துருவித் துருவி கேட்டுக் கொண்டே இருப்பது நியாயம் அல்ல. எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டதற்கு பதில் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : ஒரே ஒரு பிரச்சனை . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பேசுகின்றவர்கள், படித்துப் பட்டம் பெற்றவர்கள் வெளி நாடுகளுக்குச் செல்கிறார்கள், தமிழ் நாட்டிலே வேலை செய்வதில்லை என்பதைக் குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். அது குற்றச்சாட்டல்ல. எந்தக் காரணத்தைச் சொல்வதானாலும், நான் அதிலிருந்து விலகவில்லை.

இன்னமும்கூட ஒன்று சொல்வேன். அங்கே இருக்கிற நண்பர்கள் இங்கே படிக்கிறவர்கள் விரும்பினால், அதற்காக ஒரு அமைப்பை ஏற்படுத்தி தொடர்பு கொள்வதன் மூலம் அமெரிக்காவில் இருந்து படிப்பதற்குக்கூட ஒத்தாசை செய்ய அங்கிருக்கும் தமிழ் மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைக் கூட நான் இங்கே கூற விரும்புகிறேன். அப்படியே தான் அவர்களும் விரும்புகிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் எல்லாம் கூடுமானவரை இங்கே படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்று பல முறை சொல்லியிருக்கிறேன். அதிலே ஒன்று தான் இந்த நிகழ்ச்சி என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தமிழ் மாணவர்கள் ஆறே பேர் தான் மனுச் செய்து கொண்டார்கள் என்று முதல்வர் அவர்களே ஒத்துக் கொண்டார்கள். இப்போது குறிப்பிட்டார்கள். நான் கேட்பது அவர்களிடம் வந்தது ஆறே மனுக்கள் தானா ? இதிலே வேடிக்கையும் வேதனையும் என்னவென்றால் இந்த ஆறு பேரும் செலக்ட் பண்ணப்பட்டிருக்கிறார்கள். அந்த ஆறு பேரிலே ஒருவர் கூடத் தள்ளிவிடப்படவில்லை. ஆறு பேர் மனுச் செய்து கொண்டார்கள். அந்த ஆறு பேருமே செலக்ட் செய்யப் பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தகுதியுடையவர்கள் ஆறு பேர் வரக் கூடாது என்ற நிர்ப்பந்தம் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. இப்போது தான் அதைப் புரிந்து கொள்கிறேன். தகுதியுள்ளவர்கள் வருகிறார்கள், கேட்டால் இடம் இல்லையென்று சொல்வதற்கில்லை என்ற நிலைமையில் வாய்ப்புத் தரும்போது எப்படித் தவறு என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

திரு. மு. கருணாநிதி : அங்கே தான் என்னுடைய குற்றச்சாட்டு வலுப்பெறுகிறது. நீங்கள் வேண்டியவர்கள் ஆறு பேரைத் தேடிப்பிடித்து அவர்களுக்கு அந்த இடத்தைத் தந்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. எம் ஜி. இராமச்சந்திரன் : குற்றச்சாட்டு சொல்லலாம். அதை நிரூபிக்க வேண்டியதும் அவர்களுடைய பொறுப்பு என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்; வாயால் சொல்வது அல்ல. எந்த வகையில் எந்த

லாபத்தைக் கருதி, யாருடைய துணையோடு, யாருடைய உதவியோடு, யாருடைய ஒத்தாசையோடு, யாருடைய சிபாரிசோடு செய்தேன் என்பதற்கான ஆதாரத்தைக் காண்பித்தால் நிச்சயமாக அதற்குரிய பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளத் தயார்.

திரு. க. அன்பழகன் : முதலமைச்சர் அவர்களுக்கு நேரடியாக விண்ணப்பம் தரலாமா ? நான் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபோது எனக்கு அப்படி விண்ணப்பம் வந்திருந்தால், அல்லது முதலமைச்சருக்கு விண்ணப்பங்கள் வந்திருந்தால் அந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப் பெற்றிருந்தால் நீங்கள் குறை சொல்லமாட்டீர்களா ? அப்படி நான் அமைச்சராக இருந்தபோது ஒரு விண்ணப்பம் வந்து, அதை நான் பெற்றுக் கொண்டு பரிசீலித்து, நியாயம் இருக்கிறது என்று இடம் பெறச் செய்திருந்தால் எவ்வளவு பெரிய குற்றச்சாட்டு என் மீது சுமத்தப் பெற்றிருக்கும்?

இன்றைக்கு அந்த விண்ணப்பங்கள் முறைப்படி அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டது என்று சொல்ல வேண்டிய முதலமைச்சர் அவர்கள் ஏதோ தன்னிடத்திலே தரப்பட்டது என்று கூட அவரே சொல்லுகிற அளவுக்கு ஒரு நிலைமை இருக்குமானால் அப்படி அவரிடத்தில் சொல்லி அதற்காக இடம் தருவது என்ற முறை ஏற்பட்டுவிடலாமா ? மத்திய அரசு அனுப்பினால் முதலமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளலாமே தவிர, மாணவர்களுடைய விண்ணப்பம் முதலமைச்சருக்கு நேரடியாகத் தரப்படலாமா என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் சொல்வதை இன்னமும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். தரப்பட்டன என்றால் வரப்பெற்றன என்றுதான் பொருள் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். எப்படி வந்தது என்றால், மனு வந்து சேர்ந்தது என்றுதான் பொருள். அதை நானே நேராகப் பெற்றேன் என்று பொருள் அல்ல. அதில் பொறுப்பு என்பது நான் தவறு செய்திருந்தால் பொறுப்பு என்பதற்காகத்தான் பேசுகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினைகளில் பேராசிரியர் அவர்கள் மிக மிகத் தீவிரமாக தன்னுடைய எண்ணங்களை வெளியே சொல்லியிருக்கிறார்கள். நான் பழைய விவரங்களை எல்லாம் கிளற வேண்டாம் என்றுதான் என்னுடைய வேலையை முடித்துக்கொண்டு, என்னுடைய பதிலை முடிக்கலாம் என்று கருதுகிறேன். ஆனால் இப்படி ஒவ்வொன்றையும் திரும்பத் திரும்ப.. .. ..



திரு. க. அன்பழகன்: தயவுசெய்து பழைய விவரங்களைக் கிளறுவதாகச் சொல்லி குற்றம் சாட்டுவதாக இருந்தால் தாங்கள் தாராளமாக என்மீது குற்றம் சாட்டுங்கள். நான் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன. நான் அஞ்சுகிற பழக்கம் உள்ளவன் அல்ல. அடங்குகிற பழக்கம் உள்ளவனே தவிர, அஞ்சுகிற பழக்கம் உள்ளவன் அல்ல. குற்றசாட்டைச் சொல்வது என்று சொன்னால் அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டுமென்று நான் கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்களுடைய அந்த நல்லெண்ணத்திற்கு நன்றி கூறி அதைப் பற்றி விளக்கம் கூறுகிற நேரத்தில் கூறுவேன் என்று சொல்லி, அந்தக் கோப்புக்காகக் காத்திருக்கிறேன். அதற்கிடையில், மற்றக் காரியங்களைச் சொல்ல முற்படுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிலே சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற மக்கள் கல்விக்கான வாய்ப்புகளைப் பெறுவதற்காக புதிய அரசாணை ஒன்று, 9000 ரூபாய் என்று குறிப்பிட்டு அரசு வெளியிட்டிருப்பதாக அடிக்கடி முதலமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். நம்முடைய நாட்டில் இருக்கும் மக்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டில் வேலை செய்பவர்கள் எல்லாம் நல்ல உத்தியோகத்தில் இருக்கக் கூடியவர்கள், நல்ல வசதியில் இருக்கக் கூடியவர்கள், நம்முடைய நாட்டைப் பற்றி அக்கறை கொள்ளாதவர்கள். அவர்களுக்கு ஆறு இடங்கள் ஒதுக்கப்பட்டு நம்முடைய சமுதாயத்தில் இருக்கிற அடித்தள மக்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்காமல் செய்வது நியாயந்தானா? அது எந்த அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது என்றுதான் திருப்பித் திருப்பிக் கேட்கிறேன்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் புதிய பாயிண்ட் ஒன்றும் எழுப்பவில்லையே, ஏற்கெனவே சொன்னதைத் தான் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். ஒதுக்கிவைக்கப்பட்ட இடங்களுக்கு இதனால் எந்தவிதமான பாதகமும் இல்லை என்ற புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கேட்கிறார்கள். சொன்ன பதிலுக்கு மீண்டும் மீண்டும் கேள்வி கேட்டால் என்ன சொல்வது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: எனக்கு எழுகின்ற ஐயப்பாடே 1015-ஓடு இன்னொரு 15-ஐயும் சேர்க்கிறீர்கள். அதற்காக அனுமதியைப் பெறுகிறீர்கள். 1030 என்று விளம்பரப்படுத்தி, அதிலே நீங்கள் சொல்கிற பிராஸ்பெக்ட்ஸ் எல்லாம் விளம்பரபடுத்திய போதே அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தமிழர்களுக்கு, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு, விளையாட்டுச் சாதனை புரிந்தவர்களுக்கு என்று எல்லாம் ஏன் அப்போதே சேர்த்து இருக்கக்கூடாது? 1015 முடிந்த பிறகு ஏன் அது சேர்க்கப்பட வேண்டும்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப ஒரே கேள்வி வேறு வேறு வார்த்தைகளில் வருகின்றது, சொன்ன பதிலை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று நான் கருதவில்லை. மீண்டும் சொல்கிறேன், அந்த விண்ணப்பங்கள் நான் நேரிலே சென்ற போது இப்படி எங்களுக்குத் தேவைப்படும் நிலைமை இருக்கிறது, வருவோம் என்று கூறியிருக்கிறார்கள், அவர்கள் எத்தனை பேர்கள் வருவார்கள் என்று நமக்குத் தெரியாது. மற்றவர்களுக்கு என்று ஒதுக்காமல் அவர்களுக்கு அமெரிக்காவுக்காக மட்டும் உரிய இடங்கள் இத்தனை என்று ஒதுக்கிவைத்தால் வேறு பிரச்சினைகள் உருவாகும் என்ற காரணத்தால் அதை நாங்கள் வெளியிட விரும்பவில்லை.

இன்னொன்றையும்சொல்ல விரும்புகிறேன். மொரிஷியஸ் தீவிலிருந்து கேட்கிற எண்ணிக்கை அதிகம், அது அத்தனையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை, அதைப்போன்றே இந்தோனேஷியாவிலிருந்தும் கேட்கிறார்கள், அது அவ்வளவையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை, ஆகவே' இப்படி நீண்டுகொண்டே போகக்கூடாது, நீண்ட பட்டியலை வைத்துக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது என்ற காரணத்திற்காகத்தான் அவர்கள் உண்மையிலேயே இங்கே வந்து படிக்க விரும்புகிறார்கள், இங்கே வந்து இருக்க விரும்புகிறார்கள் என்ற சூழ்நிலையில் அவர்கள் வேண்டுகோளாக வைக்கும் பொழுது அவர்களுக்கு வாய்ப்புத் தருகிறோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே ஒரு புள்ளிவிவரத்தை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசிய பொழுது குடிநீர்ப் பிரச்சினைப்பற்றி, சாலைகள் பற்றி, போக்குவரத்து பற்றியெல்லாம் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிராமக்குடிநீர் திட்டம் என்ன என்ன நிறைவேற்றி இருக்கிறார்கள், நிறைவேற்றப்படவில்லை, எதையும் செய்யவில்லை என்பது போன்ற குற்றச்சாட்டுக்களைக் கூட இங்கே குறிப்பிடுகிற அளவுக்குப் பேசினார்கள், இந்த வகையில் நான் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.



1971–72 ஆம் ஆண்டு எதுவும் இல்லை; அதற்குப் பிறகு அரசு ஆணையிட்ட தொகை ரூபாய் 2·74. இலட்சம் ஆழ்துளைக் கிணறுகள் 2, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 2, பயன் அடைந்த மக்கள் தொகை லட்சத்தில் 0·005, செலவழித்த ரூபாய் 2·15 இலட்சம்.

1972–73– நிதி ஒதுக்கீடு இல்லை. ஆனாலும் அரசு ஆணையிட்ட தொகை ரூபாய் 120.20 இலட்சம் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 220, பயன் அடைந்த சிற்றூர்களின எண்ணிக்கை 220, பயன் அடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 0·829, செலவழித்த தொகை ரூபாய் 150·72 இலட்சம்.

1973–74 ஒதுக்கீடு ரூபாய் 250 இலட்சம், ஆணையிட்ட தொகை ரூபாய் 95இலட்சம், ஆழ்துளை கிணறுகளின் எண்ணிக்கை 237, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 237, பயன் அடைந்த மக்கள் தொகை லட்சத்தில் 4·100, செலவழித்த தொகை ரூபாய் இலட்சத்தில் 165.52.

1974-75–ல் நிதி ஒதுக்கீடு ரூபாய் 250 இலட்சம், அரசு ஆணையிட்ட தொகை ரூபாய் 450.00 இலட்சம், ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 2,500, பயனடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 2,244, பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 13·230, செலவழித்த தொகை ரூபாய் இலட்சத்தில் 505.62.

1975–76–ல் நிதி ஒதுக்கீடு ரூபாய் 325 இலட்சம், அரசு ஆணையிட்ட தொகை ரூபாய் 350 இலட்சம், ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 4,007, பயனடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 4,037, பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 31.690, செலவழித்த தொகை ரூபாய் இலட்சத்தில் 5 3.75.

1976–77–ல் நிதி ஒதுக்கீடு ரூபாய் 300, இலட்சம் அரசு ஆணையிட்ட தொகை ரூபாய் 1,205.93. இலட்சம் ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 8,466, பயனடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 9,470, பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 32,270. செலவழித்த தொகை ரூபாய் இலட்சத்தில் 388.00.

1977–78–ல் நிதி ஒதுக்கீடு ரூபாய் 400, இலட்சம் அரசு ஆணையிட்ட தொகை ரூபாய் 717.30. இலட்சம் ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 3,712, பயனடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 2,888, பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 14.590. செலவழித்த தொகை ரூபாய் இலட்சத்தில் 675.69.

1978-79-ல் நிதி ஒதுக்கீடு ரூபாய் 600, இலட்சம் அரசு ஆணையிட்ட தொகை ரூபாய் 1316.87. இலட்சம் ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 1,921, பயனடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 1,404, பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 7,440, செலவழித்த தொகை ரூபாய் இலட்சத்தில் 860.30.

1979-80-ல் நிதி ஒதுக்கீடு ரூபாய் 1,200, இலட்சம் அரசு ஆணையிட்ட தொகை ரூபாய் 600 இலட்சம், ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 900, பயனடைந்த் சிற்றூர்களின் எண்ணிக்கை 282, பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில், 850, செலவழித்த தொகை ரூபாய் இலட்சத்தில் 317.61.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே. . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் தொடர்ந்து பேசவேண்டும் தயவு செய்து குறுக்கிட வேண்டாம்.

மதுராந்தகம் எம். எல். ஏ., அவர்கள் போக்குவரத்துத் துறையில் இந்த அரசின் கொள்கை என்ன, என்று கேட்டு அவர்கள் முன்பே பேசியதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

"தேசிய மயம் ஒன்றா, இரண்டா அல்லது மூன்றா என்று நீங்கள் சொல்வீர்களானால், என்னைப் போன்றவர்கள் அல்லது ஒரு பஸ், இரண்டு பஸ் வைத்திருப்பவர்கள் கால்நடை அமைச்சரிடம் போய் 2 எருமை மாடாவது வாங்கிக் கொண்டு, பஸ்ஸை விட்டு விடுவான். ஒன்று, இத்தனை பஸ்களுக்கு மேல் தேசிய மயம் என்று தெரிவியுங்கள், அல்லது 'கம்பிளீட்' தேசியமயம் என்று தெரிவியுங்கள். ஆக, இரண்டுங்கெட்டான் நிலையில் ஆளை சாகடிக்காதீர்கள்" என்று தெரிவித்திருக்கின்ற கருத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) இது 78-லே பேசியது.

திரு. புஷ்பராஜ் அவர்கள் பேசும்பொழுது" சிறந்த நிர்வாகத்துடன் மக்களுக்கு பேருந்து உரிமையாளர்கள் சேவை செய்ய வேண்டுமானால், குறைந்தது ஐந்து பஸ்களையாவது வைத்து நடத்தினால்தான் கட்டுப்படியாகும் என்பது என் அபிப்பிராயம் என்றும், தேசிய மயத் திட்டத்திற்குள் சிறிய பஸ் உரிமையாளர்களுக்கு வாழ்வு அளிக்க எண்ணும்போது அந்த சிறிய பஸ் உரிமையாளர்கள் பொதுமக்களுக்குச் சேவை செய்யவும், தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கப்படவும், சிறந்த முறையில் ஒரு நல்ல சர்வீசை நடத்த வேண்டுமானால் குறைந்தபட்சம் ஐந்து பேருந்துகளாவது நடத்தும் அளவிற்கு அவர்களுக்குச் சலுகை அளிக்க வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறார்கள்.





[பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

திரு. பொ. விஜயராகவன் அவர்கள் 20-3-78-ல் பேசி இருக்கிறார்கள். "கடந்த ஆளுநர் ஆட்சிக்கு முந்தைய அரசு பத்துப் பேருந்துகளை உரிமையாளர்கள் வைத்துக்கொள்ளலாம் என்று கூறினார்கள். அப்படிக் கூறுகின்ற நேரத்தில் பினாமிகள் பலர் அந்தமாதிரி பேருந்துகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற குறை சுட்டிக்காட்டப்பெற்றது. அந்தப் பினாமிகள் அப்படி வைத்துக்கொள்வார்களேயானால் அவைகளை இந்த அரசே நடத்துவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் சிறு பேருந்து உரிமையாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எத்தனை பேருந்துகளை வைத்துக்கொள்ளலாம் என்பதைத் திட்டவட்டமாக இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்று சொன்னார்கள்.

நண்பர் திரு. அம்பிகாபதி அவர்கள், 20-3-78-ல் பேசியிருக்கிறார்கள், "குறிப்பாக அரசாங்கம் தனியார் எவ்வளவு பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று அறிவிக்காததன் விளைவாக மூன்று பஸ்கள், இரண்டு பஸ்கள், நான்கு பஸ்கள் வைத்திருப்பவர்கள் கடன்பெற முடிவதில்லை. அப்படிக் கடன் கிடைக்காததால் அதை சீர்படுத்த முடியவில்லை. அப்படி சீர்படுத்த முடியாததால் தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு" என்றும், "தேசியமயமாக்குகிறோம் என்ற பெயரில் நான்கு ஓட்டை பஸ்கள், இரண்டு டப்பா பஸ்கள் இவற்றை தேசியமாக்கி அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்துகிற நிலையைப் பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்று குறிப்பாகக் கேட்டுக் கொள்கிறேன்." என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-10]

20-3-1978 அன்று, திரு. டி. பி. எம். பெரியசாமி இதே மன்றத்தில் பேசியதாவது: "...... தேசியமயமாக்கப்பட்ட கொள்கைகளில் 1971 ஆம் ஆண்டில் 10 பஸ்களுக்குமேல் வைத்திருக்கின்றவர்களுக்கு மேலும் உரிமம் வழங்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அப்படி 10 பேருந்துகள் வைத்திருப்பவர்கள் எவ்வளவு பேர்களிடம், தனியார்களிடமும் வங்கிகளிலும் கடன் பெற்றிருப்பார்கள் என்பதைப் பார்த்து அவர்கள் வறுமையை அகற்றுகின்ற வகையில், அவர்கள் மேலும் உரிமம் கேட்டால் புதிய உரிமங்கள் கொடுப்பது எந்தவிதமான சிக்கலையும் உண்டாக்காது. அதே நேரத்தில் படித்த இளைஞர்களுக்கு, பொறியியல் படித்த இளைஞர்கள் உரிமம் கேட்டால் அவர்களுக்கு முதல் சலுகை கொடுத்து அதை அரசின் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று பேசியிருக்கிறார்கள்.

20-3-1978 அன்று திரு. மார்க்கபந்து அவர்கள் பேசுகின்ற பொழுது, "....தனியார்களுக்குக் கொடுக்கப்படுகிற பஸ்களின் எண்ணிக்கை மூன்று பஸ்கள் என்று இப்போது நிர்ணயித்திருக்

கிறார்கள். அது அன்–எக்னாமிக்கல் என்று சொல்ல விரும்புகிறேன். காரணம் ஒரு பஸ் நின்றுவிடுகிறபோது அதற்கு மாறுதல் செய்கிற முறையில் குறைந்தபட்சம் ஒரு ஐந்து பஸ்களாவது ஒரு தனிப்பட்ட ஆப்பரேட்டரிடம் கொடுக்கப்படுமானால்தான் They can run on economical basis என்ற முறையிலும், தனிப்பட்டவர்கள் நஷ்டமடையாத வகையிலும அந்த எண்ணிக்கையை ஐந்து பஸ்கள் என்று நிர்ணயம் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்'' என்று பேசியிருக்கிறார்.

அதே நாளில், திரு. எம்.ஏ. லத்தீப் அவர்கள்''............. ஒட்டு மொத்தமாக தேசீயமயமாக்குவதும்கூட இந்த அரசுக்கு ஆபத்தைத்தான் விளைவிக்கும். இதையும் அரசு கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் ஒரே நிர்வாகத்தின்கீழ் வைத்துக்கொள்ளும்போது, ஏதாவது ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டு ஒரு வேலை நிறுத்தம் என்று தொழிலாளர்கள் சொல்கிறபோது, இந்த நாடே ஸ்தம்பித்து விடக்கூடும். எனவே, சில இடங்களைத் தனியார்கள் இடத்திலே கொடுங்கள். அது நாட்டுக்கு நல்லதும்கூட என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்'' என்று கொள்கையைப் பற்றி அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். அவர் மேலும் சொல்கிறார், ''........தனியார் துறையிலே அதிகப்படியான உரிமங்கள், பர்மிட்ஸ் வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு அரசு ஒரு உத்தரவு போட்டு, அதை உடனடியாக அமுல் படுத்துவது நல்லது என்பதை நான் இந்த நேரத்திலே வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், அதே மாதிரி, அப்படி நிர்ணயம் செய்கிறபோது அதிகப்பட்சமான பேருந்துகளை வைத்திருக்கும் உரிமையாளர்கள், அவைகளைத் தங்களுடைய பங்குதாரர்களுக்கோ அல்லது குடும்பத்திலே உள்ளவர்களுக்கோ பிரித்துக் கொள்ளவும் அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்'' என்று நண்பர் லத்தீப் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

1977–ல், திரு. சுப்பு அவர்கள் ''..............தேசியமயமாக்கப்படுவதை நான் எதிர்க்கவில்லை. போக்குவரத்துக் கழகங்களில் நிறைய பஸ்களும், தனியார் இடத்திலே சில பஸ்களும் இருக்கின்றன. தனியார்கள் என்று சொல்லப்படுகின்றபோது, சிறிய அளவில் 3, 4, 5 பஸ்கள் வைத்திருப்பவர்களும் இருக்கிறார்கள். அன்றைய தினம் ஆளும் கட்சியிடம் கம்யூனிஸ்டு கட்சியினர் பல்வேறு மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி சிறு பஸ் முதலாளிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் தொழில் நசிந்து போக வேண்டுமென்றும் நான் சொல்லவில்லை. கேரளாவிலே நேஷனலைஸ் செய்து, பின்னர் டீ–நேஷனலைஸ்





செய்திருக்கிறார்கள். செக்கோஸ்லேவியாவிலும் அதேமாதிரி செய்திருக்கிறார்கள். குஜராத், மகாராஷ்டிராவிலே, பஸ்களின் எண்ணிக்கையைக் குறைத்து, பஸ்களின் டாப்களின் மேலே எல்லாம்கூட ஆட்களை ஏற்றிச் செல்கிறார்கள். ஆகவே, சிறிய அளவிலே பஸ்கள் பெற்ற அளவிலே, 2, 3 பஸ்கள் வைத்துக் கொண்டு, அந்தத் தொழிலிலே அவர்கள் குடும்பத்திலே ஒருவர் டிரைவர், மற்றொருவர் கண்டக்டர், இன்னொருவர் மானேஜர் என்ற முறையிலே ஒரு குடும்பமே அதை நடத்திக்கொண்டு வருகிறது. அப்படிப்பட்டதை எடுத்துக் கொண்டால், அந்தக் குடும்பமே தெருவிலே போகக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும்'' என்று கூறியிருக்கிறார்கள்.

1977–ல், திரு. லத்தீப் அவர்கள் ''..............சர்க்கார் துறைக்கு கொடுக்கப்படுகின்ற அத்தனை சலுகைகளும், தனியார் துறைக்குக் கொடுத்தால்தான் ஒரு துறை நன்கு செயல்பட முடியும். இல்லாவிட்டால், இன்றைக்கு சாதாரணமாக ஒரு பஸ் அல்லது 2, 3, 5 பஸ்கள் வைத்துக்கொண்டிருப்பவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்று சொன்னால், அவர்களுக்குப் போடப்படுகின்ற வரிகளின் காரணமாகவும், கொடுக்கப்படுகின்ற நெருக்கடிகளின் காரணமாகவும், தொல்லைகளின் காரணமாகவும், அவர்கள் எல்லோரும் மார்வாடிக் கடைகளிலேதான் இருக்கிறார்கள். மார்வாடிகளிடம் கடன் வாங்காத ஒரு பஸ் அல்லது 2, 3 பஸ் அதிபர்கள் யார் என்று சொன்னால், அவர்களைத் தேடித்தான் பார்க்க வேண்டும். மார்வாடிகளிடம் அவர்கள் இன்றைக்கு அடகு வைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் தான் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு எந்த வகையிலே சலுகைகள் கொடுக்க வேண்டுமென்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்'' என்று பேசியிருக்கிறார். அதைப்போல், கூத்தக்குடி சண்முகம், மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட அதே போன்ற கருத்தை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

அதே சமயம் நாங்கள் இந்த பஸ்போக்குவரத்து சம்பந்தமாக, இதுவரையில் எந்தெந்தக் காரியத்தைச் செய்திருக்கின்றோம் என்பதைக் குறிப்பிட வேண்டியது என்னுடைய கடமை என்று நான் குறிப்பிடுகின்றேன்.

அனைத்து போக்குவரத்துக் கழகங்களைப்பற்றி இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்னும், பின்னும்.

பேருந்துகளின் எண்ணிக்கை—

| | | | |
|---|---|---|---|
| 1974–75 | .. | .. | 4,252 |
| 1975–76 | .. | .. | 4,400 |
| 1976–77 | .. | .. | 4,936 |

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 6

1977–78 .. .. 5,118
1978–79 .. .. 5,372
1979–80, 6 மாதங்களில் .. 6,040

இலாப, நஷ்டங்கள் —

(ரூபாய்)

1974–75-ல் .. 170.76 இலட்சம் நஷ்டம்.
1975–76-ல் .. 845.24 இலட்சம் நஷ்டம்.
1976–77-ல் .. 46.53 இலட்சம் இலாபம்.
1977–78-ல் .. 419.24 இலட்சம் இலாபம்.
1978–79-ல் .. 808.94 இலட்சம் இலாபம்.
1979–80-ல் 6 மாதங்களில், 586.53 இலட்சம் இலாபம்.

போனஸ்—

ரூபாய்

1974–75 .. .. 89.97 இலட்சம்
1975–76 .. .. 17.52 இலட்சம்
1976–77 .. .. 128.92 இலட்சம்
1977–78 .. .. 177.72 இலட்சம்
1978–79 .. .. 224.69 இலட்சம்

இந்த ஆண்டு இன்னும் கொடுக்கவில்லை.

வழித்தடங்கள்—

1974–75 .. .. 1,441
1975–76 .. .. 1,930
1976–77 .. .. 1,746
1977–78 .. .. 2,204
1978–79 .. .. 2,550
1979–80-ல் 6 மாதங்கள் வரையிலும். 2,871



1979 நவம்பர் 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

பயன் அடைந்த கிராம மக்களின் தொகை—

(இலட்சத்தில்.)

1974–75-ல் .. .. 0.82
1975–76-ல் .. .. 1.76
1976–77-ல் .. .. 1.85
1977–78-ல் .. .. 6.43
1978–79-ல் .. .. 16.71
1979–80-ல் .. .. 11.32
6 மாதங்கள் வரையில்.

பயன் அடைந்த கிராமங்களின் எண்ணிக்கை—

1974–75 .. 64
1975–76 .. 125
1976–77 .. 145
1977–78 .. 386
1978–79 .. 1,071
1979–80-ல் .. 682
6 மாதங்கள் வரையில்.

வேலை வாய்ப்புப் பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை —

1974–75 .. 25,408
1975–76 .. 13,553
1976–77 .. 35,822
1977–78 .. 38,415
1978–79 .. 42,170
1979–80-ல் .. 45,418

6 மாதங்கள் வரை

ஒவ்வொரு போக்குவரத்து கழகத்தின் சார்பாகவும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால் (பாண்டியன் போக்குவரத்துக் கழகம்) பேருந்துகளின் எண்ணிக்கை —

1974–75 .. 529
1975–76 .. 606
1976–77 .. 649
1977–78 .. 712
1978–79 .. 811
1979–80-ல் .. 875
6 மாதங்கள் வரை

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 6

(பிற்பகல் 12-20)

லாபம்–நஷ்டம் (ரூபாய் லட்சத்தில்) —74–75-ல் 8.78; 75–76-ல் 61.54; இது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் கணக்கு; 76–77-ல் 85.40; 77–78-ல் 160.26. 78–79-ல் 217.22; இந்த 6 மாதங்களில் லாபம் 194.24.

போனஸ் சதவிகிதம்— 74–75-ல் 18%; 75–76-ல் இல்லை. 76–77-ல் 13.30%; 77–78-ல் 20%; 78–79-ல் 20% இன்னும் கொடுக்கப்படவ்ல்லை.

வழித்தடங்கள் மொத்தம்— 74–75-ல் 319; 75–76-ல் 351; 76–77-ல் 360; 77–78-ல் 388; 78–79-ல் 451, இதுவரையில் 79–80-ல் 498.

பயனடைந்த கிராமங்களின் எண்ணிக்கை— 74–75-ல் 18; 75–76-ல் 46; 76–77-ல் 49; 77–78-ல் 170; 78–79-ல் 417, 79–80-ல் இதுவரையில் 170.

பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில்— 75–76-ல் 0.36; 76–77-ல் 0.81; 77–78-ல் 3.51; 78–79-ல் 7.73; 79–80-ல் 3.51.

வேலை வாய்ப்புகள் பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை— 1974–75-ல் 4,309; 1975–76-ல் 4,493; 76–77-ல் 5,015; 1977–78-ல் 5,536; 1978–79-ல் 5,969; இதுவரையில் 1979–80-ல் 6,296.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் முன்னேற்றம். பேருந்துகளின் எண்ணிக்கை— 74–75-ல் 486; 75–76-ல் 524; 76–77-ல் 521; 77–78-ல் 528; 78–79-ல் 558; 79–80-ல் 593.

இதை நான் இவ்வளவு விளக்கமாகக் கொடுப்பதற்குக் காரணம், திரு. கூத்தகுடி சண்முகம் போன்றவர்கள் எல்லாம் இந்த அரசு பேருந்துகள் விடவில்லை, இதைப்பற்றி பொறுப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்று அந்த அளவில் கருத்தைச் சொல்லாவிட்டாலும், பல பேர் அப்படி எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள் என்ற காரணத்தால், இவைகளை இங்கே நான் படித்துச்சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப் பட்டிருக்கிறேன்.

லாப–நஷ்டம் (ரூபாய் இலட்சத்தில்)— 74–75-ல் 65; 75-76-ல் 82.57; 76–77-ல் 17.61; 77–78-ல் 74.79; 78–79-ல் 148.86; 79–80-ல் 134.46— இந்த 6 மாதத்திற்கு இடையில்.

போனஸ் சதவிகிதம் 74–75-ல் 4%: 75–76-ல் இல்லை, 76–77-ல் 8.33%; 77–78-ல் 15%; 78–79-ல் 20%; இந்த ஆண்டு இன்னும் கொடுக்கப்படவில்லை.



1979 நவம்பர் 6] [திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்]

வழித்தடங்கள்— 1974–75-ல் 306; 1975–76-ல் 318; 1976–77-ல் 327; 1977–78-ல் 344; 1978–79-ல் 371; இந்த 6 மாத காலத்திற்குள் 390.

பயன் அடைந்த கிராமங்களின் எண்ணிக்கை— 1974–75-ல் 18: 75–76-ல் 29; 76–77-ல் 6; 77–78-ல் 15; 78–79-ல் 20; 79–80-ல் இந்த 6 மாதங்களில் 28.

பயனடைந்த மக்கள் தொகை— 10,000; 23,000; 20,000; 29,000; 3,10,000, இந்த ஆண்டு இது வரையில் 39,000.

வேலைவாய்ப்பு பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை :— 3,753; 3,714 4,024; 1977–78-ல் 4,043; 1978–79-ல் 4,277; இந்த ஆண்டு இதுவரையில் 4,418.

இப்படி ஒவ்வொரு பேருந்துகளிலும் வெவ்வேறு வகையில் அபிவிருத்தி என்ற நிலையில் காரியங்கள் உருவாக்கப்பட்டு, நடைபெற்று வந்திருக்கிறதே தவிர முன்னால் இருந்ததைவிட குறைவாகவோ அதைவிட நஷ்டங்கள் ஏற்படுகின்ற வகையிலோ போனஸ் கொடுப்பதில் குறைந்த நிலையிலோ இந்த ஆட்சி எந்தத் தவறையும் செய்யவில்லை என்பதையும் அக்கறை காட்டாமல் இல்லை என்பதையும் சோர்ந்து போனதன் காரணமாக இயங்காமல் இருக்கிறோம்; அதிகாரிகள் இயங்காமல் இருக்கிறார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்பதையும் இந்தப் புள்ளி விவரங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசும்போது பணம் கைமாறியது என்றெல்லாம் சொன்னார்கள். சென்ற கூட்டத் தொடரில் என்று நினைக்கிறேன். 25 இலட்சம், 26 இலட்சம் பின்னர் 21 இலட்சத்தைக் கொடுத்தார்கள் என்றும், 45 இலட்சம் கை மாறியது என்றும் சொன்னார்கள். இப்போது 75 இலட்சத்திற்கு போய், அது ஒரு கோடியாக மாறி அதற்குப் பிறகு ஒரு கோடிக்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற முறையிலே குற்றஞ்சாட்டி கூறப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தி.மு.க. உள்ளிட்ட பல கட்சிகளின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மைய அரசுக்கு அனுப்பிய விண்ணப்பத்தைக் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 24–4–1977 அன்று தனியார் துறையில் சிறு பஸ் உரிமையாளர்களுக்குப் பாதுகாப்பும் சலுகையும் அளிக்க வேண்டுமென்று தி.மு.க. உள்ளிட்ட பல முன்னாள் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு, மைய அரசுக்கு மனுக்கள் கொடுத்துள்ளார்கள்.

இந்த மனு கொடுத்த பின்னால், 3–11–1977-ந் தேதி ஜி.ஓ. 634 ஆணைப்படி, ஆளுநர் ஆட்சியின்போது, 3 பஸ்கள் வரை வைத்திருக்கும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால் தி.மு.க. ஆட்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜி.ஓ. 634 மூலம் பாதுகாப்பும் சலுகையும் பெறாத 3 பஸ்களுக்கு மேல் வைத்துள்ள தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு ஏற்கெனவே இருந்த பாதுகாப்பும் சலுகையும் தர வேண்டுமென்று மனுத் தந்திருக்கிறார்கள். அப்படித் தனியார் பஸ் உரிமையாளர்களுக்காக சலுகை கேட்டு மைய அரசுக்கு தி.மு.க. ஆட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களும், மாநிலங்கள் அவை தி.மு.க. உறுப்பினர்கள் கமலநாதன், காதர்ஷா ஆகியோர்களும் கையெழுத்திட்டுள்ளார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கல்யாணசுந்தரனார், இந்திரா காங்கிரஸ் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.வி. சுவாமிநாதன், ஜனதா கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தண்டாயுதபாணி ஆகியோர்களும் அந்தக்கடிதத்தில் கையெழுத்திட்டு, அதைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அவர்களுடைய அந்தக் கோரிக்கை எத்தனை நாட்களுக்கு கவனிக்கப் பெறாமல் காத்துக்கிடந்தது என்பதையும், இதற்காக அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள் என்பதையும் உணர வேண்டும். இந்த அரசு வந்த பிறகுதான் இதனை ஆராய்ந்து பார்த்து, சிந்தித்து, மன்ற உறுப்பினர்களின் மற்றவர்களின் கருத்திற்கிணங்க இந்த முடிவை எடுத்ததே தவிர, ஏதோ பணம் வாங்கிக்கொண்டு செய்வது என்றால் நாங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே செய்திருக்கலாம்; அல்லது ஒன்றரை ஆண்டுக்கு முன்னாலேயே செய்திருக்கலாம். இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டபோதே என்னுடைய நண்பர்கள் சொன்னார்கள்; செய்திருக்கலாம்.

[பிற்பகல் 12.30]

ஆகவே இப்படிப்பட்ட சேற்றை வாரி பூசுகின்ற, வீசுகின்ற முறையில் மற்றவர்கள் எங்களைப்பற்றிச் சொல்வதற்கு முன்னால், இப்படிப்பட்ட குற்றங்களைச் சொல்லக் கூடாது என்பதைக் கவனத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்....

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கைகள் நியாயம் என்று முதலமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்களேயானால், அவர் அதை உடனடியாகச் செய்திருக்கலாம். கால தாமதம் செய்ததற்குக் காரணம் தான் இடையிலே நடத்தப்பட்ட பேரம் என்பது என்னுடைய குற்றச்சாட்டு.



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எப்பொழுதுமே எந்தக் குற்றத்தைச் சொல்வதற்கு எதை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதிலே மிகத் திறமைசாலி என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆனாலும், அதற்கு முன்னால் இந்த அவையிலே என்ன பதில் சொன்னேன் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அதைப்பற்றி இந்த அரசு சிந்திக்கும், நிச்சயமாக முடிவு எடுக்கும் என்று சொல்கிற நேரத்திலேதான் வழக்கு மன்றத்திற்கும் அவர் போயிருந்தார் என்பதை மறந்து விடக் கூடாது. இந்தச் சூழ்நிலையில், கேட்டுவிட்டு பிறகு வேறு வழியின்றி செய்தாக வேண்டுமே என்ற நோக்கத்தில் ஆற அமரச் செய்தால், அங்கே தாமதத்திற்கு காரணம் ஏதோ நடந்திருக்கிறது என்று சொல்வது. உடனே செய்தால், ஏதோ கேட்காமல் செய்து விட்டார்கள், ஏதோ காரணம் இருக்கிறது, ஏதோ நடந்திருக்கிறது என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டிருந்தால் அது பொருத்தமாக இருக்காது. அப்படிச் சொல்வதற்கு ஏதாவது ஆதாரம். கடிதமோ அல்லது வேறு ஏதாவதோ இருந்தால் கொண்டு வந்து கொடுங்கள், தாராளமாக வழக்கு மன்றத்திற்குப் போகலாம், அதை நிச்சயமாகச் சந்திப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கேரளத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட தடங்கள் 32·9 சதவீதம், மேற்கு வங்காளத்தில் 15.87 சதவீதம், தமிழ் நாட்டில் 1976-ல் 47 சதவீதம், ஆனால் இன்றைய நிலைமை 57 சதவீதம் என்பதை நான் சொல்லிக் கொள்வதினால் நாட்டுடைமை ஆக்குகிற திட்டங்களில் எங்களுக்கு அக்கறை இருக்கிறது என்பது மட்டுமல்ல, மாண்புமிகு லத்தீப் அவர்கள் சொன்னது போல தனியார் துறையில் நியாயமாகப் பணியாற்றுகிற தனியார்களுக்கு வாய்ப்புக் கொடுத்தும், அதே நேரத்தில் தொழில்கள் எல்லாவற்றையும் அவர்களே எடுத்துக் கொண்டு பணம் சேர்த்துக் கொள்கிற முதலாளிகளாக ஆகிவிடுகிற நிலைமையை, மாற்றுகிற கொள்கையை நாங்கள் செயல் படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது மட்டும் அல்ல......

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். மற்றவர்களுக்கு நாங்கள் ஏதோ சாதகம் காட்டியிருப்பது போலவும், அவர்களுக்கு சாதகம் காட்டவில்லை என்பது போலவும் வரக் கூடாது. ஏதாவது இருந்தால் திரு. லத்தீப் அவர்கள் பேராசிரியர் அவர்களுக்கு எழுதிக் கொடுத்து விடட்டும், அவர் கேட்டுக் கொள்வார்.

இங்கே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே எங்களுடைய கொள்கையைச் சொல்லியாக வேண்டும். தனியார் துறைகளிடம் இருக்கிற புதிய புதிய வழித்தடங்களை எடுத்து தேசிய உடமையாக்கி, நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றால் கொடுத்து, அதை எப்படிக் கொடுக்க வேண்டும் என்பதைப்பற்றி முடிவு எடுத்து ....

திரு. எம். ஏ. லத்தீப் : தயவுசெய்து தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும்....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இனறைக்கு எப்படியும் முடித்தாக வேண்டும் என்று இருக்கிறது. எனக்கு உடல் நலம் சரியாக இல்லை என்று தெரியும். அதனால் இன்றைக்கே 1-1/2 மணிக்குள் முடித்து விட முடிவு செய்திருக்கிறேன்—யாரும் குறுக்கிடாமல் இருந்தால் அது முடியும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து லத்தீப் அவர்கள் உட்காருங்கள். முதலமைச்சர் பேசி முடித்த பிறகு நீங்கள் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இங்கே இன்னொன்றை நான் சொல்லியாக வேண்டும். அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப கொள்கையை நாங்கள் நிறைவேற்றியாக வேண்டும். இங்கே படித்துக் காண்பிக்கப்பட்ட குறிப்பில் 57 சதவீகம் நாம் தேசிய உடமையாக, வழித்தடங்களை ஆக்கியிருக்கிறோம் என்பதையும், நாங்கள் அதற்குப் பின் வாங்கவில்லை, கொஞ்சம் கொஞ்சமாகச் செய்து கொண்டுதான் இருக்கிறோம், நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதையும் குறிப்பிடும்போது, இன்னொன்றையும் தனியாகச் சொல்ல விரும்புகிறேன். புதிய தடங்களை, புதிய பேருந்துகளை புதிதாக தனியாரிடமிருந்து எடுத்துக் கொள்ளும்போது, நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும், உடனடியாக புதுத் தடங்களை, இல்லாத இடங்களுக்கு முதலில் பேருந்துகளை விட வேண்டிய தன் அவசியத்தையும், அவசரத்தையும் எல்லோரும் ஒத்துக் கொள்ள வேண்டும்.

கிராமப்புறத்தில் இருக்கிற மக்களுக்கு நாம் எந்த வகையில் எவ்வளவு விரைவில் இந்த பஸ் போக்குவரத்தை, பேருந்துகளை விட நம்மால் முடியுமோ அதைச் செய்து தீர வேண்டும் என்பதில் உங்களிலே யாருக்கும் கருத்து மாறுபாடு இருக்காது. ஆகவே நாம் பணத்தைச் செலவழிக்கும்போது ஓடிக் கொண்டிருக்கிற தடங்களிலே, அந்தப் பேருந்துகளை எடுத்துக்கொள்வதை விட முதலில் தனியார் துறையினர் முன்வந்து எந்தெந்த கிராமப் பகுதிகளில் பேருந்துகள் விட முடியாது என்ற நிலைமையில்



இருக்கிறார்களோ அந்த இடங்களுக்கு அரசாங்கப் பணத்தை செலவழித்து புதுப் பேருந்துகளை விட்டு, அந்தச் சாலைகளை மேம்படுத்தி சீர்படுத்த வழிவகைகளைக் கண்டு அதை நிறைவேற்றிக் கொண்ட பின் மறுபடியும் தேசியவுடமையாக்குவதை நாம் தொடர்வோம், தொடர வேண்டும் என்பது எங்களுடைய கருத்தாகும். ஆனால் அதற்காக தற்காலிகமாக தேசியமயமாக்குகிற கொள்கையை நாங்கள் விட்டுவிட்டோம், நிறுத்தி வைக்கிறோம் என்றல்ல. சிறுகச் சிறுக அதைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் அதிக அளவில் கிராமப்புறங்களோடு தொடர்பு கொள்ள புதிய பேருந்துகளை விட தனியார் துறை தயாராக இல்லை என்ற காரணத்தால் அரசாங்கம் அதைச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் அந்தப் பணியை நாங்கள் மேற்கொள்கிறோம். தவறுகள் நேரிடுவது இயற்கை. அதைப் பற்றிக் குறை கூறுவது என்றே வைத்துக்கொண்டால் எவ்வளவோ குறிப்புகளை எடுத்துக் காட்டமுடியும்.

ஆனால் ஒன்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். குற்றச்சாட்டு கூறுகிறேன் என்று யாரும் கருதக்கூடாது. நிலைமைகளை சில சமயங்கள் நெருக்கடியாக வரும்போது சில கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பேற்கிறவர்கள் சில முறைகளைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்படலாம். அந்த வகையில் ஒரு நிகழ்ச்சி 1975-ம் ஆண்டு நடந்தது என்பதை இந்தக் குறிப்புகள் மூலம் நான் எடுத்துச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். 4-12-1975 அன்றும், 16-12-1975 அன்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் பேருந்துக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று கோரி அரசாங்கத்திற்கு மனு செய்தனர். இது கோப்பின் பக்கம் 55-66, கொடி 'எல் உள்ளது. இந்தக் கோரிக்கைமீது ஆலோசனை கேட்கப்பட்டு, முன்னாள் போக்குவரத்து ஆணையர் 1974-ம் ஆண்டு மே மாதம் கட்டண உயர்வு ஏற்படுத்தியதால் தற்போது கட்டண உயர்வு தேவை இல்லை என அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறினார்கள். இது கோப்பின் பக்கம் 79-80, கொடி 'பி'-யில் உள்ளது. தனியார் துறை பஸ் முதலாளிகளுக்கு $11\frac{1}{4}$ கோடி கூடுதல் வருமானம் தரக்கூடிய அளவிற்கு பஸ் கட்டணத்தை உயர்த்தினால் மோட்டார் வாகன காலாண்டு வரியை கணிசமாக 150-ல் இருந்து 225 வரை உயர்த்தி அரசாங்கம் வருவாயைப் பெருக்க வேண்டும் என அப்போதிருந்த போக்குவரத்துச் செயலாளரும் நிதித்துறை செயலாளரும் குறிப்பிட்டுள்ளனர். இது கோப்பின் பக்கம் 15-16 கொடி 'ஸி'-ல் உள்ளது. ஆனால் தனியார் பஸ் முதலாளிகளுக்கு $11\frac{1}{4}$ கோடி அதிக வருமானம் வரும் பஸ் கட்டண உயர்வு செய்யப்பட்டபோது அரசாங்கத்திற்கு அதிக வருமானம் தரும் வரி உயர்வு அப்போது செய்யப்படவில்லை. போக்குவரத்து ஆணையரின் ஆலோசனையை மீறி தனியாருக்கு $11\frac{1}{4}$ கோடி ரூபாய் லாபம் கிட்டும் வகையில் பஸ் கட்டண உயர்விற்கான

செயற்குறிப்பு ஆணைக்காக சுற்றோட்டத்திற்கு விடப்பட்டது. பஸ் கட்டணம் 4 பைசாவிலிருந்து 5 பைசாவாக உயர்த்துவது பற்றி அமைச்சரவை முடிவு செய்யலாம் என்று முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராஜாராம் அவர்கள் கூறியுள்ளார்கள். அதை முன்னாள் முதல்வர் ஏற்கும் வகையில் 13-12-1975 அன்று ஒப்பமிட்டுள்ளார்கள். கோப்பின் பக்கம் 31. கொடி 'இ' இந்த மிக முக்கியமான பஸ் கட்டணக் கொள்கையை அமைச்சரவையில் முடிவு செய்யாமல் சுற்றோட்டத்தில் முடிவு செய்யலாம் என்று அமைச்சரவை முடிவெடுத்தார்கள். ஆனால் இந்த முக்கியமான கோப்பு 22-1-1976 அன்று இணைச் செயலரால் சுற்றோட்டத்திற்கு அனுப்பப்பட்டது. இணைச் செயலர் 22-1-76-ல் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அடுத்த கட்டமாக அந்தக் கோப்பு போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த திரு. ராஜாராமுக்குச் செல்ல வேண்டும். ஆனால் அவர்களிடம் செல்லவில்லை. மாறாக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு அந்தக் கோப்பு செல்கிறது.

[பிற்பகல் 12.40]

சுற்றோட்டத்தில் செல்லுகின்ற அந்த கோப்பு இணைச் செயலாளரால் கையெழுத்திடப்பெற்று 22-1-76 அன்று முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு அனுப்பப்பட்டு கையெழுத்திடுகிறார். அவர் கையெழுத்திடும் போது, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடன் பேசப்பட்டது, அவரும் அதை ஒத்துக்கொண்டார் என்று குறிப்பிட்டு, 22-1-76 அன்று கையெழுத்துக்கு மேலே எழுதப்பட்டு அத்துடன் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராஜாராம் டூரில் இருக்கிறார் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. எல்லாம் ஒரே நாளில் 22-1-76 அன்று போக்குவரத்துத் துறை அமைச்சரின் கையெழுத்தைப் பெறாமலேயேக் கூட முன்னாள் முதல்வர் கையெழுத்திட்டு, அடுத்த நாளே 23-1-76 அன்று சிறப்பு அரசிதழில் 'எக்ஸ்ட்ராடினறி கெஸட்டில்' வெளியிடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் தனியார் பஸ் முதலாளிகள் 11¼ கோடி ரூபாய் அதிக வருமானம் வருகின்ற பஸ் கட்டண உயர்வை போக்குவரத்துத்துறை ஆணையாளரின் ஆலோசனைக்கு மாறாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கோப்பின் பக்கம் 34, கொடி 'இ'.

இதைக் குறிப்பிடும்போது, ஏன் இவ்வாறு செய்தார்கள். இது தவறு தான், இதில் லஞ்சம் வாங்கிக் கொண்டு தான் செய்தார்கள் என்று சொன்னாலும், அதைப் பற்றி விசாரணை செய்கின்ற நேரத்தில் தான் இதிலுள்ள உண்மையை தெரிந்து கொள்ள முடியுமே தவிர, பேசும் போது எதையும் சொல்லிவிடலாம் ஆனால் நடந்தது சந்தேகத்திற்குரியது என்றும் சொல்லலாம் அல்லது சந்தேகத்திற்குரியதல்ல என்றும், அவசரமாக காரியத்தைச் செய்வதற்காக செய்யப்பட்டது என்றும் கூறலாம். அதை ஏற்றுக்கொள்பவர்



களின் மனப்பக்குவத்தையும், மற்றவர்களின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையையும் பொறுத்திருக்கிறதே தவிர இதை வைத்து மாத்திரம் ஒரு முடிவுக்கு வர முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஆனாலும் இப்படியும் நடக்கிறது, இப்படி நடக்கக்கூடிய சில காரியங்களையும் சரிதான் என்று ஒத்துக் கொள்ளலாம் என்றால். . . .

திரு. மு. கருணாநிதி : ஏற்கனவே தனியார் பஸ்களின் மீது வரி அதிகமாக இருக்கிறது என்று காரணம் காட்டித்தான் இப்படி ஒரு பைசா கட்டண உயர்வுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதே தவிர, முதலமைச்சர் அவர்கள் ஏதோ இதில் தவறு என்கிற அளவுக்கு படித்துக் காட்டியதில் எதுவும் இல்லை என்பதையும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கலந்து பேசித்தான் கையெழுத்திட்டிருக்கிறேன் என்று கூறியிருக்கிறேன். அதைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் மறுக்கவில்லை. அவர் ஊரில் இல்லை, அதற்கு முன்பு பேசப்பட்டிருக்கிறது. ஆகவே கையெழுத்திடப்பட்டிருக்கிறது. இதில் என்ன தவறு கண்டார் என்று புரியவில்லை. 11¼ கோடி என்று சொல்லும்போது, ஏதோ ஒரு முதலாளிக்கு மட்டும் லாபம் கிடைத்திருப்பது போல் சொல்லப்பட்டது. கிட்டத்தட்ட 3,000, 4,000 தனியார் பஸ் உரிமையாளர்களுக்குள்ள லாபம்தான். அந்த லாபம் இல்லாவிட்டால் அவர்களால் பஸ்களை ஓட்ட முடியாது என்று சொல்லப்பட்டது. ஆகவே 11¼ கோடி என்று ஒரு பெரிய தொகையைக் காட்டிவிடுகின்ற காரணத்தால் ஒருவருக்கே கிடைக்கும் தொகை அல்ல. ஆயிரக்கணக்கான 2,000 3,000 தனியார் பஸ் முதலாளிகளுக்கு வருகின்ற லாபம். இதை பங்கிட்டு பார்த்தால், இந்த 11¼ கோடியும் எவ்வளவு வரும் என்பது நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். சந்தேகப்பட்டால் சந்தேகப்படுகிறேன் என்று சொல்வது மற்றவர்களின் எண்ணத்தைப் பொறுத்தது. இல்லை என்றால் இதில் குற்றம் இல்லை என்று சொல்பவர்களுடைய நம்பிக்கையை பொறுத்தது. ஆனால் குற்றம் சுமத்துவது, குற்றம் சொல்வது என்று சொன்னால் இன்று முழுவதும் பேசிக் கொண்டிருக்க முடியும். ஏனென்றால் அமைச்சரவையில் வைத்து முடிவு செய்ய வேண்டியதை சுற்றோட்டத்தில் விடுவது சுற்றோட்டத்தில் வரும் போது சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் பார்த்து கையெழுத்துப் போடுவதற்கு முன்பாக முதலமைச்சர் கையெழுத்து போடுவது, கையெழுத்து போட்டுவிட்டு அவர்களிடம் கலந்துவிட்டேன் என்று சொல்வது, அவர்கள் ஊரில் இல்லை என்பது சரியாகத் தோன்றவில்லைஎன்கின்ற நிலைமையில், என்ன இருந்தாலும் நான்கு பைசாவிலிருந்து ஐந்து பைசாவாக அதிகமாக்கவேண்டும் என்று அதிகாரிகள்

சொல்லியிருந்தால், அந்த நிலைமையை ஏற்றுக்கொண்டு, அந்த கட்டண உயர்வுக்கு உத்தரவிட்டு அதை அனுமதித்து இருந்தால், பிரச்னை இருக்காது. குறை இருக்காது. 11¼ கோடி அளவுக்கு கட்டணத்தை உயர்த்துவதற்கு அந்த சிபாரிசை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கும்போது, இதில் ஆயிரம் கோடியா, 500 கோடியா, ஒரு ரூபாயா என்று பார்க்காமல்—சிபாரிசு செய்யாமல் இருக்கும் போது அனுமதிக்கலாமா? இது மாபெரும் குற்றம் என்று சொல்லி இதைவைத்துப்பழி சொல்லவேண்டும் என்ற ஆசையோடு இதைச் சொல்லுகிறேன் என்று யாரும் கருதவேண்டாம். இப்படி சில நேரங்களில் அவரவர்களுக்கு ஏற்படுகின்ற சூழ்நிலையில் அவசரமாகக் காரியங்களை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணும்போது, சில முடிவுகளுக்கு வருவது தவிர்க்க முடியாததாக இருக்கலாம். இது போன்றவைகளை வைத்துக் கொண்டு இதை பெரியக் குற்றச்சாட்டாகக் கொண்டுவருவது பயனுள்ளதா, உண்மையில் அது தேவைதானா? அவசியமிருந்தால், அதைப்பயன்படுத்திய பிறகு,தேவைப்பட்டால்சிலவற்றைக் கிளறிப்பார்ப்பது உண்மையிலேயே தேவைதானா என்பதற்காக இதைச் சுட்டிக்காட்டினேன்.

அதுபோல், பூம்புகாரைப் பற்றிச்சில விளக்கங்களை நான் தந்தாக வேண்டும். இதிலே குற்றச்சாட்டுக்கள் அடுக்கு அடுக்காக சொன்னபோது, அதற்கான கோப்பையே படித்துக் காண்பித்தேன். ஆனால், இங்கே டி.வி.யைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: துணைத் தலைவர் அவர்களே, அந்த உரிமைப் பிரச்னை பற்றி பேசக் கூடாது என்று நினைக்கிறேன். அந்த உரிமைப் பிரச்னை இன்னும் பரிசீலனையில் தான் இருக்கிறது. எழுப்புவதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. ஆனால், முதலமைச்சர் அவர்கள் டி.வி.யைப் பற்றிக் கொண்டு வரலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் உரிமைப் பிரச்னை பற்றிப் பேசவில்லை. என் நிலை என்ன என்பதைச் சொல்கிறேன். நான் சொல்வது, எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் கூறியபோது, கோப்புகளைப் படித்துக் காண்பித்தேன். என்னென்ன நடவடிக்கைகளை முதல் அமைச்சர் எடுக்க முடியுமோ அவைகளை யெல்லாம் எடுத்திருக்கிறேன். ஆதாரங்களைப் படித்துக் காண்பித்தேன். ஆனால், வானொலியில் சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றி விமர்சனம் வெளியிடுகின்ற முறையில், ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்கள். அதிலே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் பற்றி மட்டும் விளக்கமாக சொல்லிவிட்டு, அதற்குப் பதில் நாளை மறுநாள் முதல் அமைச்சர் சொல்வதாக இருக்கிறார், எல்லோரும்



என்ன சொல்லப் போகிறார் என்று பரபரப்புடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள், எதிர்பார்க்கின்றார்கள் என்று வானொலியிலே வெளியிட்டார்கள். என்ன காரணத்தினால், நான் சொன்னதை வெளியிடவில்லை என்பது தெரியவில்லை . . . . .

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, முதல்வர் டி.வி.யைப் பற்றி விளக்குவது பிரஜுடிஸ் . . . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இந்தப் பிரச்னை டி.வி.யைப் பற்றி அல்ல; வானொலியைப் பற்றியது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரிமைப் பிரச்னையைப் பற்றி பேசக் கூடாது என்பதல்ல. முதல் அமைச்சர் அவர்களுக்கு பதில் சொல்லுகின்ற உரிமை உண்டு.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: துணைத் தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்னையை கிளப்பிய பிறகு, உரிமைப் பிரச்னையைப் பற்றி தாங்கள் விளக்கம் கூறுவதிலே ஆட்சேபணை இல்லை. நான் உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்து, அந்த உரிமைப் பிரச்னை இந்தச்சபையிலே எடுத்துக்கொள்ளாதபோது, அந்த உரிமைப் பிரச்னை மீது முதல் அமைச்சர் அவர்கள் எப்படி பதில் சொல்ல முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதல் அமைச்சர் அவர்கள் அந்த உரிமைப் பிரச்னைக்குப் பதில் சொல்லவில்லை.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, சிறிய விளக்கம் தெரிவிக்க விரும்புகிறேன். சட்டப் பிரிவு 186 விதிப்படி, இந்தச் சபையின் மற்ற நிகழ்ச்சிகளை எடுத்துக்கொள்வதற்கு முன்னர், கேள்வி நேரம் ஒதுக்கப்படாத காரணத்தினால் உரிமைப் பிரச்னைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஆனால், சட்டப்படி அப்படி உரிமைப் பிரச்னைகள் எடுக்கப்படவில்லை . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள், ஏற்கனவே நீங்கள் சொல்லி, முடிவெடுத்தாகிவிட்டது. தயவு செய்து உட்காருங்கள்.

திரு. மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் வானொலியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். வானொலியில் செய்தியை நானும் கேட்டேன். ஆனால், முதலமைச்சர் சொல்வது மாறாக இருக்கிறது. வானொலிச் செய்தியில், நான் சொன்ன குற்றச்சாட்டுக்களை கூறிவிட்டு. முதல் அமைச்சர் நிருபிக்கத் தவறினால் என்று

குறிப்பிட்ட அந்த வார்த்தையையும் சொல்லிவிட்டு, முடிவு பற்றி என்ன பதில் சொல்லப் போகிறார் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வானொலியிலே........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த வார்த்தைகள் வேண்டுமென்றால் வேறாக இருக்கலாம். ஆனால் இந்தக் கருத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டது என்பதை கண்டிப்பாகச் சொல்கிறேன். எல்லோரும் முதலமைச்சர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தின் அடிப்படையில் வெளியிட்டிருக்கிறார்கள். யாராவது வேண்டுமென்றால், பதிவு செய்யப்பட்ட செய்தியைக் கேட்டுக் கொள்ளலாம்..

திரு. துரை முருகன் : நானும் அந்த நியூசைக் கேட்டேன்.. (குறுக்கீடு) என்னப்பா சொல்கிறீர்கள்?...... துணைசபாநாயகர் அனுமதியோடுதான் நான் முதல் அமைச்சர் அவர்களிடம் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து நீங்கள் பேசுங்கள், நான் சொல்கிறேன்....

[பிற்பகல் 12.50]

திரு. துரை முருகன் : முதலமைச்சர் குறிப்பிட்ட அந்தச் செய்தியை நானும் வானொலியிலே மாலைச் செய்தியில் கேட்டேன், அன்றைக்கு சட்டமன்ற நடவடிக்கை முடிந்த பிறகு 6½ மணிக்குக் கேட்டேன். பிறகு 7¼ மணிக்கு சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றிச் சொன்னதையும் கேட்டேன். அதிலே முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்லப் போகிறார் என்ற பரபரப்பு இருந்ததாகச் சொன்னது போல் அந்தப் பொருள் வருகிற அளவுக்கு உள்ள வார்த்தைகளைக் கூட அவர்கள் உபயோகப்படுத்தவில்லை. நான் முதலமைச்சருக்குத் தைரியமாகச் சொல்லுகிறேன். அவர்கள் படிப்பது எழுதி வைத்துப் படிப்பது. ரெக்கார்டு பண்ணியிருப்பார்கள். சபைக்கு அந்தக் குறிப்பைக் கொண்டு வரச் சொல்லலாம். அதற்கு நான் சேலஞ்ச் எடுத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வானொலிக்காக எத்தனை பேர் இங்கே பரிந்து பேசுகிறார்கள் என்பதும், எந்த அளவுக்கு உத்தரவாதம் தருகிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்கும்போது உண்மையில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நானும் அன்றுதான் கேட்டேன். அதைத் திரும்பவும் சொல்லுகிறேன். 'ராஜினாமாச் செய்யத் தயார்' என்பதைச் சொல்லிவிட்டு அதற்குப் பிறகு நான் படித்த



கோப்புகள் பற்றிய விவரத்தை அவர்கள் வெளியிடவில்லை என்பதை இங்கே நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். இதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்ளத் தயார். ஆனால், நான் என்ன சொல்லுகிறேன் என்றால்.......

(திரு. துரை முருகன் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் உட்கார வேண்டும்......

திரு. துரை முருகன் : முதலமைச்சர் அவர்கள் ராஜினாமாச் செய்யத் தயார் என்று சொன்னதை அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் சொல்வது போல்......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் பேச எழுந்தீர்கள் என்பதற்காக நான் உட்கார்ந்தேன். இன்னொருவர் பேச ஆரம்பித்து என்னுடைய பேச்சில் குறுக்கிடுவதை நான் நிச்சயமாக இந்த நேரத்தில்.

திரு. துரை முருகன் : I am raising a point of order.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சபையில் நடக்கிற விஷயத்தைப் பற்றி வேண்டுமானால் பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணலாம். ஏற்கனவே கலைஞர் சொன்னார். முதல்வர் பதில் சொல்லுகிறார். அதே சப்ஜக்டில் நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணுவது என்றால் அனுமதிக்க முடியாது. வேறு ஏதாவது இருந்தால் ரெய்ஸ் பண்ணலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: How can anybody raise a point of order to obstruct the proceedings? It is a new ruling. அவர் பேச வேண்டுமென்று நினைக்கிறார். அதற்காக பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னால்—the circumstances of the House clearly indicate,—Everybody knows.

திரு. துரை முருகன் : இவர் இப்போது எழுந்து பேசவேண்டுமென்று நினைக்கிறார், இவர் எழுந்து பேசுகிறார்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ண உரிமை இருக்கிறது. ஏற்கனவே கலைஞர் சொன்ன அதே சமாசாரம் என்றால் அதற்கு அனுமதி இல்லை. வேறு சமாசாரம் என்றால் பேசுங்கள். ஏற்கனவே சொன்ன விஷயத்தைத் திரும்பப் திரும்பப் பேசுவதற்கு பாயின்ட் ஆப் ஆர்டர் இடம் தராது.

இரண்டு பக்கத்திலும் அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : பண்ருட்டி இராமச்சந்திரன் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நேரடியாகப் பெயரைச் சொல்லிக் குறிப்பிடுவது முறையல்ல. அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : மாண்புமிகு அமைச்சர் என்று சொல்ல வேண்டுமா ? 'திரு. பண்ருட்டி இராமச்சந்திரன்'—போதுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இதிலே யாருக்கு வெற்றி என்பதல்ல. இதனால் பெருமை சேராது என்பதை மட்டும் வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு வர கப்பல்கள் வாங்க உலக நாடுகளில் உள்ள பல்வேறு கப்பல் கட்டும் தளங்களுடன் தொடர்பு கொண்டது. நிலக்கரி போக்குவரத்து தூத்துக்குடி கல்கத்தா, ஹால்டியா இந்த மூன்று துறைமுகங்களும் சம்பந்தப் பட்டிருப்பதால் இந்தத் துறைமுகங்கள் அமைப்புக்கேற்ற கப்பல்கள் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டது. 31–3–79–ம் தேதி யன்று பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் கப்பல் கட்டும் தளங்கள் தந்துள்ள விலைப்பட்டியலை, மற்றும் தொழில் நுணுக்கக் குறிப்புகளை அரசு போக்குவரத்துத் துறை செயலாளருக்கு அனுப்பியது. இதன்படி 38,400 டி. டபிள்யூ.டி. திறன் கொண்ட பல்சேரியக் கப்பல்களுக்கு இரண்டு நிறுவனங்கள் முறையே 11 மில்லியன் யு. எஸ். டாலருக்கும் 11.75 மில்லியன் யூ. எஸ். டாலருக்கும் விற்க முன் வந்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த விலையில் கிரேன்ஸ் மற்றும் கிராப்ஸ் முதலிய ஐடங்கள் அடங்கவில்லை. இதன்படி முதல் தரகர் கொடுத்த விலையில் கிரேன்ஸ் மற்றும் கிராஃப்ஸ் பொருந்தும் பொருட்டு அதிகச் செலவு உத்தேசமாக 4 மில்லியன் யு. எஸ். டாலர் என்றும், இரண்டாவது தரகர் கொடுத்த விலையில் ஏற்படும் அதிகச் செலவு 3.50 மில்லியன் யு.எஸ். டாலர் என்றும் நாவிகேஷன் செலவு ·025 மில்லியன் யு. எஸ். டாலர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விவரங்களின்படி பல்சேரியன் கப்பல் வாங்க ஆகும் செலவு 15 மில்லியன் யு. எஸ். டாலரிலிருந்து 15.50 மிலியன் யு. எஸ். டாலராக இருக்கும் என்று இருந்தது.

6–2–1979 அன்றுபோக்குவரத்துறை செயலாளர், மத்திய அரசின் அனுமதிக்குட்பட்டு பல்கேரியக் கப்பலை 10.75 மில்லியன் யு. எஸ். டாலர் வரை வாங்குவதற்கு உறுதியாக முன்வருவதற்கு அனுமதி தெரிவித்துக் கடிதம் எழுதினார்கள். இந்த 10.75



மில்லியன் யு. எஸ். டாலர் என்ற ஆஃபர் தற்போதைக்கு ஒரு கப்பலுக்கு 15 மில்லியன் யு. எஸ். டாலர், 15.50 மில்லியன் யு. எஸ். டாலர் வரை கேட்டிருந்த தொகைக்கு எதிர்த் தொகையானது, கவுண்டர் ஆஃபர். மேக்கனாள் அன்ட் மெக்கன்ஸி என்ற நிறுவனம் முதலிலே ஆபர் கிரேன்ஸ் அன்ட் கிராப்ஸ் தவிர்த்து கப்பலுக்கு 11.75 மில்லியன் யு. எஸ், டாலர் என்று குறிப்பிட்டிருந்தாலும் இந்த விலையில் 11 மிலியன் யு. எஸ். டாலராக இருக்க ஒப்புக்கொண்டார்கள். இந்த விலை மேலே சொன்னதுபோல் கிரேன்ஸ் அன்ட் கிராப் நேவிகேஷன் செலவுகள் அடங்காதது. இந்த இதரச் செலவுகளின் உத்தேசத் தொகை 3.75 மில்லியன் யு. எஸ். டாலர்கள் ஆகும். இந்த அளவுக்கு 15-லிருந்து 15.50 மிலியன் யு. எஸ். டாலர் வரை சொல்லப்பட்ட விலையையும், மற்ற கப்பல் தளங்களின் கப்பல்களின் விலைகளையும் கணக்கில் கொண்டு பல்கேரிய கப்பல்களை சராசரி விலையாக இறுதியாக 13 மில்லியன் யு. எஸ். டாலருக்கு வாங்க இந்த அரசின் அமைச்சரவை ஒப்புதலளித்தது.

இந்த விலை கிரேன்ஸ் போன்ற உறுப்புகளின் மதிப்பையும் சேர்த்த மொத்த விலையாகும். எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதுபோன்ற இரண்டு மிலியன் யு. எஸ். டாலருக்கு விலை உயர்த்தப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் முதன்முதலில் கிரேன்ஸ் அன்ட் கிராப்ஸ் இவைகளைச் சேர்த்துக் கொடுக்கப்பட்ட 15.5 மில்லியன் யு. எஸ். டாலர் என்னும் விலையைவிட இப்போது வாங்க இருக்கும் விலை சுமார் 2.5 மில்லியன் யு. எஸ். டாலர் குறைவு என்பதை எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

15–2–1979 அன்று பல்கேரிய கப்பலின் விலை ஸ்பேர் புரபல்லர், டெயில்எண்ட்ஷாப் என்னும் உறுப்புகளைத் தவிர்த்து 13.5 மில்லியன் யு. எஸ். டாலருக்கு மேக்கனான் அன்ட் மெக்கன்ஸி என்ற தரகர் நிறுவனத்தைச் சார்ந்த சுப்பிரமணியம் என்பவர் டெலக்ஸ் மூலம் தெரிவித்திருக்கிறார்கள். இந்த விலையில் கிரேன்ஸ் அன்ட் கிராப் உறுப்புகளின் விலையும் அடங்கியது ஆகும். மற்றும் சாம்சன் என்ற கப்பல் கட்டும் தளம் தங்களுடைய விலையை 16.22 மில்லியன் யு, எஸ். டாலருக்கு உயர்த்தி விட்டது என்றும் ஸஸேபோ என்ற கப்பல் கட்டும் தளம் அதனுடைய விலையை 16.5 மில்லியன் யு. எஸ். டாலர் பரிசீலனைக்குரியது என்றும் ஓசாகா என்ற கப்பல் கட்டும் தளம் அதனுடைய விலையை குறைக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்கள்.

5—3—1979 அன்று தமிழக அரசு பூம்புகார் கப்பல் போக்குவரத்து அதிகாரிகள் குழு 11.9 மில்லியன் யு. எஸ். டாலர் வரை கப்பலை வாங்க அனுமதியளித்து உள்ளது. இதற்கு மேலே விலை சொன்னால் அரசின் முன் அனுமதி பெறவேண்டுமென்று

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 6

கூறியிருந்தது. 12—3—1979 அன்று அதிகாரிகள் குழு Varna சென்று வந்த பிறகு அந்த அறிக்கையைச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில் Koraboimpex என்ற நிறுவனம் அந்தக் கப்பல் களை டெலிவரி எடுக்கும் நாளிலிருந்து இருபது ஆண்டுகளுக்கு உதிரி பாகங்கள் கிடைப்பதற்கான உறுதியை ஒப்பநதத்தில் குறிப்பிட்டுத் தருவதாகச் சொன்னார்கள். அந்த நிறுவனம் தனது அலுவலகம் ஒன்றை சென்னையில் ஏற்படுத்தி, இக் கப்பல்களில் பயன்படுத்தப்படும் உதிரி பாகங்களைத் தருவிப்ப தற்கும் பழுதுபார்ப்பதற்கும் முன்வந்துள்ளது. பல்கேரிய கப்பலுக்குப் பாதகமாக இருந்துவந்த இக் குறைகளை நீக்கி விடலாம் என்று குழு சிபாரிசு செய்தது. இந்த அறிவிப்புக்கள் ஒப்பந்தத்திலே இடம் பெற்றுள்ளன.

மேலும் தமிழ்நாடு மின் வாரியத்தின் பணிக்கென மூன்றாவது கப்பல் 1980 ஆம் ஆண்டின் இறுதியில் தேவைப்படும். எனவே ஒரே மாதிரியான கப்பலை ஒரே மாதிரியான பணிகளுக்கு என வாங்குவது என்பது ஒரே மாதிரியான ஸ்பேர் பார்ட்ஸ்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு உதவும் என்பதைக்கருதி ஒரேசமயத் தில் பேச்சு வார்த்தை நடத்துவது பலவிதங்களில் பலன் தரத்தக்க தாக அமையும். ஆக தற்போது இரண்டு கப்பல்களுக்கு மட்டும் பேச்சுவார்த்தை நடத்தாமல் நமக்குத் தேவையான தேதியிலே கப்பல்கள் கிடைப்பதற்கு 3 கப்பல்களுக்குச் சேர்த்து பேச்சு வார்த்தை நடத்தலாம் என்றும் அப்படிப் பேச்சுவார்த்தை நடத்துவது கழகத்திற்கு லாபகரமாக அமையும் என்றும் குறிப் பிட்டார்கள். இரண்டு கப்பல்களுக்கு மட்டும் என்று ஒப்பந்தம் செய்தால் மூன்றாவது கப்பலுக்கு பின்னர் பேச்சுவார்த்தை வைத்துக்கொண்டால் வேறுவிதமான கப்பல் வாங்கமாட்டோம் என்ற எண்ணத்தில் மூன்றாவது கப்பலும் அவர்களிடமிருந்து வாங்குவோம் என்று அவர்கள் கருதுவார்கள், எனவே இப்போது மூன்று கப்பல்களுக்கும் சேர்த்து ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று உறுதியாக குழு பரிந்துரைந்துள்ளது.

கப்பல் சொந்தக்காரர் 13 மில்லியன் யு. எஸ். டாலரும், இரண் டாவது கப்பலுக்கு 13.25 மில்லியன் யு.எஸ்.டாலரும், மூன்றாவது கப்பலுக்கு 13.80 மில்லியன் யு. எஸ். டாலரும் விலையாகக் கேட்ப தாகவும் முதல் கப்பல் 12.50 யு. எஸ். டாலரும் இரண்டாவது கப்பலுக்கு13.00 மிலியன் யு. எஸ். டாலரும் தற்போது முடிவு செய்ய இருக்கும் மூன்றாவது கப்பலுக்கு 13.50 மிலியன் யு. எஸ். டாலரும் கொடுப்பது நியாயமாக இருக்கும் என்று கருதுவதாகவும் குழு தெரிவித்துள்ளது.

[பிற்பகல் 1.00]

இதைக் கணக்கில் கொண்டால் முதல் இரண்டு கப்பல்களின் சராசரி விலை, அதாவது கப்பல் ஒன்றுக்கு 6—''கிரேன்களையும்'' 6—''கிராப்ட்ஸ்களையும்'' 'சேர்த்து சராசரி விலை 12.75



1979 நவம்பர் 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

மிலியன் டாலராக ஆகிறது. ஆகவே, தரகர்களிடமிருந்து பல்கேரியா கப்பல்களுக்கு கிடைத்த 'ஒரிஜினல் ஆபர்' 15.00 மிலியன் டாலர் 15.50 மிலியன் டாலர் மதிப்பாகும்.

இவை அனைத்தும் 24-3-1979அன்று தமிழக அமைச்சரவை யில் விவாதிக்கப்பட்டது. இறுதி விலைப்பட்டியலின்படி ''சம்சாங்'' ''ஹையூண்டி'' ''ஒசாக்கா'' கப்பல்கள் 16.00 மிலியன் யு. எஸ். டாலராகவும் ''சேஸ்போ'' கப்பல்கள் 16.2 மிலியன் யு. எஸ். டாலராகவும் ''பால்டிகா'' கப்பல்கள் ''கியர்'' இல்லாமல் 8.5 மிலியன் யு. எஸ். டாலராகவும் இதில் கியர் அமைப்பதற்கு ஆகும் முதல் ''பால்டிகா'' கப்பலுக்கு 13.65 மிலியன் டாலராகவும் கணக்குக் கொடுக்கப்பட்டது.

இந்த நிலையில் அமைச்சரவை பல்கேரியக் கப்பலை சராசரி 13.00 மிலியன் டாலருக்கு வாங்க அனுமதி கொடுத்தது. ''கோரா இம்பெக்ஸ்'' நிறுவனம் குறைந்தபட்சமாக சராசரி கப்பல் ஒன்றுக்கு 13.20 மிலியன் டாலர் வேண்டுமென்று கொடுத்திருந்த ''டெலக்ஸ்'' அமைச்சரவைக்கு தெரிவிக்கப் பட்டது. அதன் பேரில் பேச்சு வார்த்தையின்போது முடியாத பட்சத்தில் 13.20 மிலியன் டாலர் வரை நிர்ணயிக்க அரசுப் போக்குவரத்துத் துறை செயலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அத்துடன் போக்குவரத்துத் துறை செயலர் விலையை 13.00 மிலியன் டாலர் அளவில் முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

பூம்புகார் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் அமைச்சரவை குறிப்பிட்டிருந்ததைப் போலவே 13.00 மிலியன் டாலருக்கு ஒப்பந்தம் செய்துள்ளார்கள். இந்நிலையில் சுப்ரமணியம் என்பவர் அரசுக்கோ, பூம்புகார் போக்குவரத்துக் கழக அதிகாரிகளுக்கோ தெரியாமல் சில தகவல்களை இடைத் தரகர் என்ற முறையில் ''கோராபோ இம்பெக்ஸ்'' கப்பல் நிறுவனத் திற்கு தெரிவித்துள்ளார். இது குறித்து ''3டெலக்ஸ்'' நகல்கள் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக அதிகாரி களுக்கு அவர்கள் ''வர்ணா'' சென்றிருந்தபோது கிடைத் திருக்கின்றன. சுப்ரமணியம் லண்டனில் உள்ள அவர்களுடைய முக்கிய தரகர்களுக்குக் கொடுக்கப்பட்ட தகவல்கள், இரண்டு தரகர்களுக்கு இடையே உள்ள தொடர்புகள், இதில் அரசுக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை. இந்த டெலக்ஸ் காப்பிகளை 12—5—79வரைஅரசுக்குத்தெரியப்படுத்தவில்லை. இந்த டெலக்ஸ் காப்பிகள் அப்போதைய பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களின் பாதுகாப்பிலேயே இருந்தது. முதன் முறையாக அரசுக்குத் தகவல் சுமார் ஒன்றரை மாத காலத்திற்கும் பின்தான் கிடைத்தது. 11—5—79 அன்று சுப்ரமணியம் அவர்கள் கொடுத்திருந்த டெலக்ஸ் காப்பிகள் இயக்குநர் குழுவின் கூட்டத்தில் வைக்கப் பட்டது. இந்த நகல்கள் 14—5—79 அன்று அரசுக்கு அனுப்பப்

பட்டது. இதற்கு இடையில் 12—5—79 அன்று நான் அவரை அழைத்து பல கேள்விகளைக் கேட்டு நேரில் வரம் தெரிந்த பிறகுதான் இராமகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ்., இந்த மூன்று டெலக்ஸ் காப்பிகளையும் முதன் முறையாக என்னிடம் நேரில் காண்பித்தார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசின் கவனத்திற்கு சுப்ரமணியம் இடைத்தரகர் கையாண்ட தவறுகள் தெரிந்தவுடன் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் பல்கேரியா கப்பல் சம்பந்தமாக திரு. சுப்ரமணியத்துடன் கொண்டுள்ள வியாபாரத் தொடர்பை முழுவதும் உடனே நிறுத்திவிட வேண்டும், இனி எந்தக் காரணத்தைக் கொண்டும் அவருடன் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்றும் இந்த பல்கேரியா கப்பல் வாங்குவது பற்றிய மேற்கொண்ட தொடர்புகளை இனி அரசோடு நேரடித் தொடர்பாகத்தான் வைத்துக்கொள்ள வேண்டுமேயொழிய வேறு எந்தத் தனி நபர் புரோக்கர்கள் மூலமும் கூடாது என்றும் அரசு ஆணை பிறப்பித்தது. இந்தத் தவறுகளில் சம்பந்தப்பட்டவர்கள்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது என்பதை நான்தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது குறித்து அமைச்சரவையும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முடிவு எடுத்து இருக்கின்றது.

இந்தத் தவறுகள் வெளிப்படுவதற்கு முன்பு டெல்லியில் உள்ள கப்பல் வளர்ச்சி நிறுவனத்திற்கு மூன்று பல்கேரிய கப்பல்களை சராசரி 13.00 மிலியன் யு. எஸ். டாலர் விலையில் வாங்க அனுமதி கோரப்பட்டது. 9—5—79 அன்று ''பெவுலாத் லைன்ஸ்'' நிறுவனம் அனுப்பிய தகவலின்படி ஒரு டன் நிலக்கரியை ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடிக்குக் கொண்டு வர சராசரி செலவு ரூ. 62.15 ஆகும் என்று கணக்கிடப் பட்டது. இதையே பல்கேரியன் கப்பலின் மூலம் கொண்டு வர செலவு ரூ. 55.43 ஆகிறது. போலந்து கப்பல்களைப் பயன்படுத்தினால் மின் வாரியம் தொடர்ந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1.50 கோடி கூடுதலாகச் செலவிட நேரும். மேலும் போலந்து கப்பல்களின் ஒப்படைக்காலம் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்றதல்ல. இந்தக் காரணங்களால் போலந்து கப்பல் வாங்குவது பற்றிய குறிப்பு நிராகரிக்கப்பட்டது. எனவே, முன்பு எடுத்த முடிவின்படி மூன்று பல்கேரிய கப்பல்களை 13.00 மிலியன் யு. எஸ். டாலர் விலைக்கு நேரடியாக வாங்க உறுதிப்படுத்தப்பட்டு, 'ஷிப்பிங் டெவலப்மெண்ட்' கமிட்டியின் அனுமதி கோரப்பட்டது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கப்பலின் விலை 10.75 லிருந்து 13.00 மிலியன் யு. எஸ். டாலர் வரை இடையில் ஏறிவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். பல்கேரியா கப்பல்கள் பற்றிய முதலில் கொடுக்கப்பட்ட ஆபர்கள் 11.00 மிலியன் யு. எஸ். டாலர் மற்றும் 11.75 மிலியன் யு. எஸ். டாலர்களாகவும் இந்தத் தொகையுடன்



'கிரேன்ஸ் மற்றும் கிராப்ட்ஸ்க்கு' ஆகும் தொகையைச் சேர்த்தால் முதல் தரகரின்படி கப்பலுக்கு 15.00 மிலியன் யு. எஸ். டாலரும் இரண்டாவது தரகரின்படி கப்பலுக்கு 15.50 மிலியன் யு. எஸ். டாலரும் ஆகிறது. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் இந்த பல்கேரியா கப்பல்களை சராசரி 13.00 மிலியன் யு. எஸ். டாலருக்கு விலைக்கு மட்டுமே வாங்க ஒப்பந்தம் செய்து கொண்டதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. வாங்கவிருக்கும் விலை முதலில் கொடுக்கப் பட்ட விலையை விட 2.00 மிலியன் யு. எஸ். டாலர் கூடுதலாக அல்ல, 2.5 மில்லியன் யு. எஸ். டாலர் குறைவாகும். இந்தக் கப்பல்களின் விலையைக் குறித்த மதிப்பீட்டு விவரங்களையும் இந்த அவையின் முன் வைக்க நான் விரும்புகிறேன்.

லண்டனில் உள்ள தரமுள்ள மூன்று மதிப்பீட்டாளர்கள் ஒவ்வொரு கப்பலின் விலையையும் 15·00 மிலியன் யு. எஸ். டாலர் என்றோ அதற்கு மேலோ மதிப்பிட்டிருக்கிறார்கள். லண்டனில் உள்ள திரு. சி. எச். ரக் அன்ட் கோ நிறுவனத்தினர் 2—4—1979 அன்று மூன்று கப்பல்களும் முறையே 15.2, 15.4, 15.7 மில்லியன் யு. எஸ். டாலர்கள் பெறத்தக்கவை என்று மதிப்பிட்டுள்ளார்கள். பின்னர் கப்பல் வளர்ச்சி பொது இயக்குநர் மேலும் இரண்டு மதிப்பீட்டாளர்களின் கருத்தை வேண்டினர்.

அதன் பிறகு லண்டனில் உள்ள ''டேவிஸ் புரூஸ் அன்ட் கம்பெனி'' நிறுவனத்தினர் 15.4, 15.5, 15.75 மில்லியன் யு. எஸ். டாலர்கள் என்றும் திருவாளர்கள் ''டேம்ப்ளின் அன்ட் கோ'' நிறுவனத்தினர் 15, 15, 15 மில்லியன் யு. எஸ். டாலர் என்றும் கப்பல்களின் விலையை மதிப்பிட்டிருக்கின்றனர். மேலே குறிப்பிட்டுள்ள அயல் நாட்டு மதிப்பீட்டாளர்களின் மதிப்பீடுகளால் வாங்கப்போகும் கப்பல்களின் விலை நியாயமானது என்று உறுதிப்படுகிறது தற்போதைய ஒப்பந்தத்தின்படி கப்பலின் விலை 13 மில்லியன்டாலர் என்றால், வெறும் கப்பல் மட்டும் அல்ல; அதில் கிரேன்ஸ் க்ராப்ட்ஸ் விலையும் சேருகிறது. கிரேன்ஸ், க்ராப்ட்ஸ் விலை 2.5 மில்லியன் டாலர்: அதைக் கழித்தால் கப்பலின் விலை 10.5 மில்லியன் டாலர்தான்; தரகர்கள் கப்பலுக்கு மட்டும் 'யார்ட்' சார்பிலே சொன்ன விலை 11.75 மில்லியன் டாலர்; ஆனால் இறுதியில் கப்பலுக்கு ஒத்துக்கொள்ளப்பட்ட விலை 10.5 மில்லியன் டாலரே தவிர 13 மில்லீயன் டாலர் அல்ல.

<u>திரு. மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, முதலிலே 11, பிறகு 13 என்பதற்கான காரணங்களைச் சொன்னார்கள். ஆனால், அரசாங்கம் 13 மில்லியன் டாலருக்கு ஒத்துக் கொண்டுவிட்டது என்கின்ற மகிழ்ச்சிகரமான செய்தியை

[திரு. மு. கருணாநிதி] [1979 நவம்பர் 6

இடைத்தரகராக இருக்கிற மெக்கனான்ஸ் கம்பெனியினுடைய, இதிலே பங்கு பெற்றிருக்கிற சுப்பிரமணியம் டெலக்ஸ் மூலமாகத் தெரிவித்திருக்கின்றார்; அந்த ஆதாரத்தை இங்கே கொடுத்து இருக்கிறேன். பிறகு அவரே சொல்கிறார், அங்கே இருக்கின்ற மிஸ்டர் பி. என்பவர் பாயிண்ட் 1 இதை அதிகமாக ஆக்கு வாரேயானால் நல்லது, அவருடைய மனம் இளகி விடக் கூடாது; இது அதிக விலை என்று ஆகிவிடவேண்டும் என்று அவர் குறிப்பிடுகிறார். இங்கு அமைச்சரவையிலே 13 மில்லியன் என்று சொன்ன பிறகு, முதலமைச்சரே ஒப்புக்கொண்டிருக்கிறார், 13.2 என்று போக்குவரத்துத் துறைச் செயலாளருக்கு தான் அனுமதி கொடுத்ததாக முதலமைச்சரே இங்கே ஒப்புக்கொண்டிருக்கிறார். இடைத்தரகர்கள் முறை இனி வேண்டாம் என்று ஃபைலிலே எழுதியதாகச் சொல்கின்ற முதலமைச்சரை நான் கேட்பது, 7—5—1979 அன்று காபினட்—அமைச்சரவைக் கூட்டம் கூடுகிற அந்த நேரத்தில் Neptune Charters என்கின்ற பெயராலும் Fallad lines என்கின்ற பெயராலும் Ocean Hunters என்கின்ற பெயராலும் இந்த 3 போகஸ் கம்பெனிகளை வைத்துக் கொண்டு, அதே சுப்பிரமணியம் போலந்து கப்பலை வாங்கலாம், பல்கேரிய கப்பல் தேவையில்லையென்கின்ற முடிவுக்கு அமைச்சரவை வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அதைக் கண்டித்து அப்போதுள்ள இராமகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ். அவர்கள் எழுதிய கடிதத்தில், இறுதியாகக் குறிப்பிடுகிறார்

This would be the second abortive ship purchase contract by Messrs. Poompuhar Shipping Corporation within a period of three months. The Corporation would have no credibility whatsoever hereafter in the international ship market nor will the Corporation have any credibility with the Shipping Development Fund Committee and the Ministry of Shipping and Transport. In my view the request going to the Shipping Development Fund Committee would prove to be the death-knell for the Corporation.

இப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்தால் பூம்புகார் கார்ப்பரேஷனுக்கு அடிக்கின்ற சாவு மணியாக இருக்கும் இது. எனவே நம்முடைய நாணயத்தை உலகத்தார் பார்த்துக் குறைசொல்கின்ற அளவிற்கு நாம் நடந்து கொள்ளக் கூடாது. அதைப் போலவே மத்திய அமைச்சிலும், மத்தியிலே இருக்கிற ஷிப்பிங் கமிட்டியிடத்திலும் நாம் நாணயமற்றவர்கள், மதிப்பற்றவர்கள் என்ற நிலை உருவாகக் கூடாது என்று அந்த அளவுக்கு மிகுந்த எச்சரிக்கையோடு, ஆர்வத்தோடு, அக்கறையோடு செய்திருக்கிறார்கள். ஆனால், அவர் மீதுதான், இங்கு நமது முதலமைச்சர் அவர்களால் குறை சொல்லப்பட்டது.



1979 நவம்பர் 6]

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்;</u> துணைத் தலைவரவர்களே, இந்த, அவர் குறிப்பிட்ட 3 கம்பெனிகளிடமிருந்து வந்த தகவல்கள், அதில் குறிப்பாக, போலந்து நாட்டிலேயிருந்து வந்த அந்த ஆர்டரைப் பற்றி, ஆஃபரைப் பற்றி நான் கவனிப்பதற்குக் காரணம், ருப்பீ அளவிலே அதை வாங்கிக் கொள்ள முடியும் என்று அவர்கள் சொன்னார்கள். டாலர் மூலமாக வாங்குவது என்கிற பிரச்னைகள் வேறு என்பது அவருக்குத் தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். ரூபாய் கணக்கிலேயே வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லும்பொழுது, அரசுக்குப் பிரச்னைகள் குறைகின்றன, இந்தியப் பேரரசு அதிலே அக்கறை காட்டும். ஆகவே, அதைவிட விலை குறைவாகக் கிடைக்குமானால், வசதி இருக்குமானால் வாங்கலாம் என்று கருதினோம். அதற்காகத்தான் இந்தத் தகராறுகள் அதிகமாக, 13,2, 13, 13.5 என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் இந்த ஆஃபர் வந்தபொழுது அதை வேண்டாம் என்றும் சொல்லாமல், இது உண்மையா, இது கிடைக்குமா, அதை விட மலிவாக இதை வாங்க முடியுமா என்கின்ற எண்ணத்தில் அந்தப் பணியை நாங்கள் எடுத்துக் கொண்டோம்.

[பிற்பகல் 1-10]

அந்த வகையில் நாம் ஒரு மாதம் தாமதியுங்கள் என்று மைய அரசுக்கு எழுதினோம். ஆனால் நடந்தது அது அல்ல. அவர்கள் கொடுக்கலாம் என்று சொன்ன கப்பலே நாம் எதிர்பார்த்தது போல வராது என்பதற்கு இங்கே நான் புள்ளிவிவரத்தைப் படித்தேன். அது நஷ்டத்தை உண்டாக்குவதாக அமைந்தது. அதுவேதான் போலந்து கப்பலை நாம் வாங்க முடியாது என்று மறுப்பதற்குக் காரணமாக அமைந்தது என்பதை இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும்.

கொண்டு வந்து சேர்ப்பதற்கு ஆகும் செலவு பல்கேரியா கப்பலைவிட போலந்து கப்பலுக்கு அதிகம் ஆகிறது என்பதுதான் காரணம். ஹால்டியாவின் 3 துறைமுகங்களுடன் இந்தத் துறைமுகத்தை அமைப்பதற்கான ஏற்பாட்டுடன் கப்பலை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஏறக்குறைய ஒரு முறை வந்து சேருவதற்கு மைல் கணக்கிலே கணக்குப் பார்த்தால் ரூ. 2, 3 அதிகமாக போலந்துக் கப்பலுக்கு செலவுஆகிறதுஎன்றுதெரிந்து கொண்ட பின், கிரேன் கட்டித்தருகிறேன் என்று சொன்னவர்கள் 6 கிரேன் கட்டித்தர முடியாது, 4 தான் முடியும், ஒன்று வேண்டுமானால் ஏற்பாடு செய்து கொள்ள முயற்சிக்கிறோம் என்று சொல்லிய காரணத்தால் . . . .

திரு. மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இதே மன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் 2 நாளைக்கு முன்னே பேசுகிறபோது திரு. இராமகிருஷ்ணன் சொன்ன செய்திகள் தவறானது என்று —போலந்துக் கப்பலைப்பற்றி— நான் எடுத்துச் சொன்னேன் என்று குறிப்பிட்டார்கள். அது குறிப் பேட்டிலே பதிவாகியிருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறந்து இருக்கிறார்கள். போலந்து ஆஃபர் போகஸ் என்று அவர் சொன்னார். அவர்கள் அனுப்பிய கடிதத்திலே கையொப்பம் இல்லை, முத்திரை இல்லை, அது உண்மையான கடிதம்தானா அல்லது அப்படி ஒரு கம்பெனி இருக்கிறதா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது, ஏனென்றால் கையெழுத்திடப்படவில்லை, முத்திரையில்லை என்றார்கள். ஆனால் இதே கம்பெனி யார் வேறு ஒரு கடிதமும் போட்டோக்கள் அடங்கிய ஒரு புத்தகமும் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிற விலை எண்ணில் குறைபாடு இருக்கிறது, இதுதான் உண்மையான விலை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பார்க்காமலே, முதலமைச்சரிடத்திலே வந்த கடிதத்தை, வேறு எந்தக் காரணமோ எனக்குத் தெரியாது, போகஸ் என்று சொல்லியிருக்கிறார் என்றுதான் நான் குறிப்பிட்டேன். அதைப் படித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

இந்த விஷயத்தில் இன்னொன்றையும் நான் சொல்லி ஆக வேண்டும்.

திரு. மு. கருணாநிதி : போலந்துக் கப்பல்களை வாங்குவதற்கு அவர் எதிர்ப்பாக இருந்தார். ஆனால் அவர் சொன்ன காரணங்கள் சரியானது அல்ல என்பதுதான் அன்றைக்கு நாங்கள் எடுத்துக் காட்டியது. அதுமட்டும் அல்ல. அந்தப் போலந்துக் கப்பல்களை வாங்கலாம் என்று, இடைத்தரகர்களே வேண்டாமென்று முதலமைச்சர் சொன்ன பிறகும், ''ஓஷன் ஹன்டர்''

On enquiry from the Telephone Department, I have been told that no such name is listed in the Calcutta Telephone directory either.

டெலிபோன் டைரக்டரியிலேயே இல்லாத ஒரு கம்பெனியின் பெயர் .. .. ..



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் இதை வற்புறுத்திச் சொல்லவிரும்புகிறேன். இந்தப் பிரச்சனையில் ஆழமாக நாம் செல்ல வேண்டும். ஒரு அதிகாரி, ஒரு போலந்துக் கப்பல் கம்பெனி என்ற பெயரிலே வந்திருக்கிற ஒரு கடிதத்தில் முத்திரை இல்லை, ஆகவே அது போகஸ் என்று சொன்னால், மற்றக் கடிதங்களையும் மற்ற புக்லெட்களையும் ஏன் அவர் பார்க்கவில்லை. அதையும் பார்த்துவிட்டு, அதிலே இருக்கிற முத்திரையையும் பார்த்துவிட்டு நான் பார்த்தேன் ஆனால் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது என்று சொல்லியிருந்தால் சரி. ஆனால் அவற்றை அவர் பார்க்கவில்லை.

எங்களுக்குச் சொல்லப்பட்டதெல்லாம் ருப்பி வேல்யூவிலே கொடுக்கலாம், ரூபாய் வாங்கிக் கொண்டு கொடுக்கிறோம், இந்திய கரென்ஸியிலேயே கொடுங்கள் என்று சொன்னார்கள். அது ஒரு வசதியான வாய்ப்பு என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அதேபோல விலை குறைவாகவும் கிடைக்கும் என்றால் ஏன் வாங்கக் கூடாது என்று யாரும் நினைப்பார்கள். தவறு என்று சொல்ல முடியாது, தவறு என்று யாரும் சொல்லமாட்டார்கள். ஆனால் நம்பிக்கை இல்லாத சூழ்நிலையில் ஒரு மாதம் தள்ளிவையுங்கள் என்று சொன்னோமே தவிர இந்தக்கப்பலை வாங்க மாட்டோம், அந்தக் கப்பலை வாங்க வேண்டுமென்று யாரும் முயற்சி செய்யவில்லை. வந்த செய்திகளை வைத்து, தருகின்ற தகவல்களை அமைச்சரவையில் வைத்து ஒரு முடிவெடுக்கிறோம். முடிவெடுக்கிற நிலையில் விசாரித்த பிறகு அது சரியில்லை என்று தெரிந்த பிறகு நாங்கள் மீண்டும் அரசுக்கு, மைய அரசுக்கு எழுதி அதை வாங்கலாம் ஆனால் அதிலே ஏதாவது தவறு இருக்கிறதா என்று நீங்கள் கண்டுபிடித்துச் சொல்லுங்கள் என்று நாங்கள் சொல்லி இருக்கிறோம்.

இவ்வளவும் சொன்ன பிறகு சொல்கிறேன். இங்கே பேசுவது அனைத்தும், நடைபெறாத ஒரு ஒப்பந்தத்தைப் பற்றி, இன்னும் கப்பல் வாங்கிவிட்டோமா என்றால், அது குறித்து இன்றைக்குக் கூட தகவல் வந்ததாகத் தெரியவில்லை. இனிமேல்தான் கேட்க வேண்டும். கையெழுத்துப் போட்டார்களா என்று எனக்குத் தெரியாது. அதிகாரிகள் அங்கே சென்று இருக்கிறார்கள். என்ன முடிவு எடுத்து இருக்கிறார்கள் என்று எனக்கு இது வரையில் தகவல் இல்லை. இந்த நிமிடம் வரையில் தகவல் இல்லை. ஆகவே, அப்படி நடக்காத ஒன்றைப் பற்றி, ஒப்பந்தம் ஆகாத ஒன்றைப் பற்றி, அப்படிப்பட்ட நிலைமையில் இதிலே நாங்கள் ஏதோ பணத்தை வாங்கிக் கொண்டோம், 1 கோடி ரூபாய் வாங்கிக் கொண்டோம், 4 கோடி ரூபாய் கொடுக்க இருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்வதை நாம் எப்படி ஏற்றுக் கொள்வது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

திரு. மு. கருணாநிதி : பாயின்ட் ஆப் ஆர்டர். முதலமைச்சர் உண்மைக்கு மாறாக ஒன்றைச் சொல்வது முறையல்ல. ஒப்பந்தம் மார்ச் மாதம் முடிவுற்று இருக்கிறது. ஆகவே, ஒப்பந்தம் ஆகவில்லை என்று குறிப்பிடுவது சரியல்ல. ஒப்பந்தம் முடிவுற்று இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஒப்பந்தம் குறித்த காலத்திற்குள் வாங்க வேண்டும் என்று மேற்கொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தம் காலாவதியாகி 4 மாதம் ஆகிறது. இதுதான் உண்மை நிலை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, உண்மை நிலையை நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஒப்பந்தத்தை கையெழுத்துப் போட்டுவிட்டு வந்தார்கள். அந்த ஒப்பந்தத்தில் இருக்கிற பிரச்னைகள் நீடித்துக் கொண்டே இருந்தன. நிறைவேறவில்லை. அதில் நாங்கள் கேட்பதை அவர்கள் செய்ய மாட்டேன்' என்று சொல்கிற நிலைமை, செய்து கொடுக்க முடியாது என்று சொல்கிற நிலைமை அப்படியானால் வேண்டாம் என்று சொல்வது என்று இப்படி இருந்தால், முடிவு எங்கே வருகிறது? கப்பல் நாங்கள் வாங்கிக்கொள்கிறோம் என்று ஒப்புக்கொண்டு, இங்கே இருந்து பணம் வங்கியில் கட்டி அனுப்பினால் அப்போது தான் அது உறுதி செய்யப்படுகிறது. இங்கே வங்கியில் பணம் கட்டிய பிறகுதான் அதை ஏற்றுக்கொள்வார்கள். அது வரையில் உத்தரவாதம் இல்லை. நாம் கேட்டபோது, அவர்கள் சொல்கிற தேதியில் பணம் கட்டவேண்டும். அவர்கள் கொடுக்கிற தேதியில் பணம் கட்டியாகவேண்டும். பணம் அந்தத் தேதியில் கட்டவில்லையென்றால், ஒப்பந்தம் காலாவதியாகிவிடும்.

அந்த நிலைமையில் புதிய ஒப்பந்தம் செய்வது போல், தாமதமாகிப் போய்விட்ட அந்த ஒப்பந்தத்தின்மீது மீண்டும் பேசவேண்டிய நிலைமைக்கு அவர்கள் இழுத்துக் கொண்டே இருந்தார்கள். ஏனென்றால் சொன்ன டயத்திற்கு இந்தத் தகராறு காரணமாக வாங்க முடியவில்லை. பிரச்னை அதிகமாகியது. ஆகவே, எச்சரிக்கை காரணமாக தாமதமாகியதே ஒழிய லாபத்தை எண்ணி அல்ல. அந்த லாபத்தை எண்ணி இருந்தால் நாங்கள் ரஷ்யா—கம்யூனிஸ்ட் நாட்டு கப்பலைத் தேடிப் போய் இருக்க வேண்டாம். வேறு வழியில் செய்து இருக்க முடியும்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பைலிலே இடைத்தரகர்கள் கூடாது என்று எழுதினார்களே, அது எந்தத் தேதியில் எழுதப்பட்டது அந்தப் பைலில் என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : கோப்பைக் கொண்டு வந்து தான் பதில் சொல்ல முடியும். இப்போது கோப்பு இல்லை. கோப்பு வந்தவுடனே சொல்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : நான் தலைவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க ஆசைப்படுகிறேன். எப்போது ஒரு கோப்பு இந்த மன்றத்திற்கு வந்து படித்துக் காட்டப்பட்டு இருக்கிறதோ, அது மன்றத்தின் பொது சொத்தாகிவிடுகிறது. ஏற்கெனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, இரண்டொரு பைல்கள் இங்கே கொண்டுவரப்பட்டு அது மன்றத்தின் பொதுச் சொத்தாக்கப்பட்டு, அதை விரிவாக 1 மணி நேரம் இரண்டு மணி நேரம், அல்லது ஒரு நாள் முழுவதும் பார்க்க அவகாசம் உறுப்பினர்களுக்குத் தரவேண்டும் என்று கோரி, சபாநாயகர் முன்னிலையில் அவர் அறையில் இந்தப் பைல் வைக்கப்பட்டுள்ள மரபு இந்த அவைக்கு உண்டு. தாங்களும் அறிவீர்கள். ஏனவே அந்தப் பைல் தங்கள் அறையில் வைக்கப்பட்டு, நாங்கள் எல்லாம் பார்ப்பதற்கு ஒரு நாள் நீங்கள் வசதி செய்து தருவீர்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதை அன்றே கேட்டு இருந்தால், அப்போதே கையில் கொடுத்து இருப்பேன். முன்பு 29 வயதா, 31 வயதா என்ற தகராறு ஏற்பட்டபோது, உடனே கோப்பை உங்கள் கையில் கொடுத்ததைப்போல், கொடுத்து இருப்பேன். அப்போது கேட்காமல் இருந்து விட்டு, இப்போது மரபு என்று சொன்னால், எனக்கு அது தெரியாது. அப்படி பைல் வேண்டுமானால், எப்போது வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை. பைல் வேண்டும் என்று அன்று நீங்கள் யாரும் கேட்கவில்லை. இனிமேல் முன்னாலேயே கேட்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : அந்தப் பைலைப் பார்ப்பதற்கு எந்தத் தேதியை ஒதுக்குகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது—அன்றே அந்தக் கோப்பைப் படிக்கிறபோது, இங்கே இருந்தவர்கள்—"அந்தக் கோப்பை நாங்கள் பார்க்கவேண்டும். பேரவைத் தலைவர் அறையில் வைக்க ஏற்பாடு செய்தால் நல்லது" என்று கேட்டு இருந்தால், நான் அப்போதே அதைப் பார்க்க ஏற்பாடு செய்து இருப்பேன் என்பதாரும். அதுதான் முறை.

அப்படி யாரும் கேட்காதபோது, அந்தக் கோப்பை எடுத்துக் கொண்டு போய் என் அறையில் வையுங்கள் என்று சபாநாயகர் எப்படிச் சொல்ல முடியும்? இப்போது தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அந்தக் கோப்பைப் பார்க்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறார். அன்றைக்குக் கேட்கவில்லை. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் பதில் சொல்லிக் கொள்கிறேன். மற்றவர்கள் உட்காரலாம்.

[பிற்பகல் 1-20]

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில் ஒரு கோப்பு இந்த அவைக்குக் கொண்டு வரப்பட்டது. அன்றைய தினம் சபாநாயகர் அவர்களுடைய அறையிலே வைத்துப் பார்ப்பதற்கு அனுமதி கொடுத்தார்கள். ஆனால் அன்றைக்கு அந்தக் கோப்பின் மீதே பிரச்சனை இருந்தது. ஆனால் இன்றைக்கு அந்தக் கோப்பின் மீது பிரச்சினை இல்லை. அந்தக் கோப்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவை அன்றைக்கு படித்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தக் கோப்பினை முழுவதுமாகப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார்களா? அல்லது அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் படித்த உத்தரவை நினைவுபடுத்திப் பார்த்துக் கொள்வதற்காக மீண்டும் படிக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா என்பது தெரிந்த பிறகுதான் அதை இங்கே கொண்டு வர வேண்டும். காரணம் இப்போது அந்தக் கோப்பு இந்த அவையினுடைய பிரச்சனையாக வரவில்லை.

திரு. துரை முருகன் : நானும் சொல்லிவிடுகிறேன். தலைவரவர்களே, இதுவும் கோப்பைப் பற்றிய பிரச்சனைதான். கப்பல் வாங்குகிற ஊழல் விவகாரம் இந்தக் கோப்பிலே சம்பந்தப்பட்டிருக்கிறது. அதிலே தேதி மாறியிருக்கிறது. அதையெல்லாம் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முருகன் அவர்கள் உட்கார வேண்டும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அன்றைக்கு அந்தக் கோப்பை யாரும் கேட்டு, வரவழைத்து படிக்கவில்லை. (குறுக்கீடு). அவர் படித்த கோப்பை தாங்கள் பார்க்க வேண்டும் என்று அன்றைக்கு யாரும் அவர்களைக் கேட்கவும் இல்லை. இப்போதுதான் எதிர்க்கட்சித் தலைவர் கேட்கிறார். அது என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்கார்ந்து கொண்டே நீங்கள் பேசினால் என்ன அர்த்தம்? யாராவது ஒருவர் எழுந்து பேசுங்கள்.





மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே கப்பல் வாங்குவது பற்றிய பிரச்சனையைக் கிளப்பி, அவர் என்னென்ன பேச முடியுமோ அத்தனை கருத்துக்களையும் அவைக்குச் சொன்னதற்குப் பிறகுமுதலமைச்சர் பொறுப்பிலே இருக்கிற, அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற, கருத்தை வழங்கக்கூடிய நிலையிலே இருக்கிற அவர், அதற்கான பதிலைச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிற போது மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் எழுந்து 'கப்பல் பேர ஊழல்' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியது எந்த அளவுக்கு அனுமதிக்கக்கூடியது என்பது பற்றித் தாங்கள் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்ன குற்றச்சாட்டுகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் என்னிடம் ஒரு பிரச்சனையை எழுப்பினார்கள். அந்தப் பிரச்சனையைபற்றி என்னிடம் என்ன முடிவு என்று கேட்கிறார்கள். அந்த நேரத்தில் திரு. துரை முருகன் எழுந்து, எழுந்தவுடனே கப்பல் பேர ஊழல் என்று சொல்வது சரியல்ல.

திரு. மு. கருணாநிதி : நான் சொல்கிறேன். கப்பல் பேர ஊழல்தான. கடைந்தெடுத்த ஊழல்.
''கப்பல் பேர ஊழல் நடைபெறவில்லை; அதை நிரூபிக்க முடியுமா? ராஜிநாமா செய்கிறோம்'' என்றெல்லாம் பத்திரிகைகளுக்கு அவர்கள் தலைப்புச் செய்தி கொடுத்து விடலாம். ஆனால் சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் ஒருவரை வைத்து விசாரணை செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறதா? நான் 20 ஆதாரங்களைத் தந்திருக்கிறேன். இன்னும் நிரூபிக்கவில்லை என்று சொன்னால் என்ன பொருள்? 20 ஆதாரங்கள் இங்கே தரப்பட்டிருக்கின்றன. இன்னும் மேலும் பல கடிதங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. அவைகளை எல்லாம் தரத் தயாராக இருக்கிறேன். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்—ஏற்கெனவே கேட்டீர்களே ப.உ. சண்முகம் மீதும் மற்றவர்கள் மீதும் விசாரணை நடத்த சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் வைக்க வேண்டுமென்று—அதைப்போல கேட்கிறேன்—சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் வைப்பதற்குத் தயாராக இருந்தால் நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, இதை நான் ஏற்றுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) பிரதம அமைச்சருக்கு நானே இதைப் பற்றி கடிதம் எழுதுகிறேன். இதிலே இந்த அரசு

கவலைப்பட வில்லை; அச்சப்படவில்லை; வெட்கப்படவில்லை; வேதனைப்படவில்லை; தலை குனிய இடமில்லை; பின்வாங்க இடமில்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). (குறுக்கீடு—பல குரல்கள், தட்டுங்கள், தட்டுங்கள்; நாங்களும் தட்டுவோம் எங்களுக்கும் தட்டுவதற்கு உரிமை இருக்கிறது; நாங்களும் தட்டுவோம்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> ஒரு பிரச்சனை எழுகிற போது அந்தந்தக் கட்சித் தலைவர்கள் பேசும்போது, அந்தந்தக் கட்சிக்காரர்கள் அதை ஆதரிக்கும் வகையில் மேசையைத் தட்டு கிறார்கள். (குறுக்கீடு) தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும் போது அவர்களுடைய கருத்தை ஆதரிக்கும் வகையில் ஆளும் கட்சிக்காரர்கள் மேசையை தட்டுகிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் பேசும்போது நீங்கள் மேசையை தட்டுகிறீர்கள். ஒரு கருத்தைத் தலைவர்கள் சொல்லும்போது அதை ஆதரிக்கும் வகையில் மேஜையைத் தட்டுவதை ஒரு மரபாக நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதற்கு மேல் பிரச்சனை இருந்தால், அது என்னுடைய கவனத்திற்கு வந்தால், அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டியது என்னுடைய கடமை. அது அல்லாமல், அவர்கள் தட்டினால் நானும் தட்டுவேன். நாங்களும் தட்டுவோம் என்று சொன்னால் என்ன அர்த்தம்? தட்டுங்கள். தட்ட வேண்டாமென்று சொல்லவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது நீங்களும் தட்டுங்கள். உங்களைத் தட்ட வேண்டாம் மென்று சொல்லவில்லை.

<u>திரு. துரை முருகன் :</u> தட்டுவது அவர்களுடைய உரிமை; தட்டட்டும். அதிலே எனக்கு ஒரு மகிழ்ச்சி. அவர்களுக்கு தட்டுவதற்கு உரிமை இருக்கிறது. அவர்களுடைய தலைவர் சொன்ன கருத்தை ஆதரித்து, தட்டுவது அவர்களுடைய உரிமை. அதைப் போல எங்கள் கட்சித் தலைவர் சொல்லுகின்ற கருத்தை ஆதரித்து, தட்டுவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. அதை மறுக்கவில்லை. ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசின்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக் கின்றன. அதை விசாரணை செய்ய வேண்டாமா? அதற்கு..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. துரை முருகன், நீங்கள் அதோடு நிறுத்திவிடுங்கள்; அதற்குமேல் வேண்டாம் உங்களுடைய உடல் நிலை சரியில்லை. நீங்கள் உட்காருங்கள்

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் சுப்ரீம் கோர்ட் ஜட்ஜை வைத்து இது பற்றி விசாரணைக்கு தயாராக இருப்பதாகச் சொன்னதற்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன். உடனடியாக அந்த காரியம் நடை





பெறுமானால் என்னிடம் உள்ள ஏராளமான ஆதாரங்களோடு இந்த ஊழலை நிரூபிக்க நான் தயாராக இருக்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி)

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திரத்திலே ஒரு வரலாற்றைப் படைக்கிற அளவுக்கு பல் வேறு ஊழல்கள் சொல்லப்பட்ட நேரத்திலே, (குறுக்கீடு).....

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> வரலாறு படைத்த ஊழல்கள் என்று சொல்லலாமா?.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதை நான் சொல்ல வேண்டும். அவர் சொல்லி முடித்தவுடன் அதற்கு நான் பதில் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (கூச்சல் குழப்பம்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ரகுமான்கான் தயவு செய்து உட்கார வேண்டும்.

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> அவர்கள் பேசலாம். நாங்கள் பேசக் கூடாதா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்களும் என் அனு மதியுடன் பேசலாம். அவர் என்னுடைய அனுமதியோடு தான் பேசிக் கொண்டிருக்கிறார்.

<u>திரு. அ. ரகுமான்கான் ;</u> நாங்கள் மட்டும் தான் உட்கார வேண்டுமா? அவர்களையும் உட்காரச் சொல்லுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர் என்னுடைய அனுமதியோடு பேசிக் கொண்டிருக்கிறார்.

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> எனக்கு மட்டும் அனுமதி இல்லையா என்ன?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உங்களுக்கு நான் அனுமதி கொடுத்தால் தான் பேசலாம். அவருக்கு நான் அனுமதி கொடுத்திருக்கிறேன். உட்காருங்கள்.

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> சட்டத்திற்குப் புறம்பாக நீங்கள் போக முடியாது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவு செய்து உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) தயவு செய்து அமைதியாக இருக்க வேண்டும். சட்டம் தெரிந்த வழக்கறிஞரே சட்டத்தைப் படித்துவிட்டு சொல்லட்டும்; என்னுடைய அனுமதி இல்லாமல் இங்கே எழுந்திருந்து பேசமுடியுமா? இது சட்டப் பேரவை; உட்காருங்கள்.

<u>திரு. க. அன்பழகன் :</u> தலைவர் அவர்களே, நான் கொண்டு வந்த கண்டனத் தீர்மானத்தைத் தொடர்ந்து முடிவில் பேச முடியாமல்செய்து விடக் கூடாது என்பதற்காக நான் முடிவில் பேசுவதற்கு தங்களிடம் அனுமதி கேட்கிறேன். நான் எப்போது பேச வேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடித்து விட்டார்களேயானால், நான் இதற்கு மேல் $1\frac{1}{2}$ மணிக்கு மேல் பேச வேண்டுமா? பேச முடியுமா அவையில் இருப்பவர்கள் அவ்வளவு நேரம் தங்குவார்களா? அல்லது மறுபடியும் இன்னொரு நாள் பேச வேண்டுமா என்று தாங்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் தயாராக இருந்தால் அவை தயாராக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

<u>திரு. நா. சுந்தரராஜ் :</u> தலைவர் அவர்களே, நாங்கள் தயாராக இல்லை.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> இல்லையா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கூடுதலாக இன்னும் $\frac{1}{2}$ மணி நேரம் அல்லது $\frac{3}{4}$ மணி நேரம் வைத்து நடத்தி முடித்து விடலாம் என்று கருதுகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சாட்டப்பட்ட குற்றச் சாட்டுகள் நிறைய இருக்கின்றன. இப்பொழுது இரண்டு, மூன்று குற்றச் சாட்டுகளுக்குத் தான் பதில் சொல்லியிருக்கிறேன். இன்னும் போலீஸ்-காவல் துறையைப் பற்றி எல்லாம் பேசவே இல்லை. அவை பற்றி நான் சொல்லியாக வேண்டியிருக்கிறது. ஆகவே நான் ஏற்கெனவே நேற்றே சொன்னேன், குறுக்கே யாரும் பேசாமல் இருந்தால் இன்று இன்னும் $\frac{1}{2}$ மணி அல்லது 1 மணி நேரம் கூடுதலாக எடுத்துக் கொண்டு பேசி முடித்து விடலாம் என்றேன்.

பதில் சொல்கிறபோதே பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. உண்மையை பத்திரிக்கைகள் வெளியிட வேண்டும். என்றாலும் அங்குள்ளவர்கள் பேச்சை பற்றி மாத்திரம் வெளியிட்டு விட்டு, எதிர்க்கட்சியில் இருப்பதாக, எங்களையோ, அல்லது மற்றவர்களையோ கருதிக் கொண்டு



நாங்கள் சொல்வதை வெளியிடாத நிலைமையில் நாகரிகம் வளர்ந்து இருக்கிறது. எனவே மக்களுக்கு உண்மைகளைத் தெரிவிக்க இந்த சட்டமன்றத்தை நான் பயன்படுத்தியாக வேண்டும். ஆக இங்கே சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு என்னிடம் உள்ள எதிர் ஆதாரங்களை வெளியிட்டாக வேண்டும், ஆகவே பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அதற்கான வாய்ப்பைத் தந்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்சினை பற்றி பேராசிரியர் அவர்கள் ஒரு கேள்வியை கிளப்பினார்கள். 'எப்பொழுது நான் பேசுவது' என்று. $1\frac{1}{2}$ மணிக்குள் பேச வேண்டும் என்று நினைத்துக்கொண்டு சொன்னார்கள். சபைக்கு மறுப்பு இல்லையென்றால் மாலை 4 மணிக்கு ஆரம்பித்து அதை இன்றோடு முடித்து விடலாமா? (வேண்டாம் என்று உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> முன் வரிசையிலே உள்ளவர்கள் வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். மாலைக் கூட்டம் வேண்டாம்.

[பிற்பகல் 1-30]

எனினும் இந்த விவாதம் முடிந்த பிறகுதான் பிற சட்ட முன்வடிவுகளுக்குச் செல்ல வேண்டும். எதிர்கட்சித் தலைவர்களுடைய அபிப்பிராயம் என்ன? நாளைய தினம் சட்ட முன்வடிவுகளை வைத்துக் கொள்வதா அல்லது தொடர்ந்து இந்த விவாதத்தை வைத்து முடித்து விட்டு பிறகு அவற்றை வைத்துக் கொள்வதா?

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> எதிர்கட்சித் தலைவர் அவர்கள் நாளையதினம் ஊரில் இருக்க மாட்டார்கள். முதல் அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் இன்னும் மூன்று மணி நேரம் பேசுவார்கள் போல் தெரிகிறது. ஆகவே, நாளைய தினம் சட்ட முன்வடிவுகளை எடுத்துக் கொண்டு நாளை மறுதினம் இந்த விவாதத்தைத் தொடரலாம்.

<u>திரு. என். சங்கரய்யா :</u> நாளைக்கு சட்ட முன்வடிவுகளை எடுத்துக் கொண்டு நாளை மறுதினம், அவர்கள் இருக்கும் போது இதை முடித்துவிடலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

180. 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பக் பல்கலைக் கழகச் சட்டம் செயலுக்கு வரும் நாளினை நிர்ணயிப்பது குறித்து கல்வித் துறையின் 23-8-1978 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 1573ல் வெளியான அறிவிப்பு [1978ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 43 (2)-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

181. சென்னையிலுள்ள பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் பல்கலைக் கழக ஆட்சிக் குழு செயல்படத் தொடங்கும் நாளினை நிர்ணயிப்பது குறித்து கல்வித் துறையின் 5-1-1979ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 30-ல் வெளியாள அறிவிப்பு [1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 30/1978) 43(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

182. சென்னையிலுள்ள பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் நிதிக்குழு செயல்படத் தொடங்கும் நாளினை நிர்ணயிப்பது குறித்து கல்வித் துறையின் 16-2-1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 252-ல் வெளியான அறிவிப்பு [1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 43(2)- வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

183. அரிசனங்கள், பழங்குடியினருக்கு ஆசிரியர் பணியில் இட ஒதுக்கீடு செய்வது தொடர்பாக தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்கு படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 21-10-1978 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 1896 ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1974) 57(2)-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

184. தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மின் நிறுவனங்கள் மாநில, மத்திய அரசுத் துறைகள் மற்றும் இந்திய இரயில் வேக்கு விற்கப்படும் மின்சார சாமான்களுக்காக செலுத்தப் பெற வேண்டிய வரி கட்டண வீதத்தை குறைப்பது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 8-9-1979 ஆம் தேதியிடப் பெற்ற குறிப்பாணை எண். 45528 II-2/78-6ல்



வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

185. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு பண்டகசாலைச் சட்டத்தின் விவர அட்டவணையில் சில பொருள்களைச் சேர்ப்பது தொடர்பான விதிகளைச் செய்வது குறித்து உணவுத் துறையின் 4-8-1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 206ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு பண்டகாசாலைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1951) 27(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

186. தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு எடை, அளவுகள் (செயற் படுத்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர்-வேலைவாய்ப்புத் துறையின் 16-6-1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 993ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடை அளவைகள் (செயற் படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1958) 43 (4)வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

41. பேரவை விதிகள் குழுவின் அறிக்கை 1967 மற்றும் பேரவை விதிகள் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பெற்ற தமிழ் நாடு சட்டமன்றல பேரவை விதிகளின் தமிழாக்கம்.

42. தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழுவிறுன் 1978-79-ஆம் ஆண்டிற்கான அறிக்கை (பாகம் I, II, III) (தமிழ்).

43. 27-8-1969-ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேறிய தீர்மானத்திற்கிணங்க 31-3-1978-ஆம் தேதியன்று உள்ளவராறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவைமுன் வைக்கப்பெற்றன.

1. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்.
2. திரு. எம். ஆர். கோவேந்தன்.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

---

### புதன்கிழமை, 1979 நவம்பர் 7.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) வினாக்கள்--விடைகள்.

### தேனித் தொகுதியில் பாசன வசதி.

**குறுகிய கால வினா எண் 4 திரு. வே. இரா. ஜெயராமன் :** மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனித் தொகுதியில், இளை வாய்க்கால் திட்டம் (Contour Canal) பல கிராமங்களின், புஞ்சை நிலங்களுக்கு பாசன வசதியும் அங்குள்ள கிணறுகளுக்கு நீரூற்றுகளும் கிடைக்கும் வகையில் விரைவில் செயல்படுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்திலுள்ள பி. டி. ராஜன் வாய்க்காலிலிருந்து ஒரு இளைக் கால்வாய் வெட்டும் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பயனடையும்? இத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? எப்போது இத் திட்டம் செயல்படத் துவங்கும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தினால் வெங்கிடாசலபுரம் பகுதியில் சுமார் 1,600 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். திட்டத்தின் தோராய செலவு மதிப்பீடு 26 லட்சம் ரூபாய். இதை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு வேண்டிய செயற்குறிப்புகள் இந்த அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

## உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தாராசுரம் கூட்டுறவுச் சங்க செயற்குழு உறுப்பினர்கள்.

* வினா எண் 104—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் தாராசுரம் கூட்டுறவுச் சங்கத்தின் டைரக்டர்கள் தவணை கடந்த பாக்கியிருந்ததால் பதவி நீக்கம் ஏன் செய்யக்கூடாதென நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றி என்ன மேல் நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) ஆம்.

(ஆ) தவணை தவறிய நிலுவை வைத்துள்ள 3 செயற்குழு உறுப்பினர்கள் மீதும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதி 40 இன் கீழ் நடவடிக்கை எடுத்து, செயற்குழுவிலிருந்து நீக்கம் செய்து, கும்பகோணம் கூட்டுறவுச் சங்க துணைப் பதிவாளர் ஆணை பிறப்பித்துள்ளார்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செயற்குழு உறுப்பினர்களுடைய பாக்கி எவ்வளவு காலத்தில் இருந்தது ? எந்த வருடத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, மூன்று உறுப்பினர்கள் பாக்கி வைத்திருந்தார்கள். ஒன்று வி. கிருஷ்ணமூர்த்தி, இரண்டு வி. குமாரவேலு, மூன்று பாம்பன் செட்டியார். செலுத்த வேண்டிய கெடு தேதி வி. கிருஷ்ணமூர்த்தி 30—11—1976 குறுகிய கால கடன், நடுத்தர கால கடன் கெடு தேதி 21—3—1979, வி. குமாரவேல் செலுத்தவேண்டிய கடன் கெடு தேதி 9—6—1977, மூன்று பாம்பன் செட்டியார் குறுகிய கால கடன் தேதி 31—3—1979, நடுத்தர காலக்கடன் தேதி 31—3—1979





இந்த மூன்று உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து அவர்கள் நிர்வாகக் குழு உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியில் ஒரு விஷயத்தை மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார்கள் என்பதை சொன்னார்கள். எந்த தேதியில் நிலுவை பாக்கி இருந்தது என்பதையும் சொன்னார்கள். இவர்கள் மீது எப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு எந்த தேதியில் நீக்கப்பட்டார்கள் என்கிற விவரத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** 20—5—1979 ஆம் தேதியன்று கூட்டுறவு சங்க குழு கூடி நடவடிக்கை எடுத்தது. ஆனால் அதில் ஒருவர் மீது மட்டும் அந்தக் குழு நடவடிக்கை எடுத்த காரணத்தினால், அங்கு இருக்கின்ற கூட்டுறவுச் சங்க செயலாளர் மேலிடத்திற்கு தகவல் கொடுத்து, உரிய முறையில் கூட்டுறவுத் துறை அதில் தலையிட்டு 10—9—1979 அன்று மூன்று உறுப்பினர்கள் மீதும் கூட்டுறவு சங்க விதி 40-ன் கீழ் கும்பகோணம் கூட்டுறவுச் சங்க துணை பதிவாளர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த மூன்று பேரும் இன்றைக்கு பொறுப்பிலிருந்து நீக்கி வைக்கப்பட்டுள்ளார்கள்.

### கூட்டுறவுச் சங்கங்களில் கணக்குகள் தணிக்கை.

*105 திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவு சங்க கணக்குகளை தணிக்கை செய்ய தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்போது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** கூட்டுறவு சங்கக் கணக்குகளை தணிக்கை செய்ய, கூட்டுறவுத் தணிக்கைத் துறை என்ற ஒரு புதிய துறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய ஆட்சேபணை அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருக்குமானால் ஆட்சேபணையிலுள்ள விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அவர்களின் கீழ் நிர்வாகப் பிரிவு, தணிக்கைப் பிரிவு என்று தனித்தனியாகப் பிரித்து, கூட்டுறவுத் தணிக்கைப் பிரிவு தனித் துறையாக இயங்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதன் மீது திரு. ஆர். கேசவன், கூட்டுறவு சார்புப் பதிவாளர் உயர்நீதி மன்றத்தில் இந்த அரசு ஆணையை எதிர்த்து ஒரு ரிட் மனு செய்துள்ளார். உயர்நீதி மன்றம் இந்த ரிட் மனுவை 24—10—1979 அன்று எடுத்துக்கொண்டு, திரு. கேசவன், மனுதாரரைப் பொறுத்தவரை தடுப்பு ஆணை பிறப்பித்துள்ளது. அந்த ரிட் மனுவின் பேரில் கூட்டுறவு சங்கப் பதிவாளரை அரசு குறிப்பு கேட்டுள்ளது.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் அதிகப்படியாக கணக்குகளை தாக்கல் பண்ணுவதில் மோசடி நடந்து வருகின்றது என்பது அரசுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இப்போது ஏற்பட்டிருக்கும் படியான இந்த தனி தணிக்கைப் பிரிவு, இப்போது சகல கூட்டுறவு சங்கங்களிலுமுள்ள கணக்குகளை வருஷா வருஷம் தணிக்கை செய்யக்கூடிய பிரிவாக ஏற்படுத்தப்பட்டுள்ளதா அல்லது ஊழல்கள் நடந்திருக்கின்றன என்று குற்றச்சாட்டுக்கள் வந்துள்ள கூட்டுறவு சங்கங்களைத் தணிக்கை செய்யக்கூடிய வகையிலே ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற குறைபாடுகளையும், மற்ற ஊழல்களையும் கண்டுபிடிப்பதோடு மட்டுமல்லாமல், இதனை கொள்கை பிரச்சினையாக, இனி கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில் நிர்வாகப் பிரிவு தனியாகவும், தணிக்கைப் பிரிவு தனியாகவும் பிரிக்கப்பட்டு, இந்தத் தணிக்கைப் பிரிவுக்கு, இந்தப் புதிய துறைக்கு ஒரு தலைவர் அதாவது ஒரு ஐ.ஏ.எஸ். அல்லது ஐ.ஏ. அண்டு ஏ.எஸ். அல்லது தமிழக அரசு அதிகாரி ஒருவர் வசதிக்கேற்ப நியமிக்கலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது. இந்தக் கூட்டுறவுத் துறைத் தலைவருக்கு கூட்டுறவு சங்க சட்டத்தின் விதி 64, மற்றும் துணை விதிகள் 54, 55-ன் கீழ் அதிகாரம் வழங்கப்படும். தற்போது கூட்டுறவு தணிக்கைத் துறை கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அலுவலகத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது.





**திரு. பண்ணை கே. சேதுராம் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள பல கூட்டுறவுச் சங்கங்களிலும், வங்கிகளிலும் பண மோசடிகள் நடந்து பல ஆண்டுகளாக இந்தக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வந்துள்ளது. சில தணிக்கை பல ஆண்டுகளாக தணிக்கை செய்யப்பட்டதால், காலாவதியாகி விட்டது என்று தெரிய வருகிறது. அப்படிக் காலாவதியாகியுள்ள தணிக்கைகளையெல்லாம், மறுபடியும் மறு பரிசிலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரமாக அரசினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம் :** தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுடைய விதிகள் ஜனநாயக முறைக்கு ஒவ்வாமல் இருப்பதினால், விரும்பினால் அதிகாரிகள் சலுகைகள் காட்டவும், அவர்கள் விரும்பவில்லை என்றால் பயங்கரமான சர்வாதிகார முறையில் நடந்துகொள்ளும் முறையில் விதிகள் இருக்கின்றன. அவைகளை மாற்றி, ஜனநாயக முறைக்கு ஏற்ப, இந்த விதிகளைத் திருத்தி, ஊழல்கள் நடக்காமல், அதிகாரிகள் பயமுறுத்தாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடியார் கேள்விக்கும் என்ன பொருத்தம் இருக்கிறது என்பது எனக்கு விளங்கவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், தவறு செய்யக்கூடியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய காலத்தில் செல்வாக்குப் படைத்தவர்களுக்கு, சிபார்சு உள்ளவர்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படாமலும், அப்படிச் செல்வாக்கு இல்லாதவர்கள் சின்ன தவறு செய்தாலும், கடினமான தண்டனை விதிக்கக் கூடிய அளவுக்கும் உள்ளது. அதிக தண்டனை அளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, 6 மாத காலத்திற்குள்ளோ அல்லது ஒரு வருஷத்திற்குள்ளோ அதற்கு தீர்வு காண வேண்டும். அப்படியில்லாமல், 10 வருஷம், 15 வருஷம், 20 வருஷம் என்று நீட்டிக்கக்கூடிய . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வி என்ன என்பதைப் படித்தீர்களா?

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அக் கேள்வி சம்பந்தப்பட்டதுதான். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இந்த நடவடிக்கைகள் எந்த அளவில் இருக்கின்றன என்பதை விளக்கமாகச் சொல்ல வேண்டும். [illegible]ர, குறுகிய காலத்திலே நடவடிக்கை எடுக்கின்ற அளவிலே நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான யோசனை அனுதாபத்தோடு பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 9-10)

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** இந்த முறையை எதிர்த்து ஒரு அதிகாரி உயர்நீதி மன்றத்திற்குப் போயிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் என்ன காரணத்தைச் சொல்லி எதிர்க்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** உயர்நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கும் மனுதாரர் இதனை இரண்டாகப் பிரிக்கக் கூடாது என்ற அடிப்படையில், அவர்களுக்கு குறிப்பாக வேலை வாய்ப்பு இழக்கப்படும் என்ற ஒரு அச்சத்தில் அவர்கள் சென்றிருக்கிறார்கள். ஆனால் வேறு பல நியாயமான, மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும், ஊழலற்ற ஒரு நிலைமையைக் கூட்டுறவுத் துறையில் உருவாக்க வேண்டுமென்ற விழுமிய நோக்கத்திற்காக அரசு இந்த முயற்சியை எடுத்திருக்கிறது. அது இன்றைய தினம் நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தால் அதிக அளவு அதைப் பற்றி நான் விளக்க விரும்பவில்லை.

### அரசு அலுவலகங்களுக்கு கட்டிடங்கள்.

*வினா எண் 121—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்ட இந்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் என்ன?

**திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** அரசு அலுவலங்கட்கு சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் முன்னரே அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசு பல அரசுத் துறைகளில் தேவையைக் கண்டறிந்து, திட்டங்கள் தீட்டி, நிதிநிலைக்கேற்ப, அவைகளுக்குக் கட்டிடங்கள் கட்டி வருகின்றன.

**திரு. த. ஆறுமுகம் :** இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை கட்டிடங்கள் கட்டப்படும் என்று அறிவிக்க இயலுமா ?

**திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் பதிவாளர் அலுவலகக் கட்டிடம் கட்ட 4.13 இலட்சம் ரூபாய் ; திருப்பூரில் வணிக வரித்துறை அலுவலகக் கட்டிடம் 1.75 இலட்சம் ரூபாய், கோவில்பட்டி வணிக வரித்துறை அலுவலகக் கட்டிடம் 1.75 இலட்சம் ரூபாய் ; புதுக்கோட்டையில் மூன்று நெருக்கடி படை வட்டாரக் காவலர் அலுவலகம் கட்ட 65,000 ரூபாய் ; நாகர் கோயிலில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடங்களுக்கு 17.96 இலட்சம் ரூபாய். இந்தக் கட்டிடங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. ஆர். மணிமாறன் :** திருப்பூரில் அரசு அலுவலகம் கட்டுகின்ற முறை எந்த அளவில் இருக்கிறது? எந்த அளவில் விரைவில் நடைபெற இருக்கிறது என்பதை அரசு அறிவிக்க இயலுமா ?

**திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** திருப்பூரில் வணிக வரித் துறை அலுவலகக் கட்டிடம் 8 இலட்சம் ரூபாயில் கட்டப்பட்டு வருகிறது.

**திரு. ராஜ்குமார் விஜயர்குநாத தொண்டமான் :** புதுக்கோட்டை மாவட்டத்தில் கலெக்டர் ஆபீஸ் காம்பவுண்டுக்குள் எல்லா அலுவலகங்களையும் கட்டுவதாக ஏற்கெனவே இருந்த அரசு முடிவு எடுத்திருந்தது. இப்போது அதைக் கட்டுவதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா ?

**திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விடையை ஏற்கெனவே சொல்லி விட்டேன்.

[1979 நவம்பர் 7

**திரு. சு. முத்துசாமி :** ஈரோடு பகுதி தந்தை பெரியார் மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் அங்கே புதிய கட்டிட வசதிகள் இல்லாமல் இருக்கிறது. அதை மனதில் கொண்டு புதிய அலுவலகங்கள் நிறையக் கட்ட வாய்ப்பு இருக்கிறதா ? மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகம் நகரத்தின் நடுப் பகுதியில் கட்ட இருக்கும் காரணத்தால் அங்கு போக்கு வரத்து நெருக்கடி ஏற்படும் என்ற காரணத்தால் நகரை ஒட்டியுள்ள பெருந் துறை ரோட்டில் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

**திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டிடம் ஏழு மாடிக் கட்டிடமாக அமையும் என்பதை சட்டமன்றத்தில் இதற்கு முன்னாலேயே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. போக்கு வரத்துக்கு இடையூறு இல்லாமல் இந்தக் கட்டிடம் கட்டப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வி எத்தனை கட்டிடங்கள் என்று மொத்தமாகக் கேட்கப்பட்ட கேள்வியாகும். ஒவ்வொரு தொகுதியில் கட்ட வேண்டிய கட்டிடங்கள் பற்றியும் கேள்வி கேட்டால் அதற்கான விவரம் இருக்குமா என்பது சந்தேகம். அப்படி இருந்தாலும் அவ்வாறு கேட்டுக் கொண்டிருந்தால் நேரம் போதாது. பொதுப்படையாக அரசு கட்டிடங்கள் கட்ட எடுத்துள்ள முயற்சிகள் என்னென்ன என்று கேட்கலாமே தவிர குறிப்பாக ஒவ்வொரு பகுதியிலும் உள்ள நிலைமைகளைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது.

**திரு. மு. அம்பிகாபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம், உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவு செய்து உட்காருங்கள்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இல்லாமல், தனியார் கட்டடங்களில் இருப்பதால் தனியார்களுக்கு இதுவரையில் எவ்வளவு வாடகை கொடுக்கப் படுகிறது என்பதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு அரசு அலுவலகங் களுக்கான கட்டடங்களை எல்லாம் 5 ஆண்டுகளுக்குள்ளாகக் கட்டி முடிப்ப தற்கான சீரான திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா? அப்படி இருக்கு மானால் அதை அறிவிக்க இயலுமா ?



1979 நவம்பர் 7]

**திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** தலைவர் அவர்களே, அதற்கான முயற்சிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. (1) ஒரு கடிதப் போக்குவரத்தில் நேரம் மிச்சப்படுவதுடன் ஒருமைப்பாட் டிற்கும் வழி வகுத்தல் ; (2) அதிக வசதிகளை அளித்து அதன் மூலம் பணி செய்ய ஒரு சீரிய சூழ்நிலையை உருவாக்குதல் ; (3) அரசு அலுவலகங்களின் நிலை உயர்வதுடன், பொது மக்களுடன் தொடர்பு கொள்ள வழி வகுத்தல் ; (4) பாதுகாப்பிற்கும், அலுவலகங்களை சுத்தம் செய்யவும் குறைந்த அளவில் நிபந்தனைக்குட்பட்ட பணியாளர்களையே நியமிக்க நேரிடுவதால் மறைமுக வருமானம் கிடைக்க வழிசெய்தல் ; (5) நகரின் மைய இடங்களில் கட்டிடம் அமைத்தால் தரைத் தளத்தை வாணிகத்திற்கு விடுவதால் வாடகை வருமான மாகக் கிடைத்தல், இப்படிப் பல திட்டங்களைத் தீட்டி அரசுத் துறை அலுவல கங்களுக்காக கட்டிடங்களைக் கட்டும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

**திரு. க. மருதாசலம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அலுவலகக் கட்டடங்களைக் கட்டுகிறபோது எல்லாத் துறைகளைச் சேர்ந்த அலுவலகங்களையும் ஒரே இடத்தில் கட்டுவதற்கு முயற்சிக்க வேண்டும். காரணம் பல அலுவலகங்கள் பல இடங்களிலே இருப்பதால் மக்களுக்குப் பல விதமான தொல்லைகள் ஏற்படுகிறது. ஆகவே எல்லா அலுவலகங்களையும் ஒரே இடத்திலே கட்ட அரசு முன்வருமா ?

**திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** தலைவர் அவர்களே, முடிந்த அளவுக்கு அத்தனை அலுவலகங்களையும் ஒரே இடத்தில் அமைந்தால் நல்லது என்பது தான் அரசினுடைய எண்ணம். இருந்தாலும் போலீஸ் துறை, கோர்ட் இவைகள் ஒரே கட்டிடத்தில் இருக்க இயலாது.

**திரு. செ. சிவசாமி :** தலைவர் அவர்களே, புதிய கட்டடங்கள் கட்டுவது சம்பந்தமாக அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் 3, 4 ஆண்டுகளுக்கு முன்னாலேயே சாங்ஷன் ஆகியவை, இன்னும் வேலை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. இளையாங்குடியில் தாலுகா ஆபீஸ் கட்டடம் கட்டுவதற்கு 4½ இலட்சம் ரூபாய் சாங்ஷன் ஆகியும் இன்னும் கட்டட வேலை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. எப்போது ஆரம்பிக்கப் படும் என்பதைத் தெரிவிப்பார்களா ?

**திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

[1979 நவம்பர் 7

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூரில் வணிக வரி அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இருந்து வருகிறது, அதற்கான கட்டடம் கட்டப்பட உள்ளதா? இல்லையென்றால், கட்டுவதற்குப் பரிசீலிக்கப்படுமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே கூட்டுறவுத் துறைக்கு ஒரு கட்டடம் கட்டுவதற்கான பணி ஆய்வில் உள்ளது. பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கான பணியும் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலேயும் அரசு அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இருப்பதை அரசாங்கம் அறியும். ஆகவே அந்தக் கட்டடங்களை எல்லா இடங்களிலும் அரசே கட்டுகின்ற வகையில் தனியாக இதற்காக ஒரு வாரியம் அமைத்தாவது எல்.ஐ.சி., தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இவைகளிலிருந்து கடன் பெற்று அவைகளைக் கட்டி, அந்தக் கடனைத் திரும்பக் கொடுக்கக்கூடிய முறையிலே முயற்சிகளை மேற்கொள்ள அரசாங்கம் முன்வருமா? அரசாங்கம் இந்த முறையில் என்ன நடவடிக்கை இதுவரையில் எடுத்து இருக்கிறது ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): இப்போது அரசு அலுவலகங்கள் கட்டடங்கள் கட்டும் பணிகள் மிகவும் திறமையாக நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

### கிருஷ்ணகிரி வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

* வினா எண் 122—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்தினை இரண்டாகப் பிரித்து காவேரிப் பட்டணத்தினை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனி வட்டம் உருவாக்கக் கோரி ஏதேனும் அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம், தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டத்தினை இரண்டாகப் பிரித்து காவேரிப்பட்டணத்தினை தலைமையிடமாகக் கொண்டு ஓர் தனி வருவாய் வட்டம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை அனுப்பியுள்ளார்கள். அது மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பப்பட்டு மாவட்ட ஆட்சியாளர் சிபாரிசு செய்திருக்கிறார். விரைவில் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.



1979 நவம்பர் 7]

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, அந்தக் கோரிக்கை ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. அரசு ஏற்கெனவே பலமுறை பரிசீலித்து வருகிறது. வருவாய் வாரியத்திற்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டிருக்கிறது. அரசுக்கும் கொடுத்திருக்கிறோம் என்று நம்புகிறேன். ஆகவே அருள்கூர்ந்து உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 10 ஆண்டுகளாக அந்தக் கோரிக்கை இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் என்னிடத்திலே அந்தக் கோரிக்கை வந்து 6 மாதங்கள் ஆகின்றன. வருகிற ஆண்டில் அதைப் பிரிப்பதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பட்டுக்கோட்டை, பேராவூரணி வட்ட குத்தகை சாகுபடியாளர்கள்.

* வினா எண் 123—திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை, பேராவூரணி வட்டங்களில் குத்தகை சாகுபடி உரிமைச் சட்டம் இயற்றியதிலிருந்து 1978 ஆம் ஆண்டு முடிய குத்தகை உரிமையை பதிவு செய்ய வந்த மனுக்கள் எத்தனை ?

(ஆ) இதுவரை எத்தனை சாகுபடியாளர்களுக்கு குத்தகை பதிவு செய்யப்பட்டுள்ளது ?

(இ) குத்தகை பதிவு செய்ய மனுக் கொடுத்து 3 மாதத்திற்கு மேற்கொண்டும் முடிவெடுக்க முடியாமலிருக்கும் மனுக்கள் உள்ளனவா ?

(ஈ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

| | பட்டுக்கோட்டை வட்டம் | பேராவூரணி வட்டம் |
|---|---|---|
| (அ) | 3,585 | 133 |
| (ஆ) | 3,573 | 119 |

(இ) இல்லை.

(ஈ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1979 நவம்பர் 7

(முற்பகல் 9-20)

**திரு. எம். ஆர். கோவேந்தன் :** தலைவரவர்களே, குத்தகை எந்த அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது என்ற விவரத்தையும், இதுவரையில் எத்தனை இலட்சம் பதிவாகியிருக்கிறார்கள் என்ற விவரத்தையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில், 4,18,789 பேர்களுக்குக் குத்தகை பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய விஸ்தீரணம் 6,12,434 ஏக்கர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### முதுமலைப் பகுதியிலுள்ள விளை நிலங்கள்.

* **வினா எண் 124—திரு. கே. உச்சி :** மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியைச் சேர்ந்த முதுமலை, ஸ்ரீ மதுரை பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த விவசாயிகள், வன விலங்குகளின் தொல்லையால் தங்கள் பட்டா பூமியில் விவசாயம் செய்ய முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** (அ) ஆம்.

(ஆ) முதுமலை வனவிலங்கு சரணாலயத்தை யொட்டியுள்ள விளை நிலங்களின் பயிர்களுக்கு பொதுவாக யானைகளாலும், காட்டுப் பன்றிகளாலும் நாசம் ஏற்படுகிறது. ஜுலை 1978 மாதத்திலும் சில்வர் க்ளவுட் எஸ்டேட் (Silver cloud Estate) தொரப்பள்ளிப் பகுதிகளில் காட்டு யானைகள் தொல்லை கொடுத்து வந்ததாகப் புகார்கள் வந்ததின் பேரில், 13—7—1978-ல் காட்டு இலாக்கா துறையின் பழக்கப்பட்ட யானைகளை அங்கு கொண்டு சென்று அங்கிருந்த யானைகள் முதுமலை காட்டிற்குள் தொலை தூரத்திற்கு விரட்டியடிக்கப்பட்டன.

அவ்வப்போது, வனத்துறை சிப்பந்திகளின் உதவியுடன், கிராம மக்கள், வன விலங்குகளை சரணாலயத்திற்குள் விரட்டி விடுகின்றனர். தாரை, தப்பட்டைகளின் அதிக சப்தமெழுப்பியும் நாட்டு வெடிகளை வெடித்தும், விளை நிலங்களிலிருந்து வன விலங்குகள் விரட்டி அடிக்கப்படுகின்றன.



1979 நவம்பர் 7]

**திரு. கே. உச்சி :** தலைவரவர்களே, என்னுடைய கேள்வியே அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் வன விலங்குகளின் தொல்லைகளால் தாங்கள் விவசாயம் செய்ய முடியாமல் அவதிப்படுகிறார்கள் என்பது. ஆனால் பேரவைச் செயலர் அவர்கள் வன விலங்குகளால் என்ன தொல்லைகள் ஏற்பட்டன என்ற விளக்கத்தை அளிக்கிறார்கள். விவசாயிகளின் தொல்லைகளைய அரசு ஏதாவது திட்டம் செயற்குறிப்பு வைத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக, வன விலங்குகளின் நடமாட்டத்தால் விவசாயிகள் விவசாயத்தை நிறுத்தி விட்டனர் என்பது போன்ற சம்பவங்கள் இதுவரை வனத் துறையின் கவனத்திற்கு ஏதும் வந்ததில்லை என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

**திரு. கே. உச்சி :** தலைவர் அவர்களே, வனத் துறையின் கவனத்திற்கு மட்டுமல்ல, விவசாயத் துறை அமைச்சருக்கும், ரெவின்யூ துறை அமைச்சருக்கும், நானே நேரடியாக விண்ணப்பங்கள் கொடுத்துள்ளேன். அப் பகுதி மக்கள் சென்னைக்கு வந்த நேரத்தில் ரெவின்யூ அமைச்சரிடத்தில் விண்ணப்பங்கள் நேரடியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. வனத் துறைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இதுவரைக்கும் இல்லை என்றாலும்கூட, இனி மேலாவது துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பகுதி மக்கள் மாற்றுப் பூமி வேண்டும் என்று விண்ணப்பித்துள்ளார்கள். அல்லது தங்களுடைய பூமிக்கு நஷ்டயீடு வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குத்திட்டம் வகுத்து நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறைக்கு விவசாயம் நிறுத்தப்பட்டுள்ளது என்று எதுவும் கவனத்திற்கு வந்ததில்லை என்றுதான் சொன்னேன். விவசாயிகளுக்குத் தொல்லை கொடுக்கின்ற வன விலங்குகளிடமிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக 12—4—1971-இல் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது :

(1) சரணாலயங்களைச் சுற்றியுள்ள 15 மைல் பகுதியில் வன விலங்குகளிடமிருந்து பயிர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது வனத்துறையின் கடமையாகும்.

(2) பயிர் நிலங்களுக்கு வரும் வன விலங்குகளை விவசாயிகள் விரட்டியடிப்பதில் வனத் துறை அலுவலர்களுக்கு உதவ வேண்டும்.

(3) சரணாலயங்களை அடுத்த 15 மைல் சுற்றியுள்ள விவசாயிகளுக்கு வேண்டிய அளவு வெடிகளை விநியோகம் செய்வதோடு மிருகங்களை விரட்டியடிக்க அவ்வெடிகளை எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதையும் அவர்களுக்கு வனத்துறையினர் சொல்லித்தர வேண்டும்.

இந்த அரசாணையைச் செவ்வனே செயல்படுமாறு மீண்டும் அரசாணை எண் 535, வன மீனளத் துறை நாள் 24—6—1978-ல் வலியுறுத்தி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, கடலைச் செடியைக் காட்டுப் பன்றி நாசம் செய்கின்றது. அதைப்போல கரும்புப் பயிரை யானைகள் நாசம் செய்கின்றன. இப்படிப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

### சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு நினைவாலயம்.

*** வினா எண் 125 திரு. எம். அண்ணாமலை :** மாண்புமிகு செய்தி, அற நிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் உள்ள சுப்பிரமணிய சிவா அவர்களின் சமாதி மீது நினைவாலயம் உருவாக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பொது மக்களின் உதவியோடு நினைச் சின்னம் அமைக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு நினைவாலயம் எழுப்புவது சம்பந்தமாகப் பொதுமக்களுடைய உதவியோடு ஒரு திட்டம் இருப்பதாக பேரவைச் செயலர் அவர்கள் கூறினார்கள். ஆனால் பொதுமக்களுடைய உதவியைப் பெற்றுக் கட்டுவதில் ஆட்சேபணை இல்லை என்றாலும்கூட, அது காலம் கடத்தும். சுப்பிரமணிய சிவா அவர்கள் தேச பக்தர், கப்பலோட்டிய சிதம்பரனார் வரிசையிலிருந்து தேசபக்த இயக்கத்தில் ஈடுபட்டவர். இதுவரையில் அவருடைய சமாதி தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் எந்தவிதமான கவனிப்பும் அற்ற நிலையில் இருக்கிறது. அதற்கு அரசே பொறுப்பெடுத்து நினைவாலயத்தைக் கட்ட முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவரவர்களே, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு மரியாதை அளிப்பதிலும், அவர்களுடைய தியாகங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறுவதிலும் இந்த அரசு எவ்வளவு ஆர்வம் காட்டி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செவ்வனே புரிந்துகொண்டிருப்பார்கள். சுப்பிரமணிய சிவா அவர்களுடைய நினைவாலயத்திற்காக அரசு ரூ. 8,791 செலவு செய்ய ஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால், தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர், அங்குள்ள பெருமதிப்புடையவர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் முதலியவர்களின் கருத்தறிந்து தியாகி திரு. சுப்பிரமணிய சிவாவுக்கு ரூ. 3.94 லட்சம் செலவில் நினைவாலயம் அமைப்பதற்கான திட்டம் ஒன்றினை அனுப்பியுள்ளார்.

தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ள திட்டத்தின் மதிப்பீடு (ரூ. 3.94 இலட்சம்) மிகவும் அதிகமாக இருப்பதால், திரு. சுப்பிரமணிய சிவாவுக்கு நினைவாலயம் அமைப்பதற்காகப் பொதுமக்கள், சமூக நலச் சேவகர்கள் முதலியவர்களிடமிருந்து நன்கொடை ஏதாவது வசூலிக்க முடியுமா என்று கவனிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார். அவரிடமிருந்து பதில் கிடைத்தவுடன், இதுகுறித்து மேற் கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, நினைவாலயங்கள் பொதுமக்களுடைய உதவியோடு அமைக்கப்படும் என்று அமைச்சரின் பேரவை செயலர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, சில இடங்களிலே உருவாக்கப்பட்டிருக்கிற நினைவாலயங்கள் ஏழ்மையாக இருக்கிற சம்பவங்கள் எல்லாம் இருக்கிற காரணத்தால் மக்கள் மிகக் கோபமாக இருப்பதாக—ஆண்டுக்கொரு முறை கூட கவனிப்பாரற்று பாழடைந்த நிலையில் அவைகளிருப்பதால் பக்தர்கள் கோபப்படுவதாகச் சொல்லப்படுகிறது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி அரசியல் தியாகி ஒருவருடைய சமாதி மீது நினைவாலயம் அமைப்பது பற்றியது. கோயிலுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுப்பிரமணிய சிவா, வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களுடன் தோளோடு தோள் நின்று சுதந்திரப் போராட்டத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த மாவீரர். அவருக்கு ரூ. 4 இலட்சம் செலவு செய்வதால் அரசுக்கு எந்தவித

நட்டமும் வராது. ஆகவே, பொதுமக்களிடமிருந்து வசூல் செய்வதை மாற்றி, நேரடியாக அரசாங்கமே, தாங்களே அமைப்போம் என்ற உறுதி கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அம்பிகாபதியின் காணிக்கையும் இருக்கட்டும் என்று அரசு ஒருவேளை நினைத்திருக்கலாம்.

THIRU M. AMBIKAPATHY : Ambikapathy is also part of Government.

(விடை இல்லையே)

**திரு. மு. அம்பிகாபதி :** பதில் இல்லையே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் பதில் சொன்னாலும் சொல்லலாம். நான் சொன்னதைப் பதிலாக ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

**திரு. மு. அம்பிகாபதி :** திரு. சுப்பிரமணிய சிவா, வ.உ.சி அவர்களோடு தோளோடு தோள் நின்று சுதந்திரப் போராட்டத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தவர். அவருக்கு இந்த அரசு ரூ. 4 லட்சம் செலவு செய்தால் எந்த நட்டமும் வராது. எனவே அரசாங்கமே அந்த நினைவுச் சின்னத்தை அமைக்க முன்வருமா ?

**திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** பேரவைத் தலைவரவர்களே, தியாகி சுப்பிரமணிய சிவாவினுடைய நினைவாலயத்திற்கு அரசு ஏற்கனவே ரூ. 8,791 ஒதுக்கியிருக்கிறது என்று சொன்னேன். ஆனால், அது போதாது, மேற்கொண்டு நிறைய தொகை செலவு செய்து அவருடைய நினைவாலயத்தைப் பெரிதாக எழுப்ப வேண்டுமென்று மக்கள் விரும்புகிற காரணத்தால், அந்தச் செலவுத் தொகையிலே மக்களுக்கும் ஈடுபாடு இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, சுதந்திரப் போராட்டத் தியாகிகளில், மிக முக்கியமானவர் சுப்பிரமணிய சிவா அவர்கள். அவருடைய பெயர் தமிழ் நாட்டில் நீடித்து நிலைத்திருக்க வேண்டும். அண்மையில் நான்கூட பாப்பாரப்பட்டிக்கு சென்றபொழுது நாற்றுக்கணக்கான மக்கள் ஒரு கூட்டத்தில் அத்தகைய கோரிக்கை தந்தார்கள். கலெக்டர் வாயிலாக, பொது மக்களிடமிருந்து வசூல் செய்வதாக இருந்தால், கலெக்டரையே, வசூல் செய்யும் குழுவுக்குத் தலைவராகப் போட்டு, அவருடைய தலைமையில் வசூல் செய்ய முறைப்படுத்தலாம். ஆகவே, அத்தகைய ஒரு முறையில், கலெக்டரைத் தலைவராகப் போட்டு, வசூல் செய்ய குழுவைப் போட்டு, அதற்கு அதிகாரம் அளித்து, அவர்கள் மக்களிடமிருந்து நிதி உதவிபெற்று, நினைவாலயம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கருணையோடு பரிசீலிக்கும்.

(முற்பகல் 9.30)

**திரு. ரா. உமாநாத் :** தலைவரவர்களே, மக்கள் விரும்புவதால் மக்களுடைய பங்கும் பெற்று சிலை நிறுவப்படும் என்று அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் சொன்னார்கள். மக்கள் விரும்புவதனால் மக்களுடைய விருப்பத்தை கவர்ன்மெண்ட் நிறைவேற்றக் கூடாது என்று சர்க்காரில் ஏதாவது கொள்கை இருக்கிறதா ? ஆகவே ரூ. 4 இலட்சத்தை ஒரு பெரிய தொகையாகக் கருதாமல் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் யுனானிமஸ் ஆகக் கேட்டதால் கவர்ன்மென்ட் ரெஸ்பான்சிபிலிட்டி எடுத்து, இந்த 4 லட்சத்தில் பாதி பாதி என்று பேரம் பேசாமல் ஸ்ரெய்ட் ரெஸ்பான்ஸிபிலிட்டி எடுப்பதற்கு பரிசீலனை செய்ய முடிவு எடுக்குமா ?

**திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :** பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் அக்கறை கொண்டுள்ளார்கள் என்று சொன்னால், மக்களுக்கு அக்கறை கொள்வதற்கு எவ்வளவு உரிமை உண்டோ அதே மாதிரி நிச்சயமாக மக்கள் அதன் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவரவர்களே, ரூ. 9,000 அரசாங்கம் செலவு செய்வதாக, சுதந்திரப் போராட்டத்தில் போராடிய வீரர் திரு. சுப்பிரமணிய சிவாவுக்கு, ஒரு பெரிய தொகையாக சொன்னார்கள். நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒன்று அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும். அல்லது அரசாங்கம் செய்ய முடியாது என்று கூறி வேறு ஏதாவது செய்து கொள்ளுங்கள் என்று சொல்லுவார்களானால், பொதுமக்களாகிய நாங்களே அமைத்துக் கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அரசாங்கம் ரூ. 4 லட்சம் செலவில் நினைவுச் சின்னம் அமைக்க முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவே கேட்கப்பட்ட கேள்வியைத் தான் உறுப்பினர் கேட்டிருக்கிறார்.

### பேரளம் காவல் நிலையத்துக்குட்பட்ட வழக்குகள்.

* வினா எண் 126—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் ஒன்றியம் பேரளம் காவல் நிலையத்தின் எல்லைக்குட்பட்ட வழக்குகளை மாயவரம் நீதிமன்ற எல்லைக்குக் கொண்டுவர அரசிற்கு வேண்டுகோள் வரப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன ?

(முற்பகல் 9-30)

THE HON. THIRU K. NARAYANASWAMY : (a) Yes.

(b) Orders have been issued in G.O. Ms. No. 1485, Home, dated 16th June 1979 for the transfer of the jurisdiction of the Peralam Police Station from the Court of the Sub Divisional Judicial Magistrate, Nagapattinam, and of the Judicial Second Class Magistrate, Tiruvarur to the Courts of the Judicial First Class Magistrate and of the Judicial Second Class Magistrate at Mayuram.

### திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள அடகுக் கடைக்காரர்கள்.

* வினா எண் 127—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலைப் பகுதியில் பான்புரோக்கர் கடை நடத்தியவர்கள் திடீர் என தலைமறைவாகி விட்டார்கள் என அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், தலைமறைவாகிவிட்ட கடைக்காரர்கள் எத்தனை பேர் ?

(இ) அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : (a) & (b) One Pawnbroker is reported to be absconding.

(c) Police Department has registered a criminal case against him. That Department is making all efforts to trace him and take action against him.





திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பான் புரோக்கர் தலைமறைவாகி விட்டார், அவர் பொதுமக்களின் நகைகளை எடுத்துச் சென்றதோடு அல்லாமல் பொதுமக்களிடத்திலே இருந்து அவர் நகைகளை வங்கியிலே வைத்திருப்பதாகவும் அவைகளை மீட்டுக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி அவர்களிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டு தலைமறைவாகிவிட்டார். இதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து ஒரு ஆண்டிற்கும் மேலாகிறது. இன்னும் இன்வெஸ்டிகேஷனிலே இருப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது நிவாரணத் தொகை அளிக்க அரசு முன் வருமா ? தமிழ் நாட்டிலே பல பகுதிகளிலே இப்படிப்பட்ட குற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறதா அல்லது எடுக்க இருக்கிறதா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY: Every effort will be taken by the Police to get the criminal apprehended in due course of time, if not, as early as possible. The scheme for giving any relief to these disappointed pawners who have paid the pledged amounts is certainly not under the consideration of the Government. This note today before me does not mention about the other absconding pawn-brokers in the other parts of the State.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஏராளமாக நடந்து இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கிறவர்கள் ஓடாமல் இருப்பதற்குப் பொது மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு முன்வருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY: In this country, fundamental rights give freedom of movement even for criminals (laughter). Government can only take steps to get them arrested whenever these criminal pawn-brokers, after committing crimes, flee the State for cheating the public.

### திருவண்ணாமலை சாலையில் தொல்பொருள் ஆய்வு.

* வினா எண் 128—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் மலை சுற்றும் சாலையில் பண்டைக்கால சிற்பங்கள் எழுத்துக்கள் ஆகியவை தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் ஆய்வு செய்யப்பட்டதா ?

[1979 நவம்பர் 7

(ஆ) ஆம் எனில் அவைகளை அப் பகுதியில் உள்ள மக்களுக்கு விளக்குவதற்கு எடுத்த நடவடிக்கை என்ன?

**திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):** (அ) ஆம். தொல்பொருள் துறையினரால் கி.பி. 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றும், மதுரை வீரன் சிலையொன்றும், சாலைப் பெயரும், அளவும் குறிக்கப்பட்ட கற்கள் மூன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இவைகளின் சிறப்புத் தன்மையினைப் பொது மக்கள் அறியும் பொருட்டு இச்செய்தி, தமிழ் ஆங்கில நாளிதழ்களில் படத்துடன் வெளியிடப்பட்டது. இவை இந்திய செய்திப் படத்துறையினரால் எல்லா மொழியிலும் செய்தி மலராக காட்டப்பட்டது. இவைகளை இப்பகுதி மக்களுக்கு செய்தி பலகைகளாக வைத்து விளக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் இருக்கும் மலை மாண்புமிகு பகவான் ரமண ரிஷி போன்ற பகவான்கள் தங்கி பிரசித்தி பெற்ற இடமாகும். இன்னும் சொல்லப் போனால், அங்கே பல பகவான்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த மலையில் பல மூலிகைப் பொருள்கள் இருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட மூலிகைப் பொருள்களைக் கண்டுபிடித்து மக்களுக்கு அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):** தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தால், தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(சில உறுப்பினர்கள் கையை உயர்த்திக் கொண்டிருந்தனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி திருவண்ணாமலை பற்றியதாகும். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் துணை வினா கேட்டு விட்டார்.

**திரு. மு. அம்பிகாபதி:** தலைவர் அவர்களே, திருவண்ணாமலை கார்த்திகை தீபம் மிகவும் பிரசித்தி பெற்றது. அது ஒரு புனிதமான இடம். மற்றவர்கள் கேட்கக்கூடாது என்று சொன்னால் எப்படி?



1979 நவம்பர் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அத்தகைய அக்கறை இருந்தால் முதலிலேயே எழுதிக் கொடுத்து இருக்க வேண்டும். இப்போது திருவண்ணாமலையைப்பற்றி மன்னை அம்பிகாபதி கேட்பது சரியல்ல. நேரத்தை வீணாக்க வேண்டாம். திரு. பெ. சு. திருவேங்கடம் . .

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் உள்ள மலையைச் சுற்றி வருகிற பாதையில் பண்டைய தமிழக காலத்திய மீன் சின்னம் பொறிக்கப்பட்ட தெருவின் எண்ணிக்கை, பெயர்கள் கொண்ட கற்கள் இருக்கின்றன. அவைகள் பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றன. சில கற்களை அங்கேயிருந்து பெயர்த்துக்கொண்டு போய் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே, அந்தப் பண்டைய காலத்திய கற்களைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அங்கே இருக்கும் மண்டபங்களில் நல்ல பெயின்டிங், பல்வேறு சிற்பங்கள் இருக்கின்றன. அவற்றை தொல்பொருள் இலாகாவினர் பாதுகாத்து வருகிறார்களா? அந்தச் சிற்பங்களைப் புதுப்பித்து, மக்கள் பார்க்கும் வகையில் வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அது குறித்து விளக்கமாக கடிதம் எழுதினால், அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. பி. ராமதாஸ் கையை உயர்த்தினார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி திருவண்ணாமலையில் உள்ள கல்வெட்டு பற்றியதாகும். அதைப் பற்றித்தான் கேட்க வேண்டும். வேறு எதைப்பற்றியும் கேட்கக் கூடாது. திரு. பி. ராமதாஸ்.

**திரு. பி. ராமதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்வெட்டைப் பற்றி அமைச்சரின் செயலர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அதைக் கேட்கிறபோது அது மிகவும் முக்கியமானதாக இருக்கும் போல் தெரிகிறது. அந்தக் கல்வெட்டில் என்ன செய்தி எழுதப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

**திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் கி.பி. 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றும் (கி.பி. 1439), மதுரைவீரன்

சிலையொன்றும், சாலை பெயரும் அளவும் குறிக்கப்பட்ட கற்கள் மூன்றும் மாநில தொல்பொருள் துறையால் கண்டுபிடிக்கப்பட்டு படியெடுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் சிறப்பானதாகக் குறிக்கத் தக்கவை இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்க் கற்களே ஆகும். அவைகளில் இரண்டில் 'விக்கிரம பாண்டியன் திருவீதி நாலாம் வகுப்பு' என்ற தொடரும் பாண்டியர் சின்னமும் உள்ளது. மற்றொன்றில் 'விக்கிரம பாண்டியன் திருவீதி ஆறாம் வகுப்பு' என்ற தொடரும் பாண்டியர் சின்னமும் உள்ளது. பாண்டியர் சின்னம் இருமீனும், நடுவில் செண்டும் கொண்ட அகப்பை உடையது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சென்னை சட்டக் கல்லூரி நூலகக் கட்டிடம்.

* வினா எண் 129—திரு. கா. செங்கோடன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சட்டக் கல்லூரி நூலகத்திற்குப் புதியக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

## சென்னை வியாசர்பாடியில் குடிநீர் குழாய்கள்.

* வினா எண் 130—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) சென்னை வியாசர்பாடி பகுதியில் குடிதண்ணீரோடு சாக்கடைத் தண்ணீரும் கலந்துவிட்டது என்பதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

(ஆ) அதற்கான காரணமென்ன என்பதைப்பற்றி கண்டுபிடிக்கப் பட்டனவா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு குடி தண்ணீரில் சாக்கடை நீர் கலக்காமல் தடுக்கப்பட்டது,

1979 நவம்பர் 7]

(ஆ) வியாசர்பாடியில் உள்ள மேல்பட்டி பொன்னப்ப முதலி தெருவும் பழனி ஆண்டவர் கோவில் தெருவும் சந்திக்கும் இடத்தில் போடப்பட்ட இரண்டு வார்ப்பு இரும்பு குழாய்களுக்கு இடையே உள்ள காரீயத்தால் ஆன் இணைப்பு வெளியே வந்துவிட்டது. அதன் காரணமாக ஏற்பட்ட இடை வெளியின் மூலம் வெளிப்புறத்திலுள்ள அசுத்தநீர் குழாய்களுக்கு உள்ளே சென்றதால் இந்த நிலை ஏற்பட்டது. காரீயத்தை மறுபடியும் உருக்கி ஊற்றி புதிய இணைப்பு போடப்பட்டது.

(முற்பகல் 9-40)

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், உடனே தடுப்பதற்கான நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்த அமைச்சரவர்களுக்கு நன்றி. இந்த சென்னை மாநகரில் பல பகுதிகளில் இதைப்போன்று ஒரு நிலை இருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அதன் காரணமாகத்தான் சென்னை மாநகரில் உள்ள பலருக்கு திடீர் திடீரென்று கண்வலி, மஞ்சள்காமாலை போன்ற பலதரப்பட்ட வியாதிகள் உண்டாகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, இத்தகைய வியாதிகளை, இந்த சென்னை மாநகரம் முழுவதும் பரிசீலனை செய்து, அவைகளைத் தடுப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப் படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, கண்வலி ஏன் வருகிறது, மஞ்சள் காமாலை ஏன் வருகிறது என்று எனக்குத் தெரியாது; நல்வாழ்வுத் துறை அமைச்சருக்குத்தான் தெரியும். (குறுக்கீடு) எனக்குத் தெரியாது என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோதண்டராமன் உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது; பேசியும் பலன் இல்லை; இங்கே பதிவாகாது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இப்படி ஏற்படும்போது தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதற்கு மெட்ராஸ் மெட்ரோபோலிடன் வாட்டர் சப்ளை அண்டு ஸ்வரேஜ் போர்டு இருக்கிறது. அதன் மூலமாக சென்னையை சிங்கார சென்னையாக்க, இப்படி கழிவு நீர் எல்லாம் உள்ளே நுழைவதைத் தடுத்து, நீங்கள் எல்லாம் பாராட்டக்கூடிய வகையிலே காரி யங்கள் செய்யப்படுவதற்கு முனைப்பாக நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சென்னையைப்பற்றிய கேள்வியாக இருக்க வேண்டும்.

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இப்படிப் பட்ட தவறு நேர்ந்தவுடனே உடனடியாக அவர்களுக்குக் கீழே இருக்கிற வாட்டர் போர்டை அணுகச் சொல்கிறார்கள். நான் 5 நாட்களுக்கு முன்பு உங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவந்தேன். ஓட்டேரி பகுதியில் பி அண்டு சி தொழிலாளர்கள் வாழும் இடத்தில் சுமார் 25 நாட்களாக, சாக்கடை நீர் குடிநீரில் புகுந்து, அந்தப் பகுதி மக்கள் தொல்லைக்கு ஆளாகி யிருக்கிறார்கள். அதிகாரிகளிடம் அதுபற்றி தெரிவித்தும் அவர்கள் கவனிக்க வில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதற்கு அமைச்சரவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, வியாசர்பாடி பகுதியில் குடிதண்ணீரோடு சாக்கடை நீர் கலந்துவிட்டதைப் பற்றிய கேள்வி இது. சென்னையில் இருக்கிற யாரும் என்னிடம் நேரடியாக இந்தமாதிரியான குறை இருக்கிறது என்று சொன்னதாக ஞாபகம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்குமேலாக என்னுடைய நண்பர். அவர் ஒரு தொலைபேசி மூலம் என்னிடம் சொல்லியிருந்தாலே போதும் I would have rushed to the spot. இனிமேலாவது அப்படிச் செய்யும்படி வேண்டுகோள் விடுக்கிறேன்.

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளச் சொல்கிறார்கள், வரவேற்கிறேன். பலமுறை அவருடைய பி.ஏ. விடம் சொல்லியிருக்கிறேன். மற்ற அமைச்சர்களின் பி.ஏ.விடம் சொன்னால் உடனடியாக தகவல் கொடுக்கிறார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றம் சொல்லக் கூடாது; உட்காருங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, இந்த வடிகால் பிரிவு வந்த பின்னால், சென்னை மாநகரில் வியாசர்பாடி மட்டுமல்ல; சென்னை மாநகர் முழுவதிலுமே கழிவு நீர் சரியாக அகற்றப்படுவதில்லை; சில்டர் எடுக்காத காரணத்தால் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டு நிரம்பி, ரோடு முழுவதும் போகிறது. அடைப்புகளை அகற்ற தேவையான கருவிகள் கொடுப் பதில்லை என்று தொழிலாளர்கள் சொல்கிறார்கள்: அதனால் வடிகால் அகற்றும் பணி சரியாக நடைபெறவில்லை. எனவே மீண்டும் இதை சென்னை மாநகராட்சியின் பொறுப்பிலேயே விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?



அப்படிச் செய்தால்தான் சென்னை மாநகர் உருப்படியாக இருக்கும். இல்லை என்று சொன்னால் இதைச் சீர்திருத்த முடியாது என்பதை நான் திட்டவட்ட மாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. திருப்பிக் கொடுப்பது என் கையிலா இருக்கிறது?

**குனியமுத்தூர் கிராமத்தில் பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி.**

*வினா எண் 131—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குனியமுத்தூர் கிராமத்திலுள்ள பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதி கோரி விண்ணப்பித்துள்ளார்களா?

(ஆ) பீடித் தொழிலாளர்கள் சேமநல நிதியில் என்னென்ன நலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) குனியமுத்தூர் கிராமத் திலுள்ள பீடித் தொழிலாளர்களிடம் இருந்து வீட்டு வசதி கோரி விண்ணப்பம் ஏதும் அரசுக்குக் கிடைக்கப் பெறவில்லை.

(ஆ) பீடித் தொழிலாளர்கள் நல நிதியில் பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதி அளித்தல், வீட்டு வசதி, மனமகிழ் மன்றங்கள் அமைத்தல், கல்விச் சலுகைகள் அளித்தல் ஆகிய நலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மருத்துவ வசதியைப் பொறுத்த மட்டில் முதற்கட்டமாக மேலப்பாளையத்தில் பீடித் தொழிலாளர்களுக்கென்று ஒரு நடமாடும் மருத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டப்பட இருக்கிறது. மேலும் திருச்சி அல்லது வேலூரில் ஒரு மருந்தகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. கோவை மாவட்டம், பெருந்துறையில் ராமலிங்கம் காசநோய் நிலையத்தில் பீடித் தொழிலாளர்களுக்கென்று தனியே 10 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஏனைய வசதிகளான வீட்டு வசதி, மனமகிழ் மன்றங்கள் அமைத்தல், கல்விச் சலுகைகள் ஆகியவற்றை அமுல்படுத்த பெங்களூரில் உள்ள சேம நல ஆணை யாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**திரு. ஆ. நடராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, குனியமுத்தூர் பகுதியிலுள்ள பீடித் தொழிலாளர்கள் ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு முன்பு மாவட்ட ஆட்சி தலைவருக்கு மனுக்கள் அனுப்பியுள்ளார்கள். எனக்கும் அதை அனுப்பியுள்ளார்கள். குறுச்சியில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப் படுகின்ற வீடுகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுள் ளார்கள். அவர்களுக்கு அவைகள் ஒதுக்கப்படுமா? மேலும் குனியமுத்தூர், ஆற்றுப்பாலம் குறிச்சி ஆகிய பகுதிகளில் ஏராளமான பீடித் தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதிகளிலும் அமைச்சர் அவர்கள் படித்த நலப் பணிகள் ஏதேனும் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒன்றிரண்டு மாத காலமாக நானும் திரு. நடராசன் போன்றவர்களும் நெருங்கிப் பழகி வருகிறோம். எனவே அந்த மனுவை என்னிடத்தில் கொடுத் திருந்தால் நான் பரிசீலனை செய்திருப்பேன். பரவாயில்லை, இப்போதாவது அந்த மனுவை என்னிடத்தில் கொடுத்துவிடுங்கள். நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்லி என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது குனியமுத்தூர் கிராமத்திலுள்ள பீடித் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட கேள்வி. தொழிலாளர்களின் தலைவர்கள் 4 பேர்கள் கை தூக்குகிறார்கள். நான் ஒருவருக்குத்தான் அனுமதி கொடுக்க முடியும். திரு. ரமணி அவர்கள் கேட்கட்டும்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, இந்த குனியமுத்தூர் கிராமம் கோவை மாநகரத்தின் எல்லையில் இருக்கும்படியாக இருப்பதால், அங்கே அதிகமான தாழ்த்தப்பட்ட இன மக்கள், பீடித் தொழிலாளர்கள், தோல் பதனிடும் தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா? நல்ல திட்டங்களையும், அந்த பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு மனை வாங்கி வீடு கட்டி கொடுக்கும் திட்டத் தையும் அரசு எடுத்து பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கீழ்க்கண்ட நல்ல பணிகளைச் செய்துதர மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது:

(1) பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் மருத்துவ வசதி அளித்தல்.

(2) வீட்டு வசதி செய்து கொடுத்தல்.

(3) மனமகிழ் மன்றங்கள் அமைத்துக் கொடுத்தல்.

(4) கல்வி வசதிகளை செய்து கொடுத்தல்.

இவை நான்கும் இருக்கின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் இவைகள் சம்பந்தமாக தங்களுக்கு வரக்கூடிய மனுக்களை என்னிடத்தில் கொண்டு வந்து கொடுக்கும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏதோ என்னுடைய வயதிற்கு தக்க, என்னாலான பணிகளை மேற்கொண்டு செய்து முடித்து தருகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### கோத்தகிரியில் புதிய பேருந்து நிலையம்.

* **வினா எண் 132—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோத்தகிரியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்):** (அ) ஆம்.

(ஆ) கோத்தகிரியில் அமைக்கப்படவிருக்கும் பேருந்து நிலையத்திற் கான நிலம் வாங்கும் ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நிலம் வாங்கியபின் தான் ஏனைய விவரங்கள் தீர்மானிக்கப்படும்.

**திரு. போ. கோபாலன்:** தலைவர் அவர்களே, கோத்தகிரியில் தனியார் களுக்குச் சொந்தமான கட்டிடத்தில் பேருந்து நிலையம் வைத்திருக்கி றார்கள். ஆனால் அரசாங்கத்திலிருந்து தனியாக வைப்பதற்கு அதிகாரிகள் வேண்டுமென்றே கால தாமதம் செய்கிறார்கள் என்றுகூடப் புகார்கள் வரு கின்றன. இதற்கு விரைவில் தீர்வு காண உடனடியாக அங்கே பேருந்து நிலையத்தை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்?

[1979 நவம்பர் 7

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரி நகர பகுதியில் 31—3—1978 ஆம் தேதி சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு தற்போது இருக்கிற பேருந்து நிலையத்தை 20 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மேலும் சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கே சொந்தமாக ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்கு இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பணி நடந்து கொண்டிருக்கிறது. அங்கு விரைவில் பேருந்து நிலையம் அமைக்கப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, கோத்தகிரியில் வெகு காலமாகவே பேருந்து நிலையம் இல்லை. அங்கு வரும் பயணிகள் காற்றினாலும், மழையினாலும் தாக்கப்பட்டு, நிற்கக்கூட இடமின்றி, ஒதுங்கக்கூட இடமின்றி அவதிப்படுகிறார்கள் என்று அரசுக்குத் தெரியும். அந்தப் பேருந்து நிலையத்திற்கு வேறு இடம் மாற்றி தரப்படும் என்று வெகு காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி டி.டி.சி.யில் கூட விவாதித்திருக்கிறோம்; அங்கு விரைவில் பேருந்து நிலையத்தைக் கட்ட அரசு வேகமாக நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9-50)

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன்.

**தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் திருப்பத்தூர் கிளை அலுவலகம்.**

*வினா எண் 133—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு கிளை ஆபீசுக்கென சொந்தமாக இடம் வாங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வாங்க அரசு உத்தேசித்துள்ளது?



1979 நவம்பர் 7]

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) ஆம்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம் திருப்பத்தூர் நகராட்சிக்குச் சொந்தமானதால் நகராட்சி ஆய்வாளர், சென்னை, அவர்களின் ஒப்புதல் தேவைப்படுகிறது. அனுமதி கிடைத்தவுடன், நிலத்தை திருப்பத்தூர் நகராட்சியிடம் இருந்து எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. சுந்தரம்: தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் நகராட்சியின் இடமாக இருப்பதால் வாடகை அதிகமாகக் கேட்பதாகவும் அதை விட்டு வேறு இடம் பார்த்திருக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? ஏதாவது ஒன்றை விரைவில் முடிவெடுத்து அரசாங்கம் விரைவில் அந்தக் கிளை ஆபீஸை ஏற்படுத்த முன்வருமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரும் சேர்ந்து நகரத்தில் மையப் பகுதியில் ஒரு ஏக்கர் நிலத்தைப் பார்வையிட்டு அது நகராட்சியினுடைய இடமாக இருப்பதால் நகராட்சியினுடைய அனுமதி வேண்டி நகராட்சி ஆய்வாளருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்த இடம் ரூ. 68,390 என்பதாக திருப்பத்தூர் தாசில்தார் நிலத்திற்கான தற்போதைய மதிப்பீட்டை தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், நகராட்சி ஆய்வாளர் அவர்களிடமிருந்து பதில் வந்தவுடன் அந்த இடம் வாங்கப்படும்.

திரு. தி. அன்பழகன்: திருப்பத்தூரிலுள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு பணிமனை இல்லாததால் அங்கு ஏறத்தாழ இருபது பேருந்துகள் பாதையிலேயே நிறுத்தி வைக்கப்படுகின்றன. ஆகவே விரைவில் அந்தப் பணிமனையைக் கட்ட அரசு முயற்சி எடுக்குமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): விரைவாக முயற்சிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாணார்ப்பட்டிப் பகுதியில் பாலாறு அணைத் திட்டம்.

*வினா எண். 134—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் திண்டுக்கல் தாலுக்கா சாணார்ப்பட்டிப் பகுதியில் பாலாறு அணைக்கட்டு திட்டம் அரசின் பரிசீலனையிலிருக்கிறதா?

(ஆ) ஆமெனில், அத்திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் பாசன வசதி.

*வினா எண் 135—திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்திலுள்ள உமையாள்புரம் ஆரியபாளையம், தமையனூர் ஆகிய ஏரிகளுக்கு வசிஷ்ட நதியிலிருந்து கால்வாய் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இத் திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) விவரங்கள் முதல்நிலை ஆய்வு முடிக்கப்பட்ட பின் தெரியவரும்.

திரு. சி. பழனிமுத்து: பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்திலுள்ள உமையாள்புரம் ஆரியபாளையம், தமையனூர் ஆகிய ஏரிகளுக்கு நீர் பிடிப்பு நிரம்பி பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிறது: அந்தக் கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்கள். அங்குள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை உடனடியாக செயல் திட்டமாகத் தீட்டி உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: வசிஷ்ட நதியிலிருந்து கால்வாய் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. விரைவில் செயல்படுத்தப்



கோட்டூரில் புதிய மருத்துவமனை.

*வினா எண். 136—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் கோட்டூர் வட்டாரத்தின் தலைமையிடமான கோட்டூரில் மருத்துவமனை ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): கோட்டூரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் ஆதிச்சபுர கிராமத்தில் இரு மருத்துவ அலுவலர்களைக் கொண்டு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இது தவிர, கோட்டூரைச் சுற்றி முறைப்படுத்தப்பட்ட சித்த மருந்தகங்களும், அரசு மான்யம் பெறும் ஊரக மருந்தகங்களும் இயங்கி வருகின்றன. எனவே அரசு விதிமுறைப்படி கோட்டூரில் புதிய மருத்துவமனை ஏற்படுத்த வாய்ப்பில்லை. எனினும், ஊராட்சி ஒன்றியமும், பொதுமக்களும் நன்கொடை அளிக்கவும், நிலம், தகுந்த கட்டிடம் அளிக்கவும் முன்வந்தால் புதிய மருந்தகம் திறப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

திரு. பொ. உத்திராபதி: ஆதிச்சபுரத்தில் ஒரு மருத்துவ மனை இருப்பது உண்மைதான். இருந்தாலும், கோட்டூர் பகுதி ஏழை எளிய மக்கள், ஹரிஜன மக்கள் அதிகமாக வாழக்கூடிய ஒரு பகுதி. செயலர் அவர்கள் சொல்கிற அளவிற்கு இடமும், மக்களுடைய பங்குத் தொகையும் தர நாங்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கிறோம். செயலர் அவர்கள் வாக்குறுதிப்படி அங்கே ஒரு மருத்துவ மனையைத் துரிதமாக ஏற்படுத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தண்டையார்பேட்டை தொத்துநோய் மருத்துவமனை.

*வினா எண் 137—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டையார்பேட்டையில் உள்ள தொத்து நோய் மருத்துவ விடுதியை வேறு இடத்திற்கு மாற்றி விரிவு படுத்தும் திட்டம் சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படவிருக்கிறதா?

**திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):** இல்லை.

**திரு. து. புருஷோத்தமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தண்டையார் பேட்டையிலுள்ள தொத்துநோய் மருத்துவமனையில் கட்டிட வசதியில்லை என்பதை அரசு அறியுமா? தொத்துநோய் சென்னையில் எங்கு பாதிக்கப்பட்டிருந்தாலும் அந்த மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக சில நேரங்களில் குடிசைகளைப் போட்டு அதில் வைத்து சிகிச்சை அளித்து வருவது அரசுக்குத் தெரியுமா? இந்த நிலைமையைப் போக்குவதற்கு ஒரு பெரிய இடத்தைப் பார்த்து, இந்த மருத்துவ மனையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):** தண்டையார்ப்பேட்டையிலுள்ள தொற்று நோய் மருத்துவமனையை சென்னை மாநகராட்சி நடத்தி வருகிறது. அம்மை, பெரியம்மை, காலரா, அம்மைக் கட்டு போன்ற பலதரப்பட்ட தொற்று நோயாளிகளுக்கு இம்மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. சென்னை நகரிலுள்ள மக்களுக்கு மட்டுமின்றி, சுற்றுப் புறத்தில் வாழும் கிராம மக்களுக்கும் இம் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதால், கடந்த சில வருடங்களாக சென்னை நகரில் பெரியம்மை நோய் பரவவில்லை. இம்மருத்துவ மனையில் பெரியம்மை ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் செயல்படுகிறது. மேலும் சென்னை நகரிலுள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமின்றி மற்ற மாவட்டங்களிலுள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் தொற்று நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை அளிக்கும் முறை பற்றி போதிக்கும் நிலையமாகவும், இம் மருத்துவ மனை செயல்படுகிறது.

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னையில் இப்படிப்பட்ட தொத்து நோய் மருத்துவ மனை வட சென்னையில் மட்டும் தான் இருந்து வருகிறது. இதில்தான் எல்லோரும் சிகிச்சை பெற்றுக்கொள்ள



வேண்டியிருக்கிறது. ஆகவே இதை மாற்றுகின்ற வகையில், தென் சென்னையில் ஒரு தொத்து நோய் மருத்துவ மனையை ஏற்படுத்த முடியுமா என்பதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா?

**திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தண்டையார்பேட்டையில் இருந்துவரும் தொத்து நோய் மருத்துவமனை நல்ல முறையில் செயல்பட்டு வருவதால் தற்போது புதிய தொத்து நோய் மருத்துவமனை ஏற்படுத்தும் குறிப்பு எதுவும் இப்போது இல்லை.

**திரு. மு. அரங்கநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு காலரா, பெரியம்மை முதலிய நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது உண்மைதான். ஆனால் அங்கு நோயாளிகளுக்கு போதுமான பாதுகாப்பு இல்லை. கட்டிட வசதி போதுமானதாக இல்லை. நோயாளிகளைப் போய்ப் பார்க்கின்றவர்களுக்குக் கூட தொத்து நோய் ஒட்டிவிடுகின்றது. இந்தச் சூழ்நிலையில் அங்கு நோயாளிகளுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே ஏழை எளிய மக்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிப்பதற்காக அரசே முழு மான்யம் கொடுத்து நேரடியாக இதற்கான விரிவு பணிகளைச் செய்வதற்கு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசீலிக்கும்.

**திரு. நீ. சு. நல்லதம்பி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையில் நிறைய நோயாளிகள் வந்து கொண்டிருப்பதால், விரிவடைந்து வருகின்ற சென்னை நகரத்தில் தென் சென்னையில் இதுபோன்ற ஒரு மருத்துவமனையை அமைக்கலாம் என்று முன்னால் முடிவு எடுக்கப்பட்டது.

அதற்கு இடம் கொடுப்பதற்கு, கொடைவள்ளல் அழகப்ப செட்டியார் அவர்கள் பல ஏக்கர் நிலங்களை மாநகராட்சிக்கு அளித்திருக்கிறார். அது இப்போது எந்தவிதமான பயனும் இல்லாமல் அப்படியே இருக்கிறது. ஆகவே இப்போது உள்ள நிலைமையைக் கருதி, அந்த இடத்தில் புதிய மருத்துவ மனை ஒன்றை அமைப்பதற்கு அரசு முன் வருமா?

**திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):** இதுபற்றி தனியாகக் கேள்வி போடவும்.

### மருத்துவ மனைகளில் அக்குபங்சர் அறுவை முறை.

*** வினா எண். 138—திரு. ரா. கிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'அக்குபங்சர்' ஆபரேஷன் முறை தமிழ்நாட்டில் நடத்தப்படு கிறதா?

(ஆ) அத் துறையில் மேற்படிப்புக்கென வெளிநாடு அனுப்பும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

**திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):** (அ) தற்போது, சென்னை மருத்துவ மனையில் நரம்பு இயல்துறை பகுதியில் கையாளப்படுகிறது.

(ஆ) இல்லை.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அக்குபங்சர் ஆப்பரேஷன் முறை, சில நோய்களுக்கு, குறிப்பாக கல்லீரல், நுரையீரல், மூத்திர நோய்—கிட்னி சம்பந்தமான நோய், இருதய நோய் இவைகளுக்கு டாக் மூலம் சிகிச்சை அளிப்பதில் பாதுகாப்பு அற்ற நிலைதான் இருந்து கொண்டிருக் கிறது. ஆகவே இந்த முறையை சில நாடுகளில் கையாளுகிறார்கள். குறிப்





பாக இந்த முறை பாதுகாப்பானதும், மிக எளிமையானதும் செலவு குறை வானதுமாக இருக்கிறது. ஆகவே இப்பேர்ப்பட்ட ஒரு முறையை அமுல் படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அக்குபங்சர் ஆப்பரேஷன் முறை எளிமை யானதும், செலவு குறைவானதும் ஆன முறை என்று சொல்லுகிறார்கள். அதே சமயத்தில் அதில் சில கஷ்டங்களும் இருப்பதாக மருத்துவர்கள் கூறுகி றார்கள். அக்குபங்சர் ஆப்பரேஷன் முறை ஊசி போடுவதின் மூலமாக செய்யப்படும் முறை என்று தெரிகிறது. இது எந்த அளவுக்கு வெற்றிகரமாக இருக்கிறது என்று தெரியவில்லை. என்றாலும் கூட ஸ்டான்லி மருத்துவ மனையிலும் அரசு பொது மருத்துவமனையிலும் தற்போது செயல்பட்டு வருகிறது.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு, பேரவையின் கேள்வி நேரத்தை நீட்டிக்கின்றேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, 'அக்கு பங்சர்' ஆபரேஷன் என்று சொல்வது என்னவென்று எனக்குப் புரியவில்லை. என்னை மாதிரி சில உறுப்பினர்கள் புரியாமல் இருந்தாலும், புரிந்தமாதிரி உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றி விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அக்குபங்சர்' ஆபரேஷன் முறை 3,000 ஆண்டுகளுக்கு முன்பாக சீனாவில் முதன் முறையாக கையாளப்பட்டு வந்தது என்று கருதப்படுகிறது. அதற்குப் பிறகு, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற பகுதிகளிலே இருந்து மருத்துவர்கள் சீனாவுக்குச் சென்று, அந்த முறையைக் கையாண்டு பார்த்தார்கள். அதற்குப் பிறகு, சரியாக அந்த

முறை செயல்படவில்லை என்று தெரிந்து அவர்கள் அதைக் கைவிட்டு விட்டார்கள். உதாரணமாக, தலைவலி என்று சொன்னால், தலையில் ஒரு பகுதியில் அந்த ஊசியைக் குத்தினால், அந்த வலி நின்று விடுகின்றது என்று கருதப்படுகின்றது. அப்படிப்பட்ட ஒரு முறைதான் இந்த 'அக்குபங்சர்' முறை என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஒருவேளை பதில் சொல்லியிருந்தால், விவரம் தெரிந்திருக்கக்கூடும் என்று நான் நம்புகிறேன். ஆனால், அமைச்சர் செயலர் அவர்கள் சொன்ன காரணத்தால், அவர்களிடத்தில் விவரம் இல்லாமல் இருக்கின்றபோது, அவர் விரிவாக சொன்னதிலிருந்து பல தவறான கருத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. 'அக்குபங்சர்' முறை என்பது சினாவிலே பழங் காலத்திலே இருந்து இன்றைக்குவரை வெற்றிகரமாக நடைபெறும் ஒரு முறை. இன்றைக்கு வெற்றிகரமாக உலகத்திலே வேறு சில நாடுகளில் இருந்து போய், அதைப் பார்த்துப் பயின்று பயனடைந்திருக்கிறார்கள். அது ஒரு காலத்தில் தமிழ் நாட்டிலே இருந்துதான் சீனாவுக்குச் சென்றதாக வரலாற்றுச் செய்தி உள்ளது. இன்றைக்கு தமிழகத்திலே இந்த அடிப்படையிலே ஊசி போடா விட்டாலும், நர்வ் சென்டர் என்ற அடிப்படையில் அந்தந்த மையத்திலுள்ள நரம்புகளுக்கு உணர்வு ஊட்டவும், உணர்வைத் தடுக்கவும் வாய்ப்பிருக்கின்றது என்று தெரிந்து, இப்போதும் நாகர்கோவில் பகுதியிலே மாத்திலிருந்து விழுந்து அடிபட்டு மூர்ச்சித்துப் போனவர்களுக்கு நரம்பு மையங்களை அழுத்துவதன் மூலமாகவும், தட்டுவதன் மூலமாகவும் உணர்வு வர செய்யப்படுகிறது. பச்சை குத்தினால்—நான் அரசியலில் பச்சை குத்துவது பற்றிச் சொல்லவில்லை—பச்சை குத்தும் அந்த முறையில் சில பலன்கள் இருக்கின்றன என்று ஒரு காலத்தில் சொல்லப்பட்டது. சீனாவில் வெற்றிகரமாக இருந்து, ஸ்டான்லி மருத்துவமனையில் ஓரளவுக்கு அது பயன்படுத்தப்பட்டுள்ளது. டாக்டர்கள் சிலரால் இது ஒரு பயனளிக்கக்கூடிய முறைதான் என்று கருதப்படுகிறதே தவிர, பயன்படாத முறை என்று கருதப்படவில்லை. 'அக்குபங்சர்' முறையினால் ஏற்படக்கூடிய பலன்—குறிப்பிட்ட இடத்தில் ஊசி குத்துவதன் மூலமாக பலன் இருப்பதாகக் கருதி, ஒரு மெகானிகல் முறையாகக் கையாளப்படுகிறது. அதைப்பற்றி நான் சொல்வது சரியாகவோ, தவறாகவோ இருந்தாலும், இதைப்பற்றி தெளிவாக விளக்கும் ஒரு அறிக்கையை உறுப்பினர்களுக்குத் தருவது நல்லது.





**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, நல்ல மருத்துவராக மாறவேண்டிய பேராசிரியர் அவர்கள் அரசியல்வாதியாக ஆனதற்கு நான் வருந்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, சமீபத்தில் அமெரிக்காவில் இருக்கும்படியான சிறந்த டாக்டர் தூதுக்குழு ஒன்று சீனா சென்று, இந்த 'அக்குபங்சர்' ஆபரேஷன் முறையை அறிந்து, ஆபரேஷன் செய்த 12 மணி நேரத்திற்குள் உணவு அருந்தலாம், உட்கார முடியும், எனவே இது சிறந்த முறை என்று அறிவித்திருக்கிறார்களே, அப்பேர்ப்பட்ட இந்த முறையைக் கையாள்வதற்கு, தமிழகத்திலிருந்து டாக்டர்கள் கொண்ட ஒரு குழுவை சீனா போன்ற நாடுகளுக்கு அனுப்பி அறிந்துவர ஏற்பாடு செய்யப்படுமா?

**திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு கூறியதுபோல, வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து டாக்டர்கள் சீனாவுக்கு சென்று, இந்த 'அக்குபங்சர்' ஆபரேஷன் முறையை ஆராய்ந்து பார்த்து, எதிர்பார்த்த பலன் இல்லை என்று கருதப்படுகின்றது. எனவேதான், 'லாங் டேர்ம், பாலோ அப்' என்ற முறையில், இங்கே ஸ்டான்லி ஆஸ்பத்திரியிலும், தற்போது அந்தத் துறையின் தலைவராக இருக்கும் பேராசிரியர் பா. நரேந்திரன், நியூராலஜிஸ்ட் அண்டு ஹெட் ஆப் தி டிபார்ட்மெண்ட், இன்ஸ்டிடியூட் ஆஃப் நியூராலஜி, மதராஸ் மெடிகல் காலேஜ், சென்னை அவர்கள் இதை நல்ல முறையிலே செயல்படுத்தி வருகிறார்கள் என்றாலும்கூட, இதிலே அவர்கள் சில கஷ்டங்கள் இருப்பதாக நான் இன்றைக்கு காலையிலே சந்தித்தபோது கூட கூறியதிலிருந்து தெரிய வருகிறது.

**திரு. ரா. கிருஷ்ணன்:** இந்த அக்குபங்சர் மூலம் ஒரு ஆண்டில் நான்கு லட்சம் ஆப்பரேஷன்கள் செய்யப்பட்டிருப்பதாக ஆதாரம் கூறுகிறது. ஆனால் இங்கு எட்டாண்டுக் காலத்தில் பத்தாயிரம் ஆப்பரேஷன்கள்தான் முடிந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இது மிக மிக எளிமையான முறை. அக்குபங்சர் மூலம் ஆபரேஷன் செய்யும்போது டாக்டர்கள் பேஷண்டுடன் பேசுவதும், பிரஷர் நார்மலாக இருப்பதும், ஆபரேஷன் முடிந்த உடனே அந்த நிமிஷமே சாப்பிடக்கூடிய நிலைமை, நடமாடக்கூடிய நிலைமை இருப்பதும் இதிலுள்ள சிறப்புக்கள் ஆகும். இப்படிப்பட்ட எளிமையான முறையைப்பற்றி ஆராய்ச்சி செய்ய தமிழகத்திலிருந்து ஒரு டீமை சீனாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா?

**திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):** சென்னை மருத்துவக் கல்லூரி பேராசிரியர் நரேந்திரன் அவர்கள் இதில் வல்லுநர் ஆவார்கள். அவர்கள் கூறிய தகவலில் இருந்து தெரிய வருவது—இந்த அக்குபங்சர் முறை நிரந்தரப் பரிகாரம் ஆகாது என்று அவர்கள் கருதுகிறார்கள். ஏனென்றால் சைகாலஜி முறைப்படி அது நடைபெறுவதாக அவர்கள் கூறுகிறார்கள். ஆனாலும்கூட இன்னும் அது ரிசர்ச்சில் இருக்கிறது. அது நல்ல முறையில் செயல்பட்டால் தொடர்ந்து நடத்தலாம்.

•

## இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் தமிழர்கள்.

*** வினா எண் 139—திரு. ப. பொன்னுரங்கம் மற்றும் திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியம் :** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமதி பண்டாரநாயகா—சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையில் இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வர இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேர்கள்?



(இ) இவ்வாறு தாயகம் திரும்புபவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஈ) ஆம் எனில், எந்தெந்த இடங்கள்?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** (அ) ஆம்.

(ஆ) ஆறு இலட்சம் பேர்களும் அவர்களுடைய குடும்பத்தில் இயல்பாக ஏற்படும் கூடுதல் நபர்களும்.

(இ) ஆம்.

(ஈ) பேரவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்:** ஆறு லட்சம் பேர்கள் என்று சொல்லும்போது இதுவரை எவ்வளவு பேர்கள் வந்திருக்கிறார்கள்? வந்தவர்களுக்கு எந்த வகையில் வேலை வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது? உதவித் தொகை எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது? இலங்கையிலிருந்து அவர்கள் இங்கு வரும்போது அந்த அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுக்கிறதா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** இந்த ஒப்பந்தத்தின்படி இதுவரை இந்தியாவுக்கு வந்துள்ள நபர்களின் எண்ணிக்கை 3,23,677. பல்வேறு திட்டங்களின்கீழ் அவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். நீலகிரி தேயிலைத் தோட்டத்தில் 1,780 குடும்பங்கள்; கன்னியாகுமரி ரப்பர் தோட்டத்தில் 224 குடும்பங்கள்; ஆனைமலை சின்கோனா தோட்டத்தில் 125 குடும்பங்களை, நிலக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2,161 குடும்பங்கள் நூற்பாலைகளில் 1,806 குடும்பங்கள், மாநில பண்ணைக் கழகத்தில் 888 குடும்பங்கள், வணிகக் கடன் மூலம் 38,366 குடும்பங்கள், தாயகம் திரும்புவோர் கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி வங்கித் திட்டத்தின் மூலம் 2,577 குடும்பங்கள், வேலை வாய்ப்புகளின் மூலம் 2,920 குடும்பங்கள், இதர மாநிலங்களில் 2,677 குடும்பங்கள்—ஆக மொத்தம் 53,524 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

---

*806 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1979 நவம்பர் 7

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வணிகக் கடன் எப்படி அளிக்கப்படுகிறது என்று கேட்டார்கள். சாதாரணமாக இலங்கையிலிருந்து தாயகம் திரும்புகிறவர்கள் 10,000 ரூபாய்க்கு மேற்படாத சொத்து மதிப்புடைய சொத்துடைமைகளைக் கொண்டு வருபவர்களுக்கு வணிகக் கடனாக இரண்டு தவணைகளில் மொத்தமாக 5,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. முதல் தவணை 3,000 ரூபாய்; இரண்டாவது தவணை 2,000 ரூபாய் என்ற வகையிலே கொடுக்கப்படுகிறது. முதல் தவணைத் தொகை சரியாகச் செலவழிக்கப்பட்டால்தான் இரண்டாவது தவணை கொடுக்கப்படுகிறது.

**திரு. ரா. உமாநாத்:** நூற்பாலைகளில் இவர்களுக்கு வேலை வழங்கப்படுவதாகக் கனம் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் அந்த நூற்பாலைக்ளில் அவர்கள் செய்யும் வேலைக்குச் சட்டக் கூலி என்னவோ அது மறுக்கப்படுகிறது. செய்யும் வேலைகளுக்கு மற்றவர்களுக்கு என்ன போனஸ் கொடுக்கப்படுகிறதோ அது இவர்களுக்கு மறுக்கப்படுகிறது. ரி-செட்டில்மென்ட்டில் நிதி ஒதுக்கீடு இல்லையென்று சொல்லுகிறார்கள். ரி-செட்டில்மென்ட் டிப்பார்ட்மென்ட் ஒதுக்கும் நிதிக்கும் ஆக்குபேஷனல் வேஜசுக்கும் என்ன சம்பந்தம்? செய்யும் வேலைக்கேற்ப அவர்களுக்குக் கூலி கொடுக்க வேண்டும்—

We are exploiting their conditions.

அதை மாற்ற அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்ற விவரம் எதுவும் இதுவரை எனக்கு வரவில்லை. அப்படி அதை அவர்கள் அனுப்புவார்களானால் இயக்குநருடன் கலந்து ஆலோசித்து பதில் கொடுக்க வசதியாக இருக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அவர்களுக்கு வணிகத் தொழிலுக்குக் கடன் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இலங்கையிலிருந்து வந்த சில அகதிகளுக்கு வணிகத் தொழிலில் பழக்கம் இல்லாத காரணத்தால் அவர்கள் நஷ்டப்பட்டு விட்டார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு வணிகத் தொழிலும் நடக்கவில்லை. வேறு தொழிலும் அவர்களுக்கு இல்லை.



1979 நவம்பர் 7]

(முற்பகல் 10-10)

அந்த நிலையில் அவர்கள் அதிக சிரமப்படுகிறார்கள். ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்திலே அம்மாதிரியான சிரமப்படுகிற குடும்பங்கள் இருக்கின்றன. கடனைப் பெற்றும்கூட நஷ்டத்தில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தால் அவர்கள் அந்த வேலை வாய்ப்பைப் பெற்றதன் மூலமாகப் பெறுகின்ற ஊதியத்தைக் கொண்டு அந்தக் கடனைத் தருவதற்கு ஏதுவாக இருக்கும், ஆகவே அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தமிழர்கள் இங்கே அனுப்பப்படுகிறபோது கண்டியிலே உள்ள இந்தியத் துணைக் ஹை கமிஷனர் எந்த எந்த வேலைகளில் எந்த எந்தப் பணிகளில் அவர்கள் அமர்த்தப்பட வேண்டும் என்பதையும் அங்கேயே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதை மாற்றுவதற்கு மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது. மத்திய அரசும் அந்த முறைகள் பற்றித் திட்டவட்டமாக எங்களுக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். எந்த வேலைகளுக்காக எந்தப் பணிகளுக்காக அவர்கள் அமர்த்தப்பட வேண்டுமென்று குறித்திருக்கிறார்களோ அதற்காக மட்டுமே அவர்களைப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது வணிகக் கடன் 3 ஆயிரம் கொடுத்து இருக்கிறார்கள், அதை அவர்கள் தொழில் நடத்த முடியாமல் செலவழித்துவிட்டார்கள். இப்போது அவர்களுக்கு எந்தத் தொழிலும் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் பெற்றுக் கொண்ட கடனை அவர்கள் நல்ல முறையில் செலவழித்திருந்தால் இரண்டாவது கடன் கொடுக்க முடியும் என்று ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். மாற்றுத் திட்டங்களைச் செய்ய வேண்டியது மத்திய அரசுதானே தவிர, மாநில அரசு அல்ல. மத்திய அரசு அனுப்பிய தாக்கீதில் ஒரு குடும்பத்திற்கு ஒரு நபருக்குத்தான் வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால் நாங்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு இரண்டு நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பி அப்போது இருந்த மத்திய அமைச்சர் முன்னாள் அமைச்சர் சிக்கந்தர் பகத் அவர்கள் அதை கவனத்தில் எடுத்துக்கொண்டு இரண்டு நபர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. செங்கை மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியில் உள்ள கன ரகத் தொழிற்சாலையிலே ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரண்டாவது நபருக்குப் பயிற்சி அளித்து வேலை கொடுக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்திலே இரண்டாவது நபருக்கு வேலை வேண்டுமென்று அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டால் கும்மிடிப் பூண்டியிலே உள்ள அந்தத் தொழிற் பயிற்சி நிலையத்தில் அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கலாம்.

**திரு. பண்ணை கே. சேதுராம்:** ஸ்ரீலங்காவிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள் 3 லட்சம் பேர்கள் வந்திருப்பதாகவும் இன்னும் 3 லட்சம் பேர்கள் வர இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த ஆறு லட்சம் பேர்களில் படித்த பட்டதாரிகள் எத்தனை பேர்கள்? ஏற்கெனவே அரசு அலுவலகங்களில் பணியாற்றிக் கொண்டிருந்த பட்டதாரிகள் அவர்களில் இருக்கிறார்களா? அதிலே தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற பட்டதாரிகள் இருக்கிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அகதிகள் பற்றியது. அதிலே பட்டதாரி எவ்வளவு, அதிலே தொழில் நுட்பப் பட்டதாரி எவ்வளவு இது எல்லாம் தேவையா?

**திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தத்தின்படி இலங்கையிலே இருக்கக்கூடிய தமிழர்கள் அனைவருக்கும் குடியுரிமை வழங்கிவிட்டார்களா? அப்படியென்றால் எத்தனை பேர்களுக்கு சிடிஷன்ஷிப் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** தலைவர் அவர்களே, 1964 ஆம் ஆண்டில் இந்தியா-ஸ்ரீலங்கா பிரதம மந்திரிகள் இருவராலும் ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதைத்தான் ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் என்று சொல்வார்கள். அந்த ஒப்பந்தப்படி இலங்கையில் நாடற்ற இந்தியர்கள் 9.75 லட்சம் பேரில் 5.25 லட்சம் பேர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு அவர்களுக்கு இந்திய குடி உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் அதோடு அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கும் அது வழங்கப்பட வேண்டும் என்றும் 3 லட்சம் பேர்களை ஸ்ரீலங்கா தன்னிடத்திலே வைத்துக்கொண்டு அவர்களுக்கு ஸ்ரீலங்கா குடி உரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அதற்குப் பிறகு 1974 ஆம் ஆண்டிலே ஸ்ரீமாவோ-இந்திரா காந்தி ஆகியவர்களாலே ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி மிச்சம் இருக்கிற 1.50 லட்சம் பேரில் 75 ஆயிரம் பேர்களை ஸ்ரீலங்கா தன்னிடத்திலே வைத்துக் கொண்டு குடியுரிமை கொடுக்க வேண்டுமென்றும் மீதமுள்ளவர்களை இந்தியாவுக்கு அனுப்பி இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. இப்படி இரண்டு ஒப்பந்தங்களும் அதைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. நான் ஆரம்பத்திலேயே சொன்னேன் 31—8—1979 வரை 3,23,677 பேர்கள் வந்திருக்கிறார்கள், மாதத்திற்கு 3 முறை கப்பலிலே வந்து கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 8 லட்சம் பேர்கள் வரவேண்டியிருக்கும்.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை, பர்மா ஆகிய இந்த நாடுகளிலிருந்து வந்துள்ள தமிழர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்க மத்திய அரசாங்கத்தின் உதவியோடு திட்டங்கள் தீட்டி வரும் அறிக்கையை வைத்திருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் 13 இடங்களில் குடியிருப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் பல இப்பொழுது காலியாகக் கிடக்கின்றன, அதில் குடியிருக்காமல் வெளியேறி விட்டார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை, ஆலங்குடி போகும் வழியில் 10, 12 கிணறுகள் இறக்கி செலவு செய்திருக்கிறார்கள்

அரசாங்கம் இந்த அளவிற்குப் பணத்தைச் செலவு செய்தும்கூட, அங்கிருந்து அவர்கள் வெளியேறிவிட்டார்கள். ஆகவே, இதையெல்லாம் பரிசீலித்து, நாம் செலவழிக்கும் பணம் பயன்பெறும் வகையிலேயும், அவர்களுக்கு வாழ் வளிக்கும் முறையிலேயும் திட்டங்கள் போட வேண்டும். அவர்களுக்குப் பழக்கம் இல்லாத வேலையைச் செய்யச் சொன்னால் அவர்களுக்குத் தெரியாது. எனவே, வேலை கொடுப்பதிலே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணைக் கேள்வியைச் சுருக்கமாக எப்பொழுதுமே கேட்பதில்லை. மூலக் கேள்வி, திரும்ப வரப் போகின்றவர்களைப் பற்றியது. திரும்ப வந்தவர் களைப்பற்றி அல்ல கேள்வி. ஆகவே, உறுப்பினரவர்கள் விளக்கமாகச் சொல்லாமல், சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

**திரு. சோ. அழகர்சாமி:** எனவே, அந்த மாதிரி இல்லாமல், அவர்களுக்குப் பழக்கமான வேலையை, அங்கே என்ன வேலை செய்து பழக்கப்பட்டிருக்கி றார்களோ அந்த வேலையைக் கொடுத்தால் அவர்கள் அங்கேயே நிரந்தர மாகக் குடியிருப்பார்கள். அதற்கு வழி செய்யப்படுமா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன், இலங்கையிலுள்ள கண்டியில் இருக்கின்ற இந்தியத் துணை ஹைகமிஷன் அதிகாரியிடம், இங்கே வர விரும்பும் இந்தி யர்கள் என்ன வேலைக்கு அனுப்பப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள், அட்டையிலே அதைக் குறித்து அனுப்புவார்கள். அந்தப் பணியிலேதான் இங்கே நாம் அவர்களை அமர்த்துகிறோமே தவிர, இங்கே வந்து மாற்றி யமைப்பது கிடையாது.

இலங்கைத் தமிழர்கள் எல்லோரும் தேயிலைத் தோட்டங்களில் இருக்க வேண்டுமென்று விரும்புவார்கள். ஆனால் நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் பகுதியிலேயும் சரி, குன்னூரிலும் சரி, நீலகிரியிலும் சரி, ஏறத்தாழ 1,700 குடும்பங்களைக் குடியமர்த்தி விட்டோம், இப்பொழுது இதற்குமேல் குடி யமர்த்த வாய்ப்பில்லை என்று சொல்கிறார்கள்.



எனவே, அவர்களாகவே கேட்டுக்கொள்ளும் அந்தத் திட்டங்களில் குடி யமர்த்துகிறோம். ஆகவே, தவறு அவர்களுடையதுதானே தவிர, எங்க ளுடையது அல்ல.

*Death of cattle in Taramani village*

* 140 *Q.*—THIRU S. J. SADIQ PASHA: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it has come to the notice of the Government regarding the sudden death of a number of Cattle in Taramani village near Adyar, Madras, recently; and

(*b*) if so, the reasons therefor and the remedial measures taken in this regard ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** (அ) ஆம்.

(ஆ) தரமணி கிராமத்தின் அருகிலுள்ள தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரை இரசாயன பரிசோதனை செய்ததில் அதில் "பாலிடால்" ( (Follidol) என்னும் பொருள் கலந்து இருப்பதாக அறியப் பட்டது. மேற்கூறிய பாலிடால் என்னும் விஷப் பொருளே கால்நடைகள் இறப்பதற்கு காரணமாக இருக்கலாம் என புலனாய்வு அறிக்கை கூறுகிறது. சென்னை மாநகராட்சி சுகாதார அலுவலர் மேற்கூறிய விஷப் பொருட்கள் மேற்கூறிய இடத்தில் கலவாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறும், அவ்வப் போது அந்தப் பகுதிகளில் உள்ள தண்ணீரை பரிசோதனை செய்யுமாறும் கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரால் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளார்.

**சென்னை காவலர் குடியிருப்புகளுக்கான மின் கட்டணங்கள்.**

**வினா எண். 140 (அ)—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் காவல் துறையினர் குடியிருக்கும் அரசுக்குச் சொந்தமான குடியிருப்புகளுக்கு மின் கட்டணம் செலுத்துவதில் சலுகை அளிக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** (அ) ஆம்.

(ஆ) காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் குடியிருக்கும் குடியிருப்புகளுக்கு உயர்ந்த பட்சமாக மாதம் ஒன்றுக்கு 20 யூனிட்டுகள் வரை மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு இலவசமாக வழங்கப்படும் 20 யூனிட்டுகளுக்கான மின்சாரக் கட்டணச் செலவை அரசே ஏற்றுக் கொள்கிறது. 20 யூனிட்டுகளுக்கு மேல் கூடுதலாக மின்சாரம் செலவிடும் காவலர், அல்லது தலைமைக் காவலர்களிடம் அதற்கான கட்டணம் பிடித்தம் செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வினா எண் 140-ஆ.

**திரு. ா. உமாநாத்:** தலைவரவர்களே, நான் ஒரு துணைக் கேள்வி அதில் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அடுத்த கேள்விக்குப் போய் விட்டேன். திரு. சாதிக் பாட்சா அவர்கள் இல்லாததால் அடுத்த கேள்விக்கு போய்விட்டேன். இப்பொழுது உங்களுக்குத் துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு கொடுத்தால் பிறகு எல்லோரும் அதையே பின்பற்றுவார்கள். ஆகவே, இன்றைக்கு இதோடு விட்டு விடுங்கள், நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன்.

**கேரளத்திற்கு கடத்திச் செல்லப்பட்ட நுகர்பொருள் வினியோக அலுவலர்**

***வினா எண். 140ஆ.**— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள மதுக்கரை அருகே கேரளத்துக்கு அரிசி கடத்திச் செல்லும் ஒரு லாரியை மடக்கிய சிவில் சப்ளை அதிகாரி ஒருவரை கேரளத்துக்கு கடத்திச் சென்றதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** (அ) ஆம்.

(ஆ) இச்சம்பவத்தையொட்டி, அரசு ஊழியர் ஒருவர் உட்பட சம்பந்தப்பட்ட 8 நபர்கள் மீது மதுக்கரை காவல் நிலையத்தில் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு, அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு பின்பு ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். இதில் சம்பந்தப்பட்டுள்ள அரசு ஊழியர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார். புலனாய்வுக்குப் பின்பு இவ் வழக்கு நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



**(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.**

**தீண்டாமைக் குற்றங்கள்.**

**வினா 501— திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) தீண்டாமைக் குற்றங்களுக்காக நமது மாநிலத்தில் கடந்த மூன்றாண்டுக் காலத்தில் யாரேனும் கைது செய்யப் பட்டார்களா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் ?

(இ) அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) கைது செய்யப்பட்டவர்கள் மொத்தம் 2,832 பேர்.

(இ) அவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விவரங்கள் கீழே வருமாறு :—

| ஆண்டு. | 1975. | 1976. | 1977. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| மொத்தம் கைது செய்யப்பட்டவர்கள் ... ... ... | 622 | 1,060 | 1,150 |
| தண்டனை வழங்கப்பட்டவர்கள். | 229 | 392 | 79 |

| ஆண்டு (1) | 1975. (2) | 1976. (3) | 1977. (4) |
|---|---|---|---|
| நிரபராதி எனத் தீர்ப்பு அளிக்கப் பட்டவர்கள் ... ... | 225 | 429 | 468 |
| மன்னித்து விடப்பட்டவர்கள் ... | 140 | 142 | 1 |
| தவறான பொருளின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது | 7 | 29 | 27 |
| மேல் நடவடிக்கைக்காக கைவிடப் பட்டது ... ... | 21 | 10 | 59 |
| புலனாய்வில் உள்ளவை ... | ... | 1 | 13 |
| நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளவை ... ... ... | ... | 57 | 509 |

## கோயில்களைப் புதுப்பிக்க மானியம்.

வினா 502— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு செய்தி, அறநிலையததுறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974–75, 1975–76 ஆகிய ஆண்டுகளில் அறநிலையத் துறை மூலம் தமிழகத்திலுள்ள கோயில்களைப் புதுப்பிக்க மானியமாக வழங்கப்பட்ட தொகை மாவட்ட வாரியாக எவ்வளவு ?

விடை—

* விவரங்கள் இணைப்புப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.

## கைதிகளுக்கு வழங்கப்பெறும் உணவு.

வினா 503— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு சட்டத்துறை அமைசசர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாதுகாப்பு கைதிகளுக்கும் 'B' வகுப்பு 'C' வகுப்பு கைதிகளுக்கும் கொடுக்கப்படும் உணவுகள் மதிப்பு எவ்வளவு ?

[*. . 809ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]



(ஆ) 1957, 1967 மற்றும் 1977 ஆண்டுகளில் எவ்வளவு ?

(இ) அதன் விவரம் என்ன ?

விடை :

(அ), (ஆ), (இ) : ஒரு விவர அறிக்கை* அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

## பிரிடா மேனியர் மருத்துவ மனை.

வினா 504— திரு. எம். ஜான் வின்சென்ட் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நான்குநேரி தாலுகா, களக்காடு பகுதியில் உள்ள பிரிடாமேனியர் ஆஸ்பத்திரிக்கு ஆண் டாக்டர் ஒருவர் தேவை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) & (ஆ) : இந்த மருத்துவ மனையில் இரண்டு பெண் மருத்துவர்கள் பணிபுரிந்து வந்தார்கள். ஒரு பணியிடத்தில் ஆண் டாக்டர் நியமனம் செய்யப்பட்டு அவர் அங்கு 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ம் நாள் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

## மம்சாபுரத்தில் உள்ள பொதுக் கிணறு.

வினா 505— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதியைச் சேர்ந்த மம்சாபுரத்தில் குறவர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் மற்ற சமுதாய மக்கள் குடி தண்ணீர் எடுக்கும் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்க மறுக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

[*. . 811ம் பக்கத்தில் இணைப்புIII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

விடை—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியைச் சேர்ந்த மம்சாபுரத்தில் குறவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பொதுக் கிணற்றில் குடிதண்ணீர் எடுக்க தடுக்கப்படவில்லை.

(ஆ) இக் கேள்வி எழாது.

மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால சுவாமி கலைக் கல்லூரி:

வினா 506—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் மன்னார்குடி ஸ்ரீ ராஜ கோபால சுவாமி கலைக் கல்லூரிக்கு புதிய கட்டிடங்கள் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

விடை—

மன்னார்குடி மன்னை இராசகோபாலசாமி அரசினர் கலைக் கல்லூரி 1971–72-ல் தொடங்கப்பட்டது. இக் கல்லூரிக்குச் சொந்தமாக 44 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் சுமார் 10 ஏக்கர் நிலம் விளையாட்டிடமாகப் பயன்படுத்தப் படுகிறது. அரசு ஆணை எண். 506, கல்வி, நாள் : 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3 ஆம் நாளில் ரூ. 13,35,000 செலவில் கல்லூரிக்கென நிரந்தரக் கட்டிடம் கட்ட ஆணையிடப்பட்டது. மேற்படி கட்டிட பணிகள் முடிந்து 1974 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6 ஆம் நாளில் முழுமையாக ஒப்படைக்கப்பட்டது.

மாணவர்களுக்கென விடுதி நிரந்தரக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இச்சூழ்நிலையில் மேலும் கட்டிடங்கள் கட்டும் கருத்து எழவில்லை.

*Research on cause for Paralytic stroke.*

Q. 507—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) Whether any research into the incident of paralytic strokes have been undertaken in this State in recent times ; and

(b) If so, the details thereof ?



விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை மருத்துவமனையில் நரம்பியல் பிரிவில் (Neurology Department) 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டுள்ள நோயாளிகளிடையே பாரிசவாயுவு வியாதியைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மதுரை மருத்துவக் கல்லூரியிலும் மேற்படி ஆராய்ச்சி கடந்த 5 வருட காலமாக செய்யப்பட்டு வருகிறது.

இந்த வியாதியானது அதிகமாக கர்ப்ப ஸ்திரியினரிடையேயும். ஆண்களிடையேயும் நரம்பை பாதிக்கும் பால்வினை நோய் (Neuro Syphilis) காரணமாகவும். இரத்தக் குழாய் பாதிப்பினாலும் (Arteritis) சிறுவர்களிடையேயும் இரத்தக் குழாய் பாதிப்பினால் வருகிறது.

இந்த நோயானது 40 வயதுக்குட்பட்டவரிடையே மேற்கத்திய நாட்டிதழ்களில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையை விட அதிகமாக உள்ளது என்றும் தற்போதைய திட்டமானதாவது 40 வயதுக்குட்பட்ட, மேற்பட்ட நோயாளிகளிடையே வருவதற்கான காரணத்தையும் கண்டுபிடிப்பதாகும். இதற்கான செலவினை இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிலையம் மேற்கொள்கிறது. (Indian Council of M search).

இதுவரை சென்னை பொது மருத்துவமனையில் இத்தகைய 21 நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பயன் அடைந்துள்ளார்கள்.

*Suspension of Constables for derliction of duty.*

Q. 508—THIRU C. MANICKAM : Will the Hon. the Chief Minister be pleased to State—

(a) Whether a number of Police Constables have been placed under suspension in May 1978, for involvement in rape cases in Vikramangalam in Tiruchirappalli district ; and

(b) If so, the details thereof ?

[1979 நவம்பர் 7

விடை —

(அ) ஆம்.

(ஆ) 1976 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12 ஆம் நாளில் விக்கிரமங்கலத்தில் ஒரு பெண்ணை கற்பழித்ததாகக் கூறப்பட்ட புகார் தொடர்பாக 1978 ஆம் ஆண்டு மே திங்களில் மூன்று காவலர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

## திருவள்ளறையில் புதிய காசநோய் மருத்துவமனை

வினா 509—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா !

(அ) திருச்சியை அடுத்த திருவள்ளறையில் புதிதாக காசநோய் மருத்துவமனை ஒன்றினை நிறுவிடும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை:

(அ) மற்றும் (ஆ) திருச்சியிலுள்ள இராஜாஜி காசநோய் சிகிச்சை மருத்துவமனை திருவள்ளறையிலிருந்து 12 மைல் தொலைவுக்குள்ளேயே அமைந்திருக்கிறது. மேலும் இந்த மருத்துவமனையில் இருக்கக்கூடிய 78 படுக்கைகளும் நிரம்பி இருப்பதில்லை. மேலும் திருச்சிக்கு அருகாமையில் உள்ள தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டியிலும் படுக்கைகள் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மகாத்மா காந்தி நினைவு காசநோய் சிகிச்சை உள்ளது. எனவே திருவள்ளறையில் காசநோயினால் பாதிக்கப்படுவோர் இந்த மருத்துவ மனையில் சிகிச்சை பெற முடியும். எனவே திருச்சியில் உள்ள திருவள்ளறையில் மேலும் ஓர் புதுகாசநோய் மருத்துவமனை நிறுவிடத்தேவையில்லை என மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குநர் தெரிவித்துள்ளார்.



1979 நவம்பர் 7]

## பைசலாகாமல் உள்ள சிவில், கிரிமினல் வழக்குகள்

வினா 510—திரு. ஆர். உமாநாத் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உயர்நீதி மன்றம், மாவட்ட தாலூகா கீழ்க்கோர்ட்டுகளில் பைசலாகாமல் தேங்கியுள்ள சிவில்/கிரிமினல் வழக்குகள் எத்தனை?

(ஆ) அவை பைசல் செய்வதில் கால தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?

விடை—

(அ) 30—6—1978 அன்று நிலவரப்படி சென்னை உயர் நீதி மன்றத்தில் குற்றவியல் வழக்குகள் 5,371-ம் உரிமையியல் வழக்குகள் 47,548ம், மாவட்ட தாலூகா நீதி மன்றங்களில் குற்றவியல் வழக்குகள் 1,30,742-ம் உரிமையியல் வழக்குகள் 2,13,627ம் நிலுவையில் உள்ளன.

(ஆ) வழக்குகளில் தீர்ப்பு அளிக்கும் முன் சம்பந்தப்பட்ட எல்லா தரப்பினருக்கும் போதிய சந்தர்ப்பமும், சட்ட பூர்வமான எல்லா உரிமைகளும் வழங்க வேண்டியுள்ளதாலும், எல்லா நடைமுறைத் தேவைகளும் கடைப்பிடிக்க சிறிது காலம் வேண்டியிருப்பதாலும், வழக்குகளில் சம்மந்தப்பட்ட வழக்கறிஞர்கள் சில சமயங்களில், வாதாடத் தயாராக இல்லாமையாலும் சில இடங்களில் வழக்குகளின் எண்ணிக்கை அங்குள்ள நீதிபதிகளின் பொறுப்புக்கும் அதிகமாகி விடுவதாலும் நிலுவை ஏற்பட்டுள்ளது.

## *Rest Houses run by Religious Institutions.*

Q. 511—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state—

(a) The details of the Religious Institutions in this State which have Rest houses ; and

(b) The total number of rooms, flats and the cottages available temple-wise ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஓர் விவர அறிக்கை* அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

## Refresher Course for footwear designers.

*Q.* 512—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any Refresher Course for Footwear Designers has been conducted in the Central Footwear Training Centre at Madras ; and

(*b*) If so, the details thereof.

விடை—

கான்பூரில் உள்ள தோல் பதனிடுதல் மற்றும் தோல்பொருள் தயாரிப்பாளர்கள் ஏற்றுமதிப் பெருக்கக் குழுமத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவானது, சென்னை கிண்டியில் உள்ள மையக் காலணிப் பயிற்சி நிலையத்தில் ''காலணி வடிவமைப்பு மீள் பார்வை வகுப்பை'' (Footwear Designers' Refresher Course) தொடங்கியது. இவ்வகுப்பு 3—7—1978 முதல் 15—7—78 வரை நடைபெற்றது. இதன் நோக்கமானது, காலணித் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு ஏற்றுமதிப் பொருட்களுக்கான நவீன பாணிகளை வடிவமைப்புக்களையும், மற்றும் பயனுள்ள செய்திகளையும் அளிப்பதாகும். இவ்வகுப்பு 1978 ஜூலை 3-ம் தேதியன்று பாராளுமன்ற பழைய உறுப்பினரும் முன்னணித் தோல்பொருட் தொழிலதிபருமான ஜனாப் திரு. டி. அப்துல் வகீத் சாயபு அவர்களால் தொடங்கப்பெற்றது. பாடா நிறுவனத்தின் பழைய தலைமை வடிவமைப்பாளரும், இந்தியாவில் உள்ள சிறந்த காலணி வடிவமைப்பாளர்களில் ஒருவருமாகிய திரு. கோபால் லால் கோஷ் அவர்களால் மேற்படி வகுப்பு நடத்தப் பெற்றது. அரசு சார்ந்த தொழிற்சாலைகளிலிருந்தும், பிறதொழிற்சாலைகளிலிருந்தும் 6 மாணவர்கள் பயிற்சி பெற்றனர். தங்களது புத்தக மற்றும் செய்முறைப் பயிற்சி வகுப்புகளிடையே இம்மாணவர்கள் சென்னை, மையத் தோல் ஆராய்ச்சி நிலையத்தின் தொழிற்சாலை (Tannery) காலணிப்பிரிவு, தோல்பொருள் பிரிவு போன்ற பிரிவுகளையும் பார்வையிட்டனர். சென்னை மையக் காலணிப் பயிற்சி நிலையத்தின் பல பிரிவுகளையும் அவர்கள் பார்வையிட்டுத் தங்களது தொழிலறிவை வளர்த்துக் கொண்டனர். தோல் பதனிடுதல், நுண்ணுயிரியல், வாணிகச் சந்தை, தரக் கட்டுப்பாடு போன்ற பல பாடங்களில் சிறந்த வல்லுனர்களால் சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன.

[*..813ம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]



இவ்வகுப்பு 15—3—1978 அன்று தென்னிந்திய தொழில் வர்த்தக அமைப்பின் தலைவர் திரு. சி. கே. துரைவேலன் அவர்களின் உரையோடும், கலந்து கொண்டவர்களுக்கு அன்னார் சான்றிதழ் வழங்கியதோடும் இனிது நிறைவு பெற்றது.

The Research and Development Cell of the Export Promotion Council for Finished Leather and Leather Manufacturers Kanpur organised the Footwear Designers' Refresher Course at the Central Footwear Training Centre, Guindy, Madras from 3rd July 1978 to 15th July 1978 with the object of educating the designers engaged in the shoe industry on modern fashions and designs and to render useful information to the industry for production of export oriented items. The course was inaugurated on the 3rd July 1978, by Janab T. Abdul Wahid Sahib, Ex. M.P. and leading leather industrialist. Shri Gopal Lal Ghosh, Ex. Chief Designer, Bata India and one of the eminent footwear designers in India, conducted the course. Six candidates from the industry and Government agencies were trained. Besides the theoretical and practical training, the candidates have visited the Tannery, Footwear section and Leather Goods section of the Central Leather Research Institute, Madras and the different sections of the Central Footwear Training Centre, Madras, to upgrade their knowledge. Lectures on different subjects, like Leather Microscopy, Microbiology, Marketing Standardisation, etc., were also delivered by eminent guest speakers. The course concluded on 15th March 1978, with a valedictory address by Shri C.K. Duraivelan, President, Southern India Chamber of Commerce and Industry, Madras, who also distributed the certificates to the participants.

## நியாய விலைக் கடைகள்

வினா 513—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1978-ம் ஆண்டு துவக்க முதல் இதுவரை துவக்கப்பட்ட நியாய விலைக் கடைகள், எத்தனை, மாவட்டவாரியாக?

<u>விடை—</u>

மாநிலம் முழுவதும் வருவாய் கிராமம் ஒவ்வொன்றிலும் ஒரு நியாய விலைக் கடை அமைப்பதென்றும், இந்தக் கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை தவிர பருப்பு வகைகள் சமையல் எண்ணெய்கள், புளி, மிளகாய் ஆகிய இன்றியமையாப் பொருட்களை வழங்கப்பட வேண்டுமென்பதும் இந்த அரசின் கொள்கையாகும். இத் திட்டம், பின்வருமாறு செயல்படுத்தப் படுகிறது:—

(அ) ஏற்கனவே, இயங்கிவரும் நியாய விலைக் கடைகளை மற்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் விநியோகிக்க பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றி அமைத்தல்.

(ஆ) அந்தந்த கிராமங்களிலேயே நியாய விலைக் கடைகள் இல்லாத கிராமங்களில் புதிய கடைகளைப் படிப்படியாக திறத்தல்.

முதற் கட்டமாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாநிலம் முழுவதும் நடத்தும் 800-க்கு மேற்பட்ட கடைகளும் கூட்டுறவு அமைப்புகளால் இயங்கி வந்த 4,441 கடைகளும் பல்பொருள் நியாயவிலைக் கடைகளாக மாற்றப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக, மாநிலம் முழுவதும் புதிய கடைகளைத் திறக்கும் பணி பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது:—

| (1) | (2) |
|---|---|
| தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் திறக்கப்படுவது. | நெல்லை, தர்மபுரி, தஞ்சை தென்னாற்காடு. |
| கூட்டுறவு அமைப்புகளால் திறக்கப்படுவது: | மற்ற மாவட்டங்களில் (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மேற்கொள்ளும் மாவட்டங்கள் நீங்கலானவை): |



மேற்கூறிய திட்டத்தின்படி புதிய நியாய விலைக் கடைகள் திறக்கும் பணி பின்வருமாறு செயல்படுத்தப்பட்டுள்ளது:—

| மாவட்டம். | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம். | கூட்டுறவு அமைப்புகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 செங்கற்பட்டு .. .. | .. | 1,628 |
| 2 வடாற்காடு .. .. | .. | 1,481 |
| 3 தென்னாற்காடு .. .. | 1,804 | .. |
| 4 தஞ்சை .. .. .. | 1,040 | .. |
| 5 திருச்சி .. ... .. | .. | 571 |
| 6 புதுக்கோட்டை .. .. | .. | 558 |
| 7 மதுரை .. .. .. | .. | 605 |
| 8 முகவை .. .. .. | .. | 968 |
| 9 நெல்லை .. .. .. | 442 | .. |
| 10 கோவை .. .. .. | .. | 436 |
| 11 உதகை .. .. .. | .. | 3 |
| 12 சேலம் .. .. .. | .. | 569 |
| 13 தருமபுரி .. .. .. | 613 | .. |
| 14 குமரி .. .. .. | எல்லா கிராமங்களிலும் கடைகள் உள்ளன. | .. |
| | 3,899 | 6,819 |

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் திறக்கப்பட்ட புதிய கடைகள். | .. | 3,899 |
| கூட்டுறவு அமைப்புகள் மூலம் திறக்கப்பட்ட கடைகள். | .. | 6,819 |
| | | 10,718 |

## T.B. Hospital at Asaripallam.

Q. 514—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is a proposal for the expansion of Government T.B. Hospital at Asaripallam in Nagercoil in Kanyakumari district;

(b) the number of patients now in the waiting list; and

(c) the strength of the existing beds?

*Ans.*—

(a) No.

(b) 1,151

(c) 370

(அ) இல்லை;
(ஆ) 1,151
(இ) 370

## மதிய உணவுக்கான மானியம்.

வினா 515—திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளித் தலைமை ஆசிரியர் விடுப்பில் இருக்கும்போது அப்பள்ளியில் பணியாற்றும் மற்ற உதவி ஆசிரியருக்கு மதிய உணவு வழங்க அரசு மானியம் மறுக்கப்படுவது உண்மையா?

(ஆ) பள்ளியில் தலைமை ஆசிரியர் இல்லாதபோது தொடர்ந்து மதிய உணவு வழங்க மாற்று ஏற்பாடு செய்யப்பட உள்ளதா?

விடை—

மத்திய சமையற்கூட பகுதிகளில் மதிய உணவு வழங்குவதில் தலைமை ஆசிரியருக்கு நேரடிப் பொறுப்பு எதுவுமில்லை.





மத்திய சமையற்கூடம் இல்லாத பகுதிகளில் பள்ளித் தலைமை ஆசிரியர்தான் பள்ளி மதிய உணவு மையச் செயலராவார். அவருக்குத்தான் மதிய உணவு மானியம் வழங்கப்படுகிறது. தலைமை ஆசிரியர் சிறுவிடுப்பில் செல்லும்பொழுது தலைமை ஆசிரியர் பொறுப்பில் செயல்படும் உதவி ஆசிரியர் மூலம் மதிய உணவு ஒழுங்காக வழங்கப்பட வகை செய்கிறார். தலைமையாசிரியர் நீண்ட நாள் விடுப்பில் செல்லும்பொழுது தான் வகித்துவரும் "மதிய உணவு மையச் செயலர்" பொறுப்பையும் (பள்ளிக் கல்வித்துறை அனுமதியுடன்) உதவி ஆசிரியருக்கு மாற்றி அவ்வுதவி ஆசிரியருக்கு மதிய உணவு மானியம் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## கக்குச்சி குடிநீர்த் திட்டம்.

வினா 516—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974–75 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கக்குச்சி என்னுமிடத்திற்கு ரூபாய் 90,000 செலவில் எடுக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் வேலை முடிவுற்றுவிட்டதா?

விடை—

கக்குச்சி குடிநீர்த் திட்டம் வேலை இன்னும் முடிவடையவில்லை. வேலை நடந்துகொண்டு இருக்கிறது.

## ஊட்டி ஒன்றியத்தில் புதிய மருத்துவ நிலையங்கள்.

வினா 517—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊட்டி ஒன்றியத்தில் தூனேரி, மஞ்சூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள மருத்துவ நிலையங்கள் எப்போது செயல்படத் தொடங்கும்?

விடை —

ஊட்டி ஒன்றியத்தில் தூனேரியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 1978-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 ஆம் நாளிலிருந்தும் மஞ்சூரிலுள்ள அரசு மருந்தகம் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாளிலிருந்தும் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

## Women Police Officers.

Q. 518—THIRU N. KITTAPPA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) Whether the State Government have banned the Marriage of Women Police Officers during the training period and during service ; and

(b) if so, the details thereof.

*Ans*:—

(a) and (b) : As the Women Police Constables and Sub-Inspectors have to stay together in a training institution for a period of 9 to 12 months, involving long hours of physical and class room instruction from early morning till late in the evening, the Government have ordered that they should be unmarried at the time of recruitment and till the completion of institutional and practical training only.

(அ) மற்றும் (ஆ) மகளிர் காவலர்கள் மற்றும் சப்-இன்ஸ்பெக்டர்கள் ஒன்பது மாதங்களிலிருந்து பன்னிரண்டு மாதங்கள் வரை ஒரு பயிற்சிப் பள்ளியில் நீண்ட நேரம் உடற்பயிற்சி மற்றும் வகுப்பறைப் பாடப் பயிற்சி பெற வேண்டியிருப்பதால், அவர்கள், வேலைக்கமர்த்தப்படும்போதும், பள்ளி மற்றும் அனுபவப்பயிற்சி முடியும் வரையிலும், திருமணம் செய்துகொள்ளாதிருத்தல் வேண்டும், என அரசு ஆணையிட்டுள்ளது.



## திருவண்ணாமலையில் மருத்துவமனையில் வெறி விலங்கு பிணிப்பால் இருப்பு.

வினா 519—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அரசினர் மருத்துவமனையில் 1978 அக்டோபர், நவம்பர் மாதங்களில் நாய்க்கடிக்கு மருந்து இல்லாமல் பொது மக்கள் அவதிக்குள்ளானார்களா ?

ஆ) ஆம் எனில் அதன் காரணம் என்ன ?

(இ) மாற்று ஏற்பாடு என்ன செய்யப்பட்டது ?

விடை—

(அ) திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் அக்டோபர் மாதம் மட்டும்தான் அதாவது 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22 ஆம் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28 ஆம் நாள் வரை வெறி விலங்கு பிணிப்பால் இருப்பில் இல்லாமல் இருந்தது.

(ஆ) 1978 அக்டோபர் மாதத்தில் முதல் இரண்டு வாரங்களில் திடீரென்று நாய்க்கடியால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் அதிகமாகி விட்டதால் இருப்பில் இருந்த மருந்து அனைத்தும் விரைவாகத் தீர்ந்துவிட்டது. மேலும், 1978 அக்டோபர் 16, 17 தேதிகளில் அம்மருந்துக்கான தேவைப்பட்டியல்கள் தந்தி மூலமாக கூனூருக்கு அனுப்பப்பட்ட போதிலும், அந்த ஆண்டு செப்டம்பர்/அக்டோபர் மாதங்களில் ஊட்டி மற்றும் கூனூர் பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டதால் கூனூர் நிலையத்திலிருந்து வெறி விலங்கு பிணிப்பால் Anti Rabbies Vaccine விநியோகம் செய்வது பாதிக்கப்பட்டது.

(இ) 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22 ஆம் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28 ஆம் நாள் வரை வெறி விலங்கு கடி நோயாளிகளுக்கு முதல் உதவி செய்யும் வகையில் A.T.S. பாதுகாப்பு ஊசி போடப்பட்டு அந்நோயாளிக்ளை ஒரு நாள் விட்டு ஒரு நாள் வெறி விலங்கு பிணிப்பால் இருப்பில் உள்ளதா என்று அறிய மருத்துவ மனைக்கு வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். மேலும், அவர்கள் அருகில் உள்ள மற்ற மருத்துவ மனைகளில் வெறி விலங்கு பிணிப்பால் இருப்பில் இருந்தால் அங்கு சிகிச்சை பெறும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள், அருகிலுள்ள வடஆற்காடு மாவட்டத்தில்

உள்ள செங்கம் மற்றும் போரூர் மருத்துவ மனைகளிலிருந்து ஓர் அளவு வெறி விலங்கு பிணிப்பால் பெறுவதற்கு முயற்சி செய்தும் முடியவில்லை, ஏனெனில் அந்த மருத்துவ மனைகளில் அச்சமயம் சிறிதளவு மருந்தே இருப்பில் இருந்தது. 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28 ஆம் நாள் அன்று இம்மருந்துகள் அரசு மருத்துவ மனைக்கு கிடைக்கப்பட்டது.

## பரங்கிப்பேட்டை ஒன்றிய ஆரம்பப்பள்ளிகள்.

வினா 520—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் பரங்கிப்பேட்டை யூனியனில் உள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், கட்டிடம் இல்லாமல் கூரை கொட்டகையில் நடைபெறும் இடங்கள் எத்தனை ?

(ஆ) கட்டிடங்கள் எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) இருபத்து ஆறு (26).

(ஆ) நடப்பு ஆண்டில் 8 பள்ளிக்கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ளது ஆண்டுக்கு 4 பள்ளிகள் வீதமாக அவ்வப்போது ஒதுக்கப்படும். நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி 5 ஆண்டு காலத்தில் நிரந்தரக் கட்டிடங்கள் அமைக்க இயலும்.

## *Certificates to Blood donors.*

Q.521—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) Whether the Tamil Nadu Government has proposed to introduce the system of issuing certificates to blood donors in this State ; and

(b) If so, the details thereof ?



விடை—

(அ) ஆம்.

(ஆ) மருத்துவ கல்வி இயக்குநரை கௌரவ தலைவராகக் கொண்டு இரத்த சேமிப்பு நிலைய நிறுவனம் ஒன்றைத் துவக்க அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது. கல்லூரிகளின் மூலமாகவோ, அல்லது தனிப்பட்ட இரத்த சேமிப்பு நிறுவனங்கள் மூலமாகவோ நடத்தப்படும் இரத்தம் வழங்கும் முகாமின் முடிவில் இரத்த தானம் அளித்தவர்களுக்கு அவர்களுடைய செயலினைப் பாராட்டி நற்சான்றிதழ் வழங்கப்படும். நற்சான்றிதழ்களை மருத்துவக் கல்வி இயக்குநர் அச்சிட்டு வழங்க ஏற்பாடு செய்தார்,

## பழனி அரசினர் மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவுக்கு தனிமருந்துவர்.

வினா 522—திரு என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அரசினர் மருத்துவ மனையில் குழந்தைகள் பிரிவில் சிகிச்சைக்கு வரும் குழந்தைகளுக்கு தனி மருத்துவர் (Child Specialist) இல்லாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அங்கு ஒரு தனி மருத்துவரை நியமிப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

(அ) குழந்தைகள் சிகிச்சை மருத்துவத்தில் டிப்ளமா பட்டம் பெற்ற ஒருவர், ஆயக்குடி மருத்துவ மனையிலிருந்து மாற்று நியமனம் செய்யப்பட்டு, பழனி மருத்துவ மனையில் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ம் நாள் முதல் பணிபுரிந்து வருகிறார்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சந்திரசேகரபுரம் பண்டகசாலைப் பணியாளர்கள்.

வினா 523—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடந்தை சந்திரசேகரபுரம் பண்டகசாலையில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் எத்தனைப் பேர்?

(ஆ) தற்காலிக பணியாளர்கள் எத்தனைப் பேர்?

(இ) அவர்களது பணிகளை நிரந்தரமாக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

விடை —

(அ) 337.

(ஆ) 40.

(இ) தற்கால பணியாளர்களின் பணிகளை நிரந்தரமாக்க கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சங்க விதி முறைகளை தளர்த்துதல், கூட்டுறவு பயிற்சியை மேற்கொள்ள செய்தல், நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கைகளில் தீர்ப்பு வழங்குதல் போன்ற தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

## வட ஆற்காடு மாவட்டத்தில் மது விலக்குச் சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகள்.

வினா 524—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கதர், கைத்தறித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய மது விலக்குச் சட்டத்தின் கீழ் இதுவரை எத்தனை பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது?

(ஆ) அவர்களுள் குடித்த காரணத்திற்காக, விற்ற காரணத்திற்காக காய்ச்சிய காரணத்திற்காக முறையே எத்தனை பேர்?



விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் 1979-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28-ம் நாள் வரை 11,670 பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

(ஆ) அவர்களில் குடித்த காரணத்திற்காக 5,182 பேர்கள் மீதும்,

(இ) விற்ற காரணத்திற்காக 994 பேர்கள் மீதும்,

(ஈ) சாராயம் காய்ச்சிய காரணத்திற்காக 1,577 பேர்கள் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

(உ) 3,917 வழக்குகள் மற்ற தலைப்புகளின் கீழ் உள்ள குற்றங்களுக்காக பதிவு செய்யப்பட்டன.

## கூட்டுறவு விவசாய நாணய சங்கங்கள் மூலம் வழங்கப் பெற்ற கடன்கள்.

வினா 525—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் பேரவையில் 1979-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12-ம் நாளன்று வைக்கப் பெற்ற வினா எண் 461-க்கான விடையையொட்டி தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 1977–78-ம் ஆண்டு கூட்டுறவு விவசாய நாணய சங்கங்களால் 8,92,662 பேர்களுக்கு கொடுக்கப்பட்ட ரூபாய் 12,068–59 இலட்சம் ரூபாயில் 1979-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ம் நாள் வரை திரும்பப் பெறப்பெற்ற, நிலுவையில் உள்ள தொகை முறையே எவ்வளவு?

(ஆ) கடன்களைத் திரும்பச் செலுத்தியவர்களுக்கு மறு கடன் வழங்க என்ன ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன?

(இ) செலுத்தாமல் உள்ளவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பெற்றுள்ளது?

விடை—

(அ) ரூபாய் 6,746.69 இலட்சம் திரும்பப் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூபாய் 5,321.90 இலட்சம் 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31-ம் நாளன்று நிலுவையிலுள்ளது.

(ஆ) முன்னால் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்திய கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு மறு கடன் வழங்குவதில் முன்னுரிமை அளிக்குமாறு மத்திய கூட்டுறவு வங்கிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. தவணை தவறிய கடன்கள் 70 விழுக்காட்டிற்கு மேற்படாமல் இருக்கும் சங்கங்கள் தவணை தவறாத உறுப்பினர்களுக்கு பயிர்க் கடன் வழங்குவதற்கு மத்திய கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் பெறும் தகுதி பெற்றவையென அறிவுறுத்தப்பட்டது.

(இ) குறிப்பிட்டுள்ள வழிமுறைகளின் படி தவணை தவறியவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. அரசு அறிவித்துள்ள சலுகைகளுக்கு நல்ல விளம்பரம் கொடுக்கும்படியும், குறித்த காலத்தில் கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டியதன் தேவையை விவசாயிகளுக்கு விளக்கும்படியும், அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## சென்னை நகரில் காலரா நோயால் பாதிக்கப் பெற்றவர்கள்.

வினா 526—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னை நகரில் 1978–79-ம் ஆண்டில் காலரா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

விடை—

சென்னை நகரில் 1978–79-ம் ஆண்டு (1978-ம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1979-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ம் நாள் வரை) காலரா நோயால் 2,298 பேர்கள் பாதிக்கப்பட்டவர்கள் . இவர்களில் 47 பேர்கள் இறந்தனர்.

## மாங்கரை பள்ளத்தின் தடுப்புச் சுவர்.

வினா 527—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கோவை தாலுக்கா 24, வீரபாண்டி பஞ்சாயத்தில் மழைக் காலங்களில் மாங்கரை பள்ளத்தில் ஏற்படும் வெள்ளப் பெருக்கால் கிராமத்திற்கு ஏற்படும் சேதத்தை தடுத்து நிறுத்த, மாங்கரை பள்ளத்தில் பழுதடைந்துள்ள தடுப்புச் சுவரை பலப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் விபரம் என்ன ?





விடை—

மாங்கரைப் பள்ளத்தில் பழுதடைந்துள்ள தடுப்புச் சுவரைப் பலப்படுத்த செலவு செய்யும் அளவிற்கு பெரியநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலும், 24, வீரபாண்டி ஊராட்சியிலும் நிதி வசதி இல்லை. மேலும் கடந்த ஆண்டுகளில் அதிகமான மழை பெய்த போதும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை. மேற்கண்ட காரணங்களால் அதனைப் பழுது பார்க்க நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

## சூரியனார் கோயில்.

வினா 528—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் அருகிலுள்ள சூரியனார் கோயிலை மேம்படுத்தும் திட்டம் உண்டா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், திருவாவடுதுறை ஆதீனத்தின் பராமரிப்பில், திருவிடைமருதூர் அருகில் உள்ள அருள்மிகு சூரிய நாராயணசுவாமிஆலயத்தை திருப்பணி செய்ய ரூபாய்41,000-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு 1974-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27-ம் நாளில் அங்கீகரிக்கப்பட்டு, திருப்பணி வேலைகள் நடைபெறாமலிருந்தால் புதிய மதிப்பீடு தயார் செய்ய 1979-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30-ம் நாள் தஞ்சை உதவி கோட்டப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். புதிய மதிப்பீடுகள் அங்கீகாரம் பெற்ற பின் திருப்பணி சம்பந்தமான நடவடிக்கை தஞ்சை துணை ஆணையரால் எடுக்கப்படும்.

## தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கடலில் சேரும் நீர்.

வினா 529—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் எத்தனை சதவிகிதம் தண்ணீர் வடிந்து கடலில் கலக்கிறது?

(ஆ) சிதம்பரம் வட்டத்தில் மட்டும் எத்தனை சதவிகிதம்?

[1979 நவம்பர் 7

விடை —

(அ) மற்றும் (ஆ) : தென்னாற்காடு மாவட்டத்தில் கடலில் விழும் உபரி நீரைப் பற்றிய ஆய்வு நடைபெற்று வருகிறது. எனவே ஆய்வு முடிந்த பின்னரே விவரங்கள் தெரியவரும்.

பூமிதான இயக்கம்.

வினா 530—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பூமிதான இயக்கம் எப்பொழுது உருவாக்கப்பட்டது?

(ஆ) அதற்காக 1978 முடிய ஆன அரசின் செலவுத் தொகை எவ்வளவு ?

(இ) பூமிதான இயக்கத்தின் மூலம் கிடைத்த மொத்த நஞ்சை, புஞ்சை எவ்வளவு ஏக்கர் நிலம் ?

(ஈ) அதில் பிரித்துக் கொடுக்கப்பட்ட நிலம் எவ்வளவு ?

(உ) இவ்வியக்கத்தால் பயன் பெறுவோர் எத்தனை பேர்கள் ?

விடை —

(அ) பூமிதான இயக்கம் 1958-ல் உருவாக்கப்பட்டது.

(ஆ) 1971-ம் ஆண்டு முதல் 1978-ம் ஆண்டு முடிய அதற்காக ரூ. 33,24,973 அரசின் செலவுத் தொகையாகும். 1971-க்கு முந்திய ஆவணங்கள் கையில் இல்லாததால், 1971-க்கு முந்திய செலவுத் தொகை கொடுக்க இயலவில்லை.

(இ) பூமிதான இயக்கத்தின் மூலம் கிடைத்த நஞ்சை-புஞ்சை, மொத்தம் 23,472 ஏக்கர் நிலமாகும்.

(ஈ) அதில் பிரித்துக் கொடுக்கப்பட்ட நிலம் 22,786 ஏக்கர்.

(உ) இவ்வியக்கத்தினால் பயன் பெறுவோர் 15,409 பேர்கள்.



1979 நவம்பர் 7]

பழனியில் வழிகாட்டும் பணியாளர்களுக்கு அடையாள அட்டை.

வினா 531—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பழனி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு வழி காட்டும் ஊழியர்களுக்கு தேவஸ்தானத்தாரால் அடையாள அட்டைகள் வழங்கப்படுமா ?

விடை—

பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் சார்பில் உள்ள சத்திரம் தண்டபாணி நிலையம் கார்த்திகேயன் விடுதி சிறுகுடில் ஆகிய இடங்களில் தங்கி சுவாமி தரிசனம் செய்ய வருகின்ற பக்தர்களுக்கு வழி காட்டவும் இதர ஏற்பாடுகள் செய்வதற்கும் வழி காட்டிகளாக பணியாற்றி வரும் 60 நபர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

தூதூர் மடத்தில் உள்ள ஆரம்பப்பள்ளி.

வினா 532—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கூன்னூர் ஒன்றியம் தூதூர் மடத்தில் உள்ள ஆரம்ப பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

விடை—இல்லை.

திருத்தங்கல் நின்ற நாராயண பெருமாள் கோயில்.

வினா 533—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருத்தங்கல் நின்ற நாராயண பெருமாள் கோயில் தேவஸ்தானத்திற்கு சொந்தமான நிலங்கள் எவ்வளவு ?

(ஆ) அதன் மூலம் தேவஸ்தானத்திற்கு கிடைக்கும் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

விடை—

(அ) திருத்தங்கல் நின்ற நாராயண பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் விபரம் :

| | | | ஏ. செ. |
|---|---|---|---|
| நஞ்சை | .. | .. | 11 92 |
| புஞ்சை | .. | .. | 9 00 |
| மொத்தம் | .. | .. | 20 92 |

(ஆ) அதன் மூலம் தேவஸ்தானத்திற்கு கிடைக்கும் ஆண்டு வருமான விவரம் :—

| | | ரூ. |
|---|---|---|
| நஞ்சையின் மூலம் | .. | 3,178·00 |
| புஞ்சையின் மூலம் | .. | 50·00 |
| மொத்தம் | .. | 3,228·00 |

மதுரை பால்வள நிறுவனத்திற்கு வாங்கப்பெற்ற பாலித்தீன் பைகள்.

வினா 534—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கிராமத்தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை பால்வள நிறுவனத்திற்கு ஆண்டுக்கு எத்தனை பாலித்தீன் பைகள் வாங்கப்படுகின்றன?

(ஆ) அவைகள் என்ன அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது?

விடை—

(அ) தமிழ்நாடு பாலவள நிறுவனத்தின் மதுரை பிரிவிற்குப் பால் விநியோகத்திற்காகப் பாலித்தீன் பைகளாக வாங்குவதில்லை. ஆனால் ஆண்டு ஒன்றிற்கு 180 மெட்ரிக் டன் பாலித்தீன் சுருள் வாங்கி சுமார் 360 லட்சங்கள் பாலித்தீன் பைகள் பால் விநியோகம் செய்வதற்காகத் தயாரிக்கப்படுகிறது.



(ஆ) பாலித்தீன் சுருள்கள் டெண்டர் அறிக்கையின்படி உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கப்படுகிறது.

சிதம்பரம் வட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்கள்.

வினா 535—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் எத்தனை இடத்தில் நெல் கொள்முதல் நிலையம் உள்ளது?

(ஆ) இதுவரை எவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டது?

விடை—

(அ) 1979 சம்பா பருவத்தில் சிதம்பரம் வட்டத்தில் சிதம்பரம் நகரில் ஒரு நேரடிக் கொள்முதல் நிலையம் இயங்கி வந்தது.

(ஆ) இந்த நிலையத்தில் விவசாயிகள் தாமாகக் கொண்டு வந்து விற்ற 352 டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

நடப்பு குறுவை அறுவடை காலத்தில் தென் ஆற்காடு மாவட்டத்தில் 5 நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறக்க அனுமதியளிக்கப்பட்டு உள்ளது. தேவைக்கேற்ப அவை திறக்கப்படும்.

மாயூரம் நகரில் ஆட்டோ ரிக்ஷா உரிமங்கள்.

வினா 536—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் நகரில் எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் எண்ணிக்கையினை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

விடை :

(அ) ஆறு ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மண்டல போக்குவரத்து அதிகாரிக்கு விண்ணப்பித்தால் அது பரிசீலிக்கப்படும்.

## தஞ்சை மட்டாண்டத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனைகள்.

வினா 537—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1977–78-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனை நிலம் வழங்கப்பட்டுள்ளது, தாலூகா வாரியாக?

விடை —

1977–78-ம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பழைய நீடாமங்கலம் கிராமத்தில் குடியிருப்பு சட்ட விதிகளின்படி கீழ்க்கண்ட மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன :

| வீட்டு மனை வழங்கப்பட்டவர் பெயர். | புல எண். | மனையின் அளவு. | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| | | ஏ. | செ. |
| 1. தையல்நாயகி .. .. .. | 18/44 | 0 | 05 |
| | 42/ஏ | 0 | 05 |
| 2. கன்னையன் .. .. .. | 4?/பி | 0 | 04 |
| 3. வெங்கடாசல வேளார் .. | 11/9 ஜே | 0 | 01 |
| | 9கே | 0 | 01 |





## தஞ்சை மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு அரசு புறம்போக்கு நிலம்.

வினா 538—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1977–78-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் மட்பாண்டத் தொழிலாளர்கள் எத்தனை பேருக்கு அவர்களுக்குத் தேவையான மூலப்பொருள் களிமண் உள்ள அரசு புறம்போக்கு நிலம் தரப்பட்டுள்ளது?

(ஆ) தாலூகா வாரியாக.

விடை :

(அ) & (ஆ) அரசு புறம்போக்கு நிலம் எதுவும் தரப்படவில்லை.

## திருவான்மியூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்.

வினா 539—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன், திரு. ஆர். கே. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவான்மியூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் எண்ணம் அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது எங்கே கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## ஆய்குடி அரசு உயர்நிலைப்பள்ளி தளவாடச் சாமான்கள்.

வினா 540—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்வு கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ஆய்குடி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சொந்தமான பர்னீச்சர்களும் மற்றும் பல பொருட்களும் தற்பொழுது பள்ளிக் கட்டிடத்தில் இல்லையென்பது உண்மையா?

(ஆ) ஆமெனில் அதற்கான காரணம் யாது?

விடை—

(அ) & (ஆ) புல்லுக்காட்டுவலசை அரசினர் உயர்நிலைப் பள்ளி 1978–79-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அங்கு போதுமான தளவாடச் சாமான்கள் இல்லை. பாலூர் சத்திரம் அரசினர் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக மாற்றப் பட்டது. மேலும் தொழிற் கல்வி பிரிவு அப்பள்ளியில் ஆரம் பிக்கப்பட்டது. புதியதாக ஏற்பட்ட பள்ளிகளில் தேவையான தளவாடச் சாமான்கள் இல்லை. ஆய்குடி உயர்நிலைப்பள்ளி யில் நடைபெற்று வந்த (Bifurcated course) புதிய பாடத் திட்டத்தின் படி எடுக்கப்பட்டு விட்டது என்பதாலும் அப் பள்ளியில் தேவைக்கு அதிகமாக சில தளவாடச் சாமான்கள் இருந் தன என்பதாலும், தேவைக்கு அதிகமாக இருந்த தளவாடச் சாமான்கள் மட்டும் புல்லுக்காட்டு வலசை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கும் பாலூர் சத்திரம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கும் மாற்றப்பட்டன.

## மாயூரம் அரசினர் பொது மருத்துவமனை.

வினா 541—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாயூரம் அரசினர் பொது மருத்துவமனையில் தினசரி வரும் வெளி நோயாளிகள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் உள்நோயாளிகளாக அனுமதிக்கப் படுபவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) மாயூரம் அரசு மருத்துவமனையில் தினமும் சராசரி யாக சிகிச்சை யளிக்கப்பட்ட வெளி நோயாளிகளின் எண்ணிக்கை :—

1977-ம் ஆண்டு 995.
1978-ம் ஆண்டு 969.

(ஆ) இம் மருத்துவமனையில் மேற்குறிப்பிட்டுள்ள வெளி நோயாளிகளின் எண்ணிக்கையில் தினமும் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டவர்களின் சராசரி எண்ணிக்கை :—

1977-ம் ஆண்டு 38.
1978-ம் ஆண்டு 38.



வினா 542—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் பொது மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர்கள் எத்தனை பேர் ?

விடை—

மாயூரம் அரசினர் பொது மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர்களின் மொத்த எண்ணிக்கை பதினாறு.

வினா 543—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் அரசினர் பொது மருத்துவமனை நோயாளி களுக்கென 1977–78, 1978–79-ம் ஆண்டுகளில் மருந்துகள் செலவுக்காக முறையே அரசு அனுமதித்த தொகை எவ்வளவு ?

(ஆ) அவ்வாண்டுகளில் மருந்துகளுக்காக செலவிடப்பட்ட தொகை முறையே எவ்வளவு ?

விடை—

(அ) மாயூரம் அரசு மருத்துவமனைக்கு மருந்துகள் செலவுக் காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை :

| 1977–78. | 1978–79. |
|---|---|
| ரூ. 1,75,000 | ரூ. 1,50,000 |

(ஆ) மருந்து வாங்க செலவழிக்கப்பட்ட தொகை :

| 1977–78. | 1978–79. |
|---|---|
| ரூ. 2,07,443 | ரூ. 2,09,280 |

[1979 நவம்பர் 7

## வட்ட மருத்துவ மனைகளில் எலும்பு முறிவு பிரிவுகள்.

வினா 544—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாலூகா தலைநகரங்களில் உள்ள அரசுப் பொது மருத்துவமனைகளில் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு எத்தனை இடங்களில் உள்ளது?

(ஆ) அவைகளை விரிவுப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—

(அ) தற்போது தாலூகா தலைநகரங்களில் உள்ள எந்த அரசு பொது மருத்துவ மனைகளிலும் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வினா 545—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் அரசினர் பொது மருத்துவமனையில் பல் சிகிச்சை அளிக்கப்படுவதற்காக டாக்டர் யாரேனும் நியமிக்கப் பட்டுள்ளாரா?

(ஆ) ஆம் எனில், அவர் பகுதி நேர டாக்டரா முழுநேர டாக்டரா?

விடை—

(அ) ஆம், 12-6-72 முதல் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) முழு நேர டாக்டர்.



1979 நவம்பர் 7]

## சைதாப்பேட்டை அரசு பண்ணைக்கு குடிதண்ணீர் வழங்கல்.

வினா 546—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை சைதாப்பேட்டை "அரசு பாரம் விலேஜ்" ற்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் எப்பொழுது முடியும்?

விடை—

சென்னை சைதாப்பேட்டை அரசு பண்ணைக்கு குடிநீர் வழங்குவதற்கான விண்ணப்பம் பொதுப் பணித்துறையிலிருந்து 1977-ம் ஆண்டு சென்னை மாநகராட்சியால் பெறப்பட்டு, அனுமதி வழங்கப் பட்டது. ஆனால் அப்பொழுது அதற்கான இணைப்பு கட்டணத் தொகை கட்டப்படாமையால் அந்த அனுமதி காலாவதியாகி விட்டது.

தற்பொழுது பொதுப் பணித் துறையினரால் குடிநீர் இணைப்பு விண்ணப்பம் புதிதாகச் பெறப்பட்டுள்ளது. பொதுப் பணித்துறையினர் இணைப்பு கட்டணம் செலுத்தியவுடன் சைதாப்பேட்டை அரசுப் பண்ணைக்கு இணைப்பு கொடுக்கப்படும்.

## குடும்பநலப் பிரச்சாரம்.

வினா 547—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பநலத் திட்டப் பிரச்சாரத்திற்காக மத்திய அரசு தமிழக அரசுக்கு நடப்பு ஆண்டில் எவ்வளவு தொகை வழங்கியது, மாநில அரசு எவ்வளவு ஒதுக்கியது?

(ஆ) ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவிடப் பட்டதா?

(இ) இந்தப் பிரச்சாரப்பணி எந்தெந்த வகையில் நடைபெறுகின்றது?

விடை :—

(அ) குடும்பநலப் பிரச்சாரத்திற்காக மத்திய அரசு நடப்பு ஆண்டிற்கு (1979–80) ரூ. 15.88 லட்சம் வழங்கியிருக்கிறது. மாநில அரசு தனியாக ஒதுக்கீடு ஏதும் செய்யவில்லை.

(ஆ) நடப்பு ஆண்டில் செலவு செய்யப்படும்.

(இ) பொதுவாக நாடகம், வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபம், சினிமா விளம்பரம், வானொலி, குடும்பநலப் பயிற்சிமுகாம், சுவர் விளம்பரம், பெரிய தகர தட்டிகள், விளக்குக் கம்பங்களில் சிறிய தகர தட்டிகளை தொங்கவிடுதல், " குடும்பநல செய்தி கதிர் " என்ற மாத இதழ், சிறிய துண்டு பிரசுரங்கள், பெரியசுவரொட்டிகள், பட்டிமன்றம், கவியரங்கம் ஆகிய வகைகளில் பிரச்சாரப்பணிகள் நடைபெறுகின்றன.

## மாநில குடும்ப நலத்துறை அச்சகம்.

வினா 548—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில குடும்பநலத் துறையின் சார்பில் அச்சகம் ஒன்று இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அந்த அச்சகத்தில் நடைபெறும் பணிகள் யாவை?

(இ) அதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் நிர்வாகச் செலவு எவ்வளவு?

விடை—

விவர அறிக்கை* ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## படிக்காசுவைத்தான்பட்டி கிராம குயவர் சமூகத்தினர்களுக்கு தொழிற்கூடம்.

வினா 549—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதி, இனாம்படிக்காசுவைத்தான்பட்டி கிராமத்தில் குயவர் சமூகத்தினருக்கு தொழிற்கூடம் கட்டிக்கொள்ளவும், சூளை போட்டுக்கொள்ளவும் சர்க்கார் புறம்போக்கு சர்வே எண் 105–1–ல் 5 ஏக்கரை பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

[* 815-ம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]



விடை—

இல்லை.

## மம்சாபுரம் பகுதியில் டோபிக்கானா கட்டுதல்.

வினா 550—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, மம்சாபுரம் பகுதியில் டோபிக்கானா கட்டுவதற்கு குறிப்பேதும் ஆய்வில் இருந்ததா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் என்ன நிலையில் உள்ளது?

விடை —

(அ) & (ஆ) : திருவில்லிப்புத்தூர் தொகுதி, மம்சாபுரம் பகுதியில் சலவைத்துறை கட்டித்தர வேண்டுமென்ற சலவைத் தொழிலாளர்களின் கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டது. மம்சாபுரம் பேரூராட்சியின் நிதி நிலைமை அத்திட்டத்திற்கு இடமளிக்காததால், அப்பேரூராட்சி சலவைத் துறை கட்ட இயலாது என்று தெரிவித்துள்ளது.

## வேலைவாய்ப்பு பயிற்சித்துறையில் மாணவர் விடுதிகள்

வினா 551—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் உள்ள மாணவர் விடுதிகளுக்கு வானொலி வசதி செய்து தரப்பட்டுள்ளதா?

(ஆ) எத்தனை விடுதிகளுக்கு வானொலி வசதி செய்து தரப்பட்டுள்ளது ?

(இ) மீதி உள்ள விடுதிகளுக்கு எப்பொழுது வானொலி வசதி செய்து தரப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 29 விடுதிகள்.

(இ) இந்த செயற்குறிப்பு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் ஆய்வில் உள்ளது.

## மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்கள்.

வினா 552 — திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் மகளிர் தொழிற்பயிற்சி நிலையங்கள் எத்தனை ?

(ஆ) புதிய மகளிர் பயிற்சி நிலையங்கள் மதுரை, கோவையில் தொடங்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

விடை—

(அ) ஒன்று. இது சென்னையில், தியாகராயநகரில் உள்ளது.

(ஆ) இல்லை.

வினா 553—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் உள்ள மகளிர் தொழிற் பயிற்சி நிறுவனத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) உண்டெனின் எப்பொழுது ? எங்கு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மகளிர் தொழிற் பயிற்சி நிறுவனத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்ட தகுந்த இடம் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை. இப்பொருள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.



வினா 554—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி, அம்பத்தூர், வண்ணாரப்பேட்டை, செங்கற்பட்டு மற்றும் தியாகராயநகர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள மாணவர் விடுதிகளில் தொலைக்காட்சி (T. V.) வசதி செய்து தரப்படும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) உண்டெனின் எப்பொழுது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## திருவான்மியூர் அரசினர் தொழிற் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு தங்கும் விடுதி.

வினா 555—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவான்மியூர் அரசினர் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் தங்க, மாணவர் விடுதி கட்டும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனின் எப்பொழுது? எங்கு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## திருவான்மியூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்.

வினா 556—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவான்மியூர் அரசினர் தொழிற் பயிற்சி நிறுவனத்திற்கு முதல்வர் பதவி ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனின் எப்பொழுது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள்.

வினா 557—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்தில் "அரசினர் தொழிற் பயிற்சி நிலையம்" (I.T.I.) ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) உண்டெனின் எப்பொழுது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வினா 558—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கப்டலூரில் (மதுரை மாவட்டம்) அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் (I.T.I.) ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) உண்டெனின் எப்பொழுது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



## ஜவ்வாது மலைப்பகுதியில் தொழிற்பயிற்சி பள்ளி.

வினா 559—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப்பகுதியில் மலைவாழ் மக்களின் வளர்ச்சி நிதியிலிருந்து தொழிற் பயிற்சி பள்ளி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது? எந்த இடத்தில் ஆரம்பிக்கப் படும்?

விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஜவ்வாது மலைப்பகுதியில் மலைவாழ் மக்களின் வளர்ச்சி நிதியிலிருந்து தொழிற் பயிற்சி பள்ளி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

## சென்னையில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பெற்ற புதிய குடியிருப்புகள்.

வினா 560—திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977–78, 1978–79ஆம் ஆண்டுகளில் சென்னை நகரத்தில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் எத்தனை புதிய குடியிருப்புகள் எந்தெந்தக் கோட்டங்களில் கட்டப்பட்டது? அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

விவர அறிக்கை *அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

[816-ம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பெற்றுள்ளது]

## சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம்

வினா 561—திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல்-வடிகால் வாரியத்தின் தலைமை அலுவலகம் சொந்தக் கட்டிடத்தில் உள்ளதா? அல்லது வாடகைக் கட்டிடத்தில் உள்ளதா?

(ஆ) வாடகைக் கட்டிடம் என்றால் மாத வாடகை எவ்வளவு?

(இ) மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்களில் வாரியத்தின் கோட்ட அலுவலகங்கள் அமையப்பெற்றுள்ளது உண்மையா?

(ஈ) ஆம் எனில் அதற்காக தரப்படும் வாடகை எவ்வளவு?

விடை—

(அ) மற்றும் (ஆ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்தின் தலைமை அலுவலகம் சொந்தக் கட்டிடத்தில் இல்லை. வாடகைக் கட்டிடத்தில் அமையப் பெற்றுள்ளது. கட்டிடத்தின் வாடகை மாதம் ரூ. 56,572.50

(இ) மற்றும் (ஈ) வாரியத்தின் கோட்ட அலுவலகங்கள் அமையப் பெற்றிருக்கும் பல இடங்கள் சென்னை மாநகராட்சியிடமிருந்து வாரியத்திற்கு மாற்றித் தரப்பட்டது. மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தில் அமையப்பெற்றிருக்கும் கோட்ட அலுவலகங்கள் சிலவற்றிற்கு இதுவரையில் வாடகை நிர்ணயம் செய்யப்படவில்லை. அதனால் இதுவரையில் எந்த கோட்ட அலுவலகங்களுக்கும் வாடகை செலுத்தப்படவில்லை.





## சீரநாயக்கன் பாளையம் கிருஷ்ணாம்பதி ஏரி பள்ளம்

வினா 562—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சீரநாயக்கன்பாளையம் கிருஷ்ணாம்பதி ஏரி பள்ளம், மழை காலங்களில் உடைந்து ஊருக்குள் நீர் புகுவது அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பெய்த பலத்த மழையின் காரணமாக கிருஷ்ணாம்பதி ஏரிக்கு வரும் கணுவாய் பள்ளத்தில் அதிக வெள்ளம் வந்தது. இதனால் சீரநாய்க்கன்பாளையத்திற்கு அருகில் அதன் வலது கரையில் உடைப்பு ஏற்பட்டு ஊருக்குள் வெள்ளம் புகுந்தது. 1977—78ஆம் ஆண்டு வெள்ள நிவாரணப்பணியின் கீழ் இந்த கரை உடைப்பு சரிசெய்யப்பட்டது.

## வேலைவாய்ப்பு பெற்றுள்ள மலைஜாதியினர்

வினா 563—திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில், மலை சாதியினர் பட்டப்படிப்பு படித்தவர்கள் எத்தனை பேர் ? எஸ். எஸ். எல். சி. படித்தவர் எத்தனை பேர் ? வேலையின்றி இருப்போர் எத்தனை பேர் ?

விடை—

சேலம் மாவட்டத்தில் மலைசாதியினரில் ஐவர் பட்டப் படிப்பு வரையும், 114 பேர்கள் பள்ளி இறுதி படிப்பு (எஸ்.எஸ்.எல்.சி.) வரை படித்தவர்கள் ஆவார்கள். இவர்களில் பட்டப் படிப்பு படித்து வேலையின்றி இருப்போர் எவருமில்லை. பள்ளி இறுதி வகுப்பு வரை படித்துள்ள 114 பேர்களில் 69 பேர்கள் வேலை இன்றி இருக்கின்றனர்.

## சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் சந்தனக் கட்டைகள்.

வினா 564—திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஆண்டுதோறும் கிடைக்கும் சந்தனக்கட்டையின் அளவு என்ன ?

(ஆ) என்ன விலைக்கு விற்கப்படுகிறது ?

(இ) சந்தனக் கட்டைகளை பாதுகாக்க கிடங்கு ஒன்று கட்டப்படுமா ?

(ஈ) சேலத்தில் சந்தனத் தைல ஆலை ஒன்று நிறுவ அரசு உத்தேசித்துள்ளதா ?

விடை—

(அ) சுமார் 500 மெட்ரிக் டன்கள்.

(ஆ) சென்ற ஜூலை 1979-ல் கிடைத்த விலை மதிப்பு சராசரி ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூபாய் 37,571.

(இ) ஆம்.

(ஈ) தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் மூலம் ஐந்து அல்லது ஆறு சந்தனத் தொழிற்சாலைகள் நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எந்த இடங்களில் அவை நிறுவப்பட வேண்டும் என்பது பற்றி அரசு ஆய்ந்து வருகிறது. முதலில் ஒரு சந்தனத் தொழிற்சாலை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

## அரிசன மாணவர் விடுதிகள்

வினா 565—திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் எத்தனை அரிசன மாணவர்கள் விடுதிகள் கட்ட அரசு ஆணையிட்டது ?

(ஆ) 1977–78, 1978–79 இல் எத்தனை மாணவர்கள் விடுதிகள் கட்ட அரசு ஆணையிட்டது ?





(இ) அந்த விடுதிகள் கட்டி முடிப்பதில் தாமதம் உள்ளதா?

(ஈ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் என்ன ?

விடை—

(அ) 49 (இதில் மத்திய அரசின் உதவிபெற்ற ஒரு மாணவியர் விடுதியும் அடங்கியுள்ளது.)

(ஆ) 1977–78-ல் கட்ட ஆணையிடப்பட்ட விடுதிகளின் எண்ணிக்கை 4. (இதில் மத்திய அரசின் உதவிபெற்ற ஒரு மாணவியர் விடுதியும் அடங்கியுள்ளது.) 1978–79-ல் கட்ட ஆணையிடப்பட்ட விடுதிகளின் எண்ணிக்கை 2 (இதில் ஒரு விடுதி மத்திய அரசின் உதவி பெற்றது.)

(இ) மற்றும் (ஈ) (1) பரமத்தி (2) சத்தியமங்கலம் (3) மன்னார்குடி (4) மல்லக்கிணறு (5) இராயபுரம் (6) செங்கோட்டை தவிர மற்ற அனைத்தும் கட்டிமுடிக்கப்பட்டன. மேற்கண்ட ஆறு விடுதிகளுக்கான கட்டிடங்கள் கட்டும் பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. தாமதம் ஏதும் இல்லை.

## திருமுட்டம் மருந்தகம்.

வினா 566—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென் ஆற்காடு மாவட்டம் காட்டுமன்னார்குடி வட்டம் திருமுட்டம் மருந்தகத்தில் கடந்த பல மாதங்களாக டாக்டர் இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இம் மருந்தகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மருத்துவர் பதவி ஒன்று. இதில் டாக்டர் டி. இராதாகிருட்டினன் என்பவர் 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ம் நாள் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## கிராமக் கூட்டுறவு கடன் வழங்கு சங்க ஊழியர்கள்.

வினா 567—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் உள்ள கிராம கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் எத்தனை உள்ளது ?

(ஆ) இதில் பணியாற்றும் ஊழியர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) 4,742 சங்கங்கள்

(ஆ) பணியாற்றும் ஊழியர்கள் மொத்தம் 16,690 பேர்.

## வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டுள்ள தமிழ் ஆசிரியர்கள்.

வினா 568—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டுள்ள ஆசிரியர் பயிற்சி பெற்ற தமிழ்ப் புலவர்கள், ஆசிரியர் பயிற்சி பெறாத புலவர்கள் எண்ணிக்கை முறையே என்ன ?

விடை—

தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து கொண்டுள்ள ஆசிரியர் பயிற்சி பெற்ற தமிழ் புலவர்கள், ஆசிரியர் பயிற்சி பெறாத புலவர்கள் 1979 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள் அன்றைய நிலவரப்படி காத்திருந்தவர்கள் விபரம்—

1. ஆசிரியர் பயிற்சி பெற்ற தமிழ்ப் புலவர்கள் .. 3,153

2. ஆசிரியர் பயிற்சி பெறாத தமிழ்ப் புலவர்கள் .. 1,524





## ஆலங்காயம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டுள்ள ஆசிரியர்கள்.

வினா [illegible]—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பராா—

(அ) வடஆற்காடு மாவட்டம், ஆலங்காயம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 1979ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை வேலை வாய்ப்புக்காக பதிவு செய்யப்பட்டுள்ள முதுநிலை ஆசிரியர்கள் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) வேலைக்கு தேர்ந்தெடுத்தனுப்பப்பட்டவர்கள் எண்ணிக்கை எத்தனை ?

விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆலங்காயம் துணை வேலைவாய்ப்பகத்தில் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்றைய நிலவரப்படி வேலைவாய்ப்புக்காகக் காத்திருந்த முதுநிலை ஆசிரியர்களின் (செகண்டரி கிரேடு/சீனியர் பேசிக் டீச்சர்) எண்ணிக்கை 367 ஆகும்.

(ஆ) ஆலங்காயம் துணை வேலைவாய்ப்பகம் செயல்படத் துவங்கியதில் (டிசம்பர் 1977) இருந்து, 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய, மொத்தம் 74 முதுநிலை ஆசிரியர்கள் வேலையில அமர்த்தப்பட்டனர்.

## திருப்பத்தூர் நகரில் ஆட்டோ ரிக்ஷாக்கள்

வினா 570—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் ஓடும் ஆட்டோக்களுக்கு நகரைச் சுற்றி எவ்வளவு தூரம் போகவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அதை விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

[1979 நவம்பர் 7

விடை

(அ) திருப்பத்தூர் நகரில் தற்போது ஐந்து ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடுகின்றன. இவைகள் ஒவ்வொன்றும் திருப்பத்தூர் நகர எல்லைக்குள்ளும், அதைச் சுற்றியும் எட்டு கிலோ மீட்டர் தூரம் வரை செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம். இந்த ஆட்டோ ரிக்ஷாக்களை நகர எல்லையைத் தாண்டி, நகரப் பேருந்துகள் ஓடும் எல்லைவரை அனுமதி அளிப்பதற்கு உரிமையாளர்களை விண்ணப்பிக்குமாறு கோரப்பட்—து. ஆனால், எந்த உரிமையாளரும் இதுவரை விண்ணப்பம் அளிக்க முன்வரவில்லை.

## தேனி மலையில் உள்ள மார்பு மருத்துவமனை.

வினா 571 — திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திருவண்ணாமலை நகரில் தேனி மலையில் கட்டப்பட்டுள்ள மார்பு மருத்துவமனையில் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற எத்தனை படுக்கைகள் உள்ளன?

விடை

திருவண்ணாமலை, தேனி மலையில் கட்டப்பட்டுள்ள மார்பு மருத்துமனையில், நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற 10 காச நோய் படுக்கைகள் உள்ளன.

## செட்டிபாளையம் பகுதியில் ஆரம்பப் பள்ளி.

வினா 572— திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், செட்டிபாளையம் நியூ டவுன் பகுதியில் ஆரம்பப் பள்ளி துவங்க அப்பகுதி மக்கள் கோரியுள்ளனரா ?

(ஆ) ஆமெனில், வருகிற பள்ளி ஆண்டில் துவங்கப்படுமா?

விடை

(அ) ஆம்.

(ஆ) 6–7–1979 முதல் பள்ளி துவங்கப்பெற்று செயல்பட்டு வருகிறது.



1979 நவம்பர் 7]

## குட்டிகவுண்டன்பதி கிராமத்திற்கு குடிநீர் வழங்கல்

வினா 573—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுக்கரை ஒன்றியம், மாரிசெட்டி கிராமத்திலிருந்து குட்டிகவுண்டன்பதி கிராமத்திற்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆமெனில், குட்டிகவுண்டன்பதி நிலமட்ட தொட்டிக்கு நீர் விடப்படுகிறதா?

விடை—

(அ) ஆம்

(ஆ) இல்லை. மேற்படி தொட்டிக்கு தண்ணீர் விட பேரூராட்சி நிதியிலிருந்து குழாய் மூலம் விஸ்தரிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## கோவை மத்திய சிறைச்சாலை மைதானத்தில் அரசு அலுவலகக் கட்டிடம்.

வினா 574 —திரு. க. மருதாசலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய சிறைச்சாலை மைதானத்தில் 3 ஏக்கர் 45 சென்ட் இடம் காலியாக உள்ளது உண்மையா?

(ஆ) இந்த இடத்தில் தொழிலாளர் துறை துணை ஆணையாளர் அலுவலகக் கட்டிடத்தை கட்டும் செயற்குறிப்பேதும் உள்ளதா?

விடை—

(அ) ஆம்

(ஆ) அவ்விடத்தில் (கோயம்புத்தூரில்) வாடகைக் கட்டிடங்களில் உள்ள எல்லா மாநில அரசு அலுவலகங்களுக்கும் ஒரே இடத்தில் மையமாக இருந்து இயங்க ஒரு கட்டிடம் கட்டுவதற்கு இடம் ஒதுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## காவிரிக் கரைகளில் மூலிகைத் தோட்டங்கள்.

வினா 575 —திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில், காவிரிக்கரைப் பகுதியில் சித்த வைத்தியத்திற்குத் தயாராகும் மருந்துக்கு தேவைப்படும் மூலிகைச் செடிகளை வளர்க்கும் திட்டங்கள் ஏதும் ஆய்வில் உள்ளதா?

விடை—

ஆம். திருச்சி மாவட்டத்தில், மேலணைக்கருகில், காவிரிப் படுகையிலும், திருவரங்கத்திலும் மூலிகைத் தோட்டங்கள் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

## வானூர் ஒன்றியத்தில் சிறு விவசாயிகளுக்கு உரம் வழங்கல்.

வினா 576 — திரு. எம். பரமசிவம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978–79-ல் வானூர் ஒன்றியத்தில் உள்ள அரிசன சிறு விவசாயிகளுக்கு மானிய உர அளிப்புத் திட்டத்தின் கீழ் உரம் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

வானூர் ஒன்றியத்தில் அரிசன சிறு விவசாயிகளுக்கு உரமளிக்க பிரத்யேகமாக மான்ய உர அளிப்புத் திட்டம் செயல்படவில்லை. ஆனால் வானூர், ஒன்றியத்தில் சிறு விவசாயிகளுக்கு கீழ்க்கண்ட முறையில் உரம் அளிக்கப்பட்டுள்ளது:—

1978–79-ம் ஆண்டில் செயல் விளக்கப் பாத்தி அமைக்க 58 அரிசன சிறு விவசாயிகள் மற்றும் குறுநில விவசாயிகளுக்கும் ரூ. 5,800 மதிப்புள்ள இரசாயன உரம் மற்றும் பூச்சி பூசன மருந்து இனாமாக வழங்கப்பட்டது.

இதேபோன்று அரிசனம் இல்லாத 332 சிறு விவசாயிகள் மற்றும் குறுநில விவசாயிகளுக்கும் ரூ. 33,200 மதிப்புள்ள இரசாயனப் பொருள் இனாமாக வழங்கப்பட்டது. ஆக மொத்தம் 390 செயல்விளக்கப் பாத்திகளுக்கு இரசாயன உரம் மற்றும் பூச்சி பூசன மருந்துகள் ரூ. 39,000-க்கு வானூர் ஒன்றிய எல்லையில் மட்டும் இனாமாக வழங்கப்பட்டது.



## பாமணி ஆற்றின் கரைகள்.

வினா 577— திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மன்னார்குடி நகரத்தின் வடபுறமும் கீழ்புறமும் பாமணி ஆற்றின் கரைகளை பலப்படுத்தி, மழைக்காலத்தில் தண்ணீர் நகரத்தில் புகாமல் தடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மன்னார்குடியின் வடபுறமும் கீழ்புறமும் செல்லும் பாமணி ஆற்றின் கரைகள் தேவையான இடங்களில் மராமத்து செய்யப்பட்டு கல்பாவ கரை கட்டி நல்லமுறையில் பராமரிக்கப்படுகிறது. ஆகவே, மழைக் காலத்தில் நகரத்திற்குள் தண்ணீர் புகும் வாய்ப்பு இல்லை.

## லாரிகளுக்கு மஞ்சள் வர்ணம்.

வினா 578— திரு. கு. வடிவேல்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லாரிகளுக்கு முன்னும் பின்னும் மஞ்சள் வர்ணம் பூச வேண்டுமென்று கட்டாய உத்தரவு எப்போது போடப்பட்டது?

(ஆ) எதனால் அப்படி உத்தரவு போடப்பட்டது?

(இ) அதை நீக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 395-ஏ-ன் கீழ் 6–3–1973-ல் லாரிகளுக்கு மஞ்சள் வர்ணம் பூச வேண்டும் என உத்தரவு போடப்பட்டது. பின், 10—1—1975-ல் லாரிகளுக்கு முழுமையாக அல்லது அதற்கு முன்னும் பின்னும் மஞ்சள் வர்ணம் பூச வேண்டும் என்று உத்தரவு விதிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டது.

(ஆ) லாரிகள் பல வர்ணங்களிலிருந்தால் சாலையில் அவ்வண்டிகள் இருப்பதை இருட்டில் தெரிந்து கொள்ளுவது கடினம், எனவே விபத்துகள் ஏற்படுகின்றன. அவற்றை தவிர்க்கவே, இவ்வர்ணம் நிர்ணயிக்கப்பட்டது. இரவில் மஞ்சள் நிறம் தெளிவாகத் தெரியும்.

(இ) இலலை.

[1979 நவம்பர் 7

## திருச்சி ஸ்ரீரங்கம் கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியம்.

வினா 579 — திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கிராமத்தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி ஸ்ரீரங்கம் கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியத்திற்கு 1978–79 ஆம் ஆண்டு இயந்திரங்கள் வாங்க எவ்வளவு தொகை அளிக்கப்பட்டது ?

(ஆ) ஆம் என்றால் இயந்திரங்கள் வாங்கப்பட்டனவா ?

(இ) ஒன்றியம் லாபகரமாக செயல்படுகின்றதா ?

(ஈ) 1979-80-க்கு மேற்படி ஒன்றியத்திற்கு எவ்வளவு தொகை அளிக்கப்படும் ?

விடை—

(அ) ரூ. 6·5 இலட்சம் கடனாக 1978–79 ஆம் ஆண்டுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இயந்திரங்கள் அளிப்பதற்கு ஒப்பந்த புள்ளிகள் பெற்று பரிசீலனையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களுக்கு இயந்திரங்கள் அளிக்க முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இயந்திரங்கள் நிறுவனங்களிடமிருந்து வரவேண்டியுள்ளது.

(இ) நிறுவப்பட்ட பின் இலாபகரமாக செயல்படும்.

(ஈ) பல்வேறு செலவினங்களுக்காக ரூபாய் 5 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## சிறு விவசாயிகளுக்கு கிணறு வெட்ட கூட்டுறவுக் கடன்கள்.

வினா 580—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறை மூலம் சிறு விவசாயிகளுக்கு கிணறு வெட்ட எவ்வளவு தொகை அளிக்கப்பட்டது ? எத்தனை விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது ?



1979 நவம்பர் 7]

(ஆ) எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு பேர்களுக்கு அளிக்கப்பட்டன ?

(இ) அளிக்கப்பட்ட தொகைக்கு கிணறுகள் வெட்டப்படுவது எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது?

விடை—

(அ) & (ஆ) : 1978-79ஆம் நிதியாண்டில் மாவட்ட வாரியாகக் கிணறு வெட்ட (ஆழப்படுத்துதல், பழுது பார்த்தல் உட்பட) கொடுக்கப்பட்ட கடனளவும் அதனால் பயன் அடைந்த சிறு விவசாயிகளின் எண்ணிக்கையும் பின் வருமாறு :—

| வரிசை எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | விவசாயிகளின் எண்ணிக்கை. | கடனளிக்கப் பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. செங்கற்பட்டு ... ... | 190 | 6·13 |
| 2. வட ஆற்காடு ... ... | 470 | 16·32 |
| 3. தஞ்சாவூர் ... ... | 97 | 2·97 |
| 4. தென்னாற்காடு ... | 369 | 11·59 |
| 5. திருச்சி ... ... ... | 57 | 13·06 |
| 6. புதுக்கோட்டை ... | 232 | 22·71 |
| 7. திருநெல்வேலி ... | 79 | 4·14 |
| 8. கன்னியாகுமரி ... ... | 5 | 0·21 |
| 9. ராமநாதபுரம் ... ... | 133 | 7·14 |
| 10. மதுரை ... ... | 255 | 7·77 |
| 11. கோயம்புத்தூர் ... ... | 276 | 11·98 |
| 12. நீலகிரி ... ... ... | 3 | 0·22 |
| 13. சேலம் ... ... ... | 146 | 5·47 |
| 14. தர்மபுரி ... ... | 99 | 5·81 |
| மொத்தம் ... | 2,311 | 95·52 |

(இ) கிணறு வெட்டுவதற்குக் கடன்தொகை 30, 40, 30 என்ற விழுக்காட்டில் மூன்று தவணைத் தொகைகளாக வழங்கப் படுகிறது, இரண்டு, மற்றும் மூன்றாவது தவணைத் தொகைகள் அதற்கு முந்தைய தவணைத் தொகை சரியான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்று சரிபார்த்த பின்னரே வழங் கப்படுகிறது. கடன் தவணைகள் சரியான முறையில் பயன் படுத்தப்படுகின்றனவா என்பதை நிலவள வங்கிகள் மேற்பார்வை யாளர்கள், கூட்டுறவு சார் பதிவாளர்கள் (நிலவள வங்கிகள்) கூட்டுறவு சார் பதிவாளர்கள் (விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம்) நிலவள வங்கிகளின் தனி அதிகாரி ஆகியோர் சரிபார்க் கின்றனர். மேலும் மாவட்ட தொழில் நுட்பக் குழுவிலுள்ள உதவி புவியமைப்பு அலுவலர் மற்றும் உதவி செயற் பொறி யாளர் ஆகியோரும் அவ்வப்போது நேரில் சென்று சரிபார்க்கின் றனர்.

## மூலிகைப் பண்ணைகள்.

**வினா 581**—திரு. மெ. ஆண்டி அம்பலம் : திரு. வ. சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலை மூலிகை பண்ணை, மதுரை பல்கலைக் கழக வளாவில் உள்ள மூலிகை பண்ணை இவை இரண்டும் எவ்வளவு காலமாக இயங்கி வருகின்றன?

(ஆ) இவற்றிலிருந்து கிடைக்கும் ஆண்டு வருவாய் எவ்வளவு ?

**விடை**—

(அ) கொல்லிமலையிலும், மதுரை காமராசர் பல்கலைக் கழக வளைவிலும் மூலிகைப் பண்ணைகள் ஏற்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) எழாது.

**வினா 582**—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், வீரப்புலி சேமக்காடு மூலிகைப்பண்ணையின் மூலம் அரசுக்கு ஆண்டு வருவாய் எவ்வளவு ?

**விடை**—

கன்னியாகுமரி மாவட்டம், வீரப்புலி ஒதுக்கக்காட்டில் மூலிகைப் பண்ணையினை ஏற்படுத்துவதற்குரிய திட்டம் பரிசீலனையில் உள்ளது. எனவே ஆண்டு வருவாய் பற்றிய கேள்விக்கு இடமில்லை.

## கோழி வளர்ப்புக்கு மின் கட்டணச் சலுகை.

**வினா 583**—திரு. கா. செங்கோடன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோழி வளர்ப்புத் தொழிலுக்கு மின் கட்டணச் சலுகை தர அரசு உத்தேசித்துள்ளதா ?





**விடை**—

கோழி வளர்ப்புத் தொழிலுக்கு சலுகைக் கட்டணமாக சென்னை பெருநகர் பகுதியில் யூனிட் ஒன்றுக்கு 39 காசு வீதமும் மற்ற பகுதிகளில் யூனிட் ஒன்றுக்கு 34 காசு வீதமும் வசூலிக்கப்படுகிறது. இத்தொழிலில், சாதாரண மின் விளக்குகளுக்கு பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் அளவு, மொத்த மின் பளுவில் 15 சதவீதத்திற்கு அதிகரித்தால், இச்சலுகைக் கட்டண வீதம் பொருந்தாது.

## நந்திமங்கலம் அரிசனக் குடியிருப்பில் தெருவிளக்குகள்.

**வினா 584**—திரு. என். பெரியசாமி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் மங்களூர் தொகுதியிலுள்ள நந்திமங்கலம் அரிசன காலனிக்கு தெரு மின் விளக்குகள் அமைக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மின்வசதி தரப்படும் ?

**விடை**—

(அ) & (ஆ) : 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10 ஆம் நாள் அன்று மின் இணைப்பு கொடுப்பட்டுவிட்டது.

## சிறுபாக்கத்தில் சார்பதிவாளர் அலுவலகம்.

**வினா 585**—திரு. எம். பெரியசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியிலுள்ள சிறுபாக்கம் கிராமத்தில் ஒரு பத்திர பதிவாளர் அலுவலகம் திறக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில் அந்த திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**விடை**—

(அ) மற்றும் (ஆ) : சிறுபாக்கத்தில் சார்பதிவாளர் அலுவலகம் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல், திறக்கப்பட்டுள்ளது.

## கூடலூர் அரசு மருத்துவ மனை.

வினா 586—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் அரசு மருத்துவமனையில் போதுமான மருந்துகள் இல்லை, படுக்கை வசதிக்குறைவு, குடி தண்ணீர் வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் அரசு மருத்துவமனையில் போதுமான மருந்துகள் அனைத்தும் உள்ளன. படுக்கை வசதிகள் திருப்திகரமாக உள்ளன. நோயாளிகளுக்கு குடி தண்ணீர் போதிய அளவிலும் முழுமையான அளவிலும் கிடைப்பதுடன், வெந்நீரும் கொடுக்கப்படுகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## விளாத்திகுளம் மருத்துவ மனை.

வினா 587—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயது செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் மருத்துவமனையில் ஒரு பெண் மருத்துவ அதிகாரி பதவியும், துணைச் செவிலியர் பதவியும் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படும்?

விடை—

(அ) & (ஆ) விளாத்திகுளத்தில் ஊராட்சி ஒன்றிய பொறுப்பில் இயங்கி வந்த மருந்தகம் 5–7–78 முதல் அரசால் மேற்கொள்ளப்பட்டு அரசு மருந்தகமாக செயல்பட்டு வருகிறது. தற்போது இம் மருந்தகத்திற்கு கூடுதலாக ஒரு பெண் மருத்துவ அதிகாரி மற்றும் துணைச் செவிலியர் பதவிகளை ஏற்படுத்தும் திட்டம் ஏதுமில்லை.



## போளூர் நிலவளவங்கி.

வினா 588—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் நிலவள வங்கியினர் 1976-77, 1977–78 ஆண்டுகளில் அருணகிரிமங்கலம் கிராமத்தில் கடன் கட்டாத விவசாயிகளின் நிலத்தை ஏலம் எடுத்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை விவசாயிகளுடைய நிலங்கள்?

(இ) எவ்வளவு ஏக்கர் நிலம்?

(ஈ) எவ்வளவு கடன்?

(உ) ஏலத்தொகை எவ்வளவு?

விடை—

(அ) ஆம், 1976–77-ல் ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஒரு விவசாயியின் நிலம் மட்டும்.

(இ) 3·04 ஏக்கர்.

(ஈ) ரூ. 5,531·28.

(உ) ரூ. 15,500.

## கடலாடி அரிசனக் குடியிருப்புக்குக் குடிநீர் வழங்கல்.

வினா 589—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதியில் உள்ள கடலாடி ஊராட்சி அரிசன காலனியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை —

(அ) தெரியும்.

(ஆ) கடலாடி அரிசன காலனியில் இரண்டு கிணறுகள் ஆழப் படுத்தப்பட்டு குடிதண்ணீர் தட்டுப்பாடு போக்கப்பட்டது. தற் போது குடிதண்ணீர் தட்டுப்பாடு இல்லை.

## சங்கராபுரம் பொது மருத்துவமனை.

வினா 590—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் நகரில் உள்ள அரசினர் பொது மருத்துவ மனையில் படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை —

தற்போது இது பற்றி பரிசீலனையில் இல்லை.

## எமனேரி பாசனப் பகுதியில் வரிவிதிப்பு.

வினா 591—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், எமனேரி பாசன பகுதி யில் விவசாயிகளுக்கு 1978-ல் வரி ஏதேனும் உயர்த்தப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு? விபரம் என்ன?

விடை —

(அ) மற்றும் (ஆ): எமனேரி, தென்னாற்காடு மாவட்டம், வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தில் உள்ளது. 1971 ஆம் ஆண்டில், வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தினால் பயனடையும் நிலங்களுக்கு 1379 ஆம் பசலி ஆண்டிலிருந்து (1—7—69-லிருந்து) தண்ணீர்த் தீர்வை மற்றும் தண்ணீர் மேல்வரி விதத்தை உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் வசூலிப்பு அரசால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டது.



1379 ஆம் பசலி ஆண்டிலிருந்து வசூலிக்கப்பட வேண்டியிருந்த தண்ணீர் தீர்வை மற்றும் தண்ணீர் மேல்வரியை 1386 ஆம் பசலி ஆண்டிலிருந்து (1—7—1976 முதல்) வசூலிக்க முடிவு செய்து 1978 ஆம் ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. தற்காலிக மாக வசூலிப்பை நிறுத்திவைக்கப்பட்ட ஆணையும் நீக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஆணைக்கிணங்க 1386 ஆம் பசலி ஆண்டிலிருந்து புதிய வீதப்படி செலுத்த வேண்டிய தண்ணீர் தீர்வையும் மற்றும் தண்ணீர் மேல்வரியும் 1978-ம் ஆண்டிலிருந்து வசூலிக்கப் படுகிறது. மேலும் தமிழ்நாடு கூடுதல் நன்செய்த்தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய்த் தீர்வை மற்றும் தனித் தண்ணீர் மேல்வரி (திருத்தம்) சட்டம், 1977 (சட்டம் 15/1978) க் கிணங்க வெல்லிங்டன் நீர்த்தேக்கத்தினால் பயனடையும் நிலங் களுக்கு 1—7—1977-லிருந்து விதிக்கப்பட்ட தனி நன்செய்த்தீர்வை மற்றும் தனித் தண்ணீர் மேல்வரி வசூலிப்பு 1978 ஆம் ஆண்டி லிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## திருவண்ணாமலையில் பர்மா அகதிகளுக்கு வீடுகள்.

வினா 592—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் பர்மா அகதிகளுக்கு இதுவரை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகள் எத்தனை?

விடை —

திருவண்ணாமலை நகரில் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய வர்கட்கு மறுவாழ்வு திட்டத்தின் கீழ் வீடு கட்டிக்கொள்ள வீட்டுக் கடன் ரூ. 1,64,300 வழங்கப்பட்டு, 56 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

## வட ஆற்காடு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோர்.

வினா 593—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டத்தில் தற்போது வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை வேண்டும் என்று பதிவு செய்து இருப்பு வர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்பகங்களில் வேலை வேண்டும் என்று பதிவு செய்து கொண்டு 30—6—79 அன்றைய நிலவரப்படி காத்திருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 61,915 பேர்கள் ஆகும்.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், மேட்டூர் அணை.

வினா 594—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மேட்டூர் அணை, அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் (Electronics) பிரிவு தொடங்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தீப்பெட்டி தொழிற்பயிற்சி:

வினா 595—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தீப்பெட்டி தொழில் சம்பந்தமான பயிற்சியை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் (விருதுநகர்) கற்றுத் தரும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) உண்டெனில், எப்பொழுது பயிற்சி தொடங்கும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



திருப்பனந்தாள் அரசு மருத்துவமனை.

வினா எண். 596—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பனந்தாள் அரசு மருத்துவ மனையில் பணியாற்றி வந்த பெண் மருத்துவரது இடமாற்றத்துக்குப் பின் நான்கு மாத காலமாக பெண் டாக்டர் நியமிக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவார்?

விடை—

(அ) சென்னை கோடம்பாக்கம் தொழிலாளர் ஈட்டுறுதி காப்பீட்டு மருந்தகத்திலிருந்து மாற்று நியமனம் செய்யப்பட்ட பெண் மருத்துவர், தற்போது திருப்பனந்தாள் அரசு மருந்தகத்தில் 1979-ம் ஆண்டு மே திங்கள் 17-ம் நாள் பணியில் சேர்ந்து, தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

பழனி பொது மருத்துவமனை.

வினா எண். 597—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அரசு மருத்துவ மனையில் எத்தனை படுக்கைகள் உள்ளன?

(ஆ) மருத்துவர்கள் எத்தனை பேர்கள்?

(இ) டைப்பிஸ்ட் அங்கு உண்டா?

(ஈ) தனி மருத்துவர் (ஸ்பெஷலிஸ்டு) எந்தெந்தத் துறைக்கு உள்ளனர்?

[1979 நவம்பர் 7

**விடை—**

(அ) இம் மருத்துவமனையில் தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 117.

(ஆ) இரண்டு ஒதுக்கு மருத்துவ அலுவலர்களையும் சேர்த்து இங்கு மொத்தம் 8 உதவி அறுவை மருத்துவ அதிகாரிகள் பணியாற்றுகிறார்கள்.

(இ) இம் மருத்துவமனையில் தட்டெழுத்தர் பதவி இல்லை.

(ஈ) இம் மருத்துவமனையில் சிறப்புத் தகுதி வாய்ந்த மருத்துவர் பதவிகள் இல்லையெனினும், கீழ்க்காணும் சிறப்புப் பட்டம்/பட்டயம் பெற்ற மருத்துவர்கள் பணிபுரிகிறார்கள்.

| | |
|---|---|
| (1) மருத்துவ அதிகாரி எம்.டி. | 1 |
| (2) மருத்துவ அதிகாரி டி.ஜி.ஓ. | 1 |
| (3) மருத்துவ அதிகாரி டி.எல்.ஓ. | 1 |
| (4) மருத்துவ அதிகாரி டி.சி.எச். | 1 |
| (5) மருத்துவ அதிகாரி டி. ஆர்த்தோ | 1 |
| (6) மருத்துவ அதிகாரி (பல் சிகிச்சை) | 1 |

### திருவண்ணாமலையில் அம்பர் இராட்டை வழங்கல்.

**வினா எண் 598—திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு கதர், கைத்தறித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டத்தில் 1978-79 ஆம் ஆண்டில் எத்தனை அம்பர் ராட்டைகள் வேண்டும் என்று மனுச் செய்துள்ளனர்?

(ஆ) எத்தனை நபருக்கு வழங்கப்பட்டுள்ளது?



1979 நவம்பர் 7]

**விடை—**

(அ) அம்பர் ராட்டைகள் வழங்கும் திட்டம் இப்பொழுது செயலில் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

### வட ஆற்காடு மாவட்டத்தில் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு தொழிற் கருவிகள் வழங்கல்.

**வினா எண் 599—திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு கிராமத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-79 ஆம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் மண்பாண்டத் தொழில் செய்பவர்களுக்குத் தொழில் கருவிகள் அரசாங்கம் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை நபருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

(அ) வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வேலூர், மற்றும் திருவண்ணாமலை வளர்ச்சி மாவட்டங்களிலுள்ள மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு தங்கள் தொழிலை நடத்த நபர் ஒன்றுக்கு மூலதனக் கடனாக ரூ. 1,000மும், தொழிற் கருவிகள் வாங்க மானியம் மற்றும் முதலீட்டுக் கடன் தொகையும் முறையே ரூ. 650, ரூ. 650 வீதம் 1978-79-ம் ஆண்டு தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) வேலூர் வளர்ச்சி மாவட்டத்தில் 10 நபர்களுக்கும், திருவண்ணாமலையில் 12 நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

### திருவண்ணாமலை வட்டத்தில் குத்தகை வழக்குகள்.

**வினா எண் 600—திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை தாசில்தார் அலுவலகத்தில் 1977-78 ஆம் ஆண்டின் குத்தகை நிலம் சம்பந்தமான வழக்குகள் எத்தனை முடிவு அடையாமல் உள்ளன?

**விடை—**

ஒன்றுமில்லை.

### சிதம்பரம் மருத்துவமனை.

**வினா எண் 601—திரு. துரை கலியமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசு மருத்துவமனையில் போதுமான டாக்டர்கள் இல்லையென்பது உண்மையா?

(ஆ) ஆமெனில், அதிகப்படுத்த அரசு செயற் குறிப்பு உள்ளதா?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) தற்போது இம்மருத்துவமனையில் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி மூன்று மருத்துவர்கள் பணி புரிந்து வருகிறார்கள். எனினும் இம் மருத்துவ மனையில் கூடுதலாக அதிகாரிகளை நியமனம் செய்யக் கோரும் மருத்துவப் பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநரின் செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

### பரிசு பெற்ற திரைப்படங்கள்.

**வினா எண். 602—திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு செய்தி அற நிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-79-ல் அரசின் பரிசு பெற்ற திரைப்படங்கள் எத்தனை?

(ஆ) வழங்கப்பட்ட மொத்த பரிசு எவ்வளவு?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) அவையின் முன் அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

### *Harijan Hostels in Perambalur Constituency.*

*Q.* 603—THIRU S. V. RAMASWAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of hostels under the Harijan Welfare Department in the Perambalur constituency; and

(*b*) the proposed number of hostels to be started in the Constituency?

(அ) ஒன்பது (9)—

(1) அரசு மாணவர் விடுதி, பெரம்பலூர்.

* 818 ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.





(3) அரசு மாணவியர் விடுதி, அம்மாபாளையம்.

(4) அரசு பழங்குடியினர் நல மாணவியர் விடுதி, அரும்பாவூர்.

(4) அரசு பழங்குடியினர் நல மாணவியர் விடுதி, அரும்பாவூர்.

(6) அரசு மாணவர் விடுதி, வி. களத்தூர்.

(7) அரசு மாணவர் விடுதி, அனுகூர்.

(8) அரசு மாணவர் விடுதி, பூலாம்பாடி.

(9) அரசு பழங்குடியினர் உறைவிடப் பள்ளி விடுதி, மலையாளப் பட்டி.

(ஆ) தற்சமயம் ஒன்றுமில்லை.

### இராதாபுரம் தொகுதியில் அமுதம் சிறப்பங்காடிகள்.

**வினா எண். 604—திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், இராதாபுரம் தொகுதியிலுள்ள பணகுடி, திசையன்விளை பேரூராட்சிகளிலும், சமூகரெங்கபுரம், வள்ளியூர் பேரூராட்சிகளிலும் அமுதம் சிறப்பங்காடி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**விடை—**

நெல்லை மாவட்டம், இராதாபுரம் தொகுதியிலுள்ள பணகுடி, திசையன்விளை பேரூராட்சிகளிலும் சமூகரெங்கபுரம், வள்ளியூர் பேரூராட்சிகளிலும் அமுதம் சிறப்பங்காடி அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

### அரும்பாவூர் சித்திர வேலைத் தொழிற்கூடம்.

**வினா எண் 605—திரு. எஸ். வி. இராமசாமி:** மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி அரும்பாவூர் (சிட்கோ) சித்திர வேலை தொழிற்கூட மதிப்பீடு என்ன?

(ஆ) எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(இ) எவ்வளவு தொகை மானியம் வழங்கப்படுகிறது?

விடை—

(அ) சின்னஞ்சிறு தொழிற் கூடத்தின் மதிப்பு ரூ. 7,600. இங்கு 50 சின்னஞ்சிறு தொழிற் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதன் மொத்த மதிப்பீடு ரூ. 3,80,000 ஆகும்.

(ஆ) 50 நபர்களுக்கு இத்தொழிற்கூடங்கள் ஒதுக்கப்பட்டன. இதன் வாயிலாக சுமார் 150 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

(இ) ஒவ்வொரு சின்னஞ்சிறு தொழிற் கூடத்திற்கும் ரூ. 1,500 மானியமாக கிராமத் தொழில் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

### ஆயக்குடி பகுதியில் உயர்நிலைப்பள்ளி.

**வினா எண் 606—திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயக்குடி (பழனி வட்டம்) பகுதியில் அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்று ஏற்படுத்தித் தர அப்பகுதி மக்கள் நீண்ட காலமாக வற்புறுத்தி வருகின்றனரா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### திருந்செந்தூர் வட்டத்தில் முதியோர் உதவித்தொகை.

**வினா எண் 607—திரு. இரா. அமிர்தராஜ்:** மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-79-ல் திருச்செந்தூர் தாலுகாவில் முதியோர் உதவித் தொகை கேட்டு எத்தனை மனுக்கள் வந்துள்ளன?



(ஆ) எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

விடை—

| | | முதியோர் உதவித் தொகை திட்டம். | விதவை உதவித் தொகை திட்டம். | ஊனமுற்றோர் உதவித் தொகை திட்டம். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| பகுதி (அ) | .. | 275 | 158 | 54 | 487 |
| பகுதி (ஆ) | .. | 109 | 42 | 4 | 155 |

| | | Old oge Pension (normol). | Destitnte widow pensioners. | Physically hondi coppcd pensioners. | Totol. |
|---|---|---|---|---|---|
| Clause (a) | .. | 275 | 158 | 54 | 487 |
| Clause (b) | .. | 109 | 42 | 4 | 155 |

### கொரட்டி கிராமத்தில் பள்ளிக் கட்டிடம்.

**வினா எண் 608—திரு. பி. சுந்தரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் கந்திலி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொரட்டி என்னுமிடத்தில் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்காக இடம் ஒதுக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது இந்த கட்டிடம் கட்டப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1979-80-ல் கிராம வேலைகள் திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் ரூ. 33,000 மதிப்பீட்டில் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### *Kurumbalur Major Panchayat.*

Q. 609.—THIRU S. V. RAMASWAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) Whether the Government have received any representation from the public for the bifurcation of the Kurumbalur major panchayat, Perambalur taluk, Tiruchirappally district, into two panchayats?

(*b*) if so, the action taken thereon?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) தேர்தல் முடியும்வரை ஊராட்சிகளில் நிர்வாக மாற்றம் எதுவும் செய்யக்கூடாது என்ற தடை நீக்கப்பட்ட பின் மேல் நடவடிக்கை எடுக்கப் படும்.

### *New tank in Veppanthattai.*

Q. 610.—THIRU S. V. RAMASAMY: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) Whether any request has been received from the public of Veppanthattai (Perambulur taluk, Tiruchirappalli district) for a formation of a new tank; and

(*b*) if so, the steps taken thereon?

1979 நவம்பர் 7]

விடை —

(அ) ஆம்.

(ஆ) திட்டம் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

மருதமலையை சுற்றுலா மையமாக்கல்.

வினா 611— திரு. க. மருதாசலம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் உள்ள மருதமலையையும் பேரூரையும் சேர்த்து "சுற்றுலா மையமாக" அறிவிக்கும் குறிப்பேதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம்

வினா 612— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்திற்காக மத்திய அரசு ஏதாவது மானியம் அளிக்கின்றதா ?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் முழு உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணித்திட்டம் இம்மாநிலத்தில் சென்னை நகரம் மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள நிலக்கோட்டை, தருமபுரி மாவட்டத்திலுள்ள தளி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 300 குழந்தைகள் காப்பகங்களுடன் நடைபெறுகிறது.

(2) இத்திட்டத்தின் கீழ் கல்வி, மருத்துவம், சத்துணவு. தடுப்பு ஊசி போடுதல் ஆகிய பயன்களைப் பெறுகின்றனர். இத்திட்டத்தில் உள்ள அலுவலக ஊழியர்களுக்கான செலவுகளையும் மற்றும் இதர செலவுகளையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. ஊட்டச் சத்துணவுத் திட்டத்திற்கு ஆகும் செலவுகளை மட்டும் மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது.

(1) ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டத்திற்கு ரூ. 11·59 இலட்சம்.

(2) செயல்முறை கல்வித் திட்டத்திற்கு— ரூ. 4·09 இலட்சம்.

1979–80 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் ஒதுக்கீடு— ரூ. 15,68,000.

1979–80 ஆம் ஆண்டுக்கான மாநில அரசின் ஒதுக்கீடு— ரூ. 31,01,000 (சத்துணவு வழங்குவதற்கு மட்டும்).

## நூலகங்கள்.

வினா 613— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு முழுவதும் எத்தனை நூலகங்கள் இருக்கின்றன ?

(ஆ) மேலும் புதிதாக கிராமப்புறங்களில் நூலகங்களைத் திறக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



விடை—

(அ) 1,456.

(ஆ) இல்லை.

## நாகலூரில் தீயணைப்பு நிலையம்.

வினா 614— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் நாகலூரில் (மினி) சிறிய தீயணைப்பு நிலையம் அமைக்கக் கோரி அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## உள்ளாட்சி மன்ற அலுவலகக் கட்டிடங்கள்.

வினா 615— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள ஊராட்சி பேரூராட்சிகள் அலுவலகக் கட்டிடங்கள் சொந்தமாகக் கட்டுவதற்கு அரசு கடனுதவி செய்கிறதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## சுங்குவார் சத்திரத்தில் பொது கழிப்பிடம்.

வினா 616—திரு. ப. சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து வேலூருக்கு செல்லும் அனைத்து பேருந்துகளும் நிற்கும் சுங்குவார் சத்திரத்தில் பொது கழிவிடங்கள் இல்லாததால் பயணிகள் அவதியுறுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அக்குறையை நீக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை

(அ) அறியும்.

(ஆ) பொதுக்கழிப்பிடம் ஒன்று 17-8-1979 அன்று சுங்குவார் சத்திரத்தில் கட்டி முடிக்கப்பட்டது.

## டி.வி. புத்தூர் ஆரம்பப்பள்ளிக்கு புதிய கட்டிடம்.

வினா 617—திரு. ப. சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் பஞ்சாயத்து யூனியன் டி. வி. புத்தூரில் உள்ள ஆரம்பப் பள்ளி இடிந்த மாட்டுக் கொட்டகையில் நடத்தப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் புதிய பள்ளிக்கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை-

(அ) டி.வி. புத்தூரில் உள்ள ஆரம்பப் பள்ளி மாட்டுக் கொட்டகையில் நடத்தப்படவில்லை. வாடகைக் கட்டிடத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கிராமத்தில் புதிய துரிதக் கட்டிடம் ஒன்று, ஒன்றிய உபரி பொது நிதியிலிருந்து கட்டித்தர ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



## கோவை பெரியகுளம் ஏரி தூர் எடுத்தல்.

வினா 618—திரு. கு. ரமணி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரத்தில் உக்கடத்தில் உள்ள பெரியகுளம் ஏரியை தூர் எடுத்து ஆழப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலத்துக்குள் அது முடிவடையும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவைப் பொறுத்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

## கடற்கரைப் பகுதிகளில் மரங்கள் வளர்ப்புப் பணி.

வினா 619—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு செய்தி–அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கடற்கரைப் பகுதிகளில் எந்தெந்த பகுதிகளில் என்னென்ன மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

விடை—

தமிழ்நாட்டில் திருநெல்வேலி, இராமநாதபுரம், தஞ்சை, புதுக்கோட்டை, கடலூர், செங்கை ஆகிய மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் தோட்டங்கள் உண்டாக்கும் திட்டம் (Scheme of Raising shelter belts along sea coast of Tamil Nadu) அமல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பொதுவாக ஓடை, சவுக்கு முதலியன பயிரிடப்படுகின்றன.

இத்தோட்டங்களை உண்டாக்குவதன் நோக்கம் அக்டோபர்-டிசம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவக்காற்றால் ஏற்படும் புயலையும் அதனால் ஏற்படும் பெருத்த உயிர் மற்றும் பொருட் சேதத்தையும் தடுப்பது ஆகும்—

## கிண்டியில் இராஜாஜி நினைவு நூலகம்.

வினா 620—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிண்டியில் இராஜாஜியின் நினைவாக அமைக்கப்பட இருக்கும் நூலகத்தின் மதிப்பீடு என்ன?

விடை

கிண்டியில் இராஜாஜி நினைவாக அமைக்கப்பட இருக்கும் நூலகக்கட்டிடத்தின் மதிப்பீடு ரூபாய் மூன்று இலட்சம் ஆகும்.

## செங்கம், திருவண்ணாமலை வட்டங்களில் வீட்டுமனை, நிலப்பட்டாக்கள்.

வினா 621—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம், திருவண்ணாமலை ஆகிய இரு வட்டங்களிலும் 1976 ஏப்ரல் முதல் 1978 மார்ச் முடிய வீட்டு மனைப் பட்டா கோரி வந்த மனுக்கள் எத்தனை?

(ஆ) எத்தனை நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டது?



விடை—

(அ) மற்றும் (ஆ) : செங்கம், திருவண்ணாமலை வட்டங்களில் 1976 ஏப்ரல் முதல் 1978 மார்ச் முடிய வீட்டு மனை கோரி வந்த மனுக்களின் எண்ணிக்கையும் வீட்டு மனை கொடுக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | வட்டத்தின் பெயர். | வருடம். | வரப்பெற்ற வீட்டு மனை விண்ணப்பங்கள். | வழங்கப்பட்ட வீட்டு மனைப் பட்டாக்கள். |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1 | திருவண்ணாமலை வட்டம். | 1-4-76 முதல் 31-3-77 வரை. | 113 | 1,707 |
| | ,, | 1-4-77 முதல் 31-3-78 வரை. | 24 | 258 |
| 2 | செங்கம் வட்டம். | 1-4-76 முதல் 31-3-76 வரை. | 206 | 815 |
| | ,, | 1-4-77 முதல் 31-3-78 வரை. | 139 | 37 |
| | | | 482 | 2,817 |

## வடாற்காடு மாவட்டத்தில் நீலகிரி தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை.

வினா 622—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சரவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் நீலகிரி தைல மரத்தில் உள்ள தழைகளைக் கொண்டு நீலகிரி தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

வினா 623—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை, செங்கம் இரண்டு தாலூகாவிலும் 1977-78-ம் ஆண்டில் விவசாயிகளுக்கு எத்தனை நபர்களுக்கு நிலப்பட்டா கொடுக்கப்பட்டுள்ளது.

விடை—

திருவண்ணாமலை, செங்கம் ஆகிய இரண்டு வட்டங்களிலும் 1977-78 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிலப் பட்டாக்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| செங்கம் வட்டம் | .. .. | 50 | நபர்கள். |
| திருவண்ணாமலை வட்டம் | .. | 8 | நபர்கள். |
| மொத்தம் | .. | 58 | நபர்கள். |

ஈச்சங்கோட்டை கால்நடைப் பண்ணை.

வினா 624—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு தஞ்சாவூர் மாவட்டத்தில் ஈச்சங்கோட்டை என்னுமிடத்தில் உயரின கால்நடை வளர்ச்சி பண்ணைக்கு மத்திய அரசு உதவி அளிக்கிறதா?

(ஆ) 1978-79-ல் மொத்த செலவு என்ன?

(இ) லாபத்தில் நடக்கிறதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1978-79-ம் ஆண்டில் ரூ. 16·80 லட்சம் இத்திட்டத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது.

(இ) இப்பண்ணை சிறந்த உயர் இன ஜெர்சி கால்நடைகளை உற்பத்தி செய்வதற்காக நிறுவப்பட்டதாகும். இப் பண்ணை வியாபார நோக்கத்தில் செயல்படுவதில்லை.



வட ஆற்காடு மாவட்ட பழச்சாறு தயாரிப்பு நிலையம்

வினா 625—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்ட விநியோக விற்பனைச் சங்கத்தின் சார்பில் உள்ள பழச்சாறு தயாரிக்கும் நிலையம் 1976-77, 1977-78-ல் லாபத்தில் நடைபெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) அதை மேலும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

(இ) பழச்சாறு தயாரிக்கும் நிலையத்திற்கு மிக அதிக அளவில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாலும், தொடர்ந்து நட்டத்தில் இயங்கியாதலும் இந்திய தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையத்தின் (National Agricultural Co-Operative Marketing Federation of India, New Delhi) முழு அளவிலான உதவி கிடைத்தால்தான் இந் நிலையத்தை மீண்டும் நல்ல முறையில் இயங்கச் செய்ய முடியும் என்று தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆகவே, இந் நிலையத்தை மீண்டும் நல்ல முறையில் இயங்கச் செய்யும் பொருட்டு, 1—6—1977 முதல், இந்திய தேசிய வேளாண்மை விற்பனை கூட்டுறவு இணையத்திற்கு 5 ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

வட ஆற்காடு மாவட்டத்தில் தொழிற் கருவிகள் வழங்கல்

வினா 626—திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடஆற்காடு மாவட்டத்தில், சலவைத் தொழிலாளி, முடிதிருத்தம் செய்யும் தொழிலாளிகளுக்கு, கருவிகள் வாங்கித் தர 1977-78, 1978-79 ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) நடப்பாண்டில் அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

விடை—

(அ) வடஆற்காடு மாவட்டத்தில், சலவைத் தொழிலாளிகள் மற்றும் முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு, கருவிகள், வாங்கித்தர 1977-78 மற்றும் 1978-79ல் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை விவரம் :—

| | சலவைத் தொழில் கருவிகள் வாங்க நிதி ஒதுக்கீடு. | சவரத் தொழில் கருவிகள் வாங்க நிதி ஒதுக்கீடு. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1977-78 .. .. | 25,000 | 3,750 |
| 1978-79 .. .. | 62,500 | 18,750 |

(ஆ) நடப்பு ஆண்டில் அதாவது 1979-80-ல் தொழிற் கருவிகள் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு அதிகரித்து உள்ளதால், சலவைத் தொழிற்கருவிகள் வழங்க ரூ. 87,500-ம் சவரத் தொழிற்கருவிகள் வாங்க ரூ. 26,250-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மண்ணெண்ணெய் ஒதுக்கீடு.

வினா 627—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு, தமிழ்நாட்டிற்கு கெரசின் எண்ணெய் அதிகமாக ஒதுக்கக்கோரி கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) மத்திய அரசு எழுதிய பதிலென்ன?

விடை—

அ, ஆ, & இ. தமிழ்நாட்டுக்கான மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினை 1978-ம் ஆண்டில் கொடுத்த திட்டப்படியே அதிகரித்து கொடுக்குமாறு இவ்வரசு, இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் மைய அரசுக்கு கோரிக்கை ஒன்று அனுப்பியது. ஆனால் குறிப்பாக இக்கோரிக்கைக்கு யாதொரு பதிலும் மைய அரசிடமிருந்து வரவில்லை எனினும், இவ்வாண்டு ஏப்ரல் திங்களுக்கு பிறகு மாதாந்திர மண்ணெண்ணெய்யின் ஒதுக்கீடுகளைப் படிப்படியாக மைய அரசு அதிகரித்துக்கொண்டு வருகிறது.



## எடைக்குறைவு கண்டுபிடிப்பு வழக்குகள்.

வினா 628— திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978—79-ல் எடைக் குறைவு கண்டுபிடிப்பு வழக்குகள் எத்தனை போடப்பட்டன?

(ஆ) அவற்றில் தண்டனையில் முடிந்தவை எத்தனை?

விடை—

| | |
|---|---|
| (அ) 1978-79-ல் எடைக் குறைவு கண்டுபிடிப்பு வழக்குகள். | 114 |
| (ஆ) அவற்றில் தண்டனையில் முடிந்தவை | 110 |

## மதுரை என். எஸ்.கே. நகரில் நியாயவிலைக் கடை.

வினா 629—திரு. சீ.செல்வராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் N. S. K. நகரில் நியாய விலைக் கடைகள் இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அப் பகுதியில் நியாய விலைக் கடை திறக்க ஆவன செய்யப்படுமா?

விடை—

(அ) இல்லை. மதுரை பாண்டியன் மொத்த விற்பனைக் கூட்டுறவு பண்டகசாலை நடத்தும் அண்ணா நகர் சாத்தமங்கலம் கிளை என். எஸ். கே. நகர், பகுதிக்கு நியாய விலைக் கடையாக செயல்படுகிறது. அது தவிர இப் பகுதியில் இராமநாதபுரம் மொத்த விற்பனைக் கூட்டுறவு பண்டகசாலையும் ஒரு கிளை ஆரம்பித்து நுகர் பொருள் அனைத்தையும் விநியோகம் செய்து வருகிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மதுக்கரை ஒன்றிய சாலை.

வினா 630— திரு. ஆ. நடராஜன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் மதுக்கரை ஒன்றியம் செட்டிபாளையம் மதுக்கரை ஒன்றிய சாலை மிக மோசமான நிலையில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் அதை செப்பனிடும் திட்டம் உண்டா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கி.மீ. 4·2 முதல் 5·00 வரையிலும், கி.மீ. 10·00 முதல் 10·6 வரையிலும், கி.மீ. 11·00 முதல் 11·6 வரையிலும், கி.மீ. 12·00 முதல் 12·6 வரையிலும் தார் ரோடு போடப்பட்டு வருகிறது. மேலும் கி.மீ. 9/8 முதல் 10/0 வரை நெடுஞ்சாலை-கிராமப்பணித் துறையினரால் வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் தார் ரோடு போடப்பட்டு வருகிறது.

குரும்பப்பாளையம் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.

வினா 631— திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் மதுக்கரை ஒன்றியம் குரும்பபாளையம் அரசு உயர் நிலைப்பள்ளி கட்டிடத்திற்கு நிதியாக பொதுமக்கள் செலுத்திய தொகை என்ன?

(ஆ) எப்போது செலுத்தினார்கள்?

(இ) கட்டிடம் கட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



விடை—

(அ) மற்றும் (ஆ)

உயர்நிலைப்பள்ளிகள் திறப்பதற்கு விதிக்கப்படும் நிபந்தனைகளில் ஒன்று கட்டிடக்குழு ரூ. 12,500 கட்டிடப்பங்குத் தொகையாக செலுத்த வேண்டும். குரும்பப்பாளையம் அரசினர் உயர் நிலைப்பள்ளி இத்தொகையினை 12—8—1977 அன்று செலுத்தியுள்ளது.

(இ) கட்டிடம் கட்டுவதற்கான வரை படமும் மதிப்பீடும் கோவை முதன்மைக்கல்வி அலுவலர் கோவை நிர்வாகப் பொறியாளரிடம் கேட்டுள்ளார். அதைப்பெற்றவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்நாட்டுப் புதூர் கிராமத்தில் புதிய ஏரி.

வினா 632— திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கல்நாட்டுபுதூர் கிராமத்தில் புதிய ஏரி கட்டித்தரவேண்டும் என்று கிராம மக்களின் சார்பாக அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

விடை—

கல்நாட்டுப்புதூர் கிராம மக்கள், தங்கள் ஊரில் ஏரி ஒன்று அமைத்துத் தரும்படி தண்டராம்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களிடம் விண்ணப்பித்துள்ளார்கள். இது தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

திருச்சி, கோவை சட்டக் கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கை.

வினா 633— திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1979–80 ஆம் ஆண்டில் திருச்சி, கோவையில் துவக்க இருக்கும் சட்டக் கல்லூரியில் அனுமதிக்காக இருக்கும் மாணவர்கள் எண்ணிக்கை முறையை எவ்வளவு ?

விடை—

மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்லூரியிலும் 120 ஆகும்.

## சிவகாசியில் தொழிற்பயிற்சி நிலையம்

வினா 634 —திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் அச்சுக்கலை சம்பந்தமான தொழில் பிரிவுகளைக் கொண்ட அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் தொடங்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கவிருக்கிறது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## விதவை மறுமணம் செய்து கொண்டோர்க்கு உதவிப்பணம்.

வினா 635 —திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதவைத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கென அரசளிக்கும் உதவிப் பணம் கோரி இன்னும் உதவிப் பணம் வழங்காமலிருக்கும் மனுக்கள் எத்தனை ?

(ஆ) அவர்களுக்கெல்லாம் எத்தனை யாண்டுகளுக்குள் உதவிப் பணம் வழங்கப்படும் ?

விடை—

(அ) 258 தகுதி வாய்ந்த விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

(ஆ) 3 வருடங்களுக்குள் அவர்களுக்கு உதவிப் பணம் வழங்கப்படும்.



## ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்.

வினா 636— திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டிலுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் தனியார் பள்ளிகள் எத்தனை ? அரசுப் பள்ளிகள் எத்தனை ?

விடை—

| | |
|---|---|
| அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் .. | 28 |
| தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் .. | 45 |
| தனியார் முன் ஆரம்ப ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள். | 5 |

மேலும் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பிரிவு பல்லாவரத்தில் சமூக நலத் துறை இயக்குநரின் கீழ் உள்ள ஸர்வீஸ் ஹோமில் நடத்தப் படுகிறது.

## மதுரை மாவட்டத்தில் கதர் விற்பனை நிலையங்கள்.

வினா 637— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கதர்—கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் தற்போது எத்தனை கதர் விற்பனை நிலையங்கள் உள்ளன ?

(ஆ) மேலும் விற்பனை நிலையங்களை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

விடை—

(அ) தற்போது மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், 20 கதர் விற்பனை அங்காடிகளையும், ஒரு கிராமோதய விற்பனை நிலையத்தையும் நடத்தி வருகிறது.

(ஆ) தற்போது மேலும் கதர் விற்பனை நிலையங்களை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை.

தீண்டாமை ஒழிப்பு சட்டத்தின்கீழ் வழக்குகள்.

வினா 638— திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு அரிசனத் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978–79-ம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்பு போலீசாரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை ?

விடை—

1978–79ஆம் ஆண்டில் இயங்கும் காவல் படையினரால் (Mobile Police Squads) 516 வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

சமயநல்லூர் தொகுதியில் மனைப்பட்டாக்கள் வழங்கல்

வினா 639—திரு. சி. செல்வராஜ் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொகுதியிலுள்ள முடக்காத்தான்—அண்ணா நகர் பகுதியிலுள்ள சுமார் 100 குடும்பங்களுக்கு 10 ஆண்டுகளாக குடியிருப்பு மனைப் பட்டா வழங்காமலிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ): முடக்காத்தான் குளம் என்று வகைப் படுத்தப்பட்ட புல எண். 213/1ஏ1 நிலத்தில் 70 சென்டு பரப்புள்ள இடத்தில் 33 நபர்கள் 10 ஆண்டுகளாக ஆக்ரமனம் செய்துள்ளார்கள். மேற்படி குளத்திற்கு 36·01 ஏக்கர் நிலம் ஆயக்கட்டு நிலம் இருப்பதால் ஆக்கிரமிப்பு ஆட்சேபகரமானது என்று கருதப்படுகிறது. எனினும் பெரியார் வைகை டிவிஷன் நிர்வாகப் பொறியாளரின் (பொதுப்பணித்துறை) கருத்தினைப் பெற்று ஆட்சேபனை எழவில்லை என்றால் ஆக்ரமனதாரர்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்வது பற்றி துரிதமாக பரிசீலிக்கப் படும்.

**வினா 640—திரு. சி. செல்வராஜ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொகுதியிலுள்ள விளாங்குடி உள்கடை அண்ணா நகரில் குடியிருக்கும் சுமார் 100 குடும்பங்களுக்கு கடந்த 12 ஆண்டுகளாக குடியிருப்பு மனைப் பட்டா வழங்காமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை—**

(அ) மற்றும் (ஆ): விளாங்குடி கிராமம், அண்ணாநகர் சர்வே எண். 151-ல் 2.21 ஏக்கர் நிலத்தில் சுமார் 100 குடும்பங்கள் குடியிருப்பு வீடுகளைக் கட்டி ஆக்கிரமிப்பு செய்து சுமார் 10 வருடங்களாக இருந்து வருகின்றனர். இந்த நிலம் மயானம் புறம்போக்கு என்று வகைப்படுத்தப்பட்டபோதிலும், இப்பொழுது மயானமாக பயன்படுத்தப்படவில்லை. ஆக்கிரமிப்பாளர்களுக்கு விதிகளையொட்டி விரைவில் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## *Unani system of medicine.*

641 *Q*—THIRU SALEM M. ARUMUGAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) Whether the Government are aware that the Central Government has proposed to organise Unani Medical Research in this State—

(*b*) If so, the details thereof; and

(*c*) The details of the State Government participation in the Scheme?

**விடை :—**

(அ) ஆம்.

(ஆ) சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் யுனானி மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று புதுடில்லி உள்ள மத்திய யுனானி மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் ஆதரவில்

செயல்பட்டு வருகிறது. மேலும், மத்திய யுனானி மருத்துவ ஆராய்ச்சிக்குழு சென்னையில் "மண்டல யுனானி மருத்துவ ஆராய்ச்சி நிலையம்" ஒன்றினைத் தொடங்க முன்வந்துள்ளது

(இ) சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் செயல்பட்டு வரும் யுனானி மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவிற்கு 10 படுக்கைகள் கொண்ட கட்டிட வசதியினைத் தமிழக அரசு செய்து கொடுத்துள்ளது. இந்த 10 படுக்கைகளுக்காகும் மருந்து, உணவு மற்றும் பிளன் செலவுகளையும் தமிழக அரசு ஏற்றுக்கொள்கிறது. சென்னையில் "மண்டல யுனானி மருத்துவ ஆராய்ச்சி நிலையம்" அமைப்பதற்கு இராயபுரத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான ஒரு கட்டிடத்தினை ரூபாய் 1.25 இலட்சம் செலவில் பழுது பார்த்துத் தருவதற்குத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## Institution Affiliated to Agricultural University.

**வினா 642**—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(*a*) The details of the (1) Institutions, (2) Colleges notified to be added to the Agricultural University as on date; and

(*b*) The districts in which they are located?

**விடை**—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் புதிதாக இணைக்க அறிவிக்கப்பட்டிருக்கும் நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகள் ஏதுமில்லை

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.



## Rat Eradication Undertaken by Navlock Seed Farm.

643 *Q*—THIRU SALEM M. ARUMUGAM: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to State—

(*a*) Whether the Farmer's Training Centre State Seed Farm Nava lock Gardens near Ranipet, had conducted a rat eradication campaign during May-June 1979; and

(*b*) If so, the details thereof?

**விடை**—

(அ) ஆம். கடந்த 1979 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் முதல் 1979 ஆம் ஆண்டு மே திங்கள் 30 ஆம் நாள் முடிய வட ஆற்காடு மாவட்டம் வாலாஜாவைச் சேர்ந்த தகரகுப்பம் என்ற கிராமத்தில், எலிகள் ஒழிக்கப் பட்டன. இப்பணியில் தீவிர தானிய சேமிப்பு பயிற்சியாளர்களும், வட்டார பணியாளர்களும், வேளாண்மை பயிற்சி பள்ளி மாணவர்களும் ஈடுபடுத்தப் பட்டனர். அலுமினிய பாஸ்பேடு மற்றும் துத்தநாக பாஸ்பேடு ஆகியவை களை உபயோகித்து அக்கிராமத்திலுள்ள மொத்த வீடுகளான 180 வீடு களிலும், மேலும் 196¾ ஏக்கர் நிலங்களிலும் எலிகள் ஒழிக்கப்பட்டன.

(ஆ) கிராமத்தின் பெயர்—தகரகுப்பம்.

வட்டத்தின் பெயர்—வாலாஜா.

மாவட்டத்தின் பெயர்—வட ஆற்காடு.

(1) வீடுகளில் எலி ஒழிப்பு—

| | |
|---|---|
| எடுத்துக்கொள்ளப்பட்ட வீடுகள் | 180 |
| மருந்து கலவை எண்ணிக்கை | 598 |
| உபயோகிக்கப்பட்ட மருந்தின் அளவு | 30 கிலோ |
| இறந்த எலிகளின் எண்ணிக்கை | 211 |

(அதிகமாக வீட்டு எலிகள், சுண்டெலிகள், மூஞ்சூர் எலிகள், பெருச்சாளிகள் இறந்து காணப்பட்டன.)

[1979 நவம்பர் 7]

(2) வயலில் எலிகள் ஒழிப்பு (அலுமினியம் பாஸ்பேடு உபயோகித்து)—

| | |
|---|---|
| மருந்திடப்பட்ட நிலம் | 145½ ஏக்கர் |
| புகையிடப்பட்ட வளைகளின் எண்ணிக்கை | 1,354 |
| உபயோகிக்கப்பட்ட மருந்தின் அளவு | 2,582 மாத்திரைகள். |
| தோண்டப்பட்ட வளைகளின் எண்ணிக்கை | 961 |
| இறந்த எலிகளின் எண்ணிக்கை | 669 |

(3) வயலில் எலிகள் ஒழிப்பு (துத்தநாக சல்பேடு உபயோகித்து)—

| | |
|---|---|
| மருந்திடப்பட்ட நிலம் | 51¼ ஏக்கர் |
| உபயோகிக்கப்பட்ட மருந்தின் அளவு | ¾ கிலோ |
| மருந்து கலவையின் எண்ணிக்கை | 378 |
| இறந்த எலிகளின் எண்ணிக்கை | 270 |

### *Lorries owned by Tamil Nadu Warehousing Corporation*

வினா 644—திரு. சேலம் எம். ஆறுமுகம்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(*a*) the total number of lorries owned by the Tamil Nadu warehousing Corporation as on date;

(*b*) the number hired by them on a day on an average ; and

(*c*) the rates for which they are hired?

**விடை—**

(அ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான லாரிகள் எதுவும் கிடையாது.

(இ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் வாடகை லாரிகள் எதனையும் பயன்படுத்தவில்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மூலமாக வண்டியில் ஏற்றுதல், இறக்குதல் மற்றும் போக்குவரத்து வேலைகளை நடத்துகிறது.



1979 நவம்பர் 7]

### *Godowns-*cum*-Warehouses of Tamil Nadu Warehousing Corporation.*

வினா 645—திரு. சேலம் எம். ஆறுமுகம் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(*a*) the total number of Godowns-*cum*-Warehouses run by the Tamil Nadu Warehousing Corporation in this State;

(*b*) the details thereof ;

(*c*) the number of buildings owned by the Corporation and the number taken on rent ; and

(*d*) the rents paid for the godowns hired during 1978-79.

**விடை—**

(அ) தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் நடத்தும் சேமிப்புக் கிடங்குகள் மற்றும் கிடங்குகள் பற்றிய விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| சேமிப்புக் கிடங்குகள். | கிடங்குகள். | மொத்தம் கொள்ளளவு. (மெட்ரிக் டன்கள்.) |
|---|---|---|
| 50 | 250 | 2,46,001 |

(ஆ) சேமிப்புக் கிடங்குகள் அமையப்பெற்ற இருப்பிடங்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. செங்கற்பட்டு
2. வாலாஜாபாத்
3. காஞ்சிபுரம்
4. மதுராந்தகம்
5. கடலூர்
6. பன்ருட்டி
7. விருத்தாசலம்
8. விழுப்புரம்
9. கள்ளக்குறிச்சி

10. வேலூர்
11. திருவண்ணாமலை
12. போளூர்
13. ஆரணி
14. அரக்கோணம்
15. சேலம்
16. இராணிப்பேட்டை
17. நாமக்கல்
18. ஆத்தூர்
19. தர்மபுரி
20. திருப்பூர்
21. பொள்ளாச்சி
22. மேட்டுப்பாளையம்
23. பவானி
24. கோபிசெட்டிப்பாளையம்
25. அவினாசி
26. பல்லடம்
27. திண்டுக்கல்
28. தேனி
29. தஞ்சாவூர்
30. திருவாரூர்
31. பட்டுக்கோட்டை
32. மாயூரம்
33. நாகப்பட்டினம்
34. புதுக்கோட்டை
35. அறந்தாங்கி
36. திருச்சி
37. கரூர்
38. இராஜபாளையம்
39. ஸ்ரீவில்லிபுத்தூர்
40. அருப்புக்கோட்டை
41. திருநெல்வேலி
42. தூத்துக்குடி-I
43. ஸ்ரீவைகுண்டம்
44. அம்பாசமுத்திரம்
45. தென்காசி



46. கோவில்பட்டி
47. சங்கரன்கோவில்
48. நாகர்கோவில்
49. காரைக்குடி
50. தூத்துக்குடி-II. (கோரம்பள்ளம்)

(இ) தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான கிடங்குகள் வாடகைக் கிடங்குகள் ஆகியவற்றின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | எண்ணிக்கை. | கொள்ளளவு. (மெட்ரிக் டன்னில்.) |
|---|---|---|
| சொந்தமான கிடங்குகள் .. | 58 | 1,48,627 |
| வாடகைக் கிடங்குகள் .. | 192 | 97,374 |

(ஈ) 1978-79-ம் ஆண்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் வாடகைக் கிடங்குகளுக்குக் கொடுக்கப்பட்ட வாடகை ரூ. 19,94,141.06 ஆகும்.

## தர்மபுரி மாவட்டத்தில் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம்.

**வினா 646—திரு. எம். அண்ணாமலை :** மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டத்தில் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயனடையும் உழவர்கள் எத்தனை பேர் ?

**விடை —**

தர்மபுரி மாவட்டத்தில் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. எனவே இக்கேள்வி எழாது.

## ஊத்தங்கரை வட்ட அரிசனங்களுக்கு இலவச வீட்டுமனை.

வினா 647—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை வட்டம், கதவணி கிராம அரிசனங்களுக்கு இலவச வீட்டு மனை கொடுக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா ?

விடை —

ஊத்தங்கரை வட்டம், கதவணி கிராமத்தில் 45 அரிசன குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை வழங்குவதற்காக சர்வே எண் 12/4, 17/1, 17/3 மற்றும் 19/1-ல் 2.85 ஏக்கர் நிலம் ஆர்சிதம் செய்ய 4 (1) முன்மொழிவுகள் வரப்பெற்று மாவட்ட ஆட்சியாளரின் பரிசீலனையில் உள்ளது.

## தர்மபுரி மாவட்டத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள்.

வினா 648—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் எத்தனை உள்ளன ?

(ஆ) 1979-80-ம் ஆண்டுக்கு அமையவிருக்கும் ஆடு வளர்ப்பு சங்கங்களும் அவற்றில் பலனடையும் விவசாயிகளின் எண்ணிக்கையும் யாது ?

விடை—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் 57 உள்ளன. மேற்கொண்டும் 5 சங்கங்களை பரிசீலனைக்குப் பின் பதிவு செய்ய அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 1979-80-ம் ஆண்டில் அமையவிருக்கும் ஆடு வளர்ப்பு சங்கங்கள் 10 (பத்து). பலனடையும் விவசாயிகள் 500 (ஐநூறு) பேர்கள்.





## நீலங்கரை பனிக்கட்டி குளிர்பதன நிலையம்.

வினா 649—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலங்கரையில் இருந்த பனிக்கட்டி நிலையத்தை மூடுவதற்கான காரணம் யாது ?

(ஆ) இந்த நிலையத்தில் இருந்த இயந்திரங்கள் பிரிக்கப்பட்டு வேறு ஏதேனும் இடத்தில் அமைக்கப் பெற்றுள்ளதா ?

விடை—

(அ) 1963-64-ம் ஆண்டில் நிறுவப்பட்ட நீலங்கரை பனிக்கட்டி குளிர்பதன நிலையத்தில் தொடர்ந்து, வருமானத்தைவிட செலவினம் அதிகமாக இருந்ததால், 1977-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ம் நாள் முதல் இந்நிலையம் மூடப்பட்டது.

(ஆ) இந்த நிலையத்திலுள்ள சில இயந்திரப் பகுதிகள் நாகப்பட்டினம், கீழக்கரை, மற்றும் இடிந்தகரை பனிக்கட்டி குளிர்பதன நிலையங்களுக்கு மாற்றப்பட்டன.

## SURPLUS STORES IN TANSI UNITS

Q.—650.—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Rural Industries be placed to state—

Whether surplus stores have been accumulated at the Tamil Nadu Small Industries Corporation Limited Units at (1) Thanjavur (2) Guindy (3) Tuticorin and (4) Vellore at present?

டான்சி தொழிற்சாலைகள் சிலவற்றில் பயன்படுத்த இயலாத காரணத்தால் தேக்கப்பட்டுள்ள உபரிப் பொருட்களின் விவரம் கீழே தரப்படுகிறது :—

| டான்சி தொழிற்சாலையின் பெயர். (1) | உபரிப் பொருட்களின் பெயரும், அதனுடைய மதிப்பீடும், (2) | ரூபாய், (3) |
|---|---|---|
| டான்சி வார்ப்பு ஆலை மற்றும் இன்ஜினீரிங் தொழிற்சாலை, தஞ்சாவூர், | சைக்கிள் உறுப்புகள் .. | 13,620·00 |
| டான்சி பேப்ரிகேசன் தொழிற்சாலை, வேலூர் .. | ஷை .. | 24,266·00 |
| டான்சி இன்ஜினீரிங் தொழிற்சாலை, தூத்துக்குடி .. | ஷை .. | 7,500·00 |
| டான்சி வார்ப்பு ஆலை, கிண்டி .. .. .. | சிலவகை நுகர் மின் பொருட்களும் மற்றும் கடின வகைப் பொருட்களும், | 35,696·04 |
| டான்சி மின்கம்பிகளுக்கு முலாம் பூசும் தொழிற்சாலை, கிண்டி, | பருத்தி நூல் — — | 9,025·00 |

(4) குறிப்புகள்.—தஞ்சாவூர், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள டான்சி தொழிற்கூடங்களில் சைக்கிள் தயாரிப்பதை நிறுத்திவிட வேண்டும் என்று முடிவு செய்ததினால் மேற் கூறிய தொழிற்கூடங்களில் சைக்கிள் உறுப்புகள் உபரிப் பொருட்களாக தங்கிவிட்டன. இற்சில சமயங்களில் வாடிக்கையாளரின் பணி ஆணைகளில் மாற்றங்களினாலும் மற்றும் சில பொருட்களின் உற்பத்தியைக் கைவிடப்பட வேண்டிய சூழ்நிலையாலும், சிலவகை மூலப் பொருட்கள் உபரிப் பொருட்களாகக் கருதப்படுகின்றன. ஆனால் அம்மாதிரியான மூலப் பொருட்கள் டான்சி நிறுவனத்திற்கு முடிந்த அளவு சாதகமாகவே அவ்வப்போது விற்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)



குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

(முற்பகல் 10-20)

## (2) தகவல் கோரல்.

### அ. உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகள் தள்ளுபடி குறித்து.

*** திரு. மு. அம்பிகாபதி :** பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல்வேறு 41, 42 விதிகளின்கீழ் அறிவிப்பு கொடுத்தும் நீங்கள் அவைகளையெல்லாம் தள்ளுபடி செய்து அனுப்புகிறீர்களே, அது நியாயம் தானா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** Overruled பாய்ன்ட் ஆப் ஆர்டர் நிராகரிக்கப்பட்டது. உட்காருங்கள்.

### ஆ. 'இந்தியா டுடே' பத்திரிகை மீது கொடுத்த உரிமைப் பிரச்சினை குறித்து.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 'இண்டியா டுடே' பத்திரிகையின் மீது ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்து, அதை நீங்கள் எழுதி அந்தப் பத்திரிகையிடமிருந்து தகவல் தெரிந்து முடிவு தெரிவிப்பதாகத் தெரிவித்திருந்தீர்கள். சட்டமன்றம் கூடி இத்தனை நாள் ஆகியும் உரிமைப் பிரச்சினையின் மீது தங்களுடைய முடிவு இதுவரையில் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவுசெய்து அமருங்கள். அந்த நோட்டீஸ் 'லாப்ஸ்' ஆகிவிட்டதா, இல்லையா என்று தெரியவில்லை. அதைப் பற்றி நீங்கள் என் கவனத்திற்கு இப்போதுதான் கொண்டு வந்தீர்கள். அது பற்றி நாளை மறுநாள் சொல்கிறேன்.

### இ. அசெம்பிளி அலுவலர்களுக்குப் 'பாஸ்' வழங்குவது குறித்து.

**திரு. ரா. உமாநாத் :** கடந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் அசெம்பிளி மெம்பர்களுக்கு பல வசதிகள் அனவுன்ஸ் பண்ணியபொழுது, ஒரு வாக்குறுதியை நிதியமைச்சர் கொடுத்தார். அசெம்பிளியைச் சார்ந்திருக்கக் கூடிய அலுவலர்களுக்கு இந்த செஷனுக்கு வருகிறபொழுது டிரான்ஸ்போர்ட்டுக்கு ஃப்ரீ பாஸ் கொடுப்பதற்கு ஒரு அஷ்யூரன்ஸ் கொடுக்கப்பட்டது.

(குறுக்கீடு) போன அசெம்பிளி செஷனிலே மெம்பர்சுக்கு எல்லாம் வசதிகளை பெருக்குவதற்கு நீங்கள் அனவுன்ஸ் பண்ணியபொழுது, அசெம்பிளி ஸ்டாஃபுக்கு செஷன்ஸ்பொழுது, இங்கே வந்து போக, ஃப்ரீ பாஸ் கொடுப்பதாக, கிளியர் அஷூரன்ஸ் கொடுத்தீர்கள். ஆனால், இந்த செஷனில் இன்னும் கொடுக்கப்படவில்லையென்று நான் அறிகிறேன். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் ?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** வாக்குறுதியைக் கொடுத்திருந்தால் நிதியமைச்சர் அதை நிறைவேற்றுவார்.

**திரு. ரா. உமாநாத் :** கொடுத்திருந்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. காசு கொடுத்துத்தான் பஸ்சிலே போய்விட்டு வருகிறார்கள். ஃப்ரீ பாஸ் கொடுக்கப்படவில்லை, செஷன் முடியப் போகிறது. ஆகவே, Definitely you must say something.

(சில உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். 41, 42 விதிகளின்கீழ் கொடுத்தவைபற்றி கேட்பதற்காக எழுந்திருக்க வேண்டாம். அவை பற்றி என்னுடைய அறையிலே வந்து கேட்டு அந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

## (3) உரிமைப் பிரச்சினைகள்.

### அ. வானொலி நிலையத்தின் மீது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, அவை உரிமை குறித்த பிரச்சினைகள். பேரவையின் 184-வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒரு அறிவிப்புக் கொடுத்துள்ளார். 'சட்டமன்றத்தில் இன்று' என்ற தலைப்பில் வானொலியில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுவதில், சில நிகழ்ச்சிகள் விடப்பட்டுள்ளது என்றும் அது அவை உரிமை மீறல் ஆகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது எப்படி அவை உரிமை மீறல் ஆகிறது என்று மிக சுருக்கமாக திரு. சுப்பு அவர்களை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சென்னை மு. அரங்கநாதன் :** தலைவரவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள், இடையிலே கேட்கக் கூடாது.





**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டப் பேரவையிலே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு நேர்மையான செய்தி வெளியிடுவது என்பது பத்திரிகைகளுடைய கடமை. அதைப்போல் வானொலியைப் பற்றி கேட்க வேண்டியதில்லை. பத்திரிகையாளர்களாவது சொந்தத்திலே மூலதனம் போட்டு நடத்துகிறார்கள். அவர்களுடைய நன்மைக்காக நடத்துகிறார்கள். அதற்கேற்ப விமர்சனங்கள் கொடுப்பார்கள். அதை நாம் தடுக்க முடியாது. ஆனால், அகில இந்திய வானொலியைப் பொறுத்த மட்டில் அது ஒரு பொது நிறுவனம் என்ற சிந்தனையை விட்டு வேறு எங்கோ போய் விட்டதுபோல் ஒரு தோற்றம் கடந்த சில நாட்களாக இருந்து வருகிறது. நான் இதைச் சொல்வதாலே சில பேருக்கு கொடுக்கிறார்கள் என்று நான் குற்றம் சாட்டவில்லை. அங்கு நம்முடைய ஐசரி வேலன் அடிக்கடி நாடகத்தில் நடிக்கிறார், முதலமைச்சருடைய செய்தி அதிகமாக வருகிறது. அதையெல்லாம் நாங்கள் குற்றச்சாட்டாகச் சொல்ல முடியாது. அதுதான் நடைமுறை. ஆனாலும், இங்கே சட்டப் பேரவையிலே நடக்கிற நிகழ்ச்சிகளைப் பற்றி விமர்சனம் செய்யும்போது கொஞ்சம் உண்மையைச் சொல்வதாகவும், நேர்மையானதாகவும் இருப்பது நல்லது. ஆனால், அவர்களைப் பொறுத்தவரை எல்லா நாளிலும் அப்படி சொல்வதாக நான் சொல்லவில்லை. ஒவ்வொரு நிருபரும் எழுதிக் கொடுப்பதை வைத்துக்கொண்டு விமர்சனம் வானொலியிலே படிக்கப்படுகிறது. அன்றையதினம், என்னமோ, யாரோ ஒரு நிருபர், எக்ஸ்பிரஸ் பத்திரிகையைச் சேர்ந்த நிருபர் என்று நான் கேள்விப்பட்டேன். அவருக்கு என் மேலே என்ன கோபம் என்று தெரியவில்லை. அதற்கு ஒரு தனிக்கட்சி ஆரம்பிக்கலாம், தப்பு ஒன்றும் கிடையாது. ஆனால், அவர் இங்கே வந்து சட்டப் பேரவை நிகழ்ச்சிகளைப் பற்றி விமர்சனம் எழுதிக் கொடுக்கச் சொன்னால், அவர் இஷ்டத்திற்கு ஒன்றை எழுதிப் படிக்கிறார். இங்கே வந்த மசோதாக்கள், தங்களுக்குத் தெரியும். பேரவை உறுப்பினர்களுக்கும் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுப்பு, அது விடுபட்டுப் போய் விட்டது, நான் சட்டமன்றத்தில் பேசிய பேச்சுக்கள் எல்லாம் இருட்டடிப்பு செய்யப்பட்டது என்று சொல்வது நியாயம். இன்னொரு பத்திரிகை நிருபரைக் குறிப்பிட்டு, அவர் அங்கே கொடுத்தது சரிதானா? அவருக்கு என் மீது என்ன கோபம் என்று அதைப் பற்றியெல்லாம் சொல்ல ஆரம்பித்தால் அது சரியல்ல. நான் என்ன சொல்கிறேன் என்றால், இருட்டடிப்பு செய்தார்கள், அதன்மீது நான் உரிமை மீறல் கொண்டு வருகிறேன் என்று சொல்லலாமே தவிர, மற்றவர்களைச் சொல்லக் கூடாது . . . .

**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவரவர்களே, மொத்தத்திற்கும் வானொலியை நாங்கள் குற்றம் சொல்ல முடியாது. ஏனென்றால், பல நிகழ்ச்சிகளைச் சரியாகத்தான் விமர்சனம் செய்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிச் சொல்ல மாட்டீர்கள் என்றால், மற்றவர்களைப் பற்றிச் சொன்னால் அதற்கு நான் ஆதாரம் கேட்க வேண்டி வரும். நீங்கள் ஒட்டுமொத்தமாகச் சொல்லிவிடுவதாலே நான் விட்டுவிட முடியாது. நீங்கள் யார் மீதாவது சொல்ல ஆரம்பித்தால், அதற்கும் எனக்கு ஆதாரம் தேவை என்று கேட்க ஆரம்பிப்பேன். நீங்கள் தந்தாக வேண்டும்.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, நான் அறிந்தவரை வானொலியிலே வரும் "சட்டமன்றத்தில் இன்று" என்ற விமர்சனம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பத்திரிகையாளரால், ஒவ்வொரு நிருபரால் எழுதிக் கொடுக்கப்படுகிறது. அந்த நிருபர் எனக்குக் கிடைத்த தகவல் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிருபர் என்று—அப்படி எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்; ஆனால், தங்களுக்கே தெரியும், இங்கே வந்த எல்லா மசோதாக்களிலும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அதையே நான் வாசித்துக் காட்டினால் கூடப் போதும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசுவதே போதும். பேசுவதை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. க. சுப்பு :** ஆகவே, எங்களுடைய உறுப்பினர் சம்பந்தப்பட்ட மட்டில் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை, இல்லை, உங்கள் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. க. சுப்பு :** எங்களுடைய உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் யாருடைய பெயர் என்று குறிப்பிடவில்லை. குறிப்பாக என்மீது என்ன கசப்பு என்று தெரியவில்லை. மொத்தமாக அப்படிப்பட்ட அறிவிப்பு செய்தார்கள். மொத்தத்திலே வருகிறபோது 10 பேர் பெயரோடு என்னுடைய பெயரையும் சேர்த்து கோர்த்து மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்தான் என்று குறிப்பிட்டார்கள். நான் என்ன அப்படிக் கோர்க்கப்பட வேண்டிய நிலையிலா இருக்கிறேன். அந்த ரிபோர்ட்டைப் பொறுத்த வரையில் "ஃபேர் ரிபோர்டிங் அல்ல".





அது எங்களைப் பொறுத்த மட்டில், தி.மு.க. உறுப்பினர்களைப் பொறுத்த மட்டில் அத்தனையுமே மறைக்கப்பட்டிருக்கிறது. இந்த உண்மையை முதலமைச்சரேகூட ஏற்றுக்கொண்டுதான், வானொலியைக் காப்பாற்றுவதற்காக, அவரே வானொலி மீது குற்றம் சாட்டியிருக்கிறார்கள். காரணம் எங்கள் மீதும் அப்படித்தான் இருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டி, தப்பித்துக்கொள்வதற்காக. அகில இந்திய ரேடியோ இந்த அளவுக்கு மட்டமாகப் போய் இருப்பதன் பின்னணி என்ன? ஏன் இப்படிச் செய்கிறார்கள். அதற்கு முதலமைச்சர் சொல்லிய மாதிரி, கூலி பெறுகிறார்களா என்று விசாரித்து அறிந்துகொள்வதற்கு உதவியாக, இதை அவையின் உரிமைக் குழுவுக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கூறியதை வானொலி நிலையத்திற்கு எழுதி அவர்கள் விளக்கம் பெறப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கூறியதையும், அவர்களது விளக்கத்தையும் ஆய்ந்து என் தீர்ப்பைப் * பின்னர் வழங்குகிறேன்.

### ஆ. போலீஸ் கமிஷனரின் மீது.

**திரு. மு. அரங்கநாதன் :** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். அவைக்கு ஒரு தவறான தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. அதை நான் சுட்டிக் காட்ட வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நோ பாயின்ட் ஆப் ஆர்டர். இது நடந்த பிறகு பேசலாம்.

அடுத்து பேரவை 184-வது விதியின் கீழ் திரு. ரகுமான்கான் அவை உரிமை மீறல் குறித்த அறிவிப்பைக் கொடுத்துள்ளார். பேரவை நடந்து கொண்டிருக்கிறபோது அரசின் கொள்கை குறித்த ஒரு அறிவிப்பை போலீஸ் கமிஷனர் ஒரு பத்திரிகைக்குக் கொடுத்திருப்பதாகவும் சொல்லி இருக்கிறார். இது எப்படி அவை உரிமையை மீறிய செயலாகும் என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் கமிஷனர் அவர்களுக்கு எதிராக இந்த உரிமைப் பிரச்சினையை இந்த மாமன்றத்திலே கொண்டு வருகிறேன். போலீஸ் கமிஷனர் அவர்கள்

---

* 9—11—1979 அன்று தீர்ப்பு அளிக்கப்பெற்றது.

பத்திரிகை நிருபர்களிடத்திலே பேசும்போது அறிவிப்பைக் கொடுத்துவிட்டு எந்தக் கலவரத்திலும் ஈடுபடாமல் அமைதியாக இருப்பவர்களை போலீசார் கைது செய்யமாட்டார்கள்.

இந்த அறிவிப்பு கொள்கை சம்பந்தமானது; பாலிசி மேட்டர், அறிவிப்பு ஆகும். போலீஸ் கமிஷனர் இந்த அறிவிப்பைச் செய்ததாக 2—11—1979 தேதியிட்ட அலை ஓசை பத்திரிகையிலே பிரசுரமாகியிருக்கிறது. கொள்கை சம்பந்தப்பட்ட அறிவிப்புகளை சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது சட்டமன்றத்தில்தான் அரசாங்கம் அறிவிக்க வேண்டும் அது சம்பந்தமாக . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசிய கருத்துக்களே போதும். தாங்கள் மொத்தத்தையும் படிக்க வேண்டியதில்லை. ஒன்று பேசுங்கள். அல்லது பேசாமல் படித்துவிட்டு உட்கார்ந்து விடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, சட்டமன்றத்திலேதான் அரசாங்கத்தினுடைய பாலிசி மேட்டர் அறிவிப்பைச் செய்ய வேண்டும். ஆனால் அந்த அதிகாரி அப்படிச் செய்யாமல் சட்டமன்றத்திற்கு வெளியே பத்திரிகை நிருபர்களின் மத்தியிலே ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார். இது அவை உரிமையை மீறிய பிரச்சினை ஆகும். அதுமட்டும் அல்லாமல் இப்போது காபந்து சர்க்கார் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த காபந்து சர்க்காரிலே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்களும் இருக்கிறார்கள். அந்தச் சர்க்கார் ஒரு சர்க்குலரை அனுப்பி இருக்கிறது. அதிலே, அதிகாரிகள் பாலிசி மேட்டர் சம்பந்தமான கொள்கைகளை எந்தப் பத்திரிகை நிருபர்களிடத்திலேயும் தெரிவிக்கக்கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த சுற்றறிக்கைக்கு மாறாகவும் போலீஸ் கமிஷனர் அந்த அறிவிப்பைச் செய்திருக்கிறார். அது மட்டும் அல்லாமல் இன்றைக்கு மதுவிலக்குச் சட்டம் அமுலிலே இருந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால் இது முக்கியமான பிரச்சினை. உரிமை மீறல் பிரச்சினை எப்படி வந்தது என்பதை உங்களுக்கு நான் விளக்கியாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவையில்லை. ஒரு கொள்கைப் பிரச்சினையை அவர் பேசியது உரிமை மீறல் என்று சொல்லி விட்டீர்கள். அதை மட்டும்தான் பேசவேண்டுமே தவிர மற்றவைகளைப் பேச விடமாட்டேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** என்னைப் பேசவிடாமல் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச விட மாட்டேன்.





**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, ஒரு நிமிடம். மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருக்கிறது. அப்ரபேஷன் ஆக்ட் அமுலில் இருக்கிறது. ஊர் கடத்துகிற புரவிஷன், ஜாமீனில் வரமுடியாத புரவிஷன் இது போன்ற பல்வேறு அம்சங்கள் நீதிமன்றத்திலே வந்து கொண்டிருக்கிறது. நமது முதலமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக சொல்லுகிறபோது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொள்கை மாறுதல் பற்றிய பிரச்சினையை ஒரு அதிகாரி பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார். அதுதான் பிரச்சினை. இவையெல்லாம் தேவையில்லை. அதைமட்டும் பேசிவிட்டு உட்காருங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் பத்திரிகை நிருபர்களிடத்திலே கோட்டையிலே சொல்லும்போது, மதுவிலக்கு சம்பந்தமாக எந்த மாற்றமும் இல்லை. அப்படி ஏதாவது மாற்றம் இருந்தால், இந்த அவையிலே சட்டம் கொண்டு வருவோம் என்று பத்திரிகை நிருபர்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது அவையில் இல்லை. ஆகவே, அதை மறுக்கவோ, ஆமாம் என்று சொல்லவோ அவரால் முடியாது என்பதால், அந்தப் பிரச்சினை குறித்து பேச வேண்டாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** பின்னர் அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை மீது எப்படிப் பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது குறித்து திரு. ரகுமான்கான் விளக்கமாக ஏற்கெனவே சொல்லிவிட்டதால், பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதிலே எந்த மாற்றமும் இல்லை என்று சொல்லியிருக்கிறபோது, போலீஸ் அதிகாரிகள் அது சம்பந்தமாக அறிவிப்பு விடுவது தவறானது. அதோடு மட்டுமல்லாமல், உங்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது, நம்முடைய நடைமுறைச் சட்டம் அமலில் இருக்கிறபோது, அந்தச் சட்டத்திற்கு மாறுபட்ட வகையில் காவல்துறை ஆணையர் அறிவிப்புக் கொடுப்பது, அவையின் உரிமை மீறிய செயலாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் தந்து இருக்கிற உரிமை மீறல் பிரச்சினை பற்றி அவர் விளக்கியதற்குப் பிறகு, எனக்கு விளக்கத்தைத் தருகிற வாய்ப்பை வழங்க நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை அறிவிப்பு மன்றத்திலே தான் தரவேண்டும் என்ற மரபு இங்கே மீறப்பட்டு இருக்கிறது என்பது அவருடைய குற்றச்சாட்டு. ஏனென்றால் கமிஷனர் அவர்கள் அந்தக் கொள்கை அறிவிப்பை பத்திரிகை நிருபர்களைக் கூட்டி வைத்துப் பேசி இருக்கிறார். என்ன பேசினார் என்பதைப் பற்றி அவ்ர் விளக்கும்போது, பத்திரிகையில் வந்த ஒரு செய்தியைக் குறிப்பிட்டார். அந்தச் செய்தியை அவர் படித்தார். ஆகவே நான் அதைப் படிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால், எந்தப் பத்திரிகையில் வந்தது என்பதைப் பற்றி பெருமதிப்பிற் குரிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது, 'அலை ஓசை' பத்திரிகையில் வந்தது என்று குறிப்பிட்டார்கள். 'அலை ஓசை' பத்திரிகையில் வந்த காரணத்தால், அது தவறு என்று வாதாட நான் விரும்ப வில்லை. ஆனால், அதே நேரத்தில் அந்த 'அலை ஓசை' பத்திரிகை தவிர, அன்றைக்கும், மறுநாளும் வெளிவந்த 'மெயில்' பத்திரிகை, 'முரசொலி' பத்திரிகை, 'தின மணி' பத்திரிகை, 'தினகரன்' பத்திரிகை, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை, 'தினத்தந்தி' பத்திரிகை, 'இந்து' பத்திரிகை இவை எதிலும் அந்தச் செய்தி இல்லை என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரி வித்துக்கொள்கிறேன்.

ஆகவே, 'அலை ஓசை' பத்திரிகை, ஒன்று விவரம் புரியாமல் கமிஷனர் சொன்னதை பிரசுரித்து இருக்க வேண்டும். அல்லது, விஷமம் செய்வதற்கு அந்தப் பத்திரிகை அந்தச் செய்தியைச் சொல்லி இருக்க வேண்டும்.

இப்போது உண்மை நிலைக்கு வருகிறேன். இது குறித்து கமிஷனரிட மிருந்து பெற்ற தகவலை நான் இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட் டிருக்கிறேன். தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு நான் அதைப் படிக்க விரும்புகிறேன். அவரது அறிக்கை இதுதான்.

"In the Weekly Press Conference held at my Office on 2nd November 1979, some of the reporters referred to the decrease in the detection of prohibition offences from the usual weekly average of over 1100 cases to 419 cases for the week ending 26th



October 1979, and 818 cases for the week ending 2nd November 1979 and asked me whether there was any relaxation in the enforcement of the Prohibition Act, I clarified that there was no relaxation in the enforcement of the Prohibition Act and that **because of our preoccupations with the problems connected with** the policemen strike and the various procession and demonstra**tions, etc., which have been organised daily around the Secretariat** during the current session of the Assembly, we could not pay as much attention as we normally do for the enforcement of the Prohibition Act.

**But one Reporter queried whether we have stopped arresting** people for mere drunkenness cases, I categorically stated that we have not stopped action against such persons, but only we do not have enough man power and trying to conduct the raids and maintain usual pressure on prohibition offenders including drunkenness cases. It is incorrect to say that I have stated that people who merely drink and do not indulge in disorderly behaviour would not be arrested."

இந்த விளக்கத்திற்குப் பிறகு எவ்வளவு தவறான தகவலை திரு. ரகுமான் கான் அவர்கள் இந்த அவைக்குத் தந்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்த்து, அவர்கள் மேலேயே ஒரு உரிமைப் பிரச்சினையை ஏன் கொடுக்கக் கூடாது என்று கருதுகிற அளவுக்கு என்னை தரம் தாழ்த்திக் கொள்ள விரும்பவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பிரச்சினை குறித்த எனது தீர்ப்பு* பின்னர் வழங்கப்படும்.

### இ. சென்னை தொலைக் காட்சி நிலையத்தின் மீது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, பேரவையின் 184-வது விதி யின்கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் மற்றும் ரகுமான்கான் அவர்கள் ஆகியோர் "தொலைக்காட்சி" (டெலி விஷன்) மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளனர். இதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. திரு. ரகுமான் கான் அவர்கள்.

---

* 9—11—1979 அன்று தீர்ப்பு அளிக்கப்பெற்றுள்ளது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் இந்த உரிமைப் பிரச்சினையை டி.வி. ஸ்டேஷன் டைரக்டர் மீது கொண்டு வருகிறேன். காரணம் டி.வி. ஸ்டேஷன் இன்றைக்கு மக்கள் வரிப் பணத்தில் நடைபெறக்கூடிய ஒரு பொது நிறுவனம். அப்படிப்பட்ட ஒரு நிறுவனம் இன்றைக்கு ஆளும்கட்சியின் இளைக் கழகம்போல செயல்படுகிறது. உதாரணமாக கலைஞர் அவர்கள் இங்கே பேசும்போது இந்த அரசின்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆரம்பத்திலேயே உங்களை பேச அனுமதித்தபோது, அதிக நேரம் உங்களைப் பேச அனுமதித்துவிட்டேன் என்ற சந்தேகம் வந்திருக்கிறது. ஆளும் கட்சி, இளைக் கழகம் எல்லாம் தேவையில்லை.

திரு. அ. ரகுமான்கான் : பின் எப்படிச் சொல்ல வேண்டும் என்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டி.வி. ஸ்டேஷன் ஆளும்கட்சி இளைக் கழகம் என்பது தேவையில்லை. உரிமை மீறல் பிரச்சினை எப்படி வந்திருக்கிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: இந்தச் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சிக்காரர்கள் பேசிய பேச்சுக்கள் திட்டமிட்டு டி.வி. ஸ்டேஷன் டைரக்டரால் மறைக்கப்பட்டிருக்கின்றன. இதிலே முறைகேடு இருக்கிறது. மருத்துவக் கல்வி ஊழல் சம்பந்தமாக, பழனிபாபா சம்பந்தமாக, தொழிலாளர்கள் ஸ்டிரைக் உடைக்கப்படுவது சம்பந்தமாக, திரு. பொன்னையன் அவர்களின் தொலைப்பேசி பேச்சு சம்பந்தமாக குறிப்பிட்ட அத்தனையும் டி.வி. ஸ்டேஷன் டைரக்டரால் மறைக்கப்பட்டிருக்கிறது. ரிட்டயரான ஐ.ஜி. ஸ்ட்ரேசி சம்பந்தமாகக் குறிப்பிட்டவை . . .

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, எப்படிப் பிரச்சினை வந்திருக் கொடுத்தது ஒன்று ; இங்கே நீங்கள் சொல்வது ஒன்று.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, எப்படிப் பிரச்சினை வந்திருக்கிறது, எப்படிச் செய்தி மறைக்கப்பட்டிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியிருக்கிறீர்கள். அது எப்படி மீறப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பு





நான் அதிலே தாராளமாக இருக்க வேண்டுமென்றால் திரு. ரகுமான்கான் போன்றவர்கள் ஒத்துழைக்க வேண்டும். ஒத்துழைத்தால்தான் நான் அனுமதிக்க முடியும். நீங்கள் இப்படிப் பேசுவது சரியல்ல. திரு. சுப்பு அவர்கள் எவ்வளவு சுருக்கமாகப் பேசினார்கள். நீங்களும் அதைப்போல சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, எதை எதையோ பேசுவது அனுமதிக்கத்தக்கதல்ல. ஆகவே, சுருக்கமாகப் பேச வேண்டியதை மட்டும் பேசிவிட்டு, உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : சில பிரச்சினைகளை சுருக்கமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது ; சிலவற்றை விரிவாகப் பேச வேண்டியிருக்கிறது. கீழ் மேட்டூர் ஆற்றில் 30 கோடி, 40 கோடி ஊழல் என்று பேசிய பேச்சுக்கள் எல்லாம் டி.வி. நியூஸ் புல்லடினில் வரவில்லை. தமிழ் நியூசிலும் வரவில்லை; ஆங்கில நியூசிலும் வரவில்லை. காரணம் ஆளும்கட்சி சார்பாக செயல்படும் முறையை டைரக்டர் உருவாக்கியிருக்கிறார். அவர் அப்படி ஏன் செய்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பிரச்சினை குறித்துத் தொலைக்காட்சி இயக்குநரிடமிருந்து வந்துள்ள விளக்கத்தையும் மாண்புமிகு உறுப்பினர் கூறியதையும் ஆய்ந்து எனது தீர்ப்பைப்† பின்னர் வழங்குகிறேன்.

(முற்பகல் 10-40)

## (4) கவன ஈர்ப்புகள்.

### (அ) நுகர் பொருள் வாணிபக் கழகம். அரசு அறிவித்துள்ள விலையில், நெல் கொள்முதல் செய்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திரு. இரெ. இராசமாணிக்கம் அவர்கள் கொண்டு வருவார்.

* திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகளிடமிருந்து, நெல்லை, அரசு அறிவித்துள்ள விலையில் நுகர் பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்யாததால் அவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து" மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

† 9—11—1979 அன்று தீர்ப்பு அளிக்கப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவரவர்களே, 1979-80 ஆம் பயிர் ஆண்டிற்கு மத்திய அரசு நெல்லின் கொள்முதல் விலைகளை நிர்ணயிப்பதற்கு முன்பாகவே நம் மாநிலத்தில் குறுவை அறுவடை தொடங்கியது. மத்திய அரசு நிர்ணயிக்கும் விலைகள் மன நிறைவு தராவிட்டால் அந்த விலைகளுக்கு மேலாக குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 20 அளிக்கப்படுமென்று மாநில அரசு அறிவித்திருந்த முடிவையொட்டி 1978-79 கொள்முதல் விலைகளுடன் ரூபாய் 20 கூட்டி சாதா ரக நெல்லை குவிண்டால் ரூபாய் 105 சன்ன ரக நெல்லை ரூபாய் 109 என்ற விலைகளில் வாங்குவது என்று ஆணை பிறப்பித்தது. அந்த விலைகளில் தற்போது விவசாயிகள் முன் வந்து தரும் நெல் முழுமையும், தரக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வாங்கப்படுகிறது.

மத்திய அரசு 1979-80 ஆம் ஆண்டிற்கு நெல்லின் கொள்முதல் விலையை சாதா ரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூபாய் 95 என்றும் சன்ன ரகத்திற்கு ரூபாய் 99 என்றும் நிர்ணயித்துள்ளது. இந்த விலைகளுக்கு கூடுதலான விலைகள் கொடுக்கக் கூடாதென்றும் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இருப்பினும் மாநில அரசு தொடர்ந்து விவசாயிகளின் நலனைக் கருதி ரூபாய் 105, ரூபாய் 109 என்ற விலைகளில் நெல்லை வாங்கி வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் 294 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமும் எட்டு அரைவை முகவர்கள் மூலமும் ஆக 300-க்கு மேற்பட்ட மையங்களில் விவசாயிகளிடமிருந்து நெல் வாங்கப்படுகிறது. இந் நிலையங்கள் மாவட்டம் முழுவதும் கீழ்க்கண்டவாறு பரவலாக அமைக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் வட்டத்தில் 22, ஒரத்த நாடு வட்டத்தில் 16, கும்பகோணம் வட்டத்தில் 32, பாபநாசம் வட்டத்தில் 28, மாயூரம் வட்டத்தில் 37, சீர்காழி வட்டத்தில் 25, திருவாரூர் வட்டத்தில் 15, நாகப்பட்டினம் வட்டத்தில் 13, நன்னிலம் வட்டத்தில் 37, மன்னார்குடி வட்டத்தில் 25, திருத்துறைபூண்டி வட்டத்தில் 20, பட்டுக்கோட்டை வட்டத்தில் 24, பேராவூரணி வட்டத்தில் 8, ஆக 302 நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. 29—10—1979 வரை 48,030 டன்கள் நெல் வாங்கப்பட்டுள்ளது.

நான் மேலே குறிப்பிட்டுள்ளவற்றிலிருந்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விவசாயிகளிடமிருந்து தஞ்சை மாவட்டத்தில் நேரடியாக கொள்முதல் செய்யவில்லை என்று கூறுவது சரியல்ல என்பதும், மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைகளுக்குக் கூடுதலாக அதிக விலை கொடுத்து நெல் வாங்கப்படுகிறது என்பதும் விளங்கும். தற்போது செய்யப்பட்டுள்ள அமைப்பின் காரணமாக, விவசாயிகள் பாதிக்கப்படவோ, அல்லல்



படவோ, இடமே இல்லை என்பதும் தெரியவரும். மேலும் அரசு ரூபாய் 105, ரூபாய் 109 என்ற விலைகளில் நெல்லை வாங்க முற்பட்டதன் பயனாக வெளிச் சந்தையில் நெல்லின் விலைகள் ஏறக்குறைய அந்த அளவிற்கு உறுதிப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

*** திரு. இரெ. இராசமாணிக்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தை இங்கே தந்திருக்கிறார்கள். தஞ்சை நாடாளுமன்றத் தேர்தல் நடக்கிற நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய நெல்லின் விலையை விட, ஒரு குவிண்டாலுக்கு அதிகமாக 20 ரூபாய் சேர்த்துத் தரப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி பார்ப்போமேயானால் மத்திய சர்க்காரின் விலை குவிண்டால் 95 ரூபாய். ஒரு குவிண்டால் 95 ரூபாய், மாநில சர்க்கார் ரூபாய் 20 சேர்த்து இப்போது 115 ரூபாய் வைத்துக் கொடுக்க வேண்டும். அதாவது 57 கிலோ கொண்ட ஒரு மூட்டையை ரூபாய் 65.55 பைசா கொடுத்து வாங்க வேண்டும். ஆனால், இன்றைய தினம் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 57 கிலோ கொண்ட அந்த மூட்டையினுடைய விலை 58.48 காசுக்குத்தான் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள் நுகர் பொருள் வாணிபக் கழகத்தார் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் அறிக்கை கொடுத்த பிறகு ஏதாவது விளக்கம் இருந்தால், கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** கேள்விதான். அதாவது 10 தினங்களுக்கு முன்னால் தஞ்சை மாவட்டத்தில் நெல்லினுடைய விலை 48 ரூபாயிலிருந்து 52 ரூபாய் வரைதான் விற்கப்பட்டது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்ட வளர்ச்சிக் குழு கூட்டத்தில் கூட 140 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். ஆகவே அரசு முதல்வர் அவர்கள் அறிவித்தபடி அதிகமாக ஒரு குவிண்டாலுக்கு 20 ரூபாய் சேர்த்து குவிண்டால் 115 ரூபாய் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள், அந்த நோக்கிலே ஏற்பட்ட சூழ்நிலையில் அந்த அறிவிப்பு மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்.

தஞ்சையிலே இடைத்தேர்தல் நடந்த நேரத்தில் மத்திய அரசு எந்த விலையையும் நிர்ணயிக்கவே இல்லை. அதைப்பற்றி கவலைப்படாமல், அப்போது நிர்ணயிக்கப்பட்டிருந்த விலையைவிடக் கூடுதலாக 20 ரூபாய் தமிழக அரசு கொடுக்கும் என்று அறிவித்தார். தஞ்சை நகரத்திலே இடைத்தேர்தல் நடந்துகொண்டிருந்த நேரத்தில் மத்திய அரசு எந்தவித விலையையும் நிர்ணயிக்காத நிலையில் அப்போதிருந்த விலை குவிண்டாலுக்கு 85 ரூபாய், ஆகவே, மத்திய அரசு விலையை நிர்ணயிக்கும் வரை விவசாயிகள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாதே என்று 20 ரூபாய் சேர்த்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்.

அன்றைக்கு விலை குவிண்டாலுக்கு ரூபாய் 85. கூடுதலாக ரூபாய் கொடுத்து ரூபாய் 105-க்கு இன்றைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் மாநில அரசால் அறிவிக்கப்பட்டதற்குப் பின்னால் மத்திய அரசு ரூபாய் 85 என்றிருந்த விலையை ரூபாய் 95 ஆக உயர்த்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** அமைச்சர் அவர்கள், எந்த நேரத்தில் முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள் என்று கேட்டார்கள். தஞ்சை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். முதல் கேள்வியிலேயே அதிகமாகப் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** தஞ்சை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோதுதான் முதல்வர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து ஏமாற்றி வாக்குகளைப் பெற வேண்டும் என்பதற்காக அறிவித்தார்கள். முதல்வர் அறிவித்த அந்த வாக்குறுதியை காபந்து செய்யக்கூடிய வகையில் அந்த ரூ. 20 யையும் மத்திய அரசின் விலையோடு சேர்த்துக் கொடுக்க அமைச்சரவை முன்வருமா என்பதை உணவுத் துறை அமைச்சர் அவர்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** பொதுமக்களிடமிருந்து வாக்குகளை வாங்குவதற்கு இப்பேர்ப்பட்ட ஒரு சிறிய அறிவிப்பைக் கொடுக்க வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு நிச்சயமாக இன்னும் ஏற்படவில்லை. அந் நிலை ஏற்படவும் செய்யாது. இருந்தாலும் அன்றைய தினம் விவசாயிகளுக்கு அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தமான ஒரு நிலை ஏற்பட்டது. பயிரிடு



வதற்கு உண்டான காலத்திற்கு முன்பாக விலை நிர்ணயிப்பது என்ற முடிவு எடுத்திருந்தாலும் அறுவடை நெருங்கிக் கொண்டிருந்தபோது மத்திய அரசு விலையைப் பொறுத்தவரையில் எந்தவிதமான முடிவும் எடுக்காத சூழ்நிலையில் விவசாயிகள் அந்தக் கோரிக்கையை வைத்த காரணத்தால், அறுவடை நெருங்கிக் கொண்டிருந்த காரணத்தாலும் அந்த விலை அறிவிக்கப்பட்டதே தவிர வாக்குகளைப் பெறுவதற்கு அல்ல. அந்த நிலை இந்த அரசுக்கு இன்னும் ஏற்படவில்லை, நிச்சயமாக ஏற்படவும் செய்யாது.

**ஆ. கூனூரிலும், உதகமண்டலத்திலும் ஏற்பட்டுள்ள கடுமையான விறகுத் தட்டுப்பாடு குறித்து.**

**திரு. கே. உச்சி:** தலைவர் அவர்களே, " நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்திலும் கூனூரிலும் நிலவும் கடுமையான விறகுத் தட்டுப்பாடு குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் உதகமண்டலம் மற்றும் கூனூர் பகுதிகளில் விறகு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும், இந்த நிலையை மாற்றி இந்த மலைவாழ் பகுதி மக்களுக்கு விறகு நியாய விலையில் போதுமான அளவு கிடைக்க சில ஏற்பாடுகளைப் பரிந்துரை செய்தார். இது பற்றி அரசு உடனடியாக வனத்துறைத் தலைவருடன் கலந்தாலோசித்து கீழ்க்கண்ட ஆணைகளை பிறப்பித்துள்ளது. அவற்றின் விவரங்கள் பின் வருமாறு :—

(i) சேகூர் வனச்சரகத்திலுள்ள சுமார் 1,000 டன்கள் எடையுள்ள உடைந்து சிதறிய மரங்கள் (drift wood) உடனடியாக மாவட்ட வன அதிகாரியால் பொது ஏலத்தில் விறகாகப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது. இந்த மரங்கள் தொழில் நிறுவனங்களால் பயன்படுத்தப்பட முடியும் என்றாலும் இம் மரங்களை நீலகிரி மாவட்டத்தை விட்டு எடுத்துச் செல்லக் கூடாது. நீலகிரி மாவட்டத்திற்குள்ளேயே விறகாக பயன்படுத்தப்பட வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது.

(ii) ஒவ்வொன்றும் 25 ஹெக்டேர் பரப்புள்ள இரண்டு மிளாறு மரப் பகுதிகள் விறகு தட்டுப்பாட்டைத் தவிர்க்க வனத்துறையால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு துரிதமாக விறகு விநியோகம் செய்ய இந்தப் பகுதிகள் விறகு தட்டுப்பாடுள்ள இடங்களின் பக்கத்தில் இருப்பவையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வனத்துறைத் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

(iii) நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள விறகுத் தட்டுப்பாட்டை நிவர்த்திக்க தமிழ்நாடு மலைவாழ் இடங்கள் (மரங்கள் பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் விறகிற்கு மட்டும் பயன்படும் சில குறிப்பிட்ட மரங்களை வெட்டுவதற்கு மாநில ஆட்சியாளர் அனுமதி அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. 18—10—1979 அன்றும் 19—10—1979 அன்றும் நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் உதகமண்டலம் கூனூர் பகுதிகளில் ஏற்பட்டுள்ள விறகு தட்டுப்பாட்டை நிவர்த்திக்க எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் பற்றி வனத்துறைத் தலைவருடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். அரசுடன் மேலும் கலந்து வனத்துறை தலைவர் மேலும் 100 ஹெக்டேர் பரப்புள்ள பட்டை உரிக்கப்பட்ட மிளாறு மரப் பகுதிகளை விறகாக பயன்படுத்தி நீலகிரியிலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு அளிக்க மாவட்ட வன அதிகாரியை கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் கூட்டுறவு சங்கங்களால் எடுத்துச் செல்ல முடியாத இடங்களில் உள்ள ப்ளூகம் மரங்கள் மற்றும் மெலிதான மிளாறு மரங்களை விறகாக பயன்படுத்த பொது ஏலத்தில் விடவும் ஏற்பாடுகள் செய்துள்ளார்.

3. சேகூர் வனச் சரகங்களிலிருந்து விறகிற்காகப் பயன்படுத்த அரசு உத்தரவிட்ட மரங்களில் ஒரு பகுதி பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளது என்றும், மற்றுமொரு பகுதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்றும், இது தவிர 150 ஹெக்டேர் பரப்பளவு உள்ள பட்டை உரிக்கப்பட்ட மிளாறு பகுதிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார். இந்த மரங்கள் விறகாக நகர பகுதிகளுக்கு வர ஆரம்பித்து விட்டதென்றும் இதனால் விறகு இருப்பு நிலை முன்னேறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இப் பகுதிகளில் இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் 10 கிலோ சிதறிய துண்டுகள் ரூபாய் 1.90 என்ற விலைக்கும் கூழ் மரத்தை ரூபாய் 2.50-க்கும் விற்கின்றது. தனியார் விறகு கிடங்குகளில் 10 கிலோ விறகு ரூபாய் 2.80-லிருந்து ரூபாய் 3-20 வரை விற்கப்படுகிறது. உள்ளூரில் விறகு கிடைப்பதற்காக இம் மாவட்டத்திலிருந்து விறகு எடுத்துப் போக தடை





விதிக்கப்பட்டுள்ளது. அரசு எடுத்துள்ள முயற்சிகள் மூலம் விறகு தட்டுப்பாடு நிலை நீங்கி இப்பொழுது விறகு போதிய அளவு கிடைக்கிறது; மேலும் சில நாட்களில் நிலைமை இன்னும் முன்னேறும் என்றும் மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார்.

4. அரசு எடுத்துள்ள மேற்கூறிய உடனடியான நடவடிக்கைகளால் நீலகிரி மாவட்டத்திலுள்ள உதக மண்டலத்திலும் கூனூரிலும் இந்த வருடம் ஏற்பட்டுள்ள விறகுத் தட்டுப்பாடு நீங்கி மக்களுக்கு நியாய விலையில் விறகு கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது.

(முற்பகல் 10-50)

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, மக்களுக்கு நியாயமான விலையில் விறகு கிடைக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் கடைகளில் விற்பனைக்கு விறகு இல்லை என்ற நிலை, நியாய விலைக் கடைகளில் ஒரு ரூபாய் 65 பைசா, பத்து கிலோ விறகுக்கு விலை இருந்தது. தனியார் கடைகளில் 3 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. முன்னால் 1.50-லிருந்து 1.60 என்று ஆகி, பின்னால் 1.90 என்று ஆகி இப்போது 2.50 என்ற நிலையில் விற்கப்படுகிறது. இது என்ன நியாய விலை. அடுத்து வெளியில் வில்கோஸ்-க்கு 1.50 என்ற விலையில் விறகு கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. அந்த விலையில் மக்களுக்கும் விறகைக் கொடுக்க அரசு முன்வருமா? மேலும் அந்தப் பகுதிகளில் இருந்து வருகின்ற விறகு தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு பக்கத்திலுள்ள எல்லா மரங்களையும் விறகுக்காகக் கொடுக்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விலையைப் பற்றிச் சொன்னார்கள். ஆரம்பத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கு மிகக் குறைந்த விலையில் ஒதுக்கி விறகு வழங்கப் பெற்றது. பின்னால் அதிக அளவு மரங்களை எடுப்பதில் அதிக செலவு ஏற்படுவதின் காரணமாக அடக்க விலையிலிருந்து சிறிது உயர்த்தியிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கம் என்றாலும் நஷ்டத்திற்கு விற்க முடியாது என்பதை மிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். மேலும் நீலகிரி மாவட்டத்திலுள்ள மரங்களை எல்லாம் விறகு பற்றாக்குறையைப் போக்குவதற்காக மரங்களை வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுமா என்று கேட்கிறார்கள். அப்படி மரங்களை வெட்டுவதற்கு அனுமதி வழங்க முடியாது. எந்த அளவுக்கு

விறகுக்காக மரங்களை வெட்டலாம் என்பதைப்பற்றி நான் குறிப்புக் கொடுத்திருக்கிறேன். குறிப்பிட்ட விதத்தில் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்திருக்கிறேன். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறார். அதையொட்டி தனியார் தேயிலைத் தோட்டங்களில் காப்பித் தோட்டங்களில் இருக்கின்ற சில பெரிய மரங்களை விறகுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக வெட்டலாம் என்று அனுமதி வழங்கலாமா என்பது அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, நான் ஒன்றை மட்டும் கேட்க விரும்புகிறேன். விஸ்கோஸ்-தொழிற்பேட்டைக்குக் கொடுக்கப்படும் விலையில் மக்களுக்கு விறகு கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : விஸ்கோஸ்-க்கு தனியாக விறகுக்கு என்று மரங்கள் கொடுப்பதில்லை. மூலப்பொருட்கள் என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. அதற்கென்று தனியாக விலை நிர்ணயிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### அ. சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, "1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை" பேரவை முன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.





## (6) அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறன் ஆக்குதலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/79) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறனாக்குதலும்) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதன்மீது அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை திருவாளர்கள் க. சுப்பு, நா. சுந்தரராஜ், ஆர். கிருஷ்ணன், துரைமுருகன் ஆகியோர் கொடுத்துள்ளார்கள். அவர்களில் திரு. சுப்பு அவர்களை முன்மொழிய அழைக்கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரால் கொடுக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"ஆளுநர் அவர்களால் 12—10—1979 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்று, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்திறனாக்குதலும்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 19/1979) இப்பேரவை நிராகரிக்கிறது".

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Deputy Speaker Sir, I beg to move that the Tamil Nadu Police Laws (Amendment and Validation) Bill, 1979,* (Legislative Assembly Bill No. 66 of 1979) be taken into consideration.

The Police Department which was functioning under the control of the Inspector-General of Police as the Head of the Department was bifurcated into three wings namely Crime, Law and Order, Enforcement and Armed Police, and placed under the control of three Inspectors-General of Police for effective and better administration. To be in overall charge of the

* 1979, நவம்பர் 5-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

Police Department a new post of Director-General of Police was also created with effect from 1st June 1979 and the Police Department is now functioning under the control of the new head of the Department namely the Director-General of Police. As the post of Director General of Police is a newly created one and the functions of the Police Department are regulated by the provisions of the various Police laws in force in the State of Tamil Nadu it has become necessary to bring the new post within the purview of the Police Laws and outline the powers and the functions of the Director-General of Police. Accordingly the Tamil Nadu Police Laws (Amendment and Validation) Ordinance 1979 (Tamil Nadu Ordinance 19 of 1979) was promulgated by the Governor. The Bill seeks to replace the said Ordinance. I commend the motion for acceptance of the House.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அவையிலே இல்லாத காரணத்தினால், அது முன்மொழியப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுடைய தீர்மானமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவசரச் சட்டத்தை சட்டமாக கொண்டுவரும் மசோதா இங்கே கொண்டு வரப் பட்டிருக்கிறது. எங்களுடைய கட்சியின் சார்பாக திருத்தங்கள் முன்மொழியப் படாவிட்டாலும்கூட, இங்கே கொண்டு வந்திருக்கும் அவசரச் சட்டத்திலே இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்பதை டைரக்டர் ஜெனரலாக மாற்ற வேண்டிய திருத்தம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இது ஒரு டெக்னிகல் ஆஸ்பெக்ட். இந்த அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்ட தேதி, அவர்கள் சொல்கிற தேதி 12—10—1979. ஏற்கெனவே, இந்த 3 பதவிகளைப் பூர்த்தி செய்ய முடிவு செய்யப்பட்ட தேதி 1—6—1979. எனவே, ஒரு 4, 5 மாதங்களுக்கு முன்பாக இந்த முடிவு அரசாங்கத்தால் எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி 6 மாதங் களுக்கு முன்பு முடிவெடுக்கப்பட்டதை, எப்படி அமுல் ஆக்க வேண்டும் என்பதை சிந்தித்திருக்க வேண்டும். அதிலே அவசரம் காட்டவில்லை. ஆனால், பதவிகளைப் பூர்த்தி செய்வதிலே, ஒரு சிலருக்குக் கொடுக்க வேண்டு மென்பதிலே அவசரம் காட்டப்பட்டது. இதிலே, சட்டத் திருத்தம் தேவை





தானா, இல்லையா என்பதைப் பார்ப்பதற்கு அந்த அவசரம் காட்டியதாகத் தெரியவில்லை. சென்னை நகர காவல் சட்டத்தை, மாவட்ட போலீஸ் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற அவசியம், அந்த அவசர உணர்வு 5 மாத காலமாக இல்லை. அதற்கு முன்னாலேயே திருத்தப்பட வேண்டுமென்ற உணர்வு ஏற்படவில்லை. சட்டமன்றக் கூட்டத் தொடர் தேதி அறிவித்த சூழ்நிலையிலே, அக்டோபர் 12 ஆம் தேதி ஒரு அவசரச் சட்டத்தைப் போடு கிறார்கள். சட்டமன்றம் கூடாத நாட்களில், தவிர்க்க முடியாத சூழ்நிலை இருக்குமானால், அவசரச் சட்டம் கொண்டு வரலாம். ஆனால், இவர்கள் தங்கள் சவுகரியத்திற்கு அவசரச் சட்டம் கொண்டு வருவது வாடிக்கையாகப் போய்விட்டது.

அவசரச் சட்டம் என்று கொண்டு வந்தால், அதைக் கொண்டுவந்த 6 வாரங்களுக்குள் சட்டமாக்க வேண்டும். அதைச் சுட்டிக்காட்டி உடனடியாக இந்த மசோதாவைக் கொண்டு வருகிறார்கள். ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் அதை அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள், அதிலே எழுத்துப் பிழைகள் இருந்தாலும், அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அரசியல் நிர்ப்பந்தம் அவர்களுக்கும், சில அரசியல் கட்சிகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட அவசரச் சட்டம் தேவைதானா? இப்போது இந்த அவசரச் சட்டம் இங்கே கொண்டு வரப்படுகின்றது. இந்தத் திருத்தச் சட்டத்திலே 3 ஐ.ஜி.க்கள் வருகிறார்கள். இந்த மூன்று ஐ.ஜி.க்களுக்கு மேலாக ஒருவர் டைரக்டர் ஜெனரலாக ஆகின்றார். அப்போது இதைப்பற்றி யெல்லாம் பார்க்காமல், இப்போது இந்த அவசரச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இப்படி அவசரமாகக் கொண்டு வரத் தேவையில்லை. ஒரு பப்ளிக் இன்டரஸ்ட் இருக்கின்றது என்பதற்காக அவசரச் சட்டம் கொண்டு வந்தால், பரவாயில்லை.

(முற்பகல் 11.00)

அவசரம் என்ற நிலை இல்லாமலே ஒரு அறிவிப்புக் கொடுத்து சட்டத்தைத் திருத்துகிறார்கள். வேலையைப் பார்க்கும்போது அதே வேலைதான். இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு என்ன வேலையோ அந்த வேலைதான் டைரக்டர் ஜெனரலுக்கும். முன்னால் இருந்த அடிஷனல் ஐ.ஜி.க்கும் மற்றவர்களுக்கும் என்ன வேலை கொடுக்கப்பட்டிருந்ததோ அதே வேலைகள்தான் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீசுக்கு. ஒன்றை மூன்றாக ஆக்கியிருக்கிறார்கள். இச் சட்ட முன்வடிவில் 'காவல் துறை டைரக்டர் ஜெனரல் புதிய பதவியும் கூடுதல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவிகள் ஏற்படுத்துவது' என்ற வகையிலே இருக்கிறது. இங்கிலீஷிலும் 'அடிஷனல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்' என்று போடப்பட்டிருக்கிறது. அதுவே தப்பு. இதைக்கூட ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்வார்களா? அதைத்தான்

தலையெழுத்து என்று சொல்லியாயிற்று. எழுத்துப் பிழைகளை வைத்துக் கொண்டு, சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வருகிறார்கள். டைரக்டர் ஜெனரல் பதவி மிக அவசரமாக பப்ளிக் இண்டரஸ்டில் தேவையா? ஏதாவது காரணம் இருக்குமா என்றால் ஒரு காரணமும் இல்லை. இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்ற பெயரில் இயங்குவதில் என்ன சிரமம் ஏற்பட்டுவிட்டது?

சென்னை காவல் துறை ஆணையரின் அதிகாரங்களில் கூட 'ஜஸ்டிஸ் ஆப் பீஸ்' என்ற அதிகாரங்கள் எல்லாம் போய்விட்டது. மாஜிஸ்டிரியல் பவர்ஸ் போய்விட்டன. அதற்குரிய முறையில் சட்டம் திருத்தப்படவில்லை. அதையெல்லாம் மாற்ற வேண்டியது அவசியமில்லையா? கமிஷனர் ஆப் போலீசுக்கு அவசரமாக அதிகாரங்கள் கொடுக்க திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இங்கு திருத்தச் சட்டங்கள் எல்லாம் ரோடு ரோலர் மாதிரி நிறைவேற்றப்படுகின்றன. மற்ற மாநிலங்களில் இந்த முறை இருக்கிறதா? இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்று இயங்குவதிலே என்ன சிரமம் ஏற்பட்டது? அப்படி ஏதாவது சிரமங்கள் இருக்கின்றன என்று சொல்லி சட்டத் திருத்தம் கொண்டு வரப்பெற்றிருந்தால் வரவேற்றிருப்பேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் மிகத் தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். ஓய்வு பெற்ற அதிகாரிக்கு ஒருவருக்கு எப்படியாவது பதவி கொடுக்க வேண்டுமென்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு. ஓய்வு பெற விடமாட்டார்கள், யாரையும். நீதிபதி ஓய்வு பெற்றாலும் விடமாட்டார்கள். ஓய்வு பெற்றவர்களைத் தேடிக் கொண்டு வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் 'டைரக்டர் ஜெனரல் சாதியைப் பார்க்காதவர், அதற்கு அப்பாற்பட்டுச் செயலாற்றுகிறவர்' என்று சொன்னார். அப்படியானால் இந்த இலாகாவில் மற்றவர்கள் எல்லாம் சாதியைப் பார்க்கிறார்கள். அப்படி என்றால் அப்படிச் சாதியைப் பார்க்கக் கூடியவர்களுக்கு ஒரு மந்திரி தேவை தானா? ஸ்ட்ரேசி சாதி உணர்வு இல்லாதவர், அதனால் போடுகிறோம் என்று சொன்னார்கள். காம்ப்ளிமெண்டாக 'தமிழ்நாடு சர்க்காரில் லஞ்சம் ஊழல் இல்லை, இன்டர்பிரன்ஸ இல்லாமல் நடக்கக்கூடிய ஒரே சீஃப் மினிஸ்டர்' என்று ஸ்ட்ரேசி சொல்லியிருக்கிறார். அப்படிச் சொன்னதற்காக பதவி.

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் . . .' ஒழுக்கத்தை நிலை நாட்டியிருக்கிறார்கள். இல்லாத ஒன்றை வரிந்து கட்டிக்கொண்டு ஒரு பெரிய மனிதர் சொல்லும்போது அவருக்கு உதவி செய்ய வேண்டும், கைம்மாறு செய்ய வேண்டும். அதற்காகச் செய்து கொண்ட ஏற்பாடு தான். எங்களுடைய வாதமெல்லாம் இப்படிப்பட்ட சட்டத் திருத்தத்தின் மூலமாக அந்த இலாகா நிர்வாகம் கெட்டுப் போய்விட்டது. ஸ்ட்ராக்சரல் சேஞ்சஸ் கொண்டு வருகிறார்கள். அதனால் வரக்கூடிய பல்வேறு

விதமான பிரஸ்ட்ரேஷன்கள் ரொம்ப மோசமாக வந்து கொண்டிருக்கிறது. ஹையர் லெவலில் இருந்தவரே, ஐ.ஜி. யாக இருந்தவரே ராஜினாமா செய்து விடுகிறார். தானாக ரிடையர் ஆகி விடுகிறார். ஐ.ஜி. யாக வரவேண்டியவர் தனக்கு மேல் ஒரு டைரக்டர் ஜெனரல் உட்காருகிறார் என்பது ஓவர்லுக் பண்ணுகிற நிலைமையில் இருக்கிறது என்று கருதி ராஜினாமா செய்கிறார். இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீசாக இருந்தவர் தானாக ரிடையர் ஆகி விடுகிறார். டைரக்டர் ஜெனரலாக இருப்பவருக்கு முதலிலே ஐ.ஜி. போஸ்டில் ஆறு மாத காலம் எக்ஸ்டென்ஷன் கொடுக்கிறார்கள். பிறகு அவர் ஐ.பி.எஸ்..ல் ரிடையர் ஆகிவிடுகிறார். அதற்குப் பிறகு டைரக்டர் ஜெனரல் என்ற போஸ்ட் உருவாக்கப்பட்டு அவருக்கு ஃபிரஷ் அப்பாயிண்மெண்ட் கொடுக்கிறார்கள்.

யாருக்கும் எக்ஸ்டன்ஷன் கொடுப்பதில்லை என்ற கொள்கையை அறிவித்தார்கள். அறிவித்ததை அப்படியே கடைப்பிடிக்க வேண்டியதில்லை. ஒரு தடவை சொல்லிவிட்டு மாற்றிக்கொள்ளலாம். (மணி அடிக்கப்பட்டது.) நான் நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்தவன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** அவர் சுருக்கமாகத்தான் பேசுகிறார் . . . நண்பர் சுப்பு அவர்கள் சுருக்கமாகப் பேசுபவர்கள் என்று சபாநாயகர் அவர்களே தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அவரைச் சுருக்கமாகப் பேசுங்கள் என்று சொல்வது முறையாகாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படியானால் அவர் சுருக்கமாகப் பேசவில்லை என்கிறீர்களா ?

**திரு. அ. ரகுமான்கான் :** அவர் சுருக்கமாகத்தான் பேசுகிறார் . .

**திரு. க. சுப்பு :** அதிகமாக இல்லை, சுருக்கமாகத்தான். தேவையில்லாத திருத்தங்களைக் கொண்டு வருகிறார்கள். . . .

**திரு. ரா. உமாநாத் :** துணைத் தலைவர் அவர்களே, சபாநாயகர் இன்னொன்றையும் சொன்னார். நண்பர், ரகுமான்கான் அதிகமாகப் பேசக் கூடியவர் என்றும் சொல்லியிருக்கிறார், அதை ஒத்துக்கொள்கிறார்களா ? (சிரிப்பு). . .

**திரு. ஆர். சி. சுப்பிரமணியம் :** ஆளுங்கட்சி உறுப்பினர்கள், தப்பாக அச்சடிக்கப்பட்டிருந்தாலும்கூட அதை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று அவர் சொல்வது சரிதானா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்கு நீங்கள் பேசும் போது மறுப்பு சொல்லலாம்.

**திரு. க. சுப்பு :** நான் உள்நோக்கம் கற்பிக்க வேண்டுமென்று சொல்ல வில்லை. அவசரச் சட்டம் போட்டவுடனே அரசாங்கத்திற்குக் கடமை வந்துவிடுகிறது. சட்ட மன்றம் கூடிய 6 வார காலத்திற்குள்ளாக அதைச் சட்டமாக ஆக்க வேண்டும். 1—10—1979 அன்று அவசரச் சட்டம் போட்டி ருக்கிறார்கள். ஆனால் 1—6—1979 லிருந்து அதற்கு எப்க்ட் கொடுக்கப் பட்டிருக்கிறது. தவறாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் **இல்லீகல்.** அவர்கள் இல்லீகலாக எடுத்த நடவடிக்கைகளை எல்லாம் ஜஸ்டிபை பண்ணு வதற்காக இப்பேது சட்டம் கொண்டு வருகிறார்கள். ஆனால் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத் தெரியுமா என்றால் தெரிய வேண்டிய தில்லை . . . . .

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் கூடாத நாட்களில் ஆளுநர் அவசரச் சட்டம் பிறப்பிப்பதும் அதைச் சட்டமன்றம் கூடியதற்குப் பிறகு முறையான சட்ட மாக ஆக்குவதும் சட்டப்பூர்வமான காரியமா அலலது இல்லீகலா என்பதைத் தயவுசெய்து தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க சுப்பு :** இல்லீகலாக ஒரு பதவியை 1—6—1979 இல் உருவாக்கி . . .

**மாரண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைந் தலைவர் அவர்களே, இல்லீகல். இல்லீகல் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆளுநர், சட்டமன்றம் இல்லாத நேரங்களில் இப்படிப்பட்ட அவசரச் சட்டம் பிறப்பிப்பதும், சட்டமன்றம் கூடியதற்குப் பிறகு அதைச் சட்டமன்றம் ஏற்றுச் சட்டமாக்குவதும் லீகலா அல்லது இல்லீகலா என்பதைச் சொல்ல வேண்டும். மேலும் மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபொழுது இப்படிப்பட்ட தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது. அப்படி நீங்கள் அனுமதிப்பதும் தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு க. சுப்பு :** நான் சொன்னதை மாண்புமிகு அமைச்சர் சரியாக எடுத்துக்கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். நான் சொல்ல வந்தது இப்படிப்பட்ட ஒரு அவசரச் சட்டம் 12—10—1979 அன்று போட்டிருக் கிறார்கள். ஆனால் பிரிவினை 1—6—1979 இல் எற்பட்டு அப்போதே எல்லாம் பிரித்துக் கொடுத்துவிட்டார்கள், பிரித்து அவருக்கு டைரக்டர் ஜெனரல் ஆப் போலிஸ் என்ற போஸ்டைக் கொடுக்கிறார்கள். அவர் அந்தப் பேரிலே பல உத்திரவுகளைப் போடுகிறார். இன்றைக்கு திடீரென்று அந்த உத்திரவு செல்லாது என்ற நிலை தோன்றுகிறது. இன்ஸ்பெக்டர் ஜெனரல்





என்ற பெயரிலே தான் ஸிடி போலிஸ் ஆக்டும், டிஸ்டிரிக்ட் போலிஸ் ஆக்டும் இருக்கிறது. டைரக்டர் ஜெனரல் என்ற பெயரே கிடையாது. அவர் டைரக்டர் ஜெனரல் என்ற பேரிலே உத்தரவு போட்டார். ஆனால் அவரும் போலீஸ் டிபார்ட்மெண்டிலிருந்து ரிடையர் ஆகிவிட்டார். ரிடையரான ஒருவரை மறுபடியும் ஃபிரெஷ் அப்பாய்ண்ட்மெண்ட் ஆகப் போட்டு இன்னொரு நேமிலே நோமன்கிளேச்சரிலே அது நடந்திருக்கிறது. இப்படிச் செய்து அதை லீகலைஸ் பண்ணுவதற்காக ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்திருக் கிறார்கள். சட்டம் பத்தாவது மாதம் வருகிறது, ஆனால் அது 1—6—1979 அன்றே அமலுக்கு வந்ததாகக் கருதப்பட வேண்டும். அதைத்தான் நான் சொல்கிறேன்.

**An illegal Act has been sought to be legalised.**

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் தலைவர் அவர்களே, சட்டங்கள் பிறப்பிக்கும்பொழுது முன்தேதியிட்டு அதை அமலுக்குக் கொண்டுவருகிற முறை ஏற்றுக்கொண்டிருக்கிற முறையா இல்லையா என்பதை மாண்புமிகு உறுப்பினரிடமிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு :** சில நிலைமைகளில் அப்படி வரலாம். சில நேரங்களில் விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்யும் பொழுது அப்படி வரலாம், ஆனால் பதவிகளுக்கு அப்படிச் செய்ய முடியாது.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒன்றுக்கு அனுமதிக்கிறபொழுது அதே சட்ட மன்ற மற்றொன் றுக்கு எப்படி மாறுபடும் என்பதையும் எப்படி அனுமதிக்க முடியாது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் சொல்ல வேண்டும்.

**திரு. க. சுப்பு :** நான் சொல்வது சரியென்று நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் ஏற்றுக்கொண்டிருக்கிறார், அவரைச் காட்டிலும் நம்முடைய செய்தித் துறை அமைச்சர் விவரம் தெரிந்தவர் என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I refute the suggestion or the imputation that I have accepted I should say that it has no legal basis.

**திரு. பி. எச். பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். ஆந்திர மாநிலத்தில் 37 பதவிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 1975 வது ஆண்டிலே கொடுக்கப்பட்டு 1979 ஆம் ஆண்டிலே நான்கு ஆண்டு களுக்குப் பிறகு ஆளுநர் இதைப்போன்று ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து, 4 ஆண்டுகளுக்குப் பிறகு, ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கவர்னர் ஒரு அவரச் சட்டம் பிறப்பிப்பதும், சட்டமன்றத்திலே அதற்குப் பிறகு அது சட்ட மாவதும், ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுப்பதும் சட்டத்திற்கு உட்பட்டது தான். நீங்கள் விமர்சிக்க வேண்டுமென்ற முறையிலே அதை அப்படி விமர்சிக்கிறீர்கள். அமைச்சர் பதில் சொல்வார், நீங்கள் பேசும்போது அமைச்சா அமைதியாக இருக்கலாம், அதனாலேயே நீங்கள் சொன்னதை அவர் ஏற்றுக்கொள்கிறார் என்று அர்த்தம் இல்லை. நீங்கள் பேசியதற்குப் பிறகுதான் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**டாக்டர் கே. சமரசம் :** விமர்சனம் கூட இல்லீகல் என்ற முறையிலே எப்படிச் சொல்ல முடியும்?

THE HON. THIRU K. NARAYANASWAMY: A certain amount of sobriety, dignity, silence and what may be called self-restraint always add to the dignity of the house.

**திரு. அ. ரகுமான்கான் :** டாக்டர் சமரசம் லீகலா இல்லீகலா என்று விளக்க வேண்டுமென்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் அவரைப் பேச விடுங்கள், திரு. சுப்பு நன்றாகப் பேசுவார், நீங்கள் உட்காருங்கள்.

(முற்பகல் 11-10)

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, மிஸ்-அண்டர்ஸ்டாண்டிங் எப்படி வருகிறது என்றால், போன சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவிக்கப் பட்டது இந்தப் பிரிவினை வேண்டுமென்று அப்பொழுது உடனே தேவை யான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்க வேண்டும்,





The Law Minister is also responsible for that.

உங்களுடைய ரெஸ்பான்சிபிலிட்டியை விட்டு விட்டது என்னுடைய தப்பு அல்ல. முதலிலேயே சட்டத்தைத் திருத்தி இருக்க வேண்டுமென்ற உணர்வு இருந்திருக்க வேண்டும், விவரம் இருந்திருக்க வேண்டும். இரண்டும் இல்லாமல் இருப்பதற்குச் சட்டமன்றத்தைப் பொறுப்பாக்க முடியாது.

THE HON. THIRU K. NARAYANASWAMY: The new post comes into effect from 1st June 1979. The Legislature has not been in session. It is only to replace this Ordinance this Bill was brought in when the Assembly is now in session.

**திரு. க. சுப்பு :** அதைத்தான் கேட்கிறேன் . . .

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Speaker Sir, Therefore, I refute any suggestion of any kind of laxity on the part of the Law Department or on the part of the Law Minister. I refute it will all my force and emphasis.

**திரு. க. சுப்பு :** ஃபோர்ஸ் ரொம்ப போர்ஸ்லெஸ்ஸாக இருக்கிறது. 1—6—1979-லிருந்து வருகிறபொழுது ஆர்டினன்ஸ் போட வேண்டிய அவசரம் என்னவென்று தெரியவில்லை. இதற்காக வேறு யாரையும் நான் குறை சொல்லவில்லை, சட்டத் துறையை மட்டும் சொல்கிறேன். அவர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். சரி, கொண்டு வந்து விட்டார்கள். ஆனால் டைரக்டர்-ஜெனரல் நடத்திய ட்ரான்ஸாக்ஷன் பூராவும் செல்லுமா என்ற நிலைமை வந்து விட்டது. ஆகவே இன்றைக்கு. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் எவ்வளவு நேரம் கேட்கிறீர்கள் ?

**திரு. க. சுப்பு :** இந்தச் சட்டம் முக்கியமானது, ஆகவே . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதுமாதிரியே நிறைய முக்கியமான சட்டங்கள் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது அல்லவா ? ஒரு சட்டத்திற்கே இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டால் எப்படி முடிப்பது ? நீங்களே சொல்லுங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமென்று, நான் நேரத்தைக் குறிக்கிறேன்.

**திரு. க. சுப்பு :** நோத்தைக் குறிக்க வேண்டாம், நானே முடித்து விடுகிறேன். நான் சொல்வது, இவ்வளவு அவசரமாகப் போடப்பட்டது முறை அல்ல. இது ஆளுங்கட்சியை மட்டுமல்ல. இந்தச் சபையையே நிர்பந்திக்கும் நிலைமை உருவாக்கப்படுகிறது. ஆறு மாதத்திற்குள் என்ற சட்டத் தேவை இருப்பதால், அசெம்பளி கூட்டப்படும்பொழுது கொண்டு வரப்படுகிறது. கூடுதல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுவே தவறு, கூடுதல் ஐ.ஜி. இல்லை, அதாவது அடிஷனல் ஐ.ஜி. இல்லை. இன்ஸ்பெக்டர்-ஜெனரல் என்று கூடுதலாக வருகிறது. கூடுதல் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் என்று வருவதற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது அந்த வித்தியாசத்தையெல்லாம் எடுத்துச் சொல்லும் வாய்ப்பு ஆளுங்கட்சிக்கு இருக்காது. அதையெல்லாம் சொன்னால் கட்சியிலே இருக்க முடியாது. கடைசியாக, போலீஸ் சட்டத்தில் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்து விட்டீர்கள்.

காவல் துறை ஆணையாளர் வருத்தப்பட்டுச் சொல்லியிருக்கிறார்கள். சட்டப்படி செய்ய வேண்டியவைகளைச் செய்ய முடியவில்லை. மது விலக்கில் செய்யப்பட வேண்டியதைப்பற்றி, காலையிலேகூட உரிமைப் பிரச்சினை வந்தது. கேட்டால் போலீசாரின் அஜிடேஷன் இருந்ததால் அமலாக்க முடிய வில்லை என்று சொல்கிறார்கள். செயல்திறனை செயலற்ற ஃபோர்சுக்குக் கொடுக்கும் நிலைமை இருக்கிறது.

மேலே இருப்பவர்களுக்கும் கொடுத்தால் போதும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். சிப்பாய்க் கலகத்தை ஒட்டிக் கொண்டு வரப்பட்டது அடக்கு முறைச் சட்டம். அதை மாற்ற முயற்சிக்கவில்லை. மேல் மட்டத்தில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது. கீழ் மட்டத்தில் உள்ள போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. சாதாரணமாக அசோசியேஷனுக்காகப் போராடினால் ஆயிரக்கணக்கானவர்கள் சிறையிலே இருக்கிறார்கள். அவர்கள் அசோசியேஷன் வைத்துக்கொள்ளலாம் என்பதை டைரக்டர்-ஜெனரல் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் அதை ஏற்றுக்கொள்ள முடியாத இக்கட்டான நிலை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினரவர்கள் சப்ஜெக்டிற்கு வெளியே போகிறார்கள்.

**திரு. க. சுப்பு :** அப்படியென்றால் கீழே இருப்பவர்கள் அசோசியேஷன் வைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்திருக்கக் கூடாது. முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், பொம்மைச் சங்கம் என்று . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதெல்லாம் வேண்டாம். இதற்கும் பில்லிற்கும் சம்பந்தம் இல்லை. கொடுத்திருக்கின்ற சட்ட முன் வடிவில் மட்டும் பேசுங்கள். இல்லாவிட்டால் அடுத்தவரைக் கூப்பிட்டு விடுவேன்.

**திரு. க. சுப்பு :** போலீஸ் சட்டத்தில் திருத்தத்தை அமலாக்குவது பற்றிய சட்டம் இது. அதிலே போலீஸ் வராதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதிலே போலீஸ் வரும், ஆனால் ஸ்ட்ரைக் எல்லாம் வராது. ஏற்கனவே பேசப்பட்ட பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டியது இல்லை.

**திரு. க. சுப்பு :** ஆகவே, இப்படிப்பட்ட பிரச்னைகளில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. பொம்மைச் சங்கத்தில் சேருங்கள்; நல்ல சங்கம் ஆகிவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் சொன்னால் அதை அப்படியே ஏற்றுக்கொள்வது என்றால் அதற்கு ஏன் அவர்களுக்குச் சங்கம்? நீங்கள் சொல்வதையே கேட்டுக் கொண்டிருக்கலாமே. இதையெல்லாம் நீங்கள் கருதியிருக்க வேண்டும். பழைய சட்டத்தை அமல் படுத்துவோம் என்று சொல்லும் அரசாங்கம் கீழே உள்ள காவலர்களின் நலன்களைப் புறக்கணித்து விட்ட அரசாங்கம், மேலே உள்ள அதிகாரிகளின் பதவி உயர்வை மனதில் கொண்டு அதைச் சட்டமாகக் கொண்டுவர முயற்சிப்பது தேவையற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவுசெய்து முடியுங்கள். ஃபுல் ஸ்டாப் வைத்து விட்டீர்களே . . . .

**திரு. க. சுப்பு :** தேவையற்றது என்று சொன்னேனே. ஒரே ஒரு செண்டன்ஸோடு முடித்துவிடுகிறேன். தேவையற்ற சட்டம் என்ற காரணத்தினாலேதான் இந்தச் சட்ட விவாதத்தின்பொழுது இங்கே அமர்வதும் தேவையற்றது என்று முதலமைச்சர் வரவில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது சரியல்ல; அதை நிராகரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் முடிக்கிறபொழுது அவர்களுக்கே உரித்தான, வழக்கமான பாணியில் ஒரு தவறான உள்நோக்கத்தைக் கற்பிக்கின்ற முறையில் பதிவேடுகளிலே அது ஏறுகிற மாதிரி ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு அமர்ந்திருக்கிறார். இந்தச் சட்டம் தேவையில்லையென்று கருதுகிற காரணத்தால்தான் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அவைக்கு வரவில்லையென்று சொல்லியிருக்கிறார். அந்த வாதம் அவைக் குறிப்பிலே இடம் பெற வேண்டிய வாதமா, அது உள்நோக்கம் கற்பிக்கிற வாதமா என்பதற்கு தாங்கள் தயவுசெய்து தீர்ப்பளிக்க வேண்டும்.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, என் கருத்தை நான் சொன்னேன். அவர் வேறு வேலையாக இருப்பதால் வரவில்லையென்று சொன்னால், அது என்ன வேலை என்று சொன்னால், இது ஆட்டமட்டிக்காக அடிபட்டுப் போகிறது. என்ன வேலை, அவருடைய பெயரிலே வந்த சட்டத்தை யெடுக்கும்போது இது தவிர வேறு என்ன வேலை என்று நீங்கள் சொல்லுங்கள்.

**மாணபுமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். சட்டம் படித்தவர், உலகத்திலேயிருக்கிற எல்லா விவரங்களையும் அறிந்தவர். அவர் சட்ட மன்றத்திலே அமைச்சர்கள், அல்லது முதலமைச்சர் அவருடைய சார்பிலே யார் வேண்டுமானாலும் சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வரலாம், பேசலாம். நிறைவேற்றலாம் என்று இருக்கிறபொழுது அதை மீறுகிற முறையில் மரபை மீறுகிற முறையில், பொருளற்ற, தேவையற்ற வார்த்தைகளைப் பயன் படுத்தியிருக்கிறார்.

**திரு. க. சுப்பு:** அசெம்பளி நடந்து கொண்டிருக்கும்போது, முதலமைச்சர் அவருடைய பெயரிலே பில் வரும்போது இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புவது முறையற்றதா? அல்லது அவர் இருக்கமாட்டார் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லா நேரத்திலேயும் எல்லா அமைச்சர்களும் இங்கே இருந்துதான் ஆக வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. எந்த அமைச்சரும் முன்மொழியலாம், சட்ட அமைச்சரும் முன் மொழியலாம். நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொன்னீர்கள், அதோடு விடுங்கள், அமருங்கள்.

* **திரு. நா. சுந்தரராஜ்:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் மீது என்னுடைய கட்சியினுடைய கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். 1—6—1979 ஆம் தேதி அன்று நியமனம் செய்யப் பட்ட டைரக்டர் ஜெனரல் பதவியையும் கூடுதல் ஐ.ஜி. க்கள் என்று சொல்லக் கூடிய புதிதாக நியமனம் செய்யப்பட்ட 3 ஐ.ஜி. க்கள் பதவிக்கான அவசரச் சட்டம் 12—10—1979 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே நமக்கு மிக முக்கியமாக உள்ள பிரச்னைகள் எல்லாம் அதிலே ஒரு இடத்தில் கூறப்படுகிறது. இதற்கான செலவினங்கள் எல்லாம் எவ்வளவு துல்லியமாக ஆகும் என்பதைச் சரியாகக் கணக்கிட முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு அரசாங்கம் ஒரு துறையிலே எவ்வளவு செலவாகும் என்பதைத் துல்லிய மாகக் கணக்கிட முடியவில்லையென்று சொல்வதே வேதனைக்குரிய காரியம். அது வெட்கக் கேடான காரியம் என்று சொல்வதை விட வேறு வார்த்தையை உபயோகிக்க முடியாது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

காரணம், ஒரு அரசாங்கம் 3 புதிய பதவிகளை இன்றையதினம் தேவையில்லாமல் ஏற்படுத்தியிருக்கிறது. தேவையில்லாமல் என்று சொல்வதைவிட, கூடுதலாக இன்றைக்கு டைரக்டர் ஜெனரல் பதவியையும், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, எந்த மாநிலத்திலும் இந்த மாதிரி இல்லாத நிலைமையிலே, தமிழகத்திலே மட்டும்தான் ஒரு டைரக்டர் ஜெனரல், மூன்று ஐ.ஜிக்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்ன சாதிக்கப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. காரணம் ஒரே ஒரு ஐ.ஜி. இந்த நாட்டிலே, தமிழகத்திலே, சுதந்திரம் பெற்ற காலத்திலே என்ன நிலைமையிலேயிருந்ததோ அதே நிலைமையிலேதான் இருந்து கொண்டிருக்கிறார். அதே சட்டங்கள்தான், அதே மக்கள்தான், அதே குற்ற எண்ணிக்கைதான். எண்ணிக்கையிலே வேறுபடுகிறதா, எண்ணிக்கையிலே அதிகம் ஆகியிருக்கிறதா என்று பார்ப்போமானால், அதுவும் இல்லை. வேண்டுமானால், மதுவிலக்கு சட்டத்தை, திடீரென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டு, ஒரு லட்சம் பேரைச் சிறையிலே அடைத்துவிட்டு, திடீரென்று முதலமைச்சர் மேடையிலே அறிவித்துவிட்டு அவர்களையெல்லாம் விடுதலை செய்கிறேன் என்று சொல்வதைத் தவிர, வேறு எந்தவிதமான பாதிப்பும் இந்த நாட்டு மக்களிடத்திலே வந்துவிடவில்லை. நான் இன்று சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் இங்கே, தேவையில்லாமல், முதலமைச்சர் திடீர் திடீரென்று அறிவிப்பதெல்லாம் அவசரச் சட்டங்களாக வெளி வருவது இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சட்ட மன்றத்திற்கும் மரியாதை இல்லை, நாட்டு மக்களுக்கும் மரியாதை இல்லை என்று ஆகிறது. ஆகவே, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இன்றைய தினம் மத்திய அரசாங்கம் ஒரு புதிய விதிமுறையை உருவாக்கியிருக்கிறது. அன்ப்ராடக்டிவ் ஸ்கீம்ஸுக்கெல்லாம் தேவையில்லாமல் பணம் செலவழிக்க வேண்டாமென்று சொல்லியிருக்கிறது. ஐ.ஜி.க்களுக்குச் சம்பளம் கொடுப்பதும், அவர்கள் டி.ஏ. வாங்குவதும்தான் முக்கியமாக இருக்குமே தவிர, அவர்கள் நிர்வாகத்திற்குத் தேவையான காரியங்களைச் செய்யப் போகிறார்களா என்பதைக் காலம்தான் பதில் சொல்லும். கடந்த காலத்திலே ஒரு ப்ரஹிபிஷன் எஸ்.பி. யாக இருக்கக்கூடியவருக்கு ஒரு கார் இருந்தது. அந்தக் காரை இன்றையதினம் எடுத்துவிட்டு, அந்தக் கார் இன்றையதினம் ஐ.ஜி.க்குப் போய்விட்டு, எஸ்.பி. அவர்கள் இன்றையதினம் சென்னை நகரத்திலே ஜீப்பிலே செல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், அரசாங்கத்திலே அதிகாரிகள் மத்தியிலே செலவு அதிகமாகிக்கொண்டு போகிறதே தவிர, சாதாரண கீழ்மட்டத்திலே இருக்கக் கூடிய கான்ஸ்டபிள் மத்தியிலே இருக்கக்கூடிய அந்தப் பணியாளர்களுக்கு அந்தச் சேவை ஒழுங்காகச் செய்தோமேயானால், அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய வசதியைச் செய்திருக்குமேயானால், அந்தச் செலவுகள் மூலமாக, அவர்களுக்குக் கொடுக்கின்ற வசதிகள் மூலமாக நல்ல நேர்மையான

(முற்பகல் 11.20)

முறையிலே அவர்கள் பணியாற்ற முடியும். இன்றையதினம் சட்டம், ஒழுங்குக்காகவும், குற்றத்திற்காகவும் மூன்று ஐ.ஜி.க்களைப் போட்டிருப்பதால் குற்றங்கள் குறைந்திருக்கிறதா? குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா அல்லது ஸ்ட்ரைக்கைத் தடுக்க முடிந்ததா, நிறுத்த முடிந்ததா? பேச்சு வார்த்தைகள் மூலமாகத் தீர்க்க முடிந்ததா? இன்றையதினம் கூட ஆந்திரா போலீசார் சுற்றுலா வருகிறார்கள், கர்நாடக போலீசார் சுற்றுலா வருகிறார்கள். சி.ஆர்.பி.க்காரர்கள் சுற்றுலா வருகிறார்கள். எல்லாப் போலீசாரும் தமிழகத்திலே சுற்றுலா வரக்கூடிய, பவனி வரக்கூடிய நிலைமை இருக்கிறது என்று சொன்னால் இந்த ஐ.ஜி., டைரக்டர் ஜெனரல் ஆகியவர்கள் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் துல்லியமாக விளக்கியாக வேண்டும். காரணம் அதன் மூலமாகத்தான் இன்றையதினம் இருக்கக்கூடிய சூழ்நிலையை நாம் புரிந்துகொள்ள முடியும். ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் இந்தப் பதவிகள் தேவையானவை தானா? அவசரச் சட்டத்திலே கொண்டு வந்துவிட்டாலும் கூட நீங்கள் ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்டிவ் கொடுத்தாலும் கூட பழைய நிலைமையிலே மாற்றி யாராவது திறமையானவர்களை மீண்டும் நிர்வாகம் செய்ய ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னைப் போன்றவர்கள் கூட எந்தப் பிரச்சனையை எந்த ஐ.ஜி.யிடம் கேட்பது என்று கேட்டால் கன்ட்ரோல் ரூமுக்கே தெரியாத அளவிற்கு இருக்கிறார்கள். இன்றையதினம் அந்த அளவிற்கு கன்ட்ரோல் ரூமிலே இருக்கிறார்கள். நான் ஒருவரிடம் கன்ட்ரோல் ரூமிலே கேட்டேன், இந்தக் குறிப்பிட்ட பிரச்சனையை எந்த ஐ.ஜியிடம் கேட்க வேண்டுமென்று. எங்களுக்கு எதுவும் தெரியாது சார் என்று அவர்கள் சொல்லக்கூடிய நிலைமையிலே தான் இருக்கிறார்களே தவிர, காவல் துறையிலே இருப்பவர்கள் கூட எந்த ஐ.ஜி.க்கு எந்த இலாகா என்று தெரியாத நிலைமைக்கு இருக்கிறார்கள். ஆக்வே, அதெல்லாம் தேவையில்லை.

வேண்டுமானால் உங்களுக்கு பணம் அதிகமாக 20 கோடி, 30 கோடி இருக்கிறது என்று சொன்னால் நீங்கள் கீழே இருக்கக்கூடிய பணியாளர்களுக்கு செலவிடுங்கள், குடியிருப்பு வசதிகள், செய்து கொடுங்கள்; அலவன்ஸ் கொடுங்கள். மேலும் என்ன வசதிகள் செய்து கொடுக்கலாம் என்பதற்கு வழிவகை செய்யுங்கள்.





இந்தப் பதவிகள் அவசியமில்லை. இந்தப் பதவிகள் அவசியமென்று விரும்பினால் ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள். அதுவரையிலே இதை ரத்து செய்து விட்டு, அல்லது ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப இந்த மாமன்றம் முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

**திரு. சி. கோவிந்தராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக . . .

**திரு. துரை முருகன்:** சார், இந்தத் தீர்மானத்தை ஆர்டினன்ஸை எதிர்த்து அவை நிராகரிக்கிற தீர்மானத்தை நாலும் நண்பர் சுப்பு, கிருஷ்ணன், சுந்தரராஜ் போன்றவர்களும் கொடுத்து இருக்கிறோம். நண்பர் சுப்பு அவர்கள் எழுந்து முன்மொழிந்து பேசி இருக்கிறார். அடுத்து திரு. சுந்தரராஜ் பேசி முடித்து இருக்கிறார். தீர்மானம் கொடுத்த வரிசையில் இதை அடுத்து . . .

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** எனக்குப் புரிகிறது. என்ன சொல்ல வருகிறீர்கள் என்று புரிகிறது. நீங்களும் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். திரு. கிருஷ்ணனும் கொடுத்திருக்கிறார். இருந்தாலும் அவர் சார்பிலே திரு. கோவிந்தராசன் அந்தக் கட்சியின் சார்பிலே பேசுகிறார். நிறைவேற்றப் பட வேண்டிய சட்டங்கள் அதிகமாக இருப்பதால், அதிகமானவர்கள் பேசினால் நேரம் அதிகம் ஆகுமென்ற காரணத்தால் கட்சிக்கு ஒருவரைப் பேச அழைக்கிறேன்.

**திரு. துரை முருகன்:** தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். இந்தத் தீர்மானத்திலே எல்லோரும் பேசலாம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. இல்லை. இது பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் எடுக்கப்பட்ட முடிவு. ஒரு கட்சிக்கு ஒருவர் பேசுவது என்பது ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவு. நீங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும். தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. துரை முருகன்:** இந்தத் தீர்மானத்திலே நான் பேச வேண்டும். தீர்மானம் கொடுத்த எல்லோரும் பேசலாம். அதற்குப் பிறகு அதை வாக்கெடுப்புக்கு விடவேண்டுமென்று கேட்கலாம். வாக்கெடுப்பில் எங்கள் திருத்தத்தை அவை ஒருவேளை ஏற்றுக்கொள்ளலாம். ஆகவே, அதற்குப் பிறகுதான் அமைச்சர் அவர்கள் இந்த சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டுமென்று கோரலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் எல்லோருக்கும் தெரிந்த பிரச்சனையில் விவாதம் தேவையில்லை. நீங்கள் கொடுத்த தீர்மானத்தையும், அமைச்சர் கொடுத்த தீர்மானத்தையும் வாக்கெடுப்புக்கு விட்டு அதற்குப் பின்னர்தான் நிறைவேற்றப்படும்.

**திரு. துரை முருகன் :** நான் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். என் தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடுங்கள் என்று கேட்பேன். டிவிஷன் கூடக் கேட்பேன். பேச எனக்கு உரிமை உண்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுடைய தீர்மானத்தை, நீங்கள் வலியுறுத்தினால் அதையும் வாக்கெடுப்பிற்குவிடத்தான் போகிறோம்.

* **திரு. துரை முருகன்:** அரசு கொண்டு வந்துள்ள ஆர்டினன்சே தவறு என்று நாங்கள் திருத்தம் கொடுத்து இருக்கிறோம். எங்கள் கட்சி சார்பாக திரு. சுப்பு அவர்கள் பேசியிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக திரு. கோவிந்தராசன் அவர்கள் பேசலாம். ஆனால், திரு. கோவிந்த ராசன் அவர்கள் பேசியதற்குப் பிறகு, திருத்தம் கொடுத்துள்ள எனக்கும் பேசுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்தத் திருத்தம் ஓட்டெடுப்புக்கு விடவேண்டும் என்றும் கேட்பேன். டிவிஷன் வேண்டும் என்றும் கேட்பேன். எங்கள் தீர்மானம் சபையால் ஏற்கப்படவில்லை என்ற பிறகுதான், அமைச்சர் அவர்கள் சட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற தீர்மானம் முன்மொழிய வேண்டும். ஆகவே, நாங்கள் கொடுத்துள்ள திருத்தத் தீர்மானத்தையும் அமைச்சர் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிற தீர்மானத்தையும் ஒன்றாக இணைத்து 'எடுத்துக் கொள்வதற்கு நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்ட முன்வடிவு எப்படி நிறைவேற்றவேண்டுமோ அந்த முறைப்படிதான் இங்கே காரியங்கள் நடை பெற்றுக்கொண்டு வருகின்றன. திரு. துரை முருகன், பேசுவதற்கு வாய்ப்பு வேண்டும் என்று கேட்டார்கள். திரு. கோவிந்தராசன் பேசி முடித்த பிறகு, திரு. துரைமுருகன் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும். இப்போது திரு. கோவிந்தராசன் அவர்கள் பேசவேண்டும்.

**திரு. துரை முருகன் :** எங்கள் தீர்மானம் முதலில் வாக்கெடுப்புக்கு விட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். திருத்தத் தீர்மானம் நானும் கொடுத்திருப்பதால், எனக்கும் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒவ்வொருவரும் கொடுத் துள்ள திருத்தத்தின் மீது விவாதம் நடத்தி, ஓட்டெடுப்பு விட்ட பிறகு சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்வது தவறு. ஒட்டுமொத்தமாக விவாதத்தை நடத்திவிட்டு, பின்னர்தான் வாக்கெடுப்பு எடுக்கப்படும்.

**திரு. க. சுப்பு:** சட்ட முன்வடிவு விவாதம் நடக்கிறபோது, ஒரு கட்சிக்கு ஒருவர் என்று சொல்வது சரியல்ல. திரு. துரை முருகன் அவர்கள் பேச விரும்புவதால் அவருக்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை முருகன் பேசு வதற்கு வாய்ப்பளிக்கப்படும் என்று ஏற்கெனவே சொல்லியாகிவிட்டது. சட்ட முன்வடிவு நிறைவேற்றுவதில் நடைமுறை தவறு இருக்கிறது என்று திரு. துரை முருகன் சொன்னதற்குத்தான், அதில் தவறு ஒன்றும் இல்லை, சரி யான முறைப்படிதான் நடத்தப்படுகிறது என்று குறிப்பிட்டேன்.

**திரு. க. சுப்பு :** மசோதாக்களைப் பொறுத்தவரையில், ஒரு கட்சிக்கு ஒருவர்தான் பேசவேண்டும் என்று சொல்வது சரியல்ல. எங்கள் கட்சியி லேயே திரு. சாதிக் பாட்சா அவர்கள், மற்றவர்கள் திருத்தம் கொடுத்து இருக்கிறார்கள். எல்லாத் திருத்தத்தின் மீதும் எல்லோரும் பேச வேண்டும் என்று சொல்வது இல்லை. நான் இந்தத் திருத்தத்தின் மீது பேசியிருக் கிறேன். சில திருத்தங்களின் மீது பேசாமல் இருப்பேன். ஆனால், இதில் நான் பேசாமல் விட்ட சில பிரச்சினைகள் குறித்து திரு. துரை முருகன் பேச வேண்டும் என்று நினைக்கலாம். ஆகவே, மசோதா மீது பேசுவதற்கு ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு இரண்டு நிமிடம், மூன்று நிமிடம் பேசு வதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். மொத்தமாக 'ஷட் டவுன்' செய்யக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ் வொரு உறுப்பினர்தான் பேச வேண்டும் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுக்கப்பட்டு, அந்த வகையில் இங்கே நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட் டிருக்கிறது. ஒரு உறுப்பினர் பேசாமல் விட்டதை இன்னொரு உறுப்பினர் பேசுவார் என்று சொல்லி, வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு வற்புறுத்துவது சரியல்ல.

**திரு. ரா. உமாநாத் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுப்பு அவர்கள் தான் பேசுவதற்கு விட்டுப்போன பாயின்ட்டை மாண்புமிகு துரை முருகன் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை. அதைப்போல, தோழர் கோவிந்தராசன் அவர்களால் பேசுவதற்கு விட்டுப்போன பாயின்ட், விஷயங்கள் இருந்தால் எங்கள் கட்சியில் இருக்கிற இன்னொருவருக்கும் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** நான் சொன்னது, இந்தச் சட்டத்தின் மீது 'டிஸ்அப்ரூவல்' நோட்டீஸ் கொடுத்தவர்கள் எங்கள் கட்சியில் இரண்டு மூன்று பேர் இருப்பதால், அவர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதாகும். அவர்களும், அந்த மாதிரி டிஸ்அப்ரூவல் நோட்டீஸ் கொடுத்திருந்தால், விட்டுப்போன பாயிண்ட்டுகளைப் பேசுவதற்கு வாய்ப்பு கேட்பதைப் பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே விவாதங்கள் எப்படி நடைபெற வேண்டும் என்பதற்கு விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும், சட்டமன்றத்தில் இருக்கின்ற எல்லாக் கட்சித் தலைவர்களையும் கொண்ட அலுவல் ஆய்வுக் குழு சட்டமன்ற நடவடிக்கைகளை நிர்ணயித்து, அதை நடைமுறைப் படுத்துவது என்பது நம்முடைய மரபாகவும், அதுவே வழக்கமாகவும் இருந்து வருகிறது. அந்த அலுவல் ஆய்வு குழுவிலே எல்லாக் கட்சித் தலைவர்களும் இருந்து முடிவு செய்து இருக்கிறார்கள். மாண்புமிகு துரை முருகன் அவர்கள் உள்ளடங்கிய சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் இதிலே இருந்து முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது.

ஆகவே, ஒரு கட்சியைச் சேர்ந்த 10 பேர் இப்படிப்பட்ட எதிர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறோம், 10 பேரும் பேச வேண்டும் என்று கேட்டு, எதிர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்தவர்கள் எல்லோரும் பேசலாம் என்று வந்து விட்டால், 100-க்கு மேற்பட்டவர்கள் எதிர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்து, 100-க்கு மேற்பட்டவர்கள் பேச வேண்டும் என்று நிலைமை ஏற்பட்டால், அது சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், நடைமுறைக்கு ஒவ்வாதது, தேவையற்றது என்று கருதித்தான் எல்லாக் கட்சி தலைவர்களையும் கொண்ட அலுவல் ஆய்வுக்கு குழு முடிவு எடுக்கிற அடிப்படையில், நடவடிக்கைகள் இங்கே நடத்தப்பெற்று வருகின்றன. அதைபோட்டு



தாங்கள் இங்கே கட்சிக்கு ஒருவர் என்று அனுமதித்து வருகிறீர்கள். அவர்கள் கட்சித் தலைவர்கள் சேர்ந்து எடுத்த முடிவை அவர்கள் மீற வேண்டும் என்று விரும்புகிறார்களா என்பதைத்தான் நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

**திரு. க. சுப்பு :** நாங்கள் அதை மீற விரும்பவில்லை. அனுமதிதான் கேட்கிறோம். திருத்தம் கொடுத்த எல்லோரும் பேச வேண்டும் என்று விரும்பவில்லை. நான் பல திருத்தங்கள் கொடுத்து இருந்தாலும், எல்லாவற்றிலும் பேசுகிறேன் என்று வற்புறுத்துவது இல்லை. ஒரு சில சமயங்களில் முக்கியமான சட்டத் திருத்தங்கள் வருகிறபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் அதன் மீது பேசவேண்டும் என்று விரும்புவது வழக்கம். சட்டமன்றத்தில் சட்ட முன்வடிவு மீது பேசலாம், வேறு எப்போது பேசுவது? கட்சிக்கு ஒருவர் என்று சொன்னால், இது ஒரு முக்கியமான திருத்தம் என்பதால், திரு. துரைமுருகன் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்இ கேட்டுக் கொள்கிறேன். இங்கே நாங்கள் உங்களுக்கு என்லைட்டன்மென்ட் செய்வதற்குத்தான் பேசுகிறோம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** எங்களுக்கு என்லைட்டன்மென்ட் செய்வதற்கு பேசுகிறோம் என்று சொல்கிறார்கள். நாங்கள் என்ன இருட்டிலா இருக்கிறோம்.

**திரு. க. சுப்பு:** என்லைட்டன்மென்ட் என்று சொன்னதை அவர் லைட் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. விளக்கம் சொல்வதற்கு என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதத்திற்கு விளக்கம் தருகிற வகையில் என்று சொல்லியிருக்கிறீர்கள். இப்போது திரு. சி. கோவிந்தராஜன் பேசுவார்.

(முற்பகல் 11-30)

***திரு. சி. கோவிந்தராசன்:** துணைத் தலைவரவர்களே, இந்த காவல் சட்டத்தைத் திருத்துவதற்கு கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தேவையற்றது என்று கருதுகிறது. ஏனென்றால் தமிழ் நாடு டிஸ்டிரிக்ட் போலீஸ் ஆக்ட், 1859, மெட்ராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட், 1907 இந்த இரண்டிலும் கொண்டு வந்திருக்கிற திருத்தமானது ஒரு ஐ.ஜி. என்பதற்குப் பதிலாக ஒரு டைரக்டர்-ஜெனரல் பதவியையும் 3 ஐ.ஜி. பதவிகளையும் உருவாக்குவதுதான். இது தேவையில்லை.

இதனால் தமிழ்நாட்டில் போலீஸ் துறையில் இருக்கிற வேலையோ, நடக்கக் கூடிய காரியங்களோ திறம்பட நடக்கும் என்று சொல்ல முடியாது. மாறாக Top heavy administration and over centralisation ஆக இருக்கிறது. இது எந்த மாநிலத்திலும் இல்லாதது, இந்த மாநிலத்தில் ஏன் கொண்டுவர வேண்டும். இது தேவை இல்லை.

இவ்வளவு ஆண்டு காலமாக இந்தத் துறை இருந்தாலும் அந்தக் காலத்திலே பிரிட்டிஷார் காலத்திலே எந்த அளவு இந்தத் துறையை பழக்கி இருக்கிறார்களோ அதே முறையில்தான் இந்தத் துறை அலுவலர்களும், ஆபீசர்களும் போய்க்கொண்டிருக்கிறார்களே தவிர, மக்கள்பால் எப்படிப்பட்ட ஒரு கண்ணோட்டத்தை கடை பிடிக்க வேண்டுமென்ற மனோபாவம் இன்னும் கற்றுக் கொடுக்கப்படவில்லை. ஒரு ஜனநாயக உணர்வு என்பது இந்தத் துறையிலே மேலிருந்து கீழ் வரையில் இல்லை. இந்தப் போக்கைத் திருத்துவதற்காக ஏதாவது சட்டம் கொண்டு வந்தால் பரவாயில்லை. அப்படிச் செய்வதற்குப் பதிலாக டைரக்டராக ஒருவரை போட்டு, மேலும் பல அதிகாரிகளை ஐ.ஜி. யாகப் போட்டு இருப்பது தான் இந்தச் சட்டத்திலே அடங்கியிருக்கிறது. போலீஸ் துறையிலே அடிப்படை மாற்றம் ஏதுவும் இதிலே இல்லை என்று கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த புரமோஷன் அந்தத் துறையின் கீழ்மட்டத்தில் இருக்கிறவர்களுக்கு இல்லை. ஒருசில அதிகாரிகளுக்கு புரமோஷன் கிடைக்கிறது. அவ்வளவுதான். கீழ்மட்டத்தில் இருக்கிற சாதாரண கான்ஸ்டபிள், சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் நீண்ட காலமாக ஒரே பணியை செய்து வந்தாலும் கூட, அவர்களுக்கு புரமோஷன் கிடைக்க எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதனால் பலர் இன்றைக்கு அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் எவ்வித அக்கறையும் இன்றி, ஏனோ தானோ என்று காரியங்கள் செய்யக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள்.

அட்மினிஸ்ட்ரேஷன் எஃபிசியன்சிக்காக இந்த திருத்தச் சட்டம் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த எஃபிசியன்சியை எப்படி நீங்கள் கொண்டுவரப் போகிறீர்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தற்போதைய நடைமுறையில் எப்படி இருக்கிறது என்பதற்கு இரண்டொரு சம்பவங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிதம்பரம் தாலுகாவில் கிள்ளைக்குப் பக்கத்தில் ஒருவர் 21—9—1979 அன்று காலையிலே வீட்டைவிட்டு கிளம்பினார். அவருடைய பெயர் தங்கவேலு. 23-ந்தேதி காலை வரை அவரை காணவில்லை. பின்னர் பிச்சவரத்துக்கருகில் உள்ள உப்பநாற்றங்கரையில் அவர் பிணமாக மிதந்தார். இது எப்படி நேர்ந்திருக்கக்கூடும் என்று காவல் துறையினரிடம் கேட்கப்பட்டது. பிரேதம் காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது. இதுவரையில் யார் இதைச் செய்தார், எப்படி இது செய்யப்பட்டது என்பது சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. அதற்கு நேர் மாறாக அங்குள்ள சப்-இன்ஸ்பெக்டர், அவர் கிள்ளையில் இருப்பவர், இறந்தவன் இறந்துவிட்டான், ஏதாவது பணம் வேண்டு மானால் வாங்கித் தருகிறேன், என் இதை பெரிது படுத்துகிறார்கள் என்று சொல்லக்கூடிய நிலையில்தான் இருக்கிறாரே தவிர டிடெக்ஷன் எந்த அளவுக்கு இன்வெஸ்டிகேஷன் பண்ணியிருக்கிறார்கள் என்று பார்த்தால் அதுபற்றிய விஷயம் ஒன்றுமே இல்லை. யார் யார் இதிலே சம்பந்தப்பட்டிருக்கக்கூடும் என்று பெயர்களைக் குறிப்பிட்டு கிள்ளை போலீசாரிடம் எழுத்து மூலமாக புகார் கொடுக்கப்பட்டும், இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். கடலூர் தாலுக்காவிலுள்ள தியாகவல்லியைச் சேர்ந்த ஆறுமுகம் படையாச்சி. அவர் போலீசாரால் கைது செய்யப்பட்டு, 10—10—1979 அன்று ஜுடிஷியல் சப் மாஜிஸ்ட்ரேட்டால் ரிமான்ட் செய்யப்பட்டார். 11-ந் தேதி ஜாமீன் கேட்டார்கள். 12-ந் தேதி ஜாமீன் உத்தரவு கொடுத்தார். கைது செய்யப் பட்டவரை சிறைச் சாலையிலிருந்து மீட்பதற்காக சென்று பார்த்தால் அங்கே ஆளைக் காணவில்லை. இரண்டு நாட்கள் கழித்து, 13-ந் தேதி, கடலூருக்குப் பக்கத்தில் புதுப்பாளையம் பகுதியில் சுடுகாட்டிலிருந்து அவருடைய உடல் தோண்டி எடுக்கப்படுகிறது. இதை யார் செய்தார்? போலீஸ்காரர்கள் செய் தார்களா அல்லது அவருடைய எதிரிகள் செய்தார்களா என்று துப்பு துலக்க போலீசார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களுக்கு சொன்னது உங்களுக்கும் பொருந்தும். பில்லின் ஸ்கோப்புக்கு உட்பட்டு பேசினால் நல்லது.

**திரு. சி. கோவிந்தராசன்:** ஆகவே எஃபிஷியன்சி என்று வரும்போது இப்படிப்பட்ட சம்பவங்களைப் பார்த்தால் எஃபிஷியன்சி எங்கே இருக்கிறது? அதற்கான முறைகளிலே ஏதாவது திருத்தங்கள் கொண்டு வந்தால், எஃபிஷி

[திரு. சி. கோவிந்தராசன்] [1979 நவம்பர் 7

யன்மை அதிகரிக்கும் முறையிலே திருத்தங்கள் கொண்டு வந்தால், பயன் உள்ளதாக இருக்கும். அதில்லாமல் இருக்கக்கூடிய அதிகாரங்களை மேலும் அதிகமாக்கி, மேல் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி திருத்தங்கள் கொண்டு வருவதினால், கீழ் மட்டத்திலே இருக்கிற காவலர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டு அவர்கள் வேலைகளில் அசிரத்தையாக இருக்கிறார்கள். எந்தக் காவலர்கள் மக்களை பாதுகாக்க வேண்டுமோ அவர்கள் தங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்வதில்லை. அதைத் தடுக்க ஏதாவது திருத்தச் சட்டம் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். எனவே தான் ஒன்றுக்கும் பயனில்லாத அரசுக்கு பணச் செலவை அதிகரிக்கும் இந்த திருத்தச் சட்டத்தை, கீழ் மட்டத்தில் உள்ள அலுவலர்களுக்கு அதிருப்தியை தரக்கூடிய இந்தச் சட்டத்தை அரசு வாபஸ் வாங்க வேண்டியது கடமை என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. அம்பிகாபதி அவர்கள் அடுத்து பேசட்டும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** துணைத் தலைவர் அவர்களே, ஸ்கோப்பிலேயே பேச வேண்டும் என்று சொன்னீர்கள். ஸ்கோப் என்பதற்கு என்ன வரையறை இருக்கிறது என்று நிர்ணயிக்கப்பட வேண்டும். எப்பொழுதுமே எந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசினாலும் ரெலவன்ட் ஆர் இர்-ரெலவன்ட் என்று கவனிக்க வேண்டுமே தவிர ஸ்கோப் என்று சொன்னால் எப்படி நடைமுறையில் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதிலே இப்போது விவாதம் தேவையில்லை. ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட் என்று போட்டிருக்கிறார்கள். அதற்கு உட்பட்டுப் பேசலாமே தவிர ஒவ்வொரு டிஸ்டிரிக்ட் வாரியாக விளக்கிக் கொண்டே போகக் கூடாது. போலீஸ் நிர்வாகம் சரியாக இல்லை என்று எடுத்துச் சொல்லலாம். ஆனால் ஒவ்வொரு டிஸ்டிரிக்டிலும் அந்த நிகழ்ச்சி நடந்தது, இந்த நிகழ்ச்சி நடந்தது என்று சொல்லிக் கொண்டே போனால் எப்படி விவாதம் முடிவுறும்? அதனால் சுருக்கமாகப் பேசுங்கள், டீடெயிலாகப் பேச வேண்டாம் என்று சொல்கிறேன்

**திரு. எம். ஏ. லத்தீப் :** நேரம் இல்லை என்று வேண்டுமானால் சொல்லுங்கள், அதற்காக (மணியடிக்கப்பட்டது) நீங்கள் தீர்ப்பைச் சொன்னால் நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமா ?



1979 நவம்பர் 7]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் உங்கள் இஷ்டம், அவரைப் பேச விடுங்கள். திரு. அம்பிகாபதி அவர்கள் பேச போகிறீர்களா அல்லது வேறு உறுப்பினரை பேச அழைக்கலாமா ?

**திரு. எம். ஏ. லத்தீப் :** ரெலவண்ட்டா ரெலவண்ட் இல்லையா என்றுதான் பார்க்க வேண்டுமே தவிர ஸ்கோப் என்று வைத்துவிட்டால் யாரால் விளக்கமாகப் பேச முடியுமா ? இது எங்கள் உரிமையையே பாதிக்கக்கூடிய விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவுசெய்து திரு. லத்தீப் அவர்கள் உட்கார வேண்டும். கன்னியாகுமரி டிஸ்டிரிக்டில் நடந்திருக்கக் கூடிய நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு ரெலவண்ட்டாகப் பேசிக் கொண்டே போகலாம். போலீஸ் நிர்வாகம் சரியில்லை என்பதுபற்றி சுருக்கமாக சப்ஜெக்ட்டுக்குள் வரும்படி பேசுங்கள் என்றுதான் சொல்கிறேன். ரெலவண்ட் என்று பார்த்தால் நிறைய விஷயங்களை ரெலவண்டாக கொண்டு வந்து மணிக்கணக்கில் பேசிக்கொண்டே போகலாம். நேரம் கிடையாது. அதனால் சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நேரம் இல்லை என்று சொல்லுங்கள், நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஸ்கோப் என்றுமட்டும் வரையறை வைக்காதீர்கள். எங்கள் உரிமை பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச அழைத்து அதன்பிறகு உறுப்பினர் ஒருவர் விளக்கங்களை கேட்க விரும்புகிறார், அவர் தலையிடும்போது மதிக்க வேண்டியது என்னுடைய கடமை. ஆனால் பேசுகிறீர்களா இல்லை இன்னொருவரை அழைக்கட்டுமா என்று கேட்டது என்ன நியாயம் ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவுசெய்து தவறாக நினைக்க வேண்டாம். அவருடைய சந்தேகத்தைத் தீர்த்த பிறகும் நீங்கள் பேசாமல் நின்று கொண்டிருந்தீர்கள், ஒருவேளை பேச விருப்பம் இல்லையோ என்று நினைத்துச் சொன்னேன். இப்போது பேச விரும்புவதாகத் தெரிகிறது. பேசுங்கள்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல்துறை திருத்தச் சட்டம் தேவையில்லை என்பது எங்களுடைய கருத்து. காரணம், இந்த போலீஸ் சட்டத்தை திருத்துவதைவிட ஒரேயடியாக கொளுத்திவிட்டு, புதிதாக வேறு ச——ங்கள் கொண்டு வரலாம் என்று

நினைக்கிறேன். வெள்ளைக்காரன் ஆட்சி செய்த காலத்தில் 1888-ல் இந்த சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்த காலத்திலிருந்து பல்வேறு திருத்தச் சட்டங்கள் தொடர்ந்து கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டம் அடிப்படையிலேயே மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை. இந்தச் சட்டங்களை கொண்டு வந்து நிர்வாகத்தை திருத்துவதை, புதிய பதவிகளை விரிவு படுத்திக்கொண்டே போவது என்பது எல்லாம் சரியில்லாத ஒரு விஷயம்.

ஏனென்றால் வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த சட்டங்கள் எல்லாம், அவன் காலத்திலே பஸ் ஸ்டேண்டிலே நின்று கொண்டிருந்தால் கூட சந்தேகக் கேஸ் என்று பிடித்துக் கொண்டு போய்விடுவான். இது இன்றைக்கும் இருக்கிறது. டார்ஜெட் ஃபிக்ஸ் பண்ணுகிறார்கள், ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் இவ்வளவு கேஸ்கள் பிடிக்க வேண்டும் என்று. அதனால், குறளகத்தின் வாசலிலே நின்றுகொண்டிருந்த டெபுடி செக்ரடரி மனைவியைகூட கொண்டு போகிற போக்கு இருக்கிறது. இந்தச் சட்டங்கள் எல்லாம் சாதாரண ஏழை எளியவர்கள், எவனாவது கந்தல் துணி உடுத்திக்கொண்டு பஸ் ஸ்டேண்ட் பக்கத்தில் நின்று கொண்டிருந்தால், அவன் பேரில் சந்தேகப்பட்டு கொண்டு போகக்கூடிய இந்தச் சட்டம் தேவைதானா? சாதாரண ஏழையை கை எடுத்து கும்பிடுகிறோம் ஓட்டு வாங்க வேண்டும் என்று. ஆனால் அப்படி ஓட்டு போட்டவனை போலீஸ்காரர்கள், மக்களை காப்பாற்ற வேண்டிய போலீஸ்காரர்கள் அடிப்பது நியாயம்தானா என்று கேட்கிறேன். இப்படிப்பட்ட சட்டங்கள் இருப்பதற்கே நியாயம் இல்லை. அதற்குத் திருத்தங்கள் வேறு, என்ன திருத்தம்? ஒரு ஐ.ஜி.-யை மூன்றாக்குவது, 4-வது பதவியாக டைரக்டர் ஜெனரல் கொண்டு வருவது, இதெல்லாம் தேவையான சட்டங்களா? மக்கள் பாதிக்கப்படுகிற இந்த சட்டங்களை உடைத்து எறிவதற்குப் பதிலாக அவைகளை திருத்துவது சரியல்ல என்பது என்னுடைய கருத்து.

(முற்பகல் 11-40)

ஹைக்கோர்ட்டில் வாதங்கள் நடைபெறும்போதுகூட பல்வேறு மாநிலங்களில் உள்ள மர்டர் கேஸ்களைக்கூட உதாரணமாகக் காட்டி எடுத்துச் சொல்கிறார்கள். ஆகவே, நான் இன்று பல்வேறு விஷயங்களை இந்த இடத்தில் எடுத்துச் சொல்வது மிகவும் அவசியம். மேலே உள்ள அதிகாரிகளுக்கு உள்ள ஊதியம், கீழே உள்ள கான்ஸ்டபிள்ஸ், ஹெட்-கான்ஸ்டபிள்ஸ் இவர்களது சம்பளத்தோடு—இந்தச் சட்டத் திருத்தத்தில் போலீஸ்காரர்கள் சங்கம்



வைத்துக்கொள்ளலாம் என்று திருத்தம் கொண்டு—வருவதற்கு நேரமில்லை. சாதாரணமாக உள்ள காவல் துறையைச் சார்ந்த காவலர்களுக்கு உடைக்கான அலவன்ஸ் அதிகமாக வழங்குவது கிடையாது. இப்படிப்பட்டதொரு நிலையில் மேலே உள்ள பணிகளைக் கவனித்துக் கொள்வதற்காக இப்படிப்பட்ட அவசரச் சட்டங்கள் கொண்டுவருவது என்பது; காவல் துறை என்று சொன்னால், இந்த நாட்டில் மனிதர்கள் சுதந்திர மனிதர்களாக நடமாடக்கூடிய விதத்தில் ஒருமுறைப்படுத்தக்கூடிய, வழி காட்டக் கூடிய கருவியாக இல்லாமல் மக்களை ஒடுக்கக்கூடிய ஒரு கருவியாக, வேலைநிறுத்தத்தை தடை செய்வது, தொழிலாளர்களைப் பிடித்து உள்ளே போடுவது இவற்றிற்கான ஒரு கருவியாகவே காவல் துறை இன்னும் பயன்படுத்தப்பட்டு வருவது என்ற மிகவும் மோசமான ஒரு நிலைமை இன்றைக்கும் தமிழ்நாட்டில் இருக்கிறது. எனவே, திருத்தங்கள் என்கிறபோது மிகவும் மேலே உள்ள அதிகாரிகளுக்கு அவர்களின் ஊதியத்தை உயர்த்துகிறார்கள். ஆனால் ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு இன்று உடைக்காக ரூபாய் 60 தான் (இரண்டு ஆண்டுக்கு) கொடுக்கிறார்கள் என்பதால் அவர்களில் பல பேர்கள் லஞ்சம் வாங்க வேண்டியிருக்கிறது. ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ரூபாய் 60 உடைக்காக என்று கொடுத்தால் அது போதுமா? இந்த அலவன்ஸ் எப்படி பற்றும்? இதற்காக திருத்தம் கொண்டு வருவதற்கான முறையில் நடவடிக்கைகள் இல்லை. இன்றைக்கு அவசரமாக இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது சரியல்ல. மதுவிலக்குச் சட்டத்திற்கு, கள் குடிப்பதற்கு விதிவிலக்கு என்று ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்தால் வரவேற்றிருக்கலாம். ஆனால் வேலை நிறுத்தங்களைத் தடை செய்ய அவசரச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களுக்கு முழு ஊதியம் கிடைக்க அவசரச் சட்டம் போடக்கூடாதா? கதவடைப்பு செய்யும்போது முதலாளிகளை உள்ளே போட அவசரச் சட்டம் கொண்டுவர முடியாது. மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்த ஒரு அவசரச் சட்டம் கொண்டுவரக்கூடிய நிலை கிடையாது. ஆனால் அதே நேரத்தில் பதவிகளைப் பங்கு போட்டுக் கொள்ள ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்திருப்பது சரியல்ல. இத்திருத்தம் தேவை இல்லை. இந்தச் சட்ட முன்வடிவை ஒரு செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. ரா. மார்க்கபந்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தமானது டைரக்டர்-ஜெனரல் என்பவரை **Superior Officer** காட்டிகரிக்குள் கொண்டு வரவேண்டும் என்ற ஒரு கருத்தோடு கூட அதன் பைனான்ஷியல் இம்ப்ளிகேஷன்ஸ் பற்றியும் இதிலே கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே போலிஸ் நிர்வாகத்தில் ஒரு சரியான சீர்திருத்தம்,

[திரு. ரா. மார்க்கபந்து] [1979 நவம்பர் 7

அந்த நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு இது சாத்தியக் கூறாக இருக்கும் என்ற எண்ணத்தில் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுமானால், அந்த நோக்கத்தை வரவேற்கிறோம். ஆனால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து ஒரு ஐ.ஜி. இருக்கிற இடத்தில் மூன்று ஐ.ஜி.க்களைக் கொண்டு வந்து மாற்றி அந்த ஐ.ஜி.க்களின் தலைவராக டைரக்டர்-ஜெனரல் என்பவரைப் போட்டு இருக்கிறார்கள். அதனால் போலீஸ் நிர்வாகத்தில் இருக்கிற குறைபாடுகள் நீங்காத நிலையில், ஏற்கெனவே என்ன குறைபாடுகள் இங்கு இருந்தனவோ அந்தக் குறைபாடுகள் மீண்டும் அதே நிலையில் இருப்பதற்கு இதுபோன்ற பதவி உயர்வுகள் தேவையா என்பது நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பாக உள்ள கேள்வி. குறிப்பாக இந்த நிர்வாகம் திருப்திகரமான நிலையில் இல்லை, நிர்வாகத்திலே வளர்ச்சி இல்லை என்ற ஒரே ஒரு காரணத்தை சட்ட அமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டு சொல்கிறேன். சென்ற முறை நான் ஒரு கருத்தைச் சொன்னேன். திரு. ஸ்ட்ரேசி அவர்களிடத்தில் ஏறத்தாழ எட்டு மாதங்களுக்கு முன்பாக திருவண்ணாமலையில் இருக்கிற ஒரு ஜம்புகுமார், பான் புரோக்கர் பற்றி, அவர்களிடத்தில் திருவண்ணாமலைப் பகுதியில் இருப்பவர்கள் ஏறக்குறைய லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை அடகு வைத்தார்கள். அவர் அதை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். எட்டு மாதங்களுக்கு முன்னால் அவர்களிடம் ஒரு புகார் மனு கொடுத்து—கம்ப்ளெயிண்ட் கொடுத்து அதை விசாரிக்க வேண்டுமென்று சொன்னபோது உடனடியாக திரு. ஸ்ட்ரேசி அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்திலிருக்கிற எஸ். பி.யோடு தொடர்பு கொண்டு எனக்கு பத்து நாட்களுக்குள்ளாக ஒரு ரிப்போர்ட் தேவை என்று அனுப்பினார்கள். 8 மாதங்களுக்கு முன்னால் அது. இதுவரையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. சட்டமன்றக் கூட்டத்தின்போதும் சொன்னேன், ஜம்புகுமார் என்பவர் இந்தச் செயலில் ஈடுபட்டிருக்கிறார் என்று நான் சொன்னேன். பின்னால் அதன் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. சிட் பண்ட் ஆக்டில் இருப்பது போல், பான் புரோக்கர்ஸ் ஆக்டிலும் சேர்க்க வேண்டும் என்று சொன்னேன். அப்போது நமது சட்ட அமைச்சர் அவர்கள் . . . .

[The arm of law is long enough that it will not leave anything undetected.]

என்கிற ஒரு உத்தரவாதத்தை தந்தார்கள். (undetected) என்றால் இப்போது என்ன அர்த்தம் என்றே தெரியவில்லை. இப்போது எட்டு மாதங்கள் ஆகியும், வேலூரில் எஸ். பி.யைப் பார்த்தும், திருவண்ணாமலையிலுள்ள டி.எஸ்.பி.யை பல முறை சந்தித்தும், இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு பரிதாபமான, மந்தமான நி



1979 நவம்பர் 7] [திரு. ரா. மார்க்கபந்து]

நிலை வளர்ந்து கொண்டு வருகின்ற இந்த நேரத்தில் உயர் பதவிகளை மட்டும் அதிகப்படுத்திக் கொண்டு வருவது சரியாக இருக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். சில நேரங்களில் வலிவற்றவர்கள்—சமுதாயத்தில், கோர்ட்டுகளுக்குச் சென்று, தங்கள் நிலத்தில் செல்லுவதற்காக, போலீஸ் அதிகாரிகளிடத்தில் செல்லும்போது, அதுவும் கோர்ட் உத்தரவோடு செல்லுகின்ற நேரத்தில் அந்த போலீஸ் அதிகாரி It is a civil matter. எலும்பு உடைந்தால் தான் நடவடிக்கை எடுப்போம், எப்படி வேண்டுமென்றாலும் அடியுங்கள், உதையுங்கள். எப்படி கம்ப்ளைன்ட் கொடுத்தாலும் இன்வெஸ்டிகேஷன் செய்ய முடியாது என்கின்ற நிலையில் இருக்கின்ற போலீஸ் நிர்வாகத்திற்கு, சட்டத்தை அமுல்படுத்தாமல் தவறு செய்கின்ற போலீஸ் நிர்வாகத்திற்கு சலுகை அளிப்பதற்கு என் உடந்தையாக இருக்க வேண்டும் என்றுதான் கேட்க விரும்புகின்றேன் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டைரக்டர் ஜெனரல் பதவி ஏற்படுத்துவது பற்றியும், மூன்று ஐ.ஜி.க்கள் அட்மினிஸ்ட்ரேஷனுக்காக கொண்டு வருவது பற்றியும் பேசுவது பொருத்தமாக இருக்கும். இப்போது நீங்கள் பேசுவதற்கும் இதற்கும் என்ன ரிலவென்சி இருக்கிறது? தயவு செய்து சொல்லுங்கள்.

What is the relevancy? What kind of relevancy it has with the object of the Bill?

**திரு. ரா. மார்க்கபந்து :** கீழ் மட்டத்தில் இருக்கின்றவர்களை சீர்திருத்தம் செய்யாமல், மேலேயுள்ள அதிகாரிகளை மட்டும் உயர்த்துவதற்கு என்ன அவசியம்? நிர்வாக சீர்திருத்தம் என்பது கீழ் மட்டத்திலிருந்து செய்ய வேண்டும். ஆகவே தான் இதையெல்லாம் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சுருக்கமாக பேசி முடியுங்கள்.

**திரு. ரா. மார்க்கபந்து :** ஒரு டைரக்டர் ஜெனரல் என்று புதிதாக போட்டு அத்துடன் மூன்று ஐ.ஜி.க்களையும் போட்டும் கூட மதுவிலக்கை இன்னும் சரியாக அமல்படுத்தவில்லை. ஸ்டேஷன் ஆபீசர் ஒருவர் இருக்கின்ற இடத்தில் மதுவிலக்கு சரியாக அமல்படுத்தாமல் இருக்கும்போது, அதே இது சிவில் சம்பந்தப்பட்டது. இந்த விஷயத்தில் நாங்கள் தலையிட முடியாது. நீங்கள் வேண்டுமென்றால் அடித்தான் என்றோ, அல்லது, அடித்து இரத்தம் ஒழுகுகிறது என்ற நிலையில் இங்கு வந்தால்தான் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்ற நிலையில் போலீஸ் அதிகாரிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தில் வலிவில்லாதவர்கள்தான் கோர்ட்டுக்குச் செல்லுகிறார்கள்.

உதவி வேண்டுமென்று கோர்ட்டுக்குச் செல்லுகிறார்கள். கோர்ட்டின் உத்தரவின் அடிப்படையில் உதவி கேட்கும்போது, அது மறுக்கப்படுகிறது. அப்படியென்றால் போலீஸ் நிர்வாகம் எதற்காக இருக்க வேண்டும்? பொது மக்களுக்கு உதவி செய்யாத நிலையில் சட்டத் துறை, போலீஸ் துறை இவையெல்லாம் இருக்க வேண்டுமா என்றுதான் இன்றைக்கு நாட்டில் இருக்கின்ற பெரிய கேள்வியாக இருக்கிறது. அரசாங்கம் இதற்காக ஒரு உத்தரவைப் போடுவதாகச் சொன்னார்கள். கோர்ட்டு உத்தரவு இருக்குமானால் அதைச் செயல்படுத்துவதற்கு, அமுல்படுத்துவதற்கு போலீஸ் துறையானது உதவி செய்ய வேண்டுமென்று இந்த அரசு அறிவிக்கும் என்ற உத்தரவாதத்தை தந்தார்கள். ஆனால் இதுபோன்ற உத்தரவு இன்னும் அரசால் பிறப்பிக்கப் படவில்லை.

அடுத்தபடியாக, காக்னசிபிள், நான்-காக்னசிபிள் அபன்சஸ் என்றெல்லாம் வருகின்ற நேரத்தில், சிம்பிள் இன்ஜுரியாக இருந்தால், கேஸ் போடுவதில்லை. Grevious இன்ஜுரியாக இருந்தால் தான் கேஸ் போடுவது, எப்படி வேண்டுமென்றாலும் அடித்து கொள்ளுங்கள். இரத்தம் ஒழுகுகின்ற முறையில் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். இரத்தத்தோடு வந்தால் தான் இன்வெஸ்டிகேஷன் செய்வார்கள். இல்லையென்றால் இன்வெஸ்டிகேஷன் செய்ய முடியாது என்கிற நிலைமைதான், இந்த மாதிரியான ஒரு டென்டன்சிதான் வளர்ந்து கொண்டு வருகிறது. இடத்தில் இன்னொரு ஸ்டேஷன் ஆபீசர் வருகின்ற நேரத்தில் சரியான விதத்தில் மதுவிலக்கு அமல்படுத்தப்படுகிறது என்று வரும்போது, மது குற்றங்கள் இல்லாமல் இருக்கலாம். இப்படிப்பட்டவர்கள் வரும்போது, இந்த எஸ். ஐ. கேஸ்கள் போடுகிறார் என்று தெரிந்தவுடன் கடைகளை மூடிவிடுகிறார்கள். பின்னால் ஸ்டேஷன் ஆபீசர் மாறுகின்ற நேரத்தில் மூடிய கடைகள் மீண்டும் திறக்கப்படுகின்றன. இதற்கும் அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள். ஆகவே இப்போது 3 ஐ.ஜி. பதவிகளை போட்டிருக்கின்ற இந்த நேரத்தில் ஒருவரை தனியாக ஸ்பெஷல் ஐ.ஜி. ஃபார் புரொகிபிஷன் அபன்சஸ் என்று தனியாக ஒதுக்கப்பட வேண்டும். ஒரு சரகத்திற்குள் புரொகிபிஷன் கேஸ்கள் வருகிறது என்றால், நிச்சயமாக அவைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதம் வேண்டும். இல்லையென்றால் . . . .

They are at the mercy of the Police Officers.

என்கின்ற நிலைமைதான் ஏற்படும். இந்த முறையில் போலீஸ் நிர்வாகம் இருக்கிறது என்று சொல்லி, என்னுடைய டில்-அப்ருவலைத் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன்.





(முற்பகல் 11-50)

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தை ஆதரித்தும், இந்தச் சட்டத்தை நிராகரித்தவர்களை எதிர்த்தும் பேசுகின்ற இந்த வாய்ப்பு எனக்கு கிடைத்ததற்காக நான் துணைத் தலைவர் அவர்களுக்கு முதலில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சட்ட திருத்தம் எவ்வளவு அவசியமானது என்பது நாட்டில் இருக்கின்ற பல்வேறு நிலைமைகளை வைத்துக்கொண்டு, நாம் நிச்சயமாக இந்த சட்ட திருத்தத்தை ஆதரித்தாக வேண்டும். ஆனால், இங்கே ஒரு கருத்தை அடிக்கடி வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் சட்டத்தை ஆதரித்துப் பேசுகின்றார்களா, சட்டத்தை எதிர்க்கின்றார்களா என்றுகூட தெரிந்துகொள்ள முடியவில்லை என்று எதிர்க்கட்சி நண்பர்கள் பல்வேறு நேரங்களில் சந்தேகப்படக்கூடிய நிலைமை வருகின்றது. ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், பல்வேறு நேரங்களில் சட்டத்தை ஆதரிக்க வேண்டும், அரசினுடைய நல்ல நடவடிக்கைகளை எடுத்துக் கூற வேண்டும் என்ற ஆசை இருந்தாலும்கூட, அதை எடுத்துச் சொல்கின்ற நேரங்களிலே சட்டசபையின் நேரத்தையும், காலத்தையும் குறைத்துக்கொள்ள வேண்டிய நிர்பந்தத்தால், பல்வேறு நேரங்களில் வாய்ப்புகள் கிடைப்பதில்லை. வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்ற காரணத்தினாலேயே, இன்றைக்கு எதிர்க் கட்சியில் இருக்கின்றவர்கள், ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் ஆதரித்துப் பேசவில்லை என்ற குறையை அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளைப் பார்க்கின்ற நேரத்திலும், ஆளும் கட்சிக்காரர்கள் பேசவில்லை என்ற குறை ஏற்படுகின்ற நேரத்தில், ஆளும் கட்சிக்காரர்களுக்கு பேசத் தெரியாது என்ற நிலையும், ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்களுக்கு எதிர்க் கட்சிக்காரர்களின் பிரச்சினைகளுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை என்ற நிலையும் பத்திரிகைகளை பார்க்கின்றவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆளும் கட்சியிலே இருக்கின்ற எங்களுக்கு, வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்ல வேண்டுமென்று, அதன்பேரில் விவாதம் உண்டாக்க வேண்டுமென்றால் அது ஒன்றும் பெரிய காரியமல்ல; சாதாரண காரியம். அதிலும் குறிப்பாக, என்னை பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்வேன். அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டு, ரொம்பப் பழக்கப்பட்டவன் நான் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1979 நவம்பர் 7

இந்த சட்ட திருத்தத்தை நண்பர் சுப்பு அவர்கள் எதிர்த்துப் பேசக் கடமைப்பட்டவர்கள், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அப்படி பேசிக்கொண்டே வருகின்றபோது, ஏதாவது பேசவேண்டும் என்கின்ற காரணத்திற்காக திடீரென்று இந்தச் சட்டத்தை கொண்டு வரவேண்டிய முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இல்லை, இது எவ்வளவு பெரிய காரியம் என்று ஆரம்பிக்கிறார்கள். நாங்கள், ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் இதற்கு உடனே பதில் சொல்லவேண்டுமென்றால், இந்த சட்டத் திருத்தத்தை ஆதரிக்கின்ற காரணத்தினாலேதான், இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த சபைக்கு இன்று வரவில்லை. எனவே, அவர் மறைமுகமாக இந்தத் திருத்தத்திற்கு ஆதரவு தருகின்றார், அதனால்தான் வரவில்லை என்று சொல்ல ஆரம்பித்தால், உடனே அது ஒரு விவாதமாக, பிரச்சினையாக மாறி, எந்த காரணத்திற்காக அவர் வரவில்லை, வேறு காரணத்திற்காக அவர் இந்த இடத்திற்குப் போய் இருக்கிறார் என்று சொன்னால்தான் தெரிந்துகொள்ள முடியும். அதேபோல், ஐ.ஜி. அவர்களுக்கு போன் செய்து, நான் உங்களை ஆதரிக்கின்ற காரணத்தினால்தான், இன்று சபைக்கு வரவில்லை என்று சொல்லக்கூட வாய்ப்பு இருக்கிறது . . . . .

**திரு. துரை முருகன்:** துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் கண்டனத் தீர்மானத்தின்மீது பேசுகின்றபோது, மிகத் தெளிவாக இந்த அவசர சட்டத்திலுள்ள குறைபாடுகளை எல்லாம் எடுத்துச்சொல்லி, இந்த போலீஸ் அதிகாரிகள் போடப்பட்டிருப்பதைப் பற்றியெல்லாம் ஒரு குற்றச் சாட்டாக எடுத்துப் பேசியிருக்கிறீர்கள். எனவே, அவர்கள் போலீஸ் அதிகாரிக்கு போன் செய்ய வேண்டிய அவசியமில்லை. தவிர, போலீசுக்கு பயந்தவர்கள் அல்ல' திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** நண்பர் துரை முருகன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி எனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அவரைவிட எனக்கு அதிகம் தெரியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனக்குத் தெரியும், திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ளவர்கள் யார் யார் போலீசுக்கு பயப்படுவார்கள், யார் யார் பயப்பட மாட்டார்கள், யார் யார் போலீசில் எந்தெந்தக் காரியங்களை, எந்தெந்த நேரங்களில், என்னென்ன செய்வார்கள் என்ற வரலாற்றைக்கூட என்னால் சொல்ல முடியும்.



1979 நவம்பர் 7]

**திரு. அ. ரகுமான்கான்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், இராதா அவர்கள் பேசுகின்றபோது, துரைமுருகன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை. இது ஒழுங்குப் பிரச்னையல்ல. இப்படி ஒழுங்குப் பிரச்னையிலே பேசுவதற்கு பயன்படுத்தினால், அதை நான் அனுமதிக்க மாட்டேன். வேறு ஏதாவது கருத்து இருந்தால், அவர் சொல்லாத கருத்து இருந்தால், அதைச் சொல்லுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தத் திருத்தத்திலே பேசுகின்றபோது, 'ரிலவன்சி, ரிலவன்சி' என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இது 'ரிலவன்சி'க்கு மாறாக இருக்கிறதே? வேறு நபர்கள் இப்படி . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை நீங்கள் சொல்லித்தர வேண்டாம். அதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. எஸ். ஆர். இராதா:** விவாதத்திற்காகச் சொன்னேனே தவிர அதை வலியுறுத்த வேண்டுமென்பதல்ல. பதவி தேவையென்றால் கொடுப்பது நியாயம். அதேபோல் நாட்டில் ஒரு போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் தான் இருந்தார். பிறகு டெபுடி இன்ஸ்பெக்டர் ஒருவர் வந்தார். ஒரு சூப்பரிண்டண்டு இருந்தார். பிறகு டெபுடி சூப்பரிடென்டென்ட் வந்தார். அவருக்கு என்ன வேலை என்று இவருக்குத் தெரியாது, இவருக்கு என்ன வேலை என்று அவருக்குத் தெரியாது. பல பேருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கொடுத்தோம் என்று சொன்னவர்களைத் தெரியும்.

ஒரே நாளில் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது டில்லியில் ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசரைப் போட்டார்கள். அவர், இந்த அரசின் பிரதிநிதி என்று போட்டார்கள். அரசுக்கு டில்லியில் பிரதிநிதி என்று அன்றைக்கு ஆளும் கட்சியில் இருந்த ஒருவருக்கு, சொந்தக்காரருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பதற்காக பதவி உண்டாக்கப்பட்டது. (குறுக்கீடு) நண்பர் ரகுமான்கான் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொல்லுகிறார். அதையெல்லாம் சொல்ல வேண்டாமென்று நினைத்தேன். திடீரென்று சம்பத் என்பவரை டில்லியில் ஐ.ஏ.எஸ். ஆபீசராகப் போடுகிறார்கள். டில்லிக்குப் பிரதிநிதி என்று சொல்லி அவர்கள் போட்டார்கள். எந்தக் காரணத்தால் போட்டார்கள் என்று சொல்வது ?

திரு. துரைமுருகன்: சம்பத் ஐ.ஏ.எஸ். அதிகாரியா? என்ன?

திரு. எஸ். ஆர். இராதா: நான் குறிப்பிட்டுக் கூறுவது—சம்பத் அவர்களை அதிகாரியாகப் போட்டார்கள் என்பது தெரியும்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு திரு. இ. மனோகரன்: சம்பத் அவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரி அல்ல.

திரு. அ. ரகுமான்கான்: தவறான தகவலைத் தரலாமா?

மாண்புமிகு திரு இ. மனோகரன்: நான் பேசவேண்டாமா? சம்பத் அவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரி அல்ல. அவர் ஐ.ஏ.எஸ். அதிகாரி என்று ராதா அவர்கள் கருதியிருந்தார்கள். இப்போது அந்தக் கருத்தை மாற்றிக் கொள்வார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: தவறான தகவலைத் தரலாமா?

மாண்புமிகு திரு. இ. மனோகரன்: அது எப்படி தவறான தகவல் ஆகும். அவருக்கு அந்தத் தகவல் தெரியவில்லை . . . . . .

(Thiru A. Rahman Khan rose.) Will the hon. Member please listen to me? Please sit down.

THIRU A. RAHMANKHAN: The Hon. Leader of the House may say 'please resume your seat'. That is parliamentary.

மாண்புமிகு திரு. இ. மனோகரன்: இப்படிக் குறுக்கிட்டால் நான் பேசப் போவதில்லை.

சம்பத் அவர்கள் அதிகாரியாகப் போடப்பட்டது உண்மை. அவர் ஐ.ஏ.எஸ். அதிகாரி என்று ராதா அவர்கள் நம்பிய காரணத்தால்தான் நம்பிய கருத்தைச் சொன்னார். அதில் என்ன தவறு? பெரிய திசை திருப்பிக் கொண்டு எங்கோ அரக்கோணத்திற்குக் கொண்டு போனது மாதிரிப் பேசுகிறாரே.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அவர்கள் அதிகாரியாகப் போட்ட இடம் ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட வேண்டிய இடமாக இருந்த காரணத்தால் ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டிருப்பார் என்று கருதியிருப்பார். ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட வேண்டிய இடத்தில் சாதாரணமானவரைப் போட்டது திரு. ராதா அவர்களுக்குத் தெரியாது.

திரு. அ. ரகுமான்கான்: அமைச்சர் என்ன சொல்லுகிறார் என்று விளங்கவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் வரவேண்டுமென்று ஆசைப்பட்டது அவர்கள்தான். பல பேரை, சாதாரண வேலையில் இருந்தவர்களை பெரிய பெரிய அதிகாரிகளாக மாற்றுகிற அளவுக்கு, பெரிய அதிகாரம் படைத்தவர்களாக ஆக்குகின்ற நிலைமைகள். பல்வேறு இருந்தன. ஒரே காரணத்திற்காக, வேண்டியவர், சொந்தக்காரர் என்பதற்காக அப்படி ஆக்கப்பட்டது என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டுமென்பதற்காகத்தான் தெரிவிக்கிறேன்.

போலீஸ் துறையைப் பொறுத்தவரை இந்தப் பதவிகள் ஒரு நிர்வாகச் சீர்திருத்தம் என்ற வகையில், தவிர்க்க முடியாத மிக அத்தியாவசியமான ஒன்று என்ற காரணத்தால்தான் போடப்பட்டது. ரிடையர் ஆனவர்கள் எல்லோரையும் மீண்டும் பதவியில் போடுவதில்லை.

எல்லோருக்கும் வயது வரம்பை அதிகமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது என்.ஜி.ஓ.-க்களுக்கு அதிக வயது வரம்பு ஓய்வு பெறுவதற்கு வேண்டுமென்று கேட்டார்கள். தரப்பட்டிருக்கிறது. என்.ஜி.ஓ.-க்கள், ஆசிரியர்கள், போலீஸ்காரர்கள் அனைவருக்கும் எல்லாச் சலுகைகளும் தரப்பட்டிருக்கின்றன.

அவர்கள் பல சலுகைகள், வசதிகள் வேண்டுமென்று போராடிய காலத்தில் அவர்களுக்காக நாங்கள் இருக்கிறோம், ஆசிரியர்களுக்காக நாங்கள் இருக்கிறோம், என்.ஜி.ஓ.-க்களுக்காக நாங்கள் இருக்கிறோம் என்று இந்த மன்றத்தில் பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் சொன்னார்கள்.

(நண்பகல் 12-00)

நான் பாராட்ட வேண்டும். பெரிய தியாகத்தையே செய்திருக்கிறார்கள். என்.ஜி.ஓ.-க்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியவர்களுக்காக நாங்கள் இருக்கிறோம் என்று சொல்கிற நேரத்தில், எங்களுக்கு இருநூறு சம்பளம்

அதிகமாக ஆக்கியதை நாங்கள் வாங்க மாட்டோம், என்.ஜி.ஓ.க்களின் பிரச்சினை தீருகின்ற வரையில் அதிகச் சம்பளத்தை நாங்கள் வாங்க மாட்டோம், அதிகமாக்கிய இருநூறு ரூபாய்ச் சம்பளத்தை வாங்க மாட்டோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான ரூபாயை . . . . .

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய எஸ். ஆர். இராதா அவர்கள், என்ஜி.ஓ.-க்களுக்கு ஆதரவாக திராவிட முன்னேற்றக் கழகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இருநூறு ரூபாய் அலவன்சை வாங்கவில்லை என்று சொல்கிறார்கள். என்ன ஆதாரத்தோடு சொல்கிறார்கள், எப்படி அவருக்குத் தெரியும்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் தாமரைக்கனி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன், அவர்கள் வாங்கவில்லை என்று இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள், வாங்கியிருக்கிறார்கள் என்றால் தாமரைக்கனி சொல்லலாம். இலட்சக்கணக்கான ரூபாய் அளவிற்குப் பெரிய தியாகம் செய்திருக்கிறார்கள், இருநூறு ரூபாய் உயர்வு வேண்டாமென்று சொன்னார்கள், இதுவரையில் வாங்கவில்லை என்று நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரைக்கும் அன்றைக்குப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தியதைப்போல, அந்த உயர்வு சம்பளத்தை வாங்கவில்லை. எதை இங்கே சொன்னோமோ, அதை அங்கே எழுதிக் கொடுத்து, தொடர்ந்து வாங்குவதில்லை, டி.ஏ. உள்பட, அந்த இன்கிரீசை வாங்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற சப்ஜெக்ட் இது இல்லை. எனவே ரெலவன்டாகப் பேசுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவரவர்களே, விளக்கம் சொன்னதற்காக திரு. உமாநாத் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் சொல்லுங்கள்.

திரு. க. சுப்பு: அவர் சுற்றுலா வாரியத் தலைவர் அல்லவா, அதனால் தான் ஒரு சுற்றுச் சுற்றி வருகிறார்.



திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் சுப்புவைச் சுற்றி வர மாட்டேன் என்பதுதான் என்னுடைய நிலைமை. திரு. உமாநாத் அவர்கள் சொல்லிவிட்டார்கள், அதற்கு அவர்களுக்கு நன்றி சொல்லி விட்டேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி எப்படி என்று எனக்குத் தெரியாது. வாங்கவில்லை என்று நம்பிக் கொண்டிருக்கிறேன், வாங்க மாட்டார் என்று (குறுக்கீடு) ஆனால் இந்தச் சட்டத் திருத்தம், தேவையானதும், அவசியமானதும். . .

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Speaker, I beg to request that the debate may, as much as possible, be regulated to, what I call, the strict confines of the subject-matter of the legislation.

திரு. எஸ். ஆர். இராதா: சட்ட அமைச்சரவர்கள் சொல்வதால், இது பெரிய நிர்வாகச் சீர்திருத்தம் என்ற அளவில், போலீஸ் நடைமுறைகளைத் திருத்த வேண்டுமென்பதாகும். இந்தப் பதவியை உற்பத்தி செய்ய வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டிருப்பதால் பழைய தவறைக் களைவதற்கு இது நல்ல திருத்தம் என்று இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. க. சுப்பு: துணைத் தலைவரவர்களே, இந்த ஸ்டேட் கவர்ன்மெண்ட் எம்ப்ளாயீஸின் சர்வீசிற்கு எக்ஸ்டென்ஷன் கொடுத்திருப்பதைப் போல என்று அவர்கள் சொன்னார்கள். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பதவிகள் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தவை, அதனால்தான் அங்கே எக்ஸ்டென்ஷன் கேட்கிறோம், கொடுக்கப்படவில்லை. இங்கே கொடுத்தது ரீ-அப்பாயின்ட்மெண்ட்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, ஆளும் பொறுப்பிலே இருப்பவர்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற அரசியல் நெருக்கடிகளுக்காக, அரசியல் காரணங்களைச் சந்திப்பதற்காக அதிகாரத்தை எப்படியெல்லாம் துஷ்பிரயோகம் செய்ய முடியும் என்பதற்கு ஒட்டுமொத்தமாக இலக்கணம் வகுக்கின்ற ஒரு சட்டம்தான் இந்தச் சட்டம் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆண்டாண்டுக் காலமாக இருந்த போலீஸ் துறையினுடைய அடிப்படையையே தகர்த்தெறியும் வகையில் போலீஸ்காரர்களிடையே குழப்பங்களும், பிளவுகளும், மாச்சர்யங்களும் ஏற்படும் வகையில் ஒரு பெரிய பதவியில் இருக்கின்ற உயர் போலீஸ் அதிகாரியே மனம் நொந்து இந்த ஆட்சியிலே இந்த அமைச்சரவைக்குக் கீழே வேலை

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 நவம்பர் 7

செய்வதைவிட எங்கேயாவது சென்று கூலி வேலை செய்துகொள்வது மேல் என்று கருதி, தான் பொறுப்பேற்றிருந்த மிகப்பெரிய பதவியைத் தூக்கி யெறிந்து விட்டுப் போயிருக்கிறார்கள் என்றால் இந்த ஆட்சி அப்பொழுதே சிந்திக்கத் தவறி விட்டிருக்கிறது என்றால் இனிமேல் இதைச் சிந்திக்க வைக்க யாராலும் முடியாது என்ற எண்ணம் நாட்டுக்கு வந்திருக்கிறது. மூன்று ஐ.ஜி. க்களை ஏற்படுத்துவதற்கான காரணம் வேண்டாமா? நிர் வாகச் சீர்திருத்தம், நிர்வாகச் செம்மைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்ற காரணத்தை இங்கே சொன்னார்கள். அது காரண, காரிய விளக்கங் களிலே இடம் பெற வேண்டாமா? காரண, காரிய விளக்கங்களிலேயே for effeective and efficient administration இந்தச் சட்டம் கொண்டு வருகிறோம், நிர்வாகச் செம்மைக்காகக் கொண்டு வருகிறோம் என்று சொல்லக்கூடிய திராணி, என்று சொல்லக் கூடிய தெம்பு உங்களுக்கே இல்லாத நேரத்தில் வேண்டாததைக் கொண்டு வரவேண்டியது அவசியமா என்பதை நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, நிர்வாக செம்மைக்காக, கன்சாலிடேட்டட் ஃபண்டிலே யிருந்து எடுத்துச் செலவழிக்கலாம். ஒரு ஐ.ஜி.க்காக கன்சாலிடேட்டட் ஃபண்டிலேயிருந்து எடுத்து செலவழித்துக் கொண்டிருந்த நீங்கள் இன்றைக்கு ஒரு டைரக்டர்-ஜெனரல் என்ற பதவிக்காகவும், மேற்கொண்டு மூன்று ஐ.ஜி.-க்களுக்காகவும் செலவழிக்கின்ற இழிநிலைமைக்கு, மக்களுடைய பணத்தை நீங்கள் விரும்புகின்ற வகையில், அதைப் பாழ்படுத்துவதற்கு நீங்கள் தயாராகிறீர்கள் உங்களுடைய சொந்தக் காரியத்திற்காக என்று சொன் னால், அதிலேகூட ஃபினான்ஷியல் மெமோரண்டத்தில் எவ்வளவு செலவாகும் என்று கூட அறுதியிட்டுச் சொல்ல முடியாத நிலையில் ஏதோ செலவாகும் என்று சொல்லக்கூடிய நிலையில், மக்களுடைய வரிப்பணத்தைப் பாழ் படுத்துவதற்காக, நீங்கள் இந்த 3 ஐ.ஜி.க்கள் பதவிகளை ஏற்படுத்தி இருக் கிறீர்கள். அதற்குக் காரணம் நிர்வாகச் செம்மையா, அல்லது உங்களுக்கு ஏற்பட்டிருக்கிற அரசியல் நெருக்கடியா? அந்த நெருக்கடிக்காக, அரசியல் காரணத்திற்காக நீங்கள் செய்திருக்கிற ஒரு ஏற்பாடாக இது இருக்கிறது. இந்த, மக்கள், தங்களுடைய வரிப் பணத்திலே, ஏழை, எளியவர்கள், இந்த நாட்டிலே, தங்களுடைய ரத்தத்தை வியர்வையாக சிந்தி, இந்த அரசுக்கு வரியாகச் செலுத்துகிறார்களே, அந்தப் பணத்தில் இருந்து, இன்றைக்கு 3 ஐ.ஜி. க்களை ஏற்படுத்தி, எங்களுடைய நெருக்கடியை நாங்கள் தீர்த்துக் கொள்வோம் என்ற அளவிற்கு நீங்கள் வருவீர்களானால் உங்களைப்பற்றி, இன்றைக்கு, நாளைக்கு, நாளை அல்லது, நாளை மறுதினம் இந்த நாடு தீர்ப்பளிக்கக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை சொல்லவிரும்புகிறேன்.



1979 நவம்பர் 7] [திரு. எம். ஏ. லத்தீப்]

நிர்வாக செம்மைக்காக இன்றைக்கு 3 ஐ.ஜிக்கள் தேவை என்று சொன் னால், இங்கே குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது, ஒரு முதலமைச்சர் இருந்து கொண்டிருக்கிறார், அவருடைய அலுவலகத்திலே கோப்புகள் நகர்வதில்லை என்று சொல்லப்படுகிறது, தேக்கம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. நான் கேட்கிறேன், நிர்வாக செம்மைக்காக, சர்க்கார் காரியங்கள் நன்றாக நடைபெறுவதற்காக, ஒரு முதலமைச்சருக்குப் பதிலாக, 3 முதலமைச்சர்களை வைத்துக் கொள்ளுங்களேன். மூன்று முதலமைச்சர்—ஒரு முதலமைச்சர் ஒரு காரியத்தைப் பார்ப்பதற்கு, இன்னொரு முதலமைச்சர் இன்னொரு காரியத்தைப் பார்ப்பதற்கு, இன்னொரு முதலமைச்சர் இன்னொரு காரியத் தைப் பார்ப்பதற்கு—நிர்வாகத்திலே செம்மையும் ஆக்கமும் ஏற்படுத்துவதற்கு மூன்று முதலமைச்சர்களை வைத்துக்கொள்ள ஏன் நீங்கள் தயங்குகிறீர்கள்; வைத்துக்கொள்ளுங்களேன்.

ஐ. ஜி. என்று சொல்லப்படுவது ஆண்டாண்டு காலமாக அந்தப் பதவிக்கே, ஒரு தனித்த பெயர், தனித்த அந்தஸ்து. ஒரு இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்ற வார்த்தைக்கு இன்றைக்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள், டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ்—என்னமோ, டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பென்ட்ரி, டைரக்டர் ஆப் ஹரிஜன் வெல்பேர் என்றெல்லாம் சொல்வதைப்போல, டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் என்று சொன்னால், எவன் பயப்படுவான். எவரோ ஒரு ஹரிஜன் வெல்பேர் டைரக்டர், அனிமல் ஹஸ்பென்ட்ரி டைரக்டர் மாதிரி இருக்கிறது. இன்ஸ் பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்பது ஆண்டாண்டு காலமாக இந்த நாட் டிலே இருந்து கொண்டு வருவது. ஒரு இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் உங்களுடைய நிர்வாகத்தைச் சரியாக நடத்த முடியவில்லையென் றால், டெபுடி இன்ஸ்பெக்டர்கள் ஜெனரல் ஆஃப் போலீஸ் வைத்துக் கொள் ளுங்களேன். ஏன் மூன்று ஐ.ஜி.க்களை ஏற்படுத்தி, அவர் இவரைப் பார்த்து முறைக்கிறார். இவர் அவரைப் பார்த்து முறைக்கிறார். இந்த ஃபைல் அங்கே போனால், இங்கே அனுப்புகிறார், அந்த ஃபைல் இங்கே வந்தால் அங்கே அனுப்புகிறார். அங்கே, நடுவிலே ரிட்டையர் ஆன ஒரு ஆள் உட்கார்ந்துகொண்டு, டைரக்டர் ஜெனரல் என்றால், ஒன்றும் செய்ய முடியாது, என்ன செய்வது என்று தவித்துக் கொண்டிருக்கிறார். நிர்வாகம் இன்றைக்கு சீர்கெட்டிருக்கிறது, நாட்டிலே கொலை, கொள்ளைகள் அதிக மாகிக் கொண்டிருக்கின்றன.' பெரியார் மாவட்டத்திலே 8 பேர் கொலை செய்யப்பட்டார்கள். என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? இன்று சென்னை மாவட்டத்திலே ஒரு பெண்மணி மிகப் பகிரங்கமாக பயங்கரமாக கொலை செய்யப்பட்டார். அந்தப் பெண்ணைக் கொலை செய்தது

யார் என்றுகூட இன்றைக்குக் கண்டு பிடிக்கக்கூடிய நிலைமை நாட்டிலே இல்லை. காரணம் என்ன என்று சொன்னால், நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய அவசரச் சட்டத்தின் காரணமாக, போலீஸ் துறையிலே ஏற்பட்டிருக்கிற தேக்கம் என்று நான் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் துறை நன்றாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு கொடுக்கிற கம்ப்ளெயின்டுகளை வைத்துக்கொண்டு மட்டும் அவர்கள் வேலை செய்யக் கூடாது. நாட்டிலே நடைபெறுகிற எந்தக் காரியமாக இருந்தாலும், சந்தேகம் வந்தாலே கூட அதைப் பற்றி துப்பு துலக்கி நடவடிக்கை எடுக்கக் கூடிய ஒரு முனைப்பு அவர்களிடத்திலே இருக்க வேண்டும். நான் இன்றைக்கு சொல்லிக்கொள்கிறேன், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இந்த அவையிலே சில குற்றச்சாட்டுகளை சொன்ன பிறகு நாட்டிலே ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது—நியாயமான சந்தேகம். இந்தச் சர்க்காரிலே * * *

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற கண்டனத் தீர்மானத்தின் மீது உரையாற்றிக் கொண்டிருக்கிறாரா, அல்லது வேறு ஏதாவது துறையிலே அவர் பேசிக் கொண்டிருக்கிறாரா?

**திரு. எம். ஏ. லத்தீப் :** இங்கே உங்களுடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு ராதா அவர்கள் என்ன திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராகக் கொண்டு வந்த சென்ஷூர் மோஷனில் பேசினாரா? அல்லது இந்த போலீஸ் மானியத்தின்மீது பேசினாரா என்று நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அப்பொழுது பேசியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். எல்லாம் ரெலவன்டாகத்தான் பேசுகிறேன்:

He is an Advocate. I am also an Advocate. I also know the concept of relevancy. Do not interrupt. Do not teach me as to what is relevant and what is not relevant.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சருக்கு அவருடைய கருத்தைச் சொல்கிற அதிகாரம் உண்டு. உங்களுக்கு இருக்கிற அதே அதிகாரம் அமைச்சர் என்ற முறையில் அவர் இருந்தாலும், உறுப்பினர் என்ற முறையில் அவருக்கு இருக்கிறது. அவருக்கு நீங்கள் சொல்ல வேண்டியதில்லை. தயவுசெய்து என்னிடத்திலே சொல்லுங்கள். . . .

---

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கேற்ப அகற்றப் பெற்றது.



**திரு. எம். ஏ. லத்தீப் :** உங்களைப் பார்த்து அவரிடம் சொல்கிறேன். . .

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவு செய்து உங்களுக்குத் தான் எல்லாம் தெரியுமென்கிற மாதிரிப் பேசாதீர்கள்.

THIRU M. A. LATHEEF : I will talk. I will talk. I will cry from the top (கூச்சல் குழப்பம்).

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :** அந்த நம்பிக்கையில் தான் எல்லோரும் இருப்பார்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** இன்றைக்கு ஒரு சந்தேகம் எழுந்திருக்கிறது. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன். . .

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, 4, 5 நாட்களாக அரசின் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு இங்கு பல்வேறு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை சொல்லி இருக்கிறார்கள். இன்றைய தினம் சட்ட சபையிலே பேசிக் கொண்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கூட, அந்த சென்சார் மோஷன், கண்டனத் தீர்மானத்தில் அவர்கள் கூட பேசி இருக்கிறார்கள். அன்றைக்கு சொல்லாத ஒரு கருத்தை இன்றைக்குப் புதிதாகச் சொல்ல வேண்டிய அவசியம் இந்த நேரத்தில் அவர்களுக்கு ஏன் ஏற்பட்டது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, அன்றைக்கு நான் பேசும் போது . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவு செய்து உட்காருங்கள். நான் சொல்லி விடுகிறேன். நான் ஏற்கெனவே சொன்னேன், இங்கே கொடுத்திருக்கிற காரண காரியங்களுக்கு உட்பட்டு அதோடு பேச்சுக்களைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். நீங்கள் இப்போது பேசுகிறீர்களே (* *) அது வந்திருக்கிற சட்டத்திற்கு உட்பட்டதா? ரிலவன்ட்டாக கருதவில்லை. ஆகவே இப்பொழுது நீங்கள் பேசியதை சபைக்குறிப்பிலிருந்து நீக்கி உத்தரவிடுகிறேன். பத்திரிகைகளும் வெளியிடக்கூடாதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கேற்ப அகற்றப் பெற்றது.

THIRU M. A. LATHEEF : I will talk ..............

MR. DEPUTY SPEAKER : I cannot allow it.

திரு. துரை முருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்களிடத்திலே நான் தெரிந்து கொள்ள விரும்புவது, நாங்கள் மசோதாவுக்கு உட்பட்டுத்தான் பேசவேண்டும் என்று கூறுகிறீர்கள். ஆனால் முன்னால் பேசிய உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்கள், ஆறுமுகப்படையாச்சி அழிந்து போனது பற்றிப் பேசினார். மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து பேசும்போது அவர் தொகுதியில் அடித்துக் கொண்டதைப்பற்றி பேசினார்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : நீங்கள் வேறு அதன்மேல் விளக்க வேண்டாம்.

திரு. எம். ஏ. லத்திப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்வி கேட்டார்கள். கண்டனத் தீர்மானத்தின் மேல் இந்தப் பிரச்சனையை எழுப்பாமல், இப்பொழுது ஏன் பேசுகிறேன் என்று கேட்டார். கண்டனத் தீர்மானத்தின் மீது நான் பேசும்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசவில்லை. எனக்குப் பிறகுதான் பேசினார்கள். இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சாட்டிய குற்றச் சாட்டிற்குப் பிறகுதான் நாட்டிலே ஒரு கேள்வி எழுந்திருக்கிறது. இவ்வளவு பெரிய, அந்த பல்கேரிய கப்பல் வாங்கும் விவகாரம், 4 கோடி ரூபாய் விவகாரம் . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து நான் அனுமதிக்க மாட்டேன். ஏற்கனவே சொன்னது சொன்னதுதான். அதை அனுமதிக்க என்னாலே முடியாது. அதைப்பற்றி தொடர்ந்து பேசினால் அடுத்தவரைப் பேச நான் அழைத்து விடுவேன்.

திரு. எம். ஏ. லத்திப்: * * * *

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: நான் சொல்கிறேன். அடுத்து உங்களுக்கு இன்னும் 3 நிமிடங்கள் கொடுக்கிறேன். இதன்மேல் உங்கள் கருத்தைச் சொல்ல அழைக்கிறேன். இல்லையென்றால் அடுத்த உறுப்பினரை அழைத்து விடுவேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. எம். ஏ. லத்திப்: போலீஸ் துறையைப் பற்றி விவாதிக்க வேண்டாமா?

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். போலீஸ் துறை பற்றி விவாதிக்க வரவில்லை நாம். இங்கே வந்துள்ள சட்டத்தின் மீது உங்களுடைய கருத்துக்களைச் சொல்லுங்கள்.

திரு. எம். ஏ. லத்திப்: போலீஸ் துறையை முழுக்க, முழுக்க அரசாங்க அடிமையாக ஆக்கும் ஒரு மாபெரும் திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவசரச் சட்டத்தின் வாயிலாக ஒரு திட்டம் நிறைவேறுகிறது. ஒரு சட்டத்தின் வாயிலாக ஒரு அமைப்பு கெடுக்கப்படுகிறது; அது பாழ்படுத்தப்படுகிறது என்று சொன்னால் என்ன அர்த்தம்.

அதைத்தான் இந்த அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகையால், இந்த 3 ஐ.ஜி.க்கள் என்பது நாட்டிற்குத் தேவையில்லாத ஒன்று. அது மட்டுமல்ல. அவை நிர்வாகத்திலே மிகப் பெரிய சிக்கல்களை ஏற்படுத்தும். ஆகவே, 3 ஐ.ஜி.-க்கள் என்பதை தயவுசெய்து நீங்கள் விட்டு விடவேண்டும். இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்ற பெயர் நாட்டிற்கு அறிமுகமான பெயர். அந்தப் பெயரால்தான் அந்தத் துறையின் தலைவர் அழைக்கப்பட வேண்டும்.

அந்தத் தலைவருக்கு என்ன அதிகாரம்? அந்த 3 இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு தனித் தனியாக என்ன அதிகாரம் என்று சொல்லி, அந்த டைரக்டர் ஜெனரலுக்கு என்ன அதிகாரம், அவர் எப்படி கோஆர்டினேட் செய்கிறார், அவரது பங்ஷன்ஸ் என்ன, பவர்ஸ் என்ன, டியுட்டி என்ன, பிரிவிலேஜ் என்ன, வாட் ஆர் தி ஏரியாஸ் ஆப் பங்ஷன் என்று எல்லாம் கூட இல்லாமல், ஒரு பொம்மை மாதிரி டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் என்று ஏற்படுத்தி விட்டு . . . . . . .

திரு. துரை. கோவிந்தராசன்: பாயின்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்கள் டைரக்டர்கள் என்ற பதவியில் இருக்கும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., படித்த அதிகாரிகளை இந்தச் சபையின் மூலம் அவமதிக்கிற வகையில் 'பொம்மை' போல் என்று குறிப்பிடுவது சரிதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

THIRU M. A. LATHEEF : I.A.S. Officer is a public servant. He is paid out of the Consolidated Fund of the State and India This House is the sole body which is empowered to make financial allocations to all the Government servants. We are entitled to make comments upon the activities and the functions and the positions of any Govrenment servant.

ஆகவே, இப்படிச் சொன்னால் எப்படி பேச முடியும்? இப்படிச் சொன்னால் அப்புறம் டிபேட் செய்ய முடியாது.

(திரு. இ. தமிழரசன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தமிழரசன் உட்கார வேண்டும். திரு. எம். ஏ. லத்தீப் தொடர்ந்து பேசலாம்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். நல்ல எண்ணத்தோடு கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து இந்த 3 ஐ.ஜி. பதவிகளை வைத்துக்கொள்ளக்கூடாது. அப்படி வைத்துக் கொண்டால், குழப்பம் வரும். நிர்வாகத்தில் டைரக்டர் ஜெனரலையும் வைத்துக்கொண்டு, 3 ஐ.ஜி.-க்களையும் வைத்து இருந்தால், அது நாட்டிற்கு நல்லதல்ல. நீங்கள் இன்று இருப்பீர்கள், நாளைக்குப் போய் விடுவீர்கள், நான் இன்று இருப்பேன், நாளைக்குப் போய் விடுவேன் (குறுக்கீடு) நீங்கள் 20 ஆண்டுகள் அல்ல, 100 ஆண்டுகள் கூட இருங்கள். 100 வருஷத்திற்குப் பிறகு நீங்கள் போகத்தான் போகிறீர்கள். அது தவிர்க்க முடியாதது. ஆனால் நிர்வாகம் நிலைத்து இருக்கும். இந்த நாடு இருக்கிற வரையில் இருக்கும். இந்த நாட்டிலே இருக்கும் நிலைமைகள் மாறிக்கொண்டு இருந்தாலும், அவர்களுடைய பதவி இருக்கும். தயவுசெய்து அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அப்படி இல்லையென்று சொன்னால், 100 நாட்களுக்குக்கூட இந்த அரசு நல்ல நிலைமையில் இருக்காது, 100 நாட்கள்கூட நீடித்து இருக்காது என்ற எச்சரிக்கையை நான் தெரிவித்து, இந்தச் சட்டத்தைக் கண்டித்து, இதை வரவேற்க முடியாத நிலையில் இதை வாபஸ் பெறவேண்டும் என்று கோரி அமர்கிறேன்.

**திரு. செ. மெ. ராஜு:** மாண்புமிகு லத்தீப் அவர்கள் பேசும்போது, எங்கோ இருக்கிற அரிசன இலாகா, எங்கோ இருக்கிற அரிசன டைரக்டர் என்று பேசினார். அப்படி குறிப்பிடுவது அந்தச் சமுதாயத்தை அவமரியாதை செய்வதுமாதிரி இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி அவர் விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் இப்போதுதான் விளக்கிவிட்டு உட்கார்ந்து இருக்கிறார். ஆகவே, நீங்கள் சும்மா உட்காருங்கள். (திரு. எம். ஏ. லத்தீப் எழுந்தார்) அதைப்பற்றி அவருக்கு விளக்க வேண்டியது என்னுடைய கடமை. திரு. லத்தீப் விளக்கம் அளிக்க வேண்டியது இல்லை.





**திரு. இ. தமிழரசன்:** பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார் . .

**திரு. எம். ஏ. லத்தீப்:** நான் அப்படி சொல்லாத ஒன்றைச் சொல்லி, அவர் அரசியல் ஆதாயம் தேட நினைக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்ட * * * நான் நீக்கும்படி உத்தரவிட்டு இருக்கிறேன். அவர் மறுபடியும் அது பற்றிப் பேசியிருக்கிறார். அந்தப் பகுதிகளையும் சேர்த்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். திரு. துரை முருகன் . . . . .

**திரு. எம். ஏ. லத்தீப்:** * * பற்றி ஏன் பேசக்கூடாது. ஏன் அதை நீக்க வேண்டும் . . . . (உறுப்பினர் பேசிக்கொண்டே இருந்தார்).

**திரு. அ. ரகுமான்கான்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை முருகன் பேச ஆரம்பிக்கவில்லையென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச அழைக்கப்படுவார்கள். திரு. துரை முருகன் . . . .

**திரு. எம். ஏ. லத்தீப்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** திரு. துரை முருகன், பேசப் போகிறீர்களா இல்லையா?

**திரு. துரை முருகன்:** திரு. அம்பிகாபதி கேட்டதுபோல் கேட்கிறீர்களா? எனக்கு மைக் வரவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே நேரத்தில் 4-5 உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்பினால், பேரவைத் துணைத் தலைவர் யாரை அனுமதிக்கிறாரோ அவருக்குத்தான் மைக் வேலை செய்யும்; பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே, திரு. துரை முருகன் இப்போது பேசலாம்.

(திரு. லத்தீப் நின்றுகொண்டிருந்தார்)

**திரு. துரை முருகன்:** தலைவர் அவர்களே, . . . . .

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. எம். ஏ. லத்தீப்: * * *

(பிற்பகல் 12.20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் அனுபவம் உள்ள உறுப்பினர். நீங்கள் சொன்னபடி நீங்கள் ஒரு வக்கீல். இப்படித்தான் நடந்துகொள்வது என்று நீங்களே முடிவு செய்து கொள்கிறீர்களா? தயவுசெய்து சட்டசபையை ஒழுங்காக நடத்த ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. துரை முருகன் நீங்கள் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: துரை முருகன், நீங்கள் பேசுங்கள்.

திரு. துரை முருகன்: அவர் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் ஆர்டரை அலவ் பண்ணுவது நானா அல்லது நீங்களா? அனுமதி கொடுப்பது நானா, நீங்களா? தயவுசெய்து நீங்கள் பேசுங்கள். இல்லை என்றால் மாண்புமிகு அமைச்சரை அழைக்கிறேன். (குறுக்கீடு)

திரு. துரை முருகன்: இவ்வளவு குரல்கள் கேட்டால் எப்படி பேச முடியும்? நான் பேசிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இல்லை என்றால் அமைச்சரை அழைக்கிறேன்.

திரு. துரை முருகன்: என்ன மிரட்டுறீங்க.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுடைய மிரட்டலுக்கு நான் அடிபணிய முடியாது. மிரட்டி நேரம் வாங்க முடியாது.

திரு. துரை முருகன்: அங்கே உட்கார்ந்திருந்தால் பெரிய கொம்பு என்று நினைப்பா? What do you mean? நீ யார் என்னை மிரட்ட? சும்மா மிரட்டிக்கிட்டு இருக்கிறியே?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலில் பேசக் கற்றுக் கொள்ளுங்கள்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**திரு. துரை முருகன் :** யார் பேசக் கற்றுக்கொள்வது ? நீயா எனக்கு பேச கற்றுக்கொடுக்கிறாய் ?

After all you are a small fellow, you want to teach me.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீ என்று பேசுவது உங்களுடைய பண்பாடு என்றால் பேசுங்கள்.

**திரு. ஆ. நடராசன்:** சும்மா ஏதோ மிரட்டிக்கொண்டிருக்கிறியே, பெரிய இவனாட்டம்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, இங்கே இந்த சட்டமன்றத்தினுடைய மாபை மீறுகின்ற வகையில் அவர்கள் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்கு கொடுக்கின்ற மரியாதைகளும் நாளுக்கு நாள் குறைந்துகொண்டுவருவதை நானும் பார்த்துக்கொண்டுதான் வருகிறேன். தயவுசெய்து அந்த மாபை காப்பாற்றுங்கள். அதற்கு எதிர்க் கட்சித் தலைவர்களும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. துரை முருகன் :** இட்டாருக்கு இட்ட பலன். இந்த அமைச்சருடைய, முதலமைச்சருடைய சார்பாக இந்த மன்றத்திலே வைத்திருக்கிற மசோதா மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அவசரச்சட்டம் ஒன்று முதலிலே வந்தது. அந்த அவசரச் சட்டம் தேவையில்லை என்று சொல்லி, அதை நிராகரிக்கிறோம் என்ற தீர்மானத்தை நானும் கொடுத்திருக்கிறேன். அதை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன்.

நீண்டநேரமாக இந்த அவையில் பல்வேறு அங்கத்தினர்கள் எல்லாம் கருத்துக்களை விளக்கமாக சொல்லியிருக்கிறார்கள். எனவே, நான் நீண்ட நேரம் எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் திருத்தத்திலே முக்கியமாக வந்திருக்கிறசாராம்சம், இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்று இருந்ததை டைரக்டர்-ஜெனரல் என்றும், ஒரு ஐ.ஜி. என்று இருந்ததை மூன்று ஐ.ஜி. என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒன்றைத்தான் செய்திருக்கிறது. அது தேவையில்லை. குழப்பமாக

இருக்கிறது என்று நண்பர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். இதிலே இரண்டு பாயிண்ட் தொக்கி இருக்கிறது. ஒன்று, ஏற்கெனவே இருந்த ஐ.ஜி. ரிட்டையர் ஆகிறார், 30—11—1978-ல். அவருக்கு சர்க்கார் 6 மாதம் பதவி நீட்டிப்பு கொடுக்கிறது. அதாவது 31—5—1979 வரையில் பதவியில் இருக்கிறார். அதற்குமேல் 6 மாதம் தரவேண்டுமானால் மத்திய சர்க்கார் விரும்பினால் தரப்படும்; மத்திய சர்க்கார் தருவார்களோ தரமாட்டார்களோ என்ற ஐயப்பாடு உங்களுக்கு இருந்தது. இருந்தாலும் ஐ.ஜி. யாக இருக்கிறவரை விட வழியில்லை. மனம் இருக்கிற பக்கம் மார்க்கம் விடாததால், தேவையானவர்கள் பயனடைய இப்படிப்பட்ட ஒரு அவசரச் சட்டம் தேவைப்பட்டது. அந்த அவசரச் சட்டம் பயன்படுகிறது எப்படியென்றால், அந்த ஐ.ஜி.யின் பிரிவைத் தவிர்க்க, தமக்கும் மேலே ஒருவனடா, அவன் நான்கும் தெரிந்த தலைவனடா என்பதைப்போல 3 ஐ.ஜி. பதவிகளை உருவாக்கி அவர்களுக்கு மேலே டைரக்டர்-ஜெனரல் பதவி ஒன்று உருவாக்கப்பட்டு, அதன்மூலம் டைரக்டர்-ஜெனரலாக அவரை தக்கவைத்துக்கொள்கின்ற முறையில் சர்க்காரின் இந்தத் திருத்தச்சட்டம் பயன்படுகிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

இதிலே தொக்கி இருக்கிற விவகாரங்களைப்பற்றி சொல்லப்போனால் 3 ஐ.ஜிகளை உருவாக்கியிருக்கிறார்கள் என்றால் எவ்வளவு குழப்பம் ஏற்படும். இன்னும் சொல்லப் போனால், இப்படி 3 ஐ.ஜி.க்கள் உருவாக்கப்பட்டதினால் போலீஸ் ஸ்டேஷனில் போலீஸ்காரர்களிலிருந்து, எஸ்.பி. க்களிலிருந்து, டி.ஐ.ஜி களிலிருந்து 3 கோஷ்டிகள் போலீஸ் அலுவலர்களிடையே உலவச் செய்தாகிவிட்டது. இந்த ஐ.ஜி வந்தால் அவர் நிர்வாக ஆபீசர் அதனால் அவருக்கு கூடுதலாக 3 சல்யூட்டுகள், இன்னொரு ஐ.ஜி வந்தால், சர்வீஸ் எல்லாம் பார்க்கிற ஐ.ஜி இவர்தான் அதனால் அவருக்கும் கூடுதலாக இரண்டு சல்யூட்கள், அடுத்து லா-அண்டு ஆர்டர் ஐ.ஜி வந்தால் அவருக்கு தனியாக 3 சல்யூட்கள். இப்படி பார்த்துக்கொண்டே போனால், எல்லோருக்கும் மேலாக டைரக்டர்-ஜெனரல் இருக்கிறாரே அவர், அவர்களுக்கு மட்டும் தானா எனக்கு இல்லையா என்று பிரச்சனைகள் ஏற்படுகிற விதத்தில் உண்டாக்கிவிட்டார்கள். தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங்கிய அந்த இலாக்காவுக்கே கெட்ட பெயர் ஏற்படும் வகையில் அதைக் கெடுத்து விட்டார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : (மணியடித்து) சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.





திரு. துரை முருகன்: துணைத் தலைவர் அவர்களே, நான் இப்போது தானே ஆரம்பித்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள். மற்றவர்கள் சொல்லாதது ஏதாவது இருந்தால் அதை எடுத்துச் சொல்லுங்கள்.

திரு. துரை முருகன் : துணைத் தலைவர் அவர்களே நான் கேட்கிறேன், நான் என்ன நாம்-கா வாசியாக இருக்க வேண்டுமா ?

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே டேப் ரிக்கார்டர் எல்லாம் நடமாடுகின்றன என்று தகவல். திரு. துரை முருகன் மேசையின் மீது இருப்பது என்ன, பூவா டேப்ரிக்கார்டரா என்று தெரியவில்லை ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதெல்லாம் தவறான தகவல். டேப் ரிக்கார்டர் எல்லாம் அவையிலே கொண்டு வரக்கூடாது. அப்படி எதுவும் இல்லை.

திரு. துரை முருகன் : அது வெறும் பூ தான். அடுத்து ரிடையர் ஆன ஒருவரைத்தான் டைரக்டர்-ஜெனரலாக போட வேண்டுமா. அலுவலில் இருப்பவர்களைபோடக் கூடாதா. அப்படிப் போட்டால் போலீஸ் இலாகா மதிப்பாக இருக்காது ? ரிடையர் ஆன ஒருவருக்கு வேலை வாய்ப்பு போய் விடக்கூடாது என்றுதானே ரி-அப்பாயிண்ட்மெண்ட் செய்து, இப்படிக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இப்போது ரிடையர் ஆன போலீஸ் அதிகாரியைப் போடுகிறீர்கள், அப்புறம் ரிடையர் ஆன ஹைகோர்ட் ஜட்ஜைப் போடுவீர்கள், ஐ.ஏ.எஸ். ஆபீசரையும் கூட போட்டாலும் போடுவீர்கள். கடைசியில் தான்-அபிஷியல் என்று கட்சியிலிருந்து ஒருவரை போட்டு விடுவீர்கள். அந்த நிலைக்கு வராது என்பதற்கு என்ன உத்தரவாதம்? இல்லை இல்லை அப்படி எல்லாம் வராது. நாங்கள் போலீஸ் இலாகாவை இன்னும் புரிந்துக் கொள்ளத் துவங்கவில்லை என்கிறீர்களா ? ஆனால் அப்படி எல்லாம் போடுவதற்கு வழி வகை செய்வதற்காகத்தான் இந்த சட்டத்திருத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்கிறேன். குழப்பம் விளைவிப்பதுதான் இந்தச் சட்டம். 31—5—1979-லிருந்து அவருக்கு பதவி நீட்டிப்பு கொடுத்திருக்கிறார்கள். 12—10—1979-ம் தேதி இந்த ஆர்டினன்ஸ் வருகிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் அவர் என்னவாக இருந்தார். அதற்கு கவர்ன்மெண்ட் ஜி.ஓ. போட்டிருப்பீர்கள். இதெல்லாம் பேட் பிரிசிடெண்ட், பேட் பிரிசிடெண்டைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதெல்லாம் திரு. சுப்பு அவர்கள் ஏற்கெனவே பேசியது . . .

**திரு. துரை முருகன் :** ஒன்று பாசிவ் வாய்ஸ் இன்னொன்று ஆக்டிவ் வாய்ஸ் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆகவே இந்த சட்டத்தை கொண்டு வந்ததன் மூலமாக தேவையில்லாத நிர்வாக குழப்பத்தை செய்திருக்கிறார்கள் . . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, அவர் சீனியர் பெல்லோ, கூடுதலாக பேசட்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. துரை முருகன் :** என்ன இருந்தாலும் பிளட் ஈஸ் திக்கர் தேன் வாட்டர்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே திஸ் ஈஸ் பேட் பிளட்.

**திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே அமைச்சர் அவர்களே சொல்லி விட்டார் பேட் பிரசிடெண்ட் என்று. . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நான் அப்படிச் சொல்லவில்லை, திஸ் ஈஸ் பேட் பிளட் என்றுதான் சொன்னேன், பேட் பிரசிடெண்ட் என்று சொல்லவில்லை, ஐ நெவர் செட் லைக் தட்.

**திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே, சரி அவர் பேட் பிளட் என்று ஒத்துக் கொண்டு விட்டார், என்ன இருந்தாலும் . . * * *

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அவர் பேசுகிற போது மாண்புமிகு உறுப்பினர் என்ற முறையில் கண்ணியத்தோடு பேச வேண்டும். தலைவரைப்பற்றிக் கூட ஏற்கெனவே அந்த முறையில் சொல்லியிருக்கிறார். நீங்களும் ஏற்கெனவே சொன்னீர்கள் ஒவ்வொரு கட்சிக்கு ஒருவர்தான் என்றிருந்தாலும், அவர் தீர்மானத்தை கொடுத்திருப்பதினால் பேச அழைக்கிறேன் என்று சொன்னீர்கள். அவர் இப்போது

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.





எங்கோ போய் விட்டார், எதையெதையோ பேசிக் கொண்டிருக்கிறார். அவரைப்பற்றி நான் பேச ஆரம்பித்தால், சபையின் அலுவல்களுக்குத் தடையாக இருக்கும், அதனால் பேசவில்லை. கண்ணியமாகப் பேசட்டும்.

**திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை முருகன் அவர்கள் கண்ணியத்தோடு பேச வேண்டும். அவர் இப்படி , அமைச்சரை* * * என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன். பத்திரிகைகளிலும் வெளிவரக்கூடாது.

**திரு. துரை முருகன் :** அவர் அமைச்சராக இருந்தாலும் அவரும் பண்போடு பேச வேண்டும், நாலும் அவரைப்பற்றி சொல்ல ஆரம்பித்தால் சபையே நடக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவுசெய்து பேசி முடித்து விட்டால் உட்காருங்கள். அவர் பேசியதில் எதுவும் தவறு இல்லை.

(பிற்பகல் 12-30)

**திரு. துரை முருகன்:** ஒழுங்காகப் பேசு என்று சொல்ல அவர் எனக்கு வாத்தியார் கிடையாது.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னதை தாங்கள் அப்படியே சொன்னால் பல பிரச்னைகள் தீர்ந்துவிடும். அவர்கள் நகைச்சுவைக்காகச் சொல்லி அதன் மூலமாக அதிகமாக விவகாரத்தை வளர்க்காமல் பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதை நகைச்சுவையாக எடுத்துக்கொள்ளாமல் அந்த நண்பர் அவருக்கிருக்கிற வேகத்தில் அப்படிச் சொல்லிவிட்டார்கள். ஆகவே சொன்னவை நகைச்சுவையோடு சொன்னவை என்ற அடிப்படையில் வைத்துக்கொண்டு அந்தப் பிரச்சினையை மறந்துவிட்டு பேசவேண்டிய பிரச்னையில் ஈடுபட கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் அதை நகைச்சுவையோடு எடுத்துக்கொள்ளவில்லை. கண்ணியமாகப் பேசுங்கள் என்று சொல்கிற அந்த வேண்டுகோளில் எந்தவிதமான தவறும் கிடையாது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. துரை முருகன்: இன்றிருக்கிற டைரக்டர்-ஜெனரல் அவர்கள் முன்னாள் ஐ.ஜி.யாக இருந்தவர். ஐ.பி. எஸ். ஆக இருந்தவர்கள். அவர்கள் இன்று ரிட்டயராகிவிட்டார்கள். அவர்களுக்கு உடுப்பு அணியக்கூட அதிகாரம் இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை உடுப்பணியாமல்தான் வேலை செய்யவேண்டும். கூவாத குயில், ஆடாத மயில், ஓடாத மான், முடியில்லா மன்னன் என்ற முறையில் உடுப்பணியா போலீஸ் அதிகாரியாக அவர் இருக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு போலீஸ் இலாகாவைத் தள்ளுகிற இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு, எனது தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டு இதோடு முடிக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இங்கு விவாதித்துக்கொண்டிருக்கிற போலீஸ் திருத்த மசோதாவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே பல நண்பர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சாதாரணமாக ஓய்வுபெற்ற ஒரு அரசாங்க அதிகாரிக்கு மீண்டும் வேலை நீட்டிப்பு கொடுப்பது என்பது இந்த அரசின் கொள்கை அல்ல என்பதை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று எண்ணுகிறேன். ஆனால் இந்த மசோதாவின் வாயிலாக ஏற்கெனவே ஓய்வுபெற்ற ஐ.ஜி. அவர்களுக்கு மீண்டும் பதவிக் காலத்தை நீட்டித்துத் தருவது, அவருடைய பதவியின் பெயரை மாற்றி கொடுக்கப்பட்டிருக்கிற்து. இந்த ஏற்பாட்டினால் உண்மையிலே ஒருவேளை அரசுக்கு இலாபம் ஏற்படுவதாக இருந்தால் அல்லது அரசாங்கத்திற்கு இந்த ஏற்பாடு அத்தியாவசியமானது என்றிருந்தால் அதை யாரும் மறுப்பதற்கில்லை. நாங்களும் வரவேற்போம். என்னைப் பொறுத்தமட்டில் ஐ.ஜி.-க்கு வேலை நீட்டிப்பு கொடுப்பதற்கு தமிழகத்திற்கு எந்த அத்தியாவசியமும் ஏற்படவில்லை, இந்த அரசுக்கும் அத்தியாவசியம் ஏற்படவில்லை என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதன் விளைவு என்னவென்றால் அந்த இலாகாவில் பணியாற்றுகிற பல கீழ்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அதிருப்தி ஏற்படுகிறது. ஆகவே இந்த மாற்றம் தேவையில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்தில் இதுவரை ஒரு ஐ.ஜி. இருந்த இடத்தில் நான்கு பேர்கள் தேவைதானா என்பதையும் இந்த அரசு எண்ணிப் பார்த்ததோ இல்லையோ என்ற ஐயப்பாடு எனக்குத் தோன்றுகிறது. இந்த நான்கு ஐ.ஜி.-க்கள் ஏற்படுத்துவது ஒரு வேளை நிர்வாக சீரமைப்பிற்காக, நல்ல நிர்வாகத்திற்கு அது தேவை என்றிருந்தால்



என்னைப் பொறுத்தவரையில் அதை ஆட்சேபிப்பதற்கில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் நிர்வாகச் சீரமைப்பு எங்கு ஏற்படுகிறதென்றால், கீழ்மட்டத்திலிருக்கிற அதிகாரிகளிடம்தான் நிர்வாகச்சீர்கேடு ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு அறிந்திருக்கும். மிகவும் அதிருப்தியடைந்திருக்கிற போலீஸ்காரர்களுக்கு இந்த அரசு பரிசீலனைசெய்து நல்ல முறையில் ஏற்பாடுகள் செய்திருந்தால் இந்த இலாகா நல்லமுறையில் செயல்பட அது தேவைப்படும், வசதியாகயிருந்திருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பதிலாக மேல் மட்டத்திலிருக்கின்ற ஒரு சில அதிகாரிகளுக்கு இந்த உத்யோக உயர்வு போன்ற சலுகைகள் வழங்குவதினால், அரசுக்கு அதிகச் செலவு தான் ஏற்படுமே தவிர, இந்த இலாகாவில் இதனால் அதிருப்தி தான் ஏற்படுமே தவிர, நல்லதாக அமையாது. சீர்கேடு அடைவதாகத்தான் இருக்கிறது என்பதை கூறிக்கொள்கிறேன். இந்த மசோதா வருவதற்கு முன்னால் அவசரச்சட்டமாக இங்கே அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்த அவசரச்சட்டம் கொண்டு வந்ததின் பின்னால் இந்த மாநிலத்தில் சென்ற சில வாரங்களாக நடைபெற்ற போராட்டங்களையும், அதனால் போலீஸ் நிர்வாகத்தில் ஏற்பட்ட சீர்கேட்டையும் இந்த நாடு நன்றாக கண்டிருக்கிறது. ஆகவே உண்மையில் இது வரவேற்கத் தக்கதல்ல. இந்த மசோதா தேவையற்றது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன் இது தேவையில்லை என்பதோடு, இப்படிப்பட்ட உயர் போலீஸ் அதிகாரிகளின் பதவி உயர்வை கீழ்மட்டத்திலுள்ள போலீஸார் எவரும் விரும்பவில்லை என்று நினைக்கிறேன். யாருக்கும் தேவையில்லை என்ற முறையில் இது பொருத்தமற்ற சட்டமாக இருக்கிறது. ஆகவே இந்த மசோதா தேவையற்றது. என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## (6) அறிவிப்புகள்.

### (ஆ) பேரவையின் அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (7—11—1979) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளின்படி, பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

8—11—1979 வியாழன்—அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது மேலும் விவாதம்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1979 நவம்பர் 7

9—11—1979 வெள்ளி—1. கேள்வி நேரம் இல்லை.

2. அரசினர் சட்ட முன்வடிவுகள். அவை காலையிலும், மாலையிலும் கூடும். மாலை 4.30 மணியளவில் அவை கூடும்.

10—11—1979 சனிக்கிழமை—வேண்டியிருப்பின் அவை இன்றும் கூடும்.

கேள்வி நேரம் இல்லை.

அரசினர் சட்ட முன்வடிவுகள்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணி முதல் கூடும்.

(5) அரசினர் சட்டமுன்வடிவுகள்—(தொடர்ச்சி).

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Speaker, Sir, I think for nearly an hour and forty five minutes, the debate has gone on and a number of Opposition Leaders participated in this and the main criticism appears to be that the creation of this Office of Director General of Police is unnecessary and this is not designed to promote the interests and the efficiency of the police force. Occasionally, there have been clashes. if not, flames of heat that have been produced in the course of the debate, which ought to have been in my view, which ought to have been in my submission unexcited, cool and dispassionate in the light of the objects of this legislaton.

The object of this legislation is very simple. There have been three offices that have been newly created, namely, three Inspectors-General of Police to head the crime and Law and order branch, Enforcement Branch and Armed Police Branch. In order to co-ordinate the activities of the three branches headed by the Inspector-General of Police and in order to supervise their work and operation, the Director-General of Police office has been created. This has been now the subject matter of present legislation.

My hon. friend, Thiru M. A. Latheef, made mention of the undesirability of adoption of the parlance Director. I would like to remind him that the highest office in the entire State, in the whole of India in the whole Contindent of India is the Director-General of CBI. He is the number I Policeman in the whole country He himself is called the Director-General. Therefore, there is nothing demeaning the Police and the Director-General when the State has adopted this parlance.

THIRU M. A. LATHEEF: Does the Hon. Minister mean to say that the duties and functions of the Director-General of the C.B.I. are akin to the duties and the functions of the Inspectors-General of Police?

THE HON. THIRU K. NARAYANASWAMY: The functions may not be necessarily and exactly similar. But certain functions are bound to be parallel and similar, for the Director-General of Police does investigation work and other police work at the Delhi Headquarters, and certainly at the State level it is done by the Director-General of Police with his police force at the State level. The C.B.I. Director does the work at the central level. Therefore, there is bound to be a tremendous amount of similarity in the functions that devolve themselves on the Director-General of the State as well as the Director-General of the C.B.I at the Centre.

(பிற்பகல் 12.40)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. லத்தீப் அவர்கள் தயவுசெய்து கடைசியிலே குறுக்கிட்டால் நல்லது. ஏதாவது கேட்க வேண்டுமென்றால், கடைசியிலே எழுப்புங்கள். இப்போது தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு).

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* கனம் உறுப்பினர் லத்தீப் அவர்கள் இப்படிச் செய்வது நல்லதல்ல. இந்த முறையை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. நான் இப்போது அனுமதி கொடுத்தால், அடிக்கடி எழுந்து நிற்பீர்கள். தாங்களே அத்தனை தீர்மானங்களையும் நிறைவேற்ற வேண்டுமென்றால் . . .

THE HON. THIRU K. NARAYANASWAMY: This morning I found Thiru Latheef Saheb has been rather very excessively excited. Therefore, I am yielding ground at every stage.

THIRU M. A. LATHEEF: I am not excited. If I find that patent injustice is being perpetrated upon the society, I get excited. I never get excited for my reason. It is only for the society I am getting excited. I want to bring to the notice of the Hon. Minister one thing and what is this. The Director-General of the C.B.I. and the subordinate functionaries working

under him — their activities are subtle — they are not brought to the direct contact of the people. But the Inspector-General and his subordinate functionaries are to have direct contact with the people and as such, the renowned name ' Inspector-General ' will be more useful than the Director-General of Police.

THE HON. THIRU K. NARAYANASWAMY : I confine myself to the justification of the name, and not beyond that.

There has been some amount of criticism from my hon. friend. In his inimitable way and in his characteristic manner the hon. Member Thiru Suppu was mentioning about some amount of illegality in respect of this appointment. I would like to make it very clear and that is my submission to the House—there is absolutely no illegality in this appointment, I want to assure the hon Member I think the hon. Member Thiru Duraimurugan was more explicit in expounding this aspect of the matter before this House.

I will give a brief resume of the history of this appointment. Mr. Stracy reached superannuation on the completion of 58 years on 30th November 1978. Thereafter under Rule (16(1)A of the All India Service (Death-cum-retirement) benefil Rules, 1968 his term has been extended from 1st December 1978 to 31st May 1979 and the order was dated as early as 8-11-1978. Thereafter, as early as 31-5-1979 it was proposed that there shall the three Inspectors-General of Police and one Director-General of Police for co-ordinating and supervising their activities, and the appointment was proposed. That was made as early as 31st May 1979 and the appointment took effect from 1st June 1979. Thereafter, an Ordinance was passed as early as 12-10-1979. And in order to supplant the Ordinance, the present Bill has been brought in. There is absolutely no irregularity or illegality in this appointment. Now, the present amendment is brought in for effectuating the order passed as early as 31-5-1979 by virtue of the Constitutional law provisions of Article 309, 245, read with the relevant Entry No. II of Schedule 7 — State List II — and the executive powers of the State vested in the State Government by virtue of Article 162. Therefore, my respectful submission to this House is that there is absolutely no illegality in this appointment, very far from it.





One more Point has been raised by the hon. Member Thiru Duraimurugan that this Officer cannot wear the police clothes. All India Service Manual — the Indian Police Service Uniform Rules, 1954—Government of India Decision No. 2—I will read the extract of it :

" Members of the service should not, after their retirement from service, wear the uniform precribed in these Rules, while they are re-employed in non-police force. "

Only if a man is re-employed in non-police force, he cannot wear the police garb. But, undoubtedly, as I have already submitted to this House, he is the Director-General of Police. He has been appointed lawfully and legally, and therefore, under the scope of this very decision, he can right-royally wear the police uniform and discharge his functions.

I want to assure this House that this entire legislative measure has been conceived for promoting the interests and the efficiency of the police force, and it is not for any other purpose, and there is no meaning in anybody attributing any ulterior motive to the Government. If any attempt is made for attributing any motive in respect of this appointment and the creation of the other Inspectors-General of police within the ambit of the District and City Police Acts, I am sorry, I am constrained to repudiate such a motive, for, there is none in the scheme of the Government in piloting this legislative measure.

திரு. க. சுப்பு : 'நான் போலீஸ் ஃபோர்ஸ்' என்று இருந்தால்தான் யுனிபாரம் போடக்கூடாது என்ற முறையில் ரூலைப் படித்துக் காட்டினார்கள். எங்களுடைய கன்டென்ஷன்—ஐ.ஜி. ஆப் போலீஸ், ஹோம் செகரடரி சென்ட்ரல் காடர். இவர் ஐ.ஜி. ஆப் போலீசாக இருந்து ரிடையர் ஆன பிறகு புதிய பதவியில் போடும்போது அவர் 'நான்-போலீஸ் போர்ஸ்' ஆகிவிடுகிறார். இல்லையென்றால் அவருக்கு எக்ஸ்டன்ஷன் கொடுத்திருக்கலாம். எக்ஸ்டன்ஷன் கொடுக்கிற அதிகாரம் நமக்கு இல்லை. அவர் எப்போது ரிடையர் ஆகி விடுகிறாரோ அவர் ஐ.பி.எஸ். இல்லை. இந்த இரண்டும் இல்லாத நிலையிலே 'நான்-போலீஸ் போர்ஸ்' ஆகிவிடுகிறார். இது இன்டர்பிரட்டேஷனில் இருக்கக்கூடிய மிஸ்டேக்.

[திரு. க. சுப்பு] [1979 நவம்பர் 7

Whether it is within the competence of the State Government. என்று கருதப்பட வேண்டும். அதனால்தான் டைரக்டர் ஜெனரல் என்று போட்டிருக்கிறார்கள். அதற்குப் பரிகாரம் என்ன?

THE HON. THIRU K. NARAYANASWAMY : The argument is based on a misconception and on the assumption that because the State Government did not go to the Central Government, he does not belong to the police force. It is an erroneous impression and it is not well-founded and it is merely an assumption which is baseless. It was open to the State Government to go to the Central Government. It is also equally open to the State Government to make the necessary legislation and clothe him with the police powers. Today he is the Director-General of Police by reason of the powers which I have already elaborately explained and elucidated. Therefore, he has every right, every legal duty—I go further and say, there is a legal duty cast upon him to wear and don the garb and discharge his duties.

திரு. க. சுப்பு: ஒரு கிளாரிபிகேஷன், நான் கேட்க விரும்புவது . . . .

THE HON. THIRU K. NARAYANASWAMY : I have already given the explanation. If the hon. Member cannot understand it, I cannot help it. I am not going to offer any more explanation.

திரு. க. சுப்பு : சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு உறுதுணையாக விளக்கம் சொல்ல மாட்டேன் என்றால் எப்படி நிறைவேற்றுவது?

THE HON. THIRU K. NARAYANASWAMY : I have already given it twice.

THIRU K. SUPPU : You must explain to us as many times as possible so that we could understand it clearly.

(பிற்பகல் 12.50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மேலும் மேலும் கேட்டு கேள்விகளை எழுப்பிக் கொண்டே போவது சரியல்ல.



1979 நவம்பர் 7]

திரு. க. சுப்பு : அப்படியானால் ஒரேயொரு விளக்கத்தை மட்டும் சொல்லி விடட்டும். டைரக்டர்-ஜெனரல் பதவிக்கு ஐ.பி.எஸ்., அதிகாரியைத்தான் வைப்பார்களா? ஐ.பி.எஸ். சர்வீஸிலே இருப்பவர்களைத்தான் வைப்பார்களா? ரிடையர் ஆன பிறகும் கொடுப்பார்களா? ரி-அப்பாயின்மெண்ட் என்றால் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஐ.பி.எஸ். காரர்கள் தான் என்று கிளாரிபிகேஷன் கொடுத்துவிட்டால் பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் தம்முடைய தீர்மானத்தை வலியுறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : கட்டாயமாக வலியுறுத்துகிறேன். தம்முடைய அமைச்சரைப் பொறுத்தவரையில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் வேண்டாம். பேரவைத் தலைவர் கொஞ்சம் ஏமாறுவாரா, பேசிவிடலாம் என்று பார்க்கிறீர்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்களோடுதான் பேச்சு நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"ஆளுநர் அவர்களால் 12—10—1979 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும், செல் திறனாக்குதலும்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 19/1979) இப்பேரவை நிராகரிக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிராகரிக்கப்பெற்றது.

திரு. க. சுப்பு : டிவிஷன் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாய்ஸ் ஆஃப் ஓட்டிலேயே எனக்குத் திருப்திகரமாக இருக்கிறது. எனவே, நீங்கள் டிவிஷன் வேண்டும் என்று சொல்வதைக் கட்டாயமாக எடுத்துத்தான் தீர வேண்டும் என்பது அல்ல. என்னுடைய காதுகளிலே எது அதிக சப்தம் வருகிறது என்று பார்த்து எடுக்கின்ற முடிவேகூட முடிவாக இருக்கலாம்.

திரு. க. சுப்பு : நான் சொல்ல வருவது, இந்த மன்றத்திலே உள்ள எதிர்க் கட்சிகள் அரசியல் கூட்டு என்ற நிலைக்கு அப்பாற்பட்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா, முஸ்லீம் லீக் போன்ற எல்லாக் கட்சிகளும் இதை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விடுங்கள் அல்லது

இதை வற்புறுத்தாதீர்கள் என்று அரசியலுக்கு அப்பாற்பட்டுச் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் ஜனநாயகப் பண்பைப் பொறுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும், செல்லுபடியாக்குதலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

THE HON. THIRU K. NARAYANASWAMI : Sir, I move :—

"That the Tamil Nadu Police Laws (Amendment and Validation Bill, 1979 " be passed.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### (இ) குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு 1979.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, "ஆளுநர் அவர்களால் 19—10—1979 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 20/1979) இப்பேரவை நிராகரிக்கிறது" என்று வேதனையோடு மொழிகிறேன்.



இப்பொழுதே என்னுடைய கருத்துக்களைப் பேசிவிடலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் முன்மொழிந்து பேசிய பிறகு பேச வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, நான் ரொம்ப சுருக்கமாகப் பேசுகிறேன். ஏனென்றால், இதைப்பற்றி இங்கே அதிகமாகப் பேசப்பட்டு விட்டது. குதிரைப் பந்தயங்களை ஒழிக்கவேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதையே நீங்கள் தீவிரமாக நிறைவேற்றுகிற சர்க்காராக இருக்கிறீர்கள். நாம் அதற்குமேலே சொல்லக் கூடாது. அதை ஒழிப்பதைவிட, நாட்டுடைமை ஆக்குவது என்று 'ஸ்லைட் மாடிஃபிகேஷன்'— அண்ணாவைவிட பெரிய அண்ணா என்று சொல்லி, ஸ்லைட் மாடிஃபிகேஷன். அது பரவாயில்லை. ஆனால், அதற்கு மேலும் போய்விட்டதால்தான் இந்த நிலைமை. குதிரைப் பந்தயத்தை ஒழித்தது செல்லாது என்று அந்த உரிமையாளர்கள் ஹைகோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். ஆனால், இந்தச் சர்க்காருடைய கொள்கை என்ன என்று எங்களுக்குத் தெரியாது. தடுமாற்றத்தில் இருக்கிறோம். அதை விளக்கிச் சொல்லிவிட்டால் பரவாயில்லை. ஒன்று ஒழிக்க வேண்டும், இல்லையென்றால் நாட்டுடைமையாக்கவேண்டும். இல்லையென்றால், ஏதாவது ஒன்று சொல்லவேண்டும். ஆனால், இப்பொழுது வந்திருக்கிற சட்டம், சுப்ரீம் கோர்ட்டிலே கேஸ் பெண்டிங்காக இருக்கும்போது, அந்த கேஸிலே சர்க்காருடைய பொசிஷனை வீக்கன் செய்கிற மாதிரி, இது இருக்கிறது. நம்முடைய கொள்கையைத் தெளிவாகச் சொல்லிவிட்டால் நாங்கள் கேட்கமாட்டோம். அந்த வழக்கை எக்ஸ்படைட் பண்ணவில்லை. எக்ஸ்படைட் பண்ணாமல், அங்கே தங்களுக்கு வேண்டியவரை தலைவராக ஆக்க வேண்டுமென்று ஏதோ சில முயற்சிகளைச் செய்யத்தான் செய்தார்கள் சர்க்காரிலே. அந்த முயற்சிகளைச் செய்யத்தான் செய்வார்கள். அதற்காகத் தான் வந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது நாம் ஒன்றும் சொல்லக் கூடாது. அது மாதிரி வேண்டியவர்களுக்குச் செய்வதற்கு சர்க்காருடைய

---

* 1979, நவம்பர் 3 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப் பெற்றுள்ளது.

நாமிநேஷன்களைக் கொண்டு போய், கட்டாயமாக ஓட்டு போடும் உரிமையையும் கொண்டு வந்தீர்கள் என்று சொன்னார்கள். அது பரவாயில்லை. அதை விட்டுவிடுங்கள்.

ஆனால் இந்தச் சட்டத்தை, டர்ஃப் ஏஜன்ஸியை ஒழிப்பதற்காகக் கொண்டு வந்தீர்கள். டர்ஃப் ஏஜன்ஸி என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இந்தியாவிலே எங்கேயும் தொழில் செய்ய உரிமையிருக்கிறது. அதை அரசியல் சட்டம் வழங்குகிறது. அதை நமது சட்ட அமைச்சர் சொல்லவில்லை. பரவாயில்லை, அவர் போய்விட்டார். போய்விட்டார் என்றால், இந்த இடத்தை விட்டுப் போய் விட்டார், அவ்வளவுதான். இந்த டர்ஃப் ஏஜன்ஸி என்பது ஒரு தொழில். அந்தத் தொழிலைப் பொறுத்தமட்டில் மற்ற மாநிலங்களிலே எல்லாம் அது இருக்கிறது. இங்கே மாத்திரம், தமிழ்நாட்டில் என்ன பாவம் செய்திருக்கிறோம் என்று கேட்டு 'பான்தர்ஸ்' பூராவும் உயர்நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். யார் போயிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. டர்ஃப் ஏஜன்ஸி வைத்து நடத்திக்கொண்டிருந்தவர்கள் பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் வேலை இழந்து விடுவார்கள். அது மற்ற மாநிலங்களிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

மது விலக்குச் சட்டத்தை நாம் ஒழித்ததனாலே நம் ஊர்க்காரர்கள் எல்லாம் கேரளாவுக்கும், ஆந்திராவுக்கும் கர்நாடகாவுக்கும் போய், நம்முடைய வருமானமெல்லாம் அங்கு போய்விட்டது என்ற ஒரு நிலைமை இருக்கிறது. நம்முடைய வருமானம் போவதைப்பற்றி நாம் கவலைப்பட முடியாது. அப்படி கவலைப்பட்டால் நாம் இங்கே இருக்க முடியாது, பரவாயில்லை. ஆனாலும், இன்றைக்கு இந்த டர்ஃப் ஏஜன்ஸியை ஒழிப்பதனாலே கூட பல்லாயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று உயர்நீதிமன்றம் போயிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே, ஏதோ அவசரச் சட்டம் என்று சொல்லி நீங்கள் சட்டம் போட்டீர்கள். அதிலே ஏன் அவசரச் சட்டம் என்று நமக்குப் புரியவில்லை.

திடீரென்று 300 குதிரைகள் வந்தது; 300 குதிரைகள் வந்ததிலே 250 குதிரைகள் யாருக்கு வந்தது, சர்க்காருக்கு ஏ. சி. முத்தையா நன்றி தெரிவித்தார் என்று சொன்னார்கள். சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டியதுதான். ஏனென்றால், குதிரை வியாபாரத்தில் நாம் உதவியாக இருக்கிறோம் என்பதால்; அது சரிதான், பரவாயில்லை. ஆனாலும், இன்றைக்கு ஹைகோர்ட்டுக்குப் போய் வழக்கு போட்டு, ரிட் பெட்டிஷன் ஆகியிருக்கிறது. இந்த ஸ்டேஜிலே, ஒரு பில்லை எடுத்துக்கொள்வது, சப் ஜுடிஸ் இல்லையா? கோர்ட்டிலே ஒரு விஷயம் இருக்கும்போது பேசலாமா? கோர்ட்டிலே அதை காக்னிசன்ஸ் எடுத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு ரிட் அட்மிட் பண்ணக்கூடிய



அளவுக்கு கிரவுண்ட்ஸ் இருக்கிறது. அந்த கிரவுண்ட்ஸ் நாம் போட்ட சட்டம் செல்லாது, அது அடிப்படை உரிமைகளைப் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என்ற அடிப்படையில் அட்மிட்டாகி சர்க்காருக்கு நோட்டீஸ் வந்திருக்கிறது. நோட்டீஸ் வந்திருக்கிற இந்த ஸ்டேஜிலே, ரொம்ப அவசரமாக ஏதோ டைரக்டர் ஜெனரல் வேண்டுமென்றால், ஏதோ பாவம், வேண்டிய ஆள் போட்டோம், இனி அவரைப் போகச் சொல்வது கூடாது. அவர் செய்த வேலையைக் கெடுக்க முடியாது. ஆனால் குதிரை ஓடுவது, அல்லது அதிலே ஏதோ தகராறு என்றால், இந்த டர்ஃப் ஏஜன்ஸி கொஞ்ச நாள் இருந்துவிட்டு போகிறான், குதிரைகளும் ஓடிவிட்டுப் போகும்; அவன் கோர்ட்டிலே போட்ட பிறகு அவசரச் சட்டத்தை நாம் சட்டமாக நிறைவேற்றுவதால் என்ன லாபம், என்ன நியாயம். அந்தச் சட்ட விதிகளுக்கு உட்பட்டதா என்பதை அமைச்சரவர்கள் தெளிவாகச் சொல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இருந்தாலும், ஹைகோர்ட்டிலே ரிட் அட்மிட் செய்த பிறகும், இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதிலே என்ன ப்ரொப்ரைட்டி இருக்கிறது; அதைச் சொல்ல வேண்டும். அதோடு, தேவையில்லாத ஒரு சட்டத்தை, டர்ஃப் ஏஜன்ஸி ஒவ்வொன்றையும் ஒழிப்பதற்கு ஒரு அவசரச் சட்டத்தைப் போட்டு, குதிரைப் பந்தயத்தைப்பற்றி, நம்முடைய கொள்கைக்கு முரணாகவும், புறம்பாகவும், நாம் சட்டத்தை வைத்துக்கொண்டிருப்பது நியாயம் அல்ல. ஆகவே, இந்த மசோதாவை—டைம் ஆகிவிட்டது, பசிக்கிறது என்று சொல்வார் ஸ்பீக்கர், மணி 1 ஆகி விட்டது, வேறு ஏதாவது எடுத்துக்கொள்ளலாம். இதைச் சர்க்கார் வற்புறுத்தாமல் விட்டு விடுவது நல்லது. இந்த அடிப்படையில் என்னுடைய தீர்மானத்தை மூன்மொழிந்து விட்டுவிடுகிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவரவர்களே, இன்றையதினம் குதிரைப் பந்தய டர்ஃப் ஏஜன்ஸிகள் ஒழிப்புச் சட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. கொண்டு வந்திருக்கும்போது, எனக்கு முன்னாலே பேசிய நண்பர் சுப்பு அவர்கள் மிக நன்றாகச் சொன்னார்கள். இதுபோன்ற ஏஜன்ஸிகள் மற்ற மாநிலங்களிலே ஒழிக்கப்படாமல் இருக்கக்கூடிய நிலையில் அந்தச் சர்க்கார்கள் அதை அனுமதித்திருக்கிற நேரத்திலே, தமிழகத்திலே யாரோ சில பணக்காரர்கள் தாங்கள் மேலும் பணக்காரர்களாக வாழ வேண்டுமென்பதற்காக குதிரைப் பந்தயம் என்று சொல்லக்கூடிய மிகப் பெரிய சூதாட்டத்தை வளர்க்க வேண்டுமென்பதற்காக இது வந்திருக்கிறது. சாதாரண ஏழை எளிய மக்கள், குதிரைப் பந்தயத்திற்குச் செல்ல முடியாமலிருக்கிறவர்கள் பயன்பெறுகின்ற வகையிலே, குதிரைப் பந்தயத்தை முதலிலே ஒழிக்க வேண்டும். அதற்குப் பின்னால், டர்ஃப் ஏஜன்ஸியை ஒழிக்க வேண்டும். பந்தயத்தை ஒழிப்பதற்கு முன்னால், இதை ஒழிப்பது என்பது, செருப்புக்குப் பதிலாக காலை வெட்டுகின்ற காட்சியாகத்தான் இருக்கிறது. பல்லாயிரக்

கணக்கான பேர்கள் இதிலே வேலை வாய்ப்புகளை இழந்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே, ஏன் மற்ற வெளிநாடுகளிலே சோஷியல் வெல்ஃபேர் இதுபோன்று, அரசு லாட்டரி சீட்டுகளை எல்லாம் ஒவ்வொரு பங்குகள்போல் வைத்து, அங்கேயெல்லாம் விற்பனை செய்கின்றார்கள். அது அனுமதிக்கப் படுகிறது.

அதுபோல், இந்தக் குதிரைப் பந்தயம் கூட, அந்த நாடுகளிலே இருக்கிற காரணத்தால், இதுபோன்ற டர்ஃப் ஏஜன்ஸிகளும் அங்கே அனுமதிக்கப் படுகின்றன. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், குதிரைப் பந்தயத் திலே, பல வகையிலே ஊழல் நடைபெறுகிறது என்று பல்வேறு வகையான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டும், அரசாங்கம் தன் சார்பாக இரண்டு நாமி னேஷன்களை அங்கே வைத்தும், அவர்களெல்லாம் அங்கே குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளை நிவர்த்தி செய்ய முடியாத நிலைமையிலே, தடுக்க முடியாத நிலையிலே மேலும் பல குற்றங்கள் அங்கே அதிகரித்துப் போவ தாகக் குறிப்பிடுகின்ற நிலையிலே இதை அவசரமாக, யாரோ ஒருசில பேர்கள் சொல்லிய காரணத்திற்காக, டர்ப் ஏஜன்சி ஒழிய வேண்டும் என்கிற அவசரச் சட்டம் தேவையற்ற ஒன்று. ஒன்று வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். வேலை வாய்ப்பு கொடுக்கவில்லையென்றால், வேலை பார்த்துக் கொண்டிருக் கிறவர்களையாவது, வேலையிலிருந்து நீக்காமலிருக்க நீங்கள் வழி செய்ய வேண்டுமே தவிர, அன்றாடம் வேலை செய்து சாப்பிட வழி செய்து கொண்டிருக்கிற அந்த மக்களை ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அதன்மூலம் வேலையிழக்கச் செய்திருக்கிறீர்கள். ஒன்று குதிரைப் பந்தயத்தை ஒழியுங்கள், அல்லது மைய நீதிமன்றத்திலேயிருக்கக்கூடிய வழக்கையாவது அவசரப்படுத்தி, தீவிரப்படுத்தி முடிவைத் தெரிந்து கொண்டு அதற்குப் பின்னால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கலாம் என்று சொல்லிக் கொண்டு, இதன்மூலமாக, ஆயிரக்கணக்கான இளைஞர்களும், படித்து வேலையிலிருக்கிற இளைஞர்களும் வேலையிழக்கும் வகையில் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதற்கான முயற்சியிலே அரசு ஈடுபட்டு, மாற்று வேலை கொடுக்க முடியுமா என்பதைச் சிந்தித்து, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கலாம். மாற்று வேலை கொடுக்க முடியாது உங்களால். அந்த நிலையிலே மேலும் அதிகமான நபர்களை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத்தை நான் எதிர்க்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.





(பிற்பகல் 1-00)

**திரு. க. சுப்பு :** ரூலிங் வேண்டும். சந்தேகத்தை கிளியர் பண்ணுவதற் காகக் கேட்கிறேன். ஆர்டினஸ் போடப்பட்டது. அது அப்படியே ரிப்ளேஸ் செய்யப்பட்டிருக்கிறது இந்தச் சட்டத்திலே, ஆர்டினன்ஸின் ஒரு எழுத்துக் கூட மாறாமல் வந்திருக்கிறது. ஏற்கனவே ஒரு கேஸ் பெண்டிங்காக இருக்கும் போது இது சப் ஜுடிஸ் ஆகாதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் சொல்லுவார்.

**திரு. க. சுப்பு :** ரூலிங் வேண்டும். அப்ஜெக்ஷன் ரெய்ஸ் பண்ணுகிறோம். அதைச் சொல்லி விட்டால் போதும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :**
There is nothing sub-judice. An ordinance is different from a Bill.
ஏனென்றால் கோர்ட்டிலே இருப்பது ஆர்டினன்ஸ் பற்றி.

**திரு. க. சுப்பு :** அப்படியே வருகிறது.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Though the contents and elements may be same, a Bill is different from an Ordinance. So there is nothing sub-judice.

**திரு. க. சுப்பு :** இரண்டுமே ஒன்றாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவசரச் சட்டமாகக் கொண்டு வருவதற்கும், சட்ட முன்வடிவாகக் கொண்டு வருவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இது ஒன்றும் வழக்குக்குப் புறம்பானதல்ல.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம் :** தலைவரவர்களே, குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு ஏற்கனவே உள்ள சட்டம் தலைமை நீதிமன்றத்திலே இருக்கிறது. அதை விரைவுபடுத்தி சீக்கிரம் முடிக்க இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? எவ்வளவு நாளில் முடியும், எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன என்பதை நிச்சயமாக இங்கே விரைவுபடுத்த அரசாங்கம் சொல்லியாக வேண்டும்.

ஏற்கனவே இதனால் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற் கிடையில் நீங்கள் டர்ப் ஏஜன்சியை ஒழித்து ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதனால் மக்கள் மத்தியிலே குதிரைப்பந்தயம் நடை பெறப் போகிறது போல இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு இந்த அரசாங்கம் ஏதோ வேலை செய்கிறது என்று சொல்லக்கூடிய சூழ்நிலை

மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசாங்கம் ஏன் முன்வரவில்லை என்று என்னிடத்திலே பலர் கேட்டார்கள்.

உங்களுக்குத் தெரிந்திருக்கலாம், இங்கே ரேஸ் கிளப் செயலாளராக இருக்கும் திரு. சௌபேக்கு என்ன சம்பளம் தெரியுமா? ஆளுநரைக் காட்டிலும், ஜனாதிபதியைக் காட்டிலும் அதிகமாக, மாதம் ரூ. 14,000 சம்பளம். ஆண்டுக்கு கணக்குப் பார்த்தால் ரூ. 1,68,000. பங்களா வேறு சொந்தம், வாகனங்கள் வேறு, டெலிபோன் ஃப்ரீ. குதிரை விற்கப்படும்போது கிம்பளமும் கிடைக்கிறது. இந்த சௌபேக்கு ஜனாதிபதியை விட அதிக சம்பளம், ரூ. 14,000 வருகிறது. இதைப் பறிப்பதற்கு ஏன் ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைவிட அதிகமாக, அமைச்சர்களைவிட அதிகமாக சம்பளம் வாங்குவதைத் தடை செய்ய ஏன் ஒரு சட்டம் கொண்டு வரக்கூடாது என்று நான் கேட்கிறேன். அவசரச் சட்டம் கொண்டு வந்த நோக்கம் வேறாக இருக்கலாம். ஆனால் இப்படிப் பட்ட அம்சங்களெல்லாம் இருக்கின்றன. இவைகளை ஏன் களையவில்லை. அதற்கு இப்பொழுது உடனே ஒரு சட்டம் கொண்டு வாருங்கள்.

டர்ப் ஏஜன்ஸி ஒழிப்பிற்காக நீங்கள் சட்டம் கொண்டு வந்ததில் உங்களுக்கு நல்ல நோக்கம் இருக்கலாம். ஏனென்றால் எனக்குத் தெரிந்த ஒருவர், என் சொந்தக்காரர் கூட ரூ. 40,000 வரை இதிலே இழந்திருக்கிறார். முயற்சியே எடுக்க வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அண்டை மாநிலங்களில் குதிரைப் பந்தயம் நடக்கிறது. அதைத் தடை செய்ய முடியாது. ஆனால் நமது சட்டம் தலைமை நீதிமன்றத்திலே இருக்கிறதே, அதை சீக்கிரம் முடிவுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தச் செயலாளரை நீக்கிவிட்டு, அரசாங்க அதிகாரி ஒருவரைப் போட்டு நடத்த உத்தரவாதம் தந்தால் நாட்டுக்கு இந்த அரசாங்கத்தின் மேல் நல்ல நம்பிக்கை ஏற்படும்.

* திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்தச் சட்டத்தின்மீது மார்க்சிஸ்ட் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இரண்டொரு கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இது எப்படி இருக்கிறது என்றால், கடப்பாரையை முழுங்கிவிட்டு சுக்குக் கஷாயம் போட்டு குடிச்சா குணமாகும் என்பதைப் போல இருக்கிறது. எதற்காக இதை நான் சொல்கிறேன் என்றால், குதிரைப் பந்தயத்தை வைத்துக்கொண்டு இருக்கிறபோது, அதற்கு மேல் மேல்பந்தயம் கட்டும் டர்ஃப் ஏஜென்சியை ஒழிக்கப் போகிறோம் என்று





சொன்னால், கண்டிப்பாக உங்களால் அது முடியாது. அது வீட்டிற்குள்ளே நடக்கலாம், சந்து பொந்துகளிலே நடக்கலாம், எங்கே வேண்டுமானாலும் நடக்கலாம். காட்டன் மார்க்கெட் என்ற பெயரால் எங்கெங்கேயோ என்னென்னமோ நடந்து கொண்டு இருக்கின்றன, என்ன செய்ய முடிகிறது உங்களால்? அதை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகவே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதால், மேலும் ஊழலை அதிகப்படுத்தக்கூடிய அளவிற்கு, போலீஸ் அதிலே பங்கு போடுகிற அளவிற்கு அவர்களுக்கு வாய்ப்பு உண்டாக்குகிறீர்கள் என்று நான் சொல்ல முடியும். ஆகவே, குதிரைப் பந்தயத்தை, அடிப்படையில், ஒழித்துக் கட்டுவதில் கவனம் செலுத்த வேண்டுமே ஒழிய அதற்குப் பதிலாக இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்து இந்த டர்ப் ஏஜென்சிகளை மட்டும் ஒழித்துக் கட்டுகிறேன் என்று சொல்வது பிரயோஜனப்படாது என்று சொல்லி, நான் என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய பிரச்னைக்கு நான் விளக்கம் தருகிறேன்.

" The fact that an Ordinance has been challenged in a court of law and the court issued a *rule nisi* to Government is no bar to taking up the Bill seeking to replace that Ordinance ".
(From Kaul and Shekdhar—Practice and Procedures of Parliament) Vol. II

* மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர்களே, குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவின்மீது பேசிய அருமை நண்பர்கள் எல்லாம் அதை ஒழிப்பது என்பதை மறைமுகமாக ஆதரித்தார்கள் என்று நான் கருதுகிறேன். ஏன் அந்தக் குதிரைப் பந்தயத்தை முதலில் ஒழிக்காமல், இந்த முகவர்களை ஒழிக்கிறீர்கள் என்று கேட்டார்களே தவிர, இது எல்லாம் தேவையில்லை, வேண்டாம் என்று சொல்லவில்லை என்று நான் மனதார நம்புகிறேன்.

ஏன் இந்த அரசு குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவில்லை என்று கேட்டார்கள். குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணா வழியில் வந்த நீங்கள் ஏன் பின் தங்குகிறீர்கள் என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார்கள். குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும் என்பது தான் இந்த அரசின் கொள்கை என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 நவம்பர் 7

ஆனால், அது உயர்நீதி மன்றத்தில் இந்த அரசுக்குச் சாதகமான தீர்ப்பு வந்தாலும், உச்ச நீதி மன்றத்தில் அரசுக்குப் பாதகமான தீர்ப்பு வந்து இருக்கிறது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கு வழக்கு அங்கே இருக்கிறது. வழக்கு இன்றைக்கு வந்தது அல்ல. 1975 என்று நினைக்கிறேன். தேதி சரியாக நினைவு இல்லை. அங்கே அவர்களுக்கு ஸ்டே ஆர்டர் போட்டுக் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு உச்ச நீதி மன்றத்திற்கு விரோதமாகப் போக முடியாது. ஆகவே, உச்ச நீதி மன்றத்தின் முடிவு சொல்கிற வரைக்கும் ஏழை எளியவர்கள், பஞ்சை பாரிகள் கஷ்டப்படக் கூடாது. தொல்லைப்படக் கூடாது என்றால், இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் அரசு சமுதாயத்திற்கு ஒரு நன்மை செய்ய வேண்டும். ஏழை எளியவர்கள் வாழ்வு காப்பாற்றப்பட வேண்டும் என்கிற அடிப்படையில்தான் அந்த முகவர் நிறுவனங்களைத் தடை செய்வது என்று சட்டம் கொண்டு வந்துள்ளது.

இந்த முகவர் நிறுவனங்கள் மூலமாக இன்றைக்கு என்ன நடைபெறுகிறது என்றால், குதிரைப் பந்தயத்திற்குச் செல்பவர்கள் ஐந்து ரூபாய் கட்டு கிறார்கள் என்றால், இந்த மாதிரி முகவர் நிறுவனங்கள் உள்ள எல்லா இடங் களிலும் ஆயிரக்கணக்கான பேர் ஒரு ரூபாய், ஐம்பது பைசா, பத்து பைசா என்று கட்டுகிறார்கள். சூதாட்டம் என்றால் எல்லோருக்கும் ஆசைதான். அதுவும் ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு, ஆயிரக்கணக்கில் லாபம் வரும் என்கிற நிலை இருந்தால் நிச்சயம் அதில் நாட்டம் செலுத்தி, வந்தால் வரட்டும் என்று சொல்லி பணம் கட்டுகிறார்கள். இதன் காரணமாக ஒன்றும் தெரியாத ஏழை எளிய மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். குதிரைப் பந்தய மைதானத் திற்குள்ளே செல்பவர்களுக்காவது ஓரளவிற்கு விஷயம் தெரிந்து இருக்கும். அதுவும்கூட தவறானதுதான். ஏற்றுக்கொள்ள முடியாததுதான். இருப் பினும், மறைமுகமாக நடத்த வேண்டியது, வெளிப்படையாக நடப்பது என்பது அனுமதிக்க முடியாது. நாம் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படி மறைமுகமாக நடப்பதையும் தடுப்பதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறோம். அதைச் செய்ய வேண்டிய பொறுப்பும் இந்த அரசுக்கு இருக்கிறது. ஆகவேதான் இன்றைக்கு வெளிப்படையாக நடப் பதைத் தடை செய்து, தற்காலிக நிவாரணம் அந்த ஏழை மக்களுக்கு அளிக்கும் வகையில் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து இருக்கிறது

(பிற்பகல் 1.10)

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் ஆயிரக்கணக்கான ஏழைகள், காப்பாற்றப்படுகிறார்கள் ; இலட்சக்கணக்கானவர்கள் காப்பாற்றப் படுகிறார்கள். ஆனால் இந்தத் தொழிலை வைத்து பிழைத்தவர்கள் எல்லோ



1979 நவம்பர் 7]

ருக்கும் வேலை போய்விடும் என்று சொல்லப்படுகிறது. மதுவிலக்கினால் எவ்வளவோ பேர்களுக்கு பிழைப்பு போய்விட்டது. அப்படி இருந்த போதிலும் மதுவிலக்குச் சட்டத்தை இந்த அரசு எப்படி ஏற்றுக் கொண்டதோ அதைப்போல தவறான வழியில் பணம் சம்பாதிக்கிறவர்களை இந்தச் சட்டம் பாதிக்கிறது என்றாலும் இதுதான் சரி என்று நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, கோர்ட்டிலே இருக்கிறது என்று சொன்னார்கள். கோர்ட்டிலே ஒரு தீர்ப்பு சொல்லுகிற வரையில் பல்லாயிரக்கணக்கான மக்க ளுக்குப் பயனளிக்கிற இந்தச் சட்டத்தை நிறைவேற்றாமல், தடை போடக் கூடாது. இதிலே பின்னடைந்துவிட்டால், இதை ஒரு முன்மாதிரியாக வைத்து, நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவர இருக்கிறோம் என்றால் அதற்கு முன்னால் ஆர்டினன்ஸ் போடுகிறோம்; அந்த ஆர்டினன்ஸை செயல் படுத்தாமல் நிறுத்திவைக்க யாராவது பணம்படைத்த ஒருவர் ஒரு நல்ல வக்கீலைப் பிடித்து வழக்கு போட்டுவிட்டால் தீர்ப்பு தெரியும் வரையில் சட்டம் கொண்டுவர முடியாமல் போய்விடும். ஆகவே, கோர்ட்டில் வழக்கு இருக்கிறது என்பதற்காக இந்தச் சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றாமல் விட்டுவிட்டால், இதுவே பல முக்கியமான பிரச்சனைகளுக்கு முன்மாதிரியாகி விடும். முக்கியமான ஆர்டினன்ஸ்—அவசரச் சட்டம் கொண்டுவந்தால், ஒரு வழக்கறிஞரைப் பிடித்து, கோர்ட்டிலே வழக்கு போட்டுவிட்டால் சட்டம் கொண்டுவர முடியாமல் போய்விடும். ஆகையால், கோர்ட்டிலே இருப்பதால் மட்டும் கொண்டுவரக் கூடாது என்று சொல்வதற்கில்லை ; கொண்டுவரலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்று பலர் சொன்னார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் சொன்னார்கள். செருப்பை பெரிதாக்குவதற்குப் பதிலாக காலை வெட்டுவ தாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமையில், நல்ல செருப்பாக வாங்கிப் போட முடியாவிட்டாலும் இருக்கிற செருப்பை வைத்துப் போடலாம். குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது நல்ல செருப்பு வாங்குவதைப் போல. அது உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட அமைப்புகளை ஒழிப்பதற்கான அதிகாரம் நம்மிடம் இருக்கிறது. நம்மிடம் இருக்கிற பழைய செருப்பை முள் குத்தாமலிருக்க நாம் தைத்து போட்டுக் கொள்வதைப்போன்றது இது. இன்றைக்கு இருக்கிற அதிகாரத்தில் தைத்துதான் போட முடியும். தைக்க வேண்டாம். முள் குத்தினால் குத்தட்டும் என்று யாரும் எண்ண மாட்டார்கள். ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, நான் எழுப்பிய பிரச்சனைக்கு அமைச்சர் பதில் சொல்லவில்லை. ஒரு அதிகாரி இலட்சக் கணக்கில் பணம் வாங்கிக் கொண்டிருக்கிறார் என்று சொன்னேன். அதுபற்றி ஒன்றும் சொல்லாமல் . . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இன்றைக்கு நாங்கள் கொண்டு வந்திருக்கிற சட்டம் முகவரை ஒழிப்பது. அது அல்லாமல் வேறு எதுவும் இல்லை. ஒரு சட்டத்தைக் கொண்டுவரும்போது, அதைப்பற்றி பேசுவதை விட்டுவிட்டு, வேறு எதையாவது பேசி, அதற்குப் பதில் சொல்வதாக இருந்தால் இது ஒரு முன்மாதிரியாகிவிடும். வேறு ஒரு அமைச்சரிடம் இதுமாதிரி ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டு, அவர் அதற்குப் பதில் சொல்லாமல் போனால், அன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சர் பதில் சொன்னார், அப்படியானால் வேறு அமைச்சர் ஏன் பதில் சொல்லக் கூடாது என்ற கேள்வி வரும். ஆகையால் அதற்கு நான் பதில் சொல்லவில்லை.

திரு. சுப்பு அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1979) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்.

1979 நவம்பர் 7]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ஈ) கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே,

" தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் " என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1979) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(உ) இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்த சட்ட முன்வடிவு, 1979.**

**திரு. க. சுப்பு:** ஒரே ஒரு வார்த்தை, முக்கியமான திருத்தமாக வரும் பொழுது யாராவது இரண்டு பேர்களைப் பேசச் சொல்லிவிட்டு முடிக்க வேண்டுமே தவிர நீங்கள் பாட்டுக்கு ரேஸ் குதிரை மாதிரி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் கையைத் தூக்கவில்லை. இதே மாதிரி ஒத்துழைத்தால் மிகவும் நல்லது.

* 1979 நவம்பர் 3 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசுச் சிறப்பிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.

இப்பேரவை நிராகரிக்கிறது என்ற தீர்மானத்தை திரு. சுப்பு முன்மொழிவார்.

**திரு. க. சுப்பு :** தலைவர் கேட்டதற்கு இணங்க நான் பேசவில்லை.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்று மொழிகிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, இருந்தாலும் ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஏற்கெனவே ஒரு ரீஜனல் கமிட்டி போடப்பட்டு அது இன்னும் சரியாக துரிதமாக முறையாகச் செய்யவில்லை. இன்னும் சில டிரஸ்டிகள் போடாமல் இருப்பதாக நான் அறிகிறேன். கூடிய விரைவில், மத நம்பிக்கையுள்ள பொறுப்புள்ளவர்கள், எந்தவிதமான ஊழலும் செய்யாதவர்களைப் போடுவது நல்லது என்று கருதுகிறேன். ஏற்கெனவே இருக்கக்கூடிய எக்ஸிகியூடிவ் ஆபீசர்ஸ்—இதற்கு முன்பு எப்படி இருந்தது என்றால்—அந்த அந்தக் கோயிலிருந்து வரக்கூடிய வருமானங்களை எப்படி எப்படிக் கணக்கு எழுத வேண்டுமோ அப்படி அத்தனையும் செய்திருக்கிறார்கள். புளியங்குடியிலே சிந்தாமணி என்ற கிராமம், அதாவது முனிசிபாலிட்டிக்கு சேர்ந்தது, கோயிலுக்குச் சொந்தமான நிலம் என்று சொல்கிறார்கள். 50 ஆண்டுகளுக்கு முன்னாலே வீடுகளை கட்டி 170 பேர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பழக்கமாகிவிடும், அது எல்லாம் வேண்டாம்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேண்டாம்; பில்லைப்பற்றி சொல்லுங்கள். நீங்கள் உங்கள் ஊரிலே உள்ள குறையைப் பற்றியெல்லாம் சொல்லக் கூடாது. உங்களுக்கு விட்டால் அதே போன்று பின்னாலே எல்லோருக்கும் கொடுக்க வேண்டிய நிலை வரும்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** குறைபாட்டைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேண்டாம், அதை வேறு எதிலேயாவது பேசிக் கொள்ளுங்கள். இப்போது இதைப்பற்றி மட்டும் சொல்லுங்கள்.

---

* 1979, நவம்பர் 2 ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





**திரு. ரா. கிருஷ்ணன் :** வழக்குகள் போட வேண்டுமென்பதற்காகவே, செலவு கணக்குகள் எழுதவேண்டுமென்பதற்காகவே இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களைத் தடுக்க வேண்டும். அதற்காகவே டிரஸ்டிகளை சீக்கிரமாகப் போட வேண்டுமென்று கருதுகிறேன்.

**திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே, இந்த அறங்காவலர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி நிர்ணயித்திருந்த காலக் கெடுவுக்கு மேலும் ஒரு ஆண்டுக்காலம் இப்போது சர்க்கார் கேட்டிருக்கிறது. நீங்கள் ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுக்காலம் ஆகிறது. இதற்குள்ளாக அறங்காவலர்களை நியமித்திருந்தால் பிரச்சினைகள் வந்திருக்காது. அப்படி நியமிக்காததன் விளைவாக பல்வேறு கோயில்களில் வருமானம் குன்றியிருக்கிறது. அவைகள் பாதுகாக்கப்படாமல் இருக்கின்றன, பரம்பரை டிரஸ்டியும் இல்லை, நியமன டிரஸ்டியும் இல்லாமல் அநாதை ரட்சகன் என்று சொல்லப்படுகிற ஆண்டவனே இன்றைக்கு அநாதையாக இருக்கிற நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே இந்தச் சர்க்கார் போதிய கவனம் செலுத்தவில்லை, அறநிலையத்துறை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டு. கண்ணும் கருத்துமாக இருந்திருக்குமானால் அறங்காவலர்களை நியமித்து கோயில்களின் வளர்ச்சிக்கும் அவைகளின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் இந்தச் சர்க்கார் முயற்சி எடுத்திருக்கும். குடியரசுத் தலைவர் நிர்ணயித்த கெடு முடிகிற வரையிலும் பார்த்திருந்து அதற்கு மேலே முடியவில்லை என்று சொல்லி ஒரு ஆண்டுக்கு மேலும் நீடித்துக்கொள்ளலாம் என்று சொன்னால் அடுத்த முறை இதே மாதிரி நினைப்பீர்கள்—நீங்கள் இருப்பதாக வைத்துக்கொண்டால்கூட—5 ஆண்டுக் காலத்திலே இப்படிப்பட்ட நிலைமை வராது என்று நீங்கள் போடலாம். உங்கள் கட்சிக்காரர்களை போடுங்கள். எனக்கு வருத்தம் இல்லை. இப்போது கூட கூட்டுறவுத் துறையிலே உங்கள் கட்சிக்காரர்களைப் போடவில்லையா, அப்படியே போடுங்கள், யாராவது இருந்தால்தான் காரியங்கள் செம்மையாக நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் எதாவது பதில் சொல்ல விரும்புகிறீர்களா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** ஆமாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால நீட்டிப்பு என்பது முறையாக அறங்காவலர்களை நியமிக்க வேண்டும் என்பதற்காகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 16,758 கோவில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இதற்கான அறிக்கைகளை பெற்று அனுப்ப வேண்டிய அதிகாரிகள் மொத்தமாக இருப்பவர்கள் 131 இன்ஸ்பெக்டர்கள் தான். ஆகவே அவர்களிடத்திலிருந்து பெற்று, பரிசிலனை செய்து, நியமிப்பதற்குத்தான் இந்தக் கால தாமதம் ஆகியிருக்கிறது. இதுவரை சுமார் 3,300 கோவில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் மீதி உள்ள கோவில்களுக்கும் நியமிக்கப்பட வேண்டும். ஆய்ந்து பார்த்து நல்லவர்களாகப் போட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த கால நீட்டிப்பு கேட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. துரை முருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல்வேறு கோயில்களுக்கு மனுக்கள் வந்திருக்கின்றன, பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்ற வகையிலே சொன்னார்கள். இரண்டு ஆண்டு காலமாகவா பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள்? மனுக்கள் கொடுப்பதற்கு இன்ன தேதி என்று ஏதாவது நிர்ணயம் செய்திருக்கிறார்களா என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டு காலமாகத்தான் அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 131 அதிகாரிகள் தான் இருக்கிறார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கான கோவில்களுக்குப் போய் பரிசிலனை செய்து கொடுக்கப்படுகிற மனுக்களில் உள்ள செய்திகள் உண்மையா பொய்யா என்று கேட்டறிந்து அறிக்கை கொடுக்க வேண்டும். அதன் மீது சர்க்கார், நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் காலதாமதம் கோரப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி— தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு என் 60/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவுப் பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.





**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு என் 60/1979) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**(ஊ) திரைப் படங்கள் முறைப் படுத்துதல் திருத்தச் சட்டமுன்வடிவு, 1979.**

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு திரைப் படங்கள் முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 61/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."
என்று மொழிகிறேன்.

**திரு. துரை முருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆளுநர் அவர்களால் 21—8—1979 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு திரைப் படங்கள் முறைப்படுத்துதல் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் என் 11/1979) இப்பேரவை நிராகரிக்கிறது."

இந்தச் சட்டத்திலே தொக்கி இருக்கிறது, எஞ்சியிருக்கிறது என்னவென்றால், இந்த சர்க்கார் இந்த துறையைப் பொறுத்தவரையில் ஒரு ரிவிஷனரிப் பவர் வேண்டும் என்று நினைக்கிறார்கள், அதனால் இதை கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதுதான். ரிவிஷனரிப் பவர் வேண்டும் என்றால் கொண்டு வரலாம், அதற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் அது தேவையா என்பது தான் கேள்வி. அவசரச்சட்டம் என்பது, செய்துதான் தீர வேண்டும் என்கிற நிலைமையிலே, நெருக்கடி சமயத்திலே கொண்டு வரப்படுவது தான். இந்த திரைப்படங்கள் துறையைப்பொருத்தவரை அப்படி என்ன

* 1979, நவம்பர் 2 ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

இருக்கிறது? அவசரச் சட்டம் கொண்டு வர, செய்தே தீர வேண்டிய நிலைமையிலே நெருக்கடியைச் சமாளிப்பதற்கு பிரயோகப்படுத்த வேண்டிய அவசரச் சட்டத்தை இப்போது ஏன் கொண்டு வரவேண்டும். நெருக்கடி நிலைமையில் உபயோகப்படுத்த வேண்டும் என்றுதான் அரசியல் சட்டம் நமக்கு அதை தந்திருக்கிறது. ஆனால் அதை துஷ்பிரயோகம் செய்யலாமா, எடுத்ததற்கெல்லாம் அவசரச்சட்டம் போட்டால் அந்தச் சட்டத்திற்கு என்ன மதிப்பிருக்கிறது? சில நேரங்களில் ஆண்ட்டி-பயாடிக்ஸ் சாப்பிடலாம். ஆனால் அதையே மருந்தாக உணவாக சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியுமா? அதுபோல். சிலநேரங்களில் ஏதோ பயன் படுத்தியே ஆக வேண்டிய நேரங்களில் அவசரச் சட்டத்தை உபயோகப்படுத்தலாம். அந்த வகையில் ரொம்ப முக்கியமான வேலை, ஆனால் ரிவிஷனரிப் பவர் சர்க்கார்ருக்கு வேண்டும் அதனால் அவசரச் சட்டம் போடுகிறோம் என்றால் அதைவிட கேவலமான செய்கை வேறு எதுவும் இருக்காது. ஏன் அதுவரை பொருத்திருக்க முடியாதா?

22-ம் தேதி ஆகஸ்ட் மாதம் என்று நினைக்கிறேன் ஆர்டினன்ஸ் போடுகிறார்கள். அதை இந்த சபை கூடியதற்குப் பிறகு இந்த சபையிலே ஒரு மசோதாவைக் கொண்டு வந்து, நாங்கள் அவசரச்சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாக ரிவிஷனிரிப் பவர் எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்று ஒரு பில் கொண்டு வந்தால் என்ன? குடியா முழுகிப் போய்விடும்? ஏதோ அவசர அவசரமாக, கவர்னர் ஒருவர் சும்மா இருக்கிறாரே என்று கையெழுத்து வாங்கி வெளியிட்டு அவசரச்சட்டத்தை கொண்டு வருவதற்கு இப்போது என்ன அவசியம்? எடுத்ததற்கெல்லாம் இப்படி அவசரச் சட்டம் என்று கொண்டு வந்தால் சட்டமன்றமே வேண்டாம். ஒரு ஆர்டினன்ஸ் சர்க்காராக, அவசர சர்க்காராக, அவசரச் சட்ட சர்க்காராக நமது நண்பர் சொன்னது போல் உருவாகிவிடும் நிலைமை ஏற்பட்டு விடும். (மணியடிக்கப் பட்டது) இன்னும் கொஞ்சம் தான் இதோ முடித்துக் கொண்டு விடுகிறேன். இன்னொன்றையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லவிரும்புகிறேன். கலெக்டர் இருக்கிறார். அப்படி திரைப்படம் எடுக்க வேண்டும் என்றால் பெர்மிஷன் கொடுக்கிறார். அதற்குப் பிறகு என்.ஓ.சி. கொடுக்கிறார். போர்டு வேறு இருக்கிறது. வேண்டுமானால் போர்டிலிருந்து சர்க்கார் விரும்பினால் எடுத்துப் பரிசீலிக்கலாம். இவ்வளவும் இருக்கும்போது அவசரச் சட்டம் எதற்கு? நான் என்ன நினைக்கிறேன் என்று சொன்னால் 22-ம் தேதி அவசரமாக அவசரச் சட்டம் கொண்டு வந்ததைப் பார்த்தால், அவர்களுக்கு வேண்டிய யாரோ ஒருவருக்கு போர்டில் பாதகமான தீர்ப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது.



அதை வரவழைத்து அதை சாதகமாக்குவதற்காகத்தான் இப்போது இந்த அவசரச் சட்டத்தை இந்த அரசு பிறப்பித்திருக்கிறது என்று குற்றஞ் சாட்ட விரும்புகிறேன். ஆக இப்படி ஒரு நிலைக்குக் கொண்டு வந்த பிறகு என்ன செய்வார்கள் என்றால், அவர்களுக்கு வேண்டிய கட்சிக்காரர்கள் வந்தால் அனுப்பு என்று சொல்வார்கள், மறுபரிசீலனை செய்து தேவை என்று போடுவார்கள். வேண்டாதவர்கள் வந்தால் அது 'ஜென்வுவின்' ஆக இருந்தாலும், போர்டில் ஜெயித்திருந்தாலும் அதை மறுபரிசீலனை செய்து அவற்றையெல்லாம் முடக்க வேண்டிய நடவடிக்கைகளைச் செய்வீர்கள். சொந்தக் கட்சிக்காரர்களுக்காக லாபம் தேடுவதற்காக அரசாங்கம் உள்நோக்கத்தோடு எதிர்கட்சிக்காரர்கள் அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் ஒரு சினிமா கொட்டகைக்கு லைசென்ஸ் கேட்டிருந்தால் அல்லது முறையாகப் பெற்றிருந்தால் அப்படி முறையோடு பெற்றிருந்ததைக்கூட கான்ஸல் செய்வதற்கான பவரை எடுத்துக்கொள்ளச் செய்வீர்கள் என்ற ஐயப்பாட்டினை, குற்றச்சாட்டைச் சுமத்த விரும்புகிறேன். ஆகவே தேவையில்லாத ஒரு அவசரச் சட்டத்தைப் போட்டு தேவையில்லாத காரியத்தைச் செய்வதற்கு இது தேவையற்ற ஒரு திருத்தம் என்று கூறி அமைச்சரவர்கள் பெருந்தன்மையோடு இதை வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவை எதிர்த்து கொடுத்திருக்கக்கூடிய ஒரு தீர்மானத்தின்மீது பேசும்போது அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மாத்திரம் பதில் அளித்துவிட்டு நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ யாரோ ஒருவருக்கு நன்மை செய்வதற்காக திடீரென்று இந்த அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் காலத்தில் கொண்டுவந்த அவசரச் சட்டங்கள் எல்லாம் அந்த அடிப்படையில் கொண்டு வந்திருக்கலாம், அவருக்கு அனுபவம் இருக்கும், ஆகவே அந்த அனுபவத்தை வைத்துச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். (ஆரவாரம்) ஆனால் இந்த மன்றத்தில் நான் உறுதியாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு சான்றை எந்தக் காரணத்தினாலாவது வேண்டியவர்கள் என்றோ வேண்டாதவர்கள் என்றோ இந்த திரைப்பட உரிமம் வழங்குவதில் இதுவரை அப்படி முறைகேடு நடந்திருக்கிறது அல்லது அரசாங்கம் தலையிட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டினால் அதற்கு பொறுப்பேற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

எதிலும் குறை கண்டுபிடிப்பது, உள்நோக்கம் கற்பிப்பது, சட்டத்தை மீறுகிற உணர்வுகளைப் பேசுவது என்பது இந்தச் சட்டமன்ற நடைமுறைக்கு ஏற்றதல்ல என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்.) ஏன் இதை அவசரச் சட்டமாகக் கொண்டுவரவேண்டிய அவசியம் வந்தது என்பதை மாத்திரம் விளக்குகிறேன். நாம் எல்லாம் விரும்பாத, எதிர்பாராத ஒரு சூழ்நிலையில் தூத்துக்குடியில் ஒரு சம்பவம் நடைபெற்றது உங்களுக்கெல்லாம் தெரியும். அந்தச் சம்பவத்தையொட்டி பல்வேறு சட்டத்திருத்தங்களையும், விதிமுறைகளையும் அரசாங்கம் கடுமையாகத் திருத்தியது. டூரிங் சினிமாக்களில் எல்லாம் சில விதிமுறைகளைத் திருத்தி அதற்கான சில விதிமுறைகளை உண்டாக்கியபோதும், சில விதிமுறைகளை அறிவித்தபோதும் அதற்கு எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டு போர்டுக்குப் போய் நேராக வழக்குமன்றத்திற்குப் போய் தடை உத்தரவுகள் பெறுகிற முறையெல்லாம் வரும் என்ற சூழ்நிலை ஏற்பட்டபோதுதான் இந்த நாட்டின் நன்மையைக் கருதி இதை முறையாக அவசரச் சட்டமாக பிரகடனப் படுத்தி அரசாங்கம் அந்த அதிகாரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதிகாரம் என்பதுகூட, ரிவிஷன் பெட்டிஷன்தான் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு மேல் நீதி கோரி எப்போதும் யாரும் நீதிமன்றத்திற்கு செல்லலாம். ஆகவே இதில் வருத்தப்படவேண்டியவர்கள், வேறு யாரோ வருத்தப்பட வேண்டுமே தவிர சட்டமன்ற உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தினிடத்தில் தருகிற அதிகாரத்தை என் அதிகாரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று சட்டமன்றத்தில் கேட்பதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது. ஆகவே இதில் உள்நோக்கம் கற்பித்துப் பேச வேண்டாம். நல்ல நோக்கத்தோடு கொண்டுவந்துள்ள இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**திரு. துரை முருகன் :** அவை உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக் களைச் சொல்வதற்கு உரிமை உண்டு. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்குமா என்று கேட்பதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். அப்படி விளக்கம் அளிக்கிற போது விரும்பத்தாகாத நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது, ஆகவே அதை யெல்லாம் தவிர்ப்பதற்காகத்தான், ஆகவேதான் இது கொண்டுவரப்பட்டது என்று சொன்னார்கள். விரும்புத்தகாத நிகழ்ச்சி என்ன நடந்தது, எப்படி நடந்தது, எப்போது நடந்தது என்பவற்றை விளக்கியிருக்கிறார்களா என்றால் இல்லை. ஆகவே அப்படி விளக்கப்பட்டிருந்தால் கேட்க



மாட்டோம். அப்படி விளக்கப்படாமல் இருக்கும்போது ஐயப்பாடு ஏற்படுவது அல்லது குற்றஞ்சாட்டுவது எப்படி தவறாக இருக்க முடியும் என்று கேட்கிறேன்.

திரு. துரை முருகன் அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

(பிற்பகல் 1-30.)

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு திரைப்படங்கள் முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/79)" சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

187. தமிழ்நாட்டிற்கும் கேரளாவிற்குமிடையில் ஓடிக்கொண்டிருக்கின்ற, சிறு ரக மோட்டார் வண்டிகளின் மீது விதிக்கத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து I) 24—9—1979 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 2409-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2)-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

188. சென்னையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு நிறுவனம் மூலம் விவசாயிகளுக்கு விற்கப்படும் தானியச் சேமிப்பு உலோகப் பீப்பாய்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 8—10—1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 1623-ல் அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

189. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் விவா அட்டவணை I -ல் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 31—8—1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 1374-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3)-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

190. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம், அனுமதிச் சீட்டு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 23—5—1979-ம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 1283-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3)-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

*191. இராமநாதபுரம் மாவட்டம் வாகைக்குளத்தில் 4—4—1979 ஆம் தேதியன்று காவலர் நடத்திய துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பெற்ற இராமநாதபுரம் மாவட்ட செசன்ஸ் நீதிபதி திரு. இ. ஜெ. பெல்லி, பி.ஏ., பி.எல்., விசாரணைக் கமிஷனின் அறிக்கை (1952-ம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4)-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).



### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

** 44. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 60/1979).

** 45. தமிழ்நாடு 1979 ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 61/1979).

*** 46. 1979 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 65/1979).

*** 47. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவின் நகல் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 63/1979).

*** 48. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 64/1979).

*** 49. 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவின் நகல் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91-அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 62/1979).

---

* 6—11—1979 அன்று பேரவை முன் வைக்கப்பெற்றது.

** 4—11—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

*** 5—11—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

[1979 நவம்பர் 7

## இணைப்பு I

[611 ம் பக்கத்திலுள்ள உடுக் குறியிட்ட வினா எண் 139-க்கான விடையைக் காண்க.]

(ஈ) தாயகம் திரும்பியோர் அடியிற்கண்ட திட்டங்களில் ஏற்கனவே குடியமர்த்தப்பட்டுள்ளனர்:—

1. நீலகிரியிலுள்ள தேயிலைத் தோட்டம்.

2. ஆனைமலையிலுள்ள சின்கோனா தோட்டம்.

3. கன்னியாகுமரி ரப்பர் தோட்டம்.

4. மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ;

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பேட்டை, நாசரேத் ;

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆரம்பொழி ;

மதுரை மாவட்டத்தில் மேலூர் ;

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிப்புத்தூர் ;

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மணல்மேடு ;

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள நெய்வேலி ;

வடாற்காடு மாவட்டத்திலுள்ள வேலூர் ;

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள காஞ்சிபுரம் ;

சேலம் மாவட்டத்திலுள்ள அம்மாபேட்டை ;

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தாராபுரம்.

5. மாநிலப் பண்ணைக் கழகம்:

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சாரம் ;

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மூசரவாக்கம் ;

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள வெள்ளாளவிடுதி, கிராப்பிடுங்கி ;

தஞ்சை மாவட்டத்திலுள்ள தியாகராஜபுரம்.



1979 நவம்பர் 7]

6. நிலக்குடியிருப்புத் திட்டம் :

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தமராக்கி, கீழபருத்தியூர், இடமேலையூர், ஓ. புதூர், கூத்தலூர் ;

திருச்சி மாவட்டத்திலுள்ள பேரையூர், கீழப்புலியூர், மேலப்புலியூர், எதுமலை, வேம்பனூர் ;

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நெய்வாசல், கே. ராயவரம், திருவரங்குளம் ;

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கட்டாரங்குளம், இரைப்புவாரி, பாஞ்சாலங்குறிச்சி, காடன்குளம், உன்னாங்குளம், திருமங்கலக்குறிச்சி, பருத்திப்பட்டு, சிங்கநேரி, மேலக்கல்லூர், இல்லாங்குளம், ராமகிருஷ்ணபுரம், காடிக்குளம், மூலக்கரைப்பட்டி ;

வடாற்காடு மாவட்டத்திலுள்ள பூசிமலைக்குப்பம், கொண்டான்குப்பம் ;

மதுரை மாவட்டத்திலுள்ள அம்பலக்காரன்பட்டி;

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள டி. மரவக்காடு ;

சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டுப்பட்டி.

7. தாயகம் திரும்பியோர் கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி வங்கி திட்டம் மூலம்:

சென்னை மாவட்டத்திலுள்ள இண்ட்காம் கழகம், புவனேஸ்வரி தொழிற்சாலை, பால்கன்டைமர்ஸ், கென்யான் லேபாட்டரி, டெக்னோ பின் பேசனர்ஸ், விஸ்வநாத் மற்றும் விஸ்வநாத் ;

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மாருதி கிரிஸ்டல்ஸ் ;

வடாற்காடு மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு க்ரோமேட்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் ;

வேலூர் மற்றும் திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்;

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சீதா தொழிற்சாலை ;

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு சர்க்கரை ஆலை ;

திருச்சி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு சர்க்கரை ஆலை, பொரம்பலூர், அரியலூர் சிமெண்ட் ;

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள தீப்பெட்டி தொழிற்சாலை, ரமேஸ் தொழிற்சாலை ;

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அய்யனார் நூற்பாலை, மல்லாங்கிணறு ;

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தூத்துக்குடி நூற்பாலை ;

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கயிறு தொழிற்சாலை ;

திருச்சி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு மினரல்ஸ் ;

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள டெக்ஸ்டூல், சாரதா மில் ;

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்து நிறுவனங்களில் ஓட்டுநராகவும், நடத்துனராகவும் ;

ஈரோட்டிலுள்ள டெக்ஸ்டைல்ஸ் ப்ராசசிங் யூனிட்.

8. கேரளா மாநிலத்தில் புனலூர் இரப்பர்.

9. கர்நாடகா மாநிலத்தில் சிந்தனூர் விவசாயத் திட்டம்.

10. ஆந்திரா மாநிலத்தில் ராஜமுந்திரி, நெல்லூர், சிராளா மற்றும் குண்டக்கல் கூட்டுறவு நூற்பாலைகள், விசாகப்பட்டினம் காப்பித் தோட்டம்.

11. அந்தமான் தீவிலுள்ள நிலக்குடியிருப்பு மற்றும் கச்சல் இரப்பர்.

மேலும் தாயகம் திரும்புவோரைக் கீழே கண்ட திட்டங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன :—

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை.

விநாயகா பண வசதிக் கழகம், சென்னை.

சூசன் இண்டியான், சென்னை.

வீரப்பசாமி ஸ்டீல் ரோலிங் மில், புதுக்கோட்டை.

முருகன் எண்டர்பிரைசர்ஸ், பஞ்சு அரவை ஆலை, தர்மபுரி.

பெங்களூர் பட்டு திரிக்கும் கூட்டுறவு சொசைட்டி, பெங்களூர்.
ஏலக்காய் தோட்டம், கேரளா.



## இணைப்பு II.

[620 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 502க்கான விடையைக் காண்க]

### 1974–75-ம் ஆண்டில் அறநிலையத் துறை மூலம் கோயில்களைப் புதுப்பிக்க வழங்கப்பட்ட அரசு மானியம்.

| வ. எண். | மாவட்டம். | ஆலயங்களின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ரூபாய். |
| 1. | சென்னை நகரம் | 16 | 36,000,00 |
| 2. | செங்கற்பட்டு | 37 | 92,000.00 |
| 3. | வட ஆற்காடு | 43 | 2,03,000.00 |
| 4. | தென் ஆற்காடு | 95 | 95,950.00 |
| 5. | சேலம் | 95 | 65,000.00 |
| 6. | தர்மபுரி | 14 | 6,550.00 |
| 7. | கோயம்புத்தூர் | 56 | 1,05,000.00 |
| 8. | தஞ்சாவூர் | 82 | 3,35,500.00 |
| 9. | திருச்சிராப்பள்ளி | 37 | 1,64,000.00 |
| 10. | புதுக்கோட்டை | 7 | 10,000.00 |
| 11. | இராமநாதபுரம் | 32 | 97,000.00 |
| 12. | மதுரை | 46 | 78,000.00 |
| 13. | திருநெல்வேலி | 29 | 1,67,000.00 |
| 14. | கன்னியாகுமரி | 21 | 45,000.00 |
| | மொத்தம். | 610 | 15,00,000.00 |

[1979 நவம்பர் 7

## 1975-76-ம் ஆண்டில் கோயில்களைப் புதுப்பிக்க வழங்கப்பட்ட அரசு மானியம்.

| வ. எண். | மாவட்டம். | ஆலயங்களின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ரூபாய் |
| 1. | சென்னை நகரம் | 9 | 1,23,500.00 |
| 2. | செங்கற்பட்டு | 66 | 1,84,000.00 |
| 3. | வட ஆற்காடு | 49 | 6,95,900.00 |
| 4. | தென் ஆற்காடு | 57 | 1,11,000.00 |
| 5. | திருச்சிராப்பள்ளி | 5 | 27,000.00 |
| 6. | கோயம்புத்தூர் | 29 | 1,70,500.00 |
| 7. | புதுக்கோட்டை | 3 | 6,000.00 |
| 8. | தஞ்சாவூர் | 151 | 3,17,600.00 |
| 9. | சேலம், தர்மபுரி | 11 | 30,000.00 |
| 10. | மதுரை | 36 | 72,000.00 |
| 11. | இராமநாதபுரம் | 67 | 2,52,500.00 |
| 12. | திருநெல்வேலி | 27 | 99,000.00 |
| 13. | கன்னியாகுமரி | 7 | 11,000.00 |
| | மொத்தம்.. | 517 | 21,00,000.00 |



1979 நவம்பர் 7]

## இணைப்பு III.

[621ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 5084 கான விடையைக் காண்க]

இம்மாநிலத்தில் உள்ள சிறைச்சாலைகளில் 1957 மற்றும் 1967 ஆம் ஆண்டு களில் பாதுகாப்பு கைதி பி (B) வகுப்பு மற்றும் சி (C) வகுப்பு கைதி ஒவ்வொருவருக்கும் தினசரி கொடுக்கப்பட்ட உணவு வகைகளின் தோராய சராசரி மதிப்பு பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு | பாதுகாப்பு கைதிகள்* | | 'பி' (B) வகுப்பு கைதிகள் | | | | 'சி' (C) வகுப்பு கைதிகள். |
|---|---|---|---|---|---|---|---|
| | சைவம் | அசைவம் | சைவம் | | அசைவம் | | |
| | | | வேலை செய்வோர் | வேலை செய்யாதோர் | வேலை செய்வோர் | வேலை செய்யாதோர் | |
| 1957 | 2.06 | 2.37 | 1.40 | 1.35 | 1.49 | 1.04 | 0.90 |
| 1967 | 3.26 | 3.43 | 2.95 | 2.45 | 2.87 | 2.46 | 1.37 |

முன்பு இம்மாநிலத்திலுள்ள சிறைகளில் வைக்கப்படும் கைதிகள் "ஏ", "பி" மற்றும் "சி" என்ற மூன்று பிரிவினராக பிரிக்கப்பட்டிருந்தனர். ஆனால் 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7 ஆம் நாள் வெளியிட்ட அரசாணைப்படி முன்னர் "ஏ" மற்றும் "பி" வகுப்பினர் தற்போதைய "ஏ" வகுப்பினராகவும் முந்தைய "சி" வகுப்பினர் தற்போதைய "பி" வகுப்பினராகவும் பிரிக்கப் பட்டு இப்போது பாதுகாப்புக் கைதிகள் தவிர்த்து "ஏ" மற்றும் "பி" என இரு வகுப்பு கைதிகளே இம்மாநிலத்திலுள்ள சிறைச்சாலைகளில் உள்ளனர்.

---

* குறிப்பு:—பாதுகாப்பு கைதிகளில் வேலை செய்பவர் வேலை செய்யாதவர் என்ற பாகுபாடு இல்லை.

1977 ஆம் ஆண்டில் பாதுகாப்பு கைதி "ஏ" வகுப்பு "பி" வகுப்பு கைதி ஒவ்வொருவருக்கும் தினசரி கொடுக்கப்பட்ட உணவு வகைகளின் தோராய மதிப்பு பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| ஆண்டு | பாதுகாப்பு கைதிகள் | | 'ஏ' வகுப்பு கைதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | சைவம் | அசைவம் | சைவம் | | அசைவம் | |
| | | | வேலை செய்வோர் | வேலை செய்யாதோர் | வேலை செய்வோர் | வேலை செய்யாதோர் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1977 | 6.29 | 7.34 | 5.58 | 4.55 | 5.39 | 4.41 |

'பி', (B) வகுப்பு கைதிகள்

| ஆண்டு | சத்துள்ள உணவுத் திட்டம் முழு அளவில் அமுலில் உள்ள சிறைகளில் கைதிக்கு. | | சத்துள்ள உணவுத் திட்டம் பகுதி அளவில் செயல்படுத்தப் படும் சிறைகளில் உள்ள கைதிக்கு | |
|---|---|---|---|---|
| | வேலை செய்வோர் | வேலை செய்யாதோர் | வேலை செய்வோர் | வேலை செய்யாதோர் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1977 | 2.85 | 2.85 | 2.80 | 2.45 |

குறிப்பு:—சத்துள்ள உணவு வழங்கும் திட்டம் முழு அளவில் அமுலில் உள்ள சிறைகளில் வேலை செய்யும் மற்றும் வேலை செய்யா கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு வகைகளின் அளவில் மாறுதல் இல்லை. சத்துள்ள உணவு வழங்கும் திட்டம் முழு அளவில் அல்லது பகுதி அளவில் அமுலில் உள்ள சிறைகளில் சைவ உணவு கொள்வோர் அசைவ உணவு கொள்வோர் என்ற பாகுபாடு இல்லை.



## இணைப்பு IV.

[626ம் பக்கத்திலுள்ள உடுகுறியிடாத வினா எண் 511க்கான விடையைக் காண்க]

| ஆலயத்தின் பெயர், இடம். (Name of the Temple and place) | விடுதிகளின் எண்ணிக்கை. (Rest House) | குடில்கள் எண்ணிக்கை. (Cottages) | அறைகளின் எண்ணிக்கை (Rooms) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அருள் மிகு | | | |
| 1. மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம், மதுரை. | 1 | .. | 15 |
| 2. இராமநாதசுவாமி ஆலயம், இராமேஸ்வரம். | 2 | 33 | 80 |
| 3. தண்டாயுதபாணிசுவாமி ஆலயம், பழனி. | 3 | 52 | 232 |
| 4. மாயூரநாதசுவாமி ஆலயம், பெந்தவநல்லூர், இராமநாதபுரம் மாவட்டம். | 1 | .. | 1 |
| 5. நெல்லையப்பர் ஆலயம், திருநெல்வேலி. | 1 | .. | 3 |
| 6. நவநீதேசுவரர் ஆலயம், சிக்கல், நாகப்பட்டினம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | .. | 2 | 9 |
| 7. சுவாமிநாதசுவாமி ஆலயம், சுவாமிமலை, தஞ்சாவூர் மாவட்டம். | .. | 3 | .. |
| | (வேலை நடைபெறுகிறது) | | |
| 8. ரெங்கநாதசுவாமி ஆலயம், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | .. | 3 | |

| ஆலயத்தின் பெயர், இடம். (Name of the Temple and place) (1) | விடுதிகளின் எண்ணிக்கை. (Rest Houses) (2) | குடில்கள் எண்ணிக்கை. (Cottages) (3) | அறைகளின் எண்ணிக்கை (Rooms) (4) |
|---|---|---|---|
| 9. சங்கரநாராணசுவாமி ஆலயம், சங்கரநயினார் கோயில், திருநெல்வேலி மாவட்டம். | [illegible] | .. | 4 |
| 10. அருணாசலேசுவரர் ஆலயம், திருவண்ணாமலை, வடஆற்காடு மாவட்டம். | 1 | 6 | 24 |
| 11. தேவிகருமாரியம்மன் ஆலயம், சென்னை-600 077. | .. | 5 | 10 |
| 12. சுப்பிரமணியசுவாமி ஆலயம் திருத்தணி, செங்கற்பட்டு மாவட்டம். | .. | 65 | 124 |
| 13. சுப்பிரமணியசுவாமி ஆலயம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாவட்டம். | 3 | 65 | 173 |
| 14. சௌரிராஜப்பெருமாள் ஆலயம், திருகண்ணபுரம், தஞ்சை மாவட்டம். | 2 | .. | 7 |
| 16. சுப்பிரமணியசுவாமி ஆலயம், குமாரவயலூர், திருச்சி மாவட்டம். | 1 | .. | 7 |
| 16. இணைக்கப்பட்டமற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம், சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டம். | 4 | .. | 54 |
| 17. தியாகராஜசுவாமி ஆலயம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம். | 1 | .. | 1 |
| மொத்தம் .. | 22 | 234 | 7.50 |

**அறநிலையங்களில் பிளாட்டுகள் (Flats) இல்லை.**





## இணைப்பு V

*[650-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 548-க்கான விடையைக் காண்க.]*

மாநிலக் குடும்ப நலத்துறையின் சார்பில் அச்சகம் ஒன்று இயங்கி வருகின்றது. அந்த அச்சகத்தில் குடும்பநலச் செய்திக் கதிர் (மாத இதழ்), கைப்பிரதிகள், துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள், மாவட்ட ஆட்சியாளரின் வேண்டுகோள்கள், அறிவுரைகள், விளம்பரங்கள், குடும்பநல விழாக்களுக்குரிய வரவேற்பிதழ்கள், இந்திய அரசாங்கத்தின் பிரதிகள் அச்சிடுதல், குடும்பநலம் ஏற்க தகுதி வாய்ந்த தாய் தந்தையரின் பதிவேடு தயாரித்தல், நபர்களின் பட்டியல் பதிவேடு தயாரித்தல், ஆண், பெண் இருபாலாருக்குரிய அறுவைச் சிகிச்சை அட்டைகள் தயாரித்தல், தற்காலிக குடும்பக் கட்டுப்பாட்டுக்குரிய வரலாறு அட்டைகள் தயாரித்தல், குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு அறுவை செய்து கொண்டவர்களுக்குரிய ரசீது அச்சிடுதல், தமிழ்நாடு அகில இந்திய சுகாதார அமைச்சர்களின் மாநாடுகளுக்கு வேண்டிய புத்தகங்கள், கருத்துரைகள், குறிப்புகள் தயாரித்தல், பொதுவான குடும்பநல கருத்துரை சுவரொட்டிகள் குடும்ப நலத்தைப்பற்றிய முக்கியமான தலைவர்களின் கருத்துரைகள் ஆகியவைகள் அச்சிடப்படுகின்றன.

மேலும் குடும்பநல முனைப்பு இயக்க காலங்களுக்குரிய சுவரொட்டிகள், துண்டு வெளியீடுகள் ஆகியவை மாவட்டத்திற்கு ஏற்றவாறு வெளியிடப்படுகின்றன. குடும்பநல விளம்பரத்திற்குரிய எல்லா வெளியீடுகளும், பிறவும் இந்த அச்சகத்தின் மூலம் வெளியிடப்படுகின்றன. இந்திய அரசு நூறு சதவிகித நிதி உதவியுடன் குடும்பநலத்திட்ட விளம்பரப் பணிகளுக்கென்று இந்த அச்சகம் நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வச்சகத்தில் பணியாற்றும் 25 வேலையாட்களுக்கு ஊதியத்துக்காக ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 1,44,000 செலவு ஆகிறது.

## இணைப்பு—VI

[655ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 560-க்கான விடையைக் காண்க.]

### வீட்டு வசதி மற்றும் நகரப்புற வளர்ச்சித்துறை.

1977–78, 1978–79 ஆம் ஆண்டுகளில் சென்னை நகரில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட புதிய குடியிருப்புகளின் எண்ணிக்கை, கோட்ட எண், குடியிருப்புகளின் மதிப்பீட்டுத் தொகை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வரிசை எண்ணும், திட்டப் பகுதியின் பெயரும். | மாநகராட்சி வட்ட எண். | எண்ணிக்கை. | திட்ட மதிப்பீட்டுத் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1977–78ல் கட்டி முடிக்கப்பட்டவை:— | | | |
| 1. சத்தியவாணிமுத்து நகர் | 58 | 80 | 8.24 |
| 2. ராதாகிருஷ்ணபுரம் | 60 | 24 | 2·35 |
| 3. வேம்புலியம்மாள் கோவில் | 62 | 144 | 15·36 |
| 4. வாலஸ் கார்டன் | 71 | 8 | 0·91 |
| 5. சைவ முத்தைய முதலிதெரு | 76 | 40 | 3·88 |
| 6. பப்பு மஸ்தான் தர்கா | 79 | 168 | 13·34 |
| 7. குயில் தோட்டம் | 94 | 64 | 6·21 |
| 8. பல்லக்கு மானியம் | 96 | 64 | 5·08 |
| 9. விசாலாட்சி அம்மாள் தெரு | 97 | 64 | 6.45 |
| 10. ராமகாமத்புரம் | 102 | 32 | 3·83 |
| 11. மாம்பலம் ஏரிக்கரை | 109 | 208 | 29·74 |
| 12. ஜாபர்கான் பேட்டை | 118 | 152 | 11·55 |
| மொத்தம். | | 1,048 | 106·94 |



| வரிசை எண்ணும் திட்டப் பகுதியின் பெயரும். | மாநகராட்சி வட்ட எண். | எண்ணிக்கை. | திட்ட மதிப்பீட்டுத் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1978–79ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டவை:— | | | |
| 1. கிழக்கு கல்லறைச்சாலை | 10 | 460 | 35·46 |
| 2. சேனியம்மன் கோயில் | 22 | 220 | 16·92 |
| 3. மீனவர் காலனி | 23 | 40 | 3.80 |
| 4 பச்சைக்கல் வீராசாமி தெரு | 56 | 640 | 49·06 |
| 5. வடக்கு மாடவீதி | 54 | 100 | 7.71 |
| 6. ஷெனாய் நகர் நீச்சல்குளம் | 62 | 260 | 20·00 |
| 7. கருமாங்குளம் | 63 | 24 | 2·72 |
| 8. ஓசான் குளம் | 64 | 256 | 28·65 |
| 9. டாக்டர் சந்தோஷ் நகர் | 68 | 48 | 5·66 |
| 10. பப்பு மஸ்தான் தர்கா | 79 | 120 | 12·00 |
| 11. அயோத்தியா குப்பம் | 90 | 40 | 3.67 |
| 12. நாட்டான் தோட்டம் | 92 | 250 | 24·90 |
| 13. மசூதித் தெரு | 95 | 100 | 7.92 |
| 14 பிள்ளையார்கோயில்தோட்டம் | 96 | 480 | 42.83 |
| 15. சீனிவாசபுரம் | 99 | 224 | 17·65 |
| 16. ராமகிருஷ்ணா புரம் | 102 | 40 | 3·46 |
| 17. பிருந்தாவனம் | 116 | 66 | 5·20 |
| மொத்தம். .. | | 3,368 | 287·61 |

## இணைப்பு VII.

[678-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 602-க்கான விடையைக் காண்க.]

விடை,—

(அ) & (ஆ) 1978–79 ஆம் ஆண்டில் மாநில விருது வழங்கும் திட்டத்தின்கீழ் விருது பெற்ற திரைப்படங்கள் மற்றும் விருதுகள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 1. சிறந்த படம்—முதல் பரிசு — பதினாறு வயதினிலே. | ரூ. 50,000 ரொக்கமும், ரூ. 250 மதிப்புள்ள தங்கப்பதக்கமும். |
| 2. சிறந்த படம்—இரண்டாவது பரிசு—மதுரகீதம். | ரூ. 30,000 ரொக்கமும், ரூ. 200 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கமும். |
| 3. சிறந்த படம்—மூன்றாவது பரிசு—பலப்பரிட்சை. | ரூ. 20,000 ரொக்கமும், ரூ. 200 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கமும். |
| 4. சிறப்புப் பரிசு—மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன். | ரூ. 25,000 ரொக்கமும், ரூ. 200 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கமும். |
| 5. சிறந்த நடிகர்—திரு. கமலஹாசன்—(பதினாறு வயதினிலே). | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| 6. சிறந்த நடிகை—செல்வி லதா (மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்) | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| 7. சிறப்புப் பரிசு (நடிகர்)—திரு. முத்துராமன் (பலப் பரிட்சை). | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| 8. சிறப்புப் பரிசு (நடிகை)—ஸ்ரீவித்யா (மதுரகீதம்). | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |



| | |
|---|---|
| 9. சிறந்த இயக்குநர்—திரு. பாரதிராஜா (பதினாறு வயதினிலே). | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| 10. சிறந்த கதாசிரியர்—திரு. குகநாதன் (மதுரகீதம்). | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| 11. சிறந்த உரையாடல் ஆசிரியர்—திரு. தூயவன் (பலப் பரிட்சை). | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| 12. சிறந்த இசையமைப்பாளர்—திரு. இளையராஜா (பதினாறு வயதினிலே). | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| 13. சிறந்த பின்னணிப் பாடகர்—திரு. ஜேசுதாஸ் (மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்). | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| 14. சிறந்த பின்னணிப் பாடகி—திருமதி. ஜானகி (பதினாறு வயதினிலே). | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| 15. சிறந்த பாடல் ஆசிரியர்—திரு. புலமைப்பித்தன் (மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்). | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| 16. சிறந்த ஒளிப்பதிவாளர்—திரு. பாபு, வண்ணப்படம் (காற்றினிலே வரும் கீதம்). | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| திரு. எ. சோமசுந்தரம் கறுப்பு வெண்மை படம் (மதுர கீதம்). | ரூ. 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |

[1979 நவம்பர் 7

| | |
|---|---|
| 17. சிறந்த செய்தி விளக்கப்படம் —'ஏன் இந்த விஷம்' தமிழ் நாடு திரைப்பட பிரிவு, அடையாறு, சென்னை (மது விலக்கைப்பற்றிய கருத்து விளக்கப் படம்). | ரூ. 5,000 ரொக்கமும், ரூ. 200 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கமும். |
| 18. சிறந்த குழந்தைபடக் கதாசிரியர்—திரு. பூவண்ணன். (அன்பின் அலைகள்). | ரூ. 2,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| 19. சிறந்த குழந்தைப்பட நட்சத்திரம்—சிறுமி இந்திரா (அன்பின் அலைகள்). | ரூ. 2,000 மதிப்புள்ள தங்கப் பதக்கம். |
| 20. இராஜா சாண்டோ—நினைவுப் பரிசு திரு. எம். ஏ. வேணு. | ரூ. 25,000 ரொக்கமும், ரூ. 850 மதிப்புள்ள கேடயமும். |

D
V2;11;31 N79
N81-3551

| | ரூபாய் |
|---|---|
| ரொக்கப் பரிசு | 1,55,000—00 |
| பதக்கம், கேடயம் | 70,900—00 |
| மொத்த மதிப்பு | 2,25,900—00 |

(ரூபாய் இ[illegible]பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரம்.)

122159